கிறிஸ்துவின் ஜீவியம்



S. பரமானந்தம்

கிறிஸ்துவின் ஜீவியம்

The Life of Christ

கிறிஸ்துவின் ஜீவியம்

The Life of Christ

S. பரமானந்தம்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
95-A, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை - 600 007
Tel : 25323231, 26420173, 26420743 Fax : 91 (44) 26612295
E-mail : <elshq@elsindia.org> Website : www.elsindia.org

Pub. No. 341 - TAMIL

First E.L.S. Edition : September 2000

Reprint : March 2013

THE LIFE OF CHRIST

S. Paramanandam

EVANGELICAL LITERATURE SERVICE

J.R.PRINTECH, Chennai - 600 102, Ph: 26631643, 26631996

PREFACE

I have, in this book, brought together the chief facts in the Life of our Lord Jesus Christ in 36 chapters. My aim is to help the readers to a knowledge of the Lord Himself and not to present a detailed account of His Life. Many such Lives do exist. But the troubled and perplexing times in which we live, seem to necessitate a different treatment of the subject Modernism is abroad. There are theologians who hold Modernist views regarding the Bible and the Person of our Lord; such views have entered even Theological Seminaries. Everything is subjected to what is known as scientific criticism. Respect for the word of God is decreasing and Christian people are much perplexed. No wonder there is so little faith and that the Churches are getting into a cold and dead state.

Though Christ and His truth are unchangeable, the attitude of people has been changed and so the old Gospel has to be preached in a new way and with a new power. Gospel truths should be proclaimed with an appeal to reason; for the words of the Lord are just and reasonable.

When the Gospel is accepted as it is revealed, there is no room for another Gospel and another Christ as preached by Modernists. They do so because they have both rejected and perverted certain important verses of the Bible –the only source of our knowledge concerning Christ. Consisting of sixty six books written by fortyfour different persons over a period of fifteen hundred years, the Bible possesses a wonderful unity. It is, like the fruit tree, a living organism yielding rich fruit and has grown from the Book of Genesis gradually through centuries to the Book of Revelation. As an architect employing many different workmen, carries out through long years, a well conceived plan and raises a noble edifice, so has the Divine Architect built up the Holy Book according to His eternal plan, Hence the wonderful unity of the Bible.

The sum total of the Bible is Jesus Christ. Christ and the Scriptures are inseparable. Without Him the Bible would be un intelligible and meaningless. From Genesis to Revelation Christ

fills the book. "Lo, I come; in the volume of the Book written of me." "Search the Scriptures...and they are the which testify of me." In fact " The New Testament is latent in the old; and the old Testament is patent in the New." The Christ and the Bible are so inseparable that those that profess to honour Christ without honouring the Bible or honour the Bible without honouring Christ are liable to serious error.

The spread of Modernism spells the ruin of the Christian life of the Church. For Christian life, the study of God's word and prayer are necessary. The Word of God gives life to prayer and prayer unlocks the Word of God. The revivals that came to the Christian Church in the past were all the outcomes of earnest prayer and devout study of the Bible. All the celebrated preachers such as Wesley and Spurgeon of England, and the world known Evangelists of America were men who believed in the Bible and in the Deity of Christ. Thousands of souls found life and peace through their ministry. Had these men held Modernism views, they would not have been able to lead the multitudes of souls that they did into the way of Salvation.

The essence of the Christian religion is: "God was manifest in the flesh." Who can see the Almighty God who dwelleth in the light which no man can approach unto? What is His nature? Who can have fellowship with Him? Here is a Man who is meek and lowly in heart-a man full of grace and truth, capable of being loved and befriended-One who will in no wise cast out anyone that goes to Him-One with whom we can enjoy the closest fellowship. Who is He? Is he a mere man? Jesus Christ is not a mere man nor even a great sage. He is God-man! The mystery of Incarnation is the means which the Almighty God adopted to reconcile man to Himself, and make it possible for him to enter into fellowship with Him. This is the Christian religion! This is the revelation of the Scriptures! This is the teaching of the Holy Spirit. This is the foundation of the holy Church! This is the Divine magnet that draws humanity! This again is the experience of the Saints of God! Had Christ been a mere man, we had better have followed any one of the sages our country had produced. They sought after

God and sang sweet songs of rare devotion and beauty which we possess today. Why then should we follow Jewish Guru who lived in that far-off small land of Palestine? What is the reason for the whole world to look to Him in admiration and in adoration.

Faith in the Deity of Christ does not come of mere hearing. It comes of the Holy Spirit who reveals Jesus is the Divine Saviour to all those that love and obey Him. "No man can understand that Jesus is the Lord but by the Holy Spirit." Those that have experienced Christ as their Saviour become so united with Him that He becomes their richest treasure and the supreme object of all their thoughts and endeavours. That the readers of this volume may be helped to enter into such as living relationship with Him is the aim of the author.

But what am I and what are my attainments that I should attempt to write a Life of Him whom generations of saints have found to be beyond their power of comprehension. If I have, inspite of very limited knowledge, ventured to write on His unparalleled Life, it is out of my love and devotion to Him as the Divine Redeemer. An author remarks "those who would write the Life of Christ, should prepare themselves by long study and research and retire to a quiet grove and write it with prayer and meditation." Happy, indeed, are those that are so favourably placed; but I am thankful that to me who wrote this Life in the midst of many duties and within the limited time at my disposal, His grace was not given in vain. As I was engaged in writing "He that supplieth seed to the sower and bread for food" blessed me and my work, and since Christ was the subject of my study and meditaion, His continued Presence upheld me. I place this volume at His feet that He may accept it as my offering of love and gratitude.

I have no doubt, that the Christian people of South India who received kindly my earlier books, will welcome this volume also. That it may tend to increase their knowledge of the Lord Jesus, strengthen their faith and help them to escape the snare of Modernism, is my hope and that God's people may thus be blessed through the book is all the reward I look for.

I want to express, in this connection, my great indebtedness to my dear Congregation and beloved friends whose sympathetic attention to the Word of God preached in the regular course of my ministry, inspired me to a deeper study of the Person of Jesus Christ. I can only pray that His power - the power that brought Lazarus out of the grave and changed Saul into Paul-may go with this book and make it an abiding blessing to many of His Children.

Royapuram,
December, 1925 **S. Paramanandam.**

SECOND EDITION

The First edition of this publication ran out of stock sooner that I had expected, and circumstances beyond control delayed the issue of the second edition, and it has been a disappointment to many that I was not able to meet the repeated demands for copies received from all directions. However, through God's mercy it has been possible now to get the book ready.

I am grateful and deeply indebted to all those who have assisted its circulation among the theological seminaries and mission workers, and I fervently hope that this second edition also will be the means of much more blessing to many, through the increasing knowledge and fellowship of our Lord Jesus Christ.

Royapuram,
November, 1934 **S. Paramanandam.**

முகவுரை

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் எழுதவேண்டுமென்பது என் நோக்கமல்ல. அவ்வாறு எழுதப்பெற்ற புத்தகங்கள் பல இருக்கலாம். இரட்சகனுடைய ஜீவியத்தில் முக்கியமான விஷயங்களைத் தெரிந்தெடுத்து முப்பத்தாறு அதிகாரங்களாக இங்கு எழுதி யிருக்கிறேன். இயேசுகிறிஸ்துவாகிய அவரையே நாம் பிரதானமாக அறிந்துகொள்ள வேண்டுமென்பது என் விருப்பம்.

சபைகள் யாதொரு குழப்பமின்றி வேதத்திலும் கிறிஸ்துவிலும் பூரண நம்பிக்கை வைத்திருந்த காலத்தில் கிறிஸ்துவின் ஜீவியத்தை ஒழுங்குப்படுத்தி எழுதுவதே போதும். தற்காலமோ அப்படிப்பட்டதன்று. வேதவிரோதிகள் புறம்பேயிருந்து எதிர்த்த காலம்போக, சபைக்குள்ளிருக்கும் வேதபண்டிதர்களே வேதத்தையும் கிறிஸ்துவையும் புரட்டத்துணிந்துள்ளார்கள். இந்தத் தற்காலக் கொள்கைகள் தேசமெங்கும் பரவியிருக்கின்றன. வேதசாஸ்திரப் பாடசாலைகளில் நுழைந்துள்ளன. போதகர்களும் வேதசாஸ்திர மாணாக்கரும் இழுப்புண்டனர். சாஸ்திரிகள் சொல்வதற்கு எதிர்நிற்கக்கூடாமல் சாதாரண கிறிஸ்தவர்கள் தத்தளிக்கின்றனர். பிதாக்களின் விசுவாசம் கல்வியிற் சிறந்த அவர்கள் மக்களுக்கு அறிவீனமாகத் தோன்றுகிறது. சகலமும் அறிவின் ஆராய்ச்சியா யிருக்கிறதேயன்றி விசுவாசத்துக்கு இடமில்லை. தேவ வசனத்துக்கு ஒரு காலத்திலிருந்த மதிப்பு குறைந்துள்ளது. காரியங்கள் இவ்வாறிருக்க சபைகளின் உயிரற்ற நிலைமையைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவானேன்?

இப்போர்ப்பட்ட கொடியகாலத்தில் நாம் கிறிஸ்துவின் ஜீவியத்தை எழுதும்போது தப்பான உபதேசங்களைக் குறித்துக் கண்சாடையாயிருப்பதெப்படி? கிறிஸ்தவர்களுடைய மனது பலவாறாய்த் தத்தளிக்கும் இக்காலத்தில் பொதுவாக எழுதப்படும் ஜீவியத்தை அவர்கள் பிரியத்துடன் வாசிக்கமாட்டார்கள். ஆகையால், சாதாரண காலத்தில் எழுதப்பெற்ற ஜீவியத்துக்கும் இப்புஸ்தகத்துக்கும் விஷயங்களை எடுத்துக்கூறும் விதத்தில் வித்தியாசம் காணப்படும். மேலும், இது கல்வி அறிவும் சாஸ்திர ஆராய்ச்சியும் பெருகிவருகிற காலம். இது எப்படியாகும் அது எப்படியாகும் என்று கற்றோர் கேட்பது இயல்பே. ஆகையால் பழங்காலத்துப் போக்கு எவ்வளவு அருமையாயிருந்தாலும் தற்காலத்துக்குப் பொருந்தாது. பொதுவான பிரசங்கங்களில் அநேகருக்கு விருப்பம் குறைந்து வருவதற்குக் காரணம் இதுவே. தேவனுடைய சத்தியங்கள் இருதயத்தில் பதியப்படவேண்டுமானால் காலத்தின் மாறுதலையும் கவனித்துப் பேசவேண்டும். கிறிஸ்துவும் அவரது சத்தியங்களும் ஒருக்காலும் மாறுவதில்லை. ஆகிலும், ஜனங்களுடைய மனநிலை கால

வித்தியாசத்தால் மாறுதலடைந்திருப்பதால், பழைய சுவிசேஷத்தையே புதிய முறையிலும் புதிய வல்லமையிலும் பிரசங்கிக்க வேண்டும். மார்க்க விஷயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயம் எவ்வளவு பேதப்பட்டிருந்தாலும், அவர்களுடைய மனதிலுள்ள சந்தேகம் நீங்கி, நம்பிக்கை உண்டாகும்படி சத்தியத்தை நியாயத்துடன் எடுத்துக் கூறவேண்டும். கர்த்தருடைய வசனங்கள் நீதியும் நியாயமுமானவைகள். உலகத்தில் சாஸ்திரமும் கல்வியும் எவ்வளவு பெருகினாலும் தேவ வசனத்தின் வெற்றி குறைவதில்லை. எத்தனை ஆண்டுகளாக இயேசு கிறிஸ்துவை நாம் ஆராய்ந்து படித்தாலும் அறிந்துவிட்டோம் என்று சொல்ல ஏதுவில்லை. இதுவே கிறிஸ்துவைப்பற்றிய ஆச்சரியம்!

தற்காலக் கொள்கைக்காரர் பிரசங்கிக்கிற வேறே சுவிசேஷத்தையும் வேறே கிறிஸ்துவையும் நாம் அறியாதவர்கள் அல்ல. சுவிசேஷம் அருளப்பட்டிருக்கிற பிரகாரம் நாம் அதை நம்பி ஏற்றுக்கொள்ளுகிறவரை வேறே சுவிசேஷத்துக்கும் வேறே கிறிஸ்துவுக்கும் இடமேது? கிறிஸ்துவை மனுஷனாகமாத்திரம் போதிக்கிறவர்கள் முக்கியமான வேதவாக்கியங்களை அகற்றி விடுவதற்கும், அல்லது தங்கள் கொள்கைக்கு இசைவாக அவ்வாக்கியங்களை மாற்றிக்கொள்வதற்கும் காரணம் அதுதான். கிறிஸ்துவைப் பற்றிய எந்த அறிவுக்கும் வேதமே நமக்கு ஆதாரம். அவ்வேத வாக்கியங்களைத் தகர்க்கவும் குறைக்கவும் பார்க்கும்போது நமது கதி என்னவாகிறது? நாம் நிற்க நிலையேது? வேதாகமம் தேவனால் அருளப்பட்டது. அதில் 66 புஸ்தகங்கள் உண்டு. எழுதினவர்கள் 44 பேர். எழுதப்பட்ட காலம் 1500 வருஷங்களுக்குமேல். அவர்கள் ஒரே காலத்தில், ஒரே தேசத்தில், ஒரே இடத்தில் கூடியிருந்து எழுதினவர்கள் அல்ல. அவர்கள் ஒருவரையொருவர் அறியாதிருந்தார்கள். அவர்கள் இருந்த இடங்கள் வேறே. எழுதின காலங்கள் வேறே. எழுதின நடைகள் வேறே. எழுதின சந்தர்ப்பங்கள் வேறே. எழுதின விஷயங்கள் வேறே. எழுதின பாஷைகள் வேறே. எழுதினவர்களின் அந்தஸ்து வேறே. இவ்வாறு 1500 வருஷங்களாகப் பற்பல மனுஷரால், பற்பல நிலைமையில், பற்பல காலங்களில் எழுதப்பட்ட பற்பல புஸ்தகங்களில் ஒன்றுக்கொன்று விரோதமும் வித்தியாசமுமல்லவோ காணப்படவேண்டியது. அப்படியிருக்க, வேதாகமத்தில் நாம் காண்கிற அதிசயம் அதன் பூரண ஒற்றுமையே. வேதாகமத்தை முதலிலிருந்து கடைசிவரை வாசிக்கும்போது ஒரு விதை முளைத்து செடிவளர்ந்து இலைகள் நிறைந்து, பூத்துக்காய்ப்பதுபோல, ஆதியாகமமாகிய வித்திலிருந்து தேவசித்தம் வெளிப்பட்டு, வளர்ந்து, பெருகி, வெளிப்படுத்தின விசேஷத்தில் கனிகள் நிறைந்திருக்கக் காண்கிறோம்.

இந்த ஒற்றுமைக்குக் காரணம் என்ன? ஒரு சிற்பாசாரி பற்பல வேலைக்காரரைக்கொண்டு, நீண்டகாலமாக வேலையை நடத்தி, தான்

உண்டுபண்ணின மாதிரிப்பிரகாரம் ஒரு சிறந்த மாளிகையைக் கட்டி முடிப்பதுபோல, வேதாகமத்தைக் கட்டிமுடித்த சிற்பாசாரி சர்வத்துக்கும் மேலான தேவனே. "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன; தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 தீமோ. 3:16, 2பேதுரு 1:21). தேவனே பற்பல காலங்களிலிருந்த பல மனுஷரைக்கொண்டு வேதாகமத்தை எழுதும்படி செய்தவர். இதுவே வேதாகமத்தின் ஆச்சரியமான ஒற்றுமைக்குக் காரணம். வேதாகமத்தின் மொத்தப் பொருள் கிறிஸ்து. வேதத்தையும் கிறிஸ்துவையும் பிரிக்க முடியாது. பிரித்தால் வேதாகமம் விளங்காத புஸ்தகமாகும். ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை நிறைந்திருப்பவர் கிறிஸ்துவே. "புஸ்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறதென்றும், வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே" என்றும் ஆண்டவர்தாமே சொன்னார். பழைய ஏற்பாடு மறைக்கப்பட்ட புதிய ஏற்பாடு, புதிய ஏற்பாடு வெளியாக்கப்பட்ட பழைய ஏற்பாடு. ஆகையால் வேதாகமத்தை அவமதித்து கிறிஸ்துவைக் கனம்பண்ணலாம். இவ்வாறு நினைப்பது பொய். கிறிஸ்துவை அவமதித்து வேதாகமத்தை மேன்மைப்படுத்தலாம் என்று எண்ணுவதும் பொய். இரண்டும் உயிரும் உடலும்போல் இணைக்கப்பட்டிருக்கின்றன.

தற்காலக் கொள்கைக்காரரின் சாதுரிய ஞானம் சபைகளுக்கு நாசம். இந்த விஷம் எங்கும் பரவி அநேகர் ஆதிவிசுவாசத்தை இழந்து தடுமாறுகிறார்கள். பூர்வ விசுவாசம் தழைத்தாலொழிய பூர்வ ஆசீர்வாதம் வரப்போகிறதில்லை. தேவ வசனமும் ஜெபமும் கிறிஸ்தவ ஜீவியத்தின் இரண்டு பிரதான தூண்களாகும். ஜெபத்துக்கு உயிர் கொடுப்பது தேவ வசனம். தேவ வசனத்தின் அதிசயங்களை வெளிப்படுத்துவது ஜெபம். வேதத்தைச் சந்தேகிக்கும்போது ஜெபவாசல் அடைபடும். தேவ ஊழியமும் வியர்த்தமாகும். ஆதி முதல் காலத்துக்குக் காலம் சபைகளில் உண்டான ஆவிக்குரிய எழுப்புதல்களுக்குக் காரணம் தேவவசனமும், ஜெபமுமே. ஆயிரமாயிரமான ஏழைப்பாவிகள் கேட்டின் பாதையைவிட்டுத் திரும்பி, கிறிஸ்துவின்மூலமாய் ஜீவனையும் சமாதானத்தையும் கண்டடைந்தார்கள். திருச்சபையில் பெரிய காரியங்களைச் செய்து, திரளான ஆத்துமாக்களுக்கு ஆசீர்வாதமாயிருந்தவர்கள் எல்லாரும் தேவ வசனத்தையும் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் பூரணமாய் நம்பி ஏற்றுக்கொண்டவர்களே. இங்கிலாந்து தேசத்தில் பிரசித்திப்பெற்ற பிரசங்கிகளாகிய வெஸ்லி, ஸ்பர்ஜன் முதலானவர்களானாலும், அமெரிக்கா தேசத்தில் எழும்பின பிரபலமான பிரசங்கிகளானாலும், தற்காலத்துக் கொள்கையை அனுசரித்திருப்பார்களானால் ஓர் ஆத்துமாவையாகிலும் ஜீவ வழிக்கு நடத்தியிருக்கமாட்டார்கள். கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி வந்த பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவை அவமதிக்கிறவர்களுக்குள்

வசிக்கமாட்டார். தற்காலக் கொள்கைக்காரர் அறிவிற் சிறந்தவர்களாயினும், பரிசுத்த ஆவியின் வல்லமையின்றி, அவர்கள் அறிவுமாத்திரம் பாவிகளை இரட்சிக்காது.

தேவன் மாம்சத்தில் வந்ததே கிறிஸ்துமார்க்கத்தின் விசேஷம். ஒருவரும் கிட்டிச்சேரக்கூடாத ஒளியில் வசிக்கும் கடவுளைக் கண்டது யார்? அவருடைய தன்மை என்ன? குணமென்ன? அவரோடு ஐக்கியப்பட யாரால் கூடும்? அளவிலடங்காத வல்லமையும் மகிமையும் நிறைந்த தேவனோடு உறவாடிச் சிநேகமாயிருப்பது எப்படி? இதோ, ஒரு மனுஷன்! சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவர்! இரக்கமும் காருண்யமும் நிறைந்தவர்! கிருபையும் சத்தியமும் பொருந்தியவர்! அன்புக்கும் சிநேகத்துக்கும் ஏற்ற தயாளன். எவரையும் புறக்கணியாது ஏற்றுக்கொள்ளும் நேசன்! அவரோடு தாராளமாகப் பேசலாம். அவர் மார்பில் சாய்ந்துகொள்ளலாம். அவருடைய கையைப்பிடித்து உலாவலாம். நம் மனதில் உள்ள யாவையும் அவருக்குச் சொல்லலாம். நமக்குத் தேவையானதை அவரிடம் கேட்கலாம். அவர் யார்? அவர் மனுஷன் மாத்திரமோ? அவர் சற்குரு மாத்திரமோ? அவர் மாம்சத்தில் வந்த கடவுள்! நாம் அன்பான மனுஷனென்று உறவாடின அவரே தேவன். இதுவே கிறிஸ்து மார்க்கத்தின் மாட்சிமை! மனுஷர் தம்மோடு ஐக்கியமாகி உறவாடும்படி மகத்துவம் பொருந்திய நித்தியதேவன் தமது குமாரன் மூலமாகச் செய்த கிருபையின் உபாயமிது. இதுவே கிறிஸ்துமார்க்கம்! இதுவே வேத வெளிப்படுத்தல்! இதுவே ஆவியானவரின் போதனை! இதுவே திருச்சபையின் அஸ்திபாரம்! இதுவே மனுக்குலத்தை இழுத்துக்கொள்ளும் தேவகாந்தம்! இதுவே உத்தம விசுவாசிகளின் அனுபவம்! கிறிஸ்து ஒரு மனுஷனாகமாத்திரம் இருந்தால் நமது தேசத்திலிருந்த ஏதோ ஒரு சிறந்த ஞானியை நாம் குருவாகப் பிடித்து நிற்கலாமே. அறிவிற்சிறந்த பக்தர்களும் ஞானிகளும் நம் தேசத்தில் உண்டே. அவர்கள் கடவுளைத்தேடி உள்ளம் உருகிப்பாடின அரிய பாடல்களும் உபதேசங்களும் நமது கையில் இருக்கிறதல்லவோ? அவர்களைவிட்டு அந்நிய தேசமாகிய பலஸ்தீனாவில் இருந்த ஒரு யூதக்குருவை நாம் பின்பற்ற வேண்டியதென்ன? உலக முழுவதும் அவரை நாடித்தேடி அவர் திருவடி பணிவதற்குக் காரணந்தான் என்ன?

கிறிஸ்துவின் தெய்வீகம் சொல்லிக்கொடுப்பதினால்மாத்திரம் அறியக்கூடியதல்ல. நாம் அவரைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டு, அவரில் அன்புகூர்ந்து, அவர் திருவுபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அவருடைய தெய்வீகத்தை நமக்குள் வெளிப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியினாலேயன்றி நாசரேத்தூர் இயேசுவை கர்த்தரென்று நாம் அறிந்துகொள்ள முடியாது. அவருடைய தெய்வீக மகிமையை நமது அனுபவத்தில் கண்டபின் அவரைவிட்டு விலகவும் முடியாது. அவர் நம்மைத் தமது அன்பால் ஆண்டுகொள்ளுகிறார். நாமும் அவரை முழுவதுமாய்ப்

பற்றிக்கொள்ளுகிறோம். கிறிஸ்துவின் மகிமையை அறிந்த விசுவாசிகள் எல்லாவற்றிற்கும்மேலாக அவரையே தங்களுக்குப் பொக்கிஷமாக்கிக் கொள்ளுகிறார்கள். அவரே நிமிஷந்தோறும் அவர்களுக்குள் ஜீவனாக விளங்குகிறார். அவர்கள் எண்ணம், நோக்கம், எழுத்து, பேச்சு, முயற்சிகள் யாவும் கிறிஸ்துவே. 'எனக்கு எல்லாம் இயேசுவே' என்று விசுவாசி பாடுகிறான். பரலோகத்தில் அவரையல்லாமல் அவனுக்கு யாருண்டு? பூலோகத்தில் அவரைத்தவிர அவனுக்கு வேறே விருப்பமில்லை. இவ்வாறு கிறிஸ்துவும் விசுவாசியும் இணைக்கப்படுவதே கிறிஸ்து மார்க்கம். அவ்வாறான பிராண ஐக்கியத்தை உண்டாக்க வேண்டுமென்பதே இப்புத்தகம் எழுதப்பட்ட நோக்கம்.

அற்புதமூர்த்தியின் ஜீவியத்தை வரைய நான் எம்மாத்திரம்! என் அறிவு எம்மாத்திரம்! ஆயிரமாயிரமான பரிசுத்தவான்கள் எத்தனை தலைமுறைகளாகப் படித்தும் அறிந்துமுடியாத பொக்கிஷமாயிருக்கிறாரே. ஆகிலும், அன்பர்மீதுள்ள பிரியத்தால் என் சொற்ப அறிவுக்கேற்றபடி அவரது நிகரற்ற ஜீவியத்தை எழுதத்துணிந்தேன். "கிறிஸ்துவின் ஜீவியத்தை எழுத விரும்பு கிறவர்கள் வெகுகாலம் ஆராய்ச்சிசெய்து படிக்கவேண்டுமென்றும், ஜனக்கூட்டத்தைவிட்டு பிரிந்து, யாதொரு சந்தடியுமில்லாத அமைதலான சோலைக்குள் இருந்து தியானத்துடன் எழுதவேண்டும்" என்றும் ஒரு ஆசிரியர் கூறுகிறார். அவ்விதமான சிலாக்கியம் பெற்றவர்கள் பாக்கியரே. பல வேலைகளின் மத்தியில், சுருக்கமான காலத்தில் இதை எழுதின எனக்கு ஆண்டவர் அருளின கிருபை விருதாவாயிருக்கவில்லை. "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும்" அருளுகிற கர்த்தர் இதை நான் எழுதின காலத்தில் என்னையும் என் ஊழியத்தையும் ஆசீர்வதித்தார். கிறிஸ்துவே என் தியானப் பொருளாயிருந்தபடியால் இடைவிடாத அவருடைய சமுகம் என்னைத் தேற்றினது. அற்ப அடிமைக்கு ஆண்டவர் இவ்வளவு தயவு பாராட்டினதால் அவருடைய ஜீவியத்தை எழுதி அவருக்கே பாதகாணிக்கையாகப் படைக்கிறேன். இதற்குமுன் நான் எழுதின பல புஸ்தகங்களை ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட தென் இந்திய கிறிஸ்து சபைகள், இப்புத்தகத்தையும் அங்கீகாரஞ்செய்து, கருத்துடன் வாசித்துப் படிப்பதால், தாங்களும் தங்கள் குடும்பங்களும் இரட்சகர் பெருமானை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, விசுவாசத்தில் பலங்கொண்டு, விபரீதமான கொள்கைளுக்குத் தப்பி, தேவகிருபையில் வளருவார்களென்பது என் பூரண நம்பிக்கை. அவ்வாறு கர்த்தருடைய ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவதே இப்புஸ்தகத்தின்மூலமாக நான் அடைய விரும்பும் நிலையான பலன்.

என் ஊழியத்தில், நான் பிரசங்கித்து வந்த திருவசனத்துக்கு ஊக்கமாய்ச் செவிகொடுத்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான்

அதிகமதிகமாக ஆராய்ந்து படிப்பதற்கு என்னை உற்சாகப்படுத்தின என் அன்பான சபையாருக்கும், அருமையான சிநேகிதர்களுக்கும் நன்றி செலுத்த நான் கடனாளியாயிருக்கிறேன். லாசருவைக் கல்லறையிலிருந்து எழுப்பினவரும், சவுலை பவுலாக்கியவருமான ஆண்டவரின் வல்லமை இப்புத்தகத்தின்மூலமாகச் சென்று இதைப்படிக்கும் அவருடைய பிள்ளைகளுக்கு நிலையான ஆசீர்வாதத்தை அருளவேண்டுமென்பது என் பிரார்த்தனை.

இராயபுரம்
டிசம்பர் 1925 S. பரமானந்தம்.

இரண்டாம் பதிப்பு

முதற்பதிப்பு தீர்ந்துபோனவுடனே மறுபதிப்பை அச்சிட்டு வெளியிட முடியாமற்போனதற்காக வருந்துகிறேன். புத்தகங்கள் தேவையெனப் பலவிடங்களிலிருந்து திரும்பவும் திரும்பவும் கடிதங்கள் வந்தும், உடனே அனுப்ப முடியாமல் காலதாமதமானதும் விசனமே. கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்த இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளியாயிற்று.

வேத சாஸ்திரப் பாடசாலைத் தலைவர்கள் இப்புத்தகத்தை நன்கு மதித்து, மாணாக்கருக்குப் பாடப் புத்தகமாக்கி, அவ்வாறு நூற்றுக்கணக்கான புத்தகங்களை வாங்கினதற்காகவும், பல மிஷன்களிலும் ஏராளமான புத்தகங்களை வாங்கி தேவ ஊழியர்களுக்குக் கொடுத்ததற்காகவும் நான் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

கிறிஸ்துவின் ஜீவியத்தை நான் எவ்வளவோ குறைவுகளோடு எழுதியிருந்தபோதிலும், இதைக் கருத்தாய்ப் படித்த தேவமக்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தைக் குறித்து எனக்கு எழுதின கடிதங்கள் என்னை உற்சாகப்படுத்தின. இந்த இரண்டாம் பதிப்பையும் முன்னைப்பார்க்கிலும் அதிகமாய் ஆசீர்வதிக்கும்படி ஆண்டவர் திருக்கரத்தில் ஒப்புவித்து அனுப்புகிறேன்.

இராயபுரம்
டிசம்பர் 1934 S. பரமானந்தம்.

பொருளடக்கம்

அதிகாரம்		பக்கம்
1.	அதிசயநாதன்	1
2.	கன்னிகைப் பிறப்பு	22
3.	காலம் நிறைவேறினபோது	49
4.	பன்னிரு பிராயம்	63
5.	மறைவான காலம்	81
6.	ஸ்நானக யோவான்	99
7.	கிறிஸ்துவின் ஸ்நானம்	115
8.	கிறிஸ்துவின் சோதனை	126
9.	முதல் சீஷர்கள்	149
10.	கானாவூர் கலியாணம்	164
11.	என் பிதாவின் வீடு	189
12.	நிக்கொதேமு	200
13.	யூதேயா கலிலேயா	215
14.	கப்பர்நகூம்	236
15.	பன்னிருவர்	263
16.	தேவ போதகர்	279
17.	அற்புத மூர்த்தி	304
18.	தேவனுடைய இராஜ்யம்	328
19.	பாவிகளின் சிநேகிதன்	363
20.	மாசற்ற இரட்சகன்	384
21.	ஜெப புருஷன்	398

அதிகாரம்		பக்கம்
22.	மனுஷ குமாரன்	428
23.	தேவ குமாரன்	451
24.	தேவ மனுஷன்	486
25.	பரிசுத்த ஆவியானவர்	513
26.	திரித்துவம்	540
27.	திராட்சச்செடியும் கொடிகளும்	565
28.	யோவான் பதினேழு	586
29.	பாத்திரமும் வேளையும்	604
30.	யூதாஸ் காரியோத்	630
31.	அநியாய விசாரணை	650
32.	குற்றமற்ற குற்றவாளி	665
33.	கிறிஸ்துவின் மரணம்	686
34.	ஏன் என்னைக் கைவிட்டீர்?	706
35.	சிலுவைப் போதனை	727
36.	கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்	755

1

அதிசயநாதன்

The Wonderful Child

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் சிற்றூரில் ஒரு குழந்தை பிறந்தது. ஆண்பிள்ளை பிறந்ததென்றால் யாருக்கும் சந்தோஷம்தான். ஆகிலும் அவன் பாடுவானோ சாடுவானோ? பேசுவானோ ஏசுவானோ? பேரெடுப்பானோ ஊரைக் கெடுப்பானோ? பிழைப்பானோ அழிப்பானோ? தங்கமோ பித்தளையோ? ஞானியோ மூடனோ? உபகாரியோ அபகாரியோ? யாருக்குத் தெரியும்? பிறப்பதெல்லாம் பிள்ளையாகுமா? ஒரு குழந்தை இப்படியிருக்கும் என்று யார் சொல்லக்கூடும்? கட்டழகா என்று தாலாட்டப்பெற்றுக் கெட்டழிந்த பிள்ளைகள் எத்தனை! அநாதையாய்க் கைவிடப்பட்டு ஆளுகை செய்தவர் எத்தனை! தாயின் கையால் ஏந்தப் பெற்ற பலவீன சிசுக்கள் அல்லவோ உலகத்தில் கீர்த்திபெற்ற சாஸ்திரிகள், கவிஞர்கள், மந்திரிமார், போர்வீரர், அப்போஸ்தலரெனச் சிறந்து விளங்கினார்கள். தண்ணீரில் எறியப்பட்ட குழந்தை இலட்சக்கணக்கான ஜனங்களை ஆண்டு நடத்தும் அதிபதியானான். கடுகுவிதை போன்ற வித்து ஆலமரமாகும். பெத்லகேமில் பிறந்த இந்தக் குழந்தையின் சரித்திரமும் அப்படியே. இது எவ்வளவு சின்னக் குழந்தை! பலமில்லை, பேச்சில்லை, அறிவில்லை, போட்ட இடத்தில் கிடக்கிறது. கை கால்களை அசைக்கும். வாய்திறந்து அழும். இந்தச் சிசு இருந்தால் என்ன, போனால் என்ன? ஏரோது தீர்மானித்தபடி இது கொல்லப்பட்டிருந்தால்தான் என்ன? கோடிக்கணக்கான ஜனங்கள் நிறைந்த இந்த உலகத்துக்கு இது ஒரு நஷ்டமா? உலகம் இதற்காக புலம்பி அழப்போகிறதா? ஒரு பிள்ளை போனால் ஆயிரம் பிள்ளைகள் பிறக்கும். பெற்ற தாய் சற்றுநேரம் கண்ணீர் விடுவாள். நாள்கள் செல்லவே அவளும் மறந்துவிடுவாள். உலகத்துக்குக் குழந்தையின் மேன்மை அவ்வளவுதான்.

எல்லாம் குழந்தைகள், இயேசுவும் குழந்தையா? **அதிசயமானவர்** என்பதல்லவோ அவருடைய நாமம். அச்சிறிய கண்களில் எவ்வளவு காருண்யம்! எருசலேமைப் பார்த்துக் கண்ணீர்விட்ட கண்கள் அவையல்லவோ? பேதுருவின் உள்ளத்தை உடைத்த கண்கள் அவையல்லவோ? அச்சிறிய கைகள் குருடருக்குப் பார்வையையும், குஷ்டரோகிக்குச் சுகத்தையும், மரித்தோருக்கு ஜீவனையும் கொடுத்ததே. அச்சிறிய கால்கள் கடலில் நடந்ததுமன்றி, எல்லாருக்கும் நன்மை செய்யும்படி எங்கும் சுற்றித் திரிந்ததே. அந்தச் செல்ல வாயிலிருந்து புறப்பட்ட வாக்கால் தீர்ந்த நோய்கள் எத்தனை! பறந்த பேய்கள் எத்தனை! ஞான உபதேசங்கள் எத்தனை! அந்த வாயிலிருந்து புறப்பட்ட அதிகாரத் தொனியால் கடலின் கோஷம் அடங்கினது. கல்லறைக்குள் இருந்தவன் வெளியே வந்தான். இந்தப் பிள்ளையின்மூலமாய்த் தேசத்தின் எல்லைகள் மாற்றப்பட்டதும், தேச சரித்திரங்கள் திருப்பி எழுதப்பட்டதும், அடிமைகள் சுயாதீனரானதும், பாவிகள் பரிசுத்தரானதும், துன்ப துயரங்கள் இன்பமாய் மாறினதும் மெய்யானால், இது எப்படிப்பட்ட குழந்தையாயிருக்கவேண்டும்? கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று உலக சரித்திரத்தை இரண்டாகப் பிரித்த இந்தக் குழந்தை எப்படிப்பட்டது? இராஜாக்களும் குடிஜனங்களும் தங்கள் தாக்கீது, பத்திரங்கள், பத்திரிக்கைகள், புஸ்தகங்கள், கடிதங்களில் இந்தக் குழந்தை பிறந்த வருஷத்தைக் கணக்கிட்டு முத்திரித்ததும் அச்சிட்டு வருவதும் உண்மையானால் இந்தக் குழந்தையைக் குறித்து நாம் என்ன நினைக்கிறது? இவர் அலெக்சாந்தரைப்போல் மகா பெரிய சக்கரவர்த்தியல்ல. ஐசுவரியமுள்ள இலட்சப்பிரபு அல்ல. நெப்போலியனைப்போன்ற யுத்தவீரன் அல்ல. இவர் நாசரேத்தூர் தச்சன். அப்படியிருந்தும் வானமும் பூமியும் இவர் பாதம் பணியவேண்டுமானால் இக்குழந்தையின் விசேஷமென்ன?

வசந்தகாலம் வருகிறது; மரங்கள் துளிர்விட்டு இலைகள் நிறைந்திருக்கின்றன. கோடைகாலம் வருகிறது; மரங்களில் புஷ்பங்களும் கனிகளும் காணப்படுகின்றன. இலையுதிர்காலம் வருகிறது; மரங்களுக்கு ஜீவாகாரமாகிய சாரம் தடைபட்டு இலைகள் பழுக்கின்றன. குளிர்காலம் வந்து காற்று வீசவே பழுத்த இலைகளெல்லாம் உதிர்ந்து மரங்கள் மொட்டையாகின்றன. இதுவே மனுக்குலத்தின் முடிவு. அவர்கள் மேன்மையும் மகிமையும் இதுபோலவே. ஞானிகள் எங்கே? பராக்கிரமசாலிகள் எங்கே? இலட்சப் பிரபுக்கள் எங்கே? தர்க்கசாஸ்திரிகள் எங்கே? மந்திரிமார் எங்கே? எல்லாரும் மாண்டு மறைந்தார்கள். நாம் சென்றுபோனபின் அக்கம்பக்கத்தார் இரண்டொரு நாள் நம்மைப்பற்றிப் பேசலாம். நம்முடன் வேலைசெய்தவர்கள் சில நாள்கள் நம்மை நினைக்கலாம். நமது அருமைச் சிநேகிதர்கள்

பலநாள்கள் விசனமடையலாம். நமது இரத்தக்கலப்பான மனைவிமக்கள் நெடுங்காலம் வருந்தித் துயரமடையலாம் அவ்வளவுதான். கடைசியாக நம்மை அறிந்தவர்கள் யாவரும் மரித்து நாம் சென்றவழி சேருவார்கள். இனி நம்மை நினைக்கப் பூமியில் ஆள்களில்லை. ஆகிலும் எல்லாரையும் உலகம் மறக்கிறதா? பின் சந்ததியார் ஞாபகத்தில் வைத்திருக்கும் மனுஷர் உண்டு. அவர்கள் எழுதின புஸ்தகங்கள், பாடின கவிகள், செய்துமுடித்த வேலைகள், கண்டுபிடித்த சாஸ்திரங்கள், கட்டிமுடித்த மண்டபங்கள் உலகம் அவர்களை நினைவுகூறும் சாதனங்களாக இருப்பது மெய்யே. ஆகிலும் அவர்கள் நம்மை அறிந்ததில்லை; நாம் அவர்களை அறிந்ததுமில்லை.

இந்தக் குழந்தையின் சரித்திரமோ அதிசயம்! இவர் தமது ஊழியத்தாலும் புஸ்தகங்களினாலுமாத்திரம் ஞாபகத்தில் வருகிறவரல்ல. இவர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவர் என்று மாத்திரம் பேசப்படுகிறவருமல்ல. பெத்லகேமில் தோன்றின இந்தச் சிறிய விதை உலகத்தை அளாவிநிற்கும் உயிருள்ள மரம்! எத்தனை தலைமுறைகள் தோன்றி மறைந்தன! எத்தனை இராஜ்யங்கள் மாறிப்போயின! எத்தனை இராஜாக்கள் மாண்டு மறைந்தனர்! உலகத்தில் இதுவரை எத்தனை மாறுதல்கள்! இவரோ என்றும் மாறாதவர். அவர் ஜீவன் மறையவில்லை. அவர் சத்தம் ஓயவில்லை. அவர் கிரியைகள் நிற்கவில்லை. இந்நிமிஷம் அவர் நம்மோடிருக்கிறார். நமது ஜெபம் கேட்கிறார். நமக்கு வேண்டிய நன்மைகளைக்கொடுக்கிறார். நமது கவலைகளை மாற்றுகிறார். நமது கஷ்டங்களைத் தீர்க்கிறார். நம்மோடு பேசுகிறார். நம்மை ஜீவபாதையில் நடத்துகிறார். அவர் நமக்குத் தூரமானவரல்ல. நம்மோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் அவர் நமக்கு அதிகச் சமீபமானவர். அவரை நமக்குள்ளும் நம்மோடிருக்கவும் காண்கிறோம். இதுவே கிறிஸ்து மார்க்கத்தின் விசேஷம். இதுவே கிறிஸ்துதாசர் அனைவருடைய நிச்சயமான அனுபவம். அவர் ஞாபகத்தில்மாத்திரம் வருகிற கிறிஸ்து அல்ல. நமது அனுபவத்தில் காண்கிற கிறிஸ்து. இப்போர்ப்பட்ட ஒரு குழந்தையை நாம் முன்னாவது பின்னாவது கண்டதுண்டா? இவர் அதிசயமானவரே.

இந்த அதிசயத்துக்குக் காரணம் என்ன? இவர் நான்குபேரைப்போல் உலக இயற்கைப்படி பிறந்தவரல்ல. பிறந்தபோதுதான் இவர் உண்டானவரல்ல. "அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா. 5:2). இவர் சர்வத்துக்கும் முன்னிருந்தவர். சர்வத்தையும் உண்டாக்கினவர். சர்வத்தையும் தாங்கி நடத்துகிறவர். மனுஷன் பாவஞ் செய்தபோது வாக்குப்பண்ணப்பட்டவர். தீர்க்கதரிசிகளால் விவரமாய் அறிவிக்கப்பட்டவர். காலம்

நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர். ஏசாயா முன்னுரைத்த இம்மானுவேல். மாம்சத்தில் வந்த கடவுள் மனுக்குலத்தைச் சேர்த்துக்கொள்ளும்படி மாம்சத்தையும் ரத்தத்தையும் சுதந்தரித்த மனுஷகுமாரன். தேவனோடு நம்மை ஐக்கியப்படுத்தும்படி தேவனுக்குச் சொந்தமான தேவகுமாரன். ஒரே ஆளாக வந்த தேவமனுஷன். இது பெரிய இரகசியம்! இது பெரிய அதிசயம்! பார்வைக்குப் பலவீனமான குழந்தை. ஞானப்பார்வைக்குச் சிருஷ்டிகர்த்தா!

பலஸ்தீனா தேசத்தில் மூன்று இடங்கள் விசேஷம். கிறிஸ்து பிறந்த பெத்லகேம், அவர் வளர்ந்த நாசரேத், தேவாலயம் இருந்த எருசலேம். பெத்லகேம் ஊருக்குள் அவருக்கு இடமில்லை. நாசரேத்தூர் அவரைப் புறக்கணித்தது. எருசலேம் அவரைச் சிலுவையில் அறைந்தது. பெத்லகேம் ஊருக்குள் அவருக்கு இடமில்லாமற்போனாலும், சத்திரத்திலும் இடமில்லாமற் போனாலும், மாட்டுத்தொழுவத்திலாவது கொஞ்சம் இடம் கிடைத்ததே. பெத்லகேம் ஊர் எருசலேமுக்குத் தெற்கே ஐந்து அல்லது ஆறுமைல் தூரத்தில் உள்ளது. அது யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள் சிறிதாயினும் அதன் சரித்திரத் தொடர்சியோ மகா விசேஷம். எபிரேயர் ஒரு ஜாதியாகுமுன்னே, எருசலேம் ஒரு பட்டணமாகுமுன்னே, பிதாவாகிய யாக்கோபு பரதேசியாய்த் தங்கின பதான் ஆராமைவிட்டு மனைவிமக்களோடும், வேலைக்காரரோடும், மிருக ஜீவன்களோடும் எபிரோனை நோக்கிப் பிரயாணம் செய்தார். பெத்லகேமுக்கு இன்னும் ஒருமைல்தூரம் இருக்கையில், அருமை மனைவி ராகேலுக்கு ஆபத்தான பிரசவமுண்டாகி, பென்யமீனைப் பெற்று அவள் மரணமடைந்தாள். யாக்கோபு மகா துயரத்தோடு ஒரு ஞாபகக்கல்லை அங்கே நிறுத்தினார். நாற்பது வருஷங்களுக்குப் பின் யாக்கோபு மரணமடையும் சமயத்தில் ராகேலின் கல்லறையை நினைத்துப் பேசினார். மூவாயிரத்து அறுநூறு வருஷங்களுக்கு மேலாகியும் இந்நாள்வரை அந்தக் கல்லறை அங்கேயிருக்கிறது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது ஆறுதலடையாதிருக்கிறாள் என்று எரேமியா சொன்னபடி, 'தன் அருமை வீட்டை விட்டுத் திரும்பி வராமல் போய்விட்டாளே' என்று புலம்பி அழும் ஸ்திரீகளின் சத்தம் இந்நாள்வரை அக்கல்லறையில் தொனிக்கிறது.

ராகேல் செத்து நானூறு வருஷங்களுக்குப்பின், கோதுமை அறுப்புக் காலத்தில் மாமியும் மருமகளுமாகிய இரண்டு ஸ்திரீகள் மோவாப் தேசத்தைவிட்டு, சவக்கடலைக்கடந்து, யோர்தானையும் கடந்து, எரிகோவின் சமபூமிக்கு வந்து, மலைகள் வனாந்தரங்களைத் தாண்டி, தன்னந்தனியே திக்கற்றவர்களாக பெத்லகேம் என்னும் சிற்றூரின் ஒடுங்கிய தெருக்கள் வழியாக

வந்தார்கள். ஜனங்கள் பரிதபித்து அவர்கள் காரியங்களை விசாரித்தார்கள். மாமியார் தன் துயரம் பெருகாதபடி கஷ்டங்களைத் தன் மனதில் அடக்கினாள். பசிக்கொடுமையால் மருமகள் வயல்வெளி சென்று சிந்தும் சுதிர்களைப் பொறுக்கினாள். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை! வயல்களுக்கு எஜமானாகிய போவாஸ் அந்த ஸ்திரீயைப் பார்த்து: "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாக வந்த உனக்கு அவராலே பலன் கிடைப்பதாக" என்று ஆசீர்வதித்தான். அவளே போவாசுக்கு சுதந்தர மனைவியானாள். பெத்லகேம் ஊரார் போவாசைப் பார்த்து: "உன் வீட்டில் வருகிற மனைவியை கர்த்தர் ராகேலைப் போலவும் லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக, நீ பெத்லகேமிலே புகழ்பெற்றிருக்கக்கடவாய்" என்று மங்கள வாழ்துதல் கூறினார்கள். ரூத்துக்கு ஓபேத் என்னும் ஒரு குமாரன் பிறந்தான். இந்த ஓபேத்தினிடத்தில் ஈசாய் பிறந்தான். ஈசாய் தாவீதுக்குத் தகப்பன்.

ரூத் போவாசை விவாகஞ்செய்து இருநூற்றைம்பது வருஷங்களுக்குப்பின் வயது முதிர்ந்த ஒரு தீர்க்கதரிசி, தன் கையில் கோல் பிடித்துக்கொண்டு ராமாவிலிருந்து **பெத்லகேம்** ஊருக்கு வந்து, ஜனத்தின் மூப்பர்களை அழைத்தார். பாவங்களைக் கண்டிப்பது இவர் ஊழியமாகையால் ஜனங்கள் அவரைக்கண்டு பயந்தார்கள். அவரோ அவர்களுக்குச் சமாதானங்கூறி, ரூத்தின் பேரனாகிய ஈசாயை அழைத்து அவர் மக்களைப்பற்றி விசாரித்தார். பராக்கிரமசாலிகளான ஏழு குமாரர் சாமுவேலுக்கு முன் வந்தார்கள். தேவன் அவர்களைத் தெரிந்து கொள்ளவில்லை. வயது முதிர்ந்த காலத்தில் ஈசாய்க்குப் பிறந்த இளைஞன் ஒருவன் உண்டு. யாக்கோபின் மக்கள் யோசேப்பை நடத்தினதுபோல ஏழு சகோதரரும் தாவீதை அற்பமாய் எண்ணியிருந்தார்கள். கர்த்தர் இந்த இளைஞனைத் தெரிந்துகொண்டார். அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும், திவ்விய ரூபமும் உள்ளவனாயிருந்தான். அவன் பெத்லகேமுக்குக் கிழக்கும் தெற்கும் சென்று தன் ஆடுகளை மேய்த்துவருவான். புயலோ காற்றோ, பனியோ குளிரோ, மழையோ இடியோ ஒன்றுக்கும் அஞ்சாத வாலிபன். தேக உறுதியும் பலமும் உடையவன். சிங்கத்தையும் கரடியையும் கொன்ற வீரன். எந்த வனாந்தரத்திலும் தனிமையாகப் போகக்கூடிய தைரிய நெஞ்சன். குரூரமான அரபிகளும், காட்டில் அலையும் திருடரும் தாவீது என்றால் விலகவேண்டும். புறம்பான தோற்ற மாத்திரமல்ல, உள்ளான ஆத்துமத்திலும் அலங்காரம் பொருந்தியவன். வனத்தின் காட்சிகளாலும் வானத்தின் ஜோதிகளாலும் பரவசமடைந்து கர்த்தரை மகிமைப்படுத்துவான். கையில் வீணையெடுத்து இனிமையாய்ப் பாடும் சங்கீத ஞானி.

இந்த இளைஞன் காட்டிலிருந்து வந்தபோது, சாமுவேல் அவனை இஸ்ரவேலுக்கு இராஜாவாக அபிஷேகம்பண்ணினார். மூன்று தலைமுறைகளுக்கு முந்தி தன்னுடைய பூட்டியாகிய ரூத்து கதிர் பொறுக்கின வயலிலே ஆடு மேய்த்த தாவீது இவர். தாவீது இராஜா தன் வயது முதிர்ந்த காலத்தில் எருசலேமை விட்டோடி யோர்தானுக்குக் கிழக்கே கீலேயாத் மலைகளில் தங்கினார். பர்சிலா என்பவன் தாவீதுக்கும் அவரோடிருந்தவர்களுக்கும் அந்த இக்கட்டான சமயத்தில் வேண்டிய சவரட்சணை செய்தான். அப்சலோம் மாண்டு தாவீது எருசலேமுக்குத் திரும்புகிறபோது பர்சிலாவின் குமாரன் கிம்காம் என்பவனைத் தன்னோடு அழைத்துவந்து அரண்மனையில் வைத்து மேன்மையாக நடத்தினார். தாவீது கிம்காமுக்கு **பெத்லகேமிலிருந்த** தன் வீட்டையும் கொடுத்தார். ரூத் முதல் மூன்று தலைமுறைகளாக தாவீதின் வீட்டார் குடியிருந்த வீடு அதுவே. தாவீது மரிக்கும்போது சாலொமோனைப் பார்த்து, கிம்காமுக்குத் தான் கொடுத்த வீடு அவனுக்கே உறுதியாக்கப்படவேண்டும் என்று கற்பித்தார்.

நானூற்று முப்பது வருஷங்களுக்குப்பின், எரேமியா தீர்க்கதரிசியின் நாள்களில், யூதர் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டு, எருசலேம் அழிந்த காலத்தில், தாவீது கிம்காமுக்குக் கொடுத்த வீடு **பெத்லகேமில்** இருந்தது. பிற்காலத்தில் அது பேட்டை அல்லது சத்திரமானது (எரே. 41:18), பாபிலோன் இராஜாவால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரியாகிய கெதலியா மிஸ்பாவில் இருந்தான். சில பிரபுக்கள் சேர்ந்து வஞ்சகமாய் அவனைக் கொலைசெய்தார்கள். பாபிலோன் இராஜா இதைக் கேள்விப்பட்டால் பெரிய அழிவுண்டாகு மென்று மிஸ்பாவிலிருந்த ஜனங்கள் பயந்து, **பெத்லகேமுக்கு** ஓடிவந்து கிம்காமுடைய சத்திரத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். எரேமியாவும் அங்கே வந்துசேர்ந்தார். ஜனங்கள் எகிப்துக்கு ஓடிப்போகத் தீர்மானித்தார்கள். எரேமியா அவர்களைத் தடுத்து; நீங்கள் பாபிலோன் இராஜாவுக்குப் பயந்து ஓடவேண்டாம். உங்கள் வீடுகளுக்குப் போங்கள். கர்த்தர் உங்களைக் காப்பாற்றுவார் என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. எகிப்துக்குத் தாங்கள் ஓடினதுமன்றி தீர்க்கதரிசியையும் கூடக்கொண்டுபோனார்கள். அவ்விடத்தில் எல்லாரும் மரித்தார்கள். இவ்வாறு **பெத்லகேமின்** சரித்திரம் ஆயிரத்து எழுநூறு வருஷகாலத் தொடர்ச்சியுள்ளது. தூரத்துப் பார்வையுள்ள தேவன் உலகத்தில் எத்தனை தலைமுறைகள் தோன்றி மறைந்தாலும் தாம் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றாது விடார். **பெத்லகேமுக்கு** அருகாமையிலுள்ள இந்த தாவீதின் சத்திரத்தில் தேவ திருக்குமாரன் தாவீதின் குமாரனாகப் பிறக்கச் சித்தமானார்.

எரேமியா பெத்லகேமை விட்டு எகிப்துக்குப் போய் ஐந்நூற்று எண்பது வருஷங்களானபோது, பலஸ்தீனா தேசம் ரோமர் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அகுஸ்து இராயன் ரோமாபுரியில் சிங்காசனம் வகுத்தான். மகா பெரிய ஏரோது எருசலேமுக்கு இராஜாவாயிருந்தான். இவன் முப்பத்து மூன்று வருஷம் மகா குரூரமாக ஆண்டு இப்போது முதிர்ந்த வயதுள்ளவனானான். திடீரென உலகமெங்கும் குடிமதிப்பு எழுதும்படி அகுஸ்துராயன் கட்டளையிட்டான். உலகமெங்கும் என்பது ரோமை ஆளுகையின் விஸ்தாரத்தைக் காட்டுகிறது. இக்கட்டளை யூதருக்கு வெறுப்பு. ஆகிலும் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவேண்டும். குடிமதிப்பு எழுதும்படி அவரவர் தம்தம் ஊர்களுக்குப் போனார்கள். யோசேப்பும் மரியம்மாளும் கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரில் சஞ்சரித்தார்கள், யோசேப்பு தாவீதின் வம்சத்தானானபடியால் பெத்லகேமுக்குப் போக வேண்டியதாயிற்று. நாசரேத்துக்கும் பெத்லகேமுக்கும் எண்பது மைல் தூரம். வழியோ மேடுபள்ளமும் கரடுமுரடுமானது. மரியம்மாளுடைய சரீரமானது பிரயாணத்துக்கு ஏற்றதல்ல. ஆகிலும் அம்மாளைத் தனியே விட்டுப்போவது சரியல்ல. ஆகையால் இருவரும் வடநாட்டிலிருந்து புறப்பட்டு, கஷ்டத்தோடு எண்பது மைல் தூரம் நடந்து, மாலை நேரத்தில் மேற்கு வாசல் வழியாய் **பெத்லகேம்** ஊருக்குள் பிரவேசித்து, தெருவழியாகக் கிழக்குவரை நடந்து, மகா ஆபத்தான சமயத்தில், தங்கி இளைப்பாற இடம் தேடினார்கள்.

ஜனங்கள் ஏற்கனவே நிறைந்துபோனதால் எந்த வீட்டிலும் இடமில்லை, உடனே ஊரைவிட்டு கிம்காமுடைய சத்திரத்தைத் தேடிப்போனார்கள். அருமைநாதனுக்கு பிறந்தபின்புதானோ பாடு? பிறக்குமுன் அவர் அலைகிற அலைச்சலைப் பாருங்கள். பிரயாண அலுப்பும் சமயபேதமும் அவ்விருண்ட நேரத்தில் சத்திரம் கிடைத்தாலேபோதும் என்று எண்ணச் செய்தது. சத்திரத்திற்கு வந்தாலோ அங்கும் ஜனங்கள் நிறைய இருந்தார்கள். ரூத் வசித்ததும், தாவீது பிறந்து வளர்ந்ததும், எரேமியா தங்கினதுமான அந்தச் சத்திரத்தில் தாவீதின் குமாரனுக்கு இடமில்லை. காலதாமதம் அபாயம். பிரயாணிகள் தங்கள் மிருகங்களைக் கட்டும் இடம் சத்திரத்துக்கு பின்பக்கம் இருந்தது. அவ்விடத்தில் பிரவேசித்து மரியம்மாள் குமாரனைப் பெற்று முன்னணையில் கிடத்தினார்கள். பின் ஜீவியத்தில் அவரைத் தேற்றுவார் யாருமில்லாதிருந்ததுபோலவே, பிறந்த சமயத்திலும் அவருக்கு உதவிசெய்வார் யாருமில்லை. அகுஸ்துராயன் தான் கொடுத்த கட்டளையால் அவர் **பெத்லகேமில்** பிறக்கவேண்டு மென்ற தீர்க்கதரிசன வாக்கை அறியாமலே நிறைவேற்றினான். உலகம் அவரால் உண்டானது; உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. சொந்த ஜனத்தைத் தேடி வந்தார்,

சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை, சொந்த ஊருக்கு வந்தார்; ஊரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தமது குடும்பத்துக்குரிய சத்திரத்திற்கு வந்தார்; சத்திரத்திலும் அவருக்கு இடமில்லை. இவ்வளவு தரித்திரத்தில் பிறந்த இந்தக் குழந்தை யார்? எங்கேயிருந்து இவர் வந்தார்? இவர் ஆதியிலிருந்த வார்த்தை! மாம்சமான வார்த்தை! நீதியாய் வந்த வார்த்தை! நித்திய ஜீவ வார்த்தை! கோதில்லாத் திருவடிவு! கூற்றர் நாம் பிழைக்கவென்று, பாதிராவேளைதனில் ஜோதியாகத் தோன்றினார்தாம். நமது மனதில் மறைந்திருக்கும் எண்ணத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவது நமது வார்த்தை. அதுபோல, மனுஷரில் ஒருவனும் ஒருக்காலும் கண்டிராத கடவுளுடைய மறைவான எண்ணம், கிருபை, அன்பு, ஞானம் முதலிய இலட்சணங்களை அவருடைய குமாரன் மாம்சத்தில் வந்து வெளிப்படுத்தினதால் அவருக்கு தேவனுடைய **வார்த்தை** என்னும் பேர் வந்தது.

மகிமையின் இராஜாவை ஏற்றுக்கொள்ள உலகம் ஆயத்தமாயிருக்காவிட்டாலும், அவர் **அதிசயநாதன்** என்பது பொய்யாகாது. அவர் பிறப்பு வானத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் ஆச்சரியமான அசைவை உண்டாக்குமானால் அவர் அதிசயமானவர் என்பதற்குச் சந்தேகமென்ன? அவ்வதிசயங்கள் எவையென்று வரிசையாய்ப் பார்ப்போம்.

முதலாவது, பரலோகத்தின் **தேவதூதர்களுக்குள்** உண்டான உற்சாகமும் எழுப்புதலும் கவனிக்கத்தக்கது. தேவதூதர்கள் யார்? அவர்கள் எப்போது உண்டானார்கள்? தேவன் தந்நயமுள்ள வரல்ல, தாமாக ஜீவிக்க விரும்புகிறவரல்ல. தமது ஜீவனைக் கொண்டு ஜீவகோடிகளை உண்டுபண்ணி அவர்களைப் பார்த்து சந்தோஷிக்கிறவர். சிருஷ்டிப்புக்குக் காரணம் அதுவே. தேவதூதர்கள் உலக சிருஷ்டிப்புக்கு முந்தியே இருக்கிறார்கள். பிதா தமது குமாரனைக்கொண்டும் அவருக்கென்றும் தூதர்கணங்களை உண்டாக்கினார். இவர்கள் கடவுளை இடைவிடாமல் ஸ்தோத்திரித்து, அவருக்குச் சித்தமான யாவற்றையும் உற்சாகமாய்ச் செய்துவரும் ஊழியர். அவர்கள் மகிமையும் பிரகாசமும் உள்ளவர்கள். பலத்த சவுரியவான்கள். ஒரு தூதன் அசீரியரின் பாளயத்தில் இலட்சத்தெண்பத்தையாயிரம் போர் வீரரைச் சங்கரித்தான். ஆகிலும் அவர்கள் சர்வ வல்லவர்கள் அல்ல. அவர்கள் அறிவும் ஞானமும் உள்ளவர்கள். ஆகிலும் சர்வஞானம் அவர்களுக்கில்லை. அவர்களுக்குள் விவாகமும் மரணமுமில்லை. அவர்கள் எவ்வளவு மேன்மை பொருந்தியவர்களாயிருந்தாலும், நமது வணக்கத்துக்குரியவர்கள் அல்ல. யோவான் வணங்கப் பார்த்தபோது தேவதூதன் அப்படிச் செய்யாதபடி உடனே தடுத்தான்.

அவர்களுக்குள் கேரூபின்கள், சேராபின்கள், பிரதான தூதர்கள், தேவதூதர்கள், அதிகாரங்கள், வல்லமைகள், துரைத்தனங்கள், கர்த்தத்துவங்கள் எனப் பல வகுப்புகள் உண்டு. தேவதூதர்களின் தொகை ஆயிரம் பதினாயிரமான திரள் கூட்டம். அவர்கள் கர்த்தருடைய சர்வசேனைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். எலிசாவின் வேலைக்காரனுடைய கண்கள் திறக்கப்பட்டபோது தேவதூதர்களால் மலைநிறைந்திருப்பதைக் கண்டான். நமதாண்டவர் பேதுருவைப் பார்த்து: 'நான் என் பிதாவை வேண்டிக்கொண்டால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான அதாவது எழுபத்திரண்டாயிரத்துக்கு அதிகமான தேவ தூதர்களை அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா' என்று கேட்டார்.

தேவதூதர்களின் வரலாறுகளை வேதத்தில் தாராளமாகக் காண்கிறோம். அவர்கள் தேவனுடைய பணிவிடைக்காரரா யிருப்பதுபோல மனுஷருக்கும் பணிவிடைசெய்யும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஊழியத்தை ஏதேன் தொடங்கிக் காணலாம். உலகம் சிருஷ்டிக்குட்பட்டபோது தேவதூதர் யாவரும் ஏகமாய்ப்பாடி கெம்பீரித்தார்கள். அவர்கள் ஆபிரகாமின் கூடாரத்துக்கு வந்தார்கள். யாக்கோபை அடிக்கடி சந்தித்திருக்கிறார்கள். மோசேயோடு சம்பாஷித்தார்கள். நியாயாதிபதிகள், ஆசாரிமார், தீர்க்கதரிசிகள், தேவபக்தர் முதலானவர்களோடு பேசியிருக்கிறார்கள். தேவனுடைய ஜனங்களை எச்சரிக்க, கடிந்துகொள்ள, ஆறுதல்படுத்த, செய்தி சொல்ல, உதவிசெய்ய, விடுவிக்க அவர்கள் விரைந்து வந்திருக்கிறார்கள். **கடவுள்** அடியார் தாங்கள் தேவதூதரால் பெற்ற நன்மைகளை அறிக்கை செய்திருக்கிறார்கள். தானியேலைக் காப்பாற்றும்படி சிங்கங்களின் வாய்களைக் கட்டினது யார்? எலியாவை வனாந்தரத்தில் போஷித்தது யார்? ஆகாருக்குத் தண்ணீர்த் துரவைக் காண்பித்தது யார்? இவ்வாறு தேவதூதரின் பணிவிடைகளைப் பழைய ஏற்பாட்டில் மிகுதியாய்க் காண்கிறோம். ஆகிலும் பிந்தி வெகு காலமாக தேவதூதரின் வரத்துப்போக்கைச் சரித்திரத்தில் காணோம்.

கிறிஸ்து பிறந்தவுடனே தேவதூதர்களுக்குள் மறுபடியும் அசைவு உண்டானது, திரும்பவும் அவர்கள் உலகத்துக்குப் புறப்பட்டு வருகிறார்கள். ஆண்டவர் நாத்தான்வேலுக்குச் சொன்னதுபோலவே ஆயிற்று. ''தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் **இதுமுதல்** காண்பீர்கள் என்றார்.'' அவர் பிறப்புக்குக் கொஞ்சம் முன்னும் பின்னுமாக தூதர்களின் உற்சாகமான ஊழியத்தைக் காண்கிறோம். காபிரியேல் என்னும் தேவதூதன் தேவாலயத்தில் சகரியாவுக்குத் தோன்றி யோவானுடைய பிறப்பைக் குறித்து

அறிவித்தான். அதற்குப்பின் மரியம்மாள் வீட்டுக்குப் போய் பிறக்கப்போகிற **அதிசயநாதனைக்** குறித்து பக்தி விநயத்துடன் அறிவித்தான் யோசேப்பு மரியம்மாளைக் குறித்துச் சந்தேகித்துக் கொண்டிருக்கையில் தேவதூதன் அவருக்குத் தோன்றி: பிள்ளை பரிசுத்த ஆவியினால் உற்பத்தியாயிருக்கிறதென்றும், அவருக்கு **இயேசு** என்று பெயரிட வேண்டுமென்றும் சொன்னான். குழந்தை பிறந்தவுடனே ஒரு தூதன் வயல்வெளியில் மேய்ப்பருக்குத் தோன்றி: எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்று கூறினான். இதற்குள்ளாகப் பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: ''உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக'' என்று ஆரவாரித்துப் பாடினார்கள். கொஞ்சநேரம் பூலோகமே பரலோகம் போலாயிற்று. பரலோகநாதன் பூலோகத்துக்கு வந்தபோது பூலோகம் ஏன் பரலோகமாகாது? எபிரேயர் நிருபத்தில் சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது. ''தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது; தேவதூதர்கள் **யாவரும்** அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்.''

மாட்டுத்தொழுவத்தில் பிறந்த குழந்தையை மனுஷர் பணிந்து கொள்ளாமற் போனாலும், அவருடைய தூதர் சேனைகள் வந்து பணியாமல் இருக்குமோ? ஏரோது பிள்ளையைக் கொல்ல எத்தனித்தபோது தேவதூதன் யோசேப்புக்குத் தோன்றி, பிள்ளையையும் தாயையும் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி துரிதப்படுத்தினான். ஆபத்து கடந்தபின்பு, தேவதூதன் மறுபடியும் யோசேப்புக்கு எகிப்தில் தோன்றி சுயதேசம் போகும்படி சொன்னான். இவ்வாறு நெடுங்காலம் நின்றுபோன தேவதூதரின் ஊழியம் இக்குழந்தை பிறந்தவுடனே மறுபடியும் பூமியில் தொடங்கினது. வனாந்தரசோதனை முடிந்தவுடனே தேவதூதர்கள் வந்து அவரைப் போஷித்தார்கள். கெத்செமனேத் தோட்டத்தில் சோர்ந்துவிழ அவரைத் தூக்கிவிட நாதியில்லாததால் ஒரு தேவதூதன் வந்து அவரைத் தேற்றினான். ஒரு சமயம் ஒரு பக்தனைப் பார்த்து: தேவதூதர்களில் யாரைப் பார்க்க உமக்கு அதிகப்பிரியம் என்று கேட்டபோது அவர்: பராக்கிரமனான மிகாவேலையும் அல்ல, மரியம்மாளுக்குத் தோன்றின காபிரியேலையும் அல்ல, என் இரட்சகரைத் தோட்டத்தில் தூக்கி நிறுத்தித் தேற்றின தூதனுக்கே மீட்கப்பட்ட கூட்டத்தார் யாவரும் நன்றிபாராட்டக் கடனாளிகளாயிருக்கிறார்கள் என்று சொன்னார். அவர் உயிர்த்தெழுந்தபோது தேவதூதர் அந்தக் கல்லறைக்கு வந்தார்கள். அவர் பரத்துக்கு எழுந்தபோது

தேவதூதர்கள் தோன்றிச் சீஷரோடு பேசினார்கள். அவர் உன்னதத்திற்குப்போய் பிதாவினால் மகிமையையும் கனத்தையும் அடைந்தபோது, தேவதூதர்கள் யாவரும் அவருடைய பாதம் பணிந்து மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்'' என்று ஆர்ப்பரித்தார்கள். அவர் திரும்ப வரும்போது ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் அவரோடு வந்து பரிசுத்தவான்களை நாலா திசைகளிலுமிருந்து அவரிடத்தில் கூட்டிச் சேர்ப்பார்கள்.

தேவதூதர்கள் கிறிஸ்துவின் ஜீவியத்தில் மாத்திரமல்ல, தேவனுடைய பிள்ளைகளான நமக்கும் அவர்கள் பணிவிடைக்காரராயிருக்கிறார்கள். கிறிஸ்து நமக்குச் சொந்தமானால் அவருடைய தூதர்களும் நமக்குச் சொந்தமே. அவருடைய ஊழியக்காரர் நம்முடைய ஊழியக்காரர். இந்தச் சிலாக்கியம் கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தினால் கிடைத்தது. ''இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள் நிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். தங்களைப் பார்க்கிலும் விசேஷித்த மேன்மை நமக்குக் கிடைத்ததே என்று அவர்கள் பொறாமைப்படுவதில்லை. தேவனுடைய சித்தமே அவர்கள் மகிழ்ச்சி. நாம் இரட்சிப்பைப் பெற்று தேவனுக்குப் பிள்ளைகளும் சுதந்தரவாளிகளுமாக வேண்டுமென்பது அவருடைய சித்தம். அது தேவசித்தமாயிருக்கிறபடியால் தேவதூதர்கள் அதற்காகச் சந்தோஷப்படுகிறார்கள். சுவிசேஷ நற்செய்தியை மகா சந்தோஷத்தோடு மேய்ப்பருக்கு அறிவித்தவர்கள் அவர்களே. நாம் பாவத்தைவிட்டு மனந்திரும்பும்போது அவர்கள் எவ்வளவோ சந்தோஷிக்கிறார்கள். நாம் பூரண ரட்சிப்பை அடையும்வரை இம்மையில் நமக்கு உதவி செய்ய எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்கள். நமக்காக நமது பிதாவின் சமுகத்தை எப்போதும் அவர்கள் தரிசிக்கிறார்கள். பூமியில் நமக்குச் செய்யவேண்டிய சகல ஒத்தாசைகளையும் செய்தபின், நாம் மரிக்கும்போது நமது ஆத்துமாவைப் பரதீசில் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். சாத்தானுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள். மோசேயின் சரீரத்துக்காக சாத்தான் எவ்வளவோ பிரயாசப்பட்டான். பிரதான தூதனாகிய மிகாவேல் விடவில்லை. தேவதூதர்கள் நமக்கு மிகவும் அருமையானவர்கள். அவர்கள் நமக்கு நெருங்கிய இனத்தார். ஒருவிதமாய் நமக்கு மூத்த சகோதரர். நாம் பரலோகத்தில் தேவதூதரைப்போலிருப்போம் என்று இரட்சகரே சொன்னார். நாம் தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கும் மேலான

சிலாக்கியத்தோடு நமது ஜீவிய அனுபவம் தேவதூதர்களுக்கு ஒப்பாயிருக்கும்.

இவ்வாறு நமது இரட்சிப்பில் சம்பந்தப்பட்டவர்களும், நம்மோடு எக்காலத்திலும் கூட இருப்பவர்களுமான பரலோக குடும்பத்தாரை நாம் மறந்திருப்பது எப்படி? இது சதுசேயரின் காலம். உயிர்த்தெழுதலைக் கண்டதார்? தேவதூதர்களைக் கண்டதார்? என்று அநேக சதுசேயர் இக்காலத்தில் பேசுகிறார்கள். எல்லாவற்றையும் தொட்டு ஆராய்ந்து பூதக் கண்ணாடியால் சோதித்துப் பார்க்காவிட்டால் இவர்கள் ஒன்றையும் நம்பமாட்டார்கள். தூரதிருஷ்டிக் கண்ணாடியால் வானத்தின் காட்சிகளைக் கண்டு புஸ்தகம் எழுதுகிறார்கள். கடவுளை பார்க்கக்கூடிய தூரதிருஷ்டிக் கண்ணாடி யாரிடத்தில் உண்டு? ஆவியாயிருக்கிற கடவுளைப் பார்க்க ஆவிக்குரிய கண்ணாடி வேண்டுமே. அவருடைய குமாரனே அந்தக் கண்ணாடி. அவர் மூலமாயல்லாமல் தேவனையாவது, தேவதூதர்களைப்பற்றியாவது நாம் அறியக்கூடியதென்ன? நமதாண்டவருடைய ஜீவியத்தில் தேவதூதர்கள் காணப்படுவதுமன்றி, அவர்களைக்குறித்து எவ்வளவோ நிச்சயத்தோடு திரும்பவும் திரும்பவும் அவர் பேசியிருக்கிறார்.

கொர்நேலியுவுக்கு பேதுருவைப்பற்றி அறிவித்தது யார்! பேதுருவை சிறைச் சாலையிலிருந்து விடுவித்தது யார்? கப்பற்சேதத்தில் பவுலைத் தைரியப்படுத்தினது யார்? யோவானுக்குப் பரம எருசலேமின் சிறப்பைக் காண்பித்தது யார்? தேவதூதர்களின் பணிவிடை நின்றுபோகவில்லை. அவர்களை நாம் கண்ணால் காண்கிறதில்லை. அவர்கள் செட்டைகளோடு பிரகாசமாய்த் தோன்றுவதில்லை. ஆகிலும் அவர்கள் நம்மைச் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய தோற்றம் பலவிதம். அவர்கள் காற்றுகளாக, அக்கினி ஜுவாலைகளாக மேகங்களாக, எலிசாவின் வேலைக்காரன் கண்ட குதிரைகள் இரதங்களாக, ஸ்திரீகள் கல்லறையில்கண்ட வாலிபராக, ஆபிரகாம் கண்ட விருந்தினராக, இவ்வாறு யார் யாருக்கு எவ்விதமாகக் காணப்படவேண்டுமோ அவ்விதமாகக் காணப்படுகிறார்கள். அவர்களைத் தேவதூதரென்று நாம் அறியாமற்போகலாம். ஆகிலும் உத்தம விசுவாசிகளுக்கு தேவதூதரின் பணிவிடை கிடைப்பது நிச்சயம். நாம் கிறிஸ்துவைச் சேர்ந்ததின் பலனாக "ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கு வந்து சேர்ந்தோம்" (எபி. 12:22). நமது பாதம் வழுவி நமக்கு ஆபத்து வராதபடி அவர் தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். திடீரென விழுந்து சாகத்தக்க எத்தனையோ சமயங்களில் நாம் உயிர்தப்பிப் பிழைத்திருக்கிறோம். தாங்கினது யார்? நாம் திடீரென முன்செல்ல நாம் நின்ற இடத்தில் மரம் விழுந்தது. நம்மை அப்பாலே இழுத்துவிட்டது யார்? ரெயிலுக்குப் போக

தீவிரித்தபோது குதிரை ஓடாமல் தொந்தரவு கொடுக்க ரெயில்போய்விட்டது. போன ரெயில் வண்டிகளோடு மோத அநேக உயிர்சேதம் என்று பிந்தி அறிந்தோம். குதிரைக்கு முன் உருவின பட்டயத்தோடு வந்து நின்றது யார்? நாம் அற்பராயிருந்தும் இந்தப் பொல்லாத உலகத்தில் பாதுகாக்கப்பட்டிருப்பது நமது சேனைபலத்தால் அல்ல. ''கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளையம் இறங்கியிருக்கிறார்கள்.'' நமது கஷ்டங்களில் நமக்கு எதிர்பாராத சகாயம் வந்திருக்கிறது. பசியில் போஜனம் கிடைத்திருக்கிறது. கவலையில் ஆறுதல் பெற்றிருக்கிறோம். இவை யாவும் மனுஷர்மூலமாய் நடந்ததாகத் தோன்றலாம். ஆபிரகாமிடத்தில் மனுஷராக வந்தவர்கள் தேவதூதர்களே. இவ்வாறு தூதர்கள் நம்மைச் சூழ்ந்திருப்பதும் பணிவிடை செய்வதும், இரட்சகர் சொன்னபடி நமக்காக அவர்கள் ஏறுகிறதும் இறங்குகிறதும், அவர் பிறந்ததின் பலனாக நமக்குக் கிடைத்ததுண்டானால் அவர் **அதிசயமானவரல்லவா?**

தேவபக்தருக்குள் உண்டான எழுப்புதல். அவர் பரத்தை மாத்திரமல்ல, இகத்தையும் அசைக்கிற ஆண்டவரா யிருக்கிறார். உலக சரித்திரத்தில் தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலருடைய அழியாத மகிமை இரண்டு விசேஷித்த காரியங்களில் அடங்கியிருக்கின்றன. அவை எவை? அவர்களுடைய சரித்திரமல்ல. அது வாசிப்பதற்கு இன்பமாயிருந்தாலும் எக்காலத்திலும் அவர்களுக்கு அது எச்சரிப்பாகவேயிருந்தது. அவர்களுடைய நியாயப்பிரமாணமல்ல. அதைக்குறித்து அவர்கள் மேன்மை பாராட்டின போதிலும், அவர்கள் அதைக் கைக்கொண்டு நடவாததால் அவர்களுக்கு அது ஆக்கினையையே கூறினது. மேலும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய மேலான பிரமாணம் அதை விழுங்கிவிட்டதெனலாம். அப்படியானால் இஸ்ரவேலரின் நிலையான மகிமை எது? தீர்க்கதரிசனமும் சங்கீதமுமே. அவர்களிடத்தில் காணப்படும் வேறெந்தக் காரியமும் இந்த இரண்டு காரியங்களுக்கு ஈடாகாது. உலகத்தில் இந்நாள்வரை எத்தனையோ தேவாலயங்களில் இந்தத் தீர்க்கதரிசனங்கள் விவரிக்கப்படுகின்றன. அவைகள் கிறிஸ்துவிலும் யூதர்களிலும் நிறைவேறியிருக்கும் விதத்தைக் கவனிக்கும்போது உள்ளம் பரவசமடைகிறது. விசுவாசம் ஸ்திரப்படுகிறது. இவ்வாறு நிறைவேறினதும் நிறைவேற வேண்டியதுமான தீர்க்கதரிசனங்கள் உண்டு. அதுபோலவே சங்கீதங்களும் அழியாச் செல்வம்போல் இருக்கின்றன. ஒரு பரிசுத்தவான் மரிக்கும்வேளை வந்தபோது ஆண்டவர் எனக்கு இன்னும் கொஞ்சக்காலம் கொடுத்தால் சங்கீதங்களை மறுபடியும் வாசிக்க ஆசையுண்டு என்று சொன்னார். சங்கீதங்களை வாசித்தோ, பாடியோ ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றவர்கள் அனந்தம்.

ஆயினும் தீர்க்கதரிசனங்கள் மல்கியாவோடு நின்று போயின. நானூறு வருஷக்காலமாகத் தீர்க்கதரிசனம் உரைப்பாரில்லை. தேவசித்தம் மனுஷருக்கு வெளிப்படவில்லை. அவருடைய சத்தத்தைக் கேட்கக்கூடிய ஆவிக்குரிய தகுதியும் இல்லை. தேவனுக்கும் அவருடைய ஜனத்துக்கும் பெரும்பிளப்பு உண்டானதுபோலிருந்தது. இந்த **அதிசயநாதன்** பிறந்தவுடனே வெகுகாலம் நின்றுபோன தீர்க்கதரிசன வரம் மறுபடியும் உதித்தது. சகரியா ஒரு ஆசாரியனாயிருந்தும் சரியான தீர்க்கதரிசியானார். கிறிஸ்துவின் தெய்வீகத்தைக்குறித்தும், அவரது பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைக்குறித்தும், யோவான் முன்தூதனாகச் செய்யப்போகிற ஊழியத்தைக் குறித்தும் அவர் சொன்னவைகள் எவ்வளவு அதிசயமாயிருக்கின்றன! அன்னாள் என்னும் எண்பத்துநாலு வயதுள்ள விதவை தேவாலயத்தில் இருந்து இரவும் பகலும் ஜெபம்பண்ணிக்கொண்டிருப்பது வழக்கம். அந்த விதவை ஓர் தீர்க்கதரிசி. அந்த அம்மாளும் பிள்ளையைக் கண்டவுடனே ஆவியில் பரவசமடைந்து, "கர்த்தரைப் புகழ்ந்து எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்." இது தவிர, யோவான்ஸ்நானன் தானே பலத்த தீர்க்கதரிசியாக எழும்பி கிறிஸ்துவுக்கு முன்னோடினார். ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி எழும்பினதில்லை என்று இரட்சகரே சொன்னார். இவ்வாறு தேவசத்தம் கேட்டு, கடவுளுக்காகப் பேசக்கூடிய தீர்க்கதரிசன வரம் ஆண்டவர் குழந்தையாகப் பிறந்த சமயத்தில் திரும்ப உயிர்கொண்டது.

தீர்க்கதரிசனங்கள் மாத்திரமல்ல. சங்கீதங்களும் புறப்படுகின்றன. மரியம்மாளைக் கண்டதும் எலிசபெத்து பாடின சங்கீதம். ஆலயத்தில் முதிர் வயதான சிமியோன் பாடின சங்கீதம். இவைகள் இந்நாள்வரை நமது ஆலயங்களில் அருமையாகப் பாடப்படுகின்றன. பாடினவர்கள் தாழ்மையும் எளிமையுமானவர்களாயினும் தேவன் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்த சமயத்தில் நெடுங்காலமாக நின்றுபோயிருந்த சங்கீதவரம் திரும்பவும் உயிர்த்தது.

சொந்த ஜனமான யூதரையன்றி இன்னும் யாருக்குள் அவரது பிறப்பின் மாட்சிமை காணப்பட்டதென்று பார்ப்போம். கிழக்குத் தேசத்தில் வானசாஸ்திரிகள் இருந்தார்கள். இவர்கள் வானத்தின் கூறுகளை வகையறுத்து, கிரகங்களைக் கணித்து, பூமியிலுள்ள மனுஷரின் வாழ்வு தாழ்வுகளை அறிவிக்கும் ஜோசியர். இராஜாக்களும் ஜனங்களும் இவர்களை மதித்து இவர்கள் சொற்கேட்டு நடப்பார்கள். இவர்கள் இவ்வாறு ஆராய்ச்சி செய்துவருங்காலத்தில் ஒரு விசேஷித்த நட்சத்திரம் ஒரு இராஜாவின் பிறப்பை அவர்களுக்கு அறிவித்தது.

யூதர்களைப்போல் வேதாகமத்தில் அவர்கள் பயிற்று விக்கப்பட்டவர்கள் அல்ல. என்றாலும் "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்" எனக் கிழக்கிலுள்ள பிலேயாம் சொன்ன தீர்க்கதரிசனத்தை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இதன்றி, அத்திசையெங்கும் சிதறுண்டுபோன யூதர்கள் தங்கள் மேசியாவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்ததையும் அவர்கள் அறிவார்கள். தேவன் இவர்களைத் தமது நட்சத்திரத்தின் மூலமாய்ப் பிள்ளையினிடம் நடத்தச் சித்தமானார். இவர்கள் மேற்கு முகமாய் நீண்ட பிரயாணம் செய்து எருசலேமுக்கு வந்து, ஏரோது இராஜாவைக் கண்டு. "யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்றார்கள். பின்பு எருசலேமிலிருந்து தெற்கிலுள்ள பெத்லகேமை நோக்கி நடந்தார்கள். அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளையிருந்த ஸ்தலத்துக்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்கள் பிள்ளையைக் கண்டபோது தங்கள் காணிக்கைகளை அவருக்குப் படைத்து, அவருக்குமுன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்துகொண்டார்கள். பிந்தி தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கப்போகிற திரளான புறஜாதியாருக்கு அவர்கள் முதற்பலன்களானார்கள். அவர் யூதருக்கு மாத்திரமல்ல எல்லாருக்கும் இரட்சகர் என்பதை இவ்வாறு விளங்கச் செய்தார்.

இன்னும் எங்கே அசைவு உண்டானது? வானத்தின் தூதர்களுக்குள் மாத்திரமல்ல. பூமியில் பக்தருக்குள் மாத்திரமல்ல. பாதாளத்தின் பிசாசுகளுக்குள்ளும் **அதிசயநாதன்** பிறப்பு அசைவை உண்டாக்கிற்று. ஏதேனில் கூறின தீர்ப்பை சாத்தான் கேட்டதுமுதல் அவன் கலக்கத்தோடிருந்தான். தன் தலையை நசுக்கப்போகிறவர் பிறந்தாரென்று அவன் கண்டபோது, அவரைச் சிசுவிலே நசுக்கிப்போடத் தீர்மானித்தான். கிறிஸ்துவின் பிறப்பில் சாத்தானைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையே என்று நாம் நினைக்கலாம். அவனுடைய தந்திரங்களில் பெரிய தந்திரம் அதுதான். அவன் தன்னைக் காண்பிக்கமாட்டான். மனுஷரைத் தனக்கு வாகனமாக்கிக்கொள்ளுவான். இந்தச் சமயத்தில் அவனுக்கு ஏற்ற வாகனம் ஏரோது இராஜா. துர்க்கிரியைகளுக்கும் கொலைபாதகங்களுக்கும் அவனுக்கு நிகரானவர்கள் இல்லை. அவன் சிங்காசனமே இரத்தம். ஏரோதுக்கு மகனாயிருப்பதிலும் அவனுடைய பன்றியாயிருப்பது நல்லது என்று அகுஸ்துராயன் சொன்னான். இப்பேர்ப்பட்ட குரூரமான கொலைபாதகனுக்குள் சாத்தான் புகுந்தான். சாஸ்திரிகளைப்போல தானும் பிள்ளையைப் பணிந்துகொள்ள விரும்பினதும், பிள்ளை பிறந்த காலத்தை விசாரித்ததுமான

பிசாசின் வஞ்சகத்தைக் கவனியுங்கள். குற்றமில்லாத பாலகரை அவன் கொலைசெய்த குரூரத்தையும் கவனியுங்கள். தேவன் தமது பிள்ளையைச் சாத்தான் கையில் விடவில்லை. அந்தக் குழந்தையினிமித்தம் அநேக ஏழைக் குழந்தைகள் மரித்தது போலவே, அவர் பிறந்ததுமுதல் நன்மைக்கும் தீமைக்கும், ஒளிக்கும் இருளுக்கும், ஜீவனுக்கும் மரணத்துக்கும் தீராப்பகை ஏற்பட்டது. ஜெயம் கிறிஸ்துவுக்கே!

இவ்வாறு **அதிசயநாதனின்** பிறப்பால், பூமியிலிருந்து ஏறுகிறதும் இறங்குகிறதுமான தேவதூதர்களின் பணிவிடைகள் திரும்ப உயிரடைந்தன. வெகுகாலம் நின்றுபோன தீர்க்கதரிசனமும் சங்கீதமும் திரும்பத் தழைத்தன. பாதாள லோகத்தின் பிசாசுகள் வைராக்கியங்கொண்டு பக்தரை நிர்மூலம் பண்ணத் தீர்மானித்தன.

இக்குழந்தை பிறப்பின் சம்பந்தமாய் நடந்த அதிசயங்கள் யாவற்றிற்கும் மேலான ஓர் அதிசயமுண்டு. அந்த அதிசயம் அவருடைய **தாழ்மையே**. அந்தத் தாழ்மையே அவருக்கும் நமக்கும் மெய்யான மகிமையாயிற்று. அவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததும், துணிகளால் சுற்றப்பட்டு முன்னணையில் கிடத்தப்பட்டதும் எவ்வளவு பரிதாபம், எவ்வளவு சிறுமையென்று நாம் துக்கத்துடன் சிந்திப்பதுண்டு. அவர் தரித்திரரானாரே, அடிமைபோலானாரே என்று பவுலும் பிரலாபித்து எழுதினதுண்டு. அவருடைய தாழ்மையின் பிறப்பைக்குறித்து நாம் இவ்வாறு பேசுவது ஒருவிதத்தில் சரிதான். அவர் பிறப்புமுதல் கடைசிவரை அவருடைய காரியங்கள் யாவும் தரித்திரமே. காஷ்மீர் இராஜா விக்டோரியா இராணியவர்களுக்கு முப்பத்துமூன்று லட்சம் ரூபாய் பெறுமான துப்பட்டி ஒன்று அனுப்பினார். இராஜாதிராஜன் குழந்தையாய்ப் பிறந்தபோது வைக்கோல் அவர் படுக்கை. அவர் தரித்திரத்தை அறிய வேண்டுமாகில் சத்திரத்தில் தங்கினவர்களைக் கேட்கவேணும். மேய்ப்பர்களைக் கேட்கவேணும். கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளைக் கேட்கவேணும். தாயாரையே கேட்கலாம். அவருக்கு வீடுகள் உண்டோ? அவைகளிலிருந்து கிடைத்த வாடகை வருமானம் எவ்வளவு? வயல்நிலங்கள் தோட்டம் துரவுகள் உண்டோ? அவருடைய ஆஸ்தியில் சர்க்காருக்குக் கொடுத்த தீர்வை எவ்வளவு? ஏறினபடவுகள் இரவல். ஏறின வாகனம் இரவல். தூங்கின தலையணை இரவல். சாப்பாடு தர்மசகாயம். வரிசெலுத்தின காசு மீன் வாயிலிருந்து எடுத்தது. அவர் மரித்தபோது அவர் ஆஸ்தியைப் பங்கிட்டால் காலமெல்லாம் உபயோகித்ததும், கடலுப்பு ஏறினதும், தூசி படிந்ததுமான ஓர் அங்கியே. ஏன் அவர் இவ்வளவு எளிமையில் வந்தார்?

தாழ்மையிலேதான் அவர் மகிமை விளங்குகிறது. நாம் அவர் எளிமையைக் குறித்து இவ்வளவு கவலையோடு பேசினாலும், அவரோ தம்மைத் தரித்திரனாக எண்ணவில்லை. மனுஷர் பார்வையில் நான் தரித்திரனாயிருக்கிறேனே என்று அவர் ஒருபோதும் சஞ்சலப்படவில்லை. எது மேன்மை, எது இழிவு என்று அவருக்குத் திட்டமாகத் தெரியும். இந்த இரகசியத்தை உலகம் அறியவில்லை இரண்டாயிர வருஷக்காலமாகியும் இந்தப் பாடத்தை மனுஷர் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. மகிமை **மனுஷனிலிருக்கிறதேயல்லாமல்** அவன் உடையிலும் ஐசுவரியத்திலும் இல்லை. மனுஷன் என்றால் **நல்லவன்** என்று அர்த்தம். தேவன் மனுஷனை உண்டாக்கினபோது அவன் **செவ்வையான**வனாயிருந்தான். அதுவே அவனுக்கு அழகும் அலங்காரமுமாயிருந்தன. தேவன் அவன் அழகில் பிரியப்பட்டார். அவன் தேவமகிமை அணிந்தவனாயிருந்தான். இப்பொழுது நாம் காண்கிற எவ்வித பாவங்களும் கேடுகளும் அவனில் இல்லை. பாவமற்ற அந்தப் புருஷனே **மனுஷன்**. அந்த நல்ல நிலைமையே அவனுக்கு மகிமை. அதுவே அவனுக்கு மேன்மை.

கடவுள் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது, குமாரன் தமது மாம்ச சரீரத்தை எடுத்துக்கொண்டு குழந்தையாகப் பிறந்தபோது, கிரீடத்தையும் செங்கோலையும் தமக்கு மகிமையாகத் தேடவில்லை. புறம்பான எளிய நிலைமையைத் தமக்கு அவமானமாக நினைக்கவில்லை. தேவதூதன் குழந்தையைக் குறித்து மேய்ப்பருக்கு விளம்பரஞ் செய்தபோது சொன்ன அடையாளம் என்ன? இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். எது? கூடகோபுரம் மாடமாளிகை அல்ல, இரத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும் அல்ல, கிரீடமும் செங்கோலுமல்ல, பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்கும் அதுவே அடையாளம். அந்தப் **பிள்ளையே** உங்களுக்கு அடையாளம் என்றான். இந்தக் குழந்தைக்கு முன்பாக நமது தற்புகழ்ச்சி தற்பெருமை யாவும் அடிபட்டன. **நான்** என்னும் அகங்காரமும், பிறர் மேன்மை அடைவதால் உண்டாகும் எரிச்சலும், நம்மை மதித்துப் புகழவில்லையே என்னும் ஏக்கமும், உலகத்தில் பேரெடுக்கவேண்டுமென்கிற அபேட்சையும் வெட்கத்துக் குள்ளாயின. தனக்குரிய மேன்மை யாவையும் குப்பையென்று பவுலை எண்ணும்படி செய்தது இந்தக் காட்சியல்லவா? சகல சம்பத்துக்களின் நடுவில் ஒருவன் பிறந்ததினாலே மனுஷனாகமாட்டான். ஒருவன் தரித்திரத்தில் பிறந்ததினாலே அற்பனாகமாட்டான். சகல நற்குணங்களும் நிறைந்த **மனுஷீகமே** மனுஷனுக்கு மகிமை. புறம்பான அலங்காரம் அந்த மகிமையைக் கூட்டுவதில்லை. புறம்பான தரித்திரம் அந்த மகிமையைக்

குறைப்பதில்லை. உலக மகிமையின் நடுவில் மகா அற்பராக எண்ணப்படுகிறவர்களுமுண்டு. மகா தரித்திரத்தின் நடுவில் யாவராலும் மதிக்கப்படுகிறவர்களுமுண்டு. மனுஷருடைய கேடுகள் ஜசுவரியத்தாலும் புறம்பான ஆடம்பரத்தாலும் மூடப்படலாம். ஆனாலும் "மனுஷருக்குள் மேன்மையாக எண்ணப்படுவது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது." மனுஷனுடைய மெய்யான மகிமை இன்னதென்பதை இந்தக் குழந்தையில் காணலாம். மனுஷனை உண்டாக்கின நாளில் தேவன் சந்தோஷப்பட்டதுபோல் பழுதற்ற பூரண மனுஷீகத்தில் பிறந்த இந்தப் பிள்ளையைப் பார்த்து: "இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்றார். ஏனென்றால் பழுதற்ற மனுஷீகத்துக்கும் தெய்வீகத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. தமது சாயலையும் தமது ரூபத்தையும் மனுஷனில் காணும்போது கடவுள் மகிழ்ச்சியடைகிறார்.

இந்த குழந்தையில் பழுதற்ற மனுஷீகத்தின் மகிமை மாத்திரமல்ல, அத்தோடு சம்பந்தப்பட்ட வேறொரு மகிமையும் உண்டு. காணக்கூடாத கடவுளை நாம் காணத்தக்கதாக தேவமகிமையைத் தமக்குள்ளே மறைத்துப் பிறந்ததும் மகிமையே. ஆசரிப்புக்கூடாரம் புறம்பே தகசுத்தோல், வெள்ளாட்டுத் தோலால் முடப்பட்டுப் பார்வைக்கு அற்பமாய்த் தோன்றினாலும் உள்ளே தேவமகிமை காணப்பட்டதுபோல, இவருடைய மாம்ச திரைக்குள் தேவமகிமை குடிகொண்டிருந்தது. சுவிசேஷத்தைத் தள்ளிவிட்டுத் தாங்களாக கடவுளைப்பற்றி அறியவேண்டும் என்று தீர்மானித்த அநேக கல்விமான்கள் உண்டு. அவர்கள் மெய்யாகவே கடவுளை அறியும்படி தங்கள் நேரத்தையும் பலத்தையும் செலவிட்டார்கள். கிறிஸ்துவை அல்லாமல், திருச்சபையின் போதனை அல்லாமல், சிருஷ்டிப்பைக் கொண்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க நாட்டங்கொண்டார்கள். அவ்வாறு தேடி அவர்கள் கண்டதென்ன? ஒன்றுமே அவர்கள் கண்டதில்லையென்று சொல்வது பொய்யாயிருக்கும். அவர்கள் அதிகமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது என்ன? "அறிவும் சக்தியும் சேர்ந்து ஏதோ ஒன்று சர்வத்துக்கும் பின்னால் மறைந்து நிற்கிறது" என்பதே. அந்த அறிவும் சக்தியும் சேர்ந்த வஸ்து எது? அறிவும் சக்தியும் சேர்ந்த ஒன்றை நாம் வணங்கலாமா? கஷ்டமும் கவலையும் நம்மை மேற்கொண்டு, நாம் வியாகுலப்பட்டுத் தவிக்கும் சமயத்தில் இந்த அறிவும் சக்தியுமுள்ள அறியப்படாத வஸ்துவண்டை போகலாமா? நாம் பசியாயிருக்கும்போது அதனண்டை சாப்பாடு கேட்கலாமா? எல்லாவற்றிற்கும் மேலாக நமது பாவங்களை அறிக்கையிட்டால் இந்தச் சக்தி மன்னித்து நமக்குச் சமாதானத்தைக் கொடுக்குமா? புத்தியும் சக்தியும் சேர்ந்த ஏதோ ஒன்றினிடத்தில் நாம் ஜெபிக்கலாமா? ஐயோ, அத்தேனரே!

கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்கிறவன் யார்? அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தாவிட்டால் நாம் அவரை அறிவதெப்படி? "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற அவருடைய ஒரே பேறான குமாரனே அவரை நமக்கு வெளிப்படுத்தினார்." தேவன் தம்மை வெளிப்படுத்துகிற வழியைத் தள்ளிவிட்டால் வேறு வழியேது? அந்த மெய்யான வழி இந்தக் **குழந்தையே**. அன்புள்ள பிதாவின் இருதயத்திலிருந்து புறப்பட்டு வந்த குழந்தை இது. இந்தப் பிள்ளையாலே பிதாவைக் காண்கிறோம். அவருடைய திருமார்பில் சாய்ந்திருந்த யோவான் சொல்லட்டும். "அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." அன்பும் கிருபையும் நிறைந்து தேவனைச் சொந்தத் தகப்பனாகக் காணவும், அவருக்குப் பிள்ளைகளாகவும், அவரிடத்தில் தாராளமாய்ப் போகவும், நமக்குத் தேவையான நன்மைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும், நமது பாவங்கள் நீங்கி பரிசுத்தத்தில் வளரவும், நமக்காகப் பிதாவின் வீட்டில் ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற அநேக காரியங்களை அறியவும் யாராலே நமக்குக் கிருபை கிடைத்தது? இந்தக் குழந்தை உலகத்தில் பிறக்காமற் போனால் நமது கதி எப்படியிருக்கும்?

ஒருவரும் கிட்டிச் சேரக்கூடாத ஒளியிலிருக்கும் கடவுள், நாம் கிட்டிச் சேரவும் தொடவுங்கூடிய சரீரத்தில் வந்ததே அவர் பிறப்பின் சம்பந்தமாயுள்ள சகல மகிமைகளிலும் சிறந்த மகிமையாகும். நாம் கிறிஸ்மஸ் தினத்தில் பிரதானமாய்ச் சிந்திக்கவேண்டிய விஷயம் அதுதான். தேவன் இந்தக் குழந்தையில் தம்மை **மறைத்துத்** தம்மை **வெளிப்படுத்தினார்.** அவர் பிறந்ததுமுதல் சிலுவைவரை நாம் அவரைப் பின் செல்லுவோம். அவர் ஜீவியத்தையும் பேச்சையும் கிரியைகளையும் கவனிப்போம். அவர் வாய் மனுஷர் பாஷையில் பேசுகிறது. அவர் கைகள் நன்மை புரிகின்றன. அவர் கால்கள் நீண்ட பிரயாணங்கள் செய்கின்றன. அவர் கண்களில் கண்ணீர் வடிகிறது. அவர் ஜனங்களைக் கண்டு மனதுருகுகிறார். இவ்வாறு அவரோடு நாம் நடக்கும்போது, ஒரு மனுஷனோடு நடந்ததாக எண்ணிக்கொண்டாலும், கடவுளோடு அல்லவா நடந்தோம். இவ்வாறு, இந்தக் குழந்தையின் பிறப்பில் மனுஷீக மகிமையும் தெய்வீக மகிமையும் வெளிப்பட்டன.

இந்த **அதிசயநாதன்** தோன்றி இரண்டாயிர வருஷக்கால மாகியும், தேவதூதர்கள் பாட்டு இன்னும் ஓயவில்லை. தூதன் அறிவித்த செய்தியும், பரமசேனை பாடின பாட்டும் உலகமெங்கும் பரவிக்கொண்டே போகின்றன. தீர்க்கதரிசனங்கள் ஓய்ந்துபோகவில்லை, சகரியா, மரியம்மாள். சிமியோன் பாடின

கீதங்கள் உலகத்தின் பல சபைகளிலும் இந்நாள்வரை இனிமையாகப் பாடப்படுகின்றன. ஏரோதுக்குள் புகுந்து குழந்தையைக் கொல்லத் தீர்மானித்த சாத்தானுடைய மும்முரமான கிரியைகளுக்கும் குறைவில்லை. சாத்தான் தன் காலம் சுருக்கமென்பதை அறிந்து உலகத்தைக் கெடுக்கும்படி முழு பலத்தோடு வேலை செய்கிறான். தேவ தீர்மானப்படி அவரது இராஜ்யம் வெளிப்படும்போது, அவன் முற்றிலும் ஜெயிக்கப்பட்டு அழிவான்.

மரியம்மாள் தான் பெற்ற பாலகனைக்குறித்த இரகசியம் யாவையும் உடனே அறிந்துகொண்டார்கள் என்று நினைக்க ஏதுவில்லை. தேவதூதன் அறிவித்ததில் மூன்று காரியங்கள் உண்டு. அவருக்கு **இயேசு** என்று பேரிட வேண்டும். அவர் என்றென்றைக்கும் **அரசாளுவார்**. அவர் தேவனுடைய **குமாரன்** என்னப்படுவார். இந்த மூன்று காரியங்களின் இரகசியத்தை மரியம்மாள் உடனே அறிந்திருக்கமாட்டார்கள். **யெகோவா** இரட்சிக்கிறவர் என்பதிலிருந்து **இயேசு** என்னும் பேர் வந்தது. அந்த இரட்சிப்பு எப்படிப்பட்டதென்று தேவதூதன் மரியம்மாளுக்குச் சொல்லவில்லை. அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று பிந்தி யோசேப்புக்குச் சொல்லப்பட்டது. ஆகிலும் அந்த இரட்சிப்பாவது என்னவென்பதும், அதைச் சம்பாதிக்கும் வழி எதுவென்பதும், எவ்வாறு அவர் நம்மை ரட்சிக்கிறார் என்பதும் படிப்படியாகத்தான் அறியவேண்டும். அப்போஸ்தலருங்கூட பிந்தித்தான் அதை அறிந்தார்கள்.

அவர் இராஜாவாக அரசாளுவார் என்பதின் கருத்தையும் மரியம்மாள் அறிந்திருக்கமாட்டார்கள். அவரது இரட்சிப்பு எவ்வாறு பிந்தி அறியவேண்டியதாயிற்றோ அதுபோலவே அவரது இராஜ்யத்தின் தன்மையையும் பிந்தித்தான் அறிய வேண்டியதாயிற்று. தாவீதின் சிங்காசனம் என்பதும், யாக்கோபின் குடும்பத்தாரை அரசாளுவார் என்பதும், தாயாரும் யூதரும் லேசாய் அறிந்து கொள்ளக்கூடிய காரியமே. ஆகிலும் அவர்கள் நினைத்தபடி காரியம் கைகூடிவரவில்லை. அவர் இராஜாவாகும்படி சம்மதிக்காமல் கூட்டத்தைவிட்டு ஒடி மறைந்தார். அவரைச் சேர்ந்தவர்களுக்கு அது துக்கமும், மற்றவர்களுக்கு எரிச்சலுமாயிருந்தது. தேவதூதன் சொன்ன வாக்கோ பொய்யல்ல. இது லூக்காவின் கட்டுமானமல்ல. யூதர் தங்கள் இராஜாவைச் சிலுவையில் அறைந்து, இஸ்ரவேல் வீட்டார் பல விதத்திலும் நிலைகுலைந்து, தாவீதின் சிங்காசனம் உருத்தெரியாமல் அழிந்துபோன காலத்தில் இப்படிப்பட்ட வார்த்தைகளை யார் சொல்லக்கூடும்? அது நிறைவேறும் காலத்தையும் விதத்தையும் யூதர் அறியாமற்போனார்கள். "என் இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல" என்றார்.

மூன்றாவது சொன்ன காரியமும் மறைபொருள்தான். அவர் தேவனுடைய **குமாரன்** என்னப்படுவார் என்பது. ஒருவேளை மனுப்புத்திரருக்குள் அவர் பெரியவரும் உன்னதமானவருமாயிருக்கலாம் என்று அம்மாள் எண்ணியிருக்கக்கூடும். ஆகையால் அவரது உற்பத்தியின் இரகசியத்தை வேததூதன் மரியம்மாளுக்கு விளக்கிக்காட்டுகிறான். அதாவது, பரிசுத்தாவியின் மூலமாய் அந்தக் குழந்தை உற்பத்தியாகும். ஆகையால், உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது** தேவனுடைய **குமாரன்** என்னப்படும் என்றான். அந்தப் பிள்ளையைக் குறித்து நாம் இக்காலத்தில் அறிந்திருப்பதுபோல மரியம்மாள் அச்சமயத்தில் அறிந்துகொண்டார்கள் என்று எண்ண இடமில்லை. அவர் தெய்வத்தில் தெய்வமானவரென்றும், அவர் பிறக்கும்முன் அநாதியாய் பிதாவோடிருந்த **குமாரன்** என்றும் நாம் அறிக்கையிடுகிறோம். இந்த அறிவு அவரிலிருந்து படிப்படியாக திருச்சபைக்குக் கிடைத்தது.

தேவன் ஒரே சமயத்தில் சகல இரகசியங்களையும் வெளிப்படுத்துகிறவரல்ல. காலத்துக்குமுன் அவசரப்பட்டு ஒன்றை அறிவிக்கிறவருமல்ல. அம்மாளுக்கு அந்த நேரத்தில் தேவதூதன் சொன்னதே போதும். அதற்குமேல் சொன்னால் அவர்கள் அதை அறியவும் தாங்கவும் மாட்டார்கள். நமதாண்டவர் தமது சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினதும் படிப்படியாகவே சர்வத்தையும் சிருஷ்டித்த கடவுள் உன்னிடத்தில் பிறப்பாரென்று மரியம்மாளுக்கு வெளிப்படையாகச் செல்லியிருந்தால் எப்படியிருந்திருக்கும்? ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பாராட்ட வேண்டிய பட்சம், செய்யவேண்டிய கடமைகள், தாய்க்கும் பிள்ளைக்கும் உரிய அனுதாபம் முதலிய சுபாவ இலட்சணங்களுக்கு அவர் கடவுள் என்னும் அறிவு இடையூறாக இருந்திருக்குமல்லவோ? ஒரு ஒப்புக்குத் தாயும் மகனும்போல் தோன்றுமல்லவோ? ஆகையால் அவருடைய தெய்வீக இரகசியம் படிப்படியாக அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களால் வெளிப்படவேண்டியதாயிருந்தது. கிறிஸ்து உயிரோடெழுந்து, பரலோகத்துக்குப்போய், பரிசுத்த ஆவியைப் பொழிந்தபின், தான் பெற்று வளர்த்த மகன் இவர்தானோ என்று நினைக்க நினைக்க, மரியம்மாளுடைய இருதயம் ஆனந்த பரவசமடைந்திருக்காதா? **அதிசயநாதனைப்** பெற்றெடுத்த மரியம்மாள் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பெற்றதும், எல்லாச் சந்ததிகளும் அவர்களைப் **பாக்கியவதி** என்று சொல்வது நியாயமே. இந்தக் குழந்தை யார் யாருக்குள் உருவாகி வளருகிறதோ அவர்களும் பாக்கியர்களே.

2
கன்னிகைப் பிறப்பு
The Virgin Birth

ஒருவரும் கிட்டிச் சேரக்கூடாத ஒளியில் வசிப்பவர் கடவுள். அவர் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமானவர். **குமாரன்** அந்த ஒளியிலிருந்து புறப்பட்டுவந்த மகிமையின் பிரகாசம். வானத்தில் பிரகாசிக்கும் சூரியனை நாம் காணவும் கிட்டி நெருங்கவும் முடியாது. நம்மைச் சூழ்ந்து பரவி நிற்கும் ஆகாயத்தின் மூலமாய் சூரியன் தன்னை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு ஆகாயத்தின் மூலமாய் பிரகாசிப்பதினால், சூரியனுடைய பூரண மகிமையும் காந்தியும் மாறிப்போகாமல், நாம் அதைப்பெற்று அனுபவிக்கக்கூடிய அளவுக்கு அதன் ஜோதி மட்டுப்படுகிறது. ஒருவரும் கிட்டிச் சேரக்கூடாத ஒளியாகிய கடவுள் தம்மை கிறிஸ்துவின்மூலமாய் நமக்கு வெளிப்படுத்துவதும் இவ்வாறே. அவர் மாம்ச திரையின் மூலமாய் தம்மை நமக்கு வெளிப்படுத்தச் சித்தங்கொள்ளா விட்டால், ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிற மகிமையின் ஒளியை நாம் ஒருபோதும் அறியமுடியாது. "என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்" என்ற தீர்க்கதரிசனம் கிறிஸ்துவில் நிறைவேறினது (மல். 4:2), கிறிஸ்துவின் ஜீவியம் மாம்சத்துக்குள் அடங்கின கடவுள் ஜீவியம். கடவுளை மறைக்கிறதும் அந்தச் சரீரமே, அவரை வெளிப் படுத்துகிறதும் அந்த சரீரமே. இவர் மெய்யான மனுஷன் என்று சொல்லும்படியான மனுஷீகமும், ''என் தேவனே என் ஆண்டவரே'' என்று வணங்கும்படியான தெய்வீகமும் பொருந்திய **தேவமனுஷனாகப்** பிறந்தார்.

"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" என்று ஏசாயா சொன்னார். **இம்மானுவேல்** என்பதற்கு "நம்மோடு

கடவுள்'' என்று அர்த்தம். கிறிஸ்துவின் பிறப்பில் கடவுள் சரீரத்தில் வந்தார். உன்னதத்திலிருந்து அருணோதயம் நம்மைச் சந்தித்தது. தேவஜீவன் வெளிப்பட்டது. கடவுளைக்கண்டு மனுஷன் சாகவில்லை. நாம் அவரைப் பார்க்கவும், அவரைத் தொடவும், அவர் திருமார்பில் சாய்ந்துகொள்ளவும் தக்கதாக அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி மாம்சமாகிய திரையினால் தம்மைப் போர்த்துக்கொண்டு மனுஷருக்குள் சஞ்சரித்தார். கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்ட கிருபையின் இரகசியம் இதுவே.

நமதாண்டவர் ''பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்'' என்பது, திருச்சபை ஆதிமுதல் அறிக்கையிடுகிற விசுவாசப் பிரமாணம். தேவ காரியங்களை விசுவாசிப்பது இலேசான காரியமல்ல. விசுவாசம் தேவ ஈவு. கிறிஸ்துவின் அற்புத பிறப்பை எல்லோருமே ஏற்றுக்கொள்வார்களென்று நாம் எதிர்பார்க்கமுடியாது. அவருடைய அதிசய பிறப்பை மறுத்தவர்கள் ஆதிமுதல் இருந்தார்கள். எக்காலத்திலும் இருப்பார்கள். தேவ ஊழியத்திற்கென்று ஆயத்தப்படும் மாணாக்கர் இந்த மாறு பாடான உபதேசத்தை ஏற்றுக்கொள்வது எவ்வளவு மோசம். ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் மாத்திரமல்ல, நமது தேசத்திலும் இவ்வுபதேசம் பரவி வருகிறது. இக்கொள்கை யுள்ளவர்கள் சிறந்த கல்விமான்களாயிருப்பதால் மற்றவர்கள் எதிர்பேசாது இணங்குகிறார்கள். "இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தின பிதாவுக்கு ஸ்தோத்திரம்.'' ஞானமும் கல்வியும் உலகத்தை இரட்சிக்காது. ''இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கியிருக்கிறார்.'' "உலகமானது சுயஞானத்தினால் தேவனை அறியவில்லை." சிறந்த கல்விமான்களான பரிசுத்த வான்கள், கிறிஸ்து "பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்'' என்பதை உறுதியாய் அறிக்கை யிடுகிறார்கள். அவர்கள் தொகை ஏராளம். கிழக்குத் தேசத்து **ஞானிகள்** அல்லவோ பெத்லகேமில் பிறந்த ஏழைக் குழந்தை யைக் காணிக்கைகளுடன் வந்து **பணிந்துகொண்டார்கள்.**

கிறிஸ்துவைப்பற்றிய எந்த அறிவுக்கும் சுவிசேஷமே ஆதாரம். சுவிசேஷம் தேவ ஆவியால் எழுதப்பெற்றது. எழுதினவர்கள் உத்தம பக்தர். கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகள். தேவன் கிருபையாய் வெளிப்படுத்தின சுவிசேஷத்தின் மூலமாயல்லாமல் வேறெவ்விதத்திலும் கிறிஸ்துவைக் குறித்து நாம் அறிய முடியாது. அவர் கிருபையாய் வெளிப்படுத்தின இரகசியங்களைப் பணிந்த சிந்தையுடன் ஏற்றுக்கொள்வதே நமக்கு ஆசீர்வாதம். அவைகளைல் கிறிஸ்துவின் **பிறப்பு** ஒரு

இரகசியம். தாவீது அரசன் தன் தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதைக்குறித்து ''நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டேன்'' என்று சொன்னது உண்மையானால்" கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டது'' எவ்வளவு பெரிய அதிசயமாயிருக்கவேண்டும்! அவர் எவ்விதமாய்ப் பிறந்தார் என்பதை மத்தேயுவும் லூக்காவும்மாத்திரம் விவரமாய் எழுதுகிறார்கள். மற்ற இரண்டு சுவிசேஷங்களிலும் நிருபங்களிலும் அவர் பிறப்பின் வரலாற்றைக் காண்பதில்லை. ஆகையால் அவர்கள் நமதாண்டவரின் அற்புத பிறப்பை நம்பவில்லை என்று சொல்லலாமா? நிச்சயமாகவே அவர்கள் நம்பினார்கள். அவர் யோசேப்புக்குப் பிறந்தவர் என்று அவர்கள் அறிந்திருந்தால் அவர் பிறக்குமுன் இருந்தவரென்றும், கடவுளுடைய குமாரனென்றும், வானத்திலிருந்து வந்தவரென்றும், மாசற்ற பரிசுத்தரென்றும், பாவிகளை இரட்சிக்க வல்லவரென்றும் எழுதியிருக்கமாட்டார்கள்.

நமதாண்டவரின் அற்புத பிறப்பை சிலர் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. அவர் கன்னிகைக்குப் பிறந்தாலும் சரி, யோசேப்புக்குப் பிறந்தாலும் சரி, எப்படி விசுவாசித்தாலும் பரவாயில்லை என்கிறார்கள். கிறிஸ்துவின் போதனைதான் விசேஷமேயன்றி அவர் எப்படிப் பிறந்தால்தான் என்ன என்கிறார்கள். ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதற்கு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய விசுவாசம் அவசியமல்லவென்றும் சொல்லுகிறார்கள். வாஸ்தவத்தில் அவர் யோசேப்பின் குமாரன் என்பதே அவர்கள் உள்ளான தீர்மானம். அவர் கன்னிகையினிடத்திற் பிறந்தவர் என்னும் வேதவாக்கை இவர்கள் நம்பினால் இவ்வாறு இருவிதமாய்ப் பேசமாட்டார்கள். அவருடைய ஜீவியமும் உபதேசமும்தான் விசேஷம், அவர் யாருக்குப் பிறந்தால்தான் என்னவென்று நாம் சொல்லமாட்டோம். ஒரு பெரிய மாளிகை அஸ்திபாரத்திலிருந்த கேட்டினால் விழுந்து அழிந்தது. கிறிஸ்துவின் ஜீவிய முழுவதுக்கும் அவர் பிறப்பே அஸ்திபாரம். அஸ்திபாரத்தை இடித்து வீட்டை விழாமல் காப்பவன் யார்? கிறிஸ்துவின் ஜீவியத்தை பங்குபோட்டு அதில் இதுதான் விசேஷம்; அது விசேஷமல்லவென்று சொல்லத் துணியோம். அவர் நமக்கு வேரிலிருந்து கிளைகள் வரை பூரணமான உயிருள்ள மரம். "வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்." யோசேப்புக்குப் பிறந்த கிறிஸ்துவை நாம் அறியோம். முதற்கோணல் முற்றுங்கோணல். அவரது கிரியை, உபதேசம், மரணம் முதலானவைகளுக்கு மகிமையுண்டாக்குவது அவருடைய பரிசுத்த ஜீவியம். அவருடைய பரிசுத்த ஜீவியத்துக்கு ஆதாரம் அவரது பரிசுத்த பிறப்பு. அவருடைய பரிசுத்த பிறப்புக்குக் காரணம் அவர் பரிசுத்த ஆவியினால் உற்பவித்தது.

பிறந்த **குழந்தை** பரிசுத்தம் என்பது மாத்திரமல்ல, அவர் **உற்பத்தியே** பரிசுத்தம்.

நமதாண்டவர் கன்னிகையினிடத்தில் அற்புதமாகப் பிறந்தார் என்பதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பின்வரும் ஆட்சேபனைகளைக் கூறுகிறார்கள். அவைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

1. இயேசுகிறிஸ்துவின் **வம்ச வரலாற்றைக்** குறித்து மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் வித்தியாசம் இருக்கிறதே என்கிறார்கள்.

நமதாண்டவர் மெய்யாகவே ஒரு காலத்தில் ஓர் இடத்தில் பிறந்தார் என்பதற்கு இந்த வம்சவரலாறே நமக்கு ஆதாரம். வித்தியாசம் காணப்படுகிறது மெய்தான். இந்த வித்தியாசம் அவரவர் எழுதின நோக்கத்திற்கு இசைவாயிருக்கிறது. கிறிஸ்து ஒரு கன்னிகையிடம் பிறக்கவேண்டியது அவசியம். அதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அவர் அற்புத பிறப்பைக்குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறவேண்டும். தாவீதின் சிங்காசனத்துக்கு அவர் சுதந்தரவாளியாகவேண்டும். அவரே உலக இரட்சகர் என்பது தெரியவேண்டும்.

''ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்'' என்பது ஆதிவாக்கு. அந்த வாக்கு கிறிஸ்துவில் நிறைவேறிற்று. உலகத்தில் எல்லா மனுஷரும் புருஷன்மூலமாய் தோன்றினவர்கள். இவர் ஒருவர் மாத்திரம் கன்னிகையினிடம் பிறந்தவர். அவர் யோசேப்புக்குப் பிறந்திருந்தால் ஸ்திரீயின் வித்தாகமாட்டார். "மேலும் ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாள்; அவருக்கு **இம்மானுவேல்** என்று பேரிடுவாள்" என்பது ஏசாயா வாக்கு. இந்த வாக்கில் அவருடைய தெய்வீகமும் மனுஷீகமும் வெளிப்படுகின்றன. ஆகவே இந்த இரண்டு முக்கியமான வாக்குகளும் நமது இரட்சகரில் நிறைவேறின.

தாவீதின் சிங்காசனம் கிறிஸ்துவுக்குரியது. தாவீதுக்குப் பிறகு அவன் குடும்பத்தைச் சேர்ந்த இராஜபிரபுக்கள் ஒருவர்பின் ஒருவராகச் சிங்காசனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு எகோனியா என்பவன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்த கடைசி அரசன். மத்தேயு எழுதுகிற வம்ச வரலாற்றில் இவன் பேர் வருகிறது. "பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன பின்பு எகோனியா சலாத்தியேலைப் பெற்றான்; சலாத்தியேல் சொரொபாபேலைப் பெற்றான்" (மத். 1:12). இந்த வம்ச வரிசை யோசேப்பின் தகப்பனாகிய யாக்கோபுவரை இறங்கி வருகிறது. யோசேப்புவரை நாம் காண்கிற இந்தப் பிரபுக்கள் எகோனியா

இராஜாவின் வம்சத்தில் வருகிறபடியால் நியாயமானபடி இவர்கள் தாவீதின் சிங்காசனத்துக்குச் சுதந்தரவாளிகளே. ஆனால் எரேமியா உரைத்த தீர்க்கதரிசனப்படி இவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். ''எகானியாவின் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப்போகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரே. 22:30). மத்தேயு காண்பிக்கிற வம்ச வரலாற்றின்படி தாவீதின் சிங்காசனத்துக்கு உரியவன் எகோனியாவின் வம்சத்தைச் சேர்ந்தவனாயிருக்கவேண்டும். வேறு வழியில்லை. அவ்வாறு சிங்காசனம் ஏறுகிறவன் தகப்பன் வழி பிறந்தவனாயுமிருக்கவேண்டும். அந்த வரிசைப்படி தாவீதின் சிங்காசனம் யோசேப்புக்கு உரியது. ஏனென்றால் "யோசேப்பு தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தான்" (லூக்கா. 2:4). ஆனால் எரேமியாவின் தீர்க்கதரிசனப்படி எகோனியாவின் வித்தில் ஒருவனாகிலும் தாவீதின் சிங்காசனத்தில் ஏறக்கூடாது. ஆகையால் யோசேப்பு தாவீதின் வம்சத்தானாக இருந்தபோதிலும் தனக்குரிய சிங்காசனத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டார்.

தேவதூதன் மரியாளைப் பார்த்து: ''இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார், அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது'' என்றான். தாவீதின் சிங்காசனத்துக்கு உரியவர் அற்புதமாகப் பிறக்க வேண்டும் என்பது இதனால் தெரிகிறது. மேலும், தேவன் முன் தாவீதுக்கு கொடுத்த வாக்கும் இவ்வாறு நிறைவேறுகிறது. "அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும், அவன் சிங்காசனம் சூரியனைப்போல் எனக்கு முன்பாக நிலைநிற்கும்'' என்றார் (சங். 89:36) கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் தாவீதின் சந்ததியைச் சேர்ந்தவராயிருக்கவேண்டும். அந்நியன் அதைச் சுதந்தரிப்பதில்லை. தாவீதின் சந்ததியோடு சம்பந்தப்படுவதற்கு தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாகிய யோசேப்புக்கு அவர் பிறக்கவேண்டும். அவ்வாறு, அவர் யோசேப்புக்குப் பிறந்திருந்தால், தேவனால் புறக்கணிக்கப்பட்ட எகோனியாவோடு அவர் சம்பந்தப்படுவாராகையால் இவரும் சிங்காசனம் ஏறாதபடி தடையுண்டாகும். ஏனென்றால் எகோனியாவின் வித்தில் தோன்றும் ஒருவனும் தாவீதின் சிங்காசனத்தில் ஏறுவதில்லை என்பது கர்த்தரின் உறுதியான கட்டளை. யோசேப்பைப் புறக்கணித்த கட்டளையே யோசேப்பின் குமாரனையும் புறக்கணிக்கும். அதுமாத்திரமல்ல, அவர் யோசேப்புக்குப் பிறந்திருந்தால் கன்னிகைக்குப் பிறந்திருக்கமாட்டார். அவர் யோசேப்பின் வித்தானால் ஆதி வாக்கின்படி ஸ்திரீயின்

வித்தாகமாட்டார் ஆகவே, ஸ்திரீயின் வித்து என்பதும், கன்னிகையிடம் அவர் பிறக்கவேண்டும் என்பதுமாகிய இரண்டு தீர்க்கதரிசனங்களும் நிறைவேறாமல் அடிபட்டுப்போகும்.

அப்படியானால் தேவவாக்குப்படி அவர் தாவீதின் சிங்காசனத்தைச் சுதந்தரிப்பதெப்படி? அந்த உரிமை அவருக்கு எப்படிக் கிடைக்கும்? மத்தேயு எழுதின வம்ச வரலாற்றில் கிறிஸ்துவை ஆபிரகாமின் குமாரனும் தாவீதின் குமாரனும் என்று ஆரம்பிக்கிறார். யூதருக்குள் விவாகத்துக்கு ஒரு வருஷத்துக்குமுன் நிச்சயார்த்தம் செய்கிறதுண்டு. அக்காலத்தில் பெண் தன் வீட்டாரோடு இருப்பாள். ஆனால் நிச்சயார்த்தமான நாள் முதல் அவர்கள் புருஷன் மனைவியாக எண்ணப்படுவார்கள். "**உன் மனைவியாகிய** மரியாளை" என்று தேவதூதன் சொன்ன கருத்து அதுதான். ஒரு வருஷமானதும் விவாகம் நிறைவேறும். அவ்வாறு விவாகமாகுமுன் மரியாள் கர்ப்பவதியானாள் என்று தெரியவந்தது. யோசேப்பு சஞ்சலப்பட்டு மரியாளைத் தள்ளி விட யோசனையாயிருந்தார். தேவதூதன் நடந்த அதிசயத்தை விவரித்துச் சொன்னதின்பேரில் மரியாளை விவாகம் செய்துகொண்டார். மரியாளுக்கு பிறந்த குமாரன் "யோசேப்பின் குமாரன் என்று **எண்ணப்பட்டார்**" (லூக்கா. 3:23). இவர் யோசேப்புக்குப் பிறவாதிருந்தும் மரியம்மாள் யோசேப்புக்கு மனைவியாதலால், அந்தச் சம்பந்தமாய் அவ்வாறு **எண்ணப்பட்டது** இயல்பே.

மத்தேயு தாம் எழுதின வம்சவரலாற்றை மரியாள் புருஷனாகிய யோசேப்பில் கொண்டுவந்து சேர்க்கிறார். யோசேப்பு தாவீதின் வம்சத்தான். ஆகையால், "ஆபிராகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு" என்று அவர் ஆரம்பித்தது சரியே. ஆனால் மத்தேயு யோசேப்பை யாக்கோபின் குமாரன் என்று சொல்லியிருக்க, லூக்கா யோசேப்பை ஏலியின் குமாரன் என்று சொல்லுகிறாரே. இதிலே வித்தியாசம் காணப்படுகிறது. யாக்கோபு தகப்பனானால் எலி யோசேப்புக்குத் தகப்பன் அல்ல. இது பிழையல்லவா? பிழையல்ல. மத்தேயுவின் வம்சவரலாறு யோசேப்பைத் தொடர்ந்துபோகிறது. லூக்காவின் வம்சவரலாறு மரியம்மாளைத் தொடர்ந்துபோகிறது. ஏலி மரியாளின் தகப்பன். யோசேப்புக்கு மாமன் மருமகனை மகன் என்று அழைப்பது எங்கும் வழக்கம்தான். மீகாளை விவாகம் செய்த தாவீதை அவன் மாமனாகிய சவுல் " என் குமாரனாகிய தாவீதே" என்று அழைத்திருக்கிறான். மத்தேயு தகப்பன் வழி வம்சவரலாற்றை எழுதினார். லூக்கா தாய்வழி வம்சவரலாற்றை எழுதினார். யாக்கோபு யோசேப்பைப் பெற்றான் என்று மத்தேயு சொன்னதுபோல், ஏலி யோசேப்பைப் பெற்றான் என்று லூக்கா

சொல்லாமல் யோசேப்பு ஏலிக்குப் பிறந்த குமாரன் அல்லாவிட்டாலும், தன் குமாரத்தியை அவருக்குக் கொடுத்ததினிமித்தம் ஏலிக்கு யோசேப்பு குமாரனானார். இதுபோலவே கிறிஸ்து பிறப்பின்படி யோசேப்புக்குக் குமாரன் அல்லாவிட்டாலும் மரியம்மாளுக்கு அவர் குமாரனாகையால் யோசேப்புக்கும் குமாரன் **என்றெண்ணப்பட்டார்.**

கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் "யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?'' என்று விசாரித்தார்கள். குழந்தையிலேயே இராஜாவாக பிறந்தவர் இவர் ஒருவரே. மற்றவர்கள் இராஜாவாக்கப்பட்டார்கள். இவர் இராஜாவாகவே பிறந்தார். தாவீதின் குமாரனும் தாவீதின் சிங்காசனத்துக்குச் சுதந்தரவாளியும் இவரே. பிறப்பின்படி தாவீதின் சிங்காசனத்துக்கு உரியவர்கள் இல்லாமற்போனாலும், அற்புத பிறப்பின்படி இவரே சுதந்தரவாளியானார். இது தேவ ஏற்பாடு. "நான் என் பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய இராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன் என்றார்'' *(சங். 2:6)*. "ரபீ! நீர் தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் இராஜா'' என்று நாத்தான்வேல் சொன்னது சரி. நீர் யூதருடைய இராஜாவா என்று பிலாத்து கேட்டதற்கு ''நீர் சொல்லுகிறபடிதான்'' என்று ஆண்டவர் சொன்னதும் சரிதான். மத்தேயு கிறிஸ்துவை தாவீதின் குமாரன் என்று அடிக்கடி அழைக்கிறார். அவர் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்காக வந்ததாகவும் எழுதுகிறார். ஆண்டவர் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேன்" என்கிறார். தமது சீஷர்களை அனுப்பின போது; நீங்கள் புறஜாதிகளின் நாட்டிற்குப் போகாமல் "காணுமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே போங்கள்" என்கிறார். தாமே இஸ்ரவேலுக்கு இராஜா என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி விரும்பினார். தமது ஊழியத்தை முதலாவது அவர்களிடத்திலேயே தொடங்கினார். அவர்களோ தங்கள் இராஜாவைப் புறக்கணித்துத் தள்ளினார்கள். இவ்வாறு, கிறிஸ்துவை யூதருடைய இராஜாவென்று காட்டும் நோக்கமாய் மத்தேயு தமது சுவிசேஷத்தை எழுதினதால், அவரை தாவீதின் குமாரன் என்று காண்பிக்கும்படி வம்ச வரலாற்றை ஆபிரகாமில் தொடங்கி, தாவீதின்மூலமாய் மரியம்மாள் புருஷனாகிய யோசேப்பில் கொண்டுவந்து முடித்தார்.

லூக்கா சுவிசேஷகன், மரியம்மாள் தகப்பனும் யோசேப்பின் மாமனுமாகிய ஏலியிலிருந்து ஆரம்பித்து, தாவீதையும் கடந்து, நமது ஆதித் தகப்பனாகிய ஆதாமில் கொண்டுபோய்முடிக்கிறார். இவர் எழுதின வம்ச வரலாற்றின் நோக்கம் பட்டப்பகலைப்போல் தெளிவாகிறது. கிறிஸ்து யூதர்களுக்குமாத்திரம் உரிய இராஜாவென்று காட்டாமல், சர்வ

ஜனத்துக்கும் இரட்சகர் என்று காண்பிக்கிறார். "**எல்லா ஜனத்துக்கும்** மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" என்று எழுதினவரும் இவரே. லூக்காவுக்கு கிறிஸ்து **உலக இரட்சகர்.** பவுலுக்கும் கிறிஸ்து உலக இரட்சகர். லூக்கா பவுலுக்குப் பிரியமான உடன் ஊழியன். பவுலின் போங்கே லூக்காவின் போங்கு. பவுலுக்கு கிறிஸ்து இரண்டாம் ஆதாம். "முந்தின மனுஷன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்" (1 கொரி. 15:47). பவுல் கிறிஸ்துவை யூதருடைய **இராஜா**வென்று பிரசங்கிக்கவில்லை. ஏனென்றால் யூதர்கள் தங்கள் இராஜாவைப் புறக்கணித்தபின்பே பவுல் ஊழியத்துக்கு அழைப்புப் பெற்றார். ஆகையால் பவுல் கிறிஸ்துவை தாவீதின் குமாரன் என்றும் சொல்லாமல் தாவீதின் **சந்ததி** என்று சொல்லுகிறார். அப்படியே ஆபிரகாமின் **சந்ததி** என்றும் சொல்லுகிறார். மனுக்குல மனைத்துக்கும் கிறிஸ்து **பொது** என்பது பவுலின் சுவிசேஷம். இதே கருத்திலேதான் லூக்காவும் தமது சுவிசேஷத்தை எழுதினார். ஆகையால் தமது வம்ச வரலாற்றில் கிறிஸ்துவை தாவீதின் குமாரன் என்று காட்டாமல் சர்வ ஜாதிகளுக்கும் தகப்பனாகிய ஆதாமில் கொண்டுபோய் முடித்தது நியாயமே.

இரண்டு வம்சவரலாறுகளையும் சேர்த்துப் படிக்கும்போது, நமதாண்டவர் கன்னிகையிடம் பிறந்தவரும், யோசேப்புக்குப் பிறக்காமல் அற்புதமாகப் பிறந்த தாவீதின் குமாரனும், எரேமியாவின் சாபத்துக்கு விலகின, தாவீதின் சிங்காசனத் துக்குரிய, இஸ்ரவேலின் இராஜாவும், மனுக்குலத்தை இரட்சிக்கும்படி வானத்திலிருந்து வந்த பாவமற்ற இரண்டாம் ஆதாமுமாயிருக்கிறார் என்பது பிரத்தியட்சமாகும்.

2. உலகத்தில் எல்லா மனுஷரும் பெற்றாருக்குப் பிறக்க, இவர் ஒருவர் மாத்திரம் **வேறுவிதமாய்ப் பிறப்பது** இயற்கைக்கு விரோதமல்லவா என்கிறார்கள்.

இது இயற்கைக்கு விரோதமானால் ஆதாம் மண்ணிலிருந்து உண்டானதும் ஏவாள் அவன் விலாவிலிருந்து புறப்பட்டதும் இயற்கைக்கு விரோதமே. ஆதாமைப்பற்றிய சரித்திரத்துக்கு இடங்கொடாதபடி ஒரு வகுப்பார், மனுஷன் மண்ணிலிருந்து உண்டானவன் என்பதை மறுத்து, மனுஷன் குரங்கிலிருந்து உண்டானவன் என்று சொல்லுகிறார்கள். மனுஷன் குரங்கிலிருந்து வந்தான் என்பதைப்போல் நேர்த்தியான இயற்கைப் பிரமாணம் வேறொன்றில்லை. குரங்கு யாரிலிருந்து வந்ததோ? சரித்திரத்தின்படி நாம் அறிந்தவரை குரங்குகள் மனுஷனாக மாறினதென்பதும், எந்தத் தேசத்துக் குரங்குகள் அவ்வாறு மாறினதென்பதும் இதுவரை தெரியவில்லை. நாம் காண்கிறபடி நம் தேசத்துக் குரங்குகள் குறையாமல் நாளுக்குநாள்

பெருகிக்கொண்டுதான் போகின்றன. ஒருவனைப் பார்த்து; நீர் குரங்கு என்று சொன்னால் அவன் சகிக்கமாட்டான். தன்னைத்தான் ஒருவன் குரங்கு என்று சொல்லிக் கொண்டால் நாம் என்ன செய்கிறது? மேலும், "எல்லா மாம்சமும் ஒரே வித மாம்சமல்ல. மனுஷருடைய மாம்சம் வேறே; மிருகங்களுடைய மாம்சம் வேறே" என்று பிரித்திருக்க மிருகம் மனுஷனானான் என்று சொல்லுவதெப்படி? (1. கொ. 15:39).

கிறிஸ்துவின் பிறப்பு இயற்கைக்கு விரோதம் என்பதை ஒத்துக்கொள்வோம். ஆனால் கடவுள் இயற்கைக்கு மேலானவரா, இல்லையா? சர்வமும் அவர் சிருஷ்டிப்பும் ஆளுகையுமாயிருக்கிறதே. தமக்குச் சித்தமான யாவற்றையும் செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு. ஒன்றை உண்டுபண்ணவும் அதை மாற்றவும் அவரால் ஆகும். நீர் ஏன் இப்படிச் செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்? நீர் இதுபோலவே செய்யவேண்டும், வேறுவிதமாக ஒன்றும் செய்யக்கூடாதென்று அவருக்குக் கற்பிக்கிறவன் யார்? தேவன் தேவனாகவே இருப்பதல்லவோ இயற்கை. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதனானவரைப் போலவும், மனுஷனைப்போலவும் அவர் காணப்பட்டிருக்கிறாரே. அக்காலத்தில் மனுஷனைப்போல தோன்றினவர் ஏற்றகாலத்தில் மனுஷனாகவே பிறப்பது கூடாத காரியமா? அவ்வாறு நூதனமாக, அற்புதமாகப் பிறக்க அவருக்குச் சித்தமானால் அதற்கு விரோதமாகப் பேச நாம் எம்மாத்திரம்? மேலும், வானத்திலும் பூமியிலும் நாம் இயற்கை என்று எண்ணுகிற காரியங்கள் தெய்வத்தின் அற்புத அமைப்பு என்பதை நாம் மறந்துபோனதென்ன? இயற்கைப் பிரமாணத்தை மாற்ற அவருக்கு ஏன் அதிகாரம் இல்லை? மண்ணிலிருந்து மனுஷன் உண்டானது அற்புதமாயிருப்பதுபோல, மரியாளிடம் அவர் பிறந்ததும் அற்புதமே. அற்புதம் இயற்கைக்கு விரோதம்போல் நமக்குத் தோன்றினாலும் பிரமாணத்தை உண்டுபண்ணினவருக்கு அது விரோதமல்ல. கடவுள் இயற்கைப் பிரமாணத்திற்குள் கட்டுப்பட்டவரானால் இயற்கை கடவுளுக்கும் மேலான கடவுளாயிருக்கவேண்டும். இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிப்பிக்கிற கடவுள் எதைத்தான் செய்யமாட்டார்.

3. **விசேஷித்த ஆட்களை அற்புதமாகப் பிறந்தவர்கள்** என்று சொல்லுவது உலக வழக்கமாகையால், கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களும் அவருடைய மகத்துவமான ஜீவியத்தையும் கிரியைகளையும் கவனித்து, இவரும் அற்புதமாகத்தான் பிறந்திருக்கவேண்டும் என்று பிற்காலத்தில் உற்பத்தி செய்துகொண்டார்கள் என்கிறார்கள்.

விசேஷித்த ஞானிகளை, இராஜாக்களை, வீரர்களை, மனுஷர் தேவப்பிறப்பாகவும், தேவ அவதாரமாகவும் எண்ணினது

மெய்தான். இவ்விதமன எண்ணம் கிரேக்கு, எகிப்து இந்தியா முதலான தேசங்களில் உண்டு. அவர்கள் தேவ அவதாரமோ இல்லையோ என்பதை அவர்களுடைய நடக்கையில் காணலாம். அவர்களுடைய பிறப்பைப்பற்றிச் சொல்லுகிற கதைகளிலும் காணலாம். கிறிஸ்துவின் பிறப்போ அவைபோன்றதல்ல. மேலும் கடவுள் மனுஷனாவதை யூதர்கள் ஒருக்காலும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஒருவன் தன்னை தேவகுமாரன் என்றாவது, தேவன் மனுஷனாக வந்தேன் என்றாவது சொன்னாலும் சரி, அவன் சொல்லுகிறதில் அவ்வித கருத்து இருந்தாலும் சரி, அவனைக் கொல்லாதுவிடார்கள். அப்படியிருக்க யோவான், பவுல் போன்ற யூதக்கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மாம்சத்தில் வந்த கடவுள் என்று உறுதியாய் நம்பவேண்டுமானால் மெய்யாகவே அவர் அற்புதமாகப் பிறந்திருக்க வேண்டுமே.

மகா அலெக்சாந்தர், ஹெர்க்குலீஸ், அகுஸ்துராயன் முதலானவர்களை ஜனங்கள் அற்புத பிறவிகளென்று அழைத்தார்கள். கிறிஸ்துவைக்குறித்தும் வீணான காரியங்களைப் பொய்யாக எழுதும் சோதனை அக்காலத்தில் இருந்தது. அவருடைய மறைவான காலத்தைக்குறித்து சுவிசேஷம் ஒன்றும் சொல்லாததால் பொய்யான அற்புதங்களைக் கட்டினார்கள். இவைகளைத் தள்ளுபடி ஆகமங்களில் காணலாம். நமதாண்டவரின் ஞானமும், கிருபையும், அமைதியுமான ஜீவியத்தோடு இப்பொய்யான காரியங்களை ஒப்பிடமுடியாது. அவைகள் மனுஷனுடைய மனோராஜ்யத்தையும் வீண் சிந்தையையும் திட்டமாய்க் காண்பிக்கின்றன. பொய்யான காரியங்கள் இதுபோலவே அழிந்துபோகும். ஆண்டவர் மனதுருகிச் செய்த மற்ற அற்புதங்களோடு இவைகளை ஒப்பிட்டால், காகிதத்தில் வரைந்த சூரியனை ஆகாயத்தில் பிரகாசிக்கிற சூரியனோடு ஒப்பிடுவதுபோலிருக்கும். ஆகையால் அவைகள் தள்ளப்பட்டன. சுவிசேஷத்தில் அவைகளுக்கிடமில்லை.

கிறிஸ்துவின் பிறப்பு வீண் கட்டுமானமல்ல. மனுஷர் எண்ணிக்கொண்ட மனோபாவனையல்ல. பிற்காலத்தில் உண்டுபண்ணின உபதேசமல்ல. அப்போஸ்தலர் செய்துகொண்ட வருணிப்பல்ல. அது கட்டுமானமாயிருக்குமானால் இந்த இரண்டாயிரம் வருஷக்காலமாக, உலகமெங்குமுள்ள கல்விமான்களான வேதசாஸ்திரிகள், பெத்லகேமில் பிறந்த இந்த ஏழைக் குழந்தையின் பிறப்பைக்குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமென்ன? அப்பொக்கிரிப்பாக் (தள்ளுபடி ஆகமம்) கதைகளோடு சேர்த்து இதையும் ஏன் தள்ளிப் போடக்கூடாது? அவ்வாறு தள்ளிவிடப் பார்த்தாலும் தள்ள முடியாது. ஏனென்றால் அவரது பிறப்பு அவர் ஜீவியத்தோடும்

கிரியைகளோடும் இணைக்கப்பெற்றிருக்கிறது. அவருடைய அற்புத பிறப்பைத் தள்ளினால் அவருடைய அற்புத ஜீவியமும், அற்புத உபதேசமும், அற்புத கிரியைகளும், அற்புத உயிர்த்தெழுதலும் தள்ளுண்டுபோம். அவருடைய ஜீவியமும் கிரியைகளும் சரித்திரப்படி உண்மையானது. யூதக் கிறிஸ்தவர்களுக்குள்ளும், சுவிசேஷம் சென்ற புறதேசங்களான அந்தியோகியா, அலெக்சந்திரியாவில் உள்ளவர்களுக்குள்ளும் கிறிஸ்துவின் அற்புத பிறப்பு பூரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட மெய்யான சம்பவம். ''அவர் பரிசுத்த ஆவியினால் கன்னிமரியாளிடம் உற்பவித்துப் பிறந்தார்'' என்பது ஆதிமுதல் உலகமெங்குமுள்ள திருச்சபையால் அங்கீகரிக்கப்பெற்ற விசுவாசப்பிரமாணம். சிலர் அதை மறுப்பதினால் அதன் உண்மை அழியாது. பொய்யான அவதாரங்கள் கிறிஸ்துவின் அற்புத பிறப்பைப் பொய்யாக்காமல், கடவுள் மனிதனாக வரக்கூடும் என்று உலகம் எதிர்பார்த்திருந்த நம்பிக்கைக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. கானலை நீர் என்று எண்ணினதாலே மெய்யான நீரும் கானலாகாது.

4. யோசேப்பையும் மரியாளையும், கிறிஸ்துவுக்குத் தகப்பன் தாய் என்று சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடியாலும், அவர் **"தச்சனுடைய குமாரன்", "யோசேப்பின் குமாரன்"** என்று அழைக்கப் பட்டிருக்கிறபடியாலும் அவர் கன்னிகையினிடத்தில் அற்புதமாகப் பிறந்தவரல்ல என்கிறார்கள்.

அவ்வாறு சொல்லியிருப்பது உண்மைதான். ஆனால் அவரை அப்படி அழைத்தவர்கள் யார்? பெத்லகேம், நாசரேத், கப்பர்நகூமில் உள்ளவர்கள் அவரது அற்புத பிறப்பை அறிந்தாலன்றி வேறு எவ்விதமாகப் பேசக்கூடும்? மற்றவர்கள் அவரை யோசேப்பின் குமாரன் என்று சொன்னது ஆச்சரியமல்ல. அவர் யோசேப்புக்குப் பிறந்தவர் **அல்லவென்று** சொல்லியிருந்தால் அதுவே ஆச்சரியம். யோசேப்பின் வீட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளையை யோசேப்பின் குமாரன் என்று சொல்லாமல் வேறே என்ன சொல்லுவார்கள்? தோற்றத்தின்படி கவனிக்கிறவர்களுக்கு அவர் யோசேப்பின் குமாரன்தான். அவருடைய சீஷர்களுக்கே ஆரம்பத்தில் அவரது பிறப்பின் இரகசியம் தெரியாதிருக்கும்போது மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? பிலிப்பு தன் சிநேகிதன் நாத்தான்வேலைப்பார்த்து: மேசியாவைக் கண்டோம்; "அவர் **யோசேப்பின் குமாரனும்** நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.'' மற்றவர்கள் பேசினதுபோலவே பிலிப்பும் பேசினார். அப்பொழுது அவர் அறிந்தது அவ்வளவுதான். தற்காலக் கொள்கைக்காரர் இந்த வசனத்தை தங்களுக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்வார்களே என்று பயந்து ''யோசேப்பின் குமாரன்'' என்பதை, அறுபது

வருஷங்களுக்குப் பிந்தி எழுதின யோவானாவது எழுதாமல் விட்டுவிடக்கூடாதா? அவர் ஒன்றையும் மறைக்கமாட்டார். உள்ளதை உள்ளபடியே எழுதினார். கட்டுமானக்கதை எழுதுகிறவர்கள் மற்றவர்கள் குற்றங் கண்டுபிடியாதபடிக்கு ஜாக்கிரதையாக எழுதுவார்கள். சுவிசேஷகர் கட்டுமானக்கதை எழுதினவர்கள் அல்ல. கிறிஸ்துவின் சரித்திரத்தை **அவர்கள்** உண்டுபண்ணவில்லை. அவர்கள் உண்டுபண்ணியிருந்தால் "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று தங்கள் ஆண்டவருக்கு மகா குறைவான வார்த்தைகளை எழுதுவார்களா? தாங்கள் அறிந்தவைகள் எவைகளோ அவைகளை உண்மையின்படியே எழுதினார்கள். அவர்கள் தனித்தனியாக எழுதியிருந்தும் அதிக வித்தியாசங்கள் இல்லாதிருப்பதே ஆச்சரியம்.

ஜனங்கள் கிறிஸ்துவை யோசேப்பின் குமாரன் என்று சொன்னதைக் குறித்து லூக்கா கோபப்பட்டுக்கொள்ளவில்லை. அதைத் திருத்தி எழுதும்படி பிரயாசப்படவும் இல்லை. லூக்கா தாமே யோசேப்பையும் மரியாளையும் குறித்து: "அவருடைய பெற்றோர்" என்றும், "அவருடைய தாய் தகப்பன்மார்" என்றும் எழுதியிருக்கிறார். "உன் தகப்பனும் நானும் விசாரத்தோடு தேடினோமே'' என்று தாயார் மகனைப் பார்த்துச் சொன்னதாகவும் எழுதியிருக்கிறார். யோசேப்பு மரியாள் புருஷன். யோசேப்பின் வீட்டில் **இயேசு** வளர்ந்தார். மரியாள் தன் மனைவியாகையால் அந்தப் பிள்ளையைத் தன் பிள்ளையைப்போல் பாதுகாத்து வளர்க்கவேண்டிய கடமை யோசேப்புக்கு உண்டு. நீதிமானாகிய யோசேப்பு அப்படியே செய்தார். இப்படியிருக்க, யோசேப்பை அகற்றித் தன்னைமாத்திரம் தாயாரென்று அம்மாள் எப்படிப் பேசக்கூடும்? ஆனால் அதே சமயத்தில் பிள்ளை சொன்னதையும் கவனிக்கவேண்டும். "**என் தகப்பனுக்கடுத்தவைகளில்** நான் இருக்கவேண்டியதென்று நீங்கள் அறியீர்களா" என்று கேட்டார். யோசேப்பல்ல, தேவனே தமது தகப்பன் என்பதை வெளிப்படுத்துகிறார்.

"இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார். அவர் யோசேப்பின் குமாரன் என்று **எண்ணப்பட்டார்**" *(லூக்கா. 3:23)*, இங்கே நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியமுண்டு. கிறிஸ்து கன்னிகையினிடத்தில் அற்புதமாகப் பிறந்தார் என்பதைத் தாராளமாக எழுதின லூக்காவே அவரை "யோசேப்பின் குமாரன்" என்றும் எழுதினால் தாம் கட்டினதைத் தாமே இடிக்கிறதாயிருக்குமல்லவோ? அவ்விதமான யாதொரு பயமும் அவரிடத்தில் தோன்றவில்லை. கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் அற்புதமாகப் பிறந்தவர் என்பது உண்மையின்படியே அவர்

அறிந்த சத்தியம்; அதையும் எழுதினார். அவர் யோசேப்பின் குமாரன் என்பது ஜனங்களுடைய **எண்ணம்**; அதையும் எழுதினார். பரிசுத்த ஆவியினால் பிறந்தார் என்னும் உண்மையைத் தள்ளி, ஜனங்களுடைய **அபிப்பிராயத்தை** மெய் என்று சாதிப்பது தற்காலக் கொள்கைக்காரருக்கு அழகோ?

மேலும் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த சகலமும் மரியாளைச் சூழ்ந்து நிற்கிறதேயல்லாமல் யோசேப்பை அல்ல. யோவான்ஸ்நானன் பிறப்பைக்குறித்து தேவதூதன் எலிசபெத்தோடு பேசாமல் அவனுடைய தகப்பன் சகரியாவோடு பேசினான். நமதாண்டவரின் பிறப்பைக் குறித்தோ தேவதூதன் யோசேப்போடு பேசாமல் மரியாளோடு பேசினான். யோவான் பிறந்தபோது சகரியா பரிசுத்த ஆவியினால் நிறைந்து தேவனை ஸ்தோத்திரித்துப் பாடினார். ஆனால் இங்கேயோ மரியாள் "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது'' என்னும் அருமையான கீதத்தைப் பாடினார்கள். தேவன் மரியாளுக்கு அறிவித்த காரியங்களொன்றும் யோசேப்புக்குத் தெரியாது. கிறிஸ்து "உன்னதமானவருடைய குமாரன்" என்னப்படுவார் என்று தேவதூதன் மரியாளுக்குச் சொன்னான். இதை அறியாத சகரியா பாடினபோது "நீ உன்னதமானவருடைய தீர்க்கதரிசி" என்னப்படுவாய் என்று யோவானைக்குறித்துச் சொன்னார். சகரியா பாடின ஸ்தோத்திர கீதத்தில் நமதாண்டவருடைய அற்புத பிறப்பைக் காண்பிக்கிற தெளிவான குறிப்புகள் உண்டு. சிமியோன் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் யோசேப்பைப் பார்த்தல்ல, மரியாளைப் பார்த்து: "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" என்றார். பிள்ளையாகிய இயேசுவைப் பார்த்து. "மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்?" என்று கேட்டதும் மரியாளே. யோசேப்பைக்குறித்தோ "சிந்தித்துக் கொண்டிருந்தான்.'' சேர்த்துக்கொண்டான்''. ''புறப்பட்டுப் போனான்." "இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்." "பயப்பட்டான்." ''நாசரேத்துக்கு வந்து வாசம்பண்ணினான்'' என்பதாகச் சொல்லியிருக்கிறதேயன்றி அவர் பேசின எந்த வார்த்தையையும் சுவிசேஷத்தில் காணோம். சுவிசேஷத்தில் தாயாரையும் மகனையும் ஒன்றாகக் காண்கிறோமே அல்லாமல் யோசேப்பை அல்ல. பிள்ளையின் இரகசியத்தை அறிந்த நீதிமானாகிய யோசேப்பு இவ்வாறு தம்மை மறைத்துக் கொண்டதும் ஆச்சரியமல்ல.

மரியாளையும் யோசேப்பையும் தனித்தனியாகக் கேட்போம். அவர்கள் இருவரும் தேவபக்தியுள்ளவர்கள். தேவதூதன் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து மரியாளுக்குச் சொன்னபோது, "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்." இது பரிசுத்த ஆவியினால் உண்டாகும் **பரிசுத்த**

பிறப்பு என்று தூதன் சொல்ல, ஆண்டவருடைய சித்தம் என்று அம்மாள் ஏற்றுக்கொண்டார்கள். யோசேப்பை விசாரிப்போம். விவாகமாகுமுன் மரியாள் கர்பவதியானதாகத் தெரியவந்தது. யோசேப்பு இரகசியமாய்த் தள்ளிவிட யோசனையாயிருந்தார். தேவதூதன் சொப்பனத்தில் தோன்றி நடந்த காரியத்தை யோசேப்புக்கு விவரித்துச் சொன்னதின்பேரில் மரியாளை அவர் சேர்த்துக்கொண்டார். இவ்வாறு இருபட்சத்தாரையும் விசாரித்ததில் பிள்ளை யோசேப்புக்குப் பிறக்கவில்லை என்றும், வேறு யாருக்கும் பிறக்கவில்லை என்றும், பரிசுத்த ஆவியினால் உற்பத்தியாகி **அற்புதமாகப்** பிறந்ததென்றும் தெரியவருகிறது.

கிறிஸ்துவின் அற்புத பிறப்பை ஏற்றுக்கொள்ளாத தற்காலக் கொள்கைக்காரருக்கு **இயேசு** என்னும் பேர் எங்கேயிருந்து கிடைத்தது? இது அப்போஸ்தலர் அவருக்குக் கொடுத்த பேரல்ல. பவுல் உண்டாக்கின பேரல்ல. யோசேப்பு மரியாளைக் குறித்துச் சந்தேகப்பட்டுத் தள்ளிவிட யோசனையாயிருக்கையில், தேவதூதன் தோன்றி, பிள்ளை பரிசுத்த ஆவியினால் உற்பத்தியாயிருக்கிறதென்றும், அவர் பிறக்கும்போது அவருக்கு **இயேசு** என்று பேரிடவேண்டுமென்றும் சொன்னான். பிள்ளையின் அற்புத பிறப்பை ஏற்றுக்கொண்ட யோசேப்பே, **இயேசு** என்னும் பேரையும் ஏற்றுக்கொண்டார். அந்தப் பேரின் அர்த்தத்தையும் அறிந்தார். யோசேப்பின் மூலமாய் வந்த பேரை ஏற்றுக்கொண்ட இவர்கள், அவரது அற்புத பிறப்பை ஏற்றுக்கொள்ளாததென்ன? **இயேசு** என்னும் பேருக்கிசைய அவர் நமது பாவங்களை நீக்கி நம்மை இரட்சிக்கிறது **மெய்யானால்,** அவர் அற்புதமாகப் பிறந்ததும் **உண்மையல்லவா?** கனியினால் மரத்தை அறியலாமே.

5. **விவாகம் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்க,** பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளையைப் பாவப் பிறப்பென்று எப்படிச் சொல்லலாம்? இயேசுவும் அவ்வாறு பிறந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதால் விசேஷித்தவராக விளங்கினார் என்று சொல்லுகிறார்கள்.

விவாக நிலைமையில் பிறந்த குழந்தையின் பிறப்பைப் பாவமென்று நாம் குற்றப்படுத்துகிறதில்லை. ஆனால், தகப்பன் தாய் எவ்வளவு தேவபக்தராயிருந்தாலும், அவர்களுடைய பாவச் சுபாவம், பிறக்கும் பிள்ளையினிடம் காணப்படுவது உண்மையே. இதுவே மாம்ச பிறப்பு. இவ்வாறு பிறந்தவர்கள் பாவத்துக்குத் தப்பினவர்கள் அல்ல. ''இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' என்று பக்தன் தாவீது புலம்பினார். "என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்றும், என்க்குள்ளே பாவம் வாசமாயிருக்கிறதென்றும்'' பவுல் அறிக்கையிட்டார்.

இவர்களுடைய பிறப்பைப் பாவம் என்று நாம் குற்றப்படுத்தா விட்டாலும். **பாவச்சுபாவம்** தங்களுக்குள் இருந்ததாக அவர்களே அறிந்திருக்கிறார்கள். விசேஷமாய் பரிசுத்தவான்கள் தேவனோடு அதிகமாய் நெருங்கி ஜீவித்ததற்குத் தக்கதாகத் தங்களைப் பெரும் பாவிகள் என்று அறிக்கையிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பரிசுத்த ஜீவியத்தைக் கவனிக்கும் மற்றவர்களுக்கு அது ஆச்சரியமாயிருக்கும். கிறிஸ்துவில் நாம் காண்கிறதென்ன? அவரைப்போல் பரிசுத்த பிதாவோடு ஒன்றாய் நெருங்கி ஜீவித்தது யார்? பாவத்தைப் பற்றிய கடுகளவு உணர்ச்சி அவரில் காணப்பட்டதுண்டா? அவரில் பாவமில்லை. அவர் பாவம் செய்யவில்லை. அவர் மாசற்ற பரிசுத்தர். அவருக்கு நம்மைப் போல் மாம்ச சரீரம் இருந்தது. அது பாவமாம்சத்தின் **சாயல்.** ''தேவன் தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் **சாயலாக** அனுப்பினார்'' *(ரோமர். 8:3)* "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?" என்று கேட்டார். இங்கே **பாவம்** என்பது பாவச் செய்கையை அல்ல, பாவ சுபாவத்தைக் குறிக்கும். பாவமற்ற ஜீவியம் ஒரு அற்புதம். இவர் யோசேப்புக்குப் பிறந்தது மெய்யானால் பாவ சுபாவத்திலிருந்து பாவமற்ற சுபாவம் எப்படி உண்டாகும்?

யோசேப்புக்குப் பிறக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும், மரியாளுக்கு அவர் பிறந்ததால் தாயாருடைய பாவச் சுபாவம் பிள்ளைக்குள் வந்திருக்கமாட்டாதா? என்றும் கேட்கிறார்கள். இது நியாயமான கேள்விதான். ஆனால் அவர் உற்பவித்த விதத்தை நாம் கவனிக்கவேண்டும். "தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், **ஆதலால்** உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது** தேவனுடைய **குமாரன்** என்னப்படும்" என்றான். **'ஆதலால்'** என்னும் வார்த்தையில் இந்தக் கேள்விக்கு உத்தரவு இருக்கிறது. தேவன் பரிசுத்தமாக்க வல்லவர். ''நான் உங்களைச் சுத்தம்பண்ணுவேன் நீங்கள் சுத்தமாவீர்கள்'' என்று சொல்லியிருக்கிறார். ''என்னைக் கழுவியருளும் நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" என்று சங்கீதக்காரன் ஜெபித்ததும் சரியே. மரியாளிடம் உற்பத்தியானது இயல்பாய் உண்டானதல்ல. அது தேவனுடைய சிருஷ்டிப்பு. பாத்திரமாகிய மரியாள் பரிசுத்த ஆவியினால் சுத்தகரிக்கப்படுவதும், அந்த ஆவியானவரே குழந்தையை அதிசயமாக உற்பத்தி செய்வதும், தேவதூதன் சொன்ன வாக்கில் அடங்கியிருக்கிறது. இவ்வாறு முழுவதும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையாயிருக்கிறபடியால் உன்னிடத்தில் பிறப்பது **பரிசுத்தமுள்ளது** என்றான். குழந்தையின் பிறப்பு மாத்திரமல்ல, அதன் உற்பத்தியே பரிசுத்தம்.

6. கிறிஸ்து நம்மைப்போல் சாதாரணமாகப் பிறக்காவிட்டால் அவருக்கும் நமக்கும் எப்படிச் சம்பந்தமிருக்கக்கூடும்? அவர் நமக்கு ஒப்பானவர் என்று எப்படிச் சொல்லலாம்? அவர் நமக்கு **மாதிரியாயிருப்பது** எப்படி என்று கேட்கிறார்கள்.

அவர் நமக்கு மாதிரியாயிருப்பதற்கு பாவத்திலும் அவர் நமக்கு ஒப்பாயிருக்கவேண்டுமோ? வியாதிக்காரருக்கு உதவிசெய்ய ஒருவன் போனால், அவனும் எங்களைப்போல வியாதியஸ்தனாயிருந்தால்தான் எங்களுக்கு ஏற்றவனாயிருப்பான் என்று வியாதியஸ்தர் சொல்லுவது போலிருக்கிறது. கிறிஸ்துவைப்போல் மெய்யான மனுஷன் யார்? எல்லா விஷயத்திலும் அவர் நம்மைப்போல் இருந்தார். ஜனங்களோடும் பிள்ளைகளோடும் அன்பும் அனுதாபமும் உள்ளவராயிருந்தார். பசி தாகம், துக்க சந்தோஷம், சோதனை பாடுகளுக்கு அவர் நீங்கினவரல்ல. பாவம் ஒன்றிலேதான் அவருக்கும் நமக்கும் வித்தியாசம் நம்மைப்போல் பாவத்தோடு அவர் பிறக்க வேண்டுமானால் மோசே நமக்குப் போதாதா? எலியா, எரேமியா, பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் போதாதா? யோவான்ஸ்நானன் அல்லது பற்பல காலங்களில் நம் தேசத்தில் எழும்பின ஞானிகள் போதாதா? இவர் ஏன் உலகத்துக்கு வரவேண்டும்? கிறிஸ்துவின் அற்புத பிறப்பை மறுக்கிறவர்கள் அவரை **ஜெகத்குருவாக,** மாத்திரம் ஏற்றுக்கொண்டிருக்கிற இரகசியம் இதுதான். அவர் ஜீவியத்தை மாதிரியாகவும், அவர் போதனையை உபதேசமாகவும் எடுத்துக்கொண்டால் அதுவே போதும் என்கிறார்கள். அவர் மரணத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதையும், அவரோடுள்ள ஐக்கியத்தால் நாம் பாவங்களிலிருந்து விடுதலையாகிப் பரிசுத்தமடைவதையும் இவர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. கிறிஸ்துவின் போதனைமாத்திரமே இவர்களது கிறிஸ்துமார்க்கம்.

யோவான்ஸ்நானன் பிரசங்கித்தபோது ஜனங்கள் பாவ உணர்வடைந்தார்கள். ஆனால் அவர்கள் பாவங்களை மன்னித்துப் பரிசுத்த வழியில் நடத்தத் தன்னால் கூடாமல், தன்னிலும் பெரியவர் வரக்காத்திருந்தார். கிறிஸ்து வந்தபோது தன் சீஷர்களைப் பார்த்து: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று சொல்லி அவர்களை அவரிடம் நடத்தினார். கிறிஸ்துவின் பிறப்பு நம்மைப்போல் பாவமுள்ளதாயிருந்தால், ஒருவேளை அவர் ஆவியின் அனுக்கிரகத்தால் நல்ல உபதேசம் செய்யலாம். அரிய கிரியைகளை நடப்பிக்கலாம். பாவிகளை **இரட்சிக்கவோ** அவரால் முடியாது. அவ்வாறு கூடுமானால் பாவிகளை இரட்சிக்க யோவான் ஸ்நானனாலும் கூடும். தண்ணீரில் அமிழ்கிறவன் தன் பக்கத்தில் அமிழ்கிறவனை எப்படி

இரட்சிப்பான்? பாவிகளை இரட்சிக்க பரிசுத்த இரட்சகன் வேண்டும் பரிசுத்த இரட்சகனுக்குப் பரிசுத்த பிறப்பு அவசியம் பரிசுத்த பிறப்பு பரிசுத்த ஆவியினால் உற்பத்தியாக வேண்டும். கிறிஸ்துவின் பிறப்பு அப்படிப்பட்டது. இதுவே தேவ ஏற்பாடு. இதுவே தேவதூதன் மரியாளுக்குச் சொன்ன செய்தி.

7. கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பைக்குறித்து மத்தேயு லூக்காமாத்திரம் சொல்லுகிறார்களேயன்றி, முதல்முதல் எழுதின மாற்கும், எல்லாருக்கும் பிந்தி எழுதின யோவானும் சொல்லவில்லையே. பவுல் தமது நிருபங்களில் ஒன்றுமே சொல்லவில்லையே. அப்போஸ்தலர் ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிற நடபடிப்புஸ்தகத்திலும் அதைக்காணோமே. ஆகையால் மத்தேயு, லூக்காமாத்திரம் சொல்லுகிறதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்கள்.

எல்லாரும் சொன்னால்தான் ஒருகாரியம் மெய்யென்றும், அவ்வாறு சொல்லாவிட்டால் பொய்யென்றும் தீர்ப்பது சரியோ? இந்த விதியைக் கைக்கொள்ளப்போனால் புதிய ஏற்பாடு முழுவதையுமே தள்ளிவிடவேண்டியதாகும், கர்த்தருடைய ஜெபத்தை மத்தேயு லூக்காமாத்திரம் சொல்லுகிறார்கள் வேறெங்கும் அது சொல்லப்படவில்லை ஆகையால் கர்த்தருடைய ஜெபத்தைத் தள்ளவேண்டியதுதான். மறுரூபத்தைக் கண்ணால் கண்டவர்கள மூவர். அவர்களில் யோவானும் ஒருவர். யோவானோ தமது சுவிசேஷத்தில் அதைப்பற்றி ஒன்றுமே எழுதவில்லை. ஆகையால் மறுரூபத்தையும் தள்ளவேண்டியதுதான். கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்தெழுதலைப்பற்றி எழுதின மத்தேயு ஆண்டவர் பரத்துக்கு எழுந்ததைக் குறித்து ஒன்றுமே சொல்லவில்லை. ஆகையால் கிறிஸ்து பரத்துக்கு எழுந்து போனதில்லை என்றாவது, மத்தேயு அதைக் காணவில்லை என்றாவது சொல்லலாமா? கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து மத்தேயு லூக்காமாத்திரம் எழுதினார்கள் என்பது உண்மையாயினும், அவர்களும் அதை எழுதாமல் விட்டிருந்தால் நமதாண்டவருடைய ஜெநநத்தின் வரலாற்றை நாம் அறிவதெப்படி? அவருடைய ஞானஸ்நானத்தில்தான் அவரை முதல்முதல் காண்போம். அதற்கு முன்னுள்ள சரித்திரம் ஒன்றுமே நமக்குத் தெரியாது. மத்தேயு லூக்காவைக்கொண்டு தமது பிறப்பின் வரலாற்றை எழுதிவைத்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். இப்போது மாற்கு, யோவான், பவுல் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்களா, இல்லையாவென்றும், அவ்வாறு சொல்லாதிருந்தால் அதற்குக் காரணம் என்னவென்றும் பார்ப்போம்.

மாற்கு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து எழுதவில்லை என்பது உண்மைதான். ஆகையால் கிறிஸ்து பிறப்பில்லாமல்

உலகத்தில் தோன்றினவர் என்பது மாற்குவின் கொள்கையோ? மாற்கு அப்போஸ்தலரில் ஒருவரல்ல. இவர் பேதுருவுக்கு உடன் ஊழியன். இவர் எழுதின சுவிசேஷம் பேதுருவின் சுவிசேஷம். இது ரோமிலுள்ள புறஜாதியாருக்கு எழுதப்பட்டது. பேதுரு செய்த பிரசங்கத்தின் பொருளே மாற்கு சுவிசேஷத்தின் அமைப்பு. பேதுருவின் ஊழியம் சாட்சியின் ஊழியம். சாட்சி ஊழியம் கிறிஸ்துவின் ஸ்நானத்திலிருந்து ஆரம்பித்தது. ''யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் அவர் நம்மிடத்தில் சஞ்சரித்த காலங்களி லெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷரில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து எங்களுடனே கூடச் **சாட்சியாக** ஏற்படுத்தப்படவேண்டும்'' என்று பேதுரு ஆதிச்சபையைப் பார்த்துப் பேசினார்.

கொர்நேலியுவின் வீட்டாருக்கு அவர் பிரசங்கித்தபோதும், கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றதுமுதல் எங்கும் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார் என்று சொன்னார். அதே போங்கை மாற்கு சுவிசேஷத்தில் காண்கிறோம். மாற்கு சுவிசேஷத்தில் நமதாண்டவர் பூரண வயதிலே, ஆவியின் பூரண பலத்திலே, இடைவிடாமல் எங்கும் வேலை செய்கிறவராகத் தோன்றுகிறார். மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கத்தை நாம் கவனிக்கும்போது கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி அவர் எழுதாமல் விட்டது ஆச்சரியமல்ல. அது ஊழியச் சுவிசேஷமேயன்றி ஜீவிய சரித்திரமல்ல. ஆகையால் பேதுருவும் மாற்கும் நமதாண்டவரின் பிறப்பை அறியவில்லை என்று சொல்லக்கூடாது. ஆதிச்சபை மாற்குவின் வீட்டில் கூடினது. மரியாள் அந்தச் சபையோடிருந்தார்கள். "இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?" என்று லூக்கா எழுதியிருக்க; மாற்கு "இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா?" என்று சொன்னதாக எழுதியிருக்கிறார்.

மேலும் "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவின் **வம்ச வரலாறு** என்று மத்தேயு தமது சுவிசேஷத்தை ஆரம்பித்திருக்க, மாற்கு தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்" என்று தொடங்குகிறார். இதிலே இருவரும் எழுதின நோக்கம் வெளிப்படுவதுமன்றி, மத்தேயு எழுதின ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரே, மாற்குவுக்கு தேவனுடைய குமாரனாயிருக்கிறார். கிறிஸ்துவின் அற்புத பிறப்பை நம்பாதிருந்தால் மாற்கு அவரை **தேவகுமாரன்** என்று எப்படிச் சொல்லக்கூடும்?

கிறிஸ்துவின் மகிமையான உயிர்த்தெழுதல் அப்போஸ்தலர் கவனத்தை ஆண்டுகொண்டபடியாலும், மற்றவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்கிற ஆத்திரம் அவர்களுக்குள் இருந்தபடியாலும், தாங்கள் அவரில் கண்ணாரக்கண்ட காரியங்களை ஜனங்களுக்குச் சாட்சியாகப் பிரசங்கிப்பதில் முயற்சியாயிருந்தார்கள். அவரது அதிசய பிறப்பைப்பற்றிப் பேச அவர்களுக்கு நேரமில்லை. நாவு வரண்டவன் இந்தத் தண்ணீர் எப்படி வந்தது, எங்கேயிருந்து வந்தது என்று கேளாமல் தண்ணீரைக் குடிக்க ஆத்திரப்படுவதுபோல், வசனத்தைக் கேட்டவர்களும் கிறிஸ்துவை வாஞ்சையோடு ஏற்றுக் கொண்டு இரட்சிப்படைந்தார்கள். ஆகிலும் கிறிஸ்துவின் அற்புத பிறப்பு ஆதிச்சபைக்குத் தெரியாததல்ல.

நெப்போலியனுடைய வீரச்செயல்களைக் குறித்துக் கேள்விப்படுகிறவர்கள் அவன் பிறப்பு வளர்ப்பை அறிய ஆசைப்படுவது இயல்பே. அப்படியிருக்க இவ்வளவு அதிசயமான ஆண்டவருடைய பிறப்பைக்குறித்து அறியாமலிருக்கக்கூடுமா? ஸ்தேவான் நிமித்தமாய் சபைக்கு உபத்திரவம் உண்டாகி சீஷர்கள் எங்கும் சிதறிப்போகாததற்கு முன்னே, ஐந்து அல்லது ஏழு வருஷங்களாக சீஷர்களெல்லாரும் எருசலேமில் அப்போஸ்தலரோடிருந்து போதனை பெற்றார்கள். கிறிஸ்துவைப்பற்றி அதிகமாய் விசாரித்து அறிந்துகொள்ள அவர்களுக்கு ஆவல் இருந்தது. அவருடைய பிறப்போ இரகசியம். யோசேப்பு மரியாள் ஆகிய இவர்கள் இருவருக்குமாத்திரம் அதைப்பற்றித் தெரியும். யோசேப்பு நமதாண்டவரின் பாலியப் பிராயத்தில் மரித்துப்போனார். ஆனால் மரியாளைக்குறித்துப் பிற்காலத்தில் யாராவது குறைவாகப் பேசக்கூடாதென்கிற கவலை அவருக்கு இருந்திருக்கும். சகரியாவைப்போல யோசேப்புக்கும் எழுதத்தெரியும். ஆகையால் குழந்தையின் அற்புத பிறப்பைக் குறித்து அவர் ஏதாவது விவரம் எழுதிவைத்திருக்கவேண்டும். மத்தேயு சொல்லுகிற விஷயங்கள் யோசேப்பின் மூலமாயல்லாமல் வேறெவ்விதத்திலும் யாரும் அறியமுடியாது. ஏனென்றால், அங்கு நாம் வாசிக்கிற காரியங்கள் அவருக்கு மாத்திரமே சொல்லப்பட்டன. யோசேப்பின்மூலமாய் அவைகள் வெளிப்படுத்தப்பட்டால் அல்லாமல் மத்தேயுவுக்கு அவைகள் மறைபொருளாகவேயிருக்கும்.

இரண்டாவது வழி மரியாள் அம்மாள் அடிக்கடி அப்போஸ்தலரோடு மேல்வீட்டில் கூடிவந்தார்கள். கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து லூக்கா சொல்லுகிற விஷயங்களைக் கவனித்து வாசித்தால், மரியாள்மூலமாயல்லாமல் அவைகளை அறிய வேறு வழியில்லை. நமதாண்டவரைக் குழந்தையில் தரிசித்தவர்கள் பலர். அவர்கள் தாங்கள் கண்டவைகளைப் பிரசித்தப்

படுத்தினார்கள் என்பது மெய்தான். ஆனால், எல்லாக் காரியங்களையும் மனதில் வைத்துச் சிந்தனைபண்ணும் சுபாவமுள்ள மரியாள், இரகசியத்தை வெளியிடாதிருந்தால் ஒருவரும் அதை அறியமுடியாது. ஆண்டவருக்குத் தங்களை முழுவதும் ஒப்புவித்து, அவருக்கென்று உழைக்கவும் மரிக்கவும் ஆயத்தமாயிருந்த அப்போஸ்தலருக்கு, மகனைப்பற்றிய மகிமையான விசேஷங்களை அம்மாள் அறிவிக்காமல் மறைப்பதெப்படி? லூக்கா சாதாரணமான மனுஷன் அல்ல. அவர் கல்விமான், ஆராய்ச்சிக்காரன், சரித்திரம் எழுதும் நிபுணன். அவர் எழுதின அப்போஸ்தலர் நடபடிக்கையை வாசிக்கும்போது ரோமர் ஆளுகை, இராஜ்ய உத்தியோகஸ்தர், நியாய விசாரணை, தேச சட்டங்கள், கடல் யாத்திரை, பட்டணம், தீவுகள், கால வித்தியாசங்கள், சமுத்திர ஆழம், கரையின் தூரம் முதலான எல்லா விஷயங்களிலும் எவ்வளவோ அறிவு அவருக்கு இருந்ததென்பது தெரியவரும். தமது சுவிசேஷத்தை ஆதிமுதல் எல்லாவற்றையும் "**திட்டமாய் விசாரித்து அறிந்து**" எழுதினார் தாம் எழுதினவைகள் யாவும் **நிச்சயம்** என்றும் சொல்லுகிறார். "நாங்கள் **முழுநிச்சயமாய்** நம்பினவைகள்" என்கிறார். ஆகவே, மாற்கு கிறிஸ்துவின் ஊழியத்தைமாத்திரம் எழுதினது அவருடைய நோக்கத்திற்குச் சரியாயிருந்ததுபோலவே, லூக்கா கிறிஸ்துவின் பிறப்பு முதல் எழுதினது இவர் நோக்கத்திற்கு ஏற்றதாயிருந்தது. எல்லாருமே ஒன்றுபோல் எழுதவேண்டுமென்ற எதிர்பார்ப்பு சரியல்ல.

யோவான் கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து எழுதவில்லை என்பது மெய்தான். முதல் மூன்று சுவிசேஷங்களும் எழுதப்பட்டு, சபைகள் எங்கும் வாசிக்கப்பட்டபிறகு, கடைசியாக இவர் தமது சுவிசேஷத்தை எழுதினார். கிறிஸ்து பிறந்த வரலாற்றைச் சபைகள் அங்கீகரித்தபின் இவர் மறுபடியும் பிறப்பைப்பற்றி எழுதவேண்டியதென்ன? அவர்கள் எழுதினது பொய்யாய் இருக்குமானால் இவர் அதைத் திருத்தி எழுதியிருப்பார். கிறிஸ்துவின் அற்புத பிறப்பை யோவான் அறிவார். அவர் யோசேப்புக்குப் பிறந்தவர் என்று சொன்ன விரோதிகளை இவர் கண்டிக்காதிருக்கவில்லை. ஒரு சமயம் இவர் எபேசுவில் ஸ்நானம்பண்ணப் போனபோது **செரிந்து** என்பவன் அங்கே வருவதைக்கண்டு அவ்விடம் விட்டு உடனே போய்விட்டார். ஏனென்றால் அவன் நமதாண்டவர் யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்தவர் என்று போதித்தான். அவ்வாறு போதித்தது யோவானுக்கும் வெறுப்பாயிருந்தது. நமதாண்டவர் சிலுவையிலிருந்தபோது தமது தாயாரைக் கடைசிவரை பாதுகாக்கும்படி யோவானிடம் ஒப்புவித்தார். கிறிஸ்துவைப் பற்றிய அநேக இரகசியங்களை அவர் அறிந்துகொள்ளுவதற்கு இந்த ஒழுங்கு எவ்வளவோ உதவியாயிருந்தது. ஆகையால்தான்

கிறிஸ்துவைப்பற்றி அவர் எழுதின சுவிசேஷம் உன்னதத்திலிருந்து ஆரம்பிக்கிறது.

கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து யோவான் எழுதாமல் விட்டதால் அவர் அதை நம்பவில்லை என்றாவது, அவ்வித பிறப்பு நடந்ததில்லை என்றாவது சொல்வது தப்பு. யோவான்ஸ்நானன் பிறப்பைக் குறித்து அவர் எழுதவில்லை, ஆகையால் யோவான் பிறந்ததை இவர் நம்பவில்லையோ? அல்லது யோவான் உலகத்தில் பிறக்கவில்லையோ? சகரியா எலிசபெத்தை அப்போஸ்தலன் அறியமாட்டாரோ? மற்றவர்கள் எழுதியிருப்பதை எழுதாமல் விடுவதும், அவர்கள் எழுதாம்ல் விட்டவைகளை எழுதுவதுமே யோவான் சுவிசேஷத்தின் நோக்கம். யோவான் கிறிஸ்துவை பெத்லகேமில் அல்ல, அநாதிகாலத்தில் தேவனோடிருந்தவராகவும், அவரே தேவனாயிருந்ததாகவும் சொல்லித் தமது சுவிசேஷத்தை ஆரம்பிக்கிறார். அவராலே சகலமும் உண்டாயிற்று என்கிறார். அந்த **தேவவார்த்தை மாம்சமாகி** மனுஷருக்குள் சஞ்சரித்தார் என்கிறார். இதுவே அற்புத பிறப்பு. கிறிஸ்து யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்திருந்தால் அவரை கடவுள் என்று சொல்வது கொடிய தேவதூஷணமல்லவா? யோவான் சுவிசேஷம் முழுவதிலும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமே இருந்ததாகச் சொல்லியிருக்கிறதே. அவர் யோசேப்புக்குப் பிறந்திருப்பாரானால் உலகமுண்டாவதற்கு முன்னே இருந்ததெப்படி? ஆகையால் கிறிஸ்துவின் அற்புத பிறப்பை யோவான் அறியாதவரல்ல.

பவுல் மரியாளைக்குறித்து தமது நிருபங்களில் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே. ஆகையால் மரியாள் இருந்ததை அவர் நம்பவில்லையோ? மரியாள் இருந்ததை அவர் நம்பாவிட்டால் கிறிஸ்து எங்கேயிருந்து வந்தார்? கிறிஸ்து பிறந்த வரலாற்றை அவர் எழுதவில்லை என்பது மெய்தான். ஆகையால் கிறிஸ்துவின் அற்புத பிறப்பை அவர் நம்பவில்லையோ? கிறிஸ்து அற்புதமாகப் பிறந்தவரென்பதை பவுலைப்போல் அறிந்தவர்கள் யார்? அவர் எழுதின நிருபங்களே அதற்கு ஆதாரம். கிறிஸ்து அற்புதமாகக் கன்னிகையினிடத்தில் பிறந்தவர் என்பதை ஆதிச்சபை பூரணமாய் ஒப்புக்கொண்டிருந்தபடியால் அதைப்பற்றி நிரூபிக்க அவசியம் இருந்ததில்லை. மேலும் இயேசுகிறிஸ்துவின் ஜீவிய விருத்தாந்தத்தை எழுதவேண்டுமென்பது பவுலின் நோக்கமுமல்ல. ''நான் அடைந்ததும் உங்களுக்குப் **பிரதானமாக** ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்'' என்பதே பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தின் மொத்தப் பொருள். *(1 கொரி. 15:3)* இவைகளில்

தீர்க்கதரிசன வாக்கியங்கள் நிறைவேறியிருப்பதைத் திட்டமாய் ஆராய்ந்து பார்த்த பவுல், கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்த தீர்க்கதரிசன வாக்கியங்களை அறியாமல் இருந்திருப்பாரோ? மேலும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அவர் தரிசித்ததிலிருந்து அவர் மூலமாய்க்கிடைக்கும் பாவமன்னிப்பு, பரிசுத்தமாகுதல், மகிமையடைதலே பவுலுடைய முக்கிய போதனையாகயிருந்தது. அவர் தமது அனுபவத்தில் கண்டடைந்த ஆசீர்வாதங்களையே மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிறவராயிருந்தார். பெத்லகேமில் பிறந்த குழந்தையை அல்ல, மாம்சத்தில் சஞ்சரித்த மனுஷ குமாரனையல்ல, உன்னதத்தில் மகிமையடைந்த ஆண்டவரையே தரிசித்து அவருக்கு ஊழியஞ்செய்யும் சாட்சியாக விளங்கினார்.

கிறிஸ்து பிறந்த வரலாற்றைக்குறித்து அவர் எழுதாததால் அவரது அற்புத பிறப்பை அவர் நம்பவில்லையென்று சொல்லக் கூடாது. மத்தேயுவும் லூக்காவும் பிறப்பின் சரித்திரத்தை எழுதினதுபோல் இவர் எழுதாவிட்டாலும் அவர் உபயோகித்திருக்கிற வார்த்தைகள் கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பை நிச்சயப்படுத்துகின்றன. ''மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் **சாயலாகவும்** பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பினார்.'' மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே; இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்துக்கும் மேலான **தேவன்**." "காலம் நிறைவேறினபோது **ஸ்திரீயினிடத்தில்** பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமான **தம்முடைய குமாரனை** தேவன் அனுப்பினார்." ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்."

மேற்கூறிய வாக்கியங்களால் கிறிஸ்து **பிறக்குமுன் இருந்தவர்** என்பதும், அவர் தேவனுடைய குமாரன் என்பதும் அவர் நமது பாவ மாம்சத்தின் **சாயலில் வந்தார்** என்பதும், ஆதியாகமத்தில் வாக்குப்பண்ணப்பட்ட **ஸ்திரீயின் வித்து** அவரே என்பதும், அவர் தேவனுக்குச் சமமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி மனுஷர் சாயலானார் என்பதும், **தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்** என்பதும் பிரத்தியட்சமாகத் தெரியவில்லையா? இப்படிப்பட்ட வார்த்தைகளை யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த குமாரனுக்கு யார் சொல்லக்கூடும்? கிறிஸ்து பரிசுத்த ஆவியின் செயலால் கன்னிகையினிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்பதை பவுல் நிச்சயமாகவே அறிவார். யோவானைப்போல் பவுலும்

உலகத்தின் பாவத்தைப் போக்கக்கூடிய பாவமற்ற கிறிஸ்துவைப் பற்றி எழுதுகிறபடியால், அவ்வித பிறப்பு அற்புத பிறப்பாக இருக்கவேண்டுமேயன்றி நம்மைப்போல் அது சாதாரண பிறப்பென்று பவுல் ஒருக்காலும் ஒப்புக்கொள்ளமாட்டார். மேலும், இயேசு கிறிஸ்துவை பவுல் இரண்டாம் ஆதாம் என்று சொல்லுகிறதால் ஆதாமைப்போல் இவரும் அற்புதமாகச் சிருஷ்டிக்கப்படுவது நியாயமே. பவுலுக்குப் பிரியமான உடன் ஊழியனான லூக்காவும் கிறிஸ்துவின் வம்ச அட்டவணையை ஆதாமில் கொண்டுபோய்ச் சேர்த்த காரணமும் அதுவே. அப்போஸ்தலர் நடபடி லூக்கா சுவிசேஷத்துக்குப் பிந்தி எழுதப்பட்டது. லூக்கா பவுலோடிருந்த காலத்தில் தமது சுவிசேஷத்துக்கு வேண்டிய சங்கதிகளைச் சேகரித்தார். கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பைப்பற்றி லூக்கா எழுதின விஷயங்கள் பவுலுக்குத்தெரியாமலிருக்குமா? லூக்கா சுவிசேஷத்தை பவுலின் சுவிசேஷம் என்று அழைப்பாருண்டு. பவுல் குணப்பட்டபின்பு அப்போஸ்தலரோடும் சீஷர்களோடும் இருந்தபடியால், கிறிஸ்துவின் பிறப்பு வளர்ப்பு முதலிய காரியங்களை அவர்கள்மூலமாய் அறிந்துகொள்ளவும் சமயம் இருந்தது. ஆகையால் கிறிஸ்து அற்புதமாகக் கன்னிகையிடம் பிறந்ததை பவுல் அறியாதவரல்ல.

கிறிஸ்துவின் அற்புத பிறப்பை மறுக்கிற தற்காலக் கொள்கைக்காரரின் பேச்சில் சாமர்த்தியமுண்டு. நாம் வைராக்கியம் பாராட்டுவதுபோல் அவர்கள் வைராக்கியம் பாராட்டுவதில்லை. அவர் எப்படிப் பிறந்தால்தான் என்ன? நமது விசுவாசத்துக்கு அதினால் கேடில்லையே என்கிறார்கள். நமது விசுவாசத்துக்கு அவர் பிறப்பல்ல, அவருடைய உபதேசமே போதும் என்கிறார்கள். உங்களுக்குப் பிரியமானால் அற்புத பிறப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்; அவர் யோசேப்புக்குப் பிறந்ததாக நாங்கள் சொல்லுகிறோம். ஆனால் நாம் இருபட்சத்தாரும் கிறிஸ்தவர்களாயிருப்பதற்குத் தடையில்லை என்கிறார்கள். இதைப்போல் மோசம் வேறில்லை. நாம் கிறிஸ்துவைக்குறித்த உபதேசத்தையல்ல, சத்தியத்தையே அறிய நாடுகிறோம். அவர் யோசேப்புக்குப் பிறந்திருந்தால் கன்னிகைக்குப் பிறந்திருக்கமாட்டார். அவர் கன்னிகைக்கு பிறந்திருந்தால் யோசேப்புக்குப் பிறந்திருக்கமாட்டார். அவர் யோசேப்புக்கும் **கன்னிகைக்கும்** பிறப்பது எப்படி? கிறிஸ்துவை மகா சிறந்த குருவாகவும், அவரது உபதேசத்தை மகா அருமையாகவும் இவர்கள் கொண்டாடுகிறார்கள். அவ்வாறு கிறிஸ்துவைக் குறித்து இவர்கள் எழுதியிருக்கிற ஜீவிய சரித்திரம் வாசிப்பதற்கு மிகவும் அருமையாகத் தோன்றும். கடைசியாக, அவர் ஒரு மனுஷன் என்பதும், யோசேப்பின் குமாரன் என்பதுமே இவர்கள் கொள்கை. ஒருத்துவ மார்க்கத்தார் எக்காலமும் போதித்துவந்த இந்தக் கொள்கை, திரித்துவ

மார்க்கத்தாரையும் ஆண்டுகொண்டதுதான் பரிதாபம். இவர்கள் கொள்கையின்படி கடவுள் ஒருவர். இயேசுகிறிஸ்து **ஜெகத்குரு.** பரிசுத்த ஆவியானவர் ஒரு **சக்தி.** இவர்கள் கொள்கையின்படி சத்திய வேதாகமம் துண்டு துண்டாக வெட்டப்பட்டு **''நாசரேத்தூர் இயேசு''** என்று சொல்லப்பட்ட சுருக்கச் சுவிசேஷமாயிற்று. இது கிறிஸ்துவின் சுவிசேஷமுமல்ல. பவுலுடைய சுவிசேஷமுமல்ல. அப்போஸ்தலருடைய சுவிசேஷமுமல்ல. ஆதிச்சபை ஏற்றுக்கொண்ட சுவிசேஷமுமல்ல. கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஏற்றுக்கொள்ளாமல், அவரை யோசேப்புக்குப் பிறந்த குமாரன் என்று நினைத்து, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்ற யூதர்களிடமிருந்து கற்றுக்கொண்ட சுவிசேஷம் இது. ஆகையால் இது சுவிசேஷமாகாமல் அபதேசம் அல்லது வஞ்சகமென்றாகும்.

''வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால். அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'' *(கலா. 1:7,8).* வானத்திலிருந்து வந்த தூதன் சொல்வதையும் கேட்போம். ''இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் **நற்செய்தியை** *(சுவிசேஷத்தை)* உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்'' என்றான் *(லூக்கா. 2:10,11).* யோசேப்புக்குப் பிறந்த குமாரன் **கர்த்தராகிய கிறிஸ்து** என்னும் **இரட்சகர்** ஆவதெப்படி?

நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதற்கு அவர் 'கன்னிகையினிடம் அற்புதமாகப் பிறந்தார்' என்பதை விசுவாசிக்கவேண்டியது அவ்வளவு அவசியமல்ல என்கிறார்களே. ஒரு வீட்டில் குடியிருக்கிறவர்கள் அதின் அஸ்திபாரத்தை நினைத்துக் கொண்டிருப்பது அவசியமல்ல தான். ஆனால் மோசமான அஸ்திபாரத்தில் கட்டப்பட்ட வீட்டிலிருப்பவர்கள் நினையாத நேரம் வீடு விழுந்து அழிவது நிச்சயமல்லவோ? நாம் இரட்சிக்கப்படும்படி சிலுவையில் மரித்த ஆண்டவரையே நோக்கிப்பார்க்கிறோம் என்பது மெய்யானாலும், சிலுவையின் இரட்சிப்புக்குக் காரணம் அவரது பரிசுத்த பிறப்பல்லவா? அவர் குற்றமற்ற மாசற்ற ஆட்டுக்குட்டியாயிருக்கவேண்டுமானால் அவர் பிறப்பு மாசற்றதாயிருக்கவேண்டுமே. யோசேப்புக்கு அவர் பிறந்திருந்தால் அவர் மாசற்ற பரிசுத்தராயிருப்பதெப்படி? யோசேப்பைப் பார்க்கிலும் பரிசுத்தவான்களான தகப்பன் தாய்மார்களுக்குப் பிள்ளைகள் பிறந்திருக்கிறார்களே;

கிறிஸ்துவைப்போல் பாவமற்ற பரிசுத்த பிள்ளையை உலகத்தில் இதுவரை கண்டதுண்டா?

கிறிஸ்து யோசேப்புக்குப் பிறந்தவர் என்று சொல்வது எளிது. ஆனால் அது அம்மட்டோடே நிற்கிறதில்லை. நீதிமானாகிய யோசேப்பு அந்தப்பிள்ளை தனக்குப் பிறக்கவில்லையென்று திட்டமாய்ச் சொல்லிவிட்டார். மனைவியைத் தள்ளிவிடவும் தீர்மானித்தார். அவர் யோசேப்புக்குப் பிறக்கவில்லையென்றால் வேறொரு மோசக்கார பாவிக்குப் பிறந்திருக்கவேண்டுமே. மரியாள் தனக்கு நியமிக்கப்பட்ட புருஷனுக்குத் துரோகியாக வேண்டுமே. அந்தப் பிள்ளை பேரும் ஊரும் தெரியாத யாரோ ஒருவனுக்குத் தப்பிதமாய் பிறந்த பிள்ளையென்று சொல்லவேண்டியதாகுமே. அவ்வாறு திருட்டளவாக அவர் பிறந்திருப்பாரானால் அவர் புருஷனுடைய வித்தேயல்லாமல் தேவன் ஆதியில் வாக்குச் செய்த ஸ்திரீயின் வித்தாகமாட்டாரே. அவர் ஒரு புருஷனுக்குப் பிறந்திருந்தால் எல்லாரையும்போல அவரையும் பாவியான மனுஷன் என்று சொல்லவேண்டியதே யல்லமால் பரிசுத்தர் என்று சொல்ல இடமில்லையே. "உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது**" என்று தேவதூதன் சொன்னது பொய்யாகுமே. அவர் பரிசுத்தர் அல்லவென்றால் தேவனுடைய குமாரனும் அல்ல. தேவகுமாரன் அல்லவென்றால் நமது பாவங்களை நீக்கவும், பாவ வல்லமையிலிருந்து நம்மை மீட்டு இரட்சிக்கவும் அவரால் முடியாது. அவரை இரட்சிக்க வேறெரு இரட்சகன் தோன்றவேண்டும். அவரடைந்த மரணம் அவர் பாவத்தின் நியாயமான சம்பளமாயிருக்கும். பாதாளமே அவர் நித்திய வீடாகும். மரணத்தை மேற்கொண்டு அவர் உயிரோடே வருவதில்லை. அவரை நம்புகிற ஒருவனும் ஈடேறுவதில்லை. இதுவே தற்காலக் கொள்கைக்காரர் நம்பியிருக்கிற கிறிஸ்து.

ஆ! ஒரு சத்தியத்தை மறுதலிக்கும்போது எத்தனை தீமைகள் விளைகின்றன! தேவன் அனுப்பின கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல், தங்கள் சுயகிறிஸ்துவை உண்டாக்குகிறவர்கள் இத்தனை தூஷணங்களுக்கும் இடங்கொடுக்கிறார்கள்." ஒருவன் தான் இரட்சிக்கப்படும்படி ஒரு சங்கிலியைப் பற்றிப் பிடித்திருக்கும்போது, அவன் விழுந்து சாவததிற்கு சங்கிலியிலுள்ள வளையங்களெல்லாம் அறுந்து போகவேண்டியதில்லை. ஒரு வளையம் அறுந்தாலே போதும். நமதாண்டவருடைய ஜீவியம் பிறப்புமுதல் கடைசிவரை சங்கிலித் தொடர்போலிருக்கிறது. அதில் ஒன்றை அறுத்துவிட்டு உயிர்தப்ப யாராலாகும்? கிறிஸ்துவின் ஜீவியத்தில் எங்களுக்கு இஷ்டமானதை ஏற்றுக்கொள்வோம், மற்றதைத் தள்ளிவிடுவோம் என்று இவர்கள் சொல்லுகிற சாதுரியம் நிலைநிற்காது.

முடிவாக நாம் சொல்லக்கூடியது என்னவென்றால், கிறிஸ்து யோசேப்புக்குப் பிறந்தவர் என்று சொல்லப்போனால், மத்தேயுவும் லூக்காவும் அவருடைய பிறப்பைக் குறித்து எழுதியிருக்கிற உண்மையான சரித்திரத்தைப் பொய்யென்று தள்ளவேண்டியதாகும். அது மாத்திரமல்ல, அத்தோடு சம்பந்தப்பட்ட அநேக சத்தியங்களையும் தள்ள வேண்டியதாகும். மலைப் பிரசங்கத்தை **வாசிப்பதே** நமது கிறிஸ்து மார்க்கமாகும். அதைக் கைக்கொண்டு நடக்கிறோம் என்று இவர்கள் பேசுவது மாயமும் பொய்யுமாகும். ஏனென்றால், நம்மைப் பலப்படுத்தும் கிறிஸ்து யோசேப்பின் குமாரனாகும்போது, பாவசுபாவமுள்ள அவரால் நமது பாவங்களை நீக்கவும் பரிசுத்த வழியில் நடத்தவும் எப்படிக்கூடும்? முகமது மார்க்கம், புத்த மார்க்கம், கிறிஸ்து மார்க்கம் மூன்றும் ஒன்றுதான் என்று சொல்லவேண்டியது மாகும். அவ்வாறு சொல்லவும் தலைப்பட்டிருக்கிறார்கள். தற்கால உலக தத்தளிப்புகளுக்கும் சங்கடங்களுக்கும் காரணம் கிறிஸ்துவுக்குரிய கனத்தை அவருக்குக் கொடுக்கத் தவறியதே. கேடுவரும் பின்னே, மதிகெட்டுவிடும் முன்னே.

கிறிஸ்து யோசேப்புக்குப் பிறந்திருந்தால் தேவதூதன், சகரியா, சிமியோன் அவரைக்குறித்துச் சொன்ன வார்த்தைகள் யாவும் பொய்யாகும். "பரிசுத்த ஆவி உன்னிடத்தில் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். **ஆதலால்** உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது** தேவனுடைய குமாரன் என்னப்படும்." என்றான். இவ்வாறு தூதன் சொன்னபடி அவர் அற்புதமாகப் பிறக்கவில்லையென்றால் அவர் பரிசுத்தமுள்ளவர் அல்ல. "தேவனுடைய குமாரன்" அல்ல. "உன்னதமானவருடைய குமாரனும்" அல்ல. தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றைக்கும் அரசாளுகிறவருமல்ல. எரேமியா தீர்க்கன் சொன்னபடி யோசேப்புக்கு விலக்கப்பட்ட தாவீதின் சிங்காசனம் யோசேப்பின் மகனுக்கும் விலக்கப்பட்டிருக்கும். சகரியா சொன்னபடி "**உன்னதத்திலிருந்து தோன்றிய** அருணோதயம்" நம்மைச் சந்திக்கவும் இல்லை. "பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பு" அவரால் நமக்குக் கிடைப்பதுமில்லை. பரிசுத்த ஆவி சிமியோனுக்கு அறிவித்தபடி இவர் "கர்த்தருடைய கிறிஸ்து" அல்ல. புறஜாதிகளின் ஒளியும், இஸ்ரவேலின் மகிமையும், சகல ஜனங்களுக்காக தேவன் ஆயத்தம்பண்ணின இரட்சணியமும் இவரல்ல. ஏசாயா சொன்ன இம்மானுவேல் என்பதற்கு "நம்மோடு கடவுள்" என்றல்லவா அர்த்தம். யோசேப்புக்குப் பிறந்த மகன் தேவனாயிருப்பதெப்படி? சகலமும் தவிடு பொடியாகும். அஸ்திபாரத்தை இடித்துக் கட்டடத்தை விழாமல் காப்பவன் யார்? அதுதான் நாம் கேட்க வேண்டிய கேள்வி.

ஆகையால் தற்காலக் கொள்கைக்காரரின் கிறிஸ்து **மனுஷனே** அல்லாமல் **தேவமனுஷன்** அல்ல. **ஜெகத்குருவே** யல்லாமல் **இரட்சகன்** அல்ல. பிரயாசப்பட்டுத் தேறினவ ரேயல்லாமல் பிறப்புமுதல் பரிசுத்தர் அல்ல. நமக்கு மாதிரியே அல்லாமல் நாம் வணங்கத்தக்கவரல்ல. நமக்காகப் பரிதபிக்கிறவரேயல்லாமல் நம்மைப் பராமரிப்பவரல்ல. அவருடைய வருகை என்பது உலகம் வரவரச் சீரடைவதே யல்லாமல் அவர் திரும்ப வருவதல்ல. கிறிஸ்துவைக் குறித்து இவ்வாறு இடறலடைவது எவ்வளவு பயங்கரம்!

"இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்" (மத். 21:44).

3
காலம் நிறைவேறினபோது
In the Fulness of Time

உலக சரித்திரத்திலென்றாலும் திருச்சபை சரித்திரத்திலென்றாலும் ஒரு மனுஷன்மூலமாகவே சம்பவிக்கிறது. தேசத்தின் கேடுபாடுகளை ஜனங்கள் கண்டு புலம்பலாம். நல்ல காலம் வராதாவென்று ஏகோபித்து எதிர்பார்க்கலாம். ஆகிலும், இரட்சகன் தோன்றுகிறவரை ஜனத்தால் ஆகக்கூடிய காரியம் ஒன்றுமில்லை. அவன் வரும் இடமும் வரும் விதமும் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன. அரசர் மாளிகையிலிருந்தோ, ஏழைக் குடிசையிலிருந்தோ, பட்டணத்திலிருந்தோ, நாட்டுப்புறமிருந்தோ, கல்விச்சாலையிலிருந்தோ, வனாந்தரத்திலிருந்தோ அவன் தோன்றுவான். தேசத்தின் கொடுமையைத் தன்கொடுமையாக எண்ணித்தேசத்தை இரட்சிக்கும் வீரனாக நிற்பான். ஒருக்கால், மனுஷர் அவனைக்கொண்டாடிப் போற்றலாம். அல்லது அவனை விரோதித்துக் கொள்ளலாம். ஆகிலும், அவன்கொண்ட கருமத்தை நிறைவேற்றாது விடான். இப்படிப்பட்ட வீரர்களே தேவனுடைய கருவிகளாயிருந்து, உலகத்தின் கொடுமையை அகற்றி மேன்மையையும் சுயாதீனத்தையும் அளித்தவர்கள். இவர்களில் ஒப்பற்ற வல்ல இரட்சகன் மாம்சத்தில் வெளிப்பட்ட **தேவசுதன்.**

இப்படி எழும்பும் இரட்சகர்கள் காலமறிந்து வரவேண்டும். பசிக்காமுன் வந்த விருந்தும், பசி தீர்ந்தபின் வந்த விருந்தும் காரியத்துக்கு உதவாது. தேசம் தன் குறைவை உணராமலும், விடுதலைக்காகத் தவிக்காமலும் இருக்கும் காலத்தில், ஒருவன் இரட்சகனாக எழும்புவானானால், தேசத்தார் அவனைப் பரியாசம் செய்வார்கள். அதுபோலவே, காலத்துக்குப் பிந்தி எழும்பும் இரட்சகனையும் நிந்திப்பார்கள். அவன்தானே வெட்கப்படவும் துக்கிக்கவும் நேரிடும். ஏற்ற காலத்தில் தோன்றும் வீரனே சமய சகாயன் ஆவான். நமதாண்டவர் சாமுவேலின் காலத்தில் வந்திருந்தால் இராஜ்யத்தின் ஞானபோதனையை

அறிபவர் யார்? இரண்டாம் நூற்றாண்டில் வந்திருந்தால் அவரை ஏற்றுக் கொள்ளுபவர் யார்? ஆகையால் **''காலம் நிறைவேறினபோது''** அதாவது ஏற்ற சமயத்தில் தேவன் தமது குமாரனை உலகத்தில் அனுப்பினார். கடவுள் ஆத்திரப்பட்டு ஒரு காரியத்தை முந்திச் செய்வதுமில்லை அல்லது அசதியாயிருந்து அதைப் பிந்திச் செய்வதுமில்லை.

பரலோகம் இரட்சகனை அனுப்ப ஆயத்தமாயிருந்தபோது பூலோகமும் தான் அறியாமலே ஆயத்தமானது. கிறிஸ்து உலகத்தில் பிரவேசித்த காலத்தில் ரோமர், கிரேக்கர், யூதர்களாகிய மூன்று ஜாதிகள் உலகத்தில் பிரசித்தி பெற்றிருந்தார்கள். இவர்களே உலகத்தில் நாகரீக முள்ளவர்களென்று எண்ணப்பட்டார்கள். பிலாத்து சிலுவையில் எழுதின எபிரேயு, கிரேக்கு, லத்தீன் என்னும் மூன்று பாஷைகளும் இதற்கு ஆதாரம். நாகரீகம் பெற்ற இம்மூன்று ஜாதியாரின் சரித்திரங்களைக் கவனிப்போமானால் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து தாங்கள் அறியாமலே கிறிஸ்துவின் வருகைக்கு உலகத்தை ஆயத்தம் செய்தார்களெனத் தோன்றும். சுவிசேஷம் உலகமெங்கும் செல்லவேண்டுமானால் அதற்கு மூன்று காரியங்கள் அவசியம். ஒன்று சுவிசேஷம் செல்லும்படியான **பாதை,** இரண்டாவது அதைப் பிரசங்கிப்பதற்குத் தகுந்த **பாஷை,** மூன்றுவது அதைப் பிரசங்கிப்பதற்கு ஏற்ற **ஆள்கள்.** இம்மூன்றும் ஆயத்தமாயிருந்த காலத்தில்தான் கிறிஸ்து உலகத்துக்கு வந்தார்.

நமதாண்டவரின் பரிசுத்த ஊழியமும், அவரடைந்த பாடுகள் மரணமும், அவற்றால் சம்பாதிக்கப்பெற்ற மகத்தான இரட்சிப்பும் பலஸ்தீனா தேசத்திற்குமாத்திரம் உரியதல்ல. அவரோ உலக முழுவதற்கும் இரட்சகராக வந்தார். அப்படியிருக்க, பலஸ்தீனா தேசம் மற்றத் தேசங்களோடு சம்பந்தப்படாமல் பிரிக்கப்பட்டிருக்குமானால், கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகமெங்கும் செல்லுவதற்கு வழியில்லாமற் போகும். **ஞானம் நிறைந்த தேவன் ரோமை இராஜ்யத்தைக்கொண்டு** தமது குமாரனுக்கு வழியை ஆயத்தம் செய்யச் சித்தங் கொண்டார். அவர்கள் அறியாமலே அவர்களைத் தமது கையின் கருவியாக உபயோகித்தார். மகாராஜாவின் வருகைக்கென்று பெரும் பாதைகளை உண்டுபண்ணும் வேலையை அவர்களுக்கு நியமித்தார். இராஜ்யங்களை ஜெயிக்கும்படியான தைரியத்தையும், அவைகளை ஆண்டு நடத்தும் திறமையையும் இவர்களுக்குக் கொடுத்தார். ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து, ஒருவரையொருவர் பகைத்து யாதொரு போக்குவரத்தில்லாதிருந்த பல இராஜ்யங்கள் ரோமரால் ஒரே இராஜ்யமாயிற்று. "உலகமெங்கும் குடிமதிப்பு எழுதும்படி அகுஸ்து இராயனால் கட்டளை பிறந்தது" என்னும் வார்த்தைகள் அக்காலத்து ரோமின் ஆளுகையின் விசாலத்தைக்

காட்டுகின்றன. பலஸ்தீனா தேசம் ரோமின் ஆளுகைக்குட்பட்டது. உலகம் ஒரே இராஜ்யம்போல் தோன்றிற்று. அதற்கு ஒரே தலை நகரும், ஒரே இராயனும், ஒரே ஆளுகையுமிருந்தன. ரோமிலிருந்து சமுத்திர மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் தூரமான தேசங்களுக்குச் செல்லத்தக்க வழிகள் உண்டாயிற்று. ரோமச்சேனை நடப்பதற்கென்று உண்டுபண்ணப்பட்ட, நேரும் விசாலமுமான பாதைகள், ஜெயிக்கப்பெற்ற எல்லாத் தேசங்களிலும் சென்றன. இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் இன்னும் அவர்களுடைய கீர்த்திபெற்ற பாதைகளை இங்கிலாந்து தேசத்திலும் மற்றத் தேசங்களிலும் காணலாம்.

கிறிஸ்து வருவதற்கு ஒரு நூற்றாண்டுக்குமுன் ஜாதிகள் ஒருவரோடொருவர் சம்பந்தமின்றித் தனித்தனியே பிரிந்திருந்தார்கள். அவர்களுக்குள் ஐக்கியமில்லை. தங்கள் மார்க்கம், தங்கள் வழக்கம், தங்கள் பாஷை, தங்கள் ஆளுகையென்னும் கொள்கையுடையவர்களாயிருந்தார்கள். அவர்களுக்குள் பகையும் பிரிவினையும், பயமும், சந்தேகமும், ஓயாச்சண்டையுமிருந்தன. தாங்கள் மற்றத்தேசங்களில் பிரவேசிக்கவோ. மற்றவர்கள் தங்கள் தேசத்திற்குள் வரவோ ஏதுவில்லை. கடல் பிரயாணத்துக்குக் கடற்கொள்ளைக்காரர் பயமும், தரைப் பிரயாணத்திற்கு வழிப்பறிக்காரர் அபாயமும் மிகுதியாயிருந்தன. ஜாதிகள் தங்கள் தங்கள் தேசத்திற்குள்ளேயே அடங்கியிருந்தார்கள். இப்படிப்பட்ட காலத்தில் கிறிஸ்து வந்திருப்பாரானால், அவரது சுவிசேஷம் புறதேசங்களில் செல்லுவதற்கு வழியிருந்திருக்கமாட்டாது. பெருவெள்ளம் வந்து சிற்றாறுகளைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளும் வண்ணமாய் ரோம இராஜ்யம் சர்வதேசங்களையும் மேற்கொண்டு தனக்குக் கீழ்ப்படுத்தினது. ரோமரின் மேலான ஆளுகையும், அவர்கள் உண்டாக்கின நேரான பாதைகளும், ஜாதிகள் எங்கும் தாராளமாய்ப் போக்குவரவு செய்வதற்கும், கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷம் இலேசாய் மற்றத்தேசங்களில் பரவுவதற்கும் ஏதுவாயிற்று. பரிசுத்த பவுல் எவ்வளவு தாராளமாய்ப் பட்டணங்கள் தோறும் பிரயாணம்செய்து எங்கும் சுவிசேஷத்தைத் தைரியமாய்ப் பிரசங்கித்தார் என்பதைக் கவனிக்கும்போது, ரோம இராஜ்யத்தின் சமாதானமும், பாதைகளும், உலக ஒற்றுமையும் கிறிஸ்து மார்க்கத்துக்கு எவ்வளவோ அனுகூலமாயிருந்ததென விளங்கும்.

இவ்வளவு சிறந்த ரோமஇராஜ்யத்தின் **ஆவிக்குரிய** நிலைமையோ மகா பரிதாபம். அதுவும் இன்னொருவகையாய் கிறிஸ்துவுக்கு ஆயத்தமெனவே சொல்லலாம். நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புவதற்கு அழைக்கும்படி கிறிஸ்து வந்தார். ரோமரிடத்தில் அக்காலத்தில் காணப்பட்ட

பாவங்களையும் அக்கிரமங்களையும் எண்ணவும் முடியாது, வாயால், சொல்லவுங்கூடாது. எத்தேசத்தாராயினும் உலகசம்பத்துப்பெருகி உடல் கொழுக்கும்போது, அவர்களை ஆண்டு நடத்த தேவபக்தி ஒன்றில்லாமற்போனால், அவர்கள் மிருகங்களிலும்கேடான மிருகங்களாவார்கள் என்பது நிச்சயம். ரோமருடைய நடபடிகளைப்பற்றிக் கூறியிருக்கும் பூர்வசரித்திரங்களைக் கவனித்தால் இது தெரியவரும். கொலை ஒரு பொருட்டல்ல. மனைவிகளைப் புருஷர் நஞ்சிட்டுக் கொல்வதும், புருஷரை மனைவிகள் நஞ்சிட்டுக் கொல்வதும் சகஜம். பிறக்கிற ஆண் குழந்தைகளை வைத்துக்கொண்டு பெண் குழந்தைகளைக் கொன்றுவிடுவார்கள். நரபலி செலுத்த அஞ்சார்கள். இவ்வித கொலைபாதகர்களில் மூவாயிரம்பேர் ஏககாலத்தில் சிரசாக்கினை அடைந்தார்கள்.

மனுஷஜீவனை அற்பமாய் மதித்த ரோமரின் கொலைபாதகங்கள் மல்லக சாலையில் நடந்த குரூரச் செய்கையாலும் வெளிப்பட்டன. பயங்கரமான ஆயுதங்கள் பிடித்து, அடிமைகள் மல்லயுத்தம் செய்யும்போது, ஒருவரை யொருவர் தாக்குவதால், மார்புகள் பிளப்பதும், மூளை சிதறுவதும், தலைகள் வெட்டுண்டு விழுவதுமான சித்திரவதைகளைப்பார்த்து மகிழும்படி, திரளான கனவான்களும் பெருமாட்டிகளும் ஏகமாய்க் கூடுவார்கள். இந்த வேடிக்கை யுத்தத்தில் ஐரோப்பாவில் மாதம் ஒன்றுக்கு மடிந்தவர்கள் இருபது முப்பது ஆயிரமெனக் கணக்குண்டு. பிரதேசங்களில் சென்று யுத்தம் செய்து, அத்தேசத்து ஜனங்களைக் கொண்டுவந்து, இவ்வாறு மல்லயுத்தம் செய்யவிட்டு, அவர்கள் துடிதுடித்து மாய்வதைக் கண்குளிரப் பார்த்துச் சந்தோஷிப்பார்கள். இக்குரூரச் செய்கைகளைக் கண்டுகளிப்பதில் ஸ்திரீகள் புருஷருக்குப் பிந்தினவர்களல்ல. இவ்வாறு மடிபவர்களின் தொகையைக் குறைக்கும்படி துரைத்தனத்தார் பிரயாசப்பட்டும் காரியம் வாய்க்கவில்லை.

அடிமைகளை இவர்கள் ஆட்கொண்ட விதமும் மகா குரூரம். பத்து அடிமைகளுக்குக் குறைந்தவன் கனவான் என்று மதிக்கப்படான். ஒரு எஜமான் இருபதினாயிரம் அடிமைகளை வைத்திருந்தானாம். அடிமை வியாபாரிகள் மிகுந்த லாபடைந்தார்கள். ரோமர் யுத்தத்திற்குப் போகுங்காலத்தில் இவ்வியாபாரிகள் அவர்களுடன் சென்று, ஆயிரம் பதினாயிரமான ஜனங்களை ஈனக்கிரயத்துக்கு வாங்குவார்கள். கடற்கொள்ளைக்காரர் மத்தியதரைக் கடலோரமான தேசங்களின் குடிகளைப் பிடித்துக் கப்பலேற்றி சந்தைக்குக் கொண்டுபோய் நாளொன்றுக்குப் பதினாயிரம் அடிமைகளை விற்பார்கள். அடிமைகளை வாங்கின எஜமான்கள் அவர்களைப் படுத்தின

பாடுகள் இவ்வளவு அவ்வளவல்ல. தங்களைப்போல் அவர்களும் மனுஷரென்றெண்ணாமல், உயிருள்ள சாமான்களென்றும், வீட்டிலும் வயலிலும் வேலை செய்யும் ஜீவனுள்ள அயுதங்களென்றும் நினைத்தார்கள். அடிமைகளான புருஷரையும் பெண்களையும் பிள்ளைகளையும் நாயிலும் கேடாக நடத்தி, படாதபாடுபடுத்தி, யாதொரு இரக்கமின்றிக் கொல்லுவார்கள். மேன்மக்களான வாலிபர் விளையாட்டுக்காக ஆயிரக்கணக்கான அடிமைகளைப் பலவிதமாய் சித்திரவதை செய்து கொல்ல, பார்த்தவர்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள். ஒரு கனவான் தன் வீட்டுக்கு விருந்தினராக வந்த வேறொரு கனவானைச் சந்தோஷப்படுத்த விரும்பி, தன் அடிமைகளில் ஒருவனைக் கொண்டுவந்து, அவனைச் சித்திரவதை செய்ய, அவன் அலறி அலறி அழுத குரலைக் கேட்டுச் சந்தோஷத்தோடு விருந்துண்டு களித்தானாம். இவ்வண்ணம் கற்றோரும் மற்றோருமான ரோமர் மனுஷ கொலைபாதகராயினர்.

ஜீவனுள்ள கடவுளை அறியாமல் தேவதையை ஆராதித்து வந்த ரோமர் சகலவித துன்மார்க்கத்திலும் அமிழ்ந்து சீர்குலைந்தார்கள். ஆண்களும் பெண்களும் தாங்களாகவும், அடிமைகள் மூலமாகவும், மாம்ச இச்சைக்கேதுவான துன்மார்க்கங்களில் பழகித் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். வாலிபர் புஷ்டியும் அழகும் செழிப்பும் வாய்ந்தவர்களாயிருப்பதற்குப் பதிலாக வயதானவரைப்போல் பலம் குன்றித் தவித்தார்கள். அவர்கள் தேவனை அறிந்து அவரை ஆராதிக்க மனமற்றுப் போனதால் "அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார், இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார், கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" என்று பவுல் ரோமர் நிருபத்தில் எழுதினது சரியே. அவர்கள் செய்த பாவங்களை இன்னும் விபரமாய் அறியவேண்டுமானால் ரோமர் நிருபம் முதல் அதிகாரத்தில் காணலாம்.

இவர்களுக்குள் ஞானிகள் என்றெண்ணப் பெற்றவர்கள், ஜனங்களை இரட்சிக்க விரும்பி எடுத்துரைத்த மதசித்தாந்தம், கழுவப்போய்ச் சேற்றைப்பூசினதுபோலாயிற்று. ஜனங்கள் இஞ்ஞானிகளிடத்தில் ஞான உபதேசம் கேட்கச் சென்று, உள்ளமதியுங் கெட்டு, குடும்ப ஆறுதலையும் சந்தோஷத்தையும் இழந்து, பரம வாழ்வையும் காணாது தடுமாறி நின்றனர். அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லி பைத்தியக்காரராகித் தங்களை நம்பினவர்களையும் பைத்தியக்காரராக்கினார்கள். அவர்கள் ஆராதித்த தேவதையும் கற்ற ஞானமும் அவர்களைக் கை தூக்கக்கூடவில்லை. தேவனை அறியாததினால் தேவதைகளை வணங்க நேரிட்டது. சத்தியத்தை அறியாததினால் உலக ஞானத்துக்குச் செவிகொடுக்க நேரிட்டது.

பிதாவின் அன்பை ருசிக்காததினால் பலவித இச்சைகளுக்கு அடிமைகளாக நேரிட்டது. மேலான வல்லமையைக் காணும்வரை, கீழான இச்சைகளால் இழுப்புண்டு கெட்டது ஆச்சரியமல்ல. உலகத்தை ஜெயித்து ஒரு குடையின்கீழ் ஆண்ட வீரர்களுக்குத் தங்கள் பாவத்தை ஜெயிக்கத் திராணியில்லை. பாவவிதைகள் இன்பமாய் விதைக்கப்பட்டாலும் துன்பமாய் விளையும் என்பது மெய். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். அவர்கள் பாவமே அவர்களைத் தண்டித்தது. பாவ அந்தகாரம் மூடியிருந்த இக்காலத்தில் பகலோனாகிய **இயேசு பகவான்** உதிக்கும் வேளை வந்தது. பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகிற்று. ரோமர் நிருபம் முதல் அதிகாரம் பாவ அட்டவணை. கடைசி அதிகாரம் பரிசுத்தவான்கள் அட்டவணை. ஆ! சுவிசேஷத்தின் வல்லமையை என்ன சொல்ல! இவ்வாறு பலஸ்தீனாவிலிருந்து சுவிசேஷம் எங்கும் செல்லத்தக்கதான பாதைகள் உண்டானபோதும், பாவத்தால் கெட்டமாந்தர் கைதூக்குவாரின்றித் தத்தளித்தபோதும், மனுக்குலத்தை இரட்சிக்கும் காருண்யக்கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டார்.

ரோமருடைய காரியங்கள் இவ்வாறிருக்க **கிரேக்கர்** சரித்திரத்தைக் கேட்போம். இவர்கள் கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் செய்ததெப்படி? சுவிசேஷத்திற்குத் தகுந்த **பாஷையைக்** கொடுத்தவர்கள் இவர்களே. பற்பல ஜாதிக்காரரை ரோமர் ஒன்றாக இணைத்தபோதிலும், அவர்களெல்லாரும் பேசக்கூடிய ஒரு பொதுப்பாஷை இருக்கவேண்டும். உலகத்தார் பேசும் பாஷை பிரசங்கிக்குத் தெரியாவிட்டால், அவன் அவர்களுக்குப் பிரசங்கிப்பதெப்படி? இதனால் அல்லவா மிஷனெரிமார், தாங்கள் ஊழியம் செய்வதற்கு அனுகூலமாகத் தேசத்தின் பாஷையை முந்திக் கற்றுக்கொள்ளுகிறார்கள். அக்காலத்தில் யூதர் அராமெயிக் பாஷை பேசினார்கள். ரோமர் லத்தீன் பாஷை பேசினார்கள். மற்றத் தேசத்தார் பாபேலைப்போல் பற்பல பாஷைகளைப் பேசினார்கள. சுவிசேஷகன் ஒவ்வொரு தேசத்து பாஷையையுங் கற்று அவர்களுக்குப் பிரசங்கிப்பது எவ்வளவோ கஷ்டம். இந்தக் கஷ்டத்தைக் கிரேக்கர் நீக்கினார்கள். மகா அலெக்சாந்தர் ஐரோப்பாவை ஊடறுத்துச் சென்று, ஆசியாவிலும் இந்திய தேசத்திலும் வந்தபோது, தான் போனவிட மெங்கும் கிரேக்க பாஷையை ஸ்தாபித்து, எல்லாரும் அப்பாஷையைக் கற்றுக்கொள்ளும்படி ஏவினான். ஆசியாவில் கிரேக்க பாஷையை ஸ்தாபிப்பதே தன் பிரதான கடமையென்றும் சொன்னான். ரோமர் கிரேக்க தேசத்தை ஜெயித்தபோது, கிரேக்க பாஷையைத் தங்கள் சுய பாஷையிலும் அருமையாக மதித்து அதைக் கற்றுக்கொண்டார்கள். உலகத்தை ஆண்டுவந்த ரோமர் கிரேக்கு பாஷையை சொந்தமாக்கினதால், அவர்கள் அரசாட்சிக்குட்பட்ட சகல தேசத்தாரும், அப்பாஷையை

இராஜாங்க பாஷையாக மதித்துக் கற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. பலஸ்தீனாவிலிருந்த யூதரும் கிரேக்குப் பாஷையில் பேசினார்கள். அவர்களுடைய வேதாகமம் கிறிஸ்துவுக்கு இருநூறு வருஷங்களுக்கு முன்பே கிரேக்குப் பாஷையில் திருப்பப்பட்டிருந்தது. இக்காலத்தில் ஆங்கில பாஷை எல்லாத் தேசங்களிலும் பேசப்படுவதுபோல, அக்காலத்தில் கிரேக்கு பாஷை உலகத்துக்குப் பொதுப் பாஷையாயிருந்தது. பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரேவிதமான பேச்சும் இருந்ததென, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட காலம் திரும்பவும் முளைத்ததுபோல் தோன்றினது. அப்போஸ்தலன் ரோமிலும், கொரிந்துவிலும், அத்தேனேயிலும் கலாத்தியா முதலான பல பாகங்களிலும் கிரேக்குப் பாஷையிலேயே பிரசங்கித்தார். இவ்வாறு கிரேக்கர் தாங்கள் அறியாமலேயே கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குத் தகுந்த பாஷையைக் கொடுத்தார்கள்.

தேவன் தமது குமாரனை உலகத்தில் அனுப்பினபோது, அவரது சுவிசேஷம் கிரேக்குப் பாஷையிலே பிரசங்கிக்கப்படச் சித்தங்கொண்டார். ஏனென்றால், அந்தப் பாஷை இனிய நடையும் சொல்வன்மையும் உள்ளது. சுவிசேஷத்தில் அடங்கிய ஆழ்ந்த சத்தியங்களை ஒன்றுக்கொன்று பிரத்தியேகப் படுத்திக்காட்டும் சக்தியுள்ளது. தேவ இரகசியங்களின் கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகள் நிறைந்தது. ஆண்டவரின் திருவாயிலிருந்து அருள்மாரிபோல் புறப்பட்ட ஜீவ வார்த்தைகளைக் கூறுவதற்கு, கிரேக்குப் பாஷையைப்போல் மகா இன்பமும் வசீகரமுமான பாஷை வேறெதுவுமில்லை. ஒரு வசனத்துக்குச் சரியான கருத்தை அறிய விரும்புகிறவர்கள், கிரேக்கு வேதாகமத்தை ஒத்துப் பார்ப்பதின் காரணம் அதுவே. பாதை மாத்திரமல்ல, பாஷையும் ஆயத்தமாயிருந்தகாலத்தில் கிறிஸ்து உலகத்துக்கு வந்தார்.

கிரேக்கருடைய **ஆத்மநிலைமை** எப்படி இருந்ததென்றும் பார்ப்போம். உலகத்தில் கலைஞானத்திலும் காவியங்களிலும் மேன்மைபெற்ற ஜாதியார் இவர்களே. கிரேக்கரைக் கல்விக்களஞ்சியமென உலகத்தார் போற்றினார்கள். இவர்களுடைய தத்துவ சாஸ்திரங்கள் ஆழ்ந்த கருத்துள்ளவை. புறம்பாகக் கல்வியிலும் கைத்தொழிலும் எவ்வளவு நாகரீகமடைந்திருந்தபோதிலும், உள்ளான ஆவிக்குரிய நிலைமையோ மகா பரிதாபம். ஜீவனில்லாத விக்கிரகத் தொண்டர்களாகி ரோமரைப்போலவே அக்கிரமங்களில் அமிழ்ந்து தவித்தார்கள். கல்வியிலும் செல்வத்திலும் இவர்கள் குறைவின்றி வாழ்ந்தாலும், இரட்சண்ய பாக்கியத்தைக் கொஞ்சமும் அறிந்தவர்களல்ல. கடவுள் யாரென்று அவர்களுக்குத் தெரியாது. அப்போஸ்தலன் அத்தேனேப்

பட்டணத்துக்கு வந்தபோது, "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதிய அநேக பலி பீடங்களைக் கண்டு, அந்தத் தேவன் இன்னாரென்று அவர்களுக்குப் போதிக்க வேண்டியதாயிற்று. கல்வியும் கண்ணியமும் உள்ளான சீர்கேட்டை மூடும் போர்வையாயிருந்ததேயன்றி, ஆத்துமாவின் சஞ்சலத்தை அணுவளவும் நீக்கவில்லை. கல்வியும் ஞானமும் தங்களுக்கு மெய்ச்சமாதானத்தைக் கொடுக்கவில்லையென்றும், தங்கள் முயற்சிகள் யாவும் பயனற்றுப்போனதென்றும் அவர்கள் கண்டபோது, தங்களை இரட்சிக்கும்படியான ஒரு பாக்கியமான காலம் சீக்கிரம் வரப்போகிறதென்று அவர்களுடைய ஞானிகளே தெரிவித்தார்கள். காலம் நிறைவேறினபோது **ஸ்திரீயின் வித்தானவர்** உலகத்தில் தோன்றினார்.

கிறிஸ்துவின் வருகைக்கு ரோமர் செய்த ஆயத்தம் பாதை. கிரேக்கர் செய்த ஆயத்தம் பாஷை. **யூதர்** செய்த ஆயத்தமென்ன? யூதர்கள் என்ன பாடுகள் பட்டாலும், எங்கே போனாலும், எத்தனை வருஷங்களானாலும், என்னென்ன மாறுதல்கள் நேரிட்டாலும், தேவன் தந்த திருவேதத்தை இழந்து போகாமல் காப்பாற்றினார்கள். மேசியாவின் வருகைக்கு எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். அவர்கள் வேதத்தையும் மேசியாவையும் அறியவேண்டியபிரகாரம் அறிந்துகொள்ளாமற்போனாலும், இவ்விரு விஷயத்திலும் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை உண்மையே. இதுவே அவர்கள் செய்த **ஆயத்தமெனலாம்.** ஆகிலும், கிறிஸ்து பிறந்தகாலத்தில் யூதர்களின் **தேச நிலைமையும் மார்க்கவழக்கங்களும்** எப்படி இருந்ததெனக் கவனிப்போம்.

சிறையிருப்பிலிருந்து யூதர்கள் திரும்பினபின், **எருசலேம்** பிரதான ஆசாரியரால் ஆளப்பட்டது. ஆகிலும் வேற்றரசர் படையெடுத்து எருசலேமைப் பாழாக்கினார்கள். மக்கப்பேயர் என்னும் யுத்தவீரர் பூர்வ அரசாங்கத்தை மறுபடியும் ஸ்தாபித்தார்கள். பின் நடந்த யுத்தங்களில் இவர்கள் ஜெயித்தும் தோற்றும் போனார்கள். தாவீதின் சிங்காசனத்தில் அந்நியன் வீற்றிருந்தான். ரோமராஜ்யம் பலஸ்தீனா முழுவதையும் கைப்பற்றிக்கொண்டது. தேசம் பங்குபங்காகப் பிரிக்கப்பட்டு ஏரோதின் மக்களால் ஆளப்பட்டது. ரோம தேசாதிபதி யூதேயாவை ஆண்டான். ரோமப்போர்வீரர் எருசலேம் வீதிகளில் உலாவினார்கள். ரோமக்கொடிகள் தேசமெங்கும் பறந்தன. ஆயக்காரர் பட்டணங்கள்தோறும் ஏற்படுத்தப்பட்டார்கள். சனதரீம் என்னும் யூதச்சங்கத்திற்குப் பேருக்குமாத்திரம் கொஞ்சம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இச்சங்கத்தார் ரோமர் கையிலுள்ள பொம்மைகள்போல் ஆடினார்கள். மார்க்க விஷயத்திலும் ஜாதி அபிமானத்திலும் யூதர்களைப்போல் வைராக்கியமுள்ளவர்களுமில்லை. அவர்களைப்போல் சகல

விஷயத்திலும் சிறுமைப்பட்டுத் தவித்தவர்களுமில்லை. ஐயோ! மேன்மைபெற்ற மகா இராஜாவின் நகரமே! உன் ஜனத்தின் பாவத்தால் நீ அடைந்த கதி இதுவோ?

தேசநிலைமை இவ்வாறென்றால், அவர்கள் **மார்க்கநிலைமை** எப்படியிருந்ததென்று விசாரிப்போம். யூதர்களுக்கு ஒருகாலத்தில் கண்ணியாயிருந்து, அவர்களைக்கெடுத்தது விக்கிரகாராதனை. சிறையிருப்பின் தண்டனையினால் அவர்கள் எச்சரிப்படைந்து, எருசலேமுக்குத் திரும்பினபின் விக்கிரகாராதனையை முற்றிலும் வெறுத்தார்கள். பிற்காலத்தில் அவர்கள் எங்கேபோனாலும், எம்மார்க்கத்தார் நடுவில் சஞ்சரித்தாலும், கொஞ்சமும் அவர்களோடு கலவாமல், யெகோவா ஒருவரையே வணங்கி வந்தார்கள். மார்க்க விஷயத்தில் முன்னில்லாத பிரகாரம் கவனம் செலுத்தினார்கள். ஆசாரியர் ஒழுங்குகளும் அவர்கள் ஊழியங்களும் திரும்பவும் பூரணமாய் ஏற்படுத்தப்பெற்றன. ஆலயத்தில் ஆராதனைகளும் பண்டிகைகளும் மகா திட்டவட்டமாய் நடந்தேறின. பூர்வத்தில் இவர்களுக்கு ஜெப ஆலயங்கள் இருந்ததில்லை. சிறையிருப்புக்குப்பின் பலஸ்தீனா தேசத்திலும், யூதர்கள் சிதறுண்டுபோன நாடுகளிலும், ஏராளமான ஜெப ஆலயங்கள் கட்டப்பட்டன. ஓய்வுநாள்தோறும் அங்கே கூடி ஆராதிப்பதும், ரபிமார் வேதம் வாசித்துப் பிரசங்கிப்பதைக் கேட்பதும் அவர்களுக்கு வழக்கம். இது தவிர, வேதசாஸ்திரப் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு ரபிமார் பயிற்றுவிக்கப் பட்டார்கள். இவைகள் யாவும் நல்ல குறிப்புகளாகத் தோன்றினாலும், வெளி ஆசாரங்களாக இருந்ததேயன்றி உள்ளான மாறுதலை உண்டாக்கவில்லை. பாவத்தை உணர்ந்து மனந்திரும்பும்படி பிரசங்கிக்க தீர்க்கதரிசி ஒருவனுமில்லை. தீர்க்கதரிசியின் சத்தங்கேட்டு நானூறு வருஷங்களுக்கு மேலானது. ஆகமங்கள் ஒழுங்காய் வாசிக்கப்பட்டன. ஆகிலும் அவைகளின் ஆவிக்குரிய போதனையை அறிவாரும் போதிப்பாரும் இல்லை.

இவர்களில் **பரிசேயர்** என்று ஒரு வகுப்பார் இருந்தார்கள். பரிசேயன் என்பதற்குப் **பிரிந்திருப்பவன்** என்று அர்த்தம். யூதனானவன் புறஜாதிகளோடு எவ்வளவேனும் கலவாமல் பிரிந்திருக்கவேண்டுமென்பதை இவர்கள் வற்புறுத்திப் பேசினதால், இவர்களுக்கு இப்பெயர் வந்தது. இவ்வளவு வைராக்கியத்தோடு இவர்கள் பாவத்தைவிட்டுப் பிரிந்திருப் பார்களானால் எவ்வளவோ மேன்மையாயிருந்திருக்கும். பரிசேயர் மார்க்காபிமானிகளாயிருந்ததோடு தேசாபிமானிகளுமாயிருந்தார்கள். அந்நியர் தங்கள் தேசத்தை ஆண்டு வந்தது அவர்களுக்குக் கொடிய வெறுப்பு. தேசம் சுயாதீனமடையும்படி தங்கள் ஜீவனையும் கொடுத்துவிடுவார்கள். புறஜாதிகளை நிந்தித்து அருவருத்தார்கள். கடவுள் தங்களுக்கே கடவுள், வேதம் தங்களுக்கே உரியது, மேசியா தங்களுக்கே சொந்தமென்பது

இவர்கள் கோட்பாடு. ஆபிரகாமின் மக்களென்பது இவர்கள் பெருமை. ஆபிரகாமின் விசுவாசமோ இவர்களிடத்தில் இல்லை. யூதஜனங்கள் வழி விலகிப்போகாமல் அவர்களைப் பலமாய் மார்க்கத்தில் கட்டும்படி ஜெபம், உபவாசம், தசமபாகம், ஸ்நானங்கள், பலிகள் முதலான ஆசாரங்களைத் திரளாய்ப் பெருகச் செய்தார்கள்.

வேறொரு வகுப்பார் **வேதபாரகர்**. இவர்களும் பரிசேயரும் ஒன்று. இவர்கள் வேதத்தை நகல் செய்ததாலும், வியாக்கியானம் செய்ததாலும் இப்பெயர் இவர்களுக்கு வந்தது. யூதருடைய நியாய சட்டங்கள் வேதத்தோடு சம்பந்தப்பட்டிருந்ததால், இவர்கள் நியாய சாஸ்திரிகளென்றும் அழைக்கப்பெற்றார்கள். ஜனங்களுக்குள் தேவபக்தியை உண்டாக்கக்கூடிய நல்ல சிலாக்கியம் இவர்களுக்கிருந்தது. அதை முற்றிலுமாக இழந்தார்கள். தேவவாக்கை ஆவிக்குரியபிரகாரம் அர்த்தம் செய்யாமல், எழுத்தின்படி அர்த்தம் செய்து ஜனத்தை மோசம் போக்கினார்கள். ஆத்துமாவில் பசித்தோருக்கு அப்பத்துக்குப் பதிலாகக் கல்லைக் கொடுத்தார்கள். ஜீவனுள்ள வேதம் இவர்கள் வியாக்கியானத்தால் செத்ததுபோலானது. வியாக்கியானங்கள் பெருகவே வேதம் மதிப்பற்றுப்போயிற்று. வேதபாரகரும் பரிசேயரும் உண்டாக்கின ஆசாரங்களும் விதிகளும் தேவகற்பனையாகப் போதிக்கப்பட்டன. வீட்டுக்கும், வேலைக்கும், சபைக்கும், சங்கங்களுக்கும் மனுஷருடைய சகல காரியங்களுக்கும் இவர்கள் உண்டாக்கின ஆசாரங்களுக்குக் கணக்கில்லை. அவைகளைக் கற்றுக்கொள்ள ஒருவனுடைய ஜீவகாலமும் போதாது. இவ்வாறு சுமக்க அரிதான சுமைகளை மனுஷர் தோள்மேல் சுமத்தினார்கள். புறம்பான இவ்வாசாரங்கள் ஆவிக்குரிய ஜீவனைக் கொன்றன. மனுஷருடைய பாரம்பரியங்கள் தேவகற்பனையை வியர்த்தமாக்கிற்று. "வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ."

சதுசேயரென வேறொரு வகுப்பாரும் இருந்தார்கள். இவர்கள் மேன்மக்களான ஆசாரியரைச் சேர்ந்தவர்கள். மக்கப்பேயர் யுத்தம் செய்த காலத்தில் பரிசேயர் அவர்களைவிட்டுப் பிரிய, பரிசேயரின் விரோதிகளான சதுசேயரோ, மக்கப் பேயரோடு சேர்ந்து மேன்மைபெற்றார்கள். உலக மேன்மையும் உலக லாபமுமே இவர்கள் நாட்டம். இவர்கள் வேதமே பிரதானம் என்பார்கள்; ஆகிலும் வேதத்தை விசுவாசித்தவர்கள் அல்ல. வேதபாரகர் பரிசேயரின் சடங்காசாரங்களை வெறுத்தார்கள்; ஆகிலும் ஆவிக்குரிய மேன்மையான வழியைப் காண்பித்தவர்களுமல்ல. தங்களுடைய நிர்விசாரமான ஜீவியத்திக்குப் பரிசேயரின் ஆசாரங்கள் இடையூறாயிருக்கிறதென்று வெறுத்தார்களேயன்றி மற்றப்படியல்ல. தேவதூதரும், ஆவியும், உயிர்த்தெழுதலும், மறுமையுமில்லை என்பது இவர்கள்

கோட்பாடு. பரிசேயரைப்போல் தேசாபிமானமும் மதாபிமானமும் இவர்களுக்குக் கிடையாது. புறஜாதிகளோடு தாராளமாய் உறவாடினார்கள். அந்நியருடைய வழக்கங்களிலும் கொண்டாட்டங்களிலும் இவர்களுக்கு வெகுபிரியம். தேசம் அந்நியர் கையிலிருந்து விடுதலையாகவேண்டுமென்கிற கவலை கொஞ்சமும் இவர்களுக்கில்லை. அவர்களுக்கு இணங்கிப் போவதே தங்களுக்கு அனுகூலமென்று நினைத்தார்கள். அப்போஸ்தலர் கிறிஸ்துவின் உயிர்தெழுதலைப் பிரசங்கித்தபோது அவர்களை எதிர்த்தவர்கள் இந்தச் சதுசேயரே. ஒரு ஸ்திரீ ஏழு பேருக்கு மனைவியாயிருந்தால், உயிர்த்தெழுதலில் எப்படியாகுமென்று, நமதாண்டவரிடத்தில் விகடம் பேசி வெட்கப்பட்டவர்களும் இவர்களே. எருசலேமின் அழிவோடு சதுசேய சமயமும் அழிந்தது. இவர்களில் ஏரோதின் ஆளுகைக்கு அனுகூலமாகவும், அவனுக்குப்பின் அவன் மக்களுக்கு உட்கையாகவும் இருந்தவர்களுக்கு **ஏரோதியர்** என்று பெயர்.

இனி **ஆசாரிமாரைப்பற்றி** அதிகம் சொல்ல வேண்டியதில்லை. மேற்கூறிய சதுசேயர் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களே. பொது ஜனங்களுக்குப் பரிசேயர்மேல் பிரியம். தங்கள்மேல் அனுதாபமற்ற ஆசாரியர் பேரிலோ வெறுப்பு. ஆசாரியர் வகுப்பு பண்டுதொட்டு வந்ததால் அது அதிக உறுதியுள்ளது. ஆசாரியர்கள் செல்வச்செருக்குள்ளவர்கள். அவர்கள் குடும்பங்கள் மேலான பதவியில் வைக்கப்பட்டிருந்தன. கர்த்தருடைய தாசனாகிய மோசேக்கு இடறலாயிருந்து கன்றுக்குட்டியை உண்டாக்கின ஆரோன் தொடங்கி, கிறிஸ்துவைச் சிலுவையிலறைந்த ஆசாரியனாகிய காய்பாவின் நாள்கள்வரை, ஆசாரியர்கள் கர்த்தருடைய ஜனங்களுக்கு அநேகமாய்ச் சாபமாயிருந்தார்களேயன்றி ஆசீர்வாதமாயிருந்ததில்லை. உலக சிந்தையிலும் பெருமையிலும் பொருளாசையிலும் கிறிஸ்துவின் நாள்களிலிருந்த ஆசாரிமார் பேர்பெற்றவர்கள். மேலான பரிசுத்த ஊழியம் அவர்கள் கையிலிருந்தது. அது அவர்களுக்காவது ஜனங்களுக்காவது ஆசீர்வாதமாயிருக்கவில்லை. பலிகள் செலுத்தப்படுவதும், வரிகளைக் கண்டிப்பாய் வாங்குவதுமே பிரதான வேலையாகக் கருதினார்கள். பொருள் சம்பாதிப்பதற்கு ஆலயத்தின் மீதுள்ள அதிகாரமே போதும் என்றிருந்தார்கள். ஜீவனுள்ள பரிசுத்த ஊழியம் அவர்களுக்கு மரணமாயிற்று. அந்நிய இராஜாங்கத்தோடு சேர்ந்து சுயலாபத்தைத் தேடினார்களேயன்றி, ஜனத்தின் இரட்சிப்புக்காக எவ்வளவேனும் கவலைப்பட்டவர்களல்ல.

கிறிஸ்துவின் ஊழிய நாள்களில் பரிசேயருக்கும் அவருக்கும் ஓயாத தர்க்கம் உண்டாயிற்று. ஆசாரிமார் அவரை எதிர்த்ததாகச் சொல்லப்படவில்லை. காரணமென்ன? அவர்கள் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டதினாலோ? அல்லது, அவர்களை

உத்தமர்களென்று ஆண்டவர் விட்டுவிட்டதினாலோ? அப்படியல்ல. கிறிஸ்துவைக்குறித்து அவர்கள் கேள்விப்பட்ட போதெல்லாம், நாசரேத்தூரான். நம்மால் எண்ணப்படுவதற்கு எம்மாத்திரம் என்று கெர்வங்கொண்டிருந்தார்கள். எத்தனையோ பைத்தியகாரர் எழும்பினதுபோல் இவனும் எழும்பியிருக்கிறான், இவனாலே நமக்கு என்ன சேதம் என்றிருந்தார்கள். ஆனால் அவர் ஆலயத்தில் வியாபாரிகளை அடித்துத் துரத்தினபோதோ, தங்கள் ஆதாயத்துக்கு ஆபத்து வந்ததெனக் கலங்கி, அவரை எந்த விதத்திலும் தொலைத்துப் போடவேண்டுமெனத் தீர்மானித்தார்கள். தீர்மானித்தபடியே கடைசியில் செய்து முடித்தார்கள்.

பலஸ்தீனாவின் தேசநிலைமையும் மார்க்க நிலைமையும் இதுவே. மேன்மக்களான ஆசாரிமார் அவிசுவாசிகளும் உலகமக்களுமாயிருந்தார்கள். இவர்களே முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள். தேசாபிமானமும் மதாபிமானமும் உள்ள வேதபாரகர் பரிசேயர், ஆசாரங்களைப் பெருகச்செய்து ஜனங்களின் தோளை ஒடித்தார்கள். இவர்கள் நோக்கம் நல்லது; வழியோ மோசம். ஆகையால் இவர்கள் ஊக்கமும் மூர்க்கமும், இவர்கள் பக்தி அவபக்தியும், இவர்கள் தீர்மானம் பிடிவாதமும், இவர்கள் ஆசாரம் பாரமுமாயிற்று. தாங்கள் தேடின மேசியா வந்தபோதோ, அவரை முழுப்பகையாய்ப் பகைத்தார்கள். இவர்கள் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மற்ற பொது ஜனங்கள் எல்லாரும் மூன்றாம் வகுப்பாரென எண்ணப்பட்டார்கள். ஆயக்காரரும் வேசிகளும் பாவிகளுமோ ஜனசம்பந்தமுமற்று, மார்க்கசம்பந்தமுமற்று, எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை விரும்புவாரும் சிநேகிப்பாரும் இல்லை. பாவிகள் நேசராகிய **இயேசுவே** இவர்கள் சிநேகிதன். தேசத்தின் கொடுமையினாலும், மார்க்க ஆசாரங்களின் பாரத்தினாலும், தவித்துப் புலம்பின அநேக உத்தம விசுவாசிகள் மேசியாவுக்காக வாஞ்சையோடு காத்திருந்ததும் மெய்தான். நாசரேத்தில் மரியாள் யோசேப்பு. எருசலேமில் சிமியோன் அன்னாள் முதலானவர்கள். வயலில் ஆட்டு மேய்ப்பர். கலிலேயாவில் சீமோன், அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு கானாவூரில் நாத்தான்வேல். இவர்களைப்போல் இன்னும் அநேகர் இஸ்ரவேலின் ஆறுதல் வர ஆவலோடு காத்திருந்தார்கள். அவர் வந்தபோது அநேகர் அவருக்கு அடியாரானார்கள். சிலர் அவருக்கு அப்போஸ்தலருமானார்கள். இவர்களைக்கொண்டு திருச்சபையும் ஸ்தாபிக்கப் பெற்றது.

இதுவரை பலஸ்தீனாவிலுள்ள யூதர்களின் நிலைமையைக் கவனித்தோம். இப்போது பலஸ்தீனாவைவிட்டுப் பற்பல தேசங்களிலும் **சிதறுண்டுபோன யூதர்களைக்** கவனிப்போம். அவர்கள் செய்த ஆயத்தம் என்ன? வேற்றரசர் படையெடுத்துக்

காலத்துக்குக்காலம் யூத ஜனங்களைச் சிறையாக்கிக்கொண்டு போனார்கள். இதுதவிர வியாபார விஷயமாகவும் வேறு நோக்கமாகவும் மிகுதியான யூதர்கள் புறதேசங்களில் குடியேறினார்கள். இவ்வாறு வெளியே போன யூதர்களின் தொகை பலஸ்தீனாவிலிருந்தவர்களைப் பார்க்கிலும் மிகவும் ஏராளம். அவர்கள் போகாத தேசமில்லை. எத்தேசத்தாருக்குள்ளும் இவர்களைக் காணலாம். வியாபாரத்திலும் செல்வத்திலும் இவர்கள் கை பலத்தது, பாபிலோனும் அலெக்சந்திரியாவும் இவர்கள் குடியேற்றத்தின் முக்கிய ஸ்தானங்கள். பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு வந்த கூட்டத்தைக் கவனித்தால், அவர்கள் குடியேறியிருந்த தேசங்களையும், அவர்கள் எவ்வளவாய்ப் பெருகியிருந்தார்கள் என்பதையும் அறிந்துகொள்ளலாம். தம் தம் தேசப்பேராலே தங்களை அழைக்கிறார்கள். "பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனேப்பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லீபியாவின் குடிகளும், ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும், கிரேத்தரும் அரபியருமே."

இவ்வாறு யூதர்கள் சகல தேசத்தாருக்குள்ளும் சிதறுண்டு போனதும் தேவச்செயலே. விவசாயியானவன் நிலத்தின் ஒரு சிறிய பாகத்தில் நாற்றை உண்டாக்கிப் பின்பு அவைகளைப் பிடுங்கி விஸ்தாரமான நிலங்களில் நடுவதுபோல, தேவன் மகாசிறிய நாடாகிய பலஸ்தீனாவிலிருந்து தமது ஜனமாகிய நாற்றைப் பிடுங்கி உலகமெங்கும் குடியிருக்கும்படி செய்தார். இவர்கள் எங்கெங்கே போனார்களோ அங்கெல்லாம் தங்கள் வேதத்தைக் கூடவே கொண்டுபோனார்கள். தாங்கள் குடியிருந்த சகல பட்டணங்களிலும் ஜெப ஆலயங்களைக் கட்டி ஓய்வுநாள்தோறும் ஆராதனை நடத்தி வந்தார்கள். புறஜாதியார் நடுவில் இவர்கள் சஞ்சரித்தபோதிலும், அவர்களால் கறைப்படாமல் மற்றவர்களைத் தங்கள் மார்க்கத்தில் இழுத்துக்கொள்ளும் சக்தியுடையவர்களாயிருந்தார்கள். பற்பல பாவங்களால் மேற்கொள்ளப்பட்டுத் தவித்த புறஜாதியார், வேதத்தில் இவர்களுக்கிருந்த மதிப்பையும், கடவுள்பேரில் இவர்கள் வைத்திருந்த நம்பிக்கையையும் கவனித்து, விக்கிரகங்களை வெறுத்து யூதமார்க்கத்தில் சேர்ந்தார்கள். கப்பர்நகூம் நூற்றுக்கதிபதி போலவும், எகிப்துதேசத்து கந்தாகேயின் மந்திரிபோலவும், யூதமார்க்கத்திலமைந்த அநேகர் பட்டணங்கள் தோறும் இருந்தார்கள். கிரேக்குப் பாஷையில் திருப்பப்பட்டிருந்த வேதாகமத்தை புறஜாதியார் ஆவலோடு வாசித்துப் படித்தார்கள். ஜெப ஆலயங்களில் யூதரும் யூதமார்க்கத்தமைந்த புறஜாதியாரும் ஆராதனை செய்து வந்தார்கள். இவ்வாறு மேசியாவைப்பற்றிய எதிர்நோக்குதல்

யூதருக்குமாத்திரமல்ல, யூதர்மூலமாய்ப் புறஜாதிகளிடத்திலும் காணப்பட்டது.

யூதர்களில் மிகுதியானவர்கள் யெகோவாவும், மேசியாவும், வேதமும் தங்களுக்குமாத்திரம் உரியதென்று நினைத்திருக்க, புறஜாதிகளிடத்தில் சஞ்சரித்துவந்த கல்விமான்களான யூதர்களின் நம்பிக்கையோ வேறுவிதமாயிருந்தது. இவர்கள் புறஜாதிகளோடு பட்சமாய்ப் பழகி அவர்களுடைய கல்வியை மதித்தார்கள். கடவுள் யூதருக்குமாத்திரமல்ல, எல்லாருக்கும் அவர் கடவுள் என்று கண்டார்கள். வேதம் யூதருக்கு மாத்திரமல்ல, மனுஷரெல்லாருக்கும் உரியதென்றும் அறிந்தார்கள். தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அவர்கள் ஆராய்ந்து பார்த்து, **கிறிஸ்து** யூதர்களுக்கு மாத்திரமல்ல புறஜாதிகளையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கவேண்டுமென்று நம்பினார்கள். பலஸ்தீனாவில் அடைபட்டிருந்த பரிசேயரின் தந்நயமும் குருட்டாட்டமும் இவர்களைவிட்டு நீங்கின.

பரிசேயரின் பாரம்பரியங்களுக்கும் ஆசாரங்களுக்கும் எல்லாருமே அடங்கியிருந்தார்களென்று நினைக்கக்கூடாது. தேவபக்தியும் ஆவிக்குரிய சிந்தையுமுள்ள யூதர்களுக்கு அவைகள் திருப்திசெய்யக் கூடாதவைகளும் உருவழிந்துபோகத் தக்கவைகளுமாயிருந்தன. மேசியா வந்தால்தான் தங்கள் ஆத்துமா இரட்சிக்கப்படக்கூடுமென்று நம்பினார்கள். இந்த நம்பிக்கையைக் குறித்துத் தங்களைப்போல் பாவத்தால் தத்தளித்த புறஜாதியாரோடும் பேசினார்கள். சொல்லவேண்டுமானால், யூதர்கள் மேசியாவின் ஆவிக்குரிய தன்மையைப் பூரணமாய் அறிந்தாலும் அறியாமற்போனாலும், அவர் சீக்கிரத்தில் வெளிப்பட வேண்டுமென்கிற எதிர்பார்க்குதல் எல்லா யூதர்களிடத்திலும் காணப்பட்டது. யாராகிலும் ஒருவன் விசேஷித்தவனாக எழும்பினால், அவன் **கிறிஸ்துவோ** என்று விசாரிப்பார்கள். கலிலேயனாகிய யூதாஸ் எழும்பினபோது அவனை மேசியாவென்று நம்பி, அநேகர் அவனைப்பின் சென்றார்கள். ஸ்நாகையோவான் வந்துபோது தேசத்தார் யாவரும் அவனைப் பார்த்து: நீர் **கிறிஸ்துவா**வென்று கேட்டார்கள். இவ்வாறு யூதர்களெல்லாரும் ஏகமாய் மேசியாவின் வருகைக்காக ஆவலோடு எதிர்பார்த்திருந்த காலத்தில், கடவுள் தமது குமாரனை உலகத்தில் அனுப்பினார். "காலம் நிறைவேறினபோது" என்பதின் கருத்து இதுதான். ரோமர் **பாதைகளை** உண்டாக்க, கிரேக்கர் **பாஷையைக்**கொடுக்க, ரோமரும் கிரேக்கரும் **பாவத்தால் தத்தளிக்க**, யூதஜாதி பலவிதத்திலும் தாழ்த்தப்பட்டு மேசியாவுக்காக ஒன்றுபோல் **எதிர்நோக்க,** அநாதிவார்த்தையான **தேவதிருச்சுதன்** மனுஷகுமாரனாக மாம்சத்தில் வெளிப்பட்டார். சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்யக்கூடிய வழியும், சத்தியமும் ஜீவனுமானவர் இவரே.

4
பன்னிரு பிராயம்
Christ's Twelfth Year

பிள்ளை பிறந்த எட்டாம் நாளில் அவருக்கு விருத்தசேதனம் செய்து **இயேசு** எனப்பேரிட்டார்கள். நாற்பதாம்நாள் அவரை பெத்லகேமிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்தில் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்தார்கள். அவர்கள் பெத்லகேமுக்குத் திரும்பினபின், கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்து அவரைப் பணிந்து கொண்டார்கள். ஏரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடினபடியால் யோசேப்பும் மரியம்மாளும் அவரை எடுத்துக்கொண்டு எகிப்துக்குப் போனார்கள். ஏரோது மரித்தவுடனே திரும்பி வந்து பெத்லகேமிலே குடியிருக்க யோசனை செய்தார்கள். கடவுளால் எச்சரிக்கப்பட்டு கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்கே திரும்பிப்போய் அங்கே வாசம்பண்ணினார்கள்.

யூதருக்குள் பஸ்கா, பெந்தெகொஸ்தே, கூடாரப்பண்டிகை என மூன்று பிரதான உற்சவங்கள் உண்டு. இம்மூன்று பண்டிகைகளும் வருஷந்தோறும் எருசலேமில் நடைபெறும். புருஷர் எல்லாரும் பண்டிகைக்குப் போகவேண்டும் என்பது பிரமாணம். இது தேவபக்திக்குரிய கொண்டாட்டமாகையால் ஸ்திரீகளும் போகலாமென்று ரபிமார் உத்தரவளித்தார்கள். ஆகையால், யோசேப்பும் மரியாளும் வருஷந்தோறும் பஸ்காப்பண்டிகைக்குப் போவார்கள். இப்பொழுது நமதாண்டவருக்குப் பன்னிருபிராயமானதால் அவரையும் இந்தப்பண்டிகைக்கு அழைத்துச்சென்றார்கள். பையன்களுக்குப் பிரயாணம் என்றால் போதும். பெற்றாரை இருக்க விடமாட்டார்கள். அம்மா! நாம் போகிறது நிசந்தானாவென்று அடிக்கடி கேட்பார்கள். மெய்தான் என்று சொன்னால் குதித்துத்துள்ளுவார்கள். இதுவரை மறைவான கிராமத்தில் தங்கிவளர்ந்த இயேசுவுக்கு, எருசலேமுக்குப் போகிறோம் என்று

கேட்டவுடன் உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. எருசலேமைப்பற்றி வீட்டில் பேசப்படும்போதெல்லாம் அவருள்ளம் பூரிக்கும். எருசலேம் அரணிப்பான சிறந்த பட்டணம். அதன் சரித்திரம் மகா விசேஷம். தமது முன்னோர்களான இராஜாக்களையும் தீர்க்கதரிசிகளையும் அவர் நினைக்கிறார். அவருடைய பிதாவின் வீடு அங்கே இருந்தது. எப்போது நான் அதின் வாசல்களில் பிரவேசிப்பேன் என்று வாஞ்சையோடிருந்தார்.

நாசரேத் வரிசை வரிசையாக பதினைந்து மலைகள் சூழ்ந்த கிராமம். மலர்ந்த ரோஜாப் புஷ்பத்தைப்போல் அம்மலைகள் ஊரைச்சுற்றிலும் இதழ்களைப்போல அடுக்கடுக்காய்த் தோன்றும். ஊர் அம்மலைகளின் மத்தியில் வெண்ணிறமாகத் தோன்றும். நாசரேத்துக்கும் எருசலேமுக்கும் எண்பது மைல் தூரம். பிரயாணிகள் நாசரேத்தைவிட்டு அம்மலைகளைக் கடந்து தெற்குமுகமாய் யெஸ்ரயேல் என்னும் சமபூமிக்கு வருவார்கள். சமாரியருக்கும் யூதருக்கும் பகையிருந்தபோதிலும், எருசலேமுக்கு நேர்வழியாகப் போகும்படி, பூர்வத்தில் எப்பிராயீம் மனாசே கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்ட எல்லை வழியாகப் பிரயாணம் செய்வார்கள். பஸ்காப்பண்டிகை ஏப்ரல் கடைசிக்கும், மே மாத ஆரம்பத்துக்கும் இடையில் வருவதால், எங்கே பார்த்தாலும் பற்பல நிறங்களுள்ள அலங்காரமான புஷ்பங்கள் திரளாகக் காணப்படும். பாதையின் இரு பக்கங்களிலும் விசாலமான வயல்கள் பச்செனத் தோன்றும் கீசோன் ஆற்றையும், சூனேம் ஊரையும் கடக்கும்போது எலியா எலிசாவை நினைக்கவேண்டியதாகும். கில்போவாவைக் கடக்கும்போது சவுல் இராஜாவின் சரித்திரம் ஞாபகத்துக்கு வரும். இவ்வாறு வேத சரித்திரங்களால் நிறைந்துள்ள ஸ்தலங்களைக் கடந்து, நீரூற்றுகளும் சோலைகளும் அடர்ந்த இடத்துக்கு வந்து முதல் நாள் இராத் தங்குவார்கள். மறுநாள் காலையில் பிரயாணம் புறப்பட்டு, மனாசேயின் மலைவழிப்பாதை ஏறி, அத்தி ஒலிவ மரத் தோப்புகளுக்கு ஊடாக நடந்து, சமாரியர் மேன்மை பாராட்டும் பர்வதங்களை வலது பக்கம் விட்டு, சீகேமுக்குச் சமீபமாயுள்ள பிதாவாகிய யாக்கோபின் கிணற்றண்டை தங்குவார்கள். இவ்வாறு அவர்கள் மூன்றாம் நாளிலும் பிரயாணம் செய்து போகையில், வெகுதூரத்தில் எருசலேம் பட்டணத்தின் பிரகாசமான கோபுரங்கள் அவர்களுக்குக் காணப்படும்.

எருசலேம் யூதரின் மதிப்புக்குரிய நகரம். அதை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். "எருசலேமே, நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கிய மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும்போனால் என் நாவு என் மேல் வாயோடே

ஒட்டிக்கொள்வதாக" என்று சிறைப்பட்டோர் புலம்பினார்கள் (சங். 137:6). எருசலேமைப் பார்க்கிலும் விசேஷித்த மகிழ்ச்சி யூதனுக்கில்லை. ஆகவே, பண்டிகைக்குப் பிரயாணிகள் மகா உற்சாகமாகப் பாடிக்கொண்டு போவார்கள். அவர்கள் பாடும் பாட்டை 122-ஆம் சங்கீதத்தில் காணலாம். "கர்த்தருடைய ஆலயத்துக்கு வாருங்கள் என்று அவர்கள் எனக்குச் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். எருசலேமே, உன் வாசல்களில் என் கால்கள் நிற்கலாயிற்று. எருசலேம் இசைவிணைப்பான நகரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாக கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும். அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள். உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. உன் அலங்கத்துக்குள்ளே சமாதானமும் உன் அரமனைக்குள்ளே சுகமும் இருப்பதாக. என் சகோதரர் நிமித்தமும், என் சிநேகிதர் நிமித்தமும், உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன். எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மை உண்டாகத் தேடுவேன்" என்று பாடிக்கொண்டு வழி நடப்பார்கள். முதியோர் தங்களோடு வரும் பெண்டு பிள்ளைகளுக்கு யெகோவாவின் மகிமைப் பிரதாபத்தையும், சீயோன் ஆலயத்தின் சிறப்பான காரியங்களையும் அருமையாய் எடுத்துரைப்பார்கள்.

நமது தேவாலயத்தின்மீது நமக்கு இவ்வளவு மதிப்பிருந்தால் எவ்வளவு நல்லது! அவர்கள் பழைய ஏற்பாட்டுப் பக்தர். புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வந்துவிட்டது. ஆவிக்குரியவர்களுக்கு ஆலயம் என்றில்லை; அவர்கள் எந்த இடத்திலும் கடவுளைத் தொழுதுகொள்ளலாம் என்று அநேகர் சொல்லுகிறார்கள். ஒருவிதத்தில் இது உண்மையே. ஆனால் அந்த எண்ணம் நம்மை ஆலய அசட்டைக்கு இடமுண்டாக்காதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஆலயப் பக்தியைக் குருட்டுப் பக்தியென்று நினைக்கிற அறிவாளிகளும் உண்டு. இன்று தேவாலமாயிருப்பது நாளை கருவாட்டுக் கடையானாலும் அவர்களுக்குக் கவலையில்லை. வெகுகாலம் பக்தியுடன் வணங்கிவந்த தேவாலயங்கள் வியாபாரிகளுக்கு விற்கப் பட்டதுமுண்டு. உத்தம வணக்கம் அற்றுப்போன ஆலயங்கள் விற்கப்பட்டால்தான் என்ன? எருசலேம் ஆலயத்தைப்போல் இடிக்கப்பட்டால்தான் என்ன? கர்த்தருடைய மகிமை தமது ஜனத்தைவிட்டு விலகும்போது, அவ்வாலயங்கள் இருந்து என்னத்துக்கு? ஆனால் தேவனுடைய பிள்ளைகள் உண்மையோடும் ஆவியோடும் தொழுதுகொள்ளும் அவருடைய ஆலயத்தில் கர்த்தர்

மெய்யாகவே இருக்கிறார். மெய்யாகவே அது அவருடைய வீடு. அங்கே நமது ஜெபங்களைக் கேட்கிறார். தமது வசனத்தை ஆசீர்வதிக்கிறார். பாவங்களை மன்னிக்கிறார். நமக்குப் பலவித ஆறுதல்கள் அளித்து நம்மைப் பலப்படுத்துகிறார். அநேகர் தங்கள் மறுபிறப்பை அங்கே காண்கிறார்கள். அநேகர் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அங்கே தேவதூதர்கள் தோன்றுகிறார்கள். அது வானத்தின் வாசல். மெய்யாகவே கடவுள் தமது ஆலயத்தில் இருக்கிறார். போதகரும் சபையாரும் ஒருமனப்பட்டு உத்தம இருதயத்தோடும் வாஞ்சையோடும் அங்கே அவரைத் தேடும்போது மகிமையான காரியங்களைக் கண்டடைகிறார்கள். ஆகையால் தேவாலயத்தின்மேல் அவர்கள் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய வீட்டுக்குப் போகும்படியான வேளை வரும்போது, புறாக்கள் வேகமாய்ப் பறந்து தங்கள் கூடுகளுக்கு வந்து சேருவதுபோல, புருஷரும், ஸ்திரீகளும், முதியோரும், பாலியரும், குழந்தைகளும் தேவாலயத்தில் ஆசையோடு பிரவேசித்து பயபக்தியுடன் பணிந்து கொள்ளுகிறார்கள். மகா ஆவிக்குரிய நமது இரட்சகருக்கு தேவாலயத்தின் மீதிருந்த மதிப்பு எவ்வளவு! அதை பிதாவாகிய கடவுளின் வீடு என்று அழைத்தார். மனுஷர் அதை வியாபார வீடாக்கினபோது அவருக்குண்டான விசனம் கொஞ்சமல்ல. நாம் தனிமையாய் கர்த்தரைத் தேடுவதும், சிலரோடுகூடி வீடுகளிலோ மற்ற இடங்களிலோ ஜெபிப்பதும் அவசியமே. ஆகையால், தேவாலயம் விசேஷமல்லவென்று சொல்வது ஒருக்காலும் சரியல்ல. தேவ அசட்டையிலிருந்து தேவாலய அசட்டை உண்டாகிறது. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்றும், "கோவில் இல்லா ஊரிலே குடியிருக்கவேண்டாம்" என்றும் ஔவையாருமல்லவோ சொல்லியிருக்கிறாள்.

இவ்வாறு நாலா திசைகளிலுமிருந்தும் பிரயாணிகள் எருசலேமுக்கு வருவதால் பட்டணம் அவர்களைக்கொள்ளாது. பஸ்காப் பண்டிகைக்கு முப்பது இலட்சம் ஜனத்துக்குமேல் வருவார்கள் என்று கணக்குண்டு. எருசலேமுக்குள் இடம் போதாததால் பட்டணத்தைச் சுற்றிலும் குடும்பம் குடும்பமாக, இலைகள் குலைகளால் குடிசைகளைப் போட்டுக்கொண்டு, அந்த வார முழுவதும் அங்கே தங்கி ஆராதனை செய்வார்கள். அலங்கார வாசல்களையும், பொற்தகடு பொதிந்த கோபுரங்களின் பிரகாசத்தையும், லேவியர் பணிவிடைகளையும், பலி பீடத்தினின்று எழும்பும் புகையையும், பாடகர் வரிசையையும் கண்டு ஆனந்திப்பார்கள். பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு இத்திரளான கூட்டத்தின் நடுவிலிருப்பதை அறிந்தது யார்? அப்பண்டிகைவாரம் எவ்வளவு சீக்கிரம் கடந்ததென்பது தெரியாது. சிரியன் கிறிஸ்தவர்கள் மாராமன் என்னும் இடத்தில்

இருபத்தையாயிரம் பேருக்கதிகம் கூடி, குடும்பம் குடும்பமாகப் படவுகள், பந்தல்களில் தங்கி, ஒருவார முழுவதும் மகிழ்ச்சியோடு கூட்டங்களுக்கு வந்து, தேவ வசனத்தைக் கேட்பது எருசலேம் பண்டிகையை ஞாபகப்படுத்தும் திருஷ்டாந்தமாகும்.

பஸ்காப்பண்டிகை முடிந்ததும், வந்ததுபோலவே பிரயாணிகள் கூட்டம் கூட்டமாகத் தங்கள் இடங்களுக்குத் திரும்புவார்கள். அவ்வாறு திரும்பும்போது, ஆடல் பாடல்களோடும், வாகனங்கள் மீதேறியும், கால்நடை நடந்தும் களிப்புடன் செல்லுவார்கள். யோசேப்பும் மரியாளும் மற்றவர்களோடு சேர்ந்து வடதிசை நோக்கி நடந்தார்கள். **இயேசு** என்னும் பிள்ளை எருசலேமில் இருந்துவிட்டார். இதை அவர்கள் கவனிக்கவே இல்லை. அப்படிக் கவனிக்காதிருந்தும் அவர் பிரயாணக்காரரின் கூட்டத்தில் இருப்பார் என்பதுபோல நினைத்துக்கொண்டார்கள். ஒரு நாள் பிரயாணம் போய் மாலை இருண்ட நேரத்தில் அவரைத் தேடினாலோ பிள்ளையைக் காணோம். பெற்றாருக்குத் தெரியும் பிள்ளை அருமை, மற்றவர்களுக்கு என்ன தெரியும்? அது இழக்கக்கூடிய பிள்ளையா? அவர் அழியாப் பெருஞ்செல்வமாயிற்றே, அப்படியிருக்க எப்படி அவரை இழந்தார்கள்?

பழைய அனுபவத்தை நம்பி மோசம்போனார்கள். எருசலேமுக்கு வரும்போது அவர் கூடவரவில்லையா? அதுபோலவே திரும்பும்போதும் வருவார் என்று நினைத்துக் கொண்டார்கள். பிரயாணக்காரர் கூட்டத்தில் அவர் இருப்பாரென்பது அவர்கள் உத்தேசம். அந்த உத்தேசத்தில் ஒரு நாள் பிரயாணமும் வந்தாயிற்று. அவர்கள் அவ்வாறு உத்தேசித்துக்கொண்டது மோசம். அனுபவத்துக்கும் உத்தேசத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவர்கள் நாசரேத்திலிருந்து புறப்பட்டபோது பிள்ளை தங்களோடு வந்தது **அனுபவம்.** இப்போது திரும்புகிறபோது அவர் வருவார் என்பது **உத்தேசம்.** நாசரேத்திலிருந்து புறப்பட்டபோது இயேசுவை அழைத்து, அவரோடு பேசி, மகனே, எருசலேமுக்குப் போகிறோம், உன்னையும் இந்தப் பண்டிகைக்குக் கூட்டிக்கொண்டு போகிறோம் வருகிறாயா என்று கேட்க அவர் அவர்களைப் பார்த்து: சந்தோஷமாக வருகிறேன் என்று சொல்ல, அவர்கள் அவரோடு சேர்ந்து இன்பமாக வழி நடந்து, அநேக விஷயங்களைக்குறித்து அவரோடு பேச, அவரும் அநேக காரியங்களை அவர்களிடம் கேட்க, இவ்வாறு மகிழ்ச்சியுடன் எருசலேமுக்கு வந்தார்களே. பண்டிகை முடிந்து திரும்பும்போதுமாத்திரம் அவர் பிரயாணக்காரரின் கூட்டத்தில் இருப்பாரென்று நினைத்துக் கொண்டு, ஒருநாள் பயணம்போனது சரியா? திரும்பும்போதும் அவரைப் பார்த்து: மகனே பண்டிகை

முடிந்தது, வீட்டுக்கு திரும்புகிறோம், போகலாம் வா என்று அருமையாக அழைத்து, அவரோடு சம்பாஷித்துக்கொண்டு பிரயாணம் செய்யவேண்டியதல்லவோ நியாயம். ஆனால், அன்று அவர்கள் அவரைக் காணவுமில்லை, அவரை அழைக்கவுமில்லை, அவரோடு பேசவுமில்லை. கூட்டத்தோடு கூட்டமாய் அவர் வருவார் என்று நினைத்துக்கொண்டார்கள். வரும்போது **அனுபவம்.** திரும்பினபோது **உத்தேசம்.** இது எவ்வளவு மோசம்!

நமது கிறிஸ்தவ ஜீவிய அனுபவமும் இதுபோலதானே. கிறிஸ்துவோடு நடக்கிற ஜீவியமே கிறிஸ்தவ ஜீவியம். நமது பழைய அனுபவத்தை நம்பி நாம் மோசம்போகக்கூடும். பழைய அனுவத்திற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நாம் அவரைக் கண்டநாள் இன்பநாள். அவரோடு பேசினநாள் ஆசீர்வாதமான நாள். அவரோடு சஞ்சரித்த காலம் பாக்கியமான காலம். அவர் நம்மைத் தொட்டநேரம் ஆரோக்கிய நேரம். இப்போது நமது அனுபவமென்ன? அவர்கூட இல்லாதிருந்தும், கூட இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோமல்லவா? இதைப்போல் மோசமான வஞ்சிக்கப்பட்ட நிலைமை உண்டா? பராக்கிரமனான சிம்சோன் மோசம்போனதும் இப்படித்தானே. பலத்தை இழந்திருந்தும், தான் பலமுள்ளவன் என்று நினைத்துக் கண்ணிழந்து தவித்தான். ஒருகாலத்தில் செல்வந்தராயிருந்தவர்கள் கால வித்தியாசத்தால் தரித்திரப்பட்டபோதிலும், மதிப்புக் குறையாதபடிக்கு வெளியே புறப்பட்டால் முன்போலவே உடுத்திப் புறப்படுவார்கள். பார்ப்பவர்களுக்கு உள்ளான இரகசியம் தெரியாது. வீட்டிலேயோ சாப்பாட்டுக்கு வழியில்லை. தோற்றத்தில் சீமான்கள், அனுபவத்தில் தரித்திரர். அநேகருடைய காரியம் இப்படியே இருக்கிறது. "இரக்கப் போனாலும் சிறக்கப்போ" என்று சொல்லிக்கொள்ளுவார்கள்.

மார்க்கவிஷயத்தில் இந்தத் தோற்றம் மிகவும் பரிதாபம். முன்போலவே ஜெபங்கள். முன்போலவே சத்தம். முன்போலவே பிரசங்கம். முன்போலவே பாட்டுகள். முன்போலவே கூட்டங்கள். முன்போலவே பல முயற்சிகள். எல்லாம் வழக்கம்போல் நடைபெருகின்றன. பண்டிகைக்குப் போனதும் பண்டிகையிலிருந்து திரும்புகிறதும் ஒன்றுபோல் தோன்றுகிறது. வித்தியாசம் இல்லையா? மகா பெரிய வித்தியாசம் உண்டு. ஐயோ! இயேசுவைக் காணோம் கிறிஸ்து கூடயிராத ஜீவியம் என்ன ஜீவியம்? அவர் கூடயிராத வேலைகள் என்ன வேலைகள்? அவரோடுள்ள ஐக்கியத்தை இழந்தோம். ஆதி அன்பு ஒழிந்தது. அவர் நம்மோடு பேசக்காணோம். நாம் அவரோடு பேசக்காணோம். அவர் சமுகத்தால் கிடைக்கக்கூடிய சந்தோஷத்தையும் வல்லமையையும் இழந்தோம். அப்படியிருந்தும் அவர் கூடயிருப்பதுபோல் எண்ணிக் கொள்ளுகிறோம்

எண்ணிக்கொள்வது அனுபவமல்ல. இது உத்தேசமேயன்றி நிச்சயம் அல்ல.

யோசேப்பும் மரியாளும் கிறிஸ்து இல்லாத பிரயாணம் வீண் பிரயாணம் என்று கண்டார்கள். அவரில்லாமல் முன்செல்ல முடியாதென்றும் அறிந்தார்கள். அவர்கள் ஒருநாள் பிரயாணம் போனது அவர்களுக்குக் கொஞ்சமும் இலாபமில்லை. அந்தப் பிரயாணம் வீண் அலுப்பும் ஆயாசமுமாகத் தீர்ந்தது. கிறிஸ்து நம்மோடில்லாதிருந்தும் நாம் வழக்கம்போல் பல கடமைகளைச் செய்துகொண்டு போவோமானால் அனைத்தும் வீணாகும் என்பது நிச்சயம் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்றார். அவர் நம்மிலும் நாம் அவரிலும் நிலைத்திராவிட்டால் நாம் ஒன்றுமில்லை.

இன்று அவரைக் கண்டோமா? அவரோடு பேசினோமா? அவர் நம்மோடிருக்கும்படி கேட்டோமா? அவர் நம்மோடிருக்கிறார் என்கிற நிச்சயம் உண்டா? அவர் சமுகம் நம்மைத் தேற்றுகிறதா? நமது ஊழியம் ஆசீர்வதிக்கப்படுகிறதா? இல்லையென்றால் முன் செல்வதில் பிரயோஜனமில்லை. நாம் சுயபலத்தில் செய்கிற முயற்சிகள் யாவும் செத்த கிரியைகள் ஆகும். பிரயாணத்தை நிறுத்தவேண்டியது. குற்றத்தை அறிக்கையிடவேண்டியது. அருமை இரட்சகரை வாஞ்சையோடு தேடவேண்டியது. உத்தேச ஜீவியம் உதவாது. கப்பலோட்டி உத்தேசத்தில் பிரயாணம் செய்கிறவன் அல்ல. வியாபாரி உத்தேசத்தில் காரியங்களை நடப்பிக்கிறவன் அல்ல. நிச்சயமற்ற காரியங்கள் மோசமாய் முடியும். ஆவிக்குரிய ஜீவியத்தில் கண்டுகொள்ளாமலிருப்பது யாவற்றிலும் மோசம். எல்லாம் சரியாயிருக்கும் என்று நினைத்துக்கொள்வதினால் சரியாயிருக்காது. மனுஷருக்கு நமது ஜீவியம் எப்படியிருந்தாலும், தேவ பார்வையில் அது எப்படி என்று விசாரிக்க வேண்டியது அவசியம். யோசேப்பையும் மரியாளையும் புகழ்ந்து பேசின பிரயாணக்காரர், இழந்துபோன பிள்ளையைக் கொடுக்க மாட்டார்கள். இழந்துபோனவர்களே பிள்ளையைத் தேடவேண்டும். கிறிஸ்துவை இழந்துபோனது மெய்யானால் அது நமக்கே முதலாவது தெரியும். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவோடு சஞ்சரிக்கும் தேவனுடைய பிள்ளைகளும் அதைச் சீக்கிரத்தில் கண்டுகொள்ளுவார்கள்.

அவர்கள் பிள்ளையை இழந்துபோனதற்கு வேறு காரணமும் உண்டு. அவர்கள் முந்திய அனுபவத்தை நம்பி மோசம்போனதுமாத்திரமல்ல. பிள்ளையைப்பற்றி அவர்களுக்கு இருந்த **அறிவு** இன்னொரு காரணம் இயேசுவுக்கு இப்பொழுது வயது பன்னிரண்டு. யூதருக்குள் பன்னிருபிராயம் முக்கியமானது.

மோசே பன்னிரு பிராயத்தில் எகிப்தியருடைய சாஸ்திரங்களைக் கற்றுத் தேறினார். சாமுவேல் பன்னிரு பிராயத்தில் தீர்க்கதரிசியாக தேவசத்தம் கேட்டார். சாலொமோன் பன்னிரு பிராயத்தில் சொன்ன தீர்ப்பினால் தன் ஞானத்தை வெளிப்படுத்தினார். யோசியா பன்னிரு பிராயத்தில் தேச சீர்திருத்தத்தை உண்டாக்கினார். யூதப்பையன் பன்னிரண்டாவது வயதில் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது ரபிமார் கட்டளையும் யூதர்களுடைய வழக்கமுமாயிருந்தன. பன்னிரண்டு வயதுக்கு வந்த பையன்கள் தங்கள் பெற்றோரின் கட்டுக்காவலுக்கு நீங்கி ஒருவித சுயாதீனத்தை அடைகிறபடியால், அவர்களை அடிமைகளாக விற்கக்கூடாது. இந்த வயதில் அவன் வேதப்பிரமாணத்தின் மகன் என்று அழைக்கப்படுவான். இதுவரை சின்னவன் என்று அழைக்கப்பட்ட அவன், இதுமுதல் மனுஷன் என்று எண்ணப்படுவான். இதுவரை அவன் ஆத்தும காரியங்களில் விளையாட்டுப்புத்தியாயிருந்தாலும், இனிமேல் ஆவிக்குரிய விஷயங்களில் அவன் சிரத்தையெடுக்கவேண்டும். இவைமாத்திரமல்ல, அவர்களுடைய வயது வளருகிறதுபோலவே அவர்கள் கடமைகளும் வளரும். எப்படியென்றால், ஐந்தில் அவர்கள் வேதம் கற்றுக்கொள்ளவேண்டும். பத்தில் மிஷ்னாவும், பதிமூன்றில் தல்மூதும் படிக்கவேண்டும். பதினெட்டில் கலியாணம் செய்யவேண்டும். இருபதில் பொருள் சம்பாதிக்க வேண்டும். முப்பதில் பலசாலியாகவேண்டும். நாற்பதில் ஞானமடையவேண்டும். இதுபோலவே கடைசிவரை பற்பல காரியங்களில் வளரவேண்டும். இவைகளைக் கவனிக்கும்போது யூதர்கள் தங்கள் குடும்ப ஒழுக்கங்களில் வெகு திட்டவட்ட முள்ளவர்கள் என்பது தெரிகிறது.

கிறிஸ்துவுக்குப் பன்னிரு பிராயமானதால் அவர் இலேசாய்த் தப்பிப் போகமாட்டாரென்று அவர்கள் நினைத்தார்கள். இதுவரை வீட்டில் அவர் வளர்ந்த விதத்தை அவர்கள் அறியாதவர்கள் அல்ல. அதிகக் கீழ்ப்படிதலும் சகல சற்குணங்களும் நிறைந்த பிள்ளை. துஷ்டரோடு சேர்ந்து காணாமற்போகமாட்டார். ஊருக்குத் திரும்பும்போது கூடவே வருவார் என்று எண்ணிகொண்டார்கள். தங்கள் அருமையான பிள்ளையைப்பற்றிய அறிவே அவர்கள் இவ்வாறு எண்ணிக் கொண்டதற்குக் காரணம். பிரயாணிகள் பல பவுஞ்சுகளாகப் போவார்கள். விருத்தாப்பியர் கூட்டம், தாய்மார் கூட்டம், வாலிபர் கூட்டம், வாலிபப் பெண்கள் கூட்டம், சிறுவர் கூட்டம் இவ்வாறு பல கூட்டங்களாகப் பிரயாணம் செய்வது வழக்கம். பிள்ளையாகிய இயேசுவும் தம்மைப்போன்ற பையன்களோடு வருவார் என்பது அவர்கள் உத்தேசம். தங்கள் பிள்ளையைப்பற்றி அவர்கள் நன்றாய் அறிந்திருந்ததால் இவ்வாறு நினைத்துக்

கொண்டது ஒருவிதத்தில் சரிதான். ஆனாலும் அவர்கள் நினைத்தபடி காரியம் வாய்க்கவில்லை. எருசலேமைவிட்டுத் திரும்பும்போது அவர்கள் அவரைப் பார்க்கவில்லை. அவர்கள் அவரோடு அன்று பேசவில்லை. அவர் பிரயாணக்காரரோடு வருவதையும் அவர்கள் காணவில்லை. அப்படியிருக்க, கூட்டத்தில் இருப்பார் என்று எப்படி நினைத்துக்கொள்ளலாம்? அறிவு அனுபவமல்ல.

கிறிஸ்துவைப்பற்றிய அறிவு நல்லது. அவரை அறிகிற அறிவில் நாம் வளரவேண்டியதே. ஆனால் அந்த அறிவு எப்படிப்பட்டது? கிறிஸ்துவும் நாமும் ஒன்றாய்ச் சஞ்சரிக்கும்படியான அறிவோ? அல்லது கிறிஸ்து நம்மோடு இல்லாத அறிவோ? அவரையும் நம்மையும் ஒன்றாய் இணைக்கிற ஆவியானவரின் அறிவோ? அல்லது அவருக்கும் நமக்கும் சம்பந்தமில்லாத புஸ்தக அறிவோ? பொதுவான அறிவு வேதாகமத்திலிருந்தும் பல புஸ்தகங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கலாம். கிறிஸ்துவைப்பற்றிய அறிவு இருந்தும் நமக்கு அனுபவமில்லாதிருக்கக்கூடும். அனுபவமில்லாத அறிவு இறுமாப்பை உண்டாக்கும். குடியின் கேட்டை ஒருவன் அறிந்திருப்பதாலே குடியை விட்டானா? பொருளைப்பற்றிய அறிவே ஒருவனை ஐசுவரியவனாக்குமா? இரட்சிப்பைப் போதித்துக்கொண்டே ஒருவன் இரட்சிக்கப்படாதிருக்கலாம். பாவத்தின் பயங்கரத்தைக் கூறிக்கொண்டே பாவஞ் செய்யலாம். மறுபிறப்பு நீதிமானாகுதல், ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல், பரிசுத்தமாகுதல், மகிமைப்படுதல் முதலான சத்தியங்களை வேத சாஸ்திரத்திறமையுடன் பேசத் தெரிந்தபோதிலும் நமது ஜீவியம் கொஞ்சமும் மாறாதிருக்கக்கூடுமே. இதைப்போல் பரிதாபம் வேறெதுவுமில்லை. இவ்விதமான ஊழியத்தைப்போல் மோசமானது வேறேதுமில்லை. அறிவையும் அனுபவத்தையும் நாம் குழப்பாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.

கிறிஸ்துவைப்பற்றி நாம் அறிந்திருப்பதால் கிறிஸ்து நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமல்ல. கிறிஸ்துவும் நாமும் ஒன்றாய் ஜீவிப்பதே அவரை அறிந்திருக்கிற மெய்யான அறிவு. நமது அறிவை நமக்கு ஆசீர்வாதமாக்குகிறவர் அவரே. அவர் நம்மோடிருப்பது மெய்யானால் நமது ஜீவியம் முழுவதும் மாறும். நமது ஊழியத்தில் வல்லமையும் ஆசீர்வாதமும் காணப்படும். பிள்ளையை நாம் காணாவிட்டால் என்ன? அவர் கூடயிருப்பதைப் பார்க்காவிட்டால் என்ன? அவரைப்பற்றி நாம் அறிந்திருப்பதே போதாதா என்று அவர்கள் தங்களைத் தேற்றிக்கொள்ளவில்லை. அந்த நாள் சூரியன் அஸ்தமித்து அந்தகாரம் உண்டானதுபோலவே, அவர்கள் இருதயத்திலும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒளியை இழந்தபின் வெளிச்சமேது?

அவரைக் காணாமல் முன் நடக்க அவர்களுக்குக் கால் வரவில்லை. அதே துயரத்தை ஆண்டவர் நமக்கு தருவாராக.

அவர்கள் இயேசுவை இழந்ததற்கு வேறொரு காரணமும் உண்டு. **இனத்தார் ஜனத்தாருடன்** கூடிச் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு பிரயாணம் செய்ததில் தங்கள் அருமைப் பிள்ளையை மறந்துபோனார்கள். பண்டிகை என்றால் பண்டிகைதான். ஊராரோடும் உற்றார் உறவினரோடும் பிரயாணம் செய்வது சந்தோஷமே. எருசலேமுக்குப் போகும்போது பண்டிகையைப் பற்றிய பேச்சு. ஊருக்குத் திரும்பும்போது பண்டிகையில் நடந்த காரியங்களைப்பற்றிய பேச்சு. முதியோர் வாகனங்கள் மீதேறிச் செல்வார்கள். வாலிபர் கைகளில் கோல்கள் பிடித்து சாமான்கள் ஏற்றிய மிருகங்களை நடத்துவார்கள். பிள்ளைகள் கைத்தாளங்கள் போட்டுப் பாட்டுகள் பாடிக்கொண்டு நடப்பார்கள். வழியில் கனிவர்க்கங்கள் புசிப்பதும், ஊற்றுகளில் தண்ணீர் குடிப்பதுமாயிருக்கும். மெய்யாகவே இந்தப் பிரயாணம் மனமகிழ்ச்சிக்குரியது. இவ்வளவு சந்தோஷத்தின் நடுவில் தங்கள் பிள்ளையை இவர்கள் மறந்தார்கள்.

இதே சோதனை நமக்கும் உண்டு. நாம் எப்பொழுதும் தனித்திருப்பது நல்லதல்ல. பரிசுத்தவான்களின் ஐக்கியம் நமக்கு அவசியம். தேவனுடைய பிள்ளைகளோடு நாம் சம்பாஷிக்க வேண்டும். ஆவிக்குரிய கூட்டங்களில் பங்கெடுக்கவேண்டும். அநேக நல்ல காரியங்களில் முயற்சிசெய்ய வேண்டும். ஆனால் இந்தப் புறம்பான சந்தோஷங்களால் மேற்கொள்ளப்பட்டு, நமது ஜீவனாகிய கிறிஸ்துவை இழந்து போகாதபடி நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இரட்சண்ய சேனையில் சிலகாலம் இருந்த ஒருவர் தன் ஊருக்கு வந்தது முதல் தனக்குச் சந்தோஷமில்லை என்றார். ஏன் என்று கேட்க, நான் சேனையிலிருந்தபோது எப்போதும் பாடுவோம், எப்போதும் ஜெபிப்போம், எப்போதும் சாட்சி சொல்லுவோம், எவ்வளவோ உற்சாகமாயிருக்கும், இப்போது அந்த உற்சாகமெல்லாம் போய்விட்டதென்றார். என்ன பரிதாபம்! கிறிஸ்து அல்லவா கிறிஸ்து மார்க்கம். அவரும் நாமும் ஒன்றாய் ஜீவிப்பதல்லவோ கிறிஸ்தவ ஜீவியம்? அவர் நமக்குள்ளிருப்பது மெய்யானால் நமது ஆவிக்குச் சோர்வேது? நாம் தேவனுடைய பிள்ளைகளோடிருந்தாலும் தனித்திருந்தாலும், கிறிஸ்து நம்மோடிருப்பது மெய்யானால் நமக்குச் சோர்வேது? அநேகருடைய கிறிஸ்துமார்க்கம் புறம்பான உற்சாகங்களில் நிற்கிறது. ஆவிக்குரிய கூட்டங்கள், பாட்டுக் கூட்டங்கள், பக்தி முயற்சிகள், பக்தர் சம்பாஷணைகள் சமயாசமயங்களில் நமக்கு வேண்டியதே. ஆகிலும் அவைகளைப் பிரதானப்படுத்தி ஆண்டவரை இழந்துவிடலாமா? அவைகள் எவ்வளவு அருமையாயிருந்தாலும் கிறிஸ்துவுக்கு ஈடாகாது.

யோசேப்பும் மரியாளும் சங்கீத முழக்கத்தோடும், இன ஜனத்தாருடன் சந்தோஷமான சம்பாஷணையோடும், உற்சாகமாய் வழிநடந்து ஒருநாள் பிரயாணம் வந்துவிட்டார்கள். பிள்ளை காணாமற்போனது அன்று மாலை மயங்கும் வேளையில்தான் தெரியும். அப்போதுண்டான சஞ்சலம் கொஞ்சமல்ல. பிள்ளை போனால் போகட்டும், இந்தக் கூட்டத்தின் சந்தோஷமும் பாட்டுகளின் இனிமையுமே நமக்குப் போதும், இப்படியே பிரயாணம்செய்து ஊர்போய்ச் சேரலாம் என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் சந்தோஷம் நிமிஷத்தில் சஞ்சலமாயிற்று. அவர்களுடைய உற்சாகம் உபத்திரவமாயிற்று. அவர்களுடைய பூரிப்பு புலம்பலாயிற்று. சகலமும் அந்தகாரப்பட்டன. காரணம் என்ன? இயேசு இல்லை. ஆண்டவர் தங்களோடு இல்லாதிருந்தும் கூட்டங்களாலும் பல வேலைகளாலும் தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறவர்களுக்கு இது எச்சரிக்கை! தேவனுடைய பிள்ளைகளோடுள்ள சகவாசம் கிறிஸ்துவையும் நம்மையும் பிரித்து விடாதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நாம் செய்கிற ஊழியமே ஆண்டவரையும் நம்மையும் பிரித்து விடாதபடி விழிப்பாயிருக்க வேண்டும். இப்படிச்சொல்வது விபரீதமாய்த் தோன்றலாம். உண்மையில் நடக்கிற காரியம் அதுதான். ''என்னைத் திராட்சத் தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள், என் சொந்த திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை'' என்றபடி, நாம் செய்கிற வேலைகளே நம்மையும் நமது ஆத்ம நேசரையும் பிரிக்கக்கூடும் *(உன்.1:6)*. மற்றக்காரியங்களில் நாம் முயற்சியாயிருக்கும்போதே நமது சொந்த ஜீவியத்தை அசட்டை செய்ய நேரிடும். கிறிஸ்து நமக்குள் இருப்பதுதான் பிரதானம். அவர் நம்மோடிருப்பது நிச்சயமானால் நாம் செய்யும் சகல காரியங்களும் ஆசீர்வாதம்பெறும். எல்லா முயற்சிகளும் அவரிலிருந்தே புறப்படவேண்டும். அவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியத்தின் மூலமாகவே தேவனுடைய பிள்ளைகளோடு நாம் ஐக்கியமாயிருக்கக்கூடும். அவரை இழந்தோமானால் சகலமும் வீணாகும்.

காணாமற்போன பிள்ளையை அவர்கள் கண்டடைந்த தெப்படி? முதலாவது, பிள்ளை காணாமற்போய்விட்டதை துக்கத்தோடு **ஒத்துக்கொண்டார்கள்.** அதைப்பற்றி யாதொரு சந்தேகமும் இருந்ததில்லை. அவர்கள் சாக்குப்போக்குகள் சொல்லவில்லை. நாங்கள் என்னசெய்வோம்? பிள்ளை பிரயாணக்காரரோடு இருப்பாரென்று நினைத்திருந்தோம். அவர் வராமற்போனால் நாங்கள் என்னசெய்கிறது என்று அவர்கள் சொல்லவில்லை. பிள்ளை காணாமற்போனது தங்கள் தப்பிதமே என்று ஒத்துக்கொண்டார்கள். நாம் மரியம்மாளையே கேட்போம். அம்மா! அன்று பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டபோது

பிள்ளையைக் கண்டீர்களா? இல்லை. பிள்ளையை அழைத்தீர்களா? இல்லை. பிள்ளை பிரயாணக்காரரோடு வந்ததைப் பார்த்தீர்களா? இல்லை. என்ன செய்தீர்கள்? அவர் கூடவருவார் என்று **நினைத்துக்கொண்டோம்.** நாசரேத்திலிருந்து வந்தபோது அப்படித்தான் **நினைத்துக்கொண்டு** வந்தீர்களோ? இல்லை. பின்னை என்ன செய்தீர்கள்? பிள்ளையும் நாங்களும் ஒன்றாகச் சேர்ந்து வந்தோம். திரும்பும்போது ஏன் அப்படிச் செய்யவில்லை? ஐயோ, அதுதானே நாங்கள் செய்த மோசம். சிநேகிதர்களோடு பேசிக்கொண்டே ஒருநாள் பிரயாணமும் வந்துவிட்டோம். புத்தியைக் கடன்கொடுத்தோமே. ஐயோ, மகனைக் காணோமே என்று அவர்கள் புலம்பமாட்டார்களா? இப்பேர்ப்பட்ட கூட்டத்தில் பிள்ளையைக் காணோம் என்றால் பெற்ற தாய்க்கு எப்படியிருக்கும்? எல்லாரும் பிள்ளைகள், இயேசுவும் பிள்ளையா? மரியாள் அந்தக் குழந்தையைப் பெற்றது முதல் கண்மணியை எவ்வளவோ அருமையாக வளர்த்தார்களே. குழந்தையைக் கையிலிருந்து தரையில் விடச் சம்மதிக்க மாட்டார்களே. தனதுயிரைப்பார்க்கிலும் அருமையாய்ப் பேணினார்களே. தாயாருடைய இருதயம் பதைத்த பதைப்பு கொஞ்சமல்ல. ஆத்துமாவை **உருவும் பட்டயம்** அப்போதே தைத்தது போலிருந்தது. நாவு வரண்டு போயிற்று. கால்கள் தள்ளாடின. கண்ணீர் தாரைதாரையாக ஓடிற்று. அங்கே ஓடினார்கள். இங்கே ஓடினார்கள். இனஜனத்தாரைக் கேட்டார்கள். வாலிபப் பையன்களை விசாரித்தார்கள். அச்சமயத்தில் அவர்கள் உள்ளம் கலங்கினதை அறிந்தது யார்? பகவான்தான் துணைசெய்ய வேணும். இவ்வாறு அம்மாள் ஒரு பக்கம், யோசேப்பு ஒருபக்கம் தேடியும் பிள்ளையைக் காணாதபோது, ஐயோ, மகனைக்காணோமே என்று மகா துயரத்தோடு தங்கள் தப்பிதத்தை நினைத்துச் சஞ்சலப்பட்டார்கள்.

கிறிஸ்துவை இழந்துபோனவர்களிடத்தில் காணப்பட வேண்டிய முதல் குறிப்பு இதுவே. சாக்குப்போக்கு உதவாது. சீர்திருத்தம் ஆகாது. எல்லாம் சரியாயிருக்கும் என்பது கூடாது. புதிய தீர்மானமும் புதிய முயற்சிகளும் தகாது. ஆயிரங்காரியங்களைச் செய்தாலும் கிறிஸ்துவுக்கு அவைகள் ஈடாகாது. உள்ளதை உள்ளபடி ஒத்துக்கொள்ளவேண்டும். ஆ, என் அருமை இரட்சகரை இழந்தேனே. ஒரு காலத்தில் அவர் என்னோடிருந்ததுபோல் இப்பொழுது இல்லையே. என் பாவமல்லவோ அவரையும் என்னையும் பிரித்தது. அவர் என்கூட யில்லாதிருந்தும் இத்தனை தூரம் வந்து விட்டேனே. என் ஆண்டவர் இல்லாத ஜீவியம் என்ன ஜீவியம்? அவர் இல்லாத ஊழியம் என்ன ஊழியம்? நான் அவரை இழந்துபோனது நிச்சயம். நான் எப்படியாவது அவரைக் கண்டுபிடிக்கவேண்டும்.

நான் கிறிஸ்துவற்ற மனுஷனாயிருக்கிறேனே என்கிற துக்கத்தோடும் துயரத்தோடும் அவரைத் தேட வேண்டும். அவரைக்கண்டடைய வேறு வழியில்லை.

இரண்டாவது, அவர்கள் பிள்ளையைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் இனத்தார் ஜனத்தாரை **விட்டுப் பிரியவேண்டும்.** அவர்களோடு இதுவரை பிரயாணம் செய்தது சந்தோஷமே. அந்தச் சந்தோஷம் மகனைக் காணாததால் துக்கமாக மாறிற்று. இனி அவர்களைவிட்டுப் பிரியவேண்டும். அவர்கள் இவர்களோடுகூட வரமாட்டார்கள். தாங்கள் தனிமையாகப் புறப்பட்டுப் பிள்ளையைத் தேடவேண்டும். நாம் கிறிஸ்துவைத் திரும்பக் கண்டடைவதும் இதுபோலவே. இந்த நிலைமையிலேயே முன் நடக்காதபடி நிற்கவேண்டும். நமக்குச் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுத்த பலகாரியங்களை விட்டுத் திரும்பவேண்டும். கண்ணைப்போன்ற, கையைப்போன்ற அருமையான காரியங்கள் எதிரிட்டுவந்தாலும் இடங்கொடுக்கக் கூடாது. நமக்கு இன்பமானவைகள் எவைகளோ, நமக்கு இலாபமாய்த் தோன்றினவைகள் எவைகளோ அவைகளை இரட்சகருக்காக நஷ்டமென்று எண்ணவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் கூட்டுறவு நமக்கு ஒருவிதமான உற்சாகத்தைக் கொடுத்திருக்கலாம். கர்த்தரைப் பிரத்தியட்சமாய்க் கண்டடைய வேண்டுமானால், அவர்களையும் விட்டுப்பிரிந்து அவரைத் தேடவேண்டும்.

யோனத்தானுக்கும் தாவீதுக்கும் பிராண சிநேகம். இருவரும் பிரிந்திருக்கச் சகியார்கள். சவுல் தாவீதைப் பகைத்ததினால் யோனத்தான் தாவீதோடு பகிரங்கமாயிருக்கக் கூடவில்லை. தாவீதைக்காண யோனத்தானுக்கு மிகுந்த ஆசை. இதற்காகத் தன் வீட்டையும், வேலைக்காரரையும், தகப்பனையும் விட்டு, மறைவாக வனாந்தரமார்க்கம் சென்று, அங்கே தாவீதைக்கண்டு, தழுவி முத்தமிட்டு, வெகுநேரம் அருமையாய்ச் சம்பாஷித்துத் திரும்புவான். அன்பர் இருவருடைய கனிவான சம்பாஷணைக்கு மூன்றாம் ஆள் ஒரு தடை. அன்பின் சமுத்திரமாகிய இயேசு சுவாமியை நாம் மனரம்மியமாகக் கண்டு தரிசிக்கவேண்டுமானால், தனித்து அவரிடம் போகவேண்டும், பிரயாணக் காரரோடு போவது சரியல்ல. குடும்ப ஜெபம், கூட்ட ஜெபம், எழுப்புதல் கூட்டங்கள், ஆராதனைகள் நமக்குப் பிரியம். அங்கே நாம் எல்லாரோடும் சேர்ந்து தேவனைத் தொழுது கொள்ளுகிறோம். கிறிஸ்துவின் அன்பர்கள் இவைகளிலே திருப்தியடையமாட்டார்கள். அவரைத் தனித்துத் தரிசிக்க நாடுவார்கள். பொதுச் சிநேகம் அல்ல, தனிச் சிநேகம். அவருடைய பூரண அன்பைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் எல்லாரையும் விட்டு அந்தரங்கமாகப்

புறப்பட்டுப் போகவேண்டியது. இவ்விதமான ஐக்கியத்தில் வேறு யாருக்கும் இடமில்லை. புருஷனும் மனைவியும் எவ்வளவு அன்பர்களாயிருந்தாலும், புருஷனுக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள இந்த அந்தரங்க சம்பாஷணையில் மனைவிக்கு இடமில்லை. அதுபோலவே புருஷனுக்கும் இடமில்லை. கிறிஸ்து ஒவ்வொருவருக்கும் தனித்த இரட்சகர். நாம் அவரைக் கண்டு நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால், எல்லாரையும் விட்டு முழுவாஞ்சையுடன் அவரைத் தேடவேண்டும்.

மூன்றாவது, யோசேப்பும் மரியம்மாளும் பிள்ளையைக் கண்டடைய வேண்டுமானால் அவரை எங்கே இழந்தார்களோ அங்கே போய்த் தேடவேண்டும். "பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்". எருசலேமிலே காணாமற்போன பிள்ளையை ஒரு நாள் பிரயாணம்வந்து தேடுவது பிசகு. வழியிலே தேடுவதும் வீண். எருசலேமிலேயே அவரைக் காணவேண்டும். இருவரும் எருசலேமுக்குத் திரும்பினார்கள். அதுவோ கலகமுள்ள காலம். அர்கெலாயுவின் அக்கிரம ஆளுகையினிமித்தம் ரோமச் சக்கரவர்த்தி அவனை உத்தியோகத்திலிருந்து தள்ளிவிட்டான். அவன் ஆண்டு வந்த மாகாணத்தை ரோமர் கைப்பற்றிக் கொண்டனர். யூதர்மேல் கொடிய வரியும் ஏற்பட்டது. ஜனங்கள் அதற்காக முறுமுறுத்தார்கள். யூதாஸ் சாதோக்கு என்னும் இருவர் யூதஜனங்களைக் கலகத்துக்கு எழுப்பிவிட்டார்கள். தேசமெங்கும் பட்டயமும் நெருப்புமாயிருந்தன. இப்படிப்பட்ட கலகமுள்ள சமயத்தில், தங்களுக்குத் துணையாயிருந்த பிரயாணிகளையும் விட்டுப்பிரிந்து, தனிமையாய்ப் பட்டணத்துக்குள் போவது அச்சமாயிருந்தது. அதுமாத்திரமல்ல, இவ்வாறு வெட்டும் குத்துமாயிருந்த காலத்தில், ஆட்டுக் குட்டியைப்போல் சாந்தமான ஏழை மகன், துஷ்டர் கையில் அகப்பட்டு மடிந்தாரோ என்ற பெருந்துயரம் அவர்கள் மனதைப் பலமாய் வாதித்திருக்கும். என்ன செய்கிறது? மகனைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் திரும்பிப் போகத்தான் வேண்டும்.

நாம் கிறிஸ்துவைக் கண்டடைய வேண்டிய இடமும் அதுதான். பிரயாணிகள், வண்டிக்காரர் ஏதாவது சாமானை வழியில் தவறவிட்டால், வண்டியை நிறுத்தி, பின்னாக ஓடி, அதைத்தேடி எடுத்துக்கொண்டு திரும்புவார்கள். நாம் எந்த இடத்தில் கிறிஸ்துவை இழந்தோமோ அந்த இடத்துக்குத் திரும்பவேணும். எவ்வளவு காலத்துக்கு முன்னே, என்ன காரணத்தினாலே, எந்தப்பாவத்தாலே அவருடைய இன்பசமுகம் நமக்கு மறைந்ததென்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். ஆண்டவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியம் போய் சில வருஷங்களிருக்கலாம், சில மாதங்களிருக்கலாம், சில

நாட்களாகலாம். எங்கே அவரை இழந்தோமோ அங்கே போகவேண்டும். இது இடம் விட்டு இடம் போகிறதல்ல. நமது மனது பின்னாகத்திரும்பிப் போகவேண்டும். அவர் சமுகம் இல்லாத குறைவை பல வேலைகளைச் செய்து மறைக்கக்கூடாது. அவர் சத்தம் கேளாதிருக்கும்போது உடன் கிறிஸ்தவர்களோடு பேசி நம்மைத் தேற்றிக் கொள்ளக்கூடாது. முந்தின நாள்களின் சந்தோஷமும் வல்லமையும் இருதயத்தைவிட்டு அகன்றதை உணரவேண்டும். சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்று கிறிஸ்துவே. அவர் காணாமற்போகவே ஆசீர்வாதங்களும் காணாமற்போயின. காணாமற்போன இடத்துக்குப்போய் அவைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். யாக்கோபு பெனியேலில் தேவன் தன்னை ஆசீர்வதிக்கும்படி ஊக்கமாகப் போராடினார். இலேசில் அவர் ஆசீர்வதிக்கப்படவில்லை. இருபது வருஷக்காலச் சரித்திரம் கண்முன் வந்து நிற்கிறது. அவ்வழியாய் லாபான் வீட்டுக்குப் போனபோது யாக்கோபுக்கு வயது 70. திரும்பினபோது 90. இந்த இருபது வருஷத்தில் எவ்வளவு தந்திரங்கள், ஏமாற்றுதல், சுய ஆலோசனை, சுய நம்பிக்கை! இவை யாவற்றையும் அவர் உணரவேண்டும். பொழுது விடியுமளவும் கர்த்தர் யாக்கோபோடு போராடி, அவர் உடைந்த பாத்திரம்போல் நொறுங்கி விழுந்தபோது ஆசீர்வதித்தார். "நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை **நினைத்துத்திரும்பி** ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக" (வெளி. 2:5).

மூன்று நாளைக்குப் பின்பு பிள்ளையாகிய இயேசுவைத் தேவாலயத்தில் கண்டார்கள். மூன்றுநாள் என்பதை அவர்கள் எருசலேமை விட்டுப் பிரயாணம் செய்த நாள் ஒன்று, அவர்கள் எருசலேமுக்குத் திரும்பின நாள் இரண்டு, அவரைத் தேவாலயத்தில் கண்டநாள் மூன்று என்று கணக்கிடுவார் உண்டு. சிலர் அவர்கள் பிரயாணம்செய்த நாளைத்தள்ளி, திரும்பின நாள் ஒன்று, பட்டணத்தில் தேடின நாள் இரண்டு, ஆலயத்தில் கண்ட நாள் மூன்றென்று கணக்கிடுவதும் உண்டு. பிந்தின கணக்கின்படி பார்த்தால் நாலாம் நாளில் அவரைக் கண்டார்கள் என்றாகும். "மூன்று நாளைக்குப் **பின்பு**" என்பது இதற்கு ஒத்திருக்கிறது. காணாமற்போன கிறிஸ்துவை இவர்கள் மூன்று நாளைக்குப்பின் கண்டது, மரணத்தின் மூலமாய் அவரை இழந்து தவித்த சீஷர்கள் மூன்றாம் நாள் அவரைத் திரும்பக்கண்டது போலாகும்.

கீர்த்திபெற்ற வேதசாஸ்திரிகள் நடுவில் தங்கள் பிள்ளை உட்கார்ந்திருப்பதையும், அவர்கள் சொல்லுவதைக் கவனித்து அவர்களைப் பல கேள்விகள் கேட்பதையும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். எல்லாராலும் மகா கண்ணியமாக மதிக்கப்பட்ட எருசலேம் சாஸ்திரிகளைக் கிட்டி நெருங்க நாம்

எம்மாத்திரம் நாமோ நாசரேத்துக் கிராமத்திலுள்ள ஏழைகள். நமது ஏழை மகனுக்கு இவ்வளவு துணிவு எப்படி வந்ததென அவர்களுக்கு ஆச்சரியம் ஒருபக்கம்; அங்கலாய்ப்பு ஒருபக்கம். பிள்ளையைப்பார்த்துத் தாயார்: மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? உன் தகப்பனும் நானும் உன்னை விசாரத்தோடு தேடினோமே என்றார்கள். மரியாள் சொல்லைக்கொண்டே அவர் அவர்களை மறுகேள்வி கேட்டார். நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? இன்னும் நான் உங்களை முற்றிலும் விட்டுப்பிரிந்து ஜீவிக்கும் காலம் வரும்போது உங்களுக்கு என்னமாயிருக்கும்? நான் உலகத்துக்கு வந்தகாரியம் இன்னதென்று அறிந்திருந்தால் இவ்வளவு துயரப்பட்டிருக்க மாட்டீர்கள். உன் தகப்பனும் என்று பேசினீர்களே, நான் **என் தகப்பன்** காரியத்தில் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்று கேட்டார்.

"ஏன் என்னைத்தேடினீர்கள்?" என்பது அவர் சமுகம் அவர்களுக்கு வேண்டியதில்லை என்று அர்த்தமல்ல. அவர் தமது பிதாவின் காரியத்திலிருப்பதினாலேதான் அவருடைய இடைவிடாத சமுகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடும். இப்பொழுது என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்துக்கு ஏறிப்போகவில்லையென்று தம்மை வாஞ்சையோடு தேடின மகதலேனா மரியாளுக்குச் சொன்னதுபோலிருக்கிறது. தாயாரும் மகதலேனாளும் கிறிஸ்துவின் மாறாத சமுகத்தைப் பெற்றார்கள் என்பது நமக்குத்தெரியும். "என் பிதா" என்று பிள்ளை வேறொருவரைக் குறித்துப்பேசினது மரியாளுக்கு விளங்கவில்லை. **பிதா புத்திர** சம்பந்தத்தின் ஒளி பளிச்சென‌ப் பிரகாசிப்பதை இந்தச் சிறுவயதிலேயே காண்கிறோம். முப்பது வருஷகாலத்தில் அவர் வாயிலிருந்து புறப்பட்டு, நாம் அறியக்கூடிய வார்த்தைகள் இவ்வளவுதான். அவர் ஞானஸ்நானம் பெற்றபின்புதான் தம்மைக் **குமாரன்** என அறிந்தார் என்று சொல்லுவது அபத்தம். இவ்வார்த்தைகளின் கருத்து மரியாளுக்கு விளங்காமற் போனாலும், முன் தேவதூதன் சொன்னவாக்கையும், மேய்ப்பர் சொன்ன காரியங்களையும், சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து வந்து சொன்ன விசேஷங்களையும் மனதில் அடக்கிச் சிந்தனை செய்ததுபோலவே, இவைகளையும் மனதில் வைத்துக் கொண்டார்கள்.

பின்பு யோசேப்பும் மரியாளும் பிள்ளையுமாகச் சேர்ந்து எருசலேமை விட்டு நாசரேத்துக்குப் பிரயாணம் புறப்பட்டார்கள். பழைய பிரயாணம்தான், பழைய வழிதான், பழைய நாசரேத்துதான். ஆனால் கிறிஸ்து இல்லாமல் அவர்கள் பிரயாணம் செய்ததற்கும், இப்போது அவரோடுகூடப் பிரயாணம்

செய்வதற்கும் எவ்வளவு வித்தியாசம்! இப்போது அவர் பிரயாணக்காரரின் கூட்டத்தில் இருப்பார் என்கிற **உத்தேசமில்லை.** அவர் தங்களோடு கூடயிருக்கும் **நிச்சயத்தோடு** நடக்கிறார்கள். அவர் திருமுகத்தை அடிக்கடி பார்க்கிறார்கள். அவர் பேசக் கேட்கிறார்கள். அவரோடு பேசுகிறார்கள். ஆலயத்தில் சாஸ்திரிகள் நடுவில் நடந்த காரியங்களை அவர் சொல்லக்கேட்டு ஆச்சரியப்படுகிறார்கள். தாயார் அருமைப்பிள்ளையின் கையைப்பிடித்து மகிழ்ச்சியோடு நடக்கிறார்கள். அவரில்லாதபோது உண்டான சஞ்சலமும் தவிப்பும் அகன்றுபோயின. ஆ! இந்தப் பிரயாணம் எவ்வளவு இன்பமானது! நாசரேத்துக்குப்போய் வீட்டில் பிரவேசிக்கிறார்கள். முந்தின வீடுதான், முந்தின வேலைத்தான், முந்தின கவலைகள்தான். **திருக்குமாரன்** கூடயிருக்கும்போது குறைவேது? உன்னதத்திலிருந்து வந்த அருணோதயம் பிரகாசிக்கும்போது அந்தகாரம் ஏது? அம்மாள் பிள்ளையை இழந்துபோன அந்த நாள்களை ஒருபோதும் மறந்திருக்கமாட்டார்கள். அந்த நாலுநாட்களும் அவர்களுக்கு அந்தகார நாள்கள் அல்லவா? அவரைப்பார்க்கவும், பேசவும், அவர் சொல்லும் காரியங்களைக் கேட்கவும்கூடிய சிலாக்கியத்தை அந்த நாள்களில் இழந்தார்களே.

நம்மில் அநேகர் மூன்று, நான்கு நாள்கள் அல்ல. எத்தனையோ நாள்களாக அவரை இழந்துபோயிருக்கிறோமே. அதினாலே நமது ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் உண்டான நஷ்டம் கொஞ்சமல்ல. அவரில் நிலைத்திராத கொடிகளில் கனிகள் ஏது? அவைகள் நிச்சயமாகவே வாடி உலர்ந்துபோகும். அவர் நம்மோடிருந்து நம்மை அவர் நடத்துவதும், நம்மோடிராததும் நமக்குத தெரியாதா? அவர் கூடயில்லாதிருந்தும் வழக்கம்போல் வேலைகளைச் செய்து கொண்டுபோவது மாயம். அவைகள் நமக்கு ஒருவகையான திருப்தியைக் கொடுக்கலாம். மற்றவர்களுக்கு ஊழியம்போல் தோன்றலாம். தேவ அக்கினி அவைகளை எரித்துச் சாம்பலாக்கும் என்பது நிச்சயம். இப்பொழுதே அவரைத் தேடுவோமாக. அவர் திருப்பாதத்தில் விழுந்து குறைவை அறிக்கையிடுவோமாக. என் ஆண்டவரே என்னோடு வாரும், நிமிஷந்தோறும் எனக்குள்ளும் என்னோடும் இரும் என்று கெஞ்சுவோமாக. கிருபை நிறைந்த இரட்சகர் நமது பாவங்களை மன்னிப்பார். நம்மோடு கூடயிருப்பார். அவருக்கும் நமக்கும் ஐக்கியம் உண்டாகும். நாம் அவரோடு பேசுவோம். அவர் நம்மோடு பேசுவார். கிறிஸ்து நம்மோடிருக்கிறார் என்கிற **நிச்சயம்** உண்டாகும். அவரோடுகூட நமது நாசரேத்துக்குப் பிரயாணம் செய்வோம். அங்கே அநேக கஷ்டங்களும் சோதனைகளும் நமக்கு நேரிடலாம். தேவகுமாரனுடைய சமுகம் நமக்கு ஆறுதலையும் ஜெயத்தையும் நிச்சயமாகவே கொடுக்கும். சகல சிறிய காரியங்களிலும் நாம்

அவருக்குப் பிரியமாக நடக்கப் பெலனடைவோம். இவ்வாறு அவரும் நாமும் ஒன்றாய் ஜீவிக்கும்போது நமது வார்த்தைகள், எழுத்துகள், ஜெபங்கள், பிரசங்கங்கள், பற்பல முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இதுவே கிறிஸ்தவ ஜீவியம்! இதுவே கிறிஸ்தவ ஊழியம் !

5

மறைவான காலம்

The Hidden Period

நீர்வளமும் நிலவளமும் பொருந்திய காரணத்தால், பாலும் தேனும் ஓடுகின்ற தேசம் எனப்பேர்பெற்ற, **பலஸ்தீனா**வென்னும் பரிசுத்த பூமி ஆசியாவுக்கு மேற்கேயுள்ளது. அதன் நீளம் நூற்று எண்பது மைல்: அகலம் நாற்பது மைல். இத்தேசத்தின் தென்பாகத்தில் யூதேயாவும், வடபாகத்தில் கலிலேயாவும், நடுவில் சமாரியாவும் உண்டு. கலிலேயா நாட்டில் பசுமையான மலைகளும், செழிப்பான பள்ளத்தாக்குகளும், சிற்றாறுகளும் நீருற்றுகளும், கோதுமை வயல்களும், திராட்சத் தோட்டங்களும், ஒலிவ மரங்களும், அத்தி மரங்களும், பேரீச்ச மரங்களும், வாதுமை மரங்களும், மாதுளைகளும், கிச்சிலி மரங்களும், அழகும் வாசனையும் நிறைந்த ரோஜாலீலி முதலான புஷ்ப ஜாதிகளும் ஏராளம். வருஷத்தில் பத்து மாதங்களுக்கு மேலாகப் பழ வகைகள் தாராளம் கிடைக்கும்.

தேசத்தின் செழிப்பினிமித்தம் ஜனத்தொகை பெருகிற்று. இருநூற்று நான்கு கிராமங்களும் பட்டணங்களும் இருந்ததாகக் கணக்குண்டு. ஜனங்கள் உற்சாகமாய் நிலத்தில் வேலை செய்து நற்பலனை அடைந்தார்கள். மீன்படவர் திபேரியாக் கடலில் மீன் பிடித்தார்கள். வியாபாரிகள் ஏற்றுமதி இறக்குமதி செய்தார்கள். புறதேசத்தாரும் திரளாகவந்து குடியேறி யிருந்தார்கள். இந்நாடு வடகலிலேயா தென்கலிலேயா என இருபாகமுள்ளது. தென்கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரில் ஆண்டவர் தமது தாயாரோடும் யோசேப்போடும் முப்பது வயதுவரை சஞ்சரித்தார். பக்கத்து மலைகளிலுள்ள சுண்ணாம்புக் கற்களால் வீடுகள் கட்டப்பெற்று, நாசரேத் பார்க்கிறவர்களுக்கு வெண்மையாகத் தோன்றும். அது பரதீஸ் என்று சொல்லும்படியான மிகுந்த செழிப்புள்ள கிராமம். ஜனங்களோ நல்லவர்கள் அல்ல. பிற்காலத்தில் கிறிஸ்து அவர்கள் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோதே மூர்க்க வெறிகொண்டு அவரைப் பிடித்து மலையிலிருந்து தள்ளிக் கொன்றுபோடப் புறப்பட்டார்கள்.

யூதேயா நாட்டில் எருசலேம் பட்டணமும், சிறந்த தேவாலயமும், சனதரீம் சங்கமும், சாஸ்திரிமார் கூட்டமும், ரபிமார் கல்விச்சாலைகளும் உண்டு. செல்வமும் கல்வியும் நாகரீகமும் உள்ளவர்கள் எருசலேம் நகரவாசிகளாயிருந்தார்கள். பட்டணத்தார் நாட்டுப்புறத்தாரைப் பரியாசம் செய்வதுபோல், சாதாரண ஜனங்களான கலிலேயா நாட்டாரை யூதேயாவிலுள்ளவர்கள் பரியாசம் செய்வார்கள். கலிலேயர் எருசலேம் பண்டிகைக்கு வந்தால் அவர்களை ஏறத்தாழப் பார்க்கிறதும், அவர்கள் உடைநடை பாவனைகளையும் பேச்சையும் குறித்துப் பரியாசம்பண்ணுவதும் வழக்கம். கலிலேயாவிலிருந்தா தீர்க்கதரிசி எழும்புவான் என்று நிந்தையாகப் பேசினவர்களும் இவர்களே. கிறிஸ்து யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்ததை இவர்கள் அறியார்கள். எலியா, எலிசா, யோனா, ஓசியா, நாகூம் முதலானவர்களும், அன்னாள் என்னும் தீர்க்கதரிசியும், பவுல் அப்போஸ்தலனுடைய பெற்றோரும் கலிலேயா நாட்டார் என்பதை இவர்கள் உணரவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா தமது வாழ்வில் மிகுதியான காலத்தைக் கழித்ததும் கலிலேயாவே.

அருள் நாதரின் ஜீவியத்தில் பதினொன்றில் பத்துப்பாகம் நமக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. எருசலேம் ஆலயத்தில் அவர் தமது தாயாரிடம் சொன்ன சுருக்கமான வார்த்தைகளைத் தவிர, அக்காலத்தில் அவர் பேசின வேறெதுவும் நமக்குச் சொல்லப்படவில்லை. ஆகையால், அவர் யாதொன்றும் பேசாமலும், யாதொன்றும் செய்யாமலும் ஊமையாயிருந்திருப்பார் என்று நினைக்கத் தகுமோ? அந்நாள்களின் விசேஷம் நமக்கு அறிவிக்கப்படாதபடியால் அவைகளை **மறைவான காலம்** என்றோம். பிரசித்திபெற்ற மனுஷருடைய ஜீவியத்தில் அவர்கள் முதிர்வயதின் சரித்திரத்தைப் பார்க்கிலும் இளமைப்பிராயத்தில் அவர்கள் எப்படியிருந்திருப்பார்கள் என்று நாம் அறியநாடுவது இயல்பு. அதுபோலவே, இவ்வதிசய பிரபுவின் மறைவான காலத்தைக்குறித்து அறிய, யார் ஆசைப் படாதிருக்கலாம்? அவர் இளமையில் எப்படி வளர்ந்திருப்பார், வீட்டில் எப்படி நடந்திருப்பார், எப்படிப் பேசியிருப்பார், எவைகளைச் செய்திருப்பார், சிறுவரோடும் பெரியவர்களோடும் எப்படி உறவாடியிருப்பார் என்பதை அறிய நமக்கு ஆசையுண்டு. இப்பெருமானின் மறைவான காலத்தைக் குறித்து பக்தர்களும் அவபக்தர்களும் ஆராய்ச்சி செய்தது ஆச்சரியமல்ல. அவரைக் குற்றப்படுத்த விரும்புகிறவர்கள், அந்தமறைவான காலத்தில், அவரிடத்தில் ஏன் தவறுதல்கள் காணப்பட்டிருக்கக்கூடாது என்றும், மனுஷனாகப் பிறந்தவர் பாவமற்ற பரிசுத்தராயிருப்பது எப்படி என்று பேசுகிறார்கள். அவரை மேன்மைப்படுத்த

விரும்பின மற்றவர்களோ, தாங்கள் அறியாத காரியங்களில் துணிவாக நுழைந்து, அக்காலத்தில் அவர் அநேக விபரீதமான வேடிக்கை அற்புதங்களைச் செய்ததாகக் கூறுகிறார்கள். தண்ணீரைத் தமது வஸ்திரத்தில் கொண்டுபோனதாகவும், குறுகிப்போன பலகையை இழுத்துத் தன் அளவுக்குக் கொண்டுவந்ததாகவும், களிமண்ணால் குருவிகளை உண்டாக்கி கைதட்டிப் பறக்கவிட்டதாகவும், விளையாட்டுத்தோழர்களை ஆட்டுக்குட்டிகளாக மாற்றினதாகவும், தம்மைக் கோபமூட்டின பையன்களைச் சாகச் செய்ததாகவும், இதுபோன்ற வேடிக்கையும் விபரீதமுமான அற்புதங்களை அக்காலத்தில் அவர் செய்ததாக எழுதி வைத்திருக்கிறார்கள். பிற்காலத்தில் அடையாளம் காட்டுமென விரோதிகள் அவரைக் கேட்டபோது எவ்வளவு வெறுப்போடு அவைகளைச் செய்ய மறுத்தாரென்பதையும், அவர் செய்த அற்புத கிரியைகள் யாவும் மனதுருக்கமும் பரிதாபமும் நிறைந்த அவரது புண்ணியச் செயல்கள் என்பதையும் யோசிப்பார்களானால், அவருடைய திருஜீவியத்துக்குக் குறைவுண்டாக்குகிற வேடிக்கையான காரியங்களை அவர் செய்திருப்பாரென்று ஒருக்காலும் சொல்லத்துணியார்கள். இப்பொய்களைத் தகர்க்கவென்றே அப்போஸ்தலன் யோவான் நமது இரட்சகன் கானாவூரில் செய்ததே **முதலாம்** அற்புதம் என்று எழுதி வைத்தார். நமதாண்டவர் அக்காலத்தில் எப்படி ஜீவித்திருப்பார், என்னென்ன செய்திருப்பாரென்று அறிய நமக்கு ஆசையிருப்பதுபோல, சுவிசேஷகர்களுக்கும் ஆசை யிருந்திருக்காதா? அவர் அதிசயமான காரியங்களை அக்காலத்தில் செய்திருப்பாரானால், அவர்கள் அவைகளை எழுதாமல் விட்டிருப்பார்களா? அவர்கள் உண்மையுள்ள சாட்சிகளானதால் கடவுள் அவர்கள் கண்களுக்கு மறைத்த ஜீவியத்தில் அவர்கள் துணிவாய் நுழையவில்லை.

ஆகிலும், அந்த மறைவான காலத்தைக்குறித்து எவ்வளவு தூரம் நாம் அறியக்கூடுமோ அவ்வளவு தூரம் அறிய நாடுவது தப்பிதமல்ல. ஒருவன் துன்மார்க்கனும், பிரபல துஷ்டனும், கொலைபாதகனுமெனப் பேரெடுத்தால் அது ஒரேநாளில் ஆகிற காரியமல்ல. அவனுடைய இழிவான பிறப்பும், துன்மார்க்க வளர்ப்பும், அயோக்கியமான கூட்டுறவுமே அவனை அந்த நிலைமைக்குக் கொண்டுவந்ததென அறியலாம். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்." ஒருவன் சிறந்த பக்தனும், ஆழ்ந்த ஞானியும், மக்களுக்கு உபயோகமானவையென விளங்கினால் அதுவும் ஒரே நாளில் ஆகிற காரியமல்ல. அவனுடைய சிறந்த பிறப்பும், தேவபக்திக்கேதுவான வளர்ப்பும், ஆவிக்குரிய தேர்ச்சியுமே அவனை அந்த ஆசீர்வாதமான நிலைமைக்குக் கொண்டுவந்த தென அறியலாம். கிறிஸ்துவின் மறைவான முப்பது வருஷ ஜீவியத்தை அறிய விரும்புகிறவர்கள், அவரது

மூன்று வருஷ ஜீவியத்தையும், உபதேசத்தையும், புண்ணியச் செயல்களையும் கவனிக்கவேண்டும். இதுவே அவருடைய மறைவான ஜீவியத்தைத் திறக்கும் திறவுகோல். "விளையும் பயிர் முளையிலே தெரியும்."

அவர் அற்புதமாகப் பிறந்தவராயினும், நாசரேத்தூரார் பயந்து நடுங்கத்தக்க ஏவ்வித கிரியைகளையும் செய்தவரல்ல. எவ்வளவு தாழ்மையாகப் பிறந்தாரோ, அவ்வளவு தாழ்மையாகவே வளர்ந்தார். ''இளங்கிளையைப்போலவும் வறண்ட நிலத்தில் துளிர்க்கும் வேரைப்போலவும்'' அந்தப் பொல்லாத மனுஷர் நடுவில் எழும்பினார். அவர் வளர்ந்த விதத்தைக்குறித்து லூக்காமாத்திரம் வெகு சுருக்கமாய் நமக்குத் தெரிவித்திருக்கிறார். ''பிள்ளை வளர்ந்து ஆவியிலே பெலன்கொண்டு ஞானத்தினால் நிறைந்தது; தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது'' என்றும், "இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்'' என்றும் எழுதியிருக்கிறார். இவைகள் சுருக்கமான வார்த்தைகளாயினும் அவர் வளர்ந்த விதத்தைக் காட்ட இவைகளே போதும். பக்கத்து ஊரானாகிய நாத்தான்வேலுக்கு முப்பதுவருஷங்களாக அவர் தெரியாதிருந்தது, அவர் சாதாரண ஜீவியத்துக்கு அத்தாட்சி யல்லவா? தமது சர்வ ஞானத்தை வெளிப்படுத்துகிறவராயல்ல, சர்வ வல்லமையைப் பிரயோகித்து அட்டகாசம் செய்கிறவராயல்ல, மற்றப் பிள்ளைகளைப்போலவே குழந்தையாக, வாலிபனாக, புருஷனாகப் படிப்படியாய் வளர்ந்தார். புறம்பே மற்றப் பிள்ளைகளைப்போல் தோன்றி, அவர்களுடன் பேசி உலாவித் திரிந்தாலும், உள்ளாக மாசற்ற பரிசுத்தராயிருந்தார். ஆவியின் பலத்தோடும், ஞானத்தின் நிறைவோடும், தேவகிருபையோடும் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தார். அவரது சரீரம் பாவத்தால், வேறெவ்வித ரோகத்தால் பெலன் குன்றிப்போனதில்லை. பிற்காலத்தில் அவர் இடைவிடாமற் செய்த ஊழியத்திலும், அடைந்த பலபாடுகளிலும், அவரது திருமேனியின் உறுதியைத் திட்டமாகக் காணலாம்.

அவருடைய **வேத ஆராய்ச்சியும் கல்வி அறிவும்** கவனிக்கத்தக்கது. "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்'' என்று பிற்காலத்தில் சொன்னவர்தாமே, சிறு வயதுமுதல் வேதத்தை ஆராய்ந்து படிக்கிறவராயிருந்தார். எருசலேம் பட்டணம் சென்று ரபிமாரின் கல்விச்சாலையில் வேதம் கற்றவரல்ல. வேதபாரகர்களின் மாணாக்கரோடு சேர்ந்து பிதாக்களின் பாரம்பரியங்களைக் கற்றவருமல்ல. பிற்காலத்தில் இவரிடத்தில் விளங்கின வேத அறிவையும் ஞானத்தையும் கவனித்த யூதர்கள். ''இவர் கல்லாதவராயிருந்தும் வேத

எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். யூதர்களுடைய கல்வி முதல் முதல் அவர்கள் பெற்றோரிடமிருந்து ஆரம்பிக்கும். யோசேப்பும் மரியாளும் தங்களுக்கு தேவன் கிருபையாகக் கொடுத்த இந்த அற்புத கண்மணியை கல்வியற்றவராயிருக்க விடுவார்களோ? "நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் **பிள்ளைகளுக்கு** உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசுவீர்களாக'' என்று தேவன் கட்டளையிட்டிருந்தார். அப்பிரமாணத்தை யார் கைக் கொண்டாலும் கைக்கொள்ளாமற்போனாலும், நீதிமானாகிய யோசேப்பும் ஆசீர்வதிக்கப்பெற்ற மரியாளும் திட்டமாய்க் கைக்கொண்டு, அருமைப் பாலகனுக்குத் திருவசனமாகிய ஞானப்பாலை ஊட்டியிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. "தாயைப்போல பிள்ளை" என்பதுபோல் பாக்கியவதியாகிய மரியாளின் தேவ பக்தியையும், குணசீலத்தையும், ஆவியின் அனுக்கிரகத்தையும், வேத அறிவையும் கவனிக்கும்போது, பிள்ளை வேறுவிதமாயிருக்குமென்று யார் சொல்லக்கூடும்? பிள்ளையாகிய **இயேசு** தமது தாயாரிடம் கற்றுக்கொண்டதும் தவிர, நாசரேத்திலுள்ள சிறு பள்ளிக்கூடத்தில் வேதபாரகனான உபாத்தியாயர் கற்பிக்கும் வேதபாடங்களை மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து கற்றுவந்தார். ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயத்துக்குப்போய் அங்கு வாசிக்கப்படும் வேதபாகங்களை வாஞ்சையோடும் கருத்தோடும் உட்கொண்டார். இவ்விதமாக அவர் சிறுபிராய முதல் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருந்தார்.

அவர் **மூன்று பாஷைகளில்** பேசக்கூடியவராயிருந்தார். யூதர்களுடைய பூர்விக பாஷை **எபிரேயு**. இந்தப் பாஷையிலேயே வேதாகமம் எழுதப்பட்டிருந்தது. நமதாண்டவர் மாம்சத்தில் வெளிப்படுவதற்கு முன்பே, எபிரேயு பாஷை பேசக்கூடாத உயிரற்ற பாஷையானது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தைக் கைப்பற்றி அதை ஆளும்போது, அவர்களுடைய பாஷையும் அந்தத் தேசத்தை ஆண்டுகொள்ளுகிறதென்பது நாம் அறியாத விஷயமல்ல. நமது தேசத்திலுங்கூட ஆங்கில பாஷையில் நிபுணர்களாகித் தங்கள் தாய்ப்பாஷையை பேசக்கூடாமல் தத்தளிப்போர் அநேகர் இருப்பதுபோல், பலஸ்தீனா தேசமும் தன் சுய பாஷையாகிய எபிரேயு பாஷையை இழந்தது. அவர்கள் வேதமோவென்றால் எபிரேயு பாஷையிலே இருந்தது. நமக்குள் வேதத்தை மூலபாஷையில் படிக்க விரும்புகிறவர்கள் கிரேக்குப் பாஷையைக் கற்றுக்கொள்ளுகிறதுபோல, யூதர்களும் வேதத்தை எபிரேயு பாஷையில் வாசிக்க விரும்பி, மறந்துபோன எபிரேயு பாஷையைத் திரும்பவும் கற்றுக் கொள்ளவேண்டியதாயிற்று.

நமதாண்டவரும் எபிரேயு பாஷையை அறிந்திருந்தார். என்பதற்குச் சந்தேகமில்லை. அவர் நாசரேத் ஜெப ஆலயத்தில் வாசித்த வேதச்சுருள், எபிரேயு பாஷையில் எழுதப்பட்டுள்ளது. அவர் அதை வாசித்தபின்பு, ஜனங்களுக்கு அவர்கள் சாதாரணமாகப் பேசிவந்த **அரமெயிக்** பாஷையில் மொழி பெயர்த்துப் பிரசங்கிப்பார். அவர் சாதாரணமாய்ப் பேசினது நாட்டில் யாவரும் பேசின அரமெயிக் பாஷையே. இது எபிரேயு பாஷையிலிருந்து வழுவிப்போன பாஷை, சுவிசேஷத்தில் நமக்குப் பத்திரப்படுத்தியிருக்கிற "தலித்தாகூமி; ஏலி ஏலி, லாமா சபக்தானி" என்னும் வார்த்தைகள் இந்தப் பாஷைக்குரிய பதங்கள்.

கிரேக்கு பாஷையும் அவருக்குத் தெரியும். "புறஜாதிகளின் கலிலேயா" என்று சொல்லப்பட்டபடி, நாசரேத்துக்குச் சமீபமாயுள்ள **செசரியா திபேரியா** முதலான பட்டணங்களில், புறஜாதிகளான கிரேக்கர் மிகுதியாய்க் குடியேறியிருந்ததினால் கிரேக்குப் பாஷையை யாவரும் கற்றுக்கொள்ளக்கூடியதா யிருந்தது. நூற்றுக்கு அதிபதியோடும், பிலாத்துவோடும், அவரைக் கடைசியாகப் பார்க்க விரும்பின கிரேக்கரோடும், கிரேக்குப் பாஷையில் அல்லவோ அவர் பேசியிருக்கவேண்டும். தவிரவும், கிறிஸ்துவுக்கு சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்னமே யூதர்களுடைய பழைய ஏற்பாட்டு ஆகமம், எகிப்து தேசத்தில் கிரேக்குப் பாஷையில் மொழிபெயர்க்கப்பெற்று, பலஸ்தீனா தேசமெங்கும் அனுப்பப்பட்டிருந்தது. ஆகிலும், நமது ஆண்டவர் வேதத்தை எபிரேயு பாஷையிலேயே ஆராய்ச்சிசெய்து படித்துவந்தார் என்று தோன்றுகிறது.

எத்தனை பாஷையில் மனுஷர் வேதத்தைக் கற்றாலு மென்ன? வேதம் எல்லாருக்கும் தன்னை வெளிப்படுத்துகிற தில்லை. எவனொருவன் வேதத்தை மதித்து அதைக் கைக்கொண்டு நடக்க விரும்புகிறானோ அவனுக்கே வேதத்தின் இரகசியம் வெளிப்படும். எல்லாவற்றிக்கும் மேலாக நமது ஆண்டவர் தமது பிதாவின் இன்ப சமுகத்தில் வேதத்தை அனுதினமும் கற்றுவந்தார். பாவத்தால் கறைப்படாததும், வீண் சிந்தனைகளால் நெருக்கப்படாததுமான அவரது திருவுள்ளத்தில், தேவவசனம் நல்ல நிலத்தில் விழுந்த விதைகள்போல் மிகுதியான பலனைக் கொடுத்தது. **உல்லியம் லா** என்னும் ஒரு பக்தன் பதினெட்டாம் நூற்றாண்டில் உள்ளவர். அவர் தன்னை முற்றிலுமாய் தேவனுக்கு ஒப்புவித்து தேவசித்தத்தின்படியே பிழைத்துவந்தார். அவர் எழுதின அநேக புஸ்தகங்கள் உலகத்துக்கு மிகுந்த நன்மையை உண்டுபண்ணியிருக்கின்றன. அவர் மரிப்பதற்குச் சில மாதங்களுக்குமுன்னே அவர் சிநேகிதரில் ஒருவர் அவரிடம் சென்று, இவ்வளவு மேலான ஜீவியத்தை நீர் அடைந்த வழி எப்படி என்று கேட்டதற்கு, **உல்லியம் லா**

மறுமொழியாக: ஜெர்மனி தேசத்தில் செம்மானாகிய **ஜேக்கப்பீமென்** என்பவர் எழுதின ஒரு புஸ்தகத்தால் ஆசீர்வாதம் வந்ததென விடை பகர்ந்தார். அந்த புஸ்தகத்தின் சாரமென்னவென்றால், "எல்லா அறிவிலும் மேலான அறிவு தன்னை அறிவதே. உன்னைப்பற்றி எவ்வளவு அறிவாயோ அவ்வளவாக உன் ஒன்றுமில்லாமையை அறிவாய். உன் ஒன்றுமில்லாமையை நீ காணும்போது தேவனுடைய பரிபூரணத்தைக் காண்பாய். தேவராஜ்யத்தை நீ புறம்பே தேடாதே. கிறிஸ்து உனக்குள்ளே ஒளியாக, ஜீவனாக, ஆவியாக வெளிப்பட இடங்கொடு. அவர் உன் உள்ளத்தில் பிறக்கட்டும், உனக்குள் வளர்ந்து ஜீவிக்கட்டும், மரிக்கட்டும், இரத்தம் உனக்குள் சிந்தப்படட்டும், அடக்கமாகி அவர் உனக்குள்ளேயே உயிரோடெழும்பட்டும், மகிமையின் ராஜனாக அவர் உனக்குள்ளே ஆளுகையும் செய்யட்டும், இதுவே நீ உனக்குள்ளே காணவேண்டிய தேவனுடைய ராஜ்யம்" என்பதே. ஒரு சமயம் **ஜேக்கப் பீமனைப்** பார்த்து: நீர் வாசித்துப்படிக்கிற புஸ்தகங்கள் எவை என்று கேட்டபோது, நான் படிக்கிற புஸ்தகம் **நானே**யன்றி வேறுபுஸ்தகங்கள் எனக்கில்லை என்றார்.

வேதாகமம் ஒன்றே நமதாண்டவர் படித்த புஸ்தகம். அதைப்படிக்கப் படிக்கத் தம்மை அந்தபுஸ்தகச் சுருளிலே கண்டார். புஸ்தகச்சுருளும் அவரைத் தன்னிலே கண்டது. உலகத்தில் வேறு யாருக்கும் அந்தப் புஸ்தகம் பொருந்தாது. வேறு யாரும் அந்தப் புஸ்தகத்துக்குப் பொருந்தமாட்டார்கள். இவ்வண்ணம் வேதமே அவருக்குள் வர, அவரே **வேதமாக** ஊழியத்தில் பிரவேசித்தார். அவரவருக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்லும்படி வேதம் அவருக்குள்ளேயே இருந்தது. சாத்தானின் பலமான சோதனைகளை ஜெயித்ததும் தமக்குள்ளிருந்த வேதமே. சத்துருக்களின் சதியாலோசனையை மேற்கொண்டதும் தமக்குள்ளிருந்த வேதமே. சந்தேகத்தால் கலங்கினோரைத் தைரியப்படுத்தினதும் தமக்குள்ளிருந்த வேதமே. பாவிகளுக்கு இரட்சிப்பை வாக்களித்ததும் தமக்குள்ளிருந்த வேதமே. சகல காரியங்களிலும் தம்மை வழிநடத்தினதும் தமக்குள்ளிருந்த வேதமே. சிலுவைவரை தம்மில் இடைவிடாமல் நிறைவேறினதும் தமக்குள்ளிருந்த வேதமே. எதிரிகளுக்கு பதில் சொல்லக்கூடாமல் வேதபுஸ்தகத்தைத் தேடித்திரிந்தவரல்ல. இன்ன விஷயம் வேதத்தில் எங்கே சொல்லப்பட்டிருக்கிற தென்பதை அறிய சீஷர்களிடம் கேட்டவருமல்ல. கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் ஊழியத்தில் பிரவேசித்தார். உலகத்தாருக்கு அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமானார். இது இரண்டொருநாளில் உண்டான காரியமல்ல. நாசரேத்திலிருந்த அத்தனை வருஷங்களிலும் அவர் இடைவிடாமல் ஆராய்ச்சி செய்ததின் பலனல்லவா?

இது தவிர, வானத்திலும் பூமியிலுமுள்ள **தேவ சிருஷ்டிப்பும் தம்மைச் சூழ்ந்திருந்த மனுஷரின் நடபடிகளும்** அவருடைய கவனத்துக்குத் தப்பினவைகள் அல்ல. வானங்கள் தேவனுடைய மகிமையை அவருக்கு வெளிப்படுத்திற்று; ஆகாயவிரிவு அவரது கரங்களின் கிரியையை அவருக்கு அறிவித்தது. பகலுக்குப்பகல் வார்த்தைகளை அவருக்குப் பொழிந்தது; இரவுக்கு இரவு அறிவை அவருக்குத் தெரிவித்தது. தியான சுபாவமுள்ள அவரது திருமணதுக்குச் சகலமும் வேதபோதனையாகவேயிருந்தன. தமது சிறுபிராய முதல் தாம் நுட்பமாகக் கவனித்தவைகள் எவைகளோ அவைகளைக் கொண்டே பிற்காலத்தில் அரிய உபதேசம் செய்தார். மனுஷர் கிரகிக்கக்கூடாத ஞானத்தையல்ல, புத்திக்கு எட்டாத சாஸ்திரங்களையல்ல, எல்லாரும் அறியக்கூடிய சாதாரண காரியங்களைக் கொண்டே மேலான சத்தியங்களை உபதேசித்தார். அப்படிப்பட்ட சாதாரணமான உவமானங்களை அவருடைய போதனைகளில் ஏராளமாகக் காணலாம்.

தோட்டமும் தோட்டக்காரரும்; விதைப்பும் அறுப்பும்; கோதுமைகளும் களைகளும்; விதை விதைத்தலும் பட்சிகள் பொறுக்குதலும்; கடுகுச்செடி வளர்த்தலும் பட்சிகள் தங்குதலும்; திராட்சத்தோட்டமும் குத்தகையும்; அத்தி துளிர்த்தலும் வசந்தகாலம் சமீபித்தலும்; கலப்பையில் கை வைத்தவன்; வயலில் இருக்கும் இருவர்; கோதுமை புடைக்கும் சுளகு; திரிகை திரிக்கும் ஸ்திரீகள்; பச்சை மரமும் பட்டமரமும்; கதிரும் தானியமும், திராட்சச்செடியும் கனிகளும்; சுமக்கக்கூடாத சுமையை மனுஷர்மேல் சுமத்துதல்; உப்பும் எருவும்; விளக்கும் விளக்குத்தண்டும்; நாய்களும் பன்றிகளும்; மீனும் பாம்பும்; அப்பமும் கல்லும்; முட்டையும் தேளும்; ஓநாய்களும் ஆடுகளும்; கோழிகளும் குஞ்சுகளும்; ஆடுகளும் மேய்ப்பனும்; வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும்; நரிகளும் பறவைகளும்; காகங்களும் புறாக்களும்; பிணங்களும் கழுகுகளும்; எருதுகளும் கழுதையும்; சர்ப்பங்களும் விரியன்குட்டிகளும்; ஒட்டகமும் ஊசியும்; நிலத்தின் பொக்கிஷமும் முத்து வியாபாரியும்; பொக்கிஷம் சேர்த்தலும் திருடர் கன்னமிடுதலும்; பலவானைக் கட்டுதலும் வீட்டைக் கொள்ளையிடுதலும்; வேலைக்காரனும் எஜமானும்; சீஷனும் போதகனும்; வேலைக்காரன் குடிப்பதும் உடன் வேலைக்காரரை அடிப்பதும்; எந்த அளவுக்கு அளக்கிறோமோ அந்த அளவுக்கு அளக்கப்படுதல்; இரண்டு எஜமான்களுக்கு ஊழியம்; இராஜாக்களும் குடிகளும்; மணவாளனும் மனையாட்டியும்; பிரசவ நேர துக்கமும் குழந்தையின் பிறப்பு சந்தோஷமும்; நல்ல தகப்பனும் கெட்டகுமாரனும்; ஐசுவரியவானும் களஞ்சியமும்; ஐசுவரியவானும் ஏழையும்; தீவட்டிகளும் எண்ணையும்; காற்றில்

அசையும் நாணலும் மெல்லிய வஸ்திரம் தரித்த மனுஷரும்; குழல் ஊதுதலும் சூத்தாடுதலும்; புலம்பலும் மாரடித்தலும்; புளித்தமாவை மூன்றுபடி மாவில் பிசைந்து வைத்தல்; போஜனபாத்திரங்களின் வெளிப்புறமும் உட்புறமும்; அலங்காரமாய்த் தோன்றும் கல்லறைகளும் உள்ளே அசுத்தமான எலும்புகளும்; காட்டு புஷ்பங்களும் ஆகாயத்துப் பறவைகளும்; உத்திரமும் துரும்பும்; தட்டுதலும் திறக்கப்படுதலும்; இடுக்கமான வாசலும் விசாலமான வாசலும்; அத்திப்பழமும் திராட்சப்பழமும்; முள்செடிகளும் முள்பூண்டுகளும்; காற்றும் மழையும்; பெருமழையும் பெருவெள்ளமும்; பழந்துருத்தியும் புதுத் துருத்தியும்; பழைய இரசமும் புது இரசமும்; கோடித்துண்டும் பழைய வஸ்திரமும்; உதயமாகுதலும் அஸ்தமனமாகுதலும்; செவ்வானமும் மந்தாரமும்; மின்னல்களும்; மேகங்களும்; கற்பாறை வீடும் மணலின்மேல் வீடும்; கல்லின்மேல் விழுகிறவனும் மேகங்களும்; கற்பாறை வீடும் மணலின்மேல் வீடும்; கல்லின்மேல் விழுகிறவனும் கல்லின்மேல் சாய்ந்தவனும்; இவை போன்ற திரளான நாடோடிய உவமானங்களை எஜமான் தமது உபதேசத்தில் வெள்ளம்போல் பொழிந்தருளினார்.

இப்படிப்பட்ட விஷயங்கள் மனுஷர் காணாதவைகளும் அறியாதவைகளுமல்ல. ஆகிலும் இந்தச் சாதாரண காரியங்களிலிருந்து ஆண்டவர் போதித்த உன்னத சத்தியங்களைக் கண்டுபிடித்தவன் யார்? வல்லவனுக்கு புல்லும் ஆயுதம். ஆவிக்குரிய ஜீவியம் நம்மில் பூரணப்படும்போது பூமிக்குரிய காரியங்கள் யாவும் ஞானபோதனை நிறைந்திருக்க காண்போம். இத்தனை வருஷங்களாகக் கல்விமான்கள் எவ்வளவோ ஆராய்ச்சி செய்தும், இன்னும் ஆராய்ந்து முடியாத இரகசியங்கள், இரட்சகர் சொன்ன உவமானங்களில் அடங்கியிருக்கின்றன. அவர் பேசினதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை. தேவபரிபூரணத்தின் **ஞானக்களஞ்சியம்** இவரே!

அவருடைய **தொழில்.** குடும்பம் எருசலேமிலிருந்து நாசரேத்துக்குத் திரும்பினபின் யோசேப்பைப்பற்றி ஒன்றும் சொல்லப்படாததால் சில வருஷங்கள் சென்று, அதாவது கிறிஸ்துவின் பத்தொன்பதாவது வயதில், யோசேப்பு மரித்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். யோசேப்பு தச்சனானபடியால் இயேசுவும் அத்தொழிலைக் கற்றுக் குடும்பத்தைப் பராமரித்து வந்தார். "இவன் தச்சன் அல்லவா?" என்று நாசரேத்தூரார் பிற்காலதில் சொன்னதைக் கவனிக்க. பெரிய இயந்திரங்களும் விலைபெற்ற சூத்திரங்களும் உள்ள தற்காலத்துப் பட்டரைகள்போல் அல்ல. நாசரேத் ஒரு சிறிய ஊர். ஊருக்கேற்ற தச்சன். ஊருக்கு வேண்டிய சாதாரண வேலை.

வேலைக்குத் தகுந்த கூலி. வீட்டுக்கு வேண்டிய மேஜை, நாற்காலி, கட்டில், பல தட்டுமுட்டுகளையும் சமுசாரிக்கு வேண்டிய கலப்பை முதலான கருவிகளையும், வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய கதவுகள், ஜன்னல்கள் சட்டங்களையும், பிள்ளைகளுக்கு வேண்டிய விளையாட்டு சாமான்களையும், அவருடைய திருக்கரங்கள் உண்டுபண்ணியிருக்குமல்லவா? குழந்தைகளை ஆசீர்வதித்தும், குருடர் கண்களைத் திறந்தும், குஷ்டரோகத்தைப் பறக்கடித்ததும், அமிழ்ந்த பேதுருவைத் தூக்கி எடுத்ததும், அப்பங்களை ஆசீர்வதித்துப் பெருகச் செய்ததும், மரித்தோரை எழுப்பினதும், சிலுவையில் ஆணிகளால் அறையுண்டதும், இன்று நம்மை ஆசீர்வதிப்பதும் அத்திருக்கரங்கள் அல்லவோ?

ஆ! எப்பேர்ப்பட்ட தச்சன்! கூலியைப் பிரதானமாகக் கருதாமல் தாம் செய்யும் வேலைகளில் அல்லவோ முழுக்கவனம் செலுத்தினார். வஞ்சகமில்லாத வேலைக்காரன். தற்காலத்து தச்சர்களைப்போல் மோசக்காரர் உண்டோ? ஓட்டை உடைசல்களை உள்ளே மறைத்து மேற்பார்வைக்குப் பளபளப்புக் கொடுத்துவிடுவார்கள். உள்ளக்கறையை நீக்கத் தமதுயிரைக் கொடுக்க வந்த தயாபரன்; மேல்மினுக்கு வேலை செய்வாரோ? பாத்திரங்களின் மேற்புறத்தைச் சுத்தமாக்கி, உள்ளே அழுக்கை வைத்திருந்த மாயக்காரரைக் கண்டித்த உத்தமன், தாம் செய்த வேலையில் உத்தமராயிருந்திருக்கமாட்டாரோ? ''அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்'' என்னும் பிற்காலச்சாட்சி இங்கிருந்தல்லவா வளர்ந்தது. "முதற்கோணல் முற்றுங்கோணல்" என்றாகுமல்லவோ? ஒரு மரத்துண்டை அவர் எடுக்கும்போது உள்ளே பழுதிருந்தால் அதை மெழுகு வைத்தடைத்து மறைக்காமல், அதை எறிந்துவிட்டு வேறோரு நல்ல மரத்தை எடுத்துச் செய்வாரல்லவா? அவர் செய்த வேலைகள் மகா பூரணமானவை. எவ்வளவோ உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும், முழு பிரயாசத்தோடும், வேர்வை சிந்தக் கஷ்டப்பட்டு, தாம் ஏற்றுக்கொண்ட வேலைகளைப் பூர்த்தியாய்ச் செய்து முடிப்பார். வேலை கொடுத்தவர்கள் அதைப் பார்க்காவிட்டாலும் தமது பிதா அதைக் கொடுத்ததாக எண்ணி, பிதா பார்க்க அதைச் செய்தபடியால் அவ்வேலைப்பாடுகள் சிறப்படைந்தன. கர்த்தர் நமக்குத் தந்த வேலைகளை நாம் எவ்வாறு செய்யவேண்டும் என்பதற்கு மாதிரியானார். நமது வேலைகளில் சோம்பல் எவ்வளவு! முறுமுறுப்பு எவ்வளவு! மோசம் எவ்வளவு! ஆத்திரம் எவ்வளவு! அரை குறை எவ்வளவு! காரணம் என்ன? மனுஷருக்கென்று பார்வைக்கு வேலைச்செய்கிறோம். எப்பொழுதும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிற பிதாவின் பார்வையை மறந்து போகிறோம்.

தேவன் கிறிஸ்துவின் ஜீவியத்தில் மிகுதியான இக்காலத்தை நமக்கு மறைத்தது எவ்வளவு ஞானம்! அவ்வாறு மறைத்ததினால் நமது யோசனைக்கு உண்டாகிற அவ்வளவு பரவசம், அக்காலத்தைக்குறித்து சுவிசேஷகர் எழுதியிருந்தாலும் உண்டாகாது. ஏதோ சிலவற்றை வாசித்து மறந்துவிடுவோம். இப்போது, நாமே அவைகளைப்பற்றி யோசிக்கவேண்டியதா யிருக்கிறது. பற்பல நிலைமையிலுள்ளவர்கள் தங்கள் தங்கள் இயல்பின்படி யோசிக்க ஏதுவாயிருக்கிறது. அத்தனை வருஷங்களிலும் அவர் வீட்டில் உள்ளவர்களோடும் புறம்பேயுள்ளவர்களோடும் எவ்வாறு பேசியிருப்பார்? வாசிப்பு ஜெபத்தியானங்களில் எவ்வளவு நேரத்தை செலவிட்டிருப்பார்?

வேலை ஸ்தலத்தில் அவர் ஆயுதம் எடுத்து எப்படி வேலை செய்திருப்பார்? வேலை முடிந்தபின் எவ்வாறு அவைகளைக் கொண்டுபோய்ச் சொந்தகாரருக்குக் கொடுத்திருப்பார்? சிலர் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, வேலை வெகு நேர்த்தியா யிருக்கிறதென்று சொல்லி, கூலியோடு இனாமும் சேர்த்துக் கொடுக்கும்போது, கஷ்டப்பட்டு வேலைசெய்த அவருக்கு எவ்வளவு சந்தோஷம் இருந்திருக்கும்? வீட்டுக்கு வந்து தமது தாயாரிடத்தில் என்ன சொல்லியிருப்பார்? அந்த அம்மாள் அதற்கு என்ன சொல்லியிருப்பார்கள்? வேறொருநாள் வேலை முடித்து எடுத்துக்கொண்டுபோக, ஊராரை ஏமாற்றி வாயிலே போட்டுக்கொள்ளும் ஒரு பேராசைக்காரன், அவர் செய்த அருமையான வேலையை மெச்சிக்கொள்ளாமல், சும்மாவாகிலும், அதுகுறை இதுகுறை என்று சொல்லுகிறதும், சரிதான் போய் நாளைக்குத் திரும்பிவா என்று சொல்லி, பகலெல்லாம் வேலை செய்த அவரை வெறுமையாய் அனுப்பிவிடுகிறதும், மறுநாள் போனால் பேசின கூலியைக் குறைத்துக் கொடுப்பதும், உத்தம வேலைக்காரனாகிய அவர் திருமனதிற்கு எப்படி இருந்திருக்கும்? வீட்டுக்கு வந்து தமது தாயாரிடத்தில் நடந்ததைச் சொல்ல, தாயார் துக்கித்து: பாவி இப்படியும் செய்வானா என்று சொல்லி மகன் தாயாரைப் பார்த்து: என்ன செய்கிறது அம்மா! நாம் நல்லவர்களா யிருப்பதினாலே எல்லாரும் நல்லவர்களா யிருப்பார்களா? பிதா இப்படிப்பட்ட நன்றி கெட்டவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. நமக்கு நியாயமான கூலிகொடுக்கும் பரமபிதா நம்மோடிருக்கும்போது நமக்குக் குறைவேது? நமக்குக் குறைவில்லாதிருக்கும்போது அப்படிப்பட்ட மனுஷரைக் குறித்து நாம் ஏன் விசனப்படவேண்டும் என்று சொல்லியிருக்க மாட்டாரா?

முக்கியமான ஊழியத்துக்கு **மூன்று** வருஷமும், சாதாரண ஜீவியத்துக்கு முப்பது வருஷமுமாவென்று கேட்கலாம். எது முக்கியம்? முப்பது வருஷந்தான் முக்கியம். அவர்

தேவதூதனைப்போல் திடீரென்று தோன்றி, நற்செய்தி கூறிவிட்டு மறைந்துபோக வந்தவரல்ல. அவரது மூன்று வருஷ உபதேசமும் கிரியைகளும் அருமையானவைதான்; ஆகிலும் அந்த மறைவான காலமோ அருமையிலும் அருமையானது. நமது சகல காரியங்களையும் அவர் அறிவதற்கு அந்தக் காலத்தைப்போல் ஏற்ற காலமில்லை. அவரது அரிய உபதேசங்களும் அற்புதங்களும் நமக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். ஆனாலும் சாதாரண ஜீவியத்தில் ஒவ்வொரு காரியத்தையும் அமைதலாய், பூரணமாய், பரிசுத்தமாய் நடப்பிக்கிறதற்கு நிகரான **அற்புதம்** வேறொன்று மில்லை. மனுஷர் சமயாசமயங்களில் நடப்பித்த வீரச் செய்கைகளால் புகழ்பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய குடும்ப ஜீவியத்தில் சாதாரணமான காரியங்களில் அல்லவோ தவறிப்போகிறார்கள். எவ்வளவு பதட்டம்! எவ்வளவு கோபம்! எவ்வளவு தந்நயம்! எவ்வளவு பெருமை! எவ்வளவு தற்புகழ்ச்சி! எவ்வளவு அசதி! எவ்வளவு வெட்கமான விஷயங்கள்! சங்கத்தில் சபையில் நாம் பேரெடுக்கிறது பெரிய காரியமல்ல. குடும்பத்தில், மனைவி மக்கள் நடுவில், காலை முதல் மாலை வரை ஒவ்வொரு சிறிய காரியத்திலும் நாம் கடவுளுக்குப் பிரியமாக நடந்து, அவருக்குப்பிரியமாக எல்லாவற்றையும் செய்ததுண்டா? வேலைஸ்தலத்தில், பள்ளிக்கூடத்தில், உடன் ஊழியர்கள் நடுவில் நாம் எப்படி நடந்துகொண்டோம்? ஐயோ, மனுஷர் சாதாரணமான காரியங்களில் எவ்வளவோ தவறிப்போகிறார்கள். இந்த முப்பது வருஷக்காலமாகச் சிறிதும் **தவறாத புருஷன்** எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும்?

அவர் நமது காரியங்களை அறிந்துகொள்ளவும், நமக்காக அனுதாபப்படவும்கூடிய அனுபவம் குடும்ப ஜீவியத்திலிருந்து அவருக்குக் கிடைத்தது. சரீர ஜீவன் பிழைப்பதற்கு மனுஷர் கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டியதென்பதை அறிவார். அப்படிக் கஷ்டப்பட்டாலும் உண்மையாய் உழைக்கிறவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கிறதில்லை என்பதையும் அறிவார். ஆகிலும் பிதா அவர்களைக் கைவிடுவதில்லை என்பதையும் அறிவார். அநேகருக்கு வரும் சம்பாத்தியம் அநியாயம் என்பது அவருக்குத் தெரியும். பகல் முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறவர்களுக்கு, குறைந்த கூலியை கொடுத்துவிட்டு, முதலாளிகள் பெருத்த செல்வத்தை அனாவசியமாகச் சேர்ப்பதும் அவருக்குத் தெரியும். பிள்ளைகள் நிறைந்த குடும்பத்தில், ஒரு கைச் சம்பாத்தியம், அவர்கள் உடுத்தப் புசிக்கப்போதுமானதல்ல என்பதும் அவருக்குத் தெரியும். நமது சந்தோஷம் துக்கத்தை அவர் அறிவார். ருசியுள்ள பதார்த்தங்களோடு நாம் சந்தோஷமாய்ப் புசிப்பதும் அவருக்குத் தெரியும். வேறு சமயங்களில் தண்ணீர்விட்டுச் சாப்பிடுவதும் அவருக்குத்

தெரியும். ஆகாரக் குறைவினால் அரைவயிறு சாப்பிடுவதும் அவருக்குத் தெரியும். நல்ல உடுப்புகளை நாம் சந்தோஷமாய் உடுத்துவதும் அவருக்குத் தெரியும். கிழிந்த வேஷ்டியை, மற்ற உடுப்புகளைத் தைய்த்து உடுத்திக்கொள்வதும் அவருக்குத் தெரியும். வெளிக்கு மரியாதையாக உடுத்திப்போனாலும், உள்ளேயிருக்கிற உடுப்பில் எத்தனை கிழிவுகள் உண்டென்பதை அவர் அறியாதவரல்ல. வண்ணானுக்குப்போட வகையில்லாமல் துவைத்துத் துவைத்து உடுத்துவதையும் அவர் அறிவார்.

மக்களைப் பெற்றவர்கள், தங்கள் பிள்ளைகள் படிப்பு, உத்தியோகம், விவாகம் முதலான விஷயங்களில் எவ்வளவோ கவலையுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். பிள்ளைகளின் குணபேதத்தால் பெற்றார் எவ்வளவு சஞ்சலப்படுகிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். குடும்பங்களில் உண்டாகும் மனஸ்தாபம் தப்பெண்ணங்களை அவர் அறியாதவர் அல்ல. அற்ப விஷயத்தில் சண்டை தொடுக்கும் அக்கம்பக்கத்து வீட்டாரின் குணங்களை அறியாதவரல்ல. ஒரு வீடு வசதியாய் வாழும்போது மற்றவர்கள் பொறாமை அடைவதும் அவருக்குத் தெரியும். ஒரு வீடு தரித்திரப்பட்டால் மற்றவர்கள் இகழுவதும் அவருக்குத் தெரியும். புருஷன் மனைவி தேவபக்தராயிராமற்போனால் எவ்வளவு சண்டைகளும் பிரிவினைகளும் உண்டாகிறதென்பது அவருக்குத் தெரியும். புருஷன் உத்தமனாயிருந்தால் பெண்சாதியால் அவன் படும் பாடும், மனைவி உத்தமியாயிருக்கப் புருஷன் அவபக்தனாயிருந்தால் புருஷனால் அவள் படும் பாடும், இருவருமே அவபக்தர்களாயிருந்தால் அவர்கள் கேட்டுக்கும் சண்டைக்கும் ஓய்வில்லை என்பதும் அவருக்குத் தெரியும். நாசரேத்தூரில் அவர் கவனியாத காரியம் ஒன்றுமில்லை. ஒருவனுக்கு ஒரு அவமானம் நேரிட்டால், ஜனங்கள் எவ்வளவு ஆவலோடு அதை எங்கும் பிரஸ்தாபித்துப் பேசுகிறார்கள் என்பதும், மேன்மையான காரியத்தை அவர்கள் அப்படிப் பேசுவதில்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

வீட்டில் உண்டாகும் வியாதிகள் மரணத்துயரங்கள் அவருக்குத் தெரியாததல்ல, யோசேப்பு மரித்தபோது மரியாள் எவ்வளவு துயரப்பட்டிருப்பார்கள்! அவருடைய சகோதரரும் சகோதரிகளும் என்னமாய் அழுதிருப்பார்கள்! அருமை ஐயா கண்களில் கண்ணீர் வந்திருக்காதோ? ஆ, அந்த நாளில் வீடு எப்படியிருந்திருக்கும்? இது தவிர, ஊரில் எத்தனை-மரணங்களை அவர் பார்த்து மனதுருகியிருப்பார். புருஷனற்ற விதவைகளையும், தகப்பனற்ற பிள்ளைகளையும் கண்டு பரிதபித்திருப்பார் அல்லவோ? அப்படிப்பட்ட சிறு குழந்தைகள், வாலிபர், முதியோர் தமது பட்டறைக்கு வரும்போது, தமது வேலையைச்

செய்துகொண்டே அவரவருக்கு ஏற்ற ஆறுதலைச் சொல்லி யிருப்பாரல்லவா? இவைபோன்ற அநேக காரியங்களை நாம் யோசிக்கக்கூடும். இப்படி நாம் யோசிப்பது அப்போக்கிரிப்பா ஆகமம் அல்ல, மெய்யாகவே அவர் நமக்காகப் பரிதபிக்கக்கூடிய இரட்சகனாயிருக்கும்படி, இவ்வாறு மிகுதியான காலத்தைச் சாதாரண குடும்ப ஜீவியத்தில் செலவிட்டார். நமது காரியங்கள் யாவும் அவருக்கு நன்றாய்த் தெரியும் என்பது நமக்கு எவ்வளவு ஆறுதல்!

ஆண்டவர் தச்சுவேலை செய்து கைத்தொழிலை மேன்மைப்படுத்தினார். கிரேக்கரும் ரோமரும் தொழிலாளிகளை இழிவாய் நினைத்தார்கள். நம் தேசத்தவருக்குள்ளும் இந்த அறிவீனம் இன்னும் நீங்கவில்லை. ரோமச்சக்கரவர்த்தி ஜூலியன் பாரசீகத்தின்மீது படையெடுத்துச் சென்றபோது, லிபனியூ என்னும் தத்துவ சாஸ்திரி ஒரு கிறிஸ்தவ பக்தனைப் பார்த்து: உன் தச்சன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று பரியாசமாய்க் கேட்டானாம். அதற்கு அந்தக் கிறிஸ்தவன்: இப்பொழுது அவர் பிரேதப் பெட்டி செய்து கொண்டிருக்கிறார் என்று மறுமொழி பகர்ந்தாராம். இதைச் சொல்லியபின் ஜூலியன் மாண்டுபோனானெனச் செய்தி வந்ததாம். கஷ்டமின்றி சொகுசாய் வாழ்பவர்களை உலகம் பாக்கியவான்களெனப் போற்றுகின்றது. கைத்தொழில் செய்து கஷ்டப்படுபவர்களை அற்பமாய் நினைக்கிறது. அரசர்கள் தாங்கள் செய்த யுத்தங்களால் உலகத்தைப் பாழாக்கினார்கள். மந்திரிகள் தந்திரிகளாகி உலகத்தை மோசம்போக்கினார்கள். தத்துவ சாஸ்திரிகள் தங்கள் ஞானத்தால் உலகத்தை பைத்தியமாக்கினார்கள். சமுசாரிகளும் தொழிலாளிகளுமோ நன்றிகெட்ட இந்த உலகத்துக்குப் போஜனம் கொடுத்துக் காப்பாற்றுகிறார்கள். கடந்த பெரிய யுத்தத்தால் பாழாய்போன ஐரோப்பா தேசம், இவர்களாலேயல்லாமல் வேறு யாராலே திரும்பவும் தழைத்தோங்கும்? பாவத்தொழிலே இழிவான தொழில். உண்மையாகப் பாடுபடும் எந்தத் தொழிலும் இழிவானதல்ல. கைத்தொழில் செய்யும் யாவரையும் எஜமான் தாம் செய்த கைத்தொழிலினால் மேன்மைப்படுத்தியிருக்கிறார். மகா உன்னதமானவராயிருந்தும் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாகித் தமக்காகவும் குடும்பத்துக்காகவும் கைப்பாடுபட்டு வேலைசெய்த **பரமதச்சன்** இவரே.

குடும்பத்தில் இவர் **வளர்ந்த விதமும்** கவனிக்கத்தக்கது. பெற்றோருக்குச் சகல விஷயத்திலும் கீழ்ப்படிந்து நடந்தார். மற்றப் பிள்ளைகளிடத்தில் காணப்படும் கோபம், பிடிவாதம், மூர்க்கம், எதிர்ப்பு, இடும்பு, இப்படிப்பட்ட பொல்லாத குணங்கள் அவரிடம் காணப்பட்டதே இல்லை. 'விதை ஒன்று போட செடி

ஒன்று முளைக்குமா? பெற்றோரைப் பார்க்கிலும் ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்தபோதிலும் அதினிமித்தம் அவர்களை அசட்டையாய் நினைத்ததில்லை. உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே பிரதானமாய்ச் சிந்தித்தும் கைக்கொண்டும் நடந்தார். தேவ கிருபை சம்பூரணமாய் அவர்மேல் தங்கியிருந்தது.

இந்த குடும்பத்தில் இவர் தவிர இன்னும் சிலர் இருந்ததாக வாசிக்கிறோம். அவர்கள் **இயேசுவின் சகோதரர்** என்று அழைக்கப்பட்டார்கள். இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா, இவன் சகோதரிகள் எல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா என்று நாசரேத்தூரார் பிற்காலத்தில் சொன்னார்கள். எஸ்தர், தாமர் என்பது சகோதரிகள் பெயர். இவர்கள் எப்படி அவருக்குச் சகோதரர் என்பதைப் பற்றிப் பல அபிப்பிராயங்கள் உண்டு. இயேசுவானவர் பிறந்ததற்குபின்பு மரியாளுக்கு இந்தக் குமாரரும் குமாரத்திகளும் பிறந்தார்களென்று சில வேதபண்டிதர் சொல்லுகிறார்கள். சிறிய தாய் அல்லது சிறிய தகப்பன் மக்களென்னும் அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய வார்த்தையால் அவர்கள் அழைக்கப்படாமல், இயேசுவின் சகோதரரென்றே எப்பொழுதும் அழைக்கப் பட்டிருப்பதால் அவர்கள் மரியம்மாளுக்கே பிறந்தவர்களென்று இவர்கள் நம்புகிறார்கள்.

தேவனால் விசேஷித்த விதமாய் பிரித்தெடுக்கப்பட்டு, ஆதியாகமத்தில் முன் குறிக்கப்பட்ட கன்னிகையாகிய மரியாள், பரிசுத்த பிள்ளையும் உலக ரட்சகனுமாகிய இயேசு பெருமானைப் பெற்றபிறகு, திரும்பவும் இல்வாழ்க்கையில் பிரவேசித்திருப்பார்களென்று நினைக்க மனம் அஞ்சுகிறதென்றும், தேவ தூதனுடைய விசேஷித்த வாழ்த்துதலையும், திருக்குமாரனைப்பற்றி அவன் கூறின வாக்குகளையும், பிள்ளையில் நாளுக்குநாள் விளங்கின மகிமையான காரியங்களையும், இடைவிடாமல் தன் மனதில் வைத்துச் சிந்தனை செய்த அந்தப் பாக்கியவதிக்கு, மறுபடியும் இத்தனை குமாரரும் குமாரத்திகளும் பிறந்திருப்பார்களென்று நினைப்பது தகாதென்றும், சகோதரருடைய காரியங்களைக் கவனிக்கும்போது அவர்கள் நமதாண்டவருக்கு மூத்தவர்களாக காணப்படுகிறார்களென்றும் அவர்கள் மரியாளுடைய சொந்த மக்களாயிருந்தால் ஆண்டவர் சிலுவைமீது தொங்கும் வேளையில் அந்த மக்களிடத்தில் தமது தாயாரை ஒப்புவியாமல், அப்போஸ்தலரில் ஒருவரான யோவானுடைய பாதுகாப்புக்கு

ஒப்புவிக்கவேண்டியதென்னவென்றும் மறுபட்சத்தார் கேட்கிறார்கள். வேறு சிலர், இவர்கள் யோசேப்பின் முந்தின மனைவிக்குப் பிறந்த பிள்ளைகளென்றும், இரண்டாந்தரமாக அவர் மரியாளை விவாகஞ் செய்தபோது இந்தப் பிள்ளைகளும் அவரோடுகூடவே இருந்தார்கள் என்றும் சொல்லுகிறார்கள். மற்றவர்கள்: இந்தச் சகோதரர் மரியாளுடைய சகோதரியும் கிலெயோப்பாவின் மனைவியுமாகிய மரியாள் என்பவளுடைய பிள்ளைகளென்றும், யோசேப்பு மரித்தபின், இவ்விரண்டு குடும்பங்களும் ஒன்றாகக்கூடி வாழ்ந்ததெனவென்றும் சொல்லுகிறார்கள். சுவிசேஷத்தில் அவர்கள் யோசேப்பின் மக்கள் அல்லது மரியாளின் மக்களென்று அழைக்கப்படாமல் இயேசுவின் சகோதரரென்று அழைக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. அது எப்படியிருந்தபோதிலும் நமதாண்டவருக்கும் அந்தச் சகோதரருக்கும் இருந்த **சம்பந்தமென்ன**வென்பதே, நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம்.

அவர்கள் இவருடைய பரிசுத்த வளர்ச்சிக்கு அனுகூலமாயிருந்தார்களா? பிரதிகூலமாயிருந்தார்களா? அவர்களை ஆகாதவர்களும் துன்மார்க்கருமென்று நாம் தீர்க்கிறதில்லை. அவர்களும் மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தவர்கள்தான். ஆகிலும் தங்கள் நடுவிலிருக்கிறவர் இன்னாரென அவர்கள் கண்டுகொள்ளவில்லை. இவர்கள் நியாயப்பிரமாணத்திலும் சடங்காசாரங்களிலும் திட்டவட்டமுடையவர்கள். பரிசேயரின் பாரம்பரியங்களில் மதிப்புள்ளவர்கள். எஜமான் அறியாதபடி பரிசேயரின் கண்கள் மூடப்பட்டிருந்தது போலவே, இவர்கள் கண்களும் மூடப்பட்டிருந்தன. அவருடைய மறைவான தெய்வீக மகிமையை அவர்கள் காணவில்லை. அவர் உலகத்தை வெறுத்துத் தள்ளும் சந்நியாசியாகவல்ல, மனுஷருடைய சந்தோஷத்திலும் துக்கத்திலும் அனுதாபப்பட்டக் கூடிய **மனுஷகுமாரனாக** வந்தார். கர்த்தருடைய சகோதரனாகிய **யாக்கோபு** பிந்தி அப்போஸ்தலனானபோதிலும், அவருடைய சந்நியாச வைராக்கியம் எப்படிப்பட்டதாயிருந்திருக்குமென்பதை அவர் எழுதின நிருபத்தால் அறியலாம். சகோதரன் **யூதாவும்** எப்படிப்பட்டவர் என்பதை அவர் எழுதின சிறிய நிருபம் காட்டும்.

இப்படிப்பட்டவர்கள் நடுவில் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள ஆண்டவர் அவ்வளவு நீண்டகாலம் சஞ்சரித்தது அவருக்குப் பெருஞ்சோதனையாகவேயிருந்திருக்கும். தாங்கள் நினைத்ததே சரி, தாங்கள் செய்ததே சரியென்று அவர்கள் சாதித்தபோது அவர்களோடு வழக்காடவுமில்லை சண்டைபோடவுமில்லை. அவர் தம்மைத் தாழ்த்தினதினிமித்தம் அவருடைய நியாயம் அசட்டை செய்யப்பட்டது. அவர்கள்

கைகளே மேலென எண்ணப்பட்டன. அவருடைய ஊழியகாலத்தில் ஞானக்களஞ்சியமாகிய அவரைப் பைத்தியம் பிடித்தவரென்றும், தாழ்மைச் சொரூபியாகிய அவரை பண்டிகைக்குச் சென்று திரள் ஜனங்கள் நடுவில் உமது சாமார்த்தியத்தைக் காட்டிக் கீர்த்தியடையுமென்றும் சொன்னவர்கள் இந்தச் சகோதரரே. அவருடைய மரணபரியந்தம் இவர்கள் அவரை விசுவாசிக்கவுமில்லை, அவருடைய ஊழியத்துக்கு உதவியாயிருக்கவுமில்லை. மற்றவர்களிலிருந்தல்லவோ ஆண்டவர் தமக்குச் சீஷர்களைத் தெரிந்து கொள்ளவேண்டியதாயிற்று. "தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீன மடையான்" என்று எஜமான் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மை! இத்தனை சகோதரரும் சகோதரிகளும் அவருக்கிருந்தபோதிலும், அவரோ தனித்தவராக "காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலிமரம் எப்படியோ" அப்படியே வளர்ந்தார். திருவசனத்தாலுண்டாகும் ஆறுதலினாலும், ஜெப தியானத்தாலுண்டாகும் பலத்தாலும், சகல காரியங்களையும் பொறுமையுடன் சகித்து, எவ்வளவும் சோர்ந்துபோகாமல் தமக்கு முன் வைக்கப்பட்டிருந்த மகத்துவமான ஊழியத்துக்கு நாள்தோறும் தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டே வந்தார். பிற்காலத்தில் அவர் எவ்வளவோ பகைக்கப்பட்டும் நெருக்கப்பட்டுமிருந்தும் சாந்தமும் பொறுமையுமுள்ளவராய் விளங்கினதும் ஆச்சரியமல்ல.

இங்கே நாம் கவனிக்கவேண்டிய போதனைகள் உண்டு. விசுவாசியான புருஷனுக்கு அவிசுவாசியான மனைவியிருக்கலாம். விசுவாசிகளான பெற்றோருக்கு முரட்டாட்டமான பிள்ளைகளிருக்கலாம். குடும்பத்தில் ஒரு மகன் தேவபக்தனாயிருக்க மற்றச் சகோதரர் அவபக்தர்களாயிருக்கலாம். செய்ய வேண்டியதென்ன? குடும்பத்தை விட்டுப் பிரிந்து ஓடிப்போவதல்ல. அவர்கள் நடுவில் பொறுமையோடும் தாழ்மையோடும் ஜெபசிந்தையோடும் ஜீவிப்பதே முடிவில் குடும்பத்துக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருமென்று அறியவேண்டும். அவன் பக்தனானால் அவன் வீட்டாரை ஏன் குணப்படுத்தவில்லை என்று நமக்குள் சாதாரணமாகக் குற்றப்படுத்திப் பேசும் பேச்சு எவ்வளவும் சரியல்ல. நமது எஜமானைப்போல் ஞானமும் அன்பும் பரிசுத்தமும் உள்ளவர்கள் யார்? அவருடைய மரணபரியந்தம் அவருடைய சகோதரர்கள் விசுவாசிகளாகாமல் அவர் உயிர்த்தபின்பல்லவோ இரட்சிப்பைக் கண்டார்கள். மரமானது ஏற்றகாலத்தில் தன் கனியைக் கொடுக்கும். கனிகொடாத மரமோ வெட்டுண்டு விழும்.

வெளியரங்கமாய் ஜீவிப்பதையும் வெளியரங்கமாய்ச் செய்யப்படுவதையுமே உலகம் போற்றும். நமது உள்ளான

மறைவான ஜீவியமோ தேவனுடைய பார்வையில் மெய்யான ஜீவியம். நமது எஜமான் மறைவாக ஜீவித்தது நீண்டகாலம்; வெளியரங்கமாக ஊழியம் செய்ததோ சுருக்கமான காலம் அந்தச் சொற்பக்கால ஊழியத்துக்கு வேண்டிய ஆயத்தம், இந்த மறைவான காலத்தில் அல்லவோ நடந்தது. வேதத்திலென்றாலும் சரி, திருச்சபை சரித்திரத்திலென்றாலும் சரி, **உலகத்துக்கு அதிக ஆசீர்வாதமாயிருந்தவர்கள் எல்லாரும் தேவனோடு நீண்டகாலம் மறைந்திருந்து போதிக்கப்பெற்றவர்களே.** எத்தனையோ பக்தர்களின் ஜீவியம் வெளிக்கு வரவில்லை. அவர்கள் ஜீவியம் ''முள்ளுக்குள் லீலிப் புஷ்பம்போல்'' மறைந்திருக்கிறது குடும்பத்தொல்லைகளுக்குள்ளும் அவிசுவாசிகள் நடுவிலும் இருந்து, சாந்தத்தோடும் பொறுமையோடும் தங்கள் கடமைகளை அமைதலாய் நிறைவேற்றுகிறார்கள். அவர்களை அறிவாரும் புகழ்வாரும் இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு தேவனால் வரும் புகழ்ச்சியும் ஆசீர்வாதமுமே போதும். "இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்பது நமது என்மானுடைய மறைவான ஜீவியத்தின் முடிவில் கிடைத்த தேவபுகழ்ச்சி என்பதை நாம் மறக்கக்கூடாது.

6

ஸ்நானக யோவான்

John the Baptist

பலஸ்தீனா தேசத்தின் தென்பாகத்திலே, யூதாவிலுள்ள **எபிரோன்** என்னும் மலைநாட்டிலே, வயதான **சகரியாவும்,** மனைவி **எலிசபெத்தும்** சஞ்சரித்து வந்தார்கள். **யோசுவா** இந்நாட்டை ஆசாரியர்களின் குடியிருப்புக்காகக் கொடுத்திருந்தார். ஆசாரியர்கள் பெருங்கூட்டமாகப் பெருகினபோது **தாவீதரசன்** அவர்களை இருபத்துநான்கு வகுப்புகளாகப்பிரித்து ஊழியம் செய்துவரும்படி ஏற்பாடுசெய்திருந்தார். இதில் சகரியா எட்டாவது வகுப்பைச் சேர்ந்தவர். பாபிலோன் சிறையிருப்பிலிருந்து இவர்களில் நாலு வகுப்பு மாத்திரம் சுயதேசத்துக்குத் திருப்பிவந்து, தங்களை முன்போல இருபத்துநாலு வகுப்புகளாகப் பிரித்துக்கொண்டு, தேவ பணிவிடையை நிறைவேற்றிவந்தார்கள். சகரியாவும் எலிசபெத்தும் நீதியும் தேவபக்தியுமுள்ளவர்கள். ஆகிலும், அவர்களுக்குப் புத்திரபாக்கியம் இல்லையென்ற ஒரு கவலையே பெருங்கவலையாயிருந்தது. இதற்காக தேவனை நோக்கி இடைவிடாது ஜெபித்து வந்தார்கள். உடனே உத்தரவு கிடைக்காததால் இனிமேல் பிள்ளையில்லை என்பதாகச் சோர்வடைந்தார்கள். நமது காலமும் தேவகாலமும் ஒன்றல்ல. மேலும் தேவனுடைய தாமதம் நாம் வேண்டிக்கொள்வதைப் பார்க்கிலும் மிகவும் மேலான ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்பதை நாம் மறக்கலாகாது. **அன்னாளின்** விண்ணப்பத்துக்குத் தாமதித்த **யெகோவா,** மகா சிறந்த தீர்க்கதரிசியாகிய **சாமுவேலை** அவளுக்குக் காடாட்சித்தார். இவர்களுடைய ஜெபத்துக்குத் தாமதித்த தேவன், தமது திருக்குமாரனுக்கு முன்தூதனான மகனை அனுக்கிரகஞ் செய்தார். முன்னமே இவன் பிறந்திருப்பானானால் தகப்பனைப்போல் இவனும் ஒரு **ஆசாரியனாகமாத்திரம்** இருந்திருப்பான்.

எருசலேம் **ஆலயத்தில் ஆசாரியர்** திரளாகவந்து கூடினாலும், **அவர்களில் மகாபரிசுத்த** ஸ்தலத்திற்சென்று

தூபங்காட்டுபவன் இன்னானென்று அறியும்படிக்கு சீட்டுப் போடுவார்கள். சீட்டு யாருக்கு விழுந்ததோ அவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் என்பது பூரண நம்பிக்கை. ஆகவே, இவ்விதம் தெரிந்தெடுக்கப்படுவது பெருஞ்சிலாக்கியமாக எண்ணப்பட்டது. சகரியாவின் பேருக்குச் சீட்டுவிழுந்து, அவர் தூபங்காட்டுகிற வேளையிலே கர்த்தருடைய தூதன் அவருக்குத் தோன்றி: சகரியாவே! உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன்மனைவி உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக; அவன் அநேருக்குச் சந்தோஷத்தை உண்டாக்கும் நற்புத்திரனும், கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனும், ஜீவகால நசரேயனும், ஆவியினால் நிறைந்தவனும், அநேகரை தேவனிடத்திற்குத் திருப்புகிறவனும், ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படி எலியாவின் ஆவியும் பலமும் உள்ளவனாக அவருக்குமுன்னே நடக்கிறவனுமாயிருப்பான் என்று அறிவித்தான்.

சகலமும் இயற்கைப்படியே நடக்க வேண்டுமேயன்றி இயற்கைக்கு விரோதமான காரியங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தற்காலத்து நவீனக் கொள்கைக்காரர் கிறிஸ்துவின் அதிசய பிறப்பையும் அவர் செய்த அற்புதங்களையும் சந்தேகிப்பதுபோல, சகரியாவும்: நானும் என் மனைவியும் வயது சென்றவர்களானோமே, அப்படியிருக்க இதை நான் எதினாலே அறிவேன், இதற்கு அடையாளம் என்னவென்று கேட்டார். தேவதூதன் அவரைப் பார்த்து: நான் யார்? நான் தேவசமுகத்தில் நிற்கிற **காபிரியேல்** அல்லவா? உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்க கடவுள் என்னை அனுப்பியிருக்கிறாரே. அப்படியிருக்க உனக்கு அடையாளமும் வேண்டுமோ? உன் மகன் பிறக்கும்வரை நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பதே உனக்கு அடையாளம் என்றான். மகன் பிறந்த எட்டாம் நாளில் அவனுக்கு விருத்தசேதனமும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட **யோவான்** என்னும் பெயரும் கொடுத்த பொழுது, ஊமையாயிருந்த சகரியா வாய்திறந்து ஆச்சரியமான ஸ்தோத்திரக் கீதத்தைத் தீர்க்கதரிசனமாகப் பாடினார். யோவான் என்பதற்கு **யெகோவாவின் ஈவு** என்று அர்த்தம். இவ்விஷயத்தை அறிந்த அயலகத்தாரும் பந்து ஜனங்களும் வெகுவாய்ச் சந்தோஷப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் வாசமாயிருந்த யாவருக்கும் பயமுண்டாயிற்று. யூதேயாவின் மலைநாடெங்கும் இவ்வர்த்தமானங்கள் பிரஸ்தாபமாகி, கேள்விப்பட்டவர்கள் யாவரும் இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோவென்று ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டார்கள். பிள்ளை வளர்ந்து ஆவியிலே, பலங்கொண்டது. கர்த்தருடைய கரமும் அந்தப் பிள்ளையோடிருந்தது.

இஸ்ரவேலர் நாற்பது வருஷக் காலமாக அலைந்து திரிந்து கஷ்டப்பட்ட ஓரேப், சேயீர் மலைகளைச் சேர்ந்த வனாந்தரம் பெரிதும் பயங்கரமுமானது. அது சவக்கடலின் மேல்கரை வழியாய் வெகுதூரம் வடக்கே யூதேயாவரை எட்டியிருக்கும். சவக்கடலின் கீழ்பாகமோ மனுஷ சஞ்சாரமற்றதும், காட்டு மிருகங்களுக்கு உறைவிடமுமாகிய பயங்கரமான வனாந்தரம். அதை மரண நிழலின் பள்ளத்தாக்கெனக் கூறலாம். தேவதூதன் அறிவித்தபடி யோவான் உலகத்தைவிட்டுப் பிரிந்து, தேவனுக்கென்று முற்றிலுமாய் ஜீவிக்கவேண்டிய நசரேயன், வயதான பெற்றோர் மரித்த பின்போ, அல்லது அவர்கள் உயிரோடிருந்தபோதோ, யோவான் வீட்டை விட்டு நீங்கி வனசஞ்சாரியாக யூதேயாவின் வனாந்தரத்திலே போய்த் தங்கினார். இரட்சகன் மறைவான நாசரேத்தூரில் தச்சுவேலை செய்துகொண்டு, தாம் நிறைவேற்ற வேண்டிய மகத்துவமான ஊழியத்துக்காகத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கையில், அவரது முன்தூதன் மறைவான இவ்வனாந்தரத்திற் சென்று ஆயத்தமாகி வந்தார். தன் வனவாசத்திற்கேற்ற பிரகாரம் ஒட்டக மயிருடையையும் இடுப்பில் வார்க்கச்சையையும் அணிந்து கொண்டிருந்தார். இது ஒட்டகத்தின் ரோமத்தால் செய்யப்பட்ட முரட்டுடை; இதை அரபியர் கூடாரங்களுக்கு மேற் திரையாகவும், ஏழைகள் மேலங்கியாகவும் உபயோகிப்பார்கள். வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவருக்கு ஆகாரமாயிருந்தன. இந்த வெட்டுக்கிளி யூதனுக்கு விலக்கப்பட்டதல்ல. அவைகளைப் புசிக்கலாமென தேவன் மோசேயைக்கொண்டு கற்பித்திருந்தார் (லேவி. 11:22). அரபியரும், எகிப்து, லிபியா என்னும் தேசத்திலுள்ள ஏழைகளும் வெட்டுக்கிளிகளை ஆகாரமாகப் புசிப்பார்கள்.

எலியாவைத் தன் கண்முன் எப்பொழுதும் நிறுத்தி ஜீவித்துவந்த யோவான், தனக்கு இவ்விதமான உடையையும் ஆகாரத்தையும் தெரிந்து கொண்டது நூதனமல்ல, மேலும் தேசத்தின் சீர்கெட்ட நிலைமையும், ஜனங்களுடைய அகோர பாவங்களும், வெளிப்படப்போகிற மேசியாவை ஏற்றுக்கொள்ள அவர்கள் முற்றிலும் தகுதியற்றவர்களாயிருக்கிறார்களே என்கிற கவலையும், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தபடியால், தன்னை இவ்விதமாக வெறுக்கவும், வனாந்தரத்தில் தங்கி அவர்களுக்காக ஜெபிக்கவும் அவரை ஏவிற்று. மனுஷர் கண்களுக்கு முற்றிலும் மறைந்து, கடவுளோடு சம்பாஷித்து, திருவசனத்தை இடைவிடாமல் தியானித்து, ஆவியில் அதிகமாய்ப் பலங்கொண்டு, ஆண்டவருடைய அழைப்பு வரும்வரைக்கும் பொறுமையுடன் காத்திருந்தார்.

இது இப்படியிருக்க, தேசத்தின் நிலைமையும் ஜனங்களுடைய காரியமும் எப்படியிருந்ததெனக் கவனிப்போம்.

இஸ்ரவேலர் தேவனுக்கு எவ்வளவு துரோகஞ் செய்திருந்த போதிலும் அவர் அவர்களை முற்றிலும் தள்ளிவிட்டவரல்ல. காலத்துக்குக்காலம் தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் தைரியப்படுத்தியும், எச்சரித்தும், புத்தி சொல்லியும் வந்தார். தேவசித்தத்தை மனுஷருக்கு வெளிப்படுத்தின தீர்க்கதரிசிகள் மல்கியாவரை தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். மல்கியாவுக்குப்பின்பு நானூறு வருஷக் காலமாய் பதினாலு தலைமுறைகளாக தீர்க்கதரிசிகள் எழும்பினதில்லை. யூதர்கள் வேதப்பிரமாணத்தைப் பிடித்துக்கொண்டிருந்த போதிலும் அவர்களை அனுதினமும் நடத்தும் தேவசத்தம் ஓய்ந்தது. பாரம்பரியமும் சடங்காசாரமும் வரவரப் பெருகி அவர்கள் கழுத்தை முறித்தன. செங்கோல் யூதாவைவிட்டு ஏற்கனவே நீங்கிற்று. அக்கிரமமும் ஆகாமியமும் வளர்ந்து பெருகின. பலிகளும் ஆராதனைகளும் கறைப்பட்டன. ஆசாரிய ஊழியம் அவமதிக்கப்பட்டது. ஏதோமியனாகிய ஏரோது செய்த கொடுமைக்கும் அக்கிரமங்களுக்கும் அளவில்லை. இவன் ரோமை அதிகாரிகளுக்குச் சார்பாயிருந்து யூதர்களைச் சகலவிஷயத்திலும் ஒடுக்கினான். கடுமையான வரிகளால் ஜனங்கள் தத்தளித்தார்கள். அன்னாவும் காய்பாவும் ஏரோதுபக்கம் சேர்ந்து தங்கள் சுயலாபத்தைத் தேடினார்கள். ரோமருடைய ஆளுகையை ஜனங்கள் முழுப் பகையாய்ப் பகைத்தார்கள். சலோத்தியர் என்னும் தேசாபிமானிகள் இராஜாங்கத்தை எதிர்த்துக் கலகஞ் செய்தார்கள். அப்படி செய்தபோதெல்லாம் ரோமருடைய பட்டயத்திற்கு இரையானார்கள்.

சனதரீம் என்னும் மகா சங்கம் ஏரோதியர் வஞ்சகத்தில் அகப்பட்டுத் தன் நீதியை இழந்தது. கொலைபாதகங்களுக்குக் கணக்கில்லை. அவிசுவாசமும், அந்தகாரமும், பயமும், திகிலும் மனுஷரை ஆண்டுகொண்டன. சீக்கிரம் ஒரு பெரிய மாறுதல் உண்டாகாதாவென்று எதிர்பார்த்தார்கள். தேவகோபம் பற்றியெரியுமோவென அஞ்சினார்கள். இக்கொடுமைகளைச் சகிக்கக்கூடாமல் ஊரைவிட்டு நீங்கி வனாந்தரங்களுக்குட் சென்று வனவாசிகளானவர்கள் அநேகர். மெய்விசுவாசிகளான சிறுகூட்டத்தார் **மேசியா** எப்போது வருவார், எப்போது வருவாரென்று ஏங்கித் தவித்தனர். அவர் வந்தால்தான் இஸ்ரவேலுக்கு மீட்பு உண்டென்பது அவர்கள் நம்பிக்கை. சூரியோதயத்திற்குமுன் காரிருள் பூமியை மூடியிருப்பதுபோல நீதியின் சூரியனாகிய இயேசுபகவான் உதிப்பதற்குமுன் பாவயிருள் உலகத்தை மூடிக்கொண்டிருந்தது. இவ்வாறு, நீசத்தொழில் புரிந்த **திபேரியு** இராயனாயிருக்க, யூதர்களைக் குரூரமாய் வதைத்த **பிலாத்து** தேசாதிபதியாயிருக்க, துன்மார்க்கனான **ஏரோது** அதிபதியாயிருக்க, அயோக்கியர்களான **அன்னாவும், காய்பாவும்** ஆசாரியர்களாயிருக்க,

தேவனுடைய ஜனங்கள் பலவிதத்திலும் தத்தளித்துக் கொண்டிருக்க, நானூறு வருஷங்களுக்குமுன் தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானதுபோல, வனாந்தரத்திலிருந்து "யோவானுக்கு தேவனுடைய **வார்த்தை** உண்டாயிற்று." அக்கினி அவரில் மூண்டது. இனி அமர்ந்திருக்க முடியாது.

எலியா திடீர்த்திடீரெனக் காணப்பட்டு தேவவாக்கைக் கூறினதுபோல, இதோ, யூதேயாவின் வனாந்தரத்தில் யோவான் திடீரெனத் தோன்றி "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறதென்று" முழங்கினார். "சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?" ஆளைப்பார்த்தால் பரதேசி. உடையைப்பார்த்தால் காட்டுமிராண்டி. நிற்கிற இடமோ வனாந்தரம். பிரசங்கமோ மகா சுருக்கம். தேசத்தாரை அழைக்க அவர் ஊருக்குள் போகவில்லை. ஆள்களை அனுப்பித் தன்னைப்பற்றித் தெரிவிக்க அவருக்குத் தூதர்களுமில்லை. பத்திரிகைமூலமாய்த் தன்னை விளம்பரஞ் செய்யப் பத்திரிக்கை அதிபர்களும் தனக்கில்லை. நடந்ததென்ன? தேசமே ஏகோபித்துப் புறப்பட்டு அவரைத்தேடி வனாந்தரத்திற்குச் சென்றது. வனாந்தரமே ஜனம் நிறைந்த தேசமாயிற்று. இக்காலத்தில் திருவசனத்தைக் கேட்கும்படி ஜனத்தைக் கூட்டுவதற்கு எடுத்துக்கொள்ளும் சிரமம் எவ்வளவு! நூதன நூதனமான விளம்பரங்கள் எவ்வளவு! செலவாகும் பணம் எவ்வளவு! கடைசியாகப் பெருமூச்சும் மனச்சோர்வுமே நாம் கண்ட பலன். தினந்தோறும் வீடுகளைச் சந்தித்தும், ஆலயத்துக்கு வாருங்கள் வாருங்கள் என்று ஜனங்களை அழைத்தும், அவர்கள் வர மனமற்றிருக்கிறார்களே என்று புலம்பும் போதகர்கள் எத்தனை! யோவானோ தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவரும், அவரால் நிரப்பப்பட்டவரும், அவரால் ஆயத்தமாக்கப்பட்டவரும், ஜனங்களின் பாவங்களை நினைத்துத் துயரமடைந்தவரும், தன்னை முற்றிலுமாக மறைத்து தன் எஜமானைமாத்திரம் மேன்மைப்படுத்துகிறவருமாகப் புறப்பட்டார். அதிசயமான பெரிய எழுப்புதல் தேசமெங்கும் உண்டானது.

இவர் கிறிஸ்துதானோ, எலியாதானோ, வந்து பாருங்கள் நாட்டாரே என்னும் சப்தம் நாலாபக்கமும் தொனிக்க, ஈசல் புறப்பட்டதுபோல் திரளான ஜனங்கள் யோர்தான் நதிக்கரை வந்து யோவானை மொய்த்துக்கொண்டனர். பெருமையுள்ள எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தாரனைவரும், யோர்தானுக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும், செழிப்பான கலிலேயா நாட்டாரும், இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதா யிருக்குமோவென்று ஆச்சரியத்தோடு அக்காலத்தில் பேசின எபிரோன் ஊராரும் யோவானிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஆயக்காரரும் பாவிகளும், கற்றோரும் கல்லாதவரும், தனவந்தரும் ஏழைகளும், பரிசேயரும், சதுசேயரும், வேதபாரகரும், மூப்பரும், ஆசாரியரும், போர்ச்சேவகரும் அவரைக் காணவும் அவர் பிரசங்கத்தைக் கேட்கவும் கூடினார்கள். அவர் தன் உயிரை அருமையாக எண்ணினவரல்ல. உலகத்தின் இன்ப சந்தோஷங்களை நாடினவருமல்ல, அவைகளை அனுபவித்தவரு மல்ல. உத்தியோகமோ, மனுஷர் தயவோ, சம்பாத்தியமோ தேடின வருமல்ல. அவர் தம்மைக் குப்பையாக எண்ணி காட்டுமிருகங்கள் மத்தியில் வாசம்பண்ணினவர். தாம் **சத்தமேயன்றி** மனுஷன் தானுமல்லவென்று உணர்ந்து நடந்தவர். மனுஷருடைய தயவோ முகத்தாட்சணியமோ அவருக்கு வேண்டியதில்லை. மனுஷருக்கு அவர் பயந்தவருமல்ல. கொடுங்கோல் மன்னனென்றாலும் கொடிய ஏழையென்றாலும் எல்லாம் அவருக்கு ஒன்றுதான். ஜாதிகளின் பாவமே அவருக்குப் பாரமாயிற்று. பரம இராஜனுக்கு அவர்களுடைய இருதயங்களை ஆயத்தப்படுத்தவேண்டு மென்பதே அவர் கவலையாயிருந்தது. ஆகையால் மூன்று காரியங்களை அவர்களுக்கு முன்பாக வைத்தார். நீங்கள் **மனந்திரும்ப**வேண்டியது. **ஞானஸ்நானம்** பெற்றுக் கொள்ளவேண்டியது. **பரலோகராஜ்யம்** சமீபம் என்று பிரசங்கித்தார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் மனந்திரும்புதலைப்பற்றிச் சொல்லியிருந்தபோதிலும், யோவான் பிரசங்கித்ததிலிருந்து அந்த வார்த்தை புதுக் கருத்துள்ளதாய் புதிய ஏற்பாடு முழுவதையும் ஆண்டுகொண்டது. இருதயத்தின் கேடுபாடுகளை அறிந்தவராக, அவர்கள் தங்கள் பாவங்களிலிருக்கும்பரியந்தம், மேசியாவினால் அவர்களுக்கு யாதொரு நன்மையும் வரமாட்டாதென்று வற்புறுத்திப் பிரசங்கித்தார். பழைய பாவங்களை முற்றிலுமாய் விட்டுப்பிரிந்து மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கவேணுமென்றும், அப்படியில்லாவிட்டால் கோடரி ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது, நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுமென்றும் மகா வைராக்கியத்தோடு பேசினார். அவருடைய வார்த்தைகள் கல்லான இருதயங்களை உடைக்கக்கூடியதும், இருதயங்களின் இரகசியங்களை ஊடுருவிச் செல்லக்கூடியதுமாயிருந்தன. இவர் வனாந்தரத்தில் இருந்தவராச்சுதே, இந்த ஜனங்களுடைய பாவங்கள் இவருக்கு எப்படித் தெரியும் என்று கேட்கலாம். ஆவியினால் போதிக்கப்பட்டவருக்கு ஜனங்களைப்பற்றி மற்றவர்கள் சொல்லிக்கொடுக்க அவசியமில்லை. யோர்தான் நதிக்கரையில் கூடினவர்கள் யாவரும் தங்கள் பாவங்கள் இவருக்கு எப்படித் தெரிந்ததென பிரமிக்கத்தக்கதாயிருந்தது. அவருடைய வார்த்தையைக் கேட்டவர்கள் யாவரும் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்து யோர்தான் நதியில் ஞானஸ்நானம்

பெற்றார்கள். பெந்தேக்கொஸ்தே நாளில் ஜனங்கள் பேதுருவைப் பார்த்து நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டதுபோல இவர்களும் கேட்டார்கள். அவர் ஜனங்களைப் பார்த்து: நீங்கள் தந்நயக்காரராயிராமல் உங்களுக்குள்ளவைகளை மற்றவர்களுக்குக் கொடுத்து உதவி செய்யுங்கள் என்றார். ஆயக்காரர் நாங்கள் என்னசெய்யவேண்டுமென்று கேட்டபோது: உங்களுக்குக் கட்டளையிட்டிருப்பதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதேயுங்கள் என்றார். பேர்ச் சேவகர் நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டபோது: நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும் உங்கள் சம்பளமே போதுமென்றிருங்கள் என்றார். பரிசேயரும் மகா பெருமையோடு தம்மிடத்தில் வருவதைக்கண்டு? விரியன் பாம்புக்குட்டிகளே? வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? ஆபிரகாம் உங்களுக்குத் தகப்பனென்று சொல்லி வீணே உங்களை வஞ்சித்துக்கொள்ள வேண்டாம்; கடவுள் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்றார். அவர் ஒருவரையும் தப்பவிடவில்லை.

மனந்திரும்புதல் இவர்மூலமாய்ப் புதுக் கருத்துள்ளதாகி ஜீவியத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கினதுபோல, **ஞானஸ்நானமும்** புதுக்கருத்தையும் புதிய ஆசீர்வாதத்தையும் கொண்டுவந்தன. மோசேயின் காலந் தொடங்கி இஸ்ரவேலருக்குள் பாத்திரங்களைச் சுத்தப்படுத்தி, தேவ பணிவிடையில் உபயோகிக்கும்படி அவைகளின்மேல் ஜலம் தெளிப்பது வழக்கம். இது ஒருவகை ஸ்நானம். பிற்காலத்தில் புறஜாதியாரான மற்றவர்கள் யூதமார்க்கத்தில் சேர்ந்தபோது, அவர்களுடைய பழைய மார்க்கத்தின் தீட்டுகளிலிருந்து சுத்திகரிக்கும் நோக்கமாய் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதுண்டு. ஆனால், யோவான் கட்டளையிட்ட ஸ்நானம் யூதர்களுக்கு முற்றிலும் நூதனம். ஏனென்றால், அவர்கள் ஆபிரகாமின் சந்ததியார். எட்டாம் நாளில் விருத்தசேதனம் பெற்றவர்கள். பஸ்காவை ஆசரித்தவர்கள். பண்டிகைகளையும் பலிகளையும் சர்வசுத்தாங்கத்தோடு கைக்கொண்டு நடந்தவர்கள். அப்படியிருந்தும் தங்களுக்கு அனாவசியமும் புதிதுமாய்த் தோன்றின ஸ்நானத்துக்குக் கீழ்ப்படியாதிருக்க அவர்களால் கூடவில்லை. மனந்திரும்புங்கள் என்று அவர் கட்டளை யிட்டபோது, எப்படி அவர்கள் இருதயங்கள் உடைந்து பாவங்களை அறிக்கை செய்தார்களோ, அப்படியே ஸ்நானத்துக்கு அவர் அழைத்தபோது அவர்கள் மனப்பூர்வமாய் கீழடங்க வேண்டியதாயிற்று. யோவானால் ஏற்படுத்தப்பட்ட ஸ்நானத்தை நமது ஆண்டவர் தேவ ஏற்பாடாக ஏற்றுக்கொண்டு புதிய

ஏற்பாட்டின் கட்டளைகளில் ஒன்றாகத் திருச்சபையில் ஸ்தாபித்தார் என்பதையும் அறிவோம்.

இராஜ்யத்தைப்பற்றி யோவான் போதித்ததும் புதிய கருத்தாகவேயிருந்தது. ஒருவேளை மற்றத் தீர்க்கதரிசிகளைப் போலவே இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையை இவரும் பூரணமாய் அறியாதிருக்கலாம். பழைய ஏற்பாட்டில் தேவன் இராஜாவென்றும், இஸ்ரவேல் அவருடைய இராஜ்யம் என்றும் பலவிடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள் தங்கள் இராஜாவாகிய மேசியாவையும் அவர் ஸ்தாபிக்கும் இராஜ்யத்தையும் எதிர்பார்த்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் இரோம இராஜ்யத்தை மேற்கொள்ளும் ஒரு உலகராஜ்யத்தை எதிர்பார்த்தார்களேயன்றி, ஆவிக்குரிய இராஜ்யத்தை அறிந்தவர்களல்ல. யோவான் பிரசங்கித்த பரலோக இராஜ்யம் ஆவிக்குரிய புதிய கருத்துள்ளது என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் இதோ இராஜன் வரப்போகிறார், சேனைகளையும் ஆயுதங்களையும் ஆயத்தம் செய்யுங்களென்று அவர் சொல்லாமல், இந்த இராஜ்யம் இருதயத்துக்குரியதென்று காட்டுகிறவராக "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தார்." பரலோக இராஜ்யம் என்பது நமதாண்டவருடைய பிரதான உபதேசமாக நாலூ சுவிசேஷங்களிலும் நிறைந்திருப்பதை அறிவோம். ஆகவே மனந்திரும்புதல், ஞானஸ்நானம் பரலோக இராஜ்யம் என்னும் இப்புதிய உபதேசம், இராஜாவுக்கு முன் தூதனாக ஓடிவந்த யோவான் பிரஸ்தாபிக்கும்படி கடவுளால் அவருக்கு அருளப்பட்டவைகள் என்பது நிச்சயம். அவைகள் **தேவ ஆலோசனைகள்** என்று பிந்தி ஆண்டவர் சொன்னதும் சரியே.

இவ்வண்ணம் தேசத்தில் பெரிய எழுப்புதல் உண்டானபோது யூத அதிகாரிகளுக்குள் யோவானைக் குறித்துக் கலக்கம் உண்டானது. இவர் வரவேண்டிய எலியாவோ அல்லது கிறிஸ்துதானோவென்று அறியும்படி ஆசாரியரையும் லேவியரையும் அவரிடத்தில் அனுப்பி, அவர் யாரென்று திட்டமாய் விசாரித்து வாருங்கள் என்றார்கள். இவர்களில் **நிக்கொதேமு** ஒருவர் என்பது அநேகருடைய அபிப்பிராயம். இது யோவானுக்குச் சோதனையான சமயம். தாழ்மைச் சொரூபியாகிய அவரோ: நான் கிறிஸ்து அல்லவேயல்லவென்று தீர்க்கமாய்ச் சொன்னார். நீர் எலியாவா என்று கேட்டார்கள், அல்ல என்றார். நீர் தீர்க்கதரிசியா என்று கேட்டார்கள், அதற்கும் அல்ல என்றார். நீர் யாரென்று எங்களுக்குச் சொல்லவேண்டு மென்றும் கேட்டார்கள். நான் ஒன்றுமில்லை, நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய **சத்தம்** என்றார். நீர் எலியாவுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல, கிறிஸ்துவுமல்லவென்றால் ஏன் ஸ்நானம் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள். அதற்கு யோவான்.

"நான் கொடுப்பது **ஜலஸ்நானம்.** எனக்குப்பின் சீக்கிரமாய் ஒருவர் வருகிறார். அவர் எனக்குப் பிந்திவந்தும் எனக்கு முன்னமே இருக்கிறவர்; அவர் என்னிலும் மேலானவர். அவருடைய பாதரட்சையின் வாரைக் குனிந்து அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல. அவர் **பரிசுத்தாவியினாலும் அக்கினியினாலும்** உங்களுக்கு ஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையிலுண்டு. மணி வேறு, பதர் வேறாகப்பிரித்து மணியைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அக்கினியால் சுட்டெரிப்பார். வருவார் வருவாரென்று நாலாயிரம் வருஷம் நமது முன்னோர்களும் நாமும் எதிர்பார்த்திருந்தவர் **அவர்தான்.** அந்தப் பரம இராஜனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணும்படி அவருக்கு முன்னாக ஓடிவந்த முன்தூதன் நானே என்றார்." நமதாண்டவர் புகழ்ந்து பேசின "எரிந்து பிரகாசித்த விளக்கு" இவரல்லவா?

ஸ்நானகனுடைய மகத்துவமான ஊழியம் ஆறு மாதங்கள்தான். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டுமென யோவான் விரும்பினபடியே, கிறிஸ்துவின் ஊழியம் பலமாய் ஆரம்பிக்கவேண்டிய சமயத்தில், முன் தூதனுடைய வேலை முடியவேண்டியதே. சகலத்திரளும் யோவானைக்கண்டு அவர் பிரசங்கத்தைக் கேட்டபோதிலும் ஒரு மனுஷன்மாத்திரம் இன்னும் அவரைப் பார்க்காதிருந்தான். அவன் திபேரியாவில் சஞ்சரித்த மகாபெரிய ஏரோதுவின் மகனான ஏரோது அந்திப்பா என்பவன், தகப்பனைப்போலவே இவனும் துன்மார்க்கன். இவன் ரோமாபுரிக்குப் போயிருந்தகாலத்தில் தன் சகோதரன் பிலிப்பு என்பவன் வீட்டில் தங்கி உபசரிப்புப்பெற்றான். உண்ட வீட்டுக்கு இரண்டகம்பண்ணும் இந்தத் துரோகி திபேரியாவுக்குத் திரும்பும் சமயத்தில் தன் சகோதரன் மனைவியைக் கைப்பற்றிக் கொண்டான். அவளுடைய யோக்கியதையும் இதிலே விளங்குகிறது. இவர்கள் கலிலேயாவுக்குத் திரும்பினபோது, ஏரோதுவின் முதல் மனைவி இதை அறிந்து அரபிதேசத்திலிருந்த தன் தகப்பன் வீட்டுக்கு ஓடிப்போய்விட்டாள். இப்படி யிருக்குங்காலத்தில் யோவான் திபேரியாவுக்குச் சமீபமாயுள்ள **அயினோன்** என்னும் இடத்தில் பிரசங்கித்து வந்தார். ஸ்நானகனைப் பார்க்கவும் அவர் பிரசங்கத்தைக் கேட்கவும் விரும்பி, ஏரோது அவரைத் தன் அரமனைக்கு அழைத்தான். மகாசபை மண்டபத்தில் கூடினது. ஏரோது, ஏரோதியாள், அவள் மகள், பிரபுக்கள், மந்திரிகளான அநேகர் கூடி ஸ்நானகனுடைய பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

ஏரோது பாவ ஜீவியத்திலிருந்தும் யோவானுக்குப் பயப்படாமல் அவரைப் பிரசங்கிக்கும்படி அழைத்த காரண மென்ன? ஒருவேளை தான் இராஜனானபடியால் தனக்கு விரோதமாக யோவான் ஒன்றும் சொல்லமாட்டார் என்று அவன்

நினைத்திருக்கலாம். ஏழைகளுக்கு ஒருவிதமகாவும் இராஜாக்களுக்கு ஒருவிதமாகவும் பிரசங்கிக்க யோவானுக்குத் தெரியாது. அவர் காற்றில் அசையும் நாணல் அல்ல. ஆவியானவர் தமது கூர்மையான அம்புகளைத் தொடுத்து எய்தார். இருதயங்கள் குத்தப்பட்டன. இராஜாவே! உமது பக்கத்தில் வீற்றிருக்கிறவள் யார்? அவள் உமது மனைவியல்லவே. உமது சகோதரனுடைய மனைவியை அநியாயமாய் நீர் வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல. அவள் உடனே தன் புருஷனிடத்திற் போய்ச் சேரவேண்டியது என்று வைராக்கியமாகப் பேசினார். கூட்டம் கலைந்தது, வினையும் சூழ்ந்தது. ஏரோது உணர்த்தப்பட்டான். ஏரோதியாளோ கோபாவேசங்கொண்டாள். அப்படியா செய்தி! காட்டுமிராண்டி இவன் எம்மாத்திரம்! இராஜ சபையில் எல்லோருக்கும் முன்பாக என்னை அவமானப்படுத்தினான். இவன் பிராணனை நான் வாங்காவிட்டால் நான் ஏரோதியாள் அல்லவெனத் தனக்குள் சபதம்பண்ணிக்கொண்டாள். ஆகிலும் உடனே காரியத்தை நிறைவேற்ற அவளால் கூடவில்லை. ஏரோது பாடு திண்டாட்டமாயிற்று. அவன் இடுக்கியில் அகப்பட்ட எலிபோல் தவித்தான். ஜனங்களெல்லோரும் யோவானை **தீர்க்கதரிசி** என்று மதித்தபடியால் அவருக்கு ஏதாவது தீங்கு நேரிட்டால் கலகம் உண்டாகும் என்கிற பயம் ஒருபக்கம். ஏரோதியாளுடைய விருப்பப்படி செய்யாவிட்டால் அவள் தன் புருஷன் வீட்டுக்கு ஓடிப்போவாளோ என்கிற பயம் மறுபக்கம். ஆகையால் இரண்டுக்கும் மத்தியில் யோவானைப்பிடித்துக் காவலில் அடைத்து வைத்தான். ஆண்டவர் ஏரோதை **நரி** என்று அழைத்ததிலும் தோஷமில்லை. ஏரோதியாளோ தன் சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்றசமயம் தேடிக் கொண்டிருந்தாள். ஸ்திரீகளின் சிநேகத்தைப்போலவே அவர்கள் பகையும் பயங்கரமானது.

ஏரோதுடைய முதல் மனைவியின் தகப்பனான அரபிதேசத்து இராஜாவால் கொடுக்கப்பட்ட மக்கீரஸ் என்னும் அரமனை தென்பாகத்தில் சவக்கடலுக்குக் கிழக்கே இருந்தது. இவ்விடத்தில் யோவான் சிறையாக வைக்கப்பட்டிருந்தார். ஏரோது ஸ்நானகனை அவ்விடத்தில் தயவாய் நடத்தினான் என்று சொல்ல இடமுண்டு. அவருடைய சிநேகிதர்கள் தாராளமாக அவரிடத்தில் வரவும்; அவர் சொல்லும் விஷயங்களைப் போய் மற்றவர்களுக்கு அறிவிக்கவும் இடங்கொடுத்திருந்தான். ஏரோது தானே அங்கேபோய் அவரைக் கண்டு பேசுகிறதுமுண்டு. அவர் நீதியும் பரிசுத்தமும் உள்ளவரென்று நன்குணர்ந்து அவரிடத்தில் ஆலோசனை கேட்டு தன் காரியங்களை நடப்பித்து வந்தான். எவ்வளவு காலம் ஸ்நானகன் சிறையிலிருந்தார் என்று திட்டமாகத் தெரியவில்லை. அவர் இரண்டொருவருஷம் அக்கோட்டையில் இருந்திருக்கலாம்.

இக்காலத்தில் ஏரோது ரோமாபுரிக்குப் போய்த் திரும்பினான்.

யோவான் சிறையிலிருந்த காலத்தில் கிறிஸ்துவின் கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. கலிலேயாவில் அவர் தமது மகத்தான கிரியைகளை நடப்பித்தார் திரளான ஜனங்கள் அவரை இடைவிடாமல் பின்சென்று போற்றினார்கள். இவைகளைக் கண்ட யோவானுடைய சீஷர் தங்கள் குருவிடம் சென்று எல்லாவற்றையும் விவரமாய் அறிவித்தார்கள். அவைகளைக் கேட்டபோது யோவானுக்கு எப்படியிருந்திருக்குமென்று நாமே யோசித்துக் கொள்ளவேண்டியது. அவர் தமது சீஷரில் இரண்டுபேரை அழைத்து: "வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமோ" என்று விசாரிக்கும்படி அவரிடத்தில் அவர்களை அனுப்பினார். இயேசு தேவகுமாரனென்றும், அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறவரென்றும், பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் கொடுப்பவரென்றும், அவரே கிறிஸ்துவென்றும், மகா பலமாய்ச் சாட்சி கூறின யோவான் இச்சமயத்தில் அவ்வாறு கேட்டது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இப்பொழுது ஆண்டவர் கலிலேயாவில் பலத்த கிரியைகள் செய்ததால் தாம் கூறி அறிவித்த கிறிஸ்து இவர்தானாவென்று நிச்சயப்படுத்திக்கொள்ளும்படி இப்படிக் கேட்டாரென்றும், தம்மைப் பின்சென்ற சீஷர்கள் கிறிஸ்துவைப் பின் செல்லும்படி விரும்பி அவர்கள் நிமித்தம் இப்படிக் கேட்டாரென்றும் சொல்லுகிறவர்கள் உண்டு. ஆனால் "வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா?" என்ற கேள்வியில் இந்த எண்ணம் அடிபட்டது.

வேதாகமத்தில் கிறிஸ்து ஒருவர் தவிர குறைவற்ற பூரண புருஷர் வேறு யாருமில்லை. யோவான் இப்படிக் கேட்டதினிமித்தம் அவர் முழுவதும் தவறிப்போனார் என்று ஒருக்காலும் சொல்லக்கூடாது. அவர் இப்பொழுது அகப்பட்டிருந்த அந்தகாரமான நிலைமையே இவ்வித **சந்தேகத்துக்குக்** காரணம். நமது இரட்சகருக்கும் இதுபோன்ற மலைப்பான சமயங்கள் வந்ததுண்டு. அந்நிமிஷத்திலேயே அவைகளை மேற்கொண்டார். யோவானுடைய வைராக்கியமான சுபாவத்தையும், இடைவிடாத ஊக்கமான ஊழியத்தையும் நாம் அறிவோம். கிறிஸ்துவின் மூலமாய் தேவராஜ்யம் வந்துவிடுமென்றும், பதர்கள் அவர் தூற்றுக்கூடையால் பறக்கடிக்கப்பட்டு, கனிகொடாத மரங்கள் அவர் கோடரியால் வெட்டுண்டு, இஸ்ரவேலின் நம்பிக்கை உடனே பலிக்குமென்றும் அவர் பூரணமாய் நம்பியிருந்தவர். அவ்வாறே ஜனங்களுக்குப் பிரசங்கித்தவர். இப்போது நீண்ட காலமாய் தமது நல்ல வயதில் யாதொரு வேலையும் செய்யக்கூடாமல், யாதொரு வார்த்தையும் பேசக்கூடாமல், இருட்டறையில் அடைபட்டிருப்பதை சகிக்கக்கூடவில்லை. மனம் சோர்ந்து போகிறது. அவர்

கிறிஸ்துவானால் நான் விடுவிக்கப்படாமல் இவ்வாறு அடைபட்டிருப்பானேன்? தீமையை அழித்து நன்மையை ஏன் அவர் நிலைநாட்டவில்லை? சிறை பட்டவர்களை விடுவிக்க வந்தவரானால் என்னை ஏன் கவனிக்கவில்லை? எத்தனையோ அரிய கிரியைகளைச் செய்கிறாரே. திரள் ஜனங்கள் அவரைப் போற்றுகிறார்களே. அவர் கிறிஸ்துவாக் வெளிப்பட்டு இத்தனை மாதங்களாகுதே. தமது ஏழை முன்தூதனை மறந்துவிட்டாரோ? இவ்வாறான பல கேள்விகள் அவர் மனதில் வந்திருக்கக்கூடும்.

இவரே கிறிஸ்து என்று ஒருவேளை நான் தெரியாமல் சொல்லிவிட்டேனோ? தயவு செய்து நீங்கள் உடனேபோய் 'வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா' என்று கேளுங்களென்று அனுப்பினார். சந்தேகம் சாதாரணமான மனுஷருக்கு வருவதில்லை. பலத்த விசுவாசிகளுக்கே பலத்த சோதனைகள் வரும். எதிலே அவர்கள் விசேஷித்தவர்களோ அதிலேதான் அவர்களுக்குச் சோதனை உண்டு. இவரே கிறிஸ்து என்பது யோவானுடைய சாட்சி. இவர்தான் கிறிஸ்துவோ என்பது தற்சமயம் யோவானுடைய சந்தேகம். மேலும் தீர்க்கதரிசிகள் தாங்கள் அறிவிக்கிறவைகளைப் பூரணமாய் அறிந்துகொண்டவர்கள் என்று சொல்ல இடமில்லை. தாங்கள் சொன்னவைகளின் பொருளை அவர்கள் அறியாதிருந்தும் தேவ ஆவியின் ஏவுதலால் கிறிஸ்துவைக்குறித்து அநேக விசேஷங்களை முன்னறிவித்திருக்கிறார்கள். யோவானும் தீர்க்கதரிசியாக கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி கொடுத்திருந்தும் அவர் இராஜ்யம் வளருகிற தன்மையைப் பூரணமாய் அறிந்தவரல்ல. அவ்வித அறிவு அனுபவத்தால் வரவேண்டியது.

ஆண்டவர் யோவானுக்கு அனுப்பிய பதில் கவனிக்கத் தக்கது. நானே கிறிஸ்து என்று அவர் சொல்லவில்லை. மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆண்டவர் நேராய் உத்தரவு கொடுக்கிறதில்லை என்பதை சுவிசேஷத்தில் காணலாம். யோவானுடைய இருதயத்தின் தத்தளிப்பை ஆண்டவர் அறிவார். மகா தைரியமுள்ள தமது முன் தூதன் இவ்வாறு கலங்கினதற்குக் காரணமின்னதென்றும் அவருக்குத் தெரியும். நான்தான் **கிறிஸ்து** என்று அவர் சொன்னபோதிலும் அதினாலே யோவானுடைய திகைப்பு நீங்காதென்பதும் அவருக்குத் தெரியும். நோய்க்கேற்ற பரிகாரம் செய்யும் பரமவைத்தியன் அவர். தேவ காரியங்களுக் கடுத்த உள்ளான சந்தேகங்கள், உள்ளான வெளிப்படுத்தலால் மாத்திரம் நீங்கும். எவ்வளவோ சாமர்த்தியமும் நியாய தோரணையுமான புறம்பான வார்த்தைகளால் நீங்காது. சந்தேகம் மனதின் யோசனைக்குறியது. அந்த யோசனையில் அந்தகாரம் உண்டாயிருக்கிறது ஆகையால் அந்த யோசனையில் வெளிச்சம் பிரகாசிப்பதால் மாத்திரம் அந்தகாரமாகிய சந்தேகம் நீங்கும்.

அவ்விரண்டு சீஷரும் ஆண்டவரிடத்தில் வந்த நேரத்தில் அவரிலிருந்து பலத்த கிரியைகள் வெளிப்பட்டன. அவர் செய்த அற்புதங்களை அவர்களே கண்டார்கள். அவர் பிரசங்கித்த உபதேசத்தை அவர்களே கேட்டார்கள். ஆண்டவர் அவர்களைப்பார்த்து: நீங்கள் கண்டதையும் கேட்டவைகளையும் போய் யோவானுக்கு அறிவியுங்கள். குருடர் பார்வை யடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள். மரித்தோர் எழுந்திருக்கிறார்கள். தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறது என்றார். வரவேண்டியவர் எவரோ அவரிடத்தில் இப்படிப்பட்ட கிரியைகள் நிறைவேற வேண்டும் என்பது தீர்க்கதரிசன அடையாளம். சரீர ஆசீர்வாதங்களையும் ஆத்தும இரட்சிப்பையும் அருளுபவர் யாரோ அவரே **கிறிஸ்து**. மேலும் "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்றும் சொல்லி அவர்களை அனுப்பினார். ஆண்டவர் அனுப்பின மருந்து யோவானின் நோயை நீக்கும் பரிகாரமாயிற்று. ஏனென்றால், இவ்வார்த்தைகள் ஸ்நானகனை யோசிக்கச் செய்தது. தீர்க்கதரிசனத்தை அவர் அறியாதவரல்ல. அப்பா! தீர்க்கதரிசனத்தின்படி **நீ முன்தூதன்** என்பது எப்படி நிச்சயமோ, அதுபோலவே நான் **கிறிஸ்து** என்பதும் தீர்க்கதரிசனத்தின்படி நிச்சயம் என்பதைக் கண்டுகொள் என்று அவர் சொல்வதுபோலிருந்தது. அந்தகாரப்பட்டுத் தவித்த அவர் மனதுக்கு ஆண்டவர் நினைப்பூட்டின தீர்க்கதரிசனம் புது உயிரைக் கொடுத்தது.

நாம் வேதத்தில் எவ்வளவு வல்லவர்களாயிருந்தாலும், நாம் சந்தேகத்தால் தத்தளிக்கும் சமயத்தில் ஒரு சிறுபிள்ளை சொல்லும் ஒரு வேதவாக்கு நமது அந்தகாரத்தை நீக்கி நம்மை மகிழ்ச்சியாக்கியிருப்பதை நாம் அறிவோம். அதுமாத்திரமல்ல, இடறலைப்பற்றி ஆண்டவர் சொன்னதும் அவரை அதிகமாய் உணரச் செய்திருக்கும். என் முன்தூதனே தத்தளிக்கவேண்டாம். நமது வழிகள் தேவவழிகள் அல்ல. நமது எண்ணம்போல் கடவுள் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கிறவரல்ல. நமக்கு விளங்காத அந்தகாரமான வழியின் மூலமாய் அவர் **சித்தம்** நிறைவேறவேண்டுமானால் நாம் அதற்கு அடங்கியிருக்கவேணும். நாம் செய்யும் வேலையல்ல, அவர் சித்தம் நிறைவேறுவதே தேவவேலையாகும். நீ இவ்வாறு உன் ஊழியத்தைவிட்டுப் பிரிந்து, ஜனங்களால் மறக்கப்பட்டு, துன்மார்க்கனால் சிறையில் அடைபட்டு, என்னுடைய உதவியும் உனக்கு இல்லாததுபோல் தோன்றுவது உன்னால் தாங்கக்கூட வில்லை. தேவனுடைய இராஜ்யத்தினிமித்தம் உன்னைப் பார்க்கிலும் கொடிய பாடுகளுக்கு ஆளாக நான் பிறந்திருக்கிறேன். எவ்வளவு அந்தகாரமானாலும் **இடறலுக்கு** இடங் கொடாதிருப்பவனே

பாக்கியவான் என்பதாகச் சொல்லி யனுப்பினார். யோவான் மாத்திரமல்ல. இக்காலத்தில் நமக்குள்ளும் இவைபோன்ற சந்தேகங்கள் வரலாம். என்ன? உலகம் இருந்தபடிதானே இருக்கிறது. அக்கிரமங்களும் பாவங்களும் பெருகிக் கொண்டுதானே போகிறது. சபைகள் வழக்கம்போல் தங்கள் காரியங்களை நடத்திக்கொண்டுதானே போகின்றன. பற்பல மார்க்கத்தாரும் தங்கள் கடமைகளைச் செய்து கொண்டுதானே போகிறார்கள். கிறிஸ்து உலகத்தில் விசேஷமாகச் செய்கிறது என்ன? இரண்டாயிரம் வருஷகாலமாகிறதே. அவர் இருப்பதும் இராததும் தெரியவில்லையே. காரியங்கள் இவ்வாறிருக்க தேவராஜ்யத்தை எங்கே காண்கிறது? நமக்கு நல்லகாலம் எப்போ வரப்போகிறது என்பதாக நாம் திகைக்கலாம். "என்னிடத்தில் இடறலடையா திருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்னும் சத்தம் நமது செவிகளில் தொனிக்கிறது. கர்த்தர் மெய்யாகவே பூமியில் கிரியை செய்கிறார். அவர் செய்கிற விதமோ நமக்குத் தெரியாதிருக்கலாம். அவர் கிரியை செய்யும் விதம் முற்றிலும் நமது எண்ணத்துக்கு விரோதமாகவும் தோன்றலாம். எங்கெங்கே, யார் யாருக்குள்ளே, எவ்விதமாக அவர் கிரியை செய்கிறார் என்பதை அறிந்தவர்கள் யார்? பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. திடீரென அவர் நடப்பிக்கும் அதிசயமான காரியங்களால் உலகம் பிரமிக்கக்கூடும். அவர் தாமதிப்பதால் அல்லது நமது புத்திக்கு விளங்காவண்ணம் கிரியை செய்வதால், ''வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமோ" என்று நாம் கேட்பது சரியல்ல. யோவான் இப்படிக் கேட்டதால் ஆண்டவர் கோபித்துக்கொள்ளவில்லை. பக்கத்தில் நின்ற ஜனங்கள் ஒருவேளை தப்பெண்ணங் கொள்வார்கள் என்று நினைத்து; யோவான் மேன்மையான தீர்க்கதரிசி என்றும், ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லையென்றும், வேதவாக்கியத்தால் குறிக்கப்பட்டுப் பிறந்தவன் அவனே என்றும் புகழ்ந்து பேசினார்.

இராஜாக்கள் தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடும் தினத்தில் கைதிகளை விடுதலைசெய்வது வழக்கம். பாவி ஏரோது பிறந்த நாள் பரிசுத்த யோவான் இறந்த நாள். அவனுடைய பிறந்தநாள் கொண்டாட்டம் தெற்கேயுள்ள மக்கீரஸ் என்னும் அரமனையில் நடைபெற்றது. இராஜ ஊத்தியோகஸ்தரும் இனத்தாரும் ஏகமாய்க்கூடினார்கள். மண்டபங்கள் புஷ்ப அலங்காரம் பெற்றன. வாத்தியங்கள் இனிமையாகத் தொனித்தன. தன்னையே தெய்வமாகப் போற்றும் அவபக்தன் செய்த செலவுக்குக் கணக்கில்லை. புசிப்புக்கும் குடிப்புக்கும் குறைவில்லை. இராஜா நீடூழி வாழ்கவென்று வாழ்த்தும் சத்தத்துக்கு ஓய்வில்லை. சகலமும் இவ்வாறு கோஷ்டமாயிருக்கும்

சமயத்தில் ஏரோதியாள் மகள் சாலோமே என்பவள் சபை முன் வந்து நாட்டியமாடினாள். சகலரும் சபாஷ் சபாஷ் எனக் கைதட்ட, ஏரோது தன்னை மறந்து அப்பெண்ணைப்பார்த்து: நீ எதைக்கேட்டாலும் தருவேன், என் இராஜ்யத்தில் பாதியானாலும் சரிதான் என்று ஆணையிட்டான். மகள் உடனே தாயிடம் சென்று ஆலோசித்துத் திரும்பிவந்து. இப்பொழுதே யோவானுடைய **தலையை** இங்கே ஒரு தட்டில் எனக்குத் தரவேண்டும் என்றாள். இது இப்படி நடக்கும் என்று ஏரோது நினைக்கவில்லை. அவன் துக்கப்பட்டான். ஆகிலும் நாலுபேர் அறிய ஆணையிட்டதினிமித்தம் தலையைக்கொடுக்கும்படி கட்டளையிட்டானாம். குடிவெறி சுயபுத்தியைக்கெடுத்தது. மகளே! இராஜ்யத்தில் பாதியானாலும் முழுவதுமானாலும் கொடுத்துவிடுவேன். அந்தப் பரிசுத்தவானுடைய தலையோ, பதினாயிரம் இராஜ்யங்கள் சேர்ந்தாலும் அதற்கு ஈடாகாது. விலைமதிக்கக்கூடாத காரியத்தைக் கேட்கிறாய், அது என்னால்கொடுக்க முடியாதென்று சொல்லியிருக்கலாம். அவன் அப்படிச் சொல்லவில்லை.

மன்னன் சொல்லுக்கு மறுவார்த்தை உண்டோ? அவன் கட்டளையிடவே மரண தூதர்கள் சிறைச்சாலை சென்றார்கள். இதற்குள்ளாக யோவான் தன்வேளை வந்துவிட்டதென்பதை தன் ஆவியில் அறிந்திருக்கலாம். அவ்விருண்ட நேரத்தில் வழக்கமாகப் போகிற சேவகனைத்தவிர, வேறொருவனுங்கூட அறைக்குள் நுழைவதை யோவான் கண்டபோது, தேவனே உமது சித்தம் போல் ஆகட்டுமெனத் தமது ஆவியை ஒப்புவித்தார். ஒரு நிமிஷத்தில் சிரசு வேறே உடல் வேறே ஆயிற்று. தாயின் வயிற்றிலிருந்தபோதே ஆவியினால் நிறைந்தவர். உலகத்தை விட்டுப் பிரிந்து தேவசமுகத்தில் தங்கி வேதவசனத்தால் தன்னை ஆயத்தம் செய்தவர். ஊழியத்தில் பிரவேசித்ததுமுதல் ஊக்கத்தோடும் உண்மையோடும் பிரசங்கித்து அநேகரை அவர்கள் பிதாவாகிய தேவனிடத்தில் திருப்பினவர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து உத்தமமாய்ச் சாட்சி கூறி அவருக்கு வழியை ஆயத்தப்படுத்தினவர். இவ்வாறு தமது ஓட்டத்தை முடித்தார். சூரியன் பிரகாசித்தவுடனே விடிவெள்ளி மறைந்தது. அது நமது கண்களுக்கு மறைந்தது, கடவுளுக்கு மறையவில்லை. இதுவே கடவுள் அவருக்கு ஏற்படுத்தின பாதை. இராஜா வந்தபின் முன்தூதனுக்கு வேலையில்லை. தேவ சித்தத்தை ஏரோது அறியாமல் நிறைவேற்றினான். தட்டிலிருந்த அந்தத் தலையைச் சிறுபெண்ணுக்குக் கொடுத்தார்கள். அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொண்டுபோனாள். இருவரும் அந்த முகத்தைப் பார்த்தார்கள். நீ இவளை வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல, புருஷனிடத்தில் அவளை அனுப்பிவிடு என்று அவர் சொன்ன சொல் திரும்பவும் அவ்வாயினின்று புறப்படுவது

போலிருந்தது. அந்தக் கண்கள் அவள் இருதயத்தை ஊடுருவப் பார்த்தன. என்ன பிரயோஜனம்? உரங்கொண்ட பாவிக்கு உணர்வேது? பெண்கள் சம்பந்தப்படாத கொலைகள் சொற்பம்.

சிறைச்சாலையின் பக்கமாய் நின்ற சீஷர்கள் தாங்கக்கூடாத துயரமடைந்தார்கள். ஐயோ, நிமிஷத்தில் போய்விட்டாரே என்று அழுதுகொண்டு அவருடைய உடலை மரியாதையாக எடுத்து கீழ்பக்கமாயுள்ள மலையின் அடிவாரத்தில் புதைத்தார்கள். அவர்கள் இனி என்ன செய்வார்கள்? யாரிடம் போவார்கள்? நாம் நமது துன்பத்தில் யாரிடம் போவோமோ அவரிடத்தில்தான் அவர்களும் போனார்கள். நான் கிறிஸ்துவல்ல, அவரே கிறிஸ்து என்று யோவான் பல முறையும் சொன்னதை அவர்கள் கேட்டதில்லையோ? அவர் கிரியைகளைத் தாங்களே கண்டதில்லையோ? ஆம், அவரிடத்தில் சென்று மகா துயரத்தோடு: ஆண்டவரே! யோவானைக் கொன்று போட்டார்களே என்று புலம்பினார்கள். இவர்கள் சொல்லித்தான் ஆண்டவருக்குத் தெரியும் என்றல்ல. இதைக் கேட்டபோது ஆண்டவர் **ஒன்றும் பேசாமல்,** வனாந்தரமான ஓரிடத்திற்குத் தனியே போனார். அவர் மனதிலோ, யோவானே! நீ பாக்கியவான், நீ எனக்கு முந்திக்கொண்டாய். நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமள்வும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன். ஆகிலும் நானும் சீக்கிரம் வந்துவிடுவேன் என்பதுபோல் நினைத்திருக்கலாம்.

பரிசுத்தவானைக் கொன்ற பழி இந்தப் பாவிகளை விடுமோ? கிறிஸ்து தேவ தீர்மானப்படி மரித்தாலும் அவரைக் கொலைசெய்தவர்கள் கோபாக்கினைக்குத் தப்பவில்லையே. தேவன் தமக்கு விரோதமாகச் செய்யும் காரியங்களைப் பொறுத்துக்கொண்டாலும், தமது பக்தர்களுக்குச் செய்யும் கொடுமையைச் சகிக்கமாட்டார். சூரியனின் உஷ்ணத்தைச் சகித்தாலும் சூரியனால் உஷ்ணமான மணலின் கொதிப்பை தாங்கக்கூடியவன் யார்? எவ்வளவு தூரமானாலும் மனுஷன் வெயிலிலே போவான், ஆனால் அந்த மண்ணிலே நடக்கமுடியாமல் துள்ளிவிழுவான். யோவான் மரித்தது முதல் ஏரோதுக்குத் திகில் பிடித்தது. ஆவனால் தூங்க முடியவில்லை. இதோ! யோவான் வந்துவிட்டான் என்று துள்ளி எழும்புவான். கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, நான் சிரச்சேதம் செய்த யோவானே மரித்தோரிலிருந்து எழும்பிவிட்டான் என்று ஜனங்களுக்குச் சொல்லுவான். இத்தோடே முடிந்ததா? இல்லை, ஏரோதும் ஏரோதியாளும் வெகுசீக்கிரம் இராஜ்யத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு, தனித்த சிறைச்சாலையில் அடைப்பட்டுச் செத்தார்கள். நடனக்காரியும் பனிக்கட்டியில் உருகி மடிந்தாள்.

7
கிறிஸ்துவின் ஸ்நானம்
The Baptism of Christ

முன்னொருகாலத்தில் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு மெசொப்பொத்தாமியா நாட்டில் மகிமையின் தேவன் தரிசனமாகி, உன் இனத்தையும் ஜனத்தையும் விட்டுப் புறப்படு என்று அழைத்ததுபோல, ஆபிரகாமின் **சந்ததியாகிய** கிறிஸ்துவுக்கு அழைப்பு வந்தது. "தேவனே உமது சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்" என்று சொல்லிப் புவியில் வந்த நமது இரட்சகன், இந்த முப்பது வருஷக்காலமாக நாசரேத்தில் மறைந்திருந்ததும், அன்றாடக போஷிப்புக்காகக் கைத்தொழில் செய்துவந்ததும் தேவசித்தமே. தமக்கு அழைப்பு வந்தவுடன் யாரோடும் ஆலோசனை செய்யாமல், தாம் நாள்தோறும் கையிலெடுத்து வேலைசெய்த ஆயுதங்களை வைத்துவிட்டு, தமது தாயையும் சகோதரரையும் ஊரையும் விட்டுப் புறப்பட்டார். யெஸ்ரயேலின் சமபூமியைக் கடந்து செல்லும் பாதை வழியாய், அருமை எஜமான் கால்நடையாய் நடந்து, சமாரியா யூதேயா மலைகளின் வழியாகச் சென்று, இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்திற்குக் கடந்துபோனதும், எலியா தீர்க்கன் தன் சால்வையால் பிரித்ததுமான யோர்தான் நதிக்கரை வந்து சேர்ந்தார். அச்சமயத்தில் யோவான் தன் பிரசங்கத்தை முடித்து ஜனங்களுக்கு ஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்தார். நமதாண்டவரும் ஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி யோவானிடத்திற்குப் போனார்.

யோவான் இராஜாக்களுக்கு அஞ்சாத வீரன்! மேன்மைபெற்ற பரிசேயரை விரியன் பாம்புக்குட்டிகளே என்றழைத்தவர்! மனுஷர் யாருக்கும் பயப்படாத தைரிய நெஞ்சன்! இவரைக் கண்டதும் பெட்டிக்குள்ளடங்கின பாம்பு போலாகி, ஐயனே! நான் தேவரீர் கையால் ஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமாவென்று அவருக்குத் **தடை செய்தார்**. எல்லாருக்கும் தடையின்றிக் கொடுத்தவர் இவருக்குத் தடை செய்த காரணமென்ன?

எஜமான் அற்புத அடையாளங்களுடன் அங்கு காணப்பட்டாரோ? மின்னல் இடி முழக்கங்களோடு அங்கு வந்தாரோ? பரத்திலிருந்து பிரகாசத்துடன் தோன்றினாரோ? அல்ல. அவர் சாதாரண மனுஷனாகவே அங்கு வந்தார். பின்னை ஏன் யோவான் தடைசெய்தார்? தங்கள் கொள்கைகளில் திட்டவட்டமுள்ளவர்கள் மற்றவர்களைத் தங்கள் சபைகளில் சேர்க்கும்போது தங்கள் சபைக்குரிய உபதேசங்களை அவர்கள் படித்து ஒப்பித்தாலன்றி இலேசாய்ச் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். யோவானோ கண்டிப்பான போதகன். தன்னிடத்தில் ஸ்நானம் பெறும்படி வருகிறவர்களிடத்தில் பாவ உணர்வையும் மனந்திரும்புதலையும் கண்டாலன்றி ஸ்நானம் கொடுக்கமாட்டார். இயேசுவானவர் மற்றவர்களைப்போல் மனந்திரும்பாமலும் பாவ அறிக்கை செய்யாமலும் வந்ததினாலே அவருக்குத் தடைசெய்தாரோ? அல்ல. அவர் சொன்ன மற்ற வார்த்தைகளினாலே அது காரணமல்லவென்று அறிகிறோம். தேவரீரல்லவோ எனக்கு ஸ்நானம் கொடுக்கவேண்டியது, அடியேன் உமக்கு கொடுக்கவும் தகுமோ என்றார். ஒருவேளை தன்னிடத்தில் வந்தவர் இன்னாரென்று அறிந்துகொண்டதினால் தடைசெய்திருப்பாரோ? இதற்குமுன் இவர்களிருவரும் ஒருவரையொருவர் கண்டு பழகியிருப்பார்களென்று சொல்ல ஏதுவில்லை. சுவிசேஷகர் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

மேலும் நமதாண்டவர் கலிலேயாவிலுள்ள **நாசரேத்தில்** வசித்தார். யோவானோ தெற்கே வெகுதூரமான **எபிரோன்** என்னும் மலை நாட்டில் வசித்தார். ஆண்டவர் நாசரேத்திலே தங்கி, முப்பது வயதுவரை தமது ஊழியத்துக்கு ஆயத்தப்பட்டது போல, யோவானும் சிறு பிராயத்திலேயே வனாந்தரத்திற்குச் சென்று, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரையில் தேவசமுகத்தில் ஆயத்தமாகி வந்தார். மேலும், அவர் ஸ்நானம் பெற்று ஜெபித்தபோது, பரிசுத்தாவியானவர் அவர் மேலிறங்கினதைக் கண்டு அவரைத் தேவனுடைய குமாரனென்று தான் அறிந்துகொண்டதாகவும், அதற்குமுன்பு "நானும் இவரை அறியாதிருந்தேன், நானும் இவரை அறியாதிருந்தேன்" என்று யோவான் தானே இருமுறை சொல்லியிருக்கிறார். அப்படியானால் தன்னிடத்தில் வந்தவருக்கு ஸ்நானம் கொடுக்கப் பயந்து பின் வாங்கும்படியான இந்த **அறியாத அறிவு** எப்படிப்பட்டது? அவரை மேசியாவாக அறிந்துகொள்ளவில்லை யென்பது நிச்சயமானாலும், அவர் மேசியாவாயிருப்பாரோ என்ற உத்தேசம் அவருக்குள் உண்டாயிருக்கலாமோ?

இனம் இனத்தை அறியும் என்பது மெய். ஜெபத்தில் வல்லவனான ஒரு பக்தனைக்குறித்து மற்றொரு பக்தன் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கவேண்டுமென்று வெகுநாளாக

ஆசைகொண்டிருந்தார். சமயம் வாய்க்கவில்லை. அந்த ஜெப பக்தனிருக்கும் ஊருக்குச் சமீபமாயுள்ள ஒரு கிராமத்தில் சந்தை கூடுவதுண்டு. ஒருநாள் வியாபார விஷயமாய் மற்றவர் அந்தச் சந்தைக்குப் போயிருந்தபோது, திரளான ஜனங்கள் நடுவில் ஒரு மனுஷன் வருவதைக் கண்டு: நீர் இன்னாரல்லவா என்று கேட்க, அந்த ஜெப பக்தன்: நான்தான், நீர் என்னை எப்படி அறிவீரென்று கேட்டார். உமது முகப்பார்வையினால் உம்மை இன்னாராகத்தானிருக்கவேண்டும் என்று நினைத்தேன் என்று சொன்னார். இயேசுவானவர் பரிசுத்தாவியினால் உற்பவித்துப் பிறந்தவர்; யோவான் தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்தாவியினால் நிறைந்தவர். அவர் ஆவியிலே பலங்கொண்டு வளர்ந்தவர்; இவரும் ஆவியிலே பலங்கொண்டு வளர்ந்தவர். அவர் இராஜனாகத் தமது ஊழியத்திற்கென்று ஆயத்தமானவர்; இவர் இராஜனுக்கு முன் தூதனாகச் செய்யும் ஊழியத்திற்கென்று தன்னை ஆயத்தப்படுத்தினவர். அவர் தேவவாக்கியங்களிலும் ஜெபத்திலும் ஆழ்ந்த தியானமுள்ளவர்; இவரும் வனாந்தரத்திலிருந்த நாள்களில் வேதத்திலும் ஜெபத்திலும் அதிகத் தியானமுள்ளவர். மேசியாவை எப்பொழுதும் தன் கண்முன் நிறுத்தி, அவருடைய வருகை சமீபமாயிருப்பதைத் தன் ஆவியிலுணர்ந்து, அவர் இன்று வருவாரோ, நாளை வருவாரோவென்று ஒவ்வொரு நாளும் வாஞ்சையோடு அவரை எதிர்பார்த்த கண்ணாயிருந்தவர்.

இவ்வண்ணம் ஏற்கனவே தன் மனதிலுருவான பரமவள்ளல், தன் கண்முன் வந்து நிற்கும்போது, அவருக்கு ஆச்சரியமும் பிரமிப்புமாயிருந்திருக்காதோ? மரியாள் எலிசபெத்தைப் பார்க்கும்படி எபிரோனுக்கு வந்து அவளை வாழ்த்தினபோது, தாயின் வயிற்றிலிருந்த பிள்ளையாகிய இந்த யோவான், மரியாள் சத்தத்தைக் கேட்டுக் களிப்பாய்த் துள்ளினாரே. அவரே இந்தச் சமயத்தில் அவதார புருஷனாக தன் முன்வந்து நிற்கும்போது அவர் துள்ளாதிருப்பது எப்படி? மேலும் அவருடைய திருமுகத்தை யோவான் பார்த்தபோது அவரில் விளங்கின பரிசுத்தமும் ஞானமும், சாந்தமும் தாழ்மையும், அன்பும் அனுதாபமும் அவரை மேற்கொண்டிருக்கு மல்லவோ? தன்னிலும் அவர் எவ்வளவோ மேலானவரென்று கண்டு, அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் பயந்து பின்வாங்கி நிற்கும் வேளையில் "இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா **நீதியையும்** நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று எஜமான் அவருக்குக் கட்டளையிட்டார்.

இதுவே நமதாண்டவர் இரண்டாவதாகப் பேச நாமறிந்த அவரது திருவார்த்தைகள். தமது பன்னிரண்டாவது வயதில் தாயாரைப் பார்த்து: என் பிதாவுக்கடுத்தவைகளில் நான்

இருக்கவேண்டியதென்று நீங்கள் அறியீர்களா? என்று அவர் பேசின வார்த்தைகளுக்குப் பின், முப்பது வயதுவரை அவர்பேசின வார்த்தைகள் ஒன்றும் நமக்கு எழுதப்படவில்லை. ஆகையால், அவர் திருவாய்மலர்ந்தருளின இந்த இரண்டாம் வார்த்தைகள், நமது செவிக்கு எவ்வளவோ இன்பமாயிருக்கின்றன! தாம் நீதியுள்ளவரும், தம்மை விசுவாசிப்பவர்கள் யாவரையும் நீதிமான்களாக்குகிறவருமாக வெளிப்பட்ட ஆண்டவர், தாம் எட்டுநாள் குழந்தையாயிருக்கும்போதே, தமக்கு அவசியமில்லாத விருத்தசேதனத்தைப் பெற்று நீதியை நிறைவேற்றினதுபோல, இந்தச் சமயத்திலும் பாவிகளின் ஸ்நானத்தைத் தாமும் பெற்று, எல்லா நீதியையும் நிறைவேற்றுவது அவருக்கு ஏற்றதாயிருந்தது. அவரது மூன்று வருஷ ஜீவியமும் வார்த்தைகளும், அவருடைய மறைவான முப்பது வருஷ ஜீவியத்தைத் திறக்கும் திறவுகோலாயிருப்பதுபோல, தமது ஊழியத்தில் பிரவேசிக்குமுன் முதல் முதல் சொன்ன இந்த வார்த்தைகள் இனி வரப்போகிற மூன்று வருஷ ஜீவியத்தை வெளிப்படுத்தும் திறவுகோலாயிருக்கிறது. "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் யோவான் அவருக்குத் தடைசெய்யாமல் பயபக்தியோடும் தாழ்மையோடும் இடங்கொடுத்தார். படுபாவிகளுக்கு ஸ்நானம் கொடுத்த அவர் கைகள் பரிசுத்த ஆண்டவருக்கு ஸ்நானம் கொடுத்தன. தமது பாவ அழுக்கைத் தண்ணீரால் நீக்குகிறவராக அல்ல, பாவங்களால் தீட்டுப்பட்ட தண்ணீரைப் பரிசுத்தமாக்குகிறவராக ஜலத்தில் இறங்கினார். அவர் ஸ்நானம் பெற்றுக் கரையேறி ஜெபித்தபோது வானம் அவருக்குத் திறவுண்டது. பரிசுத்த ஆவியானவர் கபடற்ற புறா ரூபமாக அவர் மீதிறங்கி, அளவில்லாமல் அவரை நிரப்பினார். ஆசாரியர், இராஜாக்கள், தீர்க்கதரிசிகள் தங்கள் ஊழியத்துக்காக அபிஷேகம் பெற்றதுபோல், நமதாண்டவர் இந்தச் சமயத்தில் யூதர்களின் மேசியாவாக, உலக இரட்சகராக அபிஷேகம் பெற்றார். ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும், நோய்களைக் குணமாக்கவும், உன்னத வல்லமையினால் நிரப்பப்பெற்றார். நாசரேத்தூரில் அவர் பிரசங்கித்தபோது: கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், சகல நோய்கள் கேடுபாடுகளை நீக்கவும் என்னை அபிஷேகம் பண்ணினாரென்று இந்த நாளை நினைத்தே பேசினார்.

"அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." ஆ! மனுஷர்மேல் தேவப்பிரியத்தைக் கொண்டுவந்த மகத்துவ இராஜன் இவர்! ஆதியில் தேவன் தாம்

உண்டாக்கினவைகள் எல்லாவற்றிலும் பிரியமாயிருந்து, எல்லாம் நன்றாயிருக்கிறதென்று சந்தோஷப்பட்டார். தமது சாயலின்படியும் தமது ரூபத்தின்படியும் உண்டாக்கின மனுஷனைப் பார்த்தபோது, அவருக்கிருந்த சந்தோஷம் இவ்வளவு அவ்வளவென்றல்ல. அவன் பாவஞ்செய்து தன்னையும் தன் சந்ததியையும் கெடுத்தபோதோ, அவருக்கிருந்த சஞ்சலமும் கொஞ்சமல்ல. மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. எல்லாரும் பாவஞ்செய்து ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. அவரால் விசேஷித்துத் தெரிந்து கொள்ளப்பட்ட பக்தர்களாகிலும் பூரண புருஷராயிருந்தார்களோ? அல்ல. நோவா, ஆபிரகாம், யாக்கோபு, மோசே, தாவீது விசேஷித்த பக்தர்களாயிருந்தபோதிலும், தேவ பார்வையில் அவர்கள் பூரண புருஷர்களோ? அல்ல. இதோ! யோர்தான் நதிக்கரையில் ஒருவர் நிற்கிறார். முப்பது வருஷக் காலம் அக்கிரமம் நிறைந்த நாசரேத்தூரில் வளர்ந்து, மற்ற மனுஷரைப்போல் வேலைசெய்து, குடும்ப காரியங்களை நடத்தி வந்தவராயினும், கடுகளவும் கறைபடாமல், மாசற்ற பரிசுத்தராக விளங்கின பூரண புருஷன் இவரே! இவருடைய ஜீவியத்தை இடைவிடாமல் கவனித்த **பிதா,** இந்தச் சமயத்தில் அளவில்லாத சந்தோஷமுள்ளவராக, "நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என்று சாட்சி பகர்ந்தார். மனுஷன்மேல் கடவுள் பிரியமாயிருக்கிறேன்'' என்று சாட்சி பகர்ந்தார். மனுஷன்மேல் கடவுள் பிரியங்கொண்டு சந்தோஷப்பட்ட இரண்டாம் சமயம் இது. இக்காட்சியும், தொனித்த சப்தமும், நமதாண்டவருக்கும் யோவானுக்கும் தெரிந்ததேயன்றி, மற்றொருவருக்கும் தெரியவில்லை. நமது இரட்சகரின் உயிர்த்தெழுதல் எப்படி உலகமக்களுக்கு மறைந்து, அவரது அடியாருக்கு மாத்திரம் தெரிந்ததோ, அதுபோலவே இதுவுமாயிற்று.

இயேசுவானவர் பாவமற்ற பரிசுத்தரானால் பாவிகளுடைய ஸ்நானத்தை அவரேன் பெற்றார்? இது நாம் கேட்கவேண்டிய முக்கியமான கேள்வியே. யோவான் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஸ்நானத்தைக் கொடுத்ததினாலும், நமதாண்டவர் பாவிகளோடு சேர்ந்து ஸ்நானம் பெற்றதினாலும், அவருடைய முப்பது வருஷ ஜீவியத்தில் அவரிடத்தில் பாவம் காணப்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் உண்டு. இப்படிப் பேசுகிறவர்களோடு நாம் தர்க்கிக்காமல், துக்க முகத்தோடு மௌனமாயிருப்பதே அவர்களுக்கு நாம் கொடுக்கத் தக்க உத்தரவு. நான் உம்மால் ஸ்நானம் பெறவேண்டியதிருக்க, தேவரீர் என்னிடத்தில் வரலாமாவென்று தடுத்த யோவானைப் பார்க்கிலும் இவர்கள் பரிசுத்தவான்கள். இவர்கள் நம்மோடு

தர்க்கிப்பதைவிட, மனந்திரும்பாமலும் பாவ அறிக்கைசெய்யாமலும் வந்த இயேசுவுக்கு எப்படி ஸ்நானம் கொடுக்கலாமென்று யோவானையே பார்த்து இவர்கள் கேட்பார்களானால், அவர் இவர்களுக்குச் சரியான உத்தரவு கொடுப்பார். கிறிஸ்து ஸ்நானம் பெற்றதைப் பார்த்து: "இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்று சொன்ன அக்காலத்துப் பரிசேயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இவர்கள். அவர் பாவியாயிருந்ததினாலேதான் ஸ்நானம் பெற்றாரென்று முன்பின் யோசிக்காமல் பேசுவது, இவர்களுடைய உள்ளான கேட்டையும் புத்தியின் அந்தகாரத்தையும் வெளிப்படுத்துகிறது. நீதி இன்னதென்று அறியாமல், தோற்றத்தின்படி தீர்ப்புச்சொல்லுகிற இவர்கள், பாவத்தினால் மனக்கண் அந்தகாரமாகி, தேவவாக்கியங்களின் இரகசியங்களை அறியாமல், தங்கள் சுய புத்திக்குத் தோன்றுகிறபடி பேசுவது எவ்வளவு பரிதாபம்! "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்"? என்று கேட்கிற ஆண்டவருக்கு இவர்கள் என்ன உத்தரவு சொல்லுவார்கள்?

இரட்சகர் பெற்ற ஸ்நானம் ஆழ்ந்த கருத்துள்ளது. யோவானுக்குப் பிந்தித்தான் இதன் இரகசியம் வெளியானது. அவருடைய ஸ்நானம் இரகசியமே. அநேகருக்கு அது ஆச்சரியமே. அவர் ஏன் பாவிகளுக்குரிய ஸ்நானத்தைப் பெறவேண்டுமென்று திகைப்போடு கேட்பவர்கள் அநேகர். அவர் நாசரேத்திலிருந்து நேரே யோர்தான் நதிக்கரைக்கு வந்து, யோவான் பக்கத்தில் நின்றுகொண்டு, யோவானுடைய ஊழியத்தில் அவருக்கு உதவிசெய்திருப்பாரானால், அது நமக்கு ஆச்சரியமாயிருக்காது. அதற்குப் பதிலாக பாவிகளோடு சேர்ந்து அவர் பெற்ற ஸ்நானத்தை இவரும் பெற்றுக்கொள்வதைப் பார்க்கிறோம். ஆகிலும், மற்றவர்களுக்கும் இவருக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. மற்ற ஜனங்கள் **தங்கள் பாவங்களுக்காக** ஸ்நானம் பெற்றார்கள். இவரோ தமது பாவங்களுக்காகவல்ல, ஜனங்களுடைய பாவத்தைத் தமது பாவமாகப்பாவித்து, அவர்களுடைய துக்கங்களைத் தமது துக்கமாகவும், அவர்களுடைய பாரத்தைத் தமது பாரமாகவும், அவர்களுடைய அவமானத்தைத் தமது அவமானமாகவும், அவர்களுடைய சஞ்சலத்தைத் தமது சஞ்சலமாகவும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு தம்மை **ஒன்றாக்கி,** அவர்களோடு சேர்ந்து நதியில் இறங்கி ஸ்நானம் பெற்றார். ஸ்நானம் மரணத்துக்கு அடையாளம். அவர் ஜீவியத்தின் முடிவில் வரப்போகிற மரண தோற்றத்தை ஊழிய ஆரம்பத்தில் காண்கிறோம். நான் பரிசுத்தன், பாவிகளே! என்னைவிட்டு விலகிப் போங்கள் என்று அவர் சொல்லாமல், ஜனங்களே! நான் மனுஷகுமாரன், உங்கள் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமானவர்; நான் உங்கள் சகோதரன், உங்கள்

பாவபாரத்தை நானே சுமந்து அன்பின் பிதாவோடு உங்களை ஒப்புரவாக்க வந்தேன் என்று நிரூபிக்கிறவராக, அவர்களுடைய ஸ்நானத்தில் தம்மையும் ஒன்றாக்கினது அவருக்கு **நீதியாக** யிருந்தது. ''அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்தார்'' என்னும் தீர்க்கதரிசன வார்த்தைகள் எவ்வளவு உண்மை! அவ்வார்த்தைகள் நிறைவேறுகிற ஆரம்பத்தை முதல்முதல் யோர்தான் நதிக்கரையிலே காண்கிறோம். இதிலிருந்து அவரது மரணபரியந்தம் தமது அன்பிலும் அனுதாபத்திலும் பாவிகளோடு தம்மை **ஒன்றாக்கி,** அவர்களுடைய பிரதிநிதியாகவும் பிணையாளியாகவும் விளங்கினார் என்பதை சுவிசேஷத்தில் தெளிவாய்க் காணலாம்.

இவர் பாவிகளோடு தம்மை ஒன்றாக்கவேண்டிய அவசியமென்ன? பாவம் மனுஷனைத் தனித்தவனும் சிறுமைப்பட்டவனுமாக்கிற்று. எல்லா வேதனையிலும் பெரிய வேதனை பாவத்தால் விளையும் மனச்சாட்சியின் வேதனை. யூதாஸ் ஸ்காரியோத்துக்குக் கிடைத்த சிலாக்கியம் எவ்வளவு பெரிது! அன்பின் ஆண்டவருடைய அப்போஸ்தலர்களில் ஒருவனாயிருந்தான். அவருடைய திருச்சமுகமும் கிருபை நிறைந்த வார்த்தைகளும் அவனுக்கு இடைவிடாமல் கிடைத்தன. அவரோடும் உடன் அப்போஸ்தலரோடும் இணைக்கப்பட்டிருந்தான். பாவம் அவனுக்குள் பிரவேசித்தது. அது முதலாவது இரட்சகரை விட்டு அவனைப் பிரித்தது. துரோக சிந்தை அவனுக்குள் ஆரம்பித்தபோதே ஆண்டவருக்கு அது தெரியும். மற்றப்பதினொருவருக்கும் இன்னும் அது மறைவாகவேயிருந்தது. அந்தப்பாவம் அவனில் பூரணப்பட்டபோது அவர்களையும் விட்டுப்பிரிந்தான். கிறிஸ்துவோடும் அப்போஸ்தலரோடும் ஐக்கியமாயிருப்பது இனிமேல்கூடாது. பாவம் அவனை நல்லோர் சிநேகத்தை விட்டுப்பிரித்தது. ஆகிலும் பொல்லார் சிநேகம் அவனுக்குக்கிடைத்தது. ஆண்டவரின் விரோதிகளோடு சேர்ந்துகொண்டான். சீக்கிரம் அவர்களையும் விட்டுப்பிரிய நேரிட்டது. பாவம் அவனை வாதிக்கிறது. இதோ உங்கள் பணத்தை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறான். அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன் பாடு என்கிறார்கள். யாதொரு துணையுமற்ற மகா நிர்ப்பந்த மனுஷனானான். மிகுந்த கலக்கம் நிறைந்தவனாக எங்கே ஓடுவேன் பாதகனானேன் என்று புலம்பினான். நடந்ததென்ன? வேகமாய்ப்போய்த் தன் உயிரை மாய்த்துக்கொண்டான். இவனைப்போல் பாவத்திகிலையும் அவமானத்தையும் தாங்கக்கூடாமல், தாங்கள் உயிரோடிருப்பதைப்பார்க்கிலும் செத்துப் போவதே உத்தமமென்று, தங்களைத் தற்கொலை செய்து கொண்டவர்கள் அநேகர்.

பாவம் மெய்யாகவே மனுஷனைத் தனிமைப்படுத்தி திக்கற்றவனாக்குகிறது. பாவஜீவியத்தால் நாம் விழுங்கப்பட்டுப்

போகும்போது, குடும்பத்தில் சஞ்சரித்தாலும் குடும்பம் நமக்கில்லை. மனைவிமக்களோடிருந்தாலும் மனைவி மக்களோடில்லை. சபை சங்கங்களில் உலாவினாலும், அவர்கள் சந்தோஷத்தில் நமக்குப்பங்கில்லை. சிரிக்கிறவர்களோடு சிரித்தாலும், அது பொய்ச் சிரிப்பேயன்றி மெய்யல்ல. பாவம் நிச்சயமாகவே மனுஷனைத் தனித்தவனும் சிறுமைப்பட்டவனு மாக்குகிறது.

இயேசுபகவான் நமது இரட்சகரென்பது மெய்யானால், பாவத்தினால் தனித்தவனும் சிறுமைப்பட்டவனுமாகிய பாவிக்குத் திடன் சொல்லி அவனைக் கைத்தூக்கி இரட்சிக்கவேண்டும். அவர் பெற்ற ஸ்நானத்தில் அவர்செய்த முதல்வேலை அதுதான். ஜனங்களே! உங்கள் பாவங்கள் உங்களைப்பாரப்படுத்தினது. உங்களைத் திக்கற்றவர்களாக்கினது. உங்களை வெட்கத்தாலும் நிந்தையாலும் நிரப்பினது. வேதனையும் கலக்கமும் உங்களை ஆண்டுகொண்டன. உங்கள் ஜீவன் உங்களுக்கே அருவருப்பாய்த் தோன்றுகிறது. மரணம் உங்களைக் கலங்கச் செய்கிறது. மக்களே! பயப்படவேண்டாம். திடன்கொள்ளுங்கள். உங்கள் பாவத்தை நானே சுமந்துகொள்ளுகிறேன். உங்கள் வெட்கத்தையும் அவமானத்தையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். உங்கள் வேதனையையும் கலக்கத்தையும் நான் அனுபவிக்கிறேன். உங்களுக்குப் பதிலாக நானே என்னைத் தனித்தவனும் சிறுமைப் பட்டவனுமாக்கிக்கொள்ளுகிறேன் என்று இந்த ஸ்நானத்தில் பாவிகளோடு தம்மை ஒன்றாக்கினார். அவர் பாவமானாரென்பதும், சாபமானாரென்பதும், அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டாரென்பதும் இதுதான். இந்த இரகசியத்தை அறிந்தவர்களே சிலுவையின் இரகசியத்தை அறிவார்கள். அவர் சத்தியத்திற்காகச் சிலுவையில் மரித்தா ரென்றும், இரத்தச்சாட்சியாக மரித்தாரென்றும், அவருடைய மரணத்துக்கும் நமது பாவங்களுக்கும் சம்பந்தமில்லையென்றும், அவரைப்போல் நாமும் ஜீவிக்கவும், அவரைப்போல் நாமும் மரிக்கவும், நமக்கு அவர் மாதிரியானார் என்றும் பேசுகிறவர்கள், ஞானஸ்நானத்தில் வெளிப்பட்ட இந்த ஐக்கிய இரகசியத்தை, அன்பின் மகத்துவத்தை, அனாதி ஒழுங்கைக் கொஞ்சமும் யோசிக்காதவர்களே. பாவஞ்செய்த ஆதிமனுஷன் மனுக் குலத்தாரின் கேட்டுக்குத் தலையாயிருந்ததுபோல, பாவமற்ற இந்த மனுஷன் மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கும் தலையானார்.

ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் எழும்பினதில்லை அவருடைய ஜீவியத்தையும் அவர்செய்த ஊழியத்தையும் பார்க்கும்போது அவர் மகா வல்லவரென்பதற்குச் சந்தேகமில்லை. திரளான ஜனங்கள் பாவத்தினிமித்தம் நொறுங்குண்டு அவர் பாதத்தில்

விழுந்தார்கள். அப்படியிருந்தும், அவர்களை இரட்சிக்கத் தன்னைப் பார்க்கிலும் **வல்லவர்** ஒருவர் வரவேண்டுமென்று அவரே உணர்ந்தார். யோர்தான் நதிக்கரையில் அந்த வல்லவர் தோன்றினார். யோவானைப் பார்க்கிலும் அவரில் காணப்பட்ட **வல்லமை** எது? அவரில் விளங்கிய அன்பும் அனுதாபமுமே அந்த வல்லமை. கலங்கி நிற்கும் பாவிகளோடு தம்மை ஒன்றாக்கி, அவர்களைக் கைதூக்கின கிருபையே அந்த வல்லமை. யோவான் பாவங்களை உணர்த்துவார்; இவர் பாவங்களை நீக்குவார். யோவான் புலம்பவைப்பார்; இவரோ மகிழவைப்பார். யோவான் கண்ணீர்விடச் செய்வார்; இவரோ கண்ணீரைத் துடைப்பார். யோவானுடைய ஸ்நானம் தண்ணீர்; இவருடைய ஸ்நானம் ஆவி. யோவானால் செய்யக்கூடாத காரியத்தை இவர் செய்ய வந்ததால் கிறிஸ்து யோவானைப் பார்க்கிலும் வல்லவரே. "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் சாட்சி பகர்ந்ததும் சரியே.

கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்று அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நமக்கு இதில் போதனையில்லையோ? நமக்கும் உடன் பாவிகளுக்குமுள்ள சம்பந்தம் என்ன? நமதாண்டவருடைய சிந்தை நமக்கில்லையே. மற்றவர்களிடத்தில் பாவத்தைக் காணும்போது அவர்களைத் தனியே விட்டு வெகுதூரம் விலகி நடக்கப்பார்க்கிறோம். அவர்களைப் பார்ப்பதும் அவர்களோடு பேசுவதும் நமக்குக் குறைவென்று நினைக்கிறோம். அவர்களுடைய சகவாசம் நம்மைத் தீட்டுப்படுத்துமென்று பயப்படுகிறோம். அவர்களோடு நாமிருப்பதைக் கண்டால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று அஞ்சுகிறோம், உலகத்துக்கு உப்பாயிருக்கவேண்டிய நாம் அவர்களை விட்டு விலகிக்கொண்டால் அவர்கள் ஜீவனைக் கண்டடைவதெப்படி? நாம் செய்த பாவங்களையும், பிதா எவ்வளவு பொறுமையோடிருந்து நமக்கு இரக்கம் பாராட்டினாரென்பதையும், நம்மில் காணப்படும் நற்குணங்கள் அவருடைய இலவசமான ஈவுகள் என்பதையும் நாம் உணர்ந்தோமானால், உடன்பாவிகளை இவ்வளவு வெறுப்போடு நடத்தமாட்டோம். அவர்களை இரட்சிக்கும்படி தேவன் நம்மைத் தெரிந்துகொண்டிருக்க, பரிசேயரைப்போல் நாம் அவர்களை வெறுத்துத் தள்ளுவோமானால் அவர்களை நாம் ஆதாயப்படுத்துவது எப்படி? பூர்வத்தில் மரித்தவர்களுக்காக மற்றவர்கள் ஸ்நானம் பெற்றார்கள். உயிரோடிருக்கும் மனுஷருக்காக நாம் பரிதபித்து அவர்களைக் கைதூக்கும்படி அவர்களோடு நம்மை ஒன்றாக்கினால் எவ்வளவு நல்லது!

இதைப்பார்க்கிலும் இன்னொரு கெட்ட சுபாவமும் உண்டு. உடன் சகோதரர் ஏதோ தப்பிதத்தைச் செய்தால் அவர்களை

முற்றிலுமாய்க் கெடுப்பதற்கு அதுவே நற்சமயமென்று நினைத்து, இடைவிடமால் அதைப்பற்றிப்பேசி, ஜனங்களுக்குள்ளே அதைத் தூற்றி, தங்களுக்கே தீங்கு செய்யப்பட்டதுபோல் மூர்க்கங்கொண்டு, அவர்களை எவ்விதத்திலும் ஆக்கினைக்குட்படுத்தி விடவேண்டுமென்று பிரயாசப்படுகிறோம். கடவுள் நமக்கும் அப்படிச் செய்திருப்பாரானால் நமது முடிவு எப்படி யிருந்திருக்கும்! இப்படிப்பட்ட சுபாவமுள்ளவர்கள் மற்றவர்களை ஒருக்காலும் ஆதாயப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். மேலும், சில பாவங்கள் இயல்பாகவே நமக்குச் சோதனையாயிராது. அந்தப் பாவங்களை நாம் விரும்புவதில்லை. அவை நம்மை மேற்கொள்வதில்லை. இதனால் நம்மைச் சுத்தவான்க ளென்றெண்ணி, அந்தப் பாவங்களைச் செய்கிறவர்களைப் படுபாவிகள் என்று சொல்லி அவர்களை ஆக்கினைக் குட்படுத்துகிறோம். ஆனால் மற்றவர்கள் செய்யாத பாவங்கள் நம்மை மேற்கொண்டு அவமானப்படுத்துவதை நாம் யோசிக்கிறதில்லை. பாவத்தில் வித்தியாசமேயன்றி, அவர்களைப்போலவே நாமும் பாவிகள் என்பதில் வித்தியாசமில்லை. ''எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது'' என்று சொன்னவர் யார்? "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்று சொன்ன பவுல் அல்லவா? உடன் பாவிகளுக்காகப் பரிதபித்து, அவர்களை இரட்சித்துக்கொள்ளத்தக்கதான அன்பையும் அனுதாபத்தையும், வல்லமையான ஜீவியத்தையும் ஆண்டவர் நமக்கு அருளுவாராக. நமதாண்டவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் பிதா அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுத்தார். அதுவே நமக்கும் மாதிரி.

இந்த ஸ்நானம் நமதாண்டவருடைய ஜீவியத்தில் இன்னொரு விஷயத்தை வெளிப்படுத்துகிறது. அதாவது, இதுவரை நாசரேத்தில் என்னவிதமாய் ஜீவித்தாரென்பதும், என்ன வேலை செய்து வந்தாரென்பதும் நமக்குத் தெரியும். இதுமுதல் தேவனுடைய இராஜ்யத்திற்காகவும் பாவிகளின் இரட்சிப்புக்காகவும் தம்மை முற்றிலும் **பிரதிஷ்டை** செய்யப்போகிறார். அப்போஸ்தலன் சொன்னபடி இவருடைய விஷயத்தில் "பழையவைகள் ஒழிந்தன; எல்லாம் புதிதாயின." இனி ஒருபோதும் பழைய வேலைக்குத் திரும்பவேமாட்டார். இதோ உமது தாயும் சகோதரரும் என்று சொன்னால், என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதில்லையா என்பார். இதுமுதல் பிதாவின் மகிமை, பிதாவின் பிரியம், பிதாவின் கிரியை, சகலமும் பிதாவே, இதுமுதல் பாவிகளின் இரட்சிப்பு, பாவிகளுக்குச் சமாதானம்,

பாவிகளுக்கு ஜீவன், பாவிகளுக்கு இராஜ்யம். அவருடைய பலமும் சுகமும், உபதேசமும் ஜெபமும், கிரியைகளும் பாடுகளும் பாவிகளின் இரட்சிப்புக்காகவே. இதற்காகவே புறப்பட்டு வந்தார். ஞானஸ்நானத்தில் அந்த மேலான ஊழியத்திற்குத் தம்மைச் சமூலமாய்ப் பிரதிஷ்டை செய்து முந்தின ஜீவியத்திலிருந்து முற்றிலும் பிரிந்தார்.

நோக்கமற்ற ஜீவியம் நமக்கும் பிறருக்கும் நஷ்டம். அநேகர் தங்கள் காலத்தை பாவத்தில் கழித்து சாபத்துக்குள்ளாகிறார்கள். அநேகர் தங்கள் அருமையான காலத்தைப் புசிப்பிலும் குடிப்பிலுமே கழிக்கிறார்கள். அநேகர் கல்வியிலும் வியாபாரத்திலும் உத்தியோகத்திலும் கழிக்கிறார்கள். இன்னும் அநேகர் யாதொரு நோக்கமுமின்றி தங்கள் காலத்தை வீணிலே செலவிடுகிறார்கள். காலம் கடவுள் நமக்குத் தந்த பெரிய தாலந்து. நன்மையானாலும் தீமையானாலும் அந்தச் சுருக்கமான காலத்திலேதான் செய்யப்படவேண்டும். கர்த்தருக்கு நம்மை முற்றிலுமாக ஒப்புவித்து, அவருடைய சித்தம்போல் பிழைப்பதற்காகவே, தேவன் இந்தக் காலத்தை நமக்குத் தந்தார். ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டு, அந்தச் சித்தத்தின்படியே பிழைத்த அப்போஸ்தலன் உலகத்துக்குப் பெரிய ஆசீர்வாதமானார். நாம் ஆண்டவரைப்போல் தேவனுக்கென்றும் மனுஷருடைய இரட்சிப்புக்கென்றும் பிழைப்போமானால் அவர் நம்மைப் பரிபூரணமாய் ஆசீர்வதிப்பார். நம்மால் அநேகர் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கப்படுவார்கள். நாம் பெற்றுக்கொண்ட **ஞானஸ்நானத்தின்** நோக்கமும் அதுவே.

8

கிறிஸ்துவின் சோதனை

The Temptation of Christ

நமதாண்டவர் ஸ்நானம்பெற்றுக் கரையேறினவுடனே வானந்திறந்திருப்பதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குவதையும் கண்டார். அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி **ஏவினார்**. ஏவினாரென்பது அவரைத் **துரத்தினார்** அல்லது **துரிதப்படுத்தினாரென**ப் பொருள்படும். மத்தேயுவும் லூக்காவும் அவர் வனாந்தரத்திற்கு ஆவியானவரால் **கொண்டுபோகப்பட்டார்** என்று எழுதியிருக்கிறார்கள். மாற்கு சுவிசேஷம் முந்தி எழுதப்பெற்றது. ஆகையால் இரு சுவிசேஷகரும் துரிதப்படுத்தப்பட்டாரென்னும் வார்த்தையை சற்று சாந்தப்படுத்தி எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. எஜமான் தமது ஜீவியத்தில் எந்தக் காரியத்திலாவது துரிதப்பட்டவருமல்ல, ஆத்திரப்பட்டவருமல்ல. யாதாமொரு காரியத்தைச் செய்யும்படி மற்றவர்கள் அவரைத் துரிதப்படுத்த அவர் துரிதப்பட்டுச் செய்தவருமல்ல. அவர் ஒவ்வொன்றையும் தமது வேளையின்படியே செய்தார். இந்தச் சமயத்தில் அவர் வனாந்தரத்துக்குப் போகும்படி துரிதப்பட்டாரென்று சொல்லும்போது அவருடைய விருப்பத்துக்கு விரோதமாக அவர் பலவந்தமாய்த் துரத்தப்பட்டாரென்பது கருத்தல்ல. ஆவியானவர் அளவில்லாமல் அவரை நிரப்ப, பிதாவின் சத்தம் அவர் செவியில் தொனிக்க, ஆவியானவர் அவரை வனாந்தரத்துக்குப் போகும்படி துரிதப்படுத்த, அவர் சித்தமும் பூரணமாய் அதற்கிணங்க, யோர்தான் நதிக்கரையைவிட்டு வனாந்தரத்திற்குள் பிரவேசித்தார்.

முப்பது வருஷக்காலமாகப் பொறுமையுடன் காத்திருந்த ஆண்டவர் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவுடனே தமது

ஊழியத்தில் பிரவேசிக்க வேண்டியதல்லவோ நியாயமென்று நாம் நினைப்போம். அவர் ஆவியின் நிறைவைப் பெற்றவுடனே அளவில்லாத பரவசமடைந்தார். நீராவியின் வல்லமை நிறைந்த என்ஜின் தன் பாதையில் ஓட ஆத்திரப்பட்டு நிற்பதுபோல, இவரும் உடனே தமது ஊழியத்தில் பிரவேசிக்கும்படியான வல்லமை அவருக்கிருந்தது. ஆகிலும், உடனே ஊழியத்தில் பிரவேசிப்பது அவருக்குத் தகுதியாய்த்தோன்றவில்லை. தேவராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கும்படியான அறிவும் ஞானமும் அவருக்குக் குறைவாயிருந்ததினால் அல்ல. அந்த இராஜ்யத்தின் தன்மையை விளக்கிக் காட்டும்படியான வாக்குகளும் உவமானங்களும் குறைவாயிருந்ததினாலும் அல்ல. இம்மகா உத்தரவாதமான வேலையை நிறைவேற்றும்படியான சக்தி தமக்கு இல்லாததினாலுமல்ல. பாவிகளைத் தேடி இரட்சிக்கும் படியான வாஞ்சை தமக்குள் குறைவாயிருந்ததினாலுமல்ல. சொல்ல வேண்டுமானால், தமது ஊழியத்தை உடனே ஆரம்பிக்கத்தக்கதான சகல தகுதியும் அவருக்குள்ளிருந்தன. அப்படியிருந்தும், தமக்குச் சீஷர்களைத் தெரிந்துகொள்ளாமலும், தம்மைச் சூழ்ந்து நின்ற ஜனங்களுக்கு யாதொரு உபதேசம் செய்யாமலும் தனித்து வனாந்தரத்திற்குத் தீவிரித்துப் போன காரணமென்ன?

ஓரு முக்கியமான விஷயம் அவர் மனதைப் பாரப்படுத்தினது. தாம் உலகத்தில் நிறைவேற்றவேண்டிய **ஊழியத்தை** அவர் அறிந்திருந்தாலும், அதை நிறைவேற்றும்படியான **வல்லமை** தமக்குக் கிடைத்திருந்தாலும், அதை நிறைவேற்றவேண்டிய **வழியை** ஆலோசிக்கும்படிக்கே அவர் **வனாந்தரத்திற்குத்** தனித்துப் போனார். தமக்கு இலேசாய்த் **தோன்றும்** வழியில் அல்ல. மேசியாவுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த யூதஜனங்கள் விரும்பின வழியிலுமல்ல. பிதா தமக்குக் காட்டும் வழியிலேயே நடந்து தமது ஊழியத்தை நிறைவேற்ற விரும்பினார். அந்த வழியைக் குறித்துத் திட்டமாய் ஆலோசிக்கும்படி, எல்லா மனுஷரையும் விட்டுப் பிரிந்து மிகுந்த அமைதலான வனாந்தரத்திற்குச் சென்றார்.

தேவ ஊழியத்தை நிறைவேற்ற விரும்பும் நமக்கு அறிவுமாத்திரம் போதும் என்று நினைக்கக்கூடாது. ஊழியத்தை நிறைவேற்றும் வல்லமையிருந்தால் போதும் என்றும் நினைக்கக்கூடாது. அறிவும் வல்லமையும் அவசியமே. ஆகிலும் அந்த ஊழியத்தை **எவ்விதமாக** நிறைவேற்றவேண்டுமென்பதைக்குறித்து நாம் தேவாலோசனையைத் தேடவேண்டும். நமக்கு நலமாய்த் தோன்றுகிற வழியிலேயோ, அல்லது மற்றவர்கள் நமக்குக் காட்டுகிற வழியிலேயோ நாம் வேலைசெய்ய நாடுகிறோம். நமது பலத்தையும் காலத்தையும் வீணிலே

கழிக்கிறோம். தேவன் நமக்குக் காட்டுகிற வழியே ஆசீர்வாதமான வழி. அந்தவழி சுயவெறுப்பின் வழியாயிருந்தாலும் அதுவே நமக்கும் பிறருக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். அவ்வழியைக் கண்டுபிடிப்பது ஜனக்கூட்டத்தில் அல்ல. மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனை செய்வதினால் அல்ல. தனித்துப் போகவேணும். ஆண்டவர் அவ்வழியை நமக்குத் திட்டமாய்க் காட்டும்படி அவர் சமுகத்தில் காத்திருக்கவேணும்.

அநேகருக்குத் தனித்திருக்கும் ஜீவியம் சங்கடம். எப்பொழுதும் ஜனசந்தடிக்குள் உலாவுவதும் அவர்களோடு பேசிக் காலத்தைக் கழிப்பதுமே சந்தோஷம். யாக்கோபு என்னும் பக்தன் பெரிய ஜெயம் பெறுவதற்குமுன் தேவனோடு தனித்திருந்தார். பவுல் தமது ஊழியத்தில் பிரவேசிப்பதற்கு முன் அரபி வனாந்தரத்தில் தனித்திருந்தார். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருந்த தேவ பக்தர்கள் யாவரும் கடவுளோடு தனித்திருந்து தாங்கள் நடக்கவேண்டிய வழியைக்குறித்துப் போதிக்கப் பெற்றவர்களே. வேலையின் உத்தரவாதத்தை எவ்வளவுக்கு உணர்ந்தார்களோ, அவ்வளவுக்கு மனுஷரை விட்டுப் பிரிந்து தேவனோடிருக்க நாடினார்கள். தேவஊழியம் அவர் காட்டும் வழியிலே செய்யப்படவேண்டும். தேவ வழியைக் கண்டுபிடிக்க தேவனோடு தனித்திருக்கவேண்டும். அநேகர் தேவ சமுகத்தில் தனித்திருக்கப் பயப்படுவார்கள். தங்கள் பாவம் தங்களைக் கண்டுபிடிக்குமென்பதே அவர்கள் பயம். ஆகையால் அவர்கள் இங்குமங்கும் நடந்து, யாரைக் கண்டாலும் பேசிச்சிரித்து, இவ்விதமாய்த் தங்கள் பாவங்களை மறந்துவிடப் பார்க்கிறார்கள். உத்தமர்களுக்கோ **தனிமையைப்போல்** இன்பமான இடமில்லை. தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தாங்கள் அழுக்கறக் கழுவப்பட, தேவவசனத்தின் ஆழமான இரகசியங்களை அறிய, தேவனோடு முகமுகமாய்ப் பேச, தங்களுக்குவேண்டிய கிருபைகளைப் பெற்றுக்கொள்ள, மற்றவர்களுக்காக விண்ணப்பம்பண்ண **தனிமையே** அவர்களுக்கேற்ற மகா பரிசுத்த ஸ்தலம். அவர்கள் செய்யும் ஊழியத்தில் வல்லமை காணப்படுவதும், எழுதும் புஸ்தகங்கள் ஆசீர்வாதமாயிருப்பதும், மற்றவர்களோடு அன்பும் அனுதாபமுமாய் நடந்துகொள்வதும் கடவுளோடு அவர்கள் தனித்திருப்பதாலுண்டாகும் பலனே. நமதாண்டவர் இந்தச் சமயத்தில்மாத்திரமல்ல, அவர் ஊழியத்தில் பிரவேசித்த பின்பும், ஜனங்களை விட்டும் தமது அப்போஸ்தலரைவிட்டும் அடிக்கடி தனித்துப் போனாரென்பதை நாம் மறக்கக்கூடாது.

அவர் தனித்துப்போன இடம் மகா பயங்கரமான வனாந்தரம். எஜமான் முப்பது வருஷமாய்ச் சஞ்சரித்த கலிலேயா

ஜனத்திரள் நிறைந்ததும், மகா செழிப்பும் அலங்காரமுமான நாடு. இவ்வனாந்தரமோ யோர்தானுக்கு மேற்கில் ஜனசஞ்சார மில்லாததும் மனுஷ சத்தம் கேட்கக்கூடாததுமான காடு. வறண்ட மலைகளும் பாழான வனாந்தரமுமான இக்காட்டை, துஷ்ட மிருகங்களுக்கும் பிசாசுகளுக்குமே ஏற்ற உறைவிடமெனச் சொல்லுவார்கள். "அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார்" என்று மாற்கு சொல்லுகிறார். மிருகங்கள் மனுஷனை எதிர்க்கவோ அல்லது அவனைக் கண்டு பயந்து ஓடவோ உண்டாக்கப்பட்டவைகள் அல்ல. ஆதாம் மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்தார். பாவம் வந்தபோதோ மனுஷனுடைய குரூர குணத்தைக் கண்டு மிருகங்கள் அவனை எதிர்க்கவும் அல்லது பயந்தோடவும் ஆரம்பித்தன. காடுகளில் தங்கித் தியானஞ் செய்துகொண்டிருந்த பக்தர்களுக்கு துஷ்ட மிருகங்கள் யாதொரு தீங்கும் செய்யாமல் அவர்களோடு பழகியிருந்ததெனச் சரித்திரம் கூருகிறது. அப்படியிருக்க, இந்த மாசற்ற பரிசுத்தரை, அன்பின் சொரூபியை, மிருகங்களின் சிருஷ்டிகரை, அவைகள் கண்டமாத்திரத்தில் வளர்த்த நாய்கள் எஜமான் பாதத்தைச் சூழ்ந்திருப்பதுபோல, அவரைச் சூழ்ந்து பாதவணக்கம் செய்ததும் ஆச்சரியமோ?

இவ்வனாந்தரத்தில் ஆண்டவர் நாற்பதுநாள் இருந்தார். நாற்பது என்பது பழைய ஏற்பாட்டில் வரும் முக்கியமான இலக்கம். இஸ்ரவேலர் இன்பமான தேசத்தில் பிரவேசிக்கும் முன் நாற்பது வருஷம் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தார்கள். மோசே நாற்பது நாள் சீனாய் மலையில் தங்கி தேவ கற்பனை பெற்றார். எலியா யேசபேலின் கோபத்துக்கு விலகியோடி நாற்பதுநாள் வனாந்தரத்தில் தங்கினார். எஜமான் இவ்வனாந்தரத்தில் நாற்பதுநாள் தங்கிச் செய்த தியானமென்ன? எவ்வளவு பக்தர்களானாலும் தேவ சமுகத்தில் தனித்திருக்கும்போது தங்களுடைய முந்தின ஜீவியத்தின் குறைகளை உணராதிருக்கமாட்டார்கள். நாம் நானூறு ஐந்நூறு வருஷம் உயிரோடிருந்து, தேவ கிருபையை இடைவிடாமல் பெற்று, கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ந்து பெருகினாலும் தேவசமுகத்தில் தனித்திருக்கும்போதெல்லாம், நமது பாவங்களை உணர்ந்து நம்மைத் தாழ்த்தாதிருக்க முடியாது. அவருடைய பரிசுத்த சமுகம் நமது குறைவுகளை நமக்கு உணர்த்தி நிறைவையளிக்கும் சமுகமாயிருக்கிறது. பவுல் அரபி வனாந்தரத்தில் தனித்திருந்தபோது தமது பழைய ஜீவியத்தில் தாம் செய்த குரூரமும் கொடுமையுமான காரியங்களை நினைத்து தேவசமுகத்தில் எவ்வளவோ புலம்பிக் கண்ணீர் சிந்தியிருப்பார். அவர் அநேகரைப் பார்க்கிலும் விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்று ஊழியம் செய்தபோதிலும், கடைசிவரை தமது பழைய ஜீவியத்தின் கசப்பை மறந்தவரல்ல. நமது எஜமான் தமது முப்பது வருஷ ஜீவியத்தின் குறைவுகளை ஆராய்ந்து பார்க்கும்படி இங்கு

வந்தவரல்ல. அதிலே தாம் செய்த தப்பிதங்களையும் பாவங்களையும் குறித்துத் தனித்துப் புலம்பிக் கண்ணீர் சிந்தும்படி வந்தவருமல்ல. அவரது பின்னான நாசரேத்தின் ஜீவியம் முழுவதும் பரிசுத்தமும் பிரியமுமானதென்று யோர்தான் நதிக்கரையில் பிதாவினால் சாட்சி பெற்றாரே. அவருடைய முழுப் பார்வையும் ஆலோசனையும் **இனிமேல் நடக்கவேண்டிய** ஊழியத்தைப் பற்றினதாகயிருந்தது.

அவர் ஊழிய நாள்களில் மற்றவர்களுக்குப் போதித்த உபதேசங்கள், தாமே தமக்குப் போதித்ததும், தாம் கைக்கொண்டு நடந்த போதனைகளுமாயிருந்தன. "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்று போதித்த பரமகுரு தாம் பிடிக்கப்போகிற கலப்பையை இந்தச் சமயத்தில் நினைக்கிறார். ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்டும்படி அதற்கு அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக்கட்டி முடிக்கத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோவென்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லும் செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோவென்று போதித்த ஆண்டவர், தாம் கட்டப்போகிற இராஜ்யத்தின் வேலையைப்பற்றி இவ்வனாந்தரத்தில் தங்கித் தீர்க்க ஆலோசனைசெய்ததும், அதற்குச் செல்லும் செலவைக் கணக்குப் பார்த்ததும் ஆச்சரியமல்ல. இவ்வேலையைக் கட்டிமுடிப்பதற்குச் செல்லும் செலவு தாம் படப்போகிற **பாடுகளும் மரணமுமே** என்று கண்டார். அவ்வாறு செலவு செய்யப்பட பூரண சித்தமுடையவராயுமிருந்தார்.

ஒரு ராஜா மற்றொரு இராஜாவோடு யுத்தம் செய்யப்போகிறபோது தனக்கு விரோதமாக இருபதினாயிரம் சேவகரோடு வருகிற அவனைத்தான் பதினாயிரம் பேரோடு சந்திக்கத் தனக்குக் கூடுமோ கூடாதோவென்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை செய்யாமலிருப்பானா? தனக்குச் சக்தியில்லையென்று கண்டால் அவன் இன்னும் தூரத்திலிருக்கும்போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக்கொள்வா னல்லவா என்று போதித்த நமது இராஜன் தாம் செய்யப்போகிற யுத்தத்தைப்பற்றி ஆலோசனை செய்கிறார். மனுக்குலத்தார் சாத்தானுடைய கையில் இருக்கிறார்கள். அவனோ வஞ்சகனும் பலவானுமாயிருக்கிறான். அவனோடு போர்செய்து அவனை ஜெயித்தாலன்றி அவன் சிறைகளை மீட்டு இரட்சிக்க முடியாது. இதை நினைத்தே "பலவானை முந்திக்கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து அவன்

உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்?'' என்று பிற்காலத்தில் கேட்டார். இப்பொழுது சாத்தானும் அவனுடைய சேனையும் ஆண்டவருக்கு விரோதமாகப் புறப்பட்டு வருகிறார்கள். இவர் அவனை எதிர்க்கத் தமக்குச் சக்தி யில்லையென்று கண்டால், அவன் வழியிலிருக்கும்போதே அவனோடு சமாதானம்பண்ணிக்கொள்ளவேண்டியது. அப்படி அவர் செய்திருந்தால் முதல் ஆதாமைப்போல இரண்டாம் ஆதாமும் விழுந்தாரெனவாகும். மூன்றாம் ஆதாமோ வானத்திலுமில்லை பூமியிலுமில்லை. தேவனுக்கு ஒரே குமாரனேயன்றி இரு குமாரர் இல்லை. மனுக்குலத்தாரின் கதி அதோகதிதான். இவர் சாத்தானின் தலையை நசுக்க வந்த ஸ்திரீயின் வித்தானவர். இவரா அவனோடு சமாதானத்துக்குப் போவார்? தம்மைப் பலவானிலும் பலவான் என்று அழைத்தாரே. ஆரம்பத்தில் அவனை ஜெயித்தாலன்றி இனிமேல் அவருக்கு ஜெயமேது? பாவிகளுக்கு விடுதலையேது? தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதேது?

சாத்தான் அவரிடத்தில் வந்தான். அவன் என்ன ரூபமாக வந்தான், எவ்விதமாக அவரைச் சோதித்தான் என்பதைப்பற்றி பல அபிப்பிராயங்கள் உண்டு. அவன் ஆள் ரூபமாக அவருக்கு முன்பாகவந்து அவரோடு பேசிச் சோதித்தான் என்பார் சிலர். அவன் ஆவியாகவந்து இச்சோதனையான எண்ணங்களை அக்கினியாஸ்திரங்கள்போல் அவருக்குள் எய்தான் என்பார் சிலர். இச்சோதனைகள் எல்லாம் அவர் இருதயத்திலிருந்தே புறப்பட்டவைகள் என்பார் சிலர். நமது ஆண்டவருடைய இருதயத்திலிருந்து இந்தச் சோதனைகள் ஒருக்காலும் வந்திருக்கவேமாட்டாது. "ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?" பொல்லாத இருதயத்திலிருந்து பொல்லாத காரியங்களும் நல்ல இருதயத்திலிருந்து நல்ல காரியங்களும் புறப்படுமென்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார். அவருடைய பரிசுத்த இருதயத்திலிருந்து இப்படிப்பட்ட தகாத எண்ணங்கள் புறப்பட்டதென்று நினைப்பது பிசகு. சிலர் அவருக்கு நேரிட்ட சோதனைகள் உவமையேயன்றி வாஸ்தவத்தில் நடந்த சம்பவமல்லவென்பார்கள். ஆண்டவர் தமக்கு நேரிட்ட சோதனைகளை அப்போஸ்தலருக்குச் சொல்ல, சுவிசேஷகர் அவைகளை எழுதி வைத்திருக்கிறார்கள். அவர் மெய்யாகவே பிசாசினால் சோதிக்கப்பட்டார். அச்சோதனைகள் மகா வஞ்சகமும் கொடியதுமாயிருந்ததென்பது நிச்சயம்.

பாவமில்லாத பரிசுத்தர் சோதிக்கப்படவுங் கூடுமோ? கிறிஸ்து பரிசுத்தராகையால் அவருக்குச் சோதனை வரக்கூடாது என்று நினைப்பவர்களுண்டு. அவர் சோதிக்கப்பட்டாரென்று சொன்னால் அச்சோதனையின் கறை அவரிலிருக்குமே என்று

பயப்படுகிறார்கள். நாம் சோதிக்கப்படுவதற்கும் கிறிஸ்து சோதிக்கப்பட்டதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. சாதாரணமாய் நமது சோதனைகள் நமக்குள்ளிருக்கும் பாவத்தால் அல்லது நாம் முன்செய்துவந்த பாவங்களினால் உண்டாகின்றன. நமது சோதனைகள் அநேகமாய் நமது பாவங்களோடே சம்பந்தப்பட்டிருக்கின்றன. நமக்குப் பாவம் வேறே, சோதனை வேறே என்றல்ல. நாம் வெறுக்கிற காரியங்கள் நமக்குச் சோதனையாகாது. நாம் விரும்புகிற பாவங்களில் நாம் சோதிக்கப்படும்போது ஒருவேளை அந்தப் பாவத்தை நாம் செய்யாதிருந்தாலும் அந்தச் சோதனை நம்மைக் கறைப்படுத்தாமல் போகிறதில்லை. இது நமது அனுபவமா யிருப்பதால் பாவமற்ற கிறிஸ்து சோதிக்கப்பட்டாரென்பது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. பரிசுத்தமுள்ள நமதாண்டவர் சோதிக்கப்பட்டது மெய். அவர் சோதிக்கப்பட்டபோதிலும் பாவம் செய்யாதிருந்ததும் மெய். பாவத்தில் ஜீவிக்கிறவர்களுக்குச் சோதனை அவசியமில்லை அவர்கள் சாத்தான் கையிலிருந்து அவனுக்கு இஷ்டமான யாவையும் இடைவிடாமல் செய்கிறபடியால் அவன் அவர்களைச் சோதிக்கவேண்டிய தில்லை. தேவனுடைய பிள்ளைகளோ பாவஞ் செய்யாதிருக்கவும், பரிசுத்தமாகப் பிழைக்கவும் நாடுகிறார்கள். சாத்தான் இவர்களை மறந்தவனல்ல. எப்பொழுது விழுங்கலாமோவென்று சுற்றித் திரிகிறான். நாம் எவ்வளவுக்கு கிறிஸ்துவைப்போல் ஜீவிக்க நாடுகிறோமோ, எவ்வளவுக்குப் பரிசுத்தத்தை விரும்புகிறோமோ, அவ்வளவுக்கதிகமாய் சாத்தான் நம்மைப் பலவிதத்திலும் சோதிப்பான். ஆதாமில் பாவமில்லாதிருந்தும் அவன் சோதிக்கப்பட்டான். அவன் அச்சோதனைக்கு இணங்கா திருந்தானானால் பாவஞ் செய்திருக்கமாட்டான். சோதிக்கப் பட்டதற்காக தேவன் அவனைக் குற்றப்படுத்தவில்லை. சோதிக்கப்படுவது பாவமல்ல. சோதனைக்கு **இணங்குவதே** பாவம்.

நமதாண்டவர் சோதிக்கப்பட்டும் அவர் சோதனைக்கு இணங்காததினாலே பாவஞ் செய்யவில்லை. அவர் **பரிசுத்தராயிருந்ததினாலே** பாவஞ் செய்யவில்லை என்று நாம் நினைக்கக்கூடாது. அவர் **பாவமற்ற தன்மையுள்ளவரானதால்** அவர் பாவஞ் செய்வது முடியாத காரியம் என்று எண்ணவுங் கூடாது. பாவமற்ற தூதர்கள் எப்படிப் பாவஞ் செய்தார்கள்? பாவமற்ற ஆதாம் எப்படிப் பாவஞ் செய்தான்? இரட்சகர் சோதனைக்கு இணங்காதிருந்ததும், அவர் பாவஞ் செய்யாதிருந்ததும், பாவம் செய்யக்கூடாத தன்மை அவரில் இருந்ததினாலே மாத்திரமல்ல. அப்படிச் சொல்வோமானால் அவருக்கு நேரிட்ட சோதனைகள் சோதனைகளுமல்ல; அவர் பாவஞ் செய்யாதிருந்தது விசேஷமுமல்ல. சாத்தான் சுட்ட மூன்று வெடிகளும் வெற்று வேட்டுகள் என்றாகும். அவர் வாஸ்தவத்தில் சோதிக்கப்படக்கூடாதவரும்

பாவஞ் செய்யக்கூடாதவருமான கிறிஸ்துவாயிருந்தால், பாவிகளாகிய நம்முடைய சோதனைகளில் அவர் எப்படி அனுதாபப்படவும், நமக்கு மாதிரியாயிருக்கவுங்கூடும்? நாம் அவரை நமது எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமானவரென்று எப்படிச் சொல்லக்கூடும்? "எல்லா விதத்திலும் அவர் நம்மைப்போல் சோதிக்கப்பட்டாரென்று" சொல்வதும் பொய்யாயிருக்குமே. அவர் மெய்யாய்ச் சோதிக்கப் படவில்லையென்றால் அவர் மெய்யான மனுஷனாயிராமல் ஒரு தோற்றமாயிருந்திருக்கவேண்டுமே. அவர் மெய்யான மனுஷனல்ல வென்றால் நமக்கு அவர் மெய்யான மாதிரியுமல்ல. அவர் ஜீவியமுழுவதிலும் அவர் தவறிப்போகத்தக்கதான அநேக சோதனைகள் அவருக்கு நேரிட்டன. தமது பிதாவின் சித்தத்திற்கு விரோதமாய் நடக்கும்படி இனத்தாராலும், அப்போஸ்தலராலும் யூதஜனங்களாலும் அவர் அநேகந்தரம் சோதிக்கப்பட்டார். அவர் இணங்கியிருப்பாரானால் பாவஞ் செய்திருப்பார். ஆகிலும், என்ன பாடுகள் பட்டாலும், மகா குரூரமான மரணம் வந்தாலும், என் இஷ்டப்படியுமல்ல, மற்றவர்கள் ஏவுகிறபடியுமல்ல, என் பிதாவின் சித்தப்படியே நடப்பேன் என்று சொன்ன அவருடைய மனவுறுதியை என்ன சொல்ல!

பாவஞ் செய்யக்கூடாத தன்மை தமக்கிருந்ததினால் மாத்திரம் அல்ல, பிதாவின் சித்தத்தைவிட்டு ஒரு நிமிஷமாகிலும் வலதிடது பக்கம் விலகக்கூடாது என்கிற தீர்மானமும், ஆவியின்பலமும் அவருக்கிருந்ததினாலேயே அவர் பாவஞ் செய்யவில்லை. இவ்வாறு அவர் சோதனைகளை ஜெயித்ததும், பாவங்களை மேற்கொண்டதும் இலேசாய் நடந்தகாரியமுமல்ல. அவர் மாம்சத்திலிருந்த நாள்களில் எவ்வளவோ தம்மை வெறுத்தார்; எவ்வளவோ ஊக்கமாய் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்தார்; பிதாவை இடைவிடாமல் தேடினார்; எவ்வளவோ பாடுகளைப்பட்டார்; பாவஞ் செய்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நல்லதென்று துணிந்தார். பாத்திரம் எவ்வளவு கசப்பாயிருந்தபோதிலும் என் இஷ்டம் வேண்டாம் பிதாவே, உமது சித்தப்படியே ஆகக்கடவது என்று விண்ணப்பம் பண்ணினார். ஒருபோதும் தமது மாம்சத்துக்கேற்றபடி நடவாமல், தாம் பெற்றுக்கொண்ட ஆவிக்கேற்றபடியே மகா ஜாக்கிரதை யோடு நடந்தார். அவர் சோதனைக்கு இணங்கக்கூடாதவரும் பாவஞ் செய்யமுடியாத நிலைமையுள்ளவருமாயிருந்தால், இவ்வளவு விழிப்பும் போராட்டமும் ஜாக்கிரதையும் அவருக்கென்னத்துக்கு? எல்லா மனுஷரும் நித்திரை செய்யும் வேளையில் அவர் இராமுழுவதும் வனாந்தரத்திலேயோ, மலையிலேறியோ ஜெபம் செய்து கொண்டிருப்பானேன்? அவர் நடந்தால் அவருக்குக் கால்நோகாதோ? கல் இடறினால் காலில் இரத்தம் வராதோ? வெயிலில் நடந்தால் அவருக்குத்

தாகமுண்டாகாதோ? வேலை செய்தால் களைத்துப் போகமாட்டாரோ? குளிரில் அவர் தேகம் நடுங்காதோ? சாப்பிடாதிருந்தால் அவருக்குப் பசிக்காதோ? அழுகிறவர்களைக் கண்டால் அவர் கண்களில் கண்ணீர் வராதோ? கன்னத்தில் அடித்தால் அவருக்கு நோகாதோ? அவர் கைகளில் ஆணியடித்தால் அவர் தேக முழுவதும் வேதனையால் துடிக்காதோ? அவர் பாவமற்றவராயிருந்ததினாலே இப்படிப்பட்ட அனுபவமும் உணர்ச்சியுமற்றவராயிருந்தாரோ? அவருக்கு விரோதமாய்ச் சேனை புறப்பட்டு வந்தபோது பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்களைக்கொண்டு அவர்களைச் சங்காரம்பண்ணக்கூடுமே. **அப்படிச் செய்வேனானால்** வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்று கேட்டார். தம்மை ஏற்றுக்கொள்ளாத சமாரியரை அக்கினியால் அழிக்கக்கூடும். அன்பின் ஆண்டவர் அப்படிச் செய்யமாட்டார். இப்படிப்பட்ட சோதனைகளுக்கு அவர் இணங்கவில்லை. மெய்யாகவே அவர் சோதிக்கப்பட்டுப் பாடுபடக்கூடிய பூரண மனுஷனாயிருந்தார்.

அரசர் மாளிகை கிடைத்தால் அவருக்கு வசிக்கத் தெரியாதோ? இரத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும் கொடுத்தால் உடுத்தத் தெரியாதோ? யாதொரு கஷ்டமுமில்லாமல் அனுதினமும் சம்பிரமமாய் அவர் சாப்பிடக்கூடாதோ? பொருள் ஏராளமாகச் சம்பாதித்து திரளான வேலைக்காரரை வைத்து நடத்தக்கூடாதோ? உலகத்தார் அனுபவிக்கிற சந்தோஷங்களை இவரும் அனுபவிக்கக்கூடாதோ? ஆகிலும், முன் நாம் கவனித்தபடி பிதாவோடுள்ள இடைவிடாத ஐக்கியத்தாலும், ஆவியின் வல்லமையாலும், ஊக்கமான ஜெபத்தாலும், சர்வ ஜாக்கிரதையாலும் அவர் எவ்வித சோதனைகளுக்கும் இணங்கவில்லை; அவர் பாவஞ் செய்யவுமில்லை. மேலும் நமதாண்டவர் அற்புதங்களைச் செய்யும் **வல்லமை** யுடையவராயிருந்தது அவருடைய சோதனைகளை இன்னும் கொடூரமாக்கிற்று. நாம் விரும்புகிற காரியத்தை இலேசில் வசப்படுத்தக்கூடிய சக்தி நமக்கிருக்குமானால் சோதனையும் அவ்வளவு பலமாகவேயிருக்கும். ஒரு பார்வை, ஒரு வார்த்தை, ஒரு ஜாடை நாம் விரும்புகிற காரியத்தை நமக்குக் கொண்டுவரக்கூடுமானால், நம்முடைய சோதனைகளை மேற்கொண்டு நடப்பது மகா கஷ்டமாயிருக்கும். நாம் அநேக காரியங்களைக் கண்டு அவைகளை இச்சித்து அவைகளால் சோதிக்கப்படலாம். ஆகிலும் நாம் இச்சித்த காரியங்களெல்லாம் நமக்குக் கிட்டாது. நமதாண்டவர் விஷயத்தில் அவர் விரும்பினவைகள் யாவையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை அவரிலிருந்தது. அப்படியிருந்தும் அவர் தீமையானவைகளுக்கு இணங்காமல் தமது வல்லமையை தமக்குள் அடக்கி நடந்தது

மகா ஆச்சரியமே. ஒரே வார்த்தையில் சகல மகிமையையும் எளிதாய் சுதந்தரித்துகொள்ளக்கூடிய வல்லமை தமக்கிருந்தும், அவமானத்துக்கும் பாடுகளுக்கும் மரணத்துக்கும் தம்மை ஒப்புவித்தது எவ்வளவு அதிசயம்! அவர் சோதனைகளுக்கு இணங்காமல் பரிசுத்தமாய் நடந்தது அவருக்கு எளிதாயிருந்ததென்று நாம் நினைக்கக்கூடாது. தம்மைச் சூழ்ந்திருந்த தீமைகளை அவர் கண்டார். சோதனைகளின் கொடூரத்தை அவர் உணர்ந்தார். இவைகளின் மத்தியில் ஒருவன் தன்னைச் சுத்தமாகக் காத்துக்கொள்வது எவ்வளவவோ கஷ்டம் என்பதையும் அறிந்தார். மகா விழிப்போடு பிதாவோடுள்ள இடைவிடாத ஐக்கியத்தாலே, தமக்கு நேரிட்ட சகல சோதனைகளையும் ஜெயித்து சோதிக்கப்படுகிற நமக்கு உதவி செய்ய வல்லவரானார்.

முதலாம் சோதனை **அப்பச்சோதனை**. யாதாமொரு காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் தங்கள் போஜனத்தையும், நித்திரையையும், தேக சுகத்தையும் மறந்துவிடுவதுபோல ஆண்டவர் நாற்பது நாள்களாக ஒன்றும் புசியாதிருந்தார். தாம் செய்யும்படி இதுவரை வாஞ்சித்துக் கொண்டிருந்த ஊழியம் தம்மை ஒருபக்கம் நெருக்க, அதை நிறைவேற்றும்படியான பூரண பலம் அபிஷேகமாக ஊற்றப்பட்டுத் தம்மை முழுவதும் நிரப்ப, பிதாவின் வாக்கு வேலையைத் தொடங்குவதற்கு அடையாளமாகத் தொனிக்க, அநேக எண்ணங்கள் அவருடைய இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ள, இக்காரியங்கள் எல்லாவற்றையும் தீர்க்க ஆலோசிக்கும்படி **ஆவியானவர்** அவரை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனார். அந்த நாள்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. பசிக் கொடுமைக்கு ஒப்பான கொடுமை வேறொன்றுமில்லை. மனுஷர் படும் பாடுகளெல்லாம் இந்த வயிற்றுக்காகத்தானே. பசிவந்தபின் ஞானிதான் என்னசெய்வான்? போர்வீரன்தான் என்ன செய்வான்? நாசரேத்திலிருந்த காலத்தில் இவர் பட்டினியும் பசியுமாயிருக்கவில்லை. வேலை செய்கிறவரும் அன்றாடக ஆகாரத்தை புசிக்கிறவருமாயிருந்தார். தேகத்தில் பூரண சுகமுள்ள அவருக்கு நாற்பது நாளுக்குப்பின் உண்டான பசி எப்படியிருந்திருக்கும்? சமயம் வாய்த்ததென்று சாத்தான் கண்டான். அவர் **தேவகுமாரனென்று** அவனுக்குத் தெரியும். பிதா கொடுத்த சாட்சியையும் கேட்டான். தேவ இராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தவரென்பதையும் அறிவான். அற்புத வல்லமை அவருக்குண்டென்பதும் அவனுக்குத் தெரியும். தன் குடியைக் கெடுக்கவந்த அவரைத் தன் சூதினால் கெடுக்கவேணுமென்று தீர்மானித்து, நியாயமும் இன்பமுமாய்த் தோன்றக்கூடிய வகையாய் அவரைச் சோதிக்க ஆரம்பித்தான்.

அருள்நாதரின் கண்களுக்கு முன்பாக அப்பத்தின் வடிவமும் தோற்றமுமான கற்கள் கிடந்தன. அவைகளை

அவருக்குக் காண்பிக்கிறான். **தேவகுமாரனே!** நீர் இப்படிப் பசியினால் வருந்தலாமா? பிதா உம்மேல் எவ்வளவோ பிரியமாயிருக்கிறாரே. நீர் அவரது நேசகுமாரனல்லவா? மேலும் தமது ஆவியை உமக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறாரே. அவ்வல்லமை உமக்கிருந்து என்ன பிரயோஜனம்? ஆபத்துக்கு உதவாத வல்லமை இருந்தென்ன, போயென்ன? நீர் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்வீரானால் இந்தக் கல் நிமிஷத்தில் அப்பமாக மாறாதோ? நீரும் இலட்சணமாகப் புசித்துப் பலமடைந்து வேலைக்கு புறப்படலாமே. திரளான ஜனக்கூட்டத்தைப் போஷிக்கப் போகிறீரே. அநேகருடைய நோய்களையும் பலவீனங்களையும் நீக்கப் போகிறீரே. உம்முடைய கஷ்டத்துக்கு உதவாத வல்லமை இருந்தென்னத்துக்கு? நீர் தேவனுடைய **குமாரன்** என்பது மெய்யானால் இந்தக் கல்லை அப்பமாகும்படி சொல்லும் என்றான்.

தமது பிராண சத்துரு தமக்கு முன் வைத்த மகா கொடிதும் வஞ்சகமுமான சோதனையை பரிசுத்த ஆண்டவர் கண்டார். ஆ! எவ்வளவு கபடும் சூதும் நிறைந்த வார்த்தைகள் இவைகள்! என் பிதாவுக்குப் பிரியமானபடி பிழைக்க வந்தவனேயல்லாமல் என் பிரியத்தின்படி பிழைக்க வந்தவனல்லவே. அவர் எனக்குப் போஜனம் கொடுக்கும்போது நான் புசிப்பேனேயன்றி என் இஷ்டம்போல் நான் புசிப்பேனோ? அவர் சித்தமல்லவா என் போஜனம்? மேலும் எனக்கு அருளப்பட்ட வல்லமை **மற்றவர்களுக்கு** நன்மை செய்வதற்கேயன்றி எனக்கு அப்பத்தை சிருஷ்டிப்பதற்கும் ரத்தாம்பர உடைகளை உண்டு பண்ணுவதற்கும், மாளிகைளை வரவழைப்பதற்கும், தாகமும் பசியுமில்லாமலிருப்பதற்கும், கஷ்டப் பாடுகளுக்குத் தப்பிக்கொள்வதற்கும் அல்லவே என்றுணர்ந்தவராய் சாத்தானைப் பார்த்து: ''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே'' என்றார்.

இந்த முதல் சோதனையிலடங்கிய **சூது** இன்னதென்று நாம் அறிய வேணும். ஆண்டவர் உலகத்தில் வந்த நோக்கம் மனுமக்களைத் தம்மிடத்தில் சேர்த்து, தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, அவர்களை இராஜ்யத்தின் புத்திரராக்கவேண்டுமென்பதே. இதுவே அவர் செய்யப்போகிற பிரதானமானவேலை. இதை எவ்விதமாகச் செய்யலாமென்று ஆலோசிக்கவே இவ்வனாந்தரத்திற்கு வந்தார். இதை அறிந்த சாத்தான் அவர் தமது இராஜ்யத்தை **லேசாய்** ஸ்தாபிக்கக்கூடிய **தப்பிதமான வழியை** அவருக்குக் காட்டுகிறான். அவர் அப்பங்களைத் திரளாக உண்டாக்கிக் கொடுக்கக்கூடுமானால் ஜனங்கள் திரளாக அவரிடத்தில் கூடுவார்களென்றும் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு அது அனுகூலமாயிருக்குமென்றும்

ஆலோசனை சொல்லுகிறான். அவருடைய வாஞ்சைக்கும் நோக்கத்துக்கும் ஏற்றாற்போல் பேசினதே அவருக்குப் பெரிய சோதனையாயிருந்தது.

நமது இரட்சகர் பசியின் கொடுமையை இந்தச் சமயத்தில் மாத்திரமல்ல, தமது ஊழியத்தின் நாள்களிலும் தமக்குள்ளறிந்தவர். ஒரு சமயம் பசிதாங்கக்கூடாமல் ஒரு அத்திமரத்தைக்கண்டு தமது பசியை ஆற்றிக்கொள்ள கனிகள் அகப்படுமோவென்று மரத்தை அண்ணாந்து பார்த்து நின்றவர். தாம் பசியாயிருந்ததுபோலவே மற்றவர்களுடைய பசியைக்குறித்தும் அனுதாபப்பட்டவர். வனாந்தரத்தில் தம்மோடிருந்த திரளான ஜனங்கள் மூன்று நாள்களாகச் சாப்பிட ஒன்றுமில்லாதிருந்ததைக்கண்டு, அவர்களுக்காகப் பரிதாபங்கொண்டு, இவர்களைப் பட்டினியாய் நான் அனுப்பிவிடுகிறதாயிருந்தால் வழியில் சோர்ந்து போவார்களே, அப்படி அனுப்பிவிட எனக்கு மனம்வரவில்லையே என்று சொன்னவர். கடைசிநாளில் அவர் சொல்லும் வார்த்தைகளில் ஒன்று "நான் பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்'' என்பதே. தாமே பசியை உணர்ந்தவரும், மற்றவர்களுடைய பசியை உணரக்கூடிய வருமாகிய ஆண்டவர், தாம் போகுமிடமெங்கும் அப்பங்களைத் திரளாய் உண்டாக்கி: மனுமக்களே! நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், உங்களுக்குப் போதுமான அப்பங்களும் வஸ்திரங்களும் தாராளமாகக் கிடைக்குமென்று அழைத்திருப்பாரானால் ஜனங்களெல்லாரும் அவரைச் சூழ்ந்துகொள்வார்கள். யாதொரு கஷ்டமின்றி வெகு சீக்கிரத்தில் இராஜ்யத்தையும் ஸ்தாபித்துவிடலாம். ஆகிலும் அது **சாப்பாட்டு** இராஜ்யமாயிருக்குமேயன்றி **தேவனுடைய** ராஜ்யமாகாது. ஆகவே, இந்தச் சோதனை தமது பசியை உணர்ந்தவருக்கு வந்த சோதனை. மற்றவர்களுடைய பசியில் அனுதாபப்படக்கூடியவருக்கு வந்த சோதனை. அப்பங்களை உண்டாக்கக்கூடிய வல்லமையுள்ளவருக்கு வந்த சோதனை. தேவனுடைய இராஜ்யத்தை எப்படி ஸ்தாபிக்கலாமென்று வாஞ்சையோடு காத்திருந்தவருக்கு வந்த சோதனை. இந்தக் குறிப்புகளை மனதில் வைத்துக்கொண்டால்தான் அந்தச் சோதனை எவ்வளவு வஞ்சகமுள்ளதென்று நாம் அறியலாம்.

ஆகிலும், தேவனுடைய இராஜ்யத்தின் தன்மை ஆவிக்குரியதென்றும்; அது புசிப்பும் குடிப்புமல்லவென்றும் எஜமான் அறிவார். ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் போதித்த போதனையில் அதைக் காணலாம். "என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போமென்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? இவைகளெல்லாம்

உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்'' என்று சொன்னார். ஆகையால், தாம் ஸ்தாபிக்கவந்த தேவராஜ்யம் அழிந்துபோகிற அப்பத்தாலும், கிழிந்துபோகிற வஸ்திரத்தாலும், மங்கிப்போகிற பொன்னாலுமல்ல, என்றென்றும் அழியாத தேவ வசனத்தாலும் பரிசுத்தாவியின் வல்லமையாலும் மனுஷருடைய உள்ளத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டிய ஆவிக்குரிய இராஜ்யமெனப் போதித்தார்.

இந்த **அப்பத்தின்** சோதனை இங்கேமாத்திரமல்ல, அவர் திரள் ஜனங்களோடு வனாந்தரத்திலிருந்த சமயத்திலும் வந்தது. பசியோடிருந்த ஜனங்களுக்கு அவர் அப்பமும் மீனும் கொடுத்துத் திருப்தியாகப் போஷித்தவுடனே ஜனங்களெல்லாரும் சேர்ந்து அவரைப் பலவந்தமாய்ப்பிடித்து இராஜாவாக்கும்படி எத்தனித்தார்கள். எங்களுக்கு இதுபோல அப்பமும் மீனும் உண்டாக்கி அனுதினமும் போஷித்துக்கொண்டிரும், நாங்கள் உம்மை இராஜாவாக்கி உமது சிரசில் கிரீடம் சூட்டுவோம் என்றார்கள். இது பிசாசின் சோதனை என்பதை ஆண்டவர் அறிந்து உடனே அவர்களை விட்டுத் தனியே விலகி, சீக்கிரமாய் ஒரு மலையின்மேல் ஏறி அங்கே ஜெபம்பண்ணினார். தமது சீஷர்களும் இந்தச் சோதனைக்குள் சிக்கியிருக்கிறார்களென்பதைக் கண்டு அவர்கள் சற்றும் தாமதிக்காமல் அவ்விடத்தைவிட்டு உடனே நீங்கவும், படவிலேறி அக்கரைக்குபோகவும் அவர்களைத் துரிதப்படுத்தினார். நல்ல சமயத்தை ஆண்டவர் இழந்து விட்டாரே என்று அவர்கள் படவில் போவார்களென்றெண்ணி, அவ்விரவில் பெருங்காற்று அடிக்கவும் கடல் கொந்தளிக்கவும் செய்து அவர்கள் இவ்விஷயத்தை முற்றிலுமே மறந்துபோகும்படி செய்தார்.

சாப்பாட்டில் ஸ்தாபிக்கப்படுகிற கிறிஸ்து மார்க்கம் நிலைக்கமாட்டாது. ஜனங்கள் ஒருசமயம் அவரை ஆவலோடு தேடிவந்தபோது: நீங்கள் அப்பம் சாப்பிட்டுத் திருப்தியானதினால் அல்லவா என்னைத் தேடுகிறீர்களென்று கடிந்துகொண்டார். ஏழைகளாக மார்க்கத்தில் சேருகிறவர்களுக்கு ஆகாரம் உடைகள் கொடுப்பது வழக்கம். இதைப்பார்க்கிலும் மேலான ஆசீர்வாதத்தை அவர்கள் கிறிஸ்துவுக்குள் கண்டடைந்திருப்பார்களானால் நல்லது. அப்படியில்லை யென்றால், கொடுத்துக்கொண்டிருக்கும்வரை சந்தோஷம்; கொடுப்பது நின்றுபோனால் பின்வாங்கிப் போவார்கள். அநேகர் கிறிஸ்துமார்க்கத்தில் சேரும்போது, அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, மாடுகள் வாங்கிக் கொடுத்து, நிலங்களும் பங்கிட்டுக் கொடுத்து, இவ்வாறு அவர்களுடைய

ஜீவனார்த்தத்துக்கு வழியைக் காண்பிக்கிறார்கள். இவைகள் நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டபோதிலும், அந்த கிறிஸ்தவர்களுக்குத் திருப்தியுண்டாகிறதுமில்லை, அவர்கள் குறை கூறாமலிருக்கிறதுமில்லை. நாங்கள் மார்க்கத்துக்கு வந்தோமே, நீங்கள் எங்களுக்குச் சாதித்ததென்ன என்று உபகாரிகள் மனம் நோக இவர்கள் பேசுகிறதுண்டு. நாராயணன் என்பவனுக்கு சாமுவேல் என்றும், காமாட்சி என்பவளுக்கு ராகேல் என்றும் பேர் மாற்றி வைத்ததே விசேஷம். உள்ளான இருதய மாறுதலை இவர்கள் காணவில்லையே என்று நாம் துக்கத்துடன் சொல்ல வேண்டியதிருக்கிறது. நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்? மாம்சத்திற்கென்று விதைத்திருக்க ஆவிக்குரிய பலனை எதிர்பார்ப்பதெப்படி? **அப்பத்தில் ஆரம்பித்த மார்க்கம் ஆவியில் எப்படி வளரும்?** எஜமான் ஜெயித்த சோதனையில் நாம் அடிக்கடி அகப்பட்டுக் கொள்ளுகிறோமல்லவா?

மார்க்கத்தில் அநேகர் சேர்ந்தாலும், கொஞ்சப்பேர் சேர்ந்தாலும் இரட்சிப்பின் வழியை அவர்களுக்குத் திட்டமாக காட்டவேண்டும். தேவவசனத்தை உத்தமத்தோடும் அன்போடும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். கிறிஸ்துவை அவர்கள் தங்கள் ஜீவனாக, இராஜனாக ஏற்றுக்கொள்ளவும், அவரில் முழு இருதயத்தோடு அன்புகூரவும் ஏவிவிடவேண்டும். தேவ பக்தியின் ஜீவியமே இம்மைக்கும் இனிவரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரதானமானதென்று கற்பிக்கவேண்டும். அவர்களை விட்டு நாம் தூரமாக விலகிக் கொள்ளாமல் அவர்களைச் சகோதரராகப் பாவித்து, அவர்களோடு நெருங்கிப் பழகி, ஆவிக்குரிய சம்பாஷணை செய்து, அவர்களுடைய காரியங்களில் அன்பும் அனுதாபமும் காண்பித்து அவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டும். தேவ பக்தியின் ஜீவியத்தாலுண்டாகும் ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும், அவர்கள் தங்கள் சொந்த அனுபவத்தில் காணும்போது, அது குறை இது குறையென்று முறுமுறுக்காமல், எந்த நிலைமையிலும் உத்தம கிறிஸ்தவர்களாக விளங்குவார்கள். மற்றவர்களை கர்த்தரிடம் கொண்டுவர அவர்களே நாடுவார்கள். இதுவே நாம் கட்டும்படி அழைக்கப்பட்டிருக்கிற **தேவனுடைய இராஜ்யம்.**

இரண்டாம் சோதனை **அடையாளச் சோதனை.** இருநூறு அடி உயரமான மோரியா மலையின் சிகரத்தில், இருநூற்று நாற்பது அடி உயரமாகக் கட்டியிருந்த உன்னதமான உப்பரிகையின்மேல் நமதாண்டவரை நிறுத்தி: இதோ கீழே பாரும், கிடுகிடு பாதாளம்! அதோ பாரும்! ஆலயத்தில் ஆசாரியரும் திரளான ஜனங்களும் ஆராதனை செய்துகொண்டிருக்கிறார்கள். தங்கள் மேசியா வானத்திலிருந்து திடீரென இறங்கிவிடுவாரென்பது அவர்களுடைய நம்பிக்கை. எறும்பு மொய்ப்பதுபோல் திரளாக

ஜனங்கள் கூடியிருக்கும் இவ்வேளையில், நீர் உயரயிருந்து அவர்கள் மத்தியில் குதிப்பீரானால், நீரே தங்கள் மேசியாவென்று அவர்கள் உமது பாதம் பணிகிறார்களோ இல்லையோ பாரும். உமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு இதைப்போல் நற்சமய முண்டோ? மேலும் நீர் உமது பிதாவின்மேல் அதிகப் பற்றுள்ளவராயிருக்கிறீரே, அவர் உம்மைக் காக்கும் படிக்குத் தமது தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவாரென்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும் எழுதி யிருக்கிறதே. பிதா இந்த வாக்கை உமக்குக் கொடுத்திருக்க, நீர் அவருடைய குமாரனாயிருப்பது மெய்யானால் முன்பின் யோசியாது உடனே தாழக்குதியும் என்று ஏவினான். இது முந்தினதைப் பார்க்கிலும் கபடும் வஞ்சகமுமான சோதனை. முந்தின சோதனையில் அவர் தமது பிதாவை நம்பியிருக்கிறதாகச் சொன்னதினாலும், வேத வாக்கியத்தை ஆதாரமாக அவர் பிடித்ததினாலும் இந்தச் சோதனையில் அவர் நம்பிக்கையைக் கொண்டும், வேதவாக்கியத்தைக்கொண்டும் அவரைச் சோதித்தான். அதற்கு ஆண்டவர் "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" என்றும் எழுதியிருக்கிறதே என்று அவன் வாயை அடைத்தார்.

நாம் வேதத்தை படிக்கிறோம். தேவன் தமது வசனத்தின் மூலமாய் நம்மோடு பேசுவதாக எண்ணுகிறோம். அது போலவே சாத்தானும் வேத வாக்கியங்களைக்கொண்டு நம்மை வழிதப்பிப் போகும்படி செய்யக்கூடும். வேதவசனத்தைக்கொண்டு தேவகுமாரனை' சோதித்தவன், அற்ப அறிவுடையோராகிய நம்மை விடுவானோ? கடவுள் நமக்கு நியமித்த வழியில் செல்லும்போது நமது நடை இடறுமானால், நம்மைப் பாதுகாக்க அவருடைய வாக்கு ஆதாரமாயிருப்பது மெய்யே. நமது இஷ்டம்போல் நடந்து துணிகரமான காரியங்களைச் செய்வோமானால் நாம் நிச்சயமாகவே கைவிடப்படுவோம். நாம் புத்தியீனமாகச் செய்யும் காரியங்களில் தேவன் நமக்குத் துணை செய்வாரென்று நினைப்பது துணிகரம். விசுவாசிகளில் அநேகர் பல பிரிவாகப் பிரிந்ததும், விபரீதமான உபதேசங்களைப் போதித்ததும் இந்த வேதத்திலிருந்தே. தேவன் பிரிவினைக்குக் காரணமாயிராமல் சமாதானத்துக்குக் காரணராயிருக்கிறார். ஆவியானவரால் நாம் போதிக்கப்படாவிட்டால் எளிதாய்த் தவறிப்போகக்கூடும். "இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்னும் வாக்கியத்தை ஆதாரமாகப் பிடித்து, வருஷம் தேதி குறித்து, வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்க, மணவாளன் வராததால் மனஞ்சோர்ந்து, போனவர்களுண்டு. தங்களைச் சேர்ந்த விசுவாசிகள் மரித்து அடக்கமானபின், மூன்றாம் நாளிலோ அல்லது தாங்கள் குறித்த நாளிலோ அவர்கள்

உயிரோடெழும்புவார்களென்று ஊக்கமாய் ஜெபித்துக் காத்திருக்க, மரித்தவர்கள் உயிரோடே வராததால் எல்லா ஜனங்களுக்கு முன்பாக வெட்கப்படவும், ஊழியத்தில் பின்வாங்கிப்போகவும் நேரிட்டது. கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லித் தங்கள் சுய இஷ்டத்தை நிறைவேற்றித் தீமையை வருவித்தவர்கள் அநேகர். வேதவாக்கியங்களைக்கொண்டு சாத்தான் நம்மைக் கெடுக்காதபடி நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இந்த இரண்டாம் சோதனையும் முந்தினதைப்போலவே நமதாண்டவருடைய நோக்கத்துக்கு இசைவாகத் தோன்றுகிறது. ஜாதிகள் அவரிடத்தில் சேரவேண்டும். இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். யூதர்கள் அதிசயப்படக்கூடிய அடையாளத்தை அவர் காண்பிப்பாரானால் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளக்கூடும். இது யூதர்களுடைய பொல்லாத விருப்பத்துக்கு இணங்கும்படியான சோதனையாயுமிருந்தது. பிற்காலத்தில் யூதர்கள் ஆண்டவரிடத்தில் வந்து: நாங்கள் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்? **அடையாளம்** காட்டும் விசுவாசிப்போம் என்றார்கள். ஒரு தடவையல்ல, பல தடவைகளிலும் அவரை அடையாளம் காட்டும்படி நெருக்கினார்கள். அவர் சிலுவையில் தொங்கின அந்தக் கடைசி நேரத்திலும்: ''நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு இராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்'' என்றார்கள்.

யூதர்கள் அடையாளங்களைத் தேடுகிறார்கள் என்று பவுல் சொன்னது எவ்வளவு உண்மை! அவர்கள் கண்களால் கண்டு ஆச்சரியப்படத்தக்க காரியங்களை ஆண்டவர் நடப்பிப்பாரானால், அது அவர்களில் **பிரமிப்பை**மாத்திரம் உண்டாக்குமேயன்றி அவர்கள் இருதயத்தை மாற்றமாட்டாது, அவர் தமது ஊழியத்தில் பிரவேசித்தபோது, அநேகருடைய நோய்களை நீக்கினார். பேய்களைத் துரத்தினார். மரித்தோரை எழுப்பினார். இவை யாவும் அவர் பாவிகள்மீது **மனதுருகிச்** செய்த அன்பின் கிரியைகளே. சொஸ்தமானவர்கள் தம்மைப் பிரஸ்தாபிப்பதும் அவருக்குப் பிரியமில்லாதிருந்தது. அற்புதங்கள் செய்வதற்காகவே அவர் உலகத்தில் வந்தவரல்ல. ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டாக்குவதற்காக அவர் அற்புதங்கள் செய்தவருமல்ல. தாம் எவ்வளவு தாழ்மையுள்ளவராகக் காணப்பட்டபோதிலும் தமது ஜீவியத்தைக் கவனித்து, தமது உபதேசத்தைக் கேட்டுத் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி விரும்பினாரேயன்றி, தமது கிரியைகளைப் பார்த்து அவர்கள் தம்மை விசுவாசிப்பதை அவர் பிரதானமாய்க் கருதவில்லை. ஆகையால் அடையாளம் காட்டுமென்று அவர்கள்

கேட்டபோது: இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள், அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்று மறுத்தார்.

கிறிஸ்துவின் அடியார்களாகிய நாம் இந்தச் சோதனையில் எளிதாக அகப்பட்டுக்கொள்ளுகிறோம். யூதர்கள்மாத்திரமல்ல, எக்காலத்திலும் மனுஷருக்கு அபூர்வமான காரியங்களில் பிரியமே. கண்காட்சிகளும் மாம்ச உற்சாகமும், காலத்துக்குக்காலம் கொண்டாட்டங்களும் இல்லையென்றால் அவர்களுக்கு மார்க்கமே இல்லாததுபோல் தோன்றும். ஐயோ, அநேகர் இருதய பக்தியை அறியாமல் புறம்பான ஆசாரங்களிலேயே நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனங்களை உற்சாகப் படுத்தும்படி அவர்களுக்கு ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டாக்கக்கூடிய காரியங்களைக் கையாடுகிறார்கள். அலங்காரமான ஆலயங்களினாலும், இனிமையான பாடல்களினாலும், சிறந்த உடுப்புகளினாலும், பரவசப்படக் கூடிய படங்களினாலும், வாசனையுள்ள தூபங்களினாலும் மனுஷருள்ளத்தில் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கலாமென்று நினைக்கக்கூடாது. இப்படிப்பட்ட புறம்பான காரியங்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியும்,. ஒருவிதமான உணர்ச்சியையும் உண்டாக்கினபோதிலும், இருதயங்களை மாற்றும் சக்தியுடையவைகள் அல்ல. ஆச்சரியம் விசுவாசமல்ல, பரவசம் உள்ளான மாறுதல் அல்ல. தேவனுடைய இராஜ்யம் ஆவிக்குரியது. அது இருதயங்களில் ஸ்தாபிக்கப்படவேண்டியது. தேவ ஆவியினாலும் திருவசனத்தின் வல்லமையாலும் உள்ளத்தில் மறுபிறப்பு உண்டாகவில்லையென்றால், நாம் தேவனுடைய இராஜ்யத்தைக் காண முடியாது, அதில் பிரவேசிக்கவும் முடியாது.

மூன்றாம் சோதனை **ஆளுகைச் சோதனை**. நமதாண்டவர் இராஜாவாகப் பிறந்தவர். இராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தவர். முந்தின இரண்டு சோதனைகளிலும் தவறிப்போன சாத்தான், மூன்றாவதாக ஓர் உயர்ந்த மலையின்மேல் அவரை நிறுத்தி, உலகத்தின் சகல இராஜ்யங்களையும் அவைகளின் மகிமைகளையும் அவருக்குக் காண்பித்து, இவைகள் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது, எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன், நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்றான். இதுவரை பொறுமையாய் உத்தரவு சொன்ன ஆண்டவர், சாத்தான் தன்னை வணங்கவும், தன் மூலமாய் உலக இராஜ்யங்களை பெற்றுக்கொள்ளவும் கேட்டபோது கோபங்கொண்டு: "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக'' என்று எழுதியிருக்கிறதே என்றார்.

உலகமும் அதன் நிறைவும் கர்த்தருடையது. அவர் மனுஷனை உண்டாக்கினபோது அவனை உலகத்துக்கு இராஜனாயிருக்கவும் அதை ஆண்டுகொள்ளவும் ஏற்படுத்தினார். அவனோ பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு உலகத்தை இழந்தான். சாத்தான் உலகத்துக்கு இராஜனானான். இது அவனுக்குத் திருட்டுச் சொத்தேயன்றி தேவன் அவனுக்குக் கொடுத்ததல்ல. இவைகள் எல்லாம் என்னுடையது, எனக்கு இஷ்டமானவனுக்குக் கொடுப்பேன் என்று அவன் சொன்னதும் பொய்யல்ல. அவன் "உலகத்தின் அதிபதி" என்று இரட்சகர் சொன்னார். "இப் பிரபஞ்சத்தின் தேவன்" என்று பவுல் சொன்னார். "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று" யோவான் சொன்னார். நமதாண்டவரும் அப்போஸ்தலரும் தீமை நிறைந்த இந்த உலகம் பொல்லாங்கனுடைய ஆதீனத்திலிருப்பதைக் கண்டார்கள். அப்படியில்லையென்றால் நமக்குச்சோதனையேது? அவனுக்கு இஷ்டமானவனுக்குத் தன்னுடைய உலகராஜ்யத்தில் பங்குகொடுப்பதும் மெய்யே. இராஜ்யமும் ஐசுவரியமும் எப்படிக்கிடைத்தது? ஜாதிகளை நாசம்பண்ணி வருகிற போராயுதங்கள் எங்கேயிருந்து வந்தன? கொலைபாதகனாகிய சாத்தானுடைய தூண்டுதலுக்கு இணங்காவிட்டால் யுத்த களத்தில் ஆயிரம் பதினாயிரமான மனுஷர் மடிவதேது? ராஜாக்கள் என்னும் பேர் மகிமையுள்ளதாயினும், இராஜ்யங்கள் திரளான செல்வத்தைக் கொண்டுவந்தபோதிலும் அவைகளின் கிரயம் இரத்தம் அல்லவோ? இவ்விதம் சம்பாதிக்கப்பட்ட இராஜ்யங்களைப் பயமின்றி, சமாதானத்தோடும் ஆறுதலோடும் அரசாளவாகிலும் இடமுண்டோ? எப்பக்கம் சேனைகள் வருமோ, எந்த நேரம் தங்களுக்கு ஆபத்து நேரிடுமோவென்று விழிப்போடும் பயத்தோடுமல்லவோ காக்கவேண்டியதிருக்கிறது. உலக இராஜ்யங்களின் பெருமையும் மகிமையும் இவ்வளவே.

யூதர்களை புறஜாதியரான ரோமர் ஆண்டார்கள். அக்கொடிய ஆளுகையிலிருந்து விடுதலையாகும்படி தாங்கள் எவ்வளவோ பிரயாசப்பட்டும் வாய்க்கவில்லை. மேசியா வரும்போது தங்கள் சத்துருக்களை ஜெயித்து சுயராஜ்யத்தை ஸ்தாபித்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, ஒருக்காலுமில்லாத பூரண மகிமையோடு அவர் **ஆளுகை** செய்வாரென்பது அவர்களுடைய முழு நம்பிக்கை. அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கி ரோமரை ஜெயித்திருப்பா ரானால், ஆயிரமாயிரமான யூதஜனங்களும் அவர்கள் அதிகாரிகளும் கிறிஸ்துவின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை இராஜாவாக அபிஷேகம்செய்திருப்பார்கள். ரோமை இராஜ்யத்தை மாத்திரமல்ல, உலக இராஜ்யங்கள் எல்லாவற்றையும் ஜெயிக்கக்கூடிய வல்லமை அவருக்கிருந்தது. அப்படிச் செய்திருப்பாரானால் இத்தனை பாடுகளும்

அவமானங்களும் அவருக்கு நேரிட்டிருக்கமாட்டாது. பிதா அன்புகூர்ந்து தமது குமாரனை அனுப்பினதும், குமாரன்மூலமாய் அவர் ஸ்தாபிக்க விரும்பினதுமான இராஜ்யம் அதல்ல. உலகத்தின் இராஜ்யங்களை நமதாண்டவர் ஜெயித்து ராஜாவாகக் கூடுமானால், அநேக இராஜ்யங்கள் ஒரு இராஜ்யமாகலாம். அநேக இராஜாக்களை நீக்கி இவர் ஒருவரே இராஜாவாயிருக்கலாம். ஆகிலும், அது மறுபடியும் ஒரு பெரிய உலக **இராஜ்யமாயிருக்குமேயன்றி** கடவுளுடைய ஆவிக்குரிய இராஜ்யமாகாது. இன்னும் மனுஷர் தங்கள் பாவங்களாலும் பலவித கேடுகளாலும் தவித்துப் புலம்புவார்கள். மனுமக்கள் தேவ இராஜ்யத்தின் புத்திரராகவேண்டுமானால். பாவங்களிலிருந்து அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும். தேவ ஆவியினால் உள்ளான மாறுதலடைய வேண்டும். தேவ சமாதானம் அவர்கள் உள்ளத்தை ஆளவேண்டும். இந்த இரட்சிப்பை மனுஷர் பெற்றுக்கொள்வதற்கு கிறிஸ்து முந்திப் பாடுபட்டு **மரிக்கவேண்டும்.** இதுவே பிதா தமது குமாரனுக்கு ஏற்படுத்தின **பாதை.** இந்தப் பாதையே தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பாதை. சாத்தானோ அவர் இந்தப் பாதையைவிட்டு விலகி மோசம் போகும்படி சோதிக்கிறான். யூத ஜனங்களுடைய விருப்பத்துக்கு இணங்கிப் பாடுகளுக்குத் தப்பிக் கொள்ளுமென்று ஏவுகிறான்.

இவ்விதமாக பிதா காண்பித்த **சிலுவைப் பாதை ஒரு பக்கமும்,** சாத்தான் காண்பித்த இலேசான **மாம்ச பாதை** மறுபக்கமும் இருக்க, அவர் கோபத்தோடு அவனைப் பார்த்து: அப்பாலே போ சாத்தானே, நான் எவ்வளவு அகோர கஷ்டப்பட நேரிட்டாலும், என் பிதா காண்பிக்கிற பாதையில் நடப்பேனேயன்றி, உன் யோசனைக்கு ஒருபோதும் இணங்கேன் என்று அவனைத் துரத்தியடித்தார். அவர் ஊழியத்தில் பிரவேசித்தபின்பும் இதே சோதனை திரும்பவும் திரும்பவும் அவருக்கு வந்தது. அவருடைய சீஷர்களே அவருக்குச் சோதனையாயிருந்தார்கள். ஒரு சமயம் அவர் தமது பாடுகளைப்பற்றிச் சொன்னபோது பேதுரு: இந்தப் பாடுகள் உமக்கு நேரிடக்கூடாதே என்று அவரைக் கடிந்துகொண்டார். எனக்குப் பின்னாகப்போ சாத்தானே! நீ தேவனுக் கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாயென்று அவனைக் கடிந்துக்கொண்டார். இது பேதுரு மூலமாய் வந்த **சாத்தானின்** சோதனையென்று கண்டார்.

இந்தச் சோதனையிலடங்கிய இன்னொரு காரியமும் கவனிக்கத்தக்கது. அதுவும் அவருடைய விருப்பத்துக்கு இசைவானதே. சாத்தான் உலகத்தின் இராஜ்யங்களை நமதாண்டவருக்குக் காண்பித்த நோக்கமும் அதுவே. எப்படியென்றால், அவர் யூதர்களின் மேசியாவாயிருந்தாலும்

உலக முழுவதுக்கும் இரட்சகராக வந்தவர். அவர் பிறந்து வளர்ந்த பலஸ்தீனா தேசமோ மகா சிறியது. அவர் தமது ஜீவகால முழுவதையும் பலஸ்தீனாவில் செலவிட்டபோதிலும், உலகமெங்குமுள்ள மனுமக்களை அவர் நினைத்து அவர்களை இராஜ்யத்தின் புத்திரராக்கவேண்டுமென்று இடைவிடாத வாஞ்சைகொண்டிருந்தார். உலகம் இரட்சிக்கப்படவேண்டியது அவசியமானாலும் இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே பிதா அவரை முந்தி அனுப்பினார். அந்தச் சிறிய தேசத்தில் இவர் ஊழியஞ் செய்வதும், சொந்தமான ஜனங்களாலே கொல்லப்படுவதும் பிதாவின் ஒழுங்காயிருக்குமானால், மற்றத் தேசங்களை நினைத்துப் பரிதாபப்பட்டு, பலஸ்தீனாவை விட்டு வெளியே போவது நியாயமல்ல. இதனிமித்தமே இவர் மற்றத் தேசங்களை நினைத்தபோதெல்லாம் அவருடைய திருவுள்ளம் பரிதாபத்தால் பொங்கிற்று.

உலகத்திலுள்ள எல்லா ஜனங்களையும் அவர் நேசித்தார். அவர்களைக் காணவும் அவர்களோடு பேசவும் அவருக்கு எவ்வளவோ வாஞ்சையிருந்தது. யூதர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்து நின்றபோது: "உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேலிருக்கும், நான் சுத்தமாயிருக்கிறேன், இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று" பவுல் சொல்லிப்புறப்பட்டுப் போனதுபோல இவரும் போயிருக்கக்கூடாதா? தமது கிருபையையும் அன்பையும் நன்றியோடு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஜனங்கள் பிரதேசங்களிலிருக்கும்போது, முரட்டாட்டமும் கலகக்குணமுமுள்ள இந்தப் பொல்லாத ஜனங்களோடு ஏன் போராடிக்கொண்டிருந்தார்? அவர் உலகமுழுவதுக்கும் இரட்சகராக வந்திருக்க, இந்தச் சிறிய தேசத்திலேயே தமது ஜீவிய காலத்தைப் பின்னிடுவானேன்? "உன் கைகளிலிருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான் என்றும்; மேய்ப்பனை வெட்டு அப்பொழுது ஆடுகள் சிதறிப்போகுமென்றும்" சொல்லப்பட்டபடி, கிறிஸ்து தமது சுயஜனங்களால் பாடுபட்டு மரிப்பதும் அவரது சீஷர்கள் ஓடிப்போவதும் பலஸ்தீனாவில் நடக்கவேண்டிய காரியமாயிருந்தது. *(சக. 13:6)*. ஆதலால் முந்தி **எருசலேமிலும்** பிந்தி **உலக முழுவதிலும்** என்பது அவருடைய அனாதி ஒழுங்கு.

ஒரு சமயம் யூதர்கள் அவரைக்குறித்து: "இவர் போகிறேன் என்கிறாரே, நாம் இவரைக்காணாதபடிக்கு எங்கே போவார்? கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்போய் கிரேக்கருக்கு உபதேசம்பண்ணுவாரோ? என்று பேசிக்கொண்டதும் அவருக்குச் சோதனையாகவேயிருந்தது. இவர் கிரேக்கரிடத்தில் போயிருந்தால் அவர்கள் இவரை மகா மரியாதையுடன் ஏற்றுக்கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம். ஆனால்

கிரேக்கருக்கு உபதேசமெல்லாம் தத்துவ சாஸ்திரமே. இவரை ஒருபெரிய தத்துவ சாஸ்திரியாக ஏற்றுக்கொண்டு அவருடன் சம்பாஷணை செய்திருப்பார்கள். அவருடைய உபதேசம் இரட்சிப்பின் **சுவிசேஷமாக** எண்ணப்படாமல் தத்துவ சாஸ்திரமாகவே எண்ணப்படும். ஆகையால் இவர் அங்கே போவதற்கு இது சமயமல்ல. அவர் இந்தியா முதலான மற்றத் தேசங்களுக்கு வந்திருப்பாரானால் நம் தேசத்தார் அவரைச் சிரமேற்கொண்டு பாதம்பணிந்திருப்பார்கள். இந்த முரட்டு யூதர்களைப்போல் ஒருபோதும் அவரை நடத்தவேமாட்டார்கள். ஆனால் நமதாண்டவர் உலகத்துக்கு **இரட்சகராக** வந்தாரேயன்றி, **குருவாக**மாத்திரம் வந்தவரல்ல. ஆகையால் இவையாவற்றுக்கும் முந்தி நடக்கவேண்டிய ஒருகாரியமுண்டு. அவர் பலபாடுகள்பட்டு மரித்துத் தமது மகிமையில் பிரவேசிக்க வேண்டும். அவருடைய **நாமத்தில்** பாவமன்னிப்பாகிய இரட்சிப்பும் நித்திய ஜீவனும் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும். அவர் சிலுவையின் மரணத்தை எதிர்பார்த்தே உலகத்துக்கு வந்தார். சிலர் பிதற்றுகிறபடி அவர் மரிப்பது, பிந்தி அவருக்குத் தெரியவந்து, தப்பக்கூடாமல் அகப்பட்டுக் கொண்ட காரியமல்ல. அவர் மரணத்துக்குத் தப்பவேண்டுமானால் யாதொரு கஷ்டமில்லாமல் தப்பித்துக்கொள்ளக்கூடிய வல்லமை, அவருக்குள்ளிருந்தது. அவருடைய ஜீவனை எடுக்க ஒருவனாலும் முடியாது. அவரே அதைக் கொடுக்கவும் மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் அதிகாரமுடையவராயிருந்தார்.

தமது மரணத்தை எதிர்பார்த்தே தமது ஊழியத்தில் பிரவேசித்தார். எட்டு நாள் குழந்தையாயிருக்கையில் இரத்தம் சிந்தி சிலுவையின் மரணத்தை முன்னறிவித்தார். ஞானஸ்நான முழுக்கினால் தமது மரணத்தைப் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தினார். ஊழிய ஆரம்பத்தில் "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்றாம் நாளில் அதைத் திரும்பக்கட்டுவேன்" என்றார். நிக்கோதேமுவினிடத்தில் தாம் சிலுவையில் உயர்த்தப்படவேண்டுமென்று பேசினார். கலிலேயாவில் மணவாளன் தமது சீஷரைவிட்டு எடுபடும் நாள் வருமென்று பிரசங்கித்தார். அப்போஸ்தலரிடத்தில் தாராளமாய்த் தமது, மரணத்தைக் குறித்துப் பேசினார். வேளை வந்தபோது தாமே தைரியமாய் சிலுவையை நோக்கி எருசலேமுக்கு நடந்தார். ஆகையால் மற்றத் தேசங்களுக்குப் போகும்படியான **சோதனை** தமக்கு நேரிட்டபோதிலும், அந்தச் சிறு தேசத்திலேயே தங்கி ஊழியம் செய்வது தமது விசாலமான அன்பின் இருதயத்திற்குக் கஷ்டமாயிருந்தபோதிலும், அவர் **பலஸ்தீனாவை** விட்டு வெளியே போகவில்லை. ஒரு சமயம் கிரேக்கர் வந்து அவரைப் பார்க்கும்படி ஆசைப்பட்டபோது அவர் இருதயம் கலங்கின இரகசியமும் அதுதான். தம்மை ஏற்றுக்கொள்ள விரும்புகிற

தேசத்தார் வெளியே இருக்கிறார்களே, ஆகிலும் இப்பொழுது அங்கே போகக்கூடாதே என்று நினைத்து ''கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்குமென்று'' அந்த கிரேக்கருக்குத் தாம் முந்தி மரிக்கவேண்டுமென்கிற அவசியத்தைக் குறிப்பாகக்காட்டினார். சாத்தானோ: இந்தப்பாடுகளும் மரணமும் உமக்கு வரவேண்டியதில்லை, என்னைப்பணிந்து கொள்ளும், அப்பொழுது இராஜ்யங்கள் உம்முடையதாகும் என்று சோதித்தான். அவரோ: ''என்னைக்கேளும் அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" என்று என் பிதா எனக்கு வாக்களித்திருக்க, உன்னை வணங்கும்படி என்னைக் கேட்கவும் உனக்குத் தைரியம் வந்ததா? அப்பாலே போ சாத்தானே என்று துரத்தியடித்தார்.

தேவராஜ்யத்தின் வேலைக்காக ஆண்டவராவது அவரது அப்போஸ்தலர்களாவது உலகத்தோடு ஒப்பந்தம் செய்தவர்களல்ல. தேவனை நம்பி ஆவியின் பலத்தோடு வேலைசெய்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை **கர்த்தர்** அனுதினமும் சபையில் சேர்த்தார். இராஜ்யத்தின் புத்திரர் உலகத்தில் பலவீனராயிருந்த போதிலும் அரண்களையும் நிர்மூலமாக்கத்தக்க தேவபலமுள்ளவர் களாயிருந்தார்கள். சிறந்த ஆலயங்களும், கௌரவமான பட்டங்களும், உலக ஐசுவரியமும் அவர்களுக்கில்லாதிருந்தும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் அவர்கள் ஐசுவரியமுள்ளவர்களும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களுமாயிருந்தார்கள். தேவ ஊழியம், நடந்தேறுவதற்காக உலகத்தோடு ஒப்பந்தம்பண்ணி சாத்தானை வணங்கினவர்களல்ல. ஆகிலும் பிற்காலத்திலும் தற்காலத்திலும் சபைகள் எஜமான் நடந்து காண்பித்த வழியைவிட்டு விலகி, இது சபையோ உலகமோ என்று சொல்ல முடியாதவிதமாய் இரண்டும் கலந்து போயிருப்பது எவ்வளவு பரிதாபம்!

மனுஷருள்ளத்தில் நடக்கவேண்டிய ஆவிக்குரிய வேலையைப்பார்க்கிலும், மனுஷர் கண்டு புகழக்கூடிய புறம்பான வேலையிலேயே சபைகள் கவனம் வைத்திருக்கின்றன. அப்படியானால் அதற்கு பொருளுதவியும் ஐசுவரியவான்கள் தயவும் வேண்டியதே. உலகம் பொருளைச்சேர்க்கக் கையாடும் முறைகள் எதுவோ, அதுவே சபைகளின் முறையாகவும் இருக்கிறது. பலவித ஆட்டங்கள் நாடகங்கள்மூலமாக தேவராஜ்யத்தின் ஊழியத்திற்கென்று பணம் சம்பாதிப்பது எவ்வளவு விசனமான காரியம்! நமது எஜமான் தமது சீஷர்களைப் பிரசங்கிக்க முதல் முதல் அனுப்பினபோது: நீங்கள் ஒரு பட்டணத்தில் அல்லது கிராமத்தில் பிரவேசிக்கும்போது, அதிலே பாத்திரமானவன் யாரென்று விசாரித்து நீங்கள்

புறப்படுமளவும் அவனிடதில் தங்கியிருங்கள், அபாத்திரமானவன் எவ்வளவு ஐசுவரியவானாயிருந்தாலும் அவனால் நீங்கள் கறைப்படாதபடி அவன் சகாயத்தை நீங்கள் நாடவேண்டாம் என்று கட்டளையிட்டார். தேவ ஊழியத்தில் சிக்கிரம் பலன் காணாதிருக்கும்போதும், மற்றவர்கள் கண்டு சந்தோஷப்படத்தக்கதாண வேலை இல்லாதிருக்கும்போதும் தேவ ஊழியர்களுக்கு இந்த **மூன்றாம்** சோதனை வரும். முகமது தனது பட்டயத்தால் தேசங்களை ஜெயித்து, பிற்பாடு தன்னுடைய மார்க்கத்தில் அவர்களைப் பலவந்தமாகச் சேர்த்ததுபோல, நாமும் எந்தவிதத்திலாவது சபைகளை ஸ்தாபித்துப்பின்பு அவர்களுக்கு ஞானோபதேசம் செய்யலாம் என்று சோதிக்கப்படுகிறோம். ஆவிக்குரிய மறைவான தேவராஜ்யத்தைவிட **உலக** இராஜ்ஜியமே நமக்கு பிரதானமாய்த் தோன்றுகிறது. தேவாபிமானத்தைவிட தேசாபிமானமே நம்மை மேற்கொண்டிருக்கிறது. கடவுளுடைய இராஜ்யத்திற்காகச் சற்றும் கவலைப்படாத திரளான மனுஷர், தங்கள் இராஜ்யத்தின் கொடிகளுக்காக தங்கள் உயிரையும் கொடுத்துவிடுவார்கள். ஐயோ கிறிஸ்துவின் சபை எஜமானின் வழியைவிட்டுவிலகி, பலவிதத்திலும் உலகத்தோடு ஒப்பந்தம்பண்ணித் தன் மகிமையை இழந்துவிட்டது. சிம்சோனைப்போல அந்த மகிமை தன்னைவிட்டு நீங்கிப் போனதையும் உணராதிருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தின் மகிமை உலக இராஜ்யங்களிலிருந்தல்ல, தேவாவியின் பலத்தினாலுண்டாக வேண்டியது. "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரையே பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று எழுதியிருக்கிறதே.

முதலாம் சோதனை **அப்பத்தின்** சோதனை. தேவனுடைய இராஜ்யம் உலக நன்மைகளினால் அல்ல; ஜீவனுள்ள தேவவசனத்தினால் ஸ்தாபிக்கப்பட வேண்டியது. இரண்டாம் சோதனை **அடையாளச்** சோதனை. தேவனுடைய இராஜ்யம் ஆச்சரியமும் பிரமிப்புமான கண்காட்சிகளில் அல்ல; ஆவியினால் உள்ளத்தில் நடக்கும் மறுபிறப்பால் ஸ்தாபிக்கப்பட வேண்டியது. மூன்றாம் சோதனை உலகத்தோடு ஒப்பந்தம் செய்யும் **ஆளுகைச்** சோதனை. தேவனுடைய இராஜ்யம் உலக மகிமையால் அல்ல; தேவன் பேரிலுள்ள நம்பிக்கையினாலும் அவர் கிருபையினாலும் ஸ்தாபிக்கப்பட வேண்டியது. தேவனுடைய இராஜ்யத்தின் **தன்மை** ஆவிக்குரியது. அதைக் கட்டவேண்டிய **விதம்** ஆவிக்குரியது. அதைக் கட்டுவதற்கு வேண்டிய **வல்லமையும்** ஆவிக்குரியது. இவ்விதமாக நாம் கட்டும்போது மற்ற நன்மைகள் யாவும் கூடக் கொடுக்கப்படும். கிறிஸ்துவின் வாக்கு நமக்கு ஆதாரம்.

9
முதல் சீஷர்கள்
The First Disciples

முதல் மூன்று சுவிசேஷங்களேபோதும், நான்காம் சுவிசேஷம் அவசியமல்லவென்று தற்காலக்கொள்கைக்காரர் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணமென்ன? முதல் மூன்று சுவிசேஷகரும் எழுதினவைகளை நான்காம் சுவிசேஷகன் மறுபடியும் எழுதாமல்விட்ட குற்றமோ? அல்லது அவர்கள் எழுதாமல் விட்ட விஷயங்களை இவர் எழுதித்தந்த குற்றமோ? சொல்ல வேண்டுமானால் நான்கு சுவிசேஷங்களும் சேர்ந்ததல்லவோ முழுச் சுவிசேஷமாகிறது. முதல் மூன்று சுவிசேஷங்களும் எழுதப்பட்டுச் சபைகளில் வாசிக்கப்பட்டு வந்த காலத்தில், கிறிஸ்துவையும் அவரது ஊழியத்தையும் அவைகள் பூரணமாக வெளிப்படுத்தவில்லை என்கிற குறைவு காணப்பட்டது.

யோவான் காவலில் வைக்கப்பட்டபின்பு, ஆண்டவர் கலிலேயாவில் செய்த ஊழியத்தை அவர்கள் பிரதானமாக எழுதினார்களேயன்றி, அதற்குமுன் நடந்த காரியங்களையும் யூதேயாவின் ஊழியத்தையும் அவர்கள் எழுதவில்லை. இக்குறைகளை நீக்கும் நோக்கமாய் யோவான் தமது சுவிசேஷத்தை எழுதினார். இவர் முதலாம் நூற்றாண்டின் கடைசியில், கிறிஸ்துவுக்குப்பின் எழுபதாம் வருஷத்தில், ஆவியின் போதனையில் பூரண அனுபவமுள்ளவராய் இந்தத் தெய்வீக சுவிசேஷத்தை எழுதினார். இவர் மாற்குவைப்போல் பேதுருவிடம் கேட்டெழுதினவரல்ல லூக்காவைப்போல் எங்கும் விசாரித்து எழுதினவருமல்ல. தாமே கண்ணாரக் கண்டவைகளையும், கிறிஸ்துவினிடமிருந்து தாமே கேட்டவைகளையும் வெகு திட்பநுட்பமாய் எழுதியிருக்கிறார். இடங்கள், ஆள்கள், நாள்கள், மணி நேரம் முதலான காரியங்களைக்குறித்து அத்தனை வருஷங்களுக்குப்பின் அவருக்கிருந்த ஞாபகசக்தி கவனிக்கத்தக்கது. இவருக்கு எருசலேமில் வீடு இருந்தபடியால் மற்ற

சீஷர்களைப்பார்க்கிலும் கிறிஸ்துவுடன் கூடவேயிருந்து அவர் கிரியைகளைக் கவனிக்கும் சிலாக்கியம் இவருக்கிருந்தது. மூன்று சுவிசேஷகரும் வனாந்தர சோதனையிலிருந்து ஒரே தாண்டாய் கலிலேயாவுக்குக் குதிக்கிறார்கள். சோதனைக்குப்பின் நடந்த ஒருவாரச் சங்கதிகளை எழுதாமல் விட்டார்கள். ஆண்டவர் வனாந்தரத்திலிருந்து உடனே கலிலேயாவுக்குப் போகவில்லை. அவர் மறுபடியும் யோர்தானுக்கு வந்தார். அப்போது நடந்த சம்பவங்களையும், அவர் தமது முதல் சீஷர்களைக் கண்டடைந்த விபரங்களையும் யோவான் மாத்திரம் வெகுதிட்டமாக எழுதியிருக்கிறார். அவை பின்வருமாறு.

இரபிமார் ஏற்பாட்டின்படி யூதர்களுடைய கலியாணம் புதன்கிழமையிலே நடக்கும். அந்த நாளையே விவாக நாளாகத் திருச்சபையும் கைக்கொண்டு வருகிறது. கானாவூர்க்கலியாணம் புதன்கிழமையென்றால் ஆண்டவர் யோர்தானுக்கு வந்தநாள் வெள்ளிக்கிழமையாயிருக்கவேண்டும். அதற்கு முந்தினநாள் வியாழனில், சனதரீம் சங்கத்தார் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி, அவர் கிறிஸ்துவா அல்லது எலியாவாவென்று விசாரித்து வரச்சொன்னார்கள். அதற்கு அவர் நான் கிறிஸ்துவுமல்ல எலியாவுமல்ல, நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தம், ஒருவர் உங்கள் நடுவில் தோன்றியிருக்கிறார், அவர் என்னிலும் மகா பெரியவர், நீங்களோ அவரை அறியாதிருக்கிறீர்கள் என்று சாட்சி கூறினார். மறுநாள் வெள்ளிக்கிழமை கிறிஸ்து வனாந்தரத்திலிருந்து வந்து ஜனக்கூட்டத்தில் உலாவுகிறார். இவ்வதிசய நாதனை யோவான் ஆறு வாரங்களுக்குப்பின் கண்டதும், அவர் இத்தனை நாளும் எங்கே போயிருந்தாரோவென்று தனக்குள்ளே சிந்திக்கிறார். அவர் முகத்தைப்பார்த்தால் திவ்ய மகிமை விளங்குகிறது. அவர் ஞானஸ்நானம் பெற்ற சமயத்தில் நடந்த சம்பவங்களைக் கண்ணுற்ற யோவான் அவரைப்பார்த்து: இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி; இவரே தேவனுடைய குமாரன் என்று எல்லாரும் கேட்கத்தக்கதாகக் கூறி அறிவித்தார். இந்த அறிவு இவருக்கு எப்படி வந்தது? யூதர்கள் எல்லாரும் தங்கள் மேசியா உலக அதிகாரத்தோடு வந்து அரசாட்சி செய்வாரென எதிர்பார்த்திருக்க, இவரோ அவரை அடிக்கப்படப்போகிற ஆட்டுக்குட்டி என்று பிரஸ்தாபித்தது ஆச்சரியமே. அவர் வேதத்தை அறியாதவரல்ல. கிறிஸ்துவின் பாடுகளைக்குறித்து ஏசாயா தீர்க்கன் சொன்ன வார்த்தைகளே அவருக்கு ஆதாரமாயிருந்திருக்கவேண்டும்.

யோவானுடைய வேலை ஒருவாறு முடிந்தது. சூரியன் உதயமாகவே விடிவெள்ளி மறைய வேண்டிய காலமாயிற்று. "அவர் பெருகவும் நான் சிறுகவும்" என்று யோவான் சொன்னதும்

நியாயமே. அவர் கிறிஸ்துவைக் குறித்து இவ்வளவு மேலான சாட்சி கூறினபோதிலும் ஜனங்கள் அதைக் கவனிக்கவில்லை, ஒருவரும் அவரைப் பின் செல்லவுமில்லை. ஆவிக்குரிய ஆண்டவரை அறிய ஆவிக்குரிய பார்வை வேண்டும். மறுநாளில் அதாவது யூதருடைய ஓய்வுநாளாகிய சனிக்கிழமையில், யோவானும் அவர் சீஷரில் இரண்டு பேரும் நிற்கும்போது, இயேசு நடந்துபோகிறதை அவர் மறுபடியும் கண்டு: "இதோ, தேவ ஆட்டுக்குட்டி'' என்று கைநீட்டிக் காண்பித்தார். அவர்களிருவரும் மற்றக் கலிலேயரோடு யோவானிடத்தில் வந்து அவர் உபதேசம் கேட்டு அவருக்குச் சீஷரானவர்கள். மேசியாவின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்த கலிலேயரில் அவர்கள் இருவர். யோவானும் அவர்களும் அந்தச் சமயத்தில் இயேசுவைக் குறித்துத்தான் பேசிக்கொண்டிருந்திருக்கவேண்டும். "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் சொன்னவுடனே, அவர்களிருவரும் தங்கள் குருவை விட்டு நீங்கி கிறிஸ்துவைப் பின்சென்றார்கள். அவர்கள் அப்படிப் போனது யோவானுக்கு அளவில்லாத சந்தோஷம். சற்று பிந்தி யோவானுடைய சீஷரில் சிலர் அவரிடத்தில் வந்து: இரபீ! உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே, அவரைக்குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்று சொன்னபோது யோவான் பிரதியுத்தரமாக: அவரே மணவாளன், நான் அந்த மணவாளனுடைய தோழன். நான் அவர் அருகே நின்று அவர் சொல்லைக் கேட்கிறவனாக மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப் படுகிறேன். இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று என்றார்.

இதல்லவா நமக்குச் சிறந்த மாதிரி. யோவான் எவ்வளவு சுய வெறுப்பும் பரிசுத்தமுமுள்ளவராயிருந்தும், தன்னை முற்றிலுமாகத் தாழ்த்தித் தன் எஜமானையே மகிமைப் படுத்தினார். அதிகாரிகளும் ஜனங்களும் தன்னை கிறிஸ்து வென்றும் எலியாவென்றும் சொல்லி தன்னைச் சூழ்ந்துகொண்ட காலத்தில், அது தனக்கு மிகவும் சோதனையான சமயமா யிருந்தும், நான் கிறிஸ்துவுமல்ல எலியாவுமல்லவென்று உதறிப்பேசினார். இயேசுவின் பிரஸ்தாபம் தன்னைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பெருகி, அநேகர் அவரைப் பின்பற்றினபோது அவர் மிகுந்த சந்தோஷமடைந்தார். தன்னைக் குருவாக மதித்துத் தன்னைப் பின்பற்றினவர்களைத் தன்னைவிட்டுப் பிரித்து இயேசுவைப் பற்றிக்கொள்ளும்படி செய்தார். உத்தம ஊழியர்களிடத்தில் காணபடவேண்டிய இலட்சணம் இதுவே. நாம் எவ்வளவுக்கு நம்மைத் தாழ்த்தி கிறிஸ்து ஒருவரையே மகிமைப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருப்போம்.

அவ்விரண்டு சீஷரும் பயத்தோடும் சந்தேகத்தோடும், அவர் தங்களோடு பேசுவாரோ என்னமோவென்கிற திகைப்போடும் கிறிஸ்துவுக்குப் பின்னே நடந்துபோனார்கள். **கர்த்தர்** திரும்பி அவர்களைப் பார்த்தார். அருமைரட்சகரின் முகப்பார்வைக்கு அனந்த ஸ்தோத்திரம்! மனுஷருடைய உள்ளங்களை ஆராயும் பார்வை! குழந்தைகளைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளும் பார்வை! நொறுங்குண்ட பாவிகளைத் திடப்படுத்தும் பார்வை! தீங்கு செய்ய வந்தவர்களைத் தத்தளிக்கச் செய்யும் பார்வை! மறுதலித்த பாவியை மனங்கசந்து அழச்செய்யும் பார்வை! கிருபை நிறைந்த இரட்சகன் காருண்ய முகத்தோடு அவர்களை நோக்கிப் பார்த்தார். விளக்கின் வெளிச்சம் கண்ணாடியின் மூலமாய் வெளியே பிரகாசிப்பதுபோல, அவரது அகத்தில் மறைந்திருந்த திவ்ய மகிமை அவருடைய முகத்தில் ஜொலித்தது. "என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உமது முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று."

தேவ திருக்குமாரனின் திருமுக தரிசனையடைந்து திகைப்புடன் நின்ற அவ்விரண்டு பேரையும் அருள்நாதர் நோக்கி: "நீங்கள் என்ன தேடுகிறீர்கள்" என்று மகா அன்புடன் வினவினார். அவர்கள் தம்மையே தேடிவருவது அவருக்குத் தெரியும். ஆகிலும் அவர் கேட்ட இக்கேள்வி அவர்களை இன்னும் அதிகமாய் யோசிக்கச் செய்தது. தங்கள் ஜீவியத்தின் நோக்கம் இன்னதென்று அவர்களே திட்டமாகக் கண்டு கொள்ளும்படி செய்தது. கிறிஸ்தவர்கள் என்னும் நாமத்தைத் தரித்திருக்கும் யாவருடைய செவியிலும் இக்கேள்வி தொனிக்கிறது. நீங்கள் என்ன தேடுகிறீர்கள்? ஏன் இந்த மார்க்கத்தில் இருக்கிறீர்கள்? உங்கள் பிழைப்பின் **நோக்கம்** என்ன? உங்கள் மிஷன்களின் **நோக்கம்** என்ன? உங்கள் ஆராதனையின் **நோக்கம்** என்ன? உங்கள் வேத சாஸ்திரப் பாடசாலையின் **நோக்கம்** என்ன? உங்கள் ஊழியத்தின **நோக்கம்** என்ன? என்ன **தேடுகிறீர்கள்** என்று கேட்கிறார்.

ஆண்டவர் அச்சமயத்தில் கேட்ட கேள்வி அவர்கள் திராணிக்கு மிஞ்சின கேள்வியே. அவர்கள் இன்னும் அவரை அறியவில்லை. அவருடைய உபதேசங்களைக் கேட்கவில்லை. அவருடைய அற்புதகிரியைகளைக் காணவில்லை. அவர் எப்படிப்பட்ட சுபாவமுள்ளவரென்பது அவர்களுக்குத் தெரியாது. ஆகிலும் ஒன்று நிச்சயம். அவர்கள் தகாத **நோக்கத்தோடு** அவரைத் தேடினவர்கள் அல்ல. வேடிக்கையாகப் பார்க்க வந்தவர்கள் அல்ல. ஆகையால் எஜமான் கேட்ட கேள்விக்கு உத்தரவாக: "போதகரே நீர் எங்கே தங்கியிருக்கிறீர்" என்று பக்திவிநயத்துடன் விசாரித்தார்கள். ஆண்டவருக்கிருந்த சந்தோஷம் கொஞ்சமல்ல. இவர்கள் வழியில் பேசிப்

பிரிந்துபோகும் வழிப்போக்கர் அல்லவே. என்னை வேடிக்கையாகப் பார்க்க வந்த வீண் மனுஷர் அல்லவே. கேள்வி கேட்டுச் சமர்த்தறியும் சோதனைக்காரர் அல்லவே. நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று என்னைக் கேட்கிறார்களே. சாவகாசமாய் என்னோடு தங்கியிருக்கவும், என்னோடு சம்பாஷிக்கவும் நாடுகிறார்களே. இப்படிப்பட்டவர்கள் அல்லவா எனக்கு வேண்டும். இவர்களைக் கொண்டல்லவா நான் என் இராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும். உலகம் என்னை விசுவாசிப்பதற்கு இவர்கள் அல்லவா எனக்குக் கிடைத்த முதற்பலன் என்று தமக்குள் சிந்தித்தவராய் "வந்து பாருங்கள்" என்றார். இவர்கள் கேட்ட கேள்வியும் ஆண்டவர் கொடுத்த உத்தரவும் அவர்கள் ஜீவியத்திலும் நமது ஜீவியத்திலும் ஒருக்காலும் முடியப்போகிறதில்லை. ஆண்டவரே நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? உமது தன்மை என்ன? உமது உற்பத்தி என்ன? உமது இரகசியம் என்ன? உமது பரிபூரணம் என்ன? உமது இரட்சிப்பின் பெருக்கம் என்ன? ஆண்டவரே நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? நீங்கள் என்னிடத்தில் வந்து என்னோடு தங்கினால் இவை யாவையும் அறிவீர்கள் என்பதாக "வந்து பாருங்கள்" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவுடன் தங்குகிறவர் களேயன்றி அவர் மகிமையைக் காண்பவர்கள் யார்?

அது சனிக்கிழமையாகிய ஓய்வுநாள். மாலை நாலுமணி வேளை. அவ்விருவரும் ஆண்டவரோடு போய் அன்றையத்தினம் அவரோடு தங்கினார்கள். அவர் தங்கியிருந்த ஸ்தலம் எப்படிப்பட்டது? "நரிகளுக்கு குழிகளுண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று சொன்னவர் அரசர் மாளிகையில் தங்கியிருந்திருப்பாரோ? நதிக்கரையில் கூடிவந்த ஜனங்கள் தங்கும்படி சமயத்திற்கென்று இலைகளாலும் ஓலைகளாலும் கட்டப்பெற்ற குடிசைகள் அங்கேயிருந்தன. அவைகள் ஒன்றில் இரட்சகரும் இவர்களும் போய்த் தங்கியிருந்திருக்கலாம். அன்று என்னென்ன பேசிக் கொண்டார்கள், என்னென்ன நடந்திருக்கும் என்பது நமக்குச் சொல்லப்படாவிட்டாலும், அநேக நூற்றாண்டுகளாக எதிர்ப்பார்த்திருந்தவரும், தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட வரும், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவருமான **மேசியா** அவரேயெனச் சந்தேகமறக் கண்டறிந்தார்கள். அவர் உலகத்தில் வந்த நோக்கத்தையும் தாம் ஸ்தாபிக்கப்போகிற இராஜ்யத்தையும் அவர்களுக்கு விவரித்து, தாம் அவர்களை அழைக்கும் நாளில் அவர்கள் தம்மோடு சேர்ந்து தமக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும் என்று கேட்டிருப்பார். நமது ஊழியத்தை நமக்காகத் தெரிந்துகொள்ளுகிறவர் கர்த்தரே. அவர் சத்தம் கேட்டு அவரைப் பின்செல்லுகிறவர்கள் பாக்கியவான்கள்.

அவரைப் பின் சென்ற இரண்டுபேரில் ஒருவர் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா எனபவர். மற்றவர் தன் பேரை மறைத்தாலும் அவர் நாலாம் சுவிசேஷத்தை எழுதின யோவான் என்பவரே. எழுபது வருஷங்களுக்குப் பின்பு தமது சுவிசேஷத்தை எழுதினபோதிலும் அந்த நாளில் நடந்த சம்பவத்தை அவர் கொஞ்சமும் மறந்தவரல்ல. தான் இரட்சகரைச் சந்தித்த மணிநேரத்தையுங்கூட திட்டமாய் எழுதியிருக்கிறார்.

ஓய்வுநாளாகிய சனிக்கிழமை கடந்து ஞாயிறு வந்தது. "என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது, நான் இராஜாவைக்குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன்; என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி, எல்லா மனுப்புத்திரரிலும் நீர் மகா சௌந்தரியமுள்ளவர்" என்று சங்கீதக்காரன் பாடினதுபோல, கிறிஸ்துவின் மகிமையைக் கண்டவன் சும்மாயிருக்கமாட்டான். தான் பெற்றுக்கொண்ட நன்மையை மற்றவர்களுக்கும் அறிவிக்க நாடுவான். கிறிஸ்துவின் புறம்பான தோற்றத்தைக்குறித்து: அவர் தமது சரீர அமைப்பிலும் முகவடிவத்திலும் மிகவும் அழகுள்ளவராயிருந்தாரெனச் சொல்லப்படுவதுண்டு. தேவபரிபூரணம் நிறைந்த திருக்குமாரன் பரிசுத்த அழகுபொருந்தினவராயிருந்தாரென்பது ஆச்சரியமல்ல. ஆகிலும் அப்போஸ்தலரையும் மற்றவர்களையும் கவர்ந்து கொண்டது அவருடைய உள்ளான தேவமகிமையேயன்றி புறம்பான தோற்றமல்ல. அவரது சரீரத்தின் தோற்றத்தைப்பற்றிச் சுவிசேஷகர் ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. கிறிஸ்துவின் மகிமையைக் கண்ட அந்திரேயா முதலாவது தன் சகோதரன் சீமோனைத் தேடிப் போகிறார். தன் சகோதரனைப் பார்த்து: யோவானும் நானும் மேசியாவைக் கண்டோம். யோவான்ஸ்நானன் சொன்னதுமாத்திரமல்ல, நாங்களிருவரும் அவரிடத்திற்குப் போய் அவரோடு தங்கி அவரே மேசியாவெனத் திட்டமாய்க் கண்டறிந்தோம் என்று சொல்லித் தன் சகோதரனை இயேசுவினிடத்தில் அழைத்துக் கொண்டுவந்தார். **மேசியா** என்பது எபிரேய பதம். அதற்குக் கிரேக்குப் பாஷையில் கிறிஸ்து என்று அர்த்தம். **கிறிஸ்து** என்பதற்கு அபிஷேகம் பெற்றவர் என்று பொருள். அந்திரேயாவைப் போலவேயோவானும் தன் சகோதரன் யாக்கோபை அழைத்து வந்திருக்கலாம். தன் பேரை மறைத்தவர், தான் அன்று செய்த வேலையைச் சொல்லாமல் விட்டது ஆச்சரியமல்ல. தன் சுவிசேஷத்தில் தன்னை மாத்திரமல்ல, தன் சகோதரன் யாக்கோபின் பேரையும் அவர் வெளிப்படுத்தவில்லை.

மார்க்கத்தில் சேர்ந்தவர்கள் எல்லாரும் கிறிஸ்தவர்கள் என்று எண்ண இடமுண்டோ? கிறிஸ்துவைத் தங்கள் சொந்த

இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய இரட்சிபபின் ஆசீர்வாதத்தை அனுபவிப்பவர்களே உத்தம கிறிஸ்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதேபோதும் என்றிராமல் மற்றவர்களையும் கிறிஸ்துவினிடம் கொண்டுவர நாடுவார்கள். இதுவே வேத ஒழுங்கும் கிறிஸ்துவின் ஏற்பாடுமாயிருக்கிறது. "என்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்பதின் கருத்து இதுதான். நான் உன்னை ஆசீர்வதிப்பேன் உன்னை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமுமாக்குவேன் என்பதின் அனுபவமும் இதுதான். கர்த்தரால் இரட்சிக்கப்பட்டு மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக ஜீவிக்காதவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோஜன மில்லை.

சீமோன் வந்தபோது ஆண்டவர் சீமோனை நோக்கிப் பார்த்தார். ஆ! அந்தத் திருப்பார்வை! ஒரு ஏழைச் செம்படவன் தன்முன் வந்து நிற்கிறான். சீமோனுடைய பலவீனங்களை கர்த்தர் அறிவார். அவருடைய பதட்டம் கோழைத்தனம் பின்வாங்கும் சுபாவம் யாவும் ஆண்டவருக்கு நன்றாய்த் தெரியும். ஆகிலும் தேவ கிருபையினால் சீமோன் வல்லமையும் பிரயோஜனமுமான ஊழியக்காரனாக மாறக்கூடுமென்பதையும் அறிவார். ஆகையால் சீமோனைப் பார்த்து: யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ **கேபா** என்னப்படுவாய் என்றார். கேபா என்பதற்கு பேதுரு வென்றும், பேதுரு எனபதற்குக் கன்மலையென்றும் அர்த்தம். ஜீவியத்தில் ஒரு மாறுதல் உண்டாகும்போது அதை ஞாபகப்படுத்த ஒரு புதிய பேரிடுவது இஸ்ரவேலருக்குள் வழக்கம். இரட்சகர் சீமோனுக்குக் கொடுத்த பேர் அவர் அன்றே மாறிவிட்டாரென்றல்ல; இனிமேல் மாறுவார் என்கிற நம்பிக்கையினாலே கொடுத்தபேர். சீமோன் தனக்குக்கிடைத்த புதிய பேருக்குத் தகுந்தாற்போல் வெகுகாலம் நடக்கவில்லை. ஆகிலும் அப்புதிய பேரைக்கொடுத்த ஆண்டவரே, அப்பெயருக்கேற்றாற்போல் ஜீவிக்கவும் உழைக்கவும் கிருபை செய்தார். பெந்தெகொஸ்தேப்பண்டிகையில் மூவாயிரம் பேரை கிறிஸ்துவின் பாதத்தில் கொண்டு வந்தவர் இந்த சீமோனே.

நாம் ஒருவனுடைய தகாத நடக்கையைக் கண்டால் அவன் ஒன்றுக்கும் உதவமாட்டான் என்று தள்ளிவிடுகிறோம். அவனில் மறைந்திருக்கும் நற்காரியங்களை நாம் கவனித்து அதை விருத்திசெய்ய நாடுகிறதில்லை. நாம் மற்றவர்கள் பேரில்வைக்கும் அவநம்பிக்கையினால் அவர்களை ஆதாயம்பண்ணக்கூடாமற் போகிறோம். தோற்றத்தின்படிமாத்திரம் தீர்ப்புச்செய்வது சரியல்ல. நம்மைக் கண்டுபிடித்த தேவகரத்தை நாம் மறந்து விடக்கூடாது. நமது துர்ச்சுபாவங்களும் குறைவுகளும் அவருக்குத்

தெரிந்திருந்தும், நம்மைத் தெரிந்துகொண்டதும் நம்மைத் தமக்கு ஆளாக்கினதும் அவரது கிருபையல்லவா? அவர் நம்மை நம்பி இவ்வளவு தயவுடன் நடத்தாமற்போனால் இந்த பாக்கியமான நிலைமைக்கு நாம் வந்திருப்போமா? கர்த்தர் நம்மை நடத்தினது போல நாமும் நமது உடன் சகோதரரை நடத்தவேண்டியது நமது கடமையல்லவா?

மறுநாள் திங்கள்கிழமை அதாவது, நமதாண்டவர் யோர்தான் நதிக்கரையில் வந்த நாலாம் நாள். அவர் புதிதாய்த் தம்மிடம் வந்த சீஷரோடு வடதிசைநோக்கிக் கலிலேயாவுக்குப் புறப்படுகிறார். கானாவூரில் புதன்கிழமை நடக்கும் கலியாணத்திற்கு அவர் போகவேண்டும். போகும் வழியில் அவர் பிலிப்புவைக்கண்டார். இந்த பிலிப்பு; அந்திரேயா, பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான். அவர்களைப்போலவே பிலிப்புவும் மேசியாவின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தவர். அவர்களோடுகூட கலிலேயாவி லிருந்து யோர்தான் நதிக்கரை வந்து யோவான்ஸ்நானன் கிறிஸ்துவைக்குறித்துக் கொடுத்த சாட்சியைக்கேட்டவர். கானாவூர்க் கலியாணத்திற்கு பிலிப்புவும் அழைப்புப் பெற்றிருந்தார். சீஷர்கள் பிலிப்புவைக் கண்டவுடன் இயேசுவைப்பார்த்து. ஆண்டவரே அதோ பிலிப்பு என்றார்கள். இரட்சகர் பிலிப்புவை நோக்கி : நீ எனக்குப் பின்சென்று வா எனறார். பிலிப்பு மிகுந்த சந்தோஷத்துடன் ஆண்டவருக்குப்பின் சென்றார். நமதாண்டவர் பிலிப்புவை இதற்குமுன் அறியாதவரல்ல. அப்போஸ்தலருக்குள் பிலிப்பு மாத்திரம் **கிரேக்குப்** பெயருள்ளவர். தேசத்தை ஆளும் இராஜாக்களின் பேரை குடிஜனங்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது எக்காலத்திலும் வழக்கம். நமது நாட்டிலும் ரிச்சர்ட், ஜார்ஜ், எட்வார்ட் முதலான பெயருடையவர்கள் அநேகர். பிலிப்பென்பவன் காற்பங்கு தேசாதிபதியாயிருந்ததினால் அப்பெயர் இவருக்கு வந்திருக்கலாம். இவருக்குக் கிரேக்கப் பெயர் இருந்தது மாத்திரமல்ல, கலிலேயாவில் கடற்கரையோரம் குடியிருந்த கிரேக்கரோடு இவருக்குப் பழக்கமிருந்ததாகவும் தோன்றுகிறது. ஏனென்றால், கிறிஸ்து பாடுபடுவதற்குமுன் கிரேக்கர் அவரைப்பார்க்க விரும்பினபோது, அப்போஸ்தலருக் குள் இந்தப் பிலிப்புவைத் தேடிவந்து தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

இவ்வாறு ஆண்டவரும் அவர் சீஷர்களும் கலிலேயா நோக்கிப் பிரயாணம் செய்கையில் பிலிப்புவினுடைய உள்ளம் கானாவூரானாகிய தன் சிநேகிதன் நாத்தான்வேலை நாடினது. நாத்தான்வேல் பிலிப்புக்கு மாத்திரமல்ல, இப்பொழுது கிறிஸ்துவுடன் நடந்துபோகிற மற்றச் சீஷர்களுக்கும் சிநேகிதனே. இவரும் யோர்தான் நதிக்கரைக்குவந்து யோவான் கிறிஸ்துவைக்

குறித்துக் கொடுத்த சாட்சியைக் கேட்டிருந்தார். இவர் வேதத்தியானமும் ஜெபசிந்தையுமுள்ளவர். இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருந்தவர். ஆகிலும் ஒரு பெரிய சங்கடம் ஏற்பட்டது. யோவான் பிரசங்கித்த மேசியா நாசரேத்து ரானல்லவா? தீர்க்கதரிசி காண்பிக்கிற மேசியா பெத்லகேமில் இருந்தல்லவா வரவேண்டும். நான் இதை எப்படி ஏற்றுக் கொள்ளுகிறது என்கிற திகைப்புள்ளவராயிருந்தார்.

பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டபோது, மிகுந்த சந்தோஷத்துடன்; நாத்தான்வேலே! உனக்கு ஒரு நற்செய்தி; நியாயப்பிரமாணத்தில் மோசேயும் தீர்க்கத்தரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் என்றார். திரள் ஜனங்களுக்கு முன்பாக நின்று பிரசங்கிக்க அதிக ஞானமும் தைரியமும் வேண்டும் என்பது மெய்யே. ஆகிலும் ஒருவனுக்குப் பிரசங்கிப்பது இலேசான காரியமல்ல. ஒரு தனித்த மனுஷனோடு முகமுகமாய் இரட்சிப்பைக்குறித்துப் பேசுவதற்கு அதிக ஞானமும் கிருபையும் வேண்டும். பிலிப்பு பேசினது தன் உத்தேசமல்ல. வெறும் உபதேசமல்ல. கேள்விப்பட்ட காரியமுமல்ல. தான் கண்ணாரக்கண்ட சத்தியத்தைத் தன் சிநேகிதனுக்குச் சொன்னார். நாத்தான்வேலே! நானே அவரைக் கண்டேன். நான் கண்டவரைக்குறித்து உனக்குச் சொல்லுகிறேன். நீ என் வார்த்தைகளை நம்பக்கூடாதா? என்றார்.

'நாசரேத்தூர் இயேசு' என்ற வார்த்தையை நாத்தான்வேல் கேட்டவுடனே அவருக்கிருந்த சஞ்சலம் கொஞ்சமல்ல. அந்தக் கெட்டுப்போன ஊரிலிருந்தா மேசியா வரப்போகிறார்? நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையும் உண்டாகக்கூடுமோ? என்று கேட்டார். இரட்சிப்பின் விஷயத்தில் ஆட்சேபனைகள் உண்டாவது எக்காலத்திலும் இயல்புதான். சிலர் நிர்விசாரிகள். சிலர் கடினப்பட்டவர்கள். சிலர் உலக சிந்தையுள்ளவர்கள். சிலர் சிற்றின்பப்பிரியர். இப்படிப்பட்டவர்களோடு சாந்தமாய் ஊக்கமாய்ப் பேசி ஒருவேளை அவர்களை உணரும்படி செய்யலாம். ஆனால் நமது உபதேசத்தைக்குறித்து ஏற்கெனவே **தப்பெண்ணங்** கொண்டிருப்பவர்களை உணர்த்துவதோ கஷ்டம். ஒரு மனுஷனைக்குறித்து ஏற்கெனவே நமது இருதயத்தில் தப்பபிப்பிராயம் விழுந்துவிட்டால், அவன் ஜீவியம் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தாலும் நமக்கு அது மாய்மாலமாகத் தோன்றும். அவன் ஊழியம் எவ்வளவு உண்மையுள்ளதாயிருந்தாலும், அது நமக்கு வெளிவேஷமாகத் தோன்றும். தப்பெண்ணமுள்ள ஒருவனுக்கு, பேர் அச்சிடப்படாத ஒரு புஸ்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னால், அவன் அதைப் படித்து, அதை மகா அருமையான புஸ்தகமென்றும், பாஷை நடையும் பொருளும் மிகவும் நேர்த்தியாயிருக்கிறதென்றும் சொல்லுவான். இதை

எழுதினவர் யாரென்று தெரியுமோவென்று கேட்டால் தெரியாது என்று சொல்லுவான். இன்னாரல்லவா அதை எழுதினது என்று சொன்னவுடனே, அந்த மனுஷனுடைய முகம் மாறுகிறது. ஐயோ, நான் அவசரமாக வாசித்தேன். கருத்தாக நான் அதைப் படிக்கவில்லை. இபபோது அதைத் திரும்ப வாசித்துப்பார்த்தால் அந்தப் புஸ்தகம் அவ்வளவு விசேஷித்ததாகத் தோன்றவில்லை என்பான். ஏற்கெனவே ஒரு மனுஷனைக் குறித்துத் தப்பெண்ணங்கொண்டிருப்பது எவ்வளவு மோசமென்று பாருங்கள். பிலிப்பு கிறிஸ்துவைக்குறித்துக் கொடுத்த உண்மையான சாட்சியை நாத்தான்வேல் ஏற்றுக்கொள்ளக் கூடாமற்போன காரணம், நாசரேத்தூரைப் பற்றிக் கொண்டிருந்த தப்பெண்ணமே.

ஏழை பிலிப்பு இப்போது என்ன செய்வார்? இவர் நாத்தான்வேலோடு தர்க்கம்பண்ணக்கூடுமோ? இந்த இயேசுவை கிறிஸ்துவென்று வேத வாக்கியங்களின்மூலமாய்த் திருஷ்டாந்தப் படுத்தும் திறமை இவருக்குண்டோ? அவ்வளவு திறமை அவருக்கு உண்டென்று சொல்லவும் ஏதுவில்லையே. காலமெல்லாம் கர்த்தரோடிருந்து கடைசி நேரத்தில்: "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்" என்று கேட்டவர் இந்தப் பிலிப்பல்லவா? அல்லது, நான் சொல்லுகிறதை நீ கட்டாயம் நம்பத்தான் வேண்டும், இல்லாவிட்டால் நீ கெட்டுப்போவாய் என்று பயமுறுத்தினாரோ? அப்படி யாதொன்றும் செய்யவில்லை. தன்னால் கூடாததை தன் ஆண்டவர் செய்வார் என்றுணர்ந்தவராய்: "வந்து பார்" என்றார். தன்னையும் மற்றச்சீஷர்களையும் கவர்ந்துகொண்ட கிறிஸ்துவின் திருமுகப்பார்வை நாத்தான்வேலையும் கவர்ந்துகொள்ளக் கூடுமென்பது அவர் நம்பிக்கை. சந்தேகிக்கிறவர்களை நாம் நடத்தவேண்டிய இடம் கிறிஸ்துவே. வந்துபார்-மிஷனையல்ல. வந்துபார்-கோவிலையல்ல, வந்துபார்-சபையையல்ல. வந்துபார்-போதகர்களையல்ல, வந்துபார்-தர்க்க சாஸ்திரங்களையல்ல. அற்புதநாதனை, அருமை இரட்சகனை, பாவிகளின் நேசனை, பரமகிருபாகரனை வந்துபார்!

நாத்தான்வேல் மறுவார்த்தை பேசாமல் வந்தார். அவர் வருவதை கிறிஸ்து கண்டு பக்கத்தில் நின்ற சீஷர்களைப்பார்த்து: **"இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்"** அதாவது, யாக்கோபு இல்லாத இஸ்ரவேல் என்றார். கிறிஸ்துவுக்கடுத்த இரகசியங்களை நாம் பூரணமாய் அறிந்து கொண்டவர்களல்ல. எத்தனையோ காரியங்கள் நமக்கு விளங்காமல் நம்மில் சந்தேகத்தை உண்டாக்கலாம். அதற்காக ஆண்டவர் கோபித்துக் கொள்ளுகிறதில்லை. மாயத்தை அவர் எக்காலத்திலும் பகைக்கிறார். சத்தியத்தை அறியும்படி நாடும் ஆத்துமாக்களை

அந்தகாரத்திலிருந்து வெளிச்சத்தில் நடத்த அவர் வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். நாத்தான்வேலுடைய உள்ளான சுபாவத்தை அறிந்த ஆண்டவர்; இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் வருகிறான் என்று சொன்னவுடனே நீர் என்னை எப்படி அறிவீர் என்று நாத்தான்வேல் கேட்டார். பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே நீ அத்திமரத்தின் கீழிருக்கும் போது நான் உன்னைக்கண்டேன் என்றார். உடனே நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன்! நீர் இஸ்ரவேலின் இராஜா! என்று அறிக்கையிட்டார். இந்த மேலான அறிக்கை தப்பெண்ணங்கொண்டிருந்த நாத்தான்வேலிடமிருந்து புறப்பட்டதற்குக் காரணம் என்ன? அவர் பேசுகிறவரை ஆண்டவர் காத்திருக்கவில்லை. அவருடைய சரித்திரத்தை ஆண்டவர் விசாரிக்கவில்லை. ஆகிலும் அவருடைய ஜீவியத்தின் அந்தரங்கத்தை ஆண்டவர் அறிந்துகொண்டது, நாத்தான் வேலுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒரு நிமிஷத்தில் சந்தேகம் பறந்துபோக, கிறிஸ்துவின் உத்தம அடியானானார். நாத்தான்வேல் சுவிசேஷத்தில் **பர்த்தலொமேயு** என்று அழைக்கப்படுகிறார். பிலிப்போடு அவர்பேர் சேர்ந்து வருவதைக் கவனிக்க. இதைக்கண்ட பிலிப்புவுக்குண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல.

உத்தம ஊழியர்களின் சந்தோஷமும் இதுபோலவே, நமது பிரசங்கத்தைக் கேட்பவர்களுடைய சகல தப்பெண்ணங்களையும் சந்தேகங்களையும் கண்டுபிடித்து அவர்களுக்கு உத்தரவு சொல்ல நம்மால் முடியாது. நாம் நம்மை மறைத்து மகிமையின் கர்த்தரை உயர்த்திக் காண்பிக்கும்போது அவர் அவர்களைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறார். நமக்குத் தெரியாதவிதமாய் அநேகருடைய சந்தேகங்கள் நீங்கி அதிசயமாய் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நாம் பிலிப்புவைப்போல் எஜமான் பக்கத்தில் நின்று அவர் நடப்பிக்கும் அதிசய மாறுதலைக் கண்டு சந்தோஷத்துடன் அவரை ஸ்தோத்திரிக்கிறோம். இதை வாசிப்பவர்கள் யாரானாலும் நாத்தான்வேலைப்போல் ஏதாவது சந்தேகங்களில் அமிழ்ந் திருந்தால் தாமதியாமல் கிறிஸ்துவைப் நோக்கிப் பார்ப்பார்களாக. எவராலும் நீங்காத தடைகள் அவர் சமுகத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

''அத்திமரத்தின்கீழ் உன்னைக் கண்டேன் என்று சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்? இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய். வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் எனறார்.'' தேவ பக்தியுள்ள யூதர்கள் தங்கள் தினசரி தியானத்தில் வேதம் வாசித்து

ஜெபிப்பது வழக்கம். நாத்தான்வேல் தனித்த இடந்தேடி அத்திமரத்தின் கீழ்வந்து தியானம் செய்தபோது அவர் வாசித்த பாகம் யாக்கோபின் தரிசனம். கர்த்தர் தமது சீஷரைப் பார்த்து: யாக்கோபு கண்டது ஒரு தரிசனம். வானத்தையும் பூமியையும் இணைக்கிற மெய்யான ஏணி நானே. பரத்தின் கர்த்தர் இகத்தில் மனுஷனாக வந்தது முதல், பரமதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதும் இறங்குகிறதுமாகவே யிருப்பார்கள். நீங்கள் அதை உங்கள் அனுபவத்தில் காண்பீர்கள். என்னைப் பின்பற்றும் அடியார்களுக்கு அவர்கள் பணிவிடை செய்யும் ஊழியர்களாயிருப்பார்கள் என்று சொன்னார். நான் தனித்திருந்த இடத்தையும், நான் அந்தரங்கத்தில் ஆராய்ச்சி செய்த வேதபாகத்தையும், விசேஷமாய் நான் கபடற்ற இஸ்ரவேலன் என்பதையும் இவர் எப்படி அறிவார்? ஆகையால் இவரே தேவனுடைய குமாரன், இவரே இஸ்ரவேலின் இராஜா என்று நாத்தான்வேல் ஆச்சரியத்துடன் அறிக்கையிட்டார். நமது துக்கங்களையும் பெருமூச்சையும் கண்ணீரையும் நமது அந்தரங்க தவிப்பையும் திட்டமாய் அறிந்தவரும், அனுதாபப்படக்கூடிய வரும், சகல இக்கட்டுகளிலுமிருந்து விடுவிக்க வல்லவருமான இரட்சகர் நமக்கிருக்கும்போது நமக்குக் குறைவேது? என் கவலையை அறிவார் யாருமில்லையே, எனக்கு உதவிசெய்வார் யாருமில்லையே என்று புலம்பும் ஆத்துமாவே! இதோ உன் மீட்பர்! அவரையே நோக்கிப்பார். உன் உள்ளத்தின் தவிப்பை அவருக்குச் சொல்லு. நாத்தான்வேலை அந்தரங்கத்தில் கண்டவர் உன் காரியங்களை அறிந்திருக்கிறார். அவரே உன் தயாபரர். மெய்யாகவே உன்னை வழிநடத்துவார். உன் நாவு அவரைப் புகழும்.

நமதாண்டவர் வனாந்தரத்தில் நாற்பதுநாள் தங்கி, பிசாசின் பலத்த சோதனைகளை ஜெயித்து, தேவதூதர்களால் போஷிக்கப்பெற்று, ஆவியின் பலத்தோடும், தாம் செய்யப்போகிற ஊழியத்தைப்பற்றிய ஒழுங்கோடும் யோர்தான் நதிக்கரைக்குத் திரும்பிவந்தாரெனக் கவனித்தோம். எத்தனையோ மனுஷர் அரியபெரிய காரியங்களைச் செய்ததுண்டு. ஆகிலும் அவைகளை எவ்விதமாய்ச் செய்துமுடிக்கலாமென்பதை ஆரம்பத்திலிருந்தே பூரணமாய்க் கண்டவர்களல்ல. படிப்படியாய் நிகழும் சந்தர்ப்பங்களுக்குத் தக்கதாகவும், சிநேகிதர் சொல்லும் ஆலோசனைக்கேற்றபடியும், தங்கள் வேலையை அனுசரித்து நடத்துகிறதுண்டு. இவரோ தமது ஊழியம் எப்படி நடக்கவேண்டும் என்பதை ஆரம்பமுதல் திட்டமாக அறிந்தவராகத் தமது வேலையில் பிரவேசித்தார். அதிகாரிகளானாலும் அப்போஸ்தலரானாலும் சொந்தப் பந்துக்களானாலும் அவர் நெரிந்துகொண்ட பாதையைவிட்டு வலதிடதுபுறம் அவரை விலகச் செய்வது முடியாத காரியம்.

இவ்வளவு மகத்தான வேலையை எஜமான் செய்தவிதமோ கவனிக்கத்தக்கது. தேவ வேலைக்கும் மனுஷ வேலைக்கும் அதுவே வித்தியாசம். ஒரு பெரிய மாளிகை கட்டப்படும்போது எவ்வளவு ஆரவாரம்! எத்தனை ஆள்கள்! எவ்வளவு சத்தம்! எத்தனை ஒழுங்குகள்! எவ்வளவு பணச் செலவு! உலகத்தில் பெரிய காரியங்கள் அமைதியாய் நடப்பது முடியாத காரியம். கிறிஸ்து உலகத்தில் ஸ்தாபிக்கவந்தது கடவுள் இராஜ்யம். அந்த மகத்தான வேலை எவ்வளவு அமைதலாய் நடக்கிறதென்பதைக் கவனியுங்கள். ஒரு பறவை ஒரு சிறிய விதையை எடுத்துக் காட்டில் போடுவதை மனுஷர் கண் காண்பதில்லை. மழை பெய்கிறது. சூரியன் பிரகாசிக்கிறது. காற்று வீசுகிறது. விதையிலிருந்து இளங்கிளை தோன்றுகிறது. காலங்கள் மாறிமாறி வருகின்றன. வருஷங்கள் வந்துபோகின்றன. ஜனங்கள் பிறக்கிறதும் மரிக்கிறதுமாயிருக்கிறார்கள். இதோ! அந்தக் காட்டில் ஒரு பெரிய ஆலமரம் நிற்கிறதைக் காண்கிறோம்., வனத்தின் பறவைகள் அம்மரத்தில் தங்கிப் பாடுகின்றன. பிரயாணிகள் களைத்து அதின் நிழலில் படுத்து இளைப்பாறுகிறார்கள். ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும் அவ்விசாலமான மரத்தின்கீழ் மடங்குகிறது. ஆ, இந்த மகா பெரிய மரம் இக்காட்டில் எப்படி வந்தது? தேவராஜ்யத்தின் வளர்ச்சியும் இதுபோலவே. இதோ! இராஜா சாதாரணமான மனுஷனைப்போல் யோர்தான் நதிக்கரையில் தோன்றுகிறார். அவர் அதிசயங்கள் காட்டவில்லை, ஆரவாரம் செய்யவில்லை. அவர் மேசியாவென்று கூடியிருந்த ஜனங்கள் அறியவில்லை. அவர் செய்யவந்த ஊழியமோ மகா உன்னதம். அதை அவர் ஆரம்பித்த விதமோ அமைதல். யாதொரு ஆத்திரமும் பதட்டமுமின்றி இங்கொருவனை அங்கொருவனை தம்மிடத்தில் சேர்த்துக்கொண்டார். தமது மகிமையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் மரணபரியந்தம் அவரைவிட்டு விலகமுடியவில்லை. தேவராஜ்யம் அவர்கள் இருதயங்களில் ஸ்தாபிக்கப்பட்டது.

திரள் கூட்டத்தில் அவர் நம்பிக்கை வைத்தவரல்ல. ஆகிலும் திருவசனத்தை அவர்களுக்குக் கூறி அறிவித்தார். அற்புத அடையாளங்கள் செய்வது அவருக்கு விருப்பமில்லை. ஆகிலும் அநேக நோயாளிகளை மனதுருகிக் குணமாக்கினார். அவர்கள் தம்மைப் பிரஸ்தாபப்படுத்துவது எவ்வளவேனும் அவருக்குப் பிரியமில்லை. சிறுபெண்ணை உயிரோடெழுப்பினார். குருடனுடைய கண்களைத் திறந்தார். ஊமையனைப் பேசச்செய்தார். குஷ்டரோகிகளைச் சொஸ்தப்படுத்தினார். சீஷர்கள் பார்க்க மறுரூபமானார். பேதுரு செய்த அறிக்கையைப் புகழ்ந்தார். ஆகிலும் இவைகளைப் பிரஸ்தாபிக்கக்கூடாதென்பதே அவர் கொடுத்த உறுதியான கட்டளை. ஆசீர்வாதம்

பெற்றவர்கள் அதை அறிவிக்காதிருக்கக்கூடவில்லை. ஆகிலும் அது அவருடைய விருப்பத்துக்கு விரோதமாகவே நடந்தது. திரள்கூட்டம் அடிக்கடி, அவரைச் சூழ்ந்துகொள்ளும், அவர்களுக்கு உபதேசமோ நன்மைகளோ, செய்தார். ஆகிலும் கூட்டத்தை விட்டு விலகித் தனித்திருப்பதை நாடினார்.

பிரபலமாயிருக்க விரும்புகிற ஒருவன், அளவில்லாத வல்லமையுடையவனாயிருந்து, திரளான ஜனங்கள் தன்னைப் பின்செல்லுவதைக் கண்டால் தன்னைப் பிரஸ்தாபப் படுத்துவதற்கு அதுவே ஏற்ற சமயமென்று எண்ணுவான். நமதாண்டவர் ஸ்தாபிக்க வந்த இராஜ்யமோ ஆவிக்குரிய தன்மையுள்ளது. ஆவிக்குரியவர்கள் அதில் பிரவேசிக்கிறார்கள். ஆகையால் புறம்பான கோஷ்டத்தால் அவர் இழுப்புண்டு போனவரல்ல. நரருடைய புகழ்ச்சியில் அவர் மயங்கினவரல்ல. அற்புதங்களினால் உண்டான எழுப்புதலை அவர் மெய்மார்க்கமென்று நம்பினவரல்ல. அவருடைய ஜீவியத்தில் யாதொரு பதட்டமும் ஆத்திரமும் இருந்ததில்லை. அவரைப்போல் ஆத்தும வாஞ்சையுள்ளவர்கள் யார்? ஆகிலும் அவரைப்போல் அவ்வளவு அமைதலாய் ஊழியம் செய்தவர்கள் யார்? தந்திர மந்திரமல்ல. மனுஷர் வசனத்தைக்கேட்டு **உணரும்படி** விரும்பினார். பாவத்தின் கேட்டையும், உலகத்தின வஞ்சகத்தையும், பிதாவின் அளவில்லாத அன்பையும், ஆத்துமாவின் அருமையையும், இராஜ்யத்தின் சிறப்பையும் தெளிவாய் ஊக்கமாய்ப் பிரசங்கித்தார். அவர் தாமே மனுஷர் நடுவில் சகல கிருபையும் பொருந்தினவராய்ச் சஞ்சரித்தார். வசனம் விதைக்கப்பட்டபின் ஆவியானவரால் நற்பலன் உண்டாகுமென்று எதிர்பார்த்தார். சீக்கிரத்தில் பலனைக் காணும்படி ஆத்திரப்பட்டு, மனுஷருடைய விருப்பத்துக்கு விரோதமாய் அவர் ஒருவரையும் பலவந்தப்படுத்தினவரல்ல.

ஒருவன் எனக்குச் சீஷனாயிருக்க **விரும்பினால்,** ஒருவன் **தாகமாயிருந்தால்,** ஒருவன் ஜீவனுக்குட்பிரவேசிக்க **விரும்பினால்** என்பதே அவருடைய அழைப்பு. அவரைப் பின்சென்றவர்களில் அநேகர் பிற்காலத்தில் அவரைவிட்டு விலகிப்போனார்கள். அவர் செய்த ஊழியத்தின் அளவுக்கு பலனில்லையே எனத்தோன்றும். அவர் செய்த பரிசுத்தமும் உத்தமுமான ஊழியத்திற்குப் பலனில்லாமற் போகாது. அவர் தமது ஆத்ம வருத்தத்தின் பலனைக்கண்டு மெய்யாகவே திருப்தியும் சந்தோஷமும் அடைவார். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாம் மாம்சத்துக்கேற்ற முறைகளைக் கையாடி, அநேகரை மார்க்கத்தில் சேர்த்துப் போடவேண்டும் என்று ஆத்திரப்படாமல், எஜமான் காட்டிப்போன ஆவிக்குரிய வழியில் நடப்போமாக. உள்ளத்தில்

மாறுதலடையாத பேர்க்கிறிஸ்தவர்களின் தொகை நமக்குச் சந்தோஷத்தைக்கொடுத்தாலும், உத்தம கிறிஸ்தவர்களின் தொகையே எஜமானுக்கும் பரத்துக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆயிரம் பெயரளவு கிறிஸ்தவர்களைப்பார்க்கிலும் ஐந்து உத்தம கிறிஸ்தவர்களே இராஜ்யத்திற்குப் பெலன். இந்நோக்கத்தை மனதில் வைத்து உழைப்போமாக. இவ்வூழியத்தில் ஆண்டவரே நம்மைத் தமது சித்தம்போல் நடத்தவேணும். நமது இஷ்டம்போல் செய்யும் திரளான வேலையைப்பார்க்கிலும், அவர் சித்தம்போல் செய்யும் சுருக்கமான வேலையே நிலையான பலனைக் கொடுக்கும். வேலையின் ஏராளமல்ல, வேலையின் தன்மையே பிரதானம்.

10
கானாவூர் கலியாணம்
The Wedding in Cana

"மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணம் நடந்தது". யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மூன்று நாள் பிரயாணம். நமதாண்டவர் திங்கள்கிழமை காலையில் யோர்தானைவிட்டுப் புறப்பட்டு நாசரேத்தூருக்கு வந்து, அங்கே தமது தாயாரும் சகோதரரும் கலியாணத்துக்குப் போய்விட்டதை அறிந்து, தமது சீஷருடன் கானாவூருக்குப் போயிருக்கலாம். நாத்தான்வேலுக்குச் சொந்தமான கானாவூர் நாசரேத்துக்கு வடகிழக்கில் ஐந்து அல்லது ஆறுமைல் தூரத்திலிருந்தது. ஒன்றரை மணி நேரத்துக்குள் ஊர்போய்ச் சேர்ந்து கலியாண வீட்டில் பிரவேசித்தார்கள். இவர்கள் அழைக்கப்படாத விருந்தினர் அல்ல. "இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்" தனது அருமை மகனை ஆறு வாரங்களுக்கு மேலாகக் காணாதிருந்த மரியாளுக்கு அவரை மறுபடியும் கண்டது அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நமது தேசத்தில் சில வகுப்பாருடைய கலியாணம் இரவில் நடப்பதுபோலவே யூதர்களுக்கும் இராத்திரியில் நடந்தது. மணவாளன் நடுராத்திரியில் புறப்பட்டதையும் கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளோடு எதிர்கொண்டு போனதையும் குறித்து இரட்சகர் சொன்ன உவமையினால் இதை அறியலாம். பெண் தன் தலையிலிருந்து கால்கள்வரை அலங்காரமான வஸ்திரம் தரித்து, புஷ்பமாலைகள் அணிந்து, தோழிமார்கள் சூழ்ந்துவர, வாத்தியங்கள் கோஷ்டிக்க, தீவட்டிகளின் பிரகாசத்துடன் தன் வீட்டைவிட்டு வெளியே வர, மாப்பிள்ளையும் பெண்ணுக்கு எதிர்கொண்டுவந்து தன் இடத்துக்கு அழைத்துச் செல்வான். இந்தக் கலியாண வீட்டில் மரியாள் அதிக முஸ்திப்பாயிருப்பதைக் காண்கிறோம். தாயாரும், இயேசுவும், மற்றச் சகோதரரும் அழைக்கப்பட்டதையும், நாசரேத்திலிருந்து மரியாளும் மற்றச் சகோதரரும் கலியாணத்துக்கு வேண்டிய காரியங்களை ஆயத்தம்

செய்வதற்கு ஏற்கனவே வந்திருப்பதையும், விருந்துக்கடுத்த ஒழுங்குகளைக் குறித்து அம்மாள் எடுத்துக்கொள்ளுகிற கவலையையும், வேலைக்காரருக்குக் கட்டளை கொடுப்பதையும் கவனிக்கும்போது, இது அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த கலியாணமாயிருக்கவேண்டுமென்பது நிச்சயம். மாப்பிள்ளையோ பெண்ணோ இயேசுவின் இனத்தாராயிருந்திருக்க வேண்டும். அவருடைய சகோதரரில் ஒருவன் அல்லது சகோதரிகளில் ஒருத்தியுடைய கலியாணமாயிருக்க வேண்டுமென்பது சிலருடைய அபிப்பிராயம். எப்படியிருந்தபோதிலும், அது மரியாளின் குடும்பத்தைச் சம்பந்தப்பட்ட கலியாணம் என்பதற்குச் சந்தேகமில்லை.

''திராட்சரசம் குறைவுபட்டது'' கடன்பட்டாகிலும் கலியாணத்தைச் சிறப்பாய் நடத்தவேண்டுமென்பது நம் தேசத்தாரின் கொள்கை. கலியாண விருந்தில் குறைவு காணப்படக்கூடாது. சண்டையில்லாத கலியாணம் ஒரு கலியாணமா என்று சொல்லும் கொள்கைக்காரருடைய குறைகூறுதலுக்குத் தப்புவது பெரிய புண்ணியம். வந்தவர்களுக்குச் சாதமில்லை, பதார்த்தமில்லையென்று சொன்னால், அதைப்போல் கலியாண வீட்டாருக்கு அவமானம் வேறே வேண்டியதில்லை. இப்படியிருக்க கானாவூர்க் கலியாணத்துக்கு வந்திருந்த விருந்தினருக்கு திராட்சரசம் இல்லாமற் போய்விட்டது. இது அவர்கள் ஏழைகளாயிருந்ததினாலேயோ, அல்லது எதிர்ப்பார்த்ததற்கு அதிகமான விருந்தினர் வந்ததினாலேயோ தெரியவில்லை. மரியாளுக்கிருந்த தத்தளிப்பு கொஞ்சமல்ல. மாப்பிள்ளையும் பெண்ணும் அதிகச் சஞ்சலப்பட்டார்கள்.

மரியாள் இயேசுவினிடத்தில் வந்து இரகசியமாய்: "அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்." யோவான் அப்போஸ்தலன் இதை ஜாடையாய் அறிந்திருக்கலாம். மரியாள் இயேசுவினிடத்தில் வந்து சொன்னதற்குக் காரணமென்ன? இதற்குமுன் வீட்டிலிருந்த காலத்தில் அவர் அற்புதங்கள் செய்ததைத் தாயார் கண்டிருந்தார்களோ? அல்ல. இதுவே அவர் செய்யப்போகிற முதல் அற்புதம். அல்லது அவரே மேசியாவென்று ஸ்நானகன் கூறி அறிவித்த செய்தியை அம்மாள் அறிந்து, சீஷர்களுடன் அவர் வந்திருப்பதையும் கண்டு, அவர்கள் அவரைக்குறித்துச் சொன்னவைகளையும் கேட்டு, அவர் இந்தச் சமயத்தில் ஒரு அற்புதத்தைச் செய்வாரானால் எல்லாருக்கு முன்பாக தனக்கு அது பெருமையும், மகனுக்கு மகிமையுமாயிருக்கும் என்றெண்ணி அவரைத் தூண்டியிருப்பார்களோ? அப்படி நினைப்பதும் நியாயமல்ல. கலியாண வீட்டிலிருந்தவர்களில் தன் குமாரனுக்கொப்பானவர்கள் வேறே யாருமில்லை. முப்பது வருஷக் காலமாக அவரில் விளங்கிய ஞானம், சாந்தம்,

அனுதாபம், அன்பு முயற்சி முதலான திவ்ய லட்சணங்களை மரியாளைப்போல் அறிந்தவர்கள் யாருமில்லை. மேலும், யோசேப்பு மரித்த காலமுதல் தன் குடும்பத்துக்கடுத்த சகல கஷ்டங்களிலும் மகனையே சார்ந்திருந்தார்கள். அவர் தமது தாயாருக்கு யாதொரு குறைவுமில்லாமல் பராமரித்து வந்ததை மரியாள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். தத்தளிப்பும் அவமானமுமான இந்தச் சமயத்தில் அனுதாபமும் அன்புமுள்ள தன் மகனிடத்தில் அல்லாமல் வேறு யாரிடத்தில் தன் கவலையைச் சொல்லுவார்கள்? தனக்கு வந்த அவமானம் மகனுக்கும் உண்டல்லவா? அவர் எவ்விதத்திலும் ஒருவழியைக் காண்பிப்பார் என்ற நம்பிக்கையுடன் மகனைப்பார்த்து: "அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை" என்றார்கள்.

"ஸ்திரீயே, உனக்கும் எனக்கும் என்ன? என் வேளை இன்னும் வரவில்லை" என்றார். ஆண்டவர் தாயாருக்குக் கொடுத்த உத்தரவு கடினமான வார்த்தைகள்போல் தோன்றலாம். ஆகிலும் அவைகள் கடினமான வார்த்தைகள் அல்ல. கோபத்துடன் கடிந்துபேசின வார்த்தைகளுமல்ல. **ஸ்திரீயே** என்னும் பதம் **அம்மாளே** என்னும் அருத்தமுள்ளது. அவர் சிலுவையில் தொங்கி மரிப்பதற்குமுன், தமது தாயாரைப் பார்த்து மகா உருக்கமாய் : "ஸ்திரீயே! அதோ உன் மகன்" என்று சொல்லி அன்பின் சீஷனுடைய விசாரணைக்கு ஒப்புவித்தார்.

"உனக்கும் எனக்கும் என்ன?" என்று அவர் சொன்னது அம்மாளுக்கு மிகுந்த திகைப்பைக் கொடுத்திருக்கும். என் அருமை மகன் இதுவரை இப்படிச் சொன்னதில்லையே. முப்பது வருஷக்காலமாக அவர் என் சொல்லை ஒருபோதும் மீறாமல், எல்லா விஷயத்திலும் எனக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடந்தாரே. இந்தச் சமயத்தில் உனக்கும் எனக்கும் என்னவென்று சொன்ன காரணமென்னவென்று தனக்குள்ளே கலக்க மடைந்திருக்கலாம். என்னை ஏன் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்த காரியங்களில் இருக்கவேண்டும் என்று அறியீர்களாவென்று எருசலேமில் பன்னிரு பிராயத்தில் கேட்ட கேள்வி இச்சமயத்தில் பூரணமடைந்தது.

தாய்க்கும் மகனுக்குமுள்ள சம்பந்தத்தில் மிகுந்த பேதமுண்டாயிருப்பதை அம்மாள் அறியமாட்டார்கள். அவர் ஸ்நானம் பெற்றுக் கரையேறினபோது மேசியாவாகப் பிதாவினால் அபிஷேகம் பெற்றார். அதைக்கண்ட யோவான் ஸ்நானன் அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ **ஆட்டுக்குட்டி** யென்றும், **தேவகுமாரனென்றும்** பகிரங்கமாய் விளம்பரம் செய்தார். அந்நேரத்தில் அவருடைய ஜீவியத்தில் பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின. அதுமுதல் மாம்சத்தின்படியான

இனஜன சம்பந்தம் நீங்கிற்று. என் தாயார் யார்? என் சகோதரர் யார்? பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் சகோதரரும் சகோதரிகளுமாயிருக்கிறார்கள் என்று சொன்னதின் கருத்தும் இதுவே. இதுமுதல் மரியாளுடைய மகனாகிய **இயேசுவாக** அல்ல, தேவனுடைய குமாரனாகிய **கிறிஸ்துவாக** ஊழியம் செய்யப்போகிறார். தன் தாயாரானாலும் சரி, வேறு யாரானாலும் சரி, **மேசியாவுடைய** காரியத்தில் தலையிடுவதும், அவருக்கு ஆலோசனை சொல்லுவதும், ஒன்றைச் செய்யும்படி அவரைத் துரிதப்படுத்துவதும்கூடாது. இதுமுதல் அவரை ஆண்டு நடத்தவேண்டியது தேவ ஆலோசனையும் தேவ ஆவியுமேயன்றி, மனுஷருடைய தூண்டுதல் அல்ல. அவருடைய எண்ணங்களும் அம்மாளுடைய எண்ணங்களும் ஒன்றென்று நினைப்பது கூடாத காரியம். பழைய காலத்தை அம்மாள் மறந்துவிடவேண்டியது. இதோ! நான் என் ஆண்டவருக்கு அடிமை என்று மறுபடியும் சொல்லவேண்டியது.

"என் வேளை இன்னும் வரவில்லை." அம்மா! உங்கள் வேளை என் வேளையல்ல. என் நேரமுங்கூட என் நேரமல்ல. என் பிதாவின் வேளையே என் வேளை. அப்படியிருக்க, நீங்கள் நினைத்த நேரத்தில் ஒன்றைச்செய்யும்படி என்னை நெருக்குவது சரியல்ல என்கிறார். அவரது சகோதரர் அவரை எருசலேமுக்குப் போய் பண்டிகைக்கு வந்த திரள் ஜனங்களுக்கு முன்பாகத் தம்மை வெளிப்படுத்தும்படி நெருக்கினபோது: "என் வேளை இன்னும் வரவில்லை. உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது" என்றார். வேறு சமயங்களிலும் அவர் தமது வேளையைப்பற்றிப் பேசியிருக்கிறார். "பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன், பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று ஜெபித்தார்.

வேறொரு சமயம் "பிதாவே, வேளை வந்தது" என்றார். கெத்செமனேத் தோட்டத்தில் "இதோ மனுஷக்குமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது" என்றார். பிந்தி அவர் **வேளை, வேளை** என்று சொன்னது தமது பாடுகளை நினைத்தே. ஆனால் கலியாண வீட்டில் **என் வேளை** என்று பேசினது தமது ஜீவியத்தின் மகா விசேஷித்த சமயத்தை உத்தேசித்தே. அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமை நிறைந்தவராகத் தமது ஊழியத்தில் இப்பொழுது பிரவேசித்திருக்கிறார். அவர் செய்யப்போகிற சகல கிரியைகளும் பிதாவின் **சித்தப்படி** செய்யப்படவேண்டும். அப்படி ஏதாகிலும் ஒரு அடையாளத்தைக் காண்பிப்பதற்கு இது சமயமோ? அரியபெரிய காரியங்களைச் செய்வது தமது

ஊழியத்துக்கு அனுகூலமாயிருக்குமல்லவோ? இந்த ஏழைக் கலியாண வீட்டில் திராட்சரசத்தை வரவழைத்துக் கொடுப்பது மேசியாவின் ஊழியத்துக்குப் பொருந்துமோ? இதைக்குறித்துப் பிதாவின் சித்தம் எப்படியிருக்குமோவென்று தமக்குள்ளே பலவாறாய் யோசனை செய்து கொண்டிருக்கும்போது, தாயார் வந்து அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்று சொன்னார்கள். தாம் இன்னும் தீர்மானிக்காத ஒருவிஷயத்தில் அம்மாள் தலையிட்டதால், திட்டமாய் ஒன்றும் சொல்லக் கூடாதவராய் **என்வேளை** இன்னும் வரவில்லை என்றார். தாயார் மனஞ்சோர்ந்து போகாமல், வேலைக்காரரிடம் சென்று, அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றார்கள்.

கலியாணவீட்டின் குறைவை நீக்குவது **தேவசித்தந்தான்** என்று அவர் அறிந்தவுடனே அவருடைய வேளை வந்தது. விருந்தினர்கள் தங்கள் கைகால்கள் சுத்தம்பண்ணுவதற்கென்று ஆறு கற்சாடிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும். அதாவது ஒவ்வொரு தொட்டியும் இருபது முப்பது காலன் தண்ணீர் பிடிக்கக்கூடியது. அவைகளிலுள்ள தண்ணீர் செலவாகிப் போயிற்று. ஆண்டவர் வேலைக்காரரைப் பார்த்து: ஜாடிகள் நிறையத் தண்ணீர் நிரப்புங்கள் என்றார். மரியாள் தங்களுக்குச் சொன்னதை வேலைக்காரர் நினைத்து, ஆண்டவருடைய கட்டளைப்பிரகாரம் ஜாடிகள் நிறைய நிரப்பினார்கள்.

நீங்கள் இப்பொழுது சிறுபாத்திரங்களில் மொண்டு பந்திவிசாரிப்புக்காரனிடம் கொண்டுபோங்கள் என்றார். அவர்கள் கொண்டுபோனார்கள். நடந்த சங்கதி யாதொன்றும் பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாது. திராட்சரசமாய் மாறின தண்ணீரை அவன் ருசி பார்த்தபோது மாப்பிள்ளையைப்பார்த்து: எந்த மனுஷனும் முந்தி நல்ல திராட்சரசத்தைக்கொடுத்து, விருந்தாளிகள் திருப்தியடைந்தபின்பு ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல இரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். மாப்பிள்ளை பெண்ணுக்கு இதைப்பற்றி என்ன தெரியும்? பந்தி விசாரிப்புக்காரனைப் போலவே அவர்களும் ஆச்சரியப் பட்டார்கள். திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரைமொண்ட வேலைக் காரருக்குத் தெரிந்ததேயன்றி வீட்டுக்குள் இருந்தவர்களுக்குத் தெரியாது. கர்த்தர் நடப்பித்த அற்புதத்திற்கு வேலைக்காரர் கண்கண்ட சாட்சிகள். அது முந்தின இரசத்திலும் நல்ல இரசமாயிருந்ததென்பதற்கு பந்திவிசாரிப்புக்காரன் சாட்சி. வந்தவர்கள் எல்லாரும் தாராளமாய்ப் பானம்பண்ணினதற்கு கலியாணவீட்டாரும் விருந்தாளிகளும் சாட்சி. இது வெறி

கொள்ளத்தக்க மதுபானமல்ல, சரீரத்திற்குச் சுகத்தையும் இருதயத்துக்கு மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடிய திராட்சப் பழத்தின் நல்ல இரசம். "இயேசு இந்த **முதலாம்** அற்புதத்தை கானாவூரில் செய்து தமது மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்." ஆண்டவர் செய்த அற்புதங்களில் இதுவே முதல் அற்புதம். ஒரு வாரத்துக்கு முன் தாம் கடும்பசியாயிருந்தபோது கல்லை அப்பமாக்கிப் புசிக்கமாட்டேன் என்று சொன்னவர், இந்தச் சமயத்தில் எவ்வளவோ அமைதலாக இவ்வற்புதத்தைச் செய்து, கலியாண வீட்டில் நேரிட்ட பெரிய சங்கடத்தை நீக்கி எல்லாரையும் சந்தோஷப்படுத்தினார். இதனாலே தாம் யாரென்று அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்தார். அவருடைய மகிமை இவ்வற்புதத்தினால் வெளிப்பட்டது. அவரிடத்தில் வந்து அவரை விசுவாசித்த அவரது புதிய சிஷர்கள், இன்னும் அதிகமாய் அவரை விசுவாசிப்பதற்கு ஏதுவாயிற்று.

இயற்கைக்கு விரோதமாய் நடக்கும் காரியங்களை நம்புவதற்கு ஏதுவில்லையென்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். **இயற்கை**யென்று ஒன்றில்லை. சகலமும் கடவுளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. சகலத்தையும் உண்டாக்கினவர் சகலத்திலும் இடைவிடாமல் கிரியை செய்கிறார். வானத்திலும் பூமியிலும் உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளில், தேவனுடைய சித்தம் இடைவிடாமல் செய்யப்படுவதினால் அவைகள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன. தென்னைமரமானது தானுண்ட தண்ணீரை மதுரமான இளநீராகக் கொடுக்கும்படி செய்கிறவர் அவரே. திராட்சச்செடியானது தன் வேர்களாலுண்ட சாதாரணமான தண்ணீரைத் தன் கனிகளில் ருசியுள்ள ரசமாகக் கொடுக்கும்படி செய்கிறவர் அவரே. அற்புத மூர்த்தியாகிய கடவுள் செய்வதெல்லாம் அவருக்குச் சாதார்ணமாயினும் நமக்கு அற்புதமே. நாம் அற்புதங்களினால் சூழப்பட்டிருக்கிறோம். அவைகளை நாம் கவனிக்கிறதில்லை. அவைகளை அடிக்கடி பார்ப்பதினாலே அவைகளில் விளங்கும் தேவ மகிமையை நாம் உணருகிறதில்லை. ஆனால் அவர் தண்ணீரை இரசமாக மாற்றினால் இது எப்படிக்கூடும் என்று சந்தேகிக்கிறோம். நம்மைச் சூழ இடைவிடாமல் நடக்கும் அற்புதங்களை நாம் கவனிக்கிறோமா? முள்செடிகளில் அழகிய புஷ்பம் எப்படி வருகிறது? ஒரு விதைபோட அது முளைத்து மிகுதியான பலனை எப்படித் தருகிறது மரங்களில் மகா ருசியுள்ள கனிகள் எப்படி உண்டாகின்றன? மனுஷனுக்குச் சாப்பிடவும் சகலத்தையும் அனுபவிக்கவும் தெரியுமேயல்லாமல், அதற்குமேல் அவன் யோசிக்கிறதில்லை. இவ்வண்ணம் விதவிதமாய் ஏராளமான நன்மைகளை மனுஷனுக்கு உண்டுபண்ணிக்கொடுக்கிற

சிருஷ்டிகர்த்தா அவசியமான சமயத்தில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றினால் அது கூடியகாரியமல்ல என்று பேசுவது நியாயமா?

ஒரு பாடகன் பாடுவது, சங்கீதம் தனக்குள் இருப்பதனாலேயேயன்றித் தன்னைப் பாடகனென்று காட்டும்படிக்கல்ல. ஒரு தயாளன் நன்மை செய்வது, அவனுக்குள் தர்ம குணமிருப்பதனாலேயன்றித் தன்னைத் தயாளனென்று பிரஸ்தாபிக்கும்படிக்கல்ல. நமது இரட்சகர் செய்த அற்புதங்களும் அதுபோலவே. தம்மை தேவகுமாரனென்று வெளிப்படுத்த வேண்டுமென்கிற ஆசையினால் அல்ல, அவர் தேவகுமாரனா யிருந்தபடியினாலேயே மனுஷருடைய ஆபத்து அவசரங்களில் அவர்களுக்கு இரக்கம் செய்வது அவருக்கு இயல்பாயிருந்தது. மனுஷர் அவைகளைப் பார்த்து அவரை இன்னாரென்று அறிந்துகொள்வதற்கும் அது ஏதுவாயிருந்தன. இயேசுவும் கலியாணத்துக்குப் போனார். ஒருவன் தன் விசேஷித்த ஊழியத்தில் பிரவேசிக்கும்போது, அவன் ஆரம்பிக்கும் முதல் வேலையிலேயே தான் எப்படிப்பட்டவனென்பதை வெளிப்படுத்துவது இயல்பு.

தேவனிடத்தில் நியாயப்பிரமாணத்தைப் பெற்ற **மோசே** தன் ஊழிய ஆரம்பத்தில் பார்வோனையும் அவன் ஜனங்களையும் நடுங்க வைத்தார். இஸ்ரவேலுக்கு நியாயத் தீர்ப்பைக்கூறிய **எலியா,** ஆகாபுக்குத் தன்னை முதல்முதல் வெளிப்படுத்தினபோது பஞ்சத்தைக்கூறி அறிவித்தார். கர்த்தருடைய ஜனங்களை அவர்கள் சத்துருக்களின் கைகளினின்று விடுவித்த **தாவீது,** முதல் முதல் இராட்சதனாகிய கோலியாத்தைக் கொன்றார். வேதத்தில் வல்லவனான பவுல் தான் குணப்பட்டவுடனே ஜெப ஆலயங்கள்தோறும் சென்று யூதர்களோடு தர்க்கம் செய்வதைக் காண்கிறோம். வனாந்தரத்தில் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்ட **யோவான்** யூதஜனங்கள் கலங்கத்தக்கதாக மனந்திரும்புதலைக்கூறி அறிவிக்கிறவராகப் புறப்பட்டார். இதோ, நமது ஆண்டவர் தமது விசேஷித்த ஊழியத்தில் பிரவேசித்தவுடனே அவர் போகிற முதல் இடம் எதுவென்று பாருங்கள். இராஜாக்களிடத்தில் அல்ல, யூத அதிகாரிகளிடத்தில் அல்ல, ஆலயத்தில் அல்ல, ஜெப ஆலயங்களில் அல்ல, மரணவீட்டுக்குமல்ல, **கலியாண வீட்டுக்குப்** போனார். தாம் பிரவேசித்த ஊழியம் எப்படிப்பட்டதென்றும், தமக்குமுன் வைக்கப்பட்டிருக்கிற காரியங்கள் எப்படிப்பட்டவைகளென்றும் அவர் அறிவார். மூன்று வருஷத்திற்குள் அவர் செய்யவேண்டிய காரியங்களும் படப்போகிற பாடுகளும் அதிகம். தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும். இராஜ்யத்தின் சுவிசேஷம்

பிரசங்கிக்கப்படவேண்டும். இடைவிடாமல் பிரயாணம் செய்யவேண்டும். தேவ கிரியைகளை நிறைவேற்றவேண்டும். பொல்லாங்கனுடைய சோதனைகள் பலமாக வரும். சத்துருக்கள் தமது ஊழியத்துக்கு இடையூறுசெய்து தம்மைப்பகைப்பார்கள். கடைசியாக சிலுவையில் மரிக்க வேண்டும். இவைகள் யாவையும் அவர் அறிந்திருந்தும், உலகரட்சிப்பின் உத்தரவாதம் அவர் தோள்மேலிருந்தும், அவர் முதல்முதல் கலியாண வீட்டிற்குப் போனது கவனிக்கத்தக்கது.

அவர் யோவானைப்போல் உலகத்தை வெறுத்த சந்நியாசியல்ல. உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி வராமல், அதை இரட்சிப்பதற்காகவே வந்தார். மனுமக்கள் தங்கள் பாவசுபாவத்தால் கெடுத்துப்போட்ட சகல காரியங்களையும் அதன் மேலான நிலைமைக்கு உயர்த்த வந்தார். ஆதியில் புருஷனையும் ஸ்திரீயையும் பாக்கியமான நிலைமையில் இணைத்துவைத்து, அவர்களுடைய சந்தோஷத்தில் சந்தோஷப்பட்ட ஆண்டவர், மனுமக்களைப் புதிதாய்ச் சிருஷ்டிக்க வந்தபோது, கலியாண வீட்டில் பிரவேசித்து அவர்களை ஆசீர்வதிக்கச் சித்தங் கொண்டார். அவர் தம்மை மனுஷகுமாரனென்று அழைத்தபடியே, மனுஷரோடு தம்மை ஒன்றாக்கி, அவர்களுடைய சந்தோஷங்களைத் தமது சந்தோஷமாகவும், அவர்களுடைய குறைவுகளைத் தமது குறைவுகளாகவும் பாவித்து நடந்தார். அவர் ஆவிக்குரிய காரியங்களைமாத்திரம் கவனிப்பாரென்றும், நமது குடும்பக் காரியங்களை அவர் கவனிக்கமாட்டாரென்றும் நினைப்பது தவறு. அவர் பாடுபடவேண்டிய கிறிஸ்துவாயிருந்தும் எப்போதும் சந்தோஷத்தால் நிறைந்தவராயிருந்தார். அவருக்குள் சந்தோஷம் இருந்தபடியால் அவர் போனவிடமெங்கும் மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துகிறவராயிருந்தார்.

மகனே திடங்கொள், பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு; மகளே சமாதானத்தோடு போ என்று மற்றவர்களுக்கு அவர் சொன்ன வார்த்தைகள் அவருக்குள்ளிருந்த சந்தோஷத்தைக் காட்டுகின்றன. துக்கம் நிறைந்த மனுஷன் மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தக் கூடாதவனாயிருப்பான். நமது ஆண்டவர் நமது பாவங்களையும் துக்கங்களையும் சுமந்தவராயிருந்தும், அவர் தமது சந்தோஷத்தை இழந்துபோனவரல்ல. அவருள்ளத்தை ஆண்டுகொண்டிருந்த சமாதானமும் சந்தோஷமுமே தமக்கு நேரிட்ட சகல பாடுகளையும் தாங்க அவருக்குப் பெலனாயிருந்தது. மரிப்பதற்கு முந்தின நாள் இரவில் கலங்கி நின்ற சீஷர்களைப்பார்த்து: சமாதானத்தை வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றும், என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்

படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்றும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போட மாட்டான் என்றும் சொன்னார். ஆகையால் கலியாண வீட்டிற்கு அவர் முதல் முதல் போனது ஆச்சரியமல்ல. அவர் ஒன்றை முக்கியப்படுத்தி மற்றதை அசட்டை செய்தவரல்ல. சகல காரியங்களிலும் அதற்குரிய மதிப்புடன் நடந்துகொண்டார். மனுஷருக்கு இது மிஞ்சின காரியமாகத் தோன்றும். ஆத்தும காரியத்தில் முழுச்சிரத்தை வைத்தவன் உலக காரியங்களை முற்றும் கவனிக்கமாட்டான். உலக காரியங்களில் முழுக்கவனம் வைத்தவன் ஆத்துமாவின் அருமையை உணரமாட்டான். அறிவையே பிரதானமாக்கினவன் விசுவாசத்தை இழந்து போகிறான். கிரேக்கர் ஞானத்தைத் தேடி விசுவாச வழியை அறியாமற் போனார்கள். யூதர்கள் சுயநீதியில் நம்பிக்கை வைத்து தேவநீதியை அறியாமற்போனார்கள். இவ்வாறு ஒன்றை முக்கியப்படுத்தி அதை நாடும்போது மற்றதைக் கவனியாமல் விட்டுவிடுவது மனுஷ இயல்பு.

நமதாண்டவரோ சகலத்திலும் சகலமுமாயிருந்தார். அவருக்குள் பரலோகம் பூலோகமென்று இரண்டாகப் பிரியாமல், இரண்டும் ஒன்றாக இணைக்கப்பெற்றிருந்தன. ஒன்றை மேன்மைப்படுத்தி மற்றதை அவர் இழிவாய் நினைத்தவரல்ல. அவர் உலகத்தை உண்டாக்கின போது எல்லாம் நன்றாயிருக்கிற தென்று கண்டார். உலகத்தைக் கெடுத்த பிசாசை அழித்து மனுஷரை இரட்சிக்க வந்தார். வானம் அவரது சிங்காசன மானாலும், பூமி அவரது பாதபடி என்பது நிச்சயம். ஏணியின் ஒருபக்கம் வானத்தைத் தொட்டிருந்தாலும், அதன் மறுபக்கம் பூமியிலிருக்கிறதென்பதையும் மறக்கக்கூடாது.

ஆகையால் நமது இரட்சகர் ஒன்றை விசேஷப்படுத்தி மற்றதை அற்பமாய் நினைத்தவரல்ல. வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டு ஜெயித்து, ஆவியின் பலத்தோடு தமது ஊழியத்தில் பிரவேசித்த ஆண்டவரை கலியாண வீட்டில் காண்கிறோம். தம்மை மாப்பிள்ளையென்றும், தமது சீஷரை மாப்பிள்ளைத் தோழரென்றும் சொல்லி மகிழ்ந்தவரும் அவரே. இராமுழுவதும் மலையில் தங்கி ஊக்கமாய் ஜெபிப்பார்; காலையில் மலையைவிட்டிறங்கி சிறு பிள்ளைகளோடு விளையாடுவார். சிலவேளை பசியாகவும் தாகமுள்ளவராகவும் இருப்பார்; நல்ல விருந்து கிடைக்கும்பொழுது பூர்த்தியாய்ச் சாப்பிடுவார். ஆகையால் சத்துருக்கள் அவரைப் போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன் என்று சொன்னார்கள். தேவனுடைய இராஜ்யமே பிரதானம், அதைப் பிரசங்கிப்பதே தமக்குப் போஜனம் என்று சொல்லுவார்; ஆனால் காட்டுப் புஷ்பங்கள், ஆகாயத்துப் பறவைகளைக் கண்டால்

அவருக்கிருக்கும் சந்தோஷம் கொஞ்சமல்ல. ஆத்தும இரட்சிப்பே முக்கியம், அதற்காக ஜீவனையும் கொடுப்பேன் என்றார்; ஜனங்களுடைய வேலைகள், துக்கம், சந்தோஷம் முதலான சாதாரண காரியங்களிலும் கருத்துள்ளவராயிருப்பார். ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினவர்களைக் கோபத்துடன் துரத்துவார்; நோயாளிகளாக வந்தவர்களை குணமாக்கி அனுப்புவார். அவரில் தெய்வீகம் மாத்திரமல்ல, தெய்வீகமும் மனுஷீகமும் குறைவின்றிச் சிறந்து விளங்கின. அவர் இந்த ஜீவியத்தில் ஒன்றை மட்டுக்கு மிஞ்சி உயர்த்தி ஒன்றைக் குறைவாய் நினைத்தவரல்ல. மனுஷனுக்கடுத்த சகல காரியங்களையும் மதுரமான திராட்சரசமாக்கும் வல்லவனாக எழுந்தார். ஆகையால், அவர் தமது விசேஷித்த ஊழியத்தின் ஆரம்பத்தில் முதல் முதல் கலியாண வீட்டுக்குப் போனது சரியே.

ஆதியில் தேவன் மனுஷனை உண்டாக்கினபோது அவனை தனியாளாயிருக்கும்படி உண்டாக்கவில்லை. நமதாண்டவர் சொன்னபடி: ஆதியில் மனுஷனை உண்டாக்கினவர் அவனை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்றார். அவனுக்குத் துணையாக இன்னொரு மனுஷனை அவர் உண்டாக்கவில்லை. புருஷன் பெண்ணை விரும்பத்தக்கதாகவும், பெண் புருஷனை விரும்பத்தக்கதாகவும், அவரவருக்குரிய அன்பின் இலட்சணங்களுடன் உண்டாக்கினார். இது பிசாசின் வேலையல்ல. அன்பும் ஞானமும் நிறைந்த பரமபிதாவின் வேலை. விவாகம் கடவுளால் உண்டானது. அதைக் குறைவாய் நினைப்பதும் பேசுவதும் குற்றமாகும். தேவனுடைய இராஜ்யத்தினிமித்தம் ஆனோ பெண்ணோ விவாகமின்றி ஜீவிக்க விரும்பினால் அப்படிச் செய்யலாம். அவர்கள் குடும்பக் கஷ்டங்களின்றி, தாங்கள் எடுத்துக்கொண்ட வேலையில் முழுக் கவனம் வைத்து நடப்பதற்கு அது ஏதுவாயிருக்கும்.

ஆகிலும் உலகக் கவலைகளுக்கும் துன்பங்களுக்கும் தப்ப ஒருவராலும் முடியாது. ஒருவகையான கவலைகள் அவர்களுக்கில்லை என்று வைத்துக்கொண்டாலும், வேறு பலவகையால் சோதனைகளும் துன்பங்களும் வராமல் போகாது. குடும்ப ஜீவியத்தி லிருப்பவர்களுக்கு தேவ கிருபையும் பாதுகாப்பும் எவ்வளவு அவசியமோ, அதைப் பார்க்கிலும் தனித்திருப்பவர்களுக்கு அதிக அவசியம். ஆகையால் விவாகமில்லாமல் இருப்பவர்களைப் பரிசுத்தவான்களென்றும், குடும்ப ஜீவியத்திலிருப்பவர்களைப் பாவிகளென்றும் தீர்மானிக்கக்கூடாது. மனுஷசுபாவம் எந்த நிலைமையிலும் சோதனைக்குள்ளானதே. வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுவது நல்லது. "விவாகம்பண்ணுவது பாவமல்ல." யாதொரு நோக்கமற்று வீணராய் திரிகிறவர்கள் விவாக நிலைமையில்

பிரவேசித்து மக்களைப் பெற்றுத் தாயும் தகப்பனுமான பிறகு, அவர்கள் வெகுதூரம் மாறுத லடைந்திருப்பதை நாம் கவனித்திருக்கிறோம். இல்வாழ்க்கையைப் போல் ஜீவியத்துக் கடுத்த காரியங்களை கற்றுக் கொடுக்கிற பள்ளிக்கூடம் வேறெதுவு மில்லை. குடும்ப ஜீவியம் மகா உத்தரவாதமானது. அதில் கஷ்டங்கள் இருந்தபோதிலும், ஆறுதலும் சந்தோஷமும் உண்டு.

கானாவூர் ஒரு சிறிய ஊர். கலியாணம் நடந்த குடும்பமோ ஏழை. அப்படியிருந்தும், உலக முழுவதிலும் அந்த ஊர் நினைவு கூறப்பட்டுவருகிறது. உலகத்தில் எத்தனையோ ஆலயங்கள் உண்டு. அந்த ஆலயங்களில் கிறிஸ்துவுக்குப்பின் இதுவரை எத்தனையோ கலியாணங்கள் நடந்ததுண்டு. ஒரு கலியாணத்திலாவது கானாவூர் மறக்கப்பட்டதில்லை. கானாவூர்க் கலியாணத்தில் சமுகமாயிருந்து மாப்பிள்ளை பெண் இருவரையும் ஆசீர்வதித்த சுவாமி, இவ்விருபேரையும் ஆசீர்வதிக்கும்படி இங்கெழுந்தருளுமென்று ஜெபிக்காத கலியாணம் கிடையாது. தேவன் ஆதாம் ஏவாளுக்கு கலியாணம் கொடுத்தபோது மிகாவேலும் காபிரியேலும் மாப்பிள்ளைத் தோழனாயிருந்தார்களென்றும், மற்றத் தூதர்கள் பெண்ணுக்குரிய பாட்டைப்பாடினார்களென்றும் பூர்வ இரபிமார் சொல்லிக் கொள்ளுகிறதுண்டு. தேவன் தாமே நடத்தின அந்த முதல் கலியாணம் எவ்வளவோ மகிமையாய் நடந்திருக்க வேண்டு மென்பதை நாம் சந்தேகிக்கவேண்டியதில்லை. அது எப்படியிருந்த போதிலும், புதுச் சிருஷ்டிப்பை உண்டாக்கும்படி மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன், கானாவூர்க் கலியாண வீட்டுக்குப் போய் அவர்களை ஆசீர்வதித்தது நமக்குப் போதுமான திருஷ்டாந்தமாகயிருக்கிறது. நமது விவாகங்களில் நாம் அவரை அழைப்பதும், அவர் நம்மை ஆசீர்வதிப்பதும் தீராத அவசியம்.

அநேக தீமைகளுக்கு நாம் விலகிக் காக்கப்படுவதற்கும், குடும்பத்துக்குரிய ஆறுதலையும் சந்தோஷத்தையும் பெற்று வாழுவதற்கும், கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இந்த விவாகம் தற்காலத்தில் எப்படியிருக்கிறது? எல்லா விவாகங்களும் விவாகங்கள் அல்லவே. ஆறுதலையும் சந்தோஷத்தையும் கடவுளுக்கு மகிமையையும் உண்டாக்கவேண்டிய கலியாணம், அநேகருடைய விஷயத்தில் சஞ்சலமும் தவிப்பும் கண்ணீரும் அவமானமுமாயிருப்பது எத்தனை பரிதாபம்! கலியாணநேரத்தில் தேவசமுகத்திலும் சபைக்குமுன்பாகவும் கொடுத்த வாக்குகள் பறந்துபோகின்றன. மாப்பிள்ளையும் பெண்ணும் தேவசமுகத்தில் கைபிடித்து, நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மைப்பிரிக்குமளவும் உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் வாக்குக்கொடுக்கிறேன் என்று சொல்வது கலியாணமந்திரம் போலிருக்கிறதேயல்லாமல், ஜீவகாலமுழுவதும் கைக்கொண்டு நடக்கவேண்டிய பிரமாண

மென்பதை அநேகர் உணருவதில்லை. ஆரம்ப மாதத்தில் அன்பும் சந்தோஷமுமாய் கூடிவாழும் மாப்பிள்ளை பெண்கள் அதற்குப் பின்னுள்ள காலங்களில் தங்கள் குடும்ப ஜீவியத்தைக் கசப்பாக்கிக் கொள்ளுகிறார்கள். இல்வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும்படி தேவன் விரும்புகிற சந்தோஷத்தையும் ஆறுதலையும் இழந்து, துக்கசாகரத்துக்குள்ளாகி, ஏன்தான் கலியாணம்பண்ணினோமோ என்று தவிக்கிறவர்களும் பலர்.

இதற்குக் காரணங்கள் எவை? காரணங்கள் யாவையும் இங்கெழுதுவது நமக்கு மிஞ்சின காரியம். குடும்பத்தின் இரகசியங்களைக் குடும்பத்தில் வசிப்பவர்களே அறிவார்கள். பொதுவாய் அறியக்கூடிய காரணங்களுண்டு. எதிர்பார்த்த **பொருள்** கிடையாதபோது பெண்கள்பேரில் இடைவிடாமல் சண்டை தொடுப்பவர் அநேகர். நாம் விவாகம் செய்ததும், நேசிப்போம் என்று வாக்குக்கொடுத்ததும், **பெண்ணே**யல்லாமல் **பொன்** அல்ல. அதற்காக முறுமுறுப்பதால் குடும்பசந்தோஷம் கெடுமேயன்றி நன்மையுண்டாவதில்லை. வேறொரு காரணம் **அதிருப்தி**. பெண்ணின்மேல் புருஷனுக்குத் திருப்தியில்லை, அல்லது புருஷன்பேரில் பெண்ணுக்குத் திருப்தியில்லை. குடியிருக்கும் வீட்டைப்பற்றியோ, கிடைக்கும் சம்பளத்தைப் பற்றியோ, உடுத்தும் உடைகளைப்பற்றியோ பெண்களுக்குத் திருப்தியில்லை. இன்னாரைக் கலியாணம்பண்ணியிருந்தால் நான் எவ்வளவோ மேன்மையாயிருந்திருப்பேனே என்று பெண்களில் சிலர் முறுமுறுக்கலாம். அப்படியே மாப்பிள்ளைகளும் முறுமுறுக்கலாம். இவ்விதமான **முறுமுறுப்பு** பெரிய வீட்டையும், உயர்ந்த சம்பளத்தையும், அலங்காரமான உடைகளையும் ஒருபோதும் கொண்டுவரமாட்டாது. குடும்பத்தில் அனுபவிக்கக் கூடிய சந்தோஷத்தை அழித்து, நிர்ப்பாக்கியத்தையும் மனக்கவலையையுமே கொண்டுவரும். புருஷனும் மனைவியும் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், எந்தக் குடிசையிலிருந்தாலும், எவ்வளவு குறைவான சம்பாத்திய மிருந்தாலும் அவர்கள் சந்தோஷத்துக்குக் குறைவிராது.

வேறொரு காரணம் **குணபேதம்**. உள்ளான இரகசியம் ஆரம்பத்தில் தெரிகிறதில்லை. தாலி கழுத்தில் விழும் வரைக்கும் பெண் மகாகுணசாலிபோல் காணப்படலாம். விவாகம் நடந்ததின் பின் தன் சுயரூபத்தைக் காண்பிக்கலாம். மாப்பிள்ளையும் காரியம் முடியும்வரை சற்புத்திரன்போல் நடக்கலாம். கலியாணத்திற்குப் பின்பு தன் உண்மையான சாயலைக் காண்பிக்கலாம். இப்படிச் சம்பவிக்குமானால் குடும்பத்தில் போராட்டத்தையும் சண்டையையும் காணலாமேயன்றிச் சமாதானத்துக்கும் அன்புக்கும் இடமிராது. சில சமயங்களில் மாப்பிள்ளை தேவபக்தனும் உத்தமனுமாயிருக்க, பெண் அவபக்தியுள்ளவளா யிருக்கலாம். அல்லது பெண் உத்தமியாயிருக்க மாப்பிள்ளை

அவபக்தனும் கோபியுமாயிருக்கலாம். அப்படிச் சம்பவிக்கும் போது செய்ய வேண்டியதென்ன? ஆகாத பெண்ணாயிருக்கிறாள் என்று மாப்பிள்ளை பெண்ணைத் துரத்திவிடக்கூடாது. அல்லது, முரட்டு மனுஷனாயிருக்கிறான் என்று பெண் பிரிந்து தன் வீட்டுக்கு ஓடிப்போகவுங்கூடாது. பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவருக்கொருவர் தாழ்ச்சியில்லாத மூர்க்கராயிருந்தால் அவர்கள் இணங்கிப்போகக்கூடாமல் பிரிந்துபோக நேரிடும். இது எவ்வளவோ விசனமான காரியம்! ஒருவர் மூர்க்கராயிருந்தும், மற்றவர் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு தாழ்ந்துபோனால், சண்டைக்கும் பிரிந்துபோவதற்கும் இடமிராது. சண்டைபோட எப்போதும் இரண்டுபேர் வேண்டும். இன்று அன்பும் சந்தோஷமுமாக வாழ்ந்து தேவாசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டிய குடும்பங்கள், கோபத்திற்கும் மூர்க்கத்திற்கும் இடங்கொடுத்து தங்களைத் தாங்களே நிர்ப்பந்தர்களாக்கி யிருக்கிறார்கள். எவ்வளவோ ஆசீர்வாதத்திற்கு அனுகூலமா யிருக்கும்படி தேவன் ஸ்தாபித்த குடும்ப ஜீவியம், தற்காலத்தில் அநேகருடைய விஷயத்தில் கசப்பும் தத்தளிப்புமாக மாறியிருக்கிறது. மொத்தக் காரணம் தேவபக்திக் குறைவே. **தேவபக்தியே** எந்த நிலைமையிலும் நமக்கு திருப்தியைக் கொடுக்கக்கூடியது. யாதொரு குறைவுமில்லாத பூரணமான புருஷனும் பூரணமான பெண்ணும் பூலோகத்தில் இல்லை. குறைவில்லாத வாழ்வு மறுமையின் வாழ்வேயல்லாமல் பூலோக வாழ்வல்ல. ஆதலால் பெண் மாப்பிள்ளைபேரிலும், மாப்பிள்ளை பெண்பேரிலும் குறைகூறிக் குற்றம் பிடிப்பதும், சண்டை போட்டுக் கொள்ளுவதும், சமுசயப்படுவதும், அதிருப்தி யடைவதும், பிரிந்துபோக நாடுவதும், இருவருடைய ஜீவியத்தையும் கசப்பாக்கிச் சஞ்சலப்படுத்துமேயன்றி யாதொரு நன்மையும் உண்டாக்கமாட்டாது.

குடும்பத்தைச் சந்தோஷப்படுத்துவதும், அந்தச் சந்தோஷத்தைப் பெருகச் செய்வதும் இருவர்மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது. இல்லறவாழ்க்கையின் இன்பம் பெரிய வீட்டிலுமல்ல, உயர்ந்த சம்பளத்திலுமல்ல, ஆடை ஆபரணங்களிலுமல்ல, மேஜை நாற்காலிகள் தொங்கு திரைகளிலுமல்ல. இவையாவுமிருந்தும் இரவும் பகலும் சஞ்சலத்தோடிக்கிற குடும்பங்களை அறிவோம். தேவபக்தியுள்ள ஜீவியத்துடன், புருஷனும் மனைவியும் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து, எல்லாக் காரியங்களிலும் மனமொத்து நடப்பதினாலேயே, அவர்கள் ஜீவகால முழுவதிலும் சந்தோஷத்தையும் மெய்ப்பாக்கியத்தையும் அனுபவிக்கக்கூடும். கலியாணத்துக்கு முன் மாப்பிள்ளைகள் பெண்களை வசப்படுத்தும்படி நன்றாய் உடுத்துகிறார்கள். அருமையாய் பேசுகிறார்கள், பெண்கள் தங்கள்பேரில் பிரியம் வைக்கத்தக்கதாக

எவ்வளவோ ஜாக்கிரதையாகவும் நடந்துகொள்ளுகிறார்கள். அதுபோலவே பெண்களும் தாங்கள் கட்ட விரும்பும் மாப்பிள்ளைகளை வசப்படுத்தும்படி எவ்வளவோ அன்பாய் அருமையாய் நடந்துகொள்ளுகிறார்கள். இது சரியே. ஆனால் கலியாணம் முடிந்தபிறகோ, உடைநடை விஷயத்திலும், அன்பிலும், வார்த்தையிலும் வெகு அஜாக்கிரதையாக நடக்கிறார்கள். ஒருவர்பேரில் ஒருவருக்குள்ள அன்பும் சிநேகமும் குறைந்துபோகாமல், வளர்ந்து பெருகத்தக்கதாக, ''**புது மாப்பிள்ளை புதுப்பெண்போல,** அவர்கள் இருவரும் கடைசி வரை நடந்துகொள்ள வேண்டியதல்லவோ ஞானம்'' என்று ஒருவர் ஆலோசனை சொல்லுகிறார்.

இதை முடிக்குமுன், மனைவிகளைத் தள்ளிவிட்டு மறுவிவாகம் செய்து கொள்ளும் வழக்கத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது நல்லது. புருஷர் மனைவிகள் நியாயஸ்தலம் சென்று தங்களைப் பிரித்துகொள்வதை அடிக்கடி கேள்விப்படுகிறோம். இத்தீய வழக்கம் கிறிஸ்தவர்களுக்குள்ளும் நடந்து வருவது மிகவும் பரிதாபமே. புருஷர் மனைவிகள் ஒருமித்துவாழ மனமில்லாமல், பல முகாந்தரங்களை உண்டுபண்ணி, நியாயாதிபதிகளிடம் சென்று, தங்களைப் பிரித்துக்கொண்டு மறுவிவாகம் செய்துகொள்ளுகிறார்கள். இப்படிப் பிரிவதற்கு புருஷன் காரணமாயிருக்கலாம், அல்லது மனைவி காரணமாயிருக்கலாம், அல்லது இருவருமே சம்மதித்துச் செய்யலாம். நம் தேசத்துக் கிறிஸ்தவர்கள் அவ்வளவு துணிகரமாக நியாயஸ்தலமேறித் தள்ளுதற் சீட்டைப் பெற்றுக்கொள்ளுகிற தில்லையென்றாலும், பல முகாந்தரங்களினாலே பிரிந்து போனவர்களும் உண்டு.

புருஷர் மனைவிகளைக் குறித்த கேள்வி இப்பொழுது மாத்திரமல்ல, ஆதிமுதல் உண்டாயிருக்கிறது. ஏதேன் வனாந்தரமானபோது ஆதாம் தன் அருமை மனைவியைக் குற்றப்படுத்தினான். நல்ல வேளை அவன் மறுவிவாகம் செய்வதற்கு வேறு ஸ்திரீகள் அச்சமயத்தில் இல்லை. புருஷன் மனைவிகளுக்குள் பல குறைவுகள் இருக்கலாம்; மறுவிவாகம் அதற்கு மருந்தல்ல. ஒரு சமயம் பரிசேயர் நமதாண்டவரிடம் வந்து "புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாவது தள்ளிவிடுவது நியாயமா?" என்று கேட்டார்கள் *(மத். 19:3-12)*. இவர்கள் ஆண்டவரைத் தங்கள் வலையில் அகப்படுத்தும்படி கேட்டார்களேயன்றி, அவரால் போதிக்கப்பட வேண்டுமென்கிற நோக்கத்தோடு அல்ல. யோவான்ஸ்நானனுக்கு வந்த முடிவே இவருக்கும் வரட்டும் என்று, அவர் ஏரோதின் எல்லைக்குள் இருந்த சமயத்தில் இப்படிக் கேட்டார்கள். இவ்விஷயத்தைக்குறித்து ரபிமாருக்குள்ளே இருகட்சியுண்டு. ஆண்டவர் தாம் கொடுக்கும் உத்தரவால் ஏரோதின் கைக்குத்

தப்பிக்கொண்டாலும், வைராக்கியமுள்ள ரபிமாருக்கு அவர் தப்பமாட்டார் என்பது அவர்கள் நோக்கம்.

அவரோ அவர்கள் தந்திரத்தைக் குறித்துக் கொஞ்சமும் கலங்கவில்லை. அவர்கள் உண்மையாய்க் கேட்டதுபோலவே பாவித்து விடை பகர்ந்தார். விவாகம் அவர்களுக்குள் மகா அற்பமாக எண்ணப்பட்டு வந்தது. ஆண்டவருக்குத் தெரியும். தாம் கொடுக்கும் உத்தரவால் தமக்குக் கஷ்டம் நேரிட்டாலும், தேவசித்தம் இன்னதென்பதை எடுத்துரைக்கத் தீர்மானித்தார். விவாகத்தைக்குறித்து மனுஷனுடைய எண்ணங்களும் வழக்கங்களும் பலவாறாயிருந்தாலும், **தேவ நோக்கம்** என்னவென்பதைத் தெரியப்படுத்தச் சித்தமானார். விவாக விஷயத்தில் மோசே சொன்னதே யூதருக்கு ஆதாரம். கிறிஸ்துவுக்கு பிதாவின் பிரமாணமே ஆதாரம். நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? ஆதியில் மனுஷனை உண்டாக்கினவர் ஒருவனைச் சிருஷ்டித்து, அந்த ஒருவனை இருவர் ஆக்கினாரே. அவர்கள் இரண்டு ஆள்களாகத் தோன்றினாலும், தம்மில் தனித்தனியே பாதியும், இருவரும் சேர்ந்து ஒரே ஆளாயிருக்கிறார்களே. ''இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுப்பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருப்பான். அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்றார்.

பரிசுத்த விவாகத்தில் மாப்பிள்ளையும் பெண்ணும் ஒரு புதிய சமபந்தத்தில் இணைக்கப்படுகிறார்கள். அப்புதிய சம்பந்தத்திலிருந்து ஒரு புதிய ஜீவியமும் புதிய அனுபவமும் உண்டாகின்றன. இந்தச் சம்பந்தத்தைப் பிரிக்க எந்தச் சட்டத்துக்கும் அதிகாரமில்லை. மகன் என்றால் எக்காலமும் மகனே. மகள் என்றால் எக்காலமும் மகளே. இந்த நீங்காத பிதா புத்திர சம்பந்தம், புருஷன் மனவைிக்குரிய **பிரிக்கப்படக் கூடாத** சம்பந்தத்தில் இருந்தல்லவோ பிறந்தது. ஆகையால் புருஷன் மனைவி சம்பந்தம் வியாபாரிகளின் கூட்டுறவுபோல் அல்ல. "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்" என்று புருஷன் உரிமை பாராட்டக் கூடிய சம்பந்தமும், தேவ இணைப்பாகவும் இருக்கிறது. தேவன் இணைத்ததை மனுஷன் எப்படிப் பிரிக்கலாம்?

புருஷன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாவது தள்ளிவிடுவது நியாயமாவென்று கேட்ட கேள்விக்கு, ஆண்டவர் இவ்வாறு உத்தரவு கொடுப்பாரென்று பரிசேயர் நினைத்ததில்லை. அவர்கள் மோசேயின் பிரமாணத்தை உத்தேசித்துத் தர்க்கிக்கத் தொடங்கினார்கள். ஆண்டவர் மோசே சொன்னதையல்ல; கடவுள் மனுஷனுடைய இயற்கையில் அமைத்துவைத்த பிரமாணத்தைக் காண்பிக்கிறார். புருஷன் தன் மனைவியைத்

தள்ளிவிடலாமா என்பதல்ல; அவ்வாறு தள்ளிவிட முடியுமா என்பதே கேள்வி. முடியாது என்பதே ஆண்டவர் கொடுத்த உத்தரவு. இப்படிச்சொன்னது பரிசேயருக்குப் பிரமிப்பாயிருந்தது. என்றாலும் தாங்கள் வந்தநோக்கம் பலித்ததென்று எண்ணினார்கள். ஆண்டவர் கொடுத்த உத்தரவால் ஏரோதைப் பகைத்துக்கொண்டார் என்றும், மோசேயின் பிரமாணத்தையும் அவமதித்தார் என்றும் நினைத்தார்கள். "அப்படியானால் தள்ளுதற் சீட்டைக்கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்" என்று கேட்டார்கள். "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதி முதலாய் அப்படியிருக்கவில்லை" என்றார். அவர் இப்படிச்சொன்னதினாலே வேதத்தில் ஒருபக்கம் சொல்லியிருப்பது, மறுபக்கத்துக்கு விரோதம் என்பதுபோல் தோன்றலாம். அப்படி அல்ல. தேவன் தமது ஜனத்தை ஆதிமுதல் நடத்திவந்த விதமும், அவர் நம்மைப் படிப்படியாகப் பூரண அறிவுக்கு நடத்துகிற விதமும் தெளிவாயிருக்கின்றன. ஜனங்களுடைய நிலைமைக்குத்தக்கதாகவே அவர் தம்மை வெளிப்படுத்தக்கூடும். நமது ரட்சிப்பின் சம்பந்தமாக பூர்வகாலத்தில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் பிதாக்களுக்கு வெளிப்படுத்தினவர், இக்கடைசிக்காலத்தில் தமது குமாரன்மூலமாகத் தமது அன்பையும் கிருபையையும் பூரணமாக வெளிப்படுத்தினார். முன்பு பலிகளாலே உடன்படிக்கை செய்தவர், பிந்தி தமது குமாரனுடைய மரணத்தினாலே புதிய உடன்படிக்கை செய்தார். இதுபோலவே சகல காரியங்களிலும் ஜனங்களுடைய அறிவுக்கும், அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கும் தக்கதாக, தமது சித்தத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

மோசேயின் காலத்திலிருந்த ஜனங்களுடைய மனக் கடினத்தையும் மூர்க்கமான சிந்தையையும் நாம் அறியாதவர்களல்ல. "கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்" என்று மோசே கட்டளையிட்டது இக்காலத்திலுள்ள நமக்கு விகாரமாகத் தோன்றலாம். அப்படிப்பட்ட அளவுக்குட்பட்ட ஒரு விதியை அவர் ஏற்படுத்தாதிருந்தால் ஒருநாளில் எத்தனையோ கண்களும் எத்தனையோ பற்களும் தகர்ந்துப்போம். அந்த "முரட்டாட்டமும் கலகக்குணமும் உள்ள" ஜனங்களுக்கு. தங்கள் மனங்கொண்டபடி அக்கிரமங்களை நடப்பிக்காதபடி, மோசேயின் பிரமாணங்கள், அவர்களை அடக்கி ஆளும் முறையாயிருந்தன. அதுபோலவே மனைவிகள் விஷயத்திலும் நாளுக்கு ஒரு மனைவியை, வாரத்துக்கு ஒரு மனைவியைத் தள்ளிவிட்டு, வேறு ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளும் சுபாவமுள்ள மூர்க்கர்களுக்கு, அவர்கள் மனக்கடினத்திற்கேற்ற இவ்வித பிரமாணத்தை ஏற்படுத்தினார். அதுவும் முகாந்தரமில்லாமல் தள்ளிவிடும்படிக்கல்ல.

புதிதாக விவாகம் செய்யப்பட்ட ஒரு ஸ்திரீ, விவாகத்துக்கு முன் பாவஞ் செய்தவளெனக் காணப்பட்டால், தள்ளுதற் சீட்டைக்கொடுத்து அவளைத் தள்ளிவிடலாம் என்றும், அவள் வேறோருவனுக்கு மனைவியாகலாம் என்று கற்பித்திருந்தார் (உபா. 24:1,2). தாம் கண்டிப்பாய்ச் செய்யமுடியாத காரியங்களில் இவ்வித ஒழுங்குகளை ஏற்படுத்தினது அக்காலத்துக்கு ஏற்றதாயிருந்தது. என்றாலும், தேவபார்வையில் அவைகள் பூரணமானவையல்ல. பூர்வ பிதாக்கள் பல மனைவிகளை விவாகம் செய்தது. தேவனுக்கு எவ்வளவேனும் பிடிக்கவில்லை. ஆகிலும் **இடங்கொடுத்தார்.** அவர்கள் தேவ ஏற்பாட்டுக்கு விரோதமாக நடந்து தங்கள் தப்பிதத்தின் பலனை தங்களுக்குள் அடைந்தார்கள். மோசே தள்ளுதற் சீட்டை நியமித்த சித்தாந்தமும் அது போலவே, "மோசே உங்கள் இருதய கடினத்தினிமித்தம் உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆனால் ஆதிமுதல் அப்படியிருக்கவில்லை". "வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அவ்வாறு தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்" எனறார். விவாக சம்பந்தம் பிரிக்கப்பட ஆண்டவர் கொஞ்சமும் சம்மதிக்கவில்லை. அப்படித் தள்ளப்பட்டவள் விவாகம் செய்துகொள்ளலாம் என்று மோசே சொன்னார். ரட்சகரோ அதுவும் கூடாது என்கிறார். ஒருமுறை செய்த விவாகமே விவாகம், மறுவிவாகம் இல்லை என்கிறார். இந்தக் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்ட பரிசேயருக்கு எவ்வளவும் திருப்தியில்லை. அவர்கள் தகாத நோக்கத்துடன் வந்ததால் இப்போதனை அவர்களுக்குப் பிரயோஜனப்படவுமில்லை.

சீஷர்கள் மனதிலும் இப்புதிய உபதேசம் திகிலை உண்டாக்கிற்று. பரிசேயரைப்போலவே இவர்களுக்கும் ஆண்டவர் சொன்னது கடினமாகத் தோன்றிற்று. வீட்டுக்கு வந்தபோது அவர்கள் ரட்சகரைப் பார்த்து : புருஷனுடைய காரியம் இவ்வளவு ஆபத்திலிருந்தால், அவன் விவாகம் பண்ணாமல் இருந்துவிடுவதே நல்லது என்றார்கள். ஏனென்றால், விவாகத்தில் தேவன் குறித்த இலக்கு இவ்வளவு உயர்வாயிருக்கும் என்று அவர்கள் நினைத்ததில்லை. புருஷன் தன் மனைவியோடு சந்தோஷமாக வாழக்கூடாத எத்தனையோ காரணங்கள் இருக்கலாமே. அப்படியிருந்தும் கட்டின மனைவியோடு மரணபரியந்தம் வாழவேண்டுமென்று போதிப்பது அநியாயம் என்று நினைத்தார்கள். ஆண்டவரே, நீர் சொல்லுவது என்னமோ உண்மைதான். அது மேலான நோக்கந்தான். ஆனால் அதைக் கைக்கொண்டு நடக்க யாரால் கூடும்? இது விஷயத்தில் அவரவருடைய பிரியம்போல் விட்டுவிடாமல் அல்லவோ,

தங்களுக்கு இஷ்டமான மனைவிகளைத் தேடிக்கொள்ளக்கூடும். ஒரு மனைவி சரிப்படாவிட்டால் வேறொருத்தியைக் கட்டிக்கொள்ள மனுஷனுக்குச் சுயாதீனம் இல்லையென்றால் அவன் என்ன மனுஷன்? கட்டினால் ஒரே கட்டுத்தான் என்றும், அதை ஒருவனும் திரும்ப அவிழ்க்கக்கூடாதென்றும், பிரிந்துபோனவர்கள் வேறு கலியாணம் செய்தால் அது விபசாரமென்றும் நீர் போதிப்பதைப் பார்த்தால் விவாகம் பண்ணாமல் இருந்துவிடுவதே மேல் என்றார்கள்.

சீஷர்கள் சொன்னது நியாயமே என்று அநேகருக்குத் தோன்றலாம். அவர்கள் நம்மெல்லாருக்காகவும் பரிந்து பேசினதுபோலவும் காணப்படலாம். ஏனென்றால், விவாக சம்பந்தத்தில் அநேகருக்குச் சரியான சந்தோஷம் இல்லை. நினைத்தது ஒன்றாயிருக்க, வாய்த்தது ஒன்றாயிருக்கிறதே. குணபேதத்தால் ஓயாச் சண்டையும் ஒழுக்கு வீடுமாயிருக்கிறதே. என் படிப்புக்கும் என் புத்திக்கும் இவள் ஏற்றவளா? மட்டுக்கு மிஞ்சின நாகரீகம் என்று கட்டி மட்டுக்கு மிஞ்சின அவமானமா யிருக்கிறதே. தனத்தை எதிர்பார்த்துத் தரித்திரமாச்சுதே. அன்பை நாடி மண்ம்புரிந்து எந்நேரமும் வம்பாயிருக்கிறதே. இவ்வாறு பலவாறாய் மனதைக் குழப்பி வருந்தும் புருஷர் இருக்கலாம். இதுபோல்வே மனைவிகளும் வருந்தலாம். ஆளைப்பார்த்தேனே அல்லாமல் அகத்தை அறிந்தேன் இல்லையே. மேன்மையாக வைத்திருப்பார் என்றெண்ணிச் சிறுமை அடைகிறேனே. இவருக்குத்தானே கீழ்ப்படிவேன் என்று வாக்குக்கொடுத்தேன், ஆளாளுக்கு அதிகாரம் பண்ணுகிறார்களே. தனக்குள்ள எல்லாவற்றையும் எனக்குக் கொடுப்பேன் என்று கோவிலில் சொன்னாரே, சம்பளத்தை என் கண்ணால் காணவில்லையே. பிறர் முகம் பாராமல் என்னையே நேசிப்பதாகச் சொன்னாரே, என்னை மறந்து எத்தனைபேரையோ சிநேகங்கொண்டாரே. விவாகமான சமயத்தில் அன்பு பாராட்டினவர் இப்போது என்னை முழுவதும் வெறுக்கிறாரே. இவ்வாறு பலவாறாய் வருந்துகிற மனைவிகளும் இருக்கலாம்.

இவைபோன்ற பலகாரணங்கள் குடும்ப ஜீவியத்தைக் கசப்பாக்குவது மெய்தான். இவ்வாறு சந்தோஷமற்ற ஜீவியம் செய்வதிலும் பிரிந்துபோய் வேறு விவாகம் செய்துகொண்டால் என்ன என்று நினைப்பாரும் உண்டு. வீட்டுக்குள் இருந்துகொண்டே பிரிந்தவர்களைப்போல் ஜீவிப்பாருமுண்டு. அவமானத்துக்கு அஞ்சி சகல குறைவுகளையும் தங்களுக்குள் அடக்கிக்கொள்ளுகிறவர்களும் உண்டு. துன்பம் சகிக்கக்கூடாமல் தகப்பன் வீட்டுக்குப் போய்விடுகிற மனைவிகளும் உண்டு. அவ்வாறு போனாலும் வேறு விவாகம் செய்யக்கூடாதாகையால் அவர்கள் துக்கம் நீங்குவதில்லை. பெற்றார் மக்களைப் பார்க்கும்போதெல்லாம் பெருமூச்சு விடாதிருக்க முடியாது. நமது

மகளை விவாகம் செய்யாமல் வைத்திருந்தோமில்லையே என்று புலம்பலாம். இவ்வாறு பிரிந்த புருஷரும் சந்தோஷமாயிருக்க ஏதுவில்லை. கிறிஸ்தவர்களாக அவர்கள் மறுகலியாணம் செய்வதுகூடாது. அவர்களுக்கு நேரிடும் சோதனைகள் அநேகம். தங்களைச் சுத்தமாய்க் காத்துக் கொள்ளுகிறவர்களோ அபூர்வம். இவர்கள் தள்ளுதற் சீட்டைப்பெற்றுப் பிரிந்தவர்கள் அல்லவென்றாலும், இவ்வாறு இவர்கள் பிரிந்திருப்பது தேவனுக்கு எவ்வளவேனும் பிரியமில்லை. இவர்களில் யார் குற்றவாளிகள் என்று விசாரிப்பது இங்கே நமது வேலையல்ல. நமது காரியங்கள், இவ்வாறிருக்க, பிரதேசங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் வெகு இலேசாய் நியாயஸ்தலம் சென்று, பலகாரணங்களை சொல்லி, தள்ளுதற் சீட்டைப்பெற்று, வேறு விவாகம் செய்துகொள்ளுகிறார்களென்பது எவ்வளவு துணிகரம்! தேவனுக்கேற்காத பாவம்!

விவாகம் செய்துகொண்ட புருஷர் மனைவிகள், பிரிந்துபோய் மறுகலியாணம் செய்வதினால் சந்தோஷமாய் வாழலாம் என்று நினைப்பது வஞ்சகம். தள்ளுதற்சீட்டைப் பெற்றுக்கொள்வது தேவ ஏற்பாட்டுக்கு விரோதமாகயிருப்பதால் தேவாசீர்வாதம் கிடைப்பதில்லை. நமது குடும்பஜீவியத்தில் பல குறைவுகள் இருந்தபோதிலும், விவாகம் தேவனால் இணைக்கப்பெற்றது என்பதை மறைக்கக்கூடாது. அந்தச் சம்பந்தத்தைவிட்டுப் பிரிந்து, மறுவிவாகம் செய்வது, **விவாகம்** என்றெண்ணப்படாமல் **பாவம்** என்றாகும். இஷ்டம்போல் மனைவிகளைத் தள்ளிவிடலாம் என்று தேவன் இடங்கொடுத்திருந்தால், அது எங்கேபோய் நிற்கும் என்று யார் சொல்லக்கூடும்? மனுஷனுடைய ஆசைக்கோ அளவில்லை. மரணபரியந்தம் அவன் ஒன்றிலும் திருப்தியடையமாட்டான். அவன் எத்தனை ஸ்திரீகளைத் தள்ளி எத்தனை ஸ்திரீகளைச் சேர்த்துக் கொள்வானோ தெரியாது. தேவ அறிவில்லாத பல ஜாதிகளுக்குள் இவ்வித ஒழுங்கீனங்களைக் காண்கிறோம். சாமான்களைப் பரிமாறுகிறதுபோலவே ஸ்திரீகளையும் நடத்துகிறார்கள். இவர்கள் தேவ அறிவும் கல்வி அறிவும் இல்லாதவர்களாகையால், புருஷர் ஸ்திரீகளின் மேன்மையை அறியாமல் அநேக ஒழுங்கீனமான காரியங்களைச் செய்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவை, ஏற்றுக்கொள்ளும்போது இந்த தீய வழக்கங்களைக் குறித்து வெட்கப்பட்டு, ஒரு மனுஷனுக்கு ஒரே மனைவி என்னும் பிரமாணத்தை அனுசரித்துப் பாக்கியமாக வாழுகிறார்கள்.

விவாகத்தை நியமித்த கடவுள் ஒரு மனுஷனுக்கு ஒரே மனைவியைத் துணையாக ஏற்படுத்தினார். அதையே எக்காலத்துக்கும் பிரமாணமாக விதித்தார். இவ்விதியை மீறும்போது தேவாசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆகையால் நமதாண்டவர் புருஷன் மனைவி பிரிந்து போகக்கூடாதென வற்புறுத்திப் பேசினார். சீஷர்கள் அது கடினமான உபதேசம் என்று சொன்னபோது, அவர் அவர்களைப்பார்த்து: நான் சொன்னது உங்களுக்குக் கடினமாகத் தோன்றலாம். அதைக் கைக்கொண்டு நடப்பது உங்கள் சுபாவத்துக்கு கஷ்டமாகவும் இருக்கலாம். நான் விவாகத்தின் முடிவான நோக்கத்தை நினைத்துப் பேசுகிறேன். நீங்களோ இப்போதே அனுபவிக்கக்கூடிய சந்தோஷத்தைப் பிரதானமாகக் கருதிப் பேசுகிறீர்கள். ஆனாலும் வரம்பெற்றவர்களே தவிர, அதாவது விசேஷித்த கிருபை பெற்றவர்களே தவிர, மற்றவர்களுக்கு நான் சொல்லுகிறது விளங்காது. அவர்கள் இலேசாய் இதை ஏற்றுக்கொள்ளவுமாட்டார்கள் என்றார். ஆண்டவர் சொன்னது உண்மையே.

நமது பாவசுபாவத்தால் நமது ஜீவியத்துக்கடுத்த அநேக காரியங்களில் பூரண அறிவின்றி நாம் தவறிப்போகிறது போலவே, விவாக சம்பந்தத்திலும் தேவன் கருதிய மேலான நோக்கத்தை நாம் மறந்து தவறிப்போகிறோம். விவாக சம்பந்தத்தில் நாம் விரும்புகிறதெல்லாம் சம்பூரணமாகக் கைகூடும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. குறைவில்லாத புருஷரும் ஸ்திரீகளும் பூலோகத்தில் இல்லை. ஒன்றிருந்தால் ஒன்றிருக்காது. இதுவே சகல மனுஷருக்கும் இல்வாழ்க்கையில் தேவன் பகிர்ந்துகொடுத்த ஈவு. மெய்யான சந்தோஷம் சிருஷ்டிகரிடத்தேயல்லாமல் சிருஷ்டிகளிடத்தில் இல்லை. பூலோகத்தில் நாம் அனுபவிக்கிற யாவும் குறைவுள்ளவைகளே. சரீரத்திற்கடுத்த புறம்பான காரியங்கள் மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கமாட்டாது. தேவபக்தியின் ஜீவியமே இக்குறைவுகள் யாவையும் நிறைவாக்கும். "இக்கரைக்கு அக்கரை பச்சைபோல்" தோன்றும். போய்ப் பார்த்தால் அக்கரையும் இக்கரைபோலவே இருக்கும். நாம் அனுபவிக்கிறவைகளைப் பார்க்கிலும், அனுபவியாதவைகள் விரும்பப்படத்தக்கதாகத் தோன்றும். அவைகளும் அனுபவத்திற்கு வரும்போது முன்போலவேயிருக்கும். மனுஷன் எந்த நிலைமையிலும் திருப்தியடையமாட்டான். கர்த்தராகிய இயேசுவை நமது ஆத்தும நேசராக ஏற்றுக்கொண்டு, அவரில் நாம் இடைவிடாமல் மகிழும்போது, புருஷர் மனைவியிடம் காணப்படும் குறைவுகளை நாம் நினைக்கமாட்டோம். மேலான சந்தோஷம் கீழான சந்தோஷத்தின் குறைவுகளை கிறிஸ்துவுக்குள் நிறைவாக்கும்.

ஸ்திரீ புருஷரின் இலட்சணம் புறம்பான அழகிலும், உடை, நடை, பாவணை, பேச்சிலும் அல்ல. முகவசீகரத்தை விரும்புவது யாவருக்கும் இயல்புதான். முகவழகும் அகவழகும் பொருந்தினவர் அநேகரில்லை. குண அழகே மெய்யான அழகு. குணசாலியான மனைவியைக் கண்டடைகிறவன் பாக்கியவான். குணங்கெட்ட

அழகு குடும்பத்துக்கு இழிவு. நாகரீகம் என்று சொல்லப்படுகிற புறம்பான உடை, நடை, தோற்றம் காரியத்திற்கு உதவாது. தற்காலத்தின் மோசம் அதுவே. புருஷர் ஸ்திரீகள், ஐந்து நிமிஷத்தில் ஜோடிக்கக்கூடிய வெளியலங்காரத்தைப் பார்த்து மோசம்போகிறார்கள். விவாகத்தின் **பார்வை** பலவிதம். இது அவரவருடைய புத்திக்கும் விருப்பத்துக்கும் ஏற்றாற்போல் இருக்கும். விவாகம் இரண்டொருநாள் காரியம் அல்ல. அது வியாபார ஒப்பந்தம் அல்ல. அது புறம்பான அலங்காரம் அல்ல. "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" என்று லேமுவேலுடைய தாயார் சொன்னார்கள் *(நீதி. 31:30)*. இவ்வாறு ஒரு புருஷன் சொல்லியிருந்தால் பொறாமை என்றாகும். மாதுசிரோமணியே இதைச் சொன்னதால் அதை உண்மை எனக்கொள்ளவேண்டும். விவாகம் நாவல்போன்ற மனோராஜ்யமல்ல. கஷ்டமின்றிப் பொருள் சம்பாதிக்கும் உபாயமல்ல. இவைபோன்ற தகாத நோக்கங்கள் கஷ்டங்களையும் கவலையையும் துன்பத்தையும் பிறப்பிக்கும்.

விவாகம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது. ஒருவனுக்கு ஒரே மனைவி. அவ்விருவரையும் இணைத்தவர் தேவன். அவ்வினைப்பு பெற்றார், மக்களுக்குரிய சம்பந்தத்தைப் பார்க்கிலும் மகா நெருங்கினது. இருவரும் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். மரணமேயன்றி வேறொன்றும் அவர்களைப்பிரிக்கக்கூடாது. தேவசமுகத்திலும் சபைக்கு முன்பாகவும் அவ்வாறு ஜீவிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் மோசேயின பிரமாணமானாலும் நியாயாதிபதிகள் சட்டமானாலும் அவர்களைப் பிரிப்பதற்கு அதிகாரமில்லை. புருஷர் மனைவிகள் பிரிந்துபோகிற விஷயத்தில் ஏராளமான தீமைகள் உண்டாகுமென்றெண்ணியே சர்க்கார் இந்த அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். கூடியவரை அவர்களை ஐக்கியப்படுத்தவேண்டுமென்பதே அவர்கள் முக்கிய கருத்து. ஒருக்கால் அவர்கள் பிரிக்கப்பட்டாலும், அவர்கள் செய்த விவாகத்தை அது அழிக்கமாட்டாது. அவர்கள் வேறு விவாகம் செய்வார்களானால் அது விவாகமாகாது.

நமதாண்டவர் சொன்ன சுருக்கமான வார்த்தைகளிலிருந்து ஒரு காரியம் நிச்சமாய் வெளிப்படுகிறது. விவாகம் செய்துகொண்டவர்கள் எந்தக்காரணத்தினிமித்தமும் பிரிந்து போகக்கூடாதென்றும், அவ்வாறு பிரிந்து மறு விவாகம் செய்வார்களானால் அவர்கள் பாவம் செய்கிறார்களென்றும் சொல்லுகிறார். **விவாகம் செய்யுமுன்** பாவம் செய்தவர்களுக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுக்கவும் அவள் தனக்குப் பிரியமான யாரையாகிலும் விவாகம் செய்துகொள்ளவும் மோசே உத்தரவு கொடுத்தார். நமதாண்டவரோ தள்ளிவிடப்பட்டவள் திரும்ப

விவாகம் செய்வதைக் குறித்து ஒன்றும் சொல்லவில்லை. **விவாகமானபின்** பாவம் செய்தவளுக்கு மோசே தள்ளுதற் சீட்டைக் கொடுக்கும்படி சொல்லாமல், குற்றவாளிகள் இருவரையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டார் (லேவி. 20:10). வேதபாரகரும் பரிசேயரும் அவ்வாறு பாவஞ்செய்ததாக ஒரு ஸ்திரீயை ஆண்டவரிடம் கொண்டுவந்து, இப்படிப்பட்டவர் களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீரென்று கேட்டார்கள். "உங்களில் பாவம் இல்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று சொல்லி அவர்கள் கைக்கு அவளைத் தப்புவித்து இரட்சித்தார்.

மோசே ஸ்திரீகளின் பாவத்தைக்குறித்துமாத்திரம் பேசினாரே தவிர, புருஷரைக் குறித்துப் பேசவில்லை. ஆண்டவர் இருபட்சத்தாரையும் குறித்துப் பேசியிருக்கிறார். எவனாகிலும் ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாக விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான். மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு வேறொருவனை விவாகம் பண்ணினால் விபசாரஞ் செய்கிறவளாயிருப்பாள்" என்றார் (மாற்கு. 10:11,12). வேறொரு இடத்தில், தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவனைப் பாவ ஜீவியத்துக்கு நடத்துகிறான் என்றும், தன் புருஷனைத் தள்ளிவிடுகிறவள் அவளைப் பாவஜீவியத்துக்கு நடத்துகிறாள் என்றும் சொன்னார். இதனாலே தள்ளப்பட்டவர்களைப் பார்க்கிலும், தள்ளி விடுகிறவர்களுக்கு அதிகப் பாவமுண்டு என்று காண்பிக்கிறார். இப்படித் தள்ளப்பட்டவர்களை விவாகம்பண்ணுகிறவர்களும், அப்பாவத்துக்கு உடன்பங்காளி களாகிறார்கள். ஆகையால், விவாக நிலைமையிலிருந்து பிரிகிறவர்கள் தங்களையும் கெடுத்து மற்றவர்களையும் கெடுக்கிறார்கள். இவைகள் யாவையும் கவனிக்கும்போது விவாகம் பரிசுத்தமானதும் பிரிந்து போகக்கூடாததுமான தேவ ஏற்பாடென்பது விளங்குகிறது. இதிலிருந்து நாம் மனதில் வைக்கவேண்டிய சில குறிப்புகளைக் கவனிப்போம்.

1. பெண், மாப்பிள்ளை தேடும் விஷயத்தில் மகா ஜாக்கிரதை வேண்டும். **தேவபக்தியையே** பிரதானமாகக் கருதவேண்டும். கையில் எவ்வளவு? காலில் எவ்வளவு? என்னும் வியாபாரத்தை நிறுத்தி, தேவ அன்பும், அறிவும், மனத்தாழ்மையும் உண்டோவென்பதையே முக்கியமாக விசாரிக்கவேண்டும். இது விஷயத்தில் பிதா வழி நடத்தும்படி அவர் சகாயத்தை வாஞ்சையோடு தேடவேண்டும். விவாகம் ஜீவகால சம்பந்தம். "அவசர கலியாணம் சதா சஞ்சலம்" என்னும் பழமொழியை மறக்கக்கூடாது.

2. மாப்பிள்ளை பெண் நமது மனதுக்குத் திருப்தியாக வாய்க்கலாம். அவர்கள் சந்தோஷமாகச் சுகித்து வாழலாம். குடும்பத்துக்கு அலங்காரமாகவும் தேவனுக்கு மகிமையாகவும் இருக்கலாம். அப்படி வாய்த்தால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சில சமயம் விவாகம் **தவறிப்போனதுபோல்** காணப்படலாம். நாம் எதிர்பாராத சங்கடங்கள் வரலாம். குணபேதத்தால் புருஷன் மனைவிக்குள் சந்தோஷமும் சமாதானமும் இல்லாமற் போகலாம். அவ்வாறு சம்பவிக்குமானால் அவர்கள் பிரிந்துபோகக்கூடாது. "நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்பட வகைதேடாதே" (1. கொரி. 7 : 27). மற்றவர்கள் அவர்களைப் பிரித்துவிடக்கூடாது. பெண் கெட்டவளானால் தேவபக்தியுள்ள புருஷன் பொறுமையாய்ச் சகிக்கவேண்டும். புருஷன் மூர்க்கனானால் தேவபக்தியுள்ள மனைவி பொறுமையாகச் சகிக்கவேண்டும். குடும்பத்தின் சமாதானத்தை நாடுகிற தேவனுக்கு அங்கே காணப்படும் முறுமுறுப்பும் சண்டைகளும் பிரியமல்ல. அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவர்கள் பிரிந்துபோகக்கூடாதென்பது அவர் கட்டளை. பிரிந்துபோகுதல் அன்பை உண்டாக்காது. குடும்பத்தில் புருஷன் அல்லது மனைவியால் வரும் துன்பங்களை பொறுமையாய்ச் சகிப்பது பெரிய ஆசீர்வாதத்துக்கு ஏதுவாகும். கஷ்டமுள்ள பாதையிலே தேவ மகிமை சிறந்து விளங்கும். புருஷனும் மனைவியும் ஒன்றுபோல் தேவபக்தர்களாக வாய்ப்பது சிறந்த செல்வம்.

3. குடும்ப ஜீவியத்தின் **சந்தோஷம்** புறம்பான காரியங்களில் அல்ல. புறம்பான காரியங்கள் மாறும். புறம்பான காரியங்களில் குறைவுகள் இருக்கும். சகலமும் சம்பூரணமாயிருக்க மாட்டாது. சகலத்தையும் சம்பூரணமாக்குகிறவர் கர்த்தர். அவரையே எல்லாவற்றிலும் பிரதானமாகத் தேடி, அவரில் நம்பிக்கை வைக்கும்போது குறைவு என்று பேச இடமிராது. குடும்பத்தில் தேவபக்தியில்லாததே சகல முறுமுறுப்புகளுக்கும் சகல சச்சரவுகளுக்கும் காரணம். மூர்க்கமும் வாக்குவாதமும் கிறிஸ்தவர்களின் லட்சணமல்ல.

4. குடும்பத்தின் அன்பை **விருத்திபண்ண** நாடவேண்டும். இது இருவரையும் பொருத்த கடமையாகும். அன்பு தானாக வருவதில்லை. பட்சத்தினாலும், ஏகசிந்தையினாலும், ஒருவருக் கொருவர் உதவியாயிருப்பதினாலும் அன்பு வளருகிறது. அசட்டை கூடாது. ஒருவரிடத்தில் நமக்குள்ள சிநேகம் காலத்துக்குக் காலம் வளர்ந்து பூரணப்படுவது எவ்வாறோ, அவ்வாறே புருஷன் மனைவிக்குரிய சிநேகமும் வளரவேண்டியது. இது கைகூடவேண்டுமானால் நியாயத்தைப் பாராட்டிக் கொண்டிராமல், அநேக காரியங்களைச் சகித்துக்கொள்ள வேண்டியதாகும். இருவரும் தவறக்கூடியவர்களே. கிறிஸ்துவுக் குள்ளான **அன்பே** இருவரையும் கட்டவேண்டிய கட்டு.

5. சரீர சுகத்தின் நிமித்தமும், ஜெபம் ஊழியத்தின் நிமித்தமும், இருவரும் சந்தோஷமாகச் சம்மதித்து, வேண்டிய காலம் பிரிந்திருக்கலாம். இதனாலே அவர்கள் அன்பு கெட்டுப் போவதில்லை. வேறு எந்தக் காரணங்களினிமித்தமும் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு பிரிந்துபோகக்கூடாது. பிரிந்து போகும்படி மற்றவர்கள் தூண்டினாலும் இடங்கொடுக்கக்கூடாது. **தள்ளிவிடுதல்** என்பது கிறிஸ்துவின் சிந்தைக்கு நேர் விரோதம். அது அநேக தீமைகளுக்கும் பாவங்களுக்கும் வழிநடத்தும். தள்ளுதற் சீட்டை கடவுள் ஒப்புக்கொள்ளமாட்டார். புத்தியீனமாய்ப் பிரிந்துபோனவர்கள் மறுபடியும் கூடி வாழவேண்டுமென்பது அவருடைய சித்தம். இந்தத் **தள்ளுதற்சீட்டு** அவர்களை வேறு விவாகம் செய்துகொள்ள இடங்கொடுக்கிறபடியால், அவர்கள் மறுபடியும் கூடி வாழக்கூடாதபடி வாசலை அடைத்துப்போடுகிறது. தமக்குத் துரோகஞ்செய்த விபசார சந்ததியான இஸ்ரவேலை அவர்கள் திரும்பிவந்தால் சேர்த்துக்கொள்வேன் என்று தேவன் சொன்னார். திருச்சபைக்கு கிறிஸ்து ஞானமணவாளனாயிருக்கிறார். எவ்வளவோ அசுத்தமும் குறைவுகளுமுள்ள சபையைத் தமது பரிசுத்த இரத்தத்தினால் சுத்திகரித்து, தமது அருமையான மனையாட்டியாகச் சேர்த்துக்கொள்ளுகிறார். "என் பிரியமே! நீ ரூபவதி, உன்னில் பழுதொன்றும் இல்லை" என்றும் அவர் சொல்வது அவரது பேரன்பே (உன். 4:7).

புருஷன் மனைவிக்குரிய குடும்ப சம்பந்தத்தில் தேவன் எதிர்பார்க்கிற அன்பும் ஐக்கியமும் இல்லாமற் போகிறபடியால், உலகத்தில் சொல்லமுடியாத துன்பங்கள் உண்டாகின்றன. தேவபக்தியில்லாத மூர்க்கமான புருஷன் அல்லது மனைவியால் குடும்பத்தில் சகிக்கமுடியாத வேதனையுண்டாகும். தேவகிருபை தாங்காவிட்டால் நிற்கமுடியாது. தீமைக்குத்தீமை செய்யக்கூடாது. அவைகளைக் கவனிக்கிற ஆண்டவர் நீதி செய்வார். அன்பும், தாழ்மையும், இணக்கமும், தேவபக்தியுமுள்ள குடும்பத்தில் தேவாசீர்வாதமும் தேவசமாதானமும் நிலைநிற்கும். எல்லாம் இது போல வாய்க்கிறதில்லை. புறம்பேயிருந்துவரும் துன்பங்களைப் பார்க்கிலும், தேவபக்தர்களுக்கு உள்ளுக்குள்ளிருந்துவரும் துன்பங்கள் அநேகம். இது சாத்தானுடைய பெரிய உபாயம். பெண்சாதிமூலமாகவோ புருஷன்மூலமாகவோ குடும்பத்தை நாசமாக்க வேண்டுமென்பது அவன் தீர்மானம். நாம் கர்த்தரை முற்றிலும் நம்பி, சகலத்தையும் சகித்து, அமர்ந்திருக்கும்போது சாத்தானுடைய உபாயதந்திரங்கள் யாவும் அவமாய்ப்போகும். மாராவின் கசப்பு மதுரமான பானமாகும். "என் கிருபை உனக்குப் போதும்" என்றும் சொன்ன ரட்சகர் கைவிடமாட்டார். எவ்வகைப் போராட்டத்துக்கும் ஒரு அளவுண்டு. நாம் தாங்கக்கூடாத பாரத்தை அவர் நம்மேல் வைக்கிறதில்லை.

அப்பாரம் வைக்கப்பட்ட நோக்கம் உண்டு. அப்பாரம் நீங்கிப் போகிற காலமுமுண்டு.

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பெற்ற புருஷர் மனைவிகள் பாக்கியவான்கள். அவர்கள் பொக்கிஷம் கிறிஸ்து. அவர்கள் சந்தோஷம் கிறிஸ்து. எந்தவீட்டிலும் அவர்கள் கூடி வாழுவார்கள் எந்த நிலைமையிலும் திருப்தியாயிருப்பார்கள். எந்தச் சந்தோஷத்திலும் கூடி மகிழ்வார்கள். எந்தத் துன்பத்தையும் கூடிச் சகிப்பார்கள். சந்தோஷத்தைப்போலவே துன்பமும் அவர்கள் அன்பைப் பெருக்கும். எந்த நன்மையையும் கூடிச் செய்வார்கள். அவர்கள் சந்தோஷத்திற்குக் காரணம் புறம்பான காரியங்கள் அல்ல. ஒருவர்மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பே காரணம். அவர்களுக்குள் முறுமுறுப்பும், குற்றப்படுத்துதலும், குறைபேசுதலும், இணங்காமையும், பிடிவாதமும், பெருமையும், ஆங்காரமும் காணப்படுவதில்லை. கிறிஸ்துவுக்குள்ளான அன்பினால், இணைக்கப்பட்டு, இருவர் என்பதை மறந்து, பூரண ஒற்றுமையில் வாழுகிறார்கள். அவர்கள் அன்பு வரவரப் பெருகும். அந்த அன்பு ஒருக்காலும் ஒழியாது. நமது பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படவும், நமது சபைகள் ஆசீர்வதிக்கப்படவும், நமது தேசம் ஆசீர்வதிக்கப்படவும், தேவன் இவ்விதமாக நமது குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக. ''தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உமது முகத்தை எங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணும்'' *(சங். 67:1,2)*. ''உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போலிருப்பாள். உன்பிள்ளைகள் உன்பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப் போலிருப்பார்கள். இதோ கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாக ஆசீர்வதிக்கப்படுவான்.''

11
என் பிதாவின் வீடு
My Father's House

கானாவூர்க் கலியாணம் முடிந்தபின் நமதாண்டவர் நாசரேத்தூருக்குப் போகாமல் வடதிசைநோக்கிக் கப்பர்நகூம் பட்டணத்துக்குப் போனார். அவருடைய தாயாரும் சகோதரரும் சீஷர்களும் அவரோடுகூடப் போனார்கள். நாத்தான்வேல் தவிர மற்றச் சீஷர்களுடைய வீடுகள் கப்பர்நகூம் பக்கமாகவேயிருந்தன. தாயாரும் சகோதரரும் அவரோடுகூடப்போன காரணம் எதுவாயிருந்தாலும், ஆண்டவர் அங்கேபோன நோக்கம் வேறே. ஊழியம் செய்வதற்கு கலிலேயா நாடு ஏற்றது. கப்பர்நகூம் பட்டணம் தாம் வசிப்பதற்கும், அங்கிருந்து நாலா பக்கங்களுக்கு போய் வேலை செய்வதற்கும் தகுந்த இடம். இவைகளைப்பற்றி ஆலோசிக்கவும் ஏற்பாடுகள் செய்யவும் அங்கே போனார். சில நாள்கள் மாத்திரம் அங்கே தங்கினார். அச்சமயத்தில் அங்கே அவர் செய்த வேலைகளைப்பற்றி நமக்கொன்றும் தெரியாது. அவர் ஞானஸ்நானம் பெற்றதுமுதல் இதுவரை மூன்று மாதங்களாகின்றன. கலியாணவீட்டில் செய்த அற்புதமும், சீஷர்களுக்குத் தம்மை மேசியாவாக வெளிப்படுத்தினதுமன்றி, அவர் பகிரங்கமாகத் தம்மை இன்னாரென்று இன்னும் பிரஸ்தாபிக்கவில்லை. யூதேயாவிலுள்ள எருசலேமில் தமது ஊழியத்தை ஆரம்பிக்கவேண்டுமென்பதே அவர் நோக்கம். எருசலேமின் அதிகாரிகளுக்கே முதல் முதல் தம்மை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார்.

அதற்கேற்றாற்போல் யூதருடைய பஸ்காப் பண்டிகையும் சமீபமாயிருந்தது. பண்டிகையின் சத்தம் எங்கும் தொனிக்கிறது. பிரயாண ஆயத்தங்கள் முஸ்திப்பாய் நடக்கின்றன. வடகலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு வருகிற பிரயாணக்காரர் எப்போதும் கப்பர்நகூம் வழியாகவே வருவார்கள். இவர் ஏற்கனவே கப்பர்நகூமுக்கு வந்தது, அங்கிருந்து எருசலேமுக்கு அவர் செய்ய நினைத்த பிரயாணத்துக்கு அனுகூலமாகயிருந்தது. ஆகையால், ஆண்டவரும் அவரது சீஷர்களும் அக்

கூட்டத்தாரோடு சேர்ந்து பிரயாணப்பட்டார்கள். நோர் பாதை சமாரியா வழியாயிருந்தும், அது சமீபமாயிருந்தும், யூதர்கள் சமாரியரை வெறுத்ததால், அவர்கள் தேசத்தில் பிரவேசியாமல் சுற்றிப்போவது வழக்கம். ஆகையால், அவர்கள் கலிலேயாக் கடலின் தென்பாகத்தில் யோர்தான் ஆற்றைக் கடந்து, யோர்தானுக்குக் கிழக்காயுள்ள பெரேயா நாட்டில் பிரவேசித்து, தெற்குமுகமாய் நடந்து, பெத்தாபராவையும் கடந்து, ஆற்றின் பக்கமாகவே நடந்து, எரிகோவுக்கு எதிரே ஆற்றைக் கடந்து, யூதேயா தேசத்தில் பிரவேசித்து எருசலேமுக்குப் போவார்கள். இந்தச் சுற்றுப்பிரயாணம் ஏறக்குறைய நூறு மைல் தூரம். அவர்கள் ஒலிவமலைமீதேறித் தங்களுக்கு எதிரே தோன்றும் **எருசலேம்** பட்டணத்தையும் அலங்காரமான ஆலயத்தையும் கண்டு ஆனந்திப்பார்கள். ஆண்டவரும் இப்பிரயாணிகளோடு சேர்ந்து நடந்து எருசலேமுக்கு வந்தார்.

முதல் மூன்று சுவிசேஷகரும் நமதாண்டவருடைய பன்னிரண்டாம் வயதுக்கும் அவருடைய மரணத்துக்கும் இடையில் அவர் பஸ்காப்பண்டிகைக்குப் போனதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இந்தப் பஸ்காவையும் அதில் நடந்த சம்பவங்களையும், இன்னும் அவர் போன மற்றப் பண்டிகைகளையும் குறித்து அப்போஸ்தலன் யோவான் எழுதினதினாலே நாம் அறிகிறோம். இதுதான் அவர் இரண்டாந்தரம் போன பண்டிகையென்று நாம் நினைக்கக்கூடாது. தமது பன்னிரண்டாம் வயதுக்குப் பிறகு ஒவ்வொரு பஸ்காவுக்கும் அவர் போயிருக்கவேண்டும். அக்காலத்தில் அவர் மற்றவர்களைப்போல பிதாவைத் தொழுதுகொள்ளும்படி அங்கே போனார். இப்பொழுதோ பணிந்துகொள்ளுகிறவராக அல்ல, தேவகுமாரனும் யூதர்களின் மேசியாவுமாகப் போகிறார். நானே மேசியாவென்று அவர் தமது வாயாற் சொல்லாவிட்டாலும் தமது **கிரியையினால்** அதை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார்.

அவர் தமது ஊழியத்தை முதல் முதல் எருசலேமில் ஆரம்பித்தது நியாயமே. பலஸ்தீனாவில் பல நாடுகளிருந்தும், அவற்றில் யூதேயாவே விசேஷித்த நாடு. மகாராஜாவின் நகரமாகிய எருசலேம் யூதேயாவிலிருக்கிறது. விசாலமான ரோம இராஜ்யத்துக்கு **ரோமையும்,** கிரேக்கு தேசத்துக்கு **அத்தேனேயும்,** இங்கிலாந்துக்கு **இலண்டன்** பட்டணமும், பிரான்சு தேசத்துக்கு **பாரீஸ்** பட்டணமும், ஜெர்மனிக்கு **பெர்லீனும்** எப்படியோ அப்படியே பலஸ்தீனாவுக்கு **எருசலேம்** தலைநகராயிற்று. அதுவே அத்தேசத்துக்குச் சிரசாக விளங்கினது. மற்ற நாடுகள் எவ்வளவு விசாலமும் செல்வமும் உடைத்தாயிருந்தாலும், எல்லாருடைய கண்களும் எருசலேமையே நோக்கியிருந்தன. பலஸ்தீனாவிலுள்ள

யூதர்கள்மாத்திரமல்ல, பல தேசங்களிலும் சிதறுண்டுபோன திரளான யூதர்களின் கண்களும் எருசலேமையே நோக்கியிருக்கும். எருசலேம் மகா அரணிப்பான நகரம். தாவீதின் சிங்காசனம் அங்கே இருந்தது. நியாயப்பிரமாணம் அங்கிருந்து புறப்பட்டது. கல்விமான்களும் ஞானிகளும், அதிகாரிகளும் பிரபுக்களும், ஆசாரியரும், லேவியரும், வேதபாரகரும், பரிசேயரும் தலைநகரில் கூடியிருந்தார்கள். வேதப்பிரமாணங்களும் ஆராதனைகளும், பலிகளும் பண்டிகைகளும், ஆசாரங்களும் ஆளுகையும் எருசலேமிலே பலத்திருந்தன. யெகோவாவை ஆராதிக்க உலகமெங்குமுள்ள யூதர்கள் எருசலேமுக்கு வருவார்கள். தங்கள் தேசங்களில் தீராத வழக்குகள் எருசலேம் சங்கத்தால் முடிவாகத் தீர்க்கப்படும். எருசலேமுக்குத் தெரியாமல் யாராகிலும் நூதன உபதேசங்களைப் போதிக்கக்கூடாது. அவன் எங்கே போனாலும் விசாரணைக்குத் தப்பான். இவை யாவையும் கவனிக்கும்போது யூதஜாதியின் இரட்சிப்பானாலும் அழிவானாலும் எருசலேமைத் தான் பொருத்திருந்தன. கோட்டை விழுந்தது மெய்யானால் தேசம் பிடிபட்டது மெய். யூத அதிகாரிகள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது மெய்யானால் யூதஜாதியும் ஏற்றுக்கொண்டது மெய். ஆகையால் நமதாண்டவர் தமது ஊழியத்தை முதல் முதல் எருசலேமில் தொடங்கினது நியாயமே. மேலும், உலகத்தின் நான்குதிசைகளிலுமிருந்து திரளான யூதர்கள் கூடிவந்திருந்த சமயம் தம்மை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சமயமாகவுமிருந்தது.

தமது **பிதாவின் வீட்டில்** பிரவேசித்த திருக்குமாரன், மகா அருவருப்பான காரியங்களை ஆலயப் பிரகாரங்களில் கண்டார். பற்பல இடங்களிலிருந்து இலட்சக்கணக்கான ஜனங்கள் பண்டிகைக்கு வந்திருந்தார்கள். பஸ்காப் பலிக்கும் சுத்திகரிப்புச் செய்வதற்கும் ஆடுகள் திரளாய்வேண்டும். ஸ்தோத்திரப் பலிக்கு ஏராளமான மாடுகள் வேண்டும். ஏழைகளின் சுத்திகரிப்புக்குப் புறாக்கள் வேண்டும். இவைகளை விற்பனை செய்யும்படி புறஜாதிகள் தொழுது கொள்ளும் பிராகாரத்தில் மகா பெரிய சந்தைகூடும். ஆசாரிமார் வியாபாரிகளை ஏற்படுத்தி இந்தச் சந்தையை நடத்திவந்தார்கள். பண்டிகைக்கு வந்த ஜனங்களுக்கு இவ்வியாபாரம் அனுகூலம்போல் தோன்றினாலும், ஆசாரிமாரின் சுயலாபத்திற்கென்றே இச்சந்தை நடத்தப்பெற்றது. அவர்கள் செய்திருந்த ஒழுங்கு மகா தந்திரமுள்ளது. மிருகங்களின் கிரயமும் அவர்கள் கைக்கே வந்தது. பலி செலுத்தப்பட்ட அந்த மிருகங்களும் அவர்களையே சேர்ந்தன. ஒரு பஸ்காவில் இரண்டு இலட்சம் மிருகங்கள் பலியிடப்படுமென்பது கணக்கு.

இதுதவிர காசுக்கடைகளையும், ஜனங்களுக்கு வேண்டிய பலசரக்குக் கடைகளையும் அவர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். காசுக்கடைக்காரர் பலகைகள் பரவின மேடைகளில் உட்கார்ந்து

ஜனங்களுக்குச் சில்லறை கொடுக்கிறதும் நாணயம் மாற்றுகிறதுமாயிருப்பார்கள். புறதேசங்களிலிருந்து வந்த யூதர்கள் அந்நியதேசத்து நாணயங்களைத் தங்களோடு கொண்டு வருவார்கள். அவைகள் தீட்டாக எண்ணப்பட்டபடியால் அவைகளை யூத நாணயங்களாக மாற்றின பின்புதான் பலிக்கு வேண்டிய மிருகங்களை வாங்கக்கூடும். இப்படி நாணயம் மாற்றும் திரளான ஜனங்களிடம் காசுக்காரர்கள் அநியாய வட்டம் வாங்குவார்கள். ஒவ்வொரு யூதனும் அவன் தனவானானாலும் தரித்திரனானாலும் ஆலய வரிக்காக ஒரு சேக்கலை அதாவது ஒரு ரூபாயை ஆசாரியருக்குக் கட்டவேண்டும். அதற்காகவும் அந்நிய நாணயங்களைக் காசுக்கடையில் கொடுத்து தேவாலய நாணயமாக மாற்றிக் கொள்ளவேண்டும். ஆதார் மாதம், அதாவது மார்ச்மாதம் முதல் நாளிலே இவ்வரிப்பணத்தை ஆயத்தம் செய்யும்படி எங்கும் விளம்பரம் செய்யப்படும். பதினைந்தாம் தேதியில் பட்டணங்களெங்கும் அதை வசூல் செய்வார்கள். இருபதாம் தேதியில் தாங்கள் வசூலித்த தொகையுடன் ஆலயப் பிராகாரத்தில் வந்து கூடுவார்கள். பாக்கிக்காரர் அபராதத்துடன் தங்கள் வரியைச் செலுத்தும்படி நேரிடும். அப்படிக் கொடுக்க நிர்வாகமில்லாத ஏழையாயிருந்தால் அவன் வஸ்திரத்தை ஈடாகப் பிடுங்குவார்கள். பண்டிகையில் நடந்த அநியாயம் கொஞ்சமல்ல. ஜனங்களுக்குப் பண்டிகையின்மேல் நோக்கம், ஆசாரியர்களுக்குப் பணத்தின்மேல் நோக்கம். கள்ளர் பல இடங்களிலும் கொள்ளையடித்துத் தாங்கள் ஒளித்திருக்கும் குகையிலே சேர்த்துவைக்கும்வண்ணம், ஆசாரிமார் இந்த அநியாய வியாபாரத்தால் தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கினார்கள். இவ்வாறு அவர்கள் சம்பாதிக்கும் ஆதாயம் வருஷத்திற்கு இலட்சத்து இருபதினாயிரும் ரூபாயெனக் கணக்குண்டு.

இவ்வளவு அநியாயத்தையும் அக்கிரமங்களையும் வருஷாவருஷம் கவனித்துவந்த நமதாண்டவருக்கு எப்படியிருந்திருக்கும்? புறஜாதிகள் கடவுளை வணங்கும் ஆலயப்பிரகாரம் பெரிய சந்தைக் கூட்டமாயிற்று. திரளான ஆடுகள் மாடுகள் கதறுகிற சத்தம் காதடைக்கிறது. வியாபாரிகள் மிருகங்களை விலை கூறுவதும், வாங்குகிறவர்கள் இவ்வளவுதான் கொடுப்போம் அல்லது கொடுக்கமாட்டோம் என்று வாதாடுகிற இரைச்சலும் இவ்வளவு அவ்வளவல்ல. காசுக்கடையில் சில்லரை மாற்றுகிற சத்தம் கலீர்க்கலீரென ஓயாமல் கேட்க, அநியாய வட்டத்தினிமித்தம் வழக்கும் சண்டையுமுண்டாக, தேவஸ்தலம் நரகக்குழிபோலானது. கூட்டத்தின் நெருக்கத்தில் புறா வாங்கப்போன ஏழைகள் பட்டகஷ்டமும் கொஞ்சமல்ல. மகா பரிசுத்த ஸ்தலத்துக்குச் சமீபத்தில் இவ்வளவு கூக்குரலும் இரைச்சலும் கேட்கும்போது பக்திவிநயம் எப்படி உண்டாகும்?

தூரதேசங்களிலிருந்து வாஞ்சையோடு வந்த ஜனங்கள் பக்தியோடு ஆராதிக்கவும், ஆத்தும இளைப்பாறுதலைக் கண்டடையவும் வழியேது? இவைகளைக் கண்டபோது நமதாண்டவர் ஆவியிலே வைராக்கியங்கொண்டார். அவர் திருக் கண்களில் கோபாக்கினி புறப்பட்டது. அவர் கீழே குனிந்து சிதறிக் கிடந்த கயிறுகளை எடுத்துச் சவுக்காகப் பின்னி, எல்லா ஆடுகளையும் மாடுகளையும் அடித்து வெளியே துரத்த, அவைகள் காலாகோலமாய் ஓட்டம் பிடித்தன. மிருகங்களின் வியாபாரிகள் பயந்து அவைகளின் பின்னாலே ஓடினார்கள். காசுக்காரர்களிடம் அவர் சென்று அவர்கள் அடுக்கடுக்காய் வைத்திருக்கும் நாணயங்கள் கொட்டிப் போகும்படி அவர்கள் பலகைகளைக் கவிழ்த்தார். அடுக்கிவைத்த காசுகள் நாலாபக்கமும் உருண்டோட, அவர்கள் ஆசனங்களைவிட்டுக் குதித்து சிதறுண்டுபோன காசுகளைத் தேடிப் பொறுக்கினார்கள். பின்பு புறா விற்கிறவர்களிடம் போய் அவைகள் ஏழைகளின் காணிக்கையா யிருந்ததாலும், அவைகள் சுத்தமும் கபடற்றதுமான ஜெந்துக்களானதாலும், கூண்டுகளைக் கீழேதள்ளினால் பறவைகள் சேதப்படுமென்றெண்ணி, வியாபாரிகளைப் பார்த்து: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள், **என் பிதாவின் வீட்டை** வியாபார வீடாக்காதேயுங்கள் என்றார். கோபத்திலும் விளங்கின அவர் சாந்தத்தைப் பாருங்கள்.

கிறிஸ்துவின் கோபம் கவனிக்கத்தக்கது. தமது பிதாவின் வீட்டைக் குறித்த பக்திவைராக்கியம் அவரில் மூண்டது நியாயமே. தேவாலயத்தைச் சந்தையாக்கினது அவரால் தாங்கக்கூடவில்லை. அதிகாரிகளின் பொருளாசையும் அநியாயமான வியாபாரமும் அவரால் சகிக்கக்கூடவில்லை. ஆடுமாடுகளின் சத்தமும், வியாபாரிகள் ஜனங்களுடைய இரைச்சலும், தேவனை ஆராதிப்பதற்குப் பெருந்தடையா யிருந்ததை அவர் பொறுக்கமாட்டார். ஏழைகள் ஏமாற்றப் படுவதும் அவர்கள் அடைந்த சஞ்சலமும் அவர் மனதுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. ஜனங்கள் மீதுள்ள **பரிதாபமே** இந்தக் கோபத்துக்குக் காரணம். அவர் கோபப்பட்ட பல சமயங்கள் உண்டு. ஓய்வு நாளில் ஒரு ஏழை மனுஷனைக் குணமாக்குவது குற்றம் என்று நினைத்தவர்களின் மனக்கடினத்தினிமித்தம் கோபப்பட்டார். தம்மை நம்பியிருக்கும் சிறியரில் ஒருவருக்கு இடறல் உண்டாக்குகிறவன் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டிச் சமுத்திர ஆழங்களில் அமிழ்த்துவது நலமாயிருக்குமென்றார். வேதபாரகர் பரிசேயரைக்குறித்து: மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஜயோ என்றார். மத்தேயு இருபத்துமுன்று மகா கண்டிப்பான அதிகாரம். ஆனால் அவர் **தமக்குச்** செய்யப்பட்ட தீமையைக்குறித்தோ ஒரு போதும் கோபப்பட்டவரல்ல. மனுஷர் அவரைப்பிடிக்கலாம்,

இறுகக்கட்டலாம், அவரை அடிக்கலாம், முகத்தில் துப்பலாம், இழிவாய்த் தூஷிக்கலாம், சிலுவையில் அறையலாம். இவைகளைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு அவர்களுக்காக வேண்டுதல் செய்வார். ஆனால் பிதாவின் வீட்டை அசுசிப்படுத்துவதையும், ஆலய அதிகாரிகளின் அக்கிரமத்தால் தமது ஜனம் தேவனை ஆராதிக்கக்கூடாமல் தவிப்பதையும் அவர் சகிக்கவேமாட்டார். ஜனங்கள் மீதுள்ள பரிதாபமும் அன்புமே இவ்வளவு கோபத்துக்குக் காரணம்.

நமது கோபத்துக்கும் அவர் கோபத்துக்கும் வித்தியாசம் இல்லையா? நமது கோபம் நமது பலவீனத்தைக் காட்டுகிறது. அது பொறாமையாலும் பெருமையாலும் உண்டாகிறது. அது மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமையைச் சகிக்கக்கூடாமல் பிறக்கிறது. அது தந்நயமும் பழிவாங்கும் சுபாவமுமுள்ளது. நமது கோபத்தில் பாவமுண்டு. நமது கோபத்தில் தீமையுண்டு. நமது கோபத்தில் கசப்பும் வைராக்கியமும் உண்டு. நமது கோபத்தில் மூர்க்கமும் பைத்தியமுமுண்டு. நமது கோபத்தில் பின்துக்கம் உண்டு. நமது கோபத்தில் நமக்கே சேதமுண்டு. நமது கோபத்தில் நமக்கே வேதனையுண்டு. கோபப்பட விரும்புகிறவர்கள் இயேசுவைப்போல கோபப்படக்கூடுமானால் நல்லது.

ஆண்டவர் இப்படிச்செய்தது பார்த்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் எப்படியிருந்திருக்கும்? ஒரு நிமிஷத்தில் செய்தி எங்கும் பரவினது. கலிலேயாவிலிருந்து வந்த ஒரு மனுஷன் ஆலயத்தில் இவ்வளவு அதிகாரம் செலுத்துவதென்ன? அதிகாரிகள் அவனைச் சும்மாவிடுவார்களா? அவர்கள் அதிகாரம் பெற்று ஏற்பட்ட கடைகளைக் கொட்டிக் கவிழ்ப்பதென்ன? திரளான ஆடுகளையும் மாடுகளையும் அடித்துத் துரத்துவதென்ன? நாணயக்குவியல்கள் நாலாபக்கம் உருண்டோடுவதென்ன? இதுவரை இப்படிச் செய்யத் துணிந்தவன் ஒருவனுமில்லையே. இது என்னமாய் முடியுமோவென்று ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று பிரமிப்போடு பேசிக்கொள்ளுகிறார்கள்.

அநேகருக்கு இந்த ஆலயச் சுத்திகரிப்பின் அவசியம் தோன்றவில்லை. இத்தீய வழக்கத்தை வருஷா வருஷம் கண்டு அது அவர்களுக்குச் சாதாரணமாய்ப் போய்விட்டது. ஏழைகளும் பக்தியுள்ள மற்றவர்களும் இன்று நடந்ததே சரி என்று பேசிக்கொள்ளுகிறார்கள். தூரதேசங்களிலிருந்து வந்த முதியோர்: எங்கள் நாள்களில் இப்படிப்பட்ட அநியாயமான கடைகள் இருந்ததில்லை, இப்போது சொல்லப்போனால் அதிகாரிகள் கோபப்டுவார்கள் என்று தங்களுக்குள்ளே பேசிக்கொள்ளுகிறார்கள். சம்பவித்ததைக் கண்ட ஆலய அதிகாரிகளுக்கோ வந்த கோபம் கொஞ்சமல்ல. பரிசேயர் தங்களுக்கு அவமானம் வந்துவிட்டதாக

நினைத்தார்கள். ஆசாரிமார் தங்கள் ஆதாயத்துக்கு ஆபத்து வந்ததெனக் கலங்கினார்கள். ஆலயப் போர்ச்சேவகர் அவரைப் பிடியுங்கள் என்னும் கட்டளைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவரை எதிர்க்கவோ, பிடிக்கவோ, தண்டிக்கவோ ஒருவனுக்கும் தைரியம் வரவில்லை. ஒருவர் சொல்லுகிறபடி பண்டிகைக்கு வந்த திரள் ஜனங்கள் ஆளுக்கு ஒருபிடி மண்ணைவாரி அவர்மேல் போட்டாலும், அவர் புதைந்து போவார் என்பது நிச்சயம். அப்படியிருந்தும் ஒருவனாகிலும் கிட்ட நெருங்கவில்லை.

அவர்கள் அவரைச் சும்மாவிட்டதற்குக் காரணமென்ன? பாவத்துக்குத் தைரியமில்லை என்பது மெய். தீர்க்கதரிசி ஏழையாயிருந்தபோதிலும் ஆசாரியர்களும் இராஜாக்களும் அவனுக்குமுன் நிற்கமாட்டார்கள். தாவீது நாத்தானுக்கு அடங்கினதேன்? ஆகாப் எலியாவுக்குப் பயந்ததேன்? ஏரோது யோவானுக்கு அஞ்சினதேன்? பாவம் பரிசுத்தத்திற்குமுன் நடுங்கவேண்டும். தீர்க்கதரிசியை ஒருவன் கொன்றாலும் அவனைப்பற்றிய பயத்தினாலேதான் அப்படிச்செய்வான். அவனைப்பற்றிய பயமோ தீர்க்கதரிசி செத்தாலும் நீங்காது. ஜனங்களுடைய பிரயோஜனத்திற்காகவே கடைகள் வைத்திருக்கிறோமென்று அதிகாரிகள் தங்களைத் தேற்றிக் கொண்டிருந்தாலும், தாங்கள் செய்துவந்த அநியாயங்களை அவர்கள் மறந்தவர்கள் அல்ல. அவர்கள் கள்ள நம்பிக்கை இந்தச் சமயத்தில் நிர்மூலமானது. அவர்கள் மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தினது. அதிகாரிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தாங்கள் செய்து வந்தது குற்றமெனத்தெரியும். அவர்கள் பாவம் அவர்களைக் கண்டுபிடித்தது. இந்த வியாபாரம் அதிகாரிகளுக்கு மிகுந்த இலாபத்தைக் கொடுத்தபோதிலும், ஜனங்களில் அநேகருக்கு மிகுந்த வெறுப்பையும் துக்கத்தையும் கொடுத்தது. ஆண்டவர் இப்படிச் செய்தபோது அவர்கள் அவரிடத்தில் அனுதாபமுற்றுச் சந்தோஷித்தார்கள். சந்தர்ப்பம் இப்படி யிருந்தபடியால் அதிகாரிகள் அவரைப் பிடிக்கத் துணியவில்லை.

வேறொரு காரணமும் உண்டு. சமீபத்தில் யோவான் இவரே மேசியாவென்று கூறின சாட்சியை இவர்கள் மறந்தவர்களல்ல. அவர் செய்த கிரியையானது அவர் மேசியாவாயிருப்பாரோவென்கிற கலக்கத்தை உண்டாக்கிற்று. எல்லாவற்றிற்கும் மேலாக அச்சமயத்தில் விளங்கின அவரது திருமுகச்சாயலும் கண்களின் பார்வையும் எல்லாருக்குள்ளும் பயத்தை உண்டாக்கினதால் அவரை எதிர்க்க ஒருவனும் துணியவில்லை. சமயாசமயங்களில் விளங்கின அவர் திருமுகத்தோற்றம் சத்துருக்களைப் பின்வாங்கச் செய்ததுண்டு. நாசரேத்தூரார் கைக்குத் தப்பினதும், ஆலயத்தில் ஒரு சமயம்

பிடிக்கவந்த சேவகர் வந்த வழி திரும்பினதும், கடைசியாக தோட்டத்திற்கு வந்த சேனை பின்னாக விழுந்ததும் அவர் திருமுகத் தோற்றமே. இவர் நாலுபேரைப்போல் பண்டிகைக்கு வந்த ஒரு ஆள் அல்ல. எருசேலம் நகரத்தின் மகாராஜன் இவர்! எருசேலம் தேவாலயத்தின் ஆண்டவர் இவர்? இஸ்ரவேலைத் தேடிவந்த மீட்பர் இவர்! ஆதிமுதல் இஸ்ரவேலை ஆண்டு நடத்தின அதிசயன் இவர்! "இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவர் எனக்கு முன்பாகப்போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற **ஆண்டவரும்**, நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் **தூதனுமானவர்** தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்" என்று நானூறு வருஷங்களுக்கு முன்னே **மல்கியா** முன்னுரைத்த மகிமையின் கர்த்தா இவர்! அவர் தமது ஆலயத்துக்காகக் கவலைப்பட அதிகாரமில்லையென்றால், வேறே எவனுக்கு அதிகாரமுண்டு? அதிகாரிகளுக்கும் ஜனங்களுக்கும் என்ன செய்கிறதென்று தோன்றவில்லை.

போதகர் தமது ஊழிய ஆரம்பத்தில் இப்படிச் செய்துவிட்டாரே, முன்பின் யோசிக்காமல் நடந்து கொண்டாரே, அதிகாரிகளையும் பகைத்துக் கொண்டாரே, தமது வேலையைத் தாமே கெடுத்துப்போட்டாரே என்று சீஷர்கள் நினைத்திருக்கலாம். ஆகிலும், எருசலேமில் அவர் அப்படி ஆரம்பித்ததே சரி. எருசலேமின் அதிகாரிகளை உணர்த்துவதற்குக் கலிலேயாவின் முறைகள் உதவாது. கலிலேயாவிலுள்ள ஜனங்களுக்குத் தம்மை மேசியாவென்று சொல்லாமல் மனத்தாழ்மையுடன் நடந்து கொண்டார். தமது வார்த்தைகள் கிரியைகளைப் பார்த்துத் தம்மை இன்னாரென்று அவர்களே அறிந்துகொள்ளும்படி விரும்பினார். எருசலேமுக்கோ அவர் கையாடின முறைகள் வேறு எருசலேமை அபூர்வமாகத்தான் அவர் சந்தித்தார். அப்படிச் சந்தித்தபோதெல்லாம் அதிகாரிகளுக்குத் தம்மை **திட்டமாய்** வெளிப்படுத்தினார். இவர்களுக்குச் சாதாரணமான முறைகள் தகாது. இந்தக் **கிரியை** பேசுவதுபோல் அவருடைய **போதனை** அவர்களுக்குப் பேசாது. கேட்கக் காதுள்ளவர்களுக்கே சாந்தமான போதனை ஏற்றது. பெருமையும் மாயமும் நிறைந்த எருசலேம் அதிகாரிகளுக்குச் சம்மட்டி அடியே சரி.

ஆகவே, நமதாண்டவர் ஆலயத்தில் செய்த கிரியையும், "என் பிதாவின் வீடு" என்று உரிமை பாராட்டினதும் அவர்கள் எளிதில் மறக்கக்கூடியதல்ல, இவர் மேசியாவாகத்தான் இருப்பாரோ? மேசியாவாயிருந்தால் அடையாளங்கள் காட்டவேணுமே என்று பேசிக் கொண்டார்கள். கோஷ்டம் அமர்ந்தபின்பு அதிகாரிகள் அவரிடத்தில் வந்து ஒரு கேள்விகேட்டார்கள். நீர் ஏன் இப்படிச் செய்தீரென்று கேட்கவில்லை. நீர் செய்தது குற்றம் என்றும்

சொல்லவில்லை. மரியாதையாக வந்து: நீர் இவைகளைச் செய்கிறீரே, இவைகளுக்கு என்ன **அடையாளத்தைக்** காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள். யூதர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள் என்று பவுல் சொன்னது சரி. அடையாளம் கேட்டாலோ ஆண்டவருக்கு வெறுப்பு. பிசாசின் சோதனைகள் மூன்றில் **அடையாளச்** சோதனை ஒன்று. ஆகிலும் ஒரு அடையாளம் சொன்னார். அது அவர்களுக்கு விளங்காததும், அவர்கள் விரும்பாததுமான அடையாளம். இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே நான் இதை எழுப்புவேன் என்றார். இவ்வார்த்தைகள் அவர்களுக்கு விளங்கவில்லை. கேட்டவுடன் அறியக்கூடாதபடி மறைவாகப் பேசுவது ஆண்டவருக்கு வழக்கம். அவர்களுக்கு விளங்கக் கூடாதென்றல்ல. கேட்பவர்கள் அதை ஆழமாய் யோசிக்கும்படி சில சமயங்களில் அப்படிப் பேசுவார். அவர்களோ அவைகளை வார்த்தையின்படி எடுத்துக்கொண்டார்கள்.

இந்தத் தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள் எழுப்பப்போகிறாராம். இது இவரால் கூடுமா? ஏரோது மகாராஜன் கோடி திரவியம் செலவிட்டு, நாளொன்றுக்கு வண்டிகள் ஆயிரம், வேலையாள்கள் பதினாயிரம், வேலை தீர்ந்த கற்களை வாங்கிவைக்கும் ஆசாரிமார் ஆயிரமாகச் சென்ற நாற்பத்தாறு வருஷங்களாக வேலை நடத்தியும், இன்னும் முற்றுப்பெறாத இம்மகத்துவமான ஆலயத்தை நீர் இடித்து மூன்று நாளைக்குள் கட்டி முடிப்பீரோவென்று கேட்டார்கள். இவ்வார்த்தைகளை அவர்கள் ஒருக்காலும் மறந்து போனதில்லை. மூன்று வருஷங்களுக்குப்பின் அவர் விசாரணை செய்யப்பட்ட போது, அவ்வார்த்தைகளை மாற்றி அவரைக் குற்றப்படுத்தினார்கள். "நீங்கள் இவ்வாலயத்தை இடித்துப்போடுங்கள்" என்று அவர் சொல்லியிருக்க, "நான் இடித்துப்போடுவேன்" என்று அவர் சொன்னதாகக் குற்றப்படுத்தினார்கள். அவர் சிலுவையில் தொங்கினபோது: தேவாலயத்தை இடித்து அதை மூன்று நாளைக்குள் கட்டுகிறவனே! என்று பரியாசம் பண்ணினார்கள். அவர் தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் பேசின வார்த்தைகளைக் கடைசிவரை அவர்கள் மறக்கவேயில்லை. சீஷர்களுக்கும் கடைசிவரை இந்த வார்த்தைகள் விளங்கவில்லை. அவர் மரித்து உயிர்த்தபின்பே தமது சரீரமாகிய ஆலயத்தைக்குறித்து இப்படிச் சொன்னாரென்று அவர்கள் அறிந்தார்கள்.

ஆண்டவர் கொடுத்த அடையாளம் யூதர்களுடைய மார்க்காசாரங்களைக் குறிக்குமென்று சிலர் நினைக்கிறார்கள். அவர்களுடைய பலிகளும் சடங்காசாரங்களும், அவர்கள் ஏற்படுத்தின சகல முறைமைகளும் இடிக்கப்பட்டு, அவைகளின் ஸ்தானத்தில் புதிதான மார்க்கம் எழும்புமென்றும், அப்புதிய

ஜீவனுள்ள மார்க்கம் அவருடைய உயிர்த்தெழுதலின்மூலமாய் ஸ்தாபிக்கப்படுமென்றும் அர்த்தப்படுத்துகிறார்கள். இந்தக் கருத்தும் நாம் தள்ளிவிடக்கூடியதல்ல. எருசலேமில் மாத்திரமல்ல எங்கும் பிதாவை உண்மையாய்த் தொழுது கொள்ளும் காலம் வருமென்று இரட்சகர் சொன்னதும், உன்னதமானவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார் என்று ஸ்தேவான் சொன்னதும், நீங்களே ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்று பவுல் பிரசங்கித்ததும், எருசலேம் ஆலயத்தை இடித்துப்போடுகிறது போலவே யூதர்களுக்குத் தோன்றினது. உத்தம மார்க்கத்தின் விசேஷம் ஆலய அலங்காரத்திலும் சிறப்பிலுமல்ல; கடவுளை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிற பக்தரின் உள்ளத்திலிருக்கிறது.

மற்றச் சுவிசேஷகர்கள் முதல் பஸ்காவில் நடந்த ஆலயச் சுத்திகரிப்பைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கடைசிப் பஸ்காவில் நடந்த சுத்திகரிப்பைப் பற்றியோ எழுதியிருக்கிறார்கள். இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களைக் கவனித்தால் இவை இரண்டும் ஒன்றல்லவென விளங்கும். இரண்டாம் சுத்திகரிப்பு நடந்தபோது **மத்தேயு** கூடயிருந்தார். முதலாம் சுத்திகரிப்பில் அவர் இன்னும் சீஷனாகவில்லை. இந்த இரண்டு சுத்திகரிப்பையும் கூடவிருந்து பார்த்தவர் **யோவான்.** மற்றவர்கள் இரண்டாம் சுத்திகரிப்பைப்பற்றி எழுதியிருந்ததால், தமது சுவிசேஷத்தை எழுதின நோக்கத்திற்கிசைய, அவர்கள் எழுதாமல் விட்டதை யோவான் எழுதியிருக்கிறார். முதல் சுத்திகரிப்பைப் பற்றி அவர்கள் எழுதாமற்போனாலும், அச்சமயத்தில் அவர் சொன்ன ''இவ்வாலயத்தை இடித்துப்போடுங்கள் மூன்று நாளைக்குள் இதை எழுப்புவேன்'' என்ற வார்த்தைகளை, அதிகாரிகள் கடைசியில் குற்றமாக எடுத்துப் பேசினார்களென்று எழுதியிருக்கிறார்கள். முதலாம் சுத்திகரிப்பு நடந்ததென்பதற்கு அதுவே ஆதாரம். அவர்கள் அதை எழுதியிருந்ததால் யோவான் தமது சுவிசேஷத்தில் அதிகாரிகள் சாட்டின அந்தக் குற்றத்தைப்பற்றியும் எழுதாமல் விட்டார். யோவான் சுவிசேஷத்தைத் தள்ளிவிட்டால், ஆண்டவர் முதல் வருஷத்தில் செய்த யூதேயாவின் ஊழியத்தைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. முதல் மூன்று சுவிசேஷங்களில் ஜாடையாகச் சொல்லப்பட்டிருக்கிற பல குறிப்புகள் என்னவென்றும், எங்கே நடந்தனவென்றும், எதற்காகவென்றும் நாம் அறிந்துகொள்ளவும் முடியாது.

அதிகாரிகள் கேட்டபோது ஆண்டவர் ஒரு அடையாளத்தை உடனே காட்டாவிட்டாலும், அந்தப் பண்டிகையில்தானே நோயாளிகளைக் குணமாக்கித் தமது மகத்துவ கிரியைகளை

வெளிப்படுத்தினார். இது அவருடைய இரக்கச் செயல்களே. அநேகர் அதைக்கண்டு அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்களென்று சொல்லியிருக்கிறது. ஆண்டவரோ அவர்களை **நம்பி இணங்கவில்லை**. ஏனென்றால், அவர்களுடைய விசுவாசம் அவர் செய்த கிரியைகளைக் கண்ட **ஆச்சரியத்தினால்** உண்டானதேயன்றி, அவர் உபதேசத்தைக் கேட்டு அவரை ஆவிக்குரிய மேசியாவாக ஏற்றுக்கொண்ட விசுவாசமல்ல. அவருடைய ஊழிய நாள்களில் இவர்களைப் போலவே அவர்மேல் விசுவாசம் வைத்த அநேகருண்டு. அந்த விசுவாசம் அவரைத் தங்களுக்குச் சொந்தமாக்கி அவரது இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இருதய பற்றல்ல. ஆகையால் அவர்கள் சீக்கிரத்தில் அவரை விட்டு விலகினார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் **அவரை** நம்பியிருக்கிறதாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். அவர் **நம்மை நம்பியிருக்கிறாரா?** அதுதான் காரியம்.

விசுவாசப் பிரமாண அறிக்கை விசுவாசமாகாது. விசுவாசம் இருதயத்திற்குரியது; அறிக்கை வாய்க்குரியது. தங்கள் ஜீவியத்தை மாற்றக்கூடிய உயிருள்ள விசுவாசம் அநேகரிடத்தில் இல்லை. மெய்யான விசுவாசம் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொள்ளும். கிறிஸ்து சொந்தமாகும்போது நமது ஜீவியம் கட்டாயம் மாறும். ஆண்டவர் அதை அறிவார். அவர் நம்மை நம்பித் தமது ஆசீர்வாதங்களை நமக்கு அருளுவார். நாம் ஜீவனுள்ள தேவன் வசிக்கும் ஆலயமாவோம்.

12
நிக்கொதேமு
Nicodemus

ஆலயத்தில் நடந்த சம்பவத்தை அதிகாரிகள் எளிதில் மறப்பார்களா? பண்டிகைக்கு வந்த ஜனங்கள் மறப்பார்களா? ஒரு ஏழைக் **கலிலேயன்** எருசலேம் பட்டணத்தைக் குலுக்கிவிட்டாரே. பயந்து ஓடிப்போனாரோ? இன்னும் அங்கேதானே இருக்கிறார். அவரைப் பிடிக்கவோ தைரியமில்லை. அதிகாரிகளுக்குள் இதுவே பேச்சு. அன்று இராத்திரி வீட்டுக்கு வீடு இதுவே சம்பாஷணை. ஆயிரக்கணக்கான கொட்டகை களுக்குள் இதுவே தர்க்கம். ஆசாரிமார் மூர்க்கங்கொண்டு: இவனை என்ன செய்கிறது? இன்று இப்படிச் செய்தவன் நாளை என்ன செய்யமாட்டான் என்று பேசுகிறார்கள். பரிசேயரைச் சேர்ந்த பக்தர்கள் சிலர்: இவர் தேவனுடைய தீர்க்கதரிசியா யிருப்பாரோவென்று பேசிக்கொள்ளுகிறார்கள். ஆண்டவர் அங்கே செய்யக்கூடிய ஆயிரம் பிரசங்கங்களைப் பார்க்கிலும் அவர் ஆலயத்தில் நடப்பித்த அந்த ஒரு கிரியை, அதிகாரிகளையும் ஜனங்களையும் அதிகமாய் யோசிக்கச் செய்ததென்பது மெய். சிலுவைக்கு வேண்டிய ஏற்பாடுகளும் அந்த நாளிலேயே ஆரம்பித்ததும் மெய்.

இவ்வாறு அவரைப்பற்றிப் பலவிதமாய் யோசித்தவர்களில் **நிக்கொதேமுவும்** ஒருவர். இவர் யூதருக்குள் அதிகாரியும், இஸ்ரவேலில் போதகனும், சனதரீம் சங்கத்தைச் சேர்ந்தவரும், பரிசேய வகுப்பானுமாயிருந்தார். ஆண்டவர் ஆலயத்தைச் சுத்திகரித்து, அதைத் தமது பிதாவின் வீடென்று உரிமை பாராட்டினதும், அவர் அற்புதங்கள் செய்தபோது அநேகர் அவரை விசுவாசித்ததும், இவரை அதிகமாய் யோசிக்கப்பண்ணிற்று. அதிகாரிகள் எருசலேமிலிருந்து யோவானிடம் அனுப்பின பிரதிநிதிகளில் நிக்கொதேமுவும் ஒருவர் என்பது அநேகருடைய அபிப்பிராயம். அது மெய்தான் என்பது ஆண்டவர் அவரோடு பேசின வார்த்தைகளால்

வெளிப்படுகிறது. நிக்கொதேமு பெத்தாபராவுக்கு வந்த யோவான் கொடுத்த ஸ்நானத்தைக் கண்டார். கிறிஸ்துவைக்குறித்து யோவான் கூறின சாட்சியையும் கேட்டார். ஆகிலும் அவர் மனந்திரும்பி யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை. அவருக்குப் பிரியமிருந்தபோதிலும் அநேக காரியங்கள் அவருக்குத் தடையாயிருந்தன. விசேஷமாய் தன்னோடுகூட அனுப்பப்பட்டவர்களுக்குப் பயந்து அவர்களோடு எருசலேமுக்குத் திரும்பினார். தான் நல்லதென்று நிச்சயித்த காரியத்தைக் கைக்கொள்ளாமற்போனது அவர் மனதை இடைவிடாமல் வாதித்தது. அன்று அவர் தைரியமாய் யோவானுடைய ஸ்நானத்தைப் பெற்று, கிறிஸ்துவைத் தனது மேசியாவாக ஏற்றுக்கொண்டிருந்தால் ஒருவேளை அப்போஸ்தலரில் ஒருவராயிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கக்கூடும். தன்னோடு சேர்ந்த பரிசேயருக்கு ஒரு நிருபத்தையும் அவர் எழுதியிருப்பார். நல்ல சமயத்தை நிக்கொதேமு இழந்தார். அன்றுமுதல் அவர் உள்ளத்தில் ஓயாத போராட்டம் நடந்துகொண்டேயிருந்தது. அது போதாதென்று, ஆண்டவர் ஆலயத்தில் நடப்பித்த கிரியை, யோவான் கிறிஸ்துவைக்குறித்துக் கொடுத்த சாட்சியை முன்னிலும் அதிகமாய் யோசிக்கச் செய்தது. இனித் தாமதிப்பது சரியல்லவென்று நினைத்து ஆண்டவரைத் தரிசிக்கவும், அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவும் விரும்பி, இராத்திரியில் அவரைத் தேடிப்போனார்.

அன்று இராத்திரி ஆண்டவர் எங்கே தங்கியிருந்தார் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. எருசலேமில் யோவான் அப்போஸ்தலனுக்கு வீடிருந்தபடியால் அங்கே தங்கினார் என்பார் சிலர். மற்றவர்கள் அவர் பண்டிகைக்கு வரும்போது எருசலேமில் இராத்தங்காமல் பெத்தானியாவுக்குப் போவது வழக்கமாகையால் அங்கேதான் போயிருக்கவேண்டும் என்கிறார்கள். அவர் எங்கே இராத்தங்கியிருந்தபோதிலும் நிக்கொதேமு அதைத் திட்டமாக விசாரித்து அவரிடத்திற்குப் போனாரென்பதே விசேஷம்.

தம்மை விசுவாசிப்பதாகச் சொன்ன அநேகரை நம்பி இணங்காத ஆண்டவர், நிக்கொதேமு வந்தபோது அவரைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டார். அவர் நமஸ்காரம் செய்து உட்காந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இல்லாவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றார். ரபீ என்று சீஷர்கள் அழைத்தது போலவே இவரும் அழைத்தார். "**நாங்கள்** அறிந்திருக்கிறோம்" என்று அவர் சொன்னதால், நிக்கொதேமுவைப்போல ஆண்டவர் மீது நல்லெண்ணங்கொண்டவர்கள் பலர் இருந்தார்களெனத்

தோன்றுகிறது. ஆண்டவர் ஆலயச் சுத்திகரிப்பைப்பற்றியாவது, தாம் செய்த அற்புதங்களைப்பற்றியாவது, அதிகாரிகள் தம்மைப் பகைக்கிறதைப்பற்றியாவது, தாம் கடவுளிடத்திலிருந்து வந்த போதகர்தாம் என்றாவது பேசாமல், தம்மைத் தேடிவரும் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும் வழக்கத்தின் படியே நிக்கொதேமுடைய நிலைமைக்கேற்றபடி பேசினார். அவருடைய இருதயத்தின் தத்தளிப்பும் இடைவிடாத கவலையும் இன்னதென்று ஆண்டவர் அறிந்திருந்தபடியால், தம்மைப் புகழ்ந்து பேசினநிக்கொதேமுவின் உள்ளத்தை ஊடுறுவிப் பாயும்படி, தமது கூர்மையான அம்பை எய்தார். "**நீ மறுபடியும் பிறக்கவேண்டும்**" என்றார்.

யூதர்களாகிய நீங்கள் தேவராஜ்யத்தை எதிர் பார்க்கிறீர்களென்று எனக்குத் தெரியும். ஆனால் அந்த இராஜ்யத்தின் தன்மை இன்னதென்று கொஞ்சமும் நீங்கள் அறியவில்லை. உலக அதிகாரமும் உலக ஆளுகையுமே தேவராஜ்யமென்று நினைக்கிறீர்கள். தேவ இராஜ்யமோ ஆவிக்குரியது. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவராஜ்யத்தைக் காணவுமாட்டான், அதில் பிரவேசிக்கவு மாட்டான் என்று உனக்கு உண்மையைச் சொல்லுகிறேன் என்றார். **மறுபிறப்பு** என்னும் வார்த்தை யூதர்களுக்குத் தெரியாததல்ல, புறஜாதியானொருவன் யூதமார்க்கத்தில் சேரும்போது ஞானஸ்நானத்தினால் சேர்க்கப்படுவான். அது அவனுக்கு மறு பிறப்பாக எண்ணப்படும். ஆனால் யூதர்களுக்கு மறுபிறப்பு அவசியமா? அவர்கள் கடவுளுக்குச் சொந்தமான ஜனமல்லவா? ஆபிரகாமின் மக்கள் அல்லவா? இராஜ்யத்தின் புத்திரரல்லவா? மேசியா வந்தவுடனே இராஜ்யத்தை ஸ்தாபித்து யூதர்களை அரசாளப்பண்ணுவாரென்பது அவர்கள் நம்பிக்கையாயிருந்தது. ஆகையால் மறுபிறப்பு தங்களுக்கு அவசியமோவென்று நிக்கொதேமு கலங்கி: ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான் என்று கேட்டார்.

அவருடைய அறிவீனத்தைக்குறித்து ஆண்டவர் கோபித்துக்கொள்ளாமல் மறுபிறப்பாவது என்னவென்று விளக்கிக்காட்டச் சித்தங்கொண்டு: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." இங்கே யோவானுடைய ஸ்நானத்தையையும் அவர் கூறின சாட்சியையும் நிக்கொதேமுக்கு ஞாபகப்படுத்துகிறார். யோவான் மனந்திரும்புதலைப் பிரசங்கித்து **ஜலத்தினால்** ஞானஸ்நானத்தை கொடுத்தான். தனக்குப பின் வருகிறவர் **ஆவியினால்** ஞானஸ்நானம் கொடுப்பாரென்றும் சொன்னான். நீ அதை அறிந்திருந்தும் யோவானால்

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை. பாவமன்னிப்புக்கேதுவான மனந்திரும்புதலும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலும் சேர்ந்து மறுபிறப்பாகும். தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு இவை இரண்டும் உனக்கு அவசியம். மாம்சத்தில் பிறப்பது மாம்சமாகவேயிருக்கும்; அது கெட்டுப்போன ஜென்ம சுபாவமுள்ளது. ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்; அது ஆவிக்குரிய சுபாவமுள்ளது. ஜென்ம சுபாவத்தானுக்கும் ஆவிக்குரிய சுபாவத்தானுக்குமுள்ள வித்தியாசம் மிகுதி. ஜென்ம சுபாவம் சாத்தானுக்கும் பாவத்துக்கும் உறைவிடம். எல்லாக் கேடுபாடுகளுக்கும் அதுவே உற்பத்தி ஸ்தானம். ஜென்ம சுபாவத்தில் மரணமும் நரகமும் உண்டு. ஆவிக்குரிய சுபாவமோ தேவாவியினால் உண்டாகிறது. அவன் ஆவிக்குரிய காரியங்களைச் சிந்திக்கிறான். ஆவிக்குரிய காரியங்களை அறிகிறான். அவன் ஆவிக்குரிய சிந்தை ஜீவனும் சமாதானமுமாம். நீ ஆவியினால் பிறவாவிட்டால் தேவராஜ்யத்தைக் காணலாமென்று எண்ணாதே என்றார்.

நிக்கொதேமுக்கு ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போல் அவர் இருதயத்தில் பாய்ந்தன. அவர் ஆச்சரியத்துடன் கிறிஸ்துவின் திருமுகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தார். ஆண்டவர் திரும்பவும் அவரைப் பார்த்து: நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் சொன்னதைக்குறித்து ஆச்சரியப்படுகிறாயோ? காற்று தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது, அதன் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும் இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான். இது பெற்றோர் விருப்பத்தின்படி, அல்லது மற்றோர் விருப்பத்தின்படி ஆகிற காரியமல்ல. மறுபிறப்பின் கிரியை மறைவானது. அது எப்போ நடந்தது, எப்படி நடத்ததென்று உனக்குத் தெரியாது. காற்றினாலுண்டாகும் அசைவையும் சத்தத்தையும் நீ அறியக்கூடியதுபோல, ஆவியினால் உள்ளத்தில் உண்டாகும் மாறுதலை ஜீவியத்தில் காணப்படும் கிரியையால் நீ காணலாம். தேவனால் பிறப்பவர்களே தேவபுத்திரராவார்கள். தேவராஜ்யத்துக்கு சுதந்தரவாளியுமாவார்கள் என்றார்.

இதுவரை **மறுபிறப்பு** இன்னதென்றும், அதன் அவசியமின்னதென்றும், அதற்கு வழியின்னதென்றும் ஆண்டவர் விவரித்துச் சொல்லியும் நிக்கொதேமு அதிகத் திகைப்புள்ளவராக ''இவைகள் எப்படி ஆகும்'' என்று கேட்டார். இந்தப் பிரதானமான முதல் சத்தியத்தை அறியாதிருக்கிற போதகனாகிய நீ, இஸ்ரவேல் சபைக்கு என்ன போதிக்கிறாய் என்று விளங்கவில்லையே. ஐயோ, வேதபாரகரே! பரிசேயரே! நீங்கள்

முற்றிலும் மாம்சத்துக்குரியவர்களாயிருக்க ஆவிக்குரியவைகளை எப்படி அறிவீர்கள்? எப்படிப் போதிப்பீர்கள்? இப்பூமிக்கடுத்த சாதாரணமான காரியங்களைச் சொல்லியும் உங்களுக்கு விளங்கவில்லையே, பரம காரியங்களைச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகரென்று நீ சொன்னது சரியே. அதுமாத்திரமல்ல, அதிலும் மேலான ஒரு காரியத்தை நீ அறியவேண்டும். நான் பரத்திலிருந்து இறங்கி மாம்சத்தில் வெளிப்பட்டபோதிலும், இந்த நேரத்திலும் நான் **பரலோகத்தில் இருக்கிறவர்** என்னும் இரகசியத்தை நீ அறிந்துகொள்ள வேண்டும். ஆலயத்தில் நான் செய்த கிரியையினிமித்தம் நான் உங்களைக் கெடுக்கவந்தவரென்று நீங்கள் நினைக்கவேண்டாம். உலகத்தை இரட்சிக்கும்படிக்கே நான் வந்திருக்கிறேன். உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த இஸ்ரவேலர் விஷம் நீங்கிப் பிழைத்ததுபோல, மனுக்குலம் பிழைக்கும்படி நான் உயர்த்தப்பட்டிருப்பதை நீ காண்பாய், என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே, ஒவ்வொருவனும் நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ளும்படி கடவுள் என்னை அனுப்பினதினால், அவருடைய அதிசய அன்பு விளங்குகிறதல்லவா என்று உள்ளம் உருகத்தக்கவிதமாகப் போதித்தார். தனிச் சம்பாஷணையைப் போல் இருதயத்தில் உணர்வை உண்டாக்கக்கூடியது வேறெதுவுமில்லை. அன்றிரவு என்ன தீர்மானத்தோடு நிக்கொதேமு ஆண்டவரை விட்டுப் போனாரென்று சொல்லப்படாவிட்டாலும், தேவ குமாரனின் திருமுகத் தோற்றமும், கிருபையுள்ள பார்வையும், உருக்கம் நிறைந்த சத்தமும், ஆவியின் போதனையும் அவர் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டது நிச்சயம்.

நிக்கொதேமு கிறிஸ்துவை இராத்திரியில் தேடி வந்ததினாலே அவர் மகா கோழையென்று நாம் நினைப்பதுண்டு. ஒரு மனுஷனைத் திட்டமாய் அறியுமுன் திடீரெனத் தீர்ப்பிடுவது சரியல்ல. இவர் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாததாலும், கிறிஸ்துவைப் பகிரங்கமாய் அறிக்கை செய்யாததாலும் இப்படி நினைக்க நேரிட்டது. ஆகிலும், நிக்கொதேமுடைய நிலைமையில் நம்மை வைத்துப் பார்த்தால் இரகசியம் விளங்கும். நமதாண்டவர் தம்மை யூதருக்கு வெளிப்படுத்தினபோது அவரைக்குறித்துப் பலரும் பலவிதமாகப் பேசினார்கள். பரிசேயர் அவரைப்பற்றி நினைத்ததும், ஆசாரியர் நினைத்ததும், ஜனத்திரள் பேசிக்கொண்டதும் நமக்குத் தெரியும். அவர்கள் தங்கள் இஷ்டம்போல் அவரைத் தீர்த்தார்கள். கல்வியும் ஆராய்ச்சியுமுள்ள மனுஷரும் அவர்களுக்குள் ளிருந்தார்கள். அவர்களில் நிக்கொதேமுவும் ஒருவர். இவர் சிறந்த கல்விமானும், யூத அதிகாரிகளில் ஒருவரும், வேதசாஸ்திரப் போதகனுமாயிருந்தார். சத்தியத்தை அறியும் வாஞ்சையும்,

வேலையில் பொறுமையும், உலக சிந்தையை வெறுப்பதும், பிறர் கூறும் அவதூறைக் கவனியாதிருப்பதும், அமரிக்கையான குணமும் கல்விமான்களுக்குரிய இலட்சணம். இவை யாவும் நிக்கொதேமுக்குண்டு. ஒரு காரியத்தைத் திட்டமாயறியுமுன் தீர்ப்பிடுவது கல்விமானுக்கழகல்ல. ஆகையால், இவர் கிறிஸ்துவை இன்னாரென்று திட்டமாய் அறிந்துகொள்ளும்படி தனித்து இராத்திரியில் அவரிடத்தில் வந்தார்.

ஜனங்களுடைய அபிப்பிராயமும் கல்விமான்களின் அபிப்பிராயமும் ஒன்றல்ல. சாதாரண ஜனங்கள் காரியங்களை எளிதில் நம்புவார்கள். கல்விமான்கள் அவைகளை ஆராய்ந்து பார்ப்பார்கள். கல்விமான்களின் ஆலோசனை ஜனங்களை ஆண்டு நடத்தும். மார்க்கமும் அதுபோலவே. சாதாரண ஜனங்களின் மார்க்கமும் கல்விமான்களின் மார்க்கமும் ஒன்றல்ல. ஜனங்களுடைய அறிவுபோல் அவர்களுடைய மார்க்கம் இருக்கும். கல்விமான்களின் அறிவுபோல் அவர்கள் மார்க்கமிருக்கும். சாதாரண மனுஷன் எந்தக் கூட்டத்திலும் எதையும் பேசுவான். கிடைக்கும் பலனைக் கூச்சமின்றி பெற்றுக்கொள்வான். மற்றவர்கள் என்ன நினைப்பார்களென்று சாதாரண மனுஷன் கவலைப்படான். கல்விமான் ஜனக்கூட்டத்தில் தன் உள்ளத்தை வெளியிட யோசிப்பான். நிக்கொதேமுடைய உள்ளத்தில் கிறிஸ்துவைக்குறித்துப் பல எண்ணங்கள் இருந்தன. ஜனக்கூட்டத்தில் அவைகளைப்பற்றிப் பேச அவருக்குப் பிரியமில்லை. நாலுபேர் அறியத் தன் சந்தேகங்களை வெளியிடுவதும், அவைகளுக்கு உத்தரவைப் பெற்றுக்கொள்வதும் அவருக்குச் சங்கடமாயிருந்தது. ஆகையால் இரவின் அமர்ந்த நேரத்தில் ஆண்டவரைத் தனித்துச் சந்திக்க விரும்பினார். சத்தியத்தை அறியும்படி அவருக்கிருந்த உள்ளான வாஞ்சையே இதற்குக் காரணம்.

மேலும், சாதாரண மனுஷனுக்கும் நிக்கொதேமுவுக்கும் இன்னொரு வித்தியாசமுண்டு. சாதாரண மனுஷன் உத்தரவாதமற்றவன். நிக்கொதேமுவோ இஸ்ரவேலில் போதகனும், ஜனத்தின் அதிகாரியுமாயிருந்தார். அவர் செய்யும் எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்யவேண்டும். சாதாரண மனுஷன் எவ்வழிபோனாலும் அவன் பின்னாலே போவார் இல்லை. ஜனத்தின் அதிகாரி போகும் வழியிலே ஜனங்கள் போவது இயல்பு. ஆகையால், அவன் செய்யும் காரியத்தைக்குறித்து எச்சரிக்கையாகயிருக்கவேண்டும். அவன் நல்வழி காட்டினால் ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும். அவன் தீயவழி நடந்தால் ஜனங்களும் அவனைப் பின்பற்றிக் கெட்டுப்போவார்கள். நிக்கொதேமுக்கு இந்தத் தத்தளிப்பு இருந்தது. கிறிஸ்துவைப் பலரும் பலவிதமாய்ப் பேசின இந்தச் சமயத்தில் முன்பின்

யோசிக்காமல் இயேசுவோடு சேர்ந்து கொண்டால் பின்னுக்கு எப்படியிருக்குமோமென்று பயந்தார். கிறிஸ்துவினிடத்தில் கேட்கவேண்டிய கேள்விகளுண்டு. அவைகளை ஜனக்கூட்டத்தில் கேட்பது தகுதியல்ல. ஆகையால், நிக்கொதேமு கிறிஸ்துவினிடம் இரவில் தனித்துப் போனதே சரி.

ஆண்டவர் அன்றிரவு விதைத்த விதைகள் பலனற்றுப் போகவில்லை. அவ்விதைகள் நிக்கொதேமுவுக்குள் முன்பு முளையையும், பின்பு பயிரையும், பின்பு பயிரில் நிறைந்த தானியத்தையும் கொடுத்தன. அவர் இன்னும் சனதாரீம் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரியாயிருந்தும், அவருடைய அன்பும் அனுதாபமும் கிறிஸ்துவின்பேரிலிருந்தது. ஒருசமயம் பரிசேயரும் பிரதான ஆசாரியரும் ஆண்டவரைப் பிடித்துக்கொண்டு வரும்படி சேவகரை அனுப்ப, அவர்கள் அவரைப் பிடிக்க மனமில்லாமல் திரும்பிவந்து, அவர் பேசுவதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லையென்றார்கள். அதிகாரிகள் கோபங்கொண்டு அவர்களைப் பார்த்து: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா? வேதத்தை அறியாத இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்களென்று திட்டினார்கள். அந்தச் சங்கத்தில் நிக்கொதேமுவும் இருந்தார். கிறிஸ்துவைப் பிடிக்கும்படி அவர்கள் செய்த ஆலோசனை நிக்கொதேமுவுக்குச் சஞ்சலமாயிருந்தது. அந்த அன்பின் சொரூபியை, இஸ்ரவேலின் நம்பிக்கையை, இந்தப் பாவிகள் கொல்லத் தேடுகிறார்களே என்று மனம் பதைத்தார். வெட்டொன்று துண்டிரண்டென்று பேச இவர் இடிமுழக்கத்தின் மகனல்ல. பேசாதிருப்பதும் நியாயமல்ல. என்ன செய்தார்? இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்திப் பிரசங்கித்தாரோ? நான் மறுபடி பிறந்திருக்கிறேன், நீங்களும் மறுபடி பிறக்கத்தக்கதாக இயேசுவை விசுவாசியுங்களென்று சொன்னாரோ? அப்படி அவர் பிரசங்கிக்காததினாலே விசுவாசியில்லையோ? ஒரு வியாபாரி நாளெல்லாம் ஜெபக்கூட்டம் நடத்தினால்தான் கிறிஸ்தவனோ? அவன் தன் வியாபாரத்தை உண்மையாய் நடப்பிப்பதினாலேயல்லவோ கிறிஸ்துவின் சாட்சியாவான். ஒரு நியாயாதிபதி பெரிய பிரசங்கம் செய்வதினால் அல்ல, காரியங்களை நீதியாய் நடத்துவதினாலேயே அவன் கடவுளை மகிமைப்படுத்துவான். அவனவன் தான் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்பில் உத்தமனாக நடந்து கொள்வதே கடவுளுக்குப் பிரியம்.

நிக்கொதேமு தன் ஆண்டவருக்காகச் செய்ததென்ன? தன்னோடு சேர்ந்த அதிகாரிகளைப் பார்த்து: கனவான்களே! சட்டத்தை அனுசரித்துப் பேசுகிறீர்களா? இஷ்டம்போல் பேசுகிறீர்களா? குற்றமற்றவரைக் குற்றப்படுத்த முயலுவது தர்மமா? இது விஷயத்தில் நான் சம்மதிக்கமாட்டேன். நீங்கள் அவரை ஆக்கினைக்குட்படுத்தக்கூடிய குற்றத்தைக் காணா

திருந்தும், சாட்சிகளின் வாக்கினால் அவர் குற்றவாளியென்று ரூபிக்கப்படாதிருந்தும் நீங்கள் ஏற்கனவே அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது எனக்குக் கொஞ்சமும் சம்மத மில்லை. அவர் சொல்வதைக் கேட்டு, அவர் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவரை ஆக்கினைக்குட்படுத்துவது நமது நியாயப்பிரமாணத்துக்கு ஏற்குமாவென்று கேட்டார். இதற்குமேல் தன் ஆண்டவருக்காக நிக்கொதேமு பேசக்கூடியதென்ன? கிறிஸ்துவுக்காக வைராக்கியங்கொண்டு ஒரு பெரிய பிரசங்கத்தை அவர் செய்திருந்தாலுங்கூட, இவ்வளவு உணர்ச்சியை அவர்களுக்கு உண்டாக்கமாட்டாது. நியாயாதிபதியாயிருந்து அவர் பேசின நியாயமே சரி. ஆண்டவர் விதைத்த விதைகள் முளைத்துப் பயிர் காணப்படுகிறது. சீக்கிரத்தில் பலனும் தப்பாமல் உண்டாகும்.

வேறொரு சமயம் நிக்கொதேமுவைக் காண்கிறோம். இப்பொழுது அந்தரங்கமான ஆலோசனைச் சங்கத்தில் அல்ல. யாவரும் காணத்தக்க பகிரங்கமான **கல்வாரி மலை**யண்டை காண்கிறோம். அதிகாரிகள் தங்கள் பகையைத் தீர்த்தார்கள். குற்றமற்ற ஆண்டவரைப் பாதகனைப்போல் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். எல்லாம் முடிந்தது. ஆகிலும் எல்லாம் முடியவில்லை. எஜமானுடைய சரீரம் சிலுவையில் தொங்குகிறது. அந்தத் திருமேனிக்கு என்ன சம்பவிக்குமோ தெரியாது. மற்ற இருவருடைய சரீரங்களோடு எறிந்துவிடப்படுமானால் எவ்வளவு பரிதாபம்! நாய்கள் கழுகுகள் தின்னுமோ, தீக்குழிக்கு இரையாகுமோ யாருக்குத் தெரியும்! அப்படி எறிந்து விடப்பட்டாலும், அது அவர் உயிர்த்தெழுதலை நிறுத்தவு மாட்டாது, ஊழியத்தைக் கெடுக்கவுமாட்டாது. ஆகிலும், பக்தர்களுக்கு அதைப்போல் சஞ்சலமுண்டோ?

அவர் திருச்சரீரத்தை அடக்கஞ்செய்வதார்? யார் தைரியமாய் முன்னுக்கு வருவார்கள்? இது மறைவாய்ச் செய்யக்கூடிய காரியமல்ல எஜமானுக்குச் செய்யவேண்டிய பகிரங்க ஊழியமிது. தேசமே கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் போய்விட்டது. அவரை நேசிப்பவர்களெங்கே? அவருக்கு மரியாதை செய்பவர்களெங்கே ஒருவருமில்லையா? மரணத்திலிருந்து அவரால் உயிர்ப்பிக்கப்பட்டவர்களுண்டு. குஷ்டரோகத்திலிருந்து குணமானவர்களுண்டு. தீராத ரோகங்கள் தீர்ந்தவர்களுண்டு. பேய்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்களுண்டு. குருடராயிருந்து பார்வையடைந்தவர்களுண்டு. **அன்பரிடமிருந்து** நன்மைபெற்றவர்கள் அநேகர். அவர்களில் யாராகிலும் ஐந்தாறுபேர் வரமாட்டார்களா? அருமை எஜமானுடைய சரீரத்தை இறக்கிக் கண்ணீரோடு அடக்கஞ் செய்ய மாட்டார்களா? ஐயோ! ஒருவரையும் காணோம்.

அவரை இடைவிடாமல் பின்சென்ற திரள்கூட்டமெங்கே? இருசமயம் திருப்தியாய்ப் போஷிக்கப்பெற்ற ஆயிரக் கணக்கானவர்கள் எங்கே? ஓசன்னா! ஓசன்னா! கர்த்தரின் நாமத்தில் வருகிற இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னாவென்று ஆர்ப்பரித்த திரள் கூட்டமெங்கே?. ஜனக்கூட்டத்துக்கும் அவருக்கும் யாதொரு விரோதமில்லையே. அவர்களில் நாலுபேர் இல்லையா? அதிகம் செய்யவேண்டியதில்லை. இந்தச் சரீரத்தை எடுத்து அடக்கஞ்செய்தால் போதும். அவர்களுக்கு அது புண்ணியமா யிருக்கும். அவர் சரீரம் முன்போகத் திரள் கூட்டம் பின்னே போகக்கூடுமானால் எவ்வளவு மரியாதையாயிருக்கும்! ஜார்ஜ் முல்லர் சரீரம் கொண்டுபோகப்பட்டபோது பின்சென்ற ஜனக்கூட்டத்தைக் கணக்கிட முடிந்ததா? கடைகள் மூடப்பட்டன. வேலைகள் நிறுத்தப்பட்டன. பட்டணத்தார் பவனியாக அவர் சரீரத்திற்குப் பின் சென்றார்கள். நிற்க இடமில்லை. ஸ்பர்ஜன் ஐயரின் சரீரத்தைச் சுமந்துபோனபோது வீட்டிலிருந்து கல்லறைவரை எவ்வளவு ஜனம்! கண்ணீர் விட்டவர்கள் எத்தனைபேர்!

அருமை இரட்சகன் சரீரத்தை அடக்கம்பண்ண நாதியில்லையே. ஐயோ! ஜனக்கூட்டத்தின் புகழ்ச்சி ஒரு புகழ்ச்சியா? அவர்கள் போற்றுதல் ஓர் போற்றுதலா? பொங்கி அடங்கும் ஜனத்தின் மதிப்பை யார் நம்புவான்? ஒரு உற்சாகம் வந்தால் **ஓசன்னா** என்பார்கள். மறு உற்சாகத்தில் **சிலுவையில்** அறையும் என்பார்கள். ஆண்டவரைப் பின்சென்று போற்றின ஜனங்களுக்கு அவர் சரீரத்தை அடக்கம்பண்ணத் தைரியமில்லை. அவர்கள் காட்டின உற்சாகம் முள்ளில் பற்றின நெருப்பைப்போல் அவிந்துபோனது. நல்லது இவர்களெல்லாரும் போகட்டும். வேறே வீரர் நமக்குண்டு. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று அவர்கள் அறிக்கை செய்தார்கள். அவர்களுக்கு முதன்மையாய் நின்றவர் யாரென்று நமக்குத்தெரியும். உம்மோடுகூட மரிப்பேன் என்று சொன்னவர் அவர். மற்றவர்களும் அப்படியே சொன்னார்கள். "யாரிடத்தில் போவோம் ஆண்டவரே, நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்திலுண்டே" எப்பேர்பட்ட விசுவாசப் பிரமாணம்! இந்த விசுவாசிகள் எங்கே? அவர்களில் முதல்தரமான வீரனெங்கே? அந்த வீரனாவது வந்து அடக்கம் செய்யமாட்டாரா? அவரை இந்தச் சமயத்தில் எங்கே கண்டுபிடிக்கக்கூடும்? எங்கேபோய் மறைந்தாரோ? எப்படியெல்லாம் புலம்புகிறாரோ? எவ்வளவு கண்ணீர் வடிக்கிறாரோ? விசுவாசப்பிரமாணமும் வீரமும் சமயத்துக்கு உதவாது. ஆண்டவர் தமது சீஷரைக் குற்றப் படுத்தவில்லை. அப்படியிருக்க, நாம் அவர்களைக் குற்றப்படுத்த எம்மாத்திரம்!

காலதாமதம் கூடாது. சரீரம் அடக்கஞ் செய்யப்படவேண்டும். இரண்டு புண்ணியவான்கள் தோன்றினார்கள். இதுவரை கவலையோடு பார்த்திருந்த பரலோகத்தில் எவ்வளவு சந்தோஷம்! மாம்சத்தில் வெளிப்பட்ட தேவசுதனை அடக்கஞ்செய்ய ஒருவருமே வராமற்போவார்களோ என்று பரலோகம் கவலையுற்றிருந்தது. ஒருவருமே வரமாட்டார்களென்று பாதாளம் களிகூர்ந்தது. இருவர் ஒருமித்துக்கூடினார்கள். இவர்கள் சாதாரண மனுஷரல்ல. சர்க்கார் அனுப்பின வெட்டியான்களல்ல. இருவரில் ஒருவர் அரிமத்தியாவூர் **யோசேப்பு** என்பவர். இவர் ஐசுவரியவானும் கனம் பொருந்திய ஆலோசனைக்காரனுமாயிருந்தார். இவர் உத்தமனும் நீதிமானுமாயிருந்தார். தேவனுடைய இராஜ்யம் வர ஆவலோடு காத்திருந்தவர். யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைகளுக்கும் சம்மதியாதவர். ஆனால் யூதரைப்பற்றிய பயத்தினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனாயிருந்தார். இவர் எங்கே ஆண்டவரைச் சந்தித்தாரென்று சொல்லப்படவில்லை.

இரட்சகர் ஆலயத்தைச் சுத்திகரித்தபின், சில மாதங்களாக யூதேயாவிலுள்ள பல கிராமங்களில் வேலைசெய்த காலத்தில் இவர் சீஷனாயிருக்கவேண்டும். தன் ஆண்டவரின் திருமேனி கைவிடப்பட்டிருப்பதை அவர் சகிக்கக்கூடவில்லை. யூதரைப்பற்றிய பயம் பறந்துபோனது. கிறிஸ்துவின் அன்பு அவரைமேற்கொண்டது. அன்பை மேற்கொள்ளக்கூடியதெது? இவர் பிலாத்துவிடம் சென்று சரீரத்தைக்கேட்டு வாங்கினார். **நிக்கொதேமு**வும் கூடச்சேர்ந்து கொண்டார். அதிகாரிகளைப் பற்றியும் தமது உத்தியோகத்தைப்பற்றியும் அவர் கவலைப் படவில்லை. சிலுவையில் தொங்குகிறவர் தன் ஆண்டவ ரென்பதாக வெளிப்படுத்தினார். நிக்கொதேமு வெறுங்கையோடு வரவில்லை. தன் ஆண்டவரை மரியாதையாய் அடக்கஞ்செய்ய விரும்பி, வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தார். யோசேப்பு பரிசுத்த சரீரத்துக்குப் புதிதாக வெட்டப்பட்ட பரிசுத்த கல்லறையைக் கொடுத்தார். நிக்கொதேமு கிறிஸ்துவின் சரீரம் பரிமளிக்கத்தக்க தாக சுகந்தவர்க்கங்களால் அதை மூடினார்.

நன்மை பெற்றோர் எங்கே? புகழ்ந்து போற்றினவர்கள் எங்கே? விலாப்புடைக்கத்தின்றவர்கள் எங்கே? வீரர்கள் எங்கே? விசுவாசிகள் எங்கே? நிக்கொதேமுவல்லவா வீரன். இவரல்லவா உத்தமசீஷன். எல்லாம் நமக்கு நலமாயிருக்குங்காலத்தில் நம்மைப் போற்றுவாரும் புகழ்வாரும் அநேகர். ஆனாலும் அந்தப்புகழ்ச்சி எவ்வளவு தூரம் உண்மையென்பது ஆபத்துக்காலத்தில்தான் தெரியும். நாம் உத்தியோகமிழந்து, தரித்திர நிலைமைக்குள்ளாகி, எல்லாராலும் கைவிடப்பட்டு, அநாதையாய்த் தவித்திருக்கும் வேளையில், நம்மைத் தேடி வருகிறவனே உத்தம சிநேகிதன்.

ஆரம்பத்தில் நிக்கொதேமு அதிகம் பேசவில்லையென்பது மெய்தான். ஆனாலும், கிறிஸ்துவைக்கண்டது முதல் அவரை மறந்தவரல்ல. ஆலோசனைச் சங்கத்தில் அதிகாரிகள் இயேசுவைக் கொலைசெய்யும்படி தீர்மானித்தபோது, உடனே எழும்பி ஆண்டவர் பட்சத்தில் பேசி அதிகாரிகளைக் கடிந்து கொண்டார். எஜமான் மரித்த பின்போ எல்லாரும் அறியத்தக்கதாக இவரே என் இரட்சகரென்று வெளிப் படுத்தினார். நிக்கொதேமு பேதுரு யோவான் என்பவர்களால் ஞானஸ்நானம் பெற்றாரென்றும், அதனிமித்தம் சனதரீம் சங்கத்திலிருந்து தள்ளப்பட்டாரென்றும். தாம் ஐசுவரிய முள்ளவராயிருந்தும் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுத் தம்மைத் தரித்திரனாக்கிக் கொண்டாரென்றும், அவர் உத்தம பக்தியினிமித்தம் **செசரியாவுக்குக்** கண்காணியாக்கப்பட்டாரென்று பாரம்பரிய முண்டு.

நீ மறுபடியும் பிறக்கவேண்டுமென்பது நிக்கொதேமுவுக்கு மாத்திரமல்ல, நம் ஒவ்வொருவருடைய காதிலும் தொனிக்கிறது. நாம் கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்திருக்கலாம். கிருபையின் எத்தனங்களை அனுபவிக்கலாம். வேதத்தை அறிந்திருக்கலாம். ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப் போகலாம். ஊழியம் செய்துவரலாம். சன்மார்க்கராய் நடக்கலாம். இவையாவும் நல்லதே. மறுபிறப்பு இன்னதென்று அறிவோமா? ஆ! இது எவ்வளவு முக்கியம்! நிக்கொதேமு இதைக் கேட்டவுடன் ஆச்சரியப்பட்டார். என்னைப்போன்ற மனுஷனுக்கு மறுபிறப்பு அவசியமோ? கல்விமானும், போதகனும், வேதசாஸ்திரியும், நீதிமானுமாகிய எனக்கும் அவசியமோ? மேலும், இந்த முதிர்ந்தவயதிலா நான் மறுபடியும் பிறக்கவேண்டும்? ஆம், நிக்கொதேமுவே, நீ மறுபடியும் பிறக்கவேண்டியது உனக்கு அவசியம். அப்படிப் பிறவாமற்போனால் தேவராஜ்யத்தை நீ காணவுமாட்டாய், அதில் பிரவேசிக்கவுமாட்டாயென்று ஆண்டவர் சொன்னார். நமக்கும் சொல்லுகிறார். அவர் வார்த்தை மாறுவதில்லை. இந்த உபதேசம் நமக்கு ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டாக்காதிருக்கலாம் நாம் அதைக் கேட்டுக்கேட்டு உணர்ச்சியற்றுப்போயிருக்கலாம். ஒன்று நிச்சயம். பரிசுத்தாவியினால் உள்ளான மாறுதலடைந்தவர்களே இராஜ்யத்தின் புத்திரராவார்கள். இதுவே இரண்டாம் பிறப்பு.

மறுபிறப்பின் **அவசியத்தைப்பற்றி** நாம் அறிந்துகொள்வது நல்லது. தேவனுடைய இராஜ்யம் ஆவிக்குரியது. மனுஷனோ மாம்சத்துக்குரியவன். மாம்சபிறப்பு மாம்சமாகவேயிருக்கும். ஆவிக்குரிய இராஜ்யத்தில் பிரவேசிக்க ஆவிக்குரிய பிறப்பு வேண்டும். **மாம்சம்** என்பது சரீரத்தை குறிக்காது. நமது சரீரத்தை ஆளுகிற ஆசை விருப்பம்முதலிய சத்துவங்களைக் குறிக்கும்.

தேவனுடைய இராஜ்யத்தின் தன்மையை நாம் அறியும்போது சுபாவத்தின்படி நாம் அதற்குரியவர்களல்லவென்பதை அறிவோம். தேவ சித்தத்திற்கும் நமது சித்தத்திற்கும் எவ்வளவும் பொருத்தமில்லை. சிருஷ்டிப்பின் இயற்கைகளில் தேவசித்தம் தாராளமாய் வெளிப்படுகிறது. அவைகள் அவருடைய நோக்கத்தைப் பிசகாது நிறைவேற்றுகின்றன. சூரிய சந்திர நட்சத்திரங்களின் ஓட்டத்திலும் ஒழுங்கிலும் தேவமகிமையைக் காணலாம். ஜீவப்பிராணிகளிலும் தேவசித்தம் நிறைவேறுவதைக் காணலாம். தேவன் இன்னாரென்று அவைகள் அறியக் கூடாவிட்டாலும், அவைகள் யாவும் தங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வழிகளில் நடக்கின்றன. இவைகள் யாவற்றிலும் தமது சித்தத்தை நிறைவேற்றி வருகிறவர் தேவனே. குறிக்கப்பட்ட வழியை விட்டு வேறுவிதமாய் நடக்க அவைகளுக்குத் தெரியாது.

இது விஷயத்தில் மனுஷனுக்கும் மற்றச் சிருஷ்டிகளுக்கும் வித்தியாசம் உண்டு. மனுஷன் மாம்சத்துக்குமாத்திரம் உரியவனல்ல. மாம்சத்துக்கு வேண்டிய காரியங்களை யோசிக்க, சம்பாதிக்க, அனுபவிக்கக்கூடிய சத்துவங்கள் இயற்கையாய் அவனுக்குண்டு. மாம்சத்துக்கென்றுமாத்திரம் அவன் பிழைத்தால் மிருகங்களுக்கும் அவனுக்கும் வித்தியாசமிராது. மிருகங்களிலும் **மேலான** மிருகமாயிருப்பான். மிருகமென்று பேசுவது இழிவான சொல்லல்ல. அது நமது மாம்ச சம்பந்தத்தைக் காட்டும். மாம்சத்தின்படி நமக்கும் மற்ற மிருகங்களுக்கும் சம்பந்தம் உண்டு. மிருகங்கள் மனுஷனைப்போல் யோசிக்காமற்போனாலும், அவைகளுக்கு யோசனையுண்டு. மனுஷனைப்போல் பேசாமற்போனாலும் அவைகளுக்கும் பேச்சுண்டு. மனுஷனைப்போல் வேலை செய்யாமற்போனாலும் அவைகளுக்கு வேலையுண்டு. ஜீவப்பிராணிகளெல்லாம் ஒரே தத்துவமுடையவையல்ல. சிருஷ்டிகர்த்தா ஒவ்வொரு இனத்தையும் எவ்வித இயற்கையோடு உண்டாக்கினாரோ, அவ்விதமாகவே அவைகள் பிழைத்து நடமாடுகின்றன. தங்கள் இயற்கைக்கு வித்தியாசமாய் வேறு வகையாய் நடக்க அவைகளுக்குத் தெரியாது.

மற்ற மிருகங்களைப்போலவே மனுஷனுக்கும் இயற்கையாயுள்ள தத்துவங்களுண்டு. மிருகங்களைப்போல நாமும் புசித்துக் குடிக்கிறோம், நித்திரை செய்து இளைப்பாறுகிறோம், சண்டைபோட்டுக்கொள்ளுகிறோம், துக்க சந்தோஷங்களை அனுபவிக்கிறோம். அதுமாத்திரமல்ல, மிருகங்களுக்கு மேலாக மனுஷன் யோசிக்கவும், கல்வி அறிவில் விருத்தியடையவும், அரிய பெரிய காரியங்களைச் செய்யவும், அதிகமான நன்மைகளை அனுபவிக்கவும் கூடியவனாயிருக்கிறான். மிருகங்களைப் பார்க்கிலும் மனுஷனிடத்தில் விசேஷித்த காரியங்கள்

காணப்படுவது மெய்தான். அதினாலே அவன் தேவனுடைய இராஜ்யத்திற்குரியவனாகமாட்டான். மற்ற மிருகங்கள் **இயற்கையில்** தம்மில் விசேஷித்தவைகளாயிருக்கிறதுபோலவே, மனுஷனும் **இயற்கையின்படியே,** அதாவது சுபாவப் பிறப்பின்படியே மிருகங்களைப்பார்க்கிலும் விசேஷித்தவனாயிருக்கிறான். மனுஷனில் நாம் காண்கிற விசேஷித்த கிரியைகளினால் அவன் மிருகங்களுக்கு மேலானவனென்று அறிகிறோம். ஆகிலும், அந்த விசேஷித்த காரியங்கள் அவனுடைய இயற்கையைச் சம்பந்தப்பட்டதேயன்றி மற்றப்படியல்ல. கடவுளை அறியாமலும், அவரை நேசிக்காமலும் இருக்கிற எத்தனையோ மனுஷர், இயற்கையின்படி அறிவில் வல்லவர்களும், ஆச்சரியமான காரியங்களை நடப்பிக்கக்கூடியவர்களுமாயிருக்கிறார்கள். கல்வியும் அறிவும் பக்திமான்களுக்கு மாத்திரமுரிய சுதந்தரமல்ல. தேவனைத் தேடாதவர்களும் அவர் சித்தப்படி பிழைக்காதவர்களும், உலகத்தில் ஞானிகளென்றும் தர்க்க சாஸ்திரிகளென்றும் எண்ணப்படுகிறார்கள். மனுஷன் இயற்கையின்படி எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்யக்கூடும். மனுஷன் மிருகங்களைப் பார்க்கிலும் விசேஷித்தவனாயிருந்தபோதிலும், சுபாவத்தின்படி அவன் மேலான மிருகமே. மாம்சத்தின்படி பிறப்பது மாம்சமாகவேயிருக்கும். இயற்கைப்பிறப்பு எவ்வளவு அறிவும் சாமர்த்தியமும் உள்ளதாயினும் அது **இயற்கையே.** மாம்ச பிறப்பு ஆவிக்குரிய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

இன்னொரு விஷயத்தில் மனுஷன் மிருகங்களுக்கு மேலானவன். தேவனைத் தேடவும் அவரோடு ஐக்கியப்படவுங் கூடிய சிலாக்கியம் அவனுக்குண்டு. இதுவே மனுஷனுடைய மகிமை. கடவுளோடு உறவாடக்கூடிய இந்தச் சிலாக்கியத்தை ஒருவன் இழந்து கெட்டுப்போகவுங்கூடும். அல்லது அவருக்கு இடங்கொடுத்து பிழைக்கவுங்கூடும். மனுஷன் மிருகத்தன்மை உடையவனாயிருந்தபோதிலும், தேவாவியினால் அவன் மறுபடியும் பிறக்கக்கூடும். தானாகவல்ல, தேவனிடத்திலிருந்து வரும் ஆவியின் அனலால் அவன் புதுப்பிறப்படைகிறான். தேவன் அவனைத் தொடாவிட்டால் அவனுக்குள்ளிருக்கும் **சத்துவம்** அவனுக்கு மரணமாகும். ஒரு முட்டை உயிருள்ள குஞ்சாக வரக்கூடிய சத்துவமுள்ளதாயிருந்தும், தாய்க்கோழி முட்டையின்மேல் உட்கார்ந்து அவயங் காக்காமற்போனால், அந்த முட்டை கெட்டு நாறிப்போகும். மறுபிறப்படைகிற பூச்சிகள் உண்டு. இயற்கைப்பிறப்பு அவைகளுக்கு முதற் பிறப்பாகும். பின்பு சூரிய அனலால் வேறு பிறப்படைகிறது. அனலற்றுக் குளிர்ச்சி மூடிக்கொள்ளுமானால் முதற் பிறப்போடு அவைகள் செத்துப்போகும். கம்பளிப்பூச்சி தரையில் ஊரும் புழுவாகப் பிறக்கிறது. வெளிக்காரணங்களை உதவியாகக்கொண்டு மறுபிறப்படைந்து அழகான வண்ணாத்திப் பூச்சியாகிறது.

வண்ணாத்திப்பூச்சியாகிற சத்துவம் அந்தப் புழுவுக்குள்ளிருந்தாலும், புறச்சாதனங்களின் உதவியில்லாமற் போனால் முந்தின நிலைமையிலேயே அது செத்துப்போகும்.

மனுஷராய்ப் பிறந்தவர்கள் எல்லாருக்குள்ளும் மறுபிறப்படையக்கூடிய ஏதுவுண்டு. மனுஷன் தானே தன்னை உயிர்ப்பித்துக்கொள்ள முடியாது. முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான். பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிறவரானார். இயற்கைப் பிறப்புக்கு ஆதாம் தகப்பனானான். மறுபிறப்புக்கு கிறிஸ்து தகப்பனானார். இயற்கைப் பிறப்புள்ளவன் கிறிஸ்துவின் மூலமாய் மேலான பிறப்படையலாம். மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறக்கலாம். மறுபிறப்புக்கேதுவான சாதனம் தனக்குள்ளிருந்தும், தேவாவியானவர் அவனுக்குட் பிரவேசிக்காமற்போனால், அவன் தன் ஜென்மசுபாவத்தோடே மரிப்பான். ஆவிக்குரிய தேவராஜ்யத்திற்கு அவன் தகுதியுள்ளவனாகமாட்டான். முன் கவனித்தபடி, ஜென்ம சுபாவத்திலிருப்பவன் தேவாவியின் உதவியின்றி அரிய பெரிய காரியங்களைச் செய்யக்கூடும். கல்வியிற் சிறந்து உயர்ந்த உத்தியோகத்திலிருக்கக்கூடும். அவன் சாதுரியத்தையும் வாக்குவல்லமையைக் குறித்தும் உலகம் அவனைப் போற்றவுங் கூடும். அவன் எவ்வளவு வல்லவனாயிருந்தபோதிலும் மறுபிறப்பைத் தானே தன்னில் உண்டாக்கிக்கொள்ள அவனால் ஆகாது. கடவுள் பிள்ளையாக வேண்டுமென்கிற விருப்பம் அவனுக்கிருக்கலாம். அவ்வாறு பிறக்கச் செய்கிறவர் கர்த்தரே.

மனுஷன் தேவாவியினால் மறுபிறப்படையும்போது, தன் மனுஷ சுபாவத்தை இழந்துபோகாமல், திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகிறான். திவ்ய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வதே மறுபிறப்பு. மிருகங்களும் ஜீவப்பிராணிகளும் தேவன் தங்களுக்கருளின இயற்கைப்பிரமாணங்களுக்கேற்றபடி பிழைக்கின்றன. மனுஷன் சுபாவத்தின்படி மிருகங்களைப் போன்றவன். ஆனால் அவைகளைப் பார்க்கிலும் புத்தியிலும், அறிவிலும், கிரியைகளிலும் மனுஷன் விசேஷத்தவன். அவன் எவ்வளவு விசேஷித்தவனாயிருந்தாலும், இந்த விசேஷம் யாவும் அவன் ஜென்ப சுபாவத்துக்குரியதேயன்றி, ஆவிக்குரிய கனிகளல்ல. ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் கடவுளை நேசிக்கவும், அவருக்குத் தன்னை ஒப்புவிக்கவும், அவர் சித்தப்படி பிழைத்து, அவரை மகிமைப்படுத்தவுங்கூடிய சிலாக்கிய முடையவனாயிருக்கிறான். மிருகங்களுக்கில்லாத இந்த மேலான ஜீவியம் மறுபிறப்பினால் அவனுக்குக் கிடைக்கிறது. மறுபிறப்பு தேவாவியினால் உண்டாகிறது. ஒருவன் மறுபடி பிறக்கும்போது தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறான். இயற்கையாய் அவனிலுள்ள அறிவும், சாமர்த்தியமும், வரங்களும்

தேவனுக்குப் பிரதிஷ்டையாகின்றன. அவன் தேவ சித்தப்படி பிழைத்து அவரை மகிமைப்படுத்துகிறான். மாம்சத்தின்படி பிழைக்கிறவன் தன்னிஷ்டப்படியே நடந்து தனக்கே பேர்ப் பிரஸ்தாபத்தை நாடுகின்றான். அவன் கிறிஸ்துவைத் தனக்கு இராஜாவாக்குகிறதுமில்லை, அவருடைய இராஜ்யத்திற்கென்று பிழைக்கிறதுமில்லை.

மாம்ச பிறப்புக்கும் ஆவியின் பிறப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்! ஆவியானவருக்கு இடங்கொடுப்போமாக. அவருக்கு நாம் அதிகாரிகள் அல்ல. அவர் தமக்கு இஷ்டமான இடங்களில் வீசுகிறார். அதற்குத் தகுந்த காரணங்களுண்டு. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேணும். கப்பற்காரர் காற்றை உண்டு பண்ணுகிறதில்லை. காற்றைக் கொண்டுவரவும் அவர்களால் முடியாது. ஆகிலும் காற்றுக்கு இசைவாகப் பாய்விரித்து ஓடுகிறார்கள். நமது இருதயத்தை தேவனுக்கு நேராக உயர்த்தும்போது, வாஞ்சையுள்ள ஆவியானவர் திடீரெனப் பிரவேசிப்பார். சிலுவையிலறையுண்ட இரட்சகரை ஏற்றுக் கொள்ளும்போது ஆவியானவரின் கிரியையைக் காணலாம். அவர் உட்பிரவேசிக்கக் கூடாதபடி தடுத்துக்கொண்டிருக்கிற பாவக் கதவுகளையும் ஜன்னல்களையும் உடைத்தெரியவேண்டும். நாம் ஆவியானவரைக் காண முடியாது; ஆகிலும் அவர் கிரியைகளைக் காணலாம். காற்றை நாம் காண முடியாது; கப்பல்கள் ஓடுவதைக் காணலாம். ஒருவன் தான் பிறந்த இடம், நாளைச் சொல்லக்கூடாமற்போனாலும், தான் பிறந்திருப்பதைப்பற்றி அவன் சந்தேகிக்க வேண்டியதில்லை. அவன் **உயிரோடிருப்பதே** அவன் பிறந்ததற்கு அத்தாட்சி. ஆவிக்குரிய **பிழைப்பு** ஆவிக்குரிய **பிறப்புக்கு** அடையாளம். நீ மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணவுமாட்டாய், அதில் பிரவேசிக்கவுமாட்டாய் என்று நம்மை ஆண்டவர் பயப்படுத்தும்படி சொல்லவில்லை. சத்தியமாகிய கிறிஸ்து சத்தியத்தைச் சொல்லியிருக்கிறார். அதை நம்பி மறுபிறப்பை நாடுகிறவன் பாக்கியவான். கவலையீனமாயிருக்கிறவன் இவ்வுலக ஜீவியத்தை ஒருவிதமாய் நடத்திக்கொண்டாலும், தேவனுடைய ஆவிக்குரிய நித்தியராஜ்யத்திற்கு முற்றிலும் அபாத்திரனாவான்.

13

யூதேயா கலிலேயா

Judaea and Galilee

ஆண்டவர் ஊழியம் செய்த காலம் மூன்று வருஷம். அவர் தமது வேலையை எவ்விதம் ஆரம்பித்து எவ்விதம் முடித்தாரென்பதை நாம் அறிந்து கொள்வது நல்லது. இஸ்ரவேலரை தேவன் தமக்கென்று தெரிந்துகொண்டு அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்தார். அவர்களுக்கு நல்ல தேசத்தைச் சொந்தமாகக் கொடுத்திருந்தார். அவர்களுக்குப் பிரமாணங்களை ஏற்படுத்தினார். எருசலேமில் மகா சிறந்த ஆலயத்தையும் தந்தார். அங்கே தமது மகிமையைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தினார். அவ்வாலயம் சகல ஜாதிகளுக்கும் ஜெபவீடாகயிருக்கவேண்டியது. யூதர்கள் தமக்குப் பரிசுத்த ஜாதியும் இராஜரீகமான ஆசாரியக்கூட்டமுமாக இருக்கும்படி விரும்பினார். காலம் நிறைவேறினபோது தமது **குமாரனை** அவர்களிடத்தில் அனுப்பினார். வேறு எந்த ஜாதிக்கும் அவர் இப்படிச் செய்ததில்லை.

இவர்கள் மேசியாவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்த காலத்தில் அவர் வெளிப்பட்டார். யோவானுடைய ஆயத்த ஊழியம் அநேகருக்குள் முன்னிலும் அதிகமான எதிர்பார்க்குதலை உண்டாக்கிற்று. **மேசியா** வந்தால் அவரை அறிந்துகொள்ளுவதெப்படி? எல்லாரும் காணக்கூடிய மகிமையோடு வருவாரோ? அல்லது சாதாரணமான மனுஷனைப்போல் வருவாரோ? இச்சமயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயம் பலவிதமாயிருந்தது. பரிசேயரும் மிகுதியான ஜனங்களும் மேசியா வல்லமையோடு வந்து, ரோமரை ஜெயித்து, எருசலேமில் அரசாளுவார் என்று எதிர்பார்த்தார்கள். தங்கள் நோக்கத்துக்கிசைந்த மேசியாவை எதிர்நோக்கினார்களேயல்லாமல், தீர்க்கதரிசிகள் காண்பித்த மேசியாவை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. கிறிஸ்து அவர்களோடு சேர்ந்து அவர்கள் இஷ்டம்போல் நடந்திருப்பாரானால் அவரை மேன்மையாய்க் கொண்டாடியிருப்பார்கள். தேசத்தின் அடிமைத்தனமே

அவர்களுக்குப் பாரமாயிருந்தது; பாவத்தின் அடிமைத் தனத்தையோ அவர்கள் உணரவில்லை. ஆகையால், பாவிகளின் இரட்சகரான கிறிஸ்துவை அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமையில் இல்லை. அதினால், ஆண்டவர் தம்மை மேசியாவென்று ஆரம்பத்தில் அறிக்கையிட ஏதுவில்லை.

யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி, ஆதிமுதல் கடவுளால் ஆயத்தமாக்கப்பட்டுவந்த ஜாதி. ஆபிரகாம் தொடங்கி சகல நாட்களிலும் இந்த ஒரே நோக்கத்தோடு அவர்களைப் பக்குவப்படுத்திவந்தார். அவர்கள் ஆசரித்துவந்த பலிகளும் சகல முறைமைகளும் கிறிஸ்துவுக்கு முன்னடையாளங்களாயிருந்தன. ஜாடையாக மாத்திரமல்ல, நேராகவும் திட்டமாகவும் கிறிஸ்துவைக்குறித்துத் தமது தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் போதித்து வந்தார். கிறிஸ்து வரும்போது அவரை அவர்கள் தடையின்றி ஏற்றுக்கொள்ளவேண்டியதே நியாயம். அதுவே தேவசித்தம். அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்பதும் தேவனுக்குத் தெரியும். தேவசித்தம் மனுஷ சித்தத்தைப் பலவந்தம் செய்வதில்லை. தேவ சித்தத்திற்கு மனுஷ சித்தம் இணங்கும் போது ஆசீர்வாதம் உண்டாகும். எதிர்க்கும்போது சாபமாகும். இவர்கள் தேவ சித்தத்தின்படியே பிழைத்திருந்தால் தேவ சித்தத்திற்கு இணங்கியிருப்பார்கள். அவர்கள் மாம்சத்துக் குரியவர்களாய்ப் போனதால் தேவசித்தப்படி வந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்கள் மேசியாவைத் தாங்களே கொல்லப்போகிறவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர் தமது ஒப்பற்ற ஜீவியத்தாலும், உன்னத உபதேசத்தாலும், அரிய கிரியைகளாலும், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி யிருந்தும், சகலமும் வியர்த்தமாயிற்று. ''அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவர்கள் விஷயத்தில் கவனிக்கவேண்டிய வேறொரு காரியமும் உண்டு. ஆதிமுதல் கடவுள் இவர்களை ஒரு **ஜாதியாக** நடத்தினாரேயன்றித் தனித் தனியாக நடத்தவில்லை. ஆசீர்வாதமானால் **ஜாதியாக** ஆசீர்வாதம். தண்டனையானால் **ஜாதியாகவே** தண்டனை. அவர் ஏற்படுத்தியிருந்த சகல ஏற்பாடுகளும், விதிகளும், கொள்கைகளும் அவர்களை ஒரே ஜாதியாக இணைக்கும் கட்டாகயிருந்தன. மற்ற ஜாதிகளோடு அவர்கள் கலந்து போகாதபடி ஜாதிக்கட்டுப்பாட்டுக்கு இவைகள் அனுகூலமாகயிருந்தன. ஒரே நகரம், ஒரே இராஜ குடும்பம், ஒரே ஆலயம், ஒரே பிரதான ஆசாரியன், ஒரே பலிபீடம், ஒரே சங்கம். ஜனங்களுடைய கண்கள் அதிகாரிகளான சங்கத் தலைவர்களை நோக்கியிருந்தன. அதிகாரிகள் மேசியாவை ஏற்றுக்கொண்டால் யூதஜாதி ஏற்றுக்கொண்டதுபோலாகும். அதிகாரிகள் அவரைப்

புறக்கணித்தால் ஜாதியனைத்தும் அவரைப் புறக்கணித்ததாகும். இவ்வாறு ஜனத்தின் ஆசீர்வாதமும் சாபமும் அதிகாரிகளின் கையிலிருந்தன. யூதர்களில் சிலர் அவரை விசுவாசித்து இரட்சிக்கப்படலாம். ஆகிலும் சபை அதிகாரிகள் அவரை ஏற்றுக் கொள்ளாமற்போனால் யூதஜாதி மொத்தமாய் அழிந்து போவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

அதிகாரிகள் தேவபக்தர்களாயிருந்து ஆவிக்குரிய கிறிஸ்துவை எதிர்பார்த்திருந்தால், அவர்களை ஆயத்தம் செய்யும்படி ஒரு முன்தூதன் வரவேண்டியதில்லை. அவர்கள் முற்றிலும் தகுதியற்றவர்களாயிருந்ததினாலேதான் முன்தூதன் தோன்றி மனந்திரும்புதலை அவர்களுக்குப் பிரசங்கிக்க அவசியமாயிற்று. ஜனங்களே! நித்திரையை விட்டெழும்புங்கள். பாவங்களைவிட்டு மனந்திரும்புங்கள். பரலோகராஜ்யம் சமீபம்! மேசியா இதோ வரப்போகிறார் என்று சத்தமிட்டுக் கூறினார். அவர்களோ அவர் சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை. தங்களைக் கர்த்தருடைய ஊழியர்களென்றும், ஆபிரகாமின் மக்களென்றும் பெருமைபாராட்டிக்கொண்டிருந்தார்களேயன்றி, தேவ பார்வையில் தாங்கள் எவ்வளவாகக் கெட்டுப்போனோம் என்பதை அவர்கள் சற்றும் உணரவேயில்லை.

ஐயோ! கடவுள் கொடுத்த அருமையான வாக்குகள் எங்கே? யூதஜாதியின் மேன்மையும் சுயாதீனமும் எங்கே? தாவீதுக்கு ஆண்டவர் அருளின உடன்படிக்கை எங்கே? இராஜகுடும்பத்தின் சிறப்பெங்கே? ஆலயத்தில் வெளிப்பட்ட தேவ மகிமை எங்கே? தேவசித்தத்தை அறிவிக்கும் தீர்க்கதரிசிகள் எங்கே? ஜெயம் கொடுக்கும் உடன்படிக்கைப் பெட்டி எங்கே? தேவனுடைய ஜனம் பாவத்தால் சீர்கெட்டுப்போனதே. பிரதான ஆசாரியனை புறஜாதியான் நியமித்தான். ஆசாரியர்கூட்டம் அகந்தைக்காரர் கூட்டமாயிற்று. சடங்காசாரங்களும் செத்த கிரியைகளும் மிகுதியாய்ப் பெருகின. பொருளாசையும் உலகதிகாரமும் நாளுக்குநாள் வளர்ந்தன. அநேகர் ஆசாரங்களைத் தாங்கக்கூடாமல் தவித்தார்கள். மற்றவர்கள் அவைகளை வெறுத்து வனவாசிகளானார்கள். சபை அதிகாரிகள் தங்கள் சுயநீதியில் திருப்தியாயிருந்தார்கள். சாதாரண ஜனங்கள அவர்களை நம்பி வஞ்சிக்கப்பட்டார்கள். புறம்பே எல்லாம் அலங்காரமாகத் தோன்றின. உள்ளான நிலைமையோ கல்லறைக்குழிபோலிருந்தது. அப்படியிருந்தும், தங்கள் கேடான நிலைமையை உணராமல், எங்களுக்கு ஒரு குறைவுமில்லை என்றிருந்ததே இன்னும் மோசமாயிற்று.

யோவான் இதை அறிந்து மகா வைராக்கியத்தோடே அவர்கள் மனந்திரும்ப வேண்டுமெனக் கண்டிப்பாய்ப்

பிரசங்கித்தார். மனந்திரும்பாமற்போனால் மேசியாவின் வருகை அவர்களுக்கு ஆக்கினையாயிருக்குமென்றும் அறிவித்தார். அநேகர் அவரிடத்தில்வந்து ஸ்நானம்பெற்றார்கள். கிறிஸ்துவைக் குறித்து அவர் கொடுத்தசாட்சியையும் கேட்டார்கள். ஆகிலும் எவ்வளவுதூரம் அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்களென்று சொல்லமுடியாது. ஜனத்தின் அதிகாரிகள் யோவானை கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. வேதபாரகரும் பரிசேயரும் அவரை வேடிக்கைபார்க்க வந்தார்கள். எருசலேமிலிருந்து தூதாள்கள் தன்னிடம் வந்தபோது கிறிஸ்துவைக் குறித்துத் தெளிவாய்ச் சாட்சி கொடுத்தார். அதனால் உண்டான நன்மை என்னமோ தெரியாது. இவ்வாறு அதிகாரிகள் ஆண்டவரின் முன்தூதனை அசட்டை செய்து, **தேவ ஆலோசனைக்கு** இணங்காமற்போனார்கள்.

யூத அதிகாரிகளின் நிலைமை இப்படியிருக்கையில் **கிறிஸ்து** தமது ஊழியத்தை ஆரம்பித்தார். யோவான் தம்மைக் குறித்துத் திட்டமாய்ச் சாட்சிகொடுத்திருந்ததால், அவர் தாமதமின்றித் தம்மை மேசியாவென்று வெளிப்படுத்தவேண்டியதே நியாயம். ஆண்டவர் அப்படிச் செய்ய ஏதுவில்லை. அவர்கள் கொஞ்சமும் அவரை அறியக்கூடாதிருந்தபடியால், நானே மேசியாவென்று சொல்லுவதில் பிரயோஜனமில்லை என்று கண்டார். தனித்துத் தம்மிடத்தில் வந்து, தம்மை விசுவாசித்தவர் களுக்குத் தம்மை மேசியாவாக வெளிப்படுத்தினார். மற்றவர்கள் தமது ஜீவியம் உபதேசம் கிரியைகளைக் கண்டு, தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளட்டும் என்று விட்டுவிட்டார். அவர் தேவனால் அனுப்பப்பட்டவரோ இல்லையோவென்பதை அவருடைய **வார்த்தைகள்** வெளிப்படுத்தட்டும். தேவாவியின் வல்லமை அவரிலுண்டோ இல்லையோ என்பதை அவருடைய **கிரியைகள்** காண்பிக்கட்டும். தீர்க்கதரிசன வாக்கியங்கள் அவரில் நிறைவேறுகிறதோ இல்லையோவென்பதை வேதபாரகர் **சோதித்து** அறியட்டும். தூர நின்றுகொண்டு அவரைக் குற்றப்படுத்துவதில் பிரயோஜனமில்லை. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன். காண்கிறதற்குக் கண்ணுள்ளவன் காணக்கடவன்.

ஆசாரியரும் லேவியரும், வேதபாரகரும் பரிசேயரும் அவர் திருவாய்மொழிகளைக் கேட்டு, அவர் கிரியைகளைக் கண்டு, பாத நமஸ்காரஞ்செய்து, அவரை எற்றுக்கொள்ளவேண்டியதே நியாயம். ஜீவ ஒளி பிரகாசிக்கிறது; பிரயோஜனம் என்ன? அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருந்ததால் ஒளியிடம் வர அவர்களுக்கு மனதில்லை. வீடு கட்டுகிறவர் களாகிய இவர்கள் அவரை ஏற்றுக்கொண்டால் அல்லவோ ஜனங்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

சடங்காசாரங்களிலும் பாரம்பரியங்களிலும் அமிழ்ந்திருந்த பரிசேயர் தங்களுக்கு இசைவான கிறிஸ்துவை எதிர்பார்த்தார்கள். பொருளாசையும் உலக நேசமும் உள்ள ஆசாரியர் தங்களுக்கு இசைவான கிறிஸ்துவை எதிர்பார்த்தார்கள். அந்நிய அரசாங்கத்தில் வெறுப்படைந்த தேசாபிமானிகள் தங்களுக்கு இசைவான கிறிஸ்துவை எதிர்பார்த்தார்கள். தேவன் அனுப்பின கிறிஸ்து அவர்களிடத்தில் வந்தபோதோ அவரை இன்னாரென்று அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. பஸ்காப்பண்டிகையில் அவர் ஆலயத்தைச் சுத்திகரித்து, தமது அதிகாரத்தை வெளிப்படுத்தினபோது ஆசாரியர் கோபங்கொண்டார்கள். பரிசேயர் ஆரம்பத்தில் அவரை மதித்தபோதிலும் அவருக்குப் பிராண சத்துருவானார்கள். பொதுஜனங்கள் அவரைப் பகைக்காமல் சிலகாலம் பின்சென்றபோதிலும் கடைசியில் எல்லாரும் அவரைவிட்டு விலகினார்கள். இவர் யாரோ? கடவுளால் அனுப்பப்பட்ட போதகரோ? ஒரு தீர்க்கதரிசியோ? மேசியாவுக்கு முன்தூதனோ? என்று பலவிதமாய்ப் பேசிக்கொண்டார்கள். யோவானுடைய சீஷரில் சிலர் அவரை ஏற்றுக்கொண்டது மெய்தான். ஆகிலும், அவர்களும் அவரைச் சரியாய் அறிந்துகொண்டவர்கள் அல்ல. இவ்வாறு, அவருக்குச் சொந்தமான ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆலயச்சுத்திகரிப்பு அதிகாரிகளுக்குள் கோபத்தை உண்டாக்கினபோதிலும், ஆண்டவர் அதினிமித்தம் யூதேயாவைவிட்டு உடனே கலிலேயாவுக்குப் போகவில்லை. அவர்கள் தம்மை அறிந்து விசுவாசிப்பதற்கேதுவான சமயம் இன்னும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பண்டிகையில் இவர் அற்புதங்கள் செய்தபின், யூதேயாவிலேயே சில மாதங்கள் தங்கி ஊழியம் செய்து வந்தார். தம்மை மேசியாவாக அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்களாயிருந்தபடியால், யோவான் செய்த ஊழியத்தையே கிறிஸ்துவும் செய்ய வேண்டியதாயிற்று. ஜனங்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பவேண்டியது அவசியமாயிருந்தது. ஆண்டவர் பிரசங்க வேலையை நடத்தினார். அவருடைய சீஷர்கள் ஸ்நானம் கொடுத்தார்கள். அநேகர் வந்து ஸ்நானம் பெற்றார்கள். அதிகாரிகள் ஸ்நானம் பெற்றார்களோவென்பது சந்தேகம். ஜனங்கள் அவரிடத்தில் போனதைக் கேள்விப்பட்டு இவர்கள் எரிச்சலடைந்தார்கள். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவின் சீஷருக்கும் யோவானுடைய சீஷருக்கும் இவர்கள் விரோதத்தை உண்டாக்கினார்கள். ஆகையால் கர்த்தர் **யூதேயாவை** விட்டுக் **கலிலேயாவுக்குப்** போகும்படி நேரிட்டது. யோவான் அவரை மேசியாவென்று பிரஸ்தாபித்து இப்போது ஒரு வருஷமாகிறது. அவரை ஏற்றுக்கொண்டவர்களோ வெகு சொற்பம்.

கலிலேயாவிலுள்ள கானாவூரில் சில வாரங்கள் தங்கி மறுபடியும் எருசலேமுக்குப் போனார். அந்தப் பண்டிகையில் பெதஸ்தாக் குளத்தண்டை முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்த மனுஷனைக் குணமாக்கினார். அவர் ஓய்வு நாளை மீறினார் என்றும், தேவனுக்குத் தம்மைச் சமமாக்கினதால் தேவ தூஷணம் சொன்னாரென்றும் அவரைக் குற்றப்படுத்தினார்கள். அதிகாரிகள் மூர்க்கங்கொண்டு அவரைக் கொலைசெய்வதே சரியென்று தீர்மானித்தார்கள். ஜனத்தின் அதிகாரிகளிருந்த எருசலேம் பட்டணத்தில் தம்மை மேசியாவாக வெளிப்படுத்த அவர் சித்தங்கொண்டிருந்தும், அவர்கள் அவரைக் கொலை செய்யத் தீர்மானித்ததால், தமது ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு கலிலேயா நாட்டைத் தெரிந்துகொண்டார். யூத அதிகாரிகள் தமது வசனத்துக்குச் செவிகொடுக்க மாட்டார்களென்றும், தமது கிரியைகளைக் கவனிக்க மாட்டார்களென்றும் கண்டுகொண்டார். ஜனங்கள் அதிகாரிகளைக் கவனிப்பவர்களாதலால், அவரை ஏற்றுக்கொள்ளவும் அறிக்கையிடவும் பயந்தார்கள். அநேகர் யூதேயாவில் தமது சீஷரிடம் வந்து ஸ்நானம் பெற்றபோதிலும் அங்கே அவரடைந்த பலன் கொஞ்சமே.

கலிலேயாவுக்குப் போனபின் அவருடைய ஊழியத்தின் போக்கு மாறினது. இருவித நோக்கத்தோடு தமது வேலையை நடத்தினார். ஒன்று, தமக்குச் சீஷரைச் சேர்ப்பது; அதாவது தமது வசனத்துக்குச் செவிகொடுத்து, தமது கிரியைகளைக் கண்டு, தம்மை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களைத் தம்மிடம் சேர்த்துக் கொண்டார். அவர்களுக்கு விசேஷமாய்த் தம்மைப் பற்றிய இரகசியங்களையும், தமது இராஜ்யத்தின் தன்மையையும் விவரித்துக் காண்பித்தார். தம்மை இன்னும் அறியாத யூத ஜனத்திற்கு இவர்களைச் சாட்சிகளாயிருக்கும்படி நியமித்தார். இவர்களுடைய சாட்சிகளைக்கேட்டு யூத அதிகாரிகள் தம்மை விசுவாசிக்க ஏதுவுண்டாகலாம். அவர்கள் விசுவாசிக்கும்போது ஜனங்களெல்லாரும் தம்மை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்பது ஒரு நோக்கம். அது தவறுமானால், அதாவது யோவான் கூறின சாட்சியும், தமது உபதேசமும், கிரியைகளும், தமது சீஷர்கள் கொடுக்கும் சாட்சியும் வியர்த்தமாகுமானால், இந்தச் சீஷர்களைக் கொண்டே தமது திருச்சபையை ஸ்தாபிக்க ஏதுவாகும்.

அவிசுவாசத்தால் சுயகிளைகளாகிய யூத ஜாதி வெட்டப்பட்டுப்போனாலும், காட்டொலிவ மரங்களை ஒட்டவைப்பதற்கு சீஷர்கள் உதவியாயிருப்பார்கள் என்பது இன்னொரு நோக்கம். சீஷர்களைத் தெரிந்துகொள்ளுவது யூத ஜாதியின் இரட்சிப்புக்கு ஏதுவாகலாம். அது தவறினால், புறஜாதிகளும் யூதரில் விசுவாசிப்பவர்களும் இரட்சிக்கப் படுவதற்கேதுவான புதிதான திருச்சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு

ஏதுவாகலாம் என்று கண்டார். ஆண்டவர் மனதிலிருந்த இந்த எண்ணத்தைச் சீஷர்கள் ஆரம்பத்தில் அறிந்தவர்களல்ல. அவர் பரமேறி ஆவியானவரை அனுப்பும்வரை அறிந்தவர்களுமல்ல. அதைப்பற்றி அவர் அவர்களோடு ஆரம்பத்தில் பேசவுமில்லை. அவர்கள் அறியாமலே இந்த நோக்கத்தோடு அவர்களை ஆயத்தப்படுத்தி வந்தார். பரிசேயரின் மாயமான போதனைகளிலிருந்தும், ஆசாரியரின் உலக சிந்தையிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றி, ஜீவபாதையில் அவர்களை நடத்தி வந்தார். தாம் யாரென்றும் தமது கிரியைகள் எப்படிப்பட்டவைகளென்றும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். சீஷர்கள் தம்மை நன்றாய் அறிந்து கொள்ளவேண்டுமென்று வெகுவாய் விரும்பினார்.

இவ்வாறு தமக்குச் சீஷர்களைச் சேர்த்து கலிலேயா நாட்டில் ஊழியம் செய்து வந்த காலத்தில், அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. அவர் எங்கெங்கே போனாலும் ஜனங்கள் அவரை விடாமற் பின்சென்றார்கள். இவர்கள் எல்லாரும் அவரை அறிந்துகொண்டவர்களல்ல. அவருடைய உபதேசம் அநேகரை இழுத்தது. அவருடைய கிரியைகள் இன்னும் அநேகர் அவரைத் தேடும்படி செய்தது. அவருடைய கீர்த்தி எருசலேமுக்கு எட்டினபோது அதிகாரிகளின் கோபம் முன்னிலும் அதிகரித்தது. அவர்கள் வேவுகாரரைக் கலிலேயாவுக்கு அனுப்பி அங்கங்குள்ள பரிசேயரோடு சேர்ந்து, அவரை எதிர்க்கவும் அவர் வேலையைக் கெடுக்கவும் ஏற்பாடு செய்தார்கள். அவருடைய உபதேசங்கள் வேதப்பிரமாணத்திற்கு விரோதமென்றும், அவருடைய கிரியைகள் பிசாசின் கிரியைகளென்றும், ஜனங்களுக்குச்சொல்லி அவர்கள் மனதைக் கெடுத்தார்கள். அநேகர் அவரை மேசியாவென்று நம்பினதால் சீக்கிரத்தில் அவரை அதம்பண்ணத் தீர்மானித்தார்கள். அதிகாரிகள் நோக்கம் இவ்வாறிருந்தால் ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு இடமேது? ஆகையால் யூத ஜாதியின் இரட்சிப்புக்கோ, அழிவுக்கோ, அதிகாரிகளே உத்தரவாதிகள். பன்னிருவரைத் தமக்குமுன் அனுப்பினார். அவர்களுக்குச் செவிகொடுப்பாரைக் காணோம். எருசலேமில் கூடாரப்பண்டிகை வந்தது. அவர் பகிரங்கமாய்ப் போகக்கூடாமல் அந்தரங்கமாய்ப் போனார். ஜனங்களுக்குள் அவரைக் குறித்து முறுமுறுப்பு உண்டாயிற்று. சிலர்: அவரை நல்லமனுஷன் என்று சொன்னார்கள். மற்றவர்கள்: அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொன்னார்கள். நல்ல குறிப்பைக் காணோம். தேவனுடைய இராஜ்யம் யூதஜாதியினின்று நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கும் ஜாதிகளிடத்தில் கொடுக்கப்படப்போகிறதை ஆண்டவர் கண்டார். அதுமுதல், யூத அதிகாரிகளால் தமக்கு நேரிடப்போகிற பாடுகளையும், மரணம் உயிர்த்தெழுதலையும் குறித்து தமது சீஷர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்.

யூத அதிகாரிகளும் ஜனங்களும் தம்மைக்குறித்து இடறலடைந்ததால் தம்மை மேசியாவென்று ஆரம்பத்தில் அவர் சொல்லக்கூடாமற்போயிற்று. ஊழிய நாள்களில் தம்மை **மனுஷகுமாரன்** என்னும் பேராலேயே அழைத்து வந்தார். ஆகிலும், தம்மைக் கொலைசெய்வதற்கு அவர்கள் தீர்மானித்திருப்பதையும், கொலை செய்தே போடுவார்களென்பதையும் அவர் அறிந்தபோது தாமே **மேசியா** வென்பதை மறைக்காமல் பிரத்தியட்சமாய் வெளியிட்டார். அவர்கள் கொலை செய்யப்போகிறது ஒரு போதகரையல்ல, ஒரு தீர்க்கதரிசியையல்ல, ஒரு முன்தூதனையல்ல, **மேசியாவையே** கொலைசெய்கிறோம் என்பது அவர்களுக்குத் திட்டமாய்த் தெரியவேணும் என்று விரும்பினார். இதே நோக்கமாய் எழுபது சீஷரைத் தமக்குமுன் போய்ச் சாட்சி கூறும்படி அனுப்பினார். அதிகாரிகளுக்குமுன் தம்மை **ராஜா**வென்றும், **தேவகுமாரன்** என்றும் சொல்ல அவர் பின்வாங்கவில்லை. அவர்கள் தமது சாட்சியை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாமற்போனாலும், தாம் மேசியாவென்பதை அவர்கள் திட்டமாய் அறிந்துகொள்ள வேண்டுமென்று அப்படி அறிக்கை செய்தார். தமது மரணம் மறைவாகவல்ல, சில கலகக்காரரால் அல்ல, சபையின் அதிகாரிகளாகிய வீடு கட்டுகிறவர்களாலும், அவர்களுடைய ஜனங்களாலும், எல்லாரும் காணத்தக்கதாக நேரிடப்போவதால், எல்லாரும் போற்றத்தக்கதாக இதோ உங்கள் **இராஜன்** என்று எருசலேமுக்குள் பவனி வந்தார். தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று திரள் ஜனங்கள் ஆர்ப்பரிக்க, இராஜா தமது நகரத்தில் பிரவேசித்தார். ஆகையால், அவர்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை.

இவ்வாறு, நமதாண்டவரின் ஊழியத்தில் **மூன்று** பிரிவைக் காண்கிறோம். பஸ்காப் பண்டிகையில் அவர் ஆலயத்தைச் சுத்திகரித்ததிலிருந்து பெதஸ்தாக் குளத்தில் வியாதியாயிருந்த மனுஷனைக் குணமாக்கினதுவரை ஏறக்குறைய **ஒரு வருஷக் காலம்.** இந்தக் காலத்தில் ஆண்டவர் யூதேயாவில் ஊழியம் செய்தார். இவ்வருஷ முடிவில் யோவான் சிறையில் வைக்கப்பட்டார். இதன்பின்பு, அவர் கலிலேயாவுக்குச் சென்று அங்கே சகல கிராமங்களுக்கும் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து நோயாளிகளைக் குணமாக்கினார். கலிலேயாவின் ஊழியம் **ஒன்றரை வருஷம்.** அங்கே அநேகர் அவரைப்பின் சென்றார்கள். ஆகிலும், அவருடைய ஆவிக்குரிய போதனையை ஏற்றுக்கொள்ளக்கூடாமல் அவர்கள் பின்வாங்கிப்போனார்கள். தேசத்தை விடுவிப்பதில் அவர் கவனம் செலுத்தாதலால் மற்றவர்கள் வெறுப்படைந்தார்கள். அவரே மேசியாவென்று அவர்கள் கண்டுகொள்ளவில்லை. கலிலேயாவின் ஊழியமும்

யூதேயாவைப்போலவே வீணாயிற்று. யோவானும் காலமானார் தமது கிரியைகளில் பலத்தவைகளைக் கண்ட கலிலேயாவிலுள்ள பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனதினிமித்தம், அவைகளுக்கு ஐயோ கூறி, அவைகளின் அழிவை முன்னறிவித்து கலிலேயாவை விட்டு நீங்கினார். **பின்பு** ஆறுமாதக்காலம் பலவிடங்களிலும் பிரசங்கித்துக் கடைசியாக எருசலேமுக்கு வந்து, யெகோவாவின் ஜனங்களென்று எண்ணப்பட்ட யூத ஜாதியால், தேவ குமாரனாகிய இவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்.

யோவான் சுவிசேஷத்திற்கும், முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் பெரிய வித்தியாசம் இருப்பானேன் என்று கேட்பவருண்டு. முதல் மூன்று சுவிசேஷங்களே சரித்திரப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கவைகள் என்றும், நாலாம் சுவிசேஷம் யோவானுடைய கட்டுமானம் என்று சொல்வாருமுண்டு. கவனித்து வாசித்தால் யோவான் சுவிசேஷத்தைப்போல் உண்மையான சரித்திரம் எது? ஆள்கள் பேர், சம்பாஷணை, இடம், காலம், மணிநேரம் முதலான காரியங்களை இவ்வளவு திட்டமாக எழுதினவர்கள் யார்? நாலாம் சுவிசேஷம் இல்லாவிட்டால் முதல் மூன்று சுவிசேஷங்களும் விளங்காது, அதைத் தள்ளுகிறவர்கள் அப்படி விளங்காமற்தானே தவிக்கிறார்கள். நாலும் சேர்ந்தே முழுச் சுவிசேஷம். கிறிஸ்துவைப் பூரணமாய் அறிவதற்கு நான்கு சுவிசேஷங்களும் வேண்டும். அவைகளில் வித்தியாசம் உண்டானால், அது அவரவர் எழுதின நோக்கத்தால் உண்டானது.

முதல் மூன்று சுவிசேஷங்களும் **கலிலேயாவின்** ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகின்றன. நாலாம் சுவிசேஷம் **யூதேயாவின்** ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிறது. என்றாலும், முதல் மூன்று சுவிசேஷங்களில் **யூதேயாவைப்பற்றிய** குறிப்புகள் உண்டு. யோவான் சுவிசேஷமில்லாமல் அவைகள் விளங்காது. அதுபோலவே, நாலாம் சுவிசேஷத்தில் **கலிலேயாவைப்பற்றிய** குறிப்புகள் உண்டு. முந்தின சுவிசேஷங்களில்லாமல் அவைகள் விளங்காது. முதல் மூன்று சுவிசேஷங்களும் எழுதப்பெற்று, சபைகளில் வாசிக்கப்பட்ட காலத்தில் ஏதோ குறைவு இருப்பதாகக் கண்டார்கள். கிறிஸ்துவின் **உள்ளான தன்மையை** அவைகளிலிருந்து அறிந்துக்கொள்ளக்கூடவில்லை. இதனால் பல தவறான உபதேசங்கள் புறப்பட்டன. இவர் மனுஷனோ அல்லது மனுஷனுக்கு மேற்பட்டவரோ என்று பலரும் விசாரிக்க நேரிட்டது. அவரது மகத்துவ **கிரியைகளைக்குறித்து** மூன்று சுவிசேஷங்களும் சொன்னபோதிலும், **ஆளாக** அவருடைய **தன்மையைக் குறித்து** விவரம் சொல்லவில்லை. கிறிஸ்துவின் தெய்வீகத்தைச் சிறுவயது முதல் ஏற்றுக்கொண்ட நமக்கு, முதல் மூன்று சுவிசேஷங்களும் இடறலாகத் தோன்றுவதில்லை. ஆனால்,

அவருடைய தெய்வீக தன்மையை அறியாதவர்கள் அவைகளை வாசிக்கும்போது இவர் யாரோ? எப்படிப்பட்டவரோ? என்று கேட்பது நியாயந்தானே.

கிறிஸ்து தேவகுமாரன் என்பதும், அவர் பிறப்பதற்கு முன் இருந்தவர் என்பதும், நமது ஆண்டவர் எருசலேமில் யூத அதிகாரிகளோடு பேசினபோதல்லவா வருகின்றன. ஜனத்தின் அதிகாரிகளுக்கு முதல் முதல் அவர் தம்மை வெளிப்படுத்த விரும்பி, தம்மை இன்னாரென்று திட்டமாகப் பேசியிருக்கிறார். கலிலேயாவின் ஊழியத்தில் சாதாரண ஜனங்களோடு ஆண்டவர் இவ்வாறு பேசவில்லை. ஆகையால் **யூதேயாவின்** ஊழியம் கிறிஸ்துவின் தெய்வீகம் விளங்கிய ஊழியம். யோவான் சுவிசேஷம் யூதேயாவின் ஊழியம். கலிலேயாவின் ஊழியத்துக்கும், யூதேயாவின் ஊழியத்துக்கும் வித்தியாசமுண்டு. ஆகையால், முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் யோவான் சுவிசேஷத்துக்கும் வித்தியாசம் இருக்கவேண்டியது நியாயமே.

யோவான் அப்போஸ்தலன் தமது சுவிசேஷத்தை எழுதுவதற்குமுன் அதிலடங்கிய விசேஷங்களை எபேசு சபைகளில் வாயால் உபதேசித்து வந்தார். கண்காணிகளும் மூப்பரும் அவைகளை அதிக வாஞ்சையோடு கேட்டார்கள். அவர்கள் அவைகளைக் கேட்டபோது, அவர்களுக்குண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல. முதல் மூன்று சுவிசேஷங்களை நன்றாக வாசித்தறிந்து அவர்களுக்கு, இவைகளைக் கேட்டபோது முன்னிருந்த திகைப்பு நீங்கினது. அவைகளை எழுதவேண்டும் என்று அவர்கள் அப்போஸ்தலனை வருந்திக் கேட்டார்கள். அவர் அவர்கள் விருப்பத்துக்கிணங்கி ஆவியானவரின் பூரண உதவியால் தமது சுவிசேஷத்தை எழுதினார். அதை எழுதினவர் இன்னாரென்றும், எப்படிப்பட்ட நிலைமையில் தமது சுவிசேஷத்தை எழுதினார் என்றும் அறிந்தால் அதைக்குறித்து எவரும் சந்தேகப்படமாட்டார்கள்.

பத்மு தீவில் அவர் இருந்தபோது கிறிஸ்துவின் மகிமையைக் கண்டு, மகா அருமையான வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார். அதன்பின் மூன்று நிருபங்களை எழுதினார். அவைகளுக்குப் பின்பு, முதல் நூற்றாண்டின் கடைசியில் தமது சுவிசேஷத்தை எழுதினார். மூன்று சுவிசேஷகர் சொன்னவைகளை நிறுத்தி, அவர்கள் **சொல்லாதவைகளை** எழுதவேண்டுமென்பதே இவர் முக்கிய நோக்கம். யோவான் சுவிசேஷம் இல்லாவிட்டால் நாத்தான்வேல், நிக்கொதேமு, லாசரு, தோமா, சமாரியாவின் ஊழியம் இவைகளைப்பற்றி நமக்கென்ன தெரியும்? யோர்தான் நதிக்கரையில் சீமோன், அந்திரேயா, பேதுரு முதலான முதல் சீஷர்கள் வந்த வரலாறு நமக்கு எப்படித்தெரியும்? மற்றச் சுவிசேஷகர் சீமோனுக்கு பேதுரு

என்கிற பேரை அப்போஸ்தலர் வரிசையில் கொடுத்தபோதிலும், கல் என்னும் அர்த்தமுடைய **பேதுரு** என்கிறபேர் எவ்வாறு, எப்போது வந்ததென்பதைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? "உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே" என்று ஆண்டவர் எருசலேமைக்குறித்துச் சொன்னதை லூக்கா சொன்னபோதிலும், அவ்வாறு யூதர்கள் கல்லெறியும்படி துணிந்த **காரணங்களை** யோவான் அல்லவோ சொல்லுகிறார். "நான் உன்னைத் சேர்த்துக்கொள்ளும்படி எத்தனையோதரம் மனதாயிருந்தேன்; உனக்கோ மனதில்லாமற் போய்விட்டதென" லூக்கா சொன்னாலும், எருசலேமியரை ஆண்டவர் அடிக்கடி தேடிப்போனதையும், அவர்கள் ஏற்றுக்கொள்ளாததையும் யோவான் அல்லலோ சொல்லுகிறார். இந்த நாலு சுவிசேஷங்களையும் நமக்குத் தந்தவர் **ஆவியானவரே.**

மேலும், முன் நாம் கவனித்தபடி, கிறிஸ்துவின் தெய்வீகத்தை வெளிப்படுத்தவேண்டுமென்பது நான்காம் சுவிசேஷத்தின் நோக்கம். அவரது தெய்வீகம் அப்போஸ்தலருக்கு ஒரே நாளில் கிடைத்த அறிவல்ல. அது அவருடைய உபதேசத்தைக்கேட்டு கிரியைகளையும் கண்டு படித்த படிப்பல்ல. தேவன் தமது குமாரனைத் தமது ஆவியின் மூலமாய் **வெளிப்படுத்துவதால்** அறியவேண்டிய சத்தியம். இந்த வெளிப்படுத்தல் எல்லாருக்கும் ஒன்று போல் கிடைப்பதில்லை. யார் யார் அதைப் பெற்றுக்கொள்ளத் தங்கள் ஆவியில் தகுதியாகிறார்களோ, அவர்களுக்கே அந்த பாக்கியம் கிடைக்கும். இவ்வாறு, கிறிஸ்துவின் வெளிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டவர்களில் பரிசுத்த யோவானைப்பார்க்கிலும் சிறந்த பாத்திரம் யார்? அவர் பவுலைப்போல் ஓடியாடி வேலைசெய்யக் கூடியவரல்ல. பேதுருவைப்போல் சங்கத்துக்கு முன் எழுந்து நின்று தர்க்கிக்கக் கூடியவரல்ல யோவான் மகா அமர்ந்த சுபாவமுள்ளவர். ஆழமான தியான சிந்தையுடையவர். ஆவிக்குரியவர். கிறிஸ்துவின்பேரில் எல்லாரைப்பார்க்கிலும் அன்புடையவர். அன்பருக்குத் தம்மை வெளிப்படுத்துவோம் என்று சொன்ன இரட்சகர், தமது அன்பின் சீஷனுக்குத் தம்மைப்பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்தினார்.

இப்பேர்ப்பட்ட அருமையான, ஆழமான, **தெய்வீக** சுவிசேஷத்தை எழுத அவரைப்போல் தகுந்தவர்கள் யார்? அதை வாசிக்கும்போது, கிறிஸ்துவே யோவானுக்குள்ளிருந்து தம்மைப்பற்றித் தாமே எழுதியிருப்பாரோ என்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. எங்கே ஆண்டவர் பேசி முடிக்கிறார், எங்கே அப்போஸ்தலன் பேசத்தொடங்குகிறார் என்று முதலாய்க் கண்டுகொள்ளக் முடியவில்லை. அவர் தமது சுவிசேஷத்தைத் தொடங்கும் விதமும் ஆச்சரியமே. கிறிஸ்துவின்

பிறப்பு வளர்ப்பைக் காணோம். மகிமையடைந்த ஆண்டவரைக் கண்டு, அவர் பாதத்தில் செத்தவனைப்போல் விழுந்த யோவான், **பெத்லகேம்** சரித்திரத்தை ஏன் எழுதுவார்? "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்." இதுவே திறவுகோல். இதற்குமேல் என்னவேணும்? தன் கண்ணால் பார்த்த ஒருமனுஷனை, தான் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த போதகரை, கடவுள் என்று சொல்ல வேண்டுமானால், அது பொய்யாயிருக்கவேணும் அல்லது மெய்யாயிருக்கவேணும், அது சத்தியமாயிருக்கவேணும் அல்லது பைத்தியமாயிருக்கவேணும். இரண்டில் ஒன்றே. யோவான் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதால் நாம் எல்லாரும் யோவானைப்போல் பைத்தியகாரர் ஆகக்கூடுமானால் எவ்வளவோ பாக்கியம்! செம்படவன் யோவான் எழுதின சுவிசேஷத்தைக் கற்றுக்கொள்ள உலகத்தில் வேதசாஸ்திரப் பாடசாலைகள் எத்தனை! அதைக் கற்றுக்கொடுக்கும்படி இருபது நூற்றாண்டுகளாகத் தலைமுறை தலைமுறை தோறும் ஏற்பட்ட கல்விமான்களும் ஞானிகளுமான வேதசாஸ்திரிகள் எத்தனை! அதன்பேரில் எழுதப்பெற்ற வியாக்கியானக் குவியல்கள் எத்தனை! செலவான திரவியங்கள் எவ்வளவு! இன்னும் படித்துத் தீரவில்லை என்பது நிச்சயம். கிறிஸ்து யார் என்பது முதல் மூன்று சுவிசேஷங்களால் உண்டாகிற கேள்வி. அவர் **மாம்சத்தில் வந்த கடவுள்** என்பது நாலாம் சுவிசேஷம் அதற்குக் கொடுக்கிற உத்தரவு.

முதல் மூன்று சுவிசேஷகரும் **யூதேயாவின் ஊழியத்தை** விட்டுவிட்டார்கள். அவர் **கலிலேயாவில்** செய்த ஊழியம் ஒன்றரை வருஷம். கலிலேயாவை விட்டபின்பு, ஆறுமாதக் காலங்களாகப் பல கிராமங்களுக்கும் சென்று கடைசியாக எருசலேம் நகர் சேர்ந்தார். அப்படியானால், இன்னும் ஒருவருஷ ஊழியம் எங்கே? அதுதான் **யூதேயாவின்** ஊழியம். முதல் மூன்று சுவிசேஷகரும் கிறிஸ்து சோதிக்கப்பட்டபின், உடனே கலிலேயாவிலே ஊழியம் செய்ததாகக் காண்பிக்கிறார்கள். யோவானோ: அது அப்படியல்ல, முதல் வருஷம் அவர் யூதேயாவில் ஊழியம் செய்து, அதிகாரிகள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தபோதுதான், கலிலேயாவுக்குப் போனாரென்று காண்பிக்கிறார். இதைத் திரும்பவும் வரிசையாகப் பார்ப்பது நல்லது.

அவர் ஞானஸ்நானம் பெற்றவுடனே வனாந்தரத்துக்குத் தனித்துப் போனார். சோதனை முடிந்தபின்பு மறுபடியும் யோர்தான் நதிக்கரை வந்தார். இவரே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறவரென்று யோவான் சாட்சி கூறினார். முதல்

ஐந்து சீஷர்கள் அவரைச் சேர்ந்தார்கள். அங்கேயிருந்து கானாவூர்க் கலியாணத்திற்கு தமது சீஷருடன் சென்றார். அங்கே தண்ணீரை திராட்சரசமாக்கி கலியாண வீட்டைச் சிறப்பித்தார். இதுவே அவர் கலிலேயாவில் செய்த முதல் அற்புதம். அவர் இருதயமோ யூதேயாவை நாடினது. இச்சமயத்தில் பஸ்காப் பண்டிகை வந்தது. ஆண்டவர் கப்பர்நகூமுக்குப் போய், அங்கேயிருந்து திரளான பிரயாணிகளுடன் எருசலேமுக்குப் போனார். புதிதாய்ச் சேர்ந்த சீஷர்களும் அவரோடு போனார்கள். அவருக்குச் சீஷராயிருப்பதின் கருத்து இன்னும் அவர்களுக்கு தெரியாது. தேவாலயத்தில் பிரவேசித்து வியாபாரிகளைத் துரத்தி தமது பிதாவின் வீட்டைச் சுத்திகரித்தார். அதிகாரிகள் கோபங்கொண்டபோதிலும் அவருக்குத் தீங்குசெய்ய அவர்களுக்குத் தைரியமில்லை. தம்மை இன்னாரென்று அறிந்துகொள்வார்கள் என்பது அவருடைய நோக்கம். அவர்களோ அவரை அறியவில்லை. அநேக அற்புதங்களைச் செய்தார். அநேகர் அதைக் கண்டு அவரிடத்தில் விசுவாசங்கொண்டார்கள். ஆகிலும், அது இரட்சிப்புக்கேற்ற விசுவாசமல்லாததால் அவர் அவர்களை நம்பி இணங்கவில்லை.

அதிகாரிகளுக்குள் விவேகமுள்ள ஒரு விருத்தாப்பியர் இருந்தார். அவர் ஆண்டவர் செய்த கிரியைகளைக் கண்டு அந்தரங்கமாக இரவில் அவரைப் பார்க்கவந்தார். வந்த மனுஷனுக்கு **மறுபிறப்பின்** அவசரத்தைக்குறித்துப் பிரசங்கித்தார். எருசலேமியர் அவரை ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமையில் இல்லையெனக்கண்டபோது, யூதேயாவில் தங்கி யோவான் செய்த ஆய்த்த வேலையைத் தாமும் செய்யவேண்டியதாயிற்று. ஏனென்றால், அதிகாரிகள் யோவனைக் கண்டு, அவர் போதகத்தைக் கேட்டபோதிலும், அவர்கள் மனந்திரும்பவில்லை. அவர்கள் மனந்திரும்பாதிருக்கும் வரையில், ஆண்டவர் தமது இராஜ்யத்தின் ஊழியத்தை நிறைவேற்ற ஏதுவில்லை. ஆகையால், யோர்தான் நதிக்கரைச் சென்று, ஜனங்களுக்குப் பிரசங்கித்து, தமது சீஷரைக்கொண்டு ஞானஸ்நானம் கொடுத்தார். இந்த ஊழியத்துக்கும் தொல்லை வந்தது. யோவானிடத்தில் போனவர்களைப் பார்க்கிலும் கிறிஸ்துவினிடத்தில் திரளான ஜனங்கள் போனார்கள். இதைக்கண்ட பரிசேயர் இருபட்சத்தாருடைய வேலையையும் ஒப்பிட்டுப் பேசி, விரோதத்தை உண்டாக்கினார்கள். மேலும், ஆண்டவரிடம் சாதாரண ஜனங்கள் வந்தார்களேயன்றி, அவர் எதிர்பார்த்த **அதிகாரிகள்** வரவில்லை. ஆகையால், அவ்வேலையை நிறுத்தி மறுபடியும் கலிலேயாவுக்கு புறப்பட்டார்.

போகும் வழியில் **சமாரியா**வுக்குச் சென்று, **யாக்கோபின்** கிணற்றண்டை பாவியான ஓர் ஏழை ஸ்திரீக்குத் தம்மை

வெளிப்படுத்தினார். அவள் அவரை முதலில் யூதன் என்று பேசினாள். சற்றுபொறுத்து **ஆண்டவரே** என்றாள். பின்பு, நீர் **தீர்க்கதரிசி** என்று காண்கிறேன் என்றாள் முடிவாக அவரே **கிறிஸ்துவெனக்** கண்டடைந்தாள். ஊருக்குள் சென்றாள். இதோ கிறிஸ்து வந்து பாருங்கள் என்று ஊராரை அழைத்தாள். சமாரியரில் அநேகர் அவரைக் கண்டு, அவர் உபதேசம் கேட்டு, அவர் மெய்யாகவே கிறிஸ்துவாகிய **உலக இரட்சகர்** என்று அறிந்து விசுவாசித்தார்கள். அங்கே இரண்டு நாள் தங்கினார். பின்பு அங்கிருந்து புறப்பட்டு கலிலேயாவிலுள்ள **கானாவூருக்குத்** திரும்பவும் போனார். இதுவரை அவரைத் தேடாத **கலிலேயர்** அவர் பண்டிகையில் செய்த அற்புதங்களைக் கண்டிருந்தபடியால் வெகு மரியாதையாக அவரை ஏற்றுக்கொண்டனர். அவர் கலிலேயாவுக்கு வந்துவிட்டார் என்கிற செய்தி **கப்பர்நகூமுக்கு** எட்டினது. அங்கே இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய மகன் மரண அவஸ்தையிலிருந்தான். அந்த மனுஷன் கானாவூருக்கு வந்து, ஆண்டவர் தன்னோடுகூடக் கப்பர்நகூமுக்கு வரவேண்டுமென்று வருந்தி அழைத்தான். அவர் அங்கே போகாமல் கானாவூரிலிருந்து கொண்டே அவன் மகனைக் குணமாக்கினார்.

ஏரோதின் காரியக்காரனான **கூசாவும்** அவன் மனைவி **யோவன்னாளும்** கிறிஸ்துவின் அடியாரானார்கள். இதுவே, அவர் கலிலேயாவில் செய்த **இரண்டாம்** அற்புதம் (யோ. 4:54). இது இரண்டாம் அற்புதமானால் அவருடைய ஏராளமான அற்புதங்கள் இன்னும் அங்கே செய்யப்படவில்லை என்பது தெளிவு. இச்சமயத்தில் அவரோடிருந்த சீஷர்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். தாங்கள் முற்றிலுமாய் அவருக்கென்றே பிழைக்கவேண்டியவர்கள் என்பது இன்னும் அவர்களுக்குத் தெரியாது. நமது இரட்சகரைப்போல் காருண்யமுள்ளவர்கள் யார்? அவரைப்போல் அனுதாப முள்ளவர்கள் யார்? அவர் கட்டாயமாய்ப் பழுக்கவைக்கிறவ ரல்ல. அவர் கறவலாடுகளை மெதுவாய் நடத்தும் கனிவுள்ள மேய்ப்பன். தமது சீஷர்களைப் படிப்படியாக ஆட்கொண்டார். அவர்கள் வீடுகளுக்குப் போனபின்பு அவர் கானாவூரிலேயே தங்கினார். தாயாரும் சகோதரரும் நாசரேத்தை ஏற்கனவே விட்டு கானாவூருக்கு வந்துவிட்டதாகத் தோன்றுகிறது. இச்சமயத்தில் ஆண்டவர் விசேஷித்த பிரசங்கமாவது கிரியைகளாவது நடப்பிக்காமல் அமர்ந்திருந்தார். ஏனென்றால், ஸ்நானக யோவான் இன்னும் சிறையில் வைக்கப்படவில்லை. முன்தூதன் தன் ஆயத்த வேலையை நடத்திக்கொண்டிருக்கும்போது, கிறிஸ்து தமது வேலையில் தாராளமாய்ப் பிரவேசிக்க ஏதுவில்லை. யோவானுடைய ஊழியத்தால் எருசலேம் அதிகாரிகள் சீர்ப்படமாட்டார்களாவென்று ஆண்டவர் எதிர்பார்த்துக்

கொண்டிருந்தார். யூதேயாவைப்பற்றிய நம்பிக்கையை இன்னும் அவர் விட்டுவிடவில்லை. இவ்வாறு சில வாரங்கள் அவர் கானாவூரில் இருந்திருக்கலாம்.

இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது. அப்பொழுது ஆண்டவர் எருசலேமுக்குப் போனார். அப்போஸ்தலன் யோவான் ஆண்டவர் போன **பண்டிகைகளை**ப்பற்றிச் சொல்லியிருக்க முதல் மூன்று சுவிசேஷகரும் ஒன்றுமே சொல்லாமல் விட்டுவிட்டதையும் கவனித்துக்கொள்க. ஆனால் கடைசிப் பஸ்காவைப்பற்றி மாத்திரம் எல்லாருமே எழுதியிருக்கிறார்கள். 'யோவான் பல பண்டிகைகளைக் குறித்து எழுதினபோதிலும், ஒன்றும் தவறாமல் எழுதினார் என்று சொல்லவும் இடமில்லை. பெந்தெகோஸ்தே பண்டிகையைப்பற்றி ஒன்றும் சொல்லப் படவில்லை. எல்லாப் பண்டிகைகளையும் ஒன்றுவிடாமல் எழுதவேண்டுமென்பது யோவானுடைய நோக்கமல்ல. தாம் எழுதின விசேஷங்களோடு சம்பந்தப்பட்ட பண்டிகைகளையே காண்பித்திருக்கிறார்.

ஆண்டவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே, அதாவது அவர் தமது சீஷரைக்கொண்டு யூதேயாவிலே ஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்த மாதங்களிலேயே, மூன்று முக்கியமான பண்டிகைகளுக்கு ஆண்டவர் போனதாகத் தெரியவருகிறது. ஆகிலும் பஸ்காப் பண்டிகையைப்பற்றி மாத்திரம் யோவான் எழுதியிருக்கிறார். ஆகவே, பஸ்காப்பண்டிகையில் ஆலயச் சுத்திகரிப்பு (யோவான். 2:18). திரளான ஜனங்களை அவர் போஷித்த சமயமும் பஸ்காப்பண்டிகைதான் (யோவான். 6:4). தாகமாயிருக்கிறவன் என்னிடத்தில் வரக்கடவன் என்று அவர் அழைத்தது கூடாரப்பண்டிகை (யோவான். 7:2). அவர் தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்தில் உலாவிக்கொண்டிருந்தது தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகை (யோவான். 10:22). அவருடைய போதனை இப்பண்டிகைகளோடு சம்பந்தப்பட்டிருந்ததால் பண்டிகைகளின் பேரை யோவான் சொல்லியிருக்கிறார். மற்றப் பண்டிகைகள் அவசியமில்லாததால் அவைகளை விட்டுவிடுகிறார். யோவான் ஐந்தில் வருகிற பண்டிகைக்குப் பேரில்லை. சிலர் அதை பூரிம் பண்டிகை என்கிறார்கள். அநேகர் இது முந்தின பஸ்காவுக்கு ஒரு வருஷத்துக்குப் பின் வருவதால், இதுவும் பஸ்காப்பண்டிகைதான் என்கிறார்கள்.

ஆண்டவர் இந்தப் பண்டிகைக்குப்போய் பெதஸ்தாக் குளத்தண்டையில் வெகுகாலம் வியாதியாயிருந்த மனுஷனைக் குணமாக்கினார். அது ஓய்வு நாள். அவர் ஓய்வு நாளில் இதைச் செய்தபடியால் யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி கொலைசெய்ய வகை தேடினார்கள். இச்சமயத்தில் அவர் அதிகாரிகளைப்

பார்த்து: "என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன் என்றார்." இவ்வளவு சொன்னதுதான், நீ ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், **தேவனை** உன் சொந்தப் பிதா என்று சொல்லி உன்னை தேவனுக்குச் சமமாக்குகிறாயா என்று அவரை எவ்விதத்திலும் கொலை செய்து போடும்படி அதிகமாய் வகைதேடினார்கள். அவர் சங்கத்தாரைப் பார்த்து: நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். என்னைக்குறித்து நானே சாட்சிகொடுப்பது அவ்வளவு விசேஷமல்ல. நீங்கள் யோவானிடத்தில் ஆள்களை அனுப்பி விசாரித்தீர்கள். அவன் என்னைக்குறித்துச் சத்தியத்தின்படியே சாட்சிகொடுத்தான். நான் செய்து நீங்கள் கண்ட **கிரியைகளே** பிதா என்னை அனுப்பினாரென்று சாட்சி கொடுக்கின்றன. நீங்கள் அனுதினமும் ஆராய்ந்துவருகிற **வேத வாக்கியங்கள்** என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கின்றன. இத்தனை சாட்சிகள் எனக்கிருந்தும், உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லையே, நான் என்ன செய்வேன்? என்னை ஏற்றுக்கொள்ளாதிருப்பதுந் தவிர, என்னைக் கொலை செய்யும்படி துணிந்திருக்கிறீர்களே என்றார்.

இச்சமயத்தில் ஸ்நானகன் சிறையில் வைக்கப்பட்டான் என்று அவர் கேள்விப்பட்டார். யோவானுடைய ஊழியத்தால் எருசலேமியர் மனந்திரும்பாமற்போனபடியாலும், தம்மையும் அசட்டை செய்து கொலை செய்யத் துணிந்ததினாலும், ஆண்டவர் யூதேயாவில் சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவுக்குப் போய், அங்கே தமது ஊழியத்தை ஆரம்பித்தார். யோவான் காவலில் வைக்கப்படும்வரைக்கும், ஆண்டவர் செய்த யூதேயாவின் ஊழியத்தைப் பற்றி முதல் மூன்று சுவிசேஷகரும் எழுதவில்லை. ஆகிலும், யூதேயாவின் ஊழியத்தைப்பற்றிய குறிப்புகளை ஊடே ஊடே காணலாம். எருசலேம் அதிகாரிகள் யோவானையும் புறக்கணிக்க, கிறிஸ்துவையும் கொலை செய்யத் தீர்மானிக்க, அவர் அங்கே தங்கி ஊழியம் செய்யக்கூடாமல் **கலிலேயாவுக்கு** வந்து மகா சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் தமது ஊழியத்தை மும்முரமாக நடத்திவந்தபடியால், முதல் மூன்று சுவிசேஷகரும், யூதேயாவின் ஊழியம் தவறிப்போன தென்று கண்டு, அதை முற்றிலும் விட்டுவிட்டுக் கலிலேயாவின் ஊழியத்திலிருந்து ஆரம்பித்தார்கள். அவர் பண்டிகைகளுக்குப் போனதை இவர்கள் சொல்லாமல் விட்டுவிட்டு காரணமும் அதுதான். அவர் அங்கே போனபோதெல்லாம் அவர்கள் அவரைக் கொல்லும்படி எத்தனித்தார்கள். கடைசியாகக் கொன்றார்கள். ஆகையால் அவர்கள் சுவிசேஷம் யோவான் காவலில் வைக்கப்பட்டதிலிருந்து ஆண்டவர் கலிலேயாவுக்கு வந்து அங்கே நடப்பித்த ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிறது.

அவர் யூதேயாவில் நடப்பித்த முதல் வருஷத்து ஊழியம் முதல் மூன்று சுவிசேஷங்களில் இல்லை. அவ்வூழியம் சுவிசேஷகர் பார்வையில் தோல்வியாகத் தோன்றினபடியாலும், கலிலேயாவின் ஊழியமே மகா சிறப்பாக ஆரம்பித்து நடந்தபடியாலும், முந்தினதை அகற்றிப் பிந்தினதையே தங்கள் சுவிசேஷத்திற்கு ஆரம்பமாகக் கொண்டார்கள்.

ஆண்டவர் முதல் முதல் யூதேயாவைத் தேடிப்போனது நியாயமே. எருசேலம் இராஜாவின் நகரம். அங்கே அவருடைய பிதாவின் வீடாகிய தேவாலயம் இருந்தது. அங்கே ஆசாரியரும், லேவியரும், தேவபாரகரும், பரிசேயருமான ஜனத்தின் அதிகாரிகள் இருந்தார்கள். யூத ஜனங்களுடைய கண்கள் எக்காலத்திலும் எருசலேமையே நோக்கியிருந்தது. யூதேயாவிலுள்ள பெத்லகேமில் கிறிஸ்து பிறந்தார். அந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். எருசேலம் அதிகாரிகளே திராட்சத்தோட்டக்காரர். தேவன் தமது தோட்டத்தை அவர்கள் கையில் ஒப்புவித்திருந்தார். அவர்களே இஸ்ரவேலின் வீட்டைக் கட்டவேண்டியவர்கள். தேவன் தமது குமாரனை முதல் முதல் அவர்களிடத்தில் அனுப்பினதே சரி. தலை சரிப்பட்டால் அவயவங்களும் சரிப்படும். ஆகையால் முன்பு எருசலேமைத் தெரிந்துகொண்டார். எருசலேமியர் தங்களிடத்தில் வெளிப்பட்ட ஒளியை ஏற்றுக்கொள்ளாமற் போனபோது, அவர் கலிலேயாவைத் தெரிந்துகொண்டு அங்கேதங்கி ஊழியம் செய்யவேண்டியதாயிற்று. வேத வாக்கியமும் இவ்வாறு நிறைவேறிற்று. "புறஜாதியாருடைய கலிலேயாவிலே இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக்கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருப்பவர் களுக்கு வெளிச்சம் உதித்தது" *(மத். 4:15)*.

ஆண்டவர் கலிலேயாவுக்கு வந்தபோது தாம் வளர்ந்த நாசரேத்துக்குப் போனார். நாசரேத்தூரார் மூர்க்கவெறிகொண்டு அவரைக் கொல்ல எத்தனித்தார்கள். பின்பு **கப்பர்நகூமைத்** தமது ஊழியத்துக்கு மையமாகத் தெரிந்துகொண்டார். முந்தி அவரோடிருந்த சீஷர்கள் மறுபடியும் அவரிடத்தில் வந்தார்கள். மீதியான ஏழு சீஷர்களையும் சேர்த்துக்கொண்டார். இவர்களோடு அவர் கிராமம் கிராமமாகச் சென்று, சிலநாள்கள் அங்கே தங்கி சுவிசேஷத்தைப்பிரசங்கித்து, நோயாளிகளைக் குணமாக்கினார். அவர் ஓரிடத்தில் அதிக நாள் தங்காமல் வேறு கிராமங்களுக்குப்போனபடியால், அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படியாகவும், நோய்கள் நீங்கிக் குணமாகும்படியாகவும், திரளான ஜனங்கள் அவரைத்தேடி கப்பர்நகூமுக்கோ, மற்ற இடங்களுக்கோ போவார்கள். ஓய்வுநாள்களில் அவர் அவர்கள் ஜெப ஆலயங்களில் பிரசங்கித்து நோய்களை குணமாக்குவார்.

மற்ற நாள்களில் தெருக்களில், வயலோரங்களில், கடற்கரை யருகில், ஜனங்கள் நிற்கக்கூடிய இடங்களிலேபோய்த் தமது ஊழியத்தை நடப்பிப்பார்.

அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. திரளான ஜனங்கள் இடை விடாமல் அவரைப் பின் சென்றார்கள். அநேகர் அவருக்குச் சீஷரானார்கள். எருசலேமியருடைய பகைக்கும் கொலைக்கும் விலகி, மகிழ்ச்சியோடே தமது ஊழியத்தை கலிலேயாவில் நடப்பித்தார். பன்னிருவரையும் விசேஷித்த பிரகாரம் அழைத்து, தம்மோடிருக்கவும் தமது ஊழியத்தின் தன்மையை அவர்கள் கற்றுக்கொள்ளவும் விரும்பினார். ஆனாலும், தங்களை ஆண்டவர் தெரிந்துகொண்ட மேலான நோக்கத்தின் **உத்தரவாதத்தை** சீஷர்கள் இன்னும் அறிந்தவர்களல்ல. செய்யவேண்டிய வேலை மிகுதியாயிருந்த படியால், அநேகர் அவருக்குச் சீஷராயிருக்க நாடினபோதிலும், பன்னிருவரை மாத்திரம் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடு சேர்ந்து பிரசங்கிக்கவும் நோய்களைக் குணமாக்கவும் அவர்களை ஏற்படுத்தினார்.

இவ்வாறு யாதொரு துன்பமும் பகையுமின்றி, சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் அவர் தமது ஊழியத்தை நடப்பித்து வரும்போது, அவருக்கு அதிகக் கீர்த்தியை உண்டாக்கக்கூடிய ஒரு சம்பவம் நடந்தது. கப்பர்நகூமுக்கும் நாயீனூருக்கும் இருபத்தைந்து மைல் தூரம். அவர் நாயீனூருக்கு வந்தபோது மரித்துப்போன ஒரு வாலிபனைப் புதைக்கும்படி பாடையில் கொண்டுபோனார்கள். ஏழை விதவையான அவன் தாய் பாடைக்குப்பின் அங்கலாய்த்து அழுதுகொண்டுபோனாள். ஆண்டவர் பாடையை நிறுத்தி, வாலிபனை எழுப்பி, அவனை அவன் தாயினிடம் ஒப்புவித்தார். இதுவரை அநேக அற்புதங்களைக் கண்டு அதிசயித்த ஜனங்களுக்கு, செத்துப்போன வாலிபன் பிழைத்துத் தாயோடுபேசி, எல்லாரும் பார்க்க அவன் கைவீசி நடந்துபோனது மகா பிரமிப்பை உண்டாக்கினது. இதைக் கண்டவர்கள் கொஞ்சப்பேரல்ல. கப்பர்நகூமிலிருந்து ''அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனே கூடப்போனார்கள்.'' நாயீன் ஊராரில் வெகுஜனங்கள் அந்தப் பாடையோடுகூட நடந்தார்கள். இத்தனை திரளான வெகுஜனங்கள் அந்தப் பாடையோடுகூட நடந்தார்கள். இத்தனை திரளான ஜனங்கள் அவ்வதிசயத்தைக் கண்டபோது: இவர் மகா பெரிய தீர்க்கதரிசி என்றும், தேவன் தமது ஜனத்தைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்தச் செய்தி யூதேயா தேசம் முழுவதும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று. இவைகளைக் கேள்விப்பட்ட ஸ்நானக யோவான் தன் சிறைச்சாலையிலிருந்து இரண்டு சீஷரை

அனுப்பி: "வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா?" என்று விசாரித்து வரும்படி சொன்னார். தாமே கிறிஸ்துவென்று யோவான் கண்டு கொள்ளத்தக்கதான உத்தரவு கொடுத்து அவர்களை அனுப்பினார்.

இதன்பின்பு, ஆண்டவர் பற்பல கிராமங்களுக்குச் சென்று வசனத்தைப் பிரசங்கித்து நோய்களைக் குணமாக்கிவந்தார். இந்நாள்களில் அவர் இரண்டாந்தரம் நாசரேத்தூருக்குப்போனார். சீஷரும் கூடப்போனார்கள். அவர் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பினபோது தனிமையாக நாசரேத்துக்குப் போனார். அப்பொழுது பன்னிருவர் அவரிடத்தில் சேரவில்லை. அநேக அற்புதங்களை அவர் கலிலேயாவில் நடப்பிக்கவில்லை. கப்பர்நகூம் இராஜாவின் மகன் குணமாக்கப்பட்டதை நாசரேத்தூரார் கேள்விப்பட்டிருக்கலாம். திரளான ஜனங்கள் அவரைப் பின் செல்லவில்லை. அவர் முதல் முதல் நாசரேத்துக்குப் போய் தம்மை மேசியாவென்று நிரூபித்தபோது ஜனங்கள் மூர்க்கவெறிகொண்டு அவரை மலையிலிருந்து தள்ளப்போனார்கள். அவரோ அவர்கள் கைக்குத் தப்பி ஊரைவிட்டு விலகினார். இப்போது இரண்டாந்தரம் ஒரு வருஷத்துக்குப் பின்பு அவர் தமது சீஷரோடு போனபோது முந்தின கோஷ்டமில்லை. ஏனென்றால், அவருடைய கீர்த்தியை அறிந்திருந்தார்கள். அவருடைய உபதேசத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அவர் பிறந்து வளர்ந்த குடும்பத்தை நினைத்தோ இடறலடைந்தார்கள். அங்கே சில நோயாளிகளைக் குணமாக்கினதேயல்லாமல், அதிகம் செய்யக்கூடாமல், அவர் அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப் பட்டு, மற்றக் கிராமங்களுக்குப் புறப்பட்டுப் போனார்.

இதற்குப்பின், ஆண்டவர் பன்னிருவரை இரண்டிரண்டு பேராகப் பிரித்து சகல பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் நோய்களைக் குணமாக்கவும் கட்டளை கொடுத்து அனுப்பினார். ஆண்டவரும் சும்மாயிராமல், சீஷர்கள் என்று சொல்லப்பட்ட மற்றவர்களோடு பல கிராமங்களுக்கும் போய் ஊழியம் செய்துவந்தார். இந்தச் சமயத்தில் யோவான் சிரச்சேதம்பண்ணப்பட்டார் என்கிற துயரமான செய்தி இரட்சகருக்கு எட்டினது. சிரச்சேதமான காலம் பஸ்காப்பண்டிகைக்குமுன் ஐயாயிரம் பேரை ஆண்டவர் போஷித்ததற்குமுன் சம்பவித்தது. யோவான் ஊழியம் செய்யக்கூடாதபடி காவலில் போடப்பட்டது எப்படி நமதாண்டவரின் ஊழியத்தின் இடத்தை மாற்றிற்றோ, அதுபோலவே யோவானுடைய மரணமும் அவருடைய ஊழியத்தின் **போக்கை** மாற்றிற்று. யோவான் **காவலில் வைக்கப்பட்டார்** என்று ஆண்டவர் அறிந்தவுடனே,

யூதேயாவைவிட்டு கலிலேயாவுக்கு வந்து தமது வேலையை ஆரம்பித்தார். மகிமையான கிரியைகளை நடப்பித்தார். திரளான ஜனங்கள் இடைவிடாமல் அவரைப் பின் சென்றார்கள். அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமானது.

ஆனால் யோவான் **மடிந்தார்** என்பதை ஆண்டவர் கேட்டவுடனே, யோவானுக்குச் செய்யப்பட்டதுபோலவே தம்மையும் பலபாடுகள் படுத்திக் கொலை செய்வார்கள் என்பதைத் தமக்குள் உணர்ந்தார். இதுவரை அவர் செய்த கிரியைகளால் ஜனங்கள் அவரைப் புகழ்ந்தார்களே அல்லாமல் அவரை இன்னாரென்று அறியவுமில்லை; அவருடைய ஆவிக்குரிய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவுமில்லை. யூதேயாவில் தமது ஊழியம் தவறினதுபோலவே கலிலேயாவிலும் தவறினதாக ஆண்டவருக்குத் தோன்றினது. அவருடைய ஆவிக்குரிய உபதேசங்களைக் கடினமென்று சொல்லி அநேக சீஷர்கள் அவரைவிட்டு விலகிப்போனார்கள். தாம் தெரிந்துகொண்ட சீஷர்களோ இன்னும் பலப்படவில்லை. தமது ஊழியம் உலகத்தில் பலிக்கவேண்டுமானால் அந்தச் சீஷர்கள் மூலமாகவே பலிக்கவேண்டும். தாம் மரிக்கும் வேளையும் சமீபித்தது.

ஆகையால், இதுமுதல் அவர் ஜனத்திரளைவிட்டுப் பிரிந்து, தாம் தெரிந்து கொண்ட சீஷருக்குத் தம்மை இன்னாரென்று வெளிப்படுத்தவும், உலகத்தின் இரட்சிப்புக்காக தாம் மரித்து, உயிர்த்து, பரலோகம் போகவேண்டியது அவசியமென்பதைப் போதிக்கவும் தீர்மானித்தார். பொதுஜன ஊழியம் நிறுத்தப் படவேண்டியது. பிரசங்கத்தின் போக்கும் மாறவேண்டியது. இதுவரை ஜனங்களுக்கு விளங்கக்கூடிய விதமாக உவமைகளைக் கொண்டு அநேக காரியங்களை அருமையாய்ப் போதித்துவந்தார். தாமே **கிறிஸ்து**வென்று பிரத்தியட்சமாக அவர் சொல்லவில்லை. அப்படிச் சொன்னாலும் அவர்களுக்கு விளங்காது. அவர்கள் தமது ஜீவியத்தையும் உபதேசத்தையும் கிரியைகளையும் கவனித்துத் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளும்படி விரும்பினார். அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அவரை **ஏசாயா** அல்லது **எரேமியா** என்று சொன்னார்களேயன்றி மேசியாவாக அறியவில்லை.

இதற்கிடையில் எருசலேமிலுள்ள அதிகாரிகள் தூதர்களை அனுப்பி எவ்வளவுதூரம் அவருடைய ஊழியத்தைக் கெடுக்கக் கூடுமோ அவ்வளவெல்லாம் செய்தார்கள். ஜனங்கள் அவ்வதிகாரிகளை அதிகமாய் மதித்து வந்தபடியால் இதுவரை ஆண்டவர் அதிகாரிகளைக் கண்டித்துப் பேசவுமில்லை. யோவான் மரித்ததிலிருந்து நமதாண்டவருடைய ஊழியத்தின் போக்கு மாறினது. ஜனங்களை விட்டுப் பிரிந்து தமது

சீஷர்களோடு அதிகமாகத் தங்கினார். எருசலேம் அதிகாரிகளைத் தப்பவிடாமல் அவர்களுடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் மகா கண்டிப்புடன் எடுத்துக் கூறினார். தமக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை யாவரும் அறிந்துகொள்ளவேண்டியது. சீஷர்களும் அதை அறிந்துகொள்ள வேண்டியது. இனி அவர்கள் கையில் தமக்கு மரணமேயன்றி வேறொன்றில்லை என்பதைச் சீஷர்கள் அறிந்து, அவ்விதமான பாடுகளுக்கும் மரணத்துக்கும் தங்களையும் ஆயத்தம் செய்து கொள்ளவேண்டியது.

இவ்வாறு இரட்சகர் தமது சீஷருக்குத் தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தி, தமக்கு வரும் மரணத்தையும், அதன்பின் தாம் உயிரோடெழும்ப வேண்டுமென்பதையும் திட்டமாய் போதித்து, தம்மை அவர்கள் உறுதியாகப் பற்றிக்கொள்ளும்படி அவர்களை ஆயத்தப்படுத்தினதோடு, கலிலேயாவின் ஒன்றரை வருஷ ஊழியம் முடிந்தது. முதல்வருஷம் யூதேயாவின் ஊழியம். ஒன்றரை வருஷம் கலிலேயாவின் ஊழியம். இதில் ஒரு வருஷம் அவர் மகிழ்ச்சியோடு செய்த சிறந்த ஊழியம். எத்தனை நற்கிரியைகளை அவர் செய்தபோதிலும், எவ்வளவு பிரசங்கங்களை அவர் நடத்தினபோதிலும், அவரை ஒரு தீர்க்கதரிசியாகமாத்திரம் எண்ணினார்களேயன்றி, அவரைக் கிறிஸ்துவென்று அறியவில்லை. அவருடைய ஆவிக்குரிய போதனைகளை ஏற்றுக்கொள்ளவும் மனதில்லை. இவ்வாறு நமதாண்டவர் கவலைப்பட்டிருக்கும் சமயத்தில் யோவான் சிரச்சேதமான செய்தி எட்டவே, அவருடைய ஊழியத்தின் போக்கு மாறினது. திரள் கூட்டத்தை விட்டு தமது சீஷர்களைத் தம்மோடு சேர்த்துக்கொண்டு கலிலேயாவிலுள்ள தனிமையான இடங்களுக்குப்போய் அவர்களை ஆயத்தப்படுத்திவந்தார். இது ஆறுமாதக்காலம். இதற்குப்பின் கலிலேயாவைவிட்டு விலகி, ஆறுமாதங்களாக தெற்கே பல கிராமங்களிலும் பிரசங்கித்துக் கடைசியாக எருசலேமுக்கு வந்து, வீடுகட்டுகிறவர்களான அதிகாரிகளால் ஆகாதவர் என்று தள்ளப்பட்டு மரித்தார்.

14
கப்பர்நகூம்
Capernaum

கிறிஸ்து தமது முப்பது வயதுவரை நாசரேத்தில் இருந்தார். அதன்பின் யோர்தான் நதிக்கரைவந்து ஞானஸ்நானம்பெற்று வனாந்தரம் சென்று சோதிக்கப்பட்டார். யோர்தானுக்குத் திரும்பிவந்து சில சீஷரோடு கானாவூர்க் கலியாணத்துக்குப் போனார். அங்கிருந்து சீஷருடன் பஸ்காப் பண்டிகைக்கு எருசலேமுக்குப் பிரயாணம் செய்தார். எட்டுமாதக்காலம் யூதேயாவில் வேலைசெய்து மறுபடியும் கானாவூருக்குத் திரும்பினார். சீஷர் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள். மறுபடியும் எருசலேமில் ஒரு பண்டிகை வந்தது. ஆண்டவர் தனிமையாக அங்கேபோய் பெதஸ்தாக்குளத்தில் ஒரு நோயாளியைக் குணமாக்கினார். யூதர்கள் அவரைக்கொலை செய்யத் தீர்மானித்ததால் திரும்பவும் கலிலேயாவுக்கு வந்து தாம் வளர்ந்த நாசரேத்துக்குப் போய், ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, மேசியாவைக் குறித்துக் கூறின தீர்க்கதரிசனத்தை ஏசாயாவிலிருந்து எடுத்து வாசித்து, இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் என்னில் நிறைவேறிற்று என்றார். தாம் வளர்ந்த ஊர் ஜனங்களுக்கு முதல் முதல் தமது இரட்சண்ய சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்க அவர் விரும்பினபோதிலும், அவர்கள் மூர்க்கவெறிகொண்டு அவரைக் கொல்ல எத்தனித்ததால், அவர் துக்கத்தோடு அவ்வூரைவிட்டு நீங்கி **கப்பர்நகூமுக்கு** வந்தார். "தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான்" என்னும் சொல் உண்மையாயிற்று.

முன் நாம் கவனித்தபடி கலிலேயா ஜனத்திரள் நிறைந்த நாடு. ஒரு சிறிய கிராமத்தில் பதினையாயிரம் ஜனங்கள் இருந்தார்கள். இருநூற்றுநாலு பட்டணங்களும் அநேக கிராமங்களும் இருந்தன. கலிலேயாவின் ஜனத்தொகை முப்பதுலட்சத்துக்குமேல் என்பது கணக்கு. யூதர்கள் அல்லாமல் பெனிக்கியர், சீரியர், அரபியர், கிரேக்கர் முதலான பல

புறஜாதிகளும் அங்கே வசித்தார்கள். ஆண்டவர் தமது ஊழியத்தை நடப்பிப்பதற்கு மகா அனுகூலமான நாடு கலிலேயா. அதில் கப்பர்நகூம் பட்டணம் அவர் வசிப்பதற்கும், எங்கும் போய் வேலை செய்வதற்கும் ஏற்ற ஸ்தானம். கப்பர்நகூம் என்னும் பேர் பழைய ஏற்பாட்டில் இல்லை. சிறையிருப்புக்குப் பிறகு அந்தப் பட்டணம் உண்டாகியிருக்கவேண்டும். **நாகூம்** தீர்க்கதரிசி அங்கே அடக்கமானதால் அப்பெயர் வந்ததாகப் பாரம்பரியம். கலிலேயா எருசலேமுக்குத் தூரமாயிருந்ததாலும், இங்குள்ள ஜனங்கள் யூத அதிகாரிகளின் கேடுபாடுகளுக்கு விலகியிருந்ததாலும், நமதாண்டவர் மகா சந்தோஷத்தோடு, தாராளமாய் ஊழியம் செய்ய இடம் பெற்றிருந்தார். அந்நாட்டை அரசாண்ட **ஏரோது அந்திப்பா** என்பவன், உலக வைபோகத்தில் கவனம் செலுத்தினவனாதலால், நமதாண்டவருக்கு எவ்வித கஷ்டமும் கொடுக்கவில்லை. பாவ அந்தகாரத்தைப் போக்கவந்த பகலோனாகிய **கிறிஸ்து** கப்பர்நகூமைத் தமக்கு மத்தியஸ்தானமாகக் கொண்டு, அங்கிருந்து நாலா திசைகளிலும் தமது ஒளியைப் பிரகாசிக்கச் செய்தார். கலிலேயா ஜனத்திரளில் மாத்திரமல்ல, சம்பாத்தியத்துக்கும் அனுகூலமான தேசம். "ஐசுவரியம் வேண்டுமானால் கலிலேயாவுக்குப் போ, அறிவு வேண்டுமானால் யூதேயாவுக்குப் போ" என்கிற பழிமொழியும் உண்டு. உலக பொக்கிஷம் மாத்திரமல்ல, பரம பொக்கிஷத்தையும் கண்டு கொள்ளும் சிலாக்கியம் கலிலேயருக்குக் கிடைத்தது.

நாசரேத்தை விட்டபின் கப்பர்நகூமில் அவர் வசித்த படியால் அது அவருடைய ஊரென்று அழைக்கப்பெற்றது அங்கே அவருக்குச் சொந்தவீடு இருந்ததென்று எண்ண இடமில்லை. "மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று அவர் சொன்னதை நாம் மறக்கலாகாது. ஆகையால், பேதுரு தமது வீட்டிலேயோ அல்லது வேறு இடத்திலேயோ அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கவேண்டும். அவர் கப்பர்நகூமிலிருந்த ஒன்றரை வருஷக்காலத்தில், நான்கு திசைகளிலும் சென்று போதித்த உபதேசங்களையும், செய்த அற்புதக் கிரியைகளையும், வரிசையாக ஒவ்வொன்றாய் விவரிக்க வேண்டுமென்பது நமது நோக்கமல்ல. தேசத்தின் தன்மையையும், ஜனங்களின் பழக்க வழக்கங்களையும், ஆண்டவர் நடப்பித்த ஊழியத்தின் போக்கையும், அதன் முடிவையும் பொதுவாய்க் கவனிப்போம்.

கடற்கரையோரமாயிருந்த **ஒன்பது** பட்டணங்களில் **கப்பர்நகூம்** ஒன்று. ஒன்பது பட்டணங்களிருந்ததுபோல அவர் செய்த பிரயாணங்களும் ஒன்பதென்பதை இலேசாய் ஞாபகத்தில் வைக்கலாம். நூற்றுக்கதிபதி யூதருக்கென்று கட்டினதும், நமதாண்டவர் அடிக்கடி சென்று பிரசங்கித்ததுமான ஜெப

ஆலயத்தின் கூரைமீது நின்று, நான்கு பக்கங்களிலும் நிறைந்துள்ள பட்டணங்களையும் கிராமங்களையும் தெளிவாய்க் காணலாம். ரோமர் உண்டாக்கின இராஜபாதைகள் கப்பர்நகூமுக்குச் சமீபமாகச் சென்றன. ஒரு பாதை தமஸ்குவிலிருந்து கப்பர்நகூம் வழியாகத் தென்மேற்காய் கடற்கரைக்குப் போனது. வேறொருபாதை கப்பர்நகூமிலிருந்து புறப்பட்டு தெற்கே எருசலேம், காசா பட்டணங்களுக்குச் சென்றன. இப்பெரும் பாதைகளில் பிரயாணிகள், போர்வீரர், வியாபாரிகள், வேலையாள்கள், ஸ்தலயாத்திரை செய்யும் பக்தர்கள் இடைவிடாது நடப்பார்கள். நீண்ட பிரயாணம் செய்பவர்கள் கப்பர்நகூமில் தங்குவார்கள். இவ்விடத்தில் ஆயத்துறையும் உண்டு. ஆண்டவருடைய உபதேசங்களும் கிரியைகளும் கலிலேயாவில் நடந்தபோதிலும், அவைகள் சீரியா, அரபியா, கிரேக்கு, எகிப்து, பாபிலோன், ரோமாபுரி முதலான தேசங்களில் பிரஸ்தாபமாவதற்கு ஏதுவாயிற்று. இவ்வாறு சர்வஜனங்களாலும் விரும்பப்படத்தக்கவர் தமது ஊழியத்துக்குத் தகுந்த ஸ்தானமாக கப்பர்நகூமைத் தெரிந்து கொண்டது நியாயமே.

தற்காலம் கிழக்கேயுள்ளவர்கள் மேற்குத் தேசத்தாருடைய நாகரீகத்தின்படி தங்கள் வீடுகளை விசாலமான அறைகள் உள்ளதாகவும், பெரிய கதவுகள், ஜன்னல்கள் உள்ளதாகவும் கட்டுகிறார்கள். கலிலேயரின் வீடுகளோ மகாசிறியவை. பிரபுக்களானவர்கள் பெரிய வீடுகளில் வசித்தனர். ஆகிலும் சாதாரண ஜனங்களுடைய வீடுகள் வசதியானவையல்ல. கிராமங்களில் இன்று நாம் காண்கிறதுபோலவே, இரண்டு அடிக்கனதியுள்ளதும், ஒரு ஆள் நிற்கக்கூடிய உயரமுள்ளதுமான சுவர்களால் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. மனுஷனுடைய உயரத்துக்குக் குறைந்த ஒரே கதவு உண்டு. சுவரில் சிறிய துவாரங்கள் எக்காலத்துக்கும் திறந்த ஜன்னல்களாக விடப்பட்டிருக்கும். வெவ்வேறு உபயோகத்துக்கு வெவ்வேறு அறைகள் என்பதில்லை. புகை போக இடமில்லை. மண்பூசப்பட்ட தரையில் பாய்விரித்துப் படுத்துக்கொள்வார்கள். மேற்கூறை மச்சுப்பாவியது. குறுக்குச் சட்டங்கள் பரப்பி அதற்குமேல் ஒரு அடிக்கனமுள்ள மண் பூசப்பட்டிருக்கும். மழை காலத்தில் இவைகள் கரைந்து ஒழுக்கெடுப்பதால், வருஷந்தோறும் சுவர்களும் மச்சும் புதிப்பிக்க வேண்டியதாகும். ஒழுங்கையும் சுத்தத்தையும் அலங்காரத்தையும் நன்குணர்ந்த நமது இரட்சகன், இப்படிப்பட்ட வீடுகளில் ஜனங்களோடு தங்கி, புசித்து நித்திரை செய்து தமது ஊழியத்தை நடத்தினது, அவருடைய தாழ்மை பொறுமை அன்புக்கு அத்தாட்சியாயிருக்கிறதல்லவா? மேலும், மீன்பிடிக்கிறவர்களுடைய வீடுகள் எவ்வாறு இருக்குமென்பதை நாமே யூகித்துக்கொள்ள வேண்டியது. மீன் வியாபாரமும் கருவாடு வியாபாரமும் அங்கு வெகு மும்முரமாய் நடந்தன.

வீடுகள் இப்படியிருக்கத் தெருக்களைக் கவனிப்போம். அவைகளைத் தெருக்கள் என்று சொல்லவுங்கூடாது. நெருக்கமான வீடுகளுக்கிடையில் பாதைகள் சென்றன. அவ்வழியில் நடந்தால் வளர்ந்த மனுஷரின் தலை தட்டும்படியாகக் கூரைகள் தாழ்ந்திருக்கும். ஒரு ஒட்டகம் படுத்துக்கொண்டால் மனுஷர் நடந்துபோகக்கூடாதபடி வழி அவ்வளவு ஒடுக்கமாயிருக்கும். ஜனக்கூட்டத்தோடு அவ்வழியில் நடப்பது மகா கஷ்டம். ஒருவழி செல்லும்போதே திடீரென அது வளையும். அவ்வாறு வளையும் இடத்தில் பக்கவழி போவதற்கு கற்களால் கட்டப்பட்ட ஒரு வில் போன்ற வளைந்த வாசலிருக்கும். இவ்வளவு நெருங்கிய வீடுகளும் ஒடுங்கிய பாதைகளுமுள்ள, ஜனம் நிறைந்த கப்பர்நகூமில், நமதாண்டவர் பிதாவோடு தனித்திருக்க எப்படி முடியும்? அவர் தனித்திருக்க விரும்பின ஓர் இரவில், ஊர் ஜனங்கள் எல்லாரும் அமர்ந்து தூங்கும் வேளையில், அவர்கள் தூக்கத்தைக் கலைக்காமல், யாருக்கும் தெரியாது, விடிவதற்கு வெகு நேரத்துக்குமுன் எழும்பி, அந்த இருட்டுக்குள், ஒடுங்கிய தெருக்கள் வழியாக மெதுவாய் நடந்து மலைகளை நோக்கிச் சென்றார். நாய்கள் குரைத்திருக்கக்கூடும். காவற்காரர் ஏதோ திருடன் வந்தானோ வென்று நாலாபக்கமும் பார்த்திருக்கக்கூடும். படுக்கையி லிருந்தவர்கள் இவ்வேளையில் நாய்கள் குரைப்பானேன் என்று யோசித்திருக்கக்கூடும். அவர் பிதாவோடு தாராளமாகப் பேசுவதற்கு வீட்டுக்குள் வசதியில்லாததால் இவ்வாறு தனித்துப்போக நேரிட்டது.

இதுபோல் அநேக இரவுகளில் அவர் வெளியே போயிருக்கலாம். பகலில் அவர் தனித்திருக்க முடியாதென்பது நிச்சயம். அதிகாலையிலிருந்து மாலைவரை வீட்டிலும் வழியிலும், கரையிலும், மலையிலும், வயலிலும் வனாந்தரத்திலும், ஆலயத்திலும் சந்தைகளிலும் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினவண்ணமாயிருப்பார்கள். அவர் காலையில் விழித்து வெளியேறுமுன்பே அவர் வீட்டில் வந்து கூடுவார்கள். அப்போது அவர்களோடு பேச ஆரம்பிக்கிறவர் பகல் முழுவதும் பேசி, இரவில் எல்லாரும் வீடுகளுக்குப்போன பின்புதான் ஓய்வார். இரவில் வீட்டுக்கு வந்தாலும் வீட்டிலும் ஆள்களுண்டு. அவர் சாப்பிடவும் நேரமில்லாதிருந்தார். அவரை இவ்வாறு கஷ்டப்படுத்த வேண்டுமென்பது ஜனங்கள் நோக்கமல்ல. அவரிடத்தில் வந்தவர்கள் அவரை விட்டுப்போக முடியாது. மனுஷரை இழுத்துக்கொள்ளும்படியான வசீகரம் அவரில் இருந்தது. அவர்கள் இழுக்கப்பட்டதுமாத்திரமல்ல, அவரும் அவர்களால் இழுக்கப்பட்டார். அவர்கள் மீதுள்ள பரிதாபம் அவரையும் கவர்ந்தது. இவ்வித இருகவர்ச்சி இருக்கும்போது அவர் எப்படி விலகியிருக்கக்கூடும்? யார் அவரைப்

பார்க்காமலும் பேசாமலும் இருக்க முடியும்? இவ்வாறு நல்லார் பொல்லார், தனவான்கள் ஏழைகள், சமுசாரிகள் வியாபாரிகள், கற்றோர் கல்லாதவர், சுகமுள்ளோர் நோயாளிகள், ஆண்கள், பெண்கள், வாலிபர் பிள்ளைகள் அவரை சூழ்ந்துகொண்டு கொஞ்சமாகிலும் அவரை அமர்ந்திருக்க விடவில்லை. இடைவிடாத பிரசங்கமும் இடைவிடாத அற்புத கிரியைகளும் அவரைக் களைத்துப்போகச் செய்தது. அவரிடத்திலிருந்து எவ்வளவுக்குச் சக்தி புறப்பட்டதோ, அவ்வளவுக்கு மற்றவர்கள் நன்மையடைந்தார்கள; அவரோ பலவீனப்பட்டார். ஆகையால் மற்றவர்கள் இளைப்பாரும் இரவில், அவர் வனாந்தரத்துக்கோ மலையடிவாரத்துக்கோ தனித்துப்போய் பிதாவினிடத்திலிருந்து பலத்தைப் பெற்றுக் கொள்வார் எவ்வளவு சுயவெறுப்பு! தம்மையே தந்த **தியாகேசன்** இவரல்லவா?

வீடுகளும் தெருக்களும் இவ்வளவு குறைவான நிலைமையிலிருந்தாலும் மற்ற விஷயங்களில் தேசம் செல்வம் பொருந்தினதாயிருந்தது. நீர்வளமும் நிலவளமும் மிகச் சிறந்து விளங்கிற்று. யாவற்றிலும் சிறந்தது **கலிலேயாக்கடல்.** இது திபேரியா என்னும் பட்டணத்தின் பேரால் **திபேரியாக் கடல்** என்று மேற்குக்கரையை அடுத்திருக்கிற கெனேசரேத்து நாட்டின்பேரால் **கெனேசரேத்துக்கடல்** என்றும் பேர் பெற்றுள்ளது. "எகோவா ஏழு கடல்களை உண்டாக்கினார், அவற்றுள் கெனேசரேத்துக்கடலே அவரது மனமகிழ்ச்சி" என யூத ரபிமார் சொல்வதுண்டு. அவர்கள் ஒரு கருத்தில் அப்படிச் சொன்னாலும், நமதாண்டவர் இக்கடலோடு சம்பந்தப்பட்ட விஷயத்தில் இதைச் சிறந்ததெனக் கூறலாம்.

இக்கடலின் நீளம் தெற்கு வடக்காய் பதிமூன்று மைலும், கிழக்கு மேற்காய் ஏழு மைல் அகலமும் உள்ளது. வடக்கே முப்பது மைலுக்கப்பால் **செசரியா பிலிப்பி** என்னும் திசையிலுள்ள **யோர்தான்** என்னும் மலைகளிலிருந்து ஒடிவரும் யோர்தான் நதி, கப்பர்நகூமுக்கு வடக்கில் மூன்றாவது மைலில் இதில் பிரவேசித்து நிரப்பி, பின்னும் அங்கிருந்து தெற்கே எண்பது மைல் தூரம் ஓடி **சவக்கடலில்** கலக்கிறது. கலிலேயாக்கடலின் தண்ணீர் மகா தெளிவும் சுத்தமுமானது. கரையில் வசித்த திரளான ஜனங்கள் வெகு பிரியமாய் அந்தத் தண்ணீரைக் குடிப்பார்கள். கலிலேயாக்கடல் மத்தியதரைக் கடல் மட்டத்துக்கு எழுநூறு அடி தாழ்ந்தது. கடலைச் சுற்றிலும் மலைகள் உண்டு. அதன் கீழ்ப்பாகத்தில் உள்ள மலைகளின் சிகரம் இரண்டாயிரம் அடி உயரமானது. மேல்கரையில் உயரமான சிகரங்கள் இல்லை யென்றாலும், வட்டவடிவும் அடுக்கடுக்காயுமுள்ள மலைகள் உண்டு. கெனேசரேத் என்று சொல்லப்பட்ட இப்பாகம் நாலு மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் உள்ளது. மலைகளிலிருந்து

ஓடி வரும் ஆறுகளாலும் நீரூற்றுகளாலும் கெனேசரேத் மிகச் செழிப்படைகின்றது. மழைகாலத்தில் மிகுதியாக வரும் ஜலம் கடலிற் போய் விழும். சூழ்ந்து நிற்கும் மலைக்கணவாய் வழியாகத் திடீரென வரும் பலமான காற்றால், சில சமயங்களில் கடல் கொந்தளிப்பதும் படவிற் போகிறவர்கள் கஷ்டப்படுவதுமுண்டு. மற்றப்படி சகல விஷயத்திலும் அது மேன்மை பெற்ற கடலே. கடலிலிருந்து சூழ்ந்துநிற்கும் மலைகளைப் பார்ப்பதும், மலைமீதிருந்து கடலை நோக்குவதும் மிகவும் அழகான காட்சியாயிருக்கும்.

கடற்கரையில் வரிசையாக நின்ற பட்டணங்கள் தண்ணீரில் பிரதிபலிப்பது பார்ப்போர் மனதைப் பரவசமாக்கும். நாலாயிரம் படவுகள் முன்னும் பின்னும் ஓடியவண்ணமா யிருக்கும். செம்படவர் தவிர, சிறந்த சீமான்கள் சந்தோஷத்துக் காக உலாவப்போகும் உல்லாசப் படவுகளையும் அங்கே காணலாம். இரவில் போன படவுகள் திரளான மீன்களோடு காலை நேரம் கரைவந்து சேரும். கலிலேயாக்கடலில் மீன்கள் ஏராளம். கூட்டம் கூட்டமான புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் தம்தம் படவுகளை எதிர் நோக்கின கண்ணாய் கரையில் நிற்பார்கள். அவர்கள் சந்தோஷத்துக்கும் சம்பாஷணைக்கும் சங்கீத முழக்கத்துக்கும் அளவிராது. வியாபாரிகள் கூடி மீன்களை வாங்கிச் சந்தைக்குக் கொண்டோடுவார்கள். மற்றவர்கள் அக்கம்பக்கத்துக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்வார்கள். சந்தையில் திரள் கூட்டமிருக்கும். அங்கே சகலவித கனிவர்க்கங்களும், காய்கறிகளும், புஷ்பங்களும் வந்து சேரும்.

காலைநேரம் எங்கே பார்த்தாலும் அசைவும் சத்தமும் உற்சாகமும் காணப்படும். விவசாயிகள் தங்கள் ஆயுதங்களோடு தோட்டங்கள் வயல்களுக்குப் புறப்படுவார்கள். கன்னார், கொல்லர், தட்டார், தச்சர், சிற்பர், குயவர் முதலான பல தொழிலாளிகள் ஆயுதங்களெடுத்தும் தம்தம் வேலையை ஆரம்பிப்பார்கள். ஜனங்களை வேலைக்கு அழைக்கும்படி சங்குகள் ஊதுவதில்லை. மணிகள் அடிப்பதில்லை. மோட்டார் வண்டிச் சத்தமும், புகைவண்டி இரைச்சலும் கனவிலும் கிடையாது. ஆகாயம் சுத்தமாயும் காலைக்குளிர் மனோரம்மிய மாயுமிருக்கும். மச்சிலிருந்து தெருவுக்குப் பேசுகிற சத்தமும், தெருவிலிருந்து மச்சுக்குப் பேசுகிற சத்தமும், கரையிலிருந்து படவுக்குச் செல்லுகிற செய்தியும், படவிலிருந்து கரைக்குச் சொல்லுகிற செய்தியும் வெகு தெளிவாய்க் கேட்கும். ஒரு கிராமத்துச் செய்தி வாய்ச்சொல்லின் மூலமாகவே கிராமம் கிராமமாகத் தாண்டி கடைசிக்கிராமத்துக்குச் சேரும். இதுவே அவர்கள் தந்தி. அந்நாட்டு நகரங்கள் கடற்கரையைச்

சார்ந்திருந்ததால் பல தேசத்து வியாபாரிகள் அங்கே வசித்து வந்தனர். வர்த்தகரின் செல்வத்துக்குக் கணக்கில்லை. பகவான் அருளிச்செய்த சகல நன்மைகளும் நிறைந்துள்ள கலிலேயா நாட்டில் வறுமை என்பதில்லை.

இது இவ்வாறிருக்க, அந்நாட்டின் செழிப்பான காட்சிகளோ கண்களைக்கவரும். மேற்கே எழும்பி நிற்பது மலைகளோ அல்லது சோலைகளோ என்று திகைக்கத்தக்க வண்ணம் முழுவதும் பச்சையாகத் தோன்றும். அத்திமரங்கள், ஒலிவத் தோப்புகள், திராட்சச் செடிகள், வாதுமை மரங்கள், கிச்சிலி மரங்கள், பேரீச்சமரங்கள் இவைகளால் மலைகள் மூடப்பட்டிருக்கும். அடிவாரத்தின் சமபூமி கோதுமை வயல்களால் செழிப்புற்றிருக்கும். இதுதவிர, வாசனையும் அழகும் பொருந்திய புஷ்பஜாதிகள் எங்கே பார்த்தாலும் நிறைந்து படர்ந்திருக்கும். இனிய காற்று வீசும்போது அவைகளின் நற்கந்தம் துர்க்கந்தம் கொண்ட மனதை அறியாமலே சந்தோஷிக்கச் செய்யும், இவ்வாசனையோடு தொனிக்கும் பறவைகளின் சத்தம் கேட்போர் செவிக்கு இன்பமாயிருக்கும், சூரியோதயத்தில் சிட்டுக் குருவிகள், பட்டுக்குருவிகள், அடைக்கலான், தகைவிலான், புறாக்கள், கௌதாரிகள், கிளிகள், குயில்கள் கிளைகளில் தங்கி ஏகமாய்ப் பாடும். புஷ்பங்களிலுள்ள தேன்களை மொய்க்கும் வண்டுகளின் ரீங்காரம் இவைகளோடு சேரும். சற்றுநேரத்திற்குள்ளாக ஆடுகளும் மாடுகளும் துள்ளிக்கொண்டு மேய்வதற்குப் போகும். வயல்களில் நடுவோரும் களைபறிப்பவர்களுமான ஸ்திரீகள் பாடும் பாட்டும், ஏர் உழுவோர் பாடும் ஏர் மங்கலப் பாட்டும், ஆடுகளை மேய்ப்போர் ஊதும் புல்லாங்குழலின் இனிய நாதமும், படவிற் செல்வோர் பாடும் ஏலேலப்பாட்டும் எதைக் கேட்பது எதைக் கேட்காமல் விடுவதெனத் திகைக்க நேரிடும். தேவனால் விசேஷித்த சிலாக்கியம் பெற்ற கலிலேயா நாட்டைக் கவனிக்கும்போது, மனுஷர் மாத்திரமல்ல, பறவைகள் மிருகங்கள் மாத்திரமல்ல, மலைகளும் குன்றுகளும் சேர்ந்து ஆடுகளைப் போலும் ஆட்டுக்குட்டிகளைப்போலும் துள்ளிவிளையாடுவது போல் தோன்றும்.

இவ்வாறு தேசத்தின் திரளான ஜனங்களும், தேவனுடைய அலங்காரமான சிருஷ்டிப்பும், ஏகமாய்க் கெம்பீரித்திருக்கும் ஒரு காலையில் எம்பெருமான் **இயேசுபகவான்** கடற்கரை வந்து தோன்றினார். அவர் எருசலேமில் செய்த அற்புதங்களை ஏற்கனவே கண்டவர்களும், கானாவிலிருந்துகொண்டே கப்பர்நகூமில் இருந்த கூசாவின் மகனைக் குணமாக்கினசெயலை அறிந்தவர்களுமான கலிலேயர், அவரையே தங்கள் நினைவுங் கனவுமாகக் கொண்டிருந்தபடியால், அவர் வந்துவிட்டாரெனக்

கேள்விப்பட்டதும் புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டாற்போல் நான்கு திசையிலுமிருந்து ஓடிவந்து அவரைச் சூழ்ந்துகொண்டனர். எல்லாரும் வந்து அவரை ஆவலோடும் ஆச்சரியத்தோடும் உற்றுப்பார்க்கிறார்கள். அவர் தங்கள் நடுவிலேயே தங்கும்படி வந்திருப்பதை அவர்கள் அறியார்கள். அவர் அவர்கள் மத்தியில் இரத்தாம்பர உடுப்போடும் கிரீடத்தோடும் நிற்கவில்லை. வேலைசெய்து காய்த்துப்போன கைகளோடும் சாதாரண உடையோடும் நின்றார். அவர் பார்வை ஊடுருவிப் பார்க்கக் கூடியதும் கிருபை நிறைந்ததுமாயிருந்தது. அவருடைய தோற்றம் மூர்க்கரை அப்பால் நிறுத்துவதும், நொறுங்குண்டவர்களைச் சேர்த்துக்கொள்வதுமாயிருந்தது. அவருடைய நடை தரையில் படுகிறதோ என்று சந்தேகிக்கும்படியாக அவ்வளவு மெதுவாயிருந்தது. அவருடைய சத்தத்தில் ஆரோக்கியமும் ஜீவனும் இருந்தன. அவருடைய இருதயம் எல்லாரையும் ஏற்றுக்கொள்ளும் உறைவிடமாயிருந்தது.

கலிலேயாவிலிருந்த ஜனங்கள் மத்தியில் தம்மால் கூடியமட்டும் நல்லவேலை செய்யவேண்டுமென்பது அவர் தீர்மானம். தாமே மேசியாவென்று அவர்களுக்குத் திறந்து சொல்லாமல், தமது உபதேசங்களைக் கேட்டும், தமது பலத்த கிரியைகளைக் கண்டும், தம்மை இன்னாரென்று அவர்களே அறிந்துகொள்ள வேண்டும் என்பது அவரது சிறந்த நோக்கம். அவ்வித நோக்கத்தோடேயே கடைசிவரை அந்நாட்டில் வேலை செய்தார். அவருடைய கிருபை நிறைந்த வேலைக்குப் பூரணமான பலன் கிடைப்பதுபோல் சிலகாலம் தோன்றினது. ஆனாலும் வரவர அவர் பட்டபாடெல்லாம் வீணாயிற்றென்று விளங்கிற்று.

இதிலிருந்து, நமதாண்டவர் கப்பர்கூமிலிருந்து தொடங்கிச் செய்த பிரயாணங்களையும் வேலைகளையும் அதிகமாய் விஸ்தரிக்காமல் சுருக்கமாகப் பார்ப்போம். அவர் நாசரேத்தி லிருந்து பிரயாணம் செய்து கலிலேயாக் கடலண்டை வந்தபோது தம்மோடு சிலகாலம் ஆரம்பத்தில் கூடயிருந்த முதல் சீஷரில் நாலுபேர் மீன் பிடித்துக் கொண்டிருக்கக்கண்டு அவர்களை அழைத்தார். அவர்கள் கீழ்ப்படிந்து அவரைப்பின் சென்றார்கள். இந்த அழைப்பின் நோக்கம் அவர்களுக்குத் தெரியாது. எல்லாவற்றையும் விட்டுப்பிரிந்து அப்போஸ்தலராக ஏற்படுத்தப்படுமுன், அவர்கள் ஆண்டவரோடிருந்து, அவர் கிரியைகளைக்கண்டு, அவர் நோக்கத்தையும் அறிந்து, அவரை இன்னாரென்று அனுபவத்தில் தெரிந்து அவரை நம்பி ஜீவிப்பதில் ஒரு குறைவும் நேரிடாதென நிச்சயித்தபின் முற்றிலும் அவருக்குச்சொந்தமாவார்கள். அதுவரை அவர்களைப் படிப்படியாக நடத்த ஆண்டவர் சித்தங்கொண்டார். இந்த நாலு சீஷரோடும் அவர் கப்பர்நகூமுக்குப்போனார். அந்த ஓய்வுநாளில்

ஜெபாலயத்தில் பிரவேசித்து, பிரசங்கித்து, அசுத்த ஆவி பிடித்தவனைக் குணமாக்கினார். தம்மை இன்னாரென்று வெளியிட அந்த ஆவிக்கு இடங்கொடுக்கவில்லை. இச்செய்தி கலிலேயாவெங்கும் பிரசித்தமாயிற்று. ஆராதனை முடித்த பின் சீமோன் அந்திரேயா வீட்டுக்குப்போனார். இவர்கள் பெத்சாயிதா பட்டணத்தாரானாலும் இப்பொழுது கப்பர்நகூமில் வசித்தார்கள். அங்கே சீமோனின் மாமியை ஜுரத்திலிருந்து குணமாக்கினார். மாலைநேரத்தில் அங்கே கூடிவந்த அநேக நோயாளிகளைக் குணமாக்கினார்.

இரவில் நித்திரைசெய்து அதிகாலை இருட்டோடே எழுந்து வனாந்தரமார்க்கம்போய் ஜெபித்து, அதன்பின் சுற்றிலுமிருந்த கிராமங்களில் பிரசங்கிக்கும்படி புறப்பட்டுப் போனார். சீமோனும் மற்றவர்களும் அவரைப் பின்தொடர்ந்து போய், வீட்டில் உம்மைத் தேடித் திரளான கூட்டம் வந்திருக்கிறதே என்றழைத்தார்கள். அவரோ அவர்களையும் சேர்த்துக்கொண்டு கப்பர்நகூமுக்குச் சமீபமாயுள்ள **கோராசின் பெத்சாயிதா** பட்டணங்களுக்குப் போனார். இந்த முதற் பிரயாணத்தில் அவர் அநேக அற்புதங்கள் செய்திருக்கக்கூடும். ஆனால் ஒரு குஷ்டரோகி சுகமானதை மாத்திரம் சுவிசேஷம் அறிவிக்கிறது. கப்பர்நகூமிலிருந்து. ஆண்டவர் செய்த பிரயாணங்களையும், அற்புதங்களையும் சுவிசேஷகர் வரிசையாகச் சொல்லுகிறார்கள் என்று எண்ண இடமில்லை. மாற்கு இந்த அற்புதத்தை முதற்பிரயாணத்தில் நடந்ததாகச் சொல்லுகிறார். மத்தேயு மலைப்பிரசங்கத்துக்குபின் எழுதுகிறார். குஷ்டரோகி ஜனக்கூட்டத்தில் அல்ல ஏதோ ஒரு தனித்த இடத்தில் கர்த்தரைச் சந்தித்துக் குணமாகியிருக்கவேணும். ஜனக்கூட்டத்தில் அவன் வரவுமாட்டான். அப்படி வந்ததாக வைத்துக்கொண்டாலும், நீ குணமானதை யாருக்கும் சொல்லாதே என்று ஜனக்கூட்டத்தில் இருப்பவனைப் பார்த்து ஆண்டவர் சொல்லவேண்டியதென்ன? அவனோ புறப்பட்டுப்போய் தன்னால் அடக்கக்கூடாத சந்தோஷத்தினால் எல்லாருக்கும் அறிவித்தான். ஆண்டவர் செய்ய விரும்பின முக்கியவேலை பிரசங்க ஊழியமேயல்லாமல் நோய்களைக் குணமாக்குகிற வேலையல்ல. குஷ்டரோகி சுகமானான் என்று கேள்விப்பட்டதும் ஜனங்கள் ஆயிரம் பதினாயிரமாய் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவர் மறைந்திருக்க விரும்பியும் அவரால் கூடவில்லை.

முதல்பிரயாணம் முடிந்து இரண்டாம்தரம் கப்பர்நகூமுக்கு வந்தார். அவர் வீட்டுக்கு வந்துவிட்டாரென்று அறிந்தவுடன் திரள்கூட்டம் சூழ்ந்து கொண்டன. எவ்வளவு ஆவலோடு ஜனங்கள் அவருக்காக எதிர்பார்த்த கண்ணாயிருந்திருக்க வேண்டும்! நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு

வந்தார்கள். வீட்டிற்குள்போக வாசலில் இடமில்லை. வீட்டின் மேலேறிக் கூரையைப்பிரித்து, அந்த வியாதியஸ்தனை படுக்கையோடு கயிற்றினால் இறக்கி அமலன் திருமுகப்பார்வையில் வைத்தார்கள். அவன் பாவங்களை அவர் மன்னித்து அவன் நோயைக் குணமாக்கினார். பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டென அவர் சொன்னபோது, அங்கேயிருந்த வேதபாரகர் முறுமுறுத்தார்கள். அவன் எழுந்து நடந்ததைக் கண்டபோதோ பிரமித்தார்கள். என்றாலும், தேவனுக்குரிய அதிகாரம் தனக்குண்டென்று இவன் சொன்னானே என்கிற கோபம் அவர்களுக்கு இருந்தது. இதன் பின்பு அவர் கடற்கரையோரம் போய் அங்கே பிரசங்கித்தார். பின்பு பட்டணத்துக்குச் சமீபமாகச் சென்ற இடத்தில் ஆயக்கார உத்தியோகஸ்தனாயிருந்த **லேவியை**க்கண்டு, சீமோன், அந்திரேயா, யாக்கோபு, யோவானை அழைத்ததுபோலவே அழைத்தார். அவர் உடனே ஆண்டவரைப்பின் சென்றார். ஆண்டவர் பிரசங்கித்த வசனத்தைக்கேட்டு அவருக்குச் சீஷனாயிருக்கும்படியான வாஞ்சை அவர் உள்ளத்திலிருந்திருக்க வேண்டும் பரிசேயர் இதைக் கண்டு. அவர் ஆயக்காரனைச் சீஷனாயிருக்கும்படி தெரிந்து கொண்டாரேயென முறுமுறுத்தார்கள். வேதபாரகர் பரிசேயர் தங்கள் அவிசுவாசத்தால் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தபோது, அவர் மீன்பிடிக்கிற செம்படவரையும் ஆயக்காரனையும் தமக்குச் சீஷராயிருக்கும்படி தெரிந்து கொண்டது நியாயந்தானே.

ஓய்வுநாளில் தமது சீஷருடனேகூட கப்பர்நகூமுக்குச் சமீபமானதும், ஓய்வுநாள் பிரயாண அளவுக்குட்பட்டதுமான வயல்வழியாகப் போனார். சீஷர் வயலில் விளைந்திருந்த கதிர்களைக் கொய்து கைகளால் கசக்கித் தின்றார்கள். அவர் ஊருக்கு வெளியே போகப் புறப்பட்டபோது ஓய்வுநாள் பிரயாணதூரத்திற்கு மிஞ்சிப்போவாரானால், குற்றப்படுத்த வேண்டுமெனப் பின்தொடர்ந்துவந்த பரிசேயர், சீஷர் கதிர்களைப் பிடுங்கித் தின்றதைக் கண்டபோது, ஓய்வுநாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்று கேட்டார்கள். இரட்சகர் அவர்களுக்குச் சரியான உத்தரவு கொடுத்ததுந்தவிர, மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவர் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்றார், எந்தக் கேள்விக்கும் பிடிகொடுக்கிறாரில்லையே என்று அவர்கள் வைராக்கியங் கொண்டு எவ்விதத்திலும் அவரைக் குற்றப்படுத்த முயன்றார்கள்.

ஓய்வுநாளில் அவர் மறுபடியும் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, அவர்கள் கண்காண சூம்பினகையுடைய ஒரு மனுஷனைக் குணமாக்கினார். ஒரு ஓய்வுநாளில் இவர் அசுத்த ஆவியுள்ளவனைக் குணமாக்கினார். மறு ஓய்வுநாளில் வயலில்

நடந்து கதிர்களைக் கொய்து தின்று தன்னை ஓய்வுநாளுக்கு ஆண்டவருமாக்கினார், இந்த ஓய்வுநாளில் சூம்பினகையனைச் சுகப்படுத்தினார். இப்படி ஓய்வுநாளை மீறிக்கொண்டே போகிறவரை நாம் சும்மாவிடுகிறதா என்று அவரைக் கொலை செய்யும்படி ஏரோதியருடனே ஆலோசனை செய்தார்கள். ஏரோதியர் பரிசேயரைப்போல் மார்க்க அபிமானிகள் அல்ல. ஏரோது எப்படியோ அப்படியே அவர்களும். ஜனங்கள் கிறிஸ்துவைக் கொண்டாடினதால் ஒருவேளை ஏரோதின் சிம்மாசனத்துக்கு ஆபத்து வந்துவிடுமோ என்பது அவர்கள் பயம். ஆகையால் இச்சமயத்தில் இருபக்கத்தாரும் கூடிக்கொண்டார்கள். இவர்கள் கப்பர்நகூமில் இருந்தவர்களே தவிர, யூதேயாவிலிருந்து வந்தவர்கள் அல்ல. கொஞ்சகாலம் பொறுத்து இவர்கள் யூதேயாவிலுள்ளவர்களோடு சேர்ந்து அவரைப் பகைத்தார்கள். இரட்சகர் எருசலேமில் ஒரு மனுஷனை ஓய்வுநாளில் சுகப்படுத்தினபோது பரிசேயர் அவரைக் குற்றப்படுத்தினார்கள். கப்பர்நகூமுக்கு வந்தபின்பு அவர் ஓய்வுநாள்தோறும் நோயாளிகளைக் குணமாக்கினதால் இங்குள்ள பரிசேயர் கோபங்கொண்டார்கள். நாள்கள் செல்லவே கலிலேயாவிலிருந்த வேதபாரகர் பரிசேயருக்கும், எருசலேமிலிருந்த வேதபாரகர் பரிசேயருக்கும் இடைவிடாத கடிதப் போக்குவரவு நடந்தது. ஆனாலும், திரளான ஜனங்கள் அவர்மீது மதிப்பும் பிரியமும் உள்ளவர்களாயிருந்தபடியால் அவர்களால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. ஆனால், ஏதாவது ரூபிக்கக்கூடிய குற்றத்தில் அகப்படமாட்டாராவென்று அவரைத் தொடர்ந்து சென்றார்கள். சில சமயங்களில் எருசலேமிலுள்ள வேதபாரகர் பரிசேயர், இதற்காகவே கலிலேயாவுக்குப் போவார்கள்.

அவர் **இரண்டாந்தரம்** கப்பர்நகூமை விட்டுக் கடற்கரையோரம் போனார். பரிசேயருடைய கெட்ட நோக்கத்தை அவர் அறிந்ததால் அவர்களுக்கு விலக வேண்டும் என்பது அவருடைய எண்ணம். தமது ஊழியத்துக்கு இடையூறுவராதபடி, அவர்களோடு தர்க்கம் செய்வதை வெறுத்தார். சத்துருக்களுக்கு விலகியிருக்கவேண்டும் என்பதும், திரளாகக் கூடிவரும் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், அவர்களைக் குணமாக்கவும், விசாலமான இடம்வேண்டும் என்பதுமே அவர் கடலோரம் போன நோக்கம். அவர் கப்பர்நகூமிலிருந்தபோது, கலிலேயாவிலும் யூதேயாவிலும் எருசலேமிலும் இதுமேயாவிலும், யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். இது போதாதென்று தீரு சீதோன் திசைகளிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்தார்கள். அவருடைய பிரசங்கத்தைப் பார்க்கிலும், அவர் செய்த அற்புதங்களே இத்தனை திரள்ான ஜனங்களை அவரிடத்தில் இழுத்தன. அவர் அநேகரைச்

சொஸ்தமாக்கினார். நோயாளிகள் அவரைத் தொடவேண்டு மென்று அவரை அதிகமாய் நெருக்கினார்கள். ஆகையால் அவர் ஒரு படவைத் தமது பிரசங்கப்பீடமாக்கி அதிலிருந்து ஜனங்களுக்குப் போதித்தார். செய்யவேண்டிய வேலை ஏராளமாயிருப்பதைக் கண்டார். சீஷர்களும் தம்மோடு சேர்ந்து இவ்வேலையில் உதவிசெய்ய விரும்பினார். இதைக்குறித்து ஆலோசிக்கும்படி மாலையில் சமீபத்திலிருந்த ஒரு மலையில் ஏறி இராமுழுதும் பிதாவைநோக்கி ஜெபம்பண்ணிக் காலையில் கீழே இறங்கினார். அநேக சீஷர்கள் அங்கே வந்தார்கள். அவர்களில் **பன்னிரண்டுபேரைத்** தெரிந்துகொண்டு அவர்கள் தம்மோடேகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களா யிருக்கவும் அவர்களை ஏற்படுத்தினார்.

இதற்குள்ளாகத் திரளான ஜனங்கள் அவர் இருந்த மலைக்கு வந்தார்கள். அவர்களில் அநேகருடைய நோய்களை நீக்கினார். மலைப்பிரசங்கமும் செய்தார். அதேநாளில் திரளான ஜனங்களோடு கப்பர்நகூமுக்கு வந்தார். அவர் சாப்பிடுவதற்கும் நேரமில்லாதபடி ஜனங்கள் அவரை நெருக்கினார்கள். அவர் தம்மை முழுவதும் மறந்து, இவ்வாறு இடைவிடாமல் வேலை செய்துகொண்டிருந்ததைக் கண்ட அவருடைய இனத்தார், அவர் மதிமயங்கியிருப்பதாக நினைத்து அவரைக் காப்பாற்றும்படி பிடிக்கவந்தார்கள். யூதருக்கு ஜெப ஆலயம் கட்டிக்கொடுத்த நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் மரண அவஸ்தையில் இருந்ததால் மூப்பர்களை அவரிடத்தில் அனுப்பினான். அவர் அவன் வீட்டுக்குப்போகப் புறப்பட்டார். அவனோ ஆண்டவர் என் வீட்டுக்கு வர நான் பாத்திரனல்ல, அவர் ஒரு வார்த்தை சொன்னாலே போதும் என்றான், அவன் விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார். வேலைக்காரனும் நோய்நீங்கிப் பிழைத்தான்.

மறுநாளில் **மூன்றாம்** பிரயாணமாக கப்பர்நகூமைவிட்டு நாயீன் ஊருக்குப் போனார். நாயீன் கப்பர்நகூமுக்கு வடமேற்கில் இருபத்தைந்துமைல் தூரத்தில் உள்ளது. கப்பர்நகூமுக்கு வந்த திரளான ஜனங்கள் இவ்வளவு தூரம் போவார்களா? ஆம் அவர்களும் அவரோடு போனார்கள். அவ்வூரிலிருந்து ஒரு பாடை வெளியே போகிறது. ஊராரில் வெகுஜனங்கள் கூடப் போகிறார்கள். ஒரு ஏழை விதவை தன் ஒரேமகனுக்காக அழுது கொண்டு போகிறாள். ஆண்டவர் அவளை ஆறுதல்படுத்திப் பாடையை நிறுத்தி, வாலிபனை உயிரோடெழுப்பிக் கொடுத்தார். எல்லாரும் ஏகோபித்து மகா பெரிய தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றார்கள். இவ்வேளையில் காவலில் அடைப்பட்டிருந்த **யோவான்** தன் தூதர்களை அவரிடத்தில்

அனுப்பினார். ஆண்டவர் தகுந்த உத்தரவு கொடுத்து முன்தூதனின் மயக்கத்தைப் போக்கினார். அவர்கள் போனபின்பு யோவானைக்குறித்து மகா மேன்மையாகப் பேசினார்.

பின்பு பரிசேயனான சீமோன் அவரைத்தன் வீட்டில் விருந்துக்கு அழைத்தான். அங்கே பாவியான ஸ்திரீ ஒருத்தி வந்து அவரால் பாவமன்னிப்புப் பெற்றுப்போனாள். அதன்பின் பன்னிருவ ரோடும் சில ஸ்திரீகளோடும், பட்டணங்கள் கிராமங்களில் பிரயாணம்பண்ணி, தேவ இராஜ்யத்தின் நற்செய்தியைக்கூறி அறிவித்துக் கப்பர்நகூமுக்குத் திரும்பினார். அவர் நாயீனூரில் வாலிபனைப் பிழைக்கவைத்த செய்தி எங்கும் பிரஸ்தாபமாகி எருசலேமுக்கு எட்டவே, விரோதிகளான வேதபாரகர் அவருடைய ஊழியத்துக்கு இடையூறு செய்யும்படி கப்பர்நகூமுக்கு வந்தார்கள். அச்சமயத்தில் பிசாசுபிடித்து குருடும் ஊமையுமான மனுஷனைக் குணமாக்கினார். ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு! தாவீதின் குமாரன் இவரல்லவா என்று அவரைப் புகழ்ந்தார்கள். மேசியாவைப் பற்றிய குறிப்புகளை ஜனங்கள் கண்டறிந்த முதற்சமயம் இதுவே. வேதபாரகருக்கும் பரிசேயருக்கும் உண்டான எரிச்சல் கொஞ்சமல்ல. நடந்த அற்புதத்தை மறுக்கவும் வழியில்லை. இவன் இதைப் பிசாசின் சக்தியினால் செய்கிறான் என்று ஜனங்களுக்குப் போதித்தார்கள். இவ்வாறு எப்பக்கத்திலும் அவர் நெருக்கப் படுவதையும், அதிகாரிகள் பகை அதிகரிப்பதையும் கண்ட மரியாளும் சகோதரரும், அவரோடு பேசி வீட்டுக்கழைத்துப்போக விரும்பி, தாங்கள் வந்திருப்பதாக அவருக்குச் செய்தி அனுப்பினார்கள். பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஊழியம் செய்கிற **குமாரனை,** இனஜன சம்பந்தம் பிரிக்க முடியாதெனச் சொல்லியனுப்பினார், மகன் சிறுவயதில் ஆலயத்தில் சொன்னதையும், கானாவூர்க் கலியாணத்தில் சொன்னதையும் அம்மாள் மறந்துபோனார்கள் போலிருக்கிறது.

அவர் அன்றையதினமே கடலோரத்திற் போய் படவில் உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடினார்கள். தேவராஜ்யத்தைக்குறித்து பலவித **உவமைகளாலே** அவர்களோடு பேசினார். அவர் தமது பிரசங்கப் போக்கை இவ்வாறு மாற்றினதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஆவிக்குரிய இரகசியங்களை ஜனங்கள் அறிந்துகொள்ளாததால், உவமைகளை ஞாபகத்தில் வைத்து அவைகளில் அடங்கியிருக்கும் கருத்தைச் சாவகாசமாய் யோசிக்கும்படிக்கும், சத்துருக்கள் அவருடைய வார்த்தையில் குற்றங்கண்டுபிடிக்கும்படி ஆயத்தமாய்க் காத்திருந்ததால், அவர்களுக்கு இடங்கொடாதபடிக்கும் உவமைகளினாற் பேசினார். சீஷர்கள் தனித்துக் கேட்டபோது அவர்களுக்குத் தெளிவாய் விளக்கிக் காண்பித்தார். அன்று

மாலையில் படவில் இருந்தபடியே அக்கரைக்குப் போகும்படி கட்டளையிட்டார். வேலையின் அலுப்பினால் படவில் அயர்ந்து நித்திரை செய்தார். திடீரெனப் பெருங்காற்று உண்டாயிற்று. சீஷர்கள் மிகவும் பயந்து தங்களை இரட்சிக்கும்படி அவரை எழுப்பினார்கள். இச்சமயத்தில் யார் யாரிடம் உதவி தேடவேண்டியது நியாயம்? ஜீவகாலமெல்லாம் தச்சுவேலை செய்தவரிடம், ஜீவகாலமெல்லாம் அக்கடலிலே சஞ்சரித்த செம்படவர் உதவிதேடுவது நியாயமோ? அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி காற்றையும் கடலையும் அதட்ட உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

படவு இரவெல்லாம் தென்கிழக்காய் ஓடி விடியக் **கெர்கெசேனர்** நாட்டிற்கு வந்தார்கள். பிசாசுபிடித்த இருவர் தோன்றினார்கள். அவர்களில் ஒருவன் மகா மும்முரமான பிசாசுகள் பிடித்தவனாகையால் மற்றச் சுவிசேஷகர் அந்த ஒருவனைப் பற்றிமாத்திரமே எழுதினார்கள். கதரேனருடைய நாடும் கெர்கெசேனர் நாடும் சமீபத்தில் இருந்ததால் மற்றவர்கள் கதரேனர் நாட்டில் என்றும் எழுதினார்கள். ஆண்டவர் அவர்களைக் குணமாக்கினார். பன்றிகள் கடலில் உருண்டு மாண்டன. அந்நாட்டார் அவரைத் தங்கள் எல்லையைவிட்டுப் போய்விடும்படி கேட்டுக்கொண்டார்கள். லேகியோனைக் குணமாக்கி அவனை அப்பட்டணங்களெங்கும் தமக்குச் சாட்சியாயிருக்கும்படி அனுப்பினார். இது அவர் திரும்ப அவ்விடம் போய் ஊழியம் செய்வதற்கு வழியை ஆயத்தம் செய்வது போலிருந்தது. இது அவருடைய **நான்காம்** பிரயாணம்.

அவர் மறுபடியும் தமது சீஷரோடு படவிலேறி வடமேற்கிலிருந்த கப்பர்நகூமுக்கு வந்தார். இக்கரையில் அவருக்காகக் காத்திருந்த திரளான ஜனங்கள் அவரைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். அதிகாரிகளின் வஞ்சகத்தால் ஜனங்கள் இன்னும் இழுப்புண்டுபோகவில்லை. சீஷரில் ஒருவரான **மத்தேயு** கப்பர்நகூமில் தன் வீட்டில் அவருக்கு விருந்து செய்தார். அவர் வகுப்பாரான ஆயக்காரரும் மற்றும் குறைவாக எண்ணப்பட்ட மனுஷரும் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர் இப்படிப்பட்டவர்களோடு போஜனம்பண்ணினதற்காகப் பரிசேயர் குற்றப்படுத்தினார்கள். அதுமாத்திரமல்ல, யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் அநேகந்தரம் உபவாசிக்க, உம்முடைய சீஷர்கள் எப்போதும் சாப்பிட்டவண்ணமாயிருக்கிறார்களே அதெப்படி என்றும் கேட்டார்கள். அதற்கு அவர்: புசிக்கிற காலமும் உண்டு; உபவாசிக்கிற காலமும் உண்டு. ஒன்றோடொன்று குழப்புவது உசிதமல்ல என்றார்.

அச்சமயத்தில் ஜெப ஆலயத்தலைவன் **யவீரு** மகா துயரத்துடன் அவரிடத்தில் வந்து, அவர் பாதத்தில் விழுந்து, மரண அவஸ்தையிலிருக்கும் தன் குமாரத்திக்காக வேண்டிக் கொண்டான். ஆண்டவர் புறப்பட்டுப் போகிறபோதே குமாரத்தி மரித்துப்போன செய்தியும் வந்தது. இதற்கிடையில் பன்னிரண்டு வருஷம் வியாதியாயிருந்த ஒரு ஸ்திரீ அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டுக் குணமானாள். அவரை நெருக்குகிறவர்கள் அல்ல, தொடுகிறவர்களே ஆசீர்வதிக்கப் படுவார்கள். நெருக்குவது சரீரம்; தொடுவது இருதயம். ஆலயத்திலும் ஜெபக்கூட்டங்களிலும் அவரை நெருக்குகிறவர்கள் அநேகர்; தொடுகிறவர்களோ சிலர். அவர் யவீரின் வீட்டுக்குட் சென்று மகளை உயிரோடெழுப்பி, அதை பிரஸ்தாபிக்க வேண்டாம் என்றார். இந்தக் காட்சியைக் காண சீஷரில் மூவரைமாத்திரம் அவர் தெரிந்து கொண்ட இரகசியமும் கவனிக்கத்தக்கது. தமது காரியங்களை அறிவதற்கும் அனுதாபப்படுவதற்கும் அவர்களை ஏற்றவர்களாகக் கண்டார். முக்கியமான சமயங்களில் இம்மூவரையும் அவரோடு காணலாம்.

அவர் யவீரின் வீட்டை விட்டுத் தமது வீட்டுக்குத் திரும்புகையில், இரண்டு குருடர் பின்தொடர்ந்து தங்களுக்கு இரங்கும்படி கெஞ்சினார்கள். அவர்கள் கண்களைத் திறந்து ஒருவருக்கும் இதை அறிவிக்காமலிருக்கும்படி கட்டளையிட்டார். கண் திறக்கப்பட்டவர்கள் எப்படி அதை அறிவிக்காதிருக்கக் கூடும்? பின்பு பிசாசு பிடித்த ஊமையனைக் குணமாக்கினார். ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். பரிசேயரோ மறுபடியும் அவர் பிசாசின் சக்தியினால் அவைகளைச் செய்கிறார் என்றார்கள். ஆண்டவர் தமது சீஷரோடு கப்பர்நகூமை விட்டு **ஐந்தாம்** பிரயாணம் புறப்பட்டார். தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு இரண்டாந்தரம்போக இது ஏற்ற சமயமாகக் கண்டார். முதலாவது தனிமையாகப் போனார். அவருடைய கீர்த்தி அப்பொழுது வெகுதூரம் பரவவில்லை. ஊரார் அவரை தச்சனாக அறிந்தவர்களாதலால் அச்சமயத்தில் மேசியாவாக ஏற்றுக்கொள்ள மனமற்றுக் கொல்ல எத்தனித்தார்கள். இப்போது அவரது மகத்துவ கிரியைகள் தேசமெங்கும் பிரஸ்தாபமாயிருந்ததால், அவர்கள் தம்மை ஏற்றுக்கொள்வார்களென்று நினைத்து இரண்டாந்தரமாக அங்கே போனார். அவர்கள் இச்சமயத்தில் அவரைக் கொல்லத்துணியாவிட்டாலும் அவரை ஏற்றுக்கொள்ளத்தக்க விசுவாசம் அவர்களிடத்தில் இல்லை. சில நோயாளிகளைக் குணமாக்கி, அவ்விடம்விட்டு நீங்கி, கிராமங்களிலே சுற்றி நடந்து உபதேசம்பண்ணினார்.

இவ்வாறு பட்டணங்கள் கிராமங்கள் தோறும் அவர் பிரசங்கித்து நோய்களைக் குணமாக்கின நாள்களில் அறுப்பு

மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் எனக் கண்டார். ஆகையால் அவர் தமக்குச் சீஷராகத் தெரிந்துகொண்டு, இதுவரை தம்மோடு வைத்துப் பழக்கிவந்த பன்னிருவரையும் பார்த்து: நானும் நீங்களும் ஒன்றாய்த் திரிவது நல்லதல்ல. ஜனங்கள் நம்மிடத்தில் ஏராளமாக வருகிறார்கள். ஆகையால் நான் என்னோடிருக்கிற மற்றச் சீஷருடன் ஒரு பக்கமாக வேலை செய்துகொண்டு போகிறேன். நீங்கள் புறப்பட்டு பல கிரமங்களுக்குப் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து நோய்களைக் குணமாக்கிப் பேய்களைத துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள். எல்லாவற்றிலும் ஞானமாயும் ஜாக்கிரதையாயும் நடந்துகொள்ளுங்கள். ஒன்றைக்குறித்தும் கவலை வேண்டாம். எல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லி அவர்களை அனுப்பினார். அவர்களை அனுப்பின பின்பு அவரும் பிரசங்கிக்கும்படி அவ்விடம் விட்டுப் போனார். பன்னிருவரும் வேலை முடித்துத் தம்மைக் கப்பர்நகூமில் சந்திக்கும்படி சொல்லியிருந்தார்.

இவ்வாறு சீஷர்கள் புறப்பட்டுப் போனபின்பு யோவான் சிரச்சேதமானான் என்கிற துக்கச்செய்தி அவருக்கு எட்டினது. இது பஸ்காப்பண்டிகைக்குச் சில நாள்களுக்குமுன் சம்பவித்தது. திபேரியாவைச் சூழ கிறிஸ்துவால் இத்தனை மகத்துவமான கிரியைகள் நடந்திருந்தும், திரளான ஜனங்கள் நாடெங்கும் அவரைப் பின்சென்றிருந்தும், யோவானைக் கொன்ற ஏரோது ஆண்டவரைக் கொண்டுவரச் சொல்லாதிருந்ததென்ன? ஒன்று, அவன் இக்காலத்தில் ரோமைக்குப் போயிருக்கவேண்டும், அல்லது யூதரின் மார்க்க காரியங்களில் கொஞ்சமும் பிரியமற்றுத் தன் சுயகாரியமே பிரதானமென்றிருந்திருக்கவேண்டும். ஆகிலும், ஏரோது அவரைப் பார்க்க ஆசைப்பட்டது மெய். கிறிஸ்துவின் அற்புத வல்லமை உன்னதமாய் விளங்கிற்று. அவர் செய்த அதிசயக்கிரியைகள் தேசமெங்கும் பரவித் திரளான ஜனத்தை அவரிடத்தில் சேர்த்தது. எங்கே பார்த்தாலும், எல்லார் வாயிலும் அவரைப் பற்றிய பேச்சாகவேயிருந்தது. அவருடைய மகத்துவங்கள் ஏரோதுவுக்கும் அறிவிக்கப்பட்டன. அவன் அவரைக்குறித்து விசாரித்தான். கிறிஸ்துவைக்குறித்து; அவர் எரேமியா, தீர்க்கதரிசிகளில் ஒருவர், அல்லது யோவானே உயிரோடெழுந்து வந்திருக்கலாம் என்று ஜனங்கள் இராஜாவுக்குச் சொன்னார்கள். அவனோ: நான் கொலைசெய்த யோவானே அவன் என்று சொல்லி அவரைப் பார்க்க ஆசைப்பட்டான். அவர்மேல் எவ்வித விரோதமும் அவனுக்கு இருந்ததில்லை. ஏரோது உம்மைக் கொலைசெய்யத் தேடுகிறான், இவ்விடம்விட்டு ஓடிப்போம் என்று பரிசேயர் அவருக்குச் சொன்னது, அவருடைய வேலையைக் கெடுக்கும்படி அவர்கள் சுயமாய்ச் சொன்னதேயல்லாமல் உண்மையல்ல.

அவர் கப்பர்நகூமுக்குத் திரும்பினபோது பன்னிருவரும் வந்து சேர்ந்தார்கள். யோவானுடைய மரணத்தை அவர்களும் அறிந்தார்கள். அங்கே கூடியிருந்த திரளான ஜனங்களும் கேட்டார்கள். இது மகா முக்கியாமன சமயம். இதுவரை ஆண்டவர் செய்த ஊழியத்தால் ஜனங்கள் அவரை அதிகமாகப் போற்றினபோதிலும், அவரை மேசியாவாக அறிந்துகொள்ள வில்லை. அவரைத் தீர்க்கதரிசிகளோடு ஒப்பிட்டுப் பேசினார்களேயல்லாமல் மற்றப்படியல்ல. அவர் தம்மை மேசியா அல்லது இராஜாவென்று உலகப்போக்காய்ச் சொல்லியிருந்தால் அவர்களுக்கு அதிகச் சந்தோஷமாயிருந்திருக்கும். அவருடைய ஆவிக்குரிய போதனைகள் அவர்களுக்கு விளங்கவில்லை. அற்புதங்களால் இழுப்புண்டார்களேயல்லாமல் இருதயத்தில் உண்டான மாறுதலினால் அல்ல. யோவான் கொல்லப்பட்டதைக் கேட்டவுடன் தமக்கும் அவ்விதமாகவே செய்வார்கள் என்பதை ஆண்டவர் படம்போல் கண்டார். அவர் திருமனதில் அதிகத்துயரமுண்டு. ஆகையால் வேலை செய்து திரும்பின தமது சீஷரைப்பார்த்து: நாம் அக்கரைக்குப்போய்ச் சற்றே இளைப்பாறுவோம் வாருங்கள் என்றார். ஜனக்கூட்டத்தை விட்டுப் பிரிந்திருக்க நாடினார்.

இது அவர் கப்பர்நகூமைவிட்டுப் போகிற **ஆறாம்** பிரயாணம். ஏரோதுக்குப் பயந்து அவர் ஓடவில்லை. தாம் மிகுதியாய் வேலைசெய்து அதிகமாய்க் களைத்துப்போயிருந்த தாலும், அப்போஸ்தலரும் வேலையிலிருந்து திரும்பி வந்ததாலும், யோவான் மரித்த செய்தி அவர் திருமனதுக்குத் துயரத்தைக் கொடுத்ததாலும், பிதாவின் சமுகத்தில் தனித்திருந்து இளைப்பாற விரும்பினார். அவர் பயந்து ஓடியிருப்பாரானால் மறுநாள் அரசன் அரமனைக்குச் சமீபமாயுள்ள கெனேசரேத்துக்குத் திரும்பி வந்திருப்பாரா? திரள்கூட்டத்தோடு கப்பர்நகூமுக்குப் போய் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்திருப்பாரா? அவர் தமது சீஷரோடு படவிலேறி வடகிழக்கு மூலையைப் பிடித்தோடி, கடற்கரைக்குச் சமீபமாயுள்ள பெத்சாயிதாப் பட்டணத்தைச் சேர்ந்த ஒரு வனாந்தரத்துக்குப் போனார். அது மகா விசாலமும் புல்லுள்ளதுமாயிருந்தது. அவர் அங்கே சேர்ந்தபோது அவர் படவிலே போகப் பார்த்திருந்த திரளான ஜனங்கள் கரை வழியாக நடந்து அங்கே அவரைச் சந்தித்தார்கள். அவர்கள் அவ்வளவு சீக்கிரம் அங்கே வந்தது ஆச்சரியமல்ல. கப்பர்நகூமிலிருந்து யோர்தான் நதிக்கரைக்குப்போக ஒருமணிநேரம் பிடிக்கும். நதிக்குச் சமீபமாயிருந்த பெத்சாயிதாவின் வனாந்தரத்துக்குக் கரைவழிபோக அரைமணியாகும். ஆகவே படவு சேரும்போது இவர்களும் அங்கே சேர்ந்திருக்கக்கூடும்.

அவர் ஜனங்களைக் கண்டு மனதுருகி அவர்களுக்குப் பிரசங்கித்து நோயாளிகளைச் சுகப்படுத்தினார். அவர்க

எல்லாரையும் வரிசை வரிசையாகப் புல்லின்மேல் உட்காரும்படி செய்து அற்புதமாக அவர்களைப் போஷித்தார். சாப்பிட்ட புருஷர் மாத்திரம் ஐயாயிரம் பேராயிருந்தார்கள். இவ்வதிசயத்தைக் கண்ட ஜனங்கள் உலகத்தில் வரவேண்டிய தீர்க்கதரிசி இவரே என்று சொல்லி அவரை இராஜாவாக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். பெரிய மோசம் வந்ததென்று ஆண்டவர் கண்டு, தமது சீஷர் அந்தச் சோதனையில் அகப்படாதபடி, படவில் ஏறித் திரும்பிப் போகும்படி துரிதப்படுத்தினார். இது மாலை நேரம். ஐயோ, அவர் தனிமையாக இங்கேயிருந்தால் கப்பர்நகூம் வருவதற்கு இரவில் கரையோரம் நடக்கவேண்டிய திருக்குமே என்று சீஷர் தாமதித்துக்கொண்டிருந்தார்கள். பரவாயில்லை, நீங்கள் போய்விடுங்கள் என்று அவர்களைத் துரிதப்படுத்தினார். அவர்கள் போனபின்பு அவர் தனித்துப் போய் ஜெபம் செய்தார். பன்னிருவரை அவர் தெரிந்து கொள்ளுமுன் இரவில் மலையில் ஜெபம் செய்தபின், இப்போது இரண்டாந்தரம் இரவில் மலைமீது ஜெபிக்கக் காண்கிறோம். இரண்டும் முக்கியமான சமயங்கள் என்பதைக் கவனிக்க.

சீஷர்கள் போக மனதில்லாமல் கரையிலேயே பின்னும் அவருக்காகக் காத்திருந்திருக்கலாம். வெகுநேரமாகியும் அவர் வராததால், அவர் கட்டளைப்படி பிரயாணப்பட்டார்கள். கணவாய் வழி காற்று மும்முரமாக அடித்தது. கடல் கொந்தளித்தது. ஆண்டவர் சொன்னபடி அவர்கள் பெத்சாயிதாவுக்குப் போகவும் கூடவில்லை. கப்பர்நகூமுக்கு நேராகவும் போக முடியவில்லை. காற்று படவை நடு கடலுக்குக் கொண்டுபோய் தெற்கே கெனேசரேத்துக்கு நேராகத் தள்ளிக்கொண்டு போனது. அவர்கள் எவ்வளவோ பிரயாசப்பட்டாலும் எல்லாம் வீணாயிற்று. புறப்பட்டதிலிருந்து எட்டு அல்லது பத்து மணிநேரம் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ஆண்டவர் சீஷர் படும் பாட்டை அறிந்து இரவின் நாலாம் ஜாமத்தில், அதாவது காலை மூன்று மணிக்கும் ஆறுமணிக்கும் இடையில், கடலில் நடந்து அவர்களிடம் வந்தார். அவரைக் கண்டு ஆவேசம் என்று நினைத்து, பன்னிரண்டு புருஷரும், சத்தமிட்டு அலறினார்கள். ஏற்கனவே கலங்கியிருந்தவர்களுக்கு இக்காட்சி எப்படியிருந்திருக்கும்? அவரை இன்னாரென்று அறிந்து ஏற்றுக்கொண்டபோதோ கொந்தளிப்பு அமர்ந்தது. சீஷர்கள் பிரமித்துப்போனார்கள். கிறிஸ்துவை நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாதிருப்பதே நமது ஜீவியமாகிய படவின் சகல தத்தளிப்புக்கும் சங்கடங்களுக்கும் காரணம்.

அவர் படவில் ஏறினவுடனே அது கெனேசரேத்துக் கரையைச் சேர்ந்தது. இவ்விடத்தில் அநேக பிணியாளிகளைக் குணமாக்கித் தமது சீஷருடன் கப்பர்நகூமுக்குத் திரும்பினார்.

கடலின் கீழ்க்கரையில் அப்பம் புசித்தவர்கள், ஆண்டவர் படவில் போகாமல் அங்கேயே தங்கினதால் மறுநாள் காலையில் அவரைக் காணலாம் என்றிருந்தார்கள். அவரைக் காணாதபோது மேற்கிலிருந்து கிழக்கே போன படவுகளில் ஏறிக் கப்பர்நகூமுக்கு வந்து, அவரைக் கண்டவுடன் ஆச்சரியத்தோடு எப்படி அங்கே வந்துவிட்டாரென்று கேட்டார்கள். அவர் தம்மிடத்தில். வந்து கூடினவர்களுக்கு தாமே **ஜீவ அப்பம்** என்பதாகப் பேசினார். இப்பொழுது ஒரு காரியத்தை மனதில் வைக்கவேண்டும். அதாவது, அவருடைய கீர்த்தி ஜனங்களுக்குள் எவ்வளவு பெருகினதோ, வேதபாரகர் பரிசேயருடைய பகையும், அவர்கள் அவருக்கு விரோதமாக ஜனங்களுக்குள் நடப்பித்த முயற்சியும் அவ்வளவாகப் பெருகினது. அவர் இராஜாவாகும்படி இடங்கொடாததும் ஜனங்களுக்கு வருத்தமாயிற்று. ஆகையால் ஜீவ அப்பம் என்று அவர் பேசினவுடனே அநேக சீஷர் அவரை விட்டு விலகிப் போய்விட்டார்கள். ஜனங்கள் அவர்மேல் பற்றுதல் காண்பித்த காரணம் அவருடைய **அற்புதம்**. பன்னிருவர் அவர்மேல் பற்றுதல் வைத்ததற்குக் காரணம் அவரது **உபதேசம்**. நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று ஆண்டவர் பன்னிருவரைக் கேட்டபோது, பேதுரு: ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய **ஜீவ வசனங்கள்** உம்மிடத்தில உண்டே என்றார். அது மாத்திரமல்ல, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்று சொன்னார். இதற்காகத்தான் ஆண்டவர் பொறுமையுடன் காத்திருந்தார். இந்த அறிவு தானாக வரவேண்டுமென்று விரும்பினார். அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டார். அதே நேரத்தில் பன்னிருவரில் ஒருவன் பிசாசு என்றும் அறிவித்தார்.

அவர் கப்பர்நகூமில் இருந்தபோது, அவர் ஐயாயிரம் பேரைப் போஷித்ததும், அவர்கள் அவரை இராஜாவாக்க விரும்பினதும் எருசலேமுக்கு எட்டினது. வேதபாரகரும் பரிசேயரும் அவர் பேரைக்கெடுக்கும் நோக்கமாக எருசலேமிலிருந்து வந்து, உமது, சீஷர்கள் கை கழுவாமல் சாப்பிட்டு முன்னோரின் பாரம்பரியத்தை மீறுவதென்ன என்று கேட்டார்கள். அவர்களை மாயக்காரரெனக் கண்டித்து அனுப்பினார். தமக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை விளக்கிக் காண்பித்தார். அதிகாரிகளை இவ்வளவு கண்டித்தது சீஷர்களுக்கும் பயந்தான். ஆகிலும், அவர்கள் பரம பிதாவால் நடாத நாற்றென்றும், அவர்கள் பிடுங்கப்பட்டு எறியப்பட வேண்டுமென்றும், குருடருக்கு வழிகாட்டும் குருடர் குழியில் விழுவார்கள் என்றும் தமது சீஷருக்குச் சொன்னார்.

மறுபடியும் கப்பர்நகூமைவிட்டு **ஏழாம்** பிரயாணம் புறப்பட்டார். அவர் இதுவரை கொஞ்சமும் இளைப்பாறக்கூட

வில்லை. கடலுக்குக் கிழக்கே போனால் அங்கே கூட்டம். கப்பர்நகூமுக்கு வந்தால் இங்கேயும் கூட்டம். ஆகையால், இப்பிரயாணத்தில் இதற்குமுன் போகாத வடமேற்கிலுள்ள புறஜாதிகள் நிறைந்த **தீரு, சீதோன்** எல்லைகளுக்குப் போனார். ஜனக்கூட்டத்தை விட்டுச் சீஷருடன் தனித்திருக்க விரும்பினார். அவ்விடத்தில் சிரோபேனிக்கியா தேசத்து கிரேக்க ஸ்திரீயின் மகளைக் குணமாக்கினார். அதைவிட்டு வடக்கே சீதோனுக்குப் போய், யோர்தானைக்கடந்து, கீழ்பக்கமாகக் கலிலேயாக் கடலோரமாய் நடந்து, தெக்கப்போலியின் எல்லைகளுக்கு வந்தார். இங்கே பத்துப் பட்டணங்கள் உண்டு. ஒன்று யோர்தானுக்கு மேற்கிலும், ஒன்பது பட்டணங்கள் ஆற்றுக்குக் கிழக்கிலும் இருந்தன. அவ்விடத்தில் கொன்னைவாயுடைய ஒரு செவிடனைக் குணமாக்கினார். இத்திசையில் பலவிதமான நோயாளிகளைச் சொஸ்தப்படுத்தினார். ஜனங்கள் ஆச்சரியப் பட்டு இஸ்ரவேலின் தேவனை மகிமைப் படுத்தினார்கள். இங்கே லேகியோனைக் குணமாக்கி, வடகிழக்கில் ஐயாயிரம் பேரைப் போஷித்திருந்தார். அந்த ஐயாயிரம்பேர் மேல்கரையிலிருந்து வந்தவர்கள்.

ஆகையால் ஆச்சரியப்பட்ட இந்த ஜனங்கள் புதிதாக அற்புதங்களைக் கண்ட கீழ்பக்கத்திலுள்ள புறஜாதிகளா யிருக்கலாம். தங்கள் தேவர்களைப்பார்க்கிலும் இஸ்ரவேலின் தேவன் மகா பெரியவர் என்று அவர்கள் துதித்ததாகத் தோன்றுகிறது. முன்னே கடலின் வடகிழக்கில் **பெத்சாயிதாவுக்கு** அருகாமையில் ஐயாயிரம் பேரைப் போஷித்தவர், இச்சமயம் கடலின் தென் கிழக்கில் கூடின அத்தேசத்து ஜனங்களில் நாலாயிரம் பேரைப் போஷித்தார். பின்பு படவிலேறி மேல்கரையிலுள்ள **மக்தலாவின்** எல்லைகளில் வந்தாரென்று **மத்தேயு** சொல்லுகிறார். **தல்மனுத்தாவின்** எல்லைகளில் வந்தாரென்று **மாற்கு** சொல்லுகிறார். தல்மனுத்தா மக்தலாவுக்குத்தெற்கே ஒரு மைலுக்குள்ளிருந்த சிறு கிராமமானதால் எப்படிச் சொன்னாலும் சரிதான். அவர் மக்தலாவைவிட்டுச் சில மைல் தூரத்திலிருந்த கப்பர்நகூம் சேர்ந்தார். சத்துருக்களான பரிசேயரும் சதுசேயரும் வானத்தில் ஒரு அடையாளம் காட்டும்படி அவரைக் கேட்டார்கள். இந்தப் பொல்லாத சந்ததியாருக்கு அடையாளம் வேண்டுமோ? இதுவரை விளங்கின அடையாளங்கள் போதாதாவென்று சொல்லி, மறுபடியும் கப்பர்நகூமைவிட்டுப் புறப்பட்டார்.

இது அவருடைய **எட்டாம்** பிரயாணம். நீண்டபிரயாணம் செய்து திரும்பினவர் தமது வீட்டில் இளைப்பாற ஏதுவில்லை. அவர்கள் அடையாளம் கேட்டபோது, அவர் தமது ஆவியில் பெருமூச்சுவிட்டார் என்று மாற்கு சொல்லுகிறார். அவர்கள் நடுவில் தங்க மனமற்றல்லவோ "அவர்களை விட்டு" படவில்

ஏறி அக்கரைக்குப் புறப்பட்டார். படவில் தமது சீஷரைப்பார்த்து: நீங்கள் பரிசேயர் ஏரோதியருடைய பொல்லாத உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார். அவர்கள் பெத்சாயிதாவுக்கு வந்தார்கள். இங்கே ஊருக்குப்புறம்பே ஒரு குருடனைக் குணமாக்கினார். பின்பு அவர்கள் பெத்சாயிதாவை விட்டு பிலிப்பு செசரியா பட்டணத்தைச்சேர்ந்த கிராமங்களுக்குப் போனார்கள். போகிறவழியில் அவர் தமது சீஷர்களைப் பார்த்து மகா விசேஷித்த, ஜீவனைப்போன்ற ஒரு கேள்வி கேட்டார். அந்தக்கேள்விக்கு வருகிற உத்தரவிலேதான் மனுக்குலத்தாரின் ஈடேற்றமிருக்கிறது. திருச்சபையின் அஸ்திபாரமும் அதுவே. ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். ஏனென்றால், இங்கே அங்கே சிலருக்குள் அவர் கிறிஸ்துவாயிருப்பாரோ என்கிற எண்ணமிருந்ததேயல்லாமல், மற்றெல்லாருக்குள்ளும் அவர் **தீர்க்கதரிசி** என்கிற எண்ணமேயிருந்தது. சிலர் உம்மை யோவான் ஸ்நானனென்றும், சிலர் எலியாவென்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவரென்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். உடனே ஆண்டவர் அவர்களைப்பார்த்து: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய **கிறிஸ்து** என்று பேதுரு சொன்னார். அதுபோலவே மற்ற அப்போஸ்தலரும் சொன்னார்கள். இவ்வளவுகாலம் ஆண்டவர் கலிலேயாவெங்கும் வேலை செய்துவந்திருந்தும், அவரை இன்னாரென்று அந்நாட்டார் அறியவில்லை. அப்போஸ்தலர் செய்த அறிக்கையில் அவரது மனுஷீகமும் தெய்வீகமும் வெளிப்பட்டது. இது சுய அறிவினால் வந்ததல்ல. இது தேவ வெளிப்படுத்தல் என்று ஆண்டவர் அவர்களுக்குச் சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். அதை அப்பொழுதே பிரஸ்தாபிக்காதபடி கட்டளையிட்டார்.

இதுவரை அப்போஸ்தலருக்கு வெளிப்படையாகச் சொல்லாமல் வைத்திருந்த ஒரு விஷயத்தை இந்த அறிக்கைக்குப்பின் சொல்லத்துணிந்தார். மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குபின் உயிர்த்தெழுந்திருக்க வேண்டும் என்றார். பேதுரு ஆண்டவர் மீதுள்ள பிரியத்தால் நீர் ஒருக்காலும் இப்படிச் சொல்லக்கூடாதெனக் கடிந்துகொள்ளத் தொடங்கினார். எனக்கு பின்னாகப்போ சாத்தானே, தேவவழியை விட்டு மனுஷவழியைச் சிந்திக்கிறாய் என்று கடிந்து கொண்டார். தாம் மாத்திரமல்ல, தம்மைப் பின்செல்லும் சீஷனும் சிலுவை சுமக்க வேண்டியவன்தான் என்றும் போதித்தார்.

இதற்குப்பின் தமது சீஷர் மூவரோடு ஒரு மலை மீதேறி அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். மறுரூபமான மலை

எதுவென்று சொல்லப்படவில்லை. தாபோர் மலையென்பது சிலருடைய அபிப்பிராயம். ஆண்டவர் இப்போது கலிலேயாவை விட்டு விலகி ரோமருடைய நகரமாகிய செசரியா பிலிப்பியில் இருக்கிறார். சத்துருக்களையும் ஜனக்கூட்டத்தையும் விட்டுவிலகித் தமது சீஷரோடு தனித்திருக்க வேண்டுமென்பதே அவர் இவ்வளவு தூரமாக வந்த நோக்கம். தாபோர்மலை ஐம்பது மைலுக்குத் தெற்கே கலிலேயாவில் கப்பர்நகூமுக்குச் சமீபமாயுள்ளது. மேலும், அக்காலத்தில் அம்மலைமீது கொத்தளங்களும் வீடுகளும் இருந்தன. ஆண்டவர் மறுரூபமாகும்படி கலிலேயாவுக்குத் திரும்பிப்போயிருப்பாரென்று எண்ண இடமில்லை. மாற்கு அது "உயர்ந்தமலை" என்கிறார். செசரியா பிலிப்பியிலிருந்தபோது மறுரூபமானதாகவும் சுவிசேஷகர் சொல்லுகிறார்கள். செசரியாவில் நின்று அந்த உயர்ந்தமலை எதுவென்று விசாரிக்கவேண்டியதில்லை. **எர்மோன்** மலையின் சிகரங்கள் எதிரே தோன்றும். அவைகளில் ஒரு சிகரத்தில் அவர் மறுரூபமானார். மத்தேயும் மாற்கும் "ஆறு நாளைக்குப்பின்பு" என்கிறார்கள். லூக்கா "ஏறக்குறைய எட்டு நாளுக்குப்பின்பு" என்கிறார். இதில் பிசகு இல்லை. முந்தினவர்கள் முதல் நாளையும் மறுரூபமான நாளையும் தள்ளி ஆறு நாள் என்கிறார்கள். லூக்கா அந்த இரண்டு நாளையும் சேர்த்து எட்டு என்கிறார். அவர் தமது பாடு மரணத்தைப் பற்றிச் சொன்னபின் மறுரூபமாகித் தமது மகிமையை வெளிப்படுத்தி, தேவனுடைய இராஜ்யத்தின் தன்மையை சீஷர் உலகப்போக்காக நினைத்துக் கொள்ளாமல், அந்த இராஜ்யத்தின் மேலான தன்மை எப்படிப் பட்டதென்று அறியவேண்டுமென்று விரும்பினார். அந்தக் காட்சியை அவர்கள் ஒருக்காலும் மறந்ததில்லை.

அவர் மூவரோடு மலையிலிருந்து இறங்கி அடிவாரத்தில் மற்றச்சீஷரையும் ஜனக்கூட்டத்தையும் கண்டார். அச்சமயத்தில் பிசாசுபிடித்த சந்திரரோகி ஒருவனை அவன் தகப்பன் அவரிடத்தில் கொண்டுவர அவனைக் குணமாக்கினார். பின்பு அவ்விடம்விட்டு யோர்தானைக்கடந்து வடகலிலேயாவுக்குப் போனார். தமது சீஷருக்குப்போதித்து அவர்களைப் பலப்படுத்துவதற்காகவே இவ்வாறு ஜனக்கூட்டத்தைவிட்டு விலகியிருந்தார். தமது பிரயாணத்தை "ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்" *(மாற்கு. 9:30)*. இந்நாள்களில் ஆண்டவர் தமது மரணத்தைக் குறித்தே பிரதானமாகச் சீஷருக்குப் போதித்தார். அவர்கள் தம்மை தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று அறிந்து கொண்டபின், அந்தக் கிறிஸ்து பாடுபட்டு மரிக்க வந்தவரென்பதையும், தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட அதுவே வழியென்பதையும், அவர்கள் திட்டமாய் அறிந்து கொள்ளும்படி பிரயாசப்பட்டார். **இராஜ்யம்** என்ற வார்த்தை அவர்களுக்கு இன்பமாயிருந்ததேயல்லாமல் **மரணம்**

என்பதை அவர்களுக்குக் கேட்கவும் பிரியமில்லை. அறிந்து கொள்ளவும் கூடவில்லை. இங்கேயிருந்து அவர் கப்பர்நகூமுக்குத் திரும்பினார். வழியிலே அப்போஸ்தலர் வரப்போகிற இராஜ்யத்தில் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று தர்க்கம்பண்ணினார்கள். இது தங்களுக்குள் இரகசியமாய் நடந்தபடியால் ஆண்டவருக்குத் தெரியாதென்று நினைத்தார்கள்.

அவர் வீட்டுக்கு வந்தபோது ஒரு சிறுபிள்ளையை எடுத்து, சிறுபிள்ளைகளைப்போல் தாழ்மையும், நம்பிக்கையும், சார்பும், களங்கமற்ற சுபாவமும் உள்ளவரே தேவராஜ்யத்துக்குரியர் ஆவார் என்றார். ரபிமாரிடம் வரிப்பணம் வாங்குகிற வழக்கமில்லை. ஆண்டவரைப்பெரிய தீர்க்கதரிசியாகக் கொண்டாடினதால் இதுவரை அவரிடம் வரிப்பணம் வாங்கவில்லை என்று தோன்றுகிறது. வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவிடம் வந்து: உங்கள் போதகர் வரி செலுத்துகிறதில்லையோ என்று கேட்டதினாலும், "பிள்ளைகள் செலுத்த வேண்டியதில்லையே, ஆகிலும் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு" என்று ஆண்டவர் சொல்வதினாலும் இது விளங்குகிறது. மீன் வாயிலிருந்து அற்புதமாய் எடுக்கப்பட்ட ஒரு வெள்ளிப்பணத்தை தமக்காகவும் பேதுருவுக்காகவும் செலுத்தினார்.

கப்பர்நகூமிலிருந்து **ஒன்பதாவது** பிரயாணம் புறப்படுகிறார். எருசலேமில் கூடாரப்பண்டிகை வந்தது. அவர் கப்பர்நகூமிலிருக்கும்போது அவரது சகோதரர் அவரிடம் வந்து: நீர் எருசலேமுக்குப்போய் இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்தால் மேன்மையுண்டு. ஆகையால், நீர் இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம் என்றார்கள். இப்படிச் சொன்னதற்கு அவர்கள் அவரை அறியாத அவிசுவாசம் ஒரு காரணம். மேலும், செம்படவர்களைச் சேர்த்துக் கொண்டு, அந்த நாட்டுப்புறங்களில் அத்தனை ஏராளமான அற்புதங்களைச் செய்வதைவிட, எருசலேமில் அறிவாளிகளான அதிகாரிகள் முன்பாகச் செய்தால், அவர்கள் ஏற்றுக்கொள்ளும்போது தேச முழுவதுமே ஏற்றுக்கொண்டதாகும் என்பது அவர்களது சுயஞானம். சத்துருக்களைப்போலவே சகோதரரும் அவருக்குச் சோதனையாயிருந்தார்கள். நீங்கள் இப்போது போங்கள், என் வேளை வரும்போது நான் போவேன் என்பதாக ஆண்டவர் சொன்னார். பண்டிகைக்குப் போன ஜனங்கள் அவரைக்காண ஆசையாயிருந்தார்கள். யூதரோ அவருக்குத் தீமை செய்யும்படி தேடினார்கள். ஜனங்கள் யூதருக்குப் பயந்து அவரைக்குறித்து ஒன்றும் பேசவில்லை. அவர் பெதஸ்தாக் குளத்தில் ஒரு மனுஷனை ஓய்வுநாளில் குணமாக்கினதிலிருந்து அவரைக் கொலைசெய்யும்படி அதிகாரிகள் தீர்மானித்தது நமக்குத் தெரியும். அதிலிருந்து

இதுவரை அவர் எருசலேமுக்குப் போகவில்லை. இப்போது அவர்கள் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்றத் துணியலாம். அதிகாரிகளின் நோக்கத்தை திரளான ஜனங்கள் அறிய மாட்டார்கள்.

ஆகையால், தாம் ஒய்வுநாளில் ஒரு மனுஷனைக் குணமாக்கினதற்காக யூதர் தம்மைக் கொலைசெய்யத் தேடுகிறார்கள் என்பதை எல்லாரும் கேட்க அறிவித்தார். அவர் உபதேசத்தைக் கேட்டு ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்தார்கள். பரிசேயர் அதை கேட்டுக் கோபங்கொண்டு அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படி சேவகரை அனுப்பினார்கள். அவர்கள் அவரைப் பிடிக்கக்கூடாமல் திரும்பிவந்து அவரைப் புகழ்ந்தார்கள். நிக்கொதேமு அவருக்காகப் பேசி சங்கத்தாரால் நிந்திக்கப்பட்டார். சிலர் அவரைப் பிடிக்க மனதாயிருந்தார்கள். ஆகிலும் அவர்மேல் கைபோடத் தைரியமில்லை. கலிலேயாவில் ஜனத்திரள் அவரை மேசியாவாக அறிந்து கொள்ளாமற்போனாலும் அவர்மேல் அதிகப் பிரியமுள்ளவர்களாயிருந்தார்கள். ஏதாகிலும் அவருக்குத் தீங்கு நேரிட்டால் எருசலேமியரை அவர்கள் சும்மாவிடமாட்டார்கள். பண்டிகை முடிந்தபின் பாவத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயைக் கல்லெறிந்து கொல்லும்படி அவரிடம் கொண்டுவர, அவளை அவர்கள் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார். பிறவிக் குருடன் ஒருவனைக் குணமாக்கித் தம்மை தேவகுமாரனென்று அவன் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். இந்தப் பண்டிகையில் அவர் செய்த உபதேசத்தாலும் கிரியைகளாலும் அவர்களுக்குள்ளேயே பிரிவினை உண்டாயிற்று. இதன்பின் கப்பர்நகூமுக்குத் திரும்பினார். இத்தோடு கலிலேயாவின் ஊழியம் முடிந்தது.

இந்த ஒன்றரை வருஷ ஊழியத்தின் பலனென்ன? அப்போஸ்தலர் ஏற்படுத்தப்பட்டார்கள். இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்தார்கள். அஸ்திபாரம் போடப்பட்டது. அதற்குமேல் தமது மரணம் உயிர்தெழுதல் பரமேறுதல் முதலான காரியங்களைப் போதிக்க இடமுண்டாயிற்று. இவைகளை அவர்கள் அறிந்து கொள்ளாவிட்டாலும் படிப்படியாக அறிந்துகொள்வார்கள்.

கலிலேயருக்குள் உண்டான பலன் என்ன? யோவான் சிரச்சேதமான சமயம்வரை, அவருடைய கீர்த்தி மகா உன்னதமாயிருந்தது. தேசமே அவரைச் சூழ்ந்து போற்றினது. அவரை இராஜாவாக்கும்படி துணிந்தார்கள் ஆனால், அவருடைய ஆவிக்குரிய போதனைகள் அநேக சீஷரைப் பின்வாங்கச் செய்தது, கலிலேயாவிலுள்ள பரிசேயர் இடைவிடாமல் அவருக்கு விரோதமாகப் பேசி ஜனங்களை அவரைவிட்டுப் பிரித்தார்கள்.

ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் வரவரக் குறைந்து, ஜனத்திரள் அவரைப் பின்செல்லாது ஒழிந்தன. அவர் வடக்கே போய் மறுரூபமாகிக் கப்பர்நகூமுக்கு வந்தபோது, எப்போதும் எதிர்பார்த்துக் கூடிவருகிற ஜனக்கூட்டத்தைக் காணோம். தம்மை தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று அவர் வெளிப்படையாகச் சொல்லாதது கலிலேயருக்கு இடறலாயிருந்தது. தம்மை தேவகுமாரன் என்று வெளிப்படையாகச் சொன்னது யூதேயாவிலுள்ளவர்களுக்கு இடறலாயிருந்தது. இவ்வாறு இரு நாட்டாராலும் புறக்கணிக்கப்பட்டார்.

"வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால் அது இந்நாள்வரைக்கும் நிலைத்திருக்கும்" என்று சொன்னார். அதுபோலவே கோராசின் பெத்சாயிதாப் பட்டணங்களை குறித்தும் கூறினார். கப்பர்நகூமுக்கு அருளப்பட்ட சிலாக்கியங்களில் அது உயர்த்தப்பட்டது நிச்சயமே. உலக இரட்சகர் அந்தப் பட்டணத்திலேயே ஜனங்கள் நடுவில் வாசம்பண்ணினார். அதைத் தமது சொந்த ஊராகத் தெரிந்துகொண்டார். அப்போஸ்தலரில் மிகுதியானவர்கள் கலிலேயாவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பிரதானமானவர்கள் கப்பர்நகூம் பெத்சாயிதாவிலுள்ளவர்கள். அவர்களே அவர்களுக்குச் சாட்சிகளாயிருந்தார்கள். ஆண்டவர் தமது பலத்த செய்கைகளில் மிகுதியானவைகளை அங்கே செய்தார். குருடர் பார்வையடைந்தார்கள். குஷ்டரோகிகள் சுத்தமானார்கள். செவிடர் கேட்டார்கள். மரித்தோர் பிழைத்தார்கள். அவர் அநேக உவமைகளாலே அவர்களோடு பேசினார். "என் வாயை உவமைகளால் திறப்பேன், உலகத் தோற்றமுதல் மறை பொருளானவைகளை வெளிப்படுத்துவேன்" என்னும் தீர்க்கதரிசனம் அங்கே நிறைவேறிற்று. அங்கே இரவெல்லாம் அவர்களுக்காக ஜெபம் செய்தார். ஆவியானவரின் பலத்த செயல்கள் அங்கே காணப்பட்டன. இவைகள் யாவையும் கவனிக்கும்போது பரலோகமே கப்பர்நகூமுக்கு இறங்கி வந்ததுபோலிருந்தது. அவர்கள் வானபரியந்தம் உயர்த்தப் பட்டதும் பொய்யோ?

அப்படியிருக்க, அவர்கள் பாதாளபரியந்தம் தாழ்த்தப்பட்ட காரணம் என்ன? அவர்கள் **மனந்திரும்பவில்லை**. திரள் திரளாய்க் கூடினார்கள். எத்தனை தூரமானாலும் அவர்கூடவே போனார்கள், தங்கள் நோயாளிகளைக் கொண்டு வந்து சுகம்பெற்றுக் கொண்டார்கள் அவர் செய்த பிரசங்கத்தையெல்லாம் கேட்டார்கள். மகாபெரிய தீர்க்கதரிசி தங்களுக்குள் தோன்றியிருக்கிறார் என்று புகழ்ந்தார்கள் இவை யாவும் செய்தும்

மனந்திரும்பாமல் தங்கள் பழைய வழியிலேயே நடந்தார்கள். தங்கள் நடுவில் வந்து வாசம்பண்ணினவர் இன்னார் என்று கண்டுகொள்ளும் ஞானப்பார்வை இல்லை. ஆகையால், தங்களுக்கு அருளப்பட்ட திரளான சிலாக்கியங்களை இழந்து தேவகோபாக்கினைக்குப் பாத்திரரானார்கள். கலிலேயாக்கடல் ஒன்று தவிர, வேறொன்றும் இருந்த இடம் தெரியாமல் அழிந்தன. நமக்கு அருளப்பட்ட சிலாக்கியங்களுக்குத் தக்கபடி நாம் நடவாமற்போனால் நமது முடிவும் அப்படியே இருக்கும்.

கலிலேயாக்கடலையும், சவக்கடலையும் ஒப்பிட்டுப்பார்த்து இவ்வதிகாரத்தை முடிப்போம். கலிலேயாக்கடலின் அகலம், நீளம் இன்னதென்று முன்னமே பார்த்தோம் சவக்கடல் ஒன்பதுமைல் அகலமும், ஐம்பது மைல் நீளமும் உள்ளது. இது மத்தியதரைக்கடல் மட்டத்துக்கு ஆயிரத்து முந்நூறு அடி தாழ்ந்தது. ஆகையால் கலிலேயாக் கடலைப்பார்க்கிலும் அறுநூறு அடி தாழ்வானது. சவக்கடலின் தண்ணீர் கொடிய உப்பும் கசப்புமானது. கலிலேயாக்கடல் கடலென்று அழைக்கப்பெற்றாலும் அது மகா பெரிய ஏரி. அதன் ஜலம் உப்பல்ல. அது பானம்பண்ணுவதற்கு மகா திவ்யமானது. சவக்கடல் சாவுக்குரியது. அதில் மீன்கள் இல்லை. அதன் கந்தகத்தன்மையால் மீன்கள் பிழைக்காது. கலிலேயாக்கடலில் மீன்கள் ஏராளம். சவக்கடலைச்சுற்றிலும் செழிப்பான சோலைகள் இல்லை. ஜனங்கள் குடியிருப்பதில்லை. சுற்றிலும் பயங்கரமான வனாந்தரமுண்டு. கலிலேயாக்கடலைச் சுற்றிலும் அழகான சோலைகளும் வயல்களும் உண்டு. ஏராளமான பட்டணங்களும் கிராமங்களும் உண்டு. புருஷர் ஸ்திரீகள் பிள்ளைகள் அதைச்சுற்றிலும் மகிழ்ச்சியோடு கூடுவார்கள். சவக்கடலில் படவுகளின் பிரயாணம் இல்லை. மனுஷர் அதில் நீந்தமுடியாது. கலிலேயாக்கடலில் ஆயிரக் கணக்கான படவுகள் பிரயாணம்பண்ணும். ஜனங்கள் சந்தோஷமாக ஸ்நானம் செய்வார்கள். அதன் ஜலத்தால் ஆரோக்கியம் உண்டென்று நோயாளிகள் அதில் குளிப்பார்கள்.

சவக்கடலின் தண்ணீர் எந்தக்காற்றுக்கும் அசையாது. கலிலேயாக்கடலோ காற்று வந்தவுடன், அசைந்து குவிந்து, அதன் அழகிய அலைகள் அடுக்கடுக்காய்க் கரையில் மோதும். சவக்கடல் அல்லது உப்புக்கடல் பழைய ஏற்பாட்டுக்குரியது. கலிலேயாக்கடலோ புதிய ஏற்பாட்டுக்குரியது. சவக்கடல் சாபமான நியாயப் பிரமாணம். அந்த வனாந்தரத்தில் நியாயப்பிரமாணத்தைப் போதித்த சந்நியாசிபோன்ற யோவான் தங்கினார். கலிலேயாக்கடலில் ஆசீர்வாதமும் கிருபையும் நிறைந்த ஜீவசுவிசேஷத்தை கிறிஸ்து பிரசங்கித்தார். சவக்கடலிலிருந்து யோவான் யோர்தானுக்கு வந்து எல்லா நீதியையும் நிறைவேற்றும் கிறிஸ்துவைச் சந்தித்தார். அங்கேதான்

நியாயப்பிரமாணம் சுவிசேஷத்தால் விழுங்கப்பட்டது. யோவான் கெனேசரேத்துக் கடலண்டை வந்து பிரசங்கிக்க, ஏரோதால் பிடிபட்டு, சவக்கடலின் அருகிலிருந்த மக்கேரஸ் கோட்டையில் அடைபட்டிருந்து, அங்கேயே சிரச்சேதமானார். கிறிஸ்து ஸ்நானம்பெற்றபின் சவக்கடலோரமாய்ச்சென்று, வனாந்தரத்தில் பிசாசை மேற்கொண்டு, தமது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கலிலேயாக்கடலுக்கு வந்தார். சவக்கடல் தேவகோபம்; கலிலேயாக்கடல் தேவாசீர்வாதம். சவக்கடல் எவ்வளவு தண்ணீரைப் பெற்றாலும் வெளியே கொடாது. கலிலேயாக் கடல் தான் பெற்ற தண்ணீரை வெளியே தாராளமாய் அனுப்பும். விசுவாசிக்கும் அவிசுவாசிக்குமுள்ள வித்தியாசங்களை இதிலே காணலாம். "தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்துத் தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முட்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதன் முடிவு." *(எபி. 6:7,8).*

15
பன்னிருவர்
The Twelve

நமதாண்டவர் செய்த ஊழியத்தால் நான்குதிசையிலும் பெரிய அசைவு உண்டாயிற்று. அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. திரளான ஜனங்கள் கலிலேயா, யூதேயா, இதுமேயா, யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள பெரேதுயா முதலான இடங்களிலிருந்து வந்து அவரைப்பின் சென்றார்கள். அவரைத் தொட்டாலே போதுமென்று அவரை நெருக்கினார்கள். அவரைக் குறித்து அவர்களுக்கிருந்த மதிப்பும் உற்சாகமும் கொஞ்சமல்ல. ஜனங்களுடைய மதிப்பு அதிகரித்ததுபோலவே அதிகாரிகள் பகையும் அதிகரித்தது. அவர்கள் அவரைக் கொன்றுபோடத் தீர்மானித்தும் ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள். தாம் சீக்கிரத்தில் அவர்களால் கொல்லப்படபோகிறது ஆண்டவருக்குத் தெரியும். தமது ஊழியம் தமது மரணத்தோடு ஒழிந்துபோகாமல் எந்நாளும் நடந்தேறவேண்டுமெனச் சித்தங்கொண்டார். திரள்கூட்டம் அவரைப் பின்சென்ற போதிலும் எல்லாரையும் அவர் நம்பவில்லை. அவர்கள் அவர் உபதேசத்தை ஆவலோடு கேட்டார்கள். அவர் செய்த கிரியைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவரை நல்லபோதகராக மதித்தார்கள். ஆகிலும், எல்லாரும் அவருக்குச் சீஷராகமாட்டார்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்கவுமாட்டார்கள். சீஷனுடைய நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றவு மாட்டார்கள். இக்காலத்தில் ஒரு கிராமத்தார் கொஞ்சம் இணங்கினால் நாம் சந்தோஷத்தோடு அவர்களை மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளுவோம். நமக்குத் தொகை பிரியம். ஆண்டவருக்கு உண்மை பிரியம். அவர் மனுஷருள்ளத்தை அறிந்தவரானதால் புறம்பான எழுப்புதலில் மயங்குகிறவரல்ல. தமக்குச் சீஷராவது லேசான காரியமல்லவென்று திட்டமாய்ப் போதித்தார்.

ஓரு சமயம் வேதபாரகனொருவன் அவரிடத்தில் தனித்து வந்து: போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி

வருவேன் என்றான். இப்படித் தன்னை ஒப்புவிக்கக் கூடிய சீஷன் யார்? வார்த்தைகளை மாத்திரம் பார்த்தால் நிகரற்ற பிரதிஷ்டைபோல் தோன்றுகின்றன. ஆண்டவர் அவன் நோக்கத்தை அறிவார். அவன் உலகசிந்தையுள்ளவன். கிறிஸ்துவோடு சேர்ந்து கொண்டால் அவர் இராஜ்யத்தில் தனக்கு மேன்மையான பதவிகிடைக்கும் என்று எண்ணி அப்படிச்சொன்னான். "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று சொன்னார். ஆண்டவர் கொடுத்த உத்தரவால் அவனுடைய அந்தரங்கம் வெளிப்பட்டது. தன்னை உற்சாகமாய்ப் பிரதிஷ்டை செய்த வேதபாரகன் மறுவார்த்தையின்றி வந்தவழியே திரும்பினான்.

அவருடைய **சீஷர்களில்** வேறொருவன் அவரைப்பார்த்து: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டான். இக்காலத்தில் கிறிஸ்தவர்களாகும்படி விரும்புகிற இந்து சிநேகிதர்கள் சிலசமயம் இதைப்போல் சொல்லுகிறதுண்டு. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். தாயாருக்கு ஒன்று ஆனவுடன், அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்துவிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறேன் என்பார்கள். இதுபோலவே அந்தச்சீஷனும் உத்தரவு கேட்டான். அவனுடைய தகப்பன் சாகவுமில்லை. மரணப் படுக்கையில் இருக்கவுமில்லை. அவன் எப்போது மரிப்பானோ அதுவும் தெரியாது. ஆகிலும் அதுவரை வீட்டிலிருந்து ஆஸ்திகளைப் பாகம் செய்வதில் தனக்கு வரும் பங்கைப்பற்றிக்கொண்டு, பின்பு சாவகாசமாய் அவரைப்பின் செல்லலாமென்பது அவன் நோக்கம். அவனுடைய சோதனையை ஆண்டவர் கண்டார். அவன் போனால் குடும்பச்சிக்கல்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அவனைச் சூழ்ந்துகொள்ளும். அவன் திரும்பிவருவது கூடாதகாரியமென்று ஆண்டவர் அறிவார். தமது ஊழியத்துக்குப் பிரயோஜனமாயிருக்கக்கூடியவனை இழந்துவிட ஆண்டவருக்கு மனம் வரவில்லை. ஆகையால், மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணிக் கொள்வார்கள், நீ என்னைப் பின்பற்றிவா என்று சொன்னார். இந்தச்சீஷன் பன்னிருவரில் ஒருவரான **பிலிப்பு** என்பது சிலருடைய அபிப்பிராயம்.

வேறொரு சமயம் ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் உம்மைப் பின்பற்றுவேன், ஆகிலும் முந்திப்போய் வீட்டாரை வழியனுப்பிக்கொள்ள உத்தரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டான். முந்தின இரண்டு மனுஷருடைய குணமும் இவனில் காணப்படுகிறது. வேதபாரகனைப்போல் அவரைப் பின்பற்ற விரும்புகிறான். மற்றவனைப்போல் வீட்டையும் நினைக்கிறான். வீட்டுக்குப்போய்

இன ஜனத்தாரோடு ஆலோசனை செய்தால், அவர்கள் இவனை எளிதில் போகவிடுவார்களா? பலரும் பலதைச் சொல்லும்போது அவன் தீர்மானம் நிலைக்குமா? இருமனமுள்ளவன் தன் வழியில் எப்படி நடப்பான்? ஆண்டவர் அவனுக்குச் சரியான உத்தரவு கொடுத்தார். "கலப்பையின்மேல் கைவைத்துப் பின்னிட்டுப் பார்க்கிறவன் எவனும், தேவனுடைய இராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவனல்ல" என்றார். எலியா எலிசாவை அழைத்தபோது அவன் கை கலப்பையில் இருந்தது. எலியா அவன்மேல் தன் சால்வையைப் போட்டவுடனே அவன் தன் மாடுகளைவிட்டு எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் தாயையும் முத்தம்செய்ய உத்தரவுகொடும், பின்பு உம்மைப் பின் தொடருவேன் என்றான். அப்படியே எலிசா வீட்டுக்குப்போய் விருந்து செய்து தாமதியாமல் எலியாவுக்குப் பின்சென்றான். இவ்விருவருடைய காரியமும் ஒன்றல்ல. எலிசா எலியாவினிடத்தில் தானே வலியவந்து நான் உம்மைப் பின்செல்லுவேன் என்று சொல்லவில்லை. எலியா திடீரென்று அழைத்ததினாலே பின்செல்ல வேண்டியதாயிற்று. இவனோ ஆண்டவரிடத்தில் தானேவந்து: உம்மைப் பின்செல்லுவேன், ஆகிலும் முந்தி வீட்டுக்குப்போய் வழியனுப்பிக்கொள்ள உத்தரவுகொடும் என்று கேட்டான். போனால் வரமாட்டான் என்பது ஆண்டவருக்குத் தெரியும். அவர் மனுஷர் உள்ளத்தையும் நோக்கங்களையும் திட்டமாய் அறிந்திருந்தபடி யால் பின்பற்றுவோம் என்று சொல்லுகிறவர்களைக் கவனியாமல் விட்டுவிடுகிறார். பின்பற்றத் திகைக்கிறவர்களைத் தைரியப் படுத்திச் சேர்த்துக்கொள்ளுகிறார். நம்மை இன்னாரென்று திட்டமாய் அறிந்திருக்கிற ஆண்டவருக்கு ஊழியக்காரரா யிருப்பது எவ்வளவு பயபக்திக்குரிய காரியம். மனுஷருக்கென்று பார்வைக்குச் செய்கிற ஊழியம் கிறிஸ்துவின் ஊழியம் அல்ல.

எஜமான் உலகத்தில் செய்யவந்த வேலை மகா பெரிது. அவருக்குப்பின் அது நடந்தேற வேண்டுமானால் அவருக்குச் **சீஷர்கள்** தேவை. அநேக சீஷர்கள் அவரைப் பின்சென்ற போதிலும் எல்லாரும் உதவமாட்டார்கள். எல்லாரும் கடைசிவரை நிலைநிற்கவுமாட்டார்கள். திரள்கூட்டமான சீஷர்களுக்கு பரம இரகசியங்களை விளக்கிக்காட்டுவது கஷ்டம். சீஷர்களின் தொகை எவ்வளவுக்குச் சுருக்கமாயிருக்குமோ, அவ்வளவுக்கு அது நல்லது. விலையேறப்பெற்ற பரம பொக்கிஷத்தை ஒப்புவிக்கத்தக்க உண்மையுள்ள சீஷரைத் தெரிந்தெடுக்கவேண்டும். அவர்கள் தங்களுக்கு உலகத்தில் இலாபமும் மேன்மையுமாயிருப்பவைகளை விட்டுப் பிரிய வேண்டும்.

தலைசாய்க்க இடமில்லாத தரித்திர எஜமானோடு சேர்ந்து அவருக்கு நேரிடும் நிந்தை பாடுகளில் பங்கடையவேண்டும்.

எல்லாச் சோதனைகளிலும் இடறல்களிலும் அவரோடு நிலைத்திருக்கவேண்டும். அவருக்காகத் தங்கள் ஜீவனையும் கொடுக்கவேண்டும். அவரில் அன்பு வைத்து அவருடைய உபதேசத்துக்குக் கீழ்ப்படியவேண்டும். அவ்விதமான ஆள்களைத் தெரிந்தெடுப்பது இலேசல்ல. இவர்களே தேவனுடைய சபைக்கு அஸ்திபாரக் கல்லாயிருக்கப் போகிறவர்கள். இவர்களைக்கொண்டே எஜமான் உலகத்தில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார். இவர்கள்மூலமாகவே பாவிகளுக்கு இரட்சிப்பு கூறப்படவேண்டும். மகா உத்தரவாதமான வேலையை எஜமான் இவர்கள் கையில் ஒப்புவிக்கப்போகிறார். அவர்கள் யாராயிருக்கலாம்? இவர்களைத் தெரிந்தெடுக்க ஆண்டவர் பிதாவின் முகத்தை நோக்கிப்பார்த்தார். ஒரு இராமுழுதும் தனித்திருந்து இதற்காக ஜெபம் செய்தார். மறுநாள் காலையில் சீஷர்களின் கூட்டம் தம்மிடத்தில் வந்தபோது அவர்களில் பத்துப்பேரையல்ல, பதினைந்து பேரையுமல்ல, இஸ்ரவேல் கோத்திரத்தின் இலக்கப்படி **பன்னிருவரைத்** தெரிந்து கொண்டார். இந்தப் பன்னிருவரைத் தமக்கு **அப்போஸ்தலராக** ஏற்படுத்தினார். அப்போஸ்தலர் என்றால் **அனுப்பப்பட்டவர்கள்** என்று அருத்தம். அதாவது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க அவரால் நியமிக்கப்பட்டு அதிகாரம் பெற்றவர்கள். முதலில் ஐந்து பேர் அவரைச் சேர்ந்தார்கள். அவர் கலிலேயாவுக்கு வந்தபின் பன்னிருவரை அழைத்தார். சற்று பொறுத்து இந்தப் பன்னிருவரையே அப்போஸ்தலராக்கினார்.

இவ்வளவு மகத்துவமான ஊழியத்தைச் செய்ய மகத்துவமான மனுஷர் வேண்டுமல்லவோ? இராஜ்யத்தின் சுவிசேஷம் சகல மனுஷருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டுமே. உலகத்தில் இராஜாக்கள், மந்திரிமார், பிரபுக்கள், ஞானிகள் தர்க்கசாஸ்திரிகள் உண்டே. இவர்களோடு பேசத்தக்க சாமர்த்தியமும் கல்வியும் உள்ளவர்களல்லவோவேண்டும். அறிவாளிகள் கேட்கும் பல கேள்விகளுக்கு உத்தரவு சொல்லக்கூடிய திறமையுள்ளவர்கள் அவசியம். அஸ்திபாரம் பலவீனமாயிருந்தால் கட்டடம் எப்படி நிலை நிற்கும்? ஊழியம் எவ்வளவு விசேஷமோ அவ்வளவுக்கு ஊழியர்களும் விசேஷித்தவர்களாயிருக்கவேண்டுமே. அப்படிப்பட்ட திறமைசாலிகள் எஜமானுக்குக் கிடைக்கமாட்டார்களா? அவர்களைத் தெரிந்தெடுப்பது அவ்வளவு கஷ்டமா? யூதர்களுக்குள் அவரை விசுவாசித்தவர்களும் விசுவாசிக்கக் கூடியவர்களுமான கல்விமான்கள் இல்லையா? வேதசாஸ்திரியும் இஸ்ரவேலில் போதகனுமான **நிக்கோதேமுவைத்** தெரிந்து கொள்ளலாம். ஜெப ஆலயத்தலைவன் **யவீரைத்** தெரிந்து கொள்ளலாம். கற்பனைகளில் எது பிரதானமென்று கேட்ட விவேகமுள்ள **வேதபாரகனைத்** தெரிந்துகொள்ளலாம். அவன் தேவனுடைய

இராஜ்யத்துக்குத் தூரமானவனல்லவென்று அவனிடத்தில் அன்புவைத்துச் சொன்னாரே. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி ஆவலோடு ஓடிவந்த **ஐசுவரியவானை** வசப்படுத்தியிருக்கலாம். அவருக்கு விருந்துசெய்த **பரிசேயனைத்** தெரிந்துகொள்ளலாம். இவர்கள் வேத சாஸ்திரமறிந்தவர்கள். சகலரும் மதித்து வந்த அரிமத்தியாவூர் **யோசேப்பைத்** தெரிந்துகொள்ளலாம். அவன் கிடைத்தால் பணச்சகாயத்துக்கும் செல்வாக்குக்கும் குறைவிராது. கப்பர்நகூம் **இராஜாவின் மனுஷனைத்** தெரிந்துகொண்டிருக்கலாம். அவன் மகனை கானாவிலிருந்துகொண்டு குணமாக்கினாரே. அவன் தன் வீட்டாரோடு விசுவாசியானான். ஏரோது இராஜாவுக்கும் அவன் இனத்தானாயிருந்தான். ஆண்டவருக்குச் சிநேகிதனாயிருந்த பெத்தானியாவூர் **லாசருவைத்** தெரிந்து கொள்ளலாம். அவன் எருசலேமியருக்குச் சொந்தமானவன். எல்லாராலும் புகழ்பெற்ற **கமாலியேல்** எப்பேர்ப்பட்ட சாஸ்திரி? அவனை பிடிக்க ஆண்டவரால் கூடாதா? எருசலேமை ஆதாயப்படுத்த அவன் ஒருவன் போதாதா? இக்காலத்தில் **சவுல்** என்னும் வாலிபன் எருசலேமில் வேதசாஸ்திரம் கற்றுக் கொண்டிருந்தாரே. அவரைத் தெரிந்துகொண்டிருந்தால் திருச்சபைக்கு அவ்வளவு துன்பம் நேரிட்டிருக்கமாட்டாதே. இன்னும் அவரால் நன்மை பெற்றவர்களும் அவரை நன்கு மதித்த கல்விமான்களும் தனவான்களும் இருந்தார்களே. அவர்களில் பன்னிருவரைத் தெரிந்துகொள்ளக்கூடாதா?

இவைபோன்ற கேள்விகள் நமது புத்திக்கு நியாயமும் ஏற்றதுமாய்த் தோன்றும். சாமுவேல் என்னும் தீர்க்கதரிசி ஈசாயின் மக்களுடைய முகத்தோற்றத்தைக் கண்டு அவர்களை அபிஷேகம் செய்ய நினைத்ததுபோல, தற்காலத்தில் முகத்தோற்றமும் புறம்பான காரியங்களுமே ஊழியர்களை ஏற்படுத்துகிற விஷயத்தில் நம்மை ஏமாற்றுகின்றன. ஊழியர்களை ஏற்படுத்துவதில் நாம் மோசம்போனால் அவர்கள் ஊழியமும் மோசமாகுமென்பது மெய். உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிற கர்த்தர், புறம்பான காரியங்களால் மோசம் போகிறவரல்ல. தமது பரம பொக்கிஷத்தை நிரப்ப அவருக்கு வெறுமையான பாத்திரங்கள் வேண்டும். ஏற்கனவே நிறைந்த பாத்திரங்களை அவர் உபயோகிக்க முடியாது. மேற்கூறிய வகுப்பார் கல்வியிலும் ஞானத்திலும் அந்தஸ்திலும் செல்வத்திலும் உத்தியோகத்திலும் ஜனங்கள் மதிப்பிலும் மேன்மைபெற்றிருந்தார்கள். கலிலேயனாகிய இயேசுவுக்குச் சீஷராவது அவர்கள் அந்தஸ்துக்குக் குறைவு. தங்கள் ஐசுவரியத்தையும் உலக அந்தஸ்தையும் விட்டுப்பிரிவது அவர்களுக்குக் கஷ்டம். அவரைப் பின்சென்றால் அவரை அவமதித்த அதிகாரிகள் தங்களையும் அவமதிப்பார்கள். தம்மைப் பின்செல்லக்கூடாமல் துக்கத்தோடு போய்விட்ட ஐசுவரிய

வாலிபனை, இவர்களெல்லாருக்கும் மாதிரியாக வைத்தார். தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவைவை எடுத்துக்கொண்டு அனுதினமும் எஜமானைப் பின்செல்வது இலேசான காரியமல்ல. அவர் போகிற பாதையோ, பசியும் தாகமும் நிந்தையும் பாடுகளுமுள்ளது. மீட்பர் சென்ற பாதையில் மேன்மக்களான இவர்கள் தாழ்மையோடு போவார்களா? அவர் மகிமையடைந்த பின்பு இவர்களில் சிலர் அவரை விசுவாசிக்கலாம். ஆகிலும், இவ்வளவு பாடுகளும் போராட்டமுமான பாதையில் எஜமானைப் பின்செல்ல இப்பொழுது அவர்களுக்குத் தைரியமுமில்லை, தகுதியுமில்லை.

மேலும், எஜமான் ஸ்தாபிக்கப்போகிற இராஜ்யமோ **ஆவிக்குரியது.** அது உலகராஜ்யமாயிருந்தால், உலகத்தின் கல்வியும், ஞானமும், அந்தஸ்தும், மேன்மையும், அதிகாரமும் சாமர்த்தியமும் அவருக்கு வேண்டியதவசியம். ஆவிக்குரிய இராஜ்யத்துக்கு இவைகள் பெருந்தடைகளாயிருக்கும். மனுஷருக்கு முன்பாக மேன்மையாய் எண்ணப்படுவது, கர்த்தருக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. இவ்வூழியம் என் ஞானத்தால், என் கல்வியால், என் பலத்தாலாயிற்று என்று ஒருவனும் பெருமைபாராட்ட ஆண்டவர் இடங்கொடுக்கமாட்டார். மகா பெரிய மாளிகைகளைக் கட்டுவதற்கு விசித்திர விநோதமாய் வேலைதீர்த்த கற்கள் தேவை. சாதாரணமான ஒரு வீட்டைக் கட்டுகிறவனுக்கோ அந்தக்கற்கள் கொஞ்சமும் பிரயோஜனப் படாது. தன் வீட்டுக்கேற்ற கற்களை அவன் தெரிந்து கொள்ளுவான். உலகராஜ்யத்தின் கற்களை எடுத்து பரமராஜ்யத்தைக் கட்டமுடியாது. புதிய வஸ்திரத்தோடு பழைய வஸ்திரத்தை இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். புதிய இராஜ்யத்தைக் கட்டுவதற்குப் புதிய மனுஷர் வேண்டும்.

ஆகையால், எஜமான் அழைத்த அழைப்பைப் பாருங்கள். மாம்சத்தின்படி ஞானிகள் அநேகர் இல்லை. வல்லவர்கள் அநேகர் இல்லை. பிரபுக்கள் அநேகர் இல்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி அவர் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுள்ளவை களை வெட்கப்படுத்தும்படி அவர் உலகத்தில் பலவீனமானவை களைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாக எண்ணப் பட்டவைகளையும், இல்லாதவை களையும் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடிக்கே அப்படிச் செய்தார். இதனாலே கல்வியை அவமதிக்கிறோமா? அல்ல. கல்விமானும் சிறு பிள்ளையைப்போல் கடவுளுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்த அவர் பாதபடியில் கற்றுக்கொள்ளாவிட்டால் அவன் கல்வியே அவனைக் கெடுக்கும். தற்காலத்தில் வேதத்திலும்

கிறிஸ்துவிலும் இடறுகிறவர்கள் யார்? இரட்சிப்பின் திறவுகோலாகிய விசுவாசத்தைக் கெடுத்து மனுஷரைச் சந்தேகத்திலும் தத்தளிப்பலும் அலையவிட்டவர்கள் யார்? உலகத்தில் கல்விமான்களும் ஞானிகளுமென்றெண்ணப் பெற்றவர்கள் அல்லவா? இவர்கள் தங்கள் சுயஞானத்தினாலே தேவ காரியங்களில் இடறிவிழும்போது, பேதைகளை விசுவாசத்தினால் இரட்சிக்க பிதாவுக்குப் பிரியமாயிற்று. பவுல் சிறந்த கல்விமானாயிருந்தது மெய்தான். ஆகிலும், தனக்கு மேன்மையாயிருந்த யாவையும் கிறிஸ்துவுக்காக அற்பமும் குப்பையுமாக எண்ணினபோது, பரமஞானம் அவருக்கு வெளிப்பட்டது. சிலுவையிலறையுண்ட இயேசு கிறிஸ்துவே அவருக்குத் திகட்டாக்கல்வியும் தேவ ஞானமுமானார். தம்மை இவ்விதமாய் வெறுமையாக்கின பவுல் என்னும் பாத்திரத்தில், இரட்சகர் பரமபொக்கிஷமாகிய ஊழியத்தைப் பொழிந்தார். அவர் பேச்சும் பிரசங்கமும் மனுஷர் ஞானத்தில் அல்ல, தேவ ஆவியின் பலத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எஜமான் அவரைத் தெரிந்துகொண்டு, வெறுமையாக்கித் தமது கிருபையினால் நிரப்ப, அவர் உத்தம அப்போஸ்தலனானார்.

தமக்கு ஊழியக்காரராயிருக்கும்படி எஜமான் தெரிந்து கொண்ட ஆள்களைப் பாருங்கள். அவர்கள் யாரென்றும், எப்படிப்பட்டவர்களென்றும் அவர் அறிவார். தாம் கலிலேயன், அவர்களும் கலிலேயர்; ஆகிலும் அவர் தேவலோகப் பிரபு தாம் ஏழை, அவர்களும் ஏழைகள்; ஆகிலும் அவர் ஐசுவரியத்தை அறிந்தவன் யார்? தாம் சாதாரணமானவர், அவர்களும் சாதாரண மனுஷர்; ஆகிலும் அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள், தாம் எருசலேம் ரபிமாரிடம் கல்வி கற்காதவர், அவர்களும் கல்வியற்றவர்கள்; ஆகிலும் அவர் ஞானத்துக்குமுன் நிற்பவன் யார்? மேன்மக்களால் அற்பமாய் எண்ணப்பட்டவர்களையே தமக்கு அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டார். வேதபாரகனைக்காணோம். பரிசேயனைக்காணோம். ஆசாரியனைக்காணோம். மூப்பனைக் காணோம். ஏரோதியனைக்காணோம். சதுசேயனைக்காணோம். ஏழைச் செம்படவர்களே அவருக்குக் கூட்டாளிகளானார்கள். குயவன் கையிலுள்ள களிமண் அழகும் பிரயோஜனமுமான பாத்திரங்களாகச் செய்யப்படுவதுபோல, இவர்கள் எஜமானுக்கு உபயோகமான பாத்திரங்களாவார்களென்று நம்பினார்.

சீஷன் செவிகொடுக்கவேண்டிய இரண்டு கட்டளைகள் உண்டு. ''என் பின்னே வாருங்கள்: என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' என்பதே. அவர் அழைத்தபோது அவர்கள் அவரைப் பின்சென்றார்கள். அவர் போதித்தவைகளுக்குச் செவிகொடுத்தார்கள். எல்லாவற்றையும் விட்டுப்பிரிந்தார்கள். எஜமானிடத்தில் அன்பு வைத்தார்கள். அவரோடு கூடவே யிருந்தார்கள். அவரோடுகூட நடந்தார்கள். அவர் சத்தத்தைக்

கேட்டார்கள். அவர் திருமுகத்தைப் பார்த்தார்கள். அவரோடு நித்திரை செய்தார்கள். அவரோடு விழித்தெழுந்தார்கள். அவர் உபதேசங்களைக் கவனித்தார்கள். அவர் கிரியைகளைக் கண்டார்கள். அவரில் விளங்கிய ஞானம், கிருபை, சாந்தம், தாழ்மை, அன்பு, இரக்கம், அமைதல் முதலான இலட்சணங்களைக் கவனித்தார்கள். தமது இரகசியங்களையும் இராஜ்யத்துக்கடுத்த காரியங்களையும் அவர்களுக்கு அடிக்கடி தனித்துப் போதித்தார். இப்பேர்ப்பட்ட சிலாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே என்று துக்கிப்போம். ஆனாலும் என்ன? நாம் கிறிஸ்துவை மாம்சத்தில் கண்டிருந்தால் நாமும் ஒருவேளை அவரைக்குறித்து இடறலடைந்திருப்போம். அவரைக் கண்ணால் கண்டதினாலே சீஷர்கள் விசேஷித்த பக்தர்களானார்களென்று சொல்லக்கூடாது. அவர்களானாலும், அவரைக் காணாத நாமானாலும் பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை **கர்த்தரென்று** அறிந்துகொள்ள முடியாது, இவ்வளவு சிலாக்கியம் பெற்றிருந்த அவர்கள், கடைசிவரை எவ்வளவ்வோ குறையுள்ளவர்களாயிருந்தார்களென்பது மெய். **பொறுமைநாதன்** அவர்களைத் தாங்கி நடத்தாமற்போனால் அவர்கள் அப்போஸ்தலராயிருக்கமாட்டார்கள். அவர்களல்ல, அவரே கிருபையாய் அவர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள் பாவங்களை மன்னித்தார். ஆவியினால் அவர்களை அபிஷேகித்தார். படிப்படியாய் அவர்கள் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளும்படி செய்தார்.

அவர்கள் ஒரே நாளில் பூரணரானவர்கள் அல்ல. பார்க்கப்போனால் அவர்களைப்போல் அப்போஸ்தல ஊழியத்துக்கு தகுதியற்றவர்கள் யாருமில்லை. சுவிசேஷத்தை வாசித்தால் அவர்களில் எத்தனையோ குறைவுகளைக் காணலாம். அவர்களுடைய இருதயக்கடினம். கண்ணாரக்கண்டும் உணர்வில்லாமை. சாதாரண காரியங்களை அறியக்கூடாமை. எஜமான் இன்னாரென்று அறிந்துகொள்ளாமை. எத்தனை உவமைகளால் போதித்தாலும் இராஜ்யத்தின் தன்மையை கிரகிக்கக்கூடாமை. தாவீதின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்கிற ஆத்திரம். இராஜ்யத்தில் முதல்தரமான இடத்தை அபேட்சித்த பேராசை. அதினாலுண்டான எரிச்சல். ஒருவரைப்பற்றி ஒருவருக்குப் பொறாமை, விசுவாசக் குறைவு அன்புத்தாழ்ச்சி இயேசுவின் நாமத்தை மற்றொருவன் உபயோகிக்கக்கூடாதென்கிற தந்நயம். தங்களை ஏற்றுக் கொள்ளாத ஊராரை அழிக்கவேண்டுமென்கிற ஆங்காரம். சந்தேகம், உலக சிந்தை, தூக்கமயக்கம், பதஷ்டம், கோழைத்தனம், மறதி முதலிய அநேக குறைவுகள் கடைசிவரை அவர்களில் காணப்பட்டன. கூடவேசாவேன் என்று சபதம் கூறி அவரை அறியேன் என்று மறுதலித்தான் ஒருவன். நாசரேத்திலிருந்து

நன்மை வருமோவென்று திகைத்தவன் ஒருவன், காலமெல்லாம் கூடவேயிருந்தும் பிதாவைக் காண்பியும், அது போதுமென்றவன் ஒருவன். சிநேகிதன்போல் முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தவன் ஒருவன். ஒடிப்போனவர்கள் மற்றவர்கள். உயிர்த்தபின்பும் நம்பமாட்டேன் என்றவன் ஒருவன். இக்காலத்திலா எங்களுக்கு இராஜ்யத்தைத் திரும்பக் கொடுப்பீரென்று கேட்ட மந்தபுத்தி யுள்ளவர்களும் அவர்களே.

ஐயோ, எஜமான் எடுத்துக்கொண்ட பிரயாசம் வீணாயிற்றோ? கடைசிபரியந்தம் இவர்கள் அவரையும் அவருடைய இராஜ்யத்தின் தன்மையையும் அறியவில்லையே. இப்படிப்பட்டவர்களைக்கொண்டா தமது மகிமையின் ஊழியத்தை நடப்பிக்கப்போகிறார்? இவர்கள் கையிலா தமது இராஜ்யத்தை ஒப்புவிக்கப்போகிறாரென்று நாம் கேட்பது நியாயமே. ஆண்டவர் நமக்கு என்ன சொல்லுவார்? ஆம், இவர்களைக்கொண்டே என் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறேன். இவர்களே எனக்கு உத்தம அப்போஸ்தலராவார்கள். நான் இவர்களை அழைத்தபோது என்மீதுள்ள அன்பினால் எல்லாவற்றையும் விட்டு வந்தார்கள். என் மாதிரியின்படி நடக்க விரும்புகிறார்கள்; ஆகிலும் அவர்களுக்குப் பலமில்லை. என் உபதேசத்துக்குச் செவி கொடுக்கிறார்கள்; ஆனாலும் ஆவிக்குரிய போதனைகளை இப்பொழுது அறிந்துகொள்ளமாட்டார்கள். எனக்காக ஜீவனைக் கொடுக்க அவர்கள் விரும்பினாலும், அவர்களுக்குத் தைரியம் போதாது. இப்போது அவர்களிடத்தில் அநேக குறைவுகள் இருப்பது மெய்தான். அவைகள் என் **உபதேசத்தினால்மாத்திரம்** நீங்காது. காலம் வரும் அப்பொழுது அவர்கள் உன்னத பலத்தால் நிரப்பப்படுவார்கள். அந்நாளில் என் மாதிரியின்படி நடக்கவும், என் உபதேசத்தை அறிந்து கொள்ளவுங்கூடும். அவர்களில் எத்தனை குறைவுகளிருந்த போதிலும், அவர்கள் உள்ளத்தில் உண்மையிருப்பதால், நான் அவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தம் அன்பாயிருக்கிறேன் என்பார்.

ஆகையால், எஜமான் அவர்களுக்காக எடுத்துக்கொண்ட பிரயாசம் வீணாகமாட்டாது. படிப்படியாய் அவர்களைப் பக்குவப்படுத்தி வந்தார். நிலம் வாங்கியாயிற்று. பாதைமீது பதித்தாயிற்று. ரெயில்வண்டிகள் தண்டவாளத்தின் மீது வரிசையாய் நிற்கின்றன. பெரியவேலை முடிந்திருக்கிறது. இப்போது என்ஜின் வந்து சேர்ந்தவுடனே வண்டிகள் ஓடுகிற அழகைப் பார்க்கவேண்டும். பெந்தெகோஸ்தே நாளில் இவர்கள் மேல்வீட்டில் காத்திருந்தபோது பரம அக்கினி இறங்கி அவர்களை நிரப்பிற்று. பலவீன மனுஷர் முற்றிலுமாய் மாற்றப்பட்டு வல்லமையுள்ள சாட்சிகளாகப் புறப்பட்டார்கள்.

முன்னே காணப்பட்ட அநேக குறைகள் மறைந்தன. எஜமானைப்போல் அன்பும், சாந்தமும், தாழ்மையும், ஆத்ம வாஞ்சையுமுள்ளவர்களாக விளங்கினார்கள்.

இவ்வாறு, கலிலேயாவிலுள்ள களிமண் கர்த்தருக்குப் பரிசுத்தமான பாத்திரங்களாயின. **வானக்குயவன்** செய்த மகத்துவ வேலை இதுவே, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எஜமான் அவர்களைத் தெரிந்துகொண்ட நோக்கம் ஒன்று. தமக்காக உலகத்தோடு தர்க்கிக்கவல்ல தத்துவ சாஸ்திரத்தில் நிபுணராகும்படிக்கல்ல. தங்கள் கல்வியினாலும் ஞானத்தினாலும் தமது சபையைத் தாங்கும்படிக்கல்ல. தங்கள் ஐசுவரியத்தினால் எருசலேம் ஆலயத்தைப்போல் ஒரு பெரிய தேவாலயத்தைக் கட்டும்படிக்கல்ல. தற்காலம் திருச்சபைக்கு இவைபோன்ற சிலாக்கியங்களும் மேன்மைகளும் கிடைத்திருப்பது மெய்தான். புறம்பான காரியங்களில் எவ்வளவு மேன்மை யடைந்ததோ, உள்ளான நிலைமையில் அவ்வளவு பாழாய்ப் போனதும் மெய்தான். கிறிஸ்துவின் அப்போஸ்தலர் ஏழைகள். அவர் அவர்களைத் தமக்குச் **சாட்சிகளாயிருக்கும்படி** தெரிந்து கொண்டார். அதற்கு இந்தச் சாதாரணமான செம்படவர்களைப் பார்க்கிலும் தகுதியானவர்கள் அவருக்கில்லை. எஜமான் விரும்பினபடியே அவருக்கு அவர்கள் உத்தம சாட்சிகளாக ஜீவித்து, சாட்சிகளாக உழைத்து, சாட்சிகளாக மரித்தார்கள். கிறிஸ்து தாமே ஒரு சுவிசேஷத்தை எழுதியிருந்தால் எவ்வளவோ மாட்சிமையாயிருக்கும்! ஆனால் அது அவர் தம்மைப்பற்றியே சாட்சி சொல்லுவதாயிருக்கும். அவர் தம்மைப்பற்றி எவ்வளவு சொன்னாலும், அவைகள் உண்மையாயிருந்தாலும், அதனால் உலகத்துக்கு நன்மை வராது. அவருடைய அடியாருக்குள் அவர் வெளிப்பட்டு, அவர்கள் முற்றிலுமாய் மாற்றப்பட்டு, அவர்கள் அனுபவமாய் அறிந்ததைச் சொல்வார்களானால் அதுவே ஆசீர்வாதமாயிருக்கும். அவ்வாறு, அவரது மகிமையைக் கண்டவர்களைக் கொண்டே தமது சுவிசேஷத்தை எழுதும்படி செய்தார்.

அப்போஸ்தலர் என்றால் நாம் என்னமோ நினைத்துக் கொள்ளுகிறோம். அவர்கள் மனுஷரல்ல, வானலோகத்துப் பிறவிகள் என்று அஞ்சுகிறோம். படங்களில் அவர்கள் தலைகளைச் சுற்றி வரைந்திருக்கும் பிரகாசமான வட்டமும், அவர்களுக்கு உடுத்தியிருக்கும் அலங்காரமான உடையும், நாம் வேறு, அவர்கள் வேறென்று எண்ணச்செய்கிறது. அவர்கள் யாரென்று அறியவேண்டுமானால் வெகுதூரம் போக வேண்டியதில்லை. இன்று கடற்கரையோரம்போய், அங்கு கூடியிருக்கும் செம்படவர்களைப் பார்க்கவேணும். அங்கே அவர்கள் தங்கள் படவுகளை இழுப்பதையும், வலைகளைப்பழுது

பார்ப்பதையும் காணவேணும். அவர்கள் காலத்தை மிகுதியாய்க் கடலில் கழிக்கிறார்கள். அதுவே அவர்கள் பிழைப்பு. சபை சங்கங்களுக்கு அவர்கள் ஏற்றவர்களல்ல. அவர்கள் அரைகுறையான பேச்சு நமக்கு விளங்காது. இராமுழுவதும் சமுத்திர ஆழத்திலிருந்து விடியும்போது கரைநோக்கி வருவார்கள். சிலநாள்களில் ஏராளமான மீன்கள் அகப்படும். சில சமயங்களில் இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படாது. திடீரெனப் புசல் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும். சில சமயங்களில் பயங்கரமான மீன்கள் அவர்களைத் தாக்கும். அவர்கள் பிழைப்பு பல ஆபத்துகளுக்குள்ளானது. அவர்களோடு பேசினால் நமக்குத் தெரியாத அநேக ஆச்சரியமான சம்ப வங்களைச் சொல்லுவார்கள் சாதாரணத்திலும் சாதாரணமான மனுஷர் கபடற்றவர்கள் பலசாலிகள் சுறுசுறுப்புள்ளவர்கள். தெய்வமே துணையென்று கடலுக்குள் போகிறவர்கள். இப்படிப் பட்ட மனுஷரையே ஆண்டவர் தமக்கு அப்போஸ்தலரா யிருக்கும்படி தெரிந்துகொண்டார். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்றாற்போல், இவர்களைக்கொண்டே தமது மகத்துவமான வேலையை உலகத்தில் நடத்தச்சித்தங்கொண்டார். நம்மைப்போல் அவர்களும் பலவீனமான மனுஷரென்பதை நாம் மறக்கக்கூடாது. மேலும், அவர்களைப்பார்க்கிலும் நாம் பெற்றுக்கொண்ட சிலாக்கியங்களுக்கு நாம் உத்தரவாதிக ளென்பதையும் மறக்கக்கூடாது.

அப்போஸ்தலர் காலத்தோடு அப்போஸ்தல ஊழியம் நின்றுபோகவில்லை. கர்த்தர் திரும்ப வருமளவும் அவ்வூழியம் தொடர்ச்சியாய் நடந்தேறவேண்டும். சரித்திர சம்பந்தமான அப்போஸ்தலர் வரிசையைக் குறித்துத் திருச்சபை கூறுகிறது. இந்த வரிசையின் உரிமையைப்பற்றி சபைகளுக்குள் பலத்த வழக்குண்டு. அவ்விதமான வாதும் வழக்கும் நமக்கு வேண்டாம். கிரீடம் வைத்தவனெல்லாம் இராஜனல்ல. இராஜனாகப் பிறந்தவனுக்கே கிரீடம் ஏற்கும். அப்போஸ்தலர் வரிசையும் அப்படியே. அப்போஸ்தல ஆவியை உடையவர்களே அப்போஸ்தலராவார்கள். கிறிஸ்துவைக்குறித்துக் கேள்வி மாத்திரமல்ல, தாங்களே தங்கள் மனக்கண்களால் அவரைக்கண்டு, அவரில் அன்புகூர்ந்து, அவரால் போதிக்கப்பெற்று, அவரால் அபிஷேகிக்கப்பெற்றவர்களே அப்போஸ்தலர். அவருடைய சிந்தையைத்தரித்து, அவருடைய மகிமை ஒன்றையே விரும்பி, அவருக்கென்றே முற்றிலுமாய்ப் பிழைப்பவர்களே அப்போஸ்தலர். எந்த வேதசாஸ்திரப் பாடசாலையும் நம்மை அப்போஸ்தலராக்கமாட்டாது. திரளான புஸ்தக அறிவு நம்மை அப்போஸ்தலராக்கமாட்டாது. நமது சுயஞானமும் கல்வியும் நம்மை அப்போஸ்தலராக்கமாட்டாது. எஜமானைக் கண்டு அவருடைய பாடு மரணம் உயிர்தெழுதலின் வல்லமையைத்

தங்கள் ஜீவியத்தில் அறிந்தவர்களே அவருக்கு ஏற்ற சாட்சிகளாவார்கள். இக்காலத்தில் இப்படிப்பட்ட அனுபவ சாட்சிகள் தேவை. அவர் சொன்னார், இவர் சொன்னாரென்று மற்றவர்கள் சொன்னதைமாத்திரம் சொல்லுகிறவர்களல்ல. முற்காலத்துப் பக்தர்களின் அனுபவத்தைக்கூறி அறிவிக்கிறவர்களல்ல. தாங்கள் கிறிஸ்துவில் கண்டதையும், அவரிலிருந்து தாங்கள் பெற்று அனுபவிக்கிறதையும் குறித்துத் தீர்க்கமாய் ஊக்கத்தோடு பேசுகிறவர்களே எஜமானுக்கு உத்தம சாட்சிகளும் அப்போஸ்தலருமாவார்கள். மரித்தோருக்கு ஜீவனருளுகிறவர்களும், தேசத்துக்கு ஆசீர்வாதமாயிருப்பவர்களும் இவர்களே. யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான் என்று கர்த்தர் கேட்கிறார். ஆண்டவரே! இதோ, அடியேன் இருக்கிறேனே. என் ஆத்தும நேசராகிய உம்மை என் கண்கள் கண்டதே. என்னை அனுப்பும், நான் போகிறேன் என்று சொல்வோமாக.

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் அப்போஸ்தலருக்கும் ஆதிச்சபைக்குமாத்திரம் ஆண்டவரல்ல. அவர்களோடுமாத்திரம் கூடயிருந்து கிரியைசெய்து நம்மைக் கைவிடுகிறவரல்ல. அவருடைய நடத்துதலும் வாக்குகளும் அவர்களுக்குமாத்திரம் உரியதல்ல. "யுகத்தின் முடிவுபரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களுடனே கூடயிருக்கிறேன்'' என்பது அவரது மாறாத வாக்கு. அப்படியானால் நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணப்படவேண்டிய வல்லமையும் ஆசீர்வாதமும் எங்கே? கர்த்தர் நம்மை மறந்தாரோ? நம்மைக் கைவிட்டாரோ? தமது வாக்கை மாற்றிவிட்டாரோ? அப்படி நினைப்பது தவறு. நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. நாம் உண்மையுள்ள ஊழியர்களாகும்போது அவருடைய உண்மையின் வல்லமையை நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் நிச்சயமாகக் காணலாம். அவர் நாள்தோறும் நம்மை நடத்தி நம்மோடிருந்து கிரியை செய்யாவிட்டால், நாம் தேவ ஊழியரென்று பேர்வைத்துக் கொண்டிருப்பது வீணே. நமது ஊழியம் வல்லமைபெற்று, ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிராவிட்டால் நாம் ஊழியம் செய்வதும் வீணே.

கர்த்தர் மனுப்புத்திரருக்குள் நடப்பிக்கும் கிரியையை நமது கண் காணவேண்டுமானால் நாம் முற்றிலுமாய் மாறவேண்டும். சகல பாவங்களையும் விட்டுத் திரும்பவேண்டும், எஜமானுக்கு நம்மைப் பூரணமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும். வேதவசனத்தை வாஞ்சையோடு ஆராய்ச்சிசெய்து படிக்கவேண்டும். தேவ ஆவியினால் நாம் நிறைந்திருக்கவேண்டும். இரவும் பகலும் கர்த்தருடைய சமுகத்தில் ஜீவிக்கவேண்டும். தேவ ஊழியத்தை

உத்தமத்தோடு செய்யவேண்டும். அப்போஸ்தலரைப்போல் நாம் முற்றிலுமாய் எஜமான் கையிலுள்ள பாத்திரங்களாகும்போது, அவர் அவர்களை உபயோகித்ததுபோல நிச்சயமாகவே நம்மையும் உபயோகிப்பார். அவருடைய அதிசயமான கிரியைகளை நமது கண்கள் காணும். அவர் திருநாமம் இன்றும் மகிமைப்படும்.

ஆண்டவர் பன்னிருவரை அப்போஸ்தலராக நியமித்த போது, ஆதிச்சபையிலும் தற்காலத்திலும் செய்யப்படுவதுபோல, தமது திருக்கரங்களை அவர்கள் சிரசின்மீது வைத்து ஜெபித்தாரோ, வேறு எவ்விதமாக ஏற்படுத்தினாரோ சொல்லப்படவில்லை. ஆயினும், அவர் ஓர் இராமுழுதும் ஜெபம் செய்து, காலையில் அவர்களை இவ்வளவு மகத்தான ஊழியத்துக்குத் தெரிந்துகொண்டது மிகவும் பயபக்திக்குரியதாக இருந்திருக்கவேண்டும். இவ்வாறு தாம் தெரிந்துகொண்ட, ஊழியர்களை **அபிஷேகித்து** ஆசீர்வாதப் பிரசங்கமும் செய்தார். மத்தேயு அதை விவரமாய்ச் சொல்லுகிறார். சீனாய் மலையின் சாபவார்த்தையைக் கூறாமல், தமது உபதேசத்தை ஆசீர்வாதத்தோடு ஆரம்பிக்கிறார். பாக்கியர் இன்னார் என்பதை விளக்கிக் காட்டுகிறார். யார் பாக்கியர்? யார் கடவுளைத் தரிசிப்பார்கள்? யார் தேவராஜ்யத்துக்குரியவர் ஆவார்கள்? யாருக்கு ஆறுதலும், சமாதானமும், திருப்தியும் கிடைக்கும் என்பதைக் காண்பிக்கிறார். உலகத்தார் பாக்கியம் என்று சொல்வதற்கும், இரட்சகர் பாக்கியம் என்று சொல்வதற்கும் எவ்வளவு வித்தியாசம்! எல்லாவற்றையும் விட்டு, என்னை நீங்கள் சேர்ந்துகொண்டதால், என்னிமித்தம் உங்களுக்கு பாடுகளும் நிந்தைகளும் வரும். சோர்ந்து போகவேண்டாம். அத்தனையும் உங்களுக்கு ஆசீர்வாத பலனாக முடியும். வேதபாரகர் பரிசேயரைப்போல் வெறும்போதனை செய்கிறவர்களாயிராமல், உங்கள் போதனையோடு சாதனையும் சேர்ந்திருக்கவேண்டும். ருசியற்ற மனுஷருடைய ஜீவியத்துக்கு நீங்கள் உப்பைப்போல் சாரமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அகத்தின் இருளைப் போக்குவதற்கு நீங்கள் வெளிச்சமாயிருக்கவேண்டும். நீங்கள் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஈவுகளை மறைத்துவைக்கக் கூடாது. மற்றவர்களுக்கு நீங்கள் ஆசீர்வாதமாயிருப்பதற்காகவே உங்களைத் தெரிந்துகொண்டேன். பரமபிதாவுக்கு மகிமை வரும்படி உங்கள் ஜீவியம் பிரகாசிக்கும் வெளிச்சம் போலிருக்கட்டும்.

என் உபதேசம் நூதனமாயிருப்பதால் நியாயப் பிரமாணத்துக்கு விரோதம் என்று நீங்கள் பயப்படவேண்டாம். நியாயப்பிரமாணத்திலும் மேலானவைகளையே நான் உங்களுக்குப் போதிக்கிறேன். கொலைதான் பாவம் என்று

நினைக்கவேண்டாம். கோபமும் மூர்க்கமும் பாவமாகும், பகைக்கு இடங்கொடுக்கவேகூடாது. விபசாரந்தான் பாவம் என்று நினைக்கவேண்டாம். துர்இச்சையே பாவமாகும். உன் கண்ணைப்போல், உன் கையைப்போல் எவ்வளவு அருமையாகத் தோன்றினாலும், அப்படிப்பட்ட சோதனைகளுக்கு இடங்கொடுக்கவேண்டாம். விவாகம் பரிசுத்த தேவ ஏற்பாடு. தள்ளுதலும் பிரிந்திருப்பதும் பாவமும், பாவத்துக்கு தூண்டுதலுமாகும். ஆணையிடுகிற வழக்கம் நல்லதல்ல. எப்போதும் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் உரைக்கக்கடவீர். வலியச் சண்டைக்குப் போகமாட்டேன், வந்த சண்டையையும் விடமாட்டேன் என்கிற சபதம் உங்களுக்கு வேண்டாம். தீமையோடு எதிர்த்து நிற்பதைவிட தீங்கை அனுபவித்துக்கொள்வதே பாக்கியம். உன்னால் நன்மைபெற விரும்புகிறவனுக்கு உன்னால் கூடியமட்டும் நன்மை செய். பதில் கிடைக்கும் நோக்கமாகச் செய்யாதே. சிநேகிக்கிறவர்களையே சிநேகிப்பது அவ்வளவு விசேஷமல்ல. எல்லாருமே அப்படிச் செய்வார்கள். நன்மைக்கு நன்மை செய்வது மனுஷீகம். நன்மைக்குத் தீமை செய்வது பிசாசு. தீமைக்குத் தீமை செய்வது மிருகம். தீமைக்கு நன்மை செய்வது தெய்வீகம். நன்றியறியாதவர் களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிற உங்கள் பிதாவை நினைத்துக்கொள்ளுங்கள். அவர் சுபாவம் உங்களிலிருக்கும் போது நீங்கள் அவருக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

உங்கள் ஜெபம், தர்மம், உபவாசம் முதலான காரியங்கள் மனுஷர் மெச்சிக்கொள்ளும்படி செய்யப்படவேண்டாம். உலகத்தாரின் சோதனை அதுவே. அவைகளை உங்கள் பிதா காண அந்தரங்கமாகச் செய்யுங்கள். வெளியரங்க பலனை அடைவீர்கள். பரமபிதா உங்கள் பாவங்களை மன்னிக்க நீங்கள் விரும்புகிறதுபோலவே, மற்றவர்களுக்கும் நீங்கள் மன்னியுங்கள். பிடிவாதமான சுபாவம் நல்லதல்ல. அழிந்துபோகும் உலகப்பொருளுக்காக உங்கள் காலத்தைச் செலவிட வேண்டாம். அழியாத செல்வத்தை பரத்தில் தேடி வையுங்கள். உங்கள் கண்ணாகிய ஜீவியத்தின் **நோக்கம்** சரியாயிருந்தால் உங்கள் காரியமெல்லாம் சரியாயிருக்கும். அது தவறிப்போனால் ஜீவியம் முழுவதும் பாழாகும். தேவனையும் உலகத்தையும் சேவிக்கும்படி உங்களுக்கு இரண்டு இருதயங்கள் கொடுக்கப்படவில்லை. இருதயம் ஒன்றே. ஆகையால் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய உங்களால் முடியாது. கடைசியில் மோசம் போவீர்கள். இவ்வுலக வாழ்வில் அநேக கவலைகள் உண்டு. ஆனால் அக்கவலைகள் உங்களை ஆண்டுகொள்ள இடங்கொடுக்கக்கூடாது. அவ்வாறு கவலைப் பட்டுக் கொண்டிருப்பதினாலே நன்மை வரமாட்டாது. காட்டுப்புஷ்பங்களை அலங்கரித்து, ஆகாயத்துப்பறவைகளைப் பிழைப்பூட்டும் பரமபிதா, தமது

சாயலின்படியும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்த உங்களைப் பிழைப்பூட்டாதிருப்பாரா? உங்களுக்கு இன்னது தேவையென்று நீங்கள் கேட்கு முன்னதாகப் பிதா அறிந்திருக்கிறார். ஆகையால் உங்கள் காரியங்களை பிதாவின் கையில் விட்டுவிட்டு, அவருடைய இராஜ்யத்துக் கேதுவானவைகளையே தேடுங்கள். அப்பொழுது உங்களுக்கு வேண்டிய யாவும் தாராளமாகக் கொடுக்கப்படும். இனிவரும் நாள்களைப்பற்றி இன்றைக்கேன் கவலை? நாளை நடப்பது உங்களுக்குத் தெரியாது. பிதாவுக்குச் சகலமும் தெரியும். அந்தந்த நாளில் அவர் உங்களுக்கு நியமித்ததை உண்மையுடன் செய்வதே, அவர் உங்களை இனிமேல் எப்படி நடத்துவார் என்பதைக் கண்டடையும் பாதை. நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர்களானால் பரமபிதா உங்களுக்காக கவலைப்பட இடமிராது. உங்கள் கவலை பிதாவின்மேல் நீங்கள் வைக்கவேண்டிய நம்பிக்கையை அழித்துவிடும். எல்லாவற்றையும் அவருக்குத் தெரியப்படுத்தி அமர்ந்திருங்கள். நீங்கள் இராஜ்யத்தின் பிள்ளைகளானால் இராஜா உங்களை ஆண்டு நடத்துவதற்கு இடங்கொடுங்கள். அப்பொழுது, நான் ஆரம்பத்தில் சொன்னபடி நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

மற்றவர்களைக் குற்றவாளிகளாக்குகிற சுபாவம் உங்களுக்கு வேண்டாம். யோசித்துப் பார்ப்பீர்களானால் நீங்களே அந்தக் குற்றத்தைச் செய்தவர்களாயிருப்பீர்கள். நீங்கள் கூறும் தண்டனை உங்களுக்கே நீங்கள் கூறும் தண்டனையாகும். பெரும் பாவங்களுக்கு நீங்களே அடிமைகளாயிருக்கும்போது பிறருடைய சிறிய குற்றங்களைப் பெரிதாக்கிப் பேசுவானேன்? தவறிப்போன யாருக்காயினும் உதவிசெய்ய வேண்டுமானால் உன் சொந்த ஜீவியத்தில் நீ சுத்தமுள்ளவனாயிரு. நீ சுத்தமாக நடந்துகொண்டு தவறிப்போகும் சகோதரனை அன்போடும் ஞானத்தோடும் ஆதாயம்பண்ணிக்கொள்ள நாடு. யாரோடும் எவரோடும் ஆவிக்குரிய காரியங்களைப் பேசுதல் ஞானமல்ல. சத்தியம் தூஷிக்கப்படும், நீங்களும் நிந்திக்கப்படுவீர்கள். இடம், சமயம், ஆள் அறிந்து பேசுங்கள். இது விஷயத்தில் ஆவியானவர் உங்களை நடத்துவார். ஜெபவிஷயத்தில் மயக்கம் வேண்டாம். பிள்ளைகள் கேட்க பெற்றார் நல்ல காரியங்களைச் சந்தோஷமாகக் கொடுக்கிறார்களே. பரமபிதாவுக்கு ஒப்பான தகப்பன் யார்? கேளுங்கள், அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் பிள்ளைகள் என்பது நிச்சயமானால் தகப்பனிடத்தில் தாராளமாக ஏன் பேசக்கூடாது. மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்யவேண்டும், எவைகளைச் செய்யக்கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதேபிரகாரம் மற்றவர்களிடத்திலும் நீங்கள் நடந்துகொள்ளுங்கள். இதற்கு நிகரான பிரமாணம் வேறில்லை.

கிறிஸ்தவ ஜீவியம் விளையாட்டுக் காரியமல்ல. மனம்போன போக்கில் போவது தேவ வழியல்ல. அநேகர் அவ்வாறு நடந்து தங்களைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். ஜீவனுக்குப் போகிறவழி இடுக்கமும் நெருக்கமுமானது. அந்தவழியில் நடக்க விரும்புகிறவர்கள் சிலர். அநேகர் நடக்கிறமாதிரி நடக்க வேண்டாம். தேவ ஊழியர்கள் என்கிற பேர் அநேகருக்கிருக்கலாம். எல்லாரும் தேவ ஊழியர்கள் அல்ல. புறம்பான தோற்றம் தேவதூதரைப்போலிருக்கலாம். அதைக்கண்டு மயங்கவேண்டாம். அவர்களுடைய ஜீவியம் எப்படிப்பட்டதென்று சோதித்துப்பாருங்கள். மரம் நல்ல தென்றால் அதன் கனிகளும் நல்லதாயிருக்கவேண்டுமே. எப்போதும் **ஜீவியத்தையே** உறைகல்லாக வைத்துக் கொள்ளுங்கள். என் பேரை வைத்துக்கொண்டு மனுஷர் எல்லாக் காரியங்களையும் செய்யலாம். என்னை கர்த்தாவே, கர்த்தாவே என்றும் அவர்கள் அழைக்கலாம். என்னை ஏமாற்ற அவர்களால் முடியாது. நான் என்னுடையவர்களை அறிந்திருக்கிறேன். என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே எனக்குச் சொந்த மானவன். அவனே பிதாவின் இராஜ்யத்தில் பிரவேசிக்கத் தக்கவன். மற்றவர்களை நான் அறியமாட்டேன். அவர்கள் எத்தனை அரிய காரியங்களைச் செய்தாலும், அவைகள் அக்கிரமச் செய்கைகளேயன்றி வேறல்ல. என் சித்தப்படி பிழைப்பதும் உழைப்பதுமே, எல்லாச் செய்கைகளிலும் சிறந்த செய்கை.

தேவசித்தமே சிறந்த ஊழியம். இவ்வாறு நான் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாவான். அந்த வீட்டை அசைக்க யாரால் கூடும்? அவனுடைய நம்பிக்கை ஒருபோதும் அழியாது. ஆனால் இவைகளையெல்லாம் அறிந்தும் அதன்படி நடவாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டும் புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பாவான். வெள்ளம் வந்தபோதோ அந்தவீடு விழுந்து முழுவதும் அழிந்தது. அனுபவத்துக்கு வராத அறிவு அழிவுக்குரியது என சொல்லி முடித்தார். மோசேயின் பிரமாணத்தை யூதர் மகா மதிப்புடன் கொண்டாடினர். ஆண்டவர் அப்பிரமாணங்களைக் குறித்து: "பூர்வத்தாருக்கு அவ்வாறு உரைக்கப்பட்டது; நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சர்வ அதிகாரத்தோடு ஒரே அடி அடித்துப் பேசினது, சகலருக்கும் பிரமிப்பை உண்டாக்கிற்று. அப்போஸ்தலரோ மகா பயபக்தியுடன் அவ்வுபதேசங்களை தம் சிரமேற்கொண்டு அவர் திருவடி பணிந்தனர்.

16
தேவ போதகர்
The Divine Teacher

ஆண்டவர் நடப்பித்த அற்புதங்களைப் பார்க்கிலும், அவர் செய்த உபதேசமே பிரதானம். அவருடைய அற்புதங்களைவிட அவருடைய போதனை ஜனங்களை அதிகமாய் யோசிக்கச் செய்தது. "அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்." ஜனங்கள் மீதுற்ற பரிதாபத்தால் அவர் நோய்களைக் குணமாக்கினபோதிலும் பிரசங்கிப்பதையே தமது ஊழியத்தில் பிரதானமாக்கினார். நோயாளிகள் உம்மைத் தேடுகிறார்கள் என்று பேதுரு அழைத்தபோது: "நான் மற்றக் கிராமங்களிலும் பிரசங்கம் பண்ணவேண்டுமாகையால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள், இதற்காகவே புறப்பட்டு வந்தேன்" என்றார். கடலின் கீழ்க்கரையில் கூடின ஜனங்களுக்கு அவர் அநேக காரியங்களைக்குறித்து வெகுநேரம் உபதேசித்தபின் அவர்களை அற்புதமாய்ப் போஷித்தார். தம்மிடத்தில் சரீர நன்மை பெற்றுக்கொள்ளும்படி வந்தவர்கள் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளும்படி நாடினார். அவருடைய அற்புதங்கள் வசனத்தைக் கேட்கும்படி ஜனங்களை அழைக்கிற மணி ஓசைபோலிருந்தன. அவருடைய அற்புதங்கள் பிரசித்தமானதுபோல அவருடைய உபதேசங்களும் பிரசித்தமாயின.

ஒருவன் பேச ஊரார் கூடிக்கேட்கும் வழக்கம் ஆதிமுதலாயுள்ளது. இது தேவ அமைப்பு. சாதுரியனுடைய வாக்குக்கு ஜனத்தைக் கவர்ந்துகொள்ளும் சக்தியுண்டு. நாகரீகமில்லாத ஜாதிகளுங்கூட கதை கேட்கப் பிரியமுற்றுப் பேசுவோர் வாயைப் பார்த்த வண்ணமாயிருப்பார்கள். ஞானிகளின் வாக்கைக் கவனித்துக்கேட்பதில் ரோமர் கிரேக்கர் தீரா வாஞ்சையுள்ளவர்கள். யூதர் இது விஷயத்தில் தாழ்ந்தவர்கள் அல்ல. உலகத்தில் எந்த ஜாதிக்கும் இல்லாத பிரகாரம் **யெகோவா** தமது தீர்க்கதரிசிகளைக்கொண்டு தலைமுறை தலைமுறையாக

இவர்களோடு பேசியிருக்கிறார். யாரோ ஒருவர் எழும்பி விசேஷித்தவிதமாய்ப் பேசினால் அவற்றைக் கேட்கும்படி உடனே இவர்கள் கூடுவார்கள். நானூறு வருஷமாய் தீர்க்கதரிசிகளின் சத்தம் கேட்டதில்லை. திடீரென யோவான் புறப்பட்டபோது ஜனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். யோவான் ஒரு அற்புதமும் செய்யாதிருந்தும், இடிமுழக்கம்போன்ற அவர் வார்த்தையைக் கேட்கத் தேசமே புறப்பட்டு வந்தது. நமதாண்டவர் எழும்பினபோதோ அவர் உபதேசத்தைக் கேட்கும்படி திரளான ஜனங்கள் அவரைப் பின்சென்றதும் ஆச்சரியமல்ல.

அவர் பிரசங்கத்தின் விசேஷமென்ன? தற்காலச் சாதுரியப்பிரசங்கிகள் ஒரு விஷயத்தை எடுத்து, அதைப் பல பிரிவுகளாய்ச் சங்கிலித்தொடர்போல் பேசுவது வழக்கமீ. அல்லது, ஒரு காரியத்தை எடுத்து அதை வியாக்கியானம் பண்ணிக் கொண்டுபோவது வழக்கம். அப்படிப்பட்ட பிரசங்க ஒழுங்கை அவர் உபதேசத்தில் காணோம். இன்ன விஷயத்தைப்பற்றிப் பேசப்போகிறாரென்றும் விளம்பரஞ்செய்து பேசினவரல்ல. தமது பிரசங்கங்களைப் பூரணமாய் ஆயத்தஞ் செய்து, வரிசைப்படுத்தி, ஒவ்வொன்றாகப் பிரசங்கித்துக்கொண்டு போனவரல்ல. சுவிசேஷத்தில் ஒழுங்காய் எழுதப்பட்டபிரகாரமே அவர் பேசினாரென்றாவது, அல்லது அவர் பேசினதெல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சுவிசேஷகர் எழுதினார்கள் என்றாவது நினைக்கவும் இடமில்லை. அப்படியிருந்தாலும், ஆவியானவரின் ஏவுதலால் சுவிசேஷகர் எழுதியிருக்கிறவைகள் நமது ரட்சிப்புக்குப் போதுமானவை. கிறிஸ்துவை நமக்கு வெளிப் படுத்துவதற்கு அவைகளே போதும்.

சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிற போதனைகளை ஆண்டவர் ஒரே தடவை மாத்திரமல்ல, பல சமயங்களிலும் திரும்பத்திரும்பப் பேசி யிருக்கக்கூடும். அவர் பேசினதெல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் எழுதுவது அசாத்தியம். அவர் ஒவ்வொரு வருக்கும், ஒவ்வொரு காலத்துக்கும், சகல விஷயங்களையுங் குறித்துச் சட்டங்கள் உண்டாக்கவேண்டுமானால் உலகங் கொள்ளாது. அவ்வாறு, ஏராளமான பிரமாணங்களையும் விதிகளையும் ஏற்படுத்தினாலும் அவைகள் நமக்கு அனுகூலமாயிராது. மோசேயின் விதிகளைத் தாங்கக்கூடாமல் யூதர் தள்ளாடினதுபோல, கிறிஸ்துவின் விதிகளையும் கைக்கொள்ளக்கூடாமல் நாம் கலங்க வேண்டியதாகும். ஆகையால், அவர் அநேக சட்டங்களையும் விதிகளையும் ஏற்படுத்துகிறவராய் வராமல், **அன்பென்னும்** கட்டினால் நம்மைக் குணமாக்க வந்தார். ஆவிக்குரிய அந்தப் பிரமாணமே சகல சட்டங்களுக்கும் விதிகளுக்கும் மூல சித்தாந்தமும் ஆதாரமுமாயிருக்கிறது. தேவ அன்பு பூரணமாய் நமது

இருதயத்தை ஆண்டுகொள்ளும்போது நமக்கு நாமே பிரமாணங்களாகிறோம், தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் நாம் எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டுமென்பதை அதன்பின் பிரமாணம் நமக்குப் போதிக்கிறது. **தந்நயம்** சகல பாவங்களுக்கும் காரணம். தேவ அன்பு தந்நயத்தைச் சுட்டெரிக்கிறது காலத்துக்குக் காலம் மனுஷருடைய பழக்க வழக்கங்கள் மாறுகின்றன. புதிதாக எத்தனையோ கேள்விகள் புறப்படுகின்றன. ஆண்டவர் எந்தெந்தக் கேள்விக்குத்தான் உத்தரவு எழுதிவைத்துப் போவார்? எத்தனை சட்டங்களைத்தான் உண்டாக்குவார்? அவர் ஆயிரம் பதினாயிரமான காரியங்களைப் போதித்தாலுங்கூட இன்னும் நூதனமான காரியங்களும் நூதனமான கேள்விகளும் எழும்பலாமே. ஆண்டவர் போதித்த உபதேசத்தின் போக்கு, எக்காலத்துக்கும், எல்லாக் கேள்விகளுக்கும் உத்தரவு சொல்லப் போதுமானதென்பது நிச்சயம். ஏனென்றால், அவர் ஒவ்வொரு காரியத்துக்கும் உத்தரவு சொல்லவேண்டுமென்று கவலைப் படாமல், உலகத்தில் கடைசிவரை எழும்பக்கூடிய சகல காரியங்களுக்கும் உத்தரவளிக்கக்கூடிய மூல சித்தாந்தத்தைப் பிரதானமாகக் கூறினார். "உன் தேவனிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமத்தோடும் அன்பு கூருவாயாக. உன்னிடத்தில் அன்புகூறுவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக. மற்றவர்கள் உனக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறாயோ அவைகளையே நீ மற்றவர்களுக்கும் செய்." இவைகளிலே சகலமும் அடங்கியிருக்கிறதென்று போதித்தார்.

இதுமாத்திரமல்ல, அவர் எவ்வளவுதூரம் போதிக்க வேண்டுமோ அவ்வளவுதூரம் போதிக்காதிருந்ததுமில்லை. நாம் போதிப்பதுபோல் ஒரு விஷயத்தையே நீளமாக அவர் விஸ்தரிக்கவில்லை. ஒரு சத்தியத்தை உணர்த்தப் பல காரியங்களைத் துணையாகக் கொண்டார். அவருடைய வாக்கு சுருக்கமாயும், கருத்து பெருக்கமாயும் இருக்கின்றன. சுவிசேஷத்தை வாசிக்கும்போது வாக்கியத்துக்கு வாக்கியம் சம்பந்தமில்லாமல் திடீர் திடீரென வேறு விஷயங்களுக்கு அவர் தாண்டினதுபோல் தோன்றும். எல்லாம் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால், அவர் கற்பிக்க விரும்புகிற சத்தியமின்னதென்று புலப்படும். அவர் பிரசங்கங்கள் விஸ்தரிப்பும் வியாக்கியானமுமல்ல. விஷயங்களை வரிசைப்படுத்திச் செய்த உபந்நியாசங்களுமல்ல. நீண்ட வியாக்கியானமாக அவர் பிரசங்கித்திருந்தால் நமது ஞாபகத்தில் தங்குவது கஷ்டம். நீதிமொழிகள்போல் அவர் சுருக்கமாகப் பேசின சத்தியங்கள் அநேகருக்கு மனப்பாடமாயின. அவ்வாறு உள்ளத்தில் தங்கின வசனங்கள் ஜீவகாலமெல்லாம் நமக்குள்ளிருந்து ஊருகிற நீரூற்றாகவும் இருக்கின்றன. அவர்

எப்பொழுதும் பிரயாணம் செய்கிறவரும், எல்லா வகுப்பாரான ஜனங்களோடு இடைவிடாமல் பேசுகிறவருமாயிருந்தார். இனத்தாரோடும், சீஷரோடும், ஜனங்களோடும், நோயாளிகளோடும், பிசாசுகளோடும், காற்றோடும், கடலோடும், வேதபாரகரோடும், பரிசேயரோடும், ஏரோதியரோடும், சதுசேயரோடும், சாஸ்திரிகளோடும், அறிவீனரோடும், ஆயக்காரரோடும், பாவிகளோடும், புருஷரோடும், ஸ்திரீகளோடும், பிள்ளைகளோடும், பத்தொன்பது தனித்த ஆள்களோடும், பிரதான ஆசாரியரோடும், தேசாதிபதியோடும், கள்ளனோடும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது பிதாவோடும் அவர் பேசியிருக்கிறார். ஒழுங்கான உபந்நியாசம் செய்ய நேரம் எங்கே? ஜனங்களுக்குப் போதிக்கவும் வேணும். தமது சீஷருக்குத் தனித்து அவைகளை விவரிக்கவும் வேணும். சத்துருக்கள் கேள்விகளுக்கும் மித்துருக்கள் வினாவுவதற்கும் பதில் சொல்லவும் வேணும்

இவ்வாறு இடைவிடாமல், பல இடங்களிலும், பல சமயங்களிலும், பல விஷயங்களைக்குறித்து பலரோடு அவர் பேசினதே **சுவிசேஷ உபதேசமாயிற்று.** எவரெவருக்கு என்னென்ன வேண்டுமோ, அவைகள் அந்தந்த நிமிஷத்தில் அவரிலிருந்து தாராளமாய்ப் புறப்பட்டு வந்ததே ஆச்சரியம். அவர் தம்மிலே பூரணமாய் நிறைந்திருந்தால் அல்லாமல் இது எப்படிக்கூடும்? யார் யார் குழாயைத் திருப்புகிறார்களோ, அவரவருக்கு வேண்டியமட்டும் தண்ணீர் பாய்வதுபோல, தேவனுடைய சகல பரிபூரணமும் நிறைந்த திருக்குமாரனிலிருந்து ஜீவவெள்ளம் புறப்பட்டது. எவன் மறு வார்த்தை பேசுவான்? எந்தக் கேள்விக்குத்தான் அவர் உத்தரவு சொல்லாதிருந்தார்?

ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் குறித்து **ஆச்சரியப்பட்டார்கள்.** பரிசேயரும் ஏரோதியரும் அவரைப் பார்த்து: "நீர் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாகப் போதிக்கிறீர்" என்று ஒத்துக்கொண்டார்கள். "இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" என்று யூதர் பிரமித்தார்கள். அவர் பேசின ஞானத்தைக்குறித்து நாசரேத்தூரார் ஆச்சரியப்பட்டார்கள். ரபீ "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" என்று நிக்கொதேமு புகழ்ந்தார்: "அந்த மனுஷன் பேசுகிறதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று அவரைப் பிடிக்கப்போன போர்ச்சேவகர் சொன்னார்கள். அவர் வார்த்தையில் வல்லமையுண்டென பிசாசுகள் அறிந்து அவர் உத்தரவுக்கு நடுங்கி நின்றன. "ஆண்டவரே, நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று பேதுரு அறிக்கையிட்டார். "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன" என்று இரட்சகர் தாமே சொன்னார். இவைகளைச் சுருக்கிப் பார்க்கும்போது, ஆண்டவர் பேசின

உபதேசத்தில் அறிவு, ஆவி, ஞானம், சத்தியம், ஜீவன், புதுமை, தெய்வீகம் விளங்கினதென்பது நிச்சயம். அக்காலத்தில் மாத்திரமல்ல, இந்நாள்வரை அதன் உண்மை ரூபிக்கப்பட்டு வருகிறது.

கிறிஸ்து **அறிவுள்ள** போதகர். அவர் செய்த உபதேசம் உத்தேசமல்ல. மனுஷர் உள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தார். மற்றவர்களைக்குறித்து ஒருவரும் அவருக்குச் சொல்லவேண்டியதில்லை. ஒவ்வொருவருடைய இருதயத்தின் தன்மையையும், மறைவான ஜீவியத்தையும், அவர் திட்டமாய் அறிந்திருந்ததால், அவர் பேச்சில் அவ்வளவு வல்லமையிருந்தன. அவர் யாரோடு பேசினாலும் அவர்கள் தப்பமுடியாது. சீஷனைப்பார்த்து: நீ அத்திமரத்தின் கீழிருந்தபோது உன்னைக் கண்டேன் என்றார். நீர் எங்கேபோனாலும் நான் உம்மைப் பின்பற்றி வருவேன் என்று சொன்னவனுக்கு அது உன்னால் கூடாது என்றார். நான் போய்த் திரும்பிவந்து உம்மைப் பின்பற்றுகிறேன் என்று சொன்னவனுக்கு உடனே பின்பற்று என்கிறார். வருகிறேன் என்றவனை ஏற்றுக்கொள்ளக்காணோம். போகிறேன் என்றவனைச் சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறார். அவர்களிருவரையும் அவர் அறிவார்.

நித்தியஜீவனைத் தேடிவந்தவனைப் பார்த்து: உன் ஐசுவரியத்தை விட்டுவிட வேண்டும் என்கிறார். ஐசுவரியவான்களான அநேக பக்தர்களுக்கு அவர் அப்படிக் கட்டளையிடவில்லை. வீட்டுக்கு வந்து குணமாக்கும் என்று வருந்தி அழைத்தவனை, நீ போ, உன் மகன் சுகமாயிருக்கிறான் என்கிறார். என் வீட்டுக்குள் நீர் வர நான் பாத்திரனல்ல என்றவனுக்கு: இதோ நான் வருகிறேன் என்கிறார். ஆராதனை விஷயங்களைப் பேசித் தன் பாவத்தை மறைத்தவளுக்கு: நீ போய் உன் புருஷனை அழைத்துக்கொண்டு வா என்கிறார். சீஷர் வழியில் தங்களுக்குள் தர்க்கித்ததை, அவர்கள் சொல்லாமலே அறிந்துகொண்டு, அவர்கள் தப்பிதத்தை உணர்த்தினார். வேதபாரகரைப் பார்த்து: உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன என்று கேட்டார். அநேக வியாதிக்காரரிருந்தும், தன்னைக் குளத்தில் கொண்டுபோய்விட ஆள் இல்லையே என்று நெடுங்காலம் தனக்குள் எண்ணிக்கொண்டிருந்தவனைத் தேடிப்போய் அவனைக் குணமாக்கினார். மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்தவராகப் பேசினதே ஜனங்களுக்கு ஆச்சரியம்.

அவர் மனுஷருள்ளத்திலிருப்பதை அறிந்திருந்தும் அவ்வளவு **கிருபை**யோடு அவர்கள் மத்தியில் நடந்துகொண்டது எல்லாவற்றிலும் ஆச்சரியம். மனுஷருடைய எண்ணங்களும் கிரியைகளும் பரிசுத்தம் நிறைந்த அவரது இருதயத்துக்கு

எவ்வளவோ வெறுப்பைக் கொடுக்கக்கூடியதாயிருந்தும், பாவிகளைச் சபித்துத் தள்ளிவிடாமல், அன்போடு அவர்களைச் சேர்த்துக்கொண்டது அதிசயமான கிருபையல்லவா? அவ்வளவு கிருபை உள்ளவருக்கு அந்த அறிவு ஏற்குமேயன்றி நமக்கு ஏற்காது. நாம் இருதயங்களை அறியக்கூடுமானால், நமக்கும் மற்றவர்களுக்கும் அது தீமையாயிருக்கும். ஆகிலும், நாம் எவ்வளவுக்கும் அவருடைய சிந்தையில் வளருகிறோமோ அவ்வளவுக்குத்தக்கதாக இந்த அறிவு ஒருவாறு அருளப்படுகிறது. "ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்" *(1 கொரி. 2:15)*. கிருபை தாங்காத அறிவு மோசம். அனுதாபமற்றவர்களுக்கு இவ்வறிவு இறுமாப்பை உண்டாக்கும். தேவ ஊழியர்களுக்கு மனுஷரை அறியக்கூடிய ஞானம் அவசியம். அது தேவ வசனத்தாலும் ஆவியானவரின் போதனையினாலும் ஒருவாறு கிடைக்கிறதேயல்லாமல், கிறிஸ்துவைப்போல இருதயங்களின் எண்ணங்களை அறியக்கூடிய சக்தி நமக்கில்லை. பிரசங்கிகள் ஆவியின் பலத்தினால் சத்தியத்தை உத்தமமாகப் பிரசங்கிக்கும்போது, இருதயங்களின் இரகசியங்கள் வெளிப்படும். நமது இரகசியத்தைக் கேள்விப்பட்டுத்தான் பிரசங்கி இப்படிப் பேசினாரோ என்று ஜனங்கள் பேசிக்கொள்ள நேரிடும். இது பிரசங்கிகள் பெருமையடையாதபடி அவர்களுக்குத் தெரியாமல் ஆவியானவர் நடப்பிக்கிற கிரியை. இவ்வளவு மரியாதையில் நாம் இருந்தால் போதும். இதற்கும் மிஞ்சின அறிவுக்கு நாம் பாத்திரர் அல்ல.

பிரசங்கிகள் தாங்கள் விசாரித்து அறிந்த காரியத்தை தேவன் தங்களுக்கு வெளிப்படுத்தினதுபோல் பேசுவது, குடுகுடுப்பைக்காரன் அக்கம்பக்கத்தில் விசாரித்து சாஸ்திரம் சொல்வதைபோலிருக்கும். அவ்வாறு ஒன்றை அறிந்திருந்தால் அதை முற்றிலும் விட்டு, அல்லது அதை உணர்த்தும்படி முற்றிலும் வேறு விதமாகப் பேசுவதே ஞானம். எத்தனையோ காரியங்களை ஆண்டவர் நிமிஷந்தோறும் அறிந்திருந்தார். அவைகளை அவர் வெளியிடவில்லை. மேலான சத்தியம் கீழான தோஷங்களை அகற்றும் என்று அறிந்தவராகப் பேசினார். மகா பதட்டமும் கோழையுமான பேதுருவைப் பார்த்து: நீ கன்மலை யென்றார். அப்பெயரானது அவர் தமது குறைவை உணரவும், அருளப்பட்ட பெயருக்குப் பாத்திரமாக நடக்கவும் அவரைத் தூண்டிவிட்டது. "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே, கொஞ்சக்காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக" என்று மற்றவர்களுக்குப் புத்தி சொல்லி எழுதும் நிலைமைக்கு அவரைக் கொண்டுவந்தது *(1 பேதுரு 5:10)*. கிருபையுள்ள

இரட்சகர் நம் ஒவ்வொருவரிடத்திலும் நடந்துகொள்ளுகிற விதம் அதுவே. விசேஷித்த பிரசங்கிகள் ஓரிடத்திற்கு வரும்போது சபையைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தர் அவர்களிடம் சென்று, இந்தச் சபையின் பாவங்களை நீங்கள் அறிந்துகொண்டால் உங்கள் ஊழியத்துக்கு அனுகூலமாயிருக்கும் என்று சொல்ல, அவர்களும் அதற்கு இணங்கிப் பேச, நன்மைக்குப் பதிலாகத் தீமை உண்டானதென்று அறிந்திருக்கிறோம். ஆவியானவர் கிரியை செய்யும்போது, மெய்யான பாவ உணர்வும் ஆசீர்வாதமும் தானாக உண்டாகும். ஒருவர் நமக்குச் சொல்லிக்கொடுக்க அவசியமில்லை.

கிறிஸ்து **அதிகாரத்துடன்** பிரசங்கித்தார். வசனத்தைக் கேட்ட ஜனங்கள், இவர் வேதபாரகரைப்போல் போதிக்காமல் அதிகாரமுடையவராய்ப் போதிக்கிறார் என்று ஆச்சரியப் பட்டார்கள். தீர்க்கதரிசிகளின் சத்தம் நின்று வெகு காலமானது. ஜனங்களை ஏவி எழுப்பிவிடும் தேவ வாக்குகள் ஓய்ந்தன. வேதபாரகர் வேதத்தைப் போதிக்கவேண்டியவர்கள். அவர்கள் ஜீவியம் பாழாய்ப்போனதால், வேதத்தின் மாட்சிமை அவர்களுக்கு விளங்கவில்லை. அனுபவத்திலிருந்து போதிக்கத் திராணியில்லை. ஆகையால் ஜனங்களை உற்சாகப்படுத்தும்படி கணக்கற்ற விதிகளையும், சட்டங்களையும், ஆசாரங்களையும் ஏராளமாய் உண்டுபண்ணிப் போதித்தார்கள்.

வேதத்தைப் பார்க்கிலும் பாரம்பரியங்களையும் சுய வியாக்கியானங்களையும் முக்கியப்படுத்தினார்கள். நிச்சயமாக ஒன்றும் போதிக்கக்கூடாமல், அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள், இவர்கள் இப்படிச் சொல்லி யிருக்கிறார்கள் என்றே பிரசங்கித்தார்கள். சபை அப்படிச் சொல்லுகிறது, அவர் அப்படிச்சொல்லுகிறார், நாம் அறிந்ததோ ஒன்றுமில்லை என்பதுபோல் பேசுவோமானால் அதைப்போல் பரிதாபம் வேறில்லை. அவர்களும் ஜீவனைக் கண்டதில்லை. ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினவர்களையும் பிரவேசிக்க விடவில்லை. சுமக்க அரிதான சுமைகளை மனுஷர் மேல் சுமத்தினார்கள். குருடருக்கு வழிகாட்டின குருடரானார்கள். இவர்கள் புதிது புதிதாக உண்டுபண்ணின ஆசாரக் கொள்கைகளை ஜனங்கள் கைக்கொள்ளக்கூடாமல் தவித்தார்கள். அவைகள் ஒன்று இரண்டல்ல. அவை தனி ஜீவியத்துக்கும், குடும்ப ஜீவியத்துக்கும், மார்க்க அனுசாரத்திற்கும், மற்ற விஷயங்களுக்கும் ஜனங்களை அநியாயமாய்க் கட்டுகிற சகிக்கக்கூடாத கட்டுகளாயிருந்தன. ஜெப ஆலயத்தில் ஆத்தும பசியோடு கூடின ஜனங்களுக்கு இவ்வாறான உமிகளையே புசிக்கக் கொடுத்தார்கள். அப்பங்கேட்டவர்களுக்குக் கல்லைக்கொடுத்தார்கள். சுமக்கமுடியாத இந்தப் பாரத்தால் ஜனங்கள் தங்களுக்குள் பெருமூச்சுவிட்டார்கள். ஜீவவழி

காட்டுவாரில்லை. ஆத்தும இளைப்பாறுதல் அருளுவாரில்லை. சமாதான வழியைக் காண்பிப்பாரில்லை. எங்கே சடங்குகளும், மனுஷருடைய பாரம்பரியங்களும், புறம்பான ஆசாரங்களும் பெருகுகிறதோ அங்கே ஆவிக்குரிய உள்ளான ஆசீவாதங்கள் ஒழிந்ததென்பது நிச்சயம். நன்றாய்ச் செழித்தோங்கி நிற்கும் மரத்தின்மேல் ஒருவகை அந்நியசெடி படருவதுண்டு. அது பார்க்க அலங்காரமாயிருக்கும். அப்படியே படரவிட்டால் அது வெகு சீக்கிரத்தில் மரத்தின் சாரத்தை உறிஞ்சி மரத்தைச் சாகவைக்கும். வேதபாரகர் போதித்த பாரம்பரியத்தாலும் சடங்காசாரங்களினாலும் யூதஜனங்கள் செத்தேபோனார்கள். மகா பெரிய அந்தகாரம் அவர்களை மூடிக்கொண்டது.

கிறிஸ்து போதித்தவுடனே, வேதபாரகருக்கும் அவருக்குமுள்ள வித்தியாசத்தை ஜனங்கள் உடனே கண்டார்கள். அவர்கள் தங்கள் பாரம்பரியங்களால் வேதத்தை மூடியிருந்த மூடலை, இவர் துடைத்து ஏறிந்து உள்ளான தேவமகிமையை வெளிப்படுத்தினார். அவர்களைப்போல் உமியைக்கொடாமல் அப்பத்தைக் கொடுத்தார். பாரமான விதிகளை அவர்கள் தோள்மேல் சுமத்தாமல் ஆத்தும இளைப்பாறுதலை அருளினார். அவர்களைப்போல் சந்தேகத்தோடு பேசாமல், பூரண நிச்சயத்தோடும் மகா உறுதியோடும் பேசினார். அந்தகாரம் நீங்கி வெளிச்சம் பிரகாசித்தது. வெகுகாலம் மறைந்திருந்த யேகோவா, அவர்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாகத் தோன்றினார். தீர்க்கதரிசிகள் யாவரும் "கர்த்தர் சொல்லுகிறார், கர்த்தர் சொல்லுகிறார்'' என்று போதித்திருக்க, இவரோ, மகா அதிகாரத்துடன் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று போதித்தார்.

இப்படிப்பட்ட ஜீவனுள்ள போதனையை அவர்கள் இதுவரை கேட்டதில்லை. வெகுகாலம் வறண்டு போயிருந்த அவர்கள் ஆத்துமா ஜீவ தண்ணீரைக்கண்டது. அதிகாரமுள்ள அவர் போதனையை வேதபாரகரும் கேட்டு அஞ்சி நிற்க வேண்டியதாயிற்று. "இராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு" *(பிர. 8:4)*. அவர் சுயமாய்ப் பேச வந்தவரல்ல. ஜனங்களின் சீர்கெட்ட நிலைமை அவருக்குத் தெரியும். கடவுளுடைய வார்த்தையைக் கொண்டுவந்தார். தேவசித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்ற வேண்டும். தாம் உலகத்தில் வந்த நோக்கத்தை அவர் அறிவார். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜீவ செய்தியைக் கூறாமல் விடார். வேதத்தைப் போதிக்கிறவராக மாத்திரமல்ல, வேதத்துக்குத் தாமே அதிகாரியாகப் போதித்தார். ஜனங்களுடைய இருதயம் உடைபட்டது. சடங்காசாரங்களும் மூடப்பக்தியும் சபைகளை ஆண்டுகொண்டு, அக்கிரமங்கள் மிகுதியாய்ப் பெருகின காலங்களில், ஆவியினால் நிறைந்த பிரசங்கிகள் எழும்பி,

சுவிசேஷத்தை வைராக்கியமாய் கூறப் பெரிய எழுப்புதல் உண்டானதுபோல, அவருடைய போதகம் பெரிய அசைவை உண்டாக்கிற்று. நமது ஜீவியத்தில் சுத்தமும், சத்தியத்தின் அனுபவமும் உள்ளவர்களாய், ஜனங்கள் மீது வாஞ்சையுற்று உத்தமமாகப் போதிக்கும்போது, இந்த அதிகாரத்தொனி நம்மிலும் காணப்படும். வேதபாரகரைப்போல் ஊழியம் செய்யாதபடி நாம் எச்சரிக்கையாயிருப்போமாக.

அவர் **குறிப்புள்ள** போதகர். குறிப்பு வேட்டைக்காரருக்கு அவசியம். பொதுவாகச் சுடுவதற்கும் குறிப்பாகச் சுடுவதற்கும் வித்தியாசமுண்டு. நமதாண்டவர் எப்பொழுதும் இருதயத்துக்கே குறிப்பாய்ப் பேசினார். முகத்தோற்றமும் புறம்பான காரியங்களும் அவரை ஏமாற்றவில்லை. "ஒரு மனுஷனுடைய இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்." இவர் வேதபாரகரைப்போல் புறம்பான வேஷத்தால் மேற்பூச்சாகக் குணமாக்க வந்தவரல்ல. நோயறிந்து வைத்தியஞ் செய்யும் பரமவைத்தியன் இவர். எல்லாவற்றைப்பார்க்கிலும் **இருதயமே** திருக்குள்ளதும் மகா கேடுபாடுள்ளதுமென்று போதித்தவர் அவர். சகல பாவங்களும் இருதயத்திலிருந்தே புறப்படுகின்றனவென்று சாஸ்திரம் கூறினவர் அவர். அப்படியிருக்க, வேரை விட்டுவிட்டுக் கிளைகளைத் தறிக்கமாட்டார். உள்ளான கேட்டை மூடிவிட்டுப் புறம்பான சீர்திருத்தம் செய்யமாட்டார். அவர் இருந்த நாள்களில் யூதருக்குள்ளும் புறஜாதிகளுக்குள்ளும் இருந்த அக்கிரமங்களுக்கும் பாவங்களுக்கும் கணக்கு வழக்கில்லை. அவைகள் யாவற்றையும் அவர் அறிவார். ரோமருடைய அக்கிரமங்களை அவர் அறியாதவரல்ல. அப்படியிருந்தும், அப்பாவங்களை எடுத்து அவர் பேசவில்லை. அவைகளால் விளையும் தீமைகளை ஒவ்வொன்றாய் விவரிக்கவில்லை. கண்டித்துப் பேசினால் பாவம் நீங்கிவிடும் என்று அவர் எண்ணவில்லை. தற்காலம் சிலர் போதிக்கிறபடி, அவைகளை ஒவ்வொன்றாகப் **படிப்படியாய்** விட்டுவிட ஆலோசனை சொல்லவில்லை. நோய்களை உண்டாக்கக்கூடிய விஷம் நிறைந்த ஊற்று இருக்கிறபரியந்தம், வெளிப் பிரயோகங்களால் பிரயோஜனமில்லை என்பதை அறிவார்.

எல்லாப் பாவங்களுக்கும் இருதயமே **ஊற்று.** இருதயம் சரியாயிருந்தால் எல்லாம் சரியாயிருக்கும். ஆகையால் **மனந்திரும்புதலையே** பிரதானமாகக் கூறினார். நீங்கள் **மறுபடியும்** பிறக்கவேண்டும் என்றார். அவருடைய வார்த்தைகள் இருதயத்தையே நோக்கின. கேட்டோர் உள்ளத்தில் அவைகள் கூர்மையான அம்புகள்போல் பாய்ந்தன. அவருடைய வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்படாதவர்கள் இல்லை. என்னைக் கண்டுகொண்டாரே, நான் செய்த எல்லாவற்றையும் சொல்லிவிட்டாரே என்று அதிசயப்பட்டு, தோமாவைப்போல்

"என் ஆண்டவரே, என் தேவனே" என்று அறிக்கையிடத்தான் வேணும். அல்லது, ஆங்காரங்கொண்டு அவரைத் தொலைக்க வகை பார்க்கவேணும். அவரைச் சந்தித்தவன் அவர் வசனத்தின் பிடிக்குத் தப்பமாட்டான். யுத்தம் மும்முரமாய் நடந்த ஓர் இரவில், ஒரு போர்வீரன் எதிரி சேனையில் ஒருவனைப் பிடித்துக்கொண்டு: ஒருவனைப் பிடித்துக்கொண்டேன் என்று கதறினான். சேனாபதி அதைக்கேட்டு: அப்படியானால் அவனை இங்கே கொண்டுவா என்றான். அவன் வரமாட்டேன் என்கிறான் என்றான். வராவிட்டால் அவனை விட்டுவிடு என்று சேனாபதி சொன்னான். என்னையும் விடமாட்டேன் என்கிறான் என்று போர்வீரன் கதறினான். கிறிஸ்துவைப் பேசக்கேட்டவன் அவரை ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, அவர் பிடிக்குத் தப்பமாட்டான். ஏற்றுக்கொண்டால் இரட்சிக்கப்படுவான். ஏற்றுக்கொள்ளாவிட்டால் அந்த வசனமே அவனை நியாயந்தீர்க்கும்.

அவர் மனுஷருடைய இருதயத்துக்கே பேசினபடியால் முகதாட்சணியம் அவரிடத்தில் இல்லை. நீர் முகதாட்சணியம் இல்லாத போதகரென்று சத்துருக்களே சொன்னார்கள். அவர் ஜனங்களுடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும் உத்தியோகத்தையும், ஐசுவரியத்தையும், அறிவையும், உடைநடை, பாவனை முதலான தோற்றங்களையும் கவனிக்கவேயில்லை. அவர் **இருதயத்தை**மாத்திரம் பார்த்தாரே அல்லாமல், மனுஷருக்குள் மேன்மையாக எண்ணப்படுகிற புறம்பான எந்தக்காரியத்தையும் அவர் கவனிக்கவேயில்லை. வேதபாரகர், பரிசேயர், பிரதான ஆசாரியர், லேவியர் முதலானவர்கள் ஜனங்களுக்குள் அதிக மதிப்புள்ளவர்கள். சதுசேயர் ஏரோதியர் இராஜாங்க சம்பந்தமாக அதிகச் செல்வாக்குள்ளவர்கள் மேலோராகிய இவ்வகுப்பாரால் சாதாரண ஜனங்கள் அற்பமாய் எண்ணப்பட்டார்கள். வேதபாரகர் பரிசேயர் அவர்களை வேதமறியாத சபிக்கப்பட்டவர்கள் என்று திட்டினார்கள். ஆயக்காரரும் பாவிகளுமோ மனுஷராக எண்ணப்பட்டார்கள். வேதபாரகர் பரிசேயர் அவர்களை வேதமறியாத சபிக்கப்பட்டவர்கள் என்று திட்டினார்கள். ஆயக்காரரும் பாவிகளுமோ மனுஷராக எண்ணப்படத்தக்கவர்கள் அல்ல. இவ்வாறு பல வித்தியாசங்கள் அவர்களுக்குள்ளிருந்தாலும், நமதாண்டவருடைய பார்வையில் அவர்களெல்லாரும் ஒன்றுதான். எல்லாரும் ஏகமாய்க் கெட்டுப்போன பாவிகள் என்று கண்டார். ஆகையால், அவர்கள் அந்தஸ்தையும் மேன்மையையும் கவனியாமல் அவர்கள் **இருதயத்துக்கே** பேசினார். அவர் எந்த இடத்தில் பேசினாலும், யாரோடு பேசினாலும், எக்காரியத்தைப்பற்றிப் பேசினாலும் அவரவருடைய இருதயத்துக்கே பேசினார். ஒருவனும் எதிர் பேசக்கூடவில்லை.

ஆண்களோ பெண்களோ, ஏழைகளோ தனவான்களோ, வேதபாரகரோ சாஸ்திரிகளோ சதுசேயரோ பரிசேயரோ, சத்துருக்களோ நண்பர்களோ, தந்திரிகளோ குற்றவாளிகளோ, யாரானாலும் சரி, அந்தந்த நேரத்தில் அவரவருக்குக்கொடுத்த உத்தரவு உள்ளத்தை அசைத்துப் பிரமிக்கச் செய்தது. ஒருவரையாகிலும் அவர் தப்பவிடவில்லை. பாவிகள் அவரைப் பற்றிக்கொண்டார்கள். மாயக்காரர் அவரைப் பகைத்தார்கள்.

அவர் போதனையில் விளங்கிய வல்லமைக்கு இரகசியம் இதுதான். அவர் பேசக்கேட்ட அதிகாரிகள் ஆச்சரியப்பட்டதற்கு வேறே காரணமுண்டு. அவர் பிறந்த குடும்பம், வளர்ந்த ஊர், செய்த வேலை அவர்கள் பார்வையில் இகழ்ச்சிக்குரியது. இதுவே அவர்களுக்கு இடறலும் திகைப்புமாயிருந்தது. அவர் எருசலேமுக்குச் சென்று **கமாலியேல்** பாதத்தருகே வேதம் கற்றவரல்ல. தர்சுப்பட்டணத்துக்குப்போய் கிரேக்க சாஸ்திரம் படித்தவரல்ல. முப்பது வயதுவரை எருசலேம் அதிகாரிகள் அவரை அறியார்கள். அவர் நாசரேத்திலிருந்து வந்த தச்சனென்று அவர்கள் அறிந்தபோது: "இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துகளை எப்படி அறிந்திருக்கிறார்" என்று ஆச்சரியப் பட்டார்கள். இரகசியத்தை அறிந்தார்களில்லை. தர்க்க சாஸ்திரமும் தத்துவஞானமும் இவ்வாறு இருதயத்தை அசைத்ததுண்டோ? பிரசங்கி நிற்பதெப்படி, பார்ப்பதெப்படி, கைகளை உபயோகிப்பதெப்படி, சத்தத்தை ஏற்றுவது இறக்குவது எப்படி, பிரசங்கத்தைத் தொடங்குவதெப்படி, அதை முடிப்பதெப்படி எனப் பலகாரியங்கள் வேதசாஸ்திரப் பாடசாலையில் கற்பிக்கப்படுகிறதுண்டு.

இந்த நாடக அப்பியாசங்கள் அநேகருடைய விஷயத்தில் தாவீது சவுலின் போராயுதங்களைத் தரித்துக்கொண்டு தடுமாறினதுபோலிருக்கும். ஊரில் நெருப்புப் பற்றிக் கொண்டதைக் கண்டவன், அதை அறிவிப்பதற்கு இந்த அபிநயங்கள் படிக்கவேண்டியதில்லை. தீயோ தீ! தீயோ தீ! என்று அவன் தன்னை அறியாமலே கதறமாட்டானா? நித்திய சத்தியங்களை உள்ளத்தில் உணராதவர்கள் எத்தனை சாஸ்திரம் கற்றாலும் பிரயோஜனமென்ன? தேவனையும் மோட்ச மகிமைகளையும் கண்ணாரக்கண்ட இவர், ஜனங்கள் மோசமான வழியில் விரைந்து செல்வதைப் பார்க்கும்போது அவர் இருதயம் தத்தளிக்காமலிருப்பதெப்படி? அவர் இருதயம் பேசாதிருப்பது எப்படி? அவர் இருதயத்திலிருந்து பேசினதால் இருதயங்கள் குத்தப்பட்டன. அவர் சாஸ்திரிகளிடம் சென்று வேதபாடம் கற்றுக்கொள்ளவில்லையென்றாலும், சாஸ்திரிகளும் தலைகவிழ்ந்து போகத்தக்கதாக அவருடைய ஞானமுள்ள வார்த்தைகள் அவர்கள் இருதயத்தில் சென்றன. முப்பது வயதுரை அவர் கைப்பாடுபட்டு வேலை செய்தாலும், அவர் இருதயத்தை

நிரப்பிக்கொண்டிருந்த நித்திய சத்தியங்கள், அவர் ஊழியம் செய்யப் புறப்பட்டவுடனே ஜீவ வெள்ளம்போல் பிரவாகித்தன. "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" என்று நிக்கொதேமு சொன்னது சரியே.

இருதயத்துக்குப் பேசும் சாஸ்திரத்தை நமதாண்டவரிட மிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நமது ஊழியம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அதுவே இரகசியம். இது விஷயத்தில் பிரசங்கிகளுக்குப் பல சோதனைகள் உண்டு. மனுஷருடைய முகத்தையும், அந்தஸ்தையும், ஐசுவரியத்தையும் கவனித்து மோசம் போகிறார்கள். மனுஷருக்குப் பயந்து, சத்தியத்தைப் பேசாது மறைத்து, முகஸ்துதி செய்வது அருவருப்பு. வசனத்தைக் கேட்போருக்கும் பிரசங்கிப்பவருக்கும் அது தீமையாகும். அது தேவ ஊழியமாகாமல் மனுஷ ஊழியமாகும். நம்மைப்பற்றிய உணர்ச்சியே இம்மாறுபாட்டுக்குக் காரணம். நித்திய சத்தியங்கள் அக்கினியைப்போல் நமது இருதயத்தில் எரியுமானால், நாம் நம்மை முற்றிலும் மறந்து, புறம்பான தோற்றங்களைக் கவனிக்காது, எல்லாரையும் ஒன்றுபோல் பாவித்து, மனுஷருடைய இருதயத்துக்கே பேசுவோம். நாம் உண்மையோடும் ஊக்கத்தோடும் பேசும்போது, ஆவியானவர் கிரியை செய்வதினாலே, பெரியோரும் சிறியோரும் ஒன்றுபோல் உணர்த்தப்படுவார்கள். இருதயத்திலிருந்து புறப்படும் செய்தியே இருதயத்தை அசைக்கும்.

கிறிஸ்து **கிருபை** நிறைந்த போதகர். "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட **கிருபையுள்ள** வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்." அவர் அதிகாரத்தோடு பேசினது மாத்திரமல்ல, மனுஷருள்ளத்தை அறிந்து அவர்கள் இருதயத்துக்கே பேசினதுமாத்திரமல்ல, அவர் பேசின வார்த்தைகள் கிருபை பொருந்தியிருந்தன. அவர் பேசக்கேட்ட ஜனங்களில் சிலர் அவரை எலியா என்றார்கள். மற்றவர்கள் எரேமியா என்றார்கள். அக்கினி எலியாவும், அழுத எரேமியாவும் சேர்ந்து அவர் உபதேசத்தில் விளங்கினது மெய்தான். வேதபாரகருடைய போதனையில் அன்போ, கிருபையோ, இரக்கமோ கிடையாது. அவர்கள் ஐசுவரியவான்களைப் புகழ்ந்தும், ஞானிகளைப் போற்றியும், ஏழைப்பாவிகளைச் சபித்தும் போதித்தார்கள். ஆண்டவருடைய உபதேசத்தில் கண்டிப்பில்லை என்று எண்ணக்கூடாது. அவரைப்போல் மகா தைரியமாய், கண்டிப்பாய்ப் போதித்தவர்கள் யார்? வேதபாரகர் பரிசேயருடைய மாயங்களை வெளியரங்கமாகக் கடிந்து கொண்டார். அவர் காலத்து ஆலய அதிகாரிகள், ஜனத்தின் மூப்பர்கள் மகா நீச நிலைமையிலிருந்தார்கள். தங்கள் உள்ளான கேட்டைப் புறம்பான உத்தியோகங்களால் மறைத்து, ஜனங்கள் பார்வையில் மேன்மைபெற்றிருந்தார்கள். அவர்களுடைய

மாயத்தையும் கல்லறைக் குழிபோன்ற அவர்கள் இருதயத்தின் கேடுபாடுகளையும் பகிரங்கமாக எடுத்துக் கூறினார். அவர்களுடைய அக்கிரமங்களால் தேவ மார்க்கம் கெட்டு, ஆலயம் அசுசிப்பட்டு, கர்த்தருடைய ஜனங்கள் ஏமாற்றப்பட்டுத் தவித்தது அவரால் தாங்கக்கூடவில்லை. "மனுஷருக்கு முன்பாக மேன்மையாக எண்ணப்பட்டது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பாயிருந்தது." ஆகையால் அதிக வைராக்கியத்துடன் அவர்களைக் கடிந்துகொண்டார். எவ்வளவு கண்டிப்பாய் அவர் பேசினபோதிலும், அவர் இருதயத்தில் **அன்பும் கிருபையும்** நிறைந்திருந்தன. அவருடைய வைராக்கியமான வார்த்தைகளில் **கிருபை** கலந்திருந்தது. இரட்சகர் சத்தியத்தோடுமாத்திரம் வந்தவரல்ல. அவர் "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்" வந்தார். அன்பின் அவதாரமும் கிருபைப் பெருக்கமுமாய் வந்தவர் வேறுவிதமாய்ப் பேசுவதெப்படி? அவருக்கு எல்லாரும் ஒன்றுதான். அவரது கிருபை நிறைந்த வசனமே சத்துருக்களை நடுங்க வைத்தது. அவரது கிருபை நிறைந்த வசனமே பாவிகளைக் கைதூக்கி இரட்சித்தது. அறிவீனரும், பாவிகளும், ஆத்துமா தொய்ந்தவர்களுமான புருஷரும் ஸ்திரீகளும், அவருடைய கிருபை நிறைந்த வசனத்தால் ஆறுதலையும் இளைப்பாறுதலையும் கண்டார்கள். அவர் ஐயோ, ஐயோ என்று சொன்னதும் மனத்துயரமேயன்றி சாபமல்ல அவர் அழிக்க வராமல் இரட்சிக்கவே வந்தார்.

சத்தியத்தைப் பிரசங்கிக்க அநேகரால் கூடும். **கிருபையுடன்** பேசுவதோ கஷ்டம். தன் ஜீவியத்தில் பாவத்தை வைத்திருந்த ஒருவர் மகா வைராக்கியமாகப் பிரசங்கித்தார். அதைப்பற்றித் தனிமையாகக் கேட்டபோது, நான் எப்படியிருந்தால்தான் என்ன, நான் பிரசங்கிப்பது வேத சத்தியமல்லவா என்றார். பிரசங்க ஊழியம் இலேசென்று அநேகர் நினைப்பதற்குக் காரணம் இதுதான். உத்தம பிரசங்கியாயிருப்பது எவ்வளவோ கஷ்டம் என்று அநேகர் உணருகிறதில்லை. சுத்த இருதயத்தோடும், அன்பும் கிருபையும் நிறைந்த இருதயத்தோடும், இருதயத்திலிருந்து பொங்கிவரும் போதனை எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியுமா? வேதத்தில் ஏதோ ஒன்றைப் படித்துக்கொண்டு, அதைப் பேசிவிடுவது பிரசங்கமாகுமா? மனுஷருக்கு அது பிரசங்கம்போல் தோன்றலாம். இருதயங்களை அறிந்திருக்கிற ஆண்டவர் என்ன சொல்லுவார்? கிருபையற்ற பிரசங்கம் உப்பில்லாப் போஜனத்துக்குச் சமானம். நாம் சத்தியத்தை வைராக்கியமாகப் பேசுவதால் "வெட்டொன்று துண்டு இரண்டு" என்பதுபோல் விழலாம். அதற்குமேல் என்ன நடக்கும்? ஸ்நானக யோவான் **சத்தியத்தினாலே** வந்தவர். அநேக இருதயங்கள் உடைப்பட்டன. அதற்குமேல் நடந்ததென்ன? அவர்களுக்குப் பாவமன்னிப்பையும் ஆறுதலையும் சமாதானத்தை

யும் கொடுக்க அவரால் கூடாமல், தன்னிலும் பெரியவரான **கிறிஸ்துவிடம்** அவர்களை அனுப்பினார். அவருடைய சீஷரில் ஒருவராகிய அப்போஸ்தலன் யோவான், இவர்கள் இருபேருக்கு முள்ள வித்தியாசத்தை அறிந்து கிறிஸ்து **கிருபையினாலும் சத்தியத்தினாலும்** வந்தார் என்று எழுதினார். வெறும் சத்தியம் மனதைக் கடினப்படுத்தும் கிருபையுள்ள வசனங்கள் உள்ளத்தை உருக்கி ஆற்றும். ஆகையால் "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டு மென்று நீங்கள் அறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் **கிருபை** பொருந்தினதாயும் **உப்பால்** சாரமேறினதாயுமிருப்பதாக" என்று அப்போஸ்தலன் அனுபவத்தி லிருந்து சொன்னார் *(கொலோ. 4:6).*

அவருடைய போதனையில் **திருஷ்டாந்தங்களும் உவமைகளும்** நிறைந்திருந்தன. பரத்திலிருந்து வந்த போதகர் பரம காரியங்களைப் போதிக்கவேண்டும். பரம காரியங்களை இருக்கிறபடியே அவர் சொல்வாரானால் மனுஷர் கிரகித்துக் கொள்ள முடியாது. ஆகையால் மகா உன்னதமான சத்தியங்களை மகா சாதாரணமான காரியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப் படுத்திப் போதித்தார். மனுஷர் தாங்களாகவே தங்களைச் சூழ்ந்திருக்கும் சிருஷ்டிப்புகளைக்கொண்டு தேவ மகிமையை அறிந்துகொள்ளவேண்டியது நியாயம். பாவம் மனக்கண்களைக் குருடாக்கினதாலும், அநேக தொல்லைகளும் கவலைகளும் அவர்கள் உள்ளத்தை நிரப்பிக்கொண்டதாலும், இவைகளை மனுஷர் கவனிக்கிறதுமில்லை, இவைகளிலிருந்து போதனை களைக் கற்றுக்கொள்ளுகிறதுமில்லை. உலக நன்மைகளை எவ்வளவாக அனுபவித்தாலும், அவைகளில் மறைந்திருக்கிற பிதாவின் கிருபைகளை உணர்ந்துகொள்ளுகிறதுமில்லை. தானியத்தை அறுத்துச் சேர்த்துக்கொள்வார்கள். கனிகளைப் பறித்துப் புசிப்பார்கள். புஷ்பங்களை அணிந்துகொள்வார்கள். அவ்வளவுதான், அதற்குமேலே யோசிக்கவேண்டியதென்ன?

இவ்வாறு, காலமெல்லாம் நாம் கண்டும் காணாதவர்கள் போலிருந்த சாதாரணமான காரியங்களிலிருந்து, மகா அருமையான சத்தியங்களை ஆண்டவர் போதித்தார். அவர் மாம்சத்தில் வந்து வாசம்பண்ணினபோது கடவுளுடைய சிருஷ்டிப்புகளைப்பார்த்து ஆனந்தமடைந்தார். **பிதாவை** விட்டுப் பிரித்து அவர் ஒன்றையும் பார்த்ததில்லை. அவர் உபதேசிக்கத் தொடங்கினபோது இருதயத்தின் நிறைவிலிருந்து அவர் வாய் பேசிற்று. சிருஷ்டிப்பு மனுஷருக்குப் போதிக்கக்கூடிய ஆவிக்குரிய காரியங்களை அவர் கண்டார். அவர் உவமானமாக எடுத்துப் பேசின **திருஷ்டாந்தங்களை** விவரமாய் ஐந்தாம் அதிகாரத்தில் சொல்லியிருப்பதால் இங்கு திரும்பவும் கூறாது விடுவோம். கலிலேயா நாட்டிலுள்ள புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் இடைவிடாது பார்த்த காரியங்களிலிருந்து, அவர்கள் ஒருபோதும்

யோசிக்காத சத்தியங்களைப் புகட்டினதே, ஜனங்கள் ஆச்சரியப்பட்டதற்குக் காரணம். அவர்கள் அந்தத் திருஷ்டாந்தங்களைக் கேட்டபின், அவர் உவமானமாகச் சொன்ன காரியங்களைத் திரும்பப் பார்க்கும்போதெல்லாம், அவர் போதித்த சத்தியங்கள் ஞாபகத்துக்கு வருமல்லவா? இந்த இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின்னுள்ள நமக்கு அவைகள் இன்றும் போதிக்கிறதே. நாம் ஆகாரத்துக்காகக் கவலைப்படும் போது பறவைகள் நம்மோடு பேசுகிறதில்லையா? வஸ்திரத்துக்காகக் கவலைப்படும்போது காட்டுப் புஷ்பங்கள், அல்லது நமது வீட்டில் வளருகிற புஷ்பங்கள் நம்மோடு பேசுகிறதில்லையா? நாம் ஏதாவது விஷயத்தில் தாழ்ச்சியடையும் போது நம்மை நடத்த வல்ல மேய்ப்பன் இருக்கிறார் என்று ஆடுகள் நமக்குச் சொல்லுகிறதில்லையா? நமது பிரசங்கங்களைக் குறித்துச் சோர்வுண்டாகும் போது வயல்கள் நம்முடன் பேசுகிறதில்லையா? ஏற்றகாலத்தில் பலனுண்டு என்பதை நன்மக்கள் நமக்கு சொல்லுகிறதில்லையா? உத்தம ஜீவியம் பிரகாசமுள்ளதென்று வெளிச்சம் நமக்குப் போதிக்கிறதில்லையா? கிருபையுள்ள சம்பாஷணை பலனுள்ளதென்று உப்பு நமக்கு உணர்த்துகிறதில்லையா? நமது ஊழியத்தால் உண்டாகும் மாறுதலை நாம் காணக்கூடா விட்டாலும், புளித்தமா அதன் நிச்சயத்தை நமக்கு அறிவிக்கிற தில்லையா? இதுபோன்ற அநேகம் சிறிய காரியங்கள் ஆவிக்குரிய மேலான சத்தியங்களை நமக்குத் திட்டமாய்ப் போதிக்கின்றன.

இவை தவிர, அவர் பேசின உவமைகளும் கவனிக்கப் படத்தக்கவை. அவர் உபதேசத்தில் மூன்றில் ஒரு பாகம் உவமைகளே. கொஞ்சக்காலம் நேராகப் பிரசங்கித்தவர் திடீரென உவமைகளாகப் போதித்த காரணமென்ன? ஜனங்கள் ஆவிக்குரிய சத்தியங்களை உள்ளபடி அறிந்துகொள்ளக்கூடாதவர்களா யிருந்ததைக்கண்டு அவைகளை உவமைகளினால் மூடினார். அவர் சொன்ன உவமைகளோ யாவரும் இலேசாய் மனதில் வைக்கக்கூடியதும் மறக்கக்கூடாததுமாயிருந்தன. பிரசங்கத்தில் கதை சொல்லும்போது சபையார் அதை எப்படி விசேஷித்துக் கவனிப்பார்களோ, அதுபோலவே ஆண்டவர் சொன்ன உவமைகளை எல்லாரும் பிரியமாகக் கேட்டார்கள். அவர்கள் வீடுகளுக்குத் திரும்பினபின் அவைகளைக்குறித்து பெற்றாரும் பிள்ளைகளும் இன்னின்ன கதைகள் சொன்னார் என்பதுபோல பேசிக்கொள்வார்கள். அவைகளின் கருத்தை உடனே அறிந்து கொள்ளக்கூடிய ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களும் அங்கிருந் திருப்பார்கள். அவ்வாறு அறிந்துகொள்ளக் கூடாதவர்களும், அவ்வுவமைகள் அவர்கள் ஞாபகத்தில் இருந்தபடியால், அவற்றுள் மறைந்துள்ள சத்தியங்களை, ஏற்றகாலத்தில் அறிந்துகொள்ளக்கூடும். இதன்றி சத்துருக்கள் அவர் பேசும்

வார்த்தையிலிருந்து குற்றங் கண்டுபிடிக்க விழிப்பாயிருந்த படியால், தாம் சொல்ல விரும்பின சத்தியங்களை உவமைகளால் மூடி அவர்களையும் கவிழ்த்தினார்.

அவர் பேசின உவமைகள் சாதாரணமாயிருந்தாலும் அவற்றுள் அடங்கிய நித்திய சத்தியங்களின் ஆழம், அகலம், நீளம், உயரத்தைப் பூரணமாய் அறிந்தவர்கள் யார்? கெட்ட குமாரனுடைய ஒரே உவமையால் இரட்சிக்கப்பட்டவர்களின் தொகை எத்தனை! இவ்வுவமைகளின்பேரில் எழுதப்பெற்ற வியாக்கியானங்கள் எத்தனை! அவருடைய போதனைகளைக் கற்றுக்கொள்ளக் கட்டப்பட்டிருக்கிற பாடசாலைகள் எத்தனை! கற்றுவருகிற மாணாக்கர் எத்தனை! செலவாகிற பணங்கள் எவ்வளவு! கற்பிக்கிற வேத சாஸ்திரிகள் எத்தனை! கற்று முடிந்ததா? இல்லை. முன் ஒருபோதும் இல்லாத பிரகாரம் தற்காலத்தில் வேத ஆராய்ச்சி உலக முழுவதையும் ஆண்டுகொண்டிருக்கிறது. உலகத்தின் கண்கள் நாசரேத்தூர் **இயேசுவையல்லவோ** நோக்கியிருக்கின்றன. அவரே உலகத்தின் நம்பிக்கை, ஆகிலும் எல்லாரும் அவரை அறிந்துகொள்ளவில்லை. அவரை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டவர்கள் உண்டு. அவரை ஜெகத் குருவாகவும் ஜீவியத்துக்கு மாதிரியாகவும் மாத்திரம் ஒப்புக்கொண்டவர்களும் எழும்பியிருக்கிறார்கள். அவருக்குத் தன்னை முற்றிலும் ஒப்புவித்து, அவருடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவன் அவரை **இன்னாரென்று** அறிந்து பணிந்துகொள்வான்.

உலகத்தில் எவரோடும் ஒப்பிடக்கூடாத **நிகரற்ற போதகர்** அவர். அவருடைய உபதேசத்தையும் அவரையும் பிரிக்கமுடியாது. அவரும் அவரது உபதேசமும் ஒன்று. இதுவே அவருடைய வல்லமைக்கும் அதிகாரத்துக்கும் இரகசியம். மோசேயும் அவர் பிரமாணங்களும் ஒன்றல்ல. தேவனால் அருளப்பட்டவைகளை அவர் போதித்தார். புத்தன் தனக்கு நலமாய்த் தோன்றின உபதேசத்தைப் போதித்தார். ஆகிலும், மற்றவர்கள் தன்னை நம்பவோ, தனது உதவியைத் தேடவோ அவர் போதிக்கவில்லை. மகமது ஓர் மார்க்கத்தை உண்டாக்கினார். அதைக் கைக்கொண்டு நடக்கும்படியான பலத்தை தன்னிடத்தில் பெற்றுக்கொள்ளும்படி அவர் சொல்லவில்லை. அவர் தாமே மரண நேரத்தில் தன் பாவத்தை உணர்ந்தார். உபதேசங்களையும் போதனைகளையும் உலகத்துக்குக் கொடுத்தவர்கள் அநேகர். அவைகளைக் கைக்கொண்டு நடக்கச் செய்யும் சக்தியோ அவர்களில் இல்லை. இங்கிலாந்தில் ஒரு சீனன் ஞானஸ்நானம்பெற்ற சமயத்தில் தான் கிறிஸ்தவனான காரணமென்னவென்று சபையாருக்குச் சொன்னான். அதாவது என் மார்க்கத்தில் உபதேசங்கள் இல்லையென்று நான் கிறிஸ்து மார்க்கத்தில் சேரவில்லை. நான் படித்த உபதேசத்தின்படி நடக்க என்னைப் பலப்படுத்தும் **ஆள்**

என் மார்க்கத்தில் இல்லை. கிறிஸ்துவை நான் ஏற்றுக்கொண்ட போது, அவரே என்னைப் பலப்படுத்தி நடத்தும் ஆண்டவராக என் அனுபவத்தில் கண்டேன். இந்த நிச்சயத்திலிருந்து என்னைப்பிரிக்க ஒருவராலும் ஆகாது என்று சொன்னான். இது நிச்சயம் என்பதை நம்மிலும் அநேகர் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம்.

ஆண்டவர் மோட்ச வழியைப்பற்றிப் போதித்தார்; **நானே** அதற்கு **வழி** என்றார். ஒளியைப்பற்றி போதித்தார், **நானே** அந்த **ஒளி** என்றார். நித்திய ஜீவனைப்பற்றிப் போதித்தார், **நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்** என்றார். தேவனைக்குறித்தும், மனுஷனைக் குறித்தும், இம்மையைக் குறித்தும், மறுமையைக்குறித்தும் அநேக சத்தியங்களைப் போதித்தார், **நானே சத்தியம்** என்றார். பாவங்கள் மன்னிக்கப் படவேண்டுமென்று போதித்தார், பாவங்களை மன்னிக்க தமக்கு அதிகாரம் உண்டென்றார். பாவத்திலிருந்து விடுதலையாக வேண்டுமென்று போதித்தார், **குமாரன்** விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் எனறார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று போதித்தார், என் சமாதானத்தை உங்களுக்கு அருளுவேன் என்றார். உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்று போதித்தார், நானே உங்களோடிருப்பேன் என்றார். கவலைவேண்டாம் என்று போதித்தார், வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவேன் என்றார். நீங்கள் கடவுளைத் தரிசிக்கவேணும் என்று போதித்தார், என்னைக் கண்டவன் **பிதாவைக்** கண்டான் என்றார், அவர் வேறே, அவருடைய உபதேசங்கள் வேறேயல்ல. **அவரே உபதேசம், உபதேசமே அவர்.** இதுவே கிறிஸ்தவனின் மகிழ்ச்சி. இதுவே விசுவாசியின் வெற்றி. அவர் உபதேசிக்க வந்த ஜெகத்குரு மாத்திரமல்ல. இக்காலத்தில் பலர் அப்படிப் பேசுகிறார்கள். சுவிசேஷம் அப்படிப் போதிக்கிறதில்லை.

கிறிஸ்துமார்க்கத்தின் இரகசியத்தை அநேகர் அறிகிறதில்லை. சீஷன் தன் குருவிடம் சென்று, அவன் அருகில் உட்கார்ந்து, உபதேசம் பெற்றுப் போவது உலக வழக்கம். கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் ஒரு குருவுக்கும் சீஷனுக்குமுள்ள சம்பந்தம்போல் அல்ல. உலகத்தில் குரு வேறேதான்; சீஷன் வேறேதான். அவ்வாறு கிறிஸ்துவினிடத்தில் கற்றுக்கொள்கிறவன் அவர் நடந்ததுபோல் எப்படி நடக்கக்கூடும்? அவர் யார்? நாம் யார்? கிறிஸ்துவினிடத்தில் சில உபதேசங்களைப் பெற்றுக்கொள்ளுதல் கிறிஸ்து மார்க்கமல்ல. **கிறிஸ்துவே கிறிஸ்துமார்க்கம்.** கிறிஸ்துவினுடையவர்களே கிறிஸ்தவர்கள். ''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்'' என்று ஆண்டவர் தமது சீஷரைப்பார்த்துச் சொன்னார் *(மாற்கு 9:41).*

"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்" என்று அப்போஸ்தலன் நிருபங்களில் திரும்பத்திரும்பச் சொல்லியிருக்கிறார். கிறிஸ்துவினுடையவர்கள் என்றால் கிறிஸ்துவுக்குச் **சொந்தமானவர்கள்** என்று அர்த்தம். ஆண்டவர் தமது சீஷரைச் சேர்த்து, அவர்களுக்குப் போதித்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களைப் படிப்படியாய்த் தமக்கு முற்றிலும் **சொந்தமாக்கி,** தாமே தமது ஆவியினால் அவர்களுக்குள் உன்னத பலமாக வசித்து, தமது உபதேசத்தின்படி அவர்களை நடக்கப்பண்ணினார். கிறிஸ்து நமக்குச் சொந்தமாகி, நாமும் அவருக்கு முற்றிலும் சொந்தமாகும்வரையில், நாம் **புதிதான ஜீவனுள்ளவர்களாய்** நடக்க முடியாது. ஞானஸ்நானம் பெற்றதும், இராப்போஜனம் வாங்கினதும், சபையில் சேர்ந்து ஆராதனை செய்து வருகிறதுமே கிறிஸ்து மார்க்கம் என்று அநேகர் நினைக்கிறது மோசம். உபதேசம் உண்டு; ஜீவியம் மாறவில்லை. அறிவுண்டு; அனுபவமில்லை. சோதனைகளும் பாவங்களும் உண்டு. அவைகளை மேற்கொள்ளவோ பலமில்லை ஊழியமுண்டு; ஆசீர்வாதமில்லை. இவர்கள் கிறிஸ்துவைக் **குருவாகக்** கொண்டார்களேயன்றி அவர் நம்மைப் பலப்படுத்தும் **ஜீவனாகக்** கொள்ளவில்லை. அவராலேயல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது.

ஆனால், பவுல் சொல்வதுபோல் "நம்மைப் பலப்படுத்தும் கிறிஸ்துவால் எல்லாவற்றையும் செய்ய நமக்குப் பலமுண்டு" (பிலி. 4:13). இதுவே திராட்சச்செடியையும் கொடியையும்பற்றி ஆண்டவர் போதித்த ஐக்கிய இரகசியம். நான் நடந்ததுபோல் நீங்களும் நடக்க வேண்டும் என்றுமாத்திரம் அவர் சொல்வாரானால், யாரால் அவரைப்போல் நடக்கக்கூடும்? விரைவாய் ஓடக்கூடிய ஒரு பலசாலி ஒரு குழந்தையைப்பார்த்து: நான் ஓடுகிறதுபோல் நீயும் ஓடவேணும் என்று சொல்லுகிறது போலிருக்குமல்லவா? ஆனால் அவன் அந்தக்குழந்தையைத் தன் தோளில் வைத்துக்கொண்டு ஓடுவானானால், அவன் ஓடும் ஓட்டத்தில் பிள்ளையும் சேர்ந்து ஓடினதாகுமே. கிருபையுள்ள இரட்சகர் தாம் போதித்தபடி நாம் நடக்கவேண்டும் என்று கற்பித்ததோடு, அவரே நம்மை அவ்வாறு நடத்துகிறது உண்மையானால், இவர் **அதிசயமானபோதகர்** அல்லவா? பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துவைப் போதகராக மாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல், அப்போதகத்தைத் தம்மில் பலிக்கச் செய்யும் **தேவபலமாகக்** கண்டறிந்ததால், **அவரே** எனக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பும், ஆறுதலும், ஜீவனும், சமாதானமும், சந்தோஷமும், ஐசுவரியமும், மோட்சமும் என்று புகழ்ந்து பேசினார். அப்படிப்பட்ட அனுபவம் நமக்கும் கிடைப்பதாக.

பாஷை எண்ணத்தின் அவதாரம். மறைந்திருக்கும் எண்ணம் வார்த்தைமூலம் வெளிப்படும். பேசும் வார்த்தைகள்

தொனியால் கேட்கப்படும். எழுதப்பட்ட வார்த்தைகள் வாசித்து அறியப்படும். கடவுள் ஆவியாயிருக்கிறார். அவரைக் காணவும் அவர் பேசுவதைக் கேட்கவும் நம்மால் முடியாது. மனுஷரோடு பேச கடவுளுக்குக் தீரா வாஞ்சையுண்டு. அந்த வாஞ்சை மாம்சத்தில் வந்த அவர் **குமாரனில்** நிறைவேறிற்று. கடவுளுக்குள் மறைந்திருந்த எண்ணத்தை கிறிஸ்து பேசவந்ததால் அவருக்கு **வார்த்தை** என்னும் பேர் வந்தது."ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை கடவுளிடத்தில் இருந்தது. அந்த வார்த்தையே கடவுளாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்."

இது மெய்யானால், கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பென்ன? கடவுளே அவர் மூலமாய்ப் பேசும்போது மனுஷன் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, அவர் வசனத்துக்கு நடுங்கவேண்டாமா? வேதவசனப் பழக்கம் துணிகரத்தை உண்டாக்கிற்றோ? உபதேச அறிவு இறுமாப்பை உண்டாக்கிற்றோ? கிறிஸ்து மார்க்கம் இன்னதென்று கிறிஸ்துவிடம் கற்றுக்கொண்டதுபோக, கிறிஸ்துவையே பரீட்சை பார்க்கிற காலம் வந்ததோ? அவரிடத்தில் குறை கண்டுபிடிக்கவும், அவருக்கே போதிக்கவும் கூடிய ஞானம் வந்து விட்டதோ? அவர் தெய்வீக உபதேசத்தைக் கூட்டவும் குறைக்குவும் மாற்றவும் தக்கதான சாஸ்திர அறிவும் பெருமையும் நுழைந்ததோ? முற்காலப் பிதாக்கள் வசனத்தை ஏற்றுக்கொண்ட விசுவாசத்தைத் தற்கால ஞானிகள் அறிவீனம் என்று சொல்லலாச்சோ? வானமும் பூமியும் மாறினாலும் அவரது வசனம் ஒழிவதில்லை. கிறிஸ்துவின் வசனத்தில் மோதுகிறவர்கள் தங்களுக்கே கேடுண்டாக மோதுகிறார்களேயல்லாது மற்றப்படியல்ல. அவரது திருவசனத்தை **தேவவாக்காக** ஏற்றுக்கொள்ளும்போது நமது குடும்பங்களும் சபைகளும் ஆசீர்வதிக்கப்படும்.

கிறிஸ்து **தேவபோதகர்** என்பது நிச்சயம். அவரது வாக்கில் தெய்வீகம் உண்டு. பிரசங்கத்தில் **ஆளே** விசேஷம் என்று சொல்லக்கேட்டிருக்கிறோம். ஒருவர் எழுதிய பிரசங்கங்களை வாசிக்கும்போது, அவர் பேசக்கேட்டால் என்னமாயிருக்கும் என்றும் சொல்வார்கள். நமது இரட்சகருடைய தோற்றம் எப்படியிருந்ததென்றும், அவர் சத்தம் எப்படிப்பட்டதென்றும் நமக்குத் தெரியாது. நாம் அவருடையப் பேச்சைக் கேட்கா விட்டாலும், எழுதப்பட்டுள்ள அவருடைய வசனத்தில் வல்லமை அணுவளவும் குறையவில்லை. இதிலேதான் அவருடைய தெய்வீக மகத்துவம் விளங்குகிறது. இந்த இரண்டாயிர வருஷ உலக சரித்திரம் அதற்கு ஆதாரம். அவருடைய வசனம் எங்கெங்கே சென்றதோ அங்கெல்லாம் அது நடப்பித்திருக்கும் மாறுதல்கள் ஆச்சரியம்! இருளில் மறைந்திருக்கிறவைகளையும் இருதயங்களின்

யோசனைகளையும் வெளிப்படுத்தும் வல்லமை அவர் வசனத்துக்குண்டு. கண்ணாடியில் மனுஷன் தன் சாயலைக் காண்பதுபோல் அவர் வசனத்தில் பாவி தன் கேடுகளைக் காண்கிறான். இருபுறமும் கருக்கான அந்தப் பட்டயம் பாவியின் இருதயத்தை ஊடுருவக்குத்தி அவன் நொறுங்குண்டு கீழே விழும்படி செய்கிறது. அவ்வசனமே அவனைத் தைரியப்படுத்திக் கைதூக்கி இரட்சிக்கிறது. மனுஷர் குணத்தில் ஒருவருக்கொருவர் எவ்வளவோ பேதப்பட்டிருக்கிறார்கள். கல்வியிலும் நாகரீகத்திலும் பழக்கவழக்கங்களிலும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. அப்படியிருந்தும் பலஸ்தீனா தேசத்தில் யூதர்கள் மத்தியில், இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஒருவர் பேசின உபதேசம், எத்தேசத்தாரும் தங்களுக்கே பேசப்பட்டதுபோல் ஏற்றுக்கொண்டது மெய்யானால், அதற்கு இரகசியம் என்ன? மனுஷரால் உண்டான மார்க்கங்கள் அந்தந்த தேசத்தாருக்கு மாத்திரம் ஏற்றதாயிருக்க, உலக முழுவதையும் ஆண்டுகொள்ளும் மார்க்கம் **தேவமார்க்கம்** என்பதற்கு ஆட்சேபனை உண்டோ? ஞானிகளின் வாசகங்களும் தத்துவ சாஸ்திரங்களும் காலக்கிரமத்தில் மாறி உருவழிந்துபோயிருக்க அத்தனை வருஷங்களுக்கு முன்னே பேசப்பட்ட கிறிஸ்துவின் வசனங்கள் இன்றுதான் பிரசங்கித்தாற்போல் இருதயங்களை அசைப்பதின் இரகசியமென்ன?

கிறிஸ்து பரமேறியதின்பின் அவருக்குச் சொந்தமான அடியார்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட ஜீவ வசனத்தை எற்றுக்கொண்டபோதிலும் கிறிஸ்துவின் அடியார் பட்டபாடு கொஞ்சமல்ல. வசனத்தைக் கூறாதபடி உலக அதிகாரிகளால் அவர்களுக்குத் துன்பம் உண்டானது அநேகர் இரத்தச் சாட்சிகளாக மரித்தார்கள். அவர்களை அழித்தாலும் வசனத்தை அழிக்க உலகத்துக்கு வல்லமையில்லை. இரத்தச் சாட்சிகளின் பரிசுத்த ஜீவியமும், அவர்கள் சந்தோஷத்துடன் தங்கள் ஜீவனை வசனத்தினிமித்தம் கொடுத்ததும் அநேகரை யோசிக்கச் செய்தது. மனக்கடினமுள்ளோர், கொலை பாதகர், பொல்லாத மூர்க்கர், இராஜாங்கத்துக்கும் அஞ்சாதவர், எந்தப் போதனையாலும் சீரடையாதவர் சுவிசேஷ வசனத்துக்குச் செவிகொடுத்து, இருதயம் உடைந்து, கண்ணீர்விட்டழுதார்கள். சிலுவையில் அறையுண்ட இரட்சகனின் பாதத்தைப் பிடித்துக்கொண்டு, பாவ மன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்று, கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக நின்றார்கள். சிலர் கொல்லப்பட்டாலும் மற்றவர்கள் அவர்களுக்குப் பதிலாக எழும்பினதால் சாட்சிகளுக்குக் குறைவுண்டாகவில்லை. "ஆண்டவர் வசனம் தந்தார், அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி" என்னும் வாக்கு நிறைவேறிற்று. இவ்வாறு பல நூற்றாண்டுகளாக கிறிஸ்துவின் அடியாரான புருஷரும் ஸ்திரீகளும் தங்கள்

பிராணனை அருமையாக எண்ணாமல் ஜீவ சுவிசேஷத்தைக்கூறி இரத்தச் சாட்சிகளாக மரித்தார்கள். கிறிஸ்துவின் வசனம் தேசங்களை வென்றது. அது முதலில் பலஸ்தீனாவிலிருந்து புறப்பட்டு, எருசலேமைச் சுற்றிலும் பரவி, சமாரியாவிலும் பிரவேசித்து, அந்தியோகியா, ரோமாபுரி, அலெக்சந்திரியா, கான்ஸ்டாந்திநோபில் முதலான தேசங்களில் படர்ந்தது. அது சென்ற இடமெங்கும் சீர்கெட்ட பாவிகளைத் தேவ புத்திரராக்கினது. கிறிஸ்துவின் வசனம் உலகத்தை மேலது கீழதாகப் புரட்டிவிட்டதென மனுஷர் பயத்துடன் பேசிக் கொண்டனர். அக்காலத்துக் கொடிய பாவங்களாகிய பல மனைவிகளைச் சேர்த்தல், மனம்போல் அவர்களைத் தள்ளிவிடுதல், சிசுக்களை அழித்தல், அதிகாரம் பெற்ற துன்மார்க்கம், மல்லயுத்தம், அடிமைகளைத் துஷ்ட மிருகங்களுக்குப் போட்டு அவர்கள் துடித்துச் சாவதை வேடிக்கை பார்த்தல், சித்திரவதை, குரூரமரணம், அநியாய யுத்தம், அடிமைத்தனம் முதலான அக்கிரமங்களை கிறிஸ்துவின் போதனை அடியோடே அழித்து, தேசத்தின் குடிகளை இரட்சித்தது. அவருடைய வசனம் யார் யாருக்குள் பூரணமாய்ப் பிரவேசித்ததோ அவர்கள் குணமும் நடக்கையும் மாற்றப்படாதிருந்ததில்லை. இது பட்டயத்தினாலும் பயமுறுத்தலாலும் கட்டாயமாக ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கமல்ல. அவ்வாறு ஸ்தாபித்தால் ஜனங்கள் மார்க்கத்தில் சேரலாம், அவர்கள் ஜீவியமோ மாறாது. ஜீவியம் மாறவேண்டுமானால் ஒருவன் தானே விரும்பித் தன் முழு மனதோடு வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் ஏழைகளான கிறிஸ்துவின் சாட்சிகள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்த ஆயுதம், **அன்பின்** பிரமாணமேயல்லாமல் வேறே போராயுதங்கள் அல்ல. இதை நினைத்து **நெப்போலியன்** ஆச்சரியப்பட்டான்.

இங்கிலாந்தின் சரித்திரம் கிறிஸ்துவின் சுவிசேஷ வல்லமைக்குச் சிறந்த திருஷ்டாந்தம். கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னே ஜூலியஸ் சீசர் என்பவன் அத்தீவில் பிரவேசித்தபோது குடிசைகளில் வசித்த நாகரீகமற்ற ஜாதியாரைக் கண்டான். அவர்கள் பல வர்ணங்களை வேஷம் போல் பூசிக்கொண்டிருந்தார்கள். தேவ அறிவு அவர்களுக்கு இல்லை. அறுநூறு வருஷங்களுக்குப்பின் சுவிசேஷ ஒளி அவர்கள் மத்தியில் பிரகாசிக்கத் தொடங்கினபோது, முன் கலிலேயாவிலிருந்தவர்களுக்கு வெளிச்சம் உதித்ததுபோலிருந்தது. அதுமுதல் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக யுத்தங்களும் போராட்டங்களுமாயிருந்து, அதன்பின் அத்தேசம் ஜீவ ஒளி பிரகாசித்த கிறிஸ்துவின் இராஜ்யமானது. சிறு தேசமாயிருந்தும் திருவசனத்தாலுண்டாகும் ஞானத்தோடும் கிருபையோடும் அவர்கள் ஆண்டதால், காலக்கிரமத்தில் உலகத்தையே ஆண்டுகொள்ளும்

சிலாக்கியத்தைப் பெற்றார்கள். அவர்கள் போகாத தேசமும் பிரயாணம் செய்யாத கடலும் இல்லையெனச் சொல்லலாம். எத்தனையோ இராஜ்யங்கள் உலகத்தில் இருந்தபோதிலும், எல்லாருடைய கண்களும் நோக்கிப் பார்க்கிற இராஜ்யம் பிரித்தானியா அல்லவா? இவ்வாறு அத்தேசம் மேன்மையும் மதிப்பும் அடைந்ததற்குக் காரணமென்ன? செல்வமும் சேனையும் மேன்மையைக் கொண்டுவருமா? தேவனற்ற எந்தத் தேசத்துக்கும் செல்வமும் சேனையும் அழிவைமாத்திரம் கொண்டுவரும். பிரித்தானியா தேசத்தின் மேன்மைக்கு இரகசியமென்னவென்று காலஞ்சென்ற விக்டோரியா இராணியம்மாளை ஒருவர் கேட்டபோது, ஒரு வார்த்தையில் "**தேவவசனம்**" என்றார்கள். தனித்தனி மனுஷரிடம் பற்பல குறைவுகள் இருந்தபோதிலும், கிறிஸ்துவின் வசனமே அவர்களை மேன்மைப்படுத்தி வருகிறது என்பதற்குச் சந்தேகமில்லை. நமது சக்கரவர்த்தி நாள்தோறும் கிறிஸ்துவின் வசனத்தை வாசித்துத் தியானிக்கிறார் என்பது நாம் அறியாத விஷயமல்ல. இது போலவே அமெரிக்காவில் உள்ளவர்களும் கிறிஸ்துவின் வசனத்தை தங்கள் தேசத்துக்குச் சட்டமாக ஏற்றுக்கொண்டதால் மேன்மை பெற்றார்கள். ஆனால் பிரித்தானியாவானலும் அமெரிக்காவானாலும் வேதத்தை அசட்டை செய்வார்களானால் அது அவர்களுக்கு ஆபத்தாகும் என்பதில் சந்தேகமில்லை.

அவருடைய சுவிசேஷ வசனம் பிரவேசித்த மகா இருண்ட தேசங்களான ஆப்பிரிக்கா, நியூகினியா, நியூஎப்பிரிட்டீஸ் முதலான பல தீவுகளில், மிருகங்களிலும் கேடான மிலேச்சர் எவ்வளவு அதிசயமாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்! அவர்களுக்குள்ளே ஆலயங்கள் எத்தனை! போதகர்கள் பிரசங்கிகள் எத்தனை! பள்ளிக்கூடங்கள் எத்தனை! ஆராதனைகளில் அவர்களுக்கு இருக்கும் வாஞ்சை எவ்வளவு! கிறிஸ்துவின்மீதும் அவரது ஊழியர்மீதும் அவர்களுக்கு இருக்கும் பற்றுதல் எவ்வளவு! எத்தனை சேனைகள் போனாலும் இது ஆகுமா? எத்தனை தேசாதிபதிகள், நியாயாதிபதிகள் கூடிப்பேசினாலும் இந்த மாறுதல் உண்டாகுமா? எத்தனை சாஸ்திரிகள் ஞானிகள் போய்க் கற்பித்தாலும் முடியுமா? ஒருக்காலும் முடியாது. நாசரேத்தூர் இயேசுவினுடைய **வசனமல்லவோ** இத்தனை பெரிய அதிசயத்தை நடப்பித்திருக்கிறது. "பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின." அந்தத் தீவுகளின் சரித்திரத்தை நாம் வாசித்துப் பார்த்தால் நமது உள்ளம் கரையும். கண்களில் கண்ணீர் பெருகும். நாசரேத்தூர் தச்சனின் மகிமை விளங்கும். லாசருவை உயிரோடெழுப்பினது இந்த அற்புதங்களுக்குமுன் எம்மாத்திரம் என்றே சொல்ல வேண்டும். கிறிஸ்துவின் வசனத்தில் **தெய்வீகம்** உண்டு. அவர் வேறே, அவர் வசனம் வேறே அல்ல. அவ்வாறிருந்தால் அவர் பேசினதற்கும்

எழுதப்பட்ட வசனத்துக்கும் பெரிய வித்தியாசம் இருக்கும். அவர் வசனத்திலேயே ஜீவன் இருப்பதால், எந்த நீசனானாலும், நரமாம்ச பட்சணியானாலும், அந்த வசனத்தை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும் நிமிஷத்தில், மரித்தவன் எழும்புவதுபோல் எழும்புகிறான்.

கிறிஸ்துவின் போதகத்தில் **தெய்வீகம்** உண்டென்பதற்கு அது எவ்விதம் எல்லாவற்றையும் **ஆண்டுவருகிற**தென்பதும் கவனிக்கத்தக்கது. கிறிஸ்து மார்க்கத்தின் சாரத்தைச் சரித்திரங்கள், காவியங்கள், உபந்நியாசங்கள், தத்துவ சாஸ்திரங்கள், கல்விகள், சிற்பசாஸ்திரம், சித்திரவித்தைகளில் காணலாம். புதிய ஏற்பாடு சுட்டெரிக்கப்பட்டுபோனாலும், உலகத்தில் எழுதப்பட்டிருக்கிற புஸ்தகங்களிலும் சாஸ்திரங்களிலுமிருந்து புதிய ஏற்பாட்டைத் திரும்பவும் எழுதக்கூடுமென்று வேதசாஸ்திரிகள் கூறினது உண்மையே. அதன் கருத்தென்னவென்றால், சுவிசேஷ போதனைகள் காலத்துக்குக் காலம் உலகிலுள்ள எல்லாப் புஸ்தகங்களிலும் பிரவேசித்திருக்கின்றன என்பதே. அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளாத அநேகருக்குள்ளும் அவருடைய உபதேசம் அவர்கள் அறியாமலே பிரவேசித்திருக்கிறது. தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லாவிட்டாலும், அவருடைய போதனையின் மாறுதலை அவர்கள் குணம், பேச்சு, மரியாதைகளில் காணலாம்.

இந்திய தேசத்தில் கிறிஸ்தவர்களல்லாத அநேக புருஷர், ஸ்திரீகள், வாலிபர், பெண்களுக்குள் அவர்கள் அறியாமலே கிறிஸ்துவின் போதனை பிரவேசித்து, அவர்கள் நடக்கையை வெகு தூரம் மாற்றியிருக்கிறது. இது அவர்கள் வாசிக்கும் நல்ல புஸ்தகங்கள்மூலமாகவும், கிறிஸ்தவர்களோடு நெருங்கிப் பழகுவதாலும் உண்டாகிறது. தடைகளை நீக்கும் ஆண்டவர் சீக்கிரத்தில் அவர்களைத் தமது மந்தையில் சேர்த்துக் கொள்ளும்படி நாம் ஜெபிக்க வேண்டும். இந்தியாவில் ஆண்டவர் தமது கிரியை நடப்பிக்கும் விதம் நமக்கு ஒருவேளை விளங்காதிருக்கலாம். அநேகர் கிறிஸ்துவுக்குத் தூரமானவர்கள் அல்லவென்று தைரியமாகச் சொல்லலாம். முன்னில்லாத பிரகாரம் அவர்கள் கிறிஸ்துவைக்குறித்து ஆராய்ச்சி செய்கிறார்கள். அவரைப்பற்றிய பிரசங்கங்களைக் கேட்பதற்கு ஆவலோடு போகிறார்கள். அவர்மேல் மதிப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ ஊழியனுக்கு விரோதமாகக் குற்றம் ஏற்பட்டு, கோர்ட்டில் விசாரணையானபோது, அரசாங்கத்தில் உயர்ந்த அந்தஸ்திலிருக்கிற ஒரு பிராமண உத்தியோகஸ்தர், கிறிஸ்தவரான தன் சிநேகிதனைப் பார்த்து: உங்களில் சிலர் கூடி இந்தக் காரியத்தை ஒழுங்கு செய்து கொள்ளக்கூடாதா? அது கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு, பத்திரிகைகளில்

பிரஸ்தாபமாகிறது எனக்கு அதிக வேதனையாயிருக்கிறது, நமது **ஆண்டவருடைய** நாமத்துக்கு அவமானமாகிறதே என்றார்.

இவரைப்போல் கிறிஸ்துவின்மேல் மதிப்புள்ளவர்கள் அநேகருண்டு. சென்னையில் கில்க்கி என்னும் வேதபண்டிதர் **கிறிஸ்துவையே** பொருளாக வைத்து உபந்நியாசித்த ஆறு பிரசங்கங்களையும் கேட்க, இந்து புருஷரும் ஸ்திரீகளும் எவ்வளவோ ஆவலோடு கூடிவந்தார்கள் என்பதும், கூட்டங்கள் முடிந்தபின் கிறிஸ்துவைக்குறித்து எவ்வள்வோ மதிப்போடும் பிரியத்தோடும் பேசிக்கொண்டார்கள் என்பதும் நாம் அறியாத விஷயமல்ல. அவர் பேசின நாள்களில் உட்கார, நிற்கத்தான் இடமுண்டா? இதுவெல்லாம் போதுமாவென்று ஒருவர் கேட்கலாம். சில வருஷங்களுக்கு முன் அவர்கள் நமது கிட்ட நெருங்கினார்களா? நாம் சொல்வதை இவ்வளவு பிரியத்தோடு கேட்டார்களா? வேதாகமங்களை வாங்கி வீடுகளில் வாசித்து வந்தார்களா? நம்மோடு சேர்ந்து யாதொரு வித்தியாசமில்லாமல் கிறிஸ்துவின் ஜீவியத்தைக் குறித்துக் கவனமாய்ப் படித்தார்களா? நமது வீடுகளில் தாராளமாய்ப் பிரவேசித்தார்களா? நம்மைத் தங்கள் வீடுகளுக்கு அன்போடு அழைத்துச் சென்றார்களா? நாம் எதிர்பார்க்கிறபடிதான் தேவன் கிரியை நடப்பிக்கவேண்டும் என்றல்ல. நாம் எதிர்பாராத காரியங்களை ஆண்டவர் செய்யக்கூடும். "மாம்சமான யாவர்பேரிலும் அவருக்கு அதிகாரம் உண்டு." கிறிஸ்துவின் வசனம் ஆச்சரியமான மாறுதலை நடப்பித்துக்கொண்டு வருகின்றன. கர்த்தர் சீனா தேசத்திலும் இப்பொழுது பெரிய காரியங்களை நடப்பிக்கிறார். அங்கே காணப்படும் மாறுதல்களுக்குக் காரணம் கிறிஸ்துவின் வசனமே.

கிறிஸ்தவமார்க்க விரோதியான ஜூலியனும் அவனைப் போன்றவர்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகத்தில் இல்லாதபடி வேரறுத்துவிடத் துணிந்தார்கள். துணிந்தும் காரியம் பலிக்கவில்லை. 'கலிலேயனே நீயே ஜெயித்தாய், நீயே ஜெயித்தாய்' என்று சொல்லி அவன் ஜீவனைவிட்டான். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகத்தைவிட்டு எடுக்கவேண்டுமானால், அதன் சாரமேறிய சகல காவியங்களையும், சரித்திரங்களையும், நூல்களையும் இல்லாமல் அழிக்கவேண்டும். அதுமாத்திரமல்ல, அவரது இரட்சிப்பின் வல்லமை உட்பிரவேசித்த உலகிலுள்ள சகல மனுஷரையும் அழிக்கவேண்டும். அத்தோடு தீர்ந்ததா? இல்லை. கிறிஸ்துவின் நற்கந்தம் பெற்ற புறமதஸ்தரில் அநேகரை அழிக்கவேண்டும். இது தவிர, எத்தனையோ இந்துக் குழந்தைகள் சுவிசேஷ வசனங்களை மனப்பாடம் செய்திருக்கிறார்கள். இவையாவையும் அழிக்குமுன் கிறிஸ்து மார்க்கத்தை அழிக்க ஒருவராலும் முடியாது. அவருடைய சுவிசேஷ வசனம் கல்லில் பதிந்த எழுத்தைப்போல் உலகத்தில் இத்தனை நூற்றாண்டு

களாகப் பதிந்தும், அக்கினியைப்போல் உலகமெங்கும் பரவியும் இருக்கும்போது அதை அழிக்க வல்லவன் யார்? "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவ தில்லை'' என்று இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பலஸ்தீனாவில் அவர் சொன்ன சொல் எவ்வளவு ஆச்சரியமாய்ப் பலித்தது.

ஒருவேளை இவையாவையும் அழிக்கக்கூடுமென்றாலும், வாய்பேசாத மிருகங்களும், தோட்டம் சோலைகளும், ஆலயங்களும் ஜெபவீடுகளும் வாய்திறந்து பேசாதோ? மிருகங்களுக்குக் கிடைத்த பட்சமும், தோட்டங்களுக்கு கிடைத்த அலங்காரமும் எங்கேயிருந்து வந்தன? சோலைகளாலும் கனிமரங்களாலும் செல்வம் பொழிந்த கலிலேயாநாடு, மகமதியர் பிரவேசித்தபோது பாழான வனாந்தரமாயிற்றே. இரட்சகரின் சுவிசேஷ ஆசீர்வாதம் விசேஷமாக அவரை அறிந்தவர்களையும், அவர்கள்மூலமாய் அவரை இன்னும் அறியாதவர்களையும் ஆளுகிறதே. கிறிஸ்து எப்படிப்பட்டவரென்று கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, சர்வசிருஷ்டியும் அறிந்திருக்கின்றதே. அவருடைய அடியாருக்குப் பாக்கியமான காலம் வரும்போது தங்களுக்கும் விமோசனம் கிடைக்குமென்று **சிருஷ்டியாவும்** ஏகமாய்த்தவித்து ஆவலோடு காத்திருக்கின்றதே *(ரோமர். 8:20)*.

உலக முழுவதிலும் இவ்வளவு ஆச்சரியமான மாறுதல் கிறிஸ்துவின் **வசனத்தால்** உண்டாகக்கூடுமானால், அதில் தெய்வீகம் உண்டென்பது நிச்சயம். உலகத்தாரின் சிந்தனைகளை வெளிப்படுத்தக்கூடிய **சர்வஞானமும்,** உலகத்தின் பாவங்களையும் அறிவீனத்தையும் தொலைக்கக்கூடிய **சர்வவல்லமையும்,** வித்தியாசமில்லாமல் சகல தேசத்தாரையும் ஆண்டுகொள்ளும்படியான **சர்வவியாபகமும்** கிறிஸ்துவின் வசனத்துக்கு உண்டு. ஏழைச் செம்படவர்கள் சுமந்துசென்ற பைத்தியமாகத் தோன்றின பிரசங்கத்தினாலே சாத்தானுடைய அரண்களை நீர்மூலமாக்கி சகல ஜாதிகளையும் இரட்சித்துக் கொள்ள கடவுளுக்குப் பிரியமாயிற்று. மலைச்சிகரத்தில் அக்கினி கக்குதல் அதன் ஆழத்தில் மறைந்திருக்கும் அக்கினியையும், கரையில் மோதுகின்ற பலத்த அலைகள் சமுத்திர ஆழத்தில் அடிக்கும் புசலையும், வீட்டையும் நாட்டையும் அதிரச்செய்யும் இடிமுழக்கம் ஆகாயத்தில் மறைந்திருக்கும் மின்சார வல்லமையையும் அறிவிப்பதுபோல், கிறிஸ்துவின் **போதகம்** மனுமக்களில் நடப்பிக்கும் மாட்சிமையான மாறுதலால், அவ்வசனத்தில் மறைந்திருக்கும் தெய்வீகத்தைக் காண்பிக்கிறது. ஆகையால், கிறிஸ்துவை **தேவபோதகர்** என்றும், அவருடைய வசனத்தை **தேவவசனம்** என்றும் பூரண நிச்சயத்துடன் அறிக்கையிடுகிறோம்.

17

அற்புத மூர்த்தி

The Lord of Miracles

கிறிஸ்துவின் பிறப்பு அற்புதம். அவர் ஜீவியமும் அற்புதம். அவர் உபதேசமும் அற்புதம். அவர் கிரியைகளும் அற்புதம். அவர் மரணமும் அற்புதம். அவர் உயிர்த்தெழுதலும் அற்புதம். ஆகையால் அவரை **அற்புத மூர்த்தியென** அழைக்கிறோம். அவரது அற்புதங்களைக் குறித்து விசாரிக்கு முன் வேறொரு அற்புதத்தைக் கவனிப்பது நல்லது. அந்த அற்புதம் அவரில் நிறைவேறின **தீர்க்கதரிசனங்களே**. கிறிஸ்துமார்க்கம் உண்மையென நிரூபிக்கும் திருஷ்டாந்தங்களில் தீர்க்கதரிசன **நிறைவேறல்** மகா பிரதானம். வேதத்தில் நாம் திட்டமாய்க் காணும் அதிசயம் அதுதான். தாம் கிறிஸ்து என்பதற்கு ஆண்டவர்தாமே எடுத்துக் காண்பித்த ஆதாரம் அதுதான். இயேசுவே **கிறிஸ்து** என்பதற்கு அப்போஸ்தலர் ரூபித்துக் காண்பித்த சாட்சியும் அதுதான். கிறிஸ்து மார்க்கம் தேவமார்க்கம் என்பதற்கு தீர்க்கதரிசன நிறைவேறுதலே அத்தாட்சி. அநேக வருஷங்களுக்குமுன் பற்பல மனுஷரால் உரைக்கப்பட்ட காரியங்கள், கிறிஸ்துவில் தவறாது நிறைவேறுமானால், அவைகள் கடவுளால் அருளப்பட்டவைகள் என்பதற்கும், அவைகள் எவரில் நிறைவேறினதோ அவர் வேதவாக்கியங்களின்படியே தேவ குமாரனான **உலக இரட்சகர்** என்பதற்கும் யாதொரு சந்தேகமு மில்லை. தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவில் நிறைவேறவில்லை யென்றால், அவை முன்னொருக்காலும் ஒருவனிலும் நிறைவேறினதுமில்லை, இனி ஒருவனில் நிறைவேறப்போகிறது மில்லை என்பது நிச்சயம்.

யாதாமொரு மனுஷன் தன்னைக் கிறிஸ்துவென்று காட்டும்படி தீர்க்கதரிசனங்களைத் தன்னில் நிறைவேற்றிக் கொள்ள முடியுமா? அது ஒருக்காலும் முடியாது. ஒருவேளை சில காரியங்களை அவன் மாயமாகச் செய்யலாம். கழுதையையும் கழுதைக்குட்டியையும் சம்பாதித்து ஏறி வரலாம். யார் அவனைச் சட்டை பண்ணுவார்? காத்தருடைய நாமத்தினாலே வருகிற

இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று கணக்கற்ற ஜனங்கள் கூடி அவனைப் போற்றவேணுமே? ஏதோ ஒன்றை எடுத்து அவன் தானே நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கலாம். அந்த ஒன்று தானும் நிறைவேறாமல் வெட்க மடைவான். மோசே முதற்கொண்டு சங்கீதங்களிலும் தீர்க்க தரிசனங்களிலும் உள்ள யாவற்றையும் அவன் நிறைவேற்றுவ தெப்படி? தான் பிறப்பதற்கு முன்னே நாசரேத்திலுள்ள தன் தாயைப்பார்த்து: நீ என்னை **பெத்லகேமில்** பெறவேண்டுமென்று கற்பிப்பானோ? மரித்தபின் மறுபடியும் உயிரோடே வருவானோ? ஆண்டவர் தீர்க்க தரிசனங்களைத் தம்மில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று கவலைப் பட்டவரல்ல. அவரது ஜீவியத்தில் பிறப்புமுதல் கடைசிவரை தீர்க்கதரிசனங்கள் யாவும் தானாக ஒன்றின்பின் ஒன்றாய் நிறைவேறின. சத்துருக்கள் அறியாமல் அவருக்குச் செய்த யாவும் தீர்க்கதரிசன நிறைவேறலாயிருந்தன. அவரைப்படுத்தின பாடுகளும், காடியைக் குடிக்கக் கொடுத்ததும், வஸ்திரங்களைப் பங்கிட்டதும், கள்ளரை இருபக்கம் சிலுவையில் அறைந்ததும், அவர் மரித்தபின் விலாவில் ஈட்டியால் குத்தினதும், அவர் காலெலும்புகள் முறிக்கப்படாதிருந்ததும், அவர் ஐசுவரியவானுடைய கல்லறையில் வைக்கப்பட்டதும், அவர் சத்துருக்களோடு பேசி ஒழுங்கு செய்து கொண்ட காரியங்கள் அல்ல. இவ்வாறு நடந்த அநேக காரியங்கள் தீர்க்கதரிசன நிறைவேறுதல் என்பது சீஷர்களுக்கு படிப்படியாகவே தெரியவந்தன.

தீர்க்கதரிசனங்கள் மனுஷனுடைய சுயசித்தத்தினால் உண்டானவைகள் அல்ல. தீர்க்கதரிசிகளுக்கும் தாங்கள் கூறிய விஷயங்களைப்பற்றிப் பூரண அறிவு இருந்ததில்லை. தேவனே தீர்க்கதரிசனங்களை அருளினவர். அவரே அவைகளை கிறிஸ்துவில் நிறைவேற்றினவர். தீர்க்கதரிசனம் அநேக வருஷங்களுக்குப்பின் நடப்பவைகளை முன்னமே தெரிவிக்கிறது. ஆகையால் தீர்க்கதரினம் **வாக்கில் விளங்கும் அற்புதம்.** அற்புதம் **கிரியையில் வெளிப்படும் தீர்க்கதரிசனம்.** இரண்டும் இயற்கைக்கு மிஞ்சினதே. ஒன்று வார்த்தையில் விளங்கும் அற்புதம். ஒன்று கிரியையில் விளங்கும் அற்புதம். இரண்டும் தெய்வீகமுள்ளவை. இராஜமந்திரி தேசத்தின் தாறுமாறுகளைக் கவனித்து, காரியங்கள் இவ்வாறு இருக்குமானால் இத்தனை வருஷங்களுக்குள் நமது இராஜ்யம் அழிந்துபோகுமென்று அறிவிக்கலாம். இதற்குத் தெய்வீக ஞானம் வேண்டியதில்லை. காலநிலைகளைப் பலவருஷங்களாகக் கணித்துப் படிக்கும் சாஸ்திரி, பஞ்சத்தையோ அல்லது செழிப்பான காலத்தையோ முன் அறிவிக்கலாம். அது காலநிலையின் அனுபவத்தா லுண்டாகும் அறிவு. இதுபோலவே, அநேக வருஷக் கணக்குகளை ஆராய்ந்து வான சாஸ்திரமும் கூறலாம். தேவனருளிய

தீர்க்கதரிசனமோ மனுஷருடைய ஞானத்துக்கு மிஞ்சினதும், அவர்கள் கொஞ்சமாயினும் கிரகிக்கக்கூடாததுமாயிருக்கிறது. மனுஷர் சில விஷயங்களில் பொதுவாகத் தங்கள் உத்தேசங்களை வெளியிடலாம். அது ஒற்றை இரட்டை பிடித்ததுபோலிருக்கும். ஆண் பிறக்கவேண்டும், தப்பினால் பெண் பிறக்கும் என்ற அபூர்வ ஞானத்தை என்ன சொல்ல! தேவ தீர்க்கதரிசனங்களில் உத்தேசம் என்பது கிடையாது. அவைகள் பொதுவாய்க் கூறப்பட்டவைகளுமல்ல. காலம், இடம் சம்பவம் முதலானவைகள் வெகு திட்பநுட்பமாக அறிவிக்கப்பட்டன. அவைகள் எழுத்தின்படியே நிறைவேறின. அவைகள் கூறப்பட்ட காலத்திலேயே நிறைவேறியிருந்தால், அந்தத் தீர்க்கதரிசிகளே தந்திரமாய் நிறைவேற்றிக்கொண்டார்கள் என்றாகும். அவர்களெல்லாரும் மரித்து மறைந்துபோனார்கள். நூற்றுக் கணக்கான வருஷங்களுக்குப்பின்பு, தீர்க்கதரிசனங்களும் ஒய்ந்து நானூறு வருஷங்களுக்குப் பிறகு, அடுக்கடுக்காய் அவைகள் ஒருவரில் நிறைவேறவேண்டுமானால் அதைப்போல் அற்புத முண்டோ? தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக்குறித்தே தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அவைகள் யாவும் தம்மில் நிறைவேறினதாக இரட்சகர் சீஷர்களுக்கு விளக்கிக் காண்பித்தார். சரித்திரம் மறைந்திருப்பது தீர்க்கதரிசனம். தீர்க்கதரிசனம் நிறைவேறுவது சரித்திரம். அவ்வாறு நிறைவேறின தீர்க்க தரிசனங்களே கிறிஸ்துவின் உண்மையான சரித்திரம். அவைகளை நிறைவேற்றினவர் கடவுள். அவர் ஒருவருக்கே வருங்காலம் நிகழ்காலமாயிருக்கிறது. நமக்கோ அது அற்புதமாயிருக்கிறது.

பழைய ஏற்பாட்டைக் கருத்தாய் வாசிப்பவர்கள், யாரோ **ஒருவரைக்** குறித்து ஆதியாகமம் முதல் மல்கியாவரை கூறியிருப்பதைக் காண்பார்கள். அவ்வாறு கூறப்பட்டவர் யார்? அவர் உலகத்தில் வெளிப்பட்டாரா, அல்லது இன்னும் வெளிப்படவில்லையா? ஸ்நானகன் கேட்ட கேள்வி வருகிறது. "வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா?" ஆண்டவர் கொடுத்த உத்தரவென்ன? வருகிறவர் நான்தான் என்று சொல்லாமல் அதைப்பார்க்கிலும் பலமான உத்தரவு கொடுத்தார். தீர்க்கதரிசனம் தம்மில் நிறைவேறுகிறதை யோவானுக்கு ஞாபகப்படுத்தினார். அச்சமயத்தில் நிறைவேறின தீர்க்கதரிசனம் அவர் செய்த அற்புதங்களே. நாம் புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது, தீர்க்கதரிசிகள் சொன்னதெல்லாம் கிறிஸ்துவில் நிறைவேறினதைக் காண்போம். இரட்சகர் எருசலேமைக் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனங்களும் நிறைவேறின. அவர் வருகை சம்பந்தமாக நிறைவேறவேண்டிய தீர்க்கதரிசனங்களும் உண்டு. முந்தினவைகள் எப்படி நிச்சயமாக நிறைவேறினதோ அதுபோலவே இவைகளும் நிறைவேறும்.

ஆகையால் நாம் நிற்கும் பாறை கிறிஸ்து. கிறிஸ்து நிற்கும் பாறை தீர்க்கதரிசனம். இவ்வளவு அற்புதமாய் வந்தவர் அற்புதங்கள் செய்தது ஆச்சாயமல்ல. அவர் அற்புதம் செய்யாதிருந்தால் அதுவே ஆச்சரியமாகும். அவர் அற்புதம் செய்வாரெனக் கூறின தீர்க்கதரிசனமும் அவமாகும்.

கிறிஸ்து செய்த அற்புதங்களைச் சந்தேகிக்கிற அநேகர் தற்காலம் எழும்பியிருக்கிறார்கள். அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவர் செய்த அற்புதங்களை ஏற்றுக்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஆனால் அவருடைய நாமத்தைத் தரித்தவர்கள் அற்புதங்களை ஒப்புக்கொள்ளாதிருப்பதே துக்கமான விஷயம். இவர்களுக்கு அவருடைய ஜீவியமாதிரியும் உபதேசமுமே போதுமாம். அற்புதங்கள் வேண்டியதில்லையாம். இவர்களில் சாஸ்திர வகுப்பாரானவர்களும் உண்டு. "நீ செய்யக்கூடாததை ஏற்றுக் கொள்ளாதே, நீ காணக்கூடாததை நம்பாதே" என்பது இவர்கள் கொள்கை. அப்படிப்பட்ட கொள்கை மார்க்கமுமல்ல, சாஸ்திரமு மல்ல. அறிவும் சாஸ்திரமும் பெருகின இக்காலத்தில் தேவ காரியங்களை ஏற்றுக்கொள்வது கஷ்டமாயிருக்கிறது. இயற்கைக்கு மிஞ்சினதை எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று கேட்கிறார்கள். சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் ஜீவியத்தோடு அற்புதங்களும் சேர்ந்திருப்பதற்காக விசனப்படுகிறார்கள். ஏதேது அறிவுக்கும் புத்திக்கும் மிஞ்சியிருக்கிறதோ அவைகளை ஏற்றுக்கொள்வது நியாயமல்ல என்கிறார்கள். கிறிஸ்துவின் **அற்புதபிறப்பை** இவர்கள் நம்பாததே அவர் செய்த அற்புதங்களையும் நம்பாததற்குக் காரணம்.

இப்புதிய மாறுபாடு சபைகளில் எப்படி வந்தது என்பது ஒரு கேள்வி. கல்வியிற் சிறந்தவர்களும் கீர்த்திபெற்ற சாஸ்திரிகளும் கிறிஸ்துவைப்பற்றி ஆராய்ச்சி செய்து, அவரது அரிய ஜீவியத்தையும் உபதேசத்தையும் புகழ்ந்தார்கள். அவர் கடவுளைப்பற்றிப் போதிக்கக்கூடிய முதற்தரமான போதகர் என்றும் ஒப்புக்கொண்டார்கள். இதிலிருந்து இயேசுவைப்பற்றி அநேக ஜீவிய சரித்திரங்கள் பலராலும் எழுதப்பட்டன. அவைகள் எவ்வளவு சிறப்பாக அவரைப்பற்றிக் கூறினபோதிலும், அவரை ஒரு **மனுஷனாகவும்** நமது ஜீவியத்துக்கு **மாதிரியாகவும் மாத்திரம்** காண்பித்தன. இந்த மோசமான காற்று படிப்படியாக சபைகளிலுள்ள போதகர்களையும் வேதசாஸ்திரப் பண்டிதர் களையும் ஆண்டுகொண்டது. மகா பெரிய கல்விமான்களே அவ்வாறு சொல்லும்போது இவர்கள் என்ன செய்வார்கள்? ஞானிகள் சொல்லுவதை நம்புகிறதா, செம்படவர் சொல்லுகிறதை நம்புகிறதா? இக்கல்விமான்கள் அறிந்த அவ்வளவு சாஸ்திரமும் இயேசுவுக்கே தெரியாதிருக்கும்போது,

அவருடைய சீஷர்களுக்கு என்ன தெரியும்? ஏழை மீன்பிடிகாரர் அறிவில்லாமல் தங்கள் குருவை கடவுள் என்று சொல்லி விட்டார்கள். அநேக அற்புதங்களை அவர் செய்ததாகவும் எழுதிவிட்டார்கள். இயற்கைக்கு மிஞ்சினவற்றை நீக்கிவிட்டு, ஏற்றுக்கொள்ளக்கூடியதைமாத்திரம் சுவிசேஷத்தில் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது இவர்கள் தாற்பரியம். ஆகையால், தேவ ஆவியானவர் அருளிய சுவிசேஷத்தை இவர்கள் தள்ளிவிட்டு, அதிலிருந்து வெகு சுருக்கமான சுவிசேஷத்தைத் தங்களுக்கு உண்டுபண்ணிக்கொண்டார்கள். அதற்குச் சுவிசேஷம் என்னும் பேர் தகாது.

மக்கள் குழந்தைகளாயிருக்கும்போது தங்கள் தகப்பன் முகத்தைப் பார்த்துப் பிழைத்து, தகப்பனால் தூக்கிச் சுமக்கப்பட்டு, உணவு, உடை, கல்வி யாவற்றையும் பெற்று அனுபவித்து, மனுஷராகும்போது தகப்பனைப் பார்த்து: உங்களுக்கு என்ன தெரியும்? தற்கால நாகரீகமெல்லாம் உங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் கர்நாடகப் போக்காகவே பேசுகிறீர்கள் என்று சொல்வதுபோல இவர்கள் காரியமும் இருக்கிறது. அருமை இரட்சகரே, என் ஆண்டவரே, என் தேவனே, என்பாவங்களுக்காக வந்து பாடுபட்டு இரத்தம் சிந்தி மரித்தீரே, நான் நீசப்பாவி சுவாமி! என் பாவங்களை மன்னித்து என்னை இரட்சித்துக்கொள்ளும் என்று அவர் பாதபடியில் கண்ணீர்விட்டு அழுத காலம் போக, இப்போது தங்களைப் பாவிகள் என்று ஒத்துக்கொள்ள மனதில்லை அவர் நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதை ஏற்றுக்கொள்ளப் பிரியமில்லை. அவரை மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள் என்று சொல்ல வெட்கப்படுகிறார்கள். அவர் ஜீவிய மாதிரியைப் பின்பற்றி ஒருவாறு அவரைப்போல் நடக்கிறதாகவும் இவர்களுக்குத் தோன்றுகிறது. தத்துவஞானமும் சாஸ்திர அறிவும் தங்களுக்கு உண்டு.

இவ்வளவு பெருமையில் நாசரேத்தூர் இயேசுவைப் பார்க்கும்போது தாங்களும் அவரும் ஒன்று என்பதுபோல் இவர்களுக்குத் தோன்றுகிறது. சில காரியங்களில் அவரைப் பார்க்கிலும் தாங்கள் விசேஷித்தவர்கள் என்பதுபோலவும் தோன்றலாம். என்னைப்பெற்ற தகப்பனே, நான் பாவி, என்னை இரட்சிக்கவேணுமென்று அவர் பாதத்தில் விழுந்து கண்ணீர்விட்டுப் புலம்பின நாளை மறந்துபோனார்கள். இவ்வளவு தூரம் தாங்கள் மேன்மையடைந்ததும், கற்றுக் கொண்டதும் அவராலே என்பதை மறந்து அவரையே கேள்வி கேட்க ஆரம்பித்தனர். தங்கள் பிதாக்களுக்கும் தங்களுக்கும் கிடைத்த கிறிஸ்துமார்க்க ஆசீர்வாதங்கள் சுவிசேஷத்தினால் வந்ததென்பதை நினையாது, அந்தச் சுவிசேஷத்தையே கண்டனம்

பண்ணப் புகுந்தார்கள். இது அறிவின் இறுமாப்பே அன்றி விசுவாச வளர்ச்சியல்ல. தற்காலக்கொள்கைக்காரர் கிறிஸ்துவையும் அவர் சுவிசேஷத்தையும் கையாடுகிறவிதம் மகா துணிகரம். ஆகையால், அவர்கள் எவ்வளவு இன்பமாய், பரவசமாய் கிறிஸ்துவின் ஜீவியத்தை மாதிரியாகப் போதித்தாலும், அவரது அற்புத பிறப்பையும், அவர் செய்த அற்புதங்களையும், அவர் நமது பாவங்களை நீக்கும்படி மரித்தார் என்பதையும், அவர் சரீரத்தில் வெளிப்பட்ட கடவுள் என்பதையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளாதிருப்பதால், அவர்களுடைய நளின வார்த்தைகளால் மயங்கிப்போகாதபடி நாம் எச்சரிக்கையாக யிருக்கவேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகம் (Divinity) என்று பேசினாலுங்கூட, தெய்வீகம் (Deity) தேவனல்ல என்பது அவர்கள் கொள்கை. எல்லா மனுஷருக்குள்ளும் தெய்வீகம் இருப்பதுபோலவே இயேசுவுக்குள்ளும் தெய்வீகம் இருந்த தென்பது அவர்கள் உபதேசம். ஆகையால் அவர்கள் பிரசங்கிக்கிற கிறிஸ்து சுவிசேஷ கிறிஸ்து அல்ல. அவர்கள் தாங்களே உண்டாக்கிக்கொண்ட கிறிஸ்து. அப்படிப்பட்ட வேறே கிறிஸ்து வானத்திலும் இல்லை, பூமியிலும் இல்லை. ஆகையால் தற்காலக் கொள்கைக்காரர் பிரசங்கிக்கிற கிறிஸ்து பொய்.

இவர்கள் கிறிஸ்துவின் அற்புத பிறப்பையும், அற்புதங்களையும், அவரது தெய்வீகத்தையும் மறுத்து கிறிஸ்தவர்களாயிருக்கப் பார்ப்பது, ஒருத்துவ கிறிஸ்தவர்களின் சம்பிரதாயமாயிருக்கிறது. ஒருத்துவ மார்க்கத்தார் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஒப்புக்கொள்வதில்லை. ஆகையால் பரிசுத்த ஆவியானவரை ஒரு **சக்தி**யென்று சொல்லுவார்கள். தற்காலக்கொள்கைக்காரரும் ஒருத்துவ மார்க்கத்தார்தான். கிறிஸ்துவின் ஜீவியமே இவர்கள் கிறிஸ்து மார்க்கம். இவர்கள் பாவிகளுமல்ல, இரட்சிக்கப்படவேண்டியவர்களுமல்ல. கிறிஸ்துவை மறுதலித்து கிறிஸ்தவர்களாயிருப்பது எப்படி? கிறிஸ்து மார்க்கம் கிறிஸ்துவின் **தெய்வீகத்தில்** ஸ்தாபிக்கப் பட்டது. "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு சொன்னபோது, இந்த விசுவாசத்தின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார். பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரைக் கொண்டு திருச்சபையைக் கட்டினார். அந்தச் சபையின்மூலமாய் உலகமெங்கும் கிறிஸ்து மார்க்கம் பரவினது. அப்படியிருக்க, கிறிஸ்துமார்க்க அஸ்திபாரமாகிய கிறிஸ்துவின் தெய்வீகத்தைத் தள்ளிவிட்டுக் கிறிஸ்தவர்களாயிருப்பது எப்படி? நாம் எப்படி விசுவாசித்தாலும் பரவாயில்லை, நாமெல்லாரும் கிறிஸ்தவர்களா யிருக்கலாம் என்கிறார்கள். நயவசனிப்பால் மோசம்போகாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

கிறிஸ்துவைப்பற்றிய சத்தியங்களின் ஒருபக்கத்தை முக்கியபடுத்தும்போது அவற்றின் மறுபக்கம் மறக்கப்பட்டுப்

போகலாம். அவ்வாறே வெகுகாலமாய் அற்புதங்களும் பாவிக்கப்பட்டன. ஆண்டவர் தமது வல்லமையை, அதிகாரத்தை வெளிப்படுத்தும்படிமாத்திரம் அற்புதங்கள் செய்தார் என்பது அநேகருடைய எண்ணம். அது முழுச்சத்தியமல்ல. அவர் நடப்பித்த அற்புதங்களின் தன்மை, கருத்து, நோக்கம் இன்ன தென்று நாம் அறியவேண்டும். முதலாவது, அவைகள் தேவ லட்சணத்தையும் அவருடைய நோக்கங்களையும் வெளிப்படுத்து கின்றன. இரண்டாவது, கிறிஸ்து பிதாவை வெளிப்படுத்த வந்தவர் என்பதை அவைகள் திருஷ்டாந்தப் படுத்துகின்றன. தேவ வெளிப்படுத்தல் மாத்திரமல்ல, தேவனையே அவைகள் காண் பிக்கின்றன. கிறிஸ்து தேவபோதகரென்று அவைகள் சொல்வது மாத்திரமல்ல, அவ்வற்புதங்களே தேவ போதனையாயிருக்கின்றன. ஆகையால் யோவான் அப்போஸ்தலன் அற்புதங்களை **''அடையாளங்கள்''** என்றார். அவைகள் நிச்சயமாகவே தேவனாகிய பிதாவின் அன்பையும் கிருபையையும் மனுஷனுக்கு வெளிப்படுத்தும் அடையாளங்களே.

ஆச்சரியப்படத்தக்கதான அற்புதங்கள் செய்ய சத்துருக்கள் அவரை அடிக்கடிகேட்டபோது அவர் சம்மதிக்கவில்லை. தேவாலயத்தின் கோபுரச் சிகரத்தினின்று அவர் குதிக்கவில்லை. சிலுவையிலிருந்து இறங்கி வரவில்லை. வானத்தில் அதிசயங்கள் காட்டவில்லை. மற்றவர்களுக்கில்லாத வல்லமை தமக்கு உண்டென்று காண்பிக்கும் நோக்கமாய் அவர் அற்புதம் செய்யவில்லை. அவ்வெண்ணம் அவர் மனதுக்கு வெறுப்பும் சோதனையுமாயிருந்தது. அப்படியானால், அவர் செய்த ஏராளமான அற்புதங்களின் நோக்கமென்ன? பற்பல நோய்களால் கஷ்டப்பட்ட ஜனங்கள்மீதுள்ள மனதுருக்கமும் அனுதாபமுமே அவர் அற்புதங்கள் செய்ததற்குக் காரணம். ஒருபோதும் **தமக்காகவல்ல,** பிறருக்காகவே தமது **வல்லமையை** உபயோகித்தார். சுயபெருமைக்காக அல்ல, மனுஷர் பிழைக்கும்படிக்காகவே செய்தார். நமது பலவீனங்களை அவர் ஏற்றுக்கொண்டு, நமது நோய்களையும் துக்கங்களையும் அவர் தாமே சுமந்தார். அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கி நமது பிணையாளியாக வந்ததால் அவரிலிருந்த தேவவல்லமை பாவிகளுக்கு ஆரோக்கியமும் ஜீவனுமாய் விளங்கினது. ஆகையால், அவர் செய்த அற்புதங்கள் தேவ அன்பையும் கிருபையையும் மனுஷருக்கு வெளிப்படுத்தின. நாம் ஒன்றைக் கேட்டுக் கற்றுக் கொள்வதைவிட, அதைப் **பார்த்துச்** சீக்கிரமாய்க் கற்றுக்கொள்வோம். கிறிஸ்துவின் உபதேசம் கேட்டோர் உள்ளத்தில் பதிந்ததைவிட, அவர் செய்த அற்புதகிரியைகள் ஆழமாய்ப் பதிந்தன. தேவன் அன்புள்ளவர் என்பது அவர் பிரசங்கம். அவர் நடப்பித்த **கிருபையுள்ள அற்புதங்களோ** அதன் உண்மையை வெளிப்படுத்தின. அவர் தம்மில்

பாவமற்றவரும், ஜனங்களுக்காகப் பரிதபித்து அவர்களுடைய சகல நோய்களையும் வேதனைகளையும் நீக்குகிறவருமென்று ஜனங்கள் கண்டபோது, அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் எனக்கண்டார்கள். "ரபி, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனென்றால் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டானே" என்று நிக்கொதேமு சொன்னார் *(யோ. 3:2)* தேவனை வெளிப்படுத்தவந்த அவருடைய குமாரன், பிதா அன்புள்ளவர், பாவிகள்மீது கிருபையுள்ளவர் என்றுமாத்திரம் சொல்லித் தம்மைச் சூழ்ந்துவந்த நோயாளிகளுக்கு யாதொரு நன்மையும் செய்யக்கூடாமற்போனால், அவர்கள் தேவ அன்பையும் கிருபையையும் அறிந்துகொள்வதெப்படி? அவர் செய்த அற்புதங்கள் அவருடைய உபதேசத்துக்கு வியாக்கியானம் போலிருந்தன. உபதேசத்தில் அவர்கள் கேட்ட சத்தியங்களை அற்புதங்கள் நிச்சயப்படுத்தின. பாவிகளை நேசித்து இரட்சிக்கும் கடவுள் மாம்சத்தில் வந்தாரென்பதை அவர் நடப்பித்த கிரியைகளில் கண்டார்கள். நாம் கண்ணால் காணக்கூடாத சூரியனை அதன் பிரகாசமும் உஷ்ணமும் வெளிப்படுத்துவது போல், கிறிஸ்துவின் தெய்வீகத்தை அவருடைய அற்புதங்கள் வெளிப்படுத்தின. தேவனை வெளிப்படுத்துவதே அற்புதங்களின் பிரதான நோக்கம்.

அவருடைய அற்புத கிரியைகள் ஜனங்களுக்குள் பிரமிப்பை உண்டாக்கின. அவை திரள் ஜனங்களை அவரண்டை கூட்டிச்சேர்த்தன. அவர் ஒரு குஷ்டரோகியைக் குணமாக்கின போது தீரா நோயை அவர் நீக்கினபடியால் அது எங்கும் பிரஸ்தாபமாயிற்று. அவர் பிசாசைத் துரத்தினார் என்றபோதும் ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் மரித்துப்போனவனை எழுப்பினபோதோ, தேவனே தமது ஜனத்தைச் சந்திக்க வந்து விட்டார் என்றார்கள். இவ்வளவுதான், தேசத்திலுள்ள நோயாளிகளெல்லாரும் அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள். அவர் ஒரு பட்டணம் அல்லது. கிராமத்தின் தெரு வழியாக நடந்துபோனால், அவரைத் தொட்டாலே போதுமெனத் திரளான நோயாளிகள் காத்திருப்பார்கள். சாப்பிடவும் நேரமில்லாதபடி அவர்களைக் குணமாக்குவதிலேயே சிந்தையாயிருப்பார். யூதர்கள் ஆதிமுதல் அற்புதங்களில் பழகினவர்கள். அவர்களுடைய தீர்க்கதரிசிகள் அற்புதகிரியைகளை நடப்பித்தவர்கள். மேசியா வரும்போது அற்புதங்கள் செய்வாரென்பது தீர்க்கதரிசனம். விசேஷித்த ஊழியமாக அவர் வந்திருக்கும்போது அதிசயமான காரியங்களை அவர் செய்யாதிருப்பது எப்படி? மேலும், மனுஷருக்கு அற்புதங்கள் அசாத்தியமானாலும், அற்புதமாகப்பிறந்து, ஆவியினால் நிறைந்து, பாவிகளின் இரட்சகராக வந்தவருக்கு அற்புதங்கள் சாதாரணமே. ஆண்டவருக்கு அவைகள்

அற்புதமல்ல, அதிசயமுமல்ல. அவருக்கு இயல்பான கிரியைகள் நமக்கு அற்புதங்களாயிருக்கின்றன. அவரே அற்புதமாயிருக்கும்போது அவர் கிரியைகள் ஏன் அற்புதங்களாயிராது? அற்புதங்கள் ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணும்படி செய்யப்படாமல், அவர்கள் தம்மை இன்னாரென்று அறிந்து விசுவாசிக்கும்படி செய்யப்பட்ட கிருபைநிறைந்த செயல்கள். மற்ற மார்க்கங்களில் சொல்லப்படுகிற விந்தையான அற்புதங்களையும், ஆண்டவர் நடப்பித்த அற்புதங்களையும் ஒப்பிடவும் கூடுமா? பாவத்தால் மனுக்குலம் அடைந்த நிர்ப்பாக்கியம் எவ்வளவு! கருணாகரன் அவர்கள்மீது கிருபையுற்று சரீர நோய்களையும் ஆத்துமாவின் கேடுகளையும் அகற்றி, அவர்களை இரட்சிக்கும்படி செய்த கிரியைகளல்லவோ அவைகள். பிறவிக்குருடன் பார்வை அடைந்ததுமன்றி அவரைத் தன் ஆண்டவராக ஏற்றுக்கொண்டு வணங்கினானே. மகதலேனா மரியாள் பிசாசுகள் நீங்கினதுமன்றி ஆண்டவரின் அடியாளாகத் தன்னை முற்றிலும் ஒப்புவித்துக் கடைசிவரை அவருக்கு ஊழியம்செய்தாளே. அவர் செய்த அற்புதங்களின் நோக்கம் அதுவே. இது அவருக்குப் பாரமான ஊழியமாயிருந்தபோதிலும் குருடர் பார்ப்பதும், செவிடர் கேட்பதும், ஊமையர்பேசுவதும், சப்பானிகள் நடப்பதும், பிசாசு பிடித்தவர்கள் ஆரோக்கியமாவதும், குஷ்டரோகிகள் சுகமாவதும், செத்துப்போனவர்கள் பிழைத்து தங்கள் இனத்தாரோடு பேசுவதும், அவரவருடைய குடும்பங்களுக்கு எவ்வளவோ சந்தோஷத்தை உண்டாக்கியிருக்கக்கூடும். அதையே அவரும் தமக்குச் சந்தோஷமாகக் கண்டார். இந்தச்சந்தோஷமே அவர் தமது போஜனத்தையும் களைப்பையும் மறந்து, இடைவிடாது நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்ததற்குக் காரணம்.

சுவிசேஷத்தில் கிறிஸ்து செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிற அற்புதங்கள் உண்மையாக நடந்தனவா இல்லையா? அவைகளை நம்பலாமா நம்பக்கூடாதா? அவைகள் இயற்கைக்கு விரோதமானதாதலால் நம்பக்கூடாது என்கிறார்கள். நல்லது இயற்கை என்றால் என்ன? வானத்திலும் பூமியிலும் நாம் கண்டிருக்கிறவைகளும், நாம் அனுபவத்தில் அறிந்திருப்பவை களும் இயற்கையாகும். காற்று வீசுகிறது. மழை பெய்கிறது. சூரியன் பிரகாசிக்கிறது. பயிர்கள் தானியத்தை விளைவிக்கின்றன. மரங்கள் கனிகளைக் கொடுக்கின்றன. மாரியும் கோடையும், விதைப்பும் அறுப்பும் மாறிமாறி வருகின்றன. இவைகளைப்போல் அனைத்து காரியங்களும் நடைபெறுகின்றன. இவைகளை இயற்கையென்று அழைக்கிறோம். அநேக வருஷங்களாக இவைகள் ஒழுங்காய் நடந்தேறி வருகின்றதால் அவைகள் நமக்கு இயற்கையும் சாதாரணமுமாகத் தோன்றுகின்றன. அவைகளை இயற்கையென்று சொன்னாலும், அவைகள் தானாக நடவாமல் அவைகளை நடத்துகிற காரண சக்திகள் உண்டு என்பதையும்

அறிவோம். ஆகாரம் வேண்டுமானால் பயிரும், பயிர் விளைய மழையும், மழை பெய்ய மேகமும், மேகம் திரண்டு உருவாக சூரிய உஷ்ணமும் அவசியம் என்பதை அறிந்திருக்கிறோம். இவ்வாறு அனந்தங் காரியங்கள் காரண சக்தியினால் ஒன்றோடொன்று இணைக்கப்பெற்று மனுஷனுக்கு ஆசீர்வாதங்களாயிருக்கின்றன. இயற்கையில் காணப்படும் இந்த ஒழுங்கும் காரண சக்தியும் எங்கேயிருந்து வந்தன? அறிவில்லாத இயற்கைப் பொருள்களுக்கு இவ்வளவு ஒழுங்குடன் நமக்கு நன்மை செய்யும் ஞானமுண்டோ? நமக்கு ஒழுங்காய் நேரங்காட்ட வேண்டுமென்கிற அறிவும் கவலையும் கடியாரத்துக்கு உண்டோ? உண்டானால், இயற்கைக்கும் அவ்வளவு ஞானமும் அறிவும் உண்டெனக் கூறலாம். கடியாரம் தன் ஞானத்தையல்ல, தன்னை உண்டுபண்ணினவனுடைய ஞானத்தையல்லவோ வெளிப்படுத்துகிறது. அதுபோலவே, இயற்கையும் தன்னை உண்டாக்கி ஆண்டு நடத்தும் **அற்புத மூர்த்தியின்** ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துகிறது. இயற்கையில் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட காரணசக்திகள் யாவற்றுக்கும் மூலகாரணர் தேவனே.

இயற்கையானது ஒரே விதமாய் நடந்தேறுவதால் அது நமக்குச் சாதாரணமாய்த் தோன்றுகிறது. ஆகிலும் அதை ஆராய்ந்து பார்ப்பவர் அது சாதாரணமல்ல, மகா ஆச்சரியமானதென்று காண்பார். சகலத்திலும் தேவனுடைய அதிசயச் செயல்கள் விளங்குகின்றன. அவைகளிலுள்ள ஞானத்தையும் வல்லமையையும் நாம் உற்று ஆராயாததால் அவைகளை இயற்கையென்றும், சாதாரணமாய் நடப்பவை யென்றும் சொல்லுகிறோம். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்குமானால் அதுவே நமக்கு அற்புதமாயிருக்கும். அப்படி நடக்க வேண்டுமானால் சூரியனை உண்டாக்கி நடத்துகிறவர் தான் அதை செய்யக்கூடும். அவர் அவ்வாறு அனாவசியமாய்த் தமது வல்லமையை உபயோகிக்கமாட்டார். இயற்கைக்கு விரோதமாக ஒன்றும் நடப்பதில்லை என்று சாஸ்திரிகள் கூறுகிறார்கள். நடந்தால் என்ன சொல்லுவார்கள்? நாம் இயற்கைக்குள் அடங்கியிருப்பதுபோல் சிருஷ்டிகர் இயற்கைக்கு அடங்கினவரல்ல. கடிகாரத்தின் முள் முன்னோக்கியே ஓடும். அது தானாகப் பின்னுக்குப் போகாது. ஆனால், மனுஷன் அந்த முள்ளைப் பின்னாகத் திருப்பவுங்கூடும். கடிகாரத்தை உண்டுபண்ணினவன் அதன் சக்கரங்களுக்குக் கேடு வராமலும், சத்தம் நின்றுபோகாமலும் முள்ளைப் பின்னாகத் திருப்புவதற்கும் வழி வைத்திருக்கிறான். தேவன் இயற்கைக்கு மேலானவரானதால் அவர் தமது சித்தப்படி எதையும் செய்ய வல்லவராயிருக்கிறார். காலத்தில் மழை பெய்வது இயற்கை. மழை பெய்யக்கூடாத காலத்தில் மழை பெய்யுமானால் அது நமக்கு ஆச்சரியமா

யிருக்கும். இடி இடிக்கக்கூடாத காலத்தில் இடிமுழங்குமானால் ஆச்சரியப்படுவோம். அவ்வாறு நடப்பது நமக்கு நூதனம்? தேவனுக்கு அது சாதாரணம். எலியாவும் சாமுவேலும் நடப்பித்த காரியங்கள் அதுவே. வருஷமெல்லாம் தண்ணீரை உட்கொண்டு வளர்ந்த திராட்சச்செடி தன் காலத்தில் திராட்சரசம் நிறைந்த கனிகளைக் கொடுக்கும். இது இயற்கை. இயற்கையென்று சொன்னபோதிலும் அது தானாக உண்டாகாமல், கிருபையுள்ள தேவன் தண்ணீரை அக்கொடிகளில் ஏறும்படி செய்து, அதை மதுரமான இரசமாக்குகிறார். அவரே ஜாடிகள் நிறைந்த தண்ணீரை ஒரு நிமிஷத்தில் நல்ல திராட்சரசமாக மாற்றச் சித்தங்கொண்டால் அவராலே ஏன் கூடாது? அவ்வாறு நடக்கும்போது நாம் அதை **அற்புதம்** என்கிறோம். ஆண்டவருக்கு அது அற்புதமல்ல. இயற்கையில் கால ஒழுங்கின்படி தண்ணீரை இரசமாக மாறச் செய்கிறவர், கலியாண வீட்டின் அவசரத்தினிமித்தம் நிமிஷத்தில் அதை இரசமாக மாறும்படி செய்தார். அவருக்குச் செடியின் மூலமாக திராட்சரசத்தைக் கொடுப்பதும், திடீரென இரசத்தை உண்டாக்குவதும் இரண்டும் ஒன்றுதான். நமக்கோ ஒன்று சாதாரணமும், மற்றது அற்புதமுமாகத் தோன்றுகிறது. ஆனால் இரண்டும் அற்புதங்களே, ஒன்று காலக்கிரமத்தில் நடக்கிறது. மற்றது திடீரெனச்சம்பவிக்கிறது; இரண்டையும் உண்டு பண்ணுகிற வல்லமை ஒன்றே.

மேலும், நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி கடவுள் இயற்கையை ஒழுங்குப்பிரமாணத்தின்படி நடந்தேறச் செய்தால், அவர் வேறுவிதமாய் ஒன்றும் செய்யக்கூடாதென்று அவருக்குக் கட்டளையிட நாம் எம்மாத்திரம்? நமது சொந்த அனுபவத்திலேயே இயற்கைப் பிரமாணத்துக்கு விரோதமான காரியங்களை நாம் அறிந்திருக்கும்போது, கடவுள்மாத்திரம் நூதனமாக ஒன்றும் செய்யக்கூடாதென்று சொல்வது சரியா? இரும்பு தண்ணீரில் மிதப்பது இயற்கையல்ல. இரும்பினால் செய்யப்பட்ட கப்பல்களில் பிரயாணம் செய்கிறோம். பறவைகள் ஆகாயத்தில் பறப்பது இயற்கை. மனுஷன் பறப்பது இயற்கைக்கு விரோதம். அப்படியிருந்தும் ஆகாய விமானம் மூலமாய்ப் மனுஷர் எவ்வளவோ வேகமாய்ப் பிரயாணம் செய்கிறார்கள். இது பூமியின் கவர்ச்சிப்பிரமாணத்திற்கு (புவி ஈர்ப்புவிசை) விரோதமல்லவா? மச்சங்கள் சமுத்திர ஆழங்களில் நீந்துவது இயற்கை. மனுஷர் தண்ணீருக்குள்ளேயே கப்பல் மூலமாய் நீந்துகிறார்கள். இது இயற்கைக்கு விரோதமல்லவா? ஐம்பது வருஷங்களுக்கு முன்னே ஒரு போதகர் தமது பிரசங்கப்பீடத்தில் நின்று ஜனங்களைப் பார்த்து: இன்னும் ஐம்பது வருஷங்களுக்குள் ஒருவர் இந்தப்பீடத்தினின்று பிரசங்கிப்பதையும், இங்கு பாடும் ஞானப்பாட்டுகளையும், இந்த ஆலயத்திலுள்ளவர்கள் மாத்திரமல்ல, தூரமாயுள்ள பட்டணத்திலுள்ளவர்களும்

கேட்பார்களென்று சொன்னால், இது ஒருக்காலும் நடக்காதென்றும், அவருக்குப் புத்தி சுயாதீனமில்லையென்றும் சபையார் பேசுவார்கள். அது இயற்கைக்கு விரோதமென்றும் கூறுவார்கள். வானொலி என்னும் கருவியின் மூலமாய் இன்று நிச்சயமாக நடக்கிற காரியம் அதுவே. தூரமான இடத்திலிருப்பவர்கள் தங்கள் வீடுகளிலிருந்துகொண்டு பாட்டுகளையும் பிரசங்கங்களையும் கேட்கிறார்கள். என்ன ஆச்சரியம்! இவ்வாறு அநேக ஆச்சரியமான காரியங்கள் நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டு நமக்கு அவைகள் சாதாரணமும் ஆகிவிட்டன ஆகையால், இன்னதுதான் நடக்கும், இன்னது நடக்காது என்று சொல்ல ஏதுவில்லை. மனுஷனுடைய விசேஷித்த புத்தியினால் இயற்கைக்கு மேலான காரியங்கள் காலத்துக்குக்காலம் வெளிப்படுகின்றன. அப்படியிருக்க, சர்வத்துக்கும் மேலான கடவுள் தாம் உண்டுபண்ணின இயற்கைக்குள் அடங்கினவரென்றும், அதற்கு மேலாக அவர் ஒன்றும் செய்யக்கூடாதென்றும் சொல்வது நியாயமோ?

அற்புதங்கள் இயற்கைக்கு மேலானதேயன்றி இயற்கைக்கு விரோதமானதல்ல. கடிகாரத்தின் முள் முன்னோக்கி ஒடும்படி செய்தவனே, நேரத்தைச் சரிப்படுத்தும்படி முள்ளைப் பின்னுக்குத் திருப்பவும் வழியுண்டாக்கியிருக்கிறான். அப்படித் திருப்புவதினால், முன் கவனித்தபடி, சக்கரங்கள் ஒடிவதுமில்லை, டிக், டிக் என்னும் சத்தம் நின்று போவதுமில்லை. ஆகையால், இயற்கையின்படி முன்னோக்கி ஓடும் முள்ளைப் பின்னாகத் திருப்புவது இயற்கைக்கு விரோதமல்ல. அதுபோலவே, வல்லமையும் ஞானமுமுள்ள தேவன் இயற்கையில் நூதனமான காரியத்தைச் செய்யும்போது அது இயற்கைக்கு விரோதமாகாது. அது இயற்கைப் பிரமாணத்தின்படி நடவாமல் திடீரெனச் சம்பவிப்பதால் நமக்கு அற்புதமாகிறது. கடவுளுடைய அளவற்ற ஞானத்தையும் வல்லமையையும் நாம் பூரணமாய் அறியாதிருக்கும்போது, அவர் இப்படித்தான் செய்யவேண்டும், அப்படிச் செய்யக்கூடாது என்று சொல்ல நாம் எம்மாத்திரம்?

அற்புதங்கள் அவசியமா? மனுஷன் தேவனை அறிந்துகொள்வதற்கு அவைகள் அவசியமே. "காணப்படாதவைகளாகிய அவருடைய **நித்திய வல்லமை தேவத்துவம்** என்பவைகள் உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படுகின்றன" *(ரோமர் 1:20)*. தேவனுடைய ஞானம் வல்லமை இயற்கையில் வெளிப்படுகின்றன. மனுஷனோ புத்தியில் அந்தகாரப்பட்டும், பலவித லௌகிக கவலைகளால் மேற்கொள்ளப்பட்டும் இருப்பதால் இயற்கையின்மூலமாய் கடவுளை அறிந்துகொள்ள ஏதுவில்லை. அவைகளைக் கண்டும் காணாதவர்கள் போலிருக்கிறார்கள். அறிவாளிகளும்

இயற்கையின் **அமைப்பைப்** படித்தார்களேயல்லாமல், அவைகளை ஆண்டுநடத்தும் **மூலகாரணரைக்** கண்டார்கள் இல்லை. "தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் இல்லை" என்னும் வாக்கு மெய்யாயிற்று. ஆகையால், மனுஷன் தம்மை அறிந்துகொள்ளும்படி அவர் நூதனமான காரியத்தைச் செய்யவேண்டியதாயிற்று. இயற்கையில் எவ்வளவோ ஆச்சரியமிருந்தும் அவனுக்கு அது சாதாரணமாகிவிட்டது. இயற்கைக்கு மேற்பட்ட காரியமோ அவன் கவனத்தை இழுக்கக்கூடும். வித்தை வேடிக்கையில் அற்புதம் ஒன்றுமில்லை. ஆகிலும், சாதாரணமான காரியங்களுக்கு அவைகள் வித்தியாசமாயிருப்பதினால், ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். ஆகாயத்தில் பிரகாசிக்கும் சூரியன் அதிசயமாயிருந்தும் அதை யோசிக்கிறவர்கள் யார்? முள்செடியில் அக்கினி பற்றியெரிந்தும் அது வெந்துபோகாதிருந்தால், அதுவே "அற்புதகாட்சி". தேவன் தம்மை வெளிப்படுத்தின அந்தக் காட்சியை மோசே எக்காலத்திலும் மறக்க முடியாது. வெயிலில் தோல் காய்ந்திருப்பதும், பனியில் அது நனைந்திருப்பதும் இயற்கை. தேவன் கிதியோனுக்கு அடையாளமாக, வெயிலில் தோல் நனைந்திருக்கவும், பனியில் தோல் காய்ந்திருக்கவும் செய்து, தம்மை அவனுக்கு **வெளிப்படுத்தினார்**. பார்வோனின் சாஸ்திரிகளால் செய்யக்கூடாத அற்புதங்களை மோசே செய்தபோது, தேவனை அறியாத பார்வோன் "இது தேவனுடைய விரல்" என்று அறிக்கையிட்டான்.

எல்லாம் இயற்கையாகவேயிருந்தால் மனுஷன் தேவனைத் தேடமாட்டான். அவர் இயற்கைக்கு மேலான காரியங்களை நடப்பிப்பதினால் மனுஷனுடைய கவனத்தைக் கவர்ந்து கொள்ளுகிறார். இயற்கையே அதிசயந்தான். ஆனால் அது ஏற்படுத்தப்பட்ட விதிகளின்பேரில் ஒழுங்காய் நடந்தேறுவதால் அற்புதமல்ல. ஆகையால் இயற்கைக்கு மிஞ்சி ஒன்று சம்பவிக்கும்போது மனுஷன் பிரமிப்படைந்து தேவவல்லமையைக் காண்கிறான். தேவன் மனுஷர்மூலமாய் தமது சித்தத்தை அறிவிக்கலாம். தேவனே அவர்கள்மூலமாய்ப் பேசுகிறார் என்று நாம் அறிவதெப்படி? இயற்கைக்கு மேலான அற்புதங்கள் ஒருவரிடத்தில் காணப்படும்போது, அவரில் தேவவல்லமையைக் கண்டு, அவர் பேசும் வாக்கு தேவவாக்கென்று ஏற்றுக் கொள்ளுகிறோம். அவ்வற்புதங்கள் அவர் தேவ னிடத்திலிருந்து வந்தவர் என்பதற்கு ஆதாரங்களாயிருக்கின்றன. இஸ்ரவேலர் மோசேக்குச் செவிகொடுப்பதற்கு தேவன் மோசேயைக்கொண்டு பலத்தகிரியைகளைச் செய்ய வேண்டியதாயிற்று. மோசே எவ்வளவு பலமாய்ப் பேசியிருந்தாலும், அந்தக் கிரியைகளைப் போல் ஜனங்களை உணரச் செய்தது வேறில்லை. நமதாண்டவர் தண்ணீரை இரசமாக மாற்றின முதல் அற்புதம் அவருடைய

மகிமையை வெளிப்படுத்திற்று, அற்புதங்களின் நோக்கம் அதுவே. அதுபோலவே குருடர் பார்வையடைந்ததும், சப்பாணிகள் நடந்ததும், குஷ்டரோகிகள் சுத்தமானதும், பிசாசுகள் துரத்தப்பட்டதும், மரித்தோர் உயிரோடெழுப்பப்பட்டதும் தேவமகிமையை அதிகமதிகமாய் வெளிப்படுத்திற்று. கடவுள் மாம்சத்தில் வந்திருக்கிறார் என்று ஜனங்கள் யோசிக்கவேண்டிய தாயிற்று. அவர்கள் அவ்வாறு நம்பாமற் போனாலும், இரட்சகர் தாமே தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதற்கு தமது அற்புதங்களை ஆதாரமாக எடுத்துப் பேசினார். நான் உங்களுக்குள் செய்து வருகிற **கிரியைகளே** பிதா என்னை அனுப்பினார் என்பதற்குச் சாட்சி என்றார். ''தேவன் தன்னோடில்லாதிருந்தால் நீர் செய்கிற இப்படிப்பட்ட கிரியைகளை ஒருவனும் செய்யமாட்டான்'' என்று நிக்கொதேமு ஆண்டவரைப் பார்த்துச் சொன்னதும் சரி. ஆகையால் தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்துவதற்கு ஆதாரமாக அற்புதங்கள் அவசியமாயிற்று.

இப்படியிருக்க, கிறிஸ்து மார்க்கத்துக்கு அற்புதங்கள் **அவசியமல்ல**வென்று தற்காலக் கொள்கைக்காரர் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதாக நாம் உத்தேசிக்கலாம். நாம் கிறிஸ்துவின் நல்ல ஜீவியத்தையும் உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களா யிருப்பது கூடாதா? அற்புதங்களும் அவசியமா என்பது ஒன்று. இப்படிச் சொல்லுகிறவர்கள் கிறிஸ்துவை முதல் முதல் அறிந்து ஏற்றுக்கொண்ட காலத்தில், இவ்வாறு ஆட்சேபித்திருந்தால் அதை நாம் கவனிக்கவேண்டியது நியாயம். அவருடைய அற்புதங்களை நம்பி, அவரை **அற்புத மூர்த்தியாக** ஏற்றுக்கொண்டு, வெகுகாலம் அவ்வாறு பிரசங்கித்தபின்பு, இப்போது அற்புதங்களுக்கு விரோதமாகப் பேசுவது நியாயமல்ல. அக்காலத்தில் அறியாப்புத்தியால் நம்பிவிட்டோம், இப்போது தகுந்த அறிவு வந்தபின்பு அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூட வில்லை என்று சொல்லுகிறார்களாக்கும். இது அறிவின் வளர்ச்சி ஆகாமல், அவிசுவாசத்தின் வளர்ச்சியாகும். கிறிஸ்துவை வெறும் மனுஷன் என்று இவர்கள் சொல்லத் துணிந்ததால், அவர் செய்த அற்புதங்களை ஏற்றுக்கொள்ளக்கூடவில்லை. அதுதான் காரணம். அப்படியே அவர் அற்புதங்கள் செய்திருந்தாலும், கிறிஸ்தவர்களா யிருப்பதற்கு அற்புதங்களை விசுவாசிக்கவேண்டும் என்பது அவசியமல்ல என்றும் சொல்லுகிறார்கள். இவர்கள் கிறிஸ்துவ ஜீவியத்தையே பிரதானமாக எடுத்துக்கொண்டதால் அற்புதங்களை விட்டுவிடும்படியான சோதனை வந்திருக்கலாம். கிறிஸ்தவ ஜீவியத்துக்கு ஆதாரம் கிறிஸ்துவின் உபதேசம். கிறிஸ்துவின் உபதேசம் அவருடைய அற்புதங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. அற்புதங்களைத் தள்ளும்போது

உபதேசமும் கூடவே விழுந்துபோம். உபதேசம் விழும்போது கிறிஸ்துவும் விலகிப்போவார். மேலும், தேறின இவர்களுக்கு அற்புதங்கள் வேண்டாம் என்றால், பலவீன கிறிஸ்தவர்களுக்கு அவைகள் வேண்டாமா? தான் பீ. ஏ. படித்துவிட்டதால் கீழ் வகுப்புகளை எடுத்துவிடலாம் என்றால், உலகத்தில் படிக்கிற மற்ற மாணாக்கர் என்ன செய்வார்கள்? கிறிஸ்துவுக்கடுத்த காரியங்களில் இவைகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம், இவைகளைத் தள்ளிவிடலாமென்று ஒருவனும் ஒருக்காலும் சொல்ல முடியாது.

சுவிசேஷத்தில் ஆண்டவர் செய்த முப்பத்துமூன்று அற்புதங்கள் உண்டு. இவை தவிர அவர் செய்த அநேக அற்புதங்கள் எழுதப்படவில்லை என்று சுவிசேஷமே கூறுகிறது. (யோவான். 21:25). இவ்வற்புதங்களை அவர் ஜீவியத்திலிருந்து எடுத்துவிட்டால் அவர் எப்படிப்பட்ட கிறிஸ்துவாயிருப்பார்? பலவிதமான நோய்களாலும் பேய்களாலும் அவஸ்தைப்பட்ட திரளான ஜனங்களை சும்மா பார்த்துக்கொண்டிருப்பார். அவர்களுக்கு யாதொரு நன்மையும் செய்ய முடியாது. அவர்களுக்காக ஒருவேளை பரிதாபப்படுவார். அவர்கள் பசியை தீர்க்கவும் நோய்களைக் குணமாக்கவும் அவரால் ஆகாது. வாலிபனைச் சாகக்கொடுத்த விதவை அழுவதைப்பார்த்து மனதுருகுவார். அவ்வூராரோடு அவரும் சேர்ந்து பாடையின் பிறகாலே நடந்து, அவனைப் புதைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பார். இதுபோல எல்லா அற்புதங்களையும் அவர் செய்யாததுபோல் பாவித்துப் பேசிக்கொண்டுபோனால், சுவிசேஷம் வாசிப்பதற்கு வெகு விந்தையாயிருக்கும். அதுமாத்திரமல்ல, அற்புதங்கள் யாவும் பொய்யெனச்சொல்ல வேண்டியது வரும். அற்புதங்களோடு சம்பந்தப்பட்ட வியாதியஸ்தர், அவர் குணமாக்கின இடங்கள், குணமானவுடன் ஜனங்கள் ஆச்சரியத்தோடு பேசின வார்த்தைகள், எல்லாம் பொய்யெனத் தள்ளவேண்டியதாகும். சுவிசேஷ சரித்திரத்தில் மிகுதியான பாகம் எடுபட்டுபோகும். அப்போது சாதாரணமும் சக்தியற்றவரும் பிரயோஜனமற்றவருமான கிறிஸ்து காணப்படுவார்.

அப்படியல்ல, அற்புதங்கள் போனாலும் அவர் உபதேசித்த உபதேசங்கள் இருக்கிறதே; கிறிஸ்து மார்க்கத்துக்கு அவை போதாதா என்று கேட்கிறார்கள். அற்புதங்கள் போகும்போது உபதேங்கள் ஏது? உபதேசத்தால்மாத்திரம் தம்மை மேசியாவென்று அறிந்துகொள்ள முடியாதாகையால், தாம் தேவனிடத்திலிருந்து வந்தவரென்பதை நிரூபித்த அற்புதங்களைச் செய்தார். நீர் கிறிஸ்துதானாவென்று யோவான் விசாரிக்க ஆள்களை அனுப்பினபோது. குருடர் பார்வையடைகிறார்கள்,

சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், அத்தோடு சுவிசேஷமும் பிரசங்கிக்கப்படுகிறதென்று சொல்லுங்கள் என்றார். தாம் செய்த அற்புதங்களை உவமானமாக வைத்துக்கொண்டு ஆவிக்குரிய காரியங்களைப் போதித்தார். அவர் சரீர ரோகங்களைக்கண்டு மனதுருகி, தமக்கிருந்த வல்லமையினால் அவர்களைக் குணமாக்கின போதிலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கொடுக்கத் தமக்கு வல்லமை உண்டென அவைகளினால் திருஷ்டாந்தப் படுத்தினார். குஷ்டரோகம் தீர்ந்தது பாவம் நீங்கும் நிச்சயத்தையும், கண்கள் திறக்கப்பட்டது மனக்கண் பிரகாசிப்பதையும், பசியுள்ளோரை அப்பத்தால் போஷித்தது தாமே ஜீவ அப்பம் என்பதையும், கடலின் கோஷ்டத்தை அமர்த்திப் பிசாசுகளைத் துரத்தினது நமது ஆத்தும சத்துருக்களை மேற்கொண்டு நமக்குச் சமாதானம் அருளுவதையும், மரித்தோரை எழுப்பினது அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவர் என்பதையும் நமக்கு விளக்கிக்காட்டி, நமது சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் தேவையான நன்மைகளைக் கொடுக்க அவரால் ஆகும் என்னும் விசுவாசத்தை நம்மில் நிச்சயமாகவே உண்டாக்குகின்றன. இவரே சுவிசேஷ கிறிஸ்து. தற்காலக் கொள்கைக்காரரின் கிறிஸ்து சுவிசேஷ கிறிஸ்து அல்ல. மேலும், உபதேசம் போதும் என்று இவர்கள் பேசுகிறார்களே. அவருடைய உபதேசம் அநேகமாய் அவருடைய அற்புதங்களின் சம்பந்தமாகவல்லவோ வருகிறது.

அவர் ஐயாயிரம்பேரைப் போஷித்ததை நம்பாவிட்டால் ஜனங்கள் அவரை அந்நேரத்தில் இராஜாவாக்கத் துணிந்ததற்குக் காரணமென்ன? அவர்கள் கப்பர்நகூமுக்குத் திரும்பி வந்து நீர் எப்படி இங்கே வந்தீரென்று கேட்டபோது, ஜீவ அப்பத்தைப்பற்றி அவர்களுக்குப் போதிக்கவேண்டியதென்ன? அவர் எருசலேமில் செய்த அற்புதங்களை நம்பாவிட்டால், நீ மறுபடி பிறக்கவேண்டும் என்று ஆண்டவர் நிக்கொதேமுவுக்குச் சொன்னதற்குக் காரணமென்ன? அதிலிருந்து அவர் பேசின அருமையான உபதேசங்களுக்கு வழியென்ன? "ரபீ ஒருவன் தன்னோடு தேவனிராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டானே" என்று நிக்கொதேமு சொன்னதற்கு உத்தரவாகவல்லவோ யோவான் மூன்றின் உபதேசம் புறப்பட்டது. ஆகையால், அற்புதங்களைத் தள்ளிவிடுகிறவர்களுக்கு உபதேசமில்லை. அவருடைய உபதேசங்களும் கிரியைகளும் ஒன்றாய் **இணைக்கப் பட்டிருக்கின்றன.**

சுவிசேஷத்தில் கிறிஸ்து செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிற அற்புதங்கள் நடந்ததா, நடக்கவில்லையா? தேவன்

உலகத்தாருக்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டு தமது குமாரனை அனுப்பினது மெய்யானால், அவரிடத்தில் அற்புதச் செயல்கள் காணப்பட்டது ஆச்சரியமல்ல. இயற்கையில் தேவவல்லமை, அவரது ஞானம் வெளிப்பட்டபோதிலும், அவரை இன்னாரென்று திட்டமாக அறிந்துகொள்ள ஏதுவில்லை. அறியவேண்டிய அளவுக்காவது அறியக்கூடாதபடி பாவம் புத்தியின் கண்களை அந்தகாரப்படுத்தினது. சிருஷ்டிப்பின் மூலமாய் அவரை அறிவதற்கும், அவரை ஆளாக அறிவதற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு பெரிய மாளிகை அதன் தோட்டங்களால், அதன் எஜமானைப் பெரிய பிரபுவாக நாம் எண்ணலாம். ஆனால், அந்தப் புறம்பான அறிவுக்கும் அந்தப் பிரபுவை முகமுகமாய்க்கண்டு அறிவதற்கும் வித்தியாச மில்லையா? தேவன் தாம் உண்டாக்கின மனுஷருக்குத் தம்மை வெளிப்படுத்த வாஞ்சைகொண்டு தமது குமாரன்மூலமாய் மனுஷர் மத்தியில் வந்து சஞ்சரித்தார். அந்தக்குமாரன் எப்படிப்பட்டவரோ அதுபோலவே அவருடைய கிரியைகளும் உபதேசங்களும் இருக்கவேண்டுமே. அவரோ அதிசயமானவர்! அவர் கிரியைகளில் ஏன் அதிசயமிராது? அவர் செய்த கிரியைகள் அவருக்கு இயற்கை; நமக்கோ அற்புதம். அவரை இன்னாரென்று நாம் அறிந்துகொள்வதற்கு இவ்விசேஷித்த கிரியைகள் **அவசியமாயின**. அவர் கிறிஸ்து என்பதற்கு அவைகள் தீர்க்கதரிசன நிறைவேறலுமாயின.

பாவிகளுடைய நிலைமையைக் கவனிக்கும்போதும் இப்படிப்பட்ட அற்புதங்கள் **அவசியமே**. திரளான ஜனங்கள் அவரை இடைவிடாமல் பின்செல்லும்போது, அவர்களுடைய நோய்களையும் வேதனைகளையும் அவர் கண்ணுற்றும், அவர்களுக்கு உடனே நன்மை செய்யக்கூடாதவராயிருந்தால், அவர் அன்பும் கிருபையும் நிறைந்த ஆண்டவர் அல்ல. பயிர்கள் நோய் கொண்டு வாடியிருப்பதைக்கண்ட சமுசாரி, அந்த நோயை நீக்கும் வழியை அறிந்திருக்கும்போது அவன் சும்மாயிருக்க முடியுமா? சூரியன் பிரகாசிப்பதும், புஷ்பங்கள் பரிமளிப்பதும் இயற்கையாயிருப்பதுபோல, இரக்கமும் காருண்யமும் வல்லமையும் நிறைந்த ஆண்டவர், ஜனங்கள்மீது மனதுருகி அவர்களுக்கு ஏராளமான நன்மைகளைப் பொழிந்தது அவருடைய தன்மைக்கு இயல்பாயிருந்தது. ஜனங்களுக்கோ அற்புதமாயிருந்தது. பாவிகளை இரட்சிக்கும்படி வந்தவர் இவ்வாறு அதிசய நன்மைகளை அருளாதிருந்தால், அவர் தங்களை மீட்டு இரட்சிக்க வல்லவரென்று ஜனங்கள் அறிவதெப்படி? ஆகையால், அன்புள்ள பிதாவை மனுப்புத்திரருக்கு வெளிப்படுத்துவதற்கும், தாம் தேவனால் அனுப்பப்பட்ட கிறிஸ்துவென்று ஜனங்கள் அறிந்து கொள்ளுவதற்கும் ஆண்டவர் செய்த அற்புதங்கள் **அவசியமே**.

அற்புதங்கள் சீஷரின் கட்டுமானமாயிருக்குமோ? அநேக வருஷங்களுக்குமுன் சம்பவித்த காரியங்களை நாம் கண்ணால் காணாமற்போனாலும், சாட்சிகளின் வாக்கை நம்பி ஏற்றுக்கொள்ளுகிறோமே. சாஸ்திரங்களை நாம் ஆராய்ந்து பார்த்துக் கண்ணால் கண்டவர்கள் அல்ல. ஆகிலும், அவைகளை நுட்பமாய் ஆராய்ச்சிசெய்து சாஸ்திரிகள் எழுதிவைத்ததை நாம் சந்தேகமின்றி ஒப்புக்கொள்ளுகிறோம். ஆண்டவர் அற்புதங்கள் செய்ததை நாம் காணாவிட்டாலும், அவரது சீஷர்கள் அவைகளைக் கண்ணாரக்கண்டு எழுதி வைத்தார்கள். அவர்கள் எழுதியிருப்பதை நம்பலாமா; நம்பக்கூடாதா? அவர்கள் எப்படிப்பட்ட மனுஷர்? யோக்கியரா, அயோக்கியரா? அவர்களுடைய உத்தம ஜீவியத்தை, உண்மையை, மனத்தாழ்மையை, சத்தியத்துக்காக அவர்கள் பட்டபாடுகளைக் கவனிக்கும்போது அவர்கள் கட்டுமானக் கதை எழுதினவர்கள் அல்லவென்பது நிச்சயம். அவர்கள் எழுதினவைகள் பொய்யானால் என்ன இலாபத்துக்காக அவ்வாறு பொய்யை எழுதினார்கள்? அந்தப் பொய்யை நம்பிக் கெட்டுப்போனவர்கள் உலகத்தில் எத்தனை பேர்? அவைகள் கட்டுக்கதையாயிருக்குமானால் பாவிகளை இரட்சிக்கக்கூடிய இப்படிப்பட்ட கதைகளே நமக்கு வேண்டும். கிறிஸ்துவைப்பற்றி எழுதப்பட்ட **பொய்கள்** உலகத்தில் இவ்வளவு ஆச்சரியமான மாறுதல்களை நடப்பிக்கக்கூடுமானால் அதற்கு நிகரான **அற்புதம்** வேறில்லை. பொய்யான கட்டுக்கதைகள் நிலைக்குமோ? பொய்யை நம்பி மனுஷர் பரிசுத்தவான்களாகக் கூடுமோ? பொய்யை விதைத்து மெய்யை அறுக்கவுங் கூடுமோ? கிறிஸ்துவின் சீஷர் அவருக்கு உண்மையான சாட்சிகளாயிருந்து, ''தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவமான செயல்களைக் கண்ணாரக் கண்டவர்களாகவே'' அவைகளைக்குறித்து எழுதினார்கள். அவர்கள் எழுதக்கூடாமல் விட்டவைகளும் அநேகம் *(2 பேதுரு. 1:16; யோவான். 21:25).*

சீஷர்கள் வேண்டுமென்று பொய்யான அற்புதங்களை எழுதினார்கள் என்று நாம் சொல்லுகிறதில்லை. ஆனால் அவர்கள் கல்வியில்லாதவர்களும் பேதைகளுமாயிருந்தபடியால் தங்கள் போதகர்மீதுள்ள அபிமானத்தால் சாதாரணமான காரியங்களை அற்புதங்களாகப் பாவித்து எழுதியிருக்கலாம் என்கிறார்கள். அப்படியானால், அவர்களைப்பார்த்து நாம் ஒரு கேள்வி கேட்கவேண்டும். தற்காலக் கொள்கைக்காரர் விசேஷித்து மதிக்கிற சுவிசேஷ **உபதேசங்கள்** சீஷர் சுயமாய் எழுதினவைகளோ, வாஸ்தவத்தில் கிறிஸ்து போதித்தவைகளோ? அவ்வுபதேசங்கள் கிறிஸ்து போதித்தவைகளேயன்றி படிப்பில்லாத செம்படவரால் உண்டானதல்ல என்பார்கள். ஏனென்றால் இந்த இருபது நூற்றாண்டுகளாக ஞானிகளும்

கல்விமான்களும் மகா பக்திவிநயத்துடன் முழங்காலூன்றிக் கற்றுவரும் உன்னத இரகசியங்களைக் கல்வியற்ற ஏழைச்சீஷர் எவ்வாறு போதிக்கக்கூடும்? சுவிசேஷ போதனை கிறிஸ்துவால் உண்டானதென்று தடையின்றி ஒப்புக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து தமது **உபதேசங்களை** எழுதி வைத்தவரல்ல. அவ்வுபதேசங்களை அவருடைய சீஷரிடத்திலிருந்தே பெற்றுக்கொண்டோம். அவர்கள் எழுதிவைக்காதிருந்தால் கிறிஸ்து போதித்தவைகளை நாம் அறியவேமாட்டோம். சரி, ஆண்டவருடைய **உபதேசங்களை** எழுதினவர்களே, அவர் செய்த அற்புதங்களையும் எழுதியிருக்கிறார்கள். உபதேசத்தை அவர்கள் உண்மையாக எழுதினார்களென்றும், அற்புதங்களைப் **பொய்யாக** எழுதினார்களென்றும் சொல்வது நேர்மையோ? அவர்களை **மெய்யரும் பொய்யரும்** என்று சொல்வதெப்படி?

குறுக்கு நூல்களும் நீள நூல்களும் நெய்யப்பட்டு வஸ்திரம் உண்டாவதுபோல, கிறிஸ்துவின் அற்புதங்களும் உபதேசங்களும் சேர்ந்து சுவிசேஷமாகிறது. அற்புதங்களைத் தள்ளிவிட்டுச் சுவிசேஷத்தைக் காப்பாற்றுவது கூடியகாரியமல்ல. ஏதாவது ஒரு அற்புதத்தை மறுத்தால் அது அம்மட்டோடு நிற்காமல், அத்தோடு சம்பந்தப்பட்ட மற்றச் சத்தியங்களையும் அவமாக்கும். அவர் **கரையில்** நடந்து வந்ததைச் சீஷர்கள் கண்டு **கடலில்** நடந்ததாக எண்ணிக்கொண்டார்கள் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானால், நடுக்கடலில் இருந்த படவில் அவர் ஏறிக்கொண்டதும், காற்று உடனே அமர்ந்ததும், அவர் அவர்களோடு கெனசரேத்துக் கரையில் வந்து படவிலிருந்து இறங்கினதும், திரளான ஜனங்கள் அந்நேரத்தில் அவரிடத்தில் வந்ததும் எப்படி? சீஷரை அவர் அனுப்பினபின்பு, கீழ்கரையில் வேறொரு படவும் இருந்ததில்லையென்றும், அவர் எப்படி மேல்கரைக்கு வந்தாரென்றும் ஜனங்கள் விசாரித்தது எப்படி? இதுபோலவே, எந்த அற்புதங்களைத் தள்ளிவிடப்பார்த்தாலும் அவைகளோடு சம்பந்தப்பட்ட இடங்கள், ஆள்கள் உபதேசங்களைத் தள்ளிவிடவேண்டியதாகும். ஆகையால், உபதேசங்களை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் அற்புதங்களையும் **கட்டாயம்** ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

மேலும், சீஷர்கள் இலேசாய் வஞ்சிக்கப்படக்கூடியவர்கள் அல்ல. ஒன்றை இலேசாய் நம்பக்கூடியவர்களுமல்ல. கிறிஸ்துவின் உபதேசங்களை அறிந்துகொள்வது அவர்களுக்குக் கஷ்டமாயிருந்ததுபோலவே, அவருடைய அற்புதங்களை அறிந்துகொள்வதும் அவர்களுக்குக் கஷ்டமாகவேயிருந்தது. இன்னும் நீங்கள் சிந்தியாமலும் உணர்வில்லாதவர்களுமாயிருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா? உங்களுக்குக் கண்கள் இருந்தும் காணாதிருக்கிறீர்களா?

ஐந்தப்பங்கொண்டு ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது மீதியானதைப் பன்னிரண்டு கூடைகளில் எடுத்ததையும், ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்குப் பங்கிட்ட போது மீதியானதை ஏழு கூடைகள் நிறைய எடுத்ததையும் நினைவுகூராமலிருக்கிறீர்களா என்று ஆண்டவர் அவர்களைக் கடிந்துகொள்ள வேண்டியதென்ன? இவ்விதமான மனக்கடினம் கடைசிவரை அவர்களில் இருந்தது. அவர் உயிர்த்தெழுந்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினபோது அவர்கள் நம்பாமற் போனதினிமித்தம் அவர்களைக் கடிந்துகொண்டு, தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே என்று மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், சங்கீதங்களிலும், தீர்க்கதரிசனங்களிலுமிருந்து தம்மைக் குறித்துச் சொல்லியிருக்கிற யாவற்றையும் அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். சீஷர்கள் எளிதில் ஒன்றை நம்பக்கூடியவர்கள் அல்ல. அவர்கள் எளிதில் மோசம்போகத் தக்கவர்களும் அல்ல. ஆகையால், அவர்கள் படிப்பில்லாத பேதைகள் என்றும், எளிதாக நம்பி மோசம்போனார்கள் என்றும் பிதற்றுவது மெய்யான சுவிசேஷ, சரித்திரத்திற்குப் பொருந்தாது. அவர்கள் தமது உபதேசங்களை அறிந்துகொள்ளவும், தமது கிரியைகளை உணர்ந்துகொள்ளவும் ஆண்டவர் எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சமல்ல. சீஷர்கள் சத்தியத்திற்குச் சாட்சிகளாயிருந்தார்கள். அவர்கள் நமக்குத் தந்த உபதேசம் அவர்களுடையதல்ல, அவர்கள் நமக்குத் தந்த அற்புதங்கள் அவர்களுடைய மனோராஜ்யமல்ல. இவை இரண்டையும் கிறிஸ்துவிடமிருந்து பெற்று நமக்குத் தந்தார்கள். உபதேசங்களை அருமையாய் ஏற்றுக்கொண்டு அற்புதங்களைத் தள்ளிவிடுவது யோக்கியமோ?

சீஷர்களின் சாட்சியை நிறுத்தி **சத்துருக்களை** விசாரிப்போம். "அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தை கூடிவரச்செய்து, நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக **அற்புதங்களைச் செய்கிறானே**" என்றார்கள் (யோவான். 11:47). ஆண்டவர் தமது அற்புதங்களை அந்தரங்கத்தில் செய்யவில்லை. அவர் செய்த முக்கியமான அற்புதங்கள் திரள் ஜனங்கள் கண்கள் காணச் செய்யப்பட்டன. பாடையிலிருந்த வாலிபனை அவர் எழுப்பினதைத் திரள் ஜனங்கள் கண்டார்கள். லாசருவை உயிரோடெழுப்பினதை யூதர்களெல்லாரும் பார்த்தார்கள். அவர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். சத்துருக்கள் அவருடைய அற்புதங்களை ஒப்புக்கொண்டபோதிலும், அவர்பேரிலிருந்த விரோதத்தினால் அவர் அவைகளைப் பிசாசின் சக்தியினால் செய்தாரென்று சொன்னார்களே தவிர, அற்புதங்களை அவர்கள் மறுக்கவில்லை. பரிசுத்த ஆவிக்கு

விரோதமான பாவம் மன்னிக்கப்படுவதில்லை என்னும் உபதேசம், அவர் செய்த அற்புதங்களை அவர்கள் பிசாசோடு சம்பந்தப்படுத்திப் பேசினதினால் அல்லவா உண்டாயிற்று. வேறு எவ்விதமாக அந்த உபதேசம் வந்ததென்று தற்காலக் கொள்கைக்காரரே சொல்லட்டும். பிறவிக்குருடன் பார்வையடைந்தபோது அதிகாரிகள் அதை மறுக்கும்படியாக அவனை எத்தனையோ கேள்விகள் கேட்டார்கள். அவனோ நான்தான் அவன் என்றும், தன் கண்களைத் திறந்தவர் கிறிஸ்துதான் என்றும் தீர்க்கமாய் நிரூபித்தான். இந்த அற்புதத்தின் மூலமாய் அவர் தம்மை உலகத்துக்கு ஒளியென்றும், பாவத்திலிருப்பவர்கள் குருடரென்றும் போதித்தார். அவர் அடிக்கடி **ஓய்வுநாளை** மீறினதாகச் சத்துருக்கள் அவரைக் குற்றப்படுத்தினார்களே, என்ன காரணத்துக்காக அப்படிச் சொன்னார்கள்? அவர் ஓய்வுநாளில் செய்த **அற்புதங்களின்** நிமித்தமாகவல்லவா? அவர் சிலுவையில் தொங்கினபோது: மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை என்றார்களே. மற்றவர்களை **இரட்சித்தான்** என்றால் அர்த்தமென்ன? அவர் திரளான நோயாளிகளை அற்புதமாகக் குணமாக்கினார் என்பதல்லவா? அவரை ஏற்றுக்கொள்ளாத சத்துருக்கள் அவர் அற்புதங்கள் செய்தாரென ஒப்புக்கொள்ளும்போது தற்காலக் கொள்கைக்காரர் ஒப்புக்கொள்ளாத காரணமென்ன?

கிறிஸ்துவின் **வார்த்தைகளை** ஏற்றுக்கொள்வோம், **அற்புதங்களை** ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்களே. யோவான் தன் சீஷர்களை அனுப்ப அவர் வரவேண்டிய கிறிஸ்துதானாவென்று கேட்டபோது, ஆண்டவர் அவர்களைப் பார்த்து: "குருடர் பார்வை அடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழும்புகிறார்கள், தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது" என்று யோவானுக்குச் சொல்லுங்கள் என்றும், என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றும் சொல்லியனுப்பினாரே. இவைகள் சீஷருடைய வார்த்தைகள் அல்லவே. கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வோம் என்று இவர்கள் சொல்வது உண்மையானால் இந்த வார்த்தைகளை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? இதைச் சந்தேகிக்கும்போது அது அம்மட்டோடே நிற்காமல் மிகுதியான குழப்பத்தை உண்டாக்குமே. அவர் அற்புதங்கள் செய்ததாக யோவானுடைய சீஷருக்குச் சொல்லவில்லையென்றால், யோவான் தன் சீஷரை அனுப்பினது பொய்யாகும். யோவான் சிறையில் போடப்பட்டது பொய்யாகும். அவர் ஏரோதின் பாவத்தைக் கடிந்துகொண்டாரென்பது பொய்யாகும். ஏரோது

தன் சகோதரன் மனைவியை வைத்துக் கொண்டான் என்பது பொய்யாகும். ஸ்நானகயோவான் இருந்தாரென்பதே பொய்யாகும். சுவிசேஷ சரித்திரம் சங்கிலித்தொடர்போல் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கிறது. பிரியமானதை ஏற்றுக்கொள்வோம். மற்றதைத் தள்ளிவிடுவோம் என்று பேசுவது முடியாத காரியம்.

அற்புதங்கள் செய்யாத கிறிஸ்துவைச் சுவிசேஷத்தில் காணமுடியாது. கிறிஸ்துவைப்போல் உத்தமமான போதகர் இல்லை என்று இவர்கள் பெருமையாகப் பேசுகிறார்களே. தாம் அற்புதங்கள் செய்யாதிருந்தும், அப்படிச் செய்ததாகத் திரும்பத்திரும்பப் பேசுகிறவர் உத்தம போதகர் ஆவாரோ? யூதர்கள் தம்மை விசுவாசியாதபோது **என் கிரியைகளினிமித்தமாவது** என்னை நம்புங்கள் என்றாரே. அவர்கள் அவரைக் கல்லெறிய எத்தனித்தபோது நான் **அநேக கிரியைகளைச்** செய்திருக்கிறேன், அவற்றில் எந்தக் கிரியைகளினிமித்தம் நீங்கள் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்று கேட்டாரே. அவர் செய்த கிரியைகள், அவர் தேவகுமார னென்றும், தேவனால் அனுப்பப்பட்டவரென்றும், உலக இரட்சகரென்றும், கிறிஸ்து மார்க்கம் தேவமார்க்கம் என்றும் நிரூபிக்கின்றதே. ஒரு மனுஷன் உலகத்தில் எழும்பி, தீர்க்கதரிசனங்கள் யாவும் தன்னில் நிறைவேறினதென்று சொல்வது இலேசல்ல. எல்லா மனுஷரும் தனக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும், தானே உலகத்துக்கு நியாயாதிபதியென்றும் சொல்வது இலேசல்ல. தானே இராஜாவென்றும் தனது இராஜ்யத்துக்கு முடிவில்லையென்றும் சொல்வது எளிதல்ல. தான் தேவகுமாரனென்றும், தனது மரணம் உலகத்தை இரட்சிக்கும் என்றும் சொல்வது எளிதல்ல. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் என் வார்த்தைகள் ஒழிந்துபோவதில்லை என்று சொல்வது எளிதல்ல.

மனுஷனுக்கு மிஞ்சின இவ்வாக்குகளை ஒருவர் சொல்லவேண்டுமானால் அதற்கு ஆதாரமுண்டா? ஆம், அவர் செய்த அற்புத **கிரியைகளே** ஆதாரம். அதைத்தான் அப்போஸ்தலர் ஆதாரமாக எடுத்துக் காண்பித்தார்கள். பேதுரு யூதஜனங்களைப்பார்த்து: ''நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே **பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும்,** அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு **வெளிப்படுத்தினார்**'' என்றார் (அப். 2:22). அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் கிறிஸ்துவர்க ளானார்கள். அவருடைய அற்புதங்களை விசுவாசித்து, அவருடைய தெய்வீகத்தை ஏற்றுக்கொண்டவர்களே ஆதிக்

கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் வார்த்தைகளை தேவவார்த்தை களாக ஏற்றுக்கொள்வதற்கு அவர் செய்த **அற்புதங்களே** ஆதாரமாயிருந்தன.

நமதாண்டவர் செய்த அற்புதங்களின் விசேஷித்த இலட்சணம் அவர் அவைகளை நடப்பித்த **இயல்பே.** ஆரவாரமின்றி, அட்டகாசமின்றி, விளம்பரமின்றி வெகு சாதாரணமாகப் பலத்த செய்கைகளை நடப்பித்தார். ஜனங்களே இதோ பாருங்கள், ஓர் ஆச்சரியம் காண்பிக்கிறேன் என்று அவர் கூவவில்லை. அவருக்குள்ளிருந்த வல்லமை, அவர் பார்வையின் மூலமாய், தொடுவதின்மூலமாய், வார்த்தைகளின்மூலமாய்ப் புறப்பட்டு நோயாளிகளைக் குணமாக்கி மரித்தோரை எழுப்பிற்று. அவர் தூரத்திலிருந்துகொண்டே தமது எண்ணத்தால் நோயாளிகளைப் பிழைக்க வைத்தார். அவருடைய ஜீவியமும் உபதேசமும் கிரியைகளும் ஒன்றுபோல் இணைக்கப்பெற்ற இலட்சணமுடையதாயிருந்தன. சுவிசேஷத்தை உத்தம இருதயத்தோடு வாசிப்பவர்கள், ஜீவவசனங்கள் அவரிலிருந்து தாரளமாகப் புறப்பட்டதுபோலவே, அற்புத கிரியைகளும் புறப்பட்டதைக் காண்பார்கள். அற்புதங்கள்தான் விசேஷம் உபதேசம் விசேஷமல்ல என்றவது, உபதேசந்தான் விசேஷம் அற்புதங்கள் விசேஷமல்ல என்றாவது பிரித்துப் பேசமுடியாது. உபதேசத்தினிமித்தம் அவரை, விசுவாசிக்கிறதா, அற்புதங்கள் நிமித்தம் அவரை விசுவாசக்கிறதா என்று கேட்கமாட்டார்கள். இரண்டும் ஒன்றோடொன்று பின்னப்பட்டிருப்பதைக் காண்பார்கள். நாம் சூரியனுக்குமுன் நிற்கும்போது ஒளியையும் உஷ்ணத்தையும் பெற்றுக்கொள்ளுகிறோம். ஒளியினிமித்தம் சூரியனை விசுவாசிப்பதா, உஷ்ணத்தினிமித்தம் சூரியனை விசுவாசிப்பதா என்று நாம் கேட்கமாட்டோம். இரண்டும் சேர்ந்து சூரியனை வெளிப்படுத்துகின்றன. அதுபோலவே, ஆண்டவர் தமது **உபதேசத்தாலும் கிரியைகளாலும்** தம்மை நமது ஆத்துமாவுக்கு வெளிப்படுத்துகிறார். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.

அற்புதங்களைமாத்திரம் சொல்லி அவிசுவாசியை ஆதாயப்படுத்துவது கஷ்டம். பாவ உணர்வடைந்து இரட்சிப்பைத் தேடுகிறவனுக்கு கிறிஸ்துவைக் கூறலாம். அவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, அவரது அருமையான ஜீவியமும், அரிய உபதேசமும், அற்புத கிரியைகளும் அவன் அவரைப் பூரணமாக அறிந்து ஆசீர்வதிக்கப்படுவதற்கு ஏதுவாகும். நாம் கிறிஸ்துவைக் கண்டு அவரை அறிகிற அறிவிலே வளரும்போது **அவரே நமக்குப் பெரிய அற்புதமாவார்.** அவரது அதிசய அன்பும் கிருபையும் நம்மை நாள்தோறும் ஆண்டு நடத்தும். அவர் செய்த அற்புதங்களே நாம் அவரை விசுவாசிப்பதற்கு ஆதாரமாயிராமல்,

அவரே நம்மில் **அற்புதமாக** விளங்கி, அவரைவிட்டு ஒருக்காலும் நாம் விலகாதபடி நம்மைக் கட்டிக்கொள்வார். ஆகையால், சுவிசேஷத்திலுள்ள அற்புதங்கள் வேண்டியதில்லையென்று நாம் சொல்லமாட்டோம். அவர் ஜீவியத்தில் சம்பவித்தவைகள் ஒன்றையும் மாற்றக் குறைக்க நமக்கு அதிகாரமில்லை. இந்த மாம்சத்தில் நாம் இருக்கும்வரையில், அவரது உபதேசமும் கிரியைகளும் நமக்கு வேண்டியவைகளே. தற்காலக் கொள்கைக்காரர் அறிவில் இறுமாப்படைந்து, உபதேசத்தை மாத்திரம் பிரதானமாக்கி, அற்புதங்கள் அவசியமில்லையென்றும், அவைகள் நடந்திருப்பதில்லையென்றும் சொல்லத் துணிந்தது பெரும் பாதகமாகும். அநேக பலவீன கிறிஸ்தவர்கள் இடறுவதற்கு அவர்கள் காரணமானார்கள். கிருபை நிறைந்த ஆண்டவர் அவர்களை விசுவாச வழிக்குத் திருப்புவாராக. நம்மை ஆட்கொண்டு இவ்வளவு தூரம் நம்மை அதிசயமாக நடத்திவந்த **அற்புதமூர்த்திக்குப்** பாத நமஸ்காரம்.

18
தேவனுடைய இராஜ்யம்
The Kingdom of God

தேவராஜ்யம் அல்லது பரலோக இராஜ்யம் என்பது மனுமக்கள் தேவனால் ஆளப்படுவதைக் குறிக்கும். மனுஷர் தேவனால் ஆளப்படுவதைப்போல் அவர்களுக்கு ஆசீர்வாதமும் பாக்கியமுமான காலம் வேறொன்றில்லை. மலைப்பிரசங்கத்தில் நமதாண்டவர் தேவராஜ்யத்துக்குரிய தன்மைகளை விளக்கிக் காட்டினபோது, ஒன்பதுமுறை அவர்கள் பாக்கியவான்கள், பாக்கியவான்கள் என்றார். மெய்யாகவே அது பாக்கியமான காலமே. சகல பாவங்களும் சகல இடறல்களும் முற்றிலுமாய் நீக்கப்பட்டு, தேவனுடைய நன்மையும் பிரியமுமான சித்தம் நம்மில் பரிபூரணமாய் நடந்தேறும்போது, அதைப்போல் மாட்சிமையும் மகிமையுமான காலம் வேறுண்டோ? நமது மோட்ச பாக்கியம் அதுவே. சர்வமும் சீக்கிரம் வெளிப்படப் போகிற அந்தக் காலத்தை எதிர்நோக்கியிருக்கின்றன. பரலோகத்தின் தூதர்கள் அந்த இராஜ்யத்தின் சம்பந்தமாய் தாங்கள் நிறைவேற்றும் பணிவிடைக்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள். பரிசுத்தவான்களான இராஜ்யத்தின் புத்திரர் பூரணரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் ஆனந்தபாக்கியமான அந்த நாளைக் காணும்படி வாஞ்சையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சர்வ சிருஷ்டியும் தங்களுக்குக் கிடைக்கும் விடுதலையை எதிர்பார்த்து, தேவபுத்திரர் வெளிப்படும் அந்த மகிமையான காலத்துக்காக, ஏகமாய்த் தவித்துக் காத்துக்கொண்டிருக்கின்றன.

சாத்தானும் தனக்கு இன்னும் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, உலகத்திலேயும் சபைக்குள்ளும் அதிகமான தீமையைத் தீவிரமாய் நடப்பிக்கிறான். தேவனால் ஏற்படுத்தப்பட்ட நமது இராஜாவாகிய கிறிஸ்து, பரலோகத்தில் தமது சிங்காசனத்திலிருந்து சபையின்மூலமாய் ஆளுகை செய்கிறார். தமது சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் அவர் அங்கிருந்து ஆளுகை செய்ய வேண்டியது. அதுவரை பரலோகமும் அவரை ஏற்றுக்கொள்ள

வேண்டியது. இராஜ்யத்தின் சுவிசேஷம் உலகத்தின் மனுஷருக்குச் சாட்சியாக அறிவிக்கப்படவேண்டும். எண்ணக்கூடாத திரளான ஜனங்கள் இராஜ்யத்தின் வசனத்தை ஏற்றுக்கொண்டு, மறுபிறப்படைந்து, தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள். அநேகர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தேவன் குறித்த தொகையும், அவர் வெளிப்படவேண்டிய காலமும் நிறைவேறினவுடனே இராஜா புறப்பட்டுவருவார். அவர் வருகையை நிறுத்த எத்தனை இராஜ்யங்கள் கூடினாலும் முடியாது. நரகத்தின் பிசாசுகளில் எத்தனை சேனைகள் சேர்ந்து எதிர்த்தாலும் முடியாது.

தேவராஜ்யம் என்பது ஆதிமுதலுண்டான பூர்வத்தினுடையது. தேவனே இராஜா! ஜனங்கள் அவருடைய பிரஜைகள். தேவனே ஆளுகிறவர்; ஜனங்கள் அவரால் ஆளப்படுபவர்கள். ஆளுகையும் அதிகாரமும் ஆலோசனையும் சட்டங்களும் அவருக்கே உரியவை. பூலோகத்தில் இஸ்ரவேலரைத் தமக்குச் சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆண்டுநடத்தும் இராஜாவாயிருந்தார். அவர்களுக்கு இராஜ்யத்தின் சட்டங்களைத் தாமே உண்டுபண்ணிக் கொடுத்தார். அவர்கள் தாங்களே தங்களுக்குச் சட்டங்களை உண்டு பண்ணிக்கொள்ளக்கூடாது. இவ்வாறு தேவன் அவர்களோடு உடன்படிக்கை செய்தார். "நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்தச் சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாயிருப்பீர்கள்" என்று சொன்னார் *(யாத். 19:5,6)*. இவ்வாறு, தேவன் அவர்களை ஆளுவதும் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிவதும் அவர்களுக்கு ஆசீர்வாதமும் பாக்கியமுமாயிருக்கும். இந்த இராஜ்ய ஒழுங்கு முதலில் இஸ்ரவேலரில் ஆரம்பித்தாலும், இது உலகமுழுவதுக்கும் உரிய ஏற்பாடென்பது "பூமியெல்லாம் என்னுடையது" என்று அவர் சேர்த்துச்சொன்ன வார்த்தைகளால் அறியலாம். உலகம் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் ஏதாவது ஒரு ஜாதியாரிடத்தில் அவர் முந்தித் தொடங்குவதே சரி. அவ்வாறு அவர் தெரிந்துகொண்ட ஜாதி **இஸ்ரவேல்**.

தேவ ஆளுகை ஜனங்களுக்கு இருவிதத்தில் ஆசீர்வாதமா யிருந்தது. ஒன்று, அவர்கள் சகல காரியங்களுக்கும் தங்கள் இராஜாவாகிய தேவனையே நோக்கிப் பார்க்கும்படி ஏவினது. மற்றது, தங்களுக்குள் நான் பெரியவன் நீ பெரியவன் என்கிற தர்க்கம் நீங்கி, எல்லாரும் சகோதரர் என்று பாவித்து நடக்கவேண்டியதாயிருந்தது. ஒருவன் மற்றவனை ஆளுவதை விட்டு அன்பாய் நடத்தும்படியாகவும், ஆபத்து அவசரங்களில்

ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்யும்படியாகவும் போதிக்கப் பட்டார்கள் (லேவி. 25:34-46). இவ்வாறு தேவனே இராஜாவாயிருந்து, தமது பணிவிடைக்காரராகிய மோசே, யோசுவா, மூப்பர், நியாயாதிபதிகள்மூலமாய்த் தமது ஜனத்தை வழிநடத்திவந்தார். தேவ ஆளுகையின் அவசியத்தை **கிதியோன்** மறந்தவரல்ல. இஸ்ரவேலர் அவரிடம் வந்து; நீரும், உமது குமாரனும், குமாரனின் குமாரனும் எங்களை ஆளக்கடவீர்கள் என்று சொன்னபோது, நானும் என் குமாரரும் உங்களை ஆளமாட்டோம், **கர்த்தரே** உங்களை ஆளுவாராக என்றார் (நியா. 8:23). சாமுவேல் உயிரோடிருந்த காலமெல்லாம் வருஷாவருஷம் இஸ்ரவேலரின் பட்டணங்களில் சுற்றி நடந்து, ஜனங்களுக்குள் உண்டான காரியங்களை தேவனுடைய ஆலோசனையின்படியே நியாயம் விசாரித்தார். ஜனங்கள் கர்த்தரின் சித்தம் இன்னதென்று அறிந்து, கீழ்ப்படிந்து நடந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள். சாமுவேல் வாலிபரைச் சேர்த்து, தேவகாரியங்களில் அவர்களைப் பயிற்றுவித்து, அவர்கள் தங்கள் ஜீவியத்தாலும் போதனையாலும் ஜனங்களுக்கு முன்மாதிரியா யிருக்கும்படி செய்தார். இது பிற்காலத்தில் வெகுதூரம் ஜனங்கள் தேவனுக்குப் பயந்து நடப்பதற்கும், ரூத்தின் சரித்திரத்தில் நாம் வாசிக்கிறபடி, அநேக சாதாரணமான குடும்பங்கள் தேவபக்தியில் நிலைத்திருப்பதற்கும் ஏதுவாயிற்று. இப்படிப்பட்ட குடும்பங்களி லிருந்துதான் **தாவீது** என்னும் தேவபக்தனும் வெளிப்பட்டார். ஸ்திரீகளிலும் **தெபோராள், அன்னாள், நகோமி, ரூத்து** முதலான தேவபக்தியுள்ள மாது சிரோமணிகளைக் காண்கிறோம். எல்லாருடைய கண்களும் தங்கள் இராஜாவாகிய தேவனை நோக்கியிருந்தபடியால், தேவபக்தியின் வாசனையையும், அவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட விதத்தையும் பூர்வ சரித்திரங்களில் படிக்கிறோம்.

இவ்வாறிருக்க, இஸ்ரவேலர் ஒரு பெருஞ்சோதனையில் அகப்பட்டார்கள். மனுஷர் சாதாரணமாய்த் தங்களுக்குப் புறம்பேயுள்ள காரியங்களைக் கண்டு அதைப் பின்பற்றுவது வழக்கம். மற்றவர்களுடைய உடை, நடை, பாவனை, வழக்கங்களைப் பார்த்து, அவைகளால் இழுப்புண்டு, தாங்களும் அதுபோலே உடுத்துவதும் ஆபரணங்களைத் தரித்துக் கொள்வதும் இயல்பு. இந்தத் தொற்று வியாதி வெகுதுரிதமாய் ஜனங்களுக்குள் தற்காலம் பரவுகிறது. இவ்வளவு துரிதமாய்த் தேவபக்தியைப் பின்பற்றுவார்களானால் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள். இஸ்ரவேலர் புறஜாதிகளைக் கவனித்தபோது அவர்களுக்குள் இராஜா ஆளுவதைக் கண்டார்கள். உடனே சாமுவேலிடத்தில் வந்து, சகல ஜாதிகளையும்போல நாங்களும் இருப்போம், சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி எங்களுக்கும் ஒரு இராஜா இருக்கத்தான் வேண்டும் என்று கேட்டார்கள்.

தேவன் தங்கள் இராஜாவாயிருக்க, ஒரு மனுஷனைத் தங்களுக்கு இராஜாவாயிருக்கும்படி அவர்கள் கேட்டதே, அவர்கள் இருதயத்தில் படிப்படியாய் தேவனை விட்டுப் பின்வாங்கினார்கள் என்பதற்கு அடையாளம். சாமுவேலுக்கு இருந்த விசனம் கொஞ்சமல்ல. தேவன் சாமுவேலைப்பார்த்து: ''அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் அவர்கள் தள்ளினார்கள்.'' நல்லது, இப்போது நீ என்ன செய்வாய்? அவர்கள் சொல்லைக்கேட்டு, அவர்கள் கேட்கிறபடியே ஒரு இராஜாவை ஏற்படுத்து. ஆனால் இது முதல் அவர்களுக்கு நேரிடப்போகிற இக்கட்டுகளையும் சஞ்சலத்தையும் திடசாட்சியாகத் தெரியப்படுத்து என்றார். அந்தப்படியே சவுல் இராஜாவானான். தேவன் இந்தப் பாவத்தை ஜனங்களுக்கு உணர்த்தாதிருந்ததில்லை. மழையில்லாத காலத்தில் சாமுவேலின் விண்ணப்பத்தைக் கேட்டுப் பயங்கரமான இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிட்டார். ஜனங்கள் பயந்துநடுங்கி சாமுவேலிடம் வந்து "நாங்கள் சாகாதபடிக்கு விண்ணப்பம்பண்ணும், நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும், எங்களுக்கு ஒரு **இராஜா** வேண்டுமென்று கேட்ட பாவத்தையும் கூட்டிக் கொண்டோம்" என்று புலம்பினார்கள். அவர்கள் வற்புறுத்திக் கேட்டதினிமித்தம் தேவன் ஒரு இராஜாவை அவர்களுக்குக் கொடுத்தபோதிலும், அது தமக்கு எவ்வளவேனும் பிரியமில்லை என்பதை இந்தப் பயங்கர காட்சியினால் வெளிப்படுத்தினார்.

இவர்கள் இராஜாவாகிய தம்மைப் புறக்கணித்து இவ்விதமாக நடந்து கொள்ளுவார்கள் என்று தேவன் முன்னதாக அறிந்து மோசேயைக் கொண்டு எச்சரித்தார். ''என் மரணத்துக்குப்பின்பு நீங்கள் நிச்சயமாய் உங்களைக் கெடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட வழியைவிட்டு விலகுவீர்கள். ஆகையால் கடைசிநாள்களில் தீங்கு உங்களுக்கு நேரிடும். உங்கள் கைக்கிரியைகளினாலே கர்த்தரைக் கோபப்படுத்தும்படிக்கு, அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வீர்கள் என்பதை அறிவேன்'' என்று மோசே சொன்னார் *(உபா. 31:29)*. அதுமாத்திரமல்ல, சுற்றிலுமுள்ள ஜாதிகளைப்போல உங்களுக்கும் **ஒரு இராஜாவை** ஏற்படுத்தும்படி கேட்பீர்கள் என்றும் சொன்னார். அவ்வாறு ஏற்படுத்த நேரிட்டால் அவன் ஐசுவரியத்தையும் உலகப் பெருமையையும் தேடுகிறவனாயிராமல், கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவனும், தாழ்மையுள்ளவனுமாயிருக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். மோசே *"பூமியிலுள்ள சக மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவராயிருந்தார்" (எண். 12:3)*. அப்படியிருந்தும் மேரிபாவின் தண்ணீர்களண்டையில் அவர் அதிகாரத்தைத் தன்கையில் எடுத்துக்கொண்டபோது, ''ஜனங்கள் கண்களுக்குமுன் தேவனைப் பரிசுத்தம்பண்ணத் தவறிப் போனபடியால்,'' வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்கக்

கூடாமற்போனார். சர்வ அதிகாரம் தேவனாகிய கர்த்தருக்கே உரியது. மனுஷன் அவ்வதிகாரத்தைத் தனக்கு எடுத்துக் கொள்ளும்போது ஜனங்களுக்கு இக்கட்டு உண்டாகும். திருச்சபையிலென்றாலும், இராஜ்யத்திலென்றாலும் மனுஷன் சர்வ அதிகாரம் தனக்குண்டென்று நினைக்கும்போது அதைப்போல் பயங்கரமில்லை. ஜெர்மனியின் அழிவுக்குக்காரணம் அதுவே. தேவ சரித்திரத்திலும் உலக சரித்திரத்திலும் இறுமாப்புள்ள அரசர்களால் ஜனங்களுக்கு உண்டான அழிவு கொஞ்சமல்ல.

தாவீதரசன் கர்த்தருடைய தாசன். அவர் இராஜனாயிருந்தும் மேட்டிமைகொள்ளாமல், சாந்தமும், தாழ்மையும், உருக்க இரக்கமும், மன்னிக்கிற சுபாவமும், தேவனை நோக்கி இடைவிடாமல் ஜெபிக்கிறவரும், அவருடைய ஆலோசனையைத் தேடுகிறவரும், அருமையான சங்கீதங்களால் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறவரும், மானானது நீரோடைகளை வாஞ்சிப்பதுபோல தேவன்மேல் தாகங்கொண்டவருமாயிருந்தார். அவர் இராஜனாயிருந்தும், தமக்கும் இஸ்ரவேலருக்கும் தேவனையே இராஜாவாக்கினார். அவருடைய ஆளுகை மோசே யோசுவா, சாமுவேல், நியாயாதிபதிகள் காலத்து ஆளுகைபோல் தேவ ஆளுகையாயிருந்தது. **யெகோவாவின்** சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பதே அவர் ஜீவியத்தின் நோக்கமாயிருந்தது. இது விஷயத்தில் இராஜாவாக வரப்போகிற கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானார். கிறிஸ்து தாவீதின் வம்சத்தில் பிறப்பவரென்றும், தாவீதின் குமாரனென்றும், தாவீதின் சிங்காசனத்தில் இருப்பவரென்றும் கூறப்பட்ட இரகசியம் அதுதான். இராஜாக்களில் தாவீதுக்கு ஒப்பானவர்கள் இல்லை. சாலொமோன் ஆரம்பத்தில் நன்றாய் ஆண்டாலும், வரவர உலக மயக்கத்தாலும் சிற்றின்பப் பெருக்கத்தாலும் மோசம்போனார். உலக ஐசுவரியத்தில் அவர் நிகரற்ற இராஜாவாயிருந்தும், ஆத்துமத்தில் தரித்திரனாகி மாயை, மாயை என்று புலம்பினார். இவ்வாறு தன்னையும் கெடுத்தார், தன் ஜனத்தையும் கெடுத்தார். விக்கிரக வணக்கம் தேசத்தை ஆண்டுகொண்டது. ஞானி மூடனுக்குத் தூரமானவன் அல்ல. கர்த்தருக்குப் பயந்து நடப்பதே ஞானம். அதுபோனால் அஞ்ஞானமே.

இராஜாவை ஏற்படுத்த தேவன் இடங்கொடுத்தபோதிலும், அது அவருடைய சித்தத்திற்கு விரோதமானதாதலால் இராஜ்யபாரம் தழைத்தோங்கவில்லை. அவ்வதிகாரப்பெருமை பக்தனான தாவீதையுங்கூட சிலசமயங்களில் கெடுத்தது. கொலை பாதகத்துக்கும் துணிகரமான பாவத்துக்கும் அவரை ஏவிவிட்டது. அதினிமித்தம் அவரடைந்த சிறுமையும், செய்த அறிக்கையும், சிந்தின கண்ணீரும் கொஞ்சமல்ல. சாலொமோனோ முழுவதும்

பாழானார். பின் வந்த இராஜாக்களில் சிலர் நல்லவர்களா யிருந்தபோதிலும் காரியம் ஒப்பேறவில்லை. கோத்திரங்கள் இரண்டுபாகமாகப் பிரிந்தன. வடக்கேயுள்ள பத்துக் கோத்திரங்களும் விக்கிரகாராதனையாலும் பற்பல பாவங்களாலும் சீர்கெட்டுப்போயின. யோசியா இராஜாவின் சீர்திருத்தம் அவர்களை இரட்சிக்க முடியவில்லை. ஏசாயா, ஏரேமியா முதலான தீர்க்கதரிசிகளின் மன்றாட்டுகள் பிரயோஜனப்படவில்லை. தேவன் அவர்களைச் சிறைப்பட்டுப் போக ஒப்புக்கொடுத்தார். அவர்களில் பலர் திரும்பிவந்தார்கள். இனி **தேவ ஆளுகையேதவிர** வேறு இராஜா அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. தென்பாகத்திலுள்ள இரண்டு கோத்திரத்தாருக்கு ஆலயம் ஆசாரிமார் இருந்த போதிலும், அவர்களுடைய பாவத்தால் தாவீதின் நகரமும், ஆலயமும், ஆலயத்தின் பணிமுட்டுகளும் தீட்டுப்பட்டன. தாவீதின் சிங்காசனத்தை தேவன் புறக்கணித்தார். இஸ்ரவேலர் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போவதே சரி என்று தேவன் எரேமியாவைக்கொண்டு சொன்னார்.

தேவ ஆளுகையை ராஜாக்கள் தங்கள் கையில் எடுத்துக்கொள்ளும்போது இராஜ்யமும் குடிகளும் ஏகமாய் அழியும். இராஜாக்களை ஏற்படுத்துவது தேவனுக்குப் பிரியமில்லாதிருந்தும், மனுஷருடைய பிடிவாதத்தினிமித்தம் இடங்கொடுத்தார். இஸ்ரவேலர் சரித்திரத்தில் இராஜாக்களின் ஆளுகை மூன்றில் ஒரு பங்குமாத்திரம். நியாயாதிபதிகளின் ஆளுகையைத் தள்ளி, இராஜாக்களை ஏற்படுத்த வேண்டு மென்பது தேவசித்தமா யிருக்குமானால், பக்தர்களான **யோசுவாவையும்** யூதாக் கோத்திரத்தானாகிய **காலேபையும்,** ஏன் ஏற்படுத்தவில்லை? சிறையிருப்புக்குப்பின், ஏன் திரும்பவும் இராஜ்யத்தை ஸ்தாபிக்க வில்லை? ஜனங்கள் கிறிஸ்துவை உலக இராஜாவாக்கும்படி தீர்மானித்து நெருங்கினபோது, கிதியோன் செய்ததுபோல அவர் ஏன் விலகி ஓடினார்? தேவ ஆளுகையே தேவசித்தம். தேவ ஆளுகையே உலகத்துக்கு ஆசீர்வாதம்.

இதுவரை இஸ்ரவேலரைப்பற்றியே பேசிக்கொண்டு வருகிறோம். தேவ ஆளுகையை அவர்கள் தள்ளிவிட்டுத் தங்களுக்கு இராஜாவைக் கேட்டுக்கொண்டதும், தேவன் அவர்கள் கேட்டுக்கொண்டபடி இராஜாக்களுக்கு இடங் கொடுக்க, அவர்கள் ஜனங்களைப் பலவிதமாய் ஆண்டுவந்ததும், கடைசியாக ஜனங்கள் சகல விதமான பாவங்களால் மேற்கொள்ளப்பட்டுச் சிறைப்பட்டதும், அவர்கள் திரும்பி வந்தபின் இராஜ்யமற்றவர்களாய் அந்நியரால் ஆளப்பட்டதும் தெளிவாயிருக்கின்றன. தேசத்தின் நிலைமை இவ்வாறிருக்கையில் **கிறிஸ்து** வந்தார். கிறிஸ்துவுக்கும் யூதராஜ்யத்திற்கும் உள்ள சம்பந்தமென்ன என்பதைக் கவனிப்போம்.

ஜனங்கள் பலவிதத்திலும் பெருக்கமடைந்து **மேசியா** வரமாட்டாராவென்று ஆவலோடு காத்திருந்தார்கள். **இராஜ்யம்** என்பது அவர்கள் அறியாத பாஷையல்ல. இச்சமயத்தில் இராஜ்யம் சமீபம் என்னும் சத்தம் பலஸ்தீனாவில் தொனித்தது. ஸ்நானக யோவான் "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது'' என்று கூறினார். இரட்சகரும் "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தார். மாற்கு சொல்லுகிறபடி ''காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பிச் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்'' என்றும் சொன்னார். பன்னிரு சீஷரும் இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போய் ''பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது'' என்று பிரசங்கித்தார்கள். இதுதவிர கர்த்தர் வேறு எழுபது சீஷரை நியமித்து, சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்கள் போகவும், "தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குச் சமீபமாக வந்திருக்கிறது" என்று பிரஸ்தாபிக்கவும் அவர்களுக்கு கட்டளை கொடுத்து அனுப்பினார். வேறொருவனைத் தம்மைப் பின்பற்றும்படி அழைத்து "நீ போய் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி'' என்று சொன்னார். இவ்வாறு தேவனுடைய இராஜ்யம் சமீபித்துவிட்டது என்கிற சத்தம் பலஸ்தீனாவெங்கும் தொனித்தது. பஞ்சகாலத்தில் பசியினால் சாவோருக்கு அஞ்சி வருகிறது என்னும் சத்தம் எப்படியிருக்குமோ, அதுபோலவே இராஜ்யம் வருகிறது என்னும் சப்தம் யூதர்களுக்கு மகாசந்தோஷமாக இருந்தது. "மனந்திரும்புங்கள்" என்பதும், "சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என்பதும் அவர்கள் செவியில் ஏறவில்லை. **இராஜ்யம்** வருகிறது என்பதை மாத்திரம் எல்லாரும் பிடித்துக் கொண்டார்கள். அந்த இராஜ்யத்தின் **தன்மை** இன்ன தென்பதையோ அறியாமற்போனார்கள்.

யூதர்கள் வெகுகாலமாக இராஜ்யமும் இராஜாவுமில்லாமல் தவித்தவர்கள். அந்நியரால் ஆளப்பட்டவர்கள். தங்கள் பூர்வமேன்மையை வேதத்தால் அறிந்தவர்கள். தாவீதின் ராஜ்யம் திரும்ப ஸ்தாபிக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்தவர்கள். ஆகையால், கிறிஸ்துவினிடத்தில் வல்லமையான செயல்கள் விளங்கினதைக் கண்டபோதும், திரளான ஜனங்கள் அவரைப் பின்பற்றினதைப் பார்த்தபோதும், இராஜ்யம் சமீபம் என்று அவர் விளம்பரஞ் செய்ததைக் கேட்டபோதும், இவரே இஸ்ரவேலருக்கு இராஜ்யத்தை மறுபடியும் கொடுப்பவர் என்று நிச்சயித்துக் கொண்டார்கள். ஆரம்பத்தில் யூத அதிகாரிகள், வேதபாரகர், பரிசேயர், அவர்பேரில் பிரியமாயிருந்ததற்குக் காரணம் அதுதான். ஜனங்களெல்லாரும் அவரைப் போற்றினதற்குக் காரணம் அதுதான். சீஷர்கள் பெருமையோடு அவரைப் பின்சென்றதற்குக் காரணமும் அதுதான். அவர் ஸ்தாபிக்கவந்த இராஜ்யத்தின்

தன்மை இன்னதென்று ஜனங்களும் அறிந்துகொள்ளவில்லை, சீஷர்களும் அறிந்துகொள்ளவில்லை. அவர் உயிர்த்தெழுந்த பிற்பாடுங்கூட சீஷர்கள் அவரிடத்தில் வந்து: "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்" (அப். 1:6). **எம்மாவு** என்னும் கிராமத்துக்குப் போன இரண்டுபேர், அவர் இஸ்ரவேலுக்கு இராஜ்யத்தை மீட்டுக் கொடாதபடி மாண்டுபோனாரே என்றுதான் துக்கத்தோடு வழிநடந்தார்கள். இராஜ்யத்தையும் சிங்காசனத்தையும் காணாததினாலேதான் யூதாஸ்காரியோத்தும் துரோகியாக மாறினான். அவரை ஆதியில் பின்சென்ற அநேக சீஷர்கள் அவரை விட்டு விலகிப்போகவும் நேரிட்டது. திரள் திரளாக அவரைப் பின்பற்றின ஜனங்களும் வரவர உற்சாகம் குறைந்து விலகிப்போயினர். அப்போஸ்தலரும் போய்விடக்கூடிய தத்தளிப்பிலிருந்தும் அவரது சமுகமும் வெளிப்படுத்தலும் அவர்களைக் காத்துக்கொண்டன. ஸ்நானகனும், கிறிஸ்துவும், பன்னிருவரும், எழுபது சீஷரும், இராஜ்யம் இராஜ்யம் என்று தேசமெங்கும் பிரஸ்தாபித்ததென்ன? இராஜ்யம் வராமல் போனதென்ன?

கிறிஸ்து யூதராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தவரல்ல. தாவீதின் சிங்காசனத்தைப் புதிப்பிக்க வந்தவரும் அல்ல. அவர் புது வஸ்திரத்தைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்க வந்தவரல்ல. தேவராஜ்யத்தின் புதுரசத்தைப் பழைய துருத்திகளில் வார்த்துவைக்க வந்தவரல்ல. இராஜ்யத்தின் தன்மையைக் குறித்தும் இராஜ்யத்தின் புத்திரருடைய லட்சணங்களைக் குறித்தும் அவர் உபதேசித்த போதனைகளில் காணலாம். ராஜ்யம் ஆவிக்குரியது. இராஜ்யத்தின் புத்திரரும் ஆவிக்குரியவர்கள். யூதர்களுக்கு உலக இராஜ்யதில் இருந்த வாஞ்சையினால் ஆவிக்குரிய இராஜ்யத்தின் தன்மையை அறிந்துகொள்ளக் கூடாமற்போனார்கள். இராஜ்யம் என்பதைமாத்திரம் எடுத்துக்கொண்டார்களேயன்றி, மனந்திரும்புதலையும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதையும் தள்ளிவிட்டார்கள். அவருடைய இராஜ்யத்தின் தன்மையும் வல்லமையும், அவர் போதித்த உபதேசங்களிலும் உவமைகளிலும் மாத்திரமல்ல, அவர் நடப்பித்த அதிசயமும் ஆசீர்வாதமுமான கிரியைகளிலும் வெளிப்பட்டன. அவருடைய அதிகாரம் ஆவிக்குரியதாயிருந்தது. உலக இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி ஜனங்கள் அவரை நெருக்கினபோதிலும் அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஒரு சமயம் ஜனங்கள் அவரை இராஜாவாக்கும்படி தீர்மானித்து அவரை நெருக்கினபோது அவர் அவர்கள் கைக்குத்தப்பி விலகியோடினார். தமது சீஷர்கள் அச்சோதனையில் அகப்பட்டுக் கொள்ளாதபடி அவர்களையும் படவிலேறி மேல்கரைக்குப் போகும்படி துரிதப்படுத்தினார். ஜனங்கள்

விருப்பத்துக்கிணங்கி அவர் இராஜாவாக்கப் பட்டிருந்தால் உடனே யுத்தம் உண்டாயிருக்கும். அவர் தமது சேனைகளைச் சேர்த்து ரோமரோடு போர்செய்ய வேண்டிய திருக்கும். அவ்விதமான கலகம் உண்டாகாதபடி அவர் தமது வார்த்தைகளைக் குறித்து வெகு ஜாக்கிரதையாயிருந்தார்.

தம்மை கிறிஸ்து என்றாவது, தேவகுமாரன் என்றாவது, இராஜா என்றாவது ஆரம்பத்தில் பகிரங்கமாய் அவர் சொல்லவில்லை. தம்மை **மனுஷகுமாரன்** என்னும் பேராலேயே அழைத்து வந்தார். உலகசிந்தையுள்ள ஜனங்கள் ஆவிக்குரிய வார்த்தைகளைத் தப்பாய் அர்த்தம்பண்ணிக்கொண்டு அமளிசெய்யக்கூடும். அவ்வாறு எவ்வித குழப்பமும் நேரிடாதபடி ஆண்டவர் விழிப்பாயிருந்தார். பேதுரு பட்டயத்தை எடுத்துத் தமக்காக யுத்தஞ்செய்ய ஆரம்பித்தபோது அவரைத் தடுத்து, நான் என்பிதாவை வேண்டிக்கொண்டால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தேவதூதரை இப்பொழுதே என்னிடத்திற்கு அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அவ்வாறு யுத்தஞ்செய்கிறதாயிருந்தால் நான் பாடுபட வேண்டுமென்ற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்று கேட்டார். அவர் பிலாத்துவுக்குமுன் நின்றபோது: என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. என் இராஜ்யம் இவ்வுலகத்துக் குரியதானால் என் ஊழியக்காரர் எனக்காகப் போராடி யிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ் வுலகத்துக்குரியதல்லவென்றார். ஆகையால், கிறிஸ்து யூதருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தவரல்லவென்பது தெளிவு.

அப்படியானால், அவர் தம்மை யூதருடைய இராஜாவென்று ஒப்புக்கொண்ட காரணமென்ன? அவர் யூதருடைய இராஜாவாக, தாவீதின் சிங்காசனத்தில் அரசாளவேண்டுமெனக்கூறிய பல தீர்க்கதரிசனங்கள் உண்டு. அவருடைய பிறப்பைப்பற்றிச் சொன்ன ஏசாயா, "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை, சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" என்று கூறியிருக்கிறார். தேவன் நாத்தான் தீர்க்கதரிசியை தாவீதிடம் அனுப்பி: "உன் வீடும் உன் இராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் இராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" என்றார் (2 சாமு. 7:16). தேவதூதன் மரியாளுக்குத் தரிசனமானபோது, இந்தத் தீர்க்கதரிசனங்களின் சம்பந்தமாக "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய

தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார், அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார், அவருடைய இராஜ்யத்திற்கு முடிவிராது'' என்றான். நட்சத்திரத்தால் வழிநடத்தப்பட்டுவந்த கிழக்கேயுள்ள சாஸ்திரிகள்; எருசலேம் நகரடைந்து "யூதருக்கு **இராஜாவாகப்** பிறந்திருக்கிறவர் எங்கே? அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்று சொன்னார்கள். அவர் எருசலேமுக்குப் பவனி வந்தபோது தாம் யூதர்களுடைய இராஜாதான் என்பதை பிரத்தியட்சமாக வெளிப்படுத்தினார். திரளான ஜனங்கள் ஏகோபித்து "ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிற **இராஜா** ஸ்தோத்திரிக்கப்பட்டவர், கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் இராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன்னதத்திலே ஓசன்னா! என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.'' இந்த ஆர்ப்பரிப்பைக் குறித்து நான்கு சுவிசேஷகர்களும் எழுதியிருக்கிறார்கள். சகரியாவின் தீர்க்கதரிசனமும் அவ்வேளையில் நிறைவேறிற்று. அவர் நிச்சயமாகவே தாவீதின் சிங்காசனத்தை ஸ்தாபித்து, இராஜாவாக அரசாளப்போகிற வேளை வந்துவிட்டது என்று ஜனங்கள் எண்ணி அவ்வாறு ஆர்ப்பரித்தார்கள். அவருடைய சீஷர்களும் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு அதைப்போல் ஏற்றசமயம் இல்லை என்று அகமகிழ்ந்தார்கள். யூதாசுக்கு இருந்த சந்தோஷத்திற்கோ அளவில்லை. தாம் **இராஜாதான்** என்பதை ஜனங்களுடைய ஆர்ப்பரிப்பை அவர் ஏற்றுக்கொண்டதால் காண்பித்தார். அதிகாரிகள் ஏற்கனவே அவரைப் பகைத்துக் கொலை செய்யும்படி தீர்மானித்திருந்ததால், இவ்வாறு ஜனங்கள் அவரை இராஜாவென்று ஆர்ப்பரித்தது அவர்களுக்குப் பிரியமில்லை.

போதகரே, உம்முடைய சீஷர்களை அதட்டும் என்றார்கள். ஆண்டவரோ, ஏன் அவர்களை அதட்ட வேண்டும், அவர்கள் பேசாமலிருந்தால், இந்தக் கல்லுகளே ஆர்ப்பரிக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் தம்மை இராஜா என்று ஆர்ப்பரித்ததை அவர் ஏற்றுக்கொண்டார். சாலொமோன் இராஜா அபிஷேகம் பெற்றபின் தாவீதின் கோவேறு கழுதைமீதேறி, திரளான ஜனங்கள் ஆர்ப்பரிக்க, எருசலேமுக்குள் பிரவேசித்ததுபோல, கிறிஸ்துவும் பெத்தானியாவில் அடக்கத்துக்கு அடையாளமாக அபிஷேகம் பெற்று, வாகனமீதேறிப் பவனியுடன் எருசலேமுக்குள் பிரவேசித்தார். தாவீதின் குமாரனென்றும், இஸ்ரவேலின் இராஜாவென்றும் ஜனங்கள் போற்றினது நியாயமே. அந்த வாரத்தில் அவர் ஆலயத்திலும் அதிகாரிகள் நடுவிலும் நடத்தின இராஜ அதிகாரம் கவனிக்கப்படத்தக்கது. ஆலயத்தைச் சுத்திகரித்து, ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோக விடாமல் தடுத்தார். அதிகாரிகளை மகா பயங்கரமாய் சர்வ அதிகாரத்துடன்

கடிந்துகொண்டார். அவரைப் பிடிக்கவோ அவர்களுக்குத் தைரியமில்லை. தாம் இராஜாதான் என்பதை பிலாத்து முன்பாகவும் ஆலோசனைச் சங்கத்திலும் தைரியமாக அறிக்கைசெய்தார். அதையே அவரைக் கொலை செய்வதற்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டார்கள். சிலுவையில் குற்றவாளி தொங்குவான், அவன் செய்த குற்றமும் தொங்கும். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்று எழுதி அவர் தலைக்குமேல் தொங்கவிட்டார்கள்.

அப்படியானால், அவர் தம்மை இராஜாவென்று சொன்னதில் பிரயோஜனம் என்ன? அவர் ஸ்தாபிக்கவேண்டிய இராஜ்யம் எங்கே? அவர் தம்மை இராஜாவென்று சொல்லியும் இராஜ்யத்தை ஸ்தாபிக்காமற்போனதினாலேதானே ஜனங்கள் அவர்மேல் வெறுப்படைந்து சிலுவையில் அறையும்படி கதறினார்கள். சீஷரில் அநேகர் பின்வாங்கிப்போனார்கள். அப்போஸ்தலருங்கூட மனஞ்சோர்ந்து ஓட்டம்பிடித்தார்கள். இக்கேள்விகள் நியாயமானவைகளே. இதற்கு உத்தரவாகச் சிலர்: அவர் இராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பினதும், அது சமீபித்திருக்கிறதென்று நம்பினதும் மெய்தான். ஆனால் ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாததால், இராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடாமற் போயிற்று. ஆகையால், இராஜ்யத்திற்குப் பதிலாகத் தமது **திருச்சபையை** ஸ்தாபித்தார் என்பார்கள். இது ஒருபோதும் சரியல்ல. கிறிஸ்துவும் அவருடைய சீஷரும் கூறி அறிவித்த தேவராஜ்யம் ஒரு மணிநேரமுதலாய் தாமதிக்கவும் இல்லை, நிறுத்திவைக்கப் படவும் இல்லை. அல்லது, பிற்காலத்திற்கென்று கடத்திவைக்கப்படவும் இல்லை. அவர் பிரசங்கித்த இராஜ்யம் எப்படிப்பட்டது? அதைப் பிரசங்கித்த **இராஜா** எப்படிப்பட்டவர்? இவை இரண்டையும் யோசித்துக்கொண்டால் எல்லாம் தெளிவாகும். அவர் பிரசங்கித்த **இராஜ்யம்** தேவனுடைய இராஜ்யம். அதில் பிரவேசிப்பதற்கு மனந்திரும்புதல், மறுபிறப்பு, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுதல் அவசியம். நீ மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணவு மாட்டாய், அதில் பிரவேசிக்கவுமாட்டாய் என்று நிக்கொதேமுவுக்குத் திட்டமாய்ச் சொன்னார். யூத ஜனங்களோ இந்த உள்ளான ஆவிக்குரிய மாறுதலைத் தள்ளிவிட்டுத் தங்கள் இச்சைக்கேற்ற புறம்பான உலக **ராஜ்யத்தைத்** தேடினார்கள். இராஜா எப்படிப்பட்டவர்? அவர் தாவீதின் குமாரன் என்று மாம்சத்தின்படி அழைக்கப்பட்டாலும், தாவீதைப்போன்ற ஒரு மனுஷனல்ல. தாவீதைப்போன்ற மனுஷனுக்கே தாவீதின் இராஜ்யத்தைப்போன்ற ஒரு இராஜ்யம் ஏற்கும். தாவீதின் இராஜ்யம் உலகத்திற்குரியது. அது எவ்வளவு மேன்மையோடு ஆளப்பட்டாலும் அந்த இராஜ்யத்திற்கு முடிவு வரும். உலக

இராஜ்யங்கள் மாறாமல் என்றென்றைக்கும் நிலைத்திருப்ப தில்லை. இவரைக் குறித்தோ அவர் **என்றென்றைக்கும்** அரசாளுவார் என்றும், அவருடைய ராஜ்யத்துக்கு **முடிவிராது** என்றும் சொல்லியிருக்கிறது. அப்படியானால் ஆளில் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். பரிசேயர் கூடியிருக்கையில் இயேசு அவர்களைப் பார்த்து: "கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அவர் யாருடைய குமாரன் என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால் தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்கிறது எப்படி? தாவீது அவரை **ஆண்டவர்** என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் **குமாரனாயிருப்பது** எப்படி என்று கேட்டார்." அதற்கு உத்தரவு சொல்ல ஒருவனாலும் கூடவில்லை. அதற்கு உத்தரவு சொல்லும் இரகசியத்தை அறிந்திருப்பார்களானால், அவர் பிரஸ்தாபித்த **இராஜ்யத்தின் தன்மையையும்** அறிந்திருப்பார்கள்.

கிறிஸ்து மாம்சத்தின்படி தாவீதின் வம்சத்தில் பிறந்த தாவீதின் குமாரனும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதன் என்று மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததினாலே பலமாய் நிரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமா யிருக்கிறார் (ரோமர் 1:5). அவர் உயிர்த்ததாலே தேவ குமாரனாகாமல், **தேவ குமாரனாயிருந்ததாலே** உயிர்தெழுந்தார் என்பதை அறிய வேண்டும். மனுஷீகமும் தெய்வீகமும் உள்ளவர் கிறிஸ்து. தேவராஜா அழிந்து போகக்கூடிய உலக இராஜ்யத்தை ஸ்தாபிப்பதெப்படி? அவர் தீர்க்கதரிசி என்பதற்கு மோசே முன்னடையாளமும், அவர் பிரதான ஆசாரியன் என்பதற்கு ஆரோன் முன்னடையாளமுமாயிருந்ததுபோல, அவர் இராஜா என்பதற்கு தாவீது முன்னடையாளமாகமாத்திரம் இருந்தார். கிறிஸ்துவில் இந்த மூன்று உத்தியோகங்களும் மேலான கருத்தில் நிறைவேறின.

ஆண்டவர் பிரசங்கித்த ஆவிக்குரிய தேவராஜ்யம் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமுன் கிறிஸ்து மரிக்கவேண்டியது அவசியம். சிலர் நினைக்கிறபடி கிறிஸ்துவின் மரணத்தால் தேவராஜ்யம் தவறிப்போனது என்று நாம் சொல்லாமல், அவர் **மரணத்தின்** மூலமாகவே அந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லுகிறோம். யோவானும், கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும், மனந்திரும்புதலைப்பற்றிப் பிரசங்கித்தது, வெளிப்படப்போகிற தேவராஜ்யத்திற்கு ஜனங்களைப் பக்குவப்படுத்துவதாயிருந்தது. யோவான் பரலோகராஜ்யம் சமீபம் என்று கூறி அறிவித்ததோடு, கிறிஸ்து உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றும் அறிவித்தார். அவர்

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறவர் என்று மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஸ்நானம் அருளுகிறவர் என்றும் அறிவித்தார். வரிசையைப் பாருங்கள், இராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று சொன்னவர், கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதையும், கிரீடம் தரித்துக் கையில் செங்கோல் பிடித்து ஆளுவதையும் குறித்து ஒன்றும் சொல்லாமல், அவர் அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படும் ஆடு என்று பேசின இரகசியமென்ன?

மேலும், பரிசுத்த ஆவி அருளப்படவேண்டுமானால் கிறிஸ்து மகிமைப்படவேண்டும். அவர் மகிமைப்படுமுன் பாடுபட்டு மரிக்கவேண்டும். "கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?" என்று ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின்பு சீஷரின் அவிசுவாசத்தினிமித்தம் அவர்களைக் கடிந்து கொண்டார். "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்றும் சொல்லியிருக்கிறது. ஆகையால் ஆவிக்குரிய தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து உலகத்துக்கு அனுப்பப்படவேண்டும். ஆவியானவர் அருளப்படுவதற்கு கிறிஸ்து பாடுபட்டுமரித்து, உயிர்தெழுந்து பரத்துக்குப் போய், பிதாவினால் மகிமையடைந்து இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் யூதர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்துச் சிலுவையில் அறைந்து கொன்றதால் தேவராஜ்யம் தவறிப் போகாமல், அது பலமாய் ஸ்தாபிக்கப் படுவதற்கு ஏதுவாயிற்று. யூதர்களுடைய பகை தேவ ஏற்பாட்டை நிறைவேற்றினதேயல்லமால் அதைக் குலைத்துப்போடவில்லை. ''தேவன் நிர்ணயத்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்" என்று பேதுரு யூதரைப்பார்த்துச் சொன்னது சரியே.

இந்த ஒழுங்கின் இரகசியத்தைச் சீஷர்கள் ஆரம்பத்தில் அறிந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு இராஜ்யம் வரப்போகிறதென்பதே ஆனந்தமாயிருந்தது. அதைக்குறித்து அடிக்கடி பேசினார்கள். அவ்வாறு இராஜ்யம் வரும்போது தங்களில் யார் அதில் பெரியவனாயிருப்பதென்பதைக் குறித்தும் அடிக்கடி அவர்களுக்குள் தர்க்கம் உண்டானது. இந்தத் தப்பெண்ணமும் தர்க்கமும் கடைசிவரை இருந்தது. ஆதியில் தேவராஜ்யத்தை ஸ்தாபித்தவர், தாமே அவர்களுக்கு இராஜாவென்றும், அவர்களுக்குள் பெரியவன் சிறியவன் என்றில்லாமல் எல்லாரும் சகோதரராயிருக்கவேண்டுமென்றும் போதித்தார் என்பதை

இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் கவனித்தோம். கிறிஸ்துவும் அதையே திரும்பவும் எடுத்துக்காண்பித்தார். என் சீஷர்களே, புறஜாதிகளுக்குள் கடினமாயும் இறுமாப்பாயும் ஆளுகிறவர்கள் அதிகாரிகள் என்று எண்ணப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது, உங்களில் எவனாகிலும் இராஜ்யத்தில் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் கடையானவனும் எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக் கடவன். நான் உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன் என்றுசொல்லி, தேவராஜ்யத்தின் சிறந்த இலட்சணம் **தாழ்மையே** என்று போதித்தார்.

இராஜ்யத்தை எதிர்பார்த்த சீஷருக்கு அவர் மரிக்க வேண்டுமென்று சொன்னது பிரியமாயிருக்கவில்லை. இராஜா மரித்தபின் இராஜ்யம் ஏது என்று திகைத்தார்கள். ஆண்டவர் அவர்களை வெகு பக்குவமாக நடத்திவந்தார். தமது காரியங்களை அவர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் தம்மை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளத்தக்கதாக அவர்களை நடத்தினார். கறவலாடுகளை மெதுவாய் நடத்தும் மேய்ப்பன் அவரல்லவா? தமது மரணத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்லவும் வேண்டும், அப்படிச் சொல்வது அவர்கள் தம்மைவிட்டு விலகிப் போகாதபடி இருக்கவும் வேண்டும். அவர்கள் அவரோடு கூடயிருந்த நாள்களில் அவருடைய மகத்துவமான உபதேசங்களைக் கேட்டார்கள். சீஷரோடு தனித்திருக்கும்போது அவைகளை அருமையாய் அவர்களுக்கு விவரித்துச் சொன்னார். இது அவருடைய உள்ளான தன்மையை அவர்கள் படிப்படியாய் அறிந்துகொள்ளச் செய்தது. ''யாரிடத்தில் போவோம் ஆண்டவரே, நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே'' என்று பேதுருவும் மற்றவர்களும் சொல்லவும் ஏதுவாயிற்று.

அவர் செய்த அநேக பலத்த அற்புதங்களைக் கண்ணாரக் கண்டார்கள். அவைகள் அவர் கிறிஸ்துதான் என்று தங்களுக்குள் உணர்ந்துகொள்ளும்படி செய்தது. அவர் தமது சீஷருடன் கலிலேயாவைவிட்டுத் தனித்து வடதிசைக்குப் போனபோது: நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள் என்று கேட்டார். இது கிறிஸ்துவுக்கும் சீஷருக்கும் மகா முக்கியமான கேள்வி. ஜனங்கள் அவரை அறிந்துகொள்ளாமற்போனது அவருக்கு மகா துக்கம். சீஷரும் அறிந்துகொள்ளாமற்போனால் எப்படியிருக்கும்? இத்தனை பாடுகளும் வீணாகுமே. இந்தக் கேள்வியைக் கேட்ட நேரத்தில் அவர் இருதயம் எப்படி இருந்திருக்கும்? உத்தரவு பேதுருமூலம் வந்தது. "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு சொன்னார். ஆண்டவருக்கு உண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல. அவர்கள் மனதை இவ்வாறு அறிந்துகொண்டதின்பின் தாம் பாடுபட்டு மரிக்கவேண்டும்

என்பதை அறிவித்தார். பேதுருவுக்கு அது பிரியமில்லாமல் ஆண்டவரைக் கடிந்துகொண்டார். ஆண்டவரோ, பேதுருவைப் பார்த்து: நீ சாத்தானுக்கு இடங்கொடுக்கிறாய், தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டுமானால் நான் மரிக்கவேண்டியது **தேவ ஏற்பாடு** என்பதை நீ அறியவேண்டும் என்றார். தம்மை இன்னாரென்று அவர்கள் அறிந்தது மாத்திரமல்ல, இன்னும் அவர்களைப் பலப்படுத்த விரும்பி, சீஷரில் மூன்றுபேரைக் கூட்டிக்கொண்டு ஒரு உயர்ந்த மலையின்மேல் ஏறி, அங்கே அவர்களுக்கு முன்பாக **மறுரூபமானார்.** அந்த மகிமையான காட்சியையும் கேட்ட வாக்கையும் ஒருபோதும் அவர்கள் மறந்துபோகவில்லை. பேதுருவும் யோவானும் வெகுகாலத்துக்குப் பின்பு அந்த மகிமையை நினைத்து எழுதியிருக்கிறார்கள். அவர்கள் மலையிலிருந்து இறங்கினபோது ஆண்டவர் மறுபடியும் அவர்களைப்பார்த்து, தாம் மரணமடைந்து உயிரோடெழும்ப வேண்டும் என்று சொன்னார். இச்சமயத்தில் பேதுரு அவரை முன்போல் கடிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. கேட்கவும் பயந்தார்கள். தமது மகிமையை அவர்களுக்குப் படிப்படியாக வெளிப்படுத்தி, அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டு, தமது பாடுகளை அவர்களுக்கு அறிவித்த ஞானத்தை நாம் கவனிக்கவேண்டும். அவர் தமது மரணத்தைக் குறித்துச் சொன்னபோதெல்லாம் அவர்கள் திகைத்துத் துக்கப்பட்டார்களேயல்லாமல், அதன் **அவசியத்தை** அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டபின் எல்லாவற்றையும் அறிந்து கொண்டார்கள்.

"இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடு வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிப்பார்ப்ப தில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். இது அவர் மறுரூபமாவதற்குச் சற்று முந்திச் சொல்லப்பட்டதால், இவ்வாக்கு மறுரூபமலையில் நிறைவேறினதாகச் சொல்லுகிறவர்கள் உண்டு. இதைச்சொல்லி ஆறு நாளைக்குப்பின்பு அவர் மறுரூபமானார். ஆறுநாளைக்குப் பின்பு நடக்கப்போகிற சம்பவத்தைக் காணுமுன் மனுஷர் செத்துப்போவார்களா? மேலும், மறுரூபத்தைக் கண்டவர்கள் மூன்று பேர்தானே. அந்த மூன்று பேரும் அவர் மரித்தோரிலிருந்து எழும்புகிறவரை தாங்கள் கண்ட மகிமையின் காட்சியை ஒருவருக்கும் சொல்லக் கூடாதென்றும் கட்டளையிட்டாரே. மற்றச் சீஷர்களுக்கு முதலாய் அவர்கள் சொல்ல உத்தரவில்லையே. அப்படியானால் மறுரூப மகிமையின் நோக்கமென்ன? அவர் பரத்துக்குப்போய் பிதாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் மகிமையை இவர்கள் கூடயிருந்து காணக்கூடாததால், தேவன் அந்த மகிமையின் முன்காட்சியைக்

கொஞ்சம் அவர்களுக்குக் காண்பிக்கச் சித்தமானார். ஆகையால், மறுரூபக்காட்சி தேவனுடைய இராஜ்யம் பலமாய் வந்ததைக் காண்பிக்காமல், அவர் பரத்தில் பெற்றுக்கொள்ளப் போகிற மகிமைக்கும், அவர் இரண்டாந்தரம் உலகத்துக்கு வரப்போகிற மகிமைக்கும் ஒருவிதமாய்த் திருஷ்டாந்தம் போலவும் தீர்க்க தரிசனம்போலவும் இருந்தது. தமது மரணம் உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்களுக்குத் தாராளமாகச் சொல்வதற்கும் அக்காட்சி அனுகூலமாயிருந்தது.

இவ்வாக்கு எருசலேமின் அழிவில் நிறைவேறினதாகச் சொல்லுகிறவர்களும் உண்டு. இங்கே நிற்கிறவர்களில் சிலர் மரணத்தைக் காண்பதில்லை என்று அவர் சொன்னது அக்காலத்துக்குப் பொருந்தலாம். ஏனென்றால், நாற்பது வருஷங்களுக்குப் பின்பு எருசலேம் அழிந்ததால் அதுவரை எல்லாரும் உயிரோடிருக்கமாட்டார்கள். வயதானவர்களில் அநேகர் மரித்துப்போவார்கள். அநேகர் சிதறுண்டும்போவார்கள். மற்றவர்கள் தங்கள் சொந்தக் கண்ணால் எருசலேமின் அழிவைக் கண்டிருப்பார்கள். மேலும், எருசலேமின் அழிவு கிறிஸ்துவின் சுவிசேஷ இராஜ்யம் தாராளமாக நடந்தேறுவதற்கு அனுகூலமாயிருக்கும். யூதமார்க்கம் பலமாயிருக்கும்வரை அது தடையாயிருந்தது. எருசலேமின் அழிவு யூதர் நமதாண்டருக்குச் செய்த கொடுமையின் பலனாக அவர்களுக்கு நேரிட்டது. இவ்வாறு சொன்னபோதிலும், எருசலேமின் அழிவு தேவனுடைய இராஜ்யத்தைப் பலமாகக் கொண்டு வந்ததென்று சொல்வதெப்படி? இவ்வாக்கை மத்தேயு "மனுஷ குமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன்" என்று எழுதுகிறார். மூன்று சுவிசேஷங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது "தேவனுடைய **இராஜ்யத்தைக்** காணுமுன்" என்றும், "தேவனுடைய இராஜ்யம் **பலமாய்** வருவதைக் காணுமுன்" என்றும், "**மனுஷகுமாரன்** தம்முடைய இராஜ்யத்தில் வருவதைக் காணுமுன்" என்றும் வாசிக்கிறேம்.

தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்து இராஜாவாக அரசாளவந்தது பெந்தேகொஸ்தே நாளில் அல்லவோ நிறைவேறினது. அவர் மாம்சத்தில் இருந்த நாள்களில் தேவராஜ்யத்தைப்பற்றி அவரும், அவரது சீஷர்களும் பிரசங்கித்தபோதிலும், மனுஷர் அவரைத் தங்கள் இராஜாவாக இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. ராஜா அவர்கள் நடுவில் இருந்ததாலும், அவர்மூலமாய் இராஜ்யத்தின் வல்லமையான கிரியைகள் நடந்ததாலும், தேவனுடைய இராஜ்யம் அவர்கள் **மத்தியில்** இருந்ததென்று சொல்லலாம். தேவன் தங்களுக்கு இராஜாவாயிருந்தகாலத்தில், முரட்டாட்டமும் கலகக்குணமும் உள்ள இஸ்ரவேலர், தங்கள் இராஜாவைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டார்கள். அவர்கள் தாங்களே தேடிக்கொண்ட

இராஜ்யபாரமும் நிலை நிற்காமல் ஒழிந்தன. கிறிஸ்து ஒழிந்துபோன இராஜ்யத்தைச் சீர்திருத்தவும், திரும்ப ஸ்தாபிக்கவும் வந்தவரல்ல. **தேவ ஆளுகையைத்** திரும்ப ஸ்தாபிப்பதே அவர் வந்த நோக்கம். அந்த இராஜ்யத்தைக் குறித்தே பிரசங்கித்தார். அதின் தன்மையையும் அதற்குரிய விதிகளையும் தெரியப்படுத்தினார். சீக்கிரம் அந்த இராஜ்யம் பலத்தோடு வரும் என்றும் போதித்தார். அதற்கு முன்னதாக தாம் மரணமடைந்து உயிரோடெழும்பி, பிதாவிடம் சென்று, மகிமையையும் கனத்தையும் பெற்று, பரிசுத்த ஆவியை அனுப்புவதாகச் சொன்னார். **தேவாவியின்றி** தேவ இராஜ்யத்தை ஸ்தாபிப்பது கூடாது. உலகத்தில் எந்த வல்லமையாலும் இருதயத்தை மாற்றமுடியாது. புறம்பான சட்டங்கள் புறம்பான சீர்திருத்தங்களை உண்டாக்கலாம். ஆவிக்குரிய சட்டங்களே இருதயத்தை மாற்ற வல்லமையுள்ளது. தந்நயமும், பிடிவாதமும், சகல கேடுகளுக்கும் உறைவிடமுமாகிய இருதயம் உடைபட வேண்டும். பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்த பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட வேண்டும். மனுஷர் தங்களை முற்றிலும் கடவுளுக்குக் கையளித்து, அவர் அவர்களைத் தமது சித்தப்படி ஆளுவதே தேவனுடைய இராஜ்யம். தேவசித்தம் செய்யப்படும் இடமே தேவராஜ்யம்.

அவ்வித இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமுன் கிறிஸ்து மரிக்கவேண்டியது அவசியம் (லூக்கா 17:25). அவருடைய மரணமே தேவ இராஜ்யத்துக்கு அஸ்திபாரம். அவருடைய மரணம் நமக்கு மாதிரிமாத்திரம் என்று போதிக்கிற தற்காலக் கொள்கை வெறுக்கப்படத்தக்கது. கிறிஸ்து உலகத்தில் நிறைவேற்றும்படி வந்த எல்லாக் காரியங்களிலும் அவரது **மரணமே** பிரதானம். ஏதேன் தோட்டத்திலேயே அதன் குறிப்பைக் காணலாம். ஆபேலின் பலி முதற்கொண்டு நடந்தேறின சகல பலிகளிலும் அவர் மரணத்தைக் காணலாம். தேவன் இஸ்ரவேலருக்கு விதித்த சகல ஆசாரங்கள் சடங்குகளிலும் காணலாம். தெளிவாகத் திட்டமாகத் தீர்க்கதரிசனங்களிலும் சங்கீதங்களிலும் காணலாம். ஏசாயா ஐம்பத்து மூன்றிலும், சங்கீதம் இருபத்திரண்டிலும், மரிக்கும் சிலுவையையும், மரித்தவர் யாரென்பதையும், ஏன் மரித்தாரென்பதையும் தெளிவாய்க் காணலாம். ஸ்நானகனும் அவர் மரிக்கவேண்டிய தேவ ஆட்டுக்குட்டி எனப் பிரசங்கித்தார். ஆண்டவர்தாமே தாம் மரிக்கவேண்டிய அவசியத்தையும், அதனால் உண்டாகும் இரட்சிப்பையும் திரும்பத் திரும்பக் கூறினார்.

அவர் மரணத்தைத் **தோல்வியென** யூதர் நினைத்தார்கள். அதைப்போல் கிறிஸ்து அடைந்த வெற்றி வேறொன்றுமில்லை.

உலகத்தை சாத்தான் அரசாண்டான். மனுமக்கள் அவனால் வஞ்சிக்கப்பட்டு, அவன் பிரஜைகளாகி, அவனால் ஆளப் பட்டார்கள். அதினிமித்தம் அவர்கள் "பொல்லாங்கனுடைய புத்திரர்" என அழைக்கப்பட்டார்கள். இந்தப் பொல்லாங்க னுடைய புத்திரரை தேவ புத்திரராக்கவே கிறிஸ்து வந்தார். அவன் இராஜ்யம் இடிபடவேண்டும். அவன் கையில் அகப்பட்டுத் தவிக்கும் ஏழை மக்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவனால் விளைந்த பாவமும், சாபமும், மரணமும் தொலையவேண்டும். இவைகள் நிறைவேறாமல் இராஜ்யமேது? நாம் இராஜ்யத்தின் புத்திரராவதேது? தேவனுடைய இராஜ்யம் பாவத்தில் ஸ்தாபிக்கப்படுவதில்லை.

அன்புள்ள **பிதா** இந்த மகாபெரிய வேலையை நிறைவேற்றும்படி தமது குமாரனை அனுப்பினார்.. அவர் நமது மாம்சத்தையும் ரத்தத்தையும் எடுத்துக்கொண்டு, மனுக் குலத்தாரின் **பொது** மனுஷனாகி, நமது பாவத்தைத் தாமே சுமந்து, பாவமறியாத அவர் நமக்காகப் பாவமானார். தேவன் நீதியுள்ளவர். "நீதியும் நியாயமும் அவர் சிங்காசனத்தின் ஆதாரம்." அநீதி யாவும் பாவமே. தேவன் எவ்வளவு அன்புள்ளவராயினும் தமது நீதியை தவறவிடமாட்டார். அவருடைய நீதி எப்படிப்பட்டதென்று நமது பிணையாளியாகச் சிலுவையில் அறையுண்டு தொங்கும் திருக்குமாரனில் காணலாம். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறும் சத்தத்தால் அறியலாம். பாவம் எவ்வளவு பயங்கரமானதென்று சிலுவைக் காட்சியில் படிக்கலாம். அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்ப்பற்கு அவர்கள் இரட்சிப்பின் அதிபதி எவ்வளவு பாடுபடவேண்டியதாயிருந்த தென்பதையும் கண்டறியலாம். இவ்வாறு பரிசுத்த இரட்சகன் மனுக்குலத்தாரின் பாவத்தைத் தாமே சுமந்து, தமது சரீரத்தைச் சிலுவையின் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, பாவத்தை மாம்சத்திலே ஆக்கினைக் குள்ளாகத்தீர்த்தார். சாத்தானின் தலை உடைந்தது. பாவமும் சாபமும் தொலைந்தன. மனுக்குலத்தை நடுங்கவைத்த பயங்கரமான மரணம் அழிந்தது. கிறிஸ்து அடைந்த மரணத்தால் "நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்தன." பாவிகளின் இரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எவ்வளவு விலையேறப் பெற்றதோ, அவர் சம்பாதித்த இரட்சிப்பும் அவ்வளவு விலையேறப்பெற்றது. தேவராஜ்யத்தில் பிரவேசிக்க இப்பொழுது வழி உண்டானது. பாவ மன்னிப்பும், புத்திர சுவிகாரமும், நித்திய சுதந்தரமும், சகல ஆசீர்வாதங்களும் பாவிகள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஈவாயிற்று. "தேவன் தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நீதிமானாக்குகிறவருமாய்

விளங்கும்படி இக்காலத்தில் தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாக'' அவருடைய அனாதி தீர்மானம் இவ்வாறு கிறிஸ்துவில் நிறைவேறிற்று. அவருடைய அளவற்ற கிருபையையும் அதிசயமான அன்பையும் இங்கே காண்கிறோம்.

கிறிஸ்து தாவீதின் வம்சத்தில் பிறந்தபடியால் அவர் யூதருடைய இராஜாவென்பது மெய்தான். தங்கள் இராஜாவுக்கு அவர்கள் முள்ளைக் கிரீடமாகவும், மூங்கிலை செங்கோலாகவும், சிலுவையைச் சிங்காசனமாகவும் கொடுத்தார்கள். அவர் யூதர்களின் இராஜாவாகச் சிலுவையிலறையப்பட்டு, யூதர்களின் இராஜாவாகவே கல்லறைக்குள் வைக்கப்பட்டார். மாம்சத்தின்படி யூதரோடும் அவர்கள் உடன்படிக்கையோடுமுள்ள சம்பந்தம் யாவும் சிலுவையிலறையப்பட்டு, கல்லறையில் புதைக்கப்பட்டன. அவர் உயிர்த்தெழுந்தபோதோ யூதருக்கு இராஜாவாக அல்ல, "இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாக" விளங்கினார். தேவனுடைய இராஜ்யம் யூதருக்குமாத்திரம் உரியதல்ல. அது உலகத்தார் யாவருக்கும் பொது. மாம்சத்தின்படி தாவீதின் குமாரனாக அவர் மரித்தபோதிலும் அவர் உயிர்த்தபோது தேவனுடைய குமாரன் எனப் பலமாய் நிரூபிக்கப்பட்டார். அவர் மரித்ததால் தேவனுடைய இராஜ்யம் அழிந்துபோகவில்லை. அவரும் அவரது சீஷர்களும் சமீபம் என்று கூறின இராஜ்யம் தாமதிக்கவுமில்லை, கடத்திவைக்கப்படவுமில்லை. அப்படியிருக்குமானால், அவர் உயிர்த்தெழுந்தபின்பு இராஜ்யத்தைப் பற்றிய பேச்சு ஒழிந்துபோயிருக்கும். ஆனால் ''அவர் பாடுபட்டபின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, **தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை** அவர்களுடனே பேசினார்'' *(அப். 1:3).*

அப்போஸ்தலர் தேவராஜ்யத்தின் தன்மையை இன்னும் அறிந்துகொள்ளாததால், அவர்கள் அவரைப் பார்த்து: "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக்கொடுப்பீர்'' என்று கேட்டார்கள். அதைப்பற்றி இப்பொழுது நீங்கள் அறியவேண்டியதில்லையென்று சொல்லி "**பரிசுத்த ஆவி** உங்களிடத்தில் வரும்போது பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." இங்கே தேவனுடைய இராஜ்யத்துக்கும் பரிசுத்த ஆவிக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனித்துக்கொள்ளவும். இதுமுதல் **யூதருடைய இராஜ்யம்** என்கிற பேச்சு அடிபட்டது. ஆவியானவர் ஊற்றப்பட்ட பின்பு தேவனுடைய இராஜ்யம் அல்லது கிறிஸ்துவினுடைய ராஜ்யம் என்று மாத்திரம் திரும்பத்திரும்ப வாசிக்கிறோம். கிறிஸ்து சொன்ன பொல்லாத திராட்சத் தோட்டக்காரரின் உவமையில் ஆண்டவர் யூதரைப் பார்த்து:

"தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" என்றார். *(மத். 21:43).*

அவர் பரத்துக்குப் போகுமுன் தமது சீஷரைப் பார்த்து: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும், அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம், சகல நாள்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்." இவ்வார்த்தைகளில் விளங்கும் இராஜரீக அதிகாரத்தைக் கவனிக்கவும். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குண்டு; எந்த இராஜா இப்படிச் சொல்லக்கூடும்? சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்; எவ்வளவு விசாலம்! பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் **நாமத்திலே** ஞானஸ்நானம் கொடுங்கள்; எவ்வளவு வல்லமை! நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ள வேண்டும்; எவ்வளவு அதிகாரம்! இவை யாவற்றிலும் ராஜாவின் சத்தம் தொனிக்கிறதேயல்லாமல் வேறல்ல. தேவனுடைய இராஜ்யம் சமீபித்து வருகிறதைக் காண்கிறோமேயன்றி அது தவறிப்போகவுமில்லை, இரண்டாயிரம் வருஷத்திற்குப் பிந்திக் கடத்தி வைக்கப்படவுமில்லை.

மேலும், ஆண்டவர் இப்போது ஸ்தாபிக்கப்போகிற இராஜ்யம் **ஆவிக்குரியது.** அது பிரத்தியட்சமாகக் கண்ணால் காணக்கூடியதல்ல. இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுவதுமில்லை. இராஜ்யம் ஆவிக்குரியதானால் இராஜாவும் ஆவிக்குரியவிதமாகவே அதை ஆளவேண்டும். ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின்பு சரீரத்திலே அவர் தமது சீஷரோடிருக்கமாட்டார். அவர் முன் சொல்லியிருந்தபடியே பரலோகத்துக்குத் திரும்பிப்போகவேண்டும். அவ்வாறு அவர் பரலோகத்துக்குப்போய், மகிமையடைந்து, பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்தால், பூமியில் அவர் ஸ்தாபிக்கும் இராஜ்யத்தில், தமது **ஆவியின்**மூலமாகத்தான் அரசாளக்கூடும். இதை நிச்சயப்படுத்தும் அநேக வாக்குகள் உண்டு. "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களோடு கூடயிருப்பேன்." இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள்

நடுவில் இருக்கிறேன்.'' ''நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.'' ''நான் உங்களில் இருக்கிறதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்.'' ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.'' ''அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை **எழுப்பி,** முதலாவது உங்களிடத்திற்கே **அவரை அனுப்பினார்**'' *(அப். 3:26).* இந்த வாக்குகள் யாவும் கிறிஸ்து **சரீரத்தின்படி** தமது ஜனங்களோடிருப்பதைக்குறிக்காமல், அவர் தமது **ஆவியின்மூலமாய்** நமக்குள் வாசம்பண்ணி நம்மை நடத்துவதைக் குறிக்கின்றன. மேலும் பரிசுத்த ஆவி ''கிறிஸ்துவின் ஆவி'' என்றும் அழைக்கப்படுகிறார் *(ரோமர் 8:9).* பரத்துக்குப்போன ஆண்டவர் பரிசுத்த ஆவியின்மூலமாய் பெந்தேகோஸ்தே நாளில் இறங்கிவந்து, தமது அடியாரை ஆள்கொண்டு, அவர்களை அதிசயமாக நடத்தினார். ஆகையால், அவர் பரத்துக்குப்போன பின்பும் ''கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்'' என்றும், ''இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்'' என்றும் அவர் கூடயிருப்பதுபோல் சொல்லி யிருக்கின்றன. *(மாற்கு 16:20; அப். 2:47).*

பெந்தகொஸ்தே நாளில் சீஷர்கள் மேல்வீட்டில் கூடியிருந்தபோது பரத்தில் மகிமையடைந்த கிறிஸ்து, பரிசுத்த ஆவியை அனுப்பி, அந்த ஆவியானவர் மூலமாகத்தாமே அவர்கள் இருதயங்களை ஆண்டுகொண்டார். அப்போது மனுஷகுமாரன் தமது இராஜ்யத்தில் வல்லமையோடு வந்தார். கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாகத் தங்களுக்குள் இருப்பதை அவர்கள் அறிந்தார்கள். ஏனென்றால், ஆவியானவர் தம்மை யல்ல, **கிறிஸ்துவையே** அவர்களுக்குள் வெளிப்படுத்தினார். கிறிஸ்துவை ஆண்டவரும் இராஜாவுமாகத் தங்களுக்குள் கண்டார்கள். அவர் தங்களோடு மாம்சத்தில் இருந்த நாள்களில் உண்டாகாத பெரிய மாறுதல் அவர்கள் ஜீவியத்திலும், கிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும் உண்டானது. தங்களை முற்றிலுமாய் அவருக்குக் கையளித்து, அவருக்குப் பூரணமாகக் கீழ்ப்படிந்தார்கள். தேவனுடைய **ராஜ்யம்** வந்தது. தேவ ஆளுகை நடந்தது. கிறிஸ்து பேதுருவுக்குக் கொடுத்த திறவுகோல்களை அவர் உபயோகிக்கத்தக்க சமயமும் வாய்த்தது. ''பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறதெதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பதெதுவோ

அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத். 16:19). இவ்வாக்கு பேதுருவுக்குமாத்திரம் சொல்லப்படாமல், சீஷர்கள் எல்லாருக்குமே திரும்பச் சொல்லப்பட்டதென்பதை மத்தேயு 18:18இல் காணலாம். ஆகையால், பேதுருவைமாத்திரம் சபையின் **தலையாக** முக்கியப்படுத்திப் பேசுவதற்கு இடமில்லை. பேதுரு தம்மை அப்படி நினைத்தவரல்ல. அப்போஸ்தலரும் அவ்வாறு அவரைக் கொண்டாடினவர்களும் அல்ல. கொர்நேலியு தன் பாதத்தில் விழுந்தபோது "நானும் ஒரு மனுஷன்தான்" என்றும் தமது நிருபத்தில் "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பன் என்றும் தம்மைத் தாழ்த்திப் பேசுகிறார். பேதுரு பெந்தேகொஸ்தே நாளில் விசேஷித்துப் பிரசங்கித்தது மெய்தான். மற்ற அப்போஸ்தலரும் அதுபோலவே சாட்சி கூறினார்கள். பேதுரு பேசினதைக்கேட்டு இருதயத்தில் குத்தப்பட்ட ஜனங்கள் பேதுருவினிடத்தில் மாத்திரமல்ல, "பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்" (அப். 2:37).

அப்போஸ்தலர் அந்நாளில் உபயோகித்த திறவுகோல்கள் எவை? இராஜ்யத்தின் சுவிசேஷ வசனங்களே அத்திறவுகோல்கள். அவர்கள் கட்டினதென்ன? கட்டவிழ்த்ததென்ன? வசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் பாவங்களிலிருந்தும், யூதமார்க்கத்துக்கடுத்த பழைய உடன்படிக்கை, பழைய ஆசாரக் கொள்கைகளிலிருந்தும் கட்டவிழ்க்கப்பட்டார்கள். பாவ மன்னிப்பையும் பரிசுத்த ஆவியையும் பெற்று, தேவராஜ்யத்தின் புத்திரராகி, தேவசித்தப்படியே கீழ்ப்படிந்து நடக்கும் கட்டால் கட்டப்பட்டார்கள். இவ்வாறான தேவ கிரியைகள் பூமியில் நடந்தாலும், அது பரத்துக்கும் அங்கிகாரமானவைகளே அன்றையத்தினம் மூவாயிரம்பேர் மறுபிறப்பினால் இராஜ்யத்தின் புத்திரரானார்கள். சற்று பொறுத்து விசுவாசிகளின் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிற்று. இதற்குப் பிறகு விசுவாசிகளின் தொகை எருசலேமில் திரளாகப் பெருகிற்று. தேவனுடைய இராஜ்யம் யூதேயாவுக்குமாத்திரமல்ல, அது எருசலேம் தொடங்கி யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் பரவவேண்டும். இராஜ்யத்தின் வசனத்தை ஏற்றுக்கொண்டு, மறுபிறப்படைந்து, தேவராஜ்யத்தின் மக்களானவர்கள் ஆரம்பத்தில் எருசலேமில் கூடியிருந்தார்கள். ஆண்டவர் தமது சரீரமாகிய திருச்சபையை இவ்விதமாக ஸ்தாபித்தார். தேவராஜ்யம் வேறே, திருச்சபை வேறேயல்ல. மற்றவர்களிலிருந்து பிரிக்கப்பட்டு கிறிஸ்துவோடு இணைக்கப் பட்ட சங்கமே திருச்சபை. கிறிஸ்து இராஜாவாக அவர்கள் உள்ளங்களில் அரசாளுகிறார். இவர்களை உலகத்திற்கு வெளிச்சமாகவும், பூமிக்கு உப்பாகவும் வைத்தார். இவர்களைக்

கொண்டு உலகத்திலுள்ள அநேகரை தமது இராஜ்யத்திற்கும் சேர்த்துக் கொள்ளச் சித்தமானார், இதுவே தேவனுடைய ஆவிக்குரிய உள்ளான இராஜ்யம் அவருடைய **இராஜ்யம்** யாருக்குள் வருமோ, அங்கே அவருடைய சித்தமும் செய்யப்படும். கர்த்தருடைய ஜெபத்தில் நாம் சொல்லிவருகிற வரிசை அதுவே. இந்த இராஜ்யத்தில் "யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை, ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை, எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள்."

ஒரு இராஜ்யத்துக்கு நான்குகாரியங்கள் அவசியம். இராஜா, குடிகள், சட்டங்கள், இராஜ்ய எல்லை. கிறிஸ்து மாம்சத்தில் இருந்த நாள்களில் அவர் யூதர்களின் இராஜாவாயிருந்தும், முன் நாம் கவனித்தபடி அவர்கள் தங்கள் இராஜாவுக்குக் கொடுத்த கிரீடம் முள்முடி. அவர்கள் அவர்கையில் கொடுத்த செங்கோல் மூங்கில்தடி. அவர்கள் அவருக்குக் கொடுத்த சிங்காசனம் சிலுவை. இவ்வாறு யூதர் தங்கள் இராஜாவைப் புறக்கணித்துத் தள்ளினர். ஆகிலும் அவர் உயிர்த்தெழுந்து பரலோகம் போன்போது பிதாவாகிய தேவனால் அவர் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பெற்றார். தேவ சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உடையவராக, அவர் அங்கேயிருந்து ஆளுகை செய்துகொண்டிருக்கிறார். அவரே தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட **இராஜா.**

இராஜ்யத்தின் குடிகளாயிருக்கும்படி அவர் தெரிந்து கொண்ட மனுஷரோ அறிவீனரும் பலவீனருமாயிருந்தார்கள். அவர் சிலுவையில் அறையப்பட்டபோது பேதுரு மறுதலித்தார். யூதாஸ் துரோகியானான். மற்றவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். அச்சமயத்தில் தேவனுடைய இராஜ்யம் பலமாய் வந்ததில்லை. அவர் பரத்துக்குப்போய் இராஜாவாக பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்தபின், பரிசுத்த ஆவியைச் சீஷர்மேல் பொழிந்தருள அவர்கள் இராஜ்யத்தின் புத்திரரானார்கள். தேவனுடைய இராஜ்யம் பலமாய் அவர்களுக்குள் வந்தது. ராஜ்யத்தின் **குடிகள்** தொகை எருசலேமில் ஐயாயிரமாகப் பெருகிற்று.

அவர் மாம்சத்தில் இருந்த நாள்களில் தேவராஜ்யத்துக்குரிய விதிகளைப் போதித்தார். சீஷர்கள் அவைகளைக் கடைசிவரை அறிந்துகொள்ளவில்லை. இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மை இன்னதென்று அவர்களுக்கு விளங்கவில்லை. அவர் கொடுத்த விதிகளைக் கைக்கொள்ளவும் பெலன் இல்லை. அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, ஆவியானவரால் போதிக்கப்பட்ட

போது எல்லாவற்றையும் அறிந்துகொண்டார்கள். அவைகளைக் கைக்கொண்டு நடக்கப் பெலன் பெற்றார்கள். நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறபடி பின்சந்ததியாருக்குப் பிரயோஜனமாக அவைகளைச் சுவிசேஷமாக எழுதி வைத்தார்கள். இராஜாவாகிய கிறிஸ்துவின் உபதேசங்களே தேவராஜ்யத்தின் **சட்டங்கள்.**

அவர் மரிக்குமுன் இராஜ்யத்தின் **எல்லைக்கு** இடமில்லை. பழைய உடன் படிக்கையே யூதர்களை ஆண்டது. அவர்களுடைய பாரம்பரியங்களும் சடங்காசாரங்களும் பலஸ்தீனா தேசத்தைக் கவர்ந்துகொண்டன. இராஜ்யம் யூதருக்கும் யூதேயாவுக்குமாத்திரம் உரியதென்று நினைத்தார்கள். புறஜாதியாரைக் கிட்டச் சேர்க்கமாட்டார்கள். அதுவே இராஜ்யத்தின் எல்லையாயிருக்குமானால் அது ஒருபோதும் தேவனுடைய இராஜ்யமாகாது. ஒருவன் யூதனாயிருப்பதினிமித்தம் இந்த இராஜ்யத்துக்குரியவனாகமாட்டான். ஒருவன் புறஜாதியானாயிருப்பதினிமித்தம் இராஜ்யத்துக்குப் புறம்பாக்கப்படவுமாட்டான். ஆண்டவர் குறித்த எல்லையோ **உலகம்.** தேவன் தமது குமாரனைத்தந்தருளி **உலகத்தில்** அன்புகூர்ந்தார். அவர் **உலகத்தின்** பாவத்தைச் சுமந்து தீர்த்தார். நல்லவிதை இராஜ்யத்தின் புத்திரர், விதைக்க வேண்டிய நிலம் **உலகம்** என்றார். உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியில் அதாவது உலகத்தில் செய்யப்படுவதாக என்று ஜெபிக்கச்சொன்னார். பரிசுத்தஆவி வரும்போது **உலகத்தைக்** கண்டித்து உணர்த்துவார் என்றார். தமது சீஷரைப் பார்த்து: **பூமியின்** கடைசிபரியந்தம் எனக்குச் சாட்சிகளாயிருங்கள் என்றார்.

இவைகளைக் கவனிக்கும்போது ஆண்டவர் ஒரு தேசத்துக்கும், ஒரு மாகாணத்துக்குமாத்திரம் உரியவரல்ல வென்றும், உலகமே அவரது **எல்லை** என்றும் விளங்குகிறதல்லவா? இது எவ்வளவு ஆச்சரியம்! பார்த்தால் முப்பது வயதுள்ள மனுஷன். பணமில்லை, சேனையில்லை, உயர்ந்த அந்தஸ்தில்லை, உலகம் மேன்மை பாராட்டக்கூடிய ஒன்று மில்லை. அப்படியிருந்தும், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு உண்டு, நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி சொல்லுங்கள், நான் உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாள்களிலும் உங்களோடிருக்கிறேன் என்று சொல்ல வேண்டுமானால், அவரில் ஏதோ ஒரு விசேஷம் இருக்கவேண்டுமே. அவர் தேவகுமாரனாகிய கிறிஸ்து அல்லவென்றால், அவர் சொன்னபிரகாரம் அவருடைய இராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமுழுவதையும் ஆண்டு கொண்டதற்கு இரகசியம் என்ன?

பரலோக இராஜ்யத்திற்கும் தேவனுடைய இராஜ்யத்திற்கும் வித்தியாசமுண்டா? பூலோகம் பரலோகத்துக்கு விரோதம். பூலோகராஜ்யம் மாம்சத்துக்குரியது. அது பேராசை, தன்னலம், பெருமை, அநியாயம், பகை, விரோதத்தால் ஆளப்படுகிறது. அதன் சேனைகள் புறப்பட்டு யுத்தம் செய்வதால் தேசத்தில் அழிவும், பஞ்சமும், கொள்ளை நோய்களும் உண்டாகி ஜனங்கள் சஞ்சலப்பட்டுத் தவிக்க நேரிடும். பரலோக இராஜ்யமோ ஆவிக்குரியது. அது மனுஷரை ஆளும்போது நீதியும் சமாதானமும் சந்தோஷமும் பாக்கியமும் உலகத்துக்கு ஆசீர்வாதமாகக் கிடைக்கும். ஆகையால், பரலோகராஜ்யம் பூலோக இராஜ்யத்துக்கு விரோதமானது. அதுபோலவே, சாத்தானுடைய இராஜ்யம் தேவனுடைய இராஜ்யத்திற்கு விரோதமானது. சாத்தானுடைய ஆளுகையில் ஜனங்கள் அநேகவிதமான பாவங்களால் மேற்கொள்ளப்பட்டு தேவனுக்குச் சத்துருக்களாகித் தங்களை முற்றிலும் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். தேவனுடைய இராஜ்யம் தேவனைப்போல் நல்லது. அந்த இராஜ்யம் மனுஷருக்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சித்து, தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக மாற்றுகிறது. ஆகையால் தேவனுடைய இராஜ்யம் சாத்தானுடைய இராஜ்யத்துக்கு விரோதமானது.

பரலோக ராஜ்யம் என்பது இராஜ்யத்தின் **தன்மையையும்,** தேவனுடைய இராஜ்ஜியம் என்பது அதின் **இராஜாவையும்** காண்பிக்கிறது. இவ்வாறு இரண்டையும் சற்று வித்தியாசப் படுத்திப் பேசினபோதிலும், பரலோக இராஜ்யம் என்பதும் தேவனுடைய இராஜ்யம் என்பதும் ஒன்றுதான். சுவிசேஷகரில் மத்தேயுமாத்திரம் பரலோக இராஜ்யம் என்னும் பதத்தை உபயோகிக்கிறார். தேவன் என்ற நாமத்தை உச்சரிக்கக் கூடாதென்பது யூதர்களின் அபிமானம். மத்தேயு தமது சுவிசேஷத்தை யூதருக்கு எழுதினபடியால் பரலோகராஜ்யம் என்கிற பதத்தை அடிக்கடி உபயோகிக்கிறார். அப்படியிருந்தும் ஆறுமுறை தேவனுடைய இராஜ்யம் என்றும் எழுதியிருக்கிறார். இவை இரண்டும் ஒன்றுதான் என்பதைப் பின்வரும் வசனத்திலும் காணலாம். ''ஐசுவரியவான் **பரலோக இராஜ்யத்தில்** பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும், ஐசுவரியவான் **தேவனுடைய இராஜ்யத்தில்** பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்" *(மத். 19:23,24).* ஒரே விஷயத்தைப் பற்றிப் பேசும்போது இரண்டு பதங்களையும் சேர்த்து உபயோகித்திருப்பதால் இரண்டும் ஒன்றுதான் என்பது நிச்சயமாகிறது. மேலும் பரத்தில் ஆணையிடுகிறவன், பரத்திலுள்ள தேவன்பேரிலும் ஆணையிடுகிறான் என்று இரட்சகர் சொன்னார். தேவனில்லாத

பரலோகமில்லை. ஆகையால் தேவனுடைய இராஜ்யமே பரலோக இராஜ்யம்; பரலோக இராஜ்யமே தேவனுடைய இராஜ்யம்.

தேவனுடைய இராஜ்யத்துக்கும் திருச்சபைக்கும் வித்தியாமுண்டா? தேவ ஆவியால் மறுபிறப்படைந்து, தேவ ஆளுகையைத் தங்கள் உள்ளத்தில் பெற்ற சங்கமே திருச்சபையாகும். இச்சபையை பெந்தெகொஸ்தே நாளில் காண்கிறோம். தேவராஜ்யம் சபையை உண்டாக்கினதேயல்லாமல், சபை தேவராஜ்யத்தை உண்டாக்கவில்லை. உலகத்தில் சபைகள் ஏராளமாகப் பெருகியிருக்கின்றன. இவைகளில் ஒரு சபையை எடுத்து இதுதான் தேவனுடைய இராஜ்யம் என்று சொல்ல முடியாது. அவைகள் ஆராதனையில், ஆளுகையில், கொள்கைகளில், அபிப்பிராயங்களில், சட்டவிதிகளில், ஊழியங்களில், சிலாக்கியங்களில், சிட்சை செய்வதில் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கின்றன. ஒருவராயிருந்து சர்வ அதிகாரம் செலுத்தும்போது அது **போப்பு** சபையாகும். அளவுக்குட்பட்ட அதிகாரம் செலுத்தும்போது அது **பிஷப்** சபையாகும். தெரிந்தெடுக்கப்பட்ட சிலரால் ஆளப்படும்போது அது **மூப்பர்** சபையாகும். அங்கங்கள் எல்லாரும் சேர்ந்து ஆளும் போது அது **ஜனங்கள்** சபையாகும். இவ்வாறு உலகத்திலுள்ள சபைகளில் வித்தியாசங்களைக் காண்கிறோம். அவரவர் தங்களுக்கு நலமாகத் தோன்றினபடி சபையின் காரியங்களை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

ஆனால், தேவனுடைய இராஜ்யத்தை ஆளுகை செய்ய எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை. அந்த இராஜ்யத்தின் விதிகள் தேவனால் கொடுக்கப்படுகின்றன. மனுஷர் அவைகளைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, அவைகளுக்குப் பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டுமே தவிர, அவைகளை மாற்றக் குறைக்க அதிகாரமில்லை. தேவனுடைய இராஜ்யம் மனுஷருடைய சடங்குகளுக்குள்ளும் சட்டங்களுக் குள்ளும் அடங்கினதல்ல. அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் வரும் சந்தோஷமுமாகயிருக்கிறது. கிறிஸ்துவை இராஜாவாக ஏற்றுக்கொண்டு அவருடைய ஆளுகைக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடப்பவர் யாவரும் அந்த இராஜ்யத்தின் புத்திரராவார்கள். யாருக்குள் தேவனுடைய ராஜ்யம் பிரவேசிக்கிறதோ, அவர்களே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள். ஏதோ ஒரு சபையில் அங்கங்களாக இருப்பதினால்மாத்திரம் தேவராஜ்யத்தின் புத்திரர் என்று நினைக்கக்கூடாது. ஒரு சபையில் இல்லாததினாலே தேவராஜ்யத்துக்குப் புறம்பானவர்கள் என்று சொல்லவும் கூடாது. ராஜா தம்முடையவர்கள் இன்னாரென்று அறிவார். "அநேகர்

கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்'' என்று ஆண்டவர் சொன்ன இரகசியத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் (மத். 8:11). ஆகையால், ஏதோ ஒரு சபையைக்குறித்து: இதுதான் தேவனுடைய இராஜ்யம் என்று சொல்லாமல், எல்லாச் சபைகளிலும் ஆவியினால் மறுபிறப்படைந்து, தேவ சித்தத்தின்படி பிழைக்கிறவர்களே ராஜ்யத்தின் புத்திரராவார்கள் என்று சொல்லுகிறோம். அதுவே தேவனுடைய இராஜ்யம். இப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரிகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' என்று பேதுரு சொன்னார் (1. பேதுரு 2:9). தேவன் இஸ்ரவேலை ஆண்டு வந்த ஆதிகாலத்தில், அவர் அவர்களைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளும் இவைகளே.

இவ்வாறு இராஜ்யம் சபையை உண்டாக்க, சபை ராஜ்யத்துக்காக உலகத்தில் இருக்கிறது. கிறிஸ்துவாகிய இராஜா தமது சரீரமாகிய சபையிலிருந்து கிரியை செய்கிறார். இராஜ்யத்தின் **வளர்ச்சியைக்** குறித்து ஆண்டவர் போதித்த உவமைகள் அருமையானவை, தேவராஜ்யம் இருதயத்தில் அற்பமாகத் தோன்றி, அது படிப்படியாக வளர்ந்து, அந்த மனுஷனையும் ஆசீர்வதித்துப் பின்னும் அநேகரையும் ஆசீர்வதிக்கிறது. விதைக்கிறவனுடைய உவமையைப் பார்ப்போம். அவன் நிலத்தில் விதைகளை விதைக்குங்காலம் எவ்வளவு அற்பமாயிருந்தாலும், சீக்கிரத்தில் மிகுதியான பலனைக் காணலாம் என்கிற நம்பிக்கை அவனுக்குள் இருக்கிறது. விதைப்பது கொஞ்சம் அறுப்பதோ ஏராளம். பின்னும் அதைக் கடுகு விதையின் வளர்ச்சிக்கு ஒப்பிட்டார். சில தேசங்களில் கடுகுச்செடி பத்தடி உயரம் வளருகிறது. பறவைகள் சந்தோஷமாக அதன் கிளைகளில் தங்குகின்றன. ஆண்டவரும் அவர் பிரஸ்தாபித்த இராஜ்யமும் ஆரம்பத்தில் அற்பமாகத் தோன்றியிருக்கலாம். அவர் பிறப்பு வளர்ப்பு எவ்வளவு தாழ்வானது! அவர் சீஷர் எவ்வளவு சாதாரண மனுஷர்! இன்று உலகத்தில் நாம் காண்கிறதென்ன? தேவராஜ்யம் என்னும் மரம் உலகத்தில் எவ்வளவு விசாலமாகப் படர்ந்திருக்கிறது! அது போலவே புளித்தமாவில் கொஞ்சம் எடுத்து மூன்றுபடி மாவில் அடக்கிவைக்கும்போது அது கண்ணுக்குத் தெரியாமல், சத்தமில்லாமல், மறைவாகப் பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்கிவிடும் என்றார். சிலர் இந்த மூன்றுபடி மாவை

யூதேயா, சமாரியா, பூமியின் கடைசிபரியந்தம் என்றும் சொல்லுவார்கள். மறைவாகப் பரவிக்கொண்டுபோகும் இந்த வல்லமையை, உலகத்தில் பற்பல ஜாதிகள், பாஷைக்காரருக்குள், சுவிசேஷத்தால் உண்டாயிருக்கும் மாறுதலால் காண்கிறோம். இவ்வாறு தேவராஜ்யம் வளர்ந்து பெருகும்போது, ஒரு துக்கமான விஷயத்தையும் ஆண்டவர் முன்னதாகத் தெரிவிக்கிறார். அதாவது, கோதுமையும் களையும் ஒன்றாக வளருமென்றும், இடையில் பிடுங்காதபடி **அறுப்புக்காலம்** வரும்வரை இரண்டையும் வளரவிடவேண்டியதென்றும் சொல்லுகிறார். உலகத்தின் சீரைச் சரியாய்க் கண்டவர் அவரே. உலகம் வரவரச் சீர்ப்பட்டு வருகிறதா, வரவரக் கெட்டுப்போகிறதா என்பது நமக்குள்ளே அடிக்கடி கேட்கப்படுகிற கேள்வி. அவரவர் தமக்குத் தோன்றுகிற பிரகாரம் இதற்கு உத்தரவு கொடுப்பார்கள். ஒரு வகுப்பாருக்கு உலகம் வரவரக் கெட்டுப்போவதுபோல் தோன்றும். மற்றவர்களுக்கு உலகம் வரவரச் சீர்ப்பட்டு வருவதாகத் தோன்றும். ஆண்டவரோ தீமை அதிகமாக வளருகிறதென்றாவது, நன்மை அதிகமாக வளருகிறதென்றாவது சொல்லாமல் இரண்டும் பக்கத்துக்குப் பக்கம் வளருகிறதாகச் சொல்லுகிறார். நன்மை வளருகிறது போலவே தீமையும் வளருகிறது. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாகப் போராடுகின்றன. அறுப்புக்காலம் வரும்வரை இப்படியே இருக்கும். "நல்ல விதை இராஜ்யத்தின் புத்திரர் களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர். அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு, அறுப்பு உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள் மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய இராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமம் செய்கிறவர்களையும் சேர்த்து அக்கினிச்சூளையிலே போடுவார்கள்" இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும் என்றார் *(மத். 13:37-50)*.

ஆகையால், திருச்சபையின் சாட்சியால் உலகம் முழுவதும் ரட்சிக்கப்படும் என்றும், எல்லாரும் இராஜ்யத்தின் புத்திரர் ஆவார்கள் என்றும் நினைக்க இடமில்லை. சபையின் சாட்சியால் திரளான மனுஷர் இராஜ்யத்தின் புத்திரராகக்கூடும். **உலகம்** முழுவதும் இரட்சிக்கப்படமாட்டாது. இராஜ்யத்தின் சுவிசேஷம் சகல ஜனங்களுக்கும் **சாட்சியாக** அறிவிக்கப்படும், அப்பொழுது முடிவு உண்டாகும் என்று இரட்சகர் சொன்னார். அதுதான் இக்காலத்தில் நடந்துவரும் ஊழியம். இந்த ஒழுங்கை மறந்து உலகத்தைச் சகோதர ஐக்கியத்துக்குக் கொண்டுவரவும், இராஜ்யங்களுக்குள் சமாதானக் கட்டை உண்டாக்கவும், ஜனங்களுக்குள் இருக்கிற குறைகளையும் அதிருப்தியையும் நீக்கி மனரம்மியமான காலத்தை உண்டாக்கவும் அநேகர் எழும்பியிருக்கிறார்கள். இதுவே அவர்கள் பார்வையில்

தேவராஜ்யத்தின் ஆளுகை. இதற்காகச் செலவாகும் பணம் எவ்வளவு! எழுதப்படும் புஸ்தகங்கள் எத்தனை! செய்யப்படும் உபந்நியாசங்கள் எத்தனை! உலகத்தில் சமாதானத்தை நாடுவதும், ஜாதிகளுடைய பல குறைவுகளை நீக்கி அவர்களைச் சந்தோஷமான நிலைமையில் வைப்பதும், உலக இராஜ்யங்களுக்குள் ஐக்கியம் உண்டாகும்படி பிரயாசப்படுவதும் புகழத்தக்க காரியமே. ஆகிலும் இது ஒருக்காலும் தேவனுடைய இராஜ்யமாகாது. இது பலிக்கவுமாட்டாது. புறம்பான சீர்த்திருத்தங்கள் தேவராஜ்யமாவதில்லை. தேவராஜ்யம் மறைவாக உள்ளத்தில் பிரவேசித்து வெளியே பலன்கொடுக்குமேயல்லாமல், வெளியிலிருந்து உள்ளத்தில் பிரவேசிப்பதில்லை. தேவன் தமது ஆவியினால் திடீரென, ஆச்சரியமானவிதமாய், மின்னலைப்போல உள்ளத்தில் ஸ்தாபிக்கும் இராஜ்யத்தை, மனுஷருடைய புறம்பான முயற்சிகளும் பிரமாணங்களும் உண்டாக்கமாட்டாது. உலக சீர்திருத்தம், உலக ஐக்கியம், உலக சமாதானம் என்பதே இச்சீர்திருத்தக்காரர் முக்கியமாகப் பேசும் விஷயங்கள். தேவராஜ்யம் மனுக்குலமனைத்துக்கும் உரியதென்றும், மனுமக்கள் படுங் கஷ்டங்களை நிவிர்த்திக்க சபைகளால் கூடவில்லையென்றும் சொல்லி இப்பரோபகாரிகள் **மனுக்குல ஈடேற்றம்** என்னும் ஊழியத்தில் ஊக்கத்துடன் பிரவேசித்திருக்கிறார்கள். இக்குறைவுகள் எல்லாம் ஆண்டவர் அறியாத காரியமல்ல. பிழைக்கும் வழி கற்றுக்கொடுக்க அவர் வந்தவரல்ல. ஆகிலும், குறைவுகள் நீங்கி நாம் சமாதானத்துடன் பிழைக்கும் இரகசியத்தை அவர் சொல்லாதிருக்கவுமில்லை. "தேவனுடைய இராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்று சொன்னவர் அவரே (*லூக்கா 12:31*). அவருடைய இராஜ்யம் தங்கள் இருதயங்களில் பிரவேசித்து, அவருடைய சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடக்கும்போது, தேசங்கள் ஆசீர்வதிக்கப்படும் ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். மனுமக்களிடத்தில் சமாதானம் நிலவும், அப்படிச் செய்யாதிருக்கும்போது, மனுஷர் எடுத்துக்கொள்ளும் சகல முயற்சிகளும் புல்லுக்குப் பாய்ச்சிய நீர் போலாகும்.

கிறிஸ்து திரும்பவரும் இரண்டாம் வருகையை இவர்கள் நம்புகிறதில்லை. உலகத்தில் நடக்கும் **விசேஷித்த சம்பவங்களே** கிறிஸ்துவின் வருகையென இவர்கள் அர்த்தப்படுத்துகிறார்கள். பெந்தெகொஸ்தே நாள், எருசலேம் அழிவு, சுவிசேஷ பிரபல்யம், விசுவாசிகளின் மரணம், பயங்கரமான யுத்தங்கள், இவைபோன்ற சம்பவங்களே கர்த்தரின் வருகை என்கிறார்கள். பெந்தெகொஸ்தே நாளில் அவர் ஆவியின்மூலமாய் வந்து விசுவாசிகளின் உள்ளத்தில் தமது இராஜ்யத்தை ஸ்தாபித்தது மெய்யே. ஆனால், கண்கள் காணத்தக்கதாக அவர் வரவில்லையே. சுவிசேஷ

பிரபல்யத்தில் அவர் கூடயிருந்து கிரியை செய்கிறது மெய்தான். அதுவும் அவர் ஆவியின் சமுகமேயன்றி பிரத்தியட்சமான சமுகமல்லவே. விசுவாசிகளின் மரணத்தில் அவர்கள் கிறிஸ்துவிடம் போகிறார்களேயல்லாது, அவர் அவர்களோடு தங்கவருகிறதில்லையே. ஸ்தேவான் மரித்தபோது, ஸ்தேவான் கிறிஸ்துவிடம் போனாரேயன்றி, கிறிஸ்து ஸ்தேவானிடம் வரவில்லை. சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவிடம்போக விரும்புகிறேன் என்று பவுல் தமது மரணத்தைக் குறித்துச் சொல்லவில்லையா? பூமியில் நடக்கும் மற்றச்சம்பவங்கள் அவருடைய பயங்கரமான செயல்களே. இவைகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகுமா? அவர் தமது மகிமையோடும், பிதாவின் மகிமையோடும், பிரகாசமான தேவதூதர்களோடும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடும் எப்பொழுது வந்தார்? அவ்வாறு அவரைக்கண்டவர்கள் யார்? அவர் பரத்துக்குப் போன சமயத்தில் இரண்டு தூதர்கள் சீஷரைப் பார்த்து: இந்த இயேசுவானவரே வருவார், எப்படிப்போனாரோ அப்படியே வருவார், கண்கள் காணப்போனவர் கண்கள் காணவருவார் என்று சொன்னது எப்போது நிறைவேறிற்று? மரித்த பரிசுத்தவான்களும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் மறுரூபமாக்கப்பட்டு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது எப்போது? பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவர் வருவதைக்கண்டு எப்போது புலம்பினார்கள்? கர்த்தர் தமது வருகையின் சம்பந்தமாகச் சொன்ன பலகாரியங்கள் இன்னும் நிறைவேறவில்லையே. அப்படியிருக்க, அவர் வந்தாயிற்று என்று எப்படிச் சொல்லலாம்? திட்டமான அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்போது, அவர் வருகையை நமது இஷ்டம்போல் அர்த்தப்படுத்துவது எப்படி?

அவர் எருசலேமுக்குப் போகையில் தேவனுடைய இராஜ்யம் **சீக்கிரமாய்** வெளிப்படும் என்று ஜனங்கள் நினைத்தபடியால், பிரபுவாகிய ஒருவன் இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்திற்குப் போனான் என்னும் உவமையை அவர்களுக்குச் சொன்னார் (லூக்கா 19:12). அவ்வுவமையில் பிரபு இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும்படி தூரதேசம் போனதும், போகையில் தன் ஊழியக்காரரை அழைத்து திரவியம் கொடுத்து, தான் திரும்பிவருமளவும் வியாபாரம் பண்ணச் சொன்னதும், அவன் இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது, திரவியத்தைச் சரியாய் உபயோகித்த ஊழியர்களைப் பற்பல பட்டணங்களின்மேல் அதிகாரிகளாக்கினதும், தான் இராஜாவாயிருக்க மனதில்லாத வர்களை அவன் அழித்துப் போட்டதும் சொல்லப் பட்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்துவே அந்தப் **பிரபு.** அவர் போன தூரதேசம் பரலோகம். அவர் பிதாவிடமிருந்து இராஜ்யத்தைப்

பெற்றுத் திரும்பக் **காலம்செல்லும்,** அவர் நமக்குக் கொடுத்துப்போன திரவியம் சுவிசேஷ கிருபைகளே. அவர் திரும்பவரும்போது நாம் பெற்றுக்கொண்ட கிருபைகளை எவ்விதமாக உபயோகித்தோம் எனபதைக் கணக்குக் கேட்பார். புதைத்து வைத்தவர்கள் உள்ளவைகளையும் இழந்துபோவார்கள். அவரை இராஜாவாக ஏற்றுக்கொள்ள மனமற்றவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இதுவே உவமையின் சுருக்கம்.

''இராஜ்யம் **சீக்கிரம்** வெளிப்படும்'' என்று அவர் நினைத்தபடியால் இப்படிச் சொன்னார். கிறிஸ்து பரலோகத்துக்குப் போய் பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கிறார். பிதா அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கி மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டினார். தீர்க்கதரிசனங்கள் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டியது *(அப். 2:35, 36; 3:21).* இதற்கிடையில், ஆவிக்குரிய இராஜ்யமாகிய அவர் சபையின் மூலமாக, சுவிசேஷ வசனம் எங்கும் கூறப்பட்டு இராஜ்யத்தின் புத்திரருடைய தொகை நிறைவாகிக்கொண்டு வருகிறது. இராஜா வருவது நிச்சயம். என்றைக்கு வருவாரென்று நமக்குத்தெரியாது. நாள் குறிக்கவுங்கூடாது. இந்த உவமையில் குறிக்கப்பட்ட **நீண்ட காலத்தை** யோசிக்காமல், ஆதிச்சபையார் அவரைக் காணும் வாஞ்சையால் தங்கள் காலத்திலேயே அவர் திரும்பிவருவதாக நினைத்தார்கள். இது இருவித தீமைகளை உண்டாக்கினது. என் எஜமான் வர நாள்செல்லும் என்று சொல்லிக் குடிக்கவும் உடன்வேலைக்காரரை அடிக்கவும் தலைப்பட்டவனைப்போல, அவர் வருகையை நாள்குறித்து எதிர்பார்த்த வைராக்கியமுள்ள கிறிஸ்தவர்கள், உடனே அவர் வராததால் முற்றிலும் அதற்கு நேர் விரோதமாக நடக்க நேரிட்டது. மற்றவர்கள் முற்றிலும் அவிசுவாசிகளாகி ''அவர் வருவார் என்கிற வாக்குத்தத்தம் எங்கே?'' வருகை என்பதே இல்லை என்று பேசவும் இடமாயிற்று.

கர்த்தர் சீக்கிரமாக வந்துவிடுவார் என்று நம்பின தெசலோனிக்கே சபையாரில் சிலர், வேலைசெய்வதை நிறுத்தி மேலே நோக்கின கண்ணாயிருந்தார்கள். இப்படிப்பட்ட தப்பிதங்களைக் கடிந்துகொண்டு பவுலும் பேதுருவும் எழுதியிருக்கிறார்கள். நாள்குறிப்பதும் சோர்ந்துபோவதும் சரியல்லவென்று சொன்னார்கள். அவர் வருவார் என்பதை ஆதிச்சபையார் நம்பி எதிர்பார்த்ததைப் பார்க்கிலும் இரண்டாயிரம் வருஷத்துக்குப் பின்னுள்ள நாம் அதிக வாஞ்சையோடு எதிர்பார்க்கவேண்டியதே நியாயம். அப்போது அவர் வருகை சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்போது அது நமக்கு அதிகச் சமீபமாக இருப்பது நிச்சயம். ஆனால், தேதி குறிப்பவர்களை நம்பி, இதோ இங்கே, அதோ அங்கே என்று சொல்லுகிறவர்களைப் பின்பற்றுவோமானால் நிச்சயமாகவே

சபைக்கு முன்பாகவும் உலகத்துக்கு முன்பாகவும் வெட்கத்திற் குள்ளாவோம். அமெரிக்காவில் சமீபத்தில் ஒரு கூட்டத்தார் ஒரு நாளைக் குறித்து, கர்த்தர் ஆகாயத்தில் வருகிறார் என்று சொல்லி, ஆண்களும் பெண்களும் வெண்ணுடை தரித்து, மலைச்சிகர மேறிக் காத்திருந்தபோது, அவர் வராததால் மகாதுக்கத்தோடு இறங்கினார்களாம். மலையிலிருந்து இறங்கினாலும் பரவாயில்லை, விசுவாசத்திலிருந்து இறங்கி விட்டால் எவ்வளவு பரிதாபம்!

இராஜா திரும்பி வருங்காலம் சமீபம்! திடீரென்று அவர் ஆகாயத்தில் தோன்றுவார். அவருடைய ஆரவாரமும், பிரதான தூதனுடைய சத்தமும், தேவ எக்காளமும் வானத்தில் தொனிக்கும். கர்த்தருக்குள் மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அச்சமயத்தில் உயிரோடிருக்கிற தேவனுடைய பிள்ளைகள் மறுரூபமாக்கப்பட்டு, அவர்களோடு சேர்ந்து, கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பின்பு ஆயிரமாயிரமான பரிசுத்தவான் களோடு பூமிக்கு இரங்கிவருவார். அவருடைய நீதியுள்ள அரசாட்சியைக் குறித்தும், இஸ்ரவேலர் சேர்த்துக்கொள்ளப் படுவதைக்குறித்தும் இங்கே எழுதப்போனால் நீண்டு போகும். வெளிப்படுத்தினவிசேஷத்தில் காணவும். இந்தக் கிருபையின் இராஜ்ய காலத்தில் நாம் எவ்வளவாக கர்த்தரோடு இடைவிடாமல் நெருங்கி ஜீவித்தாலும் நமது மாம்சம் நமக்கு இடறலாயிருப்பது நிச்சயம். இச்சரீரத்தில் நாம் குடியிருக்கிறவரை நாம் பெருமூச்சுவிட்டுத் தவிப்பது கர்த்தருக்குத் தெரியும். நமது சரீரம் மாற்றப்படும்வரை நமது இரட்சிப்பு பூரணமுள்ளதல்ல. கிறிஸ்து **வருவதற்குமுன்** நமது சரீரம் மாற்றப்படுவதுமில்லை. இந்த அறைகுறையான நிலைமையில் ஆண்டவர் நம்மை விட்டுவிடவுமாட்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" *(பிலி. 3:21)*. "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" *(1 யோவான் 3:2)*.

இவ்வாறு மறுரூபமடைந்த திரளான பரிசுத்தவான்களோடு அவர் பூமியில் அரசாளுங்காலம் எவ்வளவு பாக்கியமானது! ஆவியினால் மறைவாக அரசாட்சி செய்த இராஜா, தமது மகிமையின் சிங்காசனத்திலிருந்து கண்கள் காண அரசாளுவார். அவருடைய பரிசுத்தவான்களும் அவரோடுகூட அரசாளுவார்கள். முந்தின இக்கட்டுகள் யாவும் மறக்கப்பட்டுப்போகும். சாத்தானும் அவனைச் சேர்ந்தவர்களும் அகற்றப்பட்டுச் சகல அக்கிரமங்களும் பாவங்களும் நீக்கப்பட்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். இப்போது கிறிஸ்துவுக்குள் நாம் புதுச் சிருஷ்டிகள் என்றெண்ணப்

பட்டாலும் சகலமும் பூரணமாய்ப் புதிதாக்கப்படும் காலம் அதுவே. "பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின" என்னும் பாக்கியத்தை அப்போது பூரனமாய்க் காண்போம். சகல தீமைகளையும் அவர் பரிகரித்து மகிமையாய் அரசாட்சி செய்தபின், பிதாவாகிய தேவனுக்கு இராஜ்யத்தை ஒப்புவிப்பார். ஆதியிலிருந்ததுபோலவே "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்." அவருடைய அன்புள்ள ஆளுகை பிள்ளைகளுக்கு மகா ஆனந்த பாக்கியமாயிருக்கும். தேவன் தமது பிள்ளைகளோடிருப்பார். அவர்கள் அவர் அன்பான முகத்தை இடைவிடாது தரிசிப்பார்கள். ''வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் இராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய இராஜ்யம் நித்திய இராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்" *(தானி. 7:27.)*

கர்த்தராகிய இராஜாவின் வருகை **சமீபம்.** "வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்திலே வருவார்." அவர் வருகை நிச்சயமென்று எதிர்பார்ப்போமானால் நமது ஜீவியமும், ஊழியமும், சகல காரியங்களும் மாறுதலடையும், அவர் வருகை தங்கள் காலத்திலிருக்கும் என்று எதிர்பார்த்த ஆதிக் கிறிஸ்தவர்களும், அதுபோல் வாஞ்சையோடு எதிர்பார்த்த பிற்காலக் கிறிஸ்தவர்களும் உலகத்தைவிட்டு முற்றிலும் பிரிந்து, கர்த்தருக்கென்றே பிழைத்து, சகல துன்பங்களையும் பொறுமையோடு சகித்துக்கொண்டது ஆச்சரியமல்ல. அவர்கள் அவ்வாறு எதிர்பார்த்தது தப்பிதமல்ல. இன்ன நேரம் உங்கள் எஜமான் வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் என்று கர்த்தர் சொன்னதும் அதுவே. நாம் கர்த்தரின் வருகையை எதிர்பார்க்கும்போது நமது ஜீவியமும் அவ்விதமாகவே மாறும். கர்த்தர் வராமல் உலகத்தின் காரியங்கள் சரிப்படாது.

சுவிசேஷ ஊழியமே சகல தீமைகளையும் வேரறுத்து பாக்கியமான காலத்தை மனுமக்களுக்குக் கொண்டுவரமாட்டாது. கர்த்தரின் வருகையை நம்பாத மனுஷர் அவ்வாறு போதிக்கிறார்கள். அது ஒருபோதும் ஆகாது. எவ்வளவாகப் பிரயாசப்பட்டாலும், எத்தனைபேர் கிறிஸ்தவர்களானாலும், இராஜ்யங்களுக்குள் சமாதானமும் ஐக்கியமும் ஒருவேளை உண்டானாலும், உலகம் எவ்வளவு நாகரீகமும் அறிவும் அடைந்தாலும், அவைகளாலே மனுஷருடைய சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போகுமா? கண்ணீர்யாவும் துடைக்கப்படுமா? பசி தாகம் அற்றுப்போகுமா? வேதனைகளும் மரணமும் நீங்கிவிடுமா? பஞ்சம், கொள்ளைநோய், இடிமுழக்கம், பூமியதிர்ச்சி முதலான தீங்குகள் பூமியைவிட்டு விலகுமா? ஐயோ, இதெல்லாம் என்ன பேச்சு? ஆசீர்வாத கர்த்தர் வருமட்டும் பூமிக்கு ஆசீர்வாதம்

ஏது? இராஜாதிஇராஜா வருமளவும் சத்துருக்கள் அழிவதேது? ஜீவாதிபதி வருமளவும் பாதாளமும் மரணமும் மேற்கொள்ளப்படுவதேது? சிருஷ்டிகர் வராமல் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாவதேது? நியாயாதிபதி வெளிப்படாமல் இராஜ்யத்தின் புத்திரரும் பொல்லாங்கனுடைய புத்திரரும் பிரிக்கப்படுவதேது? பாவத்தைச் சுமந்து தீர்த்தவர் தரிசனமாகாமல் பாவம் இல்லாமற்போவதேது? இவர்கள் சொல்லுகிறபடி உலகம் படிப்படியாகச் சீர்ப்படப்போகிறதில்லை. மேற்கூறிய தீங்குகளை அகற்ற உலக ஞானமெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஆகாது. மனுஷன் தன் உள்ளத்தைச் சரிப்படுத்தக்கூடாமல் தத்தளிக்கும்போது உலகத்தை எங்கே இரட்சிக்கப் போகிறான்? "மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்." கிறிஸ்துவின் வருகையில் அப்படியே ஆகும், ஆமென்.

இராஜாவின் வருகை **நிச்சயம்**. வருகையில்லாத கிறிஸ்துமார்க்கம புதிய ஏற்பாட்டில் இல்லை. புதிய ஏற்பாட்டிலுள்ள 260 அதிகாரங்களில் 318 தரம் அவர் வருகையைப்பற்றி வாசிக்கிறோம். கிறிஸ்துவே தமது வருகையைப்பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறார். வருகையைப்பற்றிய வாக்கியங்களை புதிய ஏற்பாட்டிலிருந்து நீக்கிவிட்டால் அது வெகு விநோதமான புஸ்தகமாயிருக்கும். வருகையின் நம்பிக்கையை நமது சபையைவிட்டு எடுத்துவிட்டால் சபைக் கொள்கைகள் வெகு பரிதாபமாயிருக்கும். முதலாவது, கர்த்தருடைய ஜெபத்திலே "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" என்பதை நீக்கவேண்டும். விசுவாசப் பிரமாணத்தில் அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டதோடு நிறுத்த வேண்டும். இராபோஜன ஆராதனையில் "கர்த்தர் வருமளவும்" என்பதை வாசிக்கக்கூடாது. அடக்க ஆராதனையில் "பலவீனமாய் விதைக்கப்படும் பல முள்ளதாய் எழுந்திருக்கும், கனவீனமாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" என்று வாசிப்பதை நிறுத்தவேண்டும். கர்த்தர் வருமளவும் நமது சகோதரனுடைய சரீரத்தைப் பூமிக்கு ஒப்புக் கொடுக்கிறோம் என்று சொல்லவுங்கூடாது. ஏதோ ஒரு ஜெபத்தைச் சொல்லிப் புதைக்கலாம். அந்த ஜெபத்தையுந்தான் ஏன் சொல்லவேண்டும்? அடக்கமான ஆளை இனிக் காணப்போகிறதில்லையே. கர்த்தர் திரும்ப வருகிறதில்லையென்றால், இவ்வளவு குழப்பமும் இதற்கு மேலாகவும் உண்டாகும். வேதத்தில் ஒரு சத்தியத்தை மறுத்து இலேசாய்த் தப்பிக்கொள்ளலாம் என்று நினைப்பது பிசகு.

அவர் வருகைக்கு நாம் **ஆயத்தமாயிருப்பது** எப்படி? இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் யாராகிலும் சொன்னால் அவர்களைப் பின்பற்றக்கூடாது. யாராகிலும் தேதி

குறித்தால் அதை நம்பவுங்கூடாது. வருகையை எதிர்பார்த்து மற்றத் தேசங்களில் ஜனங்கள் மோசம்போனதுபோலவும் நமது தேசத்திலும் நடந்திருக்கின்றன. அவர் வரப்போகிறார் என்று கடற்கரையோரமாய்க் காத்திருந்தவர்கள் பலர். இவர்களுடைய விசுவாசத்துக்கும், தேவபக்திக்கும், கிறிஸ்துவின் மீதுள்ள அன்புக்கும் விரோதமாக நாம் ஒன்றும் சொல்வதில்லை. ஆனால், அவர்கள் தேதி குறித்துத் தவறிப்போனதே விசனம். அவருடைய வருகைக்காக நாம் இடம்விட்டு இடம் போகவேண்டியதில்லை. வேலைகள் யாவையும் நிறுத்தி வானத்தை அண்ணாந்து பார்க்கவேண்டியதில்லை. கர்த்தர் நம்மை அழைத்து ஏற்படுத்தின ஸ்தானத்தில் இருக்கவேண்டும். சகல பாவங்களையும் விட்டுத் திரும்பி இருதயத்தையும் ஜீவியத்தையும் கிறிஸ்து இராஜாவுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் சித்தம்போல் சகல விஷயத்திலும் அவருக்குப் பிரியமாய் நடக்கவேண்டும். வேத வாசிப்பிலும், பக்திக்குரிய புஸ்தகங்களை படிப்பதிலும், ஜெபத்திலும் நிலைத்திருக்கவேண்டும்.

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து நமது வார்த்தைகள், சம்பாஷணைகள், பிரசங்கங்கள் தேவனுக்கு மகிமையும் பிறருக்கு ஆசீர்வாதமுமாயிருக்கப் பார்க்கவேண்டும். ஒருவருக்கும் யாதொரு தீமையும் கருதாமல் எல்லாருக்கும் கூடியவரை நன்மையே செய்யவேண்டும். கிறிஸ்துவின் அன்பினால் ஏவப்பட்டு மற்றவர்களை அவருக்காக ஆதாயம் செய்ய வேண்டும். நமது வேலைகள் பல ஸ்தலத்திலும், பலவிதமாகவும் இருக்கலாம். நாம் எங்கே வேலை செய்தாலும், எவர்கள் மத்தியில் வேலைசெய்தாலும் கிறிஸ்துவின் சமுகத்தில் ஜீவித்து, அவருடைய உத்தம சாட்சிகளாக நடந்து கொள்ளவேண்டும். இதுபோலவே குடும்பத்திலும் தனி ஜீவியத்திலும் நமது உத்தமம் விளங்கவேண்டும். கிறிஸ்துவை எப்பொழுதும் தியானித்து அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டும். **இவ்வாறு நாம் நடந்துகொள்வதே** கர்த்தரின் வருகைக்கு ஆயத்தம். நாம் வீட்டிலிருக்கும்போதோ, வழிநடக்கும்போதோ, வேலை செய்துகொண்டிருக்கும்போதோ, வீட்டுக்குத் திரும்பும்போதோ, சாப்பிடும்போதோ, பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருக்கும் போதோ, ரெயிலிலோ, கப்பலிலோ, இரவிலோ, பகலிலோ, அவர் எப்போது வரவேண்டுமானாலும் வரட்டும். நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருப்போம். "இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" *(வெளி. 22:20).*

19
பாவிகளின் சிநேகிதன்
The Friend of sinners

நமதாண்டவர் ஒன்றரை வருஷம் கலிலேயாவில் தங்கி ஊழியம் செய்தார். திரளான ஜனங்கள் அவர்மேல் பிரியங்கொண்டு அவரைப் பின்சென்றனர். அவர் திருவசனத்தைக் கேட்கக் கூடினவர்கள் ஏராளம். அவரால் தங்கள் வியாதி நீங்கிக் குணமானவர்கள் ஏராளம். அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. பலஸ்தீனா நாடு முழுவதுமே அவரைத் தங்கள் இராஜாவாக ஏற்றுக்கொள்வதுபோல் தோன்றினது. என்றாலும், வருஷத்தின் முடிவில் இந்த நம்பிக்கை அபத்தமாயிற்று. கலிலேயாவில் விதைத்த விதை கற்பாறையில் விதைத்ததற்கு ஒப்பானது. நன்மைபெற்ற மனுஷருக்குள் நன்றி கேடு காணப்பட்டது. அப்படியிருந்தும், பின்னும் ஆறுமாதக் காலம் அவர் அங்கேயே தங்கி ஊழியம் செய்தார். ஆறாம் மாதமுடிவிலே கலிலேயாவை விட்டு நீங்கினார்.

இந்தத் துக்கமான மாறுதலுக்குக் காரணம் என்ன? பொது ஜனங்கள் எக்காலத்திலும் தங்கள் அதிகாரிகளின் அபிப்பிராயத்தை நோக்குவது இயல்பு. அதிகாரிகளுக்குள் சதுசேயர், ஏரோதியர், வேதபாரகர், பரிசேயர் எனப் பல வகுப்பாருண்டு. இவர்களில் சதுசேயரும் ஏரோதியரும் ஆண்டவரைக் கவனிக்கவில்லை. அவர்களுக்கு ஐசுவரியமும் உல்லாசமும் இராஜாங்கத்தார் தயவும் கிடைத்தால்போதும். வேதபாரகர் பரிசேயரோ மார்க்க அபிமானிகள். ஆசாரம் கொள்கைகளில் அதிகக் கவனமும் வைராக்கியமும் உள்ளவர்கள். ஆண்டவருடைய ஊழியத்தில் பிரியங்கொண்டார்கள். அவருடைய உபதேசத்தைக் கேட்கப் பின்தொடர்ந்தார்கள். அவர் மேசியாவாயிருக்கலாம் என்னும் நம்பிக்கை அவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. இவ்வகுப்பாரின் தொகை ஆறாயிரம். மார்க்க விஷயங்களில் இவர்கள் தீர்மானமே ஜனங்கள் தீர்மானம். இவர் ஆரம்பத்தில் கிறிஸ்துவைப்

பின்சென்று, அவர் வசனத்துக்குச் செவிகொடுத்து, அவர் மீது மதிப்புற்றிருந்தபோதிலும், வரவர அவரைக் குற்றப்படுத்தவும் கடைசியாகக் கொலை செய்யவும் முற்பட்டார்கள். பாரம்பரியங்களால் அவர்கள் கட்டுண்டு சத்தியத்தை அறியக்கூடாமற்போனார்கள். பாவத்தால் கண் குருடாகி, பரிசுத்தத்தை வெறுத்தார்கள். உள்ளத்தில் உண்மையற்று மாயத்தால் நிறைந்தார்கள். அதிகாரப் பெருமையால் இறுமாப்படைந்து அளவற்ற கிருபையை அசட்டை செய்தார்கள். உலக ஆளுகையை எதிர்பார்த்து ஆவிக்குரிய இராஜனைப் புறக்கணித்தார்கள். ஆரம்பத்தில் ஆண்டவரை மதித்துவந்த போதிலும், வரவர அவருடைய உபதேசமும் கிரியைகளும் தங்களுக்கே ஆபத்தாக முடிவதுபோல் தோன்றினது. ஆகையால், அதுமுதல் அவரிடத்தில் குற்றங்கண்டு பிடிக்கும் வேலையில் துணிந்தார்கள். அவருக்கு விரோதமான காரியங்களைப் பிரஸ்தாபித்து, ஜனங்கள் அவரை விட்டு விலகும்படி செய்தார்கள். இவர் "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்" என்பது அவர்கள் சாட்டின குற்றங்களில் ஒன்று.

இது தோற்றத்தின்படி செய்த தீர்ப்பேயன்றி நீதியின்படியான தீர்ப்பல்ல. ஆகிலும், சத்துருக்கள் அவருக்குக் கொடுத்த இந்தப்பேர் அவருக்குத் தகுந்த பெயரே. பாவிகளான நமக்கு அது தங்கப் பெயரே. அவர் **பாவிகளின் சிநேகிதன்** என்பது மெய்தான். பாவிகளைத் தேடி இரட்சிக்கவே அவர் வந்தார். பரிசேயரான நீதிமான்களைப்போல் அவர் அவர்களைத் தள்ளிவிட்டவரல்ல. அந்தப் பாவிகளைப் பார்க்கிலும் தாங்கள் எவ்வளவு பெரும்பாவிகள் என்பதை இவர்கள் அறியார்கள். கிறிஸ்து உலகத்தில் வந்தபோது பாவிகள் என்று தீழ்ப்பாக எண்ணப்பட்டவர்கள் இரக்கம் பெற்றார்கள். ஆயக்காரரும் பாவிகளும் வேசிகளும் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க இவர்களுக்கு முந்திக் கொண்டார்கள். இவர்களோ ஆரம்பத்தில் அவரை மதித்து, சற்று பொறுத்து அவரைப் பகைத்து, முடிவில் அவரைக் கொலை செய்தார்கள். அவர்கள் அவரை ஆரம்பத்தில் மதித்ததும் சரியான நோக்கத்தோடு அல்ல. உலக இராஜ்யத்தை மீட்டுக்கொடுப்பார் என்றெண்ணிப் பின்பு ஏமாந்தார்கள். அவ்வாறு ஏமாந்துபோனதே அவரைப் பகைத்ததற்குக் காரணம். அவர்கள் மதிப்பையும் கொலை பாதகத்தையும் விட்டு, அவரைக் குற்றப்படுத்தினதைமாத்திரம் இப்பொழுது சிந்திப்போம். அவர்மேல் அவர்களுக்குப் பிரியமற்றுப்போன காலமுதல், அவருடைய பேச்சிலோ நடக்கையிலோ குற்றங்கண்டுபிடிக்க வேண்டுமென்பது அவர்களுடைய தீர்மானம், கிறிஸ்துவை இன்னாரென்று அறிந்த நமக்கு அவர்கள் அவரைக் குற்றப்படுத்தினது அநியாயமாகத் தோன்றும். அவரை இன்னாரென்று அறியாத அவர்களுக்கு அவருடைய செய்கைகள்

தப்பிதமாகவே தோன்றிற்று. அவர்கள் அவரைத் **தோற்றத்தின்படியே** தீர்ப்புச் செய்தார்கள்.

ஆண்டவரைப் **பாவிகளின் சிநேகிதன்** என்று பரிசேயர் சொன்னதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் அவர்கள் கண்ட காரியங்கள் காரணமாயிருந்தன. முதலாவது சந்தர்ப்பம் (லூக்கா 7:34,50). சீமோன் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயன் அவரைத் தன்னோடு போஜனம்பண்ணும்படி அழைத்தான். தன் சுயபெருமைக்காக அழைத்தானோ, ஒருவேளை இவர் இஸ்ரவேலுக்கு இராஜ்யத்தை மீட்டுக்கொடுப்பார் என்று அழைத்தானோ, அல்லது எல்லாராலும் புகழ்ச்சிபெற்ற போதகரென்று அழைத்தானோ, அல்லது ஒரு வேடிக்கைக்காகத் தான் அழைத்தானோ தெரியாது. ஆனால் அவன் அவரை இன்னாரென்று அறிந்து அவர்மீதுள்ள அன்பினால் அழைத்தவனல்ல என்பது நிச்சயம். ஏனென்றால், அவன் ஆண்டவரை உபசரித்த மாதிரியைப் பார்க்கும்போது, நல்ல நோக்கத்தோடு அவன் அவரை அழைத்ததாகத் தெரியவில்லை. சாதாரணமாக விருந்தினருக்குச் செய்யவேண்டிய மரியாதைகளை அவன் கவனிக்கவில்லை. அவர் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. அவரை முத்தஞ்செய்யவில்லை. அவர் தலைக்கு எண்ணை பூசவில்லை. ஆண்டவருக்கு அவன் அளித்த விருந்து **அன்பற்ற** விருந்து. என்றாலும், அன்புள்ள இரட்சகர் அவன் அழைப்பை ஏற்றுக்கொண்டு விருந்தில் உட்கார்ந்தார்.

அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது திடீரென ஒரு **ஸ்திரீ** உள்ளே வந்தாள். அவள் முன் ஒருக்காலும் அந்த வீட்டுக்குள் பிரவேசித்தவள் அல்ல; பிரவேசிக்கவும் தகாது. இச்சமயத்தில் அவள் தைரியமாக வந்த காரணமென்ன? யாரைத் தேடி அங்கே வந்தாள்? ''அவர் பரிசேயன் வீட்டில் பந்தியிருக்கிறதை அவள் **அறிந்து**'' அங்கே வந்ததாக **லூக்கா** சொல்லுகிறார். ஒருவரும் அவளை அழைத்துக்கொண்டு வரவில்லை. இரட்சகர் சற்று முந்தி வந்தார். அவள் சற்று பிந்தி வந்தாள். யாரென்றும் எப்படிப்பட்டவளென்றும் பரிசேயனுக்குத் தெரியும். அவன் பார்வையில் அவள் படுபாவி. பட்டணம் அறிந்த பாவி. அவள் பாவ ஜீவியத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துப் பாழானவள். ஊரிலிருந்த துன்மார்க்கருக்கு உறைவிடமானவள். சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு நாசமானவள். யோக்கியர் அவளைப் பார்க்கமாட்டார்கள்: அவளைக் கண்டாலே விலகிப்போவார்கள். அப்படிப்பட்டவள் தன் வீட்டுக்குள் வந்ததைப் பரிசேயன் கண்டபோது அவனுக் குண்டான எரிச்சல் கொஞ்சமல்ல. ஆகிலும், ஆண்டவர் சமுகத்தில் அவன் வாய் திறக்கக்கூடவில்லை. அவள் ஏன் வந்தாள் என்பதை அறிய பரிசேயன் காத்திருந்தான்.

அந்த ஸ்திரீ கிறிஸ்துவின் அருகில் வந்து, அவர் பாதங்களைப் பிடித்துத் தன் கண்ணீரால் அப்பாதங்களை நனைத்து, தன் அழகிய கூந்தலால் துடைத்து, அப்பாதங்களை ஓயாமல் முத்தமிட்டு, தான் கொண்டுவந்திருந்த விலை உயர்ந்த பரிமள தைலத்தைப் பூசினாள். தைலத்தின் நற்கந்தம் வீட்டை நிரப்பினது. இவைகளைப் பார்த்த பரிசேயனுக்கு என்னமாயிருந்திருக்கும்? பந்தியிருப்பவர் இன்னாரென்று அவனுக்குத் தெரியாது. அவர் ஒரு தீர்க்கதரிசி என்று மாத்திரம் எண்ணியிருந்தான். அந்த ஸ்திரீ எப்படிப்பட்டவள் என்பதோ அவனுக்கு நன்றாய்த் தெரியும். கெட்டுப்போன அந்த ஸ்திரீ ஒரு மனுஷனைத் தேடிவந்து, அவர் பாதத்தைப் பிடித்துக்கொண்டு, பாசக்கண்ணீர் சிந்துவதும், கூந்தலை அவிழ்த்து விழவிடுவதும், ஆவலோடு முத்தமிடுவதும், பரிமள தைலம் பூசுவதுமான இத்தகாத செய்கைகளை அவன் கண்டபோது: "இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும், எப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார், இவள் பாவியாயிருக்கிறாளே'' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அவர் தீர்க்கதரிசி என்று அவன் எண்ணியிருந்த மதிப்பும் இச்சமயத்தில் போய்விட்டது. இவர் பரிசுத்தராயிருந்தால் இவள் தம்மைத் தொட இடங் கொடுப்பாரா? "இனம் இனத்தோடே" என்ற பிரகாரம், இவர் பாவியான ஸ்திரீக்கு இவ்வளவு இடங்கொடுத்தபடியால், இவரும் **பாவியாகத்தான்** இருக்கவேண்டும் என்பது அவனுடைய தீர்மானம். அவன் பார்வையில் இந்தத் தீர்மானம் நியாயம் போலவே இருந்தது. உலகமும் இன்று அதுபோலவே தீர்க்கிறது.

இரண்டாவது சந்தர்ப்பம் (லூக்கா 14). ஒரு ஓய்வுநாளிலே பரிசேயருக்குத் தலைவனான ஒருவன் வீட்டிலே அவர் போஜனம்பண்ணும்படி போயிருந்தார். ஆண்டவரை விருந்துக்கு அழைத்த இந்த மனுஷன் பரிசேயருக்குள் விசேஷித்தவன். அவன் உயர்ந்த அந்தஸ்துள்ளவன். ஜெப ஆலயப் பிரதானியாகவோ, அல்லது சனதரீம் சங்கத்தைச் சேர்ந்தவனாகவோ இருந்திருக்கலாம். இவன் ஆண்டவரை விருந்துக்கு அழைத்த நோக்கம் தெரியவில்லை. ஒருவேளை, இவ்வாறு அவருக்கு மரியாதை செய்வது நல்லதென்று அழைத்திருக்கலாம். ஆண்டவர் விருந்தில் பேசின வார்த்தைகளைக் கவனிக்கும்போது அவனுடைய தகாத நோக்கம் வெளிப்படுகிறது. ஏனென்றால், அவன் ஐசுவரியவான்களையும் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களையும் அழைத்ததில் தனக்குப் பெருமையைத் தேடினான். ஆண்டவர் அவனைக் கண்டித்து: நீ இப்படிச் செய்யாமல் ஏழைகளை அழைப்பாயாக; அப்போது உனக்குப் பலனுண்டு என்று சொன்னார். மேலும், பந்தியிருந்தவர்கள் முதன்மையான ஆசனங்களை விரும்பி அவைகளில்

உட்கார்ந்திருந்ததைக் கண்டு அவர்களுக்குத் தாழ்மையைப் போதித்தார். இதற்குள்ளாக **சகல ஆயக்காரரும் பாவிகளும்** அவருடைய வசனத்தைக் கேட்கும்படி ஆவலோடு அவரிடத்தில் கூடிவந்தார்கள் (லூக்கா 15). பரிசேயர் அவர்களை முழு வெறுப்பாய் வெறுத்தார்கள். அவர்களைச் சபிக்கப் பட்டவர்கள் என்று சொன்னார்கள். சுய நீதிக்காரரான பரிசேயரிடத்தில் அந்த ஜனங்கள் எவ்வித அனுதாபத்தையும் கண்டதில்லை. மேய்ப்பன் இல்லாத ஆடுகள்போன்ற இவர்களுக்காக அருமை இரட்சகர் பரிதாபங்கொண்டார். அவருடைய அளவற்ற அன்பும் கிருபையும் அவர்கள் தம்மை வாஞ்சையோடு தேடிவரும்படி செய்தது. அதுமாத்திரமல்ல, தங்களை அவமதித்த பரிசேயருடைய பெருமையையும் சுயநீதியையும் மாயத்தையும் அவர் கண்டித்துப் பேசினது அவர்களுக்குச் சந்தோஷமாயிருந்தது. அவர்களுக்கும் இவருக்கும் ஐக்கியமில்லை என்பதையும் கண்டுகொண்டார்கள். ஆகையால், பரிசேயரால் வெறுத்துத் தள்ளிவிடப்பட்ட இவர்கள் அன்புநிறைந்த இரட்சகரைப் பற்றிக்கொண்டது இயல்பே. அலைந்து திரியும் ஆடுகள் தங்கள் மேய்ப்பன் சத்தங்கேட்டு ஓடிவருவதுபோல, சகல ஆயக்காரரும் பாவிகளும் ஆண்டவரிடத்தில் வந்துசேர்ந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் அவரிடம் வந்தபோது, ஆண்டவர் அவர்களைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். அவர்களோடு ஒன்றாயிருந்து சாப்பிட்டார். இதைக் கண்ட பரிசேயர் ஆச்சரியப்பட்டு, இவருடைய மேலான உபதேசத்தைக் கேட்டோமே, இவரைத் தீர்க்கதரிசியாகவும் எண்ணினோமே, இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறாரே என்று முறுமுறுத்தார்கள். **ஏற்றுக்கொண்டு** என்ற வார்த்தை நாம் விருந்தாளிகளை ஏற்றுக்கொள்ளுகிறதுபோல் அல்ல. இவருக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமின்றி அவர்களைத் **தம்மோடு ஒன்றாகச்** சேர்த்துக்கொண்டார் என்று அர்த்தம். தங்களால் அவமதிக்கப்பட்ட பாவிகளை அவர் இவ்வளவு அன்பாய், அந்நியோந்நியமாய், சிநேகமாய் ஏற்றுக்கொண்டது பரிசேயருக்குச் சகிக்கக்கூடாத எரிச்சல். ஆண்டவரோ தம்மண்டை வந்த பாவிகளை வெறுக்கவில்லை, கோபிக்கவில்லை, தள்ளிப்போடவில்லை. என்னைத் தொடாதபடி தூரமாய் நில்லுங்கள் என்றும் சொல்லவில்லை. பாவிகளான அந்தப் புருஷரையும் ஸ்திரீகளையும் தமக்கு அருமையான **பொக்கிஷமாகச்** சேர்த்துக்கொண்டார். தாம் அவர்களுக்குச் சொந்தமானவராக நடந்துகொண்டார். "ஒரே சிறகுள்ள பறவைகள் ஒன்றாய் பறக்கும்" என்னும் பழமொழிப்படி, அவரும் அவர்களும் இவ்வளவு அந்நியோந்நியமாக இருப்பதைக்கண்ட பரிசேயர், அவரை ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்று குற்றப்படுத்திப் பேசினது அவர்கள் பார்வையில் நியாயமே.

மூன்றாவது சந்தர்ப்பம் (லூக்கா 19). ஆண்டவர் எரிகோவில் பிரவேசித்து அதன் வழியாக நடந்துபோகையில் ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த ஒரு மனுஷன் அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க ஆசைகொண்டான். **சகேயு** குள்ளனாயிருந்தபடியால் ஜனக் கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல் முன்னாக ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் பிரயாசத்துடன் ஏறி இலை மறைவில் உட்கார்ந்துகொண்டு கீழே பார்த்த கண்ணாயிருந்தான். யாரும் தன்னைப் பார்க்காமல் தான் அவரைக் கண்டால்போதும் என்பது அவன் ஆசை. நடந்துவந்த ஆண்டவர் மரத்தின் அடியில் நின்று மேலே பார்த்தார். பின்சென்ற ஜனங்களுக்கு இரகசியம் தெரியாது. அவர் மேலே பார்த்ததுமன்றி, மறைந்திருந்தவன் பேரைச் சொல்லி சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். சகேயுவுக்கு உண்டான ஆச்சரியமும் சந்தோஷமும் கொஞ்சமல்ல. அவன் சீக்கிரமாய் இறங்கி அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான். இதைக்கண்ட சத்துருக்கள் "இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார்" என்று முறுமுறுத்தார்கள்.

சகேயு ஐசுவரியவான் என்பதற்குச் சந்தேகமில்லை. அவன் ஐசுவரியவனான வழியோ அநியாயம். ஆயம் வாங்குகிறவர்களை யூதர்கள் முழுப்பகையாய்ப் பகைத்தார்கள். அவர்களை முழு வெறுப்பாய் வெறுத்தார்கள். ரோம இராஜாங்கத்தார் தாங்கள் ஆளுகை செய்த மாகாணங்களில் தீர்வை வாங்கும்படி ஆள்களை ஏற்படுத்தியிருந்தார்கள். இவர்கள் வருஷத்துக்கு இவ்வளவு வசூல்செய்து இராஜாங்கத்துக்குக் கட்டுவோம் என்று குத்தகையாக எடுத்துக்கொள்வார்கள். வசூல் செய்யும் தொகை குறைந்துபோனால் பாக்கியை அவர்களே கட்டவேண்டும். குறித்த தொகைக்கு அதிகம் வசூலானால் அவர்களே எடுத்துக் கொள்ளலாம். ஆதலால், பணக்காரரே இவ்வேலையை ஏற்றுக் கொள்வார்கள். குத்தகை எடுத்த தனவான்கள் தாங்களே பணவசூல் செய்யாமல், கையின்கீழ் **ஆயம் வாங்கும்** உத்தியோகஸ்தரை ஏற்படுத்துவார்கள். இவர்களுக்கே **ஆயக்காரர்** என்று பேர். மத்தேயுவும் சகேயுவும் இவ்வேலையைச் செய்தார்கள். இவர்களைப்போல் இன்னும் அநேகர் உண்டு. குத்தகை எடுத்த முதலாளிகளோடு ஜனங்களுக்குப் போராட்டமில்லை. அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆயக்காரர் **சுய** ஜனங்களாயிருந்தும், தங்களிடத்தில் அநியாயமாய்த் தீர்வை வாங்கினபடியால் இவர்களை ஜனங்கள் பகைத்தார்கள். தங்கள் மூட்டை முடுச்சுகளை அவிழ்த்துப் பரிசோதனை செய்தது எவ்வளவேனும் ஜனங்களுக்குப் பிரியமில்லை. இவர்கள் நன்றாய் பிழைப்பதற்கு நியாயமாக வரி சேர்த்தாலேபோதும். ஆனால்,

பொருளாசையால் வெறிகொண்டு ஜனங்களைப் பலவிதத்திலும் கஷ்டப்படுத்தினதால் எல்லாராலும் பகைக்கப் பட்டார்கள்.

அந்நியரான ரோமர் தங்களை ஆளுகிறதே யூதருக்கு வெறுப்பாயிருக்க, தங்கள் மனுஷர் அவர்களுக்கு உதவியாயிருந்து இவ்வேலையை நடத்தினது மகா சஞ்சலமாயிருந்தது. மேலும், ஜனங்களிடத்திலிருந்து அவர்கள் அநியாயமாகப் பணவசூல் செய்தது சகிக்கக்கூடாத வேதனையாயிருந்தது. ஆகையால், **பரிசேயர்** ஆயக்காரரை அருவருத்து அவர்களை மற்றப் பாவிகளோடு ஒன்றாக்கினார்கள். அவர்களை மாம்சத்தில் வெளிப்பட்ட மிருகங்கள் என்றும், அதிகாரம் பெற்ற திருடர் என்றும் அழைப்பார்கள். கொலைபாதகர், திருடர், **ஆயக்காரர்,** என்பது இரபிமார் திட்டிப் பேசுகிற வரிசை, அவர்களுடைய காசுப்பெட்டியைத் தொடமாட்டார்கள். அவர்கள் பணம் அசுத்தம். தர்மமாகவோ, கூலியாகவோ அவர்களுடைய பணத்தை யூதர் வாங்கமாட்டார்கள். ஆயக்காரனுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளப்படாது. ஆயக்காரனுக்கு ஆணையிட்டவன் அவ்வாணைக்குக் கட்டுப்பட்டவனல்ல. தேவாராதனைகளில் ஆயக்காரனைச் சேர்க்கமாட்டார்கள். அவன் பாவத்துக்கு மீட்பில்லை. ஆயம் வாங்குகிற தொழில் இவ்வளவு அருவருப்பானதால் அவ்வேலையை ஏற்றுக்கொள்வது கஷ்டந்தான். அப்படியிருந்தும் இந்தச் சங்கடமான ஊழியத்தை யூதன் ஒருவன் செய்யவேண்டுமானால், பொது அபிப்பிராயத்தை விட பொருள் சேர்ப்பதே அவன் பிரதான நோக்கமா யிருக்கவேண்டும். மரியாதையைப் பார்க்கிலும் வரி சேர்ப்பதையே அவன் இச்சிக்கவேண்டும். குணத்தையல்ல பணத்தையே அவன் நாடவேண்டும்.

ஆயக்காரருக்குத் தலைவனான சகேயுவை ஜனங்கள் பாவியென்று தீர்த்தது இதனாலேயே. இவன் ஐசுவரியவனா யிருந்தது மெய்யானால் எவ்வளவோ அநியாயமாகத்தான் பொருள் சேர்த்திருக்கவேண்டும். சகேயு செய்த அநியாயம் ஜனங்கள் யாவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சண்டாளன் வீட்டில் ஆண்டவர் தங்கப்போனதை அவர்கள் கண்டபோது, தீண்டத்தகாத தோஷமுள்ளவன் வீட்டில் இவர் பிரவேசித்த தென்ன என்று பிரமித்தார்கள். அவரைக் குற்றப்படுத்தும்படி தீர்மானித்த பரிசேயருடைய தப்பெண்ணம் இப்பொழுது பூரணப்பட்டது. இது என்ன? துன்மார்க்கமான ஸ்திரீ தன் கால்களைப் பிடிக்கவும் முத்தஞ்செய்யவும் இடங்கொடுக்கிறார். பாவிகளான புருஷர் ஸ்திரீகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு அந்நியோந்நியமாய் உறவாடுகிறார். இவை போதாதென்று இந்தப் பரமசண்டாளன் சகேயு வீட்டுக்குள் போய் அவன் உபசரணையை ஏற்றுக் கொள்கிறார். இப்படிச் செய்கிற மனுஷன்

அவர்களைப் போலதானே இருக்கவேண்டுமென முடிவு செய்தார்கள்.

அவர்கள் சாட்டின குற்றம் அவர்களுக்கு நியாயமாகவே யிருந்தது. அவர்கள் பொய்யாகவல்ல, தங்கள் கண்களால் கண்டபடியே அவரைக் குற்றப்படுத்தினார்கள். அவ்வாறு குற்றப்படுத்தினது ஒருக்காலும் சரியல்லவென்று நாம் சொல்லுவோம். அவர்கள் நிலைமையில் நாமிருந்திருந்தால் அவர்களைப்பார்க்கிலும் அதிகமாய் அவரைக் குற்றப்படுத்தி யிருப்போம். அசுத்தத்தைத் தொட்டவன் தீட்டுப்படாதிருப்பது எப்படி? கெட்டுப்போன ஸ்திரீ தன்னைப் பாசத்துடன் தழுவ இடங்கொடுத்து கறைப்படாதிருப்பவன் யார்? பாவிகளான மனுஷரோடு அந்நியோந்நியமாக உறவாடிக் கெட்டுப்போகா திருப்பவன் யார்? அநியாயக்காரன் வீட்டில் தங்கி அவனோடு சாப்பிட்டு அவன் பாவத்துக்குத் தப்பினவன் யார்? "உன் சிநேகிதனைச் சொல்லு உன் குணத்தைச் சொல்லுகிறேன்" என்றபடி உலகத்தில் நல்லவனோடு சேர்ந்தவன் நல்லவன் என்று எண்ணப்படுகிறான். துன்மார்க்கனோடு கூடினவன் துன்மார்க்கன் என்று எண்ணப்படுகிறான். அய்யோக்கியரை விட்டு யோக்கியர் விலகிக்கொள்வது இந்தப் பயத்தினாலேதான். ஒருவனுக்குப் பெண்கொடுக்க விரும்பின வீட்டார் அவனைக்குறித்து ஒரு பெரியவரிடம் விசாரிக்க, அந்த வாலிபனை அறிந்த அவர் அவர்களைப்பார்த்து: அவனைப்பற்றி எனக்குச் சந்தேகம் இருக்கிறது என்றார். எப்படி என்று கேட்க அவர் அவன் சேர்க்கை எனக்குத் திருப்தியில்லை, அவன் அயோக்கியர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறான். ஆகாத மனுஷர் வீட்டுக்குப்போய் அங்கே தங்குகிறான் என்றார். அவர் சொன்னது சரியே. தாம் கண்டதையே சொன்னார். அவர் அப்படிச் சொன்னது உலக இயற்கையும் நியாயமுமேயன்றி அநியாயம் ஒன்றுமில்லை. பரிசேயர் நமதாண்டவர்மேல் சாட்டின குற்றமும் இது போலவே. இதுகாரணத்தாலேயே அவர்கள் அவரை "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்" என்று குற்றப்படுத்தினார்கள்.

இந்த மூன்று சந்தர்ப்பங்களில் பரிசேயர் நமதாண்டவர் மேல் சாட்டின குற்றங்கள் **வாஸ்தவத்தில் நியாயந்தானா வென்று** விசாரிக்கவேண்டியது நமது கடமை. அவர்கள் அவரைப் பாவிகளுக்குச் சிநேகிதன் என்று சொன்னபோது, அவர் அவர்களுடைய பாவங்களுக்கு உடன்பட்டவர் என்பதே அவர்கள் கருத்து. அது எவ்வளவு தூரம் உண்மை என்பதைப் பரிசோதிக்கவேண்டும். பாவியான ஸ்திரீ தம்மைத் தொட்டதால் அவர் கறைப்பட்டது உண்மையா? அவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு புசித்ததால் அவருடைய ஜீவியம்

கெட்டது உண்மையா? ஆயக்காரன் வீட்டில் அவர் தங்கினதால் அவன் அநியாயச் சம்பாத்தியத்தில் பங்குபெற்றாரா? அல்லது அநியாயமான காரியத்துக்கு அனுசரணையாயிருந்தாரா? இவைகள் உண்மையானால் அவர்கள் சாட்டின குற்றங்களும் உண்மைதான்.

"இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் **அறிந்திருப்பார்,** இவள் பாவியாயிருக்கிறாளே" என்பது பரிசேயனான சீமோன் சாட்டின குற்றம். இதிலே தன்னைப் பரிசுத்தனாகவும், அவளைப் படுபாவியாகவும், ஆண்டவரைப் பாவி தம்மைத் தொட இடங்கொடுத்த பாவியாகவும் பாவிக்கிறான். இதுவே பரிசேயனுடைய தீர்ப்பு. ஆண்டவருடைய தீர்ப்பைப் பார்ப்போம்.

சீமோனே, இவள் யார் எனக்குத் தெரியாதென்று நீ நினைக்கிறாய். இவள் யார் என்றும் எப்படிப்பட்டவள் என்றும் நான் அறிவேன். உன் **எண்ணங்களையும்** நான் அறிவேன். இவளைப் பாவியென்றும் உன்னை நீதிமான் என்றும் நீ நினைக்கிறாய். அவள் பாவியென்பது மெய்தான். அவள் சோதனை எவ்வளவு பலமுள்ளதென்றும், அவள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு எவ்வளவாய்த் தன்னைக் கெடுத்துக் கொண்டாளென்றும் எனக்குத் தெரியும். ஆகிலும், என் வார்த்தைகளை அவள் கேட்ட நாள்முதல் தன் தீய நடக்கையின் தோஷத்தை நினைத்துத் துயரமடைந்து, தன்னைப் பாவக்கட்டிலிருந்து விடுவித்து இரட்சிக்க **வல்லவர்** நானே என்று உணர்ந்து, என்னைச் சந்திக்கும்படி அவள் ஆவல் கொண்டிருந்ததும் எனக்குத் தெரியும். தன் பாவபாரத்தால் நொறுங்குண்டு, தன்னை மறந்து, உன்னையும் மறந்து, இங்கே என் பாதத்தில் வந்து விழுந்தாள். நான் இவளை அறியவில்லை என்று நினைக்காதே. நீ இவளுடைய முந்தின ஜீவியத்தை நினைத்து இவளைக் குற்றப்படுத்துகிறாய். நான் இன்னாரென்று அறியாமல் என்னையும் குற்றப்படுத்துகிறாய். இந்நேரத்தில் அவள் இருதய நிலைமை என்னவென்பதை நீ அறியாய். நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. இவளோ தன் கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தனக்கு அலங்காரமும் மகிமையுமான தலைமயிரால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை. இவளோ என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள். நீ என் **தலைக்குச் சாதாரணமான எண்ணெயாயினும்** பூசவில்லை. இவளோ என் **பாதங்களுக்குப் பரிமளதைலம் பூசினாள்.** உங்கள் இரண்டு பேரில் என்னில் அன்புவைத்தது யாரென்றும் எனக்குச் சொல். இவள் அல்லவா என்னிடத்தில் மிகவும்

அன்புகூர்ந்தவள். ஆகையால், நான் உனக்குச் சொல்லுகிறேன், இவள் செய்த அநேக பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டன. நான் உன் வீட்டுக்குள் வந்ததினால் நீ கண்ட **பலன்** என்ன என்றார். அந்நேரமே அவள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இரட்சிப்படைந்தவளாய்ச் சமாதான ஜீவியத்திற்குள் பிரவேசித்தாள்.

பாவி தம்மைத் தொட இடங்கொடுத்தவர் கறைப்படாதிருப்பது எப்படி என்பது பரிசேயனுடைய எண்ணம். அவர் குஷ்டரோகத்தைத் தொட்டுத் தீட்டுப்படாமல், குஷ்டரோகத்தைப் பறக்கடிக்கும் தீரன் என்பதை அவன் அறியான். அவர் சமுகத்தில் பாவம் பறந்ததேயன்றி அவர் பாவியானதில்லை. அவர் பரிசுத்தம் பாவத்தை மேற்கொண்டதேயல்லாமல் பாவம் அவரை மேற்கொண்டதில்லை. அவரைத் தொட்ட தோஷிகள் சுத்தராக மாற்றப்பட்டார்களேயன்றி அவர் தோஷியாகவில்லை. ஆண்டவர் செய்த தீர்ப்பே நீதியான தீர்ப்பு. மனுஷர்முன் நீதிமான் என்றெண்ணப்பட்ட பரிசேயன் பாவியானான். பாவியென்று தள்ளப்பட்ட ஸ்திரீயோ இரட்சகரானார். அவரை இன்னாரென்று அறியாததினாலேயே அவரைக் குற்றப்படுத்தினார்கள் என்பது "பாவங்களை மன்னிக்கிற இவன் யார்?" என்று பந்தியிருந்தவர்கள் கேட்டதால் விளங்குகிறது.

சகல ஆயக்காரரையும் பாவிகளையும் அவர் ஏற்றுக்கொண்டு அவர்களோடு போஜனம்பண்ணின நோக்கமும் இதுபோலவே. அவர் அவர்களைத் தமக்குச் சொந்தமாக ஏற்றுக்கொண்டார். அவர்களைப்பார்த்து மனதுருகி அவர்களில் அன்புகூர்ந்தார். தம்மை அவர்களுக்குச் சொந்தமாக்கினார். யாதொரு பயமின்றி அவர்கள் தம்மிடத்தில் வரவும் தம்மோடு தங்கவும் இடங்கொடுத்தார். இப்படிப்பட்ட பாவிகளான புருஷரோடும் ஸ்திரீகளோடும் அவர் அந்நியோந்நியமாயிருந்ததால், புறம்பே பார்க்கிறவர்களுக்கு அவரும் அவர்களைப் போன்றவர் என்று பேச இடமாயிற்று. அவர் அவர்களுக்கு சிநேகிதன் என்று இகழ்ச்சியாய்ப் பேசினார்கள். வாஸ்தவத்தில் நடந்ததென்ன? பாவிகளை ஏற்றுக்கொண்டதால் அவர்கள் பாவத்தால் அவர் இழுப்புண்டாரோ? அல்லது, அவர் அவர்களை இழுத்துக்கொண்டாரோ? பாவம் பரிசுத்தத்தை மேற்கொண்டதோ? அல்லது, பரிசுத்தம் பாவத்தை மேற்கொண்டதோ? இதை விசாரிக்காமல் தீர்ப்புச்செய்வது பிசகு. தோற்றத்தின்படி தீர்ப்புரைப்பது மோசம். நம்மைப்போல் அவரும் இருப்பார் என்று நினைப்பது அறிவீனம். நாம் துன்மார்க்கரோடு சஞ்சரிக்கப் பயப்படுகிறோம். நம்மை நாம் நம்போம். பொல்லாதவர்களால் நாம் இலேசாய் இழுப்புண்டு போகக்கூடும். நரம் பக்திமான்களாயிருந்தாலும் நாம் அவர்களை

ரட்சிப்போமோ அல்லது அவர்கள் நம்மைப் பட்சிப்பார்களோ தெரியாது. இந்தப் பயத்தினால் பலவீன விசுவாசிகள் பொல்லாதவர்களைக்கண்டு விலகிக் கொள்ளுகிறார்கள். பலமுள்ள விசுவாசிகளும் அதிகமாய் நெருங்காமல் யூகமாய் நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களோடு சகவாசம் பண்ணினால் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்கிற பயமும் நமக்குண்டு.

இப்படிப்பட்ட யாதொரு பயமும் ஆண்டவரிடத்தில் இல்லை. "நெருப்பில் புழு பற்றாது" என்றபடி பரிசுத்தமாகிய அந்த அக்கினிக்குமுன் சகல கேடுகளும் எரிக்கப்பட்டுப்போகும். தமது ஐக்கியத்தால் பாவிகளுக்குக் கிடைக்கும் இரட்சிப்பை அறிந்த அன்பர், மற்றவர்களுடைய அபிப்பிராயத்தைக் குறித்துக் கொஞ்சமும் பயப்படவில்லை. தாம் நிற்கும் உறுதியான நிலையை அறிந்த ஆண்டவர், பிறர் கூறும் குற்றங்களுக்கு அஞ்சவில்லை. பாவிகளோடு அவர் சம்பந்தப்பட்டதால் அவர்கள் அசுத்தம் நீங்கினதேயன்றி அவர் அசுத்தரானதில்லை, விழுந்தோர் அவரைப் பிடித்து எழுந்து நின்றார்களேயன்றி அவர் விழுந்துபோகவில்லை இந்த இரகசியம் பரிசேயருக்குத் தெரியாது. இவரே பரிசுத்த புருஷன்! யார் ஒருவன் கிறிஸ்துவை வாஞ்சையோடு தேடி அவரைச் சந்திக்கிறானோ அவன் எப்பேர்ப்பட்ட பாவியாயிருந்தாலும் நிச்சயமாகவே மாற்றப்பட்டுப் புதுமனுஷனாகிறான். இது பழைய நாள் கதையல்ல. இன்றைக்கும் நடக்கிற உண்மையான காரியம். இது **உண்மையல்லவென்றால்** கிறிஸ்து மார்க்கம் தேவமார்க்கமல்ல. கிறிஸ்தவர்கள் யாவரும் வஞ்சிக்கப்பட்டவர்களே.

அவர் சகேயுவின் வீட்டில் பிரவேசித்தார். அங்கே நடந்ததென்ன? ஆண்டவரே சொல்லட்டும். "இன்றைக்கு இந்த வீட்டுக்கு **இரட்சிப்பு** வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார். நீண்டகாலப் பாவி நிமிஷத்தில் இரட்சிக்கப்பட்டான். ஆண்டவர் அவனுக்குச் செய்த பிரசங்கங்கள் எத்தனை? அவன் இதற்குமுன் அவரைக் கண்டதில்லை. அப்படியிருக்க இந்த அதிசய மாறுதல் எப்படி வந்தது? பரிசுத்த இரட்சகரின் சமுகம் பாவியை உணர்த்திற்று. உள்ளம் உடைந்து வாய்விட்டுப் புலம்புகிறான். அவன் கர்த்தரைப் பார்த்து: "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாக வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்." "அபராதத்தின் முதலோடே **ஐந்தில் ஒரு பங்கைக்** கூட்டித் தான் குற்றஞ் செய்தவனுக்குச் செலுத்தக்கடவன்" என்பது

மோசேயின் பிரமாணம். தான் அநியாயமாய் வாங்கினவர்களுக்கு **நாலத்தனையாகத்** திரும்பச் செலுத்துவேன் என்பது சகேயுவின் பிரமாணம். அவனைக் கெடுத்த பொருளாசையும் அநியாயச் சம்பாத்தியமும் உடைபட்டன. ஏழைகளுக்கு நற்காலம் பிறந்தது. அநியாயம் செய்யப்பட்டவர்களுக்கு நாலத்தனை திரும்பக் கிடைத்தது. அநேக சகேயு வீடுகளில் கிறிஸ்து பிரவேசிக்காததால் உலகம் வறுமையிலிருக்கிறது. ஆண்டவர் அவன் வீட்டுக்குள் வந்ததால் அவன் **ஏழையும் ஐசுவரியவானுமானான்.** உலக ஆஸ்தி அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டது. பரம பொக்கிஷம் அவன் வீட்டுக்குள் வந்தது. இரட்சகன் அவனுடைய அநியாயச் சம்பாத்தியத்தில் பங்கு பெறும்படி அவனிடத்தில் போகவில்லை. யார் யாரிடத்தில் அவன் கொள்ளையடித்தானோ அச்சம்பாத்தியம் அவர்களிடம் போய்ச் சேரும்படி செய்தார். தந்நயக்காரனாயிராமல் அநேக ஏழைகளைக் காப்பாற்றும் உபகாரியாக்கினார். அதுதான் அவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கப்போன **குற்றம்.** கிறிஸ்து நம்மைப்போன்ற ஒரு மனுஷனானால் பரிசேயர் சொன்ன குற்றம் ஒருவேளை உண்மையாயிருக்கலாம். இப்படிப்பட்ட மகத்துவமான மாறுதலை நிமிஷத்தில் நடப்பிப்பதற்கு நம்மில் யார் தகுதியுள்ளவன்? எவ்வளவுக்கு கிறிஸ்து நமக்குள் ஜீவிக்கிறாரோ அவ்வளவே நாம் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கக்கூடும். அதற்கு மிஞ்சி நாம் ஒன்றும் செய்ய முடியாது.

இவைகளைக் கவனித்த நாம் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லக்கூடியதென்ன? உலகத்தில் எந்த மனுஷனோடும் அவரை ஒப்பிட முடியாது. இவர் பரிசேயர் நினைத்ததுபோல ஒரு சாதாரண மனுஷனாயிருந்தால் இந்த இரண்டாயிர வருஷக்காலமாகக் கல்விமான்கள் ஏன் அவரைக்குறித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கவேண்டும்? எத்தனையோ பெரிய பெரிய ஞானிகளை, கல்விமான்களை மறந்துவிட்ட இந்த உலகம், இவரைக்குறித்து இந்நாள்பரியந்தம் தர்க்கிப்பதற்குக் காரண மென்ன? இங்கேதான் இரகசியம் இருக்கிறது. ஒரு சமயம் அவரை நோக்கும்போது நம்மைப்போன்ற மனுஷனாகத் தோன்றுகிறார். மறுபடியும் அவரை உற்று நோக்கும்போது நம்மோடு ஒப்பிடக்கூடாத தூரத்தில் நிற்கிறார். இன்னும் ஆழமாய் ஆராயும்போது நமக்கு அவர் சொந்தம் என்று நினைத்த காரியங்களிலேயே நமக்குத் தூரமானவராகவும், தூரம் என்று நினைத்த காரியங்களில் நமக்குச் சொந்தமானவராகவும் தோன்றுகிறார். இதைப்போல் புதுமை உண்டோ? இவரைப் போன்ற இன்னொரு மனுஷன் முன்னுமில்லை பின்னுமில்லை. **அதிசயமானவர்** என்பதல்லவா அவருடைய நாமம்.

அவர் நமக்குச் **சொந்தமானவர்** என்று சொல்லக்கூடிய காரியங்களைப் பார்ப்போம். மாம்சத்தின்படி அவர் நமக்குச்

சொந்தமானவர். அவருடைய சரீரம் நம்முடையது. நம்மைப் போல் படிப்படியாக வளர்ந்தார். தாகம், பசி, களைப்பு, நித்திரை கொண்டார். துக்கம், சந்தோஷம், ஆச்சரியம், கோபம் அவரில் காணப்பட்டன. பறவைகள், புஷ்பங்கள், குழந்தைகள்மேல் பிரியங்கொண்டார். நம்மைப்போல் யோசனை புத்தி அவருக்குண்டு. பக்திக்குரிய ஜீவியத்தில் நம்மைப்போல் தேவனைச் சார்ந்து பிழைத்தார். ஜெபஜீவியம் அவருக்கு உயிராயிருந்தது. இவைகளில் அவர் நம்மைப் போன்றவர் என்று நினைத்து, நமது சகோதரனாக அவர் கையைப் பிடிக்கக் கூடுமென்றாலும், அவர் நமக்குச் சொந்தமென்று நினைத்த இந்தக் காரியங்களிலேயே அவருக்கும் நமக்கும் எவ்வளவோ தூரமுண்டு. அவர் சரீரமும் நமது சரீரமும் ஒன்றா? அவர் யோசனையும் நமது யோசனையும் ஒன்றா? அவர் ஜெபமும் நமது ஜெபமும் ஒன்றா? அவர் பக்தியும் நமது பக்தியும் ஒன்றா? அவருக்கும் நமக்கும் ஒன்றுபோல் தோன்றுகிற காரியங்களிலேயே அவர் நமக்கு எட்டாத உயரமானவர். நமது ஆவி, ஆத்துமா, சரீரம் பாவத்தால் கெட்டுப் பாழாயின. நமது நாகரீகத்தையும் சாமார்த்தியத்தையும் நாம் தாம் மெச்சிக்கொள்ள வேண்டியது. மனுஷருக்குள் மேன்மையாக எண்ணப்படுவது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பு. அவர் ஒருவரே பழுதற்றவர். முப்பது வயதுவரை தச்சுவேலைசெய்து யோர்தான் நதிக்கரை வந்தபோது "நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என்று பிதா நற்சாட்சி கொடுக்க வேண்டுமானால், அந்நாள்களின் ஜீவியமும் வேலைகளும் எவ்வளவு பரிசுத்தமும் பூரணமுமா யிருந்திருக்கவேண்டும்! நமது ஜீவியத்தையும் வேலையையும் இவரோடு ஒப்பிடக்கூடுமா?

தேவன்மீதுள்ள நமது நம்பிக்கையும் பக்தியும் எவ்வளவோ குறைவுள்ளவை. துன்ப துக்கங்கள் மேகம்போல் நம்மைச் சூழ்ந்துகொள்ளும்போது நமது விசுவாசம் பறந்துபோகிறது. நாம் கலங்கித் தடுமாறுகிறோம். அவருக்கும் பிதாவுக்கும் உள்ள ஐக்கியமோ ஆழமும் உறுதியுமானது. அவர் சகல இடையூறுகள் போராட்டங்களின் மத்தியில் மகா அமைதலும் சாந்தமுமாய் நடந்துகொண்டார். பாவம் நிறைந்த உலகத்தில் மாசற்ற புருஷனாகச் சஞ்சரித்தார். மனுஷனாக அவர் நமக்குச் சொந்தமானவர் என்று சொல்லும்போதே, அவருக்கும் நமக்கும் எவ்வளவோ தூரமிருப்பதைக் காணலாம். அவரே பூரணமான மனுஷன். அவரும் மனுஷன் நாமும் மனுஷரா? மனுஷனுக்குரிய இலட்சணங்கள் இன்னும் நம்மில் பூரணப்படவில்லையே. ஏதாகிலும் சிறந்த குணங்கள் நம்மில் காணப்பட்டால் அவைகள் அவர்மூலமாய் நமக்குக் கிடைத்ததே தவிர, நாம் சுயமாய்ச் சம்பாதித்துக்கொண்டதல்ல. பரிசேயரைப்போல் ஒருவன் தன்னை விசேஷித்தவன் என்று எண்ணினால், அவன் தேவ

பார்வையில் அருவருக்கப்படத்தக்கவனாவான். உலகத்தின் மேன்மையும் மதிப்பும் இவ்விதமாகவேயிருக்கின்றன. அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டாரென்று சொல்லும் போதே, அக்கிரமக்காரருக்கு அவர் முற்றிலும் விலகினவர் என்ற சத்தியத்தையும் நாம் மனதில் வைக்க வேண்டும்.

மெய்யாகவே அவர் நமக்குத் **தூரமானவர்** என்று சொல்லக்கூடிய காரியங்களும் உண்டு. அவர் பேசும் **வார்த்தைகளைக்** கவனிக்கும்போது நமக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறார். எந்த மனுஷனும் தன்னைக்குறித்துப் பேசக்கூடாத காரியங்களை அவர் தம்மைப்பற்றிப் பேசுகிறார். அவர் **யோசனைகள்** நமக்கு எட்டவில்லை. அவர் **காலம்** நமக்கு விளங்கவில்லை. அவர் ஒரு காலத்தில் பிறந்து நம்மைப்போல் படிப்படியாக வளர்ந்தாலும், தாம் பிறந்த காலத்தைப்பற்றிப் பேசாமல் **சதா காலங்களிலும்** இருப்பவரைப்போல் பேசுகிறார். அவர் தமது **அறிவில்** நமக்கு எட்டாதவர். மனுஷருள்ளத்திலிருப்பதை அறிவார். நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்னவென்று சீஷர்களையும் சத்துருக்களையும் திடுக்கிடும்படி கேட்டார். நடக்கப்போகிற சம்பவங்களைத் திட்டமாக முன்னுரைத்தார். மனுஷருடைய **உள்ளான ஜீவியத்தில்** நடப்பிக்கும் **கிரியையில்** நமக்கு எட்டாதவர். இந்தச் சக்தி மனுஷீகத்துக்கு மிஞ்சினது. பாவங்களை மன்னித்துப் பரிசுத்தவான்களாக்குகிறார். ஆத்தும இளைப்பாறுதலையும் நித்திய ஜீவனையும் அருளுகிறார். **புறம்பே செய்யும் கிரியைகளில்** அவர் நமக்கு எட்டாதவர். பேய்களையும் நோய்களையும் பறக்கடிக்கிறார். காற்றையும் கடலின் கோஷ்டத்தையும் அமரச் செய்கிறார். சமுத்திரத்தின்மேல் நடக்கிறார். பசியுள்ளோரை அதிசயமாகப் போஷிக்கிறார். மரித்தோரை உயிரோடே வரச்செய்கிறார். அவர் பேச்சில் தெய்வீகம் விளங்குகிறது. அவர் கிரியைகளில் தெய்வீகம் விளங்குகிறது. சிறு பிள்ளைகளும் கற்றுக்கொள்ளக்கூடிய சாதாரண வார்த்தைகளாலே அவர் உபதேசித்தாலும், அவைகள் மனுஷருடைய புத்திக்கு எட்டாத தேவ ஞானமாயிருக்கிறது. அவரைப்போல் பேசினவன் இல்லை. அவரைப்போல் கிரியை செய்தவன் இல்லை. அவரைப்போல் ஜீவித்தவன் இல்லை. அவரைப்போல் மரித்து எழுந்தவனும் இல்லை. இவை யாவற்றிலும் அவர் நமக்குத் தூரமாகவே இருக்கிறார்.

அவர் நமக்குத் தூரம் என்று நாம் அஞ்சுகிற காரியத்திலேயே அவர் நமக்குச் **சமீபமாகவும்** வருகிறார். அவர் நமக்கு **உபதேசிக்கமாத்திரம்** வந்தவர் அல்ல. தாம் நடந்ததைப் பார்த்து நாமும் நடக்கும்படி நமக்கு **மாதிரி காண்பிக்கமாத்திரம்** வந்தவர் அல்ல. அது நமக்கு எட்டாத உயரம் என்பது நிச்சயம்.

அம்மட்டோடே அவர் நம்மை விட்டுவிட்டால் நாம் ஈடேற வழியில்லை. அவர் மாசற்ற ஜீவியத்தைப் பின்பற்றவும், அவர் திரு உபதேசத்தைக் கைக்கொண்டு நடக்கவும் பலமேது? நாமும் அவரைப்போன்ற **தன்மையுள்ள** மனுஷராயிருந்தால் ஒருவேளை கூடும். அவர் யார்? நாம் யார்? நாம் நமது ஆவி ஆத்தும சரீரத்தில் கெட்டழிந்த பாவிகள். அவரைப்போல் நாமும் நடக்கக்கூடும் என்பது, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலாகும். கிறிஸ்துவை **ஜெகத்குருவாக மாத்திரம்** ஏற்றுக்கொள்ளுகிற வகுப்பார் உண்டு. அவர்களுக்கு மலைப் பிரசங்கமே போதுமாம். அவர் தேவனை நம்பி அவர் சித்தப்படி பிழைத்ததுபோல இவர்களும் பிழைக்கக்கூடுமாம். பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல இவர்களும் பூரண சற்குணராய் நடக்கக்கூடுமாம். இப்படிச் சொல்லுகிறவர்கள் கிறிஸ்துவை **மாதிரியாகமாத்திரம்** நோக்குகிறார்கள். தங்கள் பாவநோய் அவரால் நீங்கவேண்டும் என்பதையும், அவரே நமக்குள் ஜீவனாயிருந்து நம்மைப் பலப்படுத்துகிறவர் என்பதையும் ஏற்றுக்கொள்ளார்கள். அக்காலத்தில்மாத்திரமல்ல எக்காலத்திலும் பரிசேயர் உண்டு. முடவன் தானாக ஏறிக்கொள்ளாவிட்டாலும், ஒருவர் அவனைச் சுமந்து தேன் இருக்கும் இடத்தில் வைத்தால், மகிழ்ச்சியோடே சாப்பிடா திருப்பானோ? நமதாண்டவர் நமக்குக் கொடுக்கிற இரட்சிப்பும் இதுபோலவே.

அவர் நமக்கு எட்டாத உயரமாயிருந்தும் நமக்குச் சமீபத்தில் வந்த காரணம் இதுவே. அவரது ஜீவியம் உன்னதமா யிருந்தும் அவர் தாமே நம்மைத் தூக்கிச் சுமக்கிறதானால் அவர் இருக்கும் இடத்தில் நாம் ஏன் இருக்கக்கூடாது? உன்னதமான ஆண்டவர் பாவிகளாகிய நமது ஸ்தானத்தில் தம்மை நிறுத்தினார். நமது பாவங்களைத் தாமே சுமந்துகொண்டார். நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவர் தழும்புகளால் குணமாகிறோம். சிலுவையின் ரகசியம் இதுவே. கிறிஸ்துவின் மகிமையும் இதுவே. விசுவாசிகளின் உயர்வும் இதுவே. பரிசுத்தர் நமக்காகப் பாவமானார். அவருக்கும் நமக்கும் பிரிவினையாக நின்ற நடுச்சுவராகிய பாவத்தையும் சாபத்தையும் மரணத்தையும் முற்றிலும் நாசமாக்கி வெற்றி சிறந்தார். முடவன் கொம்புத்தேனைச் சாப்பிட நெருங்கி விட்டான். அவரோடிணைக்கப்பெற்றவர்கள் அவரோடெழுந்து உன்னதத்திலிருக்கும் கிருபையைப் பெற்றார்கள். சிரசு அடைந்த மகிமையே சரீரத்தின் மகிமை. இது நாம் சம்பாதித்ததல்ல. அவர் சம்பாதித்த மகிமை. அவருடன் இணைக்கப்பட்ட நமக்குச் சொந்தமாயிற்று. நாம் நமக்கு மன்னித்துக்கொள்வதல்ல, அவரே

நமது மன்னிப்பானார். நமது நீதி அல்ல, அவரே நமக்குத் தேவநீதியானார். நமது ஞானம் அல்ல, அவரே நமது ஞானமானார். நமது பரிசுத்தம் அல்ல, அவரே நமது பரிசுத்தமானார். நமது ஜீவன் அல்ல, அவரே நமக்கு நித்திய ஜீவனானார். நமது மகிமையல்ல, அவரே நமக்கு தேவ மகிமையானார். இவ்வாறு கிறிஸ்துவுக்குள் உன்னத பலத்தை யடைந்து, தேவ பரிபூரண ஆசீர்வாதங்களுக்குப் பங்காளிகளானோம். எட்டாத உயரமான கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக நமது இருதயங்களில் வசிக்கப் பாக்கியம் பெற்றோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பரிசேயர் கிறிஸ்துவை இன்னாரென்று அறியாமல் தங்களைப்போல் அவரும் ஒரு மனுஷன்தான் என்று நினைத்து மோசம்போனார்கள். தமது பாதங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர்விட்டழுத பாவியான ஸ்திரீயை இரட்சிக்கக்கூடியவரும், ஆயக்காரரையும் பாவிகளையும் அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்கள் ஜீவியத்தை முற்றிலும் மாற்றக்கூடியவரும், ஆயக்காரன் மத்தேயுவை தமக்கு அப்போஸ்தலன் ஆக்கக்கூடியவரும், அநியாயமாய்ப் பொருள் சம்பாதித்த சண்டாளன் சகேயுவை அவன் பொல்லாத வழியைவிட்டு நிமிஷத்தில் திருப்பக் கூடியவரும் தங்களைப்போன்ற ஒரு மனுஷன் என்று அவர்கள் எப்படி நினைக்கலாம்? அவர் மனுஷன் என்பது எப்படி உண்மையோ அதுபோலவே அவர் மனுஷருக்கு மேலானவர் என்பதை அவர் கிரியைகள் நிரூபிக்கின்றதே. ஆகையால், பரிசேயர் நமதாண்டவரைத் தப்பாய் நினைத்ததும், அவரைக்குற்றப்படுத்திப் பேசினதும் **அநியாயமே.** அவர் பாவத்தால் கறைப்பட்டிருந்தால் அவர்கள் சாட்டின குற்றம் மெய்யாயிருக்கும். ஆனால், அவரோடு சம்பந்தப்பட்ட பாவிகள் பரிசுத்தவான்களாக மாற்றப்பட்டதால், **பாவிகளின் சிநேகிதன்** என்று அவர்கள் பகையினால் கொடுத்த பேர், அவருக்குப் பாக்கியமான பேராயிற்று. உலகத்துக்கு நித்திய சுவிசேஷமாயிற்று.

கிறிஸ்து பாவிகளை இரட்சிக்கிற மாதிரியை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அவர் பாவிகள்மீது அன்பும் கிருபையும் உள்ளவர் என்பது மெய்தான். ஆனால், அவரது அன்பையும் கிருபையையும் நமது பாவ ஜீவியத்துக்கு மூடலாக்கிக்கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. நாம் இரட்சிப்பென்று நினைத்துக்கொள்வது ஒருவேளை நமக்கு இரட்சிப்பாயிருக்கமாட்டாது. நான் பாவிதான், ஆனாலும் என் ஆண்டவர் கிருபையுள்ளவர். ஆகையால், **எப்படியும்** என்னை இரட்சித்துக்கொள்ளுவார் என்று நினைக்கிறவர்கள் அநேகர். எப்படியும் இரட்சித்துக்கொள்வார் என்றால் அர்த்தம் என்ன?

எப்படி அவர் நம்மை இரட்சிக்க விரும்புகிறாரோ அப்படித்தான் இரட்சிப்பார். நாம் நினைக்கிறபடி அல்ல, அவர் நினைக்கிறபடி. நமக்குப் பாவ ஜீவியத்தை விட்டுவிடப் பிரியமில்லை. நமது ஜீவியம் முற்றிலும் மாற்றப்பட நமக்கு மனமில்லை. எப்படியும் ஆண்டவர் நம்மை இரட்சித்துக்கொள்ளுவார். என்று நம்மை வஞ்சித்துக்கொள்ளுகிறோம். அவர் கிருபையுள்ளவர் என்பது மெய்தான். கிருபையினால்தான் தமது ஜீவனைக் கொடுத்தார். ஆனால், அவர் கிருபையோடுமாத்திரம் வந்தவரல்ல. அவர் கிருபையோடும் **சத்தியத்தோடும்** வந்தார். "கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்து மூலமாய் உண்டாயிற்று" அவர் பாவிகளைக் கிருபையுடன் ஏற்றுக்கொள்ளுகிறார். சத்தியத்தின்படியே அவர்களை இரட்சிக்கிறார். பாவங்களிலிருந்து நம்மை விடுவிப்பதே அந்தச் சத்தியம். பாவியான ஸ்திரீயின் ஜீவியத்தை மாற்றி அவளைப் பரிசுத்தவதியாக்காவிட்டால் அவளைத் தயவாய் ஏற்றுக்கொண்டது கிருபையாகலாம், சத்தியம் எங்கே? ஆயக்காரரையும் பாவிகளையும் பட்சமாய் ஏற்றுக்கொண்டு அவர்களுடைய பாவத்திலேயே விட்டுவிட்டால், ஏற்றுக் கொண்டது கிருபையாகலாம், சத்தியம் எங்கே? சகேயுவின் வீட்டில் பிரவேசித்து அவனோடு தங்கியிருந்தும், அநியாயத்திலும் பொருளாசையிலுமிருந்து அவனை விடுவிக்காவிட்டால், அவன் வீட்டுக்குள் பிரவேசித்தது கிருபையாகலாம், சத்தியம் எங்கே? சத்தியத்திற்குச் சாட்சியாக அவர் பிறந்தார். அவரே சத்தியமானார். "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார்.

பாவங்களிலிருந்து நாம் விடுவிக்கப்படாவிட்டால் கிறிஸ்துவின்மூலமாய் வெளிப்பட்ட தேவகிருபை நமக்கு வியர்த்தமாகும் தேவ கிருபையைப் பாவத்துக்கு மூடலாகக் கொண்டவர்கள் இக்காலத்தைப்போல் அக்காலத்திலும் இருந்தார்கள். "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே, பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று கேட்டார் பவுல் (ரோமர் 6:1,2). அன்புள்ள தகப்பன் பிள்ளையின் கட்டியை அறுப்பது வேதனையாயிருக்குமே என்று அதை மூடி வைப்பானானால் பிள்ளை சாகும். கட்டியை அறுப்பதே பிள்ளைக்கு ஜீவன். ஜீவனை விரும்புவதே தகப்பனுடைய அன்பு. நமதாண்டவர் கிருபையாயிருப்பதினாலேயே நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க விரும்புகிறார். அவருடைய சத்தியமாகிய பட்டயம் நமது பாவக்கட்டை அறுத்தால்மாத்திரம் நாம் பிழைப்போம்.

அநேகர் **பாவமன்னிப்பை**மாத்திரம் பிரதானமாகக் கருதுகிறார்கள். பாவங்களை மன்னிக்கும்படிமாத்திரம் கிறிஸ்து சிலுவையில் மரித்ததாக எண்ணுகிறார்கள். மரணபரியந்தம்

பாவமன்னிப்புத் தேடுவதே அவர்கள் படித்தபாடம். கிறிஸ்துவோடு கூடயிருந்த **பேதுரு** என்ன சொல்லுகிறார்? "நாம் பாவங்களுக்குச் **செத்து** நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நமது பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" *(1 பேதுரு 2:24)*. கிறிஸ்துவின் மரணத்தால் நமக்குப் பாவமன்னிப்பு உண்டு. அதை மறுக்க முடியாது. ஆனால் மன்னிப்புமாத்திரம் கிறிஸ்து மார்க்கம் அல்ல. நாம் காலமெல்லாம் பாவத்தில் நிலைத்திருந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளலாம் என்று நினைப்பது பிசகு. நமது பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். நமது இருதயம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படவேண்டும். நம்மை மேற்கொள்ளும் பாவங்களிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டுப் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளவேண்டும். கெட்டுப்போன பாவிகளை இவ்வாறு புதுச் சிருஷ்டிகளாக்கவே கிறிஸ்து உலகத்துக்கு வந்தார். அவரது இரட்சிப்பு அவ்வித மாறுதலையே அப்போஸ்தலருக்குள்ளும் மற்றச் சீஷர்களுக்குள்ளும் நடப்பித்தது. அவர்கள் பாவங்களுக்கு அடிமைப்பட்டிருந்தால் உலகத்துக்கு ஆசீர்வாதமாயிருப்பது எப்படி? நமது ஜீவியம் மாற்றப்பட்டு நாம் பரிசுத்தவான்களாகும்படிக்காகவே கிறிஸ்து நம்மை அழைத்திருக்கிறார். இம்மாறுதலை நாம் பெற்றுக்கொள்ளாவிட்டால் கிறிஸ்துவையும், அவர் மரணத்தின் இரகசியத்தையும், அவர் ஊழியத்தின் நோக்கத்தையும் நாம் இன்னும் அறிந்து கொண்டவர்கள் அல்ல. **நாம் பாவத்தில் நிலைத்திருக்கும் வரை நமக்குள் ஜீவனில்லை. மற்றவர்களுக்கு நம்மால் ஆசீர்வாத மில்லை. கர்த்தருக்கு மகிமையில்லை.**

ஒரு சிறுவன் நஞ்சுத்தன்மையுள்ள ஒரு பழத்தைப் பிடுங்கித் தின்னுகிறான். அதில் கொஞ்சம் தித்திப்பு உண்டு. ஆனால் அது நாளடைவில் அவனைக் கொல்லும். அவன் தாய் இதை அறிந்து மனம் பதறி அவனைத் தண்டித்தாள். அம்மா என்னை மன்னியுங்கள், நான் இனித் தின்னமாட்டேன் என்று பையன் அழுதான். மறுபடியும் ஆசைப்பட்டுப் பிடுங்கித் தின்றான். இந்தச் சமயம் தாய் அதிகமாய் மனங்கலங்கி இனி ஒருபோதும் அதைத் தின்னாதே என்று சொல்லிப் பலமாய் அடித்தாள். அம்மா இனித் தின்னமாட்டேன் என்னை மன்னியுங்கள் என்று கெஞ்சினான். நான் உனக்கு மன்னித்து என்ன பிரயோஜனம்? மன்னித்தால் என்ன, மன்னிக்காவிட்டால் என்ன? நீ அதைத் தின்றால் சாவாயே என்று அழுதாள். இது கதையல்ல, அடிக்கடி வீடுகளில் நடக்கிற காரியம். நாம் **மன்னிப்பையே** பிரதானமாகத் தேடி தண்டனைக்குத் தப்பிக்கொள்ளப் பார்க்கிறோம். கிருபையுள்ள இரட்சகரோ நமக்கு நித்திய மரணத்தை வருவிக்கும் **பாவத்திலிருந்து** நம்மை விடுவிக்கவேண்டுமே என்று தவிக்கிறார். பாவியான ஸ்திரீ பரிசுத்தவதியாக மாற்றப்படுவதே இரட்சிப்பு.

பொருளாசைக்காரன் சகேயு மாற்றப்பட்டு கிறிஸ்துவைப் பொக்கிஷமாக ஏற்றுக்கொள்வதே இரட்சிப்பு. அவரது **கிருபையும் சத்தியமும்** நமக்குக் கொண்டுவருகிற ஆசீர்வாதம் இதுவே.

சபைகள் பெருகுவதும் கிறிஸ்தவர்களின் தொகை அதிகரிப்பதும் சந்தோஷமே. நாம் பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நமது ஜீவியம் மாற்றப்படாவிட்டால் என்ன பிரயோஜனம்? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற திரளான மனுஷருடைய ஜீவியத்தை நாம் கவனிக்கும்போது எவ்வளவு துக்கம்! பற்பல பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். பரிசுத்த ஜீவியத்தின் பாக்கியத்தையும் சந்தோஷத்தையும் அறியார்கள். பாவங்களில் நிலைத்திருப்பது கிறிஸ்து மார்க்கமல்ல. நாம் எத்தனை ஆராதனைகளுக்குப் போனாலும் என்ன? எத்தனை ஜெபக்கூட்டங்களை, ஓய்வு நாள் வகுப்புகளை நடத்தினாலும் என்ன? எத்தனை பிரசங்கங்களைக் கேட்டாலும் என்ன? பாவத்தில் நாம் நிலைத்திருக்கிறவரை இவைகளினால் நமக்கு பிரயோஜனம் இல்லை. மற்றவர்களுக்கும் நம்மால் ஆசீர்வாதம் இல்லை. ஆண்டவருக்கும் நம்மால் மகிமையும் இல்லை.

பாவஜீவியம் இன்பமாயிருக்கலாம். இலாபமாய்த் தோன்றலாம். அதை விட்டு விலகுவது நமக்குக் கஷ்டமா யிருக்கலாம். பாவத்தின் வஞ்சகம் மகா கொடியது. பாவம் நிச்சயமாகவே நமக்கும் நமது குடும்பத்துக்கும் சாபம். **பாவத்தால் ஒருபோதும் ஒருவருக்கும் நன்மை இல்லை.** கொஞ்சக்காலம் நலமாகத் தோன்றினாலும் சடுதியில் கெட்டுப்போவதற்கே ஏதுவாகும். பாவம் ஆண்டவரையும் நம்மையும் பிரிக்கும். இருதயத்தைக் கடினப்படுத்தும். புத்தியை அந்தகாரப்படுத்தும். ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் கெடுக்கும். ஆபத்தையும் சாபத்தையும் கொண்டுவரும். பாவம் வஞ்சனையுள்ளது. அது உண்மையான ஜீவியமல்ல. **பாவம் என்பது விஷம். அதை விழுங்குவது மோசம்.** பாவம் வஞ்சகமாயிருப்பதுபோலவே மன்னிப்புக் கேட்டுக்கொண்டால்போதும் என்பதும் வஞ்சகமே. **பிள்ளை விஷத்தை விழுங்கிவிடும்போது, மன்னித்தால் பிழைத்துக்கொள்வானோ? அவன் அதை வாந்தி பண்ண வேண்டும்.**

பாவ ஜீவியத்தை முற்றிலும் விட்டுவிடக்கூடுமா? என்று கேட்கிறோம். இந்தக் கேள்வியே தவறானது. பாவத்தை விட்டுவிடுவதும் பரிசுத்தமாய் நடப்பதும் நம்மால் ஆகிற காரியமல்ல. கர்த்தர் நம்மில் செய்யவேண்டிய வேலையை நாம் செய்யப் பார்ப்பது பிசகு. கிறிஸ்துவின் கையில் உன்னை விட்டுவிடு. உன் பாவங்களை மன்னிப்பவர் அவர். உன்னைக்

கழுவுகிறவர் அவர். உன் இருதயத்தை மாற்றுகிறவர் அவர். உனக்குள் தமது ஆவியை வைத்து உன்னை மறுரூபமாக்குகிறவர் அவர். உன்னைப் பலப்படுத்திப் பாவத்தின்மேல் வெற்றி கொடுப்பவர் அவர். நற்கனிகளினால் உன் ஜீவியத்தை அலங்கரித்து பிறருக்கு உன்னை ஆசீர்வாதமாக்குகிறவர் அவர். அவரே உன்னை முற்றிலும் ஆண்டுகொள்ள இடங்கொடு. அவர் உனக்குள் வசிக்கட்டும். அவர் உனக்குள் போதிக்கட்டும். அவரே உன்னை நடத்தட்டும். அவரே உன்னைக் காக்கட்டும். அவரே உன்னை உபயோகிக்கட்டும். அவரே உனக்குள் மகிமையாக விளங்கட்டும். எவ்வளவு பாக்கியமான ஜீவியம் இது! உனக்கு ஒரு வேலை, அவருக்குப் பல வேலை. நீ உன்னை அவருக்குப் பூரணமாய் ஒப்புவித்து அவரையே இடைவிடாமல் பற்றிக்கொண்டிரு. உன்னை அவருடைய ஐக்கியத்தில் நிலை நிறுத்தக்கூடிய விசுவாசத்தையும் அன்பையும் வேதத் தியானத்தையும் ஜெபத்தையும் விட்டுவிடாதே, ஜீவதண்ணீருள்ள நதிகள் உன்னிலிருந்து ஓடும்படி செய்வார். ஏதாகிலும் தப்பிதம் காணும்போது உடனே அறிக்கைசெய்து கழுவப்படு.

அவர் இப்படிச் செய்ய நமக்கு விருப்பமா? நமக்கு மனமில்லையென்றால் அவர் என்ன செய்யக்கூடும்? தானாகவும் நடக்க முடியாது. அவர் நம்மைத் தூக்கிச் சுமக்கவும் நமக்கு மனமில்லை. அநேகர் இந்தப் பாக்கியமான ஜீவியத்திற்குள் பிரவேசிக்காத காரணம் **மனமில்லாமையே.** எப்படியாகிலும் மகிமையில் பிரவேசிப்போம் என்கிறார்கள். மகிமையின் **பாதையில்** நடக்க மனமில்லாவிட்டால் மகிமையின் **இராஜ்யத்தில்** பிரவேசிப்பது எப்படி? சொஸ்தமாகவேண்டும் என்கிற விருப்பம் மாத்திரம் அவனுக்கு இருந்தது. அசையவோ எழுந்து நடக்கவோ பலமில்லை. விரும்பின அவனுக்கு நடக்கக்கூடிய பலத்தைத் கர்த்தர் கொடுத்தார். **நமது ஜீவியத்திலாவது ஊழியத்திலாவது எதை அவருடைய மகிமைக்காக விரும்புகிறோமோ, கிருபையுள்ள ஆண்டவர் அதை நமக்குக் கொடாதிருப்பதில்லை.**

இதை வாசிப்பவர்களை அருமை இரட்சகர் ஆசீர்வதிக்கவேண்டுமென்பது என் முழுவாஞ்சை. பாவிகளின் சிநேகிதர் ஒரு ஆத்துமாவைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் அதைப்போல் ஆனந்தமில்லை. கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசிக்குக் காண்பித்த **குயவன்** திருஷ்டாந்தம் அநேக சமயங்களில் என்னை உயிர்ப்பித்திருக்கிறது. தீர்க்கதரிசி குயவன் வீட்டில் போய்ப் பார்த்தபோது, அவன் வனைந்துகொண்டிருந்த மண்பாத்திரம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று. அவன் அதைத் தூர எறிந்துவிடாமல் திரும்ப எடுத்து மறுபடியும் வேறே நல்ல பாத்திரமாக வனைந்தான். கர்த்தர் தீர்க்கதரிசியைப்

பார்த்து: "**இந்தக் குயவன் செய்ததுபோல்** நான் உங்களுக்குச் செய்யக் கூடாதோ? களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்'' என்றார் (எரே. 18). கெட்டுப்போன பாவிகளாகிய நமக்கு இது எவ்வளவு ஆறுதல்! நமது பாவஜீவியத்தால் நம்மை எவ்வளவோ கெடுத்திருந்தாலும், இனஜனத்தார் நம்மை ஆகாதவர்கள் என்று தள்ளி விட்டாலும், நமது பாழான ஜீவியம் நமக்கே அருவருப்பாகி, உயிரோடிருப்பதிலும் செத்துப்போவது நல்லதென்று நாம் நினைத்திருந்தாலும், சாபத்துக்கேதுவான நம்மை ஆசீர்வாத பாத்திரங்களாக்க ஆண்டவரால் கூடும். அந்தக் குயவன் செய்ததுபோல் நான் உங்களை மறுபடியும் நல்ல பாத்திரங்களாகச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் கேட்கிறார். பரம குயவனாகிய கிறிஸ்துவின் கையில் களிமண்ணைப்போல் நம்மை வைத்துவிடவேண்டும். அவர் தமது வேலையை ஆரம்பித்து, ''பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாக்குவார்'' (2 தீமோ. 2:21). இப்படிப்பட்ட ஜீவியமே நமக்கும் நமது குடும்பத்துக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதம். சகல நிர்பந்தங்களும் நீங்கும். சகல ஆசீர்வதங்களும் தங்கும். இதுவே கிறிஸ்து மார்க்கம். இதுவே மோட்ச வாசல். இதுவே பாக்கியமான ஜீவியம். உன்னை இவ்விதமாக ஆசீர்வதிக்க ஆண்டவருக்குப் பிரியம். இந்த ஜீவியத்தில் பிரவேசித்தவர்களுக்குத்தான் இதன் பாக்கியமும் ஆசீர்வாதமும் தெரியும். மற்றவர்களுக்கு என்ன தெரியும்? **பெயரளவுக்கு கிறிஸ்தவர்களாயுள்ளவர்களின் திரளான தொகை கிறிஸ்து மார்க்கத்துக்கு பெரிய தடை.**

20
மாசற்ற இரட்சகன்
The Spotless Saviour

கிறிஸ்து பாவமற்றவர் என்று நிரூபிக்கவேண்டுமென்பது சுவிசேஷகருடைய நோக்கமல்ல. தாங்கள் அவரில் கண்டதையும் கேட்டதையும் எழுதினார்கள். அவர்கள் கிறிஸ்துவை உண்டாக்கவில்லை. கிறிஸ்துவே அவர்களை உண்டாக்கினார். உதவாத மனுஷரைச் சிறந்த பக்தர்களாக அவர் மாற்றினார். மற்றவர்களை மனந்திரும்பக் கட்டளையிட்டார்; அவர் மனந்திரும்பினதில்லை. மற்றவர்கள் பாவங்களைக் கண்டித்தார்; அவர் பாவங்களை அறிக்கையிட்டதில்லை. அவர் நினைத்த, பேசின, செய்த எந்தக் காரியத்தினிமித்தம் அவர் பிந்தி விசனப்பட்டவரல்ல. கடவுளுக்கு முன்பாக அவர் வெட்கமும் துக்கமும் அடைந்தவரல்ல. பிதா எப்போதும் அவரோடிருந்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். யாதொரு தவறுதல் அவர் ஞாபகத்தில் ஒருபோதும் வந்ததில்லை. தமக்குள் பாவமிருந்தும் அதை மறைத்து ஜீவித்திருந்தால் அது **மாயமாகும்.** வேதபாரகர் பரிசேயரின் மாயத்தை அவ்வளவு பயங்கரமாய் அவர் கண்டித்திருக்கமுடியாது.

பாவமற்ற ஜீவியம் நமது புத்திக்கு விளங்கவில்லை. அப்படிப்பட்ட அனுபவம் நமக்கில்லை. ஆகிலும் பரிசுத்தத்தை விரும்புகிறோம். பரிசுத்தம் அவருக்குள் இருந்தது. மனுக்குலத்தாருக்குள் தோன்றின மாசற்ற புருஷன் அவரே. பாவத்தைப்பற்றிய அற்ப உணர்ச்சி அவருக்குள்ளிருந்திருக்குமானால், அது அவர் முகத்தில் தோன்றியிருக்காதா? இரவு பகல் கூடவேயிருந்த அவரது சீஷர்கள் அவ்வாறு எதாவது குறிப்பை அவரில் கண்டதுண்டா? அப்படிக் கண்டிருந்தால் **மாசற்ற, குற்றமற்ற, பாவமற்ற, பரிசுத்தர்** என்னும் பதங்களால் அவரை அழைக்கத் துணிவார்களா? பூர்வந்தொடங்கி தேவபக்தர்களில் யாரையாகிலும் அவர்கள் அப்படி அழைத்ததுண்டா? பாவமற்றவர் மாத்திரமே பிறர் பாவங்களை மன்னிக்கக்கூடும்.

அவரே பாவியாயிருந்தால் பாவிகளுக்கு அவரால் இரட்சிப்புண்டாவது எப்படி? அவரில் பாவமுண்டானால் மரணமே அவருக்கு முடிவாகும். அவர் மரணத்தை ஜெயிப்ப தெப்படி? பரிசுத்தர்மாத்திரம் அழிவைக் காணாதிருக்கக்கூடும். அவர் சிந்தின இரத்தம் நமது பாவங்களைப் போக்க வேண்டுமானால், அது பரிசுத்த இரத்தமாயிருக்கவேண்டும். அவரில் பாவமிருந்தால் அவர் ரத்தம் பரிசுத்தமாயிருப்பதெப்படி? ஆகையால், அவர் நம்மைப்போல் மனுஷனாயிருந்தும், **பாவம்** என்ற ஒரு விஷயத்தில் மனுமக்களுக்கு அவர் முற்றிலும் பிரிந்தவரானார்.

அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமற்றவராயிருந்த இரகசியம் அவருக்கும் பிதாவுக்குமுள்ள பூரண ஐக்கியமே. இந்த ஐக்கியத்தில் மனுக்குலமனைத்துக்கும் அவர் பிரிந்தவராயிருக்கிறார். அவர் ஒருவர் தவிர உலகில் வேறொருவனுக்கும் பிதாவோடு அவருக்கிருந்த பூரண ஐக்கியமும் சம்பந்தமும் இல்லை. ஆகையால் நினைவு, வார்த்தை, செய்கையில் அவரைப்போன்ற பரிசுத்தவான் எவனுமில்லை. நான் பாவமற்ற புருஷன் என்று ஒருவன் சொல்வானானால் அதைப்போல் பயங்கரமான **பொய்** வேறொன்றில்லை. நானும் அவரைப்போல் பாவமற்ற பரிசுத்தனாகக்கூடுமென்று ஒருவன் சொல்வானானால் அதைப்போல் **துணிகரம்** வேறொன்று மில்லை. இந்த இரண்டாயிரம் வருஷக்காலமாகியும் அவரைப் போல் ஒருவனும் தோன்றினதுமில்லை. அவர்மூலமாய் நமது பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். அவர் இரத்தத்தால் நமது அசுத்தங்கள் கழுவப்படவேண்டும். அவர் ஆவியால் நாம் உள்ளான மனுஷனில் நாளுக்குநாள் மறுரூபமடைய வேண்டும். அவரோடுள்ள **ஐக்கியத்தால் மாத்திரம்** நாம் பாவத்துக்குத் தப்பி பரிசுத்த ஜீவியத்தில் வளரக்கூடும்.

கிறிஸ்துவுக்குள் எவ்வளவோ உன்னத பதவியை அடைந்த பவுலும், பாவிகளில் தான் பிரதான பாவியென்று அந்திய காலத்தில் அறிக்கையிட்டார். இதனாலே, அவர் கடைசிவரை பிரதான பாவங்களைச் செய்தாரென்பது அர்த்தமல்ல. எவ்வளவுக்கு அவர் கிறிஸ்துவை நெருங்கி ஜீவித்தாரோ, எவ்வளவுக்கு எஜமானை மாதிரியாக நோக்கினாரோ, அவ்வளவுக்கு அந்த உத்தம அப்போஸ்தலன் தன் சுபாவக் கேட்டைக்கண்டு புலம்பினார். பாவமற்ற ஜீவியத்துக்காக வாஞ்சித்து **சரீரமீட்பு** சீக்கிரம் வரும்படி தவித்தார். நாம் கிறிஸ்துவின் கிருபையால் எவ்வளவு பக்தியில் தேறினாலும், மாம்சத்தில் குடியிருக்குமளவும் பாவத்துக்கு நாம் முற்றிலும் தப்பினவர்களல்ல. சிலர் ஆவிக்குரிய உற்சாகத்தில், அல்லது சிலகாலம் தேவபக்தியாய் நடக்கும்போது, தாங்கள் பாவமற்றவர்க

ளென்று நினைக்கத் துணிவார்கள். நாள்கள் சென்றபின் தாங்கள் அப்படி நினைத்ததற்காகத் துக்கப் படுவார்கள். நாம் கர்த்தரைப் பின்செல்லும்போது பழைய சோதனைகள் ஒழிந்தால் புதியவைகள் தோன்றும். இவைகளையும் மேற்கொண்டு சென்றால் இன்னும் எதிர்பாராத தீமைகள் தோன்றும். கடைசிவரை நமக்குப் போராட்டம் உண்டு. நாம் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு வருவதற்கு அதுவே ஏற்றது. ஆகையால் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறிவிட்டோம் என்று நாம் சொல்வதற்கு ஏதுவில்லை.

கிறிஸ்து ஒருவரே **பாவமற்ற** பரிசுத்தர். பாவமற்றிருப்பதே பரிசுத்தமல்ல. பாவமற்றிருப்பது ஒரு பக்கம்; பரிசுத்தம் மறுபக்கம். நோயற்றிருப்பது ஒரு காரியம்; பராக்கிரமசாலியாயிருப்பது மறுகாரியம். நோயற்றவனும் பராக்கிரமாசாலியுமே பூரணபுருஷன். பாவமற்றவனும் பரிசுத்தனுமே ஆத்துமாவில் பூரணபுருஷன். ஆதாம் செம்மையானவனாக உண்டாக்கப் பட்டான். அவனில் பாவமில்லாதிருந்தும் தவறிப்போகக்கூடிய குழந்தையைப்போலிருந்தான். அவன் குற்றமற்றவனாயிருந்த போதிலும் பரிசுத்த முயற்சியில் தேறினவனல்ல. ஆட்டிவைத்த பொம்மைபோலிருந்தான். அது அந்தப் பக்கம் சாயுமோ இந்தப் பக்கம் சாயுமோ தெரியாது. "தீமை செய்தலை விட்டோயுங்கள், நன்மை செய்யப் படியுங்கள்" என்ற தேவ வாக்குப்போல், பரிசுத்த ஜீவியமானது தீமையான யாவற்றிற்கும் விலகினதும், நன்மையான யாவற்றிலும் முயற்சியுள்ளதுமாயிருக்கிறது. நமது இரட்சகர் ஜீவியம் அப்படிப்பட்டது. அவர் தீங்கு செய்யாத சாதுவாக மாத்திரம் வெளிப்பட்டவரல்ல. நன்மைச் சொரூபியாகவும் வெளிப்பட்டார். அவர் பாவமற்றவரும் பரிசுத்த செயல்களை நிறைவேற்றுகிறவருமாயிருந்தார். தம்மை **மனுஷகுமாரன்** என்று சொல்லி மனுமக்களோடு தம்மை ஒன்றாக்கினார். மனுப்புத்திரரில் ஒரு மனுப்புத்திரனாக, சகோதரரில் ஒரு சகோதரனாக, சிநேகிதரில் ஒரு சிநேகிதனாக, நமது மாம்சத்தில் மாம்சமும், எலும்பில் எலும்புமாகி, எல்லாவிதத்திலும் தமது சகோதரருக்குச் சொந்தமானவராக வந்தார்.

ஆ, இந்த ஐக்கிய அதிசயத்தைக் கவனியுங்கள்! நம்மைத் தொடாதபடி தம்மைத் தூரப்படுத்திக்கொள்ளவில்லை. அப்படியிருந்தும், அவரது ஜீவியத்தை வாசிக்கும்போது எவரோடும் ஒப்பிடக்கூடாத மாசற்ற பரிசுத்தராகக் காண்கிறோம். எப்படிப்பட்ட சோதனைகளும் அவரை மேற்கொள்ளவில்லை. எவ்வளவு கபடான கேள்விகளும் அவரை மயக்கவில்லை. எவ்வித ஆபத்துக்கும் அவர் அஞ்சவில்லை. எப்பேர்ப்பட்ட பகைக்கும் அவர் பயப்பட வில்லை. எவ்வித கோபமூட்டுதலிலும் அவர் பதட்டப்பட வில்லை. அவரது அன்பை, பொறுமையை,

நம்பிக்கையை, ஊழியத்தைப் பறக்கடிக்கத்தக்க அநேக காரியங்கள் அவருக்குச் சம்பவித்தன. சுய ஜனங்களும், அதிகாரிகளும், சீஷர்களுங்கூட அவருக்கு பெருஞ்சோதனையாயிருந்தார்கள். சகலத்தையும் சகித்தார். சகலத்தையும் மேற்கொண்டார். தமக்கு நேரிட்ட பலத்த போராட்டங்களில் மகா சாந்தமும் அமைதலுமாய் நடந்துகொண்டார். கொஞ்சமாகிலும் திகைப்பாவது, பதட்டமாவது, ஆத்திரமாவது காணப்படவில்லை. சகல கேடுகளின் மத்தியில் வசித்த அவர் கொஞ்சமேனும் கறைப்படவில்லை. தாம் கறைப்படாதது மாத்திரமல்ல. கறைநிறைந்த பாவிகளைக் கைதூக்கி இரட்சிக்கும் வீரனாக விளங்கினார். வியாதிக்காரர் நடுவில் உலாவும் வைத்தியனைப்போலவும், ஆடுகளை நடத்தும் மேய்ப்பன் போலவும், கைதிகள் முன் வீற்றிருக்கும் நியாயாதிபதிபோலவும் விளங்கினார். பாவிகளுக்காக பரிதபித்தார். சாத்தானால் மனுஷருடைய சரீரமும் ஆவியும் ஆண்டுகொள்ளப் பட்டிருப்பதும், பிதாவின் அதிசய அன்பை அவர்கள் அறியாதிருப்பதும், பாவத்தின் கேட்டால் மனுப்புத்திரர் வேதனைப்பட்டுத் தவிப்பதும் அவருடைய திருமனதுக்கு ஆறாத்துயரமாயிருந்தது. அவர் கண்கள் கண்ணீர் சொரிந்தன. தமக்காகவல்ல, பாவிகளுக்காகவே அவர் பிதாவோடு தங்கிப் போராடினார். அவருக்குள் பாவமிருந்திருக்குமானால் மற்றப் பாவிகளுக்காக அவர் பரிதபிப்பதேது? அவர் இரட்சிப்புக்காகத் தமது ஜீவனைக் கொடுப்பதேது? அவர் புத்தனைப்போல அல்லது மற்ற ஞானிகளைப்போல, பாவத்தினின்று தமது ஆத்துமாவை இரட்சிக்கும்படி காட்டுக்குள் ஓடி மறைந்தவரல்ல. மனுக்குலத்தை இரட்சிக்கவும், தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், அதை நிறைவேற்றும்படி பிதா ஏற்படுத்தின வழியைத் தீர்மானித்துக் கொள்ளவுமே, ஊழிய ஆரம்பத்தில் அவர் வனாந்தரத்துக்கு சென்றார். சாத்தான் தீமையான வழிகளை அவருக்குக் காண்பித்தபோது அச்சோதனைகளை மேற்கொண்டு தீர்க்கமாய்த் தமது ஊழியத்தில் பிரவேசித்தார்.

அவரது நிகரற்ற ஜீவியத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல், நாமும் பிரயாசப்பட்டால் அவரைப்போல ஆகலாம் என்பது தற்காலக் கொள்கைக்காரரின் உபதேசம். அது எவ்வளவு தூரம் உண்மையென்பதையும் பார்ப்போம். இயேசுவின் பிறப்பு எளிய பிறப்பு. வளர்ந்த ஊர் அற்பமான நாசரேத். கல்வி கற்றது கிராமப் பள்ளிக்கூடம். ஆகையால் அவரைக் கல்வி கற்றவரென அக்காலத்தவர் எண்ணவில்லை. பிழைப்புக்கு தச்சு வேலை. அவருக்குப் பின் இந்த இரண்டாயிரம் வருஷத்தில் உலகத்தில் எவ்வளவு கல்வி! எவ்வளவு அறிவு! எவ்வளவு ஆராய்ச்சி! எவ்வளவு சாஸ்திரம்! எவ்வளவு அநுபவம்!

இத்தனை சிலாக்கியங்களையும் பெற்ற ஞானவான்களில் ஒருவராவது நாசரேத்தூர் இயேசுவைப்போல் ஜீவித்ததுண்டா? அவரைப்போல் பேசினதுண்டா? அவரைப்போல் கிரியை செய்ததுண்டா? அவரைப்போல் தன் ஜீவனைத் தானே கொடுத்துத் தானே திரும்பப் பெற்றுக்கொண்டதுண்டா? அவரைப்போல் உலகத்தை மாற்றினதுண்டா? பாவமற்றவராக ஜீவிப்பது கல்வியற்ற ஏழை மனுஷனாகிய அவருக்குக் கூடிய தாயிருந்தால், இத்தனை சிலாக்கியங்களையும் பெற்ற சாஸ்திரிகளில் ஒருவராவது அவரைப்போல் உலகத்தில் எழும்பக்கூடாதா? நாமும் அவரைப்போல் ஆகலாம் என்று சொல்வது எளிது. அப்படி ஆனவன் ஒருவனுமில்லை. வேத சரித்திரத்தையும் உலக சரித்திரத்தையும் கவனித்தால், தேவபக்தரும் கல்விமான்களும் தங்கள் பாவங்களை நினைத்துப் புலம்பினார்களேயன்றித் தங்களைப் பாவமற்றவர்களென்று எண்ணவில்லை. இப்படியிருக்க, யாராகிலும் ஒருவன் நான் பாவியுமல்ல, பாவம் செய்யவுமில்லையென்று சொன்னால் அது துணிகரப்பேச்சேயன்றி உண்மையல்ல. செத்த மீனுக்கு வெள்ளத்தின் பலம் தெரியாது. சுயநீதிக்காரர் தங்கள் நிலைமையை அறியார்கள். தன் கையிலுள்ள தடி கோணலேயல்லவென்று ஒருவன் சாதித்தபோது, மற்றவன் நேரான ஒரு உருளைத்தடியை அதன் பக்கத்தில் வைக்க, தன் தடி கோணலென்று கண்டு அவன் வெட்கமடைந்தான்.

தேவபக்தியாய் நடக்கத் தீர்மானித்தவர்களும், கிறிஸ்துவை மாதிரியாகப் பின்பற்ற ஆசித்தவர்களுமே பாவத்தின் வஞ்சகத்தை அறிந்து புலம்புவார்கள். ஆபிரகாம், மோசே, சாமுவேல், தாவீது, எலியா, எசேக்கியேல், பேதுரு, யோவான். பவுல் முதலான பக்தர்கள் திருச்சபையில் எவ்வளவோ மேன்மையாகக் கொண்டாடப்பட்டும், தங்கள் பாவங்களை உணர்ந்து தேவ கிருபைக்காகக் கெஞ்சினார்களென்பது நமக்குத்தெரியும். பரிசுத்தவான்களின் ஜீவிய சரித்திரத்தை வாசித்தால் பாவத்தினிமித்தம் அவர்கள் அடைந்த போராட்டமும், சிந்தின கண்ணீரும், செய்த ஜெபங்களும் கொஞ்சமல்லவெனக் காணலாம். அவர்கள் தங்களை அருவருத்து தேவ சமுகத்தில் தாழ்த்தினார்கள். இது தவிர, மனுமக்களால் புகழ்ந்து பேசப்பட்ட கல்விமான்கள், ஞானிகள், சாஸ்திரிகள் முதலானபேர் தம்தம் தேசத்தின் முன்னேற்றத்திற்காக அரிய பெரிய காரியங்களைச் செய்தவர்களெனக் கொண்டாடப்பட்டபோதிலும், அவர்களும் கடவுளுக்கு முன்பாக தாங்கள் பாவிகளெனத் துக்கத்துடன் அறிக்கை செய்திருக்கிறார்கள். நமது இந்து ஞானிகளில் பலர் இந்தப் பாவமென்னும் ஊழ்வினையின் போராட்டத்தால், தங்களை வெறுத்துக் குடும்பத்தை விட்டு விலகி வனாந்தர திசையடைந்து, தப்பும் வழி காணாது புலம்பித் தவித்தனர்.

இவையாவும் மனுஷனுடைய **பாவ சுபாவத்தை** பகிரங்கமாய் வெளிப்படுத்துகின்றன.

இப்படியிருக்க, கிறிஸ்துவை நோக்கிப்பார்ப்போம். அவர் சமுகத்தில் மற்றவர்கள் பாவ உணர்வடைந்தார்கள். அவர் அப்படி உணர்ந்தவரல்ல. மற்றவர்கள் தங்கள் பாவங்களுக்காகத் துக்கப்பட்டார்கள். அவரோ தமக்காகத் துக்கப்படாமல் பிறர் பாவங்களுக்காகத் துக்கப்பட்டார் மற்றவர்கள் பாவ அறிக்கை செய்தார்கள். அவர் அப்படி அறிக்கை செய்ததில்லை. மற்றவர்கள் பாவமன்னிப்பைத் தேடினார்கள். அவர் அப்படித் தேடாமல் பிறர் பாவங்களை மன்னித்தார். எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று அவர் நமக்கு ஜெபம் கற்பித்தாரேயன்றி தாம் அப்படி ஜெபிக்கவில்லை. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தாரென்பது மெய். ஆகிலும் எந்த விஷயத்திலும் அவர் தவறினவரல்ல. பசியாயிருந்தார், முறுமுறுக்கவில்லை. தாகத்தோடிருந்தார். எரிச்சலடையவில்லை. களைத்துப் போயிருந்தார், வெடு வெடுப்பாய்ப் பேசவில்லை. கலியாண வீட்டிலிருந்தார், வீண் உல்லாசமில்லை. சாவு வீட்டுக்குப் போனார், மார்படித்துப் புலம்பவில்லை. திரள் கூட்டத்தினால் சாப்பிடவும் நேரமில்லாதிருந்தார், ஜனங்களைக் கடிந்து கொள்ளவில்லை. சத்துருக்கள் இடைவிடாது தொந்தரவு கொடுத்தார்கள், கோபித்துக்கொள்ளவில்லை. அநேகர் அவரை அறியாமல் நடந்துகொண்டார்கள், அவர்களை மனம் நோகப் பேசவில்லை. பாவிகளோடு போஜனம்பண்ணினார், அவர்களால் தீட்டுப் படவில்லை. முகஸ்துதி அவரை மயக்கவில்லை. பயமுறுத்தல் அவரைக் கலங்கச்செய்யவில்லை. தந்திரமான கேள்விகளுக்கு அவர் திகைக்கவில்லை. வஞ்சகம் சூது அவரை ஏமாற்றவில்லை. சீஷர்களின் மதியீனத்தால் அவர் சோர்ந்து போகவில்லை. மனுஷரின் நிந்தையும் இகழ்ச்சியுமான வார்த்தைகள் அவரை அதைரியப்படுத்தவில்லை. எல்லாமே அவருக்கு விரோதமாய் நேரிட்டன, ஒன்றும் அவரை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு கொஞ்சமும் தவறாமல் அவர் ஜீவித்ததுமன்றி, அவருடைய பரிசுத்த முயற்சிகளும் வளர்ந்தோங்கின. அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டு அநேகரைக் குணமாக்கிற்று. மனுஷருடைய ஆவியையும் சரீரத்தையும் ஆண்டுகொண்டிருந்த பற்பல நோய்களை நீக்கி ஆவிக்குரிய ஆசீர்வாதத்தோடு அனுப்பினார். அவரில் பாவமிருந்தால் அவருடைய பேச்சுக்கும் கிரியைகளுக்கும் **வல்லமையேது?** சப்பாணி நடப்பதெப்படி? செத்தவன் பிழைப்பதெப்படி? காற்றும் கடலும் அடங்குவ தெப்படி? இவ்வாறு எப்பொழுதும், எல்லாவிடங்களிலும், எல்லார் நடுவிலும், நீதியும் பரிசுத்தமும், அன்பும் கிருபையும்,

அமைதியும் சாந்தமும், இரக்க உருக்கமும் நிறைந்த, காருண்ய புருஷனாக, அசையாத மன்னனாக, விலகாத வீரனாக, வழுவாத சுத்தனாக, மாசற்ற ஜோதியாக, சிலுவைவரை சிறந்து விளங்கினார் எம்பெருமான்.

அவரைக் குற்றப்படுத்தவேண்டுமென்று இடைவிடாமல் தம்மைத் தொடர்ந்து வந்தவர்களைப்பார்த்து: என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடுமென்று பகிரங்கமாய்க் கேட்டார். ஒருவனாவது வாய் திறக்கவில்லை. சத்துருக்களில் யாராகிலும் ஒருவன் தன்பேரில் ஏதாவது குற்றத்தைச் சொல்லிவிடுவானோ என்கிற பயம் அவருக்கு இருந்ததில்லை. அவர் உள்ளும் புறம்பும் ஒன்று போலிருந்தார். இருதய உணர்ச்சியின்படியே பேசினார். அவருடைய நல்ல இருயத்திலிருந்து நன்மைகளே புறப்பட்டன. மகா பரிசுத்தத்தை வாஞ்சித்த அவருக்குள் ஒரு சிறு பாவமாவது காணப்பட்டிருந்தால், அது அவருக்குச் சொல்ல முடியாத வேதனையாயிருந்திருக்கும். அவர் முகநாடி வேறுபட்டிருக்கும். அவருடைய சொற்கள் தடுமாறியிருக்கும். அவர் முகமோ சூரியனைப்போல் பிரகாசித்தது. அது அவருடைய உள்ளான பரிசுத்த மகிமைக்குப் புறம்பான அடையாளம். அவரிடத்தில் பாவமிருந்திருக்குமானால் மற்றவர்கள் பாவங்களை அவர் கண்டிப்பதெப்படி? அவர் பாவிகள்மீது அனுதாபமுள்ளவரா யிருந்தும் பாவத்தைக் கண்சாடையாய் விட்டவரல்ல. யூதர்களுடைய பாவங்களைத் தைரியமாக எடுத்துப் பேசினார். நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்றார்.

தமது சீஷர்களையும் தப்பவிட்டவரல்ல. அவர்களிடத்தில் தப்பிதங்களைக் கண்டபோது உடனே கண்டித்திருக்கிறார். பேதுருவை எனக்குப் பின்னாகப்போ சாத்தானே என்றார். யாக்கோபு யோவானின் பழிவாங்கும் சுபாவத்தைக் கடிந்து கொண்டார். அதிகாரிகளான வேதபாரகர் பரிசேயரின் **மாயத்தை** அஞ்சாது எதிர்த்தார். ஆசாரிமார் இடங்கொடுத்த ஆலய வியாபாரத்தை அஞ்சாது அகற்றினார். பாவிகள் மீதோ மிகுந்த அனுதாபம் அவருக்குண்டு. ஆனால் பாவத்துக்கு ஒரு நிமிஷமாகிலும் இடங்கொடுத்தவரல்ல. அவர் பாவிகள் நடுவில் சஞ்சரித்தபோதிலும் அவர்கள் பாவத்தால் தீட்டுப்பட்டவரல்ல. பக்தி வழியை நாடுகிறவர்கள் பாவிகளால் தாங்கள் இழுப்புண்டு போகாதபடிக்கு அவர்களைவிட்டு விலகிக்கொள்வார்கள். இவர் காரியமோ வேறு. இவர் பாவிகளோடு ஒன்றாயிருந்தார். அவர்கள் பாவத்துக்கோ முற்றிலும் விலகியிருந்தார். வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால், இவர் அவர்கள் பாவங்களைத் தாமே ஏற்றுக்கொண்டு அவர்களை எவ்விதத்திலும் இரட்சிக்க வாஞ்சையுள்ளவராக பாவிகளோடு தம்மை ஒன்றாக்கினார். இந்த

இரகசியத்தை அறியாதவர்கள் அவரைப் **பாவிகளுக்குச் சிநேகிதன்** என்று குற்றப்படுத்திப் பேசினார்கள். நெருப்பில் புழுபற்றாததுபோல, அவர் தொடவே குஷ்டரோகம் பறந்ததேயன்றி அவர் தீட்டுப்படவில்லை. அவர் சமுகத்தில் பாவம் பறந்ததேயன்றி பாவம் அவரைப் பற்றவில்லை.

புண்ணிய ஸ்தலங்கள் தூரத்திலிருப்பவர்களுக்கு விசேஷமாகத் தோன்றும். அந்நகரவாசிகளோ அவைகளை அவ்வளவாக மதிக்கிறதில்லை. ஆகையால், அவர்கள் தங்கள் ஸ்தலங்களை மற்றவர்கள் தரிசனைக்கு விட்டுவிட்டுத் தூரமாயுள்ள வேறு ஸ்தலங்களுக்கு யாத்திரை போவார்கள். இது நெருங்கிய பழக்கத்தால் உண்டாகும் பலன். இதுபோல, நாம் அறியாத தூரத்துப் பக்தர்களைக் குறித்து நமக்கு அதிக அபிமானமுண்டு. நம்மோடிருப்பவர்கள் எவ்வளவு பக்தர்களாயிருந்தாலும் அவர்களை விசேஷமாக நாம் எண்ணுகிறதில்லை. இதுவும் நெருங்கிய பழக்கத்தால் உண்டாகும் தீமையே. ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் வீட்டிலும் தன் ஊரிலும் மதிப்பில்லை என்று எஜமான் சொன்னது எவ்வளவு உண்மை! கிறிஸ்து பலஸ்தீனாவிலிருந்தவர். நாம் அவரைக்கண்டதில்லை. அவரைக்குறித்து நாம் கேள்விப்பட்டு, அவரைக்குறித்து வாசித்து அவரைப் பெருமையாய்க் கொண்டாடுகிறோம். ஆனால் அவரோடு இரவு பகல் கூடவேயிருந்து, கண்ணாரக்கண்டு, பேசிப் பழகி, கூடவே புசித்து, கூடவே நடந்து, கூடவே நித்திரைசெய்து, இவ்வாறு இடைவிடாமல் அவரோடு தங்கினவர்களின் சாட்சியென்ன? கிட்டநெருங்கினவன் உற்றது அறிவான் என்பது மெய்யே. அவரிடத்தில் தவறுதல் உண்டாயிருந்தால் வேறு யார் அறியாமற்போனாலும், சீஷர்கள் நிச்சயமாவே அறிந்திருப்பார்கள்.

அவர்கள் அவரைக் குறித்துச் சொல்வதென்ன? அவரிடத்தில் பாவமில்லை. அவர் பாவஞ்செய்யவுமில்லை. அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் குற்றமற்ற மாசற்ற தேவாட்டுக்குட்டியெனக் கூறுகிறார்கள். நாமும் பிரயாசப்பட்டால் அவரைப்போல் பாவமற்ற பரிசுத்தராகலாம் என்று அவர்கள் சொல்லுகிறதில்லை. தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதும், தாங்கள் பரிசுத்தமாவதும் அவர்மூலமாகவே ஆகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர் பிசாசுகளைத் துரத்தினபோது: அவைகள் உம்மை இன்னாரென்று அறிவோம், நீர் தேவனுடைய பரிசுத்தரென அறிக்கையிட்டுச்சென்றன. அவர் **குற்றமில்லாத இரத்தமென** யூதாஸ் புலம்பினான். அந்த **நீதிமானுக்கு** ஒன்றுஞ்செய்ய வேண்டாமென்று பிலாத்துவின் மனைவி கெஞ்சினாள். அவரிடத்தில் **குற்றமில்லையென** ஏரோதும் பிலாத்தும் அறிக்கையிட்டார்கள். இவர் தகாத

தொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று வலது பக்கத்துக் கள்ளன் சாட்சிபகர்ந்தான் மெய்யாகவே இந்த மனுஷன் **நீதிபரர்.** இவர் **தேவனுடைய குமாரன்** என்று சிலுவையடியில் நின்ற நூற்றுக்கதிபதி கூவினான். ஆம், அது மெய்யே என்று ரோமப் போர் வீரரும் சேர்ந்து கூவினார்கள். அவர் தம்மை **தேவகுமாரன்** என்று சொன்னதற்காகத் தேவ தூஷணமென்னும் குற்றத்தை ஏற்படுத்தி, அவரைச் சிலுவையில் அறைந்தார்களே யன்றி, வேறு யாதொரு பாவத்தை, யாதொரு குற்றத்தைச்சாட்ட சத்துருக்களால் கூடவில்லை. கிறிஸ்து பாவமற்றவரே. "உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது**" என்று தேவதூதன் சொன்னது எவ்வளவு உண்மை! ''உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவை" என்று அப்போஸ்தலர் ஜெபித்தது எவ்வளவு நியாயம்! அவர் **பரிசுத்த** பிள்ளையாகவே பிறந்து, பரிசுத்தராக வளர்ந்து, பரிசுத்தராக ஊழியஞ்செய்து, பரிசுத்த தேவாட்டுக்குட்டியாகச் சிலுவையில் தொங்கி மரித்தார். ஆகையால், அவர் அடக்கமானபோது அவர் திருவுடல் அழிவைக்காணவில்லை.

பாவமற்ற மனுஷனை நாம் இதுவரை கண்டதில்லை. இனிமேலும் காணப்போகிறதில்லை. கிறிஸ்து ஒருவரே பாவமற்றவர். கிறிஸ்து பாவமற்றவரென்றால் அவர் **பாவஞ்செய்யத்தக்க** நிலைமையிலிருந்தாரா, **பாவஞ் செய்ய முடியாத** நிலைமையிலிருந்தாராவென்பது கேள்வி. இதை அறியும்படி பிரயாசப்பட்டவர்கள் அநேகர். இக்கேள்விகள் நமக்குள்ளும் வருவது இயல்பே. அவர் மெய்யான மனுஷனாயிருந்தபடியால் பாவஞ்செய்யக்கூடிய நிலைமையில் தான் இருந்திருக்கவேண்டும். மற்றப்படி நம்மைப்போல் அவர் **எல்லாவிதத்திலும்** சோதிக்கப்பட்டாரென்று சொல்வது உண்மையாயிராது. பாவமே செய்ய **முடியாதவருக்குச்** சோதனைகள் சோதனைகளாகாது. சோதிக்கப்படக்கூடாதவர் மெய்யான மனுஷனல்ல. அவர் மெய்யான மனுஷனல்ல வென்றால் நமக்கு அவர் மாதிரியுமல்ல, நாமும் பாவம் செய்ய முடியாதவர்களாக உண்டாக்கப்பட்டிருந்தால், பாவமற்றவர்களா யிருப்பது நமக்கும் இலகுவாயிருக்குமல்லவா? ஆகையால், கிறிஸ்து பாவஞ்செய்ய **முடியாதவராயிருந்தபடியினாலே** பாவ மற்றிருந்தாரா? அல்லது **பாவஞ்செய்யக்கூடியவராயிருந்தும்** பாவமற்றிருந்தாரா என்பது கேள்வி.

இவ்விதமான கேள்வியினால் ஆதிச்சபையில் தப்பான உபதேசம் கிளம்பினது. அவர் மெய்யான மனுஷனாயிருந்தால் எப்படி பாவமற்றவராயிருக்கக்கூடும் என்கிற திகைப்பு பலருக்குள் **உண்டானது.** அவர்கள் தப்பிதமான கொள்கையைப் போதித்தார்கள். கிறிஸ்து மெய்யான மனுஷனல்லவென்றும், அவரது சரீரம் மெய்யான சரீரமல்லவென்றும், ஒரு மாயமான

சரீரத்தை எடுத்துக்கொண்டு அதில் ஜீவித்துப் பாடுபட்டதுபோல் காண்பித்தாரேயன்றி நம்மைப்போன்ற சரீரத்தில் அவர் ஜீவிக்கவில்லையென்றும் போதித்தார்கள். இக்கள்ள உபதேசம் அப்போஸ்தலருக்கு அதிக மனவேதனையைக் கொடுத்தது. கிறிஸ்து மெய்யான மனுஷனெனத் திட்டமாக அறிந்த அப்போஸ்தலரும் மற்ற விசுவாசிகளும் எப்படி அதைச் சகிப்பார்கள்? இக்கள்ள உபதேசத்தை நிர்மூலம்பண்ணும்படி அப்போஸ்தலன் யோவான் தமது நிருபங்களில் "**மாம்சத்தில் வந்த** இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்" என்று வெகு கண்டிப்பாய் எழுதினார். இயேசுகிறிஸ்து மெய்யான மனுஷனென்பது சுவிசேஷ சத்தியம். அதைக் கருத்தாய் வாசிப்பவர்கள், "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" என்பதைத் திட்டமாய்க் காண்பார்கள். ஒரு காலத்திலுமில்லாத பிரகாரம் தற்காலத்தில் கிறிஸ்துவைப் பூரண மனுஷனாகவே ஒப்புக் கொண்டு படிக்கிறவர்களும் எழுதுகிறவர்களும் அநேகர். இது சரியே. ஆகிலும், அவரது மனுஷீகத்தை முக்கியப்படுத்தி அவரது தெய்வீகத்தை அசட்டை செய்யாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அநேகர் இக்கண்ணியில் அகப்பட்டிருக்கிறார்கள். அவரது மனுஷீகத்தை மறுப்பது குற்றமாயிருப்பதுபோல அவரது தெய்வீகத்தை மறுப்பதும் குற்றமாகும்.

மெய்யான மனுஷனாயிருந்த கிறிஸ்து எப்படிப் பாவமற்ற பரிசுத்தராயிருந்தார் என்பதை மறுபடியும் பார்ப்போம். பாவஞ்செய்ய முடியாத தன்மை அவரில் இருந்ததினாலேயோ? அல்லது, அவர் தெய்வீகமும் மனுஷீகமும் சேர்ந்த புருஷனாயிருந்ததினாலேயோ? அல்லது அவரது தெய்வீகத்துக்கும் மனுஷீகத்துக்குமுள்ள சம்பந்தத்தினாலேயோ? அவரது தெய்வீகம் மனுஷீகத்துக்கும் உதவி செய்ததினாலேயோ? அல்லது தெய்வீக உதவியின்றி பூரண மனுஷனாகவே அவர் பாவமற்ற பரிசுத்தராக ஜீவித்தாரோ? இவைபோன்ற கேள்விகள் நமக்குள் வருவது இயல்பே. அவரது தெய்வீகத்துக்கும் மனுஷீகத்துக்குமுள்ள சம்பந்தம் நமக்குத் தெரியாது. ஒன்று நிச்சயம். அதாவது, தெய்வீகத்துக்குச் சோதனையுமில்லை பாவமுமில்லை. ஆகையால், அவர் பூரண மனுஷனாகவே சோதிப்பட்டிருக்கவேண்டும். மனுஷீகம் சரீரத்தோடு சம்பந்தப்பட்டது. சரீரம் உலகத்தோடு சம்பந்தப்பட்டது. ஆகையால் மனுஷனுக்குச் சோதனையுண்டு. கிறிஸ்து மாம்ச சரீரத்தில் வந்ததால் சோதிக்கப்பட்டார். அப்படிச் சோதிக்கப்பட்டும் அவர் பாவஞ்செய்யவில்லையென்பது நிச்சயம்.

அப்படியானால், அவரது மனுஷீகமாவது பாவம் **செய்யக்கூடிய** நிலைமையிலிருந்ததா, **பாவஞ்செய்யமுடியாத** நிலைமையிலிருந்ததா? முன்சொன்ன உத்தரவே திரும்பவும் வருகிறது. அவர் மனுஷனாகப் பாவஞ்செய்ய **முடியாத** ஒரு நிலைமையிலிருந்தால் அவருக்கு நேரிட்ட சோதனைகள் சோதனைகள் அல்ல. குழந்தைகள் தங்களை அடிக்க இடங்கொடுத்துப் பெற்றார் **பொய் அழுகை** அழுவது போலிருக்கும். **"எனக்கு நேரிட்ட சோதனைகளில்"** என்று ஆண்டவர் எவ்வளவோ உணர்வோடும் உருக்கத்தோடும் பேசுகிறார். அவர் பாவஞ்செய்ய முடியாதவரா யிருந்தால், அவர் சோதனைகளை மேற்கொண்டாரென்பதில் அவருக்கு ஒரு புகழ்ச்சியுமில்லை. பாவிகளாகிய நம்மோடு அவர் அனுதாபப் படவும் நமக்கு உதவி செய்யவும் அவரால் முடியாது. "எல்லா விதத்திலும் **நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்** பாவ மில்லாதவராயிருந்தார்" என்பதை ஒப்புக்கொள்ள ஏதுவில்லை. "எவ்விதத்திலும் தமது சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதா யிருந்தது" என்னும் வார்த்தைக்கு அர்த்தமில்லை. அவருடைய பரிசுத்தம் அவருக்கு யாதொரு பிரயாசமில்லாமல், இயல்பாகவே அவருக்கு அருளப்பட்ட ஈவாகயிருந்தால், அவர் சோதனைகளை ஜெயித்தாரென்பதும், பாவஞ் செய்யவில்லையென்பதும், வெறும் பேச்சேயன்றி அதில் யாதொரு பிரயோஜனமுமில்லை.

அவர் பாவம் செய்யக்கூடியவராயிருந்தும் பாவமற்ற பரிசுத்தராக ஜீவித்தது எப்படி? நம்மைப்போல் அவர் பாவத்தில் பிறவாமல் பரிசுத்த பிள்ளையாகப் பிறந்து வளர்ந்தது மெய்யே. ஆகிலும், அந்தப் பரிசுத்த பிறப்பினால்மாத்திரம் அவர் பாவம் செய்யக்கூடாதவராயிருந்தாரென்று தீர்த்துவிடவுங்கூடாது. பாவம் செய்வதற்கு ஒருவனுக்குள் முன்னமே பாவம் இருக்க வேண்டுமென்பது அவசியமல்ல. குறி தப்புவதே பாவம். அது அரைக்கால் அங்குலம் விலகினாலும் சரி, ஆயிரம் அடி விலகினாலும் சரி, இரண்டும் குறி தப்பினது தப்பினதே, தேவ சித்தத்தைவிட்டு விலகும் சித்தமே பாவம். பரிசுத்த தூதர்கள் அவ்வாறு விலகிப் பாவம் செய்தார்கள். பாவமற்ற ஆதிமனுஷன் அவ்வாறு விலகிப் பாவியானான். இரண்டாம் மனுஷனாகிய கிறிஸ்துவை அவ்வாறு விலகிப்போகும்படி செய்யவே சகல சோதனைகளும் அவருக்கு நேரிட்டன. அவரோ **பிதாவின் சித்தத்தையே தமது சித்தமாக்கி,** பிதாவுக்குப் பிரியமானவைகளையே எப்பொழுதும் செய்து, தீமையை வெறுத்து நன்மையை நாடி, சிலுவையின் மரணபரியந்தம் பிதாவுக்குப் பூரண கீழ்ப்படிதலுள்ளவராய் நடந்தார். பாவங்கள் நிறைந்துள்ள உலகத்தில் அவர் சஞ்சரித்தபோது, சாத்தானாலும், சத்துருக்களாலும், பொது ஜனங்களாலும், இனத்தாராலும், சீஷர்களாலும் எவ்வளவோ நெருக்கப்பட்டும் சோதிக்கப்பட்ட

போதிலும், பிதாவோடுள்ள, பூரண ஐக்கியத்தாலும், தேவ ஆவியின் அளவில்லாத பலத்தாலும், இடைவிடாத ஊக்கமான ஜெபத்தாலும் தமக்கு நேரிட்ட சகல சோதனைகளையும் மேற்கொண்டார். விதையானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், பின்பு கதிரில் விளைந்த தானியத்தையும் பலனாகத் தருவதுபோல, பரிசுத்த வித்தாகிய நமதாண்டவருடைய ஜீவியம், தேவபரிபூரணத்தால் பாவம் அணுகாமலும், பரிசுத்த கிரியைகள் குறையாமலும் வளர்ந்து பெருகினது.

அவருக்குச் சோதனைகள் நேரிட்டது மெய்யானால் கொஞ்சமாகிலும் அவர் கறைப்படாதிருந்தது எப்படி? மூஞ்சுறு (எலி) போனவிடத்தில் அதன் துர்நாற்றம் தங்குகிறதே. சோதனைகளுக்கு அவர் இணங்காமற்போனாலும் அதன் தோஷத்திற்குத் தப்பமுடியுமாவென்று கேட்கலாம். நாம் சோதிக்கப்படுவதற்கும் கிறிஸ்து சோதிக்கப்பட்டதற்கும் வித்தியாசம் மிகுதி. பரீட்சை, சோதனை இவ்விரண்டுக்கும் உள்ள பேதத்தை முந்திக் கவனித்துக்கொள்ளவேண்டும். **பரீட்சை தேவனால் வருகிறது; சோதனை சாத்தானால் வருகிறது, பரீட்சை உத்தமம் விளங்கும்படி; சோதனை பாவம் செய்யும்படி.** யோபு பரீட்சிக்கப்பட்டார்; தாவீது சோதிக்கப் பட்டார். சோதனைகள் பலவிதம். அவை ஆவியின்மூலமாய், புத்தியின்மூலமாய், மாம்சத்தின்மூலமாய் நமக்கு வரக்கூடும். ஆவிக்குரிய சோதனைகள் பெருமை, பொறாமை, பேராசை முதலியவை. புத்திக்குரிய சோதனைகள் சந்தேகம் மற்றும் உறுதியின்மை. மாம்சத்துக்குரிய சோதனைகள் தேக இச்சைகளுக் கேதுவானவை. சோதனைகள் இம்மூவகையாக நம்மைத் தாக்கலாம்.

சோதனைகள் நமக்குள்ளிருந்து புறப்படலாம், அல்லது நமக்குப் புறம்பேயிருந்து வரலாம். அவை நமக்குள்ளிருந்து புறப்படுமானால் நமது உள்ளான பாவத் தன்மையை அது வெளிப்படுத்துகின்றன. நமக்கு வெளியேயிருந்து வருமானால் நம்மை வஞ்சித்துப் பாவத்தில் விழச்செய்யும்படி வருகின்றன. முழுவதும் கெட்டுப்போன ஒருவனுக்குச் சோதனைகளில்லை. சோதிக்கப்படாமலே அவன் பாவஞ் செய்கிறவனாயிருக்கிறான். அவன் தான் பாவம் செய்வதுமன்றி மற்றவர்களையும் பாவம் செய்யும்படி சோதிக்கிறான். பாவமற்ற ஒருவர் சோதிக்கப் படலாம், அது அவருடைய உத்தமம் சிறந்து விளங்க ஏதுவாகும். ஒருவனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பூரணமாய் ஒன்றுகூடி தேவ சித்தத்திற்குக் கீழடங்கும்போது **அவனுக்குள்** சோதனையில்லை. புறம்பேயிருந்து அவனுக்குச் சோதனைகள் வரலாம். அது அவனை மேற்கொள்ளாது. உள்ளூர்க் கலகம்போல் ஒருவனுடைய ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும், மாம்சம்

ஆவிக்கு விரோதமாகவும் போராடும்போது, கீழான சுபாவம் மேலான சுபாவத்துக்குக் கண்ணியும் சோதனையுமாகிறது. நன்மையை விரும்புகிற அவனுக்குள் தீமையை விரும்புகிற சுபாவமும் காணப்படுகிறது. இவ்வாறு ஒருவனுக்குள்ளேயே போராட்டமிருக்குமானால் வெளிச்சோதனைகள் அவனை ஜெயிப்பது எளிது. ஒருவன் தனக்குள்ளேயே சோதிக்கப்படும் போது, அவன் தன்னைப் **பாவமற்றவன்** என்று சொல்லவே கூடாது. சோதனைகள் இவ்வாறு அவனவனுடைய உள்ளான தன்மைக்கேற்றபடியே கிரியை செய்கின்றன. **பாவாசையுள்ளவனை இன்னும் அதிகப்பாவம் செய்வதற்கும், நல்லவனைப் பாவம் செய்யத் தூண்டுவதற்கும், பாவமற்ற புருஷனை பரிசுத்தரென விளங்கச் செய்வதற்கும் சோதனைகள் ஏதுவாகின்றன.**

ஆகவே, சோதிக்கப்படுகிறவன் ஒன்றில் பாவம் செய்வான். அல்லது பாவம் செய்யாமலிருப்பான். இது அவனவனுடைய உள்ளான தன்மை போலிருக்கும். **நமது இரட்சகர் சோதிக்கப்பட்டது மெய். அச்சோதனைகள் அவருக்குள்ளிருந்து புறப்பட்டவைகள் அல்ல. புறம்பேயிருந்து அவருக்கு நேரிட்ட சோதனைகள்** அவருடைய உள்ளான பரிசுத்தத்தை வெளிப்படுத்தின. அவருக்கு நேரிட்ட சோதனைகள் மகா பலமும் வஞ்சகமுமானவை. அவை அவருடைய சரீரத்தையும் ஆத்துமத்தையும் ஆவியையும் தாக்கின. சற்றாகிலும் அவரை மேற்கொள்ள வழியில்லை. அவற்றின் தோஷம் கிட்ட அணுகாதபடி முழு வெறுப்போடு துரத்தி அடித்தார். ஆகையால் அவர் சோதிக்கப்பட்டும் பாவமற்றவராயிருந்தார். இது விஷயத்தில் நமக்கும் அவருக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. நமது பாவசுபாவம் வெளிக்கள்ளனுக்கு உட்கள்ளன் போலிருக்கிறது. அநேகமாய் நமக்குச் சோதனை வேறே, பாவம் வேறே என்றல்ல. நாம் பாவம் செய்யாமற்போனாலும், சில சமயங்களில் சோதனைகள் நம்மைக் கறைப்படுத்தாமற் போவதில்லை. நமதாண்டவர் இவ்விஷயத்தில் நமக்கு முற்றிலும் பிரிந்தவர். இதோ, உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் அதாவது **எனக்குள் ஒன்றுமில்லை** என்றார். அவர் சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாததினால் சோதிக்கப்படுகிற நமக்காக அவர் பரிதபிக்கவும் உதவி செய்யவும் வல்லவரா யிருக்கிறார்.

மார்க்கங்களை உண்டுபண்ணினவர்கள் பலருண்டு. அவற்றில் சன்மார்க்க விதிகள் அடங்கியிருக்கலாம். ஆகிலும், அவர்களில் ஒருவரும் பாவத்துக்குத்தப்பினவர்களல்ல. பெரும்பாலும் அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டே மரித்திருக்கிறார்கள். அம்மார்க்கங்களில் சேர்ந்திருப்பவர்களோ

அதைக் கவனியாமல், அவர்கள் எழுதிக்கொடுத்த உபதேசங்களைப் பிரதானமாக அனுசரித்து வருகிறார்கள். கிறிஸ்து மார்க்கமோ அப்படிப்பட்டதல்ல. கிறிஸ்து வேறே, கிறிஸ்து மார்க்கம் வேறேயல்ல. இரண்டும் உடலும் உயிரும்போல் இணைக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவின் மகிமையே கிறிஸ்து மார்க்கத்தின் மகிமை. அவர் ஏதாவது ஒரு விஷயத்தில் தவறியிருந்தால் கிறிஸ்து மார்க்கத்தின் சிறப்பு அடியோடே ஒழிந்தது. இப்படியிருக்க கிறிஸ்துவை நாம் யாருக்கு ஒப்பிடலாம்? அவரை மகாத்மாவென்றும் பெரிய ஞானியென்றும் சொல்வது கூடாது. அவரைப் போதகரென்றும் சிறந்த மாதிரியென்றும் பேசுவது போதாது. இதர மார்க்கத்தார் அவரை அறியாமல் தங்கள் மகாத்துமாக்களோடு ஒப்பிட்டுப் பேசுவது இயல்பு. யூதர்களும் அவரை அறியாமல் பூர்வ தீர்க்கதரிசிகளோடு ஒப்பிட்டுப் பேசினார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் அப்படி நினைப்பதும் பேசுவதும் எவ்வளவோ பாதகம். பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியை தாகோனுக்குச் சமமாக்கி, பக்கத்துக்குப் பக்கம் வைத்தபோது தாகோன் பட்ட பாடென்ன? பேதுரு கிறிஸ்துவை மோசேயோடும் எலியாவோடும் ஒப்பிட்டுப் பேசின நிமிஷத்தில் இருவரும் மறைய **இயேசு ஒருவரே** காணப்பட்ட இரகசியமென்ன? "என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்" என்று கேட்கிறார். உலகம் உண்டானது முதற்கொண்டு மனு மக்களுக்குள் தோன்றின மாசற்ற பரிசுத்த புருஷன் **இவர் ஒருவரே**. மனுக்குலத்தார் பாவத்தை நீக்கி அவர்களைப் பரிசுத்தம் செய்யத்தக்க வல்லமையுள்ள **மாசற்ற இரட்சகன் இவரே,** அவர் செய்த அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம் அவரது பாவமற்ற மாசற்ற ஜீவியமே. உலகத்தார் யாவரும் அவரை நோக்கிப் பார்ப்பதற்கு இரகசியம் அதுவே. நமது தேசத்தார் உண்மையாய் அவரிடத்தில் கற்றுக்கொள்ளும்போது, அவர் எவ்வளவோ உன்னதமானவரென்றும், யாரோடும் அவரை ஒப்பிட முடியாதென்றும் காண்பார்கள். அதுமாத்திரமல்ல, இன்னும் கொஞ்சம் நெருங்கி அவருடன் பழகுவார்களானால் "என் ஆண்டவரே, என் கடவுளே" என்றும் அறிக்கை யிடுவார்கள். அப்படிப்பட்ட காலத்தை ஆண்டவர் சீக்கிரம் கட்டளையிடுவாராக.

21
ஜெப புருஷன்
The Man of Prayer

கிறிஸ்து ஜெபித்தார். நாம் ஜெபிக்கக் கற்பித்தார். அவரைப்போல் ஜெபித்தவர்கள் யார்? அவரைப்போல் ஜெபிக்கக் கற்றுக்கொடுப்பவர்கள் யார்? வழியை அறிந்தவனைப்போல் வழிகாட்டக்கூடியவன் இல்லை. தேவனையும் தேவனிடத்தில் சேரும் வழியையும் அவரைப்போல் அறிந்தவர்கள் உண்டோ? ஜெப பக்தர்களின் அனுபவமும் அவர்கள் ஜெபத்தின்பேரில் எழுதிய நூல்களும் எவ்வளவோ அருமையானவைகள். ஆகிலும் ஊற்றோடு வாய்க்கால் ஜலங்களை ஒப்பிடத் தகுமோ? ஜெபமாவது என்னவென்றும், அதன் அவசியம் எவ்வளவென்றும் ஆண்டவர் அறிவார். ஜெபம் அவரைவிட்டு நீங்கினதில்லை. இடைவிடாமல் ஜெபித்தவர் அவரே. அவர் உபதேசித்தபோதும், கிரியைகள் நடப்பித்தபோதும் ஜெபம் நின்றதில்லை. அவர் பசியாயிருந்தபோதும், போஜனம் புசித்தபோதும் ஜெபம் நின்றதில்லை. அவர் உட்கார்ந்திருந்தபோதும் வழி நடந்தபோதும் ஜெபம் நின்றதில்லை. சிநேகிதர் அவரோடு பேசினபோதும், சத்துருக்கள் அவரைக் கேள்வி கேட்டபோதும் ஜெபம் நின்றதில்லை, அவர் சந்தோஷமாயிருந்தபோதும் துக்கத்தால் நிறைந்தபோதும் ஜெபம் நின்றதில்லை. அவர் புகழப்பட்ட போதும் இகழப்பட்டபோதும் ஜெபம் நின்றதில்லை. அவர் உயிரோடிருந்த நாள்களிலும் சிலுவையில் சாகும் நேரத்திலும் ஜெபம் நின்றதில்லை. பகலிலும் இரவிலும் ஜெபம் நின்றதில்லை. இதன் உண்மையை "என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை" என்று அவர் சொன்ன வார்த்தைகளால் அறியலாம். ஜெபம் அவருக்கு ஜீவன். கர்த்தர் எப்போதும் நம்மோடிருக்கிறார் என்று நாம் நிச்சயமாய்ச் சொல்லக் கூடுமானால், நாம் எப்போதும் கர்த்தரோடிருக்கிறோம் என்பது மெய். ஜெப ஜீவியத்தைப்போல் கர்த்தரையும் நம்மையும் ஒன்றாய் இணைப்பது வேறில்லை.

நமதாண்டவர் **ஜெபபுருஷன்**. அவர் ஜீவியமுழுவதும் ஜெபங்களால் நிறைந்திருந்தன. அவர் கற்பித்த ஜெபமும், யோவான் பதினேழில் வருகிற பிரதான ஆசாரிய மன்றாட்டும், இன்னும் சில சமயங்களில் சுருக்கமாய் அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளும் தவிர, அவர் செய்த ஜெபங்கள் எழுதப்படவில்லை. அவர் ஊழியத்தில் பிரவேசித்தபின் மாத்திரமல்ல, நாசரேத்திலிருந்த வருஷங்களிலெல்லாம் அவர் ஜெபித்திருப்பார். அவர் செய்த ஜெபங்களெல்லாம் எழுதப்பட்டு ஒரு புஸ்தகமாக நமக்குக் கிடைக்குமானால், அவருடைய இருதயத்தின் தன்மையையும் இன்னும் அநேக இரகசியங்களையும் அவைகள் நமக்கு வெளிப்படுத்தும். ஒரு மனுஷனுடைய உத்தம ஜெபத்தைப்போல் அவனுடைய ஆவிக்குரிய உள்ளான தன்மையை வெளிப்படுத்தக்கூடியது எது? மனுஷரோடு பேசுவது எப்படியிருந்தாலும், தேவனிடத்தில் அவன் சேரும்போதல்லவா உள்ளான நிலைமை வெளிப்படும். நமதாண்டவருடைய உள்ளான தன்மையை அறிய நமக்கு எவ்வளவோ ஆசையுண்டு. பிதாவுக்கும் அவருக்குமுள்ள சம்பந்தத்தையும் அவர் தாராளமாய் தமது ஜெபங்களில் சொல்லியிருப்பாரே. அவர் நாசரேத்தில் தாயாரோடும் சகோதரரோடும் இருந்த வேலை செய்துவந்த வருஷங்களில் செய்த ஜெபங்கள் எத்தனை! சிறு பையனாயிருந்தபோது "என் பிதாவுக்கடுத்த காரியங்களில் நான் இருக்கவேண்டியதில்லையா" என்று கேட்டவர், அந்தப் பிதாவோடு பேசாதிருப்பாரா? தமது தாயாருக்காகவும், சகோதரருக்காகவும், நாசரேத்து ஊராருக் காகவும் அவர் செய்த ஜெபங்கள் எத்தனை! வயலோரங்களிலும், சோலைகளுக்குள்ளும், மலைகள்மீதும் அவர் உலாவப்போகும் காலை மாலைகளில் ஜெபித்திருக்கமாட்டாரா? மகா பிரமாண்டமான வேலையை உலகத்தில் நிறைவேற்ற வந்தவர் ஜெபிக்காதிருப்பதெப்படி? நமதாண்டவருக்கு ஜெபம் அவசியமா? அவருக்கு என்ன குறை? அவர் தேவனானால் தேவன் ஜெபிக்க வேண்டியதென்ன?

ஜெபத்தின் தன்மை இருவிதம். "ஜெபம் அவசியமில்லை, எல்லாம் கடவுள் விதித்ததுபோல் நடக்கும், நமது ஜெபத்தால் தேவ தீர்மானங்களை மாற்ற முடியுமாவென்று" பேசுகிறவர்கள் பலர். இவர்கள் நம்மைப்பார்த்து: நீங்கள் உணவு தாரும், உடைதாரும், நோய்கள் துன்பங்களை நீக்கும், மழை தாருமென்று பல காரியங்களைக் கேட்டு கடவுளோடு வியாபாரம்பண்ணுகிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். ஜெபத்தின் வல்லமையை அறிந்தவர்கள் இப்படிப் பேசமாட்டார்கள். இதைத்தாரும் அதைத்தாரும் என்று கேட்பதே ஜெபம் என்று நாம் சொல்லுகிறதில்லை. இருதயத்தின் நிறைவிலிருந்து வாய் பேசுவதே ஜெபம். பிதாவின் அன்பினால் நிறைந்த திருக்குமாரன் தமது

பிதாவோடு பேசாதிருப்பது எப்படி? பரத்தில் எக்காலமும் கூடயிருந்து சம்பாஷித்தவர், உலகத்துக்கு வந்தவுடன் சம்பாஷணையை நிறுத்தி விடுவாரோ பிதா தமது குமாரனோடு கூடயிருக்கும்போது அவர் பேசாதிருக்க முடியுமா? பிதா குமாரனிடத்தில் பேசும்போது குமாரன் பிதாவோடு பேசவேண்டாமா? ஆகையால், இதற்காக அதற்காகமாத்திரம் அவர் ஜெபிக்கிறவராயிராமல், அவர் ஜெபத்தில் மிகுதியான பாகம் சம்பாஷணையாயிருந்தது என்று அறிகிறோம். இது பிதா புத்திர சம்பந்தத்தால் உண்டான சம்பாஷணை. அருமையான சிநேகிதர் இருவர் அடிக்கடி சந்தித்துப் பேசுவது ஒருவரிடத்திலிருந்து ஒருவர் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் மன்றாட்டாயிராமல், அவர்கள் அன்புக்கு அத்தாட்சியாக யிருக்கிறது. இதுபோலவே, சிநேகிதர் தூரத்திலிருக்கும்போது கடிதப் போக்குவரத்தால் பேசிக்கொள்ளுகிறதுமுண்டு. ஒரு தகப்பன் தன் அறையில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்த போது, பிள்ளை அவருக்குமுன் வந்து உட்கார்ந்தது. தகப்பன் பிள்ளையைப் பார்த்து: உனக்கு என்னவேண்டும் என்று கேட்க, அந்தப் பிள்ளை: எனக்கு ஒன்றும் வேண்டாம், உங்களைப் பார்த்துக்கொண்டிருக்க ஆசையாயிருக்கிறது என்று சொன்னது. நமது இரட்சகருடைய ஜெபங்களில் மிகுதியான பாகம் அவருக்கும் பிதாவுக்குமுள்ள சம்பாஷணையும், அவர் பிதாவின் சமுகத்தில் தங்கும்படியான விருப்பமுமே.

இது ஜெபத்தின் ஒருபாகத்தைமாத்திரம் காட்டுகிறது. நமக்குத் தேவையான காரியங்களுக்காக தேவனிடத்தில் கேட்பது ஜெபத்தின் மறுபாகம். ஆண்டவர் அவ்வாறான காரியங்களுக் காகவும் ஜெபித்தார். இது அவருடைய மெய்யான மனுஷீகத்தை வெளிப்படுத்துகிறது. அவர் தமது சகோதரரைப்போல் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய மெய்யான மனுஷனாயிருந்தார். அவர் பாதித் தேவனும் பாதி மனுஷனுமல்ல. அவர் பூரணமான தேவனும் பூரணமான மனுஷனுமாயிருந்தார். அவர் தம்மைப்பற்றிச் சொல்லியதும், அவரில் விளங்கியதுமான சில காரியங்கள் தேவனுக்குமாத்திரம் உரியதேயல்லாமல் மனுஷன் உச்சரிக்கக்கூடியதல்ல. அதுபோலவே அவரைப்பற்றிய மற்றக் காரியங்கள் அவரை மனுஷனென்று திருஷ்டாந்தப்படுத்துகின்றன. அவர் தேவ மனிதனானபடியால் தேவகுமாரனாக பிதாவோடு இடைவிடாமல் சம்பாஷிக்கிறவரும், மனுஷகுமாரனானபடியால் ஜெபத்தின்மூலமாய் தேவனைச் சார்ந்து பிழைக்கிறவருமா யிருந்தார். அவர் மாசற்ற புருஷனாயிருந்தும் எல்லாரையும்போல தேவனைச்சார்ந்து பிழைக்க வேண்டியது அவசியமாயிற்று. மனுஷன் எவ்வளவு பரிசுத்தமாய் ஜீவித்தாலும், தன்னில் தானே சம்பூரணமுள்ளவன் அல்லவென்கிற சத்தியத்தை இது போதிக்கிறது. பாவமற்ற அவருக்கு அவ்வளவு ஜெபம்

வேண்டுமானால் அற்பரும் அறிவீனருமான நாம் ஜெபமின்றிப் பிழைப்பதெப்படி?

ஜெப ஜீவியம் அந்தரங்கமானது. அதிலுள்ள இரகசியங்கள் ஜெபிக்கிறவனுக்கும் தேவனுக்கும்மாத்திரம் தெரியும். நமதாண்டவருடைய ஜீவியத்தில் மிகுதியான ஜெபங்கள் அந்தரங்கமானவை. சீஷர்கள் அவைகளை அறிந்ததில்லை. அவர்கள் அவைகளை எழுதிவைக்கவில்லை. அவர் அந்தரங்கத்தில் ஜெபிக்கும்படி அதிகாலையில் எழுந்திருந்து வனாந்தரமான இடங்களுக்குத் தனித்துப்போவதுண்டு. அவர் கூட்டத்தைவிட்டு விலகி வனாந்தரத்திற்கு சென்றோ, மலைமீது ஏறியோ தனித்து ஜெபிப்பது வழக்கம். பலஸ்தீனா மலைகள் அடர்ந்த தேசம். ஒரு கிராமத்திலிருந்து இரண்டொரு மைல்தூரம் போனால் மலைகளில் ஏறலாம். ஊரைவிட்டு நீங்கி, சில வயல்களைக் கடந்ததும் மலைகளின் அடிவாரத்தைச் சேர்ந்து வெகு அமைதியாய்த் தனித்திருந்து ஜெபிக்கலாம். அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்ததும் இவ்வாறு தனித்திருக்கக்கூடிய மலைகள் எப்பக்கம் இருக்கிறதென்றும், அதற்குப் போகக்கூடிய குறுக்குவழி எதுவென்றும் பார்த்துக்கொள்வார். பிரயாணிகள் ஒரு பட்டணத்துக்குப் போகும்போது அங்கே தங்க, சாப்பிடக் கூடிய வசதியான சத்திரம் உண்டாவென்றும், பார்க்கத்தகுந்த காட்சிகள் எவையென்றும் முந்தி விசாரிப்பார்கள். ஆண்டவர் எங்கே போனாலும் தமது பிதாவோடு தனித்திருப்பதற்கு ஏற்ற இடமுண்டோ என்று பார்ப்பதே அவர் பிரதான தேடுதலா யிருந்தது. அவர் ஒரு வீட்டிலிருந்தாலும் அங்கே தனித்து ஜெபிக்க அறைகள் கிடையாது. எல்லாரும் ஒன்றாயிருந்து சம்பாஷிப்பதால். அங்கே அசைதலுமிராது. அவர் ஊரைவிட்டுத் தனித்துப்போன காரணம் இதுவே. பகலெல்லாம் வேலையிருக்குமானால் இரவை ஜெபத்தில் கழிப்பார் (லூக்கா 6:12).

தனித்துப்போவது இருவிதத்தில் நமக்கு அனுகூலமாகும். ஜன சந்தடியைவிட்டுப் பிரிகிறோம். அதுமாத்திரமல்ல, தேவசமுகம் நமது ஆத்துமாவுக்கு பிரத்தியட்சமாகிறது. தனித்துப்போராடின யாக்கோபையும், வயல்வெளியில் தியானித்துவந்த ஈசாக்கையும் நினைத்துக்கொள்வோம். நாம் வயல்களில், சோலைக்குள், தனித்து ஜெபிக்கும்போது நமது ஆவி இயற்கையாகவே பரவசப்படுகிறது. கர்த்தரை முகமுகமாய்ச் சந்திப்பதுபோலிருக்கிறது. ஜெபம் மகா இன்பமாகிறது. தேவாசீர்வாதத்தோடு திரும்பி வருகிறோம். ஒரு மலையின்மேல் ஏறி தனித்து ஜெபித்தால் இன்னும் அதிகமாய் நமது இருதயம் பரவசப்படும். அங்கிருந்து கீழே பார்த்தால் கிராமங்கள் தெரியும், ஆனால் சத்தம் ஒன்றும் கேளாது. மேலே ஆகாயத்தைப் பார்த்தால் தேவன் நமது சமீபத்தில் இருப்பதுபோல் தோன்றும்.

நமது வாயினின்று பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாயிருக்கும். நமது முழு இருதயத்தையும் தாராளமாய்க் கர்த்தரிடத்தில் ஊற்றலாம். அவருடைய நிறைவான ஆசீர்வாதத்தை நிச்சயமாகவே பெற்றுக் கொள்ளலாம். ஆண்டவர் தனித்து ஜெபிக்கும்படி வனாந்தரத்தையும் மலைகளையும் விரும்பினதற்குக் காரணம் இதுவே.

அவர் செய்த ஏராளமான வேலைகளையும், அதின் உத்தரவாதத்தையும், அவருக்கு இடையூறாக நேரிட்ட சோதனைகளையும் கவனிக்கும்போது ஜெபம் அவருக்கு இன்றியமையாத அவசியமாயிருந்தது. ஏதேது காரியங்களுக்காக அவர் ஜெபித்திருப்பார் என்பதை கணக்கிட முடியாது. அவர் இடைவிடாது ஜெபித்தார். சில சமயங்களில் இரா முழுவதும் ஜெபித்தார். விசேஷித்த சமயங்களில் விசேஷித்து ஜெபித்தார். அவர் பன்னிருவரைத் தமக்கு அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டது மகா முக்கியமான சமயம் அநேக சீஷர்கள் பின் சென்றார்கள். அவர்களில் பன்னிரண்டுபேர்மாத்திரம் அவருக்கு வேண்டும். கிறிஸ்து மார்க்கத்திற்கு அவர்கள் அஸ்திபாரக் கற்களாயிருக்கவேண்டியவர்கள். அவர்களை அப்போஸ்தலராக ஏற்படுத்துவது அவருக்கும், அவர்களுக்கும், உலகத்துக்கும் மகா முக்கியமான விஷயம். இதற்காக இராமுழுதும் ஒரு மலைமீதிருந்து ஜெபம்பண்ணிக் காலையில் இறங்கிவந்து அந்தப் பன்னிருவரையும் அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டார். யூதாஸ் ஏற்படுத்தப்பட்டதும் அந்த ஜெபத்தின் பலனே. அவன் துரோகியாய்ப் போனதால் ஆண்டவர் தப்பிதமாக அவனைத் தெரிந்து கொண்டார் என்று நினைக்கக்கூடாது. இதே பிரகாரம் அவர் வேறொரு சமயம் ஜெபம்பண்ணினபின்பு தமக்கு நேரிடும் பாடுகள் மரணத்தைச் சீஷர்களுக்குத் தெரியப்படுத்தினார். **மகா முக்கியமான காரியங்களை அவர் செய்யத் தொடங்குமுன் அவர் வெகுநேரம் ஜெபிப்பது வழக்கம்.** சங்கடமான காரியங்கள் நமக்கு நேரிட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் நாம் திகைக்கும்போது **ஜெபமே** நமது புகலிடம். காரியங்களை விவரமாய் கர்த்தருக்குச் சொல்லாமல், நாமே அவைகளை நினைத்து வருந்துவதினால், கவலையும் அந்தகாரமும் நமது ஆத்துமாவைச் சூழ்ந்துகொள்ளும். மலைபோன்ற விஷயங்கள் தேவ பாதத்தில் வைக்கப்படும்போது பனிபோல் அகன்றிடும். நாம் செய்ய வேண்டியது இன்னதென்று கர்த்தரே நமக்குப் போதிப்பார்.

வேலைகள் எவ்வளவுக்கு அதிகரித்ததோ அவ்வளவுக்கு அதிகமாய் அவர் ஜெபித்தார். ஜனங்கள் இடைவிடாமல் அவரை நெருக்கினார்கள். அவர்களுக்கு வசனத்தைப்

போதித்தார். நோயாளிகள் திரளானபேர் வந்தார்கள். அவர்களைக் குணமாக்கினார். ஜனங்கள் இவ்வாறு வருவதும் போவதுமாயிருந்தபடியால் அவர் சாப்பிடவும் நேரமில்லாதிருந்தது. அப்படியிருந்தும் அவர் ஜெபிப்பதை நிறுத்தவில்லை. ஜெபத்திற்கு **வேலை ஈடென்றும்** அவர் ஒருபோதும் நினைக்கவில்லை. வேலை எவ்வளவுக்குச் செய்தாரோ அவ்வளவுக்கு ஜெபித்தார். "அவருடைய கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று, திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும் அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சௌக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள். அவரோ வனாந்தரத்தில் **தனித்துப் போய்** ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்" *(லூக்கா 5:15,16)*. இதுபோலவே அவர் தம்மிடத்தில் வந்த ஜனங்களுக்கு வெகு நேரம் உபதேசித்து, அவர்களை அற்புதமாகப் போஷித்தபின், **தனித்து** ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறினார். **அவர் வேலைக்கு முன்னும் ஜெபித்தார், வேலைக்குப் பின்னும் ஜெபித்தார்.**

வேலையின் உத்தரவாதத்தை நாம் உணரும்போது வேலைக்கு முன் ஜெபிக்கலாம். வேலை முடிந்தபின் ஜெபிக்கும் வழக்கம் நமக்குண்டா? வேலை அதிகம், ஆகையால் ஜெபிக்க நேரமில்லையென நாம் சொல்லலாம். நாம் ஜெபிக்க நேரமில்லை என்கிற காரணத்தையே ஆண்டவர் தாம் ஜெபிப்பதற்குக் காரணமாக்கினார். எனக்கு **அதிகமான** வேலை இருக்கிறது, ஆகையால் நாம் **அதிகமாய்** ஜெபிக்க வேண்டும் என்றார். நாம் பிரசங்கித்தபின் அல்லது ஒரு முக்கியமான வேலையை முடித்தபின், செய்த வேலையின் சிறப்பைப்பற்றிப் பேசுகிறோம். எல்லாம் நன்றாய் நடந்ததென்று நாம் பேசிக்கொள்வதே நமக்கு ஆறுதல். ஆண்டவரோ மகத்துவமான காரியங்களைச் செய்தபின்பு தேவசமுகத்தில் தங்கியிருப்பதை அதிகமாய் நாடினார். வேலைக்கு முன் ஜெபம் எவ்வளவு அவசியமோ, வேலைக்குப்பின்னும் ஜெபம் அவ்வளவு அவசியம் என்பதை தமக்குள் உணர்ந்தார். தாம் செய்த ஊழியத்தின் வழியாய்ச் செலவான வல்லமையை ஜெபத்தின்மூலமாய்த் திரும்ப நிரப்பினார். சாத்தான் சோதித்து மேற்கொள்ள இடமுண்டாகாத படி இவ்வாறு முன்னும் பின்னும் பிதாவைச் சார்ந்திருந்தார்.

நமது வேலைகள் ஜெபத்தில் ஆரம்பிக்கப்படவேண்டியது போல, செய்யப்பட்ட வேலைகள் ஜெபத்தால் மூடப்பட வேண்டியது. அப்போது நமது ஊழியம் மலைமேல் ஏறும் ரெயில்வண்டியை, முன் என்ஜின் இழுக்கப் பின் என்ஜின் தள்ளுவதுபோல இருக்கும். ஜெபமில்லா ஊழியம் பாழாவது போல ஜெபம் தொடராத ஊழியமும் விருதாவாகும். நாம் செய்த ஊழியம் பலிக்கும்படி ஜெபம் அவசியம். இன்னும் செய்யவேண்டிய வேலைக்குப் பெலன் கிடைக்கும்படி ஜெபம்

அவசியம் செய்த வேலையில் திருப்தியடைந்துவிடாதபடி ஜெபம் அவசியம். **வேலையை நன்றாய் நடத்தினோம் என்கிற பெருமை வராதபடி ஜெபம் அவசியம்.** பிரசங்கத்திற்கோ அல்லது வேறொரு வேலைக்கோமுன் நம்மில் காணப்படும் பயபக்தியும் தாழ்மையும் அவ்வேலை முடிந்த பின் நம்மில் காணப்படுகிறதில்லை. தேவன் கிருபையாய் நம்மை வல்லமை யோடு உபயோகித்தார் என்பதை மறந்து, நாமே பெரிய காரியங்களைச் செய்து விட்டதாகவும், அரிதான விஷயங்களைப் பேசினதாகவும் எண்ணி தற்பெருமைக்கு இடங்கொடுக்கிறோம். அச்சமயத்தில் சோதனைக்காரன் தன் தூதர்களை அனுப்ப, பிரிய சிநேகிதர்களான இவர்கள் நாம் செய்த வேலையைப் புகழ்ந்து பேசும்போது, இன்னும் அது நமக்கு மோசமாகும். பெருமையைப் போல் தேவனை நம்மை விட்டுப்பிரிக்கக் கூடியதெது? தூதர்கள் தள்ளப்பட்டது எதினாலே? யாருக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்? **ஊழியத்தால் வரக்கூடிய பெருமையைக்குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அதற்கு கைகண்ட மருந்து ஜெபமே.** பிதாவின் சமுகத்தில் எப்பேர்ப்பட்ட பெருமையும் அழிந்துபோகும். பெருமையாகிய அக்கினியை அவிக்கக்கூடிய வெள்ளம் **ஜெபமே.**

ஊழியப் **பெருமைக்குத்** தப்புவதுமாத்திரமல்ல, செலவான வல்லமையை நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் ஜெபம் வேண்டும். நாம் முழு வாஞ்சையோடு ஜீவவசனத்தை வைராக்கியத்துடன் கூறும்போது நம்மை மறந்துபோகிறோம். நமது ஜீவனையே அவ்வூழியத்தில் ஊற்றுகிறோம். பேசின பின்பு நாம் எவ்வளவோ சோர்ந்துபோகிறோம். நமது பலம் நம்மைவிட்டு நீங்குகிறது. ''என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்.'' நாம் பேசினதெல்லாம் அரைமணி நேரமோ, ஒருமணி நேரமோ இருக்கலாம். **உத்தம ஊழியத்தில் மனுஷனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் செலவாகின்றன.** நம்மிலிருந்து ஜீவன் போகவில்லையென்றால் ஜனங்கள் உயிர்ப்பிக்கப்பட மாட்டார்கள். ஐயோ, என் பலம் போகுமே, என் நெஞ்சு நோகுமே, என் ஆயுசு குறையுமே என்று தங்கள் சத்தத்தைத் குறித்தும், தங்கள் உயிரைக்குறித்தும் ஜாக்கிரதையா யிருக்கிறவர்கள் உத்தம ஊழியர்கள் அல்ல. உத்தம ஊழியர்கள் தங்கள் வேலையில் தங்களை மறந்துபோகிறார்கள். கிறிஸ்துவின் அன்பும் ஆத்தும வாஞ்சையும் அவர்களை முழுவதும் ஆண்டு கொள்ளுகின்றன. ''தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தி னிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துவிடுகிறவன் அதைத் திரும்பக் கண்டடைவான்.'' கர்த்தர் தமது ஊழியர்களைப் பலப்படுத்தும்விதம் ஆச்சரியம். நாம் எவ்வளவு வேலை

செய்திருந்தாலும் இன்னும் வேலை செய்யக்கூடிய பலத்தை அவர் அருளுகிறார். அவருடைய ஊழியத்தில் நமது பலமும் சத்துவமும் செலவாகும்போது, அவர் திரும்பவும் நம்மைப் புதுப்பலத்தாலும் சத்துவத்தாலும் நிரப்புகிறார். இந்தப் பலத்தை ஜெபத்தின்மூலமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறோம். இந்த இரகசியத்தை நாம் கர்த்தரிடத்தில் கற்றுக்கொண்டோம். ஆகையால் நமது ஊழியத்துக்கு முன்னும், ஊழியத்துக்கு பின்னும் ஜெபிக்கத் தவறாதிருப்போமாக. ஆத்திரமும் ஓட்டமும் ஊழியத்தைக் கெடுக்கும். அமர்ந்த ஆவியோ ஊழியத்துக்கு அநுகூலம். ஊக்கமான ஜெபம் அமர்ந்த ஆவியைப் பிறப்பிக்கும். ஊழியத்துக்குப் பின்பு ஆவி கோஷ்டத்திலிருக்கும். அது மறுபடியும் அமர்ந்த நிலைமைக்கு வரவேண்டும். வேலைக்குப்பின் செய்யும் ஜெபம் அந்த அமர்ந்த சிந்தையைக் கொண்டுவரும்.

ஊழியத்துக்கு முன்னும் ஊழியத்துக்கு பின்னும் ஆண்டவர் ஜெபித்ததுமல்லாமல், தமக்கு நேரிட்ட போராட்டமான சோதனையிலும் அவர் ஊக்கமாய் ஜெபித்தார். இந்தப் போராட்டத்தையும் ஜெபத்தையும் கெத்சமெனேயில் காண்கிறோம். அவர் தமது சீஷரைக்கூடவைத்துச் செய்த பிரதான ஆசாரிய மன்றாட்டு எவ்வளவோ அருமையானது. அதன்பின்பு அவர் தோட்டத்தில் பிரவேசித்தார். யூதாஸ் ஏற்கனவே புறப்பட்டுப் போய்விட்டான். பதினொருவரில் எட்டுப்பேரைத் தோட்டத்தின் வாசலிலேயே நிறுத்தி, மற்ற மூவரையும் தோட்டத்திற்குள் அழைத்துப்போய், அவ்விடத்தில் சொல்லமுடியாத துயரடைந்தார். மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டார். மிகவும் வியாகுலப்படவும் திகிலடையவும் தொடங்கினார். அவர் இதற்குமுன் எவ்வளவோ சோதனைகளையும் பாடுகளையும் அனுபவித்திருந்தாலும், இந்த வேளைக்கு ஒப்பான போராட்டம் இதற்குமுன் அவருக்கு உண்டானதில்லை. இந்தத் துயரமான காட்சியைப் பார்க்கத்தக்க விசுவாசம் சீஷரில் எட்டுபேருக்கு இல்லாததினாலே அவர்களை ஞானமாகத் தோட்டத்திற்கு வெளியே நிறுத்தினார். பேதுரு யாக்கோபு யோவான் மூவரும் மற்றவர்களைப் பார்க்கிலும் தமது மகத்துவங்களை அறிந்து, தம்மேல் பற்றுதலுள்ளவர்களாகையால் அவர்களைமாத்திரம் தம்மோடு வைத்துக்கொள்ளச் சித்தமானார். அவருடைய மனுஷீகமானது அப்போராட்டமான வேளையில் அவர்களுடைய துணையை நாடினது. என்றாலும், தமக்கு நேரிட்ட பலத்தசோதனையில் அவர்கள் இடறலடைவார்கள் என்பதை ஆண்டவர் அறிந்து: நீங்கள் சோதனையில் அகப்பட்டுக்கொள்ளாதபடிக்கு விழிப்பாயிருந்து ஜெபம்பண்ணுங்கள்; நானும் ஜெபம்பண்ணுகிறேன் என்று சொல்லி, சற்று தூரத்தில்போய் ஜெபித்தார். அதை ஜெபம் என்று சொல்ல லாமோ? கொடிய போராட்டம் என்று சொல்லலாமோ?

அடிப்பாரில்லாமற் கீழே விழுந்ததென்ன? குத்துவாரில்லாமல் இரத்தம் தேகத்தினின்று வடிந்ததென்ன? இது ஆவிக்குரிய மகா பயங்கரமான கடைசிப் போராட்டம். அந்தகார அதிபதி தன் முழுச்சேனைகளோடும் பூரணபலத்தோடும் அவரை விழுங்குபடி வந்துவிட்டான். அவைகளை இங்கே விஸ்தரிக்காமல் விடுவோம். "பாத்திரமும் வேளையும்" என்னும் அதிகாரத்தில் விஸ்தாரமாய்க் காணலாம். சுருக்கிச் சொல்லவேண்டுமானால், நமது இரட்சகர் நமக்காகப் **பாவமாக்கப்பட்டதே** அவரடைந்த அகோர அவஸ்தைக்குக் காரணம். இந்த பயங்கரமான போராட்டத்தை ''அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்'' செய்த **ஜெபத்தால்** மேற்கொண்டு பூரண வெற்றியடைந்தார். ஜெபிக்காதபடி தூங்கிக்கொண்டிருந்த சீஷரோ சோதனையால் மேற்கொள்ளப்பட்டு ஓட்டம் பிடித்தனர். ஜெபத்தால் மேற்கொள்ளக்கூடாத காரியமில்லை. ஜெபத்துக்கு தேவ வல்லமை உண்டு. ஏனென்றால் ஜெபத்தில் விசுவாசியல்ல, **தேவனே** கிரியை செய்கிறார். பேதுரு அடைபட்டிருந்தபோது சபையாரின் ஊக்கமான ஜெபம் அவர் கைகளில் கட்டியிருந்த சங்கிலிகள் கீழே விழவும். இருப்புத் தாழ்ப்பாள்கள் உடைந்து, இருப்புக் கதவுகள் திறவுண்டுபோகவும் செய்தது. அங்கே ஜெபித்தவர்கள் ஏழை விசுவாசிகள், கிரியை செய்தவரோ தேவன். நமது ஊக்கமான ஜெபங்கள் இன்றும் ஆச்சரியமான காரியங்களை நடப்பிக்கின்றன.

இவ்வாறு ஜீவகால முழுவதும் ஜெபித்த ஆண்டவர், சிலுவையில் அறையுண்டு மரிக்கும்போது அவர் திருவாயினின்று புறப்பட்ட கடைசி வார்த்தைகளும் ஜெபமே. "பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார். ஆகையால் இவரை **ஜெபபுருஷன்** என்று சொல்லத்தகும். ஜீவ காலப்பழக்கமே மரண வேளையிலும் காணப்பட்டது. நமது கடைசி வார்த்தைகள் எப்படிப்பட்டதாயிருக்குமோ? யார் சொல்லக்கூடும்? அநேக பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளும் நமது ஆண்டவரைப்போலவே பிதாவின் கைகளில் தங்கள் ஆவியை ஒப்புவித்து மரித்தார்கள். அவரவருடைய ஜீவகாலத்தின் வாஞ்சையும் பழக்கமும் எதுவோ, அதுவே அவர்கள் சாகும் வேளையில் அவர்கள் வாயினின்று புறப்படும்.

இதுவரை நமதாண்டவருடைய ஜெப ஜீவியத்தைக் கவனித்த நாம், ஜெபத்தின்பேரில் அவர் செய்த **போதனையைக்** கவனிப்போம். அவைகள் ஒவ்வொன்றையும் விஸ்தரிக்காமல் சுருக்கமாய்ப் பார்ப்பதே நல்லது. ஜெபத்தில் **பிதாவை நோக்குவது** பிரதானம். தேவனிடத்தில் சேருகிறவன் அவர் தன்முன் இருப்பதைக் காணவேண்டும். அவரை மறந்து ஜெபிப்பது நமக்கே நாம் செய்துகொள்ளுகிற மந்திரமாகும். நமது

விண்ணப்பங்கள் நமது கவனத்தை முக்கியமாய் ஆண்டு கொள்ளும்போது, நமது விண்ணப்பங்களே நமக்கு தேவனாகிறது. நாம் இடைக்கிடையே ஆண்டவரே, கர்த்தாவே என்று சொல்லிக்கொண்டாலும், நமது கவனம் முழுவதும் நமது விண்ணப்பங்களையே நோக்குகிறது. அப்படிப்பட்ட ஜெபங்கள் "தேவனை நோக்கி" ஜெபிக்கிறவைகள் அல்ல (அப். 12:5). வேறு சமயங்களில் நமது ஜெபங்கள் **மனுஷரை நோக்கி** ஜெபிக்கிறதாயிருக்கின்றன. நமது கவனம் முழுவதும் நம்மோடிருக்கிற அல்லது தூரமாயிருக்கிற மனுஷரையே பிரதானமாய் நோக்கியிருக்கிறது. அவைகள் தேவனை நோக்கின ஜெபங்கள் அல்ல. ஜெபத்தில் தேவசமுகத்தைத் தரிசிப்பதே பிரதானம். அவர் செவிகள் நமது கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிற தென்கிற நிச்சயமே ஊக்கமாய் ஜெபிப்பதற்கு இரகசியம். என் அன்புள்ள பிதா என்னோடிருக்கிறார், என்னைக் கிருபையோடு பார்க்கிறார், என் ஜெபத்தைக் கேட்க ஆசையாயிருக்கிறார் என்பதைப்போல் நமது ஜெபத்துக்குத் தைரியங்கொடுப்பது வேறொன்றில்லை. ஜெபிக்கக் கற்றுக்கொடுத்த இரட்சகர், தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்கும்படி கவலைப்படவில்லை. மதிகெட்டவன் தவிர மற்றெல்லாரும் தேவன் இருக்கிறார் என்பதை ஒப்புக் கொள்வார்கள் எனபது அவருக்குத் தெரியும். அந்த நிச்சயத்தின் பேரில் மற்ற காரியங்களைத் தாராளமாகப் போதித்தார்.

ஜெபம் இருதயத்தின் வாஞ்சை. அது வாயின் வாஞ்சையல்ல. "நீ **விரும்புவதை** என்னிடத்தில் கேள்" என்றார். விருப்பம் இருதயத்துக்குரியதேயல்லாமல் உதடுகளுக்குரியதல்ல. இருதயம் விரும்புவதை வாய் வசனிக்கும். தேவன் வாய்ச் சொல்லைக் கேட்டல்ல, இருதயத்தைக் கவனித்தே உத்தரவு அருளுகிறார், மனுஷர் காணும்படி வாயினால் ஜெபித்த மாயக்காரரை அவர் கடிந்துகொண்டு, நமது ஜெபங்கள் அந்தரங்கமாயிருக்கும்படி போதித்தார். நாம் மனுஷரை விட்டுப்பிரிந்து தனித்த இடத்திலோ அல்லது வீட்டின் அறைக்குள்ளோ பிரவேசித்து ஜெபிக்கும்போது, தேவனை முகமுகமாய்ச் சந்திப்பதினால் நமது ஜெபங்கள் உள்ளத்திலிருந்து உண்மையாகப் புறப்படும். அந்தரங்கத்தில் பார்க்கிற நமது பிதா வெளியரங்கமாய் நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் பலனருளுவார். உன் கதவைப்பூட்டி அறைக்குள் ஜெபம்பண்ணு என்றார். தொலைபேசிமூலமாய்ப் பேசின ஒருவர் தன் சிநேகிதன் சொன்னது தனக்குக் கேட்கவில்லை என்றார். அந்தச் சிநேகிதன் தொலைபேசிமூலமாக: நீர் கதவுகளைப் பூட்டிக்கொண்டு கேளும் என்று இவருக்குச் சொல்ல, அவ்வாறு இவர் கதவைப்பூட்டிப் பேசினபோது சிநேகிதன் பேசினவைகளைத் தெளிவாய்க் கேட்டார். வெளிச்சத்தங்களே அவர் கேட்பதற்குத் தடையாயிருந்தன. நாம் ஜெபிக்கும்போது நாம்மாத்திரமல்ல,

தேவனும் நமது ஆவியோடு பேசுகிறார். தமது ஆலோசனையை நமக்கு வெளிப்படுத்துகிறார். அவர் சத்தம் கேட்பதற்கு அமைதல் வேண்டும். **தனித்து அந்தரங்கத்தில் ஜெபிக்காதவர்கள் கூட்டத்தில்மாத்திரம் ஜெபிப்பது மாயமாகும். அப்படிப்பட்ட ஜெபங்கள் மனுஷருக்காகச் செய்யப்பட்டவைகளேயன்றி தேவனை நோக்கிச் செய்யப்பட்டவைகள் அல்ல.** அவைகள் வாயின் வசனிப்பும் வீண் வார்த்தைகளுமேயல்லாமல் உள்ளத்திலிருந்து புறப்பட்ட உத்தம ஜெபங்கள் அல்ல.

தேவனை நோக்கி ஜெபிப்பதற்கு நாம் பயப்பட அவசியமில்லை. பெற்றோரிடத்தில் பிள்ளைகள் போகவும், தங்களுக்கு வேண்டியவைகளைக் கேட்கவும் அஞ்சுவார்களா? அவர்கள் அவ்வாறு கேட்கும்போது தீமையானவைகளையல்ல நன்மையான காரியங்களைப் பெற்றோர் சந்தோஷத்தோடு கொடுக்கிறார்களே. அப்படியிருக்க, பரமபிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளும் பிள்ளைகளுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்கிறார். தகப்பன் என்னும் சிறந்த பேருக்குத் தகுதியற்றவர்களாகிய நாம், நமது பிள்ளைகள்மேல் கவனமும் பிரியமும் வைத்து, அவர்களுக்குத் தேவையான நன்மைகளை எப்படியாவது கொடுக்கும்படி நாடுகிறோமே, அப்படியிருக்க **தகப்பன்** என்னும் நாமத்துக்கு சர்வலட்சணங்களும் பொருந்திய பரமபிதா நமக்கு நன்மை செய்யாதிருப்பது எப்படி? என் அன்பும் கிருபையும் நிறைந்த பிதாவே, என்று நாம் தாராளமாய் அவரிடத்தில் போவதற்கு இதைப்பார்க்கிலும் தெளிவான திருஷ்டாந்தம் வேண்டுமோ?

நீங்கள் தகப்பனும் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் என்று நமதாண்டவர் சொன்னதை நாம் சந்தேகிக்கலாமா? அதையே ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு பிதாவின் சமுகத்தை வாஞ்சையோடு தேடுவதல்லவோ நியாயம். இந்த பிதா புத்திர சம்பந்தம் ஜெபஜீவியத்துக்கு நம்மை ஏவிவிடுகிறது. இப்படியிருக்கத் தகப்பனைக்கண்டு நடுங்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். என் மக்கள் அவர்கள் அப்பா வருவதைக் கண்டால் ஓடி ஒளித்துக் கொள்ளுவார்கள், கிட்ட நெருங்க மாட்டார்கள், அவ்வளவு பயம்! என்று பெருமையாய்ப் பேசுகிற தாய்மாருண்டு. பிள்ளைகள் தங்களுக்கு இவ்வாறு நடுங்குவதைக் குறித்து மேன்மை பாராட்டுகிற தகப்பன்மாரும் உண்டு. இப்படிப்பட்ட பிள்ளைகளைப் பார்த்து: தேவன் உங்கள் **தகப்பன்** என்று சொன்னால் அவர்கள் அவர் கிட்ட நெருங்கமாட்டார்கள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வாக்குப்படி, நாம் தகப்பன் என்னும் கண்ணியமான பேருக்குப் பாத்திரராக நடந்துகொள்ளும்போது, நமது பிள்ளைகள் யாதொரு பயமில்லாமல், தங்களுக்குத் தேவையான

காரியங்களைக் கேட்கும்படி பரமபிதாவைத் தேடிப்போவார்கள் என்பது நிச்சயம்.

நாம் பிதாவிடத்தில் கேட்பதெல்லாம் உடனேதானே கிடைத்துவிடுமென்று நாம் நினைக்கக்கூடாதென்கிறார். சில சமயங்களில் உடனே உத்தரவு வெளிப்படலாம். இன்னும் சில சமயங்களில் தாமதிக்கலாம். இப்படித் தாமதிக்கும்போது நாம் **சோர்ந்து போகாமல்** ஜெபிக்க வேண்டுமென்று போதிக்கிறார். இதற்கு ஆதாரமாக இரண்டு உவமைகளைச் சொன்னார். சிநேகிதனிடத்தில் நடுராத்திரியில் அப்பம் கடனாகக் கேட்கப்போனவன். நியாயாதிபதியிடத்தில் தனக்கு நியாயஞ் செய்யும்படி விண்ணப்பம்பண்ணின விதவை முந்தினவன் தனக்குச் சிநேகிதனாயிருப்பதினிமித்தம் எழுந்து கொடாவிட்டாலும், அவன் வருந்திக் கேட்டதினிமித்தம் கொடுத்தான். நியாயாதிபதி ஒருவனுக்கும் அஞ்சாதவனாயிருந்தும், இவள் தொந்தரவு பொறுக்கமாட்டாமல், தன்னை அடிக்கடி அலட்டாதபடிக்கு நியாயஞ் செய்தான் *(லூக்கா 11:5; 18:2).*

இந்த உவமைகளை விஸ்தரித்தால் வளர்ந்துபோகும். அவைகளின் முக்கிய கருத்தை மாத்திரம் கவனிப்போம். அந்த மனுஷன் வீட்டுக்கு அவன் சிநேகிதன் நடுராத்திரியில் வந்துவிட்டான். அவனுக்கு முன்வைக்க வீட்டில் யாதொன்றுமில்லை. எவ்வளவு துக்கம்! ஆகிலும் ஐசுவரியமுள்ள ஒரு சிநேகிதன் தனக்குண்டு. **போய்க் கேட்டால்** கிடைக்கும் என்னும் **நம்பிக்கை,** அவ்விருட்டில் சிநேகிதன் வீட்டைத்தேடிப் போகும்படி அவனை ஏவினது. பல சமயங்களில் சந்தோஷமாக உதவிசெய்த சிநேகிதன் இச்சமயத்தில் நான் எழுந்து உனக்குத் தரக்கூடாது என்கிறான். அன்பனுக்கு இது எப்படி இருந்திருக்கும்? மனஞ்சோர்ந்து வீட்டுக்குத் திரும்பினானா? இல்லை. இன்னும் அங்கேதான் நிற்கிறான். சிநேகிதா! என் சிநேகிதன் ஒருவன் இராவேளை வந்து விட்டான். என்னிடத்திலோ ஒன்றுமில்லை உம்மிடத்தில் ஏராளம் உண்டு, நானோ உம்முடைய சிநேகிதன். அப்படியிருக்க நான் வெறுங்கையாய்ப் போவதெப்படி என்றான். அவன் இப்படி வருந்திக்கேட்டதை சிநேகிதன் தாங்கக் கூடவில்லை. சிநேகத்தினிமித்தம் கொடாவிட்டாலும் அந்த **வருந்துதல்** அவனைக் கொடுக்கும்படி செய்தது. அதுபோலவே இரண்டாவது உவமையும். அந்த நியாயாதிபதி தேவனுக்குப் பயப்படாதவன். மனுஷரை மதியாதவன். அந்த ஏழை விதவை அவனை ஓயாமல் கெஞ்ச வேண்டியதாயிற்று. அவளுக்கு நியாஞ்செய்ய "வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது." கடைசியாகத் தன்னை அவள் அடிக்கடி வந்து அலட்டாதபடி நியாயஞ்செய்தான்.

ஜெப ஜீவியத்தில் நாம் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான போதனை இவ்வுவமைகளில் உண்டு. நாம் குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். தேவன் நிறைவுள்ளவராயிருக்கிறார். நமது குறைவுகளை நீக்க அவருக்குச் சித்தமும் உண்டு, வல்லமையும் உண்டு. ஆகையால் பெற்றுக்கொள்ளும்வரை அவரை விடக்கூடாது. அவரை நோக்கி ஜெபிப்பதில் நாம் சோர்ந்துபோகக்கூடாது. சிநேகிதனிடத்தில் அப்பங்கள் உண்டு. நியாயாதிபதியினிடத்தில் நியாயம் உண்டு. அப்பம் கிடைக்கும் வரைக்கும், நியாயஞ் செய்யப்படும் வரைக்கும் விண்ணப்பத்தை விடக்கூடாது. நாம் ஒரு காரியத்துக்காக ஜெபிக்கும்போது தேவன் அந்தச் சிநேகிதனைப் போலவும், அந்த நியாயாதிபதியைப் போலவும் நமக்குத் தோன்றலாம். ''நான் உனக்குக் கொடுக்கக்கூடாது'' என்று அவர் சொல்வதுபோல் இருக்கலாம். இனிமேல் கேட்பதில் பிரயோஜனமில்லை என்பதுபோல் நாம் ஜெபத்தை விட்டு விடுகிறோம். வானம் வெண்கலத்தைப் போலிருக்கும்போது நமக்கு ஜெபிக்க மனம் வருகிறதில்லை. தேவன் நமது விண்ணப்பங்களைக் கேட்டும் கேளாதவர் போலிருப்பதற்குக் காரணமென்ன?

இவ்வுவமைகளில் நமது இரட்சகர் பிதாவை அந்தச் சிநேகிதனுக்கும் நியாயாதிபதிக்கும் ஒப்பிட்டுப் பேசினாலும், பிதா அவர்களைப் போன்றவரல்ல. ஏனென்றால், விண்ணப்பஞ்செய்த அவ்விருவருக்கும் உத்தரவு கிடைப்பதற்குத் தாமதம் அந்தச் சிநேகிதனிடத்திலும் நியாயாதிபதியினிடத்திலும் இருந்தது. நமது விண்ணப்பங்களுக்குத் **தாமதம்** தேவனிடத்தில் அல்ல, நம்மிடத்திலேயே இருக்கிறது. உவமைகளின் முடிவில் ஆண்டவர் சொல்லும் வார்த்தைகளால் இது தெரிய வருகிறது. "பரமபிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குக் கொடுப்பது அதிக **நிச்சயமல்லவா?**" "தேவன் தம்மைநோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அப்படியானால் தேவன் தாமதிப்பதின் காரணம் என்ன? அவர் எழுந்து கொடுக்கக் கூடாதவரல்ல. அவர் நம்மை மதிக்காதவரல்ல. அவரது அளவற்ற கிருபையையும், அதிசயமான அன்பையும், அவருடைய திரளான வாக்குத்தத்தங்களையும் நாம் அறிந்திருக்கிறோம். அவர் நமக்கு நன்மை செய்ய மனமற்றவர் என்பது வேதத்துக்குப் பொருந்தாது. அப்படியானால் அவர் தாமதிப்பதும், நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்கவேண்டும் என்பதும் ஏன்? நாம் வேண்டிக்கொள்ளும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்க தகுதி நம்மிடத்தில் இல்லாததினாலேயே. அப்படிப்பட்ட நிலைமையில் அவர் நமக்கு நன்மை செய்வது நமக்கு நன்மையாகாமல் தீமையாகும். நமது **பாவம்** அவர் நமக்கு இரங்காதபடி அவர் கையைத் தடுக்கிறது.

அல்லது, ஏதோ ஒரு **காரியம்** வானத்தின் வாசலை நமக்கு அடைத்திருக்கிறது. நமது இருதயம் அவர் நம்மை ஆசீர்வதிக்கும் படியான நிலைமைக்கு வரும்பரியந்தம் காலதாமதமாகிறது. தேவன் யாக்கோபை ஆசீர்வதிப்பதற்குப் பொழுது விடிய வேண்டியதில்லை. யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்க நிலைமைக்கு வருவதற்கு இராமுழுவதும் சென்றது. யாக்கோபு தேவனோடும், தேவன் யாக்கோபோடும் போராட வேண்டியதாயிற்று. நீர் என்னை ஆசீர்வதிக்கத்தான் வேண்டு மென்பது யாக்கோபின் போராட்டம். யாக்கோபுடைய கபடு, தந்திரம், சுயநம்பிக்கை, மாம்ச சாமர்த்தியம் முதலான கேடுகளிலிருந்து விடுவிக்கப்படவேண்டுமென்பது தேவனுடைய போராட்டம். யாக்கோபு தன் ஒன்றுமில்லாமையை உணர்ந்து, மனம் நொறுங்கி தேவபாதத்தில் விழுந்தபோதுதான் தேவன் யாக்கோபை ஆசீர்வதித்தார் நமது விண்ணப்பங்களுக்கு தேவன் தாமதிப்பதும் இதுபோலவே.

மேலும், நாம் கேட்கும்போதெல்லாம் தேவன் உடனே கொடுக்கிறதுண்டானால் நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்பட ஏதுவிராது. அது கடைக்குச் சென்று சீக்கிரம் சரக்கு வாங்கித் திரும்புவதுபோலிருக்கும். ஜெப ஜீவியத்தின் பிரதான நோக்கம் நமக்கு வேண்டியவைகளைப் பெற்றுக்கொள்வதுமாத்திரமல்ல. நாம் தேவ சமுகத்தில் தங்கி அவரை அறிகிற அறிவில் வளர்ந்து அவரோடு ஐக்கியப்படவும், அவ்வாறு ஐக்கியப்படுவதால் நமது உள்ளான மனுஷனில் பலப்படவும்வேண்டும் என்பதே. பிரயாசமில்லாமல் கிடைக்கிற காரியம் மேன்மையுள்ளதல்ல. ஜெப ஜீவியத்திலுள்ள கஷ்டங்களை நாம் மேற்கொண்டு வளர்ந்து, பெரிய காரியங்களை எதிர்பார்க்கக்கூடிய விசுவாசம் நமக்குள் உண்டாக வேண்டுமென்பது தேவனுடைய சித்தம்.

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருப்பதும், எவ்விதத்திலும் சோர்ந்துபோகாமல் திரும்பத் திரும்ப ஜெபிப்பதும் பிதாவுக்குப் பிரியம். அவர் நமக்குக் கொடுப்பவைகளைப் பார்க்கிலும் **அவரையே** நாம் பிரதானமாய்த் தேடவேண்டுமென்றும், மனந்தளர்ந்துபோகாமல் அவருடைய வாக்குகளை நம்பி அவரோடு போராடி ஜெபிக்கவேண்டுமென்றும் விரும்புகிறார். இவ்வித ஆவிக்குரிய **உழைப்பு** நமக்கு எவ்வளவோ நல்லதென்று அவர் அறிவார். தேவதாமதம் நம்மை ஆராய்ந்து அறிவதற்கும், சந்தேகமான காரியங்களை அகற்றுவதற்கும், நமது குறைவுகளை ஒத்துக்கொள்வதற்கும், பரிசுத்த ஆவியின் சகாயத்தைத் தேடுவதற்கும் ஏதுவாயிருக்கிறது. நாம் சோர்ந்துபோகாமல் திரும்பத் திரும்ப ஜெபித்துப் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் நமக்கு மிகவும் அருமையாயிருக்கின்றன. அவைகளைச்

சம்பாதிப்பதற்கு நாம் எடுத்துக்கொண்ட விசுவாச முயற்சி அதிகம். தேவன் தாமதித்த நோக்கம் இன்னதென்பதையும் நமது ஜீவிய வளர்ச்சியில் காண்கிறோம். **ஜெப புருஷனான** நமதாண்டவரும் இதற்குத் தப்பினவரல்ல. அவருடைய போராட்டமான ஜெபத்தையும் அதன் வெற்றியையும் கெத்செமேனேயில் காண்கிறோம் எலியாவின் ஜெபமும் திருஷ்டாந்தமாகும். ஒருமுறை ஜெபித்தவுடனே அக்கினி இறங்கினது. மழைக்காகவோ அவர் ஏழுமுறை ஜெபிக்க வேண்டியதாயிற்று. கர்த்தருக்கு மிகவும் பிரியமான தானியேல் ஜெபிக்கத் தொடங்கினபோதே அவருடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது. ஆனால், அவருக்கு உத்தரவு வந்துசேர மூன்று வாரங்கள் சென்றன. தேவன் தாமதித்தாலும் **ஏற்ற காலத்தில்** இரங்குவார் என்கிற நிச்சயம் சோர்வை அகற்றி ஊக்கத்தை நம்மில் உண்டாக்கவேண்டியது.

இயேசு என்னும் நாமத்துக்கும் ஜெபத்துக்குமுள்ள சம்பந்தம். "நீங்கள் என் **நாமத்தினால்** எதைக் கேட்பீர்களோ அதைச் செய்வேன்." "என் நாமத்தினால்" என்பது ஆறுமுறை யோவானில் வருகிறது. மற்றச் சுவிசேஷகரும் அந்த நாமத்தின் வல்லமையை மறந்தவர்கள் அல்ல. சீஷர்கள் புறப்பட்டுப்போய் பலத்த காரியங்களைச் செய்து திரும்பினபோது கர்த்தரைப் பார்த்து: "ஆண்டவரே, **உமது நாமத்தினாலே** பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்" (லூக்கா 10:17). "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத். 18:20). அவர் நாமத்தினாலே நடக்கும் அதிசயமான கிரியைகளைக் குறித்து மாற்கு பதினாறில் வாசிக்கிறோம்.

நாம் வேண்டிக்கொள்பவைகளையும் பிதா நமக்குக் கொடுப்பவை களையும் இணைக்கும் வளையம் இயேசுவென்ற நாமம். ஆள்களுடைய நாமம் அவர்களுடைய குணத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. அதுபோலவே மற்றவைகளின் பெயர் அவைகளின் தன்மையை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. தேவன் என்னும் நாமம் அவரது திவ்ய சுபாவத்தையும் மகிமையையும் நமக்கு அறிவிக்கிறது. **இயேசு** என்னும் நாமம் அவரது முழுச்சுபாவம், சிந்தை, குணம், கிரியை முதலானவைகளை நமக்கு வெளிப்படுத்துகிறது. அவரை அறிந்தவர்களுக்கே அவருடைய நாமத்தின் வல்லமை தெரியும். அது நம்மையும் பிதாவையும் ஒன்றாக இணைக்கும் நாமம். நாம் எவைகளைக் கேட்டுக்கொள்ளுகிறோமோ அவைகளைப் பெற்றுக்கொள்வது அந்த நாமத்தினாலேதான். பிதா எவைகளை நமக்குக் கொடுக்க விரும்புகிறாரோ அவைகளை அவர் அருளுவதும் அந்த நாமத்தின்மூலமாகத்தான், நமதாண்டவர் தமது மரணம்

உயிர்தெழுதலின்மூலமாய் பரமேறி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தை உடையவராகும் மகிமையைப் பெற்றார். அவர் பிதாவிடமிருந்து சுதந்தரித்துக்கொண்ட ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வதற்கு அவரே நமக்கு வழியானார். அவரை விட்டு, நாம் தேவனிடம் நெருங்கமுடியாது. நாம் எவ்வளவு நீதியும் அறிவும் உள்ளவர்களாயிருந்தாலும், நமது நாமம் பரத்தைத் திறக்காது. அவருடைய நாமமே பரலோகத்தைத் திறக்கும் திறவுகோல், அவருடைய நாமமே பரலோக ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் வாய்க்கால்.

பாவம் பரிசுத்த தேவனைவிட்டு நம்மைப்பிரித்து நாம் அவரைக் கிட்டி நெருங்காதபடி செய்தது. கிறிஸ்து நமது பாவங்களைத் தமது மரணத்தால் அகற்றினார். எந்த நாமத்தால் நமது பாவம் நீங்கி, நாம் தேவனுக்குப் பிள்ளைகளானோமோ, அந்த நாமத்தாலேயே பிதாவின் ஈவுகளை நாம் பெற்றுக் கொள்ளக்கூடும். அவர் சுதந்தரமே நமக்குச் சுதந்தரமாகி, அவர் பேராலேயே அவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோம். வங்கியல் பணம் பெற்றுக்கொள்ள இருவகையுண்டு. ஒருவனுக்கு அங்கே பணமிருக்குமானால் காசோலையில் கையொப்பமிட்டுத் தன் பேராலேயே தனக்குத் தேவையான தொகையைப் பெற்றுக் கொள்ளக்கூடும். தனக்கு அங்கே பணமில்லாதிருந்தும், அங்கு பணம் வைத்திருப்பவர் பேரால் போய் அவர் குறித்த தொகையை தான் பெற்றுக்கொள்ளவும்கூடும். நமக்குப் பரத்தில் ஒன்றுமில்லை. நமது பேரால் கேட்பதற்கு நியாயமில்லை. பரத்தின் சுதந்தரம் கிறிஸ்துவுடையது. விசுவாசிகளுக்காகவே அதை வைத்திருக்கிறார். கிறிஸ்துவின் பேருள்ள காசோலையை நாம் பிதாவுக்கு முன் வைக்கும்போது நாம் வேண்டிக் கொள்ளுகிறவைகளைத் தடையின்றிப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தை ஒதுக்கி ஜெபிக்கிற வழக்கம் இக்காலத்தில் காணப்படுகிறது. அது என்ன காரணமோ தெரியவில்லை. யூதரைப்போலவும் ஒருத்துவ மார்க்கத்தாரைப் போலவும் ஜெபிக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவை ஜெபத்திற்கு மாதிரியாகக் கொண்டார்களேயல்லாமல், அவருடைய **நாமமே** ஜெபத்திற்குப் பதிலளிக்குமென்பதை அறியவில்லை. அவர் யூதரான தமது சீஷர்களைப்பார்த்து: "இதுவரைக்கும் **என் நாமத்தினாலே** நீங்கள் ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" என்றார் (யோவான் 16:24). அதாவது, என் பேரைச் சொல்லிக்கேட்டால் பிதா உங்களுக்குக் கொடுப்பார் என்கிறார். அவர் பேரைச் சொல்லிக் கேட்கும் போது அவரே நமக்காக பிதாவைக் கேட்கிறார். ஒரு பிரபுவினிடத்தில் ஒரு மனுஷன் போய் ஏதோ தயவுக்காகக்

கெஞ்சும்போது, அவர் பக்கத்தில் நிற்கும் அவருடைய சிநேகிதன், என்னிமித்தம் இந்த மனுஷனுக்குத் தயவுசெய்யுங்கள் என்று கேட்பதுபோலிருக்கிறது. ''அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காக பிதாவை நான் கேட்டுக் கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை" என்று அவர் சீஷருக்குச் சொன்ன இரகசியம் இதுவே, இதனாலே, தேவன் நம்மேல் கடினமுள்ளவரென்றும், கிறிஸ்து வேண்டிக்கொண்டதின் பேரிலேதான் அவருக்கு இரங்க மனம் வந்ததென்றும் நினைக்கக்கூடாது. தேவனே நம்மில் அன்புகூர்ந்து தமது குமாரனைக் கொடுத்தவர். நம்மைப் பரிபூரணமாய் ஆசீர்வதிக்க வேண்டுமென்பது அவரது தீராதவாஞ்சை. ஆனால் அவ்வாறு நம்மை ஆசீர்வதிப்பதற்கு அவர் ஏற்படுத்தின வழி கிறிஸ்து "கிறிஸ்துவுக்குள்" என்னும் வாக்கியங்களை நிருபங்களில் வாசித்துப்பார்த்தால் அதன் மாட்சிமை விளங்கும். பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள சம்பந்தத்தையும் ஒழுங்கையும் நாம் கவனிக்கும்போது, கிறிஸ்துவின்மூலமாய்ச் சகல நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும்படி அவர் செய்த ஒழுங்கு நியாயமெனத் தோன்றும்.

ஆகையால், இயேசு கிறிஸ்துவின் பேரைச் சொல்லி விட்டாலேபோதும் என்று எண்ணிக் கொள்ளக்கூடாது. கிறிஸ்தவர்களெல்லாரும் பொதுவாய் தங்கள் ஜெபங்களில் இயேசு கிறிஸ்துவின்மூலமாய் என்று சொல்லி முடிப்பது வழக்கம். ஜனங்கள் ஆமென் என்று சொல்வதற்கே இது அடையாள மாயிற்று. இவ்வாறான ஜெபங்கள் ஆயிரம் பதினாயிரமா யிருக்கும். நாம் அந்த நாமத்தை உபயோகித்த அளவுக்கு நமது ''சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி'' ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதுண்டா? இல்லையானால் காரணமென்ன? நமக்கும் அவருக்கும் ஐக்கியமில்லாதிருக்கும்போது அவருடைய நாமத்தை நாம் உச்சரிப்பது நமக்கு அனுகூலமாயிராது. பவுல் கிறிஸ்துவின் நாமத்தினாலே பலத்த கிரியைகளைச் செய்யக்கண்ட மந்திரவாதிகளான சில யூதர், பொல்லாத ஆவிகளைத் துரத்தும்படி, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்தார்கள். பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து அடிக்க, அவர்கள் நிர்வாணிகளும் காயப்பட்டவர்களுமாகி வெட்கத்தோடு ஓட்டம் பிடித்தார்கள். பவுலுக்கு அனுகூலமாயிருந்த கிறிஸ்துவின் **நாமம்** இவர்களுக்குப் பிரதிகூலமான காரணமென்ன? பவுல் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர். அந்த நாமத்தினால் பாவ மன்னிப்பையும் சகல ஆசீர்வாதங்களையும் பெற்று அனுபவித்தவர். அந்த நாமத்தின் மூலமாய் பிதாவுக்கு அருமையானவர். இதுதான் வித்தியாசம். கிறிஸ்துவைத் தங்களுக்குச் சொந்தமாக்காதவர்களும், அவருக்குச் சொந்தமாகாதவர்களும் அவருடைய நாமத்தைத் தங்கள்

வாயினால் சொல்ல என்ன நியாயமுண்டு? நாம் அவருடைய நாமத்தினால் விண்ணப்பம்பண்ணியும் பெற்றுக்கொள்ளாத காரணம் இதுவே.

கிறிஸ்துவ **ஜீவியத்துக்கும்** ஜெபத்துக்குமுள்ள சம்பந்தம். "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோவான் 15:7). அயோக்கியனும் நம்பக் கூடாதவனுமான ஒருவன் எளிதில் தயவு பெற்றுக்கொள்ள மாட்டான். அவனுடைய துன்மார்க்க நடக்கையே அவனுக்குக் கிடைக்கக்கூடிய உதவியைத்தடுக்கும். தேவனிடத்திலும் இதுபோலவே. நாம் அவரை ஏமாற்றமுடியாது. அவர் முகத்தோற்றத்தையும் கெஞ்சுகிற சத்தத்தையும் பார்த்து ஏமாந்து போகிறவரல்ல. வேண்டிக்கொள்வோர் இருதயத்தைப் பார்த்தே நன்மை செய்கிறார். ஆகையால் ஜெபத்தின் பலன் நமது **ஜீவியத்தைப்** பொறுத்தது. நமது ஜீவியம் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், நமது ஜெபம் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். நமது ஜெபம் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்போது நாம் கேட்டுக்கொள்ளுகிறவைகளை நிச்சயமாகவே பெற்றுக் கொள்வோம். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று ஆண்டவர் சொன்ன இரகசியம் அதுதான். நாம் ஊக்கமாய் ஜெபிக்கவும், பெற்றுக்கொள்ளத் தக்கதாக மன்றாடவும் கூடவில்லையென்றால், நமது ஜீவியத்தில் ஏதோ பழுதிருக்கிறதென்பது நிச்சயம்.

கிறிஸ்துவில் நிலைத்திருப்பதைப்பற்றி அவர் சொன்னபோது "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்றார் (யோவான் 15:16). நீங்கள் கனி கொடுக்கும்படிக்கும், பிதா நீங்கள் கேட்பதைக் கொடுக்கும் படிக்கும் என்றால் என்ன? கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு, அவரில் நிலைத்திருக்கும் ஜீவியம் ஆசீர்வாதம் நிறைந்த ஜீவியமாயிருக்கும். அவ்வாறு ஜீவிப்பவர்களுடைய ஜெபங்கள் வல்லமையுள்ளதா யிருக்கும். அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் அவரில் நிலைத்திருப்பது கூடாது. அவருடைய சித்தத்தின்படி பிழைப்பதே அவரில் நிலைத்திருப்பதாகும். அவ்விதமான ஐக்கிய ஜீவியத்தில் நாம் செய்யும் ஜெபங்கள் தேவசித்தத்திற்கு ஏற்றதாயிருப்பதால் நிச்சயமாகவே நாம் வேண்டிக் கொள்பவைகளைப் பெற்றுக்

கொள்ளுகிறோம். இதை அனுபவத்தில் கண்ட யோவான் ''பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்வதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்" என்கிறார் *(1 யோவான் 3:21,22)*. ஆகையால் நமது ஜீவியத்துக்கும் ஜெபத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. அவர் நாமத்தினாலேதான் நமக்கு நன்மை கிடைக்கும் என்று சொன்னபின்பு, நமது நல்ல ஜீவியத்தாலேயும் ஜெபம் பலிக்கும் என்று சொல்வதுபோல் தோன்றலாம். ஒருக்காலும் அப்படியல்ல. கிறிஸ்தவ ஜீவியம் நம்மாலாகாமல் கிறிஸ்துவினால் ஆகிறது. நாம் தேவனுக்குப் பிரியமாய் நடக்கிறது மெய்யானால் அது கிறிஸ்துவின் ஜீவியமேயல்லாமல் நம்முடையதல்ல. கொடியில் வரும் சாரம் செடிக்குரியது. கிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்கும்போது, அவருடைய ஆவி நமக்குள் சென்று நாம் தேவ சித்தத்தின்படி பிழைக்கச் செய்கிறது. அவ்வாறு நிலைத்திருக்கும்போது நாம் செய்யும் ஜெபங்கள் கிறிஸ்துவின் ஜெபங்களாயிருக்கின்றன. அந்த ஜெபங்களை பிதா பிரியமாய் ஏற்றுக்கொண்டு நமக்கு நன்மை செய்கிறார். நமக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள ஐக்கியம் எவ்வளவுக்கு ஆழமோ, அவ்வளவுக்கு நமது விண்ணப்பங்கள் பிதாவுக்குப் பிரியமாயிருக்கும். ஆகையால், அவர் நாமத்தைச் சொல்லிக் கேட்பதுபோலவே, அவரில் நிலைத்திருந்து கேட்பதும் வல்லமையுள்ளதாயிருக்கிறது.

விசுவாசத்துக்கும் ஜெபத்துக்குமுள்ள சம்பந்தம். "நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்; அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்றார்" *(மாற்கு 11:24)*. இந்த வாக்கியத்தைச் சற்று விளக்கிச் சொல்லுவோம். நீங்கள் எவைகளை விரும்புகிறீர்களோ, அவைகளுக்காக ஜெபியுங்கள். எவைகளுக்காக ஜெபிக்கிறீர்களோ **அவைகளைப் பெற்றுக் கொண்டோம்** என்று நம்புங்கள். அவ்வாறு நீங்கள் நம்பும்போது நீங்கள் கேட்டுக்கொண்டவைகள் உங்களுக்கு அனுபவமாகும் என்கிறார். ஜெபத்தில் நேரிடக்கூடிய கஷ்டங்களை நமதாண்டவர் முன்னறிந்து பலவகையாய் நமக்குப் போதிப்பது அவர் அன்பல்லவா? விருப்பமே ஜெபத்தின் ஊற்று. ஜெபம் இருதய வாஞ்சையிலிருந்து புறப்படவேண்டும். அது முழுவாஞ்சையும் முழு விருப்பமுமாயிருக்கவேண்டும். "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுவீர்களானால், என்னைத்தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" என்கிறார் *(எரே. 29:13)*. "தங்கள் முழு இருதயத்தோடும் ஆணையிட்டு தங்கள்

முழு இருதயத்தோடும் அவரைத் தேடினார்கள்; கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு அவர்களை இளைப்பாரப் பண்ணினார்'' *(2 நாளா. 15:15)*. நாம் கேட்டுக்கொள்ளுகிற ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்கிற ஆசை நமது உள்ளத்தை நிரப்பவேண்டும். அந்த வாஞ்சையினால் மற்றக்காரியங்களை நாம் மறந்துபோகிறோம். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்" என்று நமது இருதயம் நாம் கேட்டுக்கொள்ளுகிற ஆசீர்வாதத்தையே விசேஷித்துத் தேடவேண்டும். அவ்வாறு தேடும்போது நாம் வாஞ்சையோடு தேடும்காரியத்தை நமக்கு தேவன் அனுக்கிரகஞ் செய்வார்.

நாம் இருதயத்தில் வாஞ்சித்தது வாயின் வார்த்தையில் வெளிப்படவேண்டும். நீங்கள் நினைத்துக்கொண்டிருங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லாமல், "**கேளுங்கள்** அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று சொன்னார். தம்மிடத்தில் ஆரோக்கியம் தேடிவந்தவர்களைப் பார்த்து: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார். தங்களுக்குச் சுகம் கிடைக்கவேண்டுமென்கிற விருப்பத்தோடுதான் அவர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அந்த மறைவான விருப்பம் அவர்கள் வாயின் வார்த்தைகளில் வெளிப்பட வேண்டுமென்பது ஆண்டவர் கேட்ட கேள்வியின் நோக்கம். அவர்கள் வாய் திறந்து கேட்பது அவர்களுக்குள் விசுவாசத்தையும், ஆண்டவர் தங்களைக் குணமாக்குவார் என்கிற நம்பிக்கையையும் உண்டாக்கும். அதுபோலவே நாம் விரும்புவதை வாயினால் கேட்கும்போது, நமது மறைவான விருப்பம் திட்டமான விண்ணப்பமாகிறது. நாம் கர்த்தரை வேண்டிக்கொண்டோம், அவர் நமக்குச் செவிகொடுப்பார் என்கிற நிச்சயமும் எதிர்ப்பார்க்குதலும் உண்டாகிறது. ஆகையால், இருதயத்தின் விருப்பங்களை வாயின் வார்த்தைகளால் கர்த்தருக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

அநேக காரியங்களைத் தங்கள் மனதிலேயே நினைத்துக் கொண்டு வாய்திறந்து ஜெபிக்காதவர்கள் உண்டு. வேதத்தை வாசிக்கும்போது அதன் வாக்குகள் நம்மில் புதுஉயிரையும் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றன. அவ்வாக்குகளைப் பிடித்துக்கொண்டு, தேவனிடம் சென்று, உமது வாக்குகளை அடியேன் நம்புகிறேன், இவ்வாசீர்வாதங்களை என் ஜீவியத்தில் பலிக்குமென்று நாம் ஜெபிக்கவேண்டும். சில சமயங்களில் பல காரியங்களுக்காக ஜெபிக்கிறோம். எந்த ஆசீர்வாதத்துக்காக ஜெபித்தோமென்று நமக்கே தெரிகிறதில்லை. நமது இருதய வாஞ்சை திட்டமான விண்ணப்பத்தில் வெளிப்பட வேண்டும்.

குறிப்பான ஜெபம் இருதய வாஞ்சைக்கு அடையாளம். என் பிதாவே! இந்த ஆசீர்வாதத்தை என் ஆத்துமா விரும்புகிறது. அதையே உம்மிடத்தில் கேட்கிறேன். நீர் எனக்குச் செவி கொடுப்பீர் என்று அறிவேன் என்பதாக நாம் தேவனுக்குச் சொல்லவேண்டும்.

"பெற்றுக்கொண்டோம் என்று **விசுவாசியுங்கள்**" என்கிறார். "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். கிறிஸ்தவ ஜீவியம் முதலிலிருந்து கடைசிவரை விசுவாசமே. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் நடப்பது கூடாதகாரியம். விசுவாச மில்லாமல் தேவனிடத்திலிருந்து யாதொன்றையும் பெற்றுக் கொள்ளக்கூடாது. சரீர ஆத்ம நன்மைகள் யாவும் விசுவாசத்தின் பலனாகவே நமக்குக் கிடைக்கின்றன. விசுவாச ஜீவியத்தில் தேவமகிமை விளங்கும். கிறிஸ்தவ ஜீவியம் **இயற்கை** ஜீவியமல்ல. இயற்கை ஜீவியம் உலகத்தோடு சம்பந்தப்பட்டது. அது கண்காணக் கூடியவைகளையும், கைதொடக் கூடியவைகளையும் சார்ந்து பிழைக்கிறது. கிறிஸ்தவ ஜீவியம் ஆவிக்குரியது. அது ஆவிக்குரியவைகளையும் மறைவானவைகளையும் சார்ந்து பிழைக்கிறது. அதரிசனமான கடவுளையும் ஆவிக்குரிய பரம நன்மைகளையும் நமது கண்களுக்குப் பிரத்தியட்சமாக்குவது விசுவாசமே. விசுவாச பாடத்தைக் கற்பிக்க நமது இரட்சகர் எடுத்துக்கொண்ட முயற்சி எவ்வளவு! ''தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்றும், "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்றும் போதித்தார். விசுவாசம் விலையேறப் பெற்ற தென்றும், மகா அருமையானதென்றும் அவருடைய அடியாரும் எழுதி வைத்தார்கள். விசுவாசம் வான வாசலை நமக்குத் திறந்து, பரம பொக்கிஷங்களை நமது கண்களுக்குக் காண்பித்து, பிதாவினிடத்தில்கேட்டு அவைகளை எடுத்துக் கொள்ளும் படியான உரிமையை நமக்குக் கொடுக்கிறது. தேவன்மீதுள்ள இந்த விசுவாசத்தை அழிக்கவே சாத்தான் இரவு பகல் பிரயாசப்படுகிறான். "நீர் என்னைக் கொன்றுபோட்டாலும் நான் உம்மை பேரில் நம்பிக்கையாயிருப்பேன்" என்று சொன்ன யோபின் விசுவாசம் சாத்தானைச் சங்காரம்பண்ணி, அவருக்குப் பரிபூரண ஆசீர்வாதங்களைக் கொண்டுவந்தது. "ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்" என்று ஜெபிப்போமாக.

"**பெற்றுக்கொண்டோம்** என்று **விசுவாசியுங்கள்**." தமிழில் "**பெற்றுக் கொள்வோம்** என்று விசுவாசியுங்கள்" என்று திருப்பியிருக்கிறார்கள். பெற்றுக்கொள்ளுமுன் பெற்றுக் கொண்டோம் என்று எப்படிச் சொல்லலாம் என்று நினைத்து இப்படித் திருப்பினார்கள்போல் தோன்றுகிறது. **பெற்றுக் கொண்டோம்** என்று விசுவாசியுங்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இது கூடிய காரியமா? உலக அனுபவத்துக்கு

இது வித்தியாசமாயிருக்கிறது. நாம் ஒன்றை அனுபவிக்கும்போது அது நமக்குச் சொந்தமாகிறது. நமது கைக்குக் கிட்டாததை நாம் பெற்றுக்கொண்டோம் என்று சொல்லுகிறதில்லை. நாம் தேடுகிற ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்குமுன் அது கிடைத்தது என்று எப்படிச் சொல்லுகிறது? நாம் ஊக்கமாய் ஜெபிக்கலாம். திரும்பத் திரும்ப ஜெபிக்கலாம். ஆனால் நாம் கேட்ட ஆசீர்வாதம் நமக்குக் கிடைத்ததென்று அதைப் பெற்றுக்கொள்ளுமுன் எப்படி நம்புகிறது? நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதான இருதய நிலைமையிலிருந்து, பெற்றுக்கொள்ளக்கூடிய ஆசீர்வாதத்துக்காக முழு இருதயத்தோடு ஜெபிக்கும்போது, பெற்றுக்கொண்டோம் என்கிற நிச்சயத்தை பிதா தாமே நமது உள்ளத்தில் அருளுகிறார். ஒரு மாணாக்கன் பரீட்சை எழுதி, தீர்மானம் வெளிப்பட இன்னும் சில மாதங்களிருந்தும், அவன் எழுதி முடித்த நாளிலேயே நான் ஒப்பேறிவிட்டேன் என்று சொல்வானானால் அதற்கு இரகசியமென்ன? பரீட்சித்தவருடைய கேள்விகளுக்குத் திருப்தியாய் உத்தரவளித்தான் என்கிற நிச்சயமல்லவா? "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குக் கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் **பெற்றுக்கொண்டோமென்றும்** அறிந்திருக்கிறோம்" *(1 யோவான் 5:14,15)*. நமது மாம்சமும் மனதும் விரும்பினதெல்லாம் நமக்குக் கிடைக்கும் என்பது இவ்வசனத்தின் கருத்தல்ல. தேவனுக்குச் சித்தமானதும், நமக்கு ஆசீர்வாதமானதும், அவருக்கு மகிமையானதுமான நன்மைகள் நிச்சயமாகவே கிடைக்கும். அவ்வாறு நாம் ஜெபிக்கும்போது ஆவியானவரே நமக்குள்ளிருந்து ஜெபித்து, நாம் கேட்டுக் கொண்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்கிற **நிச்சயத்தை** நமக்குக் கொடுக்கிறார்.

மாணாக்கன் தான் தேறிவிட்டான் என்கிற நிச்சயம் பரீட்சைநாளில் இருந்தபோதிலும், சில மாதங்கள் சென்று உத்தரவு வெளிப்படுவதுபோல, நாம் பெற்றுக்கொண்டோம் என்று நிச்சயிக்கிற ஆசீர்வாதங்கள் உடனே கிடைக்கவும்கூடும், சில சமயங்களில் பிந்திக் கிடைக்கவும்கூடும். நாம் நிச்சயித்த ஆசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்குங்காலமும் தேவசித்தம் போலிருக்கும். அதுவரை, நாம் பெற்றுக்கொண்டோம் என்கிற விசுவாச நிச்சயத்தால் தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும். இந்த விசுவாச நிச்சயமே திடீரென அனுபவமாகும். நாம் பெற்றுக்கொள்ளாதிருந்தும் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசிப்பதினாலே, நாம் முழுஇருதயத்தோடு விரும்பி, வாய்திறந்துகேட்ட ஆசீர்வாதத்தை, தேவன் நிச்சயமாகவே கொடுக்கிறார் என்று நாம் நம்புகிறதால் தேவனை மகிமைப்

படுத்துகிறோம். ஆபிரகாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தின் விசுவாச இரகசியம் இதுவே. ''தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று முழுநிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவரானார்'' (ரோமர் 4:21). நாம் பெற்றுக்கொண்டதுபோல் தெரியவில்லையே என்று கலங்கக்கூடாது. அனுபவத்துக்குப் பிந்தியே உணர்ச்சி உண்டாகும். இன்ன ஆசீர்வாதத்தை நான் விரும்பினேன். அதை ஜெபத்தில் வாய் திறந்து கேட்டேன். அது என் பிதா வாக்குப் பண்ணின ஆசீர்வாதம். அதை நான் பெற்றுக்கொள்வது அவருக்கு மகிமையாகும். அதை நான் இன்னும் பெற்றுக் கொள்ளாதிருந்தும் பெற்றுக்கொண்டதாக விசுவாசித்து அவரை ஸ்தோத்திரிக்கிறேன். திடீரென அந்த ஆசீர்வாதமும் அனுபவமும் எனக்கு உண்டாகுமென்று அறிவேன்' என்று சொல்வதே இந்த விசுவாசத்தின் இரகசியம்.

ஜெபத்தைக் குறித்து நாம் எவ்வளவு கற்றாலும், ஏற்றபடி ஜெபிக்க இன்னும் அறியாதவர்களாயிருக்கிறோம். நமக்குள்ள பல குறைவுகளினாலே ஜெப ஜீவியத்தில் நாம் நிலைத்திருக்கிறதில்லை. ஜெபத்தைப்பற்றிப் பேசுவது எளிது, ஜெப ஜீவியத்தில் நிலைத்திருப்பதோ கஷ்டம். நமது பலவீன நிலைமையில் நாம் கைவிடப்படவில்லை. இருவர் நமக்காக ஜெபிக்கிறார்கள். பரத்தில் நமது ஆண்டவர் நமக்காக பிதாவை நோக்கி வேண்டுதல் செய்கிறார். அவர் நம்மையும் நமது குறைவுகளையும் நன்றாய் அறிவார். நமக்குத் தேவையானது இன்னதென்றும், நம்மை நடத்தவேண்டிய வழி இன்னதென்றும் திட்டமாய் அறிந்திருக்கிறார். நமது இரட்சகரும் பிதாவுக்கு அருமையான குமாரனுமான அவர் நமக்காகக் கேட்டுக்கொள்வதை பிதா நமக்குக் கொடாமலிரார். நாம் விரும்புகிறதிலும் நினைக்கிறதிலும் அதிகமான ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவின் வேண்டுதலால் நமக்குக் கிடைக்கின்றன. இதை ஒருபோதும் மறக்கக்கூடாது.

நமது ஜெபங்கள் தன்னிலே மகா குறைவுள்ளவைகளே. நமது இரட்சகர் அவைகளை எடுத்துத் தமது விண்ணப்பங்களோடு சேர்த்து, பிதாவுக்கு முன் வைப்பதாலே நாம் ஆசீர்வதிக்கப்படுறோம். அவர்மாத்திரமல்ல, நமக்குள் வசிக்கும் **ஆவியானவரும்** நமக்காக வேண்டுதல் செய்கிறார். நமது இருதயத்தின் வாஞ்சையை நாம் சரியாய் அறிந்தவர்களல்ல. அவ்வாஞ்சையை ஜெபத்தில் விவரித்துச் சொல்லவும் நமக்குத் தெரியாது. ஆவியானவர் இருதயங்களை ஆராய்ந்துபார்த்து ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். தேவ சித்தத்தையும் நம்மைக் குறித்துள்ள அவருடைய ஆலோசனையின் ஒழுங்கையும் நாம் அறிந்தவர்களல்ல. தேவ ஆவியானவரோ அவைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவர் நமக்குள்ளிருந்து

"வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக பிதாவை நோக்கி வேண்டுதல் செய்கிறார்.'' இந்த இரகசியத்தையும் நாம் மறக்கக்கூடாது. நாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் நமது ஜெபத்தாலேயே கிடைத்தவையல்ல. நமது இரட்சகரும் பரிசுத்த ஆவியானவரும் சேர்ந்து நமது விண்ணப்பங்களை பிதாவுக்குகந்த விண்ணப்பங்களாக்கி அவர் முன் படைப்பதினால் நாம் கிருபையின்மேல் கிருபை பெற்றுக்கொள்ளுகிறோம் *(யோவான் 16:26; ரோமர் 8:26,27).*

இவ்வாறு இவர்கள் இருவரும் நமக்காக வேண்டிக் கொள்வதால் நாம் கவலையீனமாயிருக்கலாம் என்று அர்த்தமல்ல. நாம் எவ்வளவுக்கு ஊக்கமாய் ஜெபிக்கிறோமோ, அவ்வளவுக்குத்தக்கதாக அவர்கள் உதவி நமக்குக் கிடைக்கும். ஆகையால், ஏற்றபடி நாம் ஜெபிக்கத்தக்கதாக **ஜெபத்துக்குரிய தடைகளை** நாம் கண்டுபிடிக்கவேண்டும். நமது ஜீவியத்தில் தடைகளிருக்கும்பரியந்தம் நாம் எவ்வளவு ஊக்கமாய் ஜெபித்தாலும் பலிக்காது. **பாவம்** ஜெபத்துக்குச் சத்துரு. "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" *(சங். 66:18).* பாவத்தில் பிரியமிருக்கும்போது ஜெபத்தில் வெறுப்புண்டாகும். ஜெபத்தில் பிரியமுண்டாகும்போது பாவத்தில் வெறுப்புண்டாகும். பாம்பும் கீரியும்போல, இருதயத்தில் இரண்டும் தங்குவதுகூடாது. பாவத்தை வைத்துக்கொண்டு ஜெபிக்கலாம், அது ஜெபமாகாது. நமது ஜெபங்கள் கேட்கப்படாவிட்டால் இது ஒரு காரணமா யிருக்கலாம். **வேதத்தை** வெறுப்பவர்கள் செய்யும் ஜெபமும் தேவனுக்கு வெறுப்பாகும். தேவன் தமது வசனத்தின் மூலமாய் நமக்குச் சொல்லுவதைக் கேட்டு நடக்க நமக்கு மனதில்லை யானால், நாம் ஜெபத்தில் சொல்லுவதைக் கேட்க அவருக்கு மனமிராது. ''வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் அருவருப்பானது" *(நீதி. 28:9).* "நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள், நீங்கள் என்னைநோக்கி கூப்பிடும்போது நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்" *(நீதி. 1:14,28).*

பிசினித்தனம் ஜெபத்துக்கு இன்னொரு தடை, கஷ்டப்படுவோருக்கு, ஏழைகளுக்கு இரக்கஞ்செய்ய மனமில்லாமை. நாம் மற்றவர்களுக்கு இரங்கக்கூடாதபடி நமது மனம் கடினமாயிருக்கும்போது, நமது கஷ்டங்களில் தேவனிடத்தில் இரக்கத்துக்காகக் கெஞ்சுவது விருதா. "ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்" *(நீதி. 21:13).* எந்த அளவினால் அளக்கிறோமோ, அந்த அளவினால் நமக்கும் அளக்கப்படும். இரக்கமுள்ளவர்கள் இரக்கம்

பெறுவார்கள். செல்வந்தனான ஒருவர் ஒரு சமயம் என்னைப்பார்த்து: என் ஆஸ்தி யாவும் நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தேன். அநியாயமாய் நான் ஒன்றும் சம்பாதிக்கவில்லை. அப்படியிருக்க, நான் அவைகளைத் தர்மம் செய்யாவிட்டால் கடவுள் கோபித்துக்கொள்வாரோ என்று கேட்டார். நானும் அவர் மனம்போல அவருக்கு உத்தரவு கொடுத்தேன். "யார் சொன்னது? நீங்கள் சம்பாதித்ததெல்லாம் உங்களுடையதாச்சே, நீங்கள் ஒருக்காலும் அதிலிருந்து ஒருவருக்கும் உதவி செய்யவேகூடாது? என்றேன். அவர் சிரித்தார். நான் கொடுத்த உத்தரவு சரியானதல்லவென்று அவரே கண்டுகொண்டார். மற்றவர்களுக்கு இரங்க மனமற்ற லோபிகளுக்கு தேவன் இரங்குவதில்லை. தேவபக்திக்கும் பிசினித்தனத்துக்கும் சம்பந்தம் கிடையாது. **தந்நயமான** ஜெபங்கள் கேட்கப்படுவதில்லை. ஜெபத்தில் நாம் பிரதானமாய் நாடவேண்டியது தேவமகிமை. நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்மூலமாக **தேவனுக்கு மகிமை** உண்டாகவேணும். அதை மறந்து நமக்கு இன்பமானவைகளையும் பெருமையானவைகளையும் தேடி ஜெபிப்போமானால் பெற்றுக்கொள்ளமாட்டோம். தேவன் அவைகளைக் கொடுத்தால் நாம் கெட்டுப்போவோம். "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று **தகாத விதமாய்** விண்ணப்பம் பண்ணுகிற படியால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக். 4:3). **விக்கிரக வணக்கம்** ஒருதடை. இது புறமதஸ்தர் உண்டாக்கிச் சுமக்கிற விக்கிரகமல்ல. நாம் கிறிஸ்துவைப் பார்க்கிலும் எதை அதிகமாய் நாடுகிறோமோ அதுவே நமக்கு விக்கிரகமாகிறது. கிறிஸ்து இருக்கவேண்டிய இருதய ஆசனத்தில் அது வீற்றிருக்கிறபடியால் அது விக்கிரகம் என்றெண்ணப்படுகிறது. இப்படிப்பட்ட விக்கிரகங்கள் நமது ஜீவியத்தில் இருக்கும்போது நமது விண்ணப்பங்கள் கேட்கப்படமாட்டாது. "மனுப்புத்திரனே, இந்த மனுஷர் தங்கள் நரகலான விக்கிரகங்களைத் தங்கள் இருதயத்தின்மேல் நாட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்களே, இவர்கள் என்னிடத்தில் விசாரிக்கத் தகுமோ?" (எசே. 14:3). **மன்னிக்க** மனமற்றவர்களுடைய ஜெபங்கள் கேட்கப்பட மாட்டாது. இது நமக்குள் சாதாரணமாய்க் காணப்படுகிற தடை. மற்றவர்கள் நமக்குச் செய்த குற்றங்களை நாம் அவர்களுக்கு மன்னிக்கவேண்டும். அவர்கள் நம்மை நேசித்தாலும் நேசிக்கா விட்டாலும் நமது கடமை தீர்ந்தது. நாம் நல்ல மனதோடு தைரிய மாக ஜெபிக்கலாம். கர்த்தருடைய ஜெபத்தை உண்மையோடு சொல்லலாம். கர்த்தர் நமது தப்பிதங்களை நமக்கு மன்னிப்பார்.

நாம் பிறர்மேல் பகையையும் வர்மத்தையும் உடையவர் களாயிருந்தால் நமது குற்றங்கள் மன்னிக்கப்படும்படி தேவனை நோக்கி ஜெபிப்பது வீண். நமது மன்னிப்பு நாம் பிறருக்குக்

கொடுக்கும் மன்னிப்போடு சம்பந்தப்பட்டிருக்கிறது (மாற்கு. 11:25,26). **சந்தேகம்** ஜெபத்துக்குத் தடையாகும். தேவன் நிச்சயமாக வாக்குப்பண்ணினவைகளைக்குறித்து அவர் தருவாரோ தரமாட்டாரோ என்று நாம் சந்தேகிப்போமானால் நமது ஜெபம் பலிக்காது. "சந்தேகப்படுகிற மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையா திருப்பானாக" (யாக். 1:6,7). **குடும்ப வாழ்க்கையில்** உண்டாகும் தடை. புருஷர் தங்கள் ஜெப ஜீவியத்துக்குத் தடைவராதபடிக்கு மனைவிகளுடன் விவேகத்தோடு நடந்து கொள்ளவேண்டும். மனைவிகளும் அவ்வாறே நடந்துகொள்ள வேண்டும். இதற்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை (1 பேதுரு 3:7). ஜெப ஜீவியத்துக்குத் தடைகளான இக்காரியங்களை நாம் அகற்றி, கிறிஸ்து இயேசுவின்மூலமாய் எப்பொழுதும் பிதாவின் சமுகத்தில் ஜீவிக்கத்தக்க கிருபையைப் பெற்றுக்கொள்ளுவோமாக. ஜெபத்தால் ஆகவேண்டிய காரியங்கள் வேறெந்தப் பிரயத்தனத்தாலும் ஆகாது. ஜெபத்தில் தேவன் கிரியை செய்கிறார். ஜெபமற்ற ஊழியம் எவ்வளவு முஸ்திப்பாய் நடந்தாலும் அது மனுஷனுடைய பலவீன கிரியைகளே.

நாம் ஜெபிக்கவேண்டிய விஷயங்கள் எவை? அவைகள் **அநேகம்!** இவைகளுக்காகமாத்திரம் ஜெபிக்கவேண்டும். இவைகளுக்காக ஜெபிக்கக் கூடாதென்று ஆண்டவர் சொல்ல வில்லை. ஜெபவாசல் விசாலம். "உன் வாயை விரிவாய்த்திற நான் அதை நன்மைகளால் நிரப்புவேன்" என்கிறார். "உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள்" என்கிறார். "நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறாய்'' என்று அருமையாய்க் கேட்கிறார். ஒன்று இரண்டல்ல, **எல்லாவற்றையும் குறித்து** உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள்'' என்று அப்போஸ்தலன் எழுதினார் (பிலி. 4:6).

நாம் தாராளமாய் தேவனிடத்தில் சேருவதற்கு இதைப்பார்க்கிலும் நமக்கு என்ன வேண்டும்? நாம் ஜெபிக்கவேண்டிய அவசியமில்லையென்று சொல்லக்கூடியது யார்? நமக்குத் தேவையானவைகள் அநேகம். சரீரத்துக்கடுத்த காரியங்களில் நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய நன்மைகள் உண்டு. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் நாம் பெற்றுக் கொள்ளவேண்டியவைகள் மிகுதி." "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்றார். "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறபடியினாலே உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" என்று யாக்கோபு சொன்னார். நமது குறைவுகளை உணரும்போது நாம் எப்படி ஜெபிக்கா திருக்கக்கூடும்? நமது அருமைப் பிதாவைக் கிட்டிச்சேருவதற்கு நமது குறைவுகள் கிருபையின்

எத்தனங்கள்போலிருக்கின்றன. நாம் நன்மை பெற்றுக் கொள்ளும்படிமாத்திரமல்ல, அவரை நாம் அறிந்து அவரோடு ஐக்கியப்படும்படிக்காகவே ஜெப வழியை தேவன் ஏற்படுத்தினார். நாம் ஜெபிக்கப் பிரியமற்றிருக்கும்போது ஆத்திரத்தோடு நாம் அவரைத் தேடத்தக்கதான வழியில் நடத்துகிறவரும் அவரே. ஆகையால் துக்கம், துன்பம், கவலை, கஷ்டம் நமக்குத் தீமையாக நேரிடாமல், ஜெபத்துக்கு நம்மை ஏவிவிடுகிற கருவிகளாக அனுப்பப்படுகின்றன.

ஜெபத்தில் **வளர்ச்சியுண்டு.** ஜெப ஜீவியத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது நாம் ஜெபிக்கவேண்டிய காரியங்கள் அநேகம் என்று அறிவோம். இடைவிடாமல் ஜெபிப்பது கூடிய காரியமா என்ற கேள்வி நீங்கி, அவ்வாறு ஜெபிப்பது நமக்கு அனுபவமாகும். எல்லாவற்றிற்காகவும் ஜெபிக்கும் சிந்தை உண்டாகும்போது அதுவே **இடைவிடாத** ஜெபமாகும். அதற்குக் குறிக்கப்பட்ட இடமும் நேரமும் இல்லை. ஜெப ஜீவியத்தில் பிரவேசித்து தேவ சமுகத்தில் இடைவிடாது தங்கக் கற்றுக் கொண்டவர்கள், இருக்கும்போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும்போதும், புசிக்கும்போதும், வேலையிலும், வாசிப்பிலும், யோசிப்பிலும், சம்பாஷணையிலும், இலாபத்திலும், நஷ்டத்திலும், மேன்மையிலும், அவமானத்திலும், துக்கத்திலும், சந்தோஷத்திலும், சுகத்திலும், சுகவீனத்திலும் சிலரோடிருக்கும்போதும், அநேகரோடிருக்கும்போதும், கடிதங்கள் நற்செய்தி கொண்டுவரும்போதும், துக்கவிஷயங்களைக் கொண்டு வரும்போதும், எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் தங்கள் இருதயங்களை தேவனிடத்திற்கு உயர்த்தாதிருக்கமாட்டார்கள்.

நாம் ஜெபிக்க வேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் வேதம் நமக்குச் சொல்லவேண்டியதில்லை. மனுஷர் திரளானவர்கள். அவர்களுடைய தேவை பலவிதம். அவர்களில் ஒவ்வொருவனுக்கும் தேவையானவைகளோ ஏராளம். இத்தேவைகள் அவரவருடைய நிலைமைக்கும் காலத்துக்கும் அனுபவத்துக்கும் தக்கதாக பேதப்படும். அவைகளெல்லாவற்றையும் வேதத்தில் காண்பது கூடாது. என்றாலும், நாம் ஜெபிக்க வேண்டிய காரியங்களை தேவவசனம் பொதுவாகக் கூறாமலுமில்லை. அவைகளைச் சுருக்கிப் பார்க்கலாம். நாம் **நமக்காக** ஜெபிக்கவேண்டும். நமது இரட்சகர் தமக்காக ஜெபித்தார். ''பிதாவே உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உமது குமாரனை மகிமைப்படுத்தும்" என்றார். (யோவான் 17:1). அப்போஸ்தலன் தமக்காகத் திரும்பத் திரும்ப ஜெபித்திருக்கிறார். இப்படி ஜெபிப்பது தன்னலமல்ல. நாம் ஆசீர்வதிக்கப் படுவதினாலே தேவன் மகிமைப்பட வேண்டும் என்பதே நமது நோக்கம்.

ஆண்டவர் தமக்காக ஜெபித்ததால் உலகத்துக்கு இரட்சிப்பானார். ஜெபத்தால் நாம் ஆசீர்வதிக்கப்படும்போது மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களாகிறோம். தங்களுக்காகத் தனித்து ஜெபிக்காதவர்கள் மற்றவர்களுக்காகக் கூட்டத்தில் ஜெபிப்பது உண்மையல்ல. அது ஆண்டவருடைய மாதிரியுமல்ல நாம் **மற்றவர்களுக்காகவும்** ஜெபிக்கவேண்டும். நமதாண்டவர் தமது அப்போஸ்தலருக்காகவும், அவர்கள்மூலமாய் உலகத்தின் இரட்சிப்புக்காவும் ஜெபித்தார். அப்போஸ்தலன் விசுவாசிகளுக்காக எவ்வளவு ஊக்கமாய் ஜெபித்தாரென்பதை நிருபங்களில் காணலாம். நீங்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள் என்று யாக்கோபு எழுதினார். நாம் **தேவ ஊழியர்களுக்காகவும்** ஜெபிக்கவேண்டும். அப்போஸ்தலன் தமது சுவிசேஷ ஊழியம் சித்திபெறும்படி சபையார் தமக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். வேலையாள்களுக்காக நாம் அறுப்புக்கு எஜமானைநோக்கி வேண்டிக்கொள்ளும்படி ஆண்டவரும் கட்டளையிட்டார். சபையாரின் ஜெபத்தால் தேவஊழியர் திருவசனத்தை ஆவியின்பலத்தோடு கூறுவார்கள். அவர்களுடைய ஊழியம் சபைக்கு ஆசீர்வாதமாகும். இரட்சிக்கப்பட்ட **தேவனுடைய பிள்ளைகளுக்காகவும்** நாம் ஜெபிக்கவேண்டும். ''நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்றார். அப்போஸ்தலனும் தமது ஊழியத்தால் குணப்பட்டவர்களை நினைத்து அடிக்கடி ஜெபிக்கிறதாக அவர்களுக்கு எழுதினார். சகல **பரிசுத்தவான்களுக்காகவும்** நாம் ஜெபிக்கவேண்டும் *(எபே. 6:18)*. **வியாதியாயிருப்பவர்களுக்காக** நாம் ஜெபிக்கவேண்டும். **இராஜாக்களுக்காகவும் அதிபதிகளுக்காவும்** நாம் ஜெபிக்கவேண்டும். நமது பிள்ளைகளுக்காக ஜெபிக்கவேண்டும். நாம் வசிக்கும் **பட்டணம் கிராமத்துக்காக** ஜெபிக்கவேண்டும். தேவனுடைய ஜனங்களாகிய **இஸ்ரவேலருக்காக** ஜெபிக்க வேண்டும். இவைகள் மாத்திரமல்ல, நமது **சத்துருக்களுக்காகவும்** ஜெபிக்கவேண்டும். ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்று நமதாண்டவர் ஜெபித்தார். **எல்லா மனுஷருக்காகவும்** நாம் ஜெபிக்கவேண்டும். *(2 தீமோ. 2:1)*.

எனக்காக நான் ஜெபிக்கிறதில்லையே, இத்தனை காரியங்களுக்காகவும் நான் ஜெபிப்பதெப்படி என்று நம்மில் சிலர் கலங்கலாம். கிறிஸ்துவை அறிகிற அறிவே ஜெப ஜீவியத்திற்கு இரகசியம். அவரையும் அவர்மூலமாய் பிதா நமக்கருளச் சித்தமாயிருக்கிற ஆசீர்வாதங்களையும் நாம் அறியும்போது, அவைகளைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறோம். அந்த வாஞ்சையே ஜெபத்தில் நம்மை நடத்தி கிறிஸ்துவின் சிந்தையை நமக்குத் தருகிறது. அந்தச் சிந்தையுள்ளவர்களாய் நாம் ஜீவிக்கும்போது நமக்காகவும் பிறருக்காகவும் ஜெபிக்க

வாஞ்சிக்கிறோம். நம்மோடு சம்பந்தப்படுகிற ஒவ்வொரு காரியமும் நாம் தேவனை நோக்கிப் பார்க்கும்படி ஏவுகிறது. நமது இரட்சகர் பரத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். அவருடைய ஆவி நம்மை நிரப்பும்போது நாமும் மற்றவர்களுக்காகப் பரிந்து பேசி ஜெபிக்கிறவர்களாவோம். நம்மை சிநேகிக்கிறவர்களை நாம் சிநேகிப்பதும் அவர்களுக்காக ஜெபிப்பதும். நம்மை நேசிக்காதவர்களுக்காக ஜெபிப்பதோ கஷ்டம். அந்தக் கஷ்டத்திலேதான் பெரிய ஆசீர்வாதமிருக்கிறது. நம்மை அசட்டைசெய்து பகைக்கிறவர்களைக் காணும்போதும் அவர்களை நினைக்கும்போதும் இயல்பாய் நமது உள்ளத்தில் வெறுப்புண்டாக்கிறது. அவர்களுக்கு நாம் தீமை செய்யாவிட்டாலும் அந்த வெறுப்பான சுபாவம் நமக்குத் தீமையாகிறது. "சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்கிற கட்டளை எங்கேயோ பறந்துபோகிறது. இந்த வெறுப்பான சுபாவத்தை மாற்றும் மருந்தென்ன? அவர்களுக்காக ஜெபிப்பதே. கடவுள் அவர்களை ஆசீர்வதிக்கும்படி நாம் உண்மையோடும் அனுதாபத்தோடும் வேண்டிக்கொள்ளும்போது, வெறுப்பான சுபாவம் நீங்கி அவர்கள்மேல் அனுதாபம் உண்டாகும். கர்த்தர் அவர்களை இரட்சிக்கும்படி அவர் சமுகத்தில் ஊக்கமாய் ஜெபித்தபின் அவர்கள்மேல் வெறுப்பாயிருக்க முடியாது. இவ்வாறு ஜெபிப்பதினால் நமது இருதயத்தைத் தீமைக்கு விலக்கிக் காப்பதுடன் அவர்களையும் நேசிக்கக்கூடியவர்களாகிறோம். அவர்களுக்காக வேண்டிக்கொண்டபின் நாம் அவர்களுக்குத் தீங்கு நினைக்க முடியாது. மற்றவர்களுடைய சம்பாத்தியம், கல்வி, உத்தியோகம், கீர்த்தி, முன்னேற்றம் நமக்குள் பொறாமையை உண்டாக்கும்போது, அவர்களுக்காக ஜெபிப்பதே அதற்கு மருந்து. **அடிக்கடி கிறிஸ்தவர்களுக்குள்ளே, உடன் ஊழியர்களுக்குள்ளே காணப்படும் தப்பெண்ணம், விரோதம், அன்புத்தாழ்ச்சிக்குக் காரணம் ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணாததினாலேயே.** குடும்பத்திலும் சபையிலும் மற்றவர்களுக்குள்ளும் நாம் அனுதாபத்துடன் நடந்து கொள்ளவேண்டுமானால் ஜெபசிந்தையில் நாம் வளர்ந்து பெருகவேண்டும். இதுவே ஆதிக்கிறிஸ்தவர்களை ஒன்றாய் இணைத்த அன்பின்கட்டு.

நமது குறைவுகளையும் மற்றவர்களுடைய குறைவுகளையும் உணரும்போது அக்குறைவுகளை நீக்க வல்லவரான சர்வ சம்பூரண ஆண்டவரிடம் நாம் மன்றாடாதிருப்பதெப்படி? நாம் நமக்காக ஜெபிக்கும் வழக்கம் இல்லாவிட்டால் பிறருக்காக ஜெபிக்க முடியாது. நமக்காக நாம் ஏன் ஜெபிக்கிறதில்லை? தேவனுடைய சம்பூரணத்தையும் நம்முடைய ஒன்றுமில்லாமை யையும் உணர்ந்து கொள்ளாததினாலேயோ? நம்முடைய குறைவுகளை நீக்கி நம்மை ஆசீர்வதிக்க பிதாவுக்குச் சித்தமும் வல்லமையும் உண்டென்பதை அறியாததினாலேயோ? நம்மை

நாமே நடத்திக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சர்வஞானமும் சர்வசக்தியும் நமக்குண்டென்பதினாலேயோ? அல்லது விட்டுவிட மனமில்லாத பாவஜீவியம் தேவனுடைய முகத்தை ஏறிட்டுப்பார்க்க விடாததினாலேயோ? நமக்கு ஜீவனைப் போலிருக்கவேண்டிய ஜெபம் மகாவெறுப்பாய்த் தோன்றுவதின் காரணமென்ன? ஜெபிக்க ஆரம்பித்தால்தான் ஜெப ஜீவியத்தின் வல்லமை இன்னதென்று தெரியும். ஜெபத்தை நினைப்பதல்ல, ஜெபத்தைப் பற்றிய அறிவல்ல, ஜெப தீர்மானமல்ல, ஜெப வாஞ்சையல்ல, **ஜெபிப்பதே** நமக்கு ஆசீர்வாதமாகும். ஜெப ஜீவியத்தில் பிரவேசிக்கும்போது, ஜெபத்தின் ஆவி வரவர விசாலமாகி, நமக்காகவும், நமது குடும்பத்துக்காகவும், பிறருக்காகவும், உலகத்துக்காகவும் ஜெபிக்கும்படி நாடுவோம். கிறிஸ்தவ ஜீவியத்தில் ஜெபமே பிரதானம். கிறிஸ்தவனுக்கு ஜெபமே ஜீவன். ஜெபத்துக்கு வேறெதுவும் ஈடாகாது.

22

மனுஷ குமாரன்

The Son of Man

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்களை உள்ளபடி அறிந்துகொள்வதே நமது ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் ஆசீர்வாதம். இந்த அதிகாரத்தில் அவரை **மனுஷகுமாரனாகப்** படிக்கப்போகிறோம். அவரது மனுஷீகத்தைச் சிந்திப்பது மேன்மையேயன்றிக் குறைவல்ல. **மனுஷகுமாரன்** என்பது ஆண்டவர் தமக்குத் தாமே வழங்கின சிறந்த நாமம். அவரேயன்றி மற்றவர்கள் அவரை மனுஷகுமாரனென்று அழைக்கத் துணியவில்லை. இப்பெயர் சுவிசேஷத்தில் 80 தடவைக்கு மேலாக வருகிறது. அப்போஸ்தலர் அவரோடிருந்த காலத்திலாவது, அவர் மகிமையடைந்த பின்னாவது, அவரை மனுஷகுமாரன் என்று அழைக்கவில்லை. ஸ்தேவான் மரிப்பதற்கு முன்னே "மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதைக் காண்கிறேன்" என்றார்.

ஆண்டவர் தம்மை மனுஷகுமாரனென்று அழைத்ததற்குக் காரணம் என்ன? ஒரு மனுஷனுடைய சாயலை வரைந்து அதற்குக்கீழே இவன் மனுஷனென்று எழுதவேண்டியது அவசியமோ? ஆகிலும், சிறுவர் கற்றுக்கொள்ளும்பொருட்டு அப்படி எழுதுவதுண்டு. கிறிஸ்து மெய்யான மனுஷன். அதற்கு வீட்டாரும் ஊராரும் தேசத்தாரும் சாட்சி. "இதோ! இந்த மனுஷன்" என்று பிலாத்து சொன்னான். "நீ மனுஷனாயிருக்க உன்னை தேவனுக்குச் சமமாக்குகிறாயா?" என்று யூதர்கள் அவரைக் கேட்டார்கள். அவர் பிறப்புமுதல் கடைசிவரை மற்ற மனுஷரைப்போலவே வளர்ந்தார். மற்றக் குழந்தைகளைப் போலவே அவர் குழந்தையாயிருந்தபோது சிரித்து அழுதார். தரையில் தவழ்ந்து உட்கார்ந்து பின்பு தாயாரைப்பிடித்து நடக்கப்பழகினார். குளறிக்குளறிப் பேசவும் பின்பு வாசிக்கவும் கற்றார். விளையாட்டுச் சாமான்களை வைத்துச் சிறு பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடினார். மற்றவர்களோடு

சேர்ந்து ஜெபஆலயத்துக்குப் போனார். பன்னிரண்டு வயதில் முதல்முதல் எருசலேம் ஆலயம் சென்றார். குடும்பத்தொழிலில் யோசேப்புக்கு உதவிசெய்தார். பிராயமானபோது தாமே அவ்வேலையை நடத்திக் குடும்பத்தைப் பராமரித்தார். நம்மைப்போலவே அவருக்குப் பசி, தாகம், களைப்பு, நித்திரை முதலிய அனுபவமுண்டு. துக்கம், சந்தோஷம், போராட்டம், சோதனைகளுக்கு அவர் தப்பினவரல்ல. சிநேகம், கோபம், அனுதாபம், ஆச்சரியம் முதலிய உணர்ச்சிகள் அவரில் காணப்பட்டன. இவ்வாறு எல்லாவற்றிலும் அவர் மெய்யான மனுஷனாகவே வளர்ந்தார். அப்படியிருக்க, அவர் தம்மை **மனுஷ குமாரன்** என்று விசேஷித்து அழைக்கவேண்டியதென்ன? இதிலேதான் இரகசியம் இருக்கிறது.

மனுஷகுமாரன் அல்லது மனுப்புத்திரன் என்னும் பேர் பழைய ஏற்பாட்டில் 89 தரம் வருகிறது. தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியை மனுப்புத்திரனே என்று திரும்பத்திரும்ப அழைக்கிறார். இது மனுஷ பலவீனத்தைக் குறிக்கும் பேர். 8ஆம் சங்கீதத்திலும், எபிரேயர் 2லும் மனுஷகுமாரனைப்பற்றி வாசிக்கிறோம். இங்கே மனுஷன் சகலத்துக்கும் மேலானவனாக உண்டாக்கப்பட்டிருந்தும், பாவத்தால் அந்த மேன்மையை இழந்து சகலத்துக்கும் அடிமையானான் என்று சொல்லப் பட்டிருக்கிறது. மனுஷன் மா நீசனானான். தன் ஆதிநிலைமை எவ்வளவு மேலானது என்பதையும், எவ்வளவு கேடான நிலைமைக்கு அவன் தாழ்த்தப்பட்டுப்போனான் என்பதையும், மனுஷன் உணரக் கூடாதவனானான். இவ்வாறு சீர்குலைந்துபோன மனுக்குலத்தார் மத்தியில் கிறிஸ்து தோன்றி தம்மை **மனுஷகுமாரன்** என்று அழைத்தார். அவர் தம்மை அவ்வாறு அழைத்தது: நானும் மனுஷன், நீங்களும் மனுஷரா? என்னை உங்களோடு ஒப்பிட்டுப்பாருங்கள் என்று சொல்வது போலவுமிருந்தது. இந்த மனுஷகுமாரனைத் தன்முன் நிறுத்தி அவரிடம் கற்றுக்கொள்ள விரும்பும் எவனும் ஐயோ! "நான் மனுஷன் அல்ல" என்று சங்கீதக்காரனைப்போல புலம்ப நேரிடும். இதுமாத்திரமல்ல. மனுஷகுமாரன் என்னும் பேரில் பல கருத்துகள் உண்டு. அப்பெயரின் கருத்தை அப்போஸ்தலராகிலும் மற்றவர்களாகிலும் துவக்கத்தில் அறிந்து கொண்டவர்கள் அல்ல.

யூதர்கள் மேசியாவை எதிர்பார்த்திருந்தார்கள். இவர் மேசியாவாயிருந்தும் தம்மை **மேசியா** என்றாவது, **கிறிஸ்து** என்றாவது ஆரம்பத்தில் வெளிப்படையாகச் சொல்லவில்லை. சீஷர்கள் அவ்வாறு பிரஸ்தாபிக்கவும் அவர் இடங்கொடுக்கவில்லை. ஏனென்றால், யூதர்கள் மேசியாவைக்குறித்துத் தப்பான எண்ணங் கொண்டிருந்தார்கள். மேசியா வரும்போது யூதராஜ்யத்தைத் திரும்பவும் தங்களுக்கு மீட்டுத் தருவார் என்பது அவர்கள்

நம்பிக்கை. அவர்கள் இஷ்டத்துக்கு இணங்கினால் தேசத்தில் பெருங்கலகம் உண்டாகும். கிறிஸ்துவின் இராஜ்யமோ இதற்கு நேர் விரோதம். ஆகையால், அவர் தம்மை மேசியாவென்று பிரத்தியட்சமாய் வெளிப்படுத்த மனதில்லாமல் தாம் ஸ்தாபிக்க விரும்பின இராஜ்யத்துக்கு ஏற்ற நாமமாகிய **மனுஷகுமாரன்** என்னும் பேரால் தம்மை அழைத்தார். இப்பெயரில் மனுஷீகம்மாத்திரமல்ல, இராஜரீகமும் அடங்கியிருக்கிறது. தானியேல் கண்ட தரிசனத்தில் உலக இராஜ்யங்களின் ஆளுகை குரூரமும் மூர்க்கமுமான மிருகங்களுக்குச் சமானமென்றும், அவ்வாளுகை அவர்களைவிட்டு நீக்கப்பட்டு வானத்தின் மேகங்கள்மீது வந்த **மனுஷகுமாரனுக்குக்** கொடுக்கப்பட்டதென்றும் சொல்லியிருக்கிறது. கிறிஸ்துவின் இராஜ்யம் மனுஷீகமானது. இது சாந்தமும் இரக்கமும் சமாதானமும் நிறைந்தது. தாம் மேசியாவாயிருந்தும் தமது ஊழியத்துக்கு இடையூறு வராதபடிக்குத் தம்மை மனுஷகுமாரன் என்றே அழைத்து வந்தார். தனித்த ஆத்துமாக்களிடத்திலும் தமது அப்போஸ்தலரிடத்திலும் தாம் யாரென்பதை அவர் மறைக்கவில்லை. அவர் மனுஷகுமாரன் என்று பேசினபோதெல்லாம் மூன்றாம் ஆளைக் குறித்துப் பேசினதுபோல் அவர் பேசினபடியால் "இந்த மனுஷகுமாரன் யார்" என்றும் ஜனங்கள் அவரைக் கேட்கவேண்டியதாயிற்று.

மனுஷகுமாரன் என்பதற்கு **மனுக்குலத்தாரின் மகன்** என்று அர்த்தம். ஆதிமனுஷன் பாவமற்ற தன்மையில் உண்டாக்கப் பட்டான். அவர் பாவஞ்செய்தபோது அத்தன்மையை இழந்தான். ஆதாம் தன் சாயலின்படியே குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான் என்பது புறம்பான சாயலைமாத்திரமல்ல, உள்ளான பாவத்தன்மையையும் குறிக்கும். அவனில் பிறந்த மனுக்குலமனைத்தும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர் களானார்கள். மரம் விழுவே கிளைகளும் சேர்ந்து விழுந்தன. கிறிஸ்து பாவிகளைக் கைதூக்கி இரட்சிக்க வந்தார். இது பாவிகளைவிட்டுத் தாம் விலகிக்கொள்வதினால் ஆகிற காரியமல்ல. நெருப்பில் அகப்பட்டவனை நெருப்புக்குள் பிரவேசிப்பவனே இரட்சிப்பான். ஆதாமுக்கும் நமக்கும் மாம்சத்திலும் இரத்தத்திலும் சமபந்தமில்லாதிருந்தால், அவன் பாவத்துக்கும் நமக்கும் சம்பந்தம் இராது. கிறிஸ்துவுக்கும் நமக்கும் சம்பந்தமில்லையென்றால் அவர் இரட்சிப்புக்கும் நமக்கும் சம்பந்தமிராது. "ஆகையால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்." இச்சம்பந்தத்தினால் அவர் மனுக்குலத்தாரின் மகன் ஆனார். அவர் பரிசுத்தராயிருந்தும் தம்மைப் பாவிகளோடு ஒன்றாக்கி, தாம் அவர்கள் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு தம்மை **மனுஷகுமாரன்** என்று அழைத்தார். மனுக்குலமனைத்துக்கும் தலைவனும் பிரதிநிதியுமானார். இவர்

ஒரு குடும்பத்துக்கும் ஒரு ஜனத்துக்கும்மாத்திரம் உரியவரல்ல; சர்வ ஜனத்துக்கும் சொந்தமானவர். ஒரு காலத்துக்குமாத்திரம் உரியவரல்ல; எக்காலத்துக்கும் உரியவர். ஒரு தேசத்துக்குமாத்திரம் உரியவரல்ல; எத்தேசத்தாருக்கும் உரியவர். மனுஷகுமாரன் என்பதினால் ஒரு மனுஷனுடைய குமாரன் என்று அர்த்தமல்ல. மனுக்குலத்தாரின் குமாரன். தேவன் மனுஷனை உண்டாக்கின நோக்கத்தைப் பூரணமாய்த் தம்மில் நிறைவேற்றின மனுமகன். சுருக்கிச்சொல்லில் அவரே **மனுக்குலம்.**

மனுஷருக்குள் ஆணென்றும் பெண்ணென்றும் பிரிவுண்டு. ஆணுக்குரிய இலட்சணம் பராக்கிரமம். பெண்ணுக்குரிய இலட்சணம் உருக்க இரக்கம். இவை இரண்டும் அவரிலுண்டு. ஆகையால் ஆண்களும் பெண்களும் யாதொரு பேதமின்றி அவரைக்கிட்டிச் சேர்ந்து ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இவருக்குள் ஆணென்றும் பெண்ணென்றும் வித்தியாசமில்லை. இருபாலாருக்கும் இவர் பொது. உலகத்தில் பல ஜாதிகள் உண்டு. அவர்கள் சுபாவ இலட்சணங்களில் எவ்வளவோ பேதப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்து எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அல்லது எந்த ஜாதிக்கு ஏற்றவர்? மாம்ச பிறப்பின்படி அவர் யூதன். யூதர் தேசாபிமானம் மார்க்காபிமானமுள்ளவர்கள். எந்த ஜாதியாரோடும் கலக்கமாட்டார்கள். சுவிசேஷத்தை வாசிக்கும்போது இவர் இன்ன ஜாதியைச் சேர்ந்தவரென்று சொல்ல இடமில்லை. அவருக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும், ஐரோப்பியனென்றும், இந்தியனென்றும், அடிமையென்றும், சுயாதீனனென்றும் வித்தியாசமில்லை. எத்தேசத்தார் அவரை ஏற்றுக்கொண்டாலும் இவரே எங்களுக்குச் சொந்தமான குலதெய்வமெனக் கொண்டாடுவார்களேயன்றி அவரை யூதனென்று நினைத்தவர்களில்லை.

கீர்த்திபெற்ற ஒரு பிரான்சு சித்திரக்காரன் கிறிஸ்துவைப் பற்றி படம் வரைய விரும்பி பலஸ்தீனாதேசம் சென்றான். வேதபாரகர் பரிசேயரைக் காண்பிக்கும்படி அவர்கள் சாயலுக்கேற்ற மனுஷரைத் தெரிந்துகொண்டு வரைந்தான். அவர்கள் மத்தியில் கிறிஸ்துவை வரையும்படி யோசித்தபோது அவர் **மனுஷ குமாரனாயிருக்க** நான் அவரை ஒரு யூதனைப்போல் வரைவதெப்படி என்று சொல்லித் தன் ஊருக்குத் திரும்பினான். உலகத்தில் கல்வியும் அறிவும் காலத்துக்குக் காலம் மாறி வளர்ந்து கொண்டே போகின்றன. பழைமையானவைகளை மனுஷர் விரும்புவதில்லை. புதிய காரியங்களையே தேடுகிறார்கள். இந்த மனுஷ குமாரனுடைய உபதேசங்களையோ பழைமையென்று சொல்ல முடியாது. இரண்டாயிரம் வருஷமாகியும் இன்னும் ஞானிகளும் சாஸ்திரிகளும் அவர் பாதபடியில் பணிந்து கற்றுக்கொள்ள வேண்டிய

நவசாஸ்திரமாயிருக்கிறது. "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் என் வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை.'' அவரும் எக்காலத்துக்கும் உரியவர். அவர் உபதேசமும் எக்காலத்துக்கும் உரியது. மனுமக்கள் யாவருக்கும் எக் காலத்துக்கும் சொந்தமான மனுஷகுமாரன் இவரே. இவருக்குச் சமானமான வேறு **மனுஷகுமாரன்** பூமியில் இல்லை.

கிறிஸ்து மெய்யான மனுஷனானால் மற்ற மனுஷர் பிறக்கிற விதமாய் அவர் பிறக்கவேண்டாமா? அவர் அதிசயமாகப் பிறந்ததால் மெய்யான மனுஷனாயிருக்கக்கூடுமா என்கிற கேள்விகள் வரலாம். அப்படியானால் ஆதாமும் மெய்யான மனுஷனல்லவென்றே சொல்லவேண்டியது. அவர் நம்மைப் போல் பெற்றார் வழி பிறவாமல் அதிசயமாய் மண்ணிலிருந்துண்டானவன். அவன் மனுஷனல்லவென்றால் அவனிலிருந்து தோன்றிய நாமும் மனுஷரல்ல. ஒருவன் உண்டாக்கப்படுகிற **விதத்தினாலே** மனுஷன் என்று எண்ணப்படாமல், மனுஷனுக்குரிய, **இலட்சணங்களை** உடையவனாயிருப்பதினாலேயே மனுஷன் என்று எண்ணப் படுகிறான். ஆதாமுடைய சரீரம் மண்ணிலிருந்து உண்டாக்கப் பட்டது. தேவ ஆவியானவர் அவனுக்குள் பிரவேசிக்க அவன் ஆவி, ஆத்துமா, சரீரம் பொருந்திய மனுஷனானான். கிறிஸ்துவின் சரீரம் மண்ணிலிருந்து உண்டாகாமல் மரியாளிடமிருந்து அவருக்குக் கிடைத்தது. "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" (எபி. 10:5). தேவாவியின் கிரியையினால் பரிசுத்த பிள்ளையாக அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். வேறு விதமாய் அவர் மனுஷனாவது கூடாததினால் அல்ல. ஆதாம் மனுக்குலத்தோடு சம்பந்தப்பட்டதுபோல இவரும் நம்மோடு சம்பந்தப்பட விரும்பி அப்படிப் பிறந்தார். அப்போஸ்தலன் கிறிஸ்துவைப் ''பிந்தின ஆதாமென்றும்,'' ''இரண்டாம் மனுஷனென்றும்'' அழைத்தது சரியே. இவர் நமது பாவ மாம்சத்தின் **சாயலான** சரீரத்தை எடுத்து நம்மில் ஒருவராக வந்ததால் நமக்கு அதிகச் சொந்தமானார்.

தேவன் எதிர்பார்த்தபடி முதல் மனுஷன் பரிசுத்தத்தில் வளர்ந்து பூரணனாகக்கூடாமல் பாவஞ்செய்து தவறினான். அவ்வாறு அவன் பூரணப்படுவது அவன் சுயபிரயாசத்தால் ஆகிற காரியமல்ல. கொடி செடியில் நிலைத்துப் பிழைக்குமாறு பரிசுத்த பிதாவோடுள்ள பூரண ஐக்கியத்தால்மாத்திரம் அவன் பூரணனாகக்கூடும். சத்துருவின் இஷ்டத்துக்கு அவன் இணங்கினபோது தேவ **ஐக்கியத்தை** இழந்தான். இதுவே அவனுக்குச் சாவாயிற்று. மனுஷனைக்குறித்த தேவதீர்மானம் தவறிப்போனதாகத் தோன்றினது. ஆகிலும் அவர் தமது தீர்மானத்தை நிறைவேற்றாது விடார். அத்தீர்மானத்தின் மகிமை

இன்னதென்பதை பாவிகள் அறிந்து கொண்டார்களில்லை. அது கிறிஸ்துவில் வெளிப்பட்டது. பாவ உலகில் பாவமற்ற ஒரு **மனுஷன்** மறுபடியும் தோன்றவேண்டும். அம்மனுஷனில் தேவன் தமது தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். இதற்கு உலகத்தில் பிறந்த எந்த மனுஷனும் தகுதியுள்ளவனல்ல. எல்லாரும் பாவஞ்செய்து ஏகமாய்க் கெட்டார்கள். தேவசித்தத்தையல்ல சுயசித்தத்தையே உறுதியாய்ப் பிடித்தார்கள். அவனவன் **தன்தன்** வழியிலே போனான். தேவவழியைத் தேடுகிறவன் இல்லை. கடவுள் அவனுக்குள்ளே வசித்து தமது சித்தத்தைப் பரிபூரணமாய் நிறைவேற்றத் தகுந்த ஒரு மனுஷனும் உலகில் இல்லாததினாலே கிறிஸ்து பரிசுத்த பிள்ளையாகப் பிறக்க வேண்டியதாயிற்று. அவரில் பாவமில்லை. தேவன் தமது தீர்மானத்தை நிறைவேற்றத்தகுந்த பரிசுத்த பாத்திரம் இவரே.

''பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டு ஞானத்தாலும் கிருபையாலும் நிறைந்தது; தேவகிருபை அவர்மேலிருந்தது.'' இவ்வார்த்தைகள் அவரது ஆவி, ஆத்ம, சரீர வளர்ச்சியைக் காண்பிக்கின்றன. தேவ தீர்மானத்திற்கேற்றபடியே அந்தப் பரிசுத்த பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சிறந்து வளர்ந்தது. அவர் முப்பது வயதுவரை எவ்வாறு வளர்ந்தாரென்பதும் சுறுக்கமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. "இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." அவரது சரீரம் ஒழுங்காய் வளர்ந்தது. அவர் ஆத்துமா பரமஞானம் பெற்று வளர்ந்தது. தேவ ஆவி அவரைப் பலப்படுத்த பரிசுத்த புருஷனாக வளர்ந்தார். எல்லாச் செடிகளும் வாடி வதங்கி அவைகள் மத்தியில் ஒரு செடிமாத்திரம் செழித்தோங்கி நிற்பதுபோல், பாவ விஷத்தால் நோய்கொண்டு வீழ்ந்துபோன மனுஷர் நடுவில், இவர் ஒருவரே **மனுஷன்** என்னும் சிறந்த பேருக்கு ஏற்றவராய் விளங்கினார். மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கின நாளில் அகமகிழ்ந்த தேவன் இவர் மீது வைத்த பிரியம் கொஞ்சமல்ல. இவர் வார்த்தை களையும் கிரியைகளையும் கண்ட மனுஷருக்குள் உண்டான ஆச்சரியமும் பிரமிப்பும் கொஞ்சமல்ல. "இவர் யாரோ? இவர் எப்படிப்பட்டவரோ?" என்று பேசிக்கொண்டார்கள். ஆகிலும், அவரை இன்னாரென்று அறிந்து கொள்ளவில்லை.

முப்பது வயதில் அவர் யோவானால் ஸ்நானம் பெறவந்தார். அவரை அறியாமல் தங்களைப்போல அவரும் பாவமன்னிப்பைத்தேடி வந்ததாக ஜனங்கள் நினைத்தார்கள். யோவானோ பாவிகளின் ஸ்நானத்தை அவர் பெற்றுக்கொள்வது தகாதெனத் தடுத்தார். ஆகிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து ஸ்நானத்தைகொடுத்துப் பிந்தி அதன் இரகசியம் இன்னதென்று

அறிந்தார். அவர் தமது பாவங்களுக்காக அல்ல, மனுமக்களுடைய பாவத்தைத் தமது பாவமாகப் பாவித்து, பாவிகளுக்காகப் பரிதபிக்கிறவராகத் தம்மை அவர்களோடு ஒன்றாக்கினார் என்னும் சத்தியத்தை அறிந்த யோவான், பிந்தி அவரைக் கண்டபோது "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" எனச் சாட்சி கூறினார். அவர் ஸ்நானம் பெற்ற சமயத்தில் செய்த ஜெபம் கவனிக்கப்படத்தக்கது. வார்த்தைகள் சொல்லப்படவில்லையாகிலும் உத்தேசிக்கக்கூடியது. பிதாவே! பாவிகளுக்காகப் பரிதபிக்கிறேன். நான் அவர்கள் எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமாகி அவர்களுக்குச் சொந்தமானேன். அவர்கள் என்னை அறியமாட்டார்கள். அவர்கள் எவ்வளவோ கெட்டுப்போனார்கள். உமது சித்தம் அவர்களில் நிறைவேறவில்லை. அவர்கள் பாவங்கள் நீங்கவேண்டும். அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும். அதை நிறைவேற்ற எனக்கு உன்னதபலம் வேண்டும். அவர்களுக்காக நான் எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக என்னை முழுவதுமாய் உமக்குப் பிரதிஷ்டை செய்கிறேன் என்பதுபோல் ஜெபித்திருக்கலாம். வந்த உத்தரவென்ன? வானம் திறக்கப்பட்டு தேவன் மனுஷ குமாரனோடு பேசித் தமது தீர்மானத்தைப் பிரத்தியட்சமாய் அவருக்கு வெளிப்படுத்தினார். இரட்சிப்பை நிறைவேற்ற உன்னத பலம் அளவில்லாமல் அவருக்கு அருளப்பட்டது. தேவாவியானவர் பூராவாய் அவரை நிரப்பி ஆண்டுகொண்டார். "நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என்னும் பிதாவின் இனிய சத்தம் தொனித்தது.

ஸ்நானம் முடிந்தபின் வனாந்தர சோதனை. இங்கே அவரது மனுஷீகம் பிரத்தியட்சமாய் விளங்குகிறது. தேவதன்மைக்குச் சோதனையில்லை; பாவமுமில்லை. அவர் சோதிக்கப்பட்டது மெய்யானால் மனுஷகுமாரனாகவே சோதிக்கப்பட்டார். சோதனைகள் மனுஷனுக்கே உரியது. தேவ ஆவியை அளவில்லாமல் பெற்றபின் அவர் சோதிக்கப்படவேண்டுமோ? ஆம், அவர் பெற்றுக்கொண்ட இப்புதிய வல்லமை சோதிப்படவேண்டும். இந்த வல்லமையைத் தமக்காக அல்ல, தேவனுக்காகவே உபயோகிக்கவேண்டும் என்கிற சத்தியத்தை இச்சோதனைகளாலே அவர் கண்டறியவேண்டும். சோதிக்கப் படும்படி! அவரை நடத்தினவரும் ஆவியானவரே. கப்பல் மாலுமி சமுத்திரத்திற்குள் பிரயாணம் போகுமுன் எங்கெங்கே பாறைகள் உண்டென முந்தி அறிந்து கொள்வதுபோல, இவரும் தமது வழிகளில் இனி நேரிடக்கூடிய சகல சோதனைகளையும் முன்னறிந்து அவைகளுக்கு விலகிக்கொள்ளக் கூடியவரானார். முதல் மனுஷன் சோதனைக்கிணங்கி பாவஞ்செய்து மனுக்குலத்தைக் கெடுத்தான். இரண்டாம் மனுஷன்

சோதிக்கப்பட்டும் பாவஞ் செய்யாததினால் மனுக்குலத்தை இரட்சிக்க வல்லவரானார்.

இதுவரை அவரது ஜீவியம் ஆயத்த காலமாயிருந்தது. இனிமேல் அவரது ஜீவியம் உலகத்தில் இரட்சிப்புக்காக் கனி கொடுக்கவேண்டும். தேவனிடத்திலிருந்து அளவில்லாத வரங்களைப் பெற்றுக்கொண்டவர், அவைகளை மற்றவர்களுக்குத் தாராளமாய்க் கொடுக்கவேண்டியது நியாயமே. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் **மனுஷகுமாரன்** வந்தார். அவரது மூன்று வருஷ ஜீவியத்தில் மாசற்ற **பரிசுத்தத்தையும்**, அரிய **உபதேசங்களையும்**, அற்புத **கிரியைகளையும்**, முடிவாக அருமையான **மரணத்தையும்** காண்கிறோம். அவைகளை வரிசையாகக் கவனிப்போம்.

அவரது **பரிசுத்தம்**. பாவம் மனுஷனுக்குரிய நிலைமையல்ல, ஆதி மனுஷன் பாவமில்லாதவனாக உண்டாக்கப்பட்டார். அந்த நிலைமையில் அவன் வளர்ந்து பூரணப்படுமுன் விழுந்தான். நாம் பாவிகளானதால் பாவமற்ற ஜீவியம் நமக்கு எட்டாத உயரமாயிருக்கிறது. இரண்டாம் மனுஷன் பாவமில்லாதவராகப் பிறந்தார். இந்த நிலைமையில் பூரணமாக வளர்ந்தார். அவர் பரிசுத்தமாக ஜீவித்தது தெய்வீகத்திலா, அல்லது மனுஷீகத்திலாவென்று கேட்கலாம். தேவ பரிசுத்தத்திற்கும் மனுஷ பரிசுத்தத்திற்கும் வித்தியாசமுண்டு. தேவ பரிசுத்தம் வளர்ச்சியும் மாறுதலுமற்றது. மனுஷ பரிசுத்தம் வளர்ச்சிக்குரியது. தேவ பரிசுத்தத்திற்குப் போராட்டமில்லை. மனுஷ பரிசுத்தம் சோதனைகள் போராட்டங்கள்மூலமாய் வளரவேண்டியது. கிறிஸ்துவின் பரிசுத்தம் இத்தன்மையானது. அவர் சோதிக்கப்பட்டும் பாவஞ் செய்யாத பரிசுத்தர். பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு பூரணப்பட்டவர். கீழ்ப்படியாத பிள்ளைகளைத் தண்டித்துக் கீழ்ப்படியச் செய்வதுபோல் அல்ல. எப்பொழுதும் கீழ்ப்படிந்த அவருடைய கீழ்ப்படிதல் இப்பாடுகளால் பூரணப்பட்டது. அவர் அசுத்தத்திலிருந்து பரிசுத்தமானவரல்ல. பரிசுத்தத்திலிருந்து பரிசுத்தமாய் வளர்ந்து பூரணப்பட்டவர். "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்த மாக்கப்படும்படி அவர்கள் நிமித்தம் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" என்றார். இங்கே **பரிசுத்தமாக்குகிறேன்** என்னும் சொல்லானது சுத்திகரித்தல் என்று அர்த்தமல்ல.

பரிசுத்தமாக்குதல் என்னும் பதமானது பழைய ஏற்பாட்டில் பிரதிஷ்டையாக்குவதற்கு அடையாளமாயிருப்பதுபோல, கிறிஸ்து தம்மை முழுவதும் தேவனுக்குப் **பிரதிஷ்டை** செய்தவராக நடந்தார் என்பதைக் குறிக்கும். மாம்ச சம்பந்தமான ஆசாபாசங்களுக்கு அவர் ஒருபோதும் தமது இருதயத்தைச் சாய்த்தவரல்ல. உலக ஞானத்தையும் சாஸ்திரங்களையும்

அறிவதற்குத் தமது புத்தியைக் கொடுத்தவரல்ல. அவர் ஆவி, ஆத்துமா, சரீரம், புத்தி, சித்தம், பலம் யாவும் உலகத்தின் இரட்சிப்புக்கென்று தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தது. பிதா தமக்குக் கற்பித்த ஒரே காரியத்தைச் செய்யும்படி உலகத்தில் வந்தார். அந்த ஒரே காரியத்தை நிறைவேற்றும்படி தம்மைப் பூரணமாய்ப் பிதாவுக்குக் கையளித்தார். எங்களுக்குத் தெரிந்த அவ்வளவு சாஸ்திரம் இயேசுவுக்குத் தெரியாது என்று சிலர் இக்காலத்தில் மேட்டிமையாகப் பேசுவது மதியீனம். அவரைப்போல் பேசினவன் யார்? அவர் பேசின உவமைகளின் ஞானத்தை முற்றிலும் அறிந்தவன் யார்? அவர் உலக ஞானத்தையும் பூமி சாஸ்திரங்களையும் போதிக்கும்படி வராமல் பாவிகளின் இரட்சிப்புக்கேதுவாகத் தேவ சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றவே வந்தார். அவ்வாறு ஒரு சாஸ்திரத்தில் அவர் நிபுணரென விளங்கினால் சாஸ்திரிகளால் அவர் மேன்மையடையலாம். மனுக்குலத்தார் யாவருக்கும் பொது மனுஷனாவது எப்படி? உலகத்தின் பாவத்தைப் போக்கும்படி வந்ததினால் அல்லவா உலகம் அவரை நாடுகிறது. தேவ சித்தப்படி நடந்ததே அவர் பரிசுத்தத்தின் பூரணம்.

அவரடைந்த பரிசுத்தம் அவருக்கு இலேசாய்க் கிடைத்த காரியமல்ல. அது சோதனைகளும் போராட்டமும் இல்லாத பரிசுத்தம் அல்ல. மனுஷராகிய நமக்குள் விருப்பு வெறுப்பாகிய இருவித உணர்ச்சிகள் உண்டு. நமக்குப் பிரியமானதை விரும்புகிறோம். பிரியமில்லாததை வெறுக்கிறோம். தேவ சித்தப்படி நாம் பிழைக்க நாடும்போது நமக்குப் பிரியமானதை விட்டு விட நேரிடும். பிரியமில்லாததை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகும். அப்போதுதான் போராட்டம் இன்னதென்று தெரியும். எப்படியாகிலும் தேவ சித்தத்தையே விரும்பி நடக்கும்போது அதுவே நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

இரட்சகர் பன்னிரு வயதில் தேவாலயத்தில் தங்கினார். பிதாவின் வீட்டிலேயே இருப்பது அவருக்குப் பிரியமாயிருந்தது. தாயார் வந்து அழைத்தபோதோ அது தேவசித்தமென்று கண்டு, ஆலயத்தைவிட்டு நாசரேத்துக்குப் போனார். வனாந்தரத்தில் பசியோடிருந்தார். சாப்பிடுவது அவருக்குப் பிரியமாயிருந்தது. அப்பங்களைச் சிருஷ்டிக்கும் வல்லமையும் அவருக்குண்டு. அவ்வளவு பசியிலும் பிதாவின் சித்தமே மேலான போஜன மென்றெண்ணி அவருக்குக் காத்திருந்தார். கிரேக்கர் தம்மைப் பார்க்க விரும்பின சமயத்தில் தமது மரணத்தை நினைவுகூர்ந்து. "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்வேன்? பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? ஆகிலும் இதற்காகவே இந்த

வேளைக்குள் வந்தேன். பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்." முதலில் இயற்கையான உணர்ச்சி காணப்படுகிறது. என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுகிறது? என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? ஒருபோதும் அப்படிச் சொல்லமாட்டேன். பாடுபடவே நான் வந்தேன். பிதாவே! எனக்கு என்ன நேரிட்டாலும் பரவாயில்லை, உமது நாமம் மகிமைப்பட்டால் அதுவே எனக்குப்போதும் என்றார். என்ன துயரமான போராட்டம்! எவ்வளவு மகிமையான ஜெயம்! இதுபோலவே தோட்டத்திலும் அவர் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருந்தது. திகிலும் மிகுந்த வியாகுலமும் அடைந்தார். பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்தார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய்த் தரையில் விழுந்தன. என்ன சொல்லுகிறார்? "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், **ஆகிலும்** என் சித்தப்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்றார். மனுஷனுடைய புத்திக்கு எட்டாத பாடுகளும் துயரமும் அவரை இறுத்தினபோதிலும், தம்சித்தமல்ல, பிதாவின் சித்தமே தம்மில் நடக்கவேண்டுமென்று விரும்பினார். பயங்கரமான போராட்டத்தில் மேலான ஜெயம் அடைந்தார். இவ்வாறு அவர் ஜீவிய முழுவதிலும் எல்லா விஷயத்திலும் தமது சித்தப்படி நடவாமல் பிதாவின் சித்தப்படியே நடந்ததால் **பூரண பரிசுத்தராய்** விளங்கினார்.

சித்தம் தன்னிலே பாவமுள்ளதல்ல. தேவனே அந்தச் சித்தத்தை நமக்குத் தந்தவர். ஆனால் கடவுள் விலக்கினதை நாம் விரும்பும்போதும், அவர் விரும்புவதை நாம் வெறுக்கும் போதும் பாவமாகும். மனுமக்கள் கெட்டது இதிலேதான். **மனுஷகுமாரனோ** தமக்குப் பிரியமானதைச் செய்யாமல் தேவனுக்குப் பிரியமானதையே செய்யும்படி தம்மைக் கையளித்ததினால் தேவதீர்மானத்தை நிறைவேற்றுகிறவரானார். பிரதான ஆசாரியனைப்போல் தமது நெற்றியில் கர்த்தருக்குப் **பரிசுத்தம்** என்று எழுதிக்கட்டிக்கொண்டவரல்ல. அவர் ஜீவியமுழுவதுமே பரிசுத்தமாயிருந்தது. இந்தப் பரிசுத்தம் அவருக்கு இலேசாய்க் கிடையாமல் இடைவிடாத சோதனைகளையும் போராட்டங்களையும் அவர் மேற்கொண்டு, தேவ சித்தத்தையே தமது சித்தமாக்கினதால் கிடைத்தது. தாம் சம்பாதித்த இந்தப் பரிசுத்தத்தைத் தம்மோடு இணைக்கப்பட்ட மக்களுக்கு அருளுகிறார். "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் **பரிசுத்தமும் மீட்புமானார்**" என்று அப்போஸ்தலன் சொன்ன இரகசியம் இதுவே. நமது பாவங்களுக்காகப் பரிதபிக்கவும் நம்மை பரிசுத்தமாக்கவும் வல்லவரான மகா பிரதான ஆசாரியர் இவரே.

அவரது **உபதேசம்** தெய்வீக சிறப்புப்பெற்றது. ஆகிலும் அதில் மனுஷீகம் காணப்படுகிறது. யாவரும் அறிந்து கொள்ளக்கூடிய சாதாரணமான காரியங்களைக்கொண்டு ஆழமான தேவரகசியங்களைப் போதித்தார். எப்படி அவரது பரிசுத்த ஜீவியம் சுயசித்தப்படி நடவாமல் தேவ சித்தம்போல் நடந்ததால் விளங்கினதோ, அதுபோல அவரது உபதேசமும் **மனுஷகுமாரன்** வாயிலிருந்து வந்தாலும் அது தேவ உபதேசமாகவே யிருந்தது. அவர் ஒன்றையும் சுயமாய்ப் பேசினவரல்ல. மற்ற மனுஷருடைய ஏவுதலுக்கு இணங்கிப் பேசினவரல்ல. புறம்பான எந்த வல்லமையும் தமது சிந்தையை ஆளுவதற்கு அவர் இடங்கொடுத்தவரல்ல. அவர் மனது பூரணமாய் தேவமனதுக்கு இசைய, அவர் பேசின வாக்குகள் தேவவாக்குகளாயிருந்தன. அவர் சாதாரணமாய்ப் பேசினவை களில் தேவஞானம் வெளிப்பட்ட இரகசியம் அதுதான். சகல காரியங்களிலும் அவர் உட்செவி தேவசத்தத்திற்குத் திறந்திருந்தது. அவர் திரள் கூட்டத்தால் நெருக்கப்பட்டிருந்தாலும் அவரது கண்கள் தேவமுகத்தை நோக்கியிருந்தது. இந்த உள்ளான தேவ ஐக்கிய இரகசியத்தை மனுஷர் அறியவில்லை. ஆயத்தமின்றி, ஆராய்ச்சியின்றி, ஆத்திரமின்றி, எக்கேள்விகளுக்கும் அவர் கொடுத்த உத்தரவானது, கேட்போர் மனதில் பிரமிப்பை உண்டாக்க. "இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது" என்று பேசிக்கொண்டார்கள். அவர்கள் புறம்பான மனுஷனைப் பார்த்தார்களேயல்லாமல் உள்ளான தேவ ஐக்கியத்தை அவர்கள் அறியவில்லை. அவர் எவைகளைப் பேசினாரோ அவைகளை தேவனிடத்திலிருந்து கேட்டுப் பேசினார்.

தேவன் அவரிடம் பேச அவர் மனுஷரிடம் பேசினார். ''என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. என் உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறது. நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன். நான் சுயமாய்ப் பேசவில்லை. நான் பேசவேண்டியது தின்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதா எனக்குக் கட்டளையிட்டார்" அவர் ஜீவியத்தில் தமது சுய இஷ்டமாய் நடவாமல் முற்றிலும் தேவசித்தத்திற்கே கீழ்ப்படிந்து நடந்ததுபோல, தமது உபதேசத்திலும் பேச்சிலும் சுயமாய் ஒன்றும் செய்யாமல் தேவன் தமக்குச் சொன்னவைகளையே உலகத்துக்குச் சொன்னார். ஆகையால் மனுஷீகத்தில் விளங்கிய அவரது **உபதேசம்** தெய்வீகமுள்ளதுதென்று காண்கிறோம்.

அவர் நடப்பித்த **கிரியைகளும்** இதுபோலவே, கிறிஸ்து செய்த அற்புதங்களில் தேவகரத்தைக் காண்கிறோம். பார்வைக்கு அவர்தாமே செய்கிறதுபோல் தோன்றுகிறது. ஆகிலும் அவைகள் தேவகிரியைகளே. அவர் **பரிசுத்த ஜீவியம்** தேவசித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடந்த பலன். அவர் **உபதேசங்கள்** பிதா பேசக்கேட்டுப் பேசினவை. அதுபோலவே அவரது **கிரியைகளும்** பிதா அவரைக்கொண்டு செய்த கிரியைகளே. அவருக்குள் வல்லமையிருந்தபோதிலும் தமது இஷ்டப்பிரகாரம் எந்த அற்புதத்தையும் அவர் செய்தவரல்ல. மற்றவர்கள் தங்கள் இஷ்டம்போல் அவரை அற்புதம் செய்யும்படி கேட்டபோது அவர்களைக் கடிந்துகொண்டார். தாம் செய்த கிரியைகளைக் குறித்து "நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவே இந்தக்கிரியைகளைச் செய்துவருகிறார்" என்றார். பிசாசின் பலத்தினாலே அவர் அற்புதங்களைச் செய்தாரென்று சத்துருக்கள் சொன்னபோது, அப்படியல்ல நான் தேவனுடைய வல்லமையினாலே இவைகளைச் செய்கிறேன் என்றார்.

லாசரு கல்லறையில் "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனும்" என்று அவர் சொன்னபோது எல்லாருடைய கண்களும் அவரை நோக்கின. அவர் ஓர் அதிசயத்தைச் செய்யப் போகிறதாகத் தோன்றினது. அவரோ தமது கண்களை ஏறெடுத்து: "பிதாவே! நீர் எனக்குச் செவிகொடுத்த படியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று அறிந்திருக்கிறேன்'' என்று சொல்லி மரித்தவனை உயிரோடே வரும்படி கட்டளையிட்டார். இந்த இரகசியத்தை அறியாத மனுஷர் இந்த வல்லமை இவருக்கு எப்படி வந்ததென்றும், இவைகள் சாத்தானுடைய செயல்களென்றும், இப்படிப்பட்ட கிரியைகளைச் செய்து உலகத்தை இழுத்துக்கொள்ளப்பார்க்கிறாரென்றும் பலவிதமாய்ப் பேசி நாசமானார்கள். திமிர்வாதக்காரனை அவர் நடக்கச்செய்த சமயத்தில் மனுஷனுக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த தேவனை மகிமைப்படுத்தினார்கள். "ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டானென்று'' நிக்கொதேமு சொன்னார். ஆகையால், அவர் செய்த கிரியைகள் மனுஷக் குமாரன்மூலமாய்ச் செய்யப்பட்டதால் மனுஷீகமும், தேவன் அவரைக்கொண்டு செய்ததால் **தெய்வீகமும்** உள்ளதெனக் காண்கிறோம்.

மனுஷனைக் குறித்துள்ள தேவதீர்மானம் ஆதிமனுஷனில் தவறினபோதிலும், இரண்டாம் மனுஷனில் பரிபூரணமாக நிறைவேறினது. சர்வசிருஷ்டிப்பிலும் தேவசித்தம் செய்யப்பட்டு

தேவநாமம் மகிமைப்பட்டுவர, ஆதாமில்மாத்திரம் தேவன் மகிமைப்படக்கூடாமற்போயிற்று. இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவில் தேவசித்தம் பரிபூரணமாக நிறைவேறினதால் தேவன் இவர்மூலமாய் மகிமையடைந்தார். "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன், நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' என்றார். இவ்வாறு தேவசித்தமும் தேவஞானமும் தேவவல்லமையும் தாராளமாய் இவர்மூலமாக வெளிப்பட்டபடியால் மனுஷனைக் குறித்த தேவதீர்மானம் இவரில் நிறைவேறிற்று.

இனி நடக்க வேண்டியதென்ன? இந்த மனுஷ குமாரனுடைய பூரணமான ஜீவியத்தின் முடிவென்ன? **மனுஷக்குமாரன்** மகிமைப்படவேண்டும். ஆதாம் பாவஞ்செய்யாமல் பரிசுத்தத்தில் பூரணப்பட்டிருந்தால் தேவன் அவனை மகிமைப்படுத்தியிருப்பார். அவன் மகிமையடைய வேண்டுமென்பதே தேவதீர்மானம். இது ஆதியாகமத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. ஆதாம் தேவசித்தம்போல் நடந்து பரிசுத்தத்தில் பூரணப்பட்டிருப்பானானால் தன்னைப்பற்றிய தேவதீர்மானம் இன்னதென்று அவன் கண்டிருப்பான். அந்தத்தீர்மானம் இரண்டாம் மனுஷனாகிய கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்பட்டது. இதைக்குறித்து பரிசுத்த பவுல்: ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் **மறைவாயிருந்த** அந்த இரகசியத்தை தேவன் கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தச் சித்தமானாரென்றும், அந்த மகிமையின் நம்பிக்கை கிறிஸ்துவே என்றும், எந்த மனுஷனும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறுவதே மகிமையடைவதற்கு வழியென்றும் கொலோசெயரில் சொல்லுகிறார். தேவ சாயலை இழந்த மனுஷர் கிறிஸ்துவின் மூலமாய் அந்தச்சாயலைத் திரும்பவும் பெற்று மகிமையடைய வேண்டுமென்பதே தேவனுடைய தீர்மானம் என்று ரோமர் 8-லும் வாசிக்கிறோம்.

மகிமைப்படுவதே பரிசுத்த ஜீவியத்தின் முடிவு. இவ்வளவு பூரணமாய் தேவசித்தத்தைப் பூமியில் நிறைவேற்றின மனுஷக்குமாரன் மகிமைப்படவேண்டியதே நியாயம். தேவனும் அவரை மகிமையில் ஏற்றுக்கொள்ளவேண்டியதே நியாயம். இனித் தாமதிக்க வேண்டியதென்ன? வேளை வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. இதோ! உன்னதமான ஒரு மலைச்சிகரத்திற்கு அவர் ஏறிப்போகிறார். சீஷர்களில் மூவர் கூடப்போகிறார்கள். அங்கே அவர் ஜெபிக்கையில் ஆச்சரியமான காரியங்கள் சம்பவிக்கின்றன. அவர் முகம் சூரியனைப்போல் ஜொலித்தது. அவரது வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது. தேவசமூகத்துக்கு அடையாளமாயிருந்த மேகம் அவர்மீது இறங்கினது. மேலுலகிலிருந்து இரண்டு ஸ்தானாபதிகள் அவரை

அழைத்துப்போக வந்துவிட்டார்கள். இவர் என் நேசகுமாரன் என்று பிதா பேசின இனியசத்தம் தொனிக்கிறது. ஆ! எல்லாம் மோட்ச மகிமையாயிருக்கிறது! மகிமைக்குள் பிரவேசிக்கச் சகலமும் ஆயத்தம். அக்காட்சி தேவசுதனுக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கவேண்டும்! உடனே பிதாவின் வீட்டில் பிரவேசிப்பது அவருக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கவேண்டும்! அப்படிச் செய்தாரா? இல்லை. அவ்வேளையில் அவ்விருவரோடு அவர்செய்த சம்பாஷணை எருசலேமில் தாம் நிறைவேற்றப் போகிற பாடுகளைக் குறித்தல்லவா? இதோ ஒளி நீங்கினது. மேகம் விலகினது. இரு ஸ்தானாபதிகளும் மறைந்தார்கள். இயேசு ஒருவரே காணப்படுகிறார். அவர் மேலே ஏறிப்போகாமல் மலைச்சிகரத்திலிருந்து கீழே இறங்குகிறார். "நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு" என்கிறார். அவர் மகிமையில் பிரவேசிப்பதற்கு இரண்டு வழிகள் அவருக்குமுன் வைக்கப் பட்டன. ஒன்று அவருடைய பரிசுத்தத்தின் பலனாக மறு ரூபமடைந்து மகிமைக்குள் பிரவேசிக்கும் வழி. அவர் பரிசுத்தத்தில் பூரணப்பட்டபின் உலகத்தைவிட்டு மகிமைக்குள் பிரவேசிக்க அவருக்கு நியாயமுண்டு. அவ்வாறு அவர் போயிருப்பாரானால் அவர் ஒருவர்மாத்திரமே மகிமைக்குள் பிரவேசிக்கக்கூடும். மோட்ச வாசலும் பூட்டப்படும். மனுமக்களில் வேறுயாரும் மகிமையில் பிரவேசிக்கமுடியாது. இவர்கள் தங்கள் பாவங்களாலும் மரணத்தாலும் ஆளப்பட்டு ஏகமாய் அழிந்துபோவார்கள்.

மற்றது **மரணவழி**. தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து தன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிற எருசலேமில் அவர் தமது ஜீவனைக் கொடுக்கவேண்டும். தமக்கு நேரிடப்போகிற பாடு மரணத்தைக்குறித்து மறுரூபமாவதற்கு ஒரு வாரத்துக்குமுன்னே தமது சீஷருக்கு அறிவித்தார். அதை அவர்கள் வெகுசீக்கிரத்தில் மறந்தார்கள். மரணம் பாவிக்குரியது. பாவத்தின் சம்பளம் மரணம். பாவஞ் செய்த ஆத்துமா சாகும். அப்படியிருக்க, பரிசுத்தர் மரிக்கத் தகுமோ? பரிசுத்தருக்கு மரணமில்லை. அவர் **மனுஷகுமாரன்** என்பதின் கருத்து இதிலேதான் விளங்குகிறது. நம்மோடு சம்பந்தப்படாமல் பிரத்தியேகமான மனுஷனாக வந்திருந்தால் மரணத்துக்கும் அவருக்கும் சம்பந்தமிராது. தமது மரணத்தைப்பற்றிப் பேசின சமயங்களில் அவர் உபயோகித்த வார்த்தைகள் கவனிக்கத் தக்கவை. "**மனுஷகுமாரன்** உயர்த்தப்படவேண்டும்." "நீங்கள் **மனுஷகுமாரனுடைய** மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை." இவர் மனுமக்களோடு தம்மை **ஒன்றாக்கின படியால்** நமது பாவம், சாபம், மரணம் அவருடையதாயிற்று. "**பாவம் அறியாத** அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்கிற

வசனம் எவ்வளவோ ஆழமும் அருமையுமான கருத்துள்ளது. அவர் தமது **பாவத்துக்காக** மரிக்காமல், நமது பாவத்தைத் தமது பாவமாக்கிக் கொண்டதால் அவர் மரிக்கவேண்டியதாயிற்று. அவர் தம்மை மனப்பூர்வமாய் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார் என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. அவருக்கு மனமில்லாதிருந்தால் ஒருவனும் அவர்மேல் கைபோடமுடியாது. அவரைக் கொல்லும்படி அவர்கள் எத்தனையோதரம் பிரயாசப்பட்டும் அவர் தம்மை ஒப்புக்கொடுக்கிறவரை அவர்களால் கூடாமற் போயிற்று. பத்துமுறை அவரைப் பிடிக்கவோ அல்லது கொல்லவோ அவர்கள் எத்தனித்தும் தவறிப்போனார்கள். மூன்றுமுறை அவருக்கு மரணம் சமீபித்திருந்தும் அவர் சாகவில்லை. சிகரத்திலிருந்து தள்ளிவிடக் கொண்டு போனபோதும், இருமுறை அவர்கள் கற்களை எடுத்துக்கொண்ட போதும் அவரைக்காணோம். அவர்கள் செய்யத்துணிந்ததைச் செய்யக் கூடாமற்போனது என்ன அதிசயமோ? இவ்வாறு எப்பக்கத்திலும் அவர் மரணத்தால் சூழப்பட்டிருந்தும் அவர் சாகவில்லை. அவரைக்கொல்ல ஒருவனாலும் முடியாதென்பது நிச்சயம். மற்றவர்களைப் பார்த்து: நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்றார். தம்மைக்குறித்தோ "என் ஜீவனை ஒருவனும் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். **நானே** அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்றார். இப்படிச் சொல்லக்கூடிய வேறொரு மனுஷன் பூலோகத்தில் இல்லை.

கிறிஸ்து பரிசுத்தமுள்ளவர். அவரில் எவ்வளவேனும் பாவமில்லை. அவர் ஜீவியம் தேவஜீவியம். அவர் உபதேசம் தேவ உபதேசம். அவர் கிரியைகள் தேவகிரியைகள். மனுஷன் எவ்விதமாய் நடக்கவேண்டுமென்று கடவுள் தீர்மானித்திருந்தாரோ, அத்தீர்மானம் கொஞ்சமும் பிசகாமல் நடந்துகொண்ட இரண்டாம் **மனுஷன்** அவர். பிதா தமக்கு நியமித்த கிரியையை பூமியில் பழுதின்றிச் செய்துமுடித்து அவரை மகிமைப்படுத்தியபின், தமது மகிமையில் பிரவேசிக்க வேண்டியதிருக்க, அவ்வழியைத் தெரிந்துகொள்ளாமல் **மரண வழியைத்** தெரிந்துகொண்டார். ஏனென்றால், அவர் எவ்வளவு **பரிசுத்தமாய்** நடந்தாலும் அதினால் நமது பாவம் நீங்குவதில்லை. அவர் எவ்வளவு மேலான **உபதேசம்** செய்தாலும், **அரியகிரியைகளை** அவர் நடப்பித்தாலும் அவைகளால் நமக்கு இரட்சிப்பு வரப்போகிறதில்லை. ஆகையால் தமது மரணத்தால் பாவத்தைப் பரிகரிக்கும்படி சித்தங் கொண்டார். பரலோக மகிமையைவிட தமது மாம்சத்தில் மாம்சமும் எலும்பில் எலும்புமான பாவிகள்மீதுள்ள அன்பு அவருள்ளத்தை நிரப்பினது. "கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா" என்று

அவர் உயிர்த்தெழுந்தபின் சீஷர்களைப்பார்த்துக் கேட்டார். தாம் பரிசுத்தமாய் நடந்தபின் தமக்குமாத்திரம் கிடைக்கக்கூடிய மகிமையை அவர் நாடாமல் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஏதுவாக மரணத்தின்மூலமாய்ப் பூரணப்படுவது அவருக்கு ஏற்றதாயிருந்து. தேவஅன்பின் ஆழத்தை அறிந்தவர்கள் யார்? "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது."

கிறிஸ்துவின் மரணம் தற்செயலுமல்ல, மனுஷர் செயலுமல்ல. தப்பக் கூடாமல் அகப்பட்டு அவர் சாகவுமில்லை. அவர் மரணத்தைக்குறித்த முன்னடையாளங்களும் தீர்க்க தரிசனங்களும் ஏராளம். பஸ்கா ஆட்டுக்குட்டியின் நோக்க மென்ன? இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்று யோவான் சொன்னதின் கருத்தென்ன? உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தின் போதனை என்ன? நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். மெய்யாகவே அவர் நமது பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார், நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்கிற வார்த்தைகளின் அர்த்தமென்ன? இவ்வாறு நியாயப்பிரமாணமும் சங்கீதங்களும் தீர்க்கதரிசனங்களும் அவரில் திட்டமாய் நிறைவேறின. அவரில் நிறைவேறவில்லையென்றால் வேறு யாரில் அவைகள் நிறைவேறின? ஒரு மனுஷன் அவைகளைத் தன்னில் நிறைவேற்றிக்கொள்ளப் பிரயாசப்பட்டாலும் கூடுமா? தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருப்போமாக. பழைய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவனுக்குப் புதிய ஏற்பாடேது? புதிய ஏற்பாட்டை முழுவதும் நம்பாதவனுக்கு கிறிஸ்து ஏது?

தமது மரணத்தின் அவசியத்தைக் குறித்துச் சீஷர்களுக்குப் போதித்தார். "**மனுஷ குமாரன்** ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தமது **ஜீவனைக்கொடுக்கவும்** வந்தார்" என்றும்; பாத்திரத்தைக் கையிலெடுத்து "இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்" என்றும் சொன்னார். நமது பாவத்தால் உண்டாகும் அவமானத்தை நமது குடும்பத்தைச் சேர்ந்தவர் களைப்போல் ஒரு அந்நியன் உணரான். தேவதூதனும் நம்மை இரட்சிக்கமாட்டான். இவர் நமது மாம்சத்தையும் இரத்தத்தை

யும் சுதந்தரித்து தம்மை நம்மோடு ஒன்றாக்கினதினாலே நமக்காகக் கண்ணீர் விடவும் அனுதாபப்படவும் நம்மை ரட்சிக்கவும் தகுந்தவரானார். பிரதான ஆசாரியன் தூய்மையான வெண் வஸ்திரம் தரித்து ஜனங்கள் பாவங்களுக்காக ஆட்டுக்குட்டியின் இரத்தத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதுபோல, இவரும் தமது பரிசுத்தத்தையே உடையாகக் கொண்டு, நமது பாவங்களுக்காகத் தமது சுயரத்தத்தைச் சிந்தினார். விழுந்தவனுக்கு விழாதவனே பிணைநிற்கக்கூடும். தாம் தேவசித்தத்தின்படி நடந்து மறுரூப மலையில் பிதாவாகிய தேவனால் கனத்தையும் மகிமையையும் பெற்ற போதிலும், நம்மையல்லாமல் தாமாக மகிமையில் பிரவேசிக்க மனதில்லாமல் நமக்காக மரணத்தை உத்தரித்துப் பின்பு மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்படச் சித்தமானார் (2 பேதுரு 1:17; எபி. 2:9 ஒத்துப்பார்க்க). **மனுஷகுமாரன்** மரித்து அடக்க மானாலும் பாதாளம் அவரை மேற்கொள்ளவில்லை. அவரது பரிசுத்த உடல் அழிவைக் காணவில்லை. பாதாளத்தையும் மரணத்தையும் ஜெயித்து எழுந்தார். ஜீவகாலமெல்லாம் மனுஷர் மரணத்துக்கு நடுங்கினது போக, கிறிஸ்து மரணத்தை நடுங்கவைத்தார். அவரில் மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது. இவர் மனுக்குலத்தின் மனுஷனானபடியால் அவர் மரணத்தில் பாவம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டது. அவர் பொது மனுஷனானபடியால் அவர் மரணத்தோடு **எல்லாருமே மரித்ததாக** எண்ணப்பட்டது. அவர் மரணத்தை மேற்கொண்டு எழுந்ததினால் தேவ நீதியும் சம்பாதிக்கப்பட்டது. நமது மரணத்தை அவர் தமது மரணமாக்கினதால் அவருடைய ஜீவன் நமக்கு நித்திய ஜீவனானது. இவ்வாறு பாவம், சாபம், மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்து ஒரு புதிய நிலைமையை நமக்காகச் சம்பாத்தித்தார்.

உயிர்த்தெழுந்தபின் இனி அவருக்கு நடக்கவேண்டிய தென்ன? மறுரூபமலையில் அவர் கண்ட காட்சி மறுபடியும் ஒலிவமலையில் வந்தது. மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை அதுவே. தேவசமுக இரதமாகிய மேகம் இறங்கினது. அங்கே வந்ததுபோல் இங்கேயும் இரண்டுபேர் தோன்றினார்கள். இவர்கள் மறுரூபமலையில் வந்தவர்கள்தானோ? ஆண்டவர் தமதடியாரை ஆசீர்வதிக்கிறவராக மகிமையில் வந்தவர்கள்தானோ? ஆண்டவர் தமதடியாரை ஆசீர்வதிக்கிறவராக மகிமையில் பிரவேசித்தார். ''**மனுஷகுமாரன்** சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் **இதுமுதல்** காண்பீர்கள்'' என்று அவர் சொல்லியிருந்த வார்த்தைகள் இவ்வாறு நிறைவேறின. "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் **மனுஷக்குமாரன்** தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்பதையும் காண்கிறேன்" என்று ஆவியினால்

நிறைந்த ஸ்தேவான் சொன்னதும் உண்மையே. இவ்வாறு பரலோகமும் பூலோகமும் இணைக்கப்பெற்றன. தேவனையும் மனுஷனையும் பிரித்த பெரும் பிளப்பு நீங்கினது. மனுக்குலத்தின் பிரதிநிதியாகிய **மனுஷகுமாரன்** மகிமையில் பிரவேசித்தார். மனுக்குலத்தின் **மனுஷனில்** தேவதீர்மானம் நிறைவேறிற்று. உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாயிற்று.

கிறிஸ்து இவை யாவற்றையும் தமக்காகச் செய்யவில்லை. அவர் தமக்காகச் செய்யவேண்டிய அவசியமுமில்லை. அவர் நமக்காகவே வந்தார். நம்மால் முடியாததை அவர் நமக்காகச் செய்துமுடித்தார். அவர் பரிசுத்த பிறப்பு நமக்காக. அவர் பரிசுத்த வளர்ப்பு நமக்காக. அவர் பரிசுத்த ஜீவியம் நமக்காக. அவர் பரிசுத்த உபதேசம் நமக்காக. அவர் பரிசுத்த கிரியைகள் நமக்காக. அவர் பரிசுத்த பாடுகள் நமக்காக. அவர் பரிசுத்த மரணம் நமக்காக. அவர் உயிர்த்தெழுதல் நமக்காக. அவர் பரலோகம் சென்றது நமக்காக. அவர் மகிமையடைந்தது நமக்காக. அவர் பிதாவின் முன் நிற்பதும் நமக்காக. ஆம், சகலமும் நமக்காகவே. அவர் நமக்காக எல்லாவற்றையும் செய்திருந்தாலும் அந்த மகிமை நமக்குச் சொந்தமாவது எப்படி? நாம் அவரோடு **இணைக்கப்படுவதினால்**மாத்திரம் சொந்தமாகும். முதல் மனுஷனோடுள்ள **பிறப்புச் சம்பந்தத்தினால்** சகல தீவினைகளுக்கும் நாம் ஆளானோம். இரண்டாம் மனுஷனோடுள்ள **சம்பந்தத்தினால்**மாத்திரம் அவருடைய மகிமைக்கு நாம் ஆளாகக்கூடும். நீங்கள் **மறுபடியும் பிறக்கவேண்டுமென்று** ஆண்டவர் வற்புறுத்திச்சொன்ன இரகசியம் இதுதான். முதற்பிறப்பு மாம்சபிறப்பு. அது ஆதாமோடு நம்மைச் சம்பந்தப்படுத்துகிறது. மறுபிறப்பு ஆவியின் பிறப்பு. இது இரண்டாம் மனுஷனாகிய கிறிஸ்துவோடு நம்மைச் சம்பந்தப்படுத்துகிறது. ஆவியினால் பிறந்து கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவனுக்கு இரண்டாம் மரணமாகிய ஆக்கினை இல்லை. நித்திய ஜீவனும் நித்திய மகிமையுமே அவன் பங்கு. கிறிஸ்து மனுஷகுமாரனாக வந்த இரகசியம் இதுவே.

இந்த மகிமையை நாம் பெற்றனுபவிக்கும்படி ஆண்டவர் வாஞ்சிக்கிறார். இந்த ஆசையினாலேயே இத்தனை பாடுகளையும் அவமானங்களையும் மனதாரச் சகித்தார். அவர் மாம்சத்திலிருந்த நாள்களில் செய்த ஜெபமும் இதுவே. "பிதாவே, நீர் **எனக்குத் தந்த மகிமையை** நான் அவர்களுக்குக் கொடுத்தேன். நீர் எனக்குத்தந்த மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூடயிருக்க விரும்புகிறேன்" என்றார். அவர் உன்னதத்திற்குப் போய் நமக்காக மகிமையான வாசஸ்தலங்களை ஆயத்தம் செய்கிறார். அவர் தமது ஆவியை அனுப்பி தமது

மகிமையில் நாம் பங்கடையும்படி இப்பொழுது நமது இருதயத்தில் கிரியை நடப்பித்து, நம்மைப் பக்குவப் படுத்துகிறார். இது வெறும் உபதேசமல்ல. இன்றும் உண்மையாய் நடக்கிற காரியம். இந்த உள்ளான மாறுதலைக்குறித்து "நாமெல்லாரும் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" என்று பவுல் சொன்னார். *(2 கொரி. 3:18).* இவ்வாறு இப்பொழுதே ஆவியானவரால் **உள்ளாக** மறுரூபமடைகிறவர்கள், கிறிஸ்து வெளிப்படும்போது **சரீரத்தில்** மறுரூபமடைவார்கள். ஒரு நிமிஷத்தில் ஒரு இமைப்பொழுதில் நமது அற்பமான சரீரம் அவருடைய மகிமையான சரீரத்துக் கொப்பாக மறுரூபமாக்கப்படும்.

இதோ! நாள் வருகிறது. அது நிச்சயமாகவே வரும். அந்நாளில் மனுமக்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் கிறிஸ்துவுக்கே உரியது. இந்த அதிகாரம் எப்படி அவருக்குக் கிடைத்தது? "அவர் **மனுஷ குமாரனாயிருக்கிறபடியால்**" கிடைத்தது *(யோவான் 5:27).* அவர் தேவகுமாரனாயிருந்தும் தம்மை நம்மோடு ஒன்றாக்கி, நமது மனுக்குலத்தில் பிறந்து மனுஷகுமாரனாகி, நமது பாவத்தையும் சாபத்தையும் மரணத்தையும் ஏற்றுக்கொண்டு, சிலுவையில் வெற்றி சிறந்து, மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப் பெற்று, இவ்வாறு நமக்காக நித்திய மகிமையைச் சம்பாதித் திருக்கும்போது, அவரைத்தவிர உலகத்தை நியாயந்தீர்க்கும் **உரிமையும் அதிகாரமும்** வேறு யாருக்கு உண்டு?

அநாதி நித்திய தேவனுடைய அதிசய அன்பைப் பாருங்கள்! நாம் மகிமையடையவேண்டுமென்பதே அவர் நம்மைத் தமது சாயலின்படியும் ரூபத்தின்படியும் உண்டாக்கின நோக்கம். தேவன் சர்வத்துக்கும் மேலான தேவனாயிருப்பதுபோல, மனுஷனும் உலகத்தில் ஒரு சிறு தேவன்போலிருந்து சகலத்தையும் ஆண்டு நடத்தும்படியான சுயாதீனத்தை அவனுக்குக் கொடுத்தார். உலகத்தில் அவனுக்கு மேற்பட்டது ஒன்றுமிருந்த தில்லை. சகலமும் அவன் பாதங்களுக்குக் கீழாக்கப்பட்டிருந்தன. அவன் தேவசித்தம்போல் நடந்திருந்தால் முடிவில் மகிமையையும் கனத்தையும் பெற்றிருப்பான். ''நீங்கள் தேவர்களைப் போலிருப்பீர்கள்" என்று சத்துரு சொன்ன வார்த்தையை நம்பி மனுஷன் மோசம்போனான். இனி அவன் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் தன் பாவத்தை நீக்கி மகிமையையும் கனத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது. மனுஷனை உண்டு பண்ணினவரே அவனைக் கைத்தூக்கி இரட்சிக்க வேண்டும். அவன் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட வேண்டும். அவர் தமது

குமாரனை இரண்டாம் மனுஷனாக அனுப்பி, அவர்மூலமாய் மனுஷனைத் தாழ்விலிருந்து மேன்மைக்கு உயர்த்தச் சித்தமானார். இந்த மனுஷகுமாரனோடு நாம் இணைக்கப்பட்டால் அல்லாமல் நாம் மகிமையடைவதற்கு வேறு வழியில்லை. அவரில் நிறைவேறின தேவ தீர்மானம் நமக்காகவே நிறைவேறினது. ஆதாமோடுள்ள சம்பந்தம் **நமக்குப்** பாவத்தைக்கொண்டுவந்தது போல், கிறிஸ்துவோடுள்ள **சம்பந்தம்** நமக்கு மகிமையைக் கொண்டுவரும். ''உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய **மகிமைக்காக** ஏற்படுத்தினதும் மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானம்'' இவ்வாறு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்பட்டு நமக்குப் பலிக்கிறது *(1 கொரி. 2:7).*

கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே கடவுள் நம்மேல் அன்பானார் என்று நாம் சொல்லாமல், கடவுள் நம்மேல் அன்பாயிருந்ததினாலேயே கிறிஸ்து நமக்காக மரித்தார் என்று சொல்லுகிறோம். அவர் ஏன் இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொள்ளவேண்டும்? அதுவும் அவரது கிருபைதான். ஒருபிள்ளை தகாத வழியில் நடந்தால் அப்படியே தொலைந்துபோகட்டும் என்று தகப்பன் விட்டுவிடுவானா? அந்தப்பிள்ளையை நல்வழிக்குக் கொண்டுவர அவன் எவ்வளவோ கவலைப்படுவான் அல்லவா? பிள்ளையின் அவமானம் தகப்பனுடைய அவமானம். பிள்ளையின் மகிமை தகப்பனுடைய மகிமை. பிள்ளை வேறே, தகப்பன் வேறே அல்ல. அவனைக் காப்பாற்ற வேண்டியது தகப்பன் கடமையாகும். நமக்கே இவ்வளவு துயரமிருந்தால் அன்பின் சமுத்திரமாகிய பரம பிதா தாம் அருமையாய் உண்டுபண்ணின பிள்ளைகளைக்குறித்துக் கவலையற்றிருப்பாரா? போனால்போகட்டும் எனக்கென்னவென்று அவர் சொல்ல ஏதுவில்லை. தாம் உண்டுபண்ணினது கெட்டுப்போனால் அதைச் சரிப்படுத்தாமல் விடுவது அவரது கிருபைக்கும், வல்லமைக்கும், தீர்மானத்துக்கும் குறைவு.

நாம் தேவனிலிருந்து வந்தவர்களாதலால் நம்மை இரட்சிக்க வேண்டிய **அன்பின் கடன்** அவருக்கு உண்டு. சில வாக்கியங்களால் இதைக் காணலாம். ஞானஸ்நானத்தில் "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு **ஏற்றதாயிருக்கிறது**" என்று சொன்னார். உயிர்தெழுந்தபின் சீஷரைப்பார்த்து: "கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் **வேண்டியதில்லையா**?" என்றார். எபிரெயர் 2-இல் "தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கு **ஏற்றதாயிருந்தது**" என்றும், "அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக

தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு, எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது'' என்றும் சொல்லியிருக்கிறது. இங்கே ''ஏற்றதாயிருக்கிறது,'' ''வேண்டியதில்லையா?'' ''ஏற்றதாயிருந்தது,'' ''ஒப்பாக **வேண்டியதாயிருந்தது**'' என்னும் சொற்களைக் கவனிக்கும்போது, இப்படி நம்மை இரட்சிப்பது தமக்கு **நியாயமும் அவசியமும் கடமையுமாயிருக்கிறது** என்று தேவன் சொல்வதுபோலிருக்கிறது. இக்கடமைக்குக் காரணம் அவரது அளவில்லாத அன்பும், அநாதி தீர்மானமும், அவருக்கும் நமக்குமுள்ள நெருங்கிய சம்பந்தமுமே. இந்த மகாபெரிய உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்வது நமதாண்டவருக்கு எவ்வளவோ கலக்கமும் கஷ்டமுமாயிருந்தபோதிலும், அதைப் பூரணமனதோடும் மகாசந்தோஷத்தோடும் நிறைவேற்றி முடித்தார். இதைக்குறித்து அப்போஸ்தலன்: ''தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் **மறைந்திருந்த** இரகசியத்தினுடைய **ஐக்கியம்** இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' என்று சொல்லுகிறார் *(எபே. 3:9-11)*.

''நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள்'' என்று சாத்தான் தந்திரமாகவும் துரோகமாகவும் சொன்ன வார்த்தைகள், கிறிஸ்துவின்மூலமாக இவ்வாறு நமக்கு உண்மையும் மகிமையுமாய் முடிந்தது. சத்துரு தீமை செய்யும்போதெல்லாம், தேவன் அத்தீமையை நமக்கு நன்மையாக முடியச்செய்கிறார் என்பது எவ்வளவு நிச்சயம்! **பாவம்** பெருகின இடத்தில் கிருபை அதிலும் அதிகமாய்ப் பெருகிற்று. இவ்வளவு மேலான மகிமைக்கு அழைக்கப்பட்டிருக்கிற நாம் என்ன செய்யவேண்டும்? எப்படி நடந்துகொள்ளவேண்டும்? மகிமையின் காலம் சமீபிக்கிறது. கிறிஸ்துவின் அடியார் மறுபிறப்புக்காலத்தில் அவரோடுகூட மகிமையில் அரசாளுவார்கள். சகலமும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும். அவர்கள் ஆவியிலும் சரீரத்திலும் மறுரூபமடைந்து கிறிஸ்துவாகிய சிரசின் மகிமைக்கு ஒப்பான மகிமையடைவார்கள். ஆ! என்ன பாக்கியமான காலம்! நமக்கு அம்மகிமையில் பங்கு கிடைக்குமா? இப்பொழுது நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு அவருடைய ஐக்கியத்தில் ஜீவித்தால் இனி வருங்காலத்தில் மெய்யாகவே அந்த மகிமையில் பங்கடைவோம். ''தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே **ஐக்கியமா**

யிருப்பதற்கு நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்'' *(1. கொரி. 1:9).* ஐக்கியம் இருபட்சத்தாரைப் பொருத்தது. இருவர் ஐக்கியப்படும் விஷயத்தில், ஒருவன் ஐக்கியப்பட விரும்பியும் மற்றவனுக்கு மனமில்லையானால் ஐக்கியமில்லை. கிறிஸ்து நம்மோடு ஐக்கியப்பட விரும்பியும் நமக்கு மனமில்லாமற் போனால் அவருக்கும் நமக்கும் ஐக்கியமேது? ஆகையால் "நீங்கள் என்னில் நிலைத்திருங்கள்'' என்பதை முந்திச் சொல்லி பின்பு "நானும் உங்களில் நிலைத்திருப்பேன்'' என்று சொன்னார். இதன் கருத்தென்ன? நாம் முழு இருதயத்தோடு அவரை ஏற்றுக்கொண்டு, அவரில் அன்புவைத்து, அவரில் நிலைத்திருக்க நாடும்போது அந்நிமிஷத்திலேயே அவர் நம்மில் நிலைத்திருப்பதைக் காண்போம். அவர் தூரயிருந்து வரவேண்டியதில்லை. நமது மனதை அவரிடமாய்த் திருப்பும்போது பக்கத்தில் அவரைக் காணலாம். இவ்வாறு நமது ஐக்கியம் இடைவிடாமல் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருந்தால், அவர் மகிமையில் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாய் நாம் அவரைத்தரிசிப்பதினாலே அவருக்கு **ஒப்பாயிருப்போம்** என்று அறிந்திருக்கிறோம். இம்மையில் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு அவரில் நிலைத்திருந்து ஜீவிக்காதவர்கள் மறுமையில் அவருடைய மகிமையில் பங்கடைவதில்லை.

இவ்வாறு **மனுஷகுமாரன்** என்னும் வார்த்தையின் மேலான **கருத்தையும்** அந்த மனுஷகுமாரன் நமக்காகச் சம்பாதித்த மேலான **மகிமையையும்** சிந்தித்தபின், ஆண்டவர் அப்பதத்தைத் துயரத்தோடு உபயோகித்த சில சமயங்களைக் கவனிப்பது நமக்குப் போதனையாயிருக்கும். "**மனுஷகுமாரனாகிய** எனக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.'' இவ் வார்த்தைகளைக் கேட்டவர்கள் அதன் கருத்தை எவ்வளவு தூரம் அறிந்துகொண்டார்களோ தெரியாது. ஒருவேளை அவர் தம்மை ஏழையென்று பேசுகிறார் என்றுமாத்திரம் நினைத்திருப்பார்கள். நமக்கோ அதன் கருத்து தெளிவாய் விளங்குகிறது. அவர் தம்மை மனுக்குலத்தோடு ஒன்றாக்கி, அவர்களுக்கு இராஜ்யத்தையும் நித்திய மகிமையையும் அருளக்கூடிய அன்பின் பிரதிநிதியாக வந்திருந்தும், மனுக்குலம் அவரை ஏற்றுக் கொள்ளாமல் கைவிட்ட துயரத்தை நினைத்து இவ்வாறு பேசினார்.

வேறொரு சமயம் யூதாசைப்பார்த்து: ''யூதாசே! முத்தத்தினாலேயா **மனுஷகுமாரனைக்** காட்டிக்கொடுக்கிறாய்?'' என்று கேட்டார். இச்சமயத்திலும் அவர் மனத்துயரம் அதிகம். மகிமையின் கர்த்தரான அவர், அவனை இரட்சிக்கும்படி மனுஷகுமாரனாக வந்த பேரன்பை அவன் அறியாமல்,

பாவியாகிய அவனை ஈடேற்றும்படி வந்த பரமவள்ளலை, அன்பின் சொரூபியை, துரோக முத்தத்தால் அவன் காட்டிக்கொடுக்கத் துணிந்தது அவர் திருமனதுக்கு வேதனையாயிருந்தது. அப்பா! **மனுஷகுமாரனையா** காட்டிக்கொடுக்கிறாய் என்று கேட்டார். மனுஷகுமாரன் என்னும் பேரின் கருத்தையும் அருமையையும் ஜனங்கள் அறியாமற்போனபோதும் அவர் துயரமடைந்தார். அவரை இன்னாரென்றும், எதற்காக அவர் மனுஷகுமாரனாக வந்தார் என்றும், நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்பது அவருடைய ஆசை. ஆகையால் அவர் தமது சீஷர்களைப்பார்த்து: **மனுஷகுமாரனாகிய** என்னை ஜனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள், என் சீஷராகிய நீங்கள் என்னை **யாரென்று** சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். ஜனங்கள் பலவிதமாய்ச் சொன்னது ஆண்டவருக்குத் துக்கம். சீஷர்கள் சரியாய்ச் சொன்னது ஆண்டவருக்குச் சந்தோஷம். அவருடைய மனுஷீகத்தின்மூலமாய் அவரது தெய்வீகத்தை நாம் அறியவேண்டுமென்பது அவருடைய விருப்பம். இக்காலத்தில் அநேகர் அவரைக் குறித்துத் தாறுமாறாகப் பேசுவதைக் கேட்கிறோம். நாம் இழுப்புண்டு மோசம் போகாதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஒருவரும் கிட்டி நெருங்கக்கூடாத அளவில்லாத மகிமையுள்ள தேவன், எல்லாரும் கிட்டி நெருங்கக்கூடிய மனுஷகுமாரனாக வந்ததே அளவற்ற தயவு! தேவன் மனுஷர்மேல் வைத்த பிரியம் அதினால் வெளிப்பட்டது. மனுஷகுமாரனோடு நெருங்குவதே தேவனோடு நெருங்குவது. மனுஷகுமாரனோடுள்ள ஐக்கியமே தேவனோடுள்ள ஐக்கியம். மனுஷகுமாரனை ஏற்றுக்கொள்வதே தேவனை ஏற்றுக்கொள்வது. ஏனென்றால், தேவன் மாம்சத்தில் வந்தார். ஆ! தேவன் நம்மை ஆசீர்வதிக்கும்படி தம்மைத் தாழ்த்தின ஆழம் எவ்வளவு! அன்பும் கிருபையும் எவ்வளவு! இப்படியிருக்க, அவரையே பரீட்சை பார்ப்பதும், மனங்கொண்டபடி பேசுவதும் எவ்வளவு துணிகரம்! "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே.'' ''மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வரும் போது" இவர்கள் என்ன செய்வார்கள்? இப்பொழுதே "அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்."

23
தேவ குமாரன்
The Son of God

மனுஷகுமாரன் என்னும் பேரை நமதாண்டவர்மாத்திரம் தமக்கு வழங்கினார்; அப்போஸ்தலர் அதை உபயோகிக்கவில்லை. இப்பெயர் சுவிசேஷத்தில் ஏராளம்; நிருபங்களில் அதற்கு இடமில்லை. தேவகுமாரன் என்னும் நாமத்தை ஆண்டவர் அபூர்வமாய் உபயோகித்தார்; அப்போஸ்தலரோ அடிக்கடி உபயோகித்தார்கள். இந்த அறிவு ஆண்டவர் அவர்களுக்குள் நடப்பித்த உள்ளான கிரியையின் அனுபவத்தால் அவர்களுக்குக் கிடைத்தது. அவர் மெய்யான மனுஷன் என்பதை அவர்கள் திட்டமாய் அறிந்திருந்தும், அவரை **மனுஷகுமாரன்** என்று சொல்லத்துணியாமல் தேவகுமாரன் என்றே அழைத்தார்கள். நாம் தேவகுமாரர் என்பதுபோல அவரும் ஒரு தேவகுமாரன் என்று அவர்கள் ஒருக்காலும் சொல்லவில்லை. யூதர்களும் அப்படி எண்ணவில்லை. அவர் தம்மை தேவகுமாரன் என்று சொன்னபோது தம்மை **தேவனுக்குச் சமமாக்கினாரென்று** யூதர்கள் திட்டமாய் அறிந்துகொண்டார்கள். அதினிமித்தமே அவர்கள் அவரைப் பகைத்து, தேவதூஷணம் சொன்னாரென்னும் குற்றத்தைச் சாட்டி அவரைக் கொலைசெய்தார்கள்.

தற்காலக் கொள்கைக்காரர் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுகிறதென்ன? தற்காலக் கொள்கை என்பது தற்காலம் உண்டானதல்ல. இக்கொள்கை கிறிஸ்துவின் நாள்களில் யூதரிடத்தில் உற்பத்தியானது. அவர்களுக்கும் இவர்களுக்கும் கொஞ்சம் வித்தியாசமுண்டு. அவர்கள் கிறிஸ்தவர்களல்ல; இவர்கள் கிறிஸ்தவர்கள். யூதர்கள் கிறிஸ்துவை யோசேப்பின் குமாரன் என்று சொன்னார்கள்; இவர்களும் அப்படியே. யூதர்கள் கிறிஸ்து செய்த அற்புதங்களை ஒப்புக்கொண்டு, அவர் அவைகளைப் பிசாசின் சக்தியினால் செய்தாரென்று சொன்னார்கள். இவர்கள் எல்லா அற்புதங்களையும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. இயற்கைப் பிரமாணத்துக்கு

விரோதமாக ஒன்றும் நடப்பதில்லை என்கிறார்கள். அவருடைய அற்புதபிறப்பை இவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. யூதர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் இடறினார்கள். இவர்கள் சிலவற்றை ஏற்றுக்கொண்டு தங்கள் புத்திக்கு மிஞ்சினதைத் தள்ளி விடுகிறார்கள். யூதர்கள் கிறிஸ்துவை மனுஷனாகமாத்திரம் ஒப்புக்கொண்டார்கள். ''நீ மனுஷனாயிருக்க உன்னை தேவகுமாரன் என்று சொல்லி தேவனுக்கு உன்னைச் சமமாக்குகிறாயா'' என்று கேட்டார்கள். இவர்களும் அவரை மனுஷனாகமாத்திரம் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகையால், அவரை மனுஷனுக்கு மேலானவராகக் காண்பிக்கிற வசனங்களைத் தள்ளிவிடுகிறார்கள். **சரித்திரக் கிறிஸ்துவே** எங்களுக்கு வேண்டும். அதற்கு மிஞ்சின கிறிஸ்து வேண்டாம் என்பதே இவர்கள் கொள்கை. சுவிசேஷத்திலிருந்து தங்கள் கொள்கைக்கேற்ற ஒரு சிறிய சுவிசேஷத்தைத் தங்களுக்கு உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள்.

யோவான் சுவிசேஷமும் நிருபங்களும் அப்போஸ்தலர் கிறிஸ்துவின்மீதுள்ள மதிப்பினால் அவரைத் தேவனாகக் காட்டும்படி எழுதினவைகள் என்கிறார்கள். யூதர்கள் கிறிஸ்துவை தேவதூஷணம் சொன்னதற்காக மரணமடைந்தார் என்கிறார்கள். இவர்கள் அப்படிச்சொல்லாமல், அவர் சத்தியத்திற்காக மரித்தார் என்றும், அதில் நமக்கு முன்மாதிரியானார் என்றும் சொல்லுகிறார்கள். அவர் மரணத்துக்கும் நமது பாவத்துக்குமுள்ள சம்பந்தத்தை இவர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. யூத அதிகாரிகள் அவர் உயிர்த்தெழுந்ததை அறிவார்கள், ஆகிலும் அப்போஸ்தலர் அதைப் பிரஸ்தாபித்தது அவர்களுக்குப் பிரியமில்லை. இவர்கள் அவர் சரீர உயிர்தெழுதலை நம்பாமல் ஆவியில் தரிசனம் கொடுத்திருக்கலாம் என்கிறார்கள். இக்கொள்கையுடைய ஓர் ஆசிரியர் தமது மாணாக்கரைப் பார்த்து: கிறிஸ்து சரீரத்தோடு எழும்பவில்லை என்று சொன்னபோது, அப்படியானால் சரீரம் போனயிடமெங்கே என்று மாணாக்கரில் ஒருவன் கேட்டான். அச்சமயத்தில் பூமியதிர்ச்சிஉண்டானதால் சரீரம் விழுங்கப்பட்ட தென்று ஆசிரியர் சொல்ல, மாணாக்கன்: சரீரத்தைப் பூமி விழுங்கினதுண்டானால் சரீரத்தைச் சுற்றியிருந்த துணிகளையும் தலைப்பாகையையும் அது விழுங்காமல் விட்டதென்ன என்று கேட்க, அவர் பேசக்கூடாமற்போயிற்று. சுருக்கிச் சொல்லில், இவர்கள் நம்புகிற கிறிஸ்து சிறந்த தேவபக்தியும் முன்மாதிரியான மனுஷன். நாம் தேவகுமாரர் என்பது போலவே அவரும் தேவகுமாரன். அவர் தேவனை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுபோல நாமும் நடந்தால் அவரைப்போல் ஆகலாம் என்பதே இவர்கள் போதனை. வேதத்தில் இருக்கிறபடி ஒப்புக்கொண்டால் இக்கொள்கை நொறுங்கிப்போகும்.

ஆகையால் இந்தக்கொள்கையை நிலைநாட்டும்படி இவர்கள் வேதத்தை அச்சமின்றி நொறுக்கிவிட்டார்கள். வானமும் பூமியும் ஒழிந்தாலும் தேவன் அருளிய வேதம் ஒருக்காலும் ஒழிவதில்லை.

கிறிஸ்து தேவனுக்குச் சமமான தேவகுமாரனோ இல்லையோ என்பதை அறியவேண்டும். தேவன் தம்மை மனுஷருக்கு வெளிப்படுத்தவேண்டியது நியாயம். அவர் தன்மையையும் சுபாவத்தையும் கவனிக்கும்போதும், மனுஷனை அவர் உண்டாக்கியிருக்கிற விதத்தைக் கவனிக்கும்போதும், தேவன் மனுஷனுக்குத் தம்மை வெளிப்படுத்தாதிருக்கமாட்டார். ஒரு சிறந்த சித்திரத்தை உண்டுபண்ணுகிறவன் அதைத் திரும்பத் திரும்பப் பார்த்துச் சந்தோஷிக்கிறான். அழகும் வாசனையுமுடைய புஷ்பங்கள் நிறைந்த தோட்டத்தை உண்டாக்குகிறவன் அதில் காலைமாலை உலாவி ஆனந்திக்கிறான். மனுஷனுக்கும் அவன் கையின் கிரியைகளுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஒரு தகப்பனுக்கும் மகனுக்குமுள்ள சம்பந்தமோ இவை யாவற்றிலும் மேலானது. தான் பெற்ற பிள்ளையைப் பார்த்து: உனக்கும் எனக்கும் என்னவென்று எந்தத் தகப்பனும் சொல்லமாட்டான். பிள்ளையின் முகத்தை அடிக்கடி பார்க்கவும் பிள்ளை தன்னோடு பேசவும் தான் பிள்ளையோடு பேசவும் நாடுவான்.

தேவன் நமது பிதா. நாம் அவர் பிள்ளைகள். அவர் எவ்வளவு உன்னதமானவராயிருந்தாலும் அவர் யாரோ நாம் யாரோ என்று சொல்ல இடமில்லை. நாம் நம்மை உண்டாக்கவில்லை. அவரே நம்மை உண்டாக்கினார். எல்லாச் சிருஷ்டிகளைப் பார்க்கிலும் தேவனுக்கும் நமக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. தேவன் நம்மைத் தமது சாயலின்படியேயும் தமது ரூபத்தின்படியேயும் உண்டாக்கினார். அவர் தமது ஜீவ சுவாசத்தை நமக்குள் ஊதி நம்மைப் பிழைக்க வைத்தார். சாயல் ரூபம் என்பது புறம்பான சரீர தோற்றத்தையல்ல, உள்ளான ஆவிக்குரிய ஞானம், நீதி, பரிசுத்தம் என்பவைகளைக் குறிக்கும். மற்ற மற்றச் சிருஷ்டிப்புக்களைப்போல் நாம் அவரது சொல்லாலே உண்டானவர்கள் அல்ல. நாம் தேவனிலிருந்து பிறந்தோம். இதனாலே நாம் தேவ இனத்தாரும் தேவகுலத்தாருமானோம். நாம் அவருடைய சந்ததி. நாம் தேவமக்கள். சிறு தேவர்களைப்போல் அவர் நம்மைப் பிறப்பித்தார். இவ்வளவு புத்தி, அறிவு, யோசனை, ஞானம், அன்பு, கிருபை உள்ளவர்களாக அவர் நம்மை உண்டாக்கியிருக்க, அவர் நம்மோடு பேசாமலும் நாம் அவரோடு பேசாமலும் தம்மை மறைத்துக்கொள்வாரா? மனுஷன் தன் கையின் கிரியைகளில் மகிழ்கிறானே. தான் பெற்ற பிள்ளையோடு உறவாடி ஆனந்திக்கிறானே. நல்ல பிதாவாகிய தேவன் தமது பிள்ளைகளோடு உறவாடாமலும், அவர்கள் தமது சமுகத்தில் சந்தோஷிக்காமலும் அவர்களை விட்டுப்

பிரிந்துகொள்வது நியாயமோ? அவர் நம்மோடும் நாம் அவரோடும் ஒருமித்து வாழவேண்டுமென்பதே அவர் நம்மைப் பிறப்பித்த நோக்கம்.

பாவம் பிதாவையும் நம்மையும் பிரித்தது. நாம் பிதாவை இழந்தோம். பிதா நம்மை இழந்தார். அவர் நம்மை உண்டாக்கின நோக்கம் தவறினது. தகப்பன் பிள்கைளைக் காணத்தவிக்கிறார். பிள்கைகள் தகப்பனைக் காணத்தவிக்கிறார்கள். மனுமக்கள் இந்த இரகசியத்தை அறிந்தாலும் அறியாமற்போனாலும் இந்த உள்ளான தாகம் எல்லாருக்குள்ளும் இருப்பது மெய்யே. பெற்ற தாயைக் காணாமல் வழியில் நின்று அழும் பிள்ளைக்கு யார் என்ன சொன்னாலும், யார் என்ன கொடுத்தாலும், கண்ணீரைத் துடைத்தாலும், தாயைக் கண்டால் அல்லாமல் அழுகை நிற்கமாட்டாது. மனுக்குலத்தாரின் நிலைமை இதுவே.

"ஆண்டவரே! பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்" என்று பிலிப்பு கேட்ட கேள்வி, மனுமக்கள் யாவருடைய உள்ளான தாகத்தை வெளிப்படுத்தினது. ஏதோ ஒரு தாகம் நமக்குள் இருக்கிறது. அது தேவனால்மாத்திரம் தீரும் என்பதை நாம் அறியாமல் உலகத்தில் உள்ளவைகளாலே நம்மைத் திருப்திசெய்து கொள்ளப்பார்க்கிறோம். இந்த உள்ளான தாகம் பலரிலும் பலவிதமாகக் கிரியை செய்கிறது. ஆகிலும் தாகம் தீருகிறதில்லை. "இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும்" என்று நமதாண்டவர் சொன்னபிரகாரம், எத்தனையாய் இந்த உலகத்தை நாம் அனுபவிக்கப் பார்த்தாலும் தாகம் தீருகிறதில்லை. மான்கள் நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல நமது உள்ளம் நமது பிதாவைக் காண வாஞ்சிக்கிறது. அவரை இன்னாரென்று அறியாத அறிவீனத்தால் கணக்கற்ற விக்கிரக வணக்கம் ஏற்பட்டது. ஆராய்ச்சிக்காரரான அத்தேனேப் பட்டணத்தார் பீடங்களைக் கட்டி "**அறியப்படாத தேவனுக்கு**" என்று எழுதிக்கொண்டு ஆராதித்ததும் ஆச்சரியமல்ல. ஞானியோ மூடனோ, மலையனோ, மிலேச்சனோ, சர்வ ஜனங்களுக்குள்ளும் இந்த உள்ளான தாகம் இருக்கிறதென்பது அவரவர் வணங்கிவரும் பலதேவ வணக்கங்களால் தெளிவாகிறது. பிதாவைக் காணும் நாளில் இவையாவும் அகன்றுபோகும். நமது வாஞ்சையைப்பார்க்கிலும் நம்மைச் சந்திக்கும்படி பிதாவுக்கிருந்த வாஞ்சைக்கு அளவில்லை. இழந்துபோன மக்களைத்தேடவும் இரட்சிக்கவும் அவர் சித்தங்கொண்டார். தம்மை நமக்கு வெளிப்படுத்த விரும்பினார்.

சிருஷ்டிப்பின்மூலமாய் அவர் தம்மை வெளிப்படுத்துகிறதில்லையா என்று கேட்கலாம். சிருஷ்டிப்பின்மூலமாய் அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவது உண்மைதான். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன; ஆகாய விரிவு

அவருடைய கரங்களின் கிரியையை நமக்கு அறிவிக்கிறது." ஆகிலும் ஒருவன் கட்டின வீட்டின்மூலமாய் நாம் அவனை அறிவதற்கும் அந்த மனுஷனையே முகமுகமாய் அறிவதற்கும் வித்தியாசமில்லையா? சிருஷ்டிப்பு மகா அதிசயம். தேவனுடைய அளவில்லா வல்லமையும் ஞானமும் அவைகளில் வெளிப்படுகின்றன. ஆகிலும் இவை யாவற்றையும் இவ்வளவு அதிசயமாய் உண்டாக்கினவர் எப்படிப்பட்டவராயிருப்பாரோ? அவரது குணம் என்ன, சுபாவம் எனனவென்று அறிய வாஞ்சிக்கிறோம். அவரது தன்மையாகிய அன்பும் கிருபையும் நமக்கு வெளிப்படவேண்டுமானால் அது ஆள்மூலமாகவே வெளிப்படவேண்டும். அவரே தம்மை நமக்கு வெளிப்படுத்த வேண்டும்.

தேவதூதர்கள் அரிய பெரிய காரியங்களைப் பூமியில் நடப்பிக்கலாம். தேவ தூதை மனுஷருக்குக் கொண்டு வரலாம்., கடவுளைக் காண்பிக்க அவர்கள் எம்மாத்திரம்? பூர்வபிதாக்கள் தீர்க்கதரிசிகள் கடவுளிடத்தில் செய்தி பெற்று மனுஷருக்குப் போதித்தார்கள். அவரைக் காண்பிக்க அவர்கள் எம்மாத்திம்? ஆகையால் பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன் இக்கடைசிக் காலத்தில் **தமது குமாரன்** மூலமாகத் திருவுளம்பற்றினார். இவர் கடவுளுடைய பிரதிநிதியாக மாத்திரமல்ல, **கடவுளையே** நமக்கு வெளிப்படுத்துகிறவராக வந்தார். டில்லியிலிருக்கும் இராஜபிரதிநிதி: என்னைக்கண்டவன் சக்கரவர்த்தியைக் கண்டான் என்று சொல்லமுடியாது. இளவரசு இந்தியாவுக்கு வந்தார். நாம் அவரைப் பார்த்தோம். இவர்தானும்: என்னைக் கண்டவன் சக்கரவர்த்தியைக் கண்டான் என்று சொல்லமுடியாது. சொந்த மகனாயிருந்தாலும் அவர் வேறே, இவர் வேறேதான். ஆகையால், பிதாவை வெளிப்படுத்துகிற குமாரன் சகல விஷயத்திலும் **பிதாவுக்கு** ஒப்பானவராயிருக்கவேண்டும்.

கடவுளை கடவுள்தான் வெளிப்படுத்தக்கூடும். "தேவனை ஒருவனும் ஒருபோதும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை நமக்கு வெளிப்படுத்தினார்." இது கூடிய காரியமா? இங்கேதான் இரகசியம் இருக்கிறது. குமாரனும் **தேவனாயிராவிட்டால்** இது கூடிய காரியமல்ல. பிதாவின் தன்மை, பிதாவின் சுபாவம், பிதாவின் மகிமை, பிதாவின் சாயல், பிதாவின் அன்பு பூரணமாய் குமாரனில் இராவிட்டால் குமாரன் பிதாவை வெளிப்படுத்துவது வெறும் பேச்சு. இனமே இனத்தை வெளிப்படுத்தும். இவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமும் அவர் தன்மையின் சொரூபமுமா யிருக்கிறார். இவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம். இவர் தேவடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை,

விட்டுப் பிரியக்கூடாத பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். இவர் தேவனாகிய பிதாவுக்கு ஒப்பானவரா யிருந்தபடியால் "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப்போதும்" என்று பிலிப்பு கேட்டபோது: "பிலிப்புவே! இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். ஆபிரகாம், மோசே, எலியா முதலான பக்தர் இப்படிச் சொல்லக்கூடுமா? ஆபிரகாம் பொய் சொன்னார். மோசே பதறினார். எலியா முறுமுறுத்தார். சகலத்திலும் பிதாவுக்கு ஒப்பான குமாரனேயல்லாமல் வேறொருவரும் பிதாவை வெளிப்படுத்த முடியாது. கிறிஸ்து தேவனாகிய பிதாவை வெளிப்படுத்தினது உண்மையானால் அவர் தேவனுடைய குமாரன் என்பதும் உண்மையே.

தேவன் எவ்வளவோ மகிமையுள்ளவர்! சர்வத்தையும் ஆண்டு நடத்தும் வல்லவர்! அளவில் அடங்காதவர்! நித்தியமாயிருக்கிறவர்! மாசற்ற பரிசுத்தர்! அவருடைய நாமம் யெகோவா! இப்பேர்ப்பட்ட மகத்துவம் நிறைந்த கடவுளை நாசரேத்தூர் இயேசு வெளிப்படுத்தக் கூடுமா? "என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான்" என்று இவர் சொல்லத்தகுமா? இவர் அவரை வெளிப்படுத்தினது உண்மையானால் எவ்வாறு வெளிப்படுத்தினார்? இவர் மாம்சத்தில் வந்த கடவுள் என்பதற்கு அடையாளம் என்ன? இவைபோன்ற கேள்விகள் நம்மனதில் வருவது இயல்பே.

அளவில் அடங்காத வல்லமையும் மகிமையுமுள்ள கடவுள் மனுஷனாக வருவது கூடியகாரியமா என்பது ஒரு கேள்வி. கடவுளால் கூடாதகாரியம் ஒன்றும் இல்லை. அவருக்குச் சித்தமானால் அவர் மாம்சத்தில் வெளிப்படக்கூடும். கீர்த்தி பெற்ற ஓர் அரசன் தன்னை பெரியமனுஷனாக்கிக்கொள்ள வேண்டுமானால் அவன் அப்படிச் செய்யத் தடையில்லை. சூரியன் மகாவிசாலமான சமுத்திரத்தில் காணப்படுவதுபோல புல்லின் மீது நிற்கும் சிறு பனித்துளியிலும் அதன் பூரணவடிவு காணப்படுகிறது. கடவுள் மாம்சத்தில் வந்தாலன்றி மனுஷன் அவரைக்காணவும் அறிந்துகொள்ளவும் முடியாது. கிறிஸ்துவின் ஜீவியசரித்திரத்தை நாம் வாசிக்கும்போது அவர் தாழ்மையுள்ள சாதாரண மனுஷனைப்போல் காணப்படுகிறாரேயன்றி, சர்வவல்லமையும் மகத்துவமும் நிறைந்த கடவுளாக அவர் காணப்படவில்லையே என்பது இன்னொரு கேள்வி. அவர் மாம்சத்தில் வந்த **நோக்கத்தை** அறிந்துகொண்டால் இக் கேள்வியைக் கேட்கமாட்டோம். உலகங்களைச் சிருஷ்டிக்கவும், தெய்வீக அதிசயங்களை நடப்பிக்கவும், மலைகளைப் பெயர்த்து

எறியவும், மரங்களை வேறோடு பிடுங்கவும், சூரியனை இல்லாமல் அழிக்கவும், சமுத்திரத்தை இரண்டாகப் பிரிக்கவும், அவர் மாம்சத்தில் வரவில்லை. அவரது சர்வ வல்லமையையும் சர்வ ஞானத்தையும் நமக்குக் காண்பிக்கும்படி அவர் உலகத்தில் பிரவேசிக்கவில்லை. தம்மை நமக்கு வெளிப்படுத்தி, நம்மைத் தம்மோடு ஐக்கியப்படுத்தி நம்மை **இரட்சிக்கும்படிக்கே** வந்தார். இதுவே அவர் மாம்சத்தில் வந்த நோக்கம். அப்படியிருக்க அவர் தமது சர்வ மகிமையோடும் சர்வ வல்லமையோடும் நம்மிடத்தில் வருவாரானால் யார் அவரைப் பார்க்கக்கூடும்? யார் அவர் கிட்ட நெருங்கக்கூடும்? சீனாய் மலையில் அவர் தமது மகிமையைக் கொஞ்சம் வெளிப்படுத்தினபோது ஜனங்கள் பயந்து தூரத்தில் நின்று: தேவன் எங்களோடு பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள். அவர் தேவனாக வந்தாலும் மனுஷன் சகிக்கமாட்டான். அவர் மனுஷனாக வெளிப் பட்டாலும் ஏற்றுக்கொள்ளமாட்டான். ஆகிலும், தேவ இரகசியமானது விசுவாசிகளின் உள்ளத்தில் மகிமையாய் வெளிப்படுகிறது.

மேலும், ஒரு மனுஷனை நமக்கு உற்ற சிநேகிதனாக்குவது அவனுடைய கல்வியல்ல, பராக்கிரமம் அல்ல, அவனது வீரச்செயல்களல்ல, அவனுடைய அன்பே. ஒரு தகப்பன் சிறந்த சாஸ்திரியாயிருக்கலாம், அரிய போர்வீரனாயிருக்கலாம், ஆகிலும் பிள்ளையை **அவன்** மடியில் சாய்ந்து விளையாடச்செய்வது அவனுடைய அன்பே. நம்மைத் தமது மார்போடணைத்து இரட்சிக்க விரும்பின தேவன், தமது சர்வவல்லமையையும் சர்வ ஞானத்தையும் வெளிப்படுத்துகிறவராய் வராமல், தமது கிருபையினாலும் அன்பினாலும் நம்மைச் சந்திக்க வந்தார். ஒரு மனுஷனுடைய வீடு, தோட்டம், உத்தியோகம், சம்பாத்தியம் இவைகளை அறிவது வேறே; அந்த ஆளை அறிவது வேறே. தேவனாகிய ஆளை வெளிப்படுத்த தேவகுமாரன் வந்தார். அதுவே நமக்கு அவசியமாயிருந்தது. தேவன் மாம்சத்தில் தம்மை வெளிப்படுத்தவேண்டுமானால் அவரது திவ்ய இலட்சணங்கள், தாம் வந்த நோக்கத்திற்கிசைய மனுஷீகத்தில் அடங்கியிருக்க வேண்டியதே நியாயம். அவ்வாறு வந்ததினாலேதான் அவரது அடியார்கள் அவரை நோக்கிப்பார்க்கவும், அவரோடு பேசவும், அவர் திருமார்பில் சாய்ந்து அவரது அன்பில் மகிழவும் இடம் பெற்றார்கள்.

கிறிஸ்து தேவனானால் நான் உங்கள் தேவனென்று ஏன் ஜனங்களுக்குத் தெளிவாய் சொல்லிவிடக்கூடாது என்று கேட்கலாம். அவர் தம்மை தேவன் என்று பிரத்தியட்சமாய்ச் சொல்லவில்லை என்பது மெய்தான். அதுமாத்திரமல்ல, அவர் தம்மை கிறிஸ்து என்றும், தேவகுமாரன் என்றும் ஆரம்பத்தில்

சொல்லவுமில்லை. அப்படிச் சொல்வது ஜனங்களுக்கு இடறலாயிருப்பதுபோலவே அவருக்கும் சங்கடமாயிருந்தது. ஜனங்கள் கண்களுக்கு முன்பாக பூரண மனுஷனாக நிற்கிற அவர் தம்மை கடவுள் என்று சொன்னால் எப்படியிருக்கும்? அல்லது தேவனுக்குச் சமமான தேவகுமாரன் என்று சொன்னாலும் எப்படியிருக்கும்? ஊழியத்தின் கடைசியில் வரவேண்டிய சிலுவை மரணத்தை உடனே அழைப்பதுபோல் இருக்கும் அல்லவா? நாசரேத்தூர் ஜெப ஆலயத்தில் தீர்க்கதரிசியால் முன்குறிக்கப்பட்ட **மேசியா** நானே என்று அவர் சொன்னவுடனே அவர்கள் அவரைக் கொன்றுபோடும்படி மலைச்சிகரத்துக்கு இழுத்துக்கொண்டு போனார்களே. அவர் தம்மை தேவனுக்குச் சமமாக்கிப் பேசுகிறார் என்கிற குறிப்புகளைக் கண்டபோதெல்லாம் யூதர்கள் அவரைக் கொல்லும்படி கற்களை எடுத்துக்கொண்டார்களே. மேலும், அவர் தம்மை மறைத்துப் பேசினதற்கு வேறொரு காரணமும் உண்டு. யூதர் ரோம ஆளுகையை வெறுத்து, மேசியா வரும்போது தங்களை அவர்கள் கையிலிருந்து விடுவிப்பார் என்று பூரணமாய் நம்பியிருந்தார்கள். அவர்கள் தப்பிதமான எண்ணத்துக்கு அவர் இடங்கொடுத்தால் பெருங்கலகம் உண்டாகும். இதற்கு முன் அப்படி நடந்தும் இருக்கிறது. ஆகையால், இவரை இராஜாவாக்க வேண்டுமென்று ஜனங்கள் கூடினபோது அவர்கள் கைக்குத் தப்பி ஓடி மறைந்தார். ஜனங்கள் முற்றிலும் உலக சிந்தையுள்ளவர்களாக இருந்தபடியால் தம்மை இன்னாரென்று பகிரங்கமாய் அறிவிக்கக்கூடவில்லை. அப்போஸ்தலர் அவரை தேவ குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்டபோது அதைப் பிரஸ்தாபிக்கக் கூடாதென்று கட்டளையிட்டார். பிசாசுகள் அறிக்கை செய்த சமயங்களில் அவைகளைப் பேசவிடாதபடி துரத்தினார்.

சுவிசேஷகர் அவரை **மனுஷன்** என்று நிரூபிக்கும்படி எழுதவில்லை. அது அவர்கள் திட்டமாய் அறிந்த விஷயம். அவரை தேவன் என்று நிரூபிக்கும்படி பிரயாசப்படவுமில்லை. அது படிப்படியாக வெளிப்பட்ட விஷயம். அவர்கள் அவரிடத்தில் கண்டதையும் கேட்டவைகளையுமே எழுதினார்கள். பிற்காலத்தில் அவரைக் குறித்துத் தர்க்கம் உண்டாகுமாகையால் அதற்கேற்றாற்போல் எழுதவேண்டு மென்பது அவர்கள் நோக்கமுமல்ல. கடல் தண்ணீரில் உப்பு கலந்திருக்கும் வண்ணமாய் சுவிசேஷத்தில் அவரது தெய்வீகம் அமைந்திருக்கிறது. ஐம்பது வருஷங்களுக்குப் பிந்தி, கிறிஸ்துவைக் குறித்துப் பலவித அபிப்பிராயங்கள் உண்டான காலத்தில், யோவான் தமது சுவிசேஷத்தை எழுதினபடியால், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கும் **நோக்கமாய்** அவர் எழுதவேண்டியதாயிற்று. முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும்,

யோவான் சுவிசேஷத்துக்கும் வித்தியாசம் இருப்பதால், முதல் மூன்று சுவிசேஷங்களும் சரித்திரப்படி உண்மையானவை யென்றும், நாலாம் சுவிசேஷம் யோவான் உண்டுபண்ணின உபதேசம் என்றும் சொல்வாருண்டு. நாலாம் சுவிசேஷம் இல்லாமல் முதல் மூன்று சுவிசேஷங்களும் விளங்காது. முதல் மூன்றும் கலிலேயாவின் ஊழியத்தைக் காண்பிக்கிறது. நாலாம் சுவிசேஷம் யூதேயாவின் ஊழியத்தைக் காண்பிக்கிறது. முதல் மூன்றும் கிறிஸ்துவின் **மனுஷீகத்தை** முக்கியமாகக் காண்பிக்கிறது. நாலில் அவரது மனுஷீகம் விளங்குவதுபோலவே **தெய்வீகமும்** விளங்குகிறது. முதல் மூன்றும் சரித்திரப்படி உண்மையாயிருக்கிறது போலவே, யோவான் சுவிசேஷமும் சரித்திரப்படி வெகு திட்டவட்டமாயிருக்கிறது. கிறிஸ்து ஒருவராயிருந்தாலும் அவரைப்பற்றி எழுதுகிறவர்களுடைய ஆவிக்குரிய தன்மைக்கேற்றபடிமாத்திரம் இவர்கள் அவரை வெளிப்படுத்தக்கூடும். மத்தேயு, மாற்கு, லூக்கா என்பவர்களை யோவானோடு ஒப்பிடக்கூடுமா? இவருடைய அன்பென்ன? ஆவிக்குரிய அனுபவமென்ன? ''ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவனுக்கு நான் என்னை வெளிப் படுத்துவேன்'' என்ற திவ்யவாக்கு யோவானுக்கே தகும். ஆகையால் நாலு சுவிசேஷமும் சேர்ந்ததே முழுச் சுவிசேஷமாகிறது.

நமதாண்டவர் தம்மை தேவகுமாரன் என்றும், தேவன் என்றும் பிரத்தியட்சமாகச் சொல்லாததற்குக் காரணமின்ன தென்று மேலே கவனித்தோம். அதுமாத்திரமல்ல, **தேவகுமாரன்** என்பது அவர் சொல்லுகிறதினால்மாத்திரம் அறிந்து கொள்ளக்கூடிய காரியமல்ல. எவ்வளவு விஸ்தரித்துப் பிரசங்கித்தாலும் அதினாலே அந்த இரகசியத்தை அறிந்துகொள்ள முடியாது. நிலமானது முன்பு முளையையும் பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கிறதுபோலவே அவரை இன்னாரென்று அறிகிற அறிவும் நமக்குள் பிறந்து படிப்படியாக வளர்ந்து பெருகவேண்டும். இந்த அறிவு அவரது ஜீவியம் உபதேசம் கிரியைகள்மூலமாய் பரிசுத்தாவியினாலே உள்ளத்தில் வெளிப்படுத்தப்படவேண்டும். உள்ளான **வெளிப்படுத்தலை** வாய்ச்சொல்லால் அறிந்துகொள்ள முடியாது. மல்லிகையை அதன் வாசனை வெளிப்படுத்துவது போல் கிறிஸ்துவின் தெய்வீக நற்கந்தம் நமது உள்ளத்தில் பரிமளிக்கவேண்டும். மூக்கடைத்தவன் வாசனை அறியான். ஜென்ம சுபாவத்தான் ஆவிக்குரிய ஆண்டவரின் மகிமையைக் காணமாட்டான். அவருடைய ஜீவவசனம் தங்களுக்குள் பிரவேசிக்க இடங்கொடாத யூதர், அவரை மனுஷனாகமாத்திரம் கண்டார்களேயன்றி, அவருடைய தெய்வீக மகிமையைக் காணவில்லை.

ஜனங்கள் தம்மை உடனே அறிந்துகொள்ளாததால் ஆண்டவர் சோர்ந்துபோகவுமில்லை. அவர்கள் தம்மை தேவ குமாரனாக ஏற்றுக்கொள்ளும்படி அவர்களைப் பலவந்தம் செய்யவுமில்லை. அவர்கள் தம்மைக்குறித்துப் பலவாறான அபிப்பிராயங் கொண்டபோது ஆச்சரியப்படவுமில்லை. ஜனங்கள் அவரைக் குறித்து பலவாறு அபிப்பிராயங்கொண்டது மெய்தான். அவர்கள் அவரைச் சாதாரண மனுஷன் என்று சொல்ல ஏதுவில்லை. சிலர் எலியா என்றார்கள். சிலர் எரேமியா என்றார்கள். சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றார்கள். சிலர் யோவான்ஸ்நானன் என்றார்கள். சிலர் கிறிஸ்துவாயிருக்கலாம் என்றார்கள். சிலர் கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார் என்றார்கள். சிலர் நல்லவர் என்றார்கள். சிலர் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்றார்கள். சிலர் இவர் யாரோ, எப்படிப்பட்டவரோ என்று பிரமித்தார்கள். இவ்வாறு தேவ குமாரன் மனுஷகுமாரனாக வந்தது அநேகருக்கு இடறலும் குழப்பமுமாயிருந்தது. ஒரு சமயம் யூதர் அவரைச்சூழ்ந்துகொண்டு எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர். நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்று கேட்டார்கள். அவரோ நான் சொல்லுகிறதில் பிரயோஜனமில்லை, சொன்னாலும் நம்பமாட்டீர்கள் என்றார். ஆயிரம் திறவு கோல்களைப் போட்டுத் திறந்தாலும் என்ன? அந்தப் பூட்டுக்குரிய திறவுகோலால் திறந்தால் அல்லவோ வீட்டிற்குள் பிரவேசித்து அவருடைய மகிமையைக் காணலாம்.

அந்நாளில்மாத்திரமல்ல, எக்காலத்திலும் இவர் மனுப்புத்திரர் யாவரையும் யோசிக்கச் செய்கிற **அற்புத** புருஷனாகவேயிருக்கிறார். உலகத்தில் எந்த மனுஷனைக் குறித்தும் இவ்வளவு ஆராய்ச்சி நடந்ததில்லை. இவ்வளவு அபிப்பிராயங்கள் உண்டானதில்லை. இவர் வெறும் மனுஷனாகமாத்திரம் இருந்தால் இவ்வளவு தர்க்கங்கள் ஏன்? மோசேயைக் குறித்து இவ்வளவு ஆராய்ச்சி நடந்ததோ? எலியாவைக் குறித்து இத்தனை அபிப்பிராயங்கள் உண்டானதோ? மனுஷகுமாரனைக் குறித்து இந்நாள்வரை ஆராய்ச்சி செய்வதற்குக் காரணமென்ன? "அநேகர் விழுகிறதற்கும், எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்." அநேகர் இடறிவிழுவது அவருக்கு எவ்வளவேனும் பிரியமில்லை. எல்லாரும் தம்மால் பிழைக்கவேண்டுமென்பதே அவர் மாம்சத்தில் வந்த நோக்கம். ஆகையால் "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்." அவிசுவாசிகளும் சுயஞானிகளும் எக்காலத்திலும் இடறுகிறார்கள். தாழ்ந்த சிந்தையுள்ள விசுவாசிகளுக்கோ அவர் "மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்." அவர்

தம்மைத் தேவகுமாரன் என்று அழைத்ததைவிட மனுஷகுமாரன் என்றே அடிக்கடி அழைத்தார். தேவனோடு தமக்குள்ள சம்பந்தத்தை உணர்ந்ததைவிட மனுஷரோடுள்ள சம்பந்தத்தை அதிக ஆழமாய் உணர்ந்து ஜீவித்தார். அவர் மீட்பராக வந்ததில் மனுஷரிடத்தில் தான் பலத்த கிரியை நடக்கவேண்டியதா யிருந்தது. பிதாவோடு ஐக்கியப்படும் விஷயத்தில் பிள்ளைகளைத் தான் சரியான வழிக்குக் கொண்டுவர வேண்டியதாயிருந்தது. இவர் பிதாவுக்கு ஆலோசனை சொல்லவும் அவர் மனதை மாற்றவும் வேண்டியதில்லை. அந்த அன்புள்ள பிதாவே தமது குமாரனை நம்மிடத்தில் அனுப்பி, நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளச் சித்தமானார். ஆகையால், குமாரனுடைய பிரதானமான வேலை நம்மைத் தம்மிடத்தில் இழுத்து, தம்மோடு ஐக்கியப்படுத்தி, தமதுமூலமாய் பிதாவோடு ஐக்கியப்படுத்தவேண்டுமென்பதே. ஆகையால் மனுமக்களோடு தம்மை ஒன்றாக்கி, **மனுஷகுமாரன்** என்னும் பேராலேயே தம்மை அழைத்துவந்தார். **மனுஷகுமாரன்** என்பதின் இரகசியத்தை நாம் அறியும்போது அவர் மனுஷன்மாத்திரமல்ல அதற்கு மேலானவர் என்பதைக் காண்போம். மனுஷகுமாரனாகிய அவரோடு ஐக்கியப்பட்டு, அவரிடத்தில் கற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது அவர் **தேவகுமாரன்** என்கிற சத்தியம் நமக்குப் புலப்படும். ஆகவே, மனுஷகுமாரன்மூலமாய் தேவகுமாரனையும், தேவகுமாரன்மூலமாய் பிதாவாகிய தேவனையும் கண்டடைவோம். "என்னைக் கண்டவன் பிதாவை கண்டான்" என்ற வாக்கும் நிறைவேறும். இவ்வாறு "நமது ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்ற அனுபவமும் உண்மையாகும்.

பிதா புத்திர சம்பந்தம். அவர் தம்மைத் தேவகுமாரன் என்று சொன்னதற்கும், நாம் நம்மைத் தேவகுமாரர் என்று சொல்லுவதற்கும் அளவில்லாத வித்தியாசம் உண்டு. அவர் தேவகுமாரன் என்பதுபோல் மனுஷர் யாவரும் தேவகுமாரர்தான் என்று சொல்லுகிறவர்கள் தற்காலம் எழும்பியிருக்கிறார்கள். தேவன் நமது சிருஷ்டிகரானதால் அவர் நமது பிதாவும் நாம் அவர் பிள்ளைகளுமென்பது ஒருவிதத்தில் உண்மையே. ஆகிலும், அந்தச் சம்பந்தம் பாவத்தால் அழிந்தது. "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்று ஆண்டவர் யூதரைப்பார்த்துச் சொன்னதுபோல், பாவத்தின் வஞ்சனையால் மனுக்குலத்தார் சாத்தானுக்கு அடிமைகளானார்கள். பாவத்தில் மனுஷருக்கு மனுஷர் வித்தியாசமிருந்தபோதிலும், **எல்லா மனுஷரும் பாவிகள்** என்பதில் வித்தியாசமே இல்லை. இனி **மறுபிறப்பினால்மாத்திரம்** நாம் தேவனுக்குப் பிள்ளைகளாகக் கூடும். இந்தச் சத்தியத்தை மறுக்கிறவர்கள் கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

மறுபிறப்பு என்பது கிறிஸ்துவின்மூலமாய் ஆவியானவரால் உள்ளத்தில் நடக்கும் புதுச்சிருஷ்டிப்பு. அவ்வாறு நாம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமானாலும், கிறிஸ்து தேவகுமாரனாயிருப்பதுபோல நாம் தேவகுமாரர் ஆவதில்லை. அவர் மனுஷகுமாரனாக நமது சகோதரனானாலும், தேவகுமாரனாக நமது ஆண்டவரும் இராஜாவுமாயிருக்கிறார். அவர் குமாரனாயிருக்கிற நிலைமைக்கு ஒருவனும் ஒருக்காலும் நெருங்கமுடியாது. பிதா ஒருவர் இருப்பதுபோல குமாரன் ஒருவரே இருக்கிறார். பிதா அன்புள்ளவரானால் அந்த அன்புக்குரிய குமாரனும் அவரோடிருக்கவேண்டும். அந்த அன்பு நித்தியமானால் அன்புக்குரிய குமாரனும் நித்தியமாயிருக்கவேண்டும். இவரே பிதாவினுடைய நித்திய சுதன். பிதாவின் அன்புக்குரிய குமாரன் இடையில் உண்டான ஒரு சிருஷ்டியானால், அதற்குமுன் பிதா அன்புவைத்த குமாரன் யார்? ஆகையால் **நித்திய பிதா தமது நித்திய அன்புக்குரிய நித்தியகுமாரனை நித்தியமாய்த் தம்மில் இருக்கக் கண்டார்.** பிதாவின் இருதயத்துக்கேற்றதும், அவர் சித்தத்துக்கு இசைந்ததும், அவர் விருப்பத்துக்கு உகந்ததும், அவர் நோக்கத்திற்குப் பொருந்தியதும், அவர் மகிமையின் பிரகாசமும், அவர் தன்மையின் சொரூபமுமான **தேவகுமாரன்** இவரே.

அவர் தமது சீஷரோடு சேர்ந்து நமது பிதா என்று பொதுவாய்ச் சொல்லவில்லை. என் பிதாவென்றும் உங்கள் பிதாவென்றும் வித்தியாசப்படுத்திப் பிரித்தே பேசியிருக்கிறார். நீங்கள் ஜெபிக்கும்போது பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே என்று சொல்லுங்கள் என்று நமக்குப் போதித்தார். அவர் தேவனை **பிதா** என்று எப்படி விசேஷித்து அழைத்தாரோ, அதுபோலவே தம்மை **குமாரன்** என்றும் விசேஷித்து அழைத்தார். திராட்சத்தோட்டத்து உவமையில் எஜமான் அனுப்பின ஊழியக்காரரை தீர்க்கதரிசிகளுக்கும், தம்மை எஜமானுக்குப் பிரியமான **குமாரனுக்கும்** ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். என் பிதா, என் பிதா என்று அவர் பிரித்துப் பேசினதைக் கவனிக்கும்போது மற்றொருவருக்கும் இல்லாத தெய்வீக **பிதா புத்திர சம்பந்தம்** தமக்கு உண்டெனக் காண்பிக்கிறார். இந்த உணர்ச்சி சிறுபிராய முதல் அவருக்குள் இருந்தது. வெளிப்படவேண்டிய காலத்தில் பிரத்தியட்சமாய் வெளிப்பட்டது. அவரது பன்னிருபிராயத்தில் இன்னும் உபதேசிக்காமலும் யாதொரு கிரியை செய்யமாலும் இருந்தபோது "என் **பிதாவின்** காரியத்தில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா? என்று கேட்டார். உன் தகப்பனும் நானும் விசாரத்தோடு தேடினோமே என்று மரியாள் சொல்ல, **என் தகப்பன்** என்று பிள்ளை வேறொருவரைக் குறித்துப் பேசினது மரியாளுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஒருவர் சொல்லிக்

கொடுத்தல்ல, அது அவருக்குள்ளிருந்து இயல்பாகவே வெளிப்பட்டது. பிதாபுத்திர சம்பந்தம் அவர் ஜீவகால முழுவதிலும் பிரியாதிருந்தது. இந்த ஐக்கியத்திலேயே அவர் பிழைத்தார், உபதேசித்தார், வல்ல கிரியைகளைச் செய்தார். இந்த ஐக்கியமே அவருக்கு ஜீவன். ''என்னை அனுப்பின பிதா எப்பொழுதும் என்னோடு கூடவேயிருக்கிறார்'' என்றார். சகல சோதனைகளிலும், துன்பங்களிலும், சகல பாடுகளிலும் பிதாவின் சமுகமே அவரைத் தேற்றினது. அவரில் விளங்கின அதிசயமான அமைதல், தைரியம், சமாதானத்துக்குக் காரணம் கூடயிருந்த பிதாவே. குமாரன் மனுஷனானபோதும் பிதாவைவிட்டு பிரிந்தவரல்ல. சிலுவைவரை **பிதாவே** என்கிற அருமையான சொல் அவர் வாயைவிட்டு விலகவில்லை. பாலகனாயிருந்த போது பிதா என்று சொன்னவர் சிலுவையிலும் பிதாவே என்று சொல்லி ஜீவனைவிட்டார்.

பிதா புத்திர அறிவு. பிதா தேவன் என்பதை ஒருத்துவ மார்க்கத்தாரும் தற்காலக் கொள்கைக்காரரும் ஏகமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள். குமாரனும் தேவன் என்பதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால், அது புத்திக்கு விகற்பமாயிருக்கிறது. பிதாவின் அறிவும் குமாரனின் அறிவும் ஒன்றானால் குமாரன் யார்? எவ்வளவு மேலான தத்துவங்களோடு சிருஷ்டிக்கப்பட்ட தூதர்களும் பிதாவாகிய தேவனை இன்னாரென்று பூரணமாய் அறியமுடியாது. தேவன் தூதர்களுக்கும் மேலான ஒருவரை உண்டாக்கி அவரை அரை தேவன் முக்கால் தேவன் போலாக்கிவைத்தாலும், அப்படிப்பட்ட ஒருவரால் தேவனை முழுவதுமாக அறியமுடியாது. **தேவனே தேவனை அறியக்கூடும்.** என்னை அறிந்தால் என் தகப்பனை அறிந்தாயிற்று என்று ஒரு இராஜாவின் குமாரன் சொல்ல முடியாது. இராஜா வேறே, குமாரன் வேறே என்பது நிச்சயம். இப்படியிருக்க, நமதாண்டவர் தமது சீஷர்களைப் பார்த்து; ''என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இது முதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்.'' பிதாவை உங்களுக்குக் காட்டவும் வேண்டுமோ? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். இதனால், பிதாவாகிய தேவனை அறிகிற அறிவு குமாரன் மேலான கருத்துள்ளது. ''பிதா தவிர வேறொருவனும் குமாரன்மூலமாகக் கிடைக்கிறதென்கிறார். மத்தேயுவில் வருகிற வசனம் இன்னும் இன்னாரென்று அறியான்; குமாரனும் குமாரன் எவனுக்கு அவரை (பிதாவை) வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான்.'' இவ்வார்த்தைகளின் மாட்சிமையை நாம் என்ன சொல்ல? அதன் இரகசியமும் கருத்தும் விண்ணுலகம்போல் உயர்ந்து நிற்கிறதே.

ஆயக்காரன் மத்தேயு இவ்வாக்கியத்தை உண்டாக்கினாரோ? இதை அவர் எழுதின காலத்தில் இதன் கருத்தைச் சரியானபடி அறிந்துகொண்டாரோ? அவ்வசனத் தொனியிலேயே தெய்வீகம் விளங்குகிறது. பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள அறிவு மனுஷ புத்திக்கு எட்டாத இரகசியம். முகமுகமாய், உள்ளத்துக்கு உள்ளமாய், பிதா குமாரனை அறிந்திருப்பதுபோலவும், குமாரன் பிதாவை அறிந்திருப்பது போலவும் வேறொருவரும் அறிய முடியாது. **குமாரன்** இன்னாரென்கிற இரகசியத்தை சர்வ வல்லமையுள்ள **பிதாவைத்** தவிர வேறொருவரும் அறிய முடியாது. அதுபோலவே பிதாவின் அன்பையும் கிருபையையும் குமாரன் தமது ஆவியினாலே மனுஷருள்ளத்துக்கு வெளிப்படுத்தினாலன்றி மற்றபடி ஒருவரும் பிதா இன்னாரென்று அறிந்துகொள்ள முடியாது. குமாரனை பிதா வெளிப்படுத்துகிறவர். பிதாவை குமாரன் வெளிப்படுத்துகிறவர். இவ்விருவரையும் ஆவியானவர் வெளிப்படுத்துகிறவர். வெளிப்படுத்தலை மனுஷர் தங்கள் சுயஞானத்தால் அறியவே முடியாது. "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்று பேதுரு சொன்னபோது, ''மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு **வெளிப்படுத்தினார்**" என்று ஆண்டவர் சொன்னார். பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள இந்த அறிவின் சம்பந்தத்தைக் குறித்து ''பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள **இரகசியம்**" என்று பவுல் எழுதினார் (கொலோ. 2:2). இந்த பிதா புத்திர அறிவைக் குறித்து: பிதாவே! உலகம் உம்மை அறியவில்லை. நானே உம்மை அறிந்திருக்கிறேன். உலகம் உம்மை அறியும்படிக்கு உம்மை இன்னாரென்று **வெளிப்படுத்தவே** நான் உலகத்தில் வந்தேனென்று வியாழன் இரவில் ஜெபித்தார். அவர் யூதரிடத்தில் பேசினபோது நானே பிதாவை அறிந்திருக்கிறேன், நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்றார். தேவனை அறிந்து அவரை வெளிப்படுத்தக்கூடிய குமாரனே **தேவகுமாரன்.**

பிதா புத்திர காலம். தாம் தேவகுமாரன் என்பது படிப்படியாக அவருக்குத் தெரியவந்ததென்றும், ஞானஸ்நானம் பெற்றபோதுதான் தேவகுமாரன் என்பதைத் திட்டமாய் அறிந்தாரென்றும், உயிர்த்தெழுந்தபின்புதான் தேவகுமாரனானார் என்றும் சொல்லுகிறவர்கள் உண்டு. அப்படிச் சொல்லும்போது அவர் மனுஷனாகமாத்திரம் பிறந்தார், படிப்படியாக தேவகுமாரனானார். அவர் பிறந்ததற்குமுன் இருந்ததில்லை என்று சொல்லவேண்டியதாயிருக்கும். நாம் நம்மைப்பற்றி நினைக்கும் போது நாம் பிறந்ததற்கு முன் இருந்த எவ்வித ஞாபகமும் நமக்கில்லை. மனுஷனாக வந்த அவரோ தாம் உலகத்தில் பிரவேசிக்கும்முன் இருந்ததாக அடிக்கடி பேசியிருக்கிறார். தமது

பிறப்பையே உற்பத்தியாக அவர் ஒருபோதும் சொன்னதில்லை. தமது பிறப்பைக் குறித்து ஒரு வார்த்தையும் பேசாததும் ஆச்சரியமே. ஆகிலும், தமது பிறப்பை விளக்கிக் காட்டிப் பேசின வார்த்தைகள் உண்டு. "நீங்கள் தாழ்விலிருந்து உண்டானவர்கள், நான் உயர்விலிருந்து உண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்து உண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்து உண்டானவன் அல்ல." தாம் உலகத்தில் வந்த வழியல்ல, தாம் **எங்கேயிருந்து** வந்தார் என்பதே அவர் மனதைப் பூரணமாய் ஆண்டுகொண்டிருந்தது. அந்த உணர்ச்சியின்படியே அவர் பேசினார். யூதருக்கு அது இடறலாயிருந்தது. ஒரு சமயம் "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்றார். இருந்தேன் என்று அல்ல. இருந்தேன் என்பது ஆபிரகாமுக்கு முந்தியிருந்த ஒரு காலத்தைக் குறிக்கும். இவருக்குக் காலம் இல்லை. ஆபிரகாமுக்கு முன்னே **இருக்கிறேன்** என்பது இலக்கணப்பிழைபோல் தோன்றினபோதிலும் இருக்கிறவராகவே இருக்கிற முக்கால நாதனுக்கு எக்காலமும் தற்காலமே. "நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்துக்கு வந்தேன், மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன்." "பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்." இவைபோன்ற தெளிவான வாக்கியங்கள் குமாரன் உலகத்துக்கு வருமுன் அனாதியாய்ப் பிதாவோடு இருந்தவர் என்று காண்பிக்கிறது. **குமாரன்** இல்லாமல் **பிதா** என்கிற வார்த்தைக்கு அர்த்தம் இல்லை. பிதா உள்ளபோதே குமாரனும்கூட இருக்கவேண்டும். குமாரன் மனுஷனாகப் பிறந்ததற்கு முன் இருந்ததில்லை யென்றால், அவர் பிறப்பிற்கு முன்னே பிதா என்கிறவரும் இருந்ததில்லை என்றாகும்.

நாம் யூகிக்கவேண்டிய வேறு வசனங்களும் உண்டு. "பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்திலிருக்கிற வருமான **மனுஷகுமாரனே** அல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை." அவர் பூமியிலிருந்தபோது இப்படிச் சொன்னார். மனுஷகுமாரன் என்னும் பேருக்குள்ளே தேவகுமாரன் வெளிப்படுகிறார். மனுஷகுமாரன் இடையில் வந்தவர். தேவகுமாரனோ ஒரே சமயத்தில் பரத்திலும் இகத்திலும் இருக்கக்கூடியவர். பரலோகத்திலிருந்து இறங்கினவர் தேவகுமாரனே. "மனுஷகுமாரன் **தாம் முன்னிருந்த** இடத்துக்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" இங்கே மனுஷகுமாரன் என்பவர் மரியாளிடம் பிறந்தவர். **தாம் முன்னிருந்த** என்று சொல்லும்போது **தாம்** என்பது தேவகுமாரனைக் குறிக்கும். "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்." சரீரம் தாயாரிடம் பெற்றுக்கொண்டது. எனக்கு

என்று சொல்லுகிறவர் சரீரத்திற்கு முன்னிருந்தவர். இவ் வசனங்களைக் கவனிக்கும்போது எக்காலமும் பிதாவோடிருந்த **குமாரன் காலம் நிறைவேறினபோது** ஸ்திரீயினிடத்தில் பிறந்தார் என்பது நிச்சயமாகிறது. குமாரன் ஏதோ ஒருகாலத்தில் சிருஷ்டிக்கப்பட்டவரானால் ''இவர் சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர்'' என்று எப்படிச் சொல்லலாம்? **சர்வசிருஷ்டி** என்கிற வார்த்தை அதற்குமுன் ஒரு சிருஷ்டியும் இருந்ததில்லை என்று காண்பிக்கிறதல்லவா? "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை" என்பது குமாரனைச் **சிருஷ்டியாக** அல்ல, **சிருஷ்டிகராகக்** காண்பிக்கிறதே. ஆகையால், தேவகுமாரன் சிருஷ்டிக்கப்பட்டு இடையில் உண்டானவரல்ல, அல்லது மனுஷனாகப் பிறந்து படிப்படியாக தேவகுமாரன் ஆனவருமல்ல. அவர் அனாதி பிதாவோடு கூடவேயிருந்த அனாதி குமாரன். "அவருடைய புறப்படுதல் அநாதிநாள்களாகிய பூர்வத்தினுடையது'' *(மீகா 5:2)*. அவர் உயிர்தெழுந்ததினால் **தேவகுமாரன்** ஆகாமல், தேவகுமாரனாயிருந்ததினாலேயே உயிர்த்தெழுந்தார்.

அவர் பரிசுத்தத்தில் வெளிப்பட்ட தெய்வீகம். அவரோடு இரவு பகலாகக் கூடயிருந்த சீஷர்கள் மனதில் ஒரு காரியம் ஆழமாய்ப் பதிந்தது. உலகத்தில் எல்லா மனுஷரும் பாவிகள், இவர் ஒருவரே பரிசுத்தரெனக் கண்டார்கள். அவரைப் பரிசுத்தர், குற்றமற்றவர், மாசற்றவர், பாவிகளுக்கு முழுவதும் விலகினவர் என்று பிரசங்கித்தார்கள். மனுஷருக்குள் ஒருவருக்கொருவர் கல்வி அறிவில், சாஸ்திர அறிவில் பேதப்பட்டிருக்கிறார்கள். பாவிகள் என்னும் விஷயத்திலோ வித்தியாசமேயில்லை. நாம் எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களானோம். பாவிகள் தங்கள் பாவத்தை உணருவதைவிட பக்தர்களே அதிகமாய் உணருவார்கள். பரிசுத்த வளர்ச்சிக்குத் தக்கபடியே பாவ உணர்ச்சியும் இருக்கும். கிறிஸ்து படிப்படியாய் பரிசுத்தத்தைக் கற்றுக்கொண்டவரல்ல. முதலிலிருந்து கடைசிவரை அவர் **பரிசுத்தரே**. "உன்னிடத்தில் பிறக்கும் **பரிசுத்தமுள்ளது**" என்று தேவதூதன் மரியாளுக்குச் சொன்னான். "நீர் தேவனுடைய பரிசுத்தர்'' எனப் பிசாசுகள் அறிக்கை செய்தன. அவர் பரிசுத்தத்தில் பாவ உணர்ச்சியில்லை. அவர் சமுகத்தில், பார்வையில், வார்த்தையில் மற்றவர்கள் பாவ உணர்வு அடைந்தார்கள். அவரோ பாவத்தை முழுப்பகையாய்ப் பகைத்தார். பாவிகளுக்காகப் பரிதபித்தார். பாவிகளுக்காகத் தாம் பாவமானார். உலகத்தின் பாவத்தைச் சுமந்து சிலுவையிலே தொலைத்தார். அவர் தம்மில் யாதொரு பாவத்தையும் கண்டதில்லை. சீஷர்கள் கண்டதில்லை. சத்துருக்கள் கண்டதில்லை. பிசாசு கண்டதில்லை. உலகத்தின் அதிபதி

அவரிடத்தில் வந்தபோது அவனுக்கு அவரிடத்தில் ஒன்றுமில்லை. இந்த மாசற்ற பரிசுத்தம் எப்படிப்பட்டது? இவரைப்போல் பரிசுத்தமுள்ள இன்னொரு மனுஷனை உலகத்தில் முன்னாவது பின்னாவது கண்டதுண்டா? புத்தன் சரித்திரத்தையும், முகமதுவின் அறிக்கையையும் கவனியுங்கள். எப்பேர்ப்பட்ட பக்தனையும் எடுத்துக்கொள்ளுங்கள். இவருக்கொப்பான பரிசுத்தனைக் காணவே முடியாது. இது தனித்து நின்ற பரிசுத்தம். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இடைவிடாமல் தூதர் போற்றுகின்ற **மத்தியிலுள்ள** பரிசுத்தர். மாம்சத்தில் வெளிப்பட்டு எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் மங்காத பரிசுத்தர் இவர்.

தாம் பாவமற்றவராயிருந்ததுமன்றிப் பிறர்பாவங்களை மன்னிக்கும் அதிகாரமுடையவராயிருந்தார். அவர் கூறின பாவமன்னிப்பு உபசார வார்த்தைகள் அல்ல. திமிர்வாதக்காரன் எழுந்து நடந்தது மெய்யானால் அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதும் மெய்யே. அவர் நம்மில் பாவ உணர்வை உண்டாக்குவதுமாத்திரமல்ல, நமது பாவங்களை நீக்கும் வல்லவராயும் இருக்கிறார். தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்கத்தக்கவர் என்றறிந்த வேதபாரகர், மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று அவர் சொன்னதைத் தேவதூஷணம் என்றார்கள். அவர்கள் சொன்னது சரியே. தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்கத்தக்கவர். கிறிஸ்து பாவங்களை மன்னித்தது உண்மையானால் அவர் யார்? அன்றுமாத்திரமல்ல, இன்றும் தம்மை நம்புகிறவர்களின் பாவங்களை நீக்கி, இருதயத்தை மாற்றி, தேவ சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும் அவர்களை நிரப்புகிறாரே. இதை மறுக்க யாரால் கூடும்? ஆயிரம் பதினாயிரமான சாட்சிகள் உண்டு. அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவர்களாயிருந்த அநேகரை. அவர் உயிர்ப்பித்து உத்தம பக்தர்களாக்கின வல்லமை எங்கேயிருந்து வந்தது? அவரிலிருந்து நமது உள்ளத்தில் பிரவேசிக்கும் தேவஜீவன் அல்லவா இந்த அதிசய மாறுதலுக்குக்காரணம்.

சகேயுவை உத்தமனாக்கினது யார்? மகதலேனா மரியாளைப் பரிசுத்தவதி யாக்கினது யார்? சவுலை பவுலாக்கினது யார்? துஷ்டர்களை அடக்கி ஆள சர்க்கார் அதிகாரம் செலுத்துகிறார்கள். உள்ளத்தை மாற்றும் வல்லமை உலகில் யாருக்குண்டு? துன்மார்க்கரைப் பரிசுத்தவான்களாக மாற்றக்கூடியவர் யாராயிருக்கலாம்? மறுபிறப்பு என்னும் புதுச்சிருஷ்டிப்பை மனுஷருள்ளத்தில் நடப்பிக்கிறவர் எப்படிப்பட்டவர்? "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு'' என்று அப்போஸ்தலன் சொன்னது உண்மையானால், அவ்வாறு கிரியை

நடப்பிக்கக்கூடிய வல்லவர் யார்? தம்மில் பாவமற்றவராய், பிறர் பாவங்களை மன்னித்து, உன்னத ஜீவியத்துக்கு உயர்த்தி, உத்தம தேவ தொண்டர்களாக்கும் இவரை யாருக்கு ஒப்பிடலாம்? உலகத்தில் எந்த மனுஷனாவது மற்றவருள்ளத்தில் இப்படிப்பட்ட மாறுதலை நிறைவேற்றக்கூடுமா? தேவனைத் தவிர பாவங்களை மன்னிக்கக்கூடியது யார்? தேவனைத் தவிர பாவிகளைப் பரிசுத்தவான்கள் ஆக்கக்கூடியது யார்? தேவனைத்தவிர மெய்ச்சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இருதயத்துக்கு அருளக்கூடியது யார்? தேவன் **மாத்திரம்** செய்யக்கூடிய கிரியைகளை இவர் செய்கிறபடியால் இவர் தேவனுக்குச் சமமான **தேவகுமாரனே.**

அவர் திருவாக்கில் வெளிப்பட்ட தெய்வீகம். எல்லாவற்றையும் இங்கே எடுத்துக் காண்பிப்பது கூடிய காரியமல்ல. அவர் மாம்சத்தில் இருந்த நாள்களிலும் அது வெளிப்பட்டது. அவர் உயிர்த்து மகிமையடைந்தபின்பு அதிகத் தெளிவாய் வெளிப்பட்டது. இதனால் அவர் மாம்சத்திலிருந்த போது **அரை தேவனும்,** மகிமையடைந்தபின்பு **முழு தேவனும்** ஆனார் என்று அர்த்தமல்ல. அவர் தம்மை மனுஷருடைய அறிவுக்கேற்றபடி படிப்படியாக வெளிப்படுத்தினார். மாம்சத்திலிருந்தபோது தம்மைப்பற்றித் தாராளமாகச் சொல்லக்கூடாததை மகிமையடைந்தபின்பு தாராளமாகச் சொன்னார். இதை யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் காணலாம். தம்மை **சர்வ வல்லமையுள்ள** கர்த்தர் என்றார். அப்போஸ்தலன் அவரைக் கண்டவுடனே செத்தவனைப்போல் அவர் பாதத்தில் விழுந்தார். அவருடைய மகிமையும் பேசினவார்த்தைகளும் சர்வவல்லமையுள்ள கர்த்தராகவே அவரை வெளிப்படுத்திற்று. அப்போஸ்தலரும் அவர் மகிமையடைந்த பின்புதான், அவரைப்பற்றிய பூரணமான அறிவை ஆவியின் மூலமாகப் பெற்றார்கள். பவுலின் கிறிஸ்து மார்க்கம் மகிமையடைந்த கிறிஸ்துவைத் தரிசித்ததிலிருந்து ஆரம்பித்தது. மாம்சத்திலிருந்த கிறிஸ்துவைப்பற்றிப் பேச அவரால் கூடவில்லை. சுவிசேஷத்தைப் பார்க்கிலும் அவர் எழுதின நிருபங்களில் கிறிஸ்துவின் **தெய்வீகம்** சிறந்து விளங்குமானால் அதற்குக் காரணம் அவருடைய சொந்த அனுபவமே. கிறிஸ்து மாம்சத்தில் இருந்த நாள்களில் தம்மை கடவுள் என்று திறந்து பேசாதது நியாயமே. அது பெரிய இடறலாகவே இருக்கும். அப்படியே இருந்தது. மனுஷர் தம்மைக் கிட்டிச்சேர்ந்து தம்மை அறிந்துகொள்வதற்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவாகவே தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஆகிலும், அவருடைய ஜீவியத்தைக் கவனித்தவர்களுக்கு, அவருடைய வார்த்தைகளை ஆராய்ந்தவர்களுக்கு, அவருடைய

தெய்வீகம் வெளிப்படாதிருந்ததில்லை. மனுஷன் தன் நிலைமைக்கு மிஞ்சிப் பேசமுடியாது. தேவ தூதனானாலும் தன் நிலைமைக்கு மிஞ்சிப் பேசமுடியாது. அப்படிப் பேசினால் அது பொய்யாயிருக்கும். இவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளோ மனுஷனுக்கு மிஞ்சினதாயிருக்கின்றன. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்கிறார். உலகத்தாருக்கு இளைப்பாறுதல் கொடுக்க எந்த மனுஷனால் கூடும்?' "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்." "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்கிறார். சர்வ ஜனத்தின் உள்ளான தாகத்தைத் தீர்க்கக்கூடிய மனுஷன் யார்? ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.'' "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்." "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.'' "மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்" என்கிறார். மனுமக்கள் யாவரையும் உயிரோடெழுப்பி, தமது தூதர்களோடு வந்து மகிமையின் சிங்காசனத்தில் உட்கார்ந்து, உலகத்தை நியாயத்தீர்ப்புச் செய்யும் இவர் யார்? யூதர் தங்கள் வேதாகமத்தை நிகரற்ற பரிசுத்த பிரமாணமாக எண்ணினார்கள். இவரோ அவைகளைக்குறித்து மலைப்பிரசங்கத்தில் இன்னின்னபிரகாரம் "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மோசேக்கு மேலான பிரமாணத்தை சர்வ அதிகாரத்தோடு போதித்தபோது ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் **நானே** என்று நாசரேத்தூர் ஆலயத்தில் சொன்னார். உயிர்த்தெழுந்த பின்பு நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனமும் சங்கீதங்களும் தம்மில் நிறைவேறினதாக சீஷர்களுக்கு விஸ்தரித்துக் காண்பித்தார்.

ஒரு சமயம் தம்மைப் பின்சென்ற ஜனக்கூட்டத்தைப் பார்த்து: "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும் மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார். இது என்ன ஆச்சரியமான நிபந்தனை! இவரைப்பின்சென்று இவருக்குச் சீஷனாகவேண்டுமானால் நமக்கு அருமையான இனத்தாரையும் ஜனத்தாரையும் நமது ஜீவனையும் வெறுத்துவிடவேண்டுமாம். அதாவது, நமக்கு அருமையான எல்லாவற்றைப்பார்க்கிலும் இவர்

ஒருவரையே நாம் முழு இருதயத்தோடு நேசித்துப் பற்றிக்கொள்ளவேண்டும் என்பதே இதன் கருத்து. முழு இருதய அன்புக்குப் பாத்திரர் கடவுள் ஒருவரே, அப்படியானால் இங்கு பேசுகிறவர் யார்? இது தவிர, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் தமக்கு உண்டு என்கிறார். இந்த உயர்வான அதிகாரம் யாருக்கு உரியது! "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்கிறார். "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்" என்கிறார். அதுமாத்திரமல்ல, நான் **உங்களுக்குள்** இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" என்கிறார். இவ்வாறு எங்கும் நிறைந்தவரும், நம்மோடும் நமக்குள்ளும் இருப்பவரும் எப்படிப்பட்டவர்? நானே அல்பா, நானே ஒமெகா. அதாவது, வேதத்தின் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் நானே. நானே ஆதி, நானே அந்தம். அதாவது, உலகத்தின் சகல சம்பவங்களுக்கும் சரித்திரங்களுக்கும் நானே ஆதியும் முடிவுமாயிருக்கிறேன். நானே முந்தினவர் நானே பிந்தினவர். அதாவது, சர்வசிருஷ்டிப்புக்கும் முந்தினவர் நானே, சகலத்தையும் புதிதாக்கிப் பிந்தியிருப்பவரும் நானே. மரித்தேன், ஆகிலும் சதா நித்திய காலமாய் ஜீவித்திருக்கிறேன். என்முன் மரணமும் பாதாளமும் ஒன்றுமில்லை. மரணத்துக்கும் பாதாளத்துக்கும் உரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்; ஆகையால் நீ பயப்படாதே என்கிறார்.

அவர் வாயிலிருந்து புறப்பட்ட **இவ்வார்த்தைகளைக்** கவனிக்கும்போது இவரை நாம் யாருக்கு ஒப்பிடலாம்? ஒரு மனுஷன் தன்னைப்பற்றி இப்படிச் சொல்வானானால் அவனைப் **பைத்தியக்காரன்** என்றும், வாயில் வந்தபடி உளறுகிறவன் என்றும் சொல்லுவோம். இவ்வாறு சொல்லக்கூடிய தகுதியும் உரிமையும் கிறிஸ்துவுக்கு இல்லையென்றால் இதைப்போல் வஞ்சகமும் பொய்யும் தேவதூஷணமும் உலகத்தில் எந்த மனுஷனிடத்திலும் காணமுடியாது. உலகத்தில் ஒரு மனுஷனாவது தன்னை குறித்து இப்படிப் பேசினதில்லை. ஆனால் இவைகள் உண்மையானால் அவர் மாம்சத்தில் வந்த **கடவுள்** என்பதற்கும் ஆட்சேபனை என்ன? அவர் சொன்ன வார்த்தைகளின் நிமித்தமல்ல, அவ்வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்களின் இருதயங்களில் அவர் நடப்பித்துவரும் **மகிமையான தெய்வீக கிரியைகளைக்** கண்டு "பிதாவைக் கனம்பண்ணுவதுபோல குமாரனையும் கனம்பண்ணி" இவர் மெய்யான **தேவகுமாரன்** என்று நாம் அறிக்கையிடுகிறோம். கடவுள்மாத்திரம் சொல்லக்கூடியதை இவர் சொல்லிவிட்டாரே என்பதல்ல, கடவுள் **செய்யக்கூடியவைகளை** இவர் செய்கிறாரே என்கிற அனுபவமே இவ்வறிக்கைக்கு ஆதாரம்.

அவர் கிரியைகளில் வெளிப்பட்ட தெய்வீகம். அவர் தம்மை தேவகுமாரன் என்று நிரூபிக்கும்படி அற்புத அடையாளங்களைச் செய்யவில்லை. நீர் கிறிஸ்துவானால் அதிசயமான அடையாளங்களைக் காண்பியும் என்று யூதர் கேட்டபோது அவரில் காணப்பட்ட வெறுப்பு கொஞ்சமல்ல. **தம்மையே** மனுஷர் நோக்கிப்பார்க்கும்படி போதித்தார். அவருடைய உபதேசங்களைக் கேட்டுத் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளும்படி விரும்பினார். அவ்வாறு அவரை அறிந்துகொள்ளத் தவறினவர்களைப்பார்த்து: என் **கிரியைகளினிமித்தமாவது** என்னை நம்புங்கள் என்றார். மெய்யாகவே அவர் செய்த கிரியைகளில் தெய்வீகம் விளங்கினது. சுய மகிமைக்காக அல்லது மனுஷரைப் பிரமிக்கச் செய்யும்படிக்காக அவர் ஒன்றையும் நடப்பித்தவரல்ல. நோயாளிகளைக் கண்டபோது அவர்கள்மீது மனதுருகி அவர்களைக் குணமாக்கினார். குஷ்டரோகிகளைச் சுகமாக்கி, குருடர்களுக்குப் பார்வை அளித்து, சப்பாணிகளை நடக்கச்செய்து, சாத்தானால் கட்டுண்டவர்களை விடுதலையாக்கினார். தங்களுக்கு அருமையானவர்களை இழந்து அழுகையும் கண்ணீருமாயிருந்தவர்களுக்காக மனதுருகித் தாமும் கண்ணீர்விட்டு மரித்தவர்களை எழுப்பிக் கொடுத்து அவர்களை மனமகிழச் செய்தார். காற்றும் கடலும் தங்கள் சிருஷ்டிகருக்குக் கீழடங்கின. அவர் செய்த கிரியைகள் அதிசயமாயிருந்தாலும் அவரோ ஆத்திரப்படவுமில்லை, ஆரவாரஞ் செய்யவுமில்லை, விளம்பரம்பண்ணவுமில்லை.

குணமானவர்கள் அவைகளைப் பிரஸ்தாபிப்பது எவ்வளவேனும் அவருக்குப் பிரியமுமில்லை. அற்புதங்களைச் செய்வதற்காக மாத்திரம் அவர் உலகத்திற்கு வரவில்லை. அவர் சரீரத்துக்கு நன்மை செய்தபோதெல்லாம் தம்மை அவர்கள் அறிந்து கொள்ளும்படி நாடினார். அவரது இரட்சண்ய ஊழியத்தில் இரக்கம் நிறைந்த மீட்பராக, நோயாளிகளின் பரிதாபத்தைச் சகிக்கக்கூடாமல் இவ்வாறு எங்கும் நன்மைசெய்தார். இதுபோலவே பசித்திருந்த திரளான ஜனங்கள்மீது பரிதாபங்கொண்டு அவர்களைப் போஷித்தார். கிருபை நிறைந்த திருவுள்ளத்துக்கு அக்கிரியைகள் இயல்பாயிருந்தன. அவருக்குள் இருந்த அன்பு அனுதாபம் ஜீவ ஊற்றுப்போல் அவரது கிரியைகளில் விளங்கின. அன்று தமது சொல்லாலே உலகங்களை உண்டுபண்ணின வல்லமையே இங்கும் அமைதலாய் வெளிப்பட்டது. அவர் செய்த கிரியைகளை யூதர் ஒப்புக்கொண்டார்கள். "நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே" என்றார்கள். ஆனால், அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளாததினால் பிசாசின் சக்தியினால் அவர் இவைகளைச் செய்திருக்கலாம் என்று நினைத்தார்கள். நமதாண்டவர் அக்கிரியைகளைச்

சுயமாய்ச் செய்யவில்லை. பிதா செய்வதை மாதிரியாக வைத்துக்கொண்டு செய்யவுமில்லை. பிதாவின் கிரியைகளே குமாரனுடைய கிரியைகள். பிதா செய்வதையே குமாரனும் அந்தப்படியே செய்தார். அதில் கடுகளவு வித்தியாசம் கிடையாது. குமாரனுடைய கிரியைகள் தேவ கிரியைகளானால் இவர் மெய்யாகவே தேவனுக்குச் சமமான **தேவகுமாரனே.**

திருச்சபையில் வெளிப்பட்ட **தெய்வீகம்.** மார்க்கங்கள் பல உண்டு. மார்க்கங்களை உண்டு பண்ணினவர்களும் அம்மார்க்கங்களும் ஒன்றல்ல. உண்டு பண்ணினவர்கள் இல்லாமலே அம்மார்க்கங்களை மனுஷர் அனுசரித்து வருகிறார்கள். என்னை நம்புங்கள் நான் உங்களுக்கு உதவிசெய்வேன் என்று புத்தன் சொல்லவில்லை. ஆகிலும் புத்த மார்க்கம் இருக்கிறது. அதுபோலவே மகமது மார்க்கமும் மற்ற மார்க்கங்களும் இருக்கின்றன. கிறிஸ்து மார்க்கமோ அப்படிப் பட்டதல்ல. கிறிஸ்து இல்லாத கிறிஸ்து மார்க்கம் இல்லை. அவரே அதற்கு ஜீவனாயிருக்கிறார். **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்.** தம்மை இன்னாரென்று வெளிப்படுத்தவே அவர் உலகில் வந்தார். அவரது ஆரம்ப உபதேசமும் கிரியைகளும் ஜனங்கள் தம்மை அறிந்துகொள்ளும்படி அவர்களை ஆயத்தம் செய்வதாயிருந்தன. திரளான ஜனங்கள் அவரை இடைவிடாமல் பின்பற்றின போதிலும் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை. வரவர அநேகர் அவரைவிட்டு விலகினார்கள். அதிகாரிகள் தூண்டுதலால் அநேகர் அவருக்கு விரோதிகளானார்கள். தமது பலத்த கிரியைகளைக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியால் அவைகளைக் கடிந்துகொண்டார். இனிப் பொதுவான ஊழியத்தால் பிரயோஜனம் இல்லை. ஜனங்கள் தம்மை அறிந்துகொள்ளாமற்போனாலும் தாம் தெரிந்துகொண்ட சீஷர்களாகிலும் தம்மை அறிந்துகொண்டால் போதும், அவர்களும் அவரை அறிந்துகொள்ளாமற்போனால் அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் தவறியதாகும். அவர் ஸ்தாபிக்கப்போகிற சபையின் அஸ்திபாரம் அவரது உபதேசங்களும் அற்புதங்களும் அல்ல. அவைகள் அவரை அறிந்துகொள்வதற்கு அவசியம்.

சபையின் அஸ்திபாரம் **கிறிஸ்துவே.** அது அவரிலே கட்டப்பட்டு அவரிலேயே வளரவேண்டும். அவரை இன்னாரென்று அறிந்தவர்களைக் கொண்டே அவர் தமது சபையைக் கட்டக்கூடும். ஆகையால் தாம் உலகத்தைவிட்டுப் போகும் வேளை சமீபித்தபோது, பொதுவாய்ப் பிரசங்கிப்பதை மாற்றித் **தம்மையே** பிரசங்கிக்கத் தொடங்கினார். விசேஷமாய்த் தமது சீஷர்களோடு தனித்திருந்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தமானார். உலகம் அவரை அறியாமற்

போனாலும் சிலராகிலும் தம்மை அறிந்துகொண்டால் அவர்களைக் கொண்டு தமது சபையை ஸ்தாபித்து அவர்கள் மூலமாய் உலகத்தை இரட்சிக்கலாம் என்பது அவர் நம்பிக்கை.

ஆகவே, அவர் கலிலேயாவைவிட்டு நீங்கி வடதிசை நோக்கி தீரு, சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார். அவர் பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது தமது சீஷர்களைப் பார்த்து: "**மனுஷ குமாரனாகிய** என்னை ஜனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள். என்று கேட்டார்." சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் எரேமியா அல்லது பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஏனென்றால், மேசியா வருங்காலத்தில் தீர்க்கதரிசிகள் உயிரோடெழும்புவார்கள் என்பது யூதருடைய நம்பிக்கை. அது போகட்டும், நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். ஆண்டவருக்கிருந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை அதாவது, உன் சுய அறிவினால் இதை நீ கண்டுகொள்ளவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார். அதாவது, அவரை எலியா, எரேமியா, தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று சொல்லுகிறவர்களைக் கொண்டாவது, அல்லது அவர் மனுஷருக்கெல்லாம் மேலானவர், தேவ தூதர்களுக்குச் சமானமானவர் என்று சொல்லுகிறவர்களைக் கொண்டாவது ஆண்டவர் தமது சபையைக் கட்டமுடியாது. இவர் கடவுளுடைய புத்திரன் என்று அறிந்து அறிக்கை செய்கிறவர்களைக் கொண்டே அவர் தமது சபையைக் கட்டக்கூடும்.

சீஷர்கள் இப்படி அறிக்கை செய்தபோதிலும் அது பிதாவின் வெளிப்படுத்தலேயன்றி, அவர்கள் ஆழமாய்த் தங்கள் அனுபவத்தில் அறிந்துகொண்டதல்ல. ஆகையால், ஆண்டவர் மாம்சத்திலிருந்த நாள்களில் திருச்சபை ஸ்தாபிக்கப்படவில்லை. கிறிஸ்து இன்னாரென்றாவது, தேவராஜ்யத்தின் தன்மை எப்படிப்பட்டதென்றாவது சீஷர்கள் கடைசிவரை பூரணமாய் அறிந்துகொண்டவர்கள் அல்ல. அவர் உயிர்த்தெழுந்த பின்புகூட ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை ரோமர் கையிலிருந்து விடுவித்து எங்களுக்குத் திரும்பத் கொடுக்கப்போகிறீர் என்று கேட்டார்கள். ஆனால் ஆவியனவரைப் பெற்று அவரால் போதிக்கப்பட்டபோது தங்கள் நடுவில் சஞ்சரித்தவர் இன்னாரென்றும், அவர் பிரஸ்தாபித்த

தேவராஜ்யம் எத்தன்மையுள்ளதென்றும் அனுபவத்தில் கண்டறிந்தார்கள். கிறிஸ்துவின் **தெய்வீக** தன்மையைக் கண்டறிந்த அவர்களே திருச்சபையைக் கட்டுவதற்கு ஜீவனுள்ள கற்களானார்கள். திருச்சபை கிறிஸ்துவின் **தெய்வீகத்தில்** நிலைநிற்கிறது. கிறிஸ்துவின் தெய்வீகத்திலுள்ள **விசுவாசமே** திருச்சபையின் அஸ்திபாரம்.

இந்த விசுவாசமே அப்போஸ்தலருடைய கிறிஸ்து மார்க்கம். அப்போஸ்தலருடைய ஜீவியமும் உபதேசமும் இந்த விசுவாசமே. இதற்காகவே தங்கள் ஜீவனையும் கொடுத்தார்கள். எலியா, யோவான்ஸ்நானன் போன்ற ஒரு தீர்க்கதரிசிக்காக அல்ல. ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்காக அவர்கள் பிழைத்தார்கள், உழைத்தார்கள், மரித்தார்கள். இந்த விசுவாசமே நற்செய்தியாளர்கள் உலகமெங்கும் கொண்டு சென்ற ஜீவதூது. இந்த விசுவாசத்திற்காகவே இரத்தச்சாட்சிகள் சொல்லிமுடியாத பாடுபட்டு, வாளால் அறுக்கப்படவும், துஷ்டமிருகங்களால் பீறப்படவும், அக்கினியால் தகனிக்கப் படவும் சந்தோஷமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். இந்த விசுவாசமே காட்டுமிராண்டிகளை பரிசுத்தவான்களாக்கி, மூர்க்கரைச் சாதுவாக்கி, அடிமைகளைச் சுயாதீனராக்கி, எத்தேசத்தாரையும் ஒன்றாக்கி உலகத்தை இரட்சிக்கிறது. கிறிஸ்து ஜீவனுள்ள ஆண்டவராக திருச்சபையோடிருந்து கிரியை செய்து வருவதே இந்த வல்லமைக்கும் மாறுதலுக்கும் காரணம். கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கும் மார்க்கம் கிறிஸ்து மார்க்கமல்ல. ஒருத்துவ கிறிஸ்தவர்கள் என்று ஒரு வகுப்பாருண்டு. இவர்கள் கிறிஸ்துவை விசேஷித்த போதகராக ஏற்றுக் கொள்வார்கள், ஆகிலும் அவருடைய தெய்வீகத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நமது திருச்சபையைச் சேர்ந்த தற்காலக் கொள்கைக்காரர் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுப்பதினால் இவர்களும் ஒருத்துவ மார்க்கத்தாராகிவிட்டனர். கிறிஸ்துவின் தெய்வீகமே கிறிஸ்து மார்க்கம். **கிறிஸ்துவும் கிறிஸ்து மார்க்கமும் ஒன்று. கிறிஸ்துவின்** தெய்வீகத்தை மறுக்கும்போது கிறிஸ்து மார்க்க மேது? இவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வது சரியல்ல. ஆகையால், திருச்சபை **கிறிஸ்துவின்** தெய்வீக அறிக்கையில் ஸ்தாபிக்கப்பட்டது மெய்யானால் அவர் தேவனுக்குச் சமமான **தேவகுமாரன்** என்று தீர்மானிக்கிறோம்.

கிறிஸ்து தமது தெய்வீகத்தை ஒப்புக்கொள்ளுதல். அவரது ஊழிய ஆரம்பத்தில் யோவான்ஸ்நானன் "இவரே தேவனுடைய குமாரன்" என்று விளம்பரஞ் செய்தார். நாத்தான்வேல் "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் இராஜா" என்று அறிக்கையிட்டார். பின்பு பேதுருவும் "நீர்

ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்று அறிக்கையிட்டார். அவர் உயிர்த்தெழுந்தபின்பு தோமா அவரைக் கண்டபோது ''என் ஆண்டவரே! என் கடவுளே!'' என்று சொன்னார். இப்படி அறிக்கை செய்தவர்கள் பூரணமாய் அவரை அறிந்து கொண்டவர்கள் அல்ல. தேவ வெளிப்படுத்தலினாலும், ஆச்சரியத்தினால் இருதயம் பரவசமடைந்ததினாலும் இப்படிச் சொன்னார்கள். பிற்காலத்தில் ஆவியானவரால் அவர்கள் போதிக்கப்பட்டபோது, அவரது தெய்வீகத்தை தங்கள் அனுபவத்தில் நிச்சயமாய் அறிந்து அவரைத்தொழுது கொண்டார்கள். ஆகிலும், இப்படிப்பட்ட அறிக்கையை ஆண்டவர் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார். "என் தேவனே" என்று தோமா சொன்னபோது. நீ என்னை தேவன் என்று ஒருக்காலும் சொல்லக்கூடாது, நான் மனுஷனாயிருக்க நீ என்னை தேவன் என்று சொன்னதினால் பெரிய தேவதூஷணம் சொன்னாய் என்று அவர் தோமாவைக் கண்டிக்கவில்லை. என்னை கண்டு என் தெய்வீகத்தை விசுவாசிப்பவர்களிலும் என்னைக் காணாதிருந்தும் விசுவாசிப்பவர்களே பாக்கியவான்கள் என்றார்.

யூதரிடத்தில் தமது தெய்வீகத்தை ஒப்புக்கொண்டார். யூதர்கள் கிறிஸ்துவை எதிர்பார்த்திருந்தது மெய். கிறிஸ்து வந்த காலத்தில் அந்த எதிர்பார்க்குதல் அவர்களிடத்தில் அதிகமாயிருந்தது. எவன் ஒருவன் தன்னை விசேஷித்தவனாகப் பாராட்டுவானோ அவனைப் பின் செல்வார்கள். யோவான் ஸ்நானன் வந்தபோது கிறிஸ்து இவர்தான் என்று சொல்லி திரள் ஜனங்கள் யோவானிடம் ஓடினார்கள். அதிகாரிகளும் விசாரிக்கும்படி ஆள்களை அனுப்பினார்கள். இவ்வாறு எதிர்பார்த்திருந்த ஜனங்கள் மத்தியில் ஆண்டவர் வெளிப்பட்டு, ஆதிகாரத்தோடு பிரசங்கித்து, அற்புத கிரியைகளைச் செய்தபோது, திரள் திரளாக ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தது ஆச்சரியமல்ல.

எங்கே பார்த்தாலும் எல்லார் வாயிலும் அவரே பேச்சு. கலிலேயாவிலுள்ளவர்கள், தென்கடைசி இது மேயாவிலுள்ளவர்கள், வடகடைசி தீரு சீதோனில் உள்ளவர்கள், ஆயிரம் பதினாயிரம் ஆண்டவரை ஆசையோடு சூழ்ந்து கொண்டனர். பட்டணத்தில் நிற்க இடம்போதாததால் கடலோரத்திற்கும் வனாந்தரமான இடங்களுக்கும் அவர் போய் உபதேசிக்க வேண்டியதாயிற்று. இவர்களுடைய தப்பிதமான நோக்கத்தை அறிந்த ஆண்டவருக்குத் தம்மை இன்னாரென்று வெளிப் படுத்துவது கஷ்டமாயிருந்தது. ஏனென்றால், யூதர் கிறிஸ்துவைக் குறித்த புறம்பான தீர்க்கதரிசனங்களைமாத்திரம் எடுத்துக் கொண்டார்கள். அவருடைய தெய்வீகத்தைக் குறித்த தீர்க்க

தரிசனங்களையோ விட்டுவிட்டார்கள். அவர்கள் நம்பியிருந்த கிறிஸ்து தேவ அதிகாரம் பெற்றவராயிருப்பார். ஆனால் அவரே தேவகுமாரனாயிருப்பார் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆகையால், ஆண்டவர் தமது தெய்வீகத்தை மறைத்து, தமது உபதேசம் கிரியைகள்மூலமாய்த் தம்மை இன்னாரென்று அவர்களே அறிந்துகொள்ளும்படி விரும்பினார். அநேகர் அவரை கிறிஸ்துவென்று நம்பினார்கள். வேறு அநேகர் கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார் என்றார்கள். அவர் யூதேயாவில் பிறந்ததை மறந்தார்கள். காலம் செல்லச்செல்ல அவரைத் தேடிப் பின்சென்ற ஜனங்கள் அவரைவிட்டு விலகினார்கள். அதிகாரிகளின் பகையே இதற்குக் காரணம். ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாதபடி அவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். தங்கள் நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய கிறிஸ்து இவரல்ல என்றார்கள். முற்றிலும் மாம்சத்துக்குரிய அவர்களுக்கு ஆவிக்குரிய **ஆண்டவர்** ஆகாதவரானார். அவருடைய கிரியைகளைப் பார்த்தால் அவரை கிறிஸ்துவாக ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. அவருடைய உபதேசத்தைக் கவனித்தால் அதிலே தெய்வீகம் வெளிப்படுகிறது. ஆனால் அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று சொன்னதையோ அவர்களால் சகிக்கமுடியவில்லை.

ஒரு சமயம் ஆண்டவர் அவர்களைப்பார்த்து: கிறிஸ்துவைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன் என்று கேட்க; அவர்கள் உடனே அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். சரி, தாவீது பரிசுத்தாவியினால் அவரை **ஆண்டவர்** என்று சொல்லியிருக்கும்போது அவர் அவனுக்குக் குமாரனாயிருப்பது எப்படி என்று கேட்டார். யாதொரு பதிலும் சொல்லக்கூட வில்லை. அவருடைய இரு தன்மையையும் அவர்கள் அறிய வில்லை. தேவனை அவர் தமது பிதாவென்று அடிக்கடி அழைத்ததும், "நானும் பிதாவும் ஒன்று" என்று அவர் சொன்னதும் அவர்களுக்குச் சகிக்கக்கூடாத கோபத்தை உண்டாக்கிற்று. அவர் தம்மை கடவுளுக்குச் சமமாக்கினார் என்று கண்டுகொண்டார்கள். அதற்காக அவரைக் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். நீ மனுஷனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணம் சொல்லுகிறாயென்று குற்றப்படுத்தினார்கள். அவர்கள் தப்பிதமாக அர்த்தப்படுத்தியிருந்தால் நீங்கள் என்னை தேவன் என்று நினைத்தது தவறு, நான் ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லையென்று ஆண்டவர் அவர்களைத் திருத்தி யிருப்பார். தேவ அதிகாரத்தையும் நியாயத்தையும் ஜனங்களுக்குள் நிலை நிறுத்தும்படி பிரிக்கப்பட்ட நியாயாதிபதிகளை தேவர்கள் என்று வேதத்தில் சொல்லியிருக்க, உலகத்தில் வருமுன்னே பிதாவினால் பிரிக்கப்பட்டு,

பிரதிஷ்டையாக்கப்பட்டு, பிதாவை வெளிப்படுத்தும்படி உலகத்தில் அனுப்பப்பட்டிருக்கிற நான் என்னை **தேவகுமாரன்** என்று சொன்னதினாலே நான் தேவதூஷணம் சொன்னே னென்று நீங்கள் சொல்லுவது சரியல்ல. நான் பிதாவின் கிரியைகளைச் செய்யாதிருந்தால் நீங்கள் என்னை தேவகுமாரன் என்று விசுவாசிக்கவேண்டியதில்லை. என் கிரியைகளில் என் பிதாவைக் காணக்கூடுமானால் என்னை அவருடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ளத் தடையென்ன என்று கேட்டார்.

பிரதான ஆசாரியனிடத்திலும் தமது தெய்வீகத்தை ஒப்புக்கொண்டார். நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு ஆண்டவர்: நீர் சொன்னபடியே நான் அவர்தான், அன்றியும் மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் காண்பீர்கள் என்றார். உடனே பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு இவர் தேவதூஷணம் சொன்னான் என்றான். மற்றவர்கள் இவர் மரணத்திற்குப் பாத்திரன் என்றார்கள். ஆலோசனை சங்கத்தாரும் அவரைப் பார்த்து: நீ தேவனுடைய குமாரனா என்று கேட்க, அவர் நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார். அவரை மரணத்துக்கு ஒப்புவித்தார்கள்.

ஏனென்றால் ஒருவன் எவ்வளவு அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தாலும், தேவன் ஒருவருக்கே உரிய கனத்தைத் தனக்குத்தேடி, தன்னை தேவனுக்கு சமமாக்கு வானானால் அவன் உடனே கொல்லப்படவேண்டு மென்பது யூதருடைய பிரமாணம். அதிகாரிகள் தமது வார்த்தையைத் தப்பிதமாய் அர்த்தம்பண்ணிக்கொண்டு தமக்கு மரண ஆக்கினை கூறுகிறதாயிருந்தால், ஆண்டவர் நிச்சயமாகவே அவர்கள் தப்பிதத்தை உடனே எடுத்துக் காண்பித்து, நான் ஒருக்காலும் என்னை தேவனுக்குச் சமமாக்கவில்லை, நான் தேவதூஷணம் சொல்லவுமில்லை என்று வாதாடியிருப்பார். அவர் மனுஷனா யிருக்க தம்மை தேவன் என்று சொன்னபடியால் அவருக்கு மரணாக்கினை கூறினது அவர்களுக்கு நியாயமாயிருந்தது. மற்றவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லுகிற கருத்தின்படி அவர் சொல்லியிருந்தாலும் அவரைக் கொலை செய்திருக்க மாட்டார்கள். மரணாக்கினைக்குப் பயந்து தமது தெய்வீகத்தை மறுக்கக்கூடாதென்பது ஆண்டவருடைய தீர்மானம். அருமை இரட்சகர் மரணாக்கினையைச் சாந்தமாய் ஏற்றுக்கொண்டு சிலுவையில் தொங்குகையில்: ''பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று

அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபித்தார். அவரை வெகுவாய்க் கவனித்திருந்த நூற்றுக்கதிபதி: "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று பயபக்தியுடன் அறிக்கையிட்டான்.

இதுவரை கவனித்ததைச் சுருக்கிப்பார்ப்போம். இவர் தேவனாகிய பிதாவின் குமாரன். பிதாவைப் பூரணமாய் அறிந்து பிதாவினால் பூரணமாய் அறியப்பட்ட குமாரன். நித்திய பிதாவோடு நித்தியமாயிருக்கிற குமாரன். பரிசுத்த பிதாவின் பரிசுத்த குமாரன். பிதாவின் வார்த்தையாயிருந்து மாம்சத்தில் வந்து உபதேசித்த குமாரன். பிதாவின் கிரியைகளையே செய்த குமாரன். பாவங்களை மன்னித்து ஆறுதலையும் சமாதானத்தையும் அருளுகிற குமாரன். தமது தெய்வீகத்தில் சபையை ஸ்தாபித்த குமாரன். சீஷர்களிடத்திலும், சத்துருக்களான யூதர், ஆலோசனைச் சங்கத்தாரிடத்திலும், தாம் தேவகுமாரன் என்பதை மறுதலிக்காது மரணத்தை ஒப்புக்கொண்ட குமாரன். அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவரும், சதா காலங்களிலும் இருக்கிறவருமான சர்வவல்லமையுள்ள **கர்த்தர்** என்னும் நாமத்தையுடைய குமாரன். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தூதன், சிநேகிதன், அக்கினி முதலான சாயலாக முற்பிதாக்களுக்கு தம்மை வெளிப்படுத்தின குமாரன். சரித்திரங்களாலும், அடையாளங்களாலும், சடங்குகளாலும், நியாப்பிரமாணம், சங்கீதம், தீர்க்கதரிசனங்கள், வாக்குத்தத்தங்களாலும் முன்குறிக்கப்பட்ட குமாரன். தேவ தூதர்களால் வணங்கப்பட்ட குமாரன். உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கவும், மரித்தோரை எழுப்பவும், உலகத்தை நியாயந் தீர்க்கவும் அதிகாரமுள்ள குமாரன். சிருஷ்டிகரும், சிருஷ்டித்தவைகளைத் தாங்குகிறவருமான குமாரன். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையுடையவராக, எல்லாவற்றையும், நடப்பிக்கவும், எல்லாவற்றையும் அறியவும், எங்கும் வியாபித்திருக்கவும் கூடிய குமாரன்.

இவ்வாறு **தேவனுக்கு மாத்திரம் உரிய** நாமத்தை, இலட்சணத்தை, உபதேசத்தை, உத்தியோகத்தை, அதிகாரத்தை, இரட்சிப்பை, நியாயத்தீர்ப்பை, வணக்கத்தை, நித்தியத்தை உடையவருமாய், இவர் என்னுடைய **நேசகுமாரன்** என்று பிதாவினால் சாட்சிபெற்றவருமாய், அப்போஸ்தலர் பரிசுத்தவான்களின் உள்ளங்களிலும், இந்நாள் தமது பிள்ளைகளின் ஜீவியத்திலும், தமது தெய்வீக வல்லமையை நிறைவேற்றி வருகிறவருமான இவர், மெய்யாகவே **பிதாவுக்குச் சமமான தேவகுமாரன்** என்று உறுதியாய் அறிக்கையிடுகிறோம். இவ்வாறு நாம் அவரை ஏற்றுக் கொள்ளாவிட்டால், தேவன் தமது குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை நாம் விசுவாசிக்காததால் தேவனைப் பொய்யராக்குகிறோம்.

அவருடைய தெய்வீகத்தை நாம் சந்தேகிக்கிறதினால் அவருடைய தெய்வீகம் அழிந்துபோகாமல், அப்படிச் சந்தேகிப்பது நமக்கே ஆபத்தாகும்.

கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்குச் சமமான குமாரன் என்பதை இதுவரை பல திருஷ்டாந்தங்களால் நிரூபித்துக் காண்பித்தபோதிலும், அவரது ஜீவியத்தில் இன்னும் ஒரு விஷயம் நமக்குக் கருகலாகவே இருக்கிறது. அதாவது, அவர் தமது தெய்வீகத்தில் பிதாவுக்குச் சமமானவராக இருந்தும், பிதாவுக்குத் **தாழ்ந்தவராகவும்** காணப்படுகிறார். இதை புதிய ஏற்பாடு முழுவதிலும் காணலாம். யோவான் சுவிசேஷத்திலும் நிருபங்களிலும் அவரை பிதாவுக்குத் தாழ்ந்தவர்போல் காட்டும் அநேக வாக்கியங்கள் உண்டு. தெளிவான ஒரு வாக்கியத்தை மாத்திரம் நாம் எடுத்துக்கொள்வோம். "என்பிதா என்னிலும் பெரியவர்" (யோவான் 14:28). "நானும் பிதாவும் ஒன்று" என்று சொன்னவரே "என் பிதா என்னிலும் பெரியவர்" என்றும் சொல்லுகிறார். இதை வியாக்கியானப்படுத்துகிறவர்கள் தேவதன்மையின்படி அவர் பிதாவுக்குச் சமமானவரென்றும், மனுஷத்தன்மையின்படி பிதாவுக்குத் தாழ்ந்தவர் என்றும் சொல்லுவார்கள். மனுஷன் தேவனுக்குத் தாழ்ந்தவன் என்று ஒருவர் நமக்குச் சொல்லவும் வேண்டுமோ? தேவன் யார்? மனுஷன் யார்? மனுஷனை தேவனோடு ஒப்பிட்டும் பேசலாமா? ஆகையால் என் பிதா **என்னிலும்** பெரியவர் என்று ஆண்டவர் சொன்னதில் ஒரு விசேஷித்த கருத்து இருக்கவேண்டும். அதைத்தான் நாம் அறியவேண்டும். மற்றப்படி அவர் பிதாவுக்குத் தாழ்ந்தவரெனக் காட்டும் அநேக வாக்கியங்கள் நமக்கு விளங்கமாட்டாது.

அவர் பிதாவுக்குத் **தாழ்ந்தவர்** என்று சொல்லும்போது பிதா பெரிய கடவுள், குமாரன் சின்ன கடவுள் என்று அர்த்தமல்ல. பிதா குமாரனைப்பார்க்கிலும் அதிகத் தேவத்தன்மை உள்ளவரல்ல; குமாரன் பிதாவைப் பார்க்கிலும் குறைந்த தேவத்தன்மை உள்ளவரல்ல. தேவதன்மையில் பிதாவும் குமாரனும் ஒன்று. அப்படியானால் "என் பிதா என்னிலும் பெரியவர்" என்பதின் கருத்தென்ன? **குமாரன்** என்பதற்குக் **கீழ்ப்படிகிறவர்** என்று அர்த்தம். அவர் கீழ்ப்படிகிறவராக எக்காலத்திலும் பிதாவைச் சார்ந்திருப்பவர். சகலமும் பிதாவில் ஆரம்பித்து குமாரனில் நிறைவேற்றப்படுகின்றன. சிருஷ்டிப்பானாலும், தேவராஜ்யத்துக்குரிய கிரியைகளானாலும், பிதாவில் ஆரம்பித்து குமாரனைக்கொண்டு நிறைவேற்றப்படுகின்றன. சகலமும் பிதாவில் உற்பத்தியாகி, குமாரனில் நிறைந்து, ஆவியானவரால் பகிர்ந்துக்கொடுக்கப்படுகிறது. பிதாவில் தெய்வீக ஊற்றையும், குமாரனில் தெய்வீக ஆற்றையும் காண்கிறோம். ஆற்றின்

தன்மையும் ஊற்றின் தன்மையும் ஒன்றே. பிதா மகிமையின் ஊற்று; குமாரன் அந்த மகிமையை வெளிப்படுத்தும் பிரகாசம். பிதா ஒளி; குமாரன் அந்த ஒளியை வெளிப்படுத்தும் ஒளி. பிதா அன்பு; குமாரன் அந்த அன்பை வெளிப்படுத்தும் அன்பு. மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால், தேவனுடைய சகல பரிபூரணமும் குமாரனில் உண்டு.

கடவுள் தம்மை நமக்கு வெளிப்படுத்தின **விதத்தில்** பிதா, குமாரன், ஆவி என்னும் **வரிசையைக்** காண்கிறோம். இந்த வரிசையில் குமாரன் இரண்டாவதாகத் தோன்றுகிறார். ஆகையால் அவர் இரண்டாவது உண்டானவரல்ல. பிதா நித்தியராயிருப்பது போலவே குமாரனும் நித்தியர். இந்த நித்தியத்தின் **வரிசையில், ஒழுங்கில், சம்பந்தத்தில்** குமாரன் இரண்டாவதாக, அல்லது பிதாவைச் சார்ந்திருப்பவராகக் காணப்படுகிறார். பிதா, குமாரன் என்னும் சம்பந்தத்தில் இதுவே எக்காலத்திலும் அவருடைய ஸ்தானம். பிதாவில் உற்பத்தியாகும் சித்தத்தை நிறைவேற்றுவதே குமாரனுடைய தேவலட்சணம். இதுவும் வெளிப்படுத்தலேயன்றி நாம் ஆராய்ந்து கண்டுபிடித்ததல்ல.

அவர் மனுஷனாகி பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினதினாலே பிதாவுக்குத் தாழ்ந்தவர் என்றல்ல. மனுஷனாவதற்கு முன்னும் அனாதியில் அவர் எப்போதும் பிதாவைச் சார்ந்தவராகவே இருந்தார். அனாதிகாலமுதல் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிவந்த **குமாரனே** மாம்சத்தில் வந்தபோதும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவராயிருந்தார். எஜமான், வேலைக்காரன் என்ற குறைவான எண்ணம் உலகத்தில் ஏற்பட்டது. ஆண்டவர் வேலைக்காரனைப்போல் நடந்து தமது ஜீவியத்தாலும் உபதேசத்தாலும் அந்த இழிவான எண்ணத்தை நீக்கினார். பிதா ஒன்றைக் கற்பிப்பதில் தெய்வீகமுள்ளவராயிருக்கிறதுபோலவே, குமாரன் அதை நிறைவேற்றுவதில் தெய்வீகமுள்ளவராயிருக்கிறார். எக்காலத்திலும் பிதாவைச் சார்ந்திருந்த குமாரனே மாம்சத்தில் வெளிப்பட்டபோதும் பிதாவைச் சார்ந்திருக்கிறவரானார். அவர் மனுஷனாக வந்தபோது இந்தக் கீழ்ப்படிதலும் சார்பும் குமாரனைவிட்டு நீங்கினதில்லை. அவர் மனுஷனாக வந்தபோதுதான் அவருடைய பூரண கீழ்ப்படிதலும், பிதாவைச் சார்ந்திருக்கும் ஐக்கியமும் நமக்குத் தெளிவாய் வெளிப்பட்டன. தமது கீழ்ப்படிதலைப் பற்றிப் பேசினபோதெல்லாம் **பிதா-புத்திர** சம்பந்தமாகவே பேசியிருக்கிறார். குமாரன் செய்த கிரியைகள் யாவும் பிதாவின் கிரியைகளானால் அவை தேவகிரியைகள் என்பதற்கு ஆட்சேபனை என்ன? அவர் மனுஷனானபோது முன்னில்லாத ஒரு புதிய நிலைமைக்குட் பிரவேசித்தார். அதாவது, நமது

பாவங்களைப் போக்கும் மீட்பராகத் தம்மை பாவிகளாகிய நம்மோடு ஒன்றாக்கினார். நம்மோடுள்ள இந்தச் சம்பந்தமே அவருக்குப் பாடுகளையும் மரணத்தையும் வருவித்தது.

மனமகிழ்ச்சியின் குமாரன் மகா போராட்டமான வழியில் நடந்தார். அவர் வேர்வை இரத்தமாக சிந்தத்தக்க போராட்டம் அவருக்கிருந்தது. அளவில்லாத மகிமையுள்ளவர் மனுஷீகத்துக்குரிய அளவுக்குள் அடங்கினார். அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கின இரகசியம் இதுவே. இவ்வளவு சோதனைகளும், போராட்டமும், பாடுகளும் உள்ள நிலையில் இருந்துகொண்டு, அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றின படியால் அவருடைய கீழ்ப்படிதலும், சார்பும், ஐக்கியமும் அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளால் நமக்குத் தெளிவாய் வெளிப்பட்டன. இது ஆதிமுதலிருந்த கீழ்ப்படிதலே அல்லாமல் ஒரு புதிய கீழ்ப்படிதல் அல்ல. ஆனால், அது பாடுகளுக்குள்ளான கீழ்ப்படிதலாயிருந்தபடியால் நமக்கு அதிகத் தெளிவாய் காணப்படுகிறது. எப்போதும்போலவே இப்போதும் பிதாவின் சித்தமே அவர் சித்தம். பிதாவின் கிரியைகளே அவர் கிரியைகள். பிதாவின் மகிமையே அவர் மகிமை. சிலுவையின் மரணபரியந்தம் அவரில் காணப்பட்ட கீழ்ப்படிதல் அவரடைந்த பாடுகளினாலே பூரணபிரகாசம் அடைந்தது. பாடுபட்டதினாலே தான் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டவரல்ல. அத்தனை அகோரபாடுகள் அவருக்கு நேரிட்டும், பிதாவின் சித்தத்தைவிட்டு அணுவளவு அவர் விலகாததினாலேயே, அவருடைய கீழ்ப்படிதல் பூரணமகிமையடைந்தது.

அவர் பிதாவைச் சார்ந்திருப்பவர், பிதாவுக்கு கீழ்ப்படிகிறவர், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவர், பிதாவின் கிரியைகளைச் செய்கிறவர் என்பதை யோவான் சுவிசேஷத்தில் திட்டமாய்க் காணலாம். அவர் மனுஷனாகத் தம்மைத் தாழ்த்தும் முன்னும் இதுபோலவே நடந்துகொண்டார் என்பதைக் காட்டும் வசனங்களும் உண்டு. "என்னை **அனுப்பின** பிதா" "பிதாவினால் பிரதிஷ்டையாக்கப்பட்டும் உலகத்தில் **அனுப்பப்பட்டும்** இருக்கிற நான்." அவர் உலகத்துக்கு வருமுன் பிதாவுக்குக் கீழ்ப்படிகிற குமாரன் என்பது இவ்வாக்கியங்களால் தெளிவாகின்றன. அதுபோலவே அவர் உயிரோடெழுந்து மகிமையடைந்த பின்பும் பிதாவைச் சார்ந்திருப்பவராகவே காண்கிறோம். பரிசுத்த ஆவியைப்பற்றிப் பேசினபோது 'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்" என்றார். இது மாத்திரமல்ல, நமது மீட்பராக "அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் ...தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படித்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" என்று வாசிக்கிறோம் *(1 கொரி. 15:24-28).*

இங்கே கீழ்ப்பட்டிருப்பார் என்று சொல்லியிருப்பது, அவர் மாம்சத்தில் இருந்த நாள்களில் தமது சர்வவல்லமை, சர்வஞானம் என்னும் தெய்வீக மகிமையை கொஞ்சக்காலம் வெறுமையாக்கி, நமக்காகத் தம்மைத் தாமே தாழ்த்தின நிலைமையிலே எக்காலமும் இருப்பார் என்று அர்த்தமல்ல. அவர் பிதாவிடத்தில் போனபோது உலகத் தோற்றத்திற்கு முன் பிதாவிடத்தில் தமக்குண்டாயிருந்த **மகிமையைத்** திரும்பவும் பெற்றுக் கொண்டார் (யோவான். 17:5; கொலோ. 1:16). அந்த மகிமையுள்ள ஆண்டவரை பவுல் **தமஸ்குவுக்குப்** போகும்வழியில் கண்டு கீழே விழுந்தார். யோவான் பத்முதீவிலே இந்த மகிமையின் கர்த்தரைக் கண்டு செத்தவனைப்போல் அவர் பாதத்தில் விழுந்தார். அவர் இப்பொழுது மகிமையடைந்திருந்தபோதிலும் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்ட இரட்சண்ய வேலை இன்னும் பூரணமாய் முடியவில்லை. உலகத்தின் இராஜ்யங்கள் இன்னும் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய இராஜ்யங்கள் ஆகவில்லை. பிசாசு, பாவம், மரணம் இன்னும் அகற்றப்பட வில்லை. இவைகள் எல்லாவற்றையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. அதற்குப்பின் அவர் ஆளுகை செய்யமாட்டார் என்பது அர்த்தமல்ல. ஏனென்றால் "அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது" என்றும், "அவர் சதாகாலங்களிலும் இராஜ்யபாரம் பண்ணுவார்" என்றும் சொல்லியிருக்கிறது (லூக்கா 1:33; வெளி. 11:15). அவர் சகல தீமைகளையும், அழித்து, சகல துரைத் தனத்தையும் சகல அதிகாரத்தையும் சகல வல்லமையையும் பரிகரித்து, பிதாவாகிய தேவனுக்குத் திரும்ப இராஜ்யத்தை ஒப்புவிக்கிறவரை நமது **மீட்பராக** அவர் அரசாளுகிற காலத்தைப்பற்றிமாத்திரம் பவுல் இங்கே பேசுகிறார். உலக அதிகாரங்கள், அதாவது இராஜா, தேசாதிபதி, அதிகாரி, தகப்பன் என்கிற பூமிக்குரிய சகல அந்தஸ்துகளும் அதிகாரங்களும் நீங்கி **கிறிஸ்துவே** தலைவராவார் (கொலோ. 2:10).

நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும். சகலத்தையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடுகிறவரைக்கும் அவர் பிதாவின் வலது பாரிசத்திலிருந்து இப்பொழுது சபையிலும் உலகத்திலும் ஆளுகை செய்துகொண்டிருக்கிறார். அவர் சகலத்தையும் உண்டாக்கினவராயிருக்கும்போது சகலமும் அவர் பாதத்திற்குக் கீழாக்கப்படுவது ஆச்சரியமல்ல. சீக்கிரத்தில் அப்படியே ஆகும். அவ்வாறு சகலமும் குமாரனுடைய பாதத்திற்குக் கீழாக்கப்பட்ட பின், **மீட்பின் கிரியை** பூரணப் பட்டதால், அதன் சம்பந்தமாய் அவர் செய்த அரசாட்சியும் முடியும். பின்பு பிதாவாகிய தேவனுக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். குமாரன் எப்பொழுதும் போலவே பிதாவின் மடியிலிருக்கிற கருத்துள்ள ஸ்தானத்தில் இருப்பார். குமாரன்

தாமும் கீழ்ப்பட்டிருப்பார் என்பதின் கருத்து இதுவே. இவ்வாறு சகல தீமைகளும் கட்டோடே அகற்றப்பட்டு, சகல அதிகாரங்களும் அவர் பாதத்திற்குக் கீழாக்கப்பட்டு, எங்கும் தேவ சித்தமும், ஆளுகையும், ஒழுங்கும், சமாதானமும், அன்பும் காணப்படும்போது "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்" **தேவனே** என்கிற வார்த்தையில் பிதாமாத்திரமல்ல, பிதா, குமாரன், ஆவி மூவரும் உண்டு என்னும் சத்தியத்தை மறந்து போகக்கூடாது.

இதோ நாள் வருகிறது. அதன் மகிமை விஸ்தரிக்க முடியவில்லை. அதன் இரகசியம் அறியக்கூடவில்லை. குமாரன் தமது இரத்தத்தால் மீட்டுக்கொண்டதும் மகிமையின் சிங்காசனத்திலிருந்து அரசாட்சி செய்து தமது ஆவியால் பூரணப்படுத்தினதுமான இராஜ்யத்தை பிதாவுக்கு ஒப்புக் கொடுப்பார். அந்நாளில் தேவனே சகலத்திலும் சகலமுமா யிருப்பார். ஆ! அது எவ்வளவு பாக்கியமான காலம்! இப்பொழுது குறைந்த அறிவுள்ளவர்களாயிருக்கிறோம். ஆண்டவரே! பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப்போதும் என்று கேட்கிறோம். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான் என்கிறார். அப்படியிருந்தும் பிதாவை குமாரன்மூலமாய்ப் பூரணமாக அறிவது நமக்கு இன்னும் கஷ்டமாகவேயிருக்கிறது. இப்பொழுது குமாரன்மூலமாகவே பிதாவை அறியவும் அவரோடு ஐக்கியப்படவும் வேண்டியதாயிருக்கிறது. அந்நாளில் நாம் ஒவ்வொருவரும் அவரை முகமுகமாய்க் காண்போம். அவரது சமுகம் நம்மை நிரப்புவதால் நம்மையும் இருக்கிறபடி அறிந்துகொள்வோம். "பிதாவே! நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்; நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்று ஜெபித்தார். தமது அடியாரைப்பார்த்து: "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்றார். *(யோவான் 14:3).*

கிறிஸ்துவின் மகிமையை இதுவரை சிந்தித்த நமக்கு முடிவாக ஒருகேள்வி வருகிறது. இப்படிப்பட்ட **கிறிஸ்துவை** உண்டாக்கினவர் யார்? அவர் இவ்வளவு மேலான நிலைமைக்கு வருவதற்கு அவருடைய தேசமும், ஜனங்களும், கல்வியும் காரணமாயிருந்ததோ? சிறந்த ஞானிகள் சாஸ்திரிகள் விஷயத்தில் அவர்கள் பிறப்பு, குடும்பம், கல்வி, ஞானிகள், குருமார் முதலான பல சாதனங்கள் அவர்கள் முன்னேற்றத்திற்கு அனுகூலங்களா

யிருந்ததாக அறிந்திருக்கிறோம். கிறிஸ்து இவ்வளவு பெரியவராக விளங்குவதற்கு அவருக்கிருந்த அனுகூலங்கள் எவை? அவர் சிறுபிராய முதல் வளர்ந்தது நாசரேத்தூர். இது நாகரீகத்துக்கும் அறிவுக்கும் மற்றெல்லா அனுகூலங்களுக்கும் முற்றிலும் தூரமாய் விலகிமறைந்திருந்த ஊர். பெற்றோர் கைத்தொழிலாளிகளும் ஏழைகளுமானவர்கள். எருசலேமில் வேத கலாசாலை உண்டு. இவர் அங்கு போய்க் கற்றுக்கொண்டவரல்ல. யூதரபிமார், வேதபாரகர், பரிசேயர் ஆசாரிமார் இருந்தார்கள். இவர் தமது ஊழியத்தில் பிரவேசிக்கும்வரை அவர்களோடு சம்பந்தப்பட்டவரல்ல. சம்பந்தப்பட்ட காலத்தில் அவர்களுடைய தப்பறைகளையும் குருட்டாட்டத்தையும் பாவங்களையும் கண்டித்துப் பேசினார். அவருடைய வேத அறிவுக்கு முன் அவர்கள் நிற்கக்கூடவில்லை. அவரது ஜீவியம் உபதேசம் கிரியைகளைக் கண்டு எல்லோரும் பிரமித்து: இவர் யாரோ, இவருக்கு இந்த ஞானமும் வல்ல செயல்களும் எங்கேயிருந்து வந்தது என்று பேசிக்கொண்டார்கள். ஆகையால், கிறிஸ்து தம் தேசத்தாரால் உண்டானவரல்ல. எல்லாருக்கும் அவர் போதித்தாரே அல்லாமல் அவருக்குக் கற்றுக்கொடுத்தவனும் மாதிரி காண்பித்தவனும் இல்லை.

ஒருவேளை அப்போஸ்தலர் அவர்மீதுள்ள மதிப்பினால் இப்படி ஒரு கிறிஸ்துவை உண்டாக்கினார்களோ? வீட்டைப் பார்க்கிலும் அதைக் கட்டுகிறவன் மேலானவன் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்துவை உண்டாக்குகிறவன் கிறிஸ்துவைப் பார்க்கிலும் மேலானவனாயிருக்கவேண்டும். இவ்வளவு ஞானமும் பரிசுத்தமும் வல்லமையும் மகிமையும் நிறைந்த ஒருவரை உண்டாக்குகிறவன் எவ்வளவு பரிசுத்த அனுபவம் உள்ள அதிசய புருஷனாயிருக்கவேண்டும்! கடலில் மீன்பிடித்த சீஷர் எப்படிப் பட்டவர்கள் என்றும், சபையைப் பாழாக்கின சவுல் எப்படிப்பட்டவர் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். அறிவீனமும், பாவமும் நிறைந்த அவர்கள், கிறிஸ்துவால் சிறந்த பக்தர்களாக உண்டாக்கப்பட்டார்களே அல்லாமல், அவர்கள் ஒருபோதும் அவரை உண்டாக்கவில்லை. அது கூடுமானால் இதுவரை ஏன் இன்னொரு கிறிஸ்து எழும்பக்கூடாது? ஆகையால், இவர் மனுஷரால் உண்டாகாமல் வானத்திலிருந்து வந்த தேவகுமாரன் என்று தீர்க்கிறோம்.

மேலும், யூதர் ஒரே தேவ வணக்கமுள்ளவர்கள். ஒரு மனுஷன் தன்னை தேவனுக்குச் சமமாக்குவது அவர்களுக்கு கொடிய தேவதூஷணம். அப்படியிருக்க, அப்போஸ்தலரும் ஆதிச்சபையும் கிறிஸ்துவை தேவனைப்போல் வணங்கி தேவனுக்குச் சமமாக்கின துண்டானால் அதற்கு காரணமென்ன? தேவனுடைய பரிபூரணம் கிறிஸ்துவில் இருப்பதை அவர்கள் நிச்சயமாய் தங்கள் அனுபவத்தில் கண்டதினாலே அவரை

தேவன் என்று அழைக்கப் பயப்படவில்லை. "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியில் தேவனோடு இருந்தார். சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று; உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாகவே இருந்தது." *(யோவான் 1:1-3;14).* "இயேசு **தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்று நீங்கள் வாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப் பட்டிருக்கின்றன" *(யோவான் 20:31).*

24

தேவ மனுஷன்

The God-Man

"**தேவகுமாரன்**" என்ற அதிகாரத்தில் கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் படித்தோம். அதை மறுபடியும் இங்கே சுருக்கமாய்ச் சொல்வது நல்லது. அவர் தேவன் என்பதைக் குறித்து எவ்வளவேனும் சந்தேகம் இருக்கக்கூடாது. அவர் தேவன் அல்லவென்றால், நாம் தேவமகிமை அடைவோம் என்னும் நம்பிக்கை அத்தோடு ஒழிந்தது. கிறிஸ்து மெய்யான தேவன் என்று வேதம் சந்தேகமின்றிக் கூறுகிறது. தேவனுக்குரிய **பெயர்** அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கர்த்தர் என்றும், சர்வவல்லமையுள்ள கர்த்தர் என்றும், மகாதேவன் என்றும், சர்வத்துக்கும் மேலான தேவன் என்றும், கர்த்தாதி கர்த்தா! இராஜாதி இராஜா! என்றும் அழைக்கப்பெற்றிருக்கிறார். **தேவ இலட்சணங்கள்** அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் சர்வஞானி, சர்வவல்லவர், சர்வவியாபகர், நித்தியர், என்றும் மாறாதவர் என்று அறிகிறோம். அவர் சிருஷ்டித்தவைகளைத் தாங்கி, சர்வத்தையும் ஆண்டு நடத்துகிறவராகப் பேசப்படுகிறார். சர்வமும் அவர்மூலமாகவும், அவருக்காகவும் உண்டாக்கப்பட்டு, அவருக்குள் நிலைநிற்கின்றன. வானத்தின் தூதர்களும் பூமியின் மனுஷரும் அவருக்கு முன்பாகத் தங்கள் முழங்கால்களை முடக்கி அவரை வணங்கவேண்டியது. மனுமக்களுடைய இருதய பக்திக்கும், அன்புக்கும், விசுவாசத்துக்கும் உரிய ஆண்டவர் அவர். மரித்தோரை எழுப்பி உலகத்தை நியாயந் தீர்க்கிற நீதியுள்ள நியாயாதிபதி அவர்.

ஆகையால் கடவுளுக்குரிய கனத்தை எல்லாரும் அவருக்குச் செலுத்த வேண்டும். அவரும் பிதாவும் ஒன்று. அவரைக் கண்டவர்கள் பிதாவைக் கண்டாயிற்று. மனுஷரைத் தம்மிடத்தில் அழைக்கிறார். பாவங்களை மன்னிக்கிறார். இளைப்பாறுதல் அருளுகிறார். தேவ மக்களாக்குகிறார். நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். நித்திய மகிமையில் சேர்க்கிறார். ஆகையால், திருச்சபை எக்காலமும் தொழுது ஸ்தோத்திரித்து வருகிற "மெய்யான தேவனும் நித்திய ஜீவனும்" இவரே.

இப்போது நாம் சிந்திக்கப்போகிற விஷயம் மகா முக்கியமானது கிறிஸ்து தேவனாயிருந்தால் அவர் எப்படி மனுஷனாயிருக்கக்கூடும்? அவர் மனுஷன் என்பது மெய்யானால் எப்படி அவர் தேவனாயிருக்கக்கூடும்? ஒன்றுக்கொன்று அளவில்லாத வித்தியாசமுடைய இருதன்மையை நாம் எப்படி ஒற்றுமைப்படுத்துகிறது? இங்கேதான் நாம் விசுவாசத்திலிருந்து தேவ சாஸ்திரத்துக்குள் பிரவேசிக்கிறோம். சுவிசேஷகர் தாங்கள் கிறிஸ்துவில் கண்டவைகளையும் அவரிடத்தில் கேட்டவை களையும் எழுதினார்களே தவிர, வேதசாஸ்திரத்தை அவர்கள் எழுதவில்லை. தேவதன்மையும் மனுஷதன்மையும் சேர்ந்த தெப்படி என்றும், இவ்விரு தன்மைகளும் சேர்ந்து அவர் ஒரேகிறிஸ்துவாயிருப்பதெப்படியென்றும் அவர்கள் விளக்கிக் காட்டவுமில்லை. வேதசாஸ்திரம் முந்தினதல்ல. முதலில் கிறிஸ்துவைப்பற்றிய அறிவு உண்டாகிறது. பின்பு அந்த அறிவு அனுபவமாகிறது. அந்த அனுபவத்திலிருந்து வேதசாஸ்திரம் பிறக்கிறது. சாஸ்திரிகள் நூதனமான விஷயங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். கண்டுபிடித்தவைகளை ஆராய்ந்து படிக்கிறார்கள். ஆராய்ந்து படித்தவைகளை தங்கள் அனுபவத்தில் நிச்சயமாய் அறிந்தபின் அவைகளைக் குறித்து விவரமான சாஸ்திரங்களை எழுதுகிறார்கள்.

அப்போஸ்தலர் ஆரம்பத்தில் அறியாத விஷயங்களை காலஞ்சென்று அனுபவத்தில் அறிந்தார்கள். சுவிசேஷத்திற்கும் நிருபங்களுக்குமுள்ள வித்தியாசத்துக்குக் காரணமிதுதான். கிறிஸ்துவைக் குறித்து சுவிசேஷம் சொல்லாத மகிமையான காரியங்களை நிருபங்கள் சொல்லுவதினால் அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும், கிறிஸ்துவின்மீதுள்ள பிரியத்தினால் அப்போஸ்தலர் அவருக்கு தெய்வீக மகிமையைக் கொடுத்தார்களென்றும் சொல்லுகிற வர்கள் உண்டு. தலைமுறை தலைமுறையாக ஒரே தேவ வணக்கமுள்ள அப்போஸ்தலர், நசரேயனாகிய இயேசுவை **தேவன்** என்று அழைக்க வேண்டுமானால் நிச்சயமாகவே அதற்குத் தகுந்த ஆதாரம் இருக்கவேண்டும். யூத அதிகாரிகளால் தங்களுக்குக் கொடிய துன்பமும் மரணாக்கினையும் வரத்தக்கதாக கிறிஸ்துவை தேவனென்று அவர்கள் பொய்யாகச் சொல்ல வேண்டியதென்ன?

கிறிஸ்துவின் இரகசியத்தை அப்போஸ்தலர் ஆரம்பத்தில் அறிந்துகொண்டவர்கள் அல்ல. மற்ற யூதரோடு சேர்ந்து இவர்களும் மேசியாவைக் குறித்து தப்பான எண்ணங் கொண்டிருந்தவர்களே. அவருடைய வாக்கில் மனுஷீகமும் தெய்வீகமும் கலந்து வந்தபோது, மற்ற யூதர்கள் ஆச்சரியப்பட்டது போலவே இவர்களும் ஆச்சரியப்பட்டார்கள். யூதர்களிடத்தில் அவர் தமது தெய்வீகத்தை மறுக்காமல்,

அறிக்கையிட்டதை இவர்களும் கேட்டார்கள். அவர் மனுஷன் மாத்திரமல்ல, மனுஷனுக்கு மேற்பட்டவராயிருக்கிறார் என்பதை அறிந்து கொண்டார்கள். யூதர்கள் அவரைப் பகைத்து ஆகாதவர் என்று தள்ளிவிட, இவர்களோ அவரை விடாமல் பற்றிக்கொண்டு அவருக்குப் பின்சென்றார்கள். ஆகிலும் அவரது தன்மையின் இரகசியத்தைக் கடைசிவரை அறிந்துகொண்டவர்களல்ல. வீட்டைக் கட்டவேண்டிய சாதனங்கள் அவர்கள் கைவசம் இருந்தன. கிறிஸ்துவின் மாசற்ற ஜீவியமும், கிரியைகளும், உபதேசமும் அந்தச் சாதனங்கள். அவைகளைக்கொண்டு கட்டவேண்டிய அறிவும் ஞானமும் இன்னும் அவர்களுக்கில்லை. ஆவியானவர் அவர்களை நிரப்பினபோது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன. கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாகத் தங்களுக்குள் இருப்பதைக் கண்டார்கள். ஆவியானவரின் போதனைப்படி தங்கள் கைவசமிருந்த சாதனங்களை அவர்கள் ஒழுங்காய் வைத்துப் பார்த்தபோது, தங்களோடு சஞ்சரித்தவர் மனுஷன் மாத்திரமல்ல, அவர் தேவன் என்று அறிக்கையிடாதிருக்கக்கூடவில்லை. ஆகையால் அவர்கள் கிறிஸ்துவைக் குறித்து எழுதின தெய்வீக காரியங்கள் பிதா தமது குமாரனை ஆவியானவரின்மூலமாய் அவர்களுக்குள் வெளிப்படுத்தினதினாலே உண்டான அனுபவ பலனேயன்றி, அவர்களே தங்கள் சுயஇஷ்டமாக உண்டாக்கிக்கொண்ட உபதேசமல்ல. அதுபோலவே இன்றும் நாம் அனுபவத்தால் கிறிஸ்துவின் தெய்வீகத்தை அறியலாமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் அறிந்துகொள்ள முடியாது.

கிறிஸ்துவைப்பற்றி இவ்வளவு மேலான அறிவும் அனுபவமும் அவர்களுக்கிருந்தபோதிலும், அவரது தேவ தன்மையும் மனுஷதன்மையும் சேர்ந்திருந்த இரகசியத்தைக் குறித்து ஒரு வேதசாஸ்திரத்தை அவர்கள் எழுதவில்லை. அதற்காக அவர்கள் தங்கள் நேரத்தையும் பலத்தையும் செலவிடவில்லை, தேவனாகிய பிதாவின் ஒரேபேறான குமாரனாக அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டு வணங்கிவந்தபோதிலும், கிறிஸ்துவை தேவன் என்று அவர்கள் தாராளமாகச் சொல்லாமல், அவரை தேவகுமாரன் என்றும், இயேசு கிறிஸ்து என்றும், கர்த்தர் என்றும் அழைத்துவந்ததும் ஞானமே நமதாண்டவரும் தம்மை தேவன் என்று தாராளமாகச் சொல்லாத காரணமும் அதுவே. பிதாவும் தேவன், இயேசுவும் தேவன், அப்படியானால் இரண்டு தேவர்களா என்று யூதர்கள் இடறலடைவார்கள். புறஜாதியாரோ தங்களுக்குள் பல தேவர்கள் இருப்பதுபோல கிறிஸ்தவர்களுக்கும் பலதேவர்கள் உண்டென்று எண்ணுவார்கள். விசுவாசத்தின் மூலமாய் நமக்கு வெளிப்பட்ட இரகசியம் எல்லாருக்கும் விளங்குமென்று நினைக்க ஏதுவில்லை. 'எங்கள் இயேசு தேவன், எங்கள் இயேசு தேவன்' என்று மிகுந்த வைராக்கியத்துடன் ஒருவர் இந்துக்களுக்குப் பிரசங்கித்தபோது, பக்கத்தில் நின்றவர்

உங்கள் இயேசு தேவனானால் எங்களுக்கு என்ன என்று சொன்னார். நமதாண்டவர் எவ்வாறு படிப்படியாய் தமது மகிமையை வெளிப்படுத்தினாரோ அவ்விதமாகவே நாமும் நமது ஊழியத்தில் ஞானமாய் நடந்துகொள்ளவேண்டும். பாவங்களை மன்னித்து ஆத்தும இளைப்பாறுதலை அளிக்கும் கிறிஸ்துவிடம் நாம் மனுஷரை நடத்தும்போது அவர்களே தங்கள் அனுபவத்தில் அவர் மனுஷன்மாத்திரமல்ல, சரீரத்தில் வந்த கடவுள் என்பதையும் அறிந்துகொள்வார்கள்.

இவ்வாறு தேவனும் மனுஷனுமாக வெளிப்பட்ட கிறிஸ்துவைக் குறித்துப் பிற்காலத்தில் தர்க்கங்களும் பல அபிப்பிராயங்களும் உண்டாயின. கிறிஸ்துவின் இருதன்மையின் சேர்க்கையைத் திட்டமாய் விளக்கிக்காட்டுவது பெருங்கஷ்டமே. வேதசாஸ்திரிகள் இவ்விஷயத்தில் பேதப்பட்டிருப்பது ஆச்சரியமல்ல. இருதன்மையும் சேர்ந்த கிறிஸ்துவை ஒப்பிட்டுப் பேசக்கூடிய உவமானமும் இல்லை. ஆகிலும் அவர் தரித்திருந்த அங்கி தையல் இல்லாமல் முழுவதும் நெய்யப்பட்டிருந்ததுபோல, அவரது இருதன்மைகளும் யாதொரு பிரிவின்றி ஒன்றாய்ப் பொருந்தியிருந்தன. உலகத்தில் இவருக்கொப்பான ஆள் முன்னுமில்லை பின்னுமில்லை. ஆகையால் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டது அப்போஸ்தலன் சொன்னபடி ஓர் **இரகசியமே** *(1 தீமோ. 3:16)*. இவர் நமது அறிவுக்கு மிஞ்சினவர். தற்காலம் எத்தனையோ நூதனமான விஷயங்களைக் கண்டுப் பிடித்திருக்கிறார்கள். ஆகிலும் அவைகள் நூதனமல்ல. அவைகள் ஏற்கனவே கண்டுபிடித்த சாஸ்திரங்களின் கூடுதலும் வளர்ச்சியுமாயிருக்கின்றன. சாலொமோன் சொன்னபடி சூரியனுக்குக் கீழே நூதனம் ஒன்றுமில்லை. ஏதாகிலும் ஒருவிஷயம் நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அது இதற்கு முன்னுள்ள எந்தச் சாஸ்திரத்தோடும் சம்பந்தபடாதிருந்தால், அதுவே நமது புத்திக்கு விளங்காத இரகசியமாயிருக்கும். தேவதன்மையும் மனுஷதன்மையும் சேர்ந்த கிறிஸ்துவின் இரகசியமும் இதுபோலவே. உலகத்தில் இவர் ஒருவரே இவ்வாறு வந்தவர். அவரை இலேசாய் அறிந்து கொள்ளக் கூடிய காரியமல்ல.

அவர் தேவனாகமாத்திரம் வெளிப்பட்டவரல்ல. அல்லது மனுஷனாகமாத்திரம் வந்தவரல்ல. தேவமனுஷனாக வந்தார். **தேவன் மனுஷனாக** மாறி வந்தவரல்ல, மற்ற மார்க்கங்களில் தேவர் மனுஷர்களாக மாறி வந்த கதைகள் உண்டு. மனுஷருக்கு மேற்பட்ட வீரரையும் ஞானிகளையும் தேவ அவதாரங்களாக எண்ணினார்கள். அவர்கள் நடபடிக்கைகள் எத்தன்மையானவைகள் என்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. கடவுள் எப்படிப்பட்டவர் என்று அறிந்தவர்கள் இவர்களை தேவ அவதாரங்கள் என்று சொல்லமாட்டார்கள். இவைகள்

பொய்யாயிருந்தாலும், கடவுள் மாம்சத்தில் வெளிப்படவேண்டும் என்கிற ஆதி வாக்குத்தத்தத்துக்கு இவைகள் ஆதாரமாயிருக்கின்றன. "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்" (ஆகாய். 2:7). என்னும் தேவவாக்கு உண்மையென்பதை இந்தப் போலி அவதாரங்கள் நிரூபிக்கின்றன. யோவான் ஸ்நானனை கிறிஸ்து என்று யூதர் நினைத்ததும் இந்த எதிர்ப்பார்க்குதலினாலேயே.

தேவனும் மனுஷனுமான **இரண்டு** ஆள்களாக அவர் வரவில்லை. அவ்வாறு வந்திருந்தால் அவர் தம்மை **நான்** என்று ஒருமையில் பேசாமல் **நாங்கள்** என்று பேசவேண்டியதிருக்கும். லேகியோன் ஒரு மனுஷனாயிருந்தும் அநேகம் பிசாசுகள் அவனை ஆண்டுகொண்டிருந்ததால் நான் என்று அவன் சொல்லாமல் நாங்கள் என்று பன்மையில் பேசினான். கிறிஸ்து எப்போதும் **நான்** என்று பேசியிருக்கிறார். அவர் **நாங்கள்** என்று பன்மையில் பேசினபோது பிதா, குமாரன், ஆவியாகிய மூவரையும் குறித்துச் சொன்னார் (யோவான் 14:23). ஆகையால், தேவன் மனுஷனாக மாறிவிடவுமில்லை. தேவன் உலகத்திலுள்ள ஒரு மனுஷனுக்குள் வரவுமில்லை. தேவன் தம்மோடு இன்னாரு மனுஷனைச் சேர்த்துக்கொள்ளவுமில்லை. தெய்வீகமும் மனுஷீகமும் சேர்ந்து ஒரே ஆளாக அவர் வெளிப்பட்டார். இவ்வாறு சேர்ந்ததால் தெய்வீகம் மனுஷீகத்தை அழித்துவிடவில்லை. அல்லது மனுஷீகம் தெய்வீகத்தைக் கெடுத்துவிடவில்லை. இருதன்மையும் ஒன்றோடொன்று மோதிப் போராடவில்லை.

ஆவி, ஆத்துமா, சரீரமுள்ள நாம் நமக்குள் யாதொரு குழப்பமின்றிப் பிழைப்பதுபோல அவரும் நான் தேவன், நான் மனுஷன் என்கிற வித்தியாசமில்லாமல் இவ்வுலகில் பூரணபுருஷனாகச் சஞ்சரித்தார். ஆகையால் அவரது தெய்வீகத்தைமாத்திரம் கவனித்து அவர் மனுஷீகத்தை மறுப்பதும், அவர் மனுஷீகத்தை மாத்திரம் முக்கியப்படுத்தி அவரது தெய்வீகத்தை மறுப்பதும் வேத சாஸ்திரமல்ல. அல்லது அவரை மனுஷருக்கு மேற்பட்டவரும் தேவனுக்குத் தாழ்ந்தவருமான ஒரு சின்ன தேவன் என்று சொல்வதும் சரியல்ல. அப்படிச் சொல்வது ஏராளமான வேதவாக்கியங்களுக்கும் நமது அனுபவத்துக்கும் நேர் விரோதமாகும். மேலும், மஞ்சளும் நீலமும் **கலந்து** பச்சை நிறமாவதுபோல அவரது **தெய்வீகமும் மனுஷீகமும் கலந்து** இவர் மனுஷனோ தேவனோ என்று அறியக்கூடாத மூன்றாவது ஒரு ஆளானார் என்று சொல்வதும் சரியல்ல. நமது புத்திக்கு விளங்காததால் நாம் எப்படியும் சொல்லலாம் என்பது தவறு. இப்படிப்பட்ட ஓர் ஆளை உலகத்தில் ஒருவனும் உண்டாக்க முடியாது. மனுஷன் உண்டாக்குவது மனுஷனுக்கு விளங்காமல் இராது. இது தேவ அமைப்பானபடியால் நமது புத்திக்கு மிஞ்சின இரகசியமா

யிருப்பது நியாயமே. ஏதோ ஒரு பக்கத்தை மாத்திரம் பிடித்துக் கொண்டு ஒருத்துவ மார்க்கத்தாரைப்போல் பிடிவாதம் பண்ணாமல், தேவ வசனத்திற்கேற்றபடி இருபாகங்களையும் கவனித்து அவரிடத்தில் பொறுமையாய்க் கற்றுக்கொள்ளுவதே ஞானம். அவருடைய இரகசியம் உன்னதமான சிகரம்போல் உயர்ந்து நிற்கிறது. அந்தக் கன்மலையின் சிகரத்துக்கு நாம் ஏறக்கூடாவிட்டாலும், அதன் அடிவாரத்தில் நின்றாவது சிகரத்தின் மாட்சிமையைக் காணலாம்.

கிறிஸ்து **தேவமனுஷன்** என்பது திருச்சபை பூரணமாய் ஒப்புக்கொண்ட விஷயம். அவரோடு கூடயிருந்த அப்போஸ்தலர் அவரை மெய்யான மனுஷன் என்று கண்டார்கள். அதற்கு யாதொரு சந்தேகமில்லை. அவர் குழந்தையாயிருந்து படிப்படியாக வளர்ந்தவர். திடீரென்று ஒரு மாயத்தோற்றமான மனுஷனாக வந்தவரல்ல, பசி, தாகம், களைப்பு, நித்திரை, துக்கம், சந்தோஷம், சிநேகம், அனுதாபம், சோதனை, கண்ணீர், பாடுகள், மரணம் இவை யாவற்றிலும் மற்ற மனுஷரைப்போலவே அவர் மெய்யான மனுஷனாக விளங்கினார். அவரை இவ்வாறு மனுஷனாகக் கண்ட அப்போஸ்தலரே அவருடைய தெய்வீகத்தைப்பற்றியும் பேசுகிறார்கள். ஆகிலும், அவரது தெய்வீகம் மனுஷீகத்தோடு சேர்ந்த இரகசியத்தைக் குறித்து அவர்கள் பிரபந்தம் எழுதவில்லை. பிற்காலத்தில் அறிவும் ஆராய்ச்சியுமுள்ள தேவபக்தர்கள் இவ்வேலையில் பிரவேசித்தார்கள். பிரவேசித்தும் பூரணமாய் அந்த இரகசியத்தைக் கண்டுகொண்டவர்கள் அல்ல. வேதவாக்கியங்களின் உதவியால் எவ்வளவு அவரைப்பற்றி அறியக்கூடுமோ அவ்வளவே அறிந்தார்கள். இவ்வாராய்ச்சியில் அநேகர் வழிவிலகியும் போனார்கள். நமது அற்ப அறிவால் தேவ இரகசியத்தை முற்றிலும் அறிந்துகொள்ளலாம் என்று எண்ணுவது துணிகரம். இம்மையில்மாத்திரமல்ல நித்தியத்திலும் அறிந்துகொள்ள முடியாது. தேவ இரகசியத்தை நாம் முற்றிலும் அறிந்துவிட்டால் அவர் தேவனாயிருப்பது எப்படி? அவரை நாம் முற்றிலும் அறிந்துவிட்டால் அவர்மீது நமக்கு மதிப்பேது? எவ்வளவு காலம் நாம் அவரை அறிந்தாலும் ஆராய்ந்து முடியாத ஆழமான கிருபாநிதி அவர். அவரை அறியும் அறிவே ஜீவன். அவரை நித்தியமாய் அறிவதே நித்திய ஜீவன்.

அப்படியானால் இந்த தேவமனுஷனைக் குறித்து நாம் அறியக்கூடியதென்ன? அவரது இருதன்மையும் எவ்வாறு சேர்ந்தது என்பதை நாம் திட்டமாய் அறியக்கூடாவிட்டாலும், அவரைக்குறித்து சுவிசேஷகர் சொன்னவைகளைக் கொண்டு தெய்வீகமும் மனுஷீகமும் அவரில் எவ்வாறு வெளிப்பட்ட தென்பதையாவது கண்டறியலாம். தேவன் ஆவியாயிருக்கிறார்.

அத்தன்மையின்படி தேவகுமாரனும் ஆவியாயிருக்கிறார். ஆவியாயிருக்கிற கர்த்தரை சரீரக் கண்களால் காணமுடியாது. தேவகுமாரன் மாம்சத்தில் வந்ததினால் நாம் தேவகுமாரனையல்ல, மனுஷகுமாரனையே பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். அவரைப் பார்த்தவர்கள் எல்லாரும் அவரை மனுஷன் **என்று** தடையின்றி ஒப்புக்கொண்டார்கள். அந்த மனுஷனே **தேவன்** என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இருதன்மைகளும் பூரணமாய்ச் சேர்ந்த ஒரே ஆள் என்பதை அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

மரியாளுக்கு இந்த இரகசியம் அறிவிக்கப்பட்டபோது, இது எப்படியாகும் என்று கேட்டார்கள். தேவன் மனுஷனாக வருவது கூடியகாரியமா என்று மனுஷர் ஆச்சரியத்தோடு கேட்பது இயல்பே. மரியாளுக்குச் சொன்ன உத்தரவே நமக்கும் சொல்லப்படுகிறது. "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை." பாக்கியவதியாகிய மரியாள் வயிற்றில் பரிசுத்தாவியின் அருளால் உற்பத்தியான மனுஷீகத்தோடு தெய்வீகமும் சேர்ந்து பரிசுத்த குழந்தை ஒன்று பிறந்தது. ''உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்பது தேவன் தமது தூதன் மூலமாய்ச் சொன்ன வாக்கு. பார்வைக்கு மற்றக் குழந்தைகளைப் போலவே ஒரு குழந்தை. ஆகிலும் அது மாம்சத்தில் வெளிப்பட்ட தேவகுழந்தை. **இம்மானுவேல்** என்பது அதன்பேர். இம்மானுவேல் என்பதற்கு நம்மோடு கடவுள் என்று அர்த்தம். அந்தக் குழந்தை தேவனானால் தேவகிரியை ஏன் உடனே வெளிப்படக்கூடாது? தேவன் வேறே, பிள்ளை வேறே என இரண்டு ஆள்களாயிருந்தால் அதிசயமான பேச்சும் அதியசமான கிரியைகளும் வெளிப்படலாம். இரண்டு ஆள்களாயிராமல் இருதன்மைகளும் சேர்ந்து ஒரே ஆளாயிருந்தபடியால், அவரது தேவதன்மை **குழந்தையின் வளர்ச்சிக்குத் தக்கதாகத்தான்** வெளிப்படக்கூடும். சிறு குழந்தை பெரிய காரியங்களைப் பேசுவதும், அற்புதங்களை நடப்பிப்பதும், இயற்கைக்கு விரோதமும் மிதமிஞ்சின செய்கையுமாயிருக்கும். இவைகளைக் கதைகளில் காணலாம். அவரது தெய்வீகமும் மனுஷீகமும் பூரணமாய்ச் சேர்ந்திருந்தால், தெய்வீகம் மனுஷீகத்தின் மூலமாகமாத்திரம் தன்னை வெளிப்படுத்தக்கூடும். அவ்வித வெளிப்படுத்தல் மனுஷீக வளர்ச்சிக்கு ஏற்றாற் போலிருக்கும். இதை உணராமல், பிள்ளையாகிய கிறிஸ்துவை வீணாய் மகிமைப்படுத்த விரும்பி அவர் குழந்தையாயிருந்தபோது பல அற்புதங்களைச் செய்தார் என்று பொய்யானவைகளைப் பிதற்றி அவமானப்பட்டவர் பலர்.

தேவன் சர்வவல்லவர், சர்வஞானமுள்ளவர், அளவில் அடங்காத மகிமையுள்ளவரன்றோ? அவர் மாம்சத்தில்

வெளிப்பட்டது உண்மையானால் அதிசயமான **தெய்வீக** செயல்களைக் காணோமே என்று கேட்கலாம். தேவன் தேவனாக வெளிப்பட்டால் உலகம் பிரமிக்கத்தக்க அதிசயமான கிரியைகளைக் காணலாம். தேவன் மாம்சத்தில் வந்ததால் அத்தன்மைக் கேற்றதாய் அவரது தெய்வீகம் அடங்கியிருக்க வேண்டியது நியாயம். அவர் தேவனுடைய **ரூபமாயிருந்தும்** தேவனுக்குச் சமமாயிருப்பதைப் பற்றிக் கொண்டிராமல், அல்லது தமது சர்வவல்லமை, சர்வஞானம் முதலான் தேவ இலட்சணங்களோடு வெளிப்படாமல், தம்மைத் தாமே **வெறுமை யாக்கி** அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் என்றும்; "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் **ஐசுவரியமுள்ளவராயிருந்தும்** நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும் படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே'' என்றும் அப்போஸ்தலன் சொல்லியிருப்பதில் இதன் உண்மை விளங்குகிறது. அவர் தம்மை வெறுமையாக்கித் தரித்திரரானார் என்பது உலக தரித்திரத்தைக் குறிக்காது. ''தேவனுடைய ரூபமாயிருந்தும்'' 'ஐசுவரியமுள்ளவராயிருந்தும் என்று சொல்லியிருப்பது அவர் மனுஷனாவதற்கு முன் இருந்த தெய்வீக மகிமையைக் குறிக்கிறது. ஆகையால், அவர் தரித்திரரானார் என்பது அந்த உன்னத மகிமையிலிருந்து தம்மைத் தாழ்த்தினார் என்பதைக் குறிக்கும். அவர் மனுஷனானபோது தலை சாய்க்க இடமற்றவராயிருந்தது மெய்தான். அவரது சீஷர்களும் அவ்வாறே அவரோடு சஞ்சரித்தார்கள் என்று அறிவோம்.

அளவில்லாத நித்திய தேவன் அளவுக்குட்பட்ட மனிதனாக வருவது கூடியகாரியமா? அப்படி வருவதினால் அவரது தெய்வீகத்துக்குக் குறைவு வராதா என்று சந்தேகிக்கலாம். இந்தச் சந்தேகம் நீங்கவேண்டுமானால் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்ட **நோக்கம்** இன்னதென்று நாம் திட்டமாய் அறிந்து கொள்ளவேண்டும். அவர் தமது சர்வவல்லமையையும் சர்வஞானத்தையும் வெளிப்படுத்தும்படி உலகத்துக்கு வரவில்லை. அவ்வாறு வெளிப்படுத்தினாலும் அவரது அளவில்லாத தெய்வீக மகிமையை மனுஷீகம் தாங்கிக்கொள்ளமாட்டாது. அது ஒருவேளை கூடியகாரியமாயிருந்தாலும், அவர் மாம்சத்தில் வந்த **நோக்கம்** பலிக்காது. கோழியானது தன் குஞ்சுகளைத் தன் செட்டைகளின்கீழ் சேர்த்துக்கொள்வதுபோல, பாவிகளைத் தம்மிடத்தில் சேர்த்து அவர்களை இரட்சிக்கவேண்டுமென்பதே அவர் உலகத்துக்கு வந்த நோக்கம். அப்படியிருக்க, அவர் தமது பூரண தெய்வீக வல்லமையையும் ஞானத்தையும் மகிமைப் பிரகாசத்தையும் வெளிப்படுத்துகிறவராக வந்தால், யார் அவரைப் பார்க்கவும், அவரோடு பேசவும், அவர் கிட்ட நெருங்கவுங்கூடும்? அவர் தமது மகிமையைக் கொஞ்சம் வெளிப்படுத்தின

சமயங்களில் மனுஷர் பயந்து செத்தவர்களைப் போல் கீழே விழுந்தார்களே. அல்லது, அவர் தமது தெய்வீக ஞானத்தை வெளிப்படுத்துவாரானால் யார் அதை அறியக்கூடும்? தெய்வீக பாஷை யாருக்கு விளங்கும்? பவுல் பரதீசில் கண்டவைகளை விஸ்தரிக்கக்கூடாமல் அவைகள் மனுஷ வார்த்தைகளுக்கு அடங்காதென்று சொன்னாரே. யோவான் பரம எருசலேமின் மகிமையை விஸ்தரிக்க வார்த்தைகள் இல்லாமல் உலகத்திலுள்ள பொன்னுக்கும் இரத்தினக்கற்களுக்கும் ஒப்பிட்டுப் பேசினாரே. கிறிஸ்து தாமும் தேவனுடைய இராஜ்யத்தை எதற்கு ஒப்பிடலாம் என்று யோசித்து சாதாரண காரியங்களைக் கொண்டு போதித்தாரே. "பூமிக்கடுத்த காரியங்களை உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை நான் உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என்று இரட்சகர் கேட்டது எவ்வளவு உண்மை? ஆகையால், அவர் தமது சர்வவல்லமையோடும் சர்வஞானத்தோடும் வருவது பாவிகளின் இரட்சிப்புக்கு எவ்வளவேனும் பிரயோஜனப்படாது. அதுமாத்திரமல்ல, பாவிகள் அவரைக் கண்டவுடனே பயந்து நடுங்கிக் கீழே விழவேண்டியதிருக்கும்.

தேவன் உலகங்களை சிருஷ்டித்த தமது சர்வ வல்லமையையும் சர்வஞானத்தையும் உலகத்துக்கு வெளிப் படுத்தும்படி தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பாமல், தமது **அதிசயமான கிருபையையும் அன்பையும்** உலகத்துக்கு வெளிப்படுத்தும்படிக்கே அவரை அனுப்பினார். அதுவே பாவிகளுக்கு வேண்டியதாகவும் இருந்தது. அன்பைப்போல் மனுஷனைக் கவர்ந்துகொள்ளக்கூடியது வேறெதுவுமில்லை. **ஒருவனுக்கு ஐசுவரியமும் அறிவும் இருந்தபோதிலும் அவன் அன்பற்ற மனுஷனாயிருந்தால் அவனை நாடுபவர் யார்?** தேவன் பல இலட்சணமுடையவராயிருந்தும் இவையாவும் சேர்ந்து ஜொலிப்பது அவரது **அன்பிலேதான்**. தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆகையால், தேவன் மாம்சத்தில் வந்தபோது தமது அன்பையும் கிருபையையுமே விசேஷித்து விளங்கச் செய்தார். அவரது மற்ற இலட்சணங்கள் மனுஷீகத்தின் அளவுக் குட்பட்டிருந்தன. சிறு பிள்ளைகளோடு பேசுகிற ஞானி அவர்களுக்கேற்றாற்போல் பேசுவதால் அவனை ஞானமற்றவன் என்று சொல்லலாமா? நமது இரட்சிப்புக்கு ஏதுவாக எவ்வளவு ஞானமும் வல்லமையும் அவசியமோ அவ்வளவே அவரில் வெளிப்பட்டன. அனாவசியமான வல்லமையும் ஞானமும் பிரயோஜனப்படமாட்டாது. மற்றவர்கள் கட்டாயப்படுத்தியல்ல தாமேதம்மை இவ்வாறு வெறுமையாக்கி நமது நிமித்தம் தரித்திரரானார். இது அவருடைய அளவற்ற கிருபையே.

அவர் தம்மை இவ்வாறு தாழ்த்தினதினால் அவரது தெய்வீகம் அழிந்துபோகவில்லை. மனுஷரை இரட்சிக்கும்படி

மனுஷரோடு தம்மை ஐக்கியப்படுத்தினவராகவும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படி பிதாவைப் பூரணமாய்ச் சார்ந்து பிழைப்பவராகவும் இருக்கத்தக்கதாக தம்மைத் தாமே இவ்வாறு **அளவுக்குட்படுத்தினார்.** அவரது தெய்வீக இலட்சணங்கள் இவ்வாறு அளவுக்குட்பட்டதால் அவரது தெய்வீகமும் மனுஷீகமும் சேர்ந்து பூரண புருஷனாக வெளிப்படக் கூடியதாயிருந்தது. "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று அவர்தாமே சொன்னார். அவர் ஜீவியம் முழுவதிலும் ஊழியம் செய்கிற ஊழியக்காரனாகவே விளங்கினார். அவர் தேவனானால் இவ்வளவு தாழ்வான பணிவிடைகளைச் செய்யக்கூடுமோ என்று நாம் திகைக்கலாம். ஒருவன் பாவஞ்செய்து தாழ்த்தப்படுவது வெட்கமான காரியம். பரிசுத்தரின் தாழ்மையோ சிறந்த தேவலட்சணம். இந்தத் தாழ்மையான சிந்தை மேன்மை என்பதை உலகம் அறியாது. எஜமான் உயர்ந்தவன், வேலைக்காரன் தாழ்ந்தவன் என்கிற எண்ணம் உலகத்திலிருக்கிறது. பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவனையல்லவோ பெரியவன் என்று சொல்லுவார்கள். நான் உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன். நான் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்ய வந்தேன் என்றார்.

தேவபார்வையில் வேலையைக் கற்பிப்பது போலவே அதைச் செய்வதும் தெய்வீகமே. கட்டளையிடுகிற **பிதா** தேவனாயிருப்பது போல கீழ்ப்படிகிற **குமாரனும்** தேவனாயிருக்கிறார். ஏனென்றால் கற்பிப்பதும் கற்பிக்கப்பட்டபடி செய்வதுமாகிய இரண்டுமே ஒன்றான தேவ இலட்சணமே. நல்ல பிதாவாயிருப்பதுபோல நல்ல குமாரனாயிருப்பதும் தெய்வீகமே. பிதா அனுப்ப குமாரன் வருகிறார். பிதா கட்டளையிட குமாரன் செய்கிறார். பிதா பேச குமாரன் பேசுகிறார். பிதாவின் சித்தமே குமாரனுடைய சித்தம். குமாரன் சுயமாய் ஒன்றும் செய்யாமல் நாம் இரட்சிக்கப்படும்படி நமக்காக பிதாவின் விருப்பத்தையே நிறைவேற்றுகிறவராயிருந்தார். ஆகையால், அவர் எப்பொழுதும் பிதாவையே பூரணமாய்ச் சார்ந்து பிழைக்கவேண்டியதாயிருந்தது. இவ்வாறு அவர் இடைவிடாமல் பிதாவைச் சார்ந்து பிழைத்தது, நமது பார்வையில் அவர் பிதாவுக்குத் தாழ்ந்தவராகக் காணப்படுகிறது. பிதாவின் பரிபூரணம் குமாரனுக்குள் வரவும், அந்தப் பரிபூரணம் நமக்கு இரட்சிப்பாய் பலிக்கவும் வேண்டுமானால், குமாரன் இவ்வாறு பிதாவைச் சார்ந்திருக்க வேண்டியது அவசியமே. தெய்வீகத்தில் பிதா வேறே, குமாரன் வேறே என்று பிரிந்திராமல், தேவ இலட்சணங்களில் இருவரும் ஒன்றாயிருப்பதுபோல, குமாரன் மாம்சத்தில் வந்தபோதும் அந்த தெய்வீக ஒற்றுமை மாறிப்போகவில்லை. அவர் மாம்சத்தில் வந்ததினாலே குமாரனுடைய சார்பும் ஒற்றுமையும் அதிகப்

பிரத்தியட்சமாக நமக்குக் காணப்பட்டன. தாமாக ஒன்றும் செய்யாமல், பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்த குமாரன்மூலமாய், பிதா தமது அன்பை நமக்கு வெளிப்படுத்தவும், தமது அறிவை நமது சக்திக்கு ஏற்றாற்போல் போதிக்கவும், நம்மை பாவத்தினின்று கைதூக்கி இரட்சிக்கவும் கிருபைகூர்ந்தார். ஆகையால், இது **குமாரனுடைய** இரட்சிப்பாயிருப்பதுபோலவே, **பிதாவின்** இரட்சிப்பாகவும் இருக்கிறது. குமாரனுடைய உபதேசம் பிதாவின் உபதேசம். குமாரனுடைய கிரியைகள் பிதாவின் கிரியைகள், பிதாவும் குமாரனும் ஒன்று. பிதா தேவனாயிருப்பதுபோலவே குமாரனும் தேவன். ஆகையால், குமாரன் மாம்சத்தில் வெளிப்படுவதற்கு ஏதுவாகத் தம்மைத் தாமே தாழ்த்தினது, அவரது தெய்வீகத்தைக் குறைக்காமல், பிதா குமாரனைத் தமது பரிபூரணத்தால் நிரப்புவதற்கும், பாவிகளான நாம் தாராளமாக அவரிடம் சென்று, அவர் பரிபூரணத்திலிருந்து கிருபையின்மேல் கிருபை பெற்றுக்கொள்வதற்கும் அனுகூலமாயிற்று. ஆசரிப்புக் கூடாரத்துக்குள் தேவ மகிமையும், புறம்பே அலங்காரமற்ற தகசுத்தோலும் காணப்பட்டதுபோல, தேவன் மாம்சமாகிய கூடாரத்துக்குள் வெளிப்பட்ட இரகசியம் இதுவே.

அவரது ஜீவியத்தில் சர்வஞானம் சர்வவல்லமை சர்வவியாபகம் பூரணமாய் வெளிப்படாததினாலே வேத சாஸ்திரிகள் அதைப் பலவிதமாய் அர்த்தப்படுத்துகிறார்கள். சிலர் அவர் மெய்யான மனுஷனாயிருந்தபடியால் மனுஷருக்குரிய அறிவீனம் அவரிடத்தில் இருந்ததென்றும், அக்காலத்திலிருந்தவர்கள் நம்பினதுபோலவே அவரும் சில காரியங்களைத் தப்பிதமாய் நம்பிக்கொண்டாரென்றும் சொல்லுகிறார்கள். திருஷ்டாந்தமாக, லாசருவின் கல்லறை இருந்த இடம் தெரியாமல்: "அவனை எங்கே வைத்தீர்கள்" என்றும், "உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு" என்றும், அசுத்த ஆவிபிடித்த பையனைக் குறித்து "இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று" என்றும், லேகியோனைப் பார்த்து: "உன்பேர் என்ன" என்றும் அவர் கேட்ட கேள்விகள் அவருடைய அறிவீனத்தைக் காண்பிக்கிறது என்கிறார்கள். இவைகளோடு தாம் திரும்பவரும் நாளைக் குறித்து "குமாரனும் அறியார்" என்று அவர் சொன்னதையும் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அவர் மனுஷனாயிருந்தபடியால் இவைகளை அவர் அறிந்துகொள்ளக்கூடவில்லை என்கிறார்கள். இவைகளை ஒப்புக்கொள்ள நமக்கு மனம் வரவில்லை. சுவிசேஷத்தில் மொத்தமாக விளங்கும் அவரது அறிவை மனதில் எண்ணி, இவைபோன்ற வாக்கியங்களை ஆராயவேண்டுமேயல்லாமல், இவைகளைத் தனித்து எடுத்துக்கொண்டு அவரிடத்தில் அறிவீனம் இருந்தது என்று சொல்லுவது சரியல்ல. யோர்தானுக்கு அப்புறத்தில் இருந்துகொண்டே லாசரு மரித்துப்போனான் என்று

சொன்னவருக்கு மரித்தவன் இருந்த கல்லறை தெரியாமல் இருக்குமா? சகோதரிகள் அழுகிறதையும் மற்றவர்கள் அழுகிறதையும் கண்டு மனத்துயரமடைந்து கண்ணீர்விட்ட இரட்சகர் அவர்களைத் தைரியப்படுத்தும்படிக்கு அவ்வளவாவது விசாரிக்காமல் ஊமைபோல் நிற்பது சரியா? மேலும், அவனை எங்கே வைத்தீர்கள் என்று அவர் கேட்ட கேள்வியானது தாம் ஆறுதலான வார்த்தை சொல்லமாத்திரம் வந்தவரல்ல, அதைப்பார்க்கிலும் ஒரு விசேஷித்த கிரியையை நடப்பிக்கும்படி வந்தவர் என்பதை சகோதரிகளுக்கு உணர்த்தமாட்டாதா? மனுஷ இயல்பின்படி கல்லறையை விசாரித்தாலும் தாம் அவனை உயிரோடு எழுப்பும் தேவனாக அல்லவோ அங்கே வந்தார். அவர் அப்படி விசாரிக்காமல் தாமே நேராகக் கல்லறையண்டை போவாரானால், சத்துருக்களான யூதர்கள் இது இயேசுவும் சகோதரிகளும் கூடிச்செய்த சம்பிரதாயம் என்று பேச மாட்டார்களா? ஆகையால், இயல்பான காரியங்களில் அவர் அற்புதமாக விளங்கவேண்டியது அவசியமில்லை. செத்தவனை எழுப்புகிறவருக்குக் கல் ஒரு பெரிய காரியமா? ஏன் அதையும் அற்புதமாகப் புறட்டக்கூடாது?

"உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு" அவர் இவ்வாறு விசாரிக்காமல் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு வாருங்கள் என்று ஞானதிருஷ்டியினால் சொல்லவேண்டும் போலிருக்கிறது. புசிக்கிறதற்கு இங்கே ஒன்றுமில்லை, இது வனாந்திரம், இத்தனை திரளான ஜனங்களுக்கு எங்கேயிருந்து அப்பங்கள் வரும்? இவர்களைச் சீக்கிரம் அனுப்பிவிடுவதே நல்லது என்று சீஷர்கள் சொன்னார்கள். இப்படி தத்தளித்த சீஷரைப் பார்த்து: "நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுக்கவேண்டும் என்று ஆண்டவர் சொன்னபோது, அவரது திருமுகத்தின் புன்னகையைப் பார்க்க வேண்டும். ஐயோ, நாங்களா?. என்பதுபோல் சீஷர்கள் திகைக்கிறார்கள். சரி, உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு, போய்ப்பார்த்து வந்து சொல்லுங்கள் என்கிறார். அவர்கள் அப்படியே போய் விசாரித்தபோது ஒரு பையனிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் இருப்பதை அறிந்து வந்து சொன்னார்கள். அவைகளைக் கொண்டு ஆண்டவர் ஜனங்களைப் பரிபூரணமாய்ப் போஷித்தார். சீஷர்களைச் சோதிக்கும்படி கேட்ட கேள்விகளினாலே அவர்கள் விசுவாசத்தையும் பலப்படுத்தினார். இவையாவும் எவ்வளவு இயற்கையாக நடந்தது! ஆகையால் இக்கேள்வியைக் கொண்டு அவரை அறிவீனர் என்று சொல்லுவது எவ்வளவு அறிவீனம்?

"இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று?" இது அவருடைய அறிவீனம் என்று எப்படிச் சொல்லலாம்? ஒரு

வியாதியைக் குணமாக்கக்கூடிய திறமை வைத்தியனுக்கிருந்தும் அவன் வியாதிக்காரனிடத்தில் எத்தனையோ காரியங்களை விசாரிக்கிறான். வியாதி அறைக்குள் பிரவேசித்ததும் யாரோடும் பேசாமல் திடீரென்று மருந்து கொடுப்பது தேர்ந்த வைத்தியனின் இலட்சணமல்ல. வைத்தியம் செய்வதில் வியாதியஸ்தன் அல்லது வீட்டாருடைய அனுதாபத்தையும் நம்பிக்கையையும் கைப்பற்றுவதே வைத்தியனிடத்தில் காணப்படவேண்டிய முதல் இலட்சணம். இந்தப் பையனுடைய தகப்பன் தன் மகனுக்குச் சுகம் கிடைக்கவேண்டுமென்று மகா சஞ்சலத்தோடும் கண்ணீரோடும் ஆண்டவரைக் கெஞ்சுகிறான். அனுதாபம் நிறைந்த இரட்சகர் அவனைப் பார்த்து பரிதபித்து: "இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று" என்று கேட்டது, சோர்ந்துபோன அவன் இருதயத்தைத் தேற்றினது. அவன் அந்தப் பையனுடைய மகா கொடிய துயரத்தைக் கண்ணீரோடு எல்லாரும் கேட்க விவரமாகச் சொல்லவும் ஏதுவாயிற்று. சிறு வயது முதற் கொண்டே உண்டாயிருக்கிறது ஆண்டவரே, அது இவனைக் கொல்லும்படிக்கு அநேகந்தரம் அவனைத் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று, எப்படியாகிலும் எனக்கு உதவிசெய்ய வேண்டும் என்று கதறினான். திரள் ஜனங்களும் சீஷர்களோடு தர்க்கம் பண்ணின வேதபாரகரும் அங்கே நின்றார்கள். ஆண்டவர் கேட்ட கேள்வியானது வியாதி மகா கொடியதென்று கூடி நின்றவர்கள் அறிந்துகொள்ளவும், பையனின் தகப்பன் ஆண்டவரிடத்தில் விசுவாசம் வைக்கவும் ஏதுவாயிருந்தது. இதுபோலவே, லேகியோனைப் பார்த்து அவர் கேட்ட கேள்வியினால் அவன் அநேகம் பிசாசுகள் பிடித்தவன் என்பது வெளியாயிற்று. ஆகையால் இக்கேள்விகளை அறிவீனம் என்று சொல்லுவது முழு அறிவீனமே.

அந்த நாளை "குமாரனும் அறியார்." சுவிசேஷத்தில் **குமாரன்** என்பதும் **தேவகுமாரன்** என்பதும் ஒன்றே. குமாரன் என்பதை மனுஷ குமாரன் என்று அர்த்தப்படுத்தக்கூடாது. ஆகையால், இங்கே சொல்லப்படுகிற **அறிவீனம்** தேவ குமாரனைக் குறித்தது. முந்தின கேள்விகளை அவர் **மனுஷனாயிருந்தபடியால்** அறியாமையினால் அப்படிக் கேட்டார் என்று சொல்லுகிறவர்கள் இதற்கு என்ன சொல்லுவார்கள்? "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், **குமாரனும்** அறியார்." (மாற்கு. 13:32). பூலோகத்தார் அறியார்கள். பரலோக தூதர்கள் அறியார்கள். குமாரனுங்கூட அறியார். **குமாரனும்** என்று அவர் வற்புறுத்திச் சொல்வதினால் எல்லாரைப்பார்க்கிலும் **மேலான அறிவு** தமக்குண்டென்று காண்பிக்கிறாரே. பிதாவைக் குமாரன் அறிந்திருப்பதுபோல வேறொருவரும் அறியார்கள். அப்படியிருக்க, குமாரனும் அறியார்

என்று சொன்னதின் கருத்தென்ன? ஒரு காரியம் நமது ஞாபகத்துக்கு வரவேண்டியது. அவர் நமது **மீட்பராக** வந்தபோது தாமே சுயமாய் ஒன்றும் பேசவில்லை, சுயமாய் ஒன்றும் செய்யவில்லையென்பது நிச்சயம். அவர் எதைப் பேச வேண்டுமோ, என்ன செய்ய வேண்டுமோ, எங்கே போக வேண்டுமோ. சகலத்திலும் பிதா தமக்குக் கற்பிக்கிறபடியே செய்தார். தண்ணீரை இரசமாக மாற்ற பிதாவின் வேளைக்குக் காத்திருந்தார். பண்டிகைக்குச் சகோதரரோடு போகாமல் எனக்கு இன்னும் உத்தரவு வரவில்லையென்றார். அவருடைய வருகையைப் பற்றிக் கேட்டபோது அது **எப்போது** என்று சொல்லுவது என் காரியமல்ல என்றார். கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்புதான் **சர்வ ஞானம்** அவருக்குக் கிடைத்ததென்று வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால், உயிர்த்தெழுந்தபின்பு அப்போஸ்தலர் அவரிடத்தில் போய் ''ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்'' என்று கேட்டபோது அவர் என்ன சொன்னார்?'' பிதாவானவர் தம்முடைய ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல'' என்பதே. இதுவே "குமாரனும் அறியார்" என்பதற்கு உத்தரவு.

அவர் நமது மீட்பராக பிதாவின் சித்தத்தை எப்பொழுதும் நிறைவேற்றுகிறவராயிருந்தாரேயன்றி, கேட்கிற விபரீதமான கேள்விகளுக்கு உத்தரவு சொல்லுவதும், அவருடைய இராஜ்யத்தில் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் இருப்பவர்கள் இன்னாரென்று அறிவிப்பதும் **அவர் காரியமல்ல.** மின்சார வெளிச்சம் சகிக்கக்கூடாத பிரகாசமாயிருந்தாலும், வீட்டிலுள்ளவர்களுக்கு அவசியமான வெளிச்சம் கொடுக்கும்படி, சிறு கம்பிகளின் மூலமாய் அனுப்பப்படுவதுபோல, அவரது அறிவும் ஞானமும் மனுஷனுக்கு எவ்வளவு அவசியமாயிருந்ததோ அவ்வளவு வெளிப்படாதிருந்ததில்லை. அவர் ஞானத்தில் வளர்ந்தார் என்பதை எடுத்துக்கொண்டு அதினால் அவருக்கு அறிவீனம் இருந்திருக்கவேண்டும் என்கிறார்கள். "இயேசுவானவர் **ஞானத்திலும் தேவகிருபையிலும்** அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" *(லூக்கா 2:52).* தேவகிருபையில் வளர்ந்தார் என்பதை எப்படிக் குறைவான தேவகிருபையிலிருந்து அதிகத் தேவ கிருபைக்கு வளர்ந்தார் என்று சொல்லக்கூடாதோ, அதுபோலவே ஞானத்தில் வளர்ந்தார் என்பதையும் அவர் குறைவான ஞானத்திலிருந்து அதிக ஞானத்துக்கு வளர்ந்தார் என்று சொல்லக்கூடாது.

கிறிஸ்துவின் ஜீவியத்தை சுவிசேஷத்தில் வாசிக்கும்போது அவரது மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் மாறி மாறிக்

காண்கிறோம். அவர் மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாயிருப்பது உண்மையாயினும் தாம் இரண்டு ஆள்களாயிருந்ததாக அவர் உணர்ந்ததில்லை. அவ்வாறு இரண்டு ஆள்களாயிருந்ததாக சீஷர்களாவது மற்றவர்களாவது கண்டதில்லை. அவர் பேசினபோதும் மற்றவர்கள் அவரிடத்தில் பேசினபோதும் அவரை ஒரே ஆளாகக் கண்டார்கள். அந்த ஒரே ஆளிடத்தில் இருதன்மைகளும் காணப்பட்டன. அவருக்குள் தெய்வீகம் இல்லாமல் தேவ இலட்சணங்கள் தேவகிரியைகள் எப்படி வெளிப்படக்கூடும்? அவருக்குள் மனுஷீகம் இல்லாமல் மனுஷலட்சணங்கள் மனுஷகிரியைகள் எப்படிக் காணப்படக்கூடும்? இவ்விரு இலட்சணங்களும் அவரில் இருந்ததென்பதற்கு சுவிசேஷம் நமக்கு ஆதாரம். அவரை தேவனாகவும் மனுஷனாகவும் காண்பிக்கிற திருஷ்டாந்தங்கள் பலவுண்டு.

"நமக்கொரு பாலகன் பிறந்தார். நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார்." பிறந்தது மனுஷன்; கொடுக்கப்பட்டது தேவ குமாரன். பிள்ளை துணிகளில் சுற்றப்பட்டு தொழுவத்தில் கிடக்கிறார்; வானசேனைகள் ஏகமாய்ப் பாடி அவரைப் பணிந்து கொள்ளுகிறது, விசேஷித்த நட்சத்திரம் வானில் தோன்றுகிறது. அவர் தாவீதின் வேரும் தாவீதின் சந்ததியுமாயிருக்கிறார். வேராக தாவீதின் சிருஷ்டிகர்; சந்ததியாக தாவீதின் குடும்பத்தில் பிறந்தவர். ஆகையால் அவர் தாவீதுக்கு ஆண்டவரும் குமாரனுமாயிருக்கிறார். பசியாயிருக்கிறார், ஐயாயிரம்பேரை அதிசயமாய்ப் போஷிக்கிறார். நித்திரைசெய்கிறார், எழுப்பினவுடன் காற்றையும் கடலையும் அதட்டி அமர்த்துகிறார். தாமே களைத்தவராயிருக்கிறார், உலகத்தாருக்கு இளைப்பாறுதலையும் நித்திய ஜீவனையும் கொடுப்போம் என்கிறார். கண்ணீர்விடுகிறார், லாசருவே வெளியே வா என்று மரித்தவனை எழுப்புகிறார். மலையில் ஜெபிக்கிறார், நாலாம் ஜாமத்தில் கடலின்மேல் நடக்கிறார். வரிப்பணம் செலுத்துகிறார், அதை மீன்வாயிலிருந்து எடுக்கிறார். சமாரியா ஸ்திரீயிடம் தாகத்துக்குக் கேட்கிறார், அவளுக்கு ஜீவத்தண்ணீரை வாக்குப்பண்ணுகிறார். சத்துருக்கள் கையில் அகப்படுகிறார், வெட்டுண்டவன் காதைச் சொஸ்தப்படுத்துகிறார். தமது ஜீவனைக் கொடுக்கிறார், அதைத் திரும்ப எடுத்துக் கொள்ளுகிறார். கட்டுண்டவராய் அதிகாரிகளுக்குமுன் நிற்கிறார், வானத்தின் மேகங்கள்மேல் வருவேன் என்கிறார், தாகத்தோடு சிலுவையில் தொங்குகிறார், கள்ளனுக்குப் பரதீஸை வாக்களிக்கிறார். அசையாத பிரேதமாகக் கல்லறைக்குள் கிடக்கிறார், மூன்றாம் நாள் உயிரோடே வெளியே வருகிறார். இவை யாவற்றிலும் அவரது மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் காண்கிறோம். ஆகையால் அவரை தேவமனுஷன் என்று அழைக்கிறோம்.

இவ்வாறு அவரை தேவனாகவும் மனுஷனாகவும் பிரித்துப் படிப்பது நாம் அவரை அறிந்துகொள்வதற்கு உதவியாயிருக்கு மேயல்லாமல், இப்பிரிவான எண்ணம் நமக்குள் நிலைத்திருப்பது அவ்வளவு உசிதமல்ல. அவருடைய தேவதன்மையையும் மனுஷதன்மையையும் வித்தியாசப்படுத்தித் தர்க்கிக்க ஆரம்பித்த தினாலேயே காலத்துக்குக்காலம் சபையில் தவறான கொள்கைகளும் பிரிவினைகளும் உண்டாயின. அந்தத்தவறான கொள்கைகளும் பிரிவினைகளும் இந்நாள்வரைக்கும் ஒழிந்ததில்லை. சுவிசேஷத்தை வாசிக்கும்போது அவர் தேவனாகவும், பிதாவுக்குத் தாழ்ந்தவராகவும், மெய்யான மனுஷனாகவும் காணப்படுகிறார். அவைகள் சில சமயங்களில் நமது மனதில் குழப்பத்தை உண்டாக்குவது மெய்தான். இவைகளை ஒற்றுமைப்படுத்திக்கொள்ளக்கூடாமல் தத்தளிக்கிறவர்கள், கிறிஸ்துவுக்கு விரோதமான கொள்கைகளால் இழுப்புண்டுபோகவும் நேரிடும். கிறிஸ்துவைப்பற்றி கொள்கைகளைப் பூரணமாய் அறிந்துகொண்டால்தான் இரட்சிக்கப்படக்கூடும் என்று நாம் சொல்லுகிறதில்லை. இவைகளை அறியாத நமது முன்னோர்கள் "இயேசு சுவாமி எங்களை இரட்சியும்" என்று சொல்லி அவரைத் தங்கள் இருதய கமலத்தில் ஏற்றுக்கொண்டு உன்னத பதவி அடைந்திருக்கிறார்கள். ஆகையால், ஒருவன் வேதசாஸ்திரத்தில் எவ்வளவு அறிவுள்ளவனாயிருந்தபோதிலும் நமது முற்பிதாக்களைப்போல் பக்தியுடன் கிறிஸ்துவை தன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளா விட்டால் விஸ்தாரமான வேத அறிவு அவனை இரட்சிக்காது. அப்படியானால், கிறிஸ்துவைப்பற்றிய கொள்கைகளை இங்கே எழுதுவானேன் என்று கேட்கலாம். காலவித்தியாசம் அப்படி எழுத ஏவுகிறது. **தற்காலக் கொள்கைக்காரர்** (Modernists) கிறிஸ்துவையும் வேதத்தையும் தகர்த்து நிர்மூலம்பண்ணப் பார்க்கும்போது நாம் சும்மாயிருப்பதெப்படி? கிறிஸ்துப்பற்றிய இரகசியங்களைத் திட்டமாய் அறியாதவர்கள் தவறான கொள்கைகளால் இழுக்கப்படும்போது நாம் கவலையற்றிருப்பது எப்படி? எல்லாவற்றையும் நாம் அறிந்துவிட்டோம் என்பதினால் அல்ல, நாம் **நிச்சயம்** என்று அனுபவத்தில் அறிந்த சத்தியங்களை மற்றவர்களுக்கு அறிவிப்பது தேவசித்தமாயிருக்கிறது.

தேவகுமாரன் நித்தியர். அவருக்குக் காலம் இல்லை. ஆகிலும் நமது அனுபவத்தின்படி அவரை மூன்று பிரிவாகக் காண்கிறோம். அவர் மாம்சத்தில்வருமுன் பிதாவோடிருந்தகாலம். தேவகுமாரன் என்பது அவருடைய நாமம். பின்பு இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் அவர் சரீரத்தில் வந்தகாலம். இதில் தேவன் மனிதனாக மாறிப்போகவில்லை. அல்லது தேவன் இன்னொரு மனுஷனைச் சேர்த்துக்கொள்ளவில்லை. அப்படியானால் இரண்டு ஆட்களாகும். அல்லது தேவனும் மனுஷனும் கலந்துபோகவில்லை. அப்படியானால் தேவனுமல்ல மனுஷனுமல்ல.

இவர் யாரோ என்று சொல்லவேண்டியதாகும். சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறபடி தேவகுமாரன் கன்னி மரியாளிடத்தில் பரிசுத்த ஆவியின்பலத்தினால் உற்பவித்த மனுஷீகத்தைத் தம்மோடு சேர்த்துக்கொண்டு பூரணமான பாலகனாகப் பிறந்தார். மனுஷீகமும் தெய்வீகமும் ஒன்றுசேர்ந்து யாதொரு விகற்பமில்லாத பிள்ளையாகப் பிறந்தார். அவரைக் கண்டவர்கள் எல்லாருக்கும் அவர் மற்றக் குழந்தைகளைப்போல் ஒரு குழந்தை. மற்றப் பையன்களைப்போல் ஒரு பையன். மற்ற மனுஷரைப் போல் ஒரு மனுஷன். **பாவம்** ஒன்றிலேதான் மற்றவர்களுக்கும் அவருக்கும் வித்தியாசம் இருந்தது. இவ்வாறு தெய்வீகமும் மனுஷீகமும் சேர்ந்து பூரண புருஷனாக அவர் வந்ததினால் அவரை **தேவமனுஷன்** என்கிறோம். இந்தத் தெய்வீகம் மனுஷீகத்தை அழித்துவிடவுமில்லை; மனுஷீகம் தெய்வீகத்தைக் கெடுத்துவிடவுமில்லை. இருதன்மைகளும் பூரணமாகப் பொருந்தின **கிறிஸ்துவாக** இருந்தார். இருதன்மைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளவுமில்லை. ஏற்கனவே பிறந்திருந்த ஒரு மனுஷனுக்குள் தேவன் வந்திருப்பாரானால் ஒன்றொடொன்று கட்டாயம் மோதிக் கொள்ளும். கிறிஸ்துவுக்குள் அவ்விதமான **போராட்டம்** இருந்ததில்லை. வேதம் சொல்லுகிறபடி ஆவி, ஆத்துமா, சரீரமாகிய மூன்றும் சேர்ந்தவன் மனுஷன். இம்மூன்றும் வெவ்வேறு தன்மையுள்ளது. அப்படியிருந்தும் யாதொரு போராட்டமும் குழப்பமுமின்றி நாம் மனுஷராயிருக்கிறோம். ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருக்குமானால் அந்த வீடு நிலை நிற்காது என்று ஆண்டவரே சொன்னார். அவரது தெய்வீகத்துக்கும் மனுஷீகத்துக்கும் யாதொரு குழப்பமுமின்றி பூரண புருஷனாகவே அவர் மனுஷருக்குள் சஞ்சரித்தார். இது அவர் தேவமனுஷனாகப் பூமியில் சஞ்சரித்த காலம்.

மூன்றாவது அவர் உயிர்த்தெழுந்தபின்பு பரத்துக்குப் போய் பிதாவினால் **மகிமையையும் கனத்தையும்** பெற்றகாலம். அவர் சரீரத்திலிருந்தபோது இந்த **மகிமை** அவருக்கு அருளப்பட வில்லை. "அவர் இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால்" என்று சுவிசேஷம் கூறுகிறது (யோவான். 7:39). "பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்குண்டாயிருந்த **மகிமையினாலே** இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் **மகிமைப்படுத்தும்**" என்று ஆண்டவர் ஜெபித்தார். அவர் சரீரத்தில் வருமுன் "தேவனுடைய ரூபமாயிருந்தார்" சரீரத்தில் வந்தபோது தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார். அவர் சரீரத்தில் வருமுன் தேவஜசுவரியமுள்ளவராயிருந்தார். சரீரத்தில் வந்தபோது நமது நிமித்தம் தரித்திரரானார். அவர் பரத்துக்குப்போய் ஆதிமகிமையைத் திரும்பப் பெற்றுக் கொண்டபோது சர்வ

வியாபகமும், சர்வஞானமும், சர்வவல்லமையும், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் உள்ளவராகத் தம்மை வெளிப்படுத்திக் கிரியை செய்கிறார். அதாவது, அவர் சரீரத்திலிருந்த நாள்களில் ஒருவாறு அளவுக்குட்பட்டதாகத் தோன்றின அவரது தேவலட்சணங்கள், அவர் பிதாவினிடத்துக்குப்போய் தமக்குரிய மகிமையைத் திரும்பப்பெற்றுக்கொண்டபோது தெளிவாய் பிரகாசிக்கின்றன. அவர் சரீரத்தில் இருந்தபோது நமது இரட்சிப்புக்காக எவைகளை நிறைவேற்றவேண்டுமோ அவைகள் நிறைவேற்றினார். அவர் சரீரத்திலிருந்தபோது எவைகளைச் செய்யக்கூடாதோ அவைகளை மகிமையடைந்தபின் செய்தார். சரீரத்திலிருந்தபோது சபையை ஸ்தாபிப்பேன் என்றார். மகிமையடைந்தபோது பரிசுத்தாவியை அனுப்பி சபையை ஸ்தாபித்தார். சரீரத்திலிருந்தபோது பலஸ்தீனா தேசத்தில்மாத்திரம் இருந்தார். "ஆண்டவரே நீர் இங்கே **இருந்தீரேயானால்** என் சகோதரன் மரித்திருக்கமாட்டான்" என்று பெத்தானியாவூர் மார்த்தாள் புலம்பி அழுதாள். மகிமையடைந்த பின் "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார். அப்படியே அவர் எங்கும் நிறைந்தவராய் ஏககாலத்தில் எல்லாரையும் சந்தித்து இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். அவர் சரீரத்தில் இருந்த நாள்களில் முற்றிலுமே ஞானமற்றவரும் அறிவீனருமாயிருந்தார் என்று நாம் சொல்லக்கூடாது. மனுஷருள்ளத்தில் இருப்பதை அறிந்தார். தூரத்தில் நடந்த காரியத்தை அறிந்தார். ஓரிடத்தில் இருந்து கொண்டு தூரத்திலிருந்த வியாதிக்காரனைக் குணமாக்கினார். வருங்காரியங்களைத் திட்டமாய் அறிவித்தார். ஆனால் அவர் மகிமையடைந்தபின் பிதாவோடுள்ள தேவலட்சணங்களை மறுபடியும் பெற்றுக்கொண்டார். இந்த மூன்று காலங்களையும் மனதில் வைத்துக்கொள்வது நல்லது நாம் சொல்லிக் கொண்டுவந்த விஷயத்தைவிட்டு வெகுதூரம் போய்விட்டோம். ஆகையால் இங்கே அதை நிறுத்துவோம்.

முன் நாம் கவனித்தபடி சுவிசேஷம் நமக்கு அவருடைய தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் காண்பித்தபோதிலும், அவ்வாறு பிரித்துப் படிப்பது நமக்குப் பிரயோஜனமாயிருந்தபோதிலும், கிறிஸ்துவை ஒரே ஆளாக நாம் ஏற்றுக்கொண்டு அவரை வணங்குவதே பாக்கியம். அப்போஸ்தலர் அவரை தேவனாகவும் மெய்யான மனுஷனாகவும் அறிந்திருந்தபோதிலும், அவர்களுடைய விசுவாசத்துக்கு அந்த இருதன்மைகள் யாதொரு குழப்பத்தையும் உண்டாக்கவில்லை. அறிவாளிகளுக்கு இடறலாயிருப்பது விசுவாசிகளுக்கு ஆனந்தபாக்கியமாயிருக்கிறது. அவர்கள் அவரை எத்தனை பேரால் அழைத்தாலும் அதிலே அவர்களுக்கு இடறல் ஒன்றுமில்லை. அவர்கள் தேவகுமாரனை

தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர்மூலமாய் பிதாவினிடத்தில்சேரும் சிலாக்கியத்தைப் பெற்று நாளுக்கு நாள் உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலமடைந்தார்கள். தங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய ஐக்கியத்தினால் பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள இரகசியத்தை தங்கள் ஆவியில் அறிந்து ஆனந்த பரவஸமடைந்தார்கள். மாம்சத்தில் வெளிப்பட்ட ஆண்டவரை மனுஷனென்றும் தேவன் என்றும் இரண்டு ஆள்களாகப் பேசாமல், அவருக்கு இரண்டு சித்தம், இரண்டு நினைவுகள், இரண்டு வல்லமைகள், இரண்டு குணங்கள் உண்டென்றும் கூறாமல், ஒரே கிறிஸ்துவாகத் தொழுது சேவித்தார்கள். அவரைக் குறித்து எப்படிப் பேசலாம் என்று அவர்கள் திகைக்கவில்லை. வேதசாஸ்திர ஒழுங்குக்கு விரோதமாயிருக்குமோ என்று அவர்கள் பயப்படவில்லை. அவரைப் பூரணமான ஒரே ஆண்டவராக அவர்கள் ஏற்றுக்கொண்டதால் தெய்வீகத்துக்கு ஏற்ற வார்த்தைகளை மனுஷீகத்துக்கும், மனுஷீகத்துக்கு அடுத்த வார்த்தைகளை அவரது தெய்வீகத்துக்கும் அச்சமின்றி உபயோகித்திருப்பதைக் காணலாம். ''**தேவன்** தம்முடைய **சுய இரத்தத்தினாலே** சம்பாதித்துக்கொண்ட தமது சபை'' என்றும், ''மகிமையின் **கர்த்தரை** அவர்கள் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்களே'' என்றும் சொல்லியிருக்கிறது (அப். 20:28; 1 கொரி. 2:8). இங்கே சிலுவையில் அறையப்படுவதும், இரத்தம் சிந்துவதும் மனுஷனுக்குரியதே அல்லாமல் தேவனுக்குரியதல்ல. அப்படியிருந்தும் கிறிஸ்துவை மனுஷன் என்றும், தேவன் என்றும் பிரிக்காமல் ஒரே கர்த்தராக அவர்கள் அறிந்திருந்ததால் அவ்வாறு சொன்னார்கள். இரத்தம் சிந்துதல் இல்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை. கிறிஸ்து வெறும் மனுஷனாகமாத்திரம் இருந்தால் அந்த இரத்தத்தால் என்ன பலனுண்டு? இரத்தச்சாட்சிகள் பட்ட பாடுகளும் அவர்கள் சிந்தினரத்தமும் கொஞ்சமல்ல. அந்த ரத்தத்தால் அவர்கள் பாவமாவது மற்றவர்கள் பாவமாவது நீங்கினதுண்டா? இவரைக் குறித்தோ: ''தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'' என்று சொல்லியிருக்கிறது (1 யோவான் 1:7). இவர் மனுஷனாகமாத்திரமல்ல **தேவ மனுஷனாகச்** சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் சிந்தினார். அவருடைய தெய்வீகத்தினாலேயே அவருடைய இரத்தம் விலையேறப்பெற்றது. இதை ஏற்றுக்கொள்ள மனமில்லை யென்றால் அவர் மனுஷனாகமாத்திரம் பாடுபட்டார் என்றும் தெய்வீகம் விலகிக்கொண்டது என்றும் சொல்லவேண்டியதாகும்.

ஆண்டவர்தாமே சொன்ன வார்த்தைகளிலும் இந்தக் குறிப்பைக் காணலாம். அவருடைய மனுஷீகத்தை **தெய்வீக** பேரால் அழைத்தது அப்போஸ்தலருடைய அறியாமை என்று

நாம் வைத்துக்கொண்டாலும், கிறிஸ்துதாமே அப்படிப் பேசும்போது என்ன சொல்லுகிறது? ''பரலோகத்தில் இருக்கிறவரும் பரலோகத்தில் இருந்து இறங்கினவருமான **மனுஷகுமாரன்**'' என்றும் "**மனுஷகுமாரன்** தாம் முன்னிருந்த இடத்துக்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படி இருக்கும்?'' என்றும், ''பூமியிலே பாவங்களை மன்னிக்க **மனுஷகுமாரனுக்கு** அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்'' என்றும், **மனுஷகுமாரன்** தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்" என்றும் சொல்லியிருக்கிறார். **மனுஷகுமாரன்** என்பவர் மரியாளிடம் பிறந்தபோது உண்டானவர். மேற்கூறிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களோ **கடவுளுக்குரியவை.** பரத்திலும் பூமியிலும் ஏககாலத்தில் இருக்கக்கூடியவர் யார்? பூமிக்கு வருமுன் தாம் முன்னிருந்த இடம் என்பது யாருக்குரியது? கடவுளேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? வானத்தின் மேகங்கள்மேல் தமது தூதர்களோடு வந்து உலகத்தை நியாயந்தீர்க்கத் தகுந்தவர் யார்? இவைகள் யாவும் நிச்சயமாகவே கடவுளுக்குமாத்திரம் உரிய இலட்சணங்கள். அப்படியிருக்க, நமதாண்டவர் அவைகளை மனுஷகுமாரனுக்கு உரிய இலட்சணங்களாகப் பேசுகிறாரே. ஆகையால், அப்போஸ்தலர் அவருடைய இருதன்மைகளையும் பிரித்துப்பேசாமல் அவரை ஒரே கர்த்தராக நினைத்துப் பேசினதுபோலவே, நமதாண்டவரும் தம்மை தேவன், மனுஷன் என்று வித்தியாசம்பாராட்டாமல் ஒரே ஆளாகவே பேசியிருக்கிறார். அதுபோலவே நாமும் அவரை ஏற்றுக்கொண்டு நமஸ்கரிக்கவேண்டும்.

அவரை கடவுள் என்றும், மனுஷன் என்றும் இரண்டு ஆள்களாகப் பிரித்துப் பேசினால் நமது விசுவாசத்துக்குப் பெருங்குழப்பம் உண்டாகும். தேவன் இன்னும் மனுஷனுக்கு எட்டாத உயரத்திலேதான் இருப்பார். ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததுமாயிருக்கிற ஜீவவார்த்தை என்று சொல்வதற்கு இடமிராது. தேவனாயிருந்த ஜீவவார்த்தை மாம்சத்தில் வந்ததால் அவரோடு பேசவும் ஐக்கியப்படவும் ஏதுவாயிருந்தது. அவர் தேவமனுஷனான ஒரே கிறிஸ்துவா யிராவிட்டால் அவரது மரணத்தால் நமக்கு இரட்சிப்புப் பலிக்காது. சுவிசேஷத்தை நாம் வாசிக்கும்போது நமது இஷ்டம்போல் அவரது தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் சிந்திக்கலாம். ஆனால், அவர் ஜீவியம் முழுவதையும் தெய்வீகமும் மனுஷீகமும் பொருந்தின ஒரே ஆளாகப் படிப்பதே சரி. ஏனென்றால், ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து அவர் ஜீவிக்கவில்லை. ஒரு சமயத்தில் மனுஷனாகவும் மறுசமயத்தில் தேவனாகவும் அவர்

பிழைக்கவில்லை. இருதன்மைகளும் பூரணமாய்ப் பொருந்தின ஒரே சித்தமுடைய ஆளாகவே அவர் ஜீவித்தார். உபதேசித்தார், கிரியைகளை நடப்பித்தார். சிலுவையில் மரித்தார், உயிர்த்தெழுந்தார். இது நமக்கு விளங்காத இரகசியமாயிருந்தாலும் சுவிசேஷத்தில் நாம் காண்பது அதுவே. லாசருவை உயிரோடு எழுப்பின தேவனே சிறு குழந்தைகளை ஆசீர்வதிக்கிற தேவனாகவும் இருந்தார். கண்ணீர் மாம்சத்துக்குரியதானாலும் அது **தேவகண்ணீர்** என்பதற்குச் சந்தேகமில்லை. அவர் மாம்சத்தில் பாடுபட்டு மரித்தாலும் அது பாவிகளுக்காக **தேவன் அடைந்த பாடுகள்** என்பதற்குச் சந்தேகமில்லை. தேவன் இவ்வாறு சரீரத்தில் வராவிட்டால் அவர் நம்மேல் வைத்த அன்பையும் அனுதாபத்தையும் கிருபையையும் அறிந்துகொள்வதற்கு வேறு வழியுமில்லை. "நாம் பாவிகளாயிருக்கையில் **கிறிஸ்து** (தேவ-மனுஷன்) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8). ஆகையால் அவரை தேவன் என்றும் மனுஷன் என்றும் பிரிக்காமல் பிறப்பு முதல் கடைசிவரை அவரை இருதன்மைகளும் சேர்ந்த ஒரே கர்த்தராக ஏற்றுக்கொள்வதே சரி.

தேவன் இவ்வாறு சரீரத்தில் வந்ததினால் மனுக்குலத்தாருக்காக அவர் சம்பாதித்த மகத்தான இரட்சிப்பு இன்னதென்று முடிவாகப் பார்ப்போம். மனுஷன் தேவசித்தத்தை அறியக்கூடிய **தீர்க்கதரிசியாக**, தேவனோடு ஐக்கியப்படக்கூடிய **ஆசாரியனாக**, பூமியை ஆளும் **இராஜனாகச்** சிருஷ்டிக்கப்பட்டான். பாவத்தினால் தாழ்த்தப்பட்ட சாத்தான் மனுஷனுடைய மகிமையான நிலைமையைச் சகிக்கக்கூடாமல் அவனை வஞ்சித்துக் கெடுத்தான். மனுஷன் ஜீவனை இழந்து மரணத்துக்காளானான். தேவபுத்திரன் என்கிற சுயாதீனத்தை இழந்து சாத்தானுக்கு அடிமையானான். மனுஷன் தன் ஆளுகையை இழக்கவே சாத்தான் உலகத்துக்கு அதிபதியானான். மனுஷன் இரட்சிக்கப் படவேண்டுமானால் இழந்துபோன **ஜீவன்** திரும்ப அவனுக்குக் கிடைக்கவேண்டும். **தேவபுத்திர** பாக்கியத்தைத் திரும்ப அவன் பெற்றுக்கொள்ள வேண்டும். இழந்துபோன **ஆளுகை** திரும்ப அவனுக்குக் கொடுக்கப்படவேண்டும். இது எப்படியாகும்? ஸ்திரீயின் வித்தானவரால் தேவன் இதைச்செய்வோம் என்று வாக்குப்பண்ணினார். ஆதாம் மனுக்குலத்தின் பிரதிநிதியா யிருந்தான். அவன் விழவே அனைவரும் விழுந்தார்கள். ஆகையால், இரண்டாவதாக ஒரு மனுஷனை அவர் அனுப்பச் சித்தங்கொண்டார். இந்த மனுஷன்மூலமாக மனுஷரை மீட்டு இரட்சிக்கத் தீர்மானித்தார்.

ஆதாமுக்கொப்பான வேறொரு மனுஷனை தேவன் உண்டாக்கி சாத்தானுடைய கையிலிருந்து மனுஷரை

விடுவிக்கும்படி செய்யலாம். ஆனால் இவனும் அவனைப்போல் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு விழுந்தால் முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும். அல்லது, ஒரு தேவதூதனை மனுஷனாகும்படி செய்து அவன்மூலமாக மனிதரை இரட்சிக்கப்பார்க்கலாம், இந்த விழாத தூதன் விழுந்த தூதனோடு போராடும்போது ஒருவேளை சாத்தானால் மேற்கொள்ளப்பட்டு அபஜெயமடையலாம். அப்படியானால் மனுஷர் கதியென்ன?

ஒருவர் உண்டு. அவர் சாத்தானுடைய சகல தந்திரங்களையும் மேற்கொள்ளவும், அவனை அழித்து அவன் கையிலகப்பட்டுத் தவிக்கிற மனுமக்களை விடுவிக்கவும் வல்லவர். இவர் தேவனுடைய **குமாரன்.** இவர் பிதாவின் காரியத்தில் வைராக்கியமுள்ளவர். மனுக்குலத்தாரின் பிரதிநிதியாக வேண்டுமானால் இவர் மனுஷனாகவேண்டும். மனுஷர் விழுந்து கிடக்கிற நிலைமைக்கு வந்து, எல்லாவிதத்திலும் அவர்களுக்கு ஒப்பாகி, சோதனைகளை ஜெயித்து, சாத்தானை நிர்மூலம் பண்ணி, பாவத்தை நீக்கி, மரணத்தைப் பரிகரித்து, பூரண வெற்றி அடையவேண்டும். ஆகையால் எந்த மனுஷனாலும், எந்த தூதனாலும் ஆகாத காரியத்தைத் தாமே நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டு தேவகுமாரன் சரீரத்தில் வெளிப்பட்டார். ஆதாமின் பாவம் அவனுடைய மீறுதலுக்கொப்பாய் பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது. அந்த ஆதாம் பிந்திவந்தவருக்கு முன்னடையாளமானவன். கிறிஸ்து விசுவாசிகளுக்குமாத்திரமல்ல, எல்லா மனுஷருக்கும் இரட்சகரானார். சிலருடைய பாவங்களைமாத்திரமல்ல சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிறவரானார். ஆகையால் இவர் இரண்டாம் ஆதாம், அல்லது மனுக்குலத்தின் இரண்டாம் பிரதிநிதி என்பது உண்மை. இவ்வாறான இரட்சிப்பு விழுந்துபோன தேவதூதர்களுக்கு அருளப்படவில்லை. ஒரு தகப்பன் பாவஞ்செய்ய அவனாலே அவர்கள் கெட்டவர்கள் அல்ல. அவர்கள் தனித்தனியே பாவஞ்செய்து கெட்டார்கள். நமது காரியமோ அப்படியல்ல. ஆதாம் பாவத்தால் நாம் பாவிகளானோம். அவன் பாவஞ்செய்ய, அவன் வம்சத்தில் நாம் பிறந்ததினால், அவனைப்போல் நாம் பாவஞ்செய்யாதிருந்தும், அவன் பாவசுபாவத்திற்கும் அதன் சகல கேடுகளுக்கும் பங்காளிகளானோம். இந்தப் பரிதாபத்தைக் கண்ட தேவன் **ஸ்திரீயின் வித்தானவர்** நம்மை மீட்டு இரட்சிப்பவர் என்று அப்பொழுதே வாக்குக்கூறினார்.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு மனுஷரோடு தம்மை ஒன்றாக்கினார். அவர் நமது பிரநிதியாக வந்ததால் அவர் ஜெயம் நமது ஜெயமாகும். அவருடைய தோல்வி நமது தோல்வியாகும்.

நான் ஜெயங்கொண்டு என்பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று அவர்தாமே சொன்னபடி தோல்வியல்ல, ஜெயமே அவர் பங்காயிற்று. ஜீவகாலமுழுவதும் பிதாவுக்குப் பூரணமாய்க்கீழ்ப்படிந்து மாசற்ற பரிசுத்தராய் விளங்கினார். அவரில் பாவமில்லாதிருந்தும் நமது பாவத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு சிலுவையில் பாவத்தை ஆக்கினைகுள்ளாகத் தீர்த்தார். மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனை தமது மரணத்தினால் அழித்தார். கல்லறையில் வைக்கப்பட்டபோதிலும் மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தெழுந்தார். உன்னதத்திற்கு ஏறி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் உடையவராய் அரசாளுகிறார். அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கி, நமது மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராய், நமது பிரதிநிதியாக இவைகள் யாவற்றையும் நிறைவேற்றி மகிமையடைந்தபடியால், அவரடைந்த ஜெயம் நமது ஜெயமாயிற்று. வேறொரு மனுஷனை தேவன் உண்டாக்கி அவன் சாத்தானை ஜெயித்து நம்மை விடுவிக்கக்கூடுமானால், ஆதாம் பாவத்துக்குமுன் இருந்த நிலைமையில்தான் நாமும் இருப்போம். அல்லது, ஒரு தேவதூதன் நம்மை உயர்த்தக்கூடுமானாலும் தேவதூதனுடைய நிலைமையில்தான் நாம் இருப்போம். மனுஷனும் தேவதூதனும் தங்கள் நிலைமைக்கு மேலாக நம்மை உயர்த்தமுடியாது.

தேவகுமாரன் சரீரத்தில் வந்து தம்மை நம்மோடு ஒன்றாக்கி நம்மைக் கைதூக்கி இரட்சித்தபடியினால், நாம் மனுஷனுக்கும் தேவதூதனுக்கும் மேலாக உன்னதமான தெய்வீக நிலைமைக்கு உயர்த்தப்பட்டோம். சிரசு அடைந்த மகிமையே சரீரத்தின் மகிமையுமாயிருக்கிறது. "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" என்று சொன்னார். "நீர் எனக்குத்தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்று ஜெபித்தார். "அநேகம் பிள்கைளை மகிமையில் கொண்டுவந்து சேர்ப்பதற்காகவே" இவ்வாறு தேவகுமாரன் மனுஷகுமாரன் ஆனார். அவர் நமக்குத் தந்தருளின ஆவியினால் நமது உள்ளான மனுஷனில் அவருடைய சாயலுக்கொப்பாக மகிமையின்மேல் மகிமையடைந்து இங்கே மறுரூபப்படுகிறோம் *(2 கொரி. 3:18)*. அவர் மகிமையின்மேல் மகிமையோடு திரும்பிவரும்போது நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் *(பிலி. 3:21)*. இவ்வாறு நாம் உள்ளும் புறம்பும் பூரணமகிமையடைந்து எந்நாளும் அவரோடுகூட இருப்போம். தேவகுமாரன் மாம்சத்தில் வந்து தம்மை நம்மோடு ஐக்கியப்படுத்தினதினாலே ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை எழுப்பி உன்னதங்களிலே அவரோடுகூட

உட்காரவும் செய்தார்" என்று அப்போஸ்தலனும் சொன்னார் (எபே. 2:7).

உன்னதமான கர்த்தர் தம்மை நம்மோடு இணைத்துக் கொண்டதால் அவர் தாழ்வடைந்துபோகாமல், நாம் அவரோடுள்ள ஐக்கியத்தால் தேவமகிமையடைந்து வாழும் பாக்கியத்தைப் பெற்றோம். தேவசிங்காசனத்தை நாம் நோக்கும்போது பரிசுத்தவான்களையும் தேவதூதர்களையும் அங்கே காண்கிறோம். ஆனால் மீட்கப்பட்ட திரளான தேவனுடைய பிள்ளைகளே தேவசமுகத்தைச் சூழ்ந்து நிற்கிறார்கள். அவர்களுக்குப் பிறகே தேவதூதர்கள் நிற்கிறார்கள். தேவதூதர்களைப் பார்க்கிலும் மேலான சம்பந்தமும் மகிமையும் தேவனுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேவன் நமது சரீரத்தில்வந்து அதை மகிமைப்படுத்தினபடியால் இந்த மேலான சிலாக்கியம் நமக்குக் கிடைத்தது. நம்மைப்போல் கிறிஸ்துவுடனேகூட தேவமகிமையைப் பெற்றுக்கொள்வதற்கு உடன் சுதந்தரராயிருக்கும் சிலாக்கியம் எந்தத் தூதனுக்கும் கிடையாது. ஏனென்றால், தேவதூதர்கள் எவ்வளவு மேன்மையுள்ளவர்களாயிருந்தாலும் நம்மைப்போல் கிறிஸ்துவின் சரீரத்தோடு இணைக்கப்பட்டவர்கள் அல்ல. தேவன் அவர்களை நமக்குப் பணிவிடை செய்யும் பணிவிடை ஆவிகளாயிருக்கும்படி ஏற்படுத்தினார். இவ்வாறு நாம் தேவதூதர்களுக்கும் மேலான பதவியில் உயர்த்தப்பட்டிருக்கும்போது "நான் தூதனாக வேண்டும்" என்று கீதம் பாடுவது சரியோ?

ஆர்தர் பீயர்சன் என்னும் வேதபண்டிதர் சொன்ன ஒரு சரித்திரம் நாம் சிந்திக்கிற விஷயத்துக்கு ஏற்ற திருஷ்டாந்தம். அமெரிக்கா தேசத்தில் எல்லாராலும் மதிக்கப்பெற்ற மேன்மைதங்கிய ஒரு சீமான் இருந்தார். அவர் அத்தேசத்தின் வடபாகத்தில் சென்று செவ்விந்தியரில் ஒருபெண்ணைக் கண்டு, அவள்மீது பிரியமுற்று, அவளை விவாகம்செய்துகொண்டார். கல்வியும் நாகரீகமற்ற அப்பெண்ணைத் தமது பட்டணத்துக்கு அழைத்துவந்தார். தாம் தனவானாயிருந்தபடியால் தேர்ந்த ஆசான்களை ஏற்படுத்தி அவளுக்கு ஆங்கிலம், சித்திரவேலை, சங்கீதம் முதலான அறிவை ஊட்டினார். ஆரம்பத்தில் அவளை அற்பமாக எண்ணின மேல் வகுப்பார் தங்கள் சபைசங்கத்தில் அந்தச் சீமானை ஏற்றுக்கொண்டதுபோலவே அவளையும் மரியாதையுடன் அங்கீகரித்தார்கள். அவர் அந்தப்பெண்ணை விவாகம் செய்ததினாலே அவளுடைய தாழ்வில் அவர் தாழ்வடைந்து போகாமல் தம்முடைய உயர்வுக்கு அவளை உயர்த்தக்கூடியவரானார். நமதாண்டவர் மனுஷனாகித் தம்மை நம்மோடு ஒன்றாக்கின இரகசியம் இதுபோலவே. அவர் நமது பாவத்தால் மேற்கொள்ளப்பட்டு நம்மைப்போல் கெட்டுப்

போகாமல், மனுஷனுக்கும் தேவதூதர்களுக்கும் மேலான உன்னத தேவபதவிக்கு நம்மை உயர்த்த வல்லவரானார்.

இந்த இரகசியம் இப்பொழுது பூரணமாய் நமக்கு விளங்காவிட்டாலும் வரும்காலங்களில் விளங்கும் என்பதைக் குறித்து: "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை **வருங்காலங்களில்** விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்று அப்போஸ்தலன் எழுதினார் *(எபே. 2:6,7)*. இங்கே நாம் கிறிஸ்துவுக்கு நம்மைப் பூரணமாய் ஒப்புவித்து, அவர் சமூகத்தில் இடைவிடாமல் ஜீவித்து, எப்பொழுதும் அவருக்குப் பிரியமாய் நடந்து ஊழியம் செய்துவந்தபோதிலும், நமக்குள் இன்னும் பாவங்கள் குறைவுகள் காணப்படுவது நிச்சயம். இதை நினைத்து வேதனைப்பட்டுப் புலம்புகிறோம். இந்தச் சரீரத்தில் குடியிருக்கிறவரை அந்த மகிமையான காலத்தை எதிர்நோக்கித் தவிக்கிறோம். நித்தியதேவனுக்குக் காலம் என்பதில்லை. இனிவரும்காலம் அவருக்குத் தற்காலமாயிருக்கிறது. நாம் குறைவுள்ளவர்களா யிருக்கும்போதே கிறிஸ்துவுக்குள் நம்மை நிறைவுள்ளவர்களாக அவர் காண்கிறார். இனி வரும்காலம் இப்பொழுதே அவர் கண்முன்னிருக்கிறபடியால், இனி நாம் பெற்றுக்கொள்ளப் போகிற மகிமையை இப்பொழுதே நாம் பெற்றிருப்பதாக அவர் காண்கிறார். தேவனுடைய அளவில்லாத கிருபையின் ஐசுவரியம், நமது இரட்சிப்பில் பூரணமாய் விளங்கும் அந்தக் காலத்தைக் காண தேவதூதர்களும் ஆவலோடு காத்திருக்கிறார்கள். நாம் குற்றமற்றவர்களும், மாசற்றவர்களும் பரிசுத்தமுள்ளவர்களுமாக பிதாவுக்குமுன் நிறுத்தப்படும்போது, தேவனுக்குள் ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்ததும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் அவர் கொண்டிருந்த அநாதி தீர்மானமுமாகிய இந்த **ஐக்கியத்தின்** இரகசியத்தை உன்னதங்களிலுள்ள துரைத்தனங்கள், அதிகாரங்கள், வல்லமைகள், கர்த்தத்துவங்கள் என்று அழைக்கப்பெற்ற பல வகுப்பாரான தேவதூதர்கள் வெளிப்படையாகக் கண்டு ஆனந்திப்பார்கள். இப்பொழுது குறைவுள்ளவர்களாகிய நாமும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தின் பரிபூரணத்தை இருக்கிறபடியே கண்டு பரவசமடைவோம்.

அந்த மகிமையில் நமக்குப் பங்கு கிடைக்கவேண்டுமானால் இப்பொழுது நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான காரியமுண்டு. வெறும் உபதேச அறிவு நம்மை இரட்சிக்காது. அனுபவமே நமக்கு ஆசீர்வாதம். ஐக்கியம் என்பதில் இருபாகம் உண்டு. கிறிஸ்து மனப்பூர்வமாய்த் தம்மை நம்மோடு

ஒன்றாக்கியிருந்தும் நாம் அவரை மறந்து அவருக்குத் தூரமாய் ஜீவித்தால் அவருக்கும் நமக்கும் ஐக்கியமிராது. ஒரு மனுஷனை நாம் எவ்வளவோ நேசித்தும் அந்த மனுஷன் நம்மைச் சற்றும் கவனிக்காதேபோனால் அவனுக்கும் நமக்கும் ஐக்கியம் இல்லை. கிறிஸ்து மனப்பூர்வமாய் என்னைத் தேடிவந்து என்னில் அன்புவைத்ததுபோல, நானும் அவரை என் முழு இருதயத்தோடும் தேடி என் இருதய அன்பை அவருக்குக் கொடுக்கவேண்டும். மீட்பின் இரகசியம் முழுவதும் இந்த ஐக்கியத்திலேயே அடங்கியிருக்கிறது. இரட்சண்ய மகத்துவமும் மேன்மையும் கிறிஸ்துவுக்குள்ளான இந்த ஜீவனுள்ள ஐக்கியத்திலே நிலைநிற்கிறது. திராட்சச் செடியும் கொடிகளும் என்ற உபமானத்தால் நமது ஆண்டவர் போதித்த முக்கியமான போதனையும் இதுதான். விக்கிரகத்தைப்போல் கிறிஸ்துவை ஒரு மேடையில்வைத்து வணங்குவது கிறிஸ்துமார்க்கமல்ல. செடி, கொடியோடும் கொடி செடியோடும் சாரத்தினால் இணைக்கப் பெற்று பிழைப்பதுபோல், கிறிஸ்து நமக்குள்ளும் நாம் அவருக்குள்ளும் தேவாவியினால் இணைக்கப்பெற்றுப் பிழைக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். மரத்தின்**வேர்** பூமிக்குள் மறைந்திருக்கிறது; அதுவே பிதா. அடிமரம் கண்ணுக்குக் காணப்படுகிறது; அதுவே மாம்சத்தில் வெளிப்பட்ட குமாரன். கிளைகள் மரத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன; அதுவே விசுவாசிகள். சாரம் வேரிலிருந்து புறப்பட்டு மரத்தின் வழியாகச் சென்று கிளைகளைப் பிழைப்பூட்டுகிறது. அதுவே தேவ ஆவி. "பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்ற விண்ணப்பத்தால் இவ்வாக்கியம் தெளிவாகிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்திருப்பது நமக்கு மரணமே. நாம் எப்படி ஜீவித்தால்தான் என்ன? ''இயேசுவே இரட்சியும்'' என்று சொல்லிவிட்டால் போதும் என்கிற தப்பெண்ணத்தை கட்டோடே விட்டுவிடவேண்டும்.

மனுக்குலமனைத்துக்கும் பிரதிநிதியாகிய ஆதாமுடைய சந்ததியில் நாம் பிறந்ததினால் அவனுடைய பாவத்துக்கும், அதனால் விளைந்த சகல கேடுகளுக்கும் உரியவர்களானோம். ஆதாமுக்கும் நமக்கும் சம்பந்தமில்லாதிருந்தால் அவனுடைய பாவத்துக்கும் நமக்கும் சம்பந்தமிராது. நாம் கெட்டதற்குக் காரணம் ஆதாமோடுள்ள **ஐக்கியமே**. நாம் இரட்சிக்கப்பட வேண்டுமானால் ஆதாமுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் அறுபடவேண்டும். நம்மைக் கைதூக்கி இரட்சிக்கும்படி வந்த மனுக்குலத்தின் இரண்டாம் பிரதிநிதியாகிய கிறிஸ்துவோடு நாம் இணைக்கப்படவேண்டும். சாவுக்கேதுவான விருட்சமாகிய ஆதாமிலிருந்து நாம் பிரிக்கப்பட்டு ஜீவவிருட்சமாகிய

கிறிஸ்துவில் ஒட்டப்படவேண்டும். **மனந்திரும்புதல்** ஆதாமோடு நமக்குள்ள சம்பந்தத்தை அறுத்துவிடுகிறது. **விசுவாசம்** இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவோடு நம்மை இணைக்கிறது. இம்மாறுதலை நமதாண்டவர் **மறுபிறப்பு** என்று அழைக்கிறார். முதல் பிறப்பு மாம்சபிறப்பு; இது ஆதாமோடு சம்பந்தப்பட்டது. மறுபிறப்பு ஆவிக்குரியது; இது கிறிஸ்துவோடு நம்மைச் சம்பந்தப்படுத்துகிறது. கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக் கொள்ளும் நிமிஷத்தில் இந்த மறுபிறப்பு நமக்குள் உண்டாகும். இந்த மறுபிறப்பினால் நாம் சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு விடுதலையாகி தேவனுடைய பிள்ளைகளாகும் சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அந்தகார இராஜ்யத்திலிருந்து நீங்கலாகி அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம். தேவனுடைய பரிபூரணம் நிறைந்த கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, அவரை அறிகிற அறிவிலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் வளர்ந்து, உள்ளான ஆவியில் நாளுக்குநாள் மறுரூபமடைகிறோம். நமது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது அவருடைய வருகைக்காக ஆவலோடு காத்திருக்கும் நமது **சரீரத்தை** ஒரு இமைப்பொழுதில் தம்முடைய மகிமையான சரீரத்துக்கொப்பாக மறுரூபமாக்கி, நித்தியமகிமையிலே தம்மோடுகூட எந்நாளும் ஜீவித்து அரசாளும்படி கிருபை செய்வார். தேவன் சரீரத்தில் வெளிப்பட்ட இரகசியமும் பலனும் இதுவே.

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென்" *(வெளி. 1:6).*

25
பரிசுத்த ஆவியானவர்
The Holy Spirit

கர்த்தராகிய இயேசு பிதாவின் ஆதி வாக்குத்தத்தம். ஸ்திரீயின் வித்தால் குறிக்கப்பட்டவர் அவரே. மாம்சத்தில் வெளிப்படுவதற்கு முன்னும் உலகத்தில் இருந்தார். விசுவாசிகளுக்குத் தம்மைப் பலவகையாய் வெளிப்படுத்தி அவர்களை நடத்தினார். ஆகிலும், அவர் மாம்சத்தில் வந்ததற்கும் பழைய ஏற்பாட்டில் விசுவாசிகளுக்குத் தம்மை வெளிப் படுத்தினதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. **பரிசுத்த ஆவியானவரும்** பிதாவின் வாக்குத்தத்தமே. இவர் பெந்தெகொஸ்தில் வந்ததற்கு முன்னும் உலகத்தில் இருந்து விசுவாசிகளுக்குள் கிரியை நடப்பித்து வந்தார். ஆகிலும் பெந்தெகொஸ்தில் அவர் வந்ததற்கும் அதற்குமுன் அவர் செய்த கிரியைகளுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

ஆவியானவரின் கிரியைகளைப் பழைய ஏற்பாட்டில் ஏராளமாகக் காணலாம். ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார் *(நியா. 6:34)*. ஒத்னியேல்மேல் வந்தார் *(நியா. 3:10)*. சிம்சோன்மேல் பலமாய் இறங்கினார் *(நியா. 15:14)*. யோசுவா ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டார் *(உபா. 34:9)*. பெசலெயேலைக் கூடாரவேலை செய்வதற்கு வேண்டிய ஞானத்தினாலும் புத்தியினாலும் தேவாவியானவர் நிரப்பினார் *(யாத். 35:33)*. விசுவாசிகளை ஆவியானவர் நடத்தினார் *(சங். 143:10)*. தீர்க்கதரிசிகள் ஆவியினாலே பேசினார்கள் *(நெகே. 9:30)*. தீர்க்கதரிசன ஆவி சவுலுக்கும் கிடைத்தது *(1. சாமு. 10:10)*. சுத்த இருதயத்தைக் கொடுத்தார் *(சங். 51:10)*. ஆவியின் பலத்தினாலே நிரப்பினார் *(மீகா 3:8)*. இதைப்போல் ஆவியானவரின் கிரியைகளைப் பழைய ஏற்பாட்டில் ஏராளமாகக் காணலாம். ஆகிலும் ஆவியானவரைப் பற்றிய **பிதாவின் வாக்குத்தத்தம்** என்பது முற்றிலும் வேறே. பெந்தெகொஸ்தே ஆவியானவருக்கு முன், முந்தினவைகள் எவ்வளவோ குறைவானவைகள். இந்த

வாக்குத்தத்தத்தின் ஆவியானவர் திட்டமான மேலான ஆசீர்வாதத்துக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தபோதிலும் அவர் மாம்சத்தில் மனுஷனாக வெளிப்பட்டது எவ்வளவு பெரிய சம்பவமோ, அதுபோலவே ஆவியானவர் விசுவாசிகளில் பூர்வகாலத்தில் கிரியை செய்திருந்தபோதிலும் அவர் பெந்தெகொஸ்தே நாளில் வந்தது பெரிய சம்பவமே. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்" என்று ஏசாயா தீர்க்கன் கிறிஸ்து உலகத்தில் பிறப்பதைக்குறித்துத் திட்டமாகச் சொன்னதுபோல, யோவேல் தீர்க்கனும் "அந்நாள்களுக்குப்பின்பு மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்று இந்தப் பெந்தெகொஸ்தே நாளைக்குறித்தே முன்னறிவித்தார்.

பிதாவின் வாக்குத்தத்தமாகிய கிறிஸ்துவின் பிறப்பை தீர்க்கதரிசிகள் எதிர்பார்த்ததுபோல, பிதாவின் வாக்குத்தத்தமாகிய ஆவியானவரின் வரவை தீர்க்கதரிசிகள் எதிர்பார்த்தார்கள். தாயின் வயிற்றிலிருந்தபோதே ஆவியினால் நிறைந்திருந்த யோவான்ஸ்நானன் ஆவியானவரின் விசேஷித்த வருகையை முன்னறிவித்து, கிறிஸ்துவின்மூலமாய் அவர் அருளப்படுவாரென்றும் பிரசங்கித்தார். கிறிஸ்துதாமே **ஆவியானவரைக் குறித்து,** தாம் மகிமையடைந்த பின்பு பிதா அவரை அனுப்புவதாகச் சொன்னார். அந்தப்படியே, "அவர் தேவனுடைய வலது கரத்தினால் உயர்த்தப்பட்டு பிதா அருளிய **வாக்குத்தத்தத்தின்படி** பரிசுத்த ஆவியைப்பெற்று நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" என்று பேதுரு சொன்னார் *(அப். 2:33)*. இந்த வித்தியாசத்தை நாம் கவனிக்கவேண்டும். வித்தியாசம் என்ன? பூர்வகாலங்களில் விசுவாசிகளுக்குத் தம்மைப் பற்பல சமயங்களில் வெளிப்படுத்தின **கிறிஸ்து,** மாம்சத்தில் பிறந்து பிரத்தியட்சமாய் மனுஷரோடு சஞ்சரித்ததுபோல, முன்னே பற்பல சமயங்களில் பலவிதமாய் விசுவாசிகளிடத்தில் கிரியை நடப்பித்த **ஆவியானவர்** தேவனுடைய பிள்ளைகளின் இருதயங்களில் இடைவிடாமல் என்றென்றைக்கும் வாசம் பண்ணும்படி பிதாவினால் அனுப்பப்பட்டு பெந்தெகொஸ்தே நாளில் பூரணமாய் வந்திறங்கினார். நாம் ஆவியானவர்மூலமாய் தேவன் நமக்குள்வந்து வாசம்பண்ணும் ஆலயங்களானோம். "என் பிதா வாக்குப்பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன்; நீங்கள் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் **வாக்குத்தத்தம்** நிறைவேறக் காத்திருங்கள்" என்று இரட்சகர் சீஷர்களுக்குத் திட்டமாய்ச் சொல்லியிருந்தார். அந்தப்படியே அவர்கள் ஆவலோடு காத்திருந்து **பிதாவின் வாக்குத்தத்தமாகிய** பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொண்டார்கள். "தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் யோவான்

ஸ்நானனிலும் பெரியவனாயிருக்கிறான்'' என்று இரட்சகர் சொன்னது புதிய ஏற்பாட்டின் மேன்மையான ஆசீர்வாதத்தைக் குறித்தே. பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மை மனுஷருக்குப் பலவிதமாக வெளிப்படுத்துகிறவராயிருந்தார். புதிய ஏற்பாட்டில் தேவன் தாமே ஆவியானவர் மூலமாய் மனுஷருக்குள் வந்து **வாசம்பண்ணுகிறார்** (யோவான் 14:23). பிதாவின் வாக்குத் தத்தத்தை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக மூன்று காரியங்களைக் கவனிப்போம்.

I. பரிசுத்த ஆவியானவர் யார்?

ஆவியானவர் சிலர் நினைக்கிறபடி வெறும் சக்தியல்ல. நம்முடைய இரட்சகர் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிப் பேசினபோது அறிவும் உணர்வுமற்ற ஒரு வஸ்துவைப் பேசுகிறதுபோல் பேசாமல், அவர் என்றும் வருவார், வாசம் பண்ணுவார், போதிப்பார், நடத்துவார் என்றும் பேசியிருக்கிற படியால் ஆவியானவர் **ஒரு ஆளென்று அறிகிறோம்.** அதுமாத்திரமல்ல, அவருடைய இலட்சணங்களையும் கிரியைகளையும் கவனிக்கும்போது அவரை ஜீவனுள்ள ஆண்டவரென்றே சொல்லவேண்டும். அவர் அன்பின் ஆவியானவர் என்றழைக்கப்படுகிறார் (ரோமர் 15:30). ஒரு பாவியை இரட்சிக்கும்படி எவ்வளவோ காலமாய் பொறுமையோடு போராடி வருகிறார். அவர் துக்கப்படக் கூடியவராகவுமிருக்கிறார் (எபே. 4:30). நாம் அவரிடத்தில் அதிகப் பயபக்தியாய் நடந்துகொள்ள வேண்டும். வெறும்சக்தி அல்லது வல்லமைக்கு இந்தக் குணங்களேது?

அவர் சபையில் நடத்திவரும் கிரியைகளையும் பாருங்கள். **அவர் சபைகளோடு பேசுகிறார்.** "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெளி. 2:7). **ஊழியத்துக்கு ஆள்களைப் பிரிக்கிறார்.** "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்" (அப். 13:2). தேவ ஊழியத்துக்கு ஆள்களைத் **தெரிந்து கொள்ளுவதில்** நாம் குற்றவாளிகளாகாதபடிக்கு நமக்கு எவ்வளவோ ஜெபசிந்தையும் **ஆவியானவரின் நடத்துதலும்** அவசியமென்று இதினாலே அறிகிறோம். **ஊழியர்களுக்கு வேலை கொடுத்து அனுப்புகிறார்.** "ஆவியானவர் நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்" (அப். 8:29). பேதுருவைப்பார்த்து: "இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள், நீ எழுந்து இறங்கி ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்" (அப். 10:19,20). **ஊழியர்களை தடுத்தாள்கொள்ளுகிறார்**'' போ, போக

வேண்டாம்; இதைச்செய், செய்யவேண்டாம் என்று சொல்லக் கூடிய அதிகார முடையவராயிருக்கிறார். "அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே **தடைபண்ணப்பட்டு** மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப்போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்'' *(அப். 16:6,7)*. இப்படித்தடுத்த ஆவியானவரே வேறே வேலையை அவர்களுக்கு வைத்திருந்தார். அவர்கள் பிலிப்பிப் பட்டணத்திற்குப் போகவும் அங்கே ஒரு சபை உண்டாகவும் செய்தார். நம்முடைய இஷ்டம்போல் இடத்தையும் வேலையையும் தெரிந்துகொண்டு, ஆவியானவரை உதவிக்குக் கூப்பிடுகிறது சரியல்ல. நாம் செய்யவேண்டிய வேலை எதுவென்பதையும், அந்த வேலையைச் செய்யவேண்டிய இடம் இன்னதென்பதையும் அவரே நமக்குக் காட்டவேண்டும். அங்கேதான் ஆசீர்வாதமுண்டாகும்.

வரங்களைப் பகிர்ந்து கொடுப்பதும் அவர்தான் *(1 கொரி. 12:11)*. பலவித வரங்களுண்டு. மேலான வரங்களை நாம் நாடுவது நல்லது. ஆயினும் நாம் நினைக்கிறபடியல்ல, ஆவியானவரே தமது இஷ்டப்படி அவனவனுக்கு வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். நாம் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவும் ஒருவரையொருவர் நேசித்துக் கனப்படுத்தவும், ஊழியங்களையும் வரங்களையும் வித்தியாசப்படுத்தி வைத்திருப்பது ஆவியானவருடைய சித்தம். மற்றவர்களிடத்தில் நம்மைப்பார்க்கிலும் விசேஷித்த வரங்களை நாம் காணும்போது சந்தோஷப்பட்டு தேவனைத் துதிக்க வேண்டுமேயன்றி பொறாமை கொள்ளக்கூடாது. பொறாமையடைவோமானால் ஆவியானவருக்கு விரோதமாய்ப் போராடுகிறவர்களாயிருப்போம். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வரம் இன்னதென்று அறிந்து, அதை விருத்திபண்ணவேண்டியது நமது கடமை. புதைத்து வைக்கப்பட்ட வரங்களைக் குறித்து தேவன் கணக்குக் கேட்பார்.

பாவம் அவருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை'' என்று கிறிஸ்துவானவர் சொன்னார் *(மத். 12:13)*. பேதுரு அப்போஸ்தலன் அனனியாவைப் பார்த்து: "**பரிசுத்த ஆவியினிடத்தில்** பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனுஷரிடத்திலல்ல, **தேவனிடத்தில்** பொய் சொன்னாய்'' என்றார் *(அப். 5:3,4)*. இதுமாத்திரமல்ல, இன்னும் ஆவியானவர் எல்லாவற்றையும் அறிகிறவராகவும், நினைப்பூட்டுகிறவராகவும், போதிக்கிறவராகவும், வேண்டுதல் செய்கிறவராகவும் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறவராகவும், சாட்சி கொடுக்கிறவராகவும்

சொல்லப்பட்டிருக்கிறார். இவைகளெல்லாவற்றையும் பார்க்கும் போது ஆவியானவர் வெறும் சக்தியல்ல, ஜீவனுள்ள ஆண்டவ ரென்று தெரியவில்லையா? மேலும் ஆவியானவரை ஒரு **ஆளாக** அறிகிறதற்கும் அவரை வெறும் **சக்தியாக** எண்ணுகிறதற்கும் இருக்கிற வித்தியாசம் மிகுதி. நீராவி, மின்சாரம் இவைகளின் வல்லமை எப்படிப்பட்டதென்று நாம் அறிந்திருக்கிறோம். அந்தச் சக்தியின்மூலமாய் எவ்வளவோ ஆச்சரியமான காரியங்கள் நடந்துவருகின்றன. என்றாலும் அந்த வல்லமையை உண்டாக்குகிறவனும் அந்த வல்லமையை உபயோகிக்கிறவனும் மனுஷனே. அந்த சக்திக்கு அறிவாகிலும் உணர்வாகிலும் இல்லை. மனுஷன் தன் இஷ்டப்படி அதை ஆண்டு நடத்துகிறான்.

என்ஜின் வண்டி நீராவியின் வல்லமையினால் நிறைந்து பெரும் இரைச்சலோடுவந்து நிற்கிறது. மற்ற வண்டிகளையும் என்ஜினோடு சேர்த்து மாட்டியாயிற்று. என்றாலும் மனுஷன் நடத்துகிறவரை வண்டி ஓடமாட்டாது. நீராவியின் சக்திக்கு ஓடவேண்டுமென்கிற அறிவில்லை. நிற்கவேண்டுமென்கிற அறிவும் இல்லை. ஆவியானவரின் காரியமோ அப்படியல்ல. ஆதியில் மனுஷனுக்கு ஜீவனைக் கொடுத்தவர் அவரே. கெட்டுப்போன பாவியை மறுபிறப்பினால் உயிர்ப்பிக்கிறவரும் அவரே. இரட்சிக்கப்பட்டவர்களை பூரண ஆசீர்வாதத்திற்கு வழி நடத்துகிறவரும் அவரே. அவரை ஒரு **வல்லமை** என்றுமாத்திரம் எண்ணுகிறவன் அவரை தன் **இஷ்டப்படி** நடத்தவும் உபயோகிக்கவும் பார்க்கிறான். அவரை **ஆளாக** அறிந்தவனோ அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து தேவ ஆவியானவரே, நீர் என்னை ஆண்டுகொள்ளும், என்னை உபயோகியும், என்னை நடத்தும் என்று கெஞ்சுகிறான். அவரை ஒரு சக்தியாகமாத்திரம் நினைக்கிறவன் தான் பெற்றுக்கொண்ட சக்தியினிமித்தம் பெருமைபாராட்டுவான். அவரை தேவனாக அறிந்தவனோ அந்த மகிமையின் கர்த்தர் தன் நீச உள்ளத்தில் வந்து வாசம்பண்ணுகிறதை நினைத்து பயபக்தியும் தாழ்மையுமாய் நடந்துகொள்ளுவான்.

அனாதிகாலமாய் பிதாவோடும் குமாரனோடும் இருந்தவரும், சிருஷ்டிப்பிலும் இரட்சிப்பிலும் பிதாவோடும் குமாரனோடும் சம்பந்தப்பட்டவருமான தேவ ஆவியானவருக்குக் கொடுக்கவேண்டிய கனத்தையும் மகிமையையும் கொடுத்திருக்கி றோமா? அவரிடத்தில் நெருங்கிய சிநேகம் உண்டா? பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறதும், பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை யுண்டாவதாக என்று பாடுகிறதும், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த

ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருப்பதாக" என்று ஜெபிக்கிறதும் போதாது. பிதாவும் குமாரனும் எப்படிப்பட்டவர்களோ பரிசுத்த ஆவியானவரும் **அவ்வளவு மகிமையும் வல்லமையும் நிறைந்த தேவன்** என்கிற பூரண உணர்வு நமக்குண்டா? நாம் பிதாவையும் குமாரனையும் நினைத்து, நேசித்து, துதிக்கிறவண்ணமாய் பரிசுத்த ஆவியானவரையும் நேசித்து அவரைப் புகழ்ந்து வருகிறோமா? நம்மை அறியவும் உதவிசெய்யவும்கூடாத ஒரு சக்தியின் வசத்தில் இயேசுவானவர் தம்முடைய சபையை எப்படி ஒப்புக் கொடுப்பார்?

சபைகள் இவ்வளவு தாழ்வான நிலைமையிலிருப்பதற்கும் கிறிஸ்தவர்கள் பற்பல பாவங்களுக்கு அடிமைப்பட்டிருப்பதற்கும் காரணமென்ன? வல்லமையுள்ள ஆவியானவருக்குச் சபையில் இடமில்லாததினால் அல்லவா? சபையை நாமே நடத்தப் பார்க்கிறோம். நமது பிரியம்போல் எல்லாவற்றையும் செய்கிறோம். நமக்குப் பெயர் பிரஸ்தாபத்தை நாடுகிறோம். "வாரும் தேவ ஆவி வாரும்" என்று வாயினால் பாடினாலும், போம் தேவ ஆவியே போம் என்று நம்முடைய செய்கையினால் அவரைத் துரத்துகிறோம். யூதர் தங்கள் மேசியாவைப் புறக்கணித்துப் போட்டது பெரிய பாவமே. நாம் ஆவியானவரைப் பல விதத்திலும் துக்கப்படுத்தி வருவது பாவமில்லையோ? ஆதிச்சபையின் மகத்துவம் எதினாலே? ஆவியானவர் சபையில் **பூரண ஆளுகை** செய்ததினால் தானே. நமக்குள் மரித்த ஆத்துமாக்கள் உயிரடையவேண்டுமா? உயிரடைந்த பிள்ளைகள் பெலனடைந்து கர்த்தருக்கு ஊழியஞ் செய்யவேண்டுமா? இயேசுசுவாமியின் திருநாமத்திற்கு மகிமை வரவேண்டுமா? அப்படியானால் தேவ ஆவியானவரின் **ஆளுகைக்கு** நம்மை முற்றிலுமாய் விட்டுவிடுவோமாக.

II. ஆவியானவரால் நிரப்பப்படுவதின் பலன்களெவை?

1. **மாம்சத்துக்குரியவர்களை ஆவிக்குரியவர்களாக்குகிறார்.** பரிசுத்த பவுல் கிறிஸ்தவர்களை மூன்று வகுப்பாகப் பிரித்துப் பேசுகிறார். **ஜென்ம சுபாவத்தார், மாம்சத்துக்குரியவர்கள், ஆவிக்குரியவர்கள்.** இவர்களிலே முதலாவது **ஜென்ம சுபாவத்தார்** எப்படிப்பட்டவர்கள் என்பதை விஸ்தரித்துக் காட்டுகிறார். இவர்கள் தேவனுடைய ஆவிக்குரியவைகளை அறிந்துகொள்ளமாட்டார்கள். அவைகளை ஏற்றுக்கொள்ளவுமாட்டார்கள். அவைகள் அவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றும் என்கிறார் *(1. கொரி. 2:14).* இவர்கள் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருந்தபோதிலும், ஆராதனைகளுக்கு வழக்கம் போல் வந்து பிரசங்கங்களைக் கேட்டபோதிலும். ஆவிக்குரிய சத்தியங்களை அறியவுமாட்டார்கள், ஏற்றுக் கொள்ளவு

மாட்டார்கள். ஏனென்றால், அவைகள் அவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றுகின்றன. இது ஆச்சரியமல்ல. அவர்கள் பிறந்தபடியே வளர்ந்து, வளர்ந்தபடியே இருக்கிறார்கள். ஆவியினால் உள்ளான மாறுதல் உண்டாகவில்லை. மாம்சத்தின்படி பிறந்தது மாம்சமாகவேயிருக்கும். இவர்களே ஜென்ம சுபாவத்தார்.

இரண்டாவது, **மாம்சத்துக்குரியவர்கள்.** இவர்கள் ஜென்ம சுபாவத்தாரல்ல. இவர்கள் தேவனுடைய பிள்ளைகளே. ஆவியினால் உள்ளான மாறுதலடைந்தவர்களே. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரை நேசித்து வருகிறார்கள். ஆகிலும் தங்களில் மறுபிறப்பை உண்டாக்கின ஆவியானவருக்குப் பூரணமாக இடங்கொடாமல் தங்கள் இஷ்டம்போல் நடக்கிறார்கள். ஆவியினால் ஜீவனடைந்தவர்கள் தான்; ஆகிலும் மாம்சமே அவர்களில் ஆளுகை செய்கிறது. மாம்சத்துக்குரிய இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்குச் சில குறிப்புகளை அப்போஸ்தலன் சொல்லுகிறார். 1. கொரிந்தியர் மூன்றில் காணலாம். இவர்கள் **நீடித்த குழந்தைகளாயிருக்கி றார்கள்.** சிறு குழந்தையென்றால் அது யார் குழந்தையா யிருந்தாலும் எல்லாருக்கும் பிரியமே. குழந்தையின் களங்கமற்ற முகம் எல்லாரையும் கவர்ந்துகொள்ளுகிறது. ஆனால் பத்து, இருபது, முப்பது வருஷங்களுக்குப் பின்பும் அது குழந்தை அளவாகவேயிருந்தால் மகா விகாரமாயிருக்குமே.

ஒரு ஸ்திரீ தன் இடுப்பில் ஒரு சிறுவனைச் சுமந்து கொண்டு கடைகளில் பிச்சைவாங்கிக் கொண்டிருந்தாள். அந்தச் சிறுவன் முகத்தை கவனித்தால் அவனுக்கு மீசை தாடியிருந்தது. அவனுக்கு வயது அதிகம், வயதுக்கேற்ற வளர்ச்சியோ இல்லை. பார்க்கிறதற்கு எவ்வளவு அருவருப்பு! நாம் மாம்சத்துக் குரியவர்களாயிருந்தால் நமது ஆத்மநிலைமையும் இதுபோலவே. நாம் இரட்சிக்கப்பட்டு எத்தனையோ வருஷங்களாகியும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியில்லை. மாம்சமே நம்மை ஆளுகிறது. ஆவியானவரின் ஆளுகைக்கு இடமில்லை. "சகோதரரே உங்களை ஆவிக்குரியவர்கள் என்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல் மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் **குழந்தைகள்** என்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று" என்கிறார் *(1 கொரி 3:1)*. வேறொரு அடையாளம் என்னவென்றால் அவர்களுக்குப் **பெலனில்லை.** "இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால் இப்பொழுது உங்களுக்குப் பெலனில்லை." ஆவிக்குரிய காரியங்களில் மேலான போதனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடவில்லை. மூல உபதேசமே அவர்களுக்கு ஏற்றது. காலத்தைப் பார்த்தால் ஆவிக்குரிய காரியங்களில்

வளர்ந்து பலப்பட்டு, மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டிய இவர்கள், இன்னமும் பாலைக் குடிக்கிறவர்களாவே யிருக்கிறார்கள். நோயாளிகளைப்போல இவர்களுடைய ஆவிக்குரிய ஜீரணக்கருவி பலவீனப்பட்டுப்போயிருக்கிறது. எவ்வளவு காலக் கிறிஸ்தவர்களானாலும் தாங்களே வாசித்துத் தியானிக்க, தாங்களே ஜெபிக்க, தாங்களே கஷ்டங்களைச்சகிக்க, தாங்களே சோதனைகளை ஜெயிக்கக்கூடாதவர்களா யிருக்கிறார்கள். எப்போதும் இவர்களைத் தூக்கவும், நிறுத்தவும், பாலூட்டவும் தேவஊழியர்கள் பக்கத்திலிருக்கவேண்டும். ஏனென்றால் இவர்களுக்குப் பெலனில்லை. சபையில் அநேகருடைய நிலைமை இப்படியேயிருக்கிறது.

மாம்சத்துக்குரியவர்களைப்பற்றி இன்னும் சில குறிப்புகள் சொல்லுகிறார். அதாவது **"பொறாமையும், வாக்குவாதமும், பேதகங்களும்** உங்களுக்குள் இருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்துக் குரியவர்களாயிருக்கிறீர்கள்" *(1 கொரி 3:3)*. என்ன பொறாமையோ தெரியவில்லை. கொரிந்து சபைக்கு நாம் போகவேண்டியதில்லை. ஏராளம் நமக்குள் உண்டு. நம்மை நாசம்பண்ணுகிற இந்தக் கொள்ளை நோய்க்கு ஒப்பான நோய் எது? பைத்தியமும் பொறாமையும் ஒரே வியாதிதான். பைத்தியக்காரன் முகாந்தரமில்லாமல் வழியில் போகிற மனுஷரைப் பார்த்துப் பற்கடிக்கிறான், கல்லை எறிகிறான். பொறாமைக்காரனும் அதுபோலவே காரணமில்லாமல் மற்றவர்கள்மேல் மூர்க்க மடைந்து அவர்களுக்குத் தீங்குசெய்ய நாடுகிறான். அவன் வீட்டுப் பொருளையோ, துணியையோ, போஜனத்தையோ ஒருவன் தொடாதிருந்தாலும், மற்றவன் கஷ்டப்பட்டு பாடுபட்டுச் சம்பாதித்து நன்றாய் வாழ்வதைக் கண்டால் பொறாமைக்காரன் சகிக்கமாட்டான். தனக்குப் பெரிய நஷ்டம் வந்ததுபோல் சோர்ந்துபோவான். உடனே நிந்திக்கவும் தீங்கு செய்யவும் அவதூறுபேசவும் ஆரம்பிப்பான். இப்படிப்பட்டவர்கள் மாம்சத்துக்குரியவர்களே. இந்த நோய் நல்ல கிறிஸ்தவர்கள் என்றெண்ணப்பட்டவர்களையும் விடுகிறதில்லை. மாம்சமே இவர்களை ஆளுகிறது.

வாக்குவாதம் அல்லது சண்டைகள் பொறாமையின் பலனாகவே உண்டாகிறது. அப்புறம் **பேதகங்கள்** என்கிறார். இது என்ன பேதகங்கள்? "நான் பவுலைச்சேர்ந்தவன், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்" என்பதாக அவர்களுக்குள்ளே பிரிவினைகள் இருந்தன. ஒரு சபையிலுள்ள கிறிஸ்தவர்களில் பிரிவினைகள் இருப்பது பெருந்துக்கமே. சபையை நடத்துகிற வர்களில் பிரிவினை உண்டாகும்போது, சபையின் ஜனங்கள் தங்களுக்குப் பிரியமான பக்கங்களில் சேர்ந்துகொள்ள, நாங்கள்

அவனைச் சேர்ந்தவர்களென்றும், நாங்கள் இவனைச் சேர்ந்தவர்கள் என்றும் பேச இடமுண்டாகும். சபைகளில் இப்படிப்பட்ட பிரிவினைகள் இருப்பதைப்போல் சாத்தானுக்கு அனுகூலமான வாசல் வேறொன்றுமில்லை. இக்காலத்தில் அநேக சபைகளில் இந்தப் போராட்டத்தையும் தத்தளிப்பையும் காணலாம். தேவ ஊழியத்தின்பேரிலுள்ள மதிப்பும் பிரியமும் வரவரக் குறைந்துபோகிறது. மாம்சம் எவ்வளவாகக் கிரியை செய்கிறது என்பதற்கு இதைவிடத் தெளிவான திருஷ்டாந்தம் வேண்டியதில்லை. மிஷன்களும் சபைகளும் ஆவிக்குரியதா யிருந்தால் இந்தப் பிரிவினைகளுக்கும் பேதகங்களுக்கும் இடமேது?

மூன்றாவது, **ஆவிக்குரியவர்களைப்பற்றி** பேசுகிறார் *(1 கொரி. 2:15).* **ஆவிக்குரியவர்கள்** ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டு தேவனுக்குப் பிள்ளைகளாயிருப்பது மாத்திரமல்ல, அந்த ஆவியானவரே அவர்களை முழுவதுமாய் ஆண்டு நடத்துகிறார். ஆவியானவருக்கு அவர்கள் சொந்தமாகிறார்கள். அவரே அவர்களை நிரப்பிப் போதித்து, தமக்குச் சித்தமான வழியிலே நடத்துகிறார். இந்த மூன்று நிலைமையையும் லாசருவின் சரித்திரத்தில் திட்டமாகக் காணலாம். லாசரு கல்லறைக்குள் இருந்தது ஜென்ம சுபாவத்தாரின் ஜீவனற்ற நிலைமையையும், அவனுக்குள் ஜீவன் வந்தும் கட்டப்பட்டிருந்தது. ஜீவனைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் மாம்சத்துக்குரியவர்களா யிருப்பதையும், அவன் கட்டவிழ்க்கப்பட்டு ஆண்டவரோடு கூடயிருந்து போஜனம் செய்தது ஆவிக்குரியவர்களின் பாக்கியமான ஜீவியத்தையும் காண்பிக்கிறது.

2. **தேவனை அறிந்துகொள்ளும்படி செய்கிறார்.** தேவன் ஒருவர் இருக்கிறார் என்கிற பொதுவான அறிவு எல்லாருக்கும் உண்டு. தேவன் இல்லை என்று மதியிழந்தவர்கள் தவிர வேறே யாரும் சொல்லமாட்டார்கள். இந்தப் பொதுவான அறிவு உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளின்மூலமாய் வருகிறது. "எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை" *(ரோமர் 1:20).* ஆனால் தேவன் ஒருவர் இருக்கிறார் என்கிற பொதுவான அறிவுக்கும், அந்த தேவனையே அறிந்துகொள்ளுகிற அறிவுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. தேவன் ஒருவர் இருக்கிறார் என்று அத்தேனேப் பட்டணத்தாருக்குத் தெரியும், அவர் எப்படிப்பட்ட தேவன் என்பதோ அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் பலிபீடத்தைக் கட்டி அதில் "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதிவைத்துக்

கொண்டு ஆராதித்து வந்தார்கள். அவர்கள் அறியாமல் ஆராதித்த தேவனைப்பற்றி அப்போஸ்தலன் அவர்களுக்கு அறிவிக்கவேண்டியதாயிற்று.

உலகமானது பாவத்தினாலும் சுயஞானத்தினாலும் தேவனை அறியாதிருக்கையில், தேவன்தாமே தம்மை நமக்கு வெளிப்படுத்தச் சித்தமானார். அவர் தம்மை வெளிப்படுத்தினாலன்றி நாம் அவரை அறிந்துகொள்ள முடியாது. தேவன் தம்மை நமக்குத் தமது குமாரன்மூலமாகவும் ஆவியானவர்மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். ஆவியானவராலே குமாரனை அறிகிற அறிவும், குமாரன்மூலமாய் பிதாவை அறிகிற அறிவும் உண்டாகிறது. மனுஷனுடைய ஆத்ம நிலைமையானது எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட பள்ளத்தாக்கின் உலர்ந்த எலும்புக்குச் சமானமாயிருக்கிறது. கர்த்தர் அந்த எலும்புகளைக் குறித்து: "நான் உங்களுக்குள் என் ஆவியைப் பிரவேசிக்கப் பண்ணுவேன் **அப்பொழுது நீங்கள் உயிரடைந்து நான் கர்த்தர் என்று அறிந்துகொள்ளுவீர்கள்**" என்றார். தேவ ஆவியானவர் நமக்குள் பிரவேசித்து நம்மை உயிர்ப்பித்தாலன்றி, நாம் தேவனை அறிந்துகொள்ளமுடியாது. அப்போஸ்தலன் எபேசியருக்காக ஜெபித்தபோது, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் **தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை** உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" எனறார் (எபே. 1:17).

இன்னும் ஒருவகையான தேவ அறிவு உண்டு. அதற்கு **கேள்வி** அறிவு என்று பேர். இந்த அறிவு புஸ்தகங்கள் பிரசங்கங்கள் மூலமாய் உண்டாகிறது. இதைக்கொண்டு அநேகர் தேவனைப்பற்றி மகா விஸ்தாரமாய்ப் பேசலாம். இதினாலே அவர்கள் தேவனை அறிந்தவர்கள் என்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. "தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணியும் கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிற" அநேகர் இருக்கிறார்கள். **ஜீவியத்தை மாற்றாத தேவ அறிவு பரிசுத்த ஆவியினால் உண்டான அறிவல்ல.** நம்முடைய இரட்சகர் யூதரைப்பார்த்து: ''அவரை உங்கள் தேவன் என்று சொல்லுகிறீர்கள். ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்: **அவரை நான் அறிந்து அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்**" என்றார் (யோவான் 8:55). "அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறன். அவனுக்குள் சத்தியமில்லை" (1 யோவான் 2:4). ஆகையால் எந்த மனுஷனிடத்தில் தேவனுக்குப் பயப்படும் பயமும், அவரை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற சிந்தையும் உண்டாகவில்லையோ **அவன் தேவனை அறிந்தவனல்ல.**

அவனுக்குண்டாயிருக்கிற அறிவும் பரிசுத்த ஆவியினால் உண்டான அறிவல்ல.

3. **கிறிஸ்துவை நமக்குள் வெளிப்படுத்துகிறார்.** "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது" *(1 கொரி. 12:3)*. வேறு இரண்டு வசனங்களையும் பாருங்கள். "சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" என்றும், "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்றும் இயேசுவானவர் சொன்னார் *(யோவான் 15:26; 16:14)*. நாம் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் பொழுது கிறிஸ்துவின்பேரில் முன்னில்லாத அன்பும் வாஞ்சையும் உண்டாகும். இரவும் பகலும் அவரே நம்முடைய எண்ணமும் நோக்கமுமாயிருப்பார். அவரே நம்முடைய சம்பாஷனையும் கீதமுமாயிருப்பார். ஆ, என் ஜீவனே, என் பெலனே, என் மகிமையே, என் மோட்சமே, என் இயேசுவே என்று நம்முடைய நாவு இடைவிடாமல் அவரைப்போற்றும். கிறிஸ்துவின் அருமை பெருமைகளை நமக்கு எடுத்துக் காண்பிப்பதே ஆவியானவருடைய வேலை. "அந்நாளில் நான் உங்களுக்குள் இருப்பதை அறிவீர்கள்" என்று இரட்சகர் சொன்னபடி, ஆவியானவர் வந்தபோது மறைந்துபோன கிறிஸ்து மறுபடியும் அவர்களுக்குள் காணப்பட்டார். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் ஆவியினால் நிறைந்தபோது யாரைப்பற்றிப் பேசினார்கள்? எல்லாரும் கிறிஸ்துவைப்பற்றியே சாட்சி கொடுத்தார்கள். பேதுருவின் பிரசங்கமெல்லாம் **கிறிஸ்துதான்.** ஆவியினால் நிறைந்த பவுலின் பிரசங்கமெல்லாம் **கிறிஸ்துதான்.** சில வருஷங்களுக்கு முன்னே கெஸ்விக் (Keswick) கன்வென்ஷனில் கூடியிருந்தவர்கள் ஆவியானவருடைய நிறைவுக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். ஆவியானவர் தங்களை நிரப்புவாரானால் என்னென்ன மாறுதல்கள் உண்டாகுமோ வென்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நடந்ததென்ன? மறுநாளில் வழியனுப்பக் கூடிவந்த கூட்டத்தில் அவர்கள் சொன்ன வாக்கியங்கள் எல்லாம் கிறிஸ்துவையும் அவருடைய மகிமையையும் விவரிக்கிற வசனங்களாகவேயிருந்தன.

நாம் கிறிஸ்துவை அறிந்திருக்கிற அறிவு எப்படிப்பட்டது? நாம் அவரை மாம்சத்தின்படி அறிந்திருக்கிறோமா? ஆவியினால் அவரை அறிந்திருக்கிறோமா? நாம் கிறிஸ்துவைக் குறித்து நன்றாய்ப் பிரசங்கிக்கலாம். வேதசாஸ்திர ஒழுங்கின்படி அவரை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் திறமையுமிருக்கலாம். இதினாலே நாம் கிறிஸ்துவை அறிந்துகொண்டோம் என்று எண்ணலாகாது. **பரிசுத்த ஆவியினாலேயன்றி** இந்த நாசரேத்தூரானாகிய இயேசுவை **கர்த்தர்** என்று ஒருவனும் கண்டுகொள்ளமாட்டான். ஆவியானவரின் போதனையை

இழந்துவிட்டதினாலேயல்லவா கிறிஸ்துவின் தேவதன்மையை மறுதலிக்கவும், அவரைக் குறித்துப் பலவாறாய்ப் பேசவும் மனுஷர் தலைப்பட்டிருக்கிறார்கள். நமக்குள்ளும் புறமதஸ்தரிலும் அநேகர் இயேசுவை இன்னும் அறியாதிருப்பது ஆச்சரியமல்ல. இது கற்றுக் கொடுக்கிறதினால்மாத்திரம் வந்துவிடுகிற அறிவல்ல. கல்வி மிகுந்தவர்களின் ஆராய்ச்சிக்குள் அடங்கின அறிவுமல்ல. இது பரத்தின் ஆவியானவரால் பாலகருக்கு வெளிப்படுத்தப்பட்ட அறிவு. இரட்சகரோடு இருந்திருந்த சீஷர்கள் அவருடைய அதிசயமான ஜீவியத்தையும் ஆச்சரியமான கிரியைகளையும் கண்டவர்களாயினும் அவரை அறிந்துகொள்ளக்கூடாமற் போனார்கள். "இவ்வளவு காலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீங்கள் என்னை அறியவில்லையா?" என்று அவர் அவர்களைக் கேட்கவேண்டியதாயிற்று. ஆவியானவர் வந்து அவர்களை ஆண்டுகொண்டபோதோ தங்கள் நடுவில் சஞ்சரித்தவர். கர்த்தரெனப் பிரத்தியட்சமாய் அறிந்து கொண்டார்கள். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வசிக்க எவ்வளவு இடங்கொடுக்கிறோமோ அவ்வளவுக்குத் தக்கதாகத்தான் இயேசுவின் திவ்ய மகிமையை நாம் கண்டுகொள்ளக்கூடும்.

4. **வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி செய்கிறார்.** "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" *(2 தீமோ. 3:16)*. "தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" *(2 பேதுரு 1:21)*. இப்படி வேதமானது தேவாவியினாலே உண்டாயிருக்கிறபடியால் அவருடைய போதனையின்றி நாம் வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளமுடியாது. ஒரு பூட்டை அதற்குரிய திறவுகோலால் திறக்கவேண்டும். வேதத்திலுள்ள இரகசியங்களை நமக்குத் திறந்து காட்டக்கூடிய திறவுகோல் பரிசுத்த ஆவியானவர்தான். தேவ இரகசியங்களில் அதிகமானவைகளை அறிந்துகொண்ட பவுல் என்ன சொல்லுகிறார்? "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான், நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" என்கிறார் *(1 கொரி. 2:11, 12)*.

பரிசுத்த ஆவியினால் உண்டாகாத வேத அறிவு வேதபாரகர் பரிசேயர் என்பவர்களின் அறிவுக்கு ஒப்பானது. வேதத்தைத் தாங்கள் நன்றாய் அறிந்துவிட்டதுபோல எண்ணிக்கொண்டார்கள். கர்த்தராகிய இயேசுவைப் பிடிக்க மனமில்லாமல் திரும்பிவந்த சேவகரைப்பார்த்து: "வேதத்தை

அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்" என்று திட்டினார்கள் (யோவான் 7:49). மற்றவர்களுடைய பார்வையிலும் வேதத்தில் வல்லவர்களெனவே எண்ணப்பட்டு வந்தார்கள். ஏரோது இராஜா இவர்களை அழைத்து கிறிஸ்து வானவர் எங்கே பிறப்பார் என்று விசாரித்தபொழுது "யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார், அதேனென்றால்: யூதேயாவிலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்பதாக மீகா 5:2இல் இருந்து நிரூபித்தார்கள். இவர்களுடைய வேத அறிவைக் குறித்து ஆவியானவர் கொடுக்கிற சாட்சியென்ன? "எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை **அறியாமலும்** ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்க தரிசிகளின் வாக்கியங்களை **அறியாமலும்** அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள்" என்பதே (அப். 13:27) தேவனோ அவர்களை வேதம் அறியாதவர்களென்று தீர்த்துப்போட்டார். மாம்சத்துக்குரிய இவர்கள் ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்துகொள்வதெப்படி? ஸ்தேவான் இவர்களைப் பார்த்து: உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள் என்றார் (அப். 7:51).

கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்துத்தேறிய இந்து மாணாக்கர்களில் சிலர் நம்மைப் பார்த்து: உங்கள் வேதம் எங்களுக்குத் தெரியாதோ? பைபிளை எத்தனையோதரம் வாசித்திருக்கிறோம். எங்கே கேள்வி கேட்டாலும் உத்தரவு கொடுப்போமென்று பெருமையாய்ப் பேசுகிறதுண்டு. அவர்கள் வேதம்படித்தது மெய்தான். சில சமயங்களில் வேதபரீட்சையில் கிறிஸ்தவப் பிள்ளைகளைவிட இந்து மாணாக்கர்கள் முதல்தரமான வெகுமானங்களைப் பெற்றுமிருக்கிறார்கள். இதினாலே அவர்களை வேதமறிந்தவர்கள் என்று நாம் எப்படிச் சொல்லலாம்? அவர்கள் புத்தியினால் வேத சரித்திரங்களைக் கற்றுக்கொண்டார்களேயன்றி பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டவர்களல்ல. தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பாதவர்களுடைய வேத அறிவு எப்படிப்பட்ட அறிவு? தங்களுக்காக ஜீவனைக்கொடுத்த ஆண்டவரை ஏற்றுக்கொள்ள மனதில்லமால் அவரை அசட்டை செய்கிறவர்களுடைய அறிவு எப்படிப்பட்டது? இப்படிப்பட்டவர்கள் வேத சத்தியங்களுக்கு எதிர் நியாயம் பேசத்துணிந்தார்களேயன்றி சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்படுகிறதைக் காணோம். தேவ ஆவியானவர் ஒருவனுக்கு வேதம் போதித்தால் இப்படிப் போதிக்கமாட்டார். "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்;

அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிற வைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்" *(1 கொரி. 2:4).*

நமக்குள்ளும் வேதத்தில் நிபுணரென்றெண்ணப்படுகிறவர் கள் இல்லையா? பரீட்சையில் தேறி அநேக வெகுமானங்களைப் பெற்றவர்களுண்டு. நம்முடைய அறிவுக்குத்தக்கபடி ஜீவிக்கி றோமா? எவ்வளவு மீறுதல்கள்? எவ்வளவு பாவங்கள்! தேவனுக்கு முன்பாக அதிக வெட்கத்தோடு அறிக்கை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். இயற்கை அறிவுக்கும் ஆவியானவராலுண்டாகும் அறிவுக்கும் வித்தியாசம் இதுதான். பரிசுத்த ஆவியினால் நாம் போதிக்கப்படும்பொழுது தேவனுடைய இரகசியங்களை நாம் அறிந்து கொள்ளுகிறது மாத்திரமல்ல, அறிந்துகொண்ட சத்தியங்களுக்குக் கீழ்ப் படிகிறவர்களாயுமிருப்போம். பரிசுத்த ஆவியின் போதனையும் **பரிசுத்த ஜீவியமும்** சேர்ந்தே வரும். நம்முடைய ஜீவியத்தில் மாறுதலையுண்டாக்காத வேத அறிவு பரிசுத்தாவியினால் உண்டானதல்ல. மேலும் சொற்பகாலம் ஆவியானவரால் போதிக்கப்பட்டவர்கள் அநேக வருஷமாய் வேதத்தில் அப்பியாசமுள்ளவர்களுங்கூட பிரமிக்கத்தக்கவிதமாய் தேவனுடைய இரகசியங்களை எடுத்துக்கூறும் திறமை யுடையவர்களாயிருக்கிறார்கள். அப்போஸ்தலர்களிடத்தில் இந்த மாறுதலைக் காண்கிறோம். கிறிஸ்துவானவர் அவர்களுக்கு உபதேசித்த அநேகம் விஷயங்களை அவர்கள் உடனே அறிந்துகொள்ளவில்லை. ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட பின்போ எல்லாவற்றையும் தெளிவாய் அறிந்துகொண்டார்கள். "இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்தில் அறியவில்லை, இயேசு மகிமையடைந்தபின்பு, இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும் தாங்கள் இப்படி அவருக்குச் செய்ததையும் நினைவுகூர்ந்தார்கள்." *(யோவான். 12:16).* "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டியதில்லை, அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக" *(1 யோவான். 2:27).*

5. **ஊழியத்திற்கு வல்லமை கொடுக்கிறார்.** "பலத்தினாலுமல்ல பராக்கிரமத்தினாலுமல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(சக. 4:6).* "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றா" *(அப். 1:8).* இக்காலத்தில் பிரசங்க

ஊழியம் அதிகச் சாதாரணமாய்ப் போய்விட்டது. வேறே எந்த உத்தியோகமும் கிடையாமற்போனாலும் பிரசங்க வேலையாவது கிடையாமற்போகுமா என்பது பேச்சு. பேச எழுந்தவர்க ளெல்லாரும் பிரசங்கிகள்தான். வாயில் வந்ததெல்லாம் பிரசங்கம்தான். ஐயோ, எவ்வளவு துணிகரம்! "அறுப்பு மிகுதி; வேலையாள்களோ கொஞ்சம்." ஆகையால் நாம் செய்ய வேண்டியதென்ன? வழியில் வந்தவர்களெல்லாரையும் ஊழியத்தைச் செய்யும்படி சம்பளம் பேசி ஏற்படுத்திவிடுகிறதா? எல்லாரையும் இரட்சிப்புக்கு அழைக்கலாம். எல்லாரையும் ஊழியத்தில் ஏற்படுத்துவதற்கு நமக்கு என்ன நியாயமுண்டு?" "அறுப்பு மிகுதி வேலையாள்கள் கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாள்களை **அனுப்பும்படி அவரை** வேண்டிக்கொள்ளுங்கள்" என்று ஆண்டவர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே (லூக்கா 10:2). நம்முடைய இஷ்டம்போல் குணப்படாதவர்களை அவருடைய ஊழியத்தில் ஏற்படுத்திக்கொண்டு சபையில் **ஆசீர்வாத மில்லையே மாறுதல் இல்லையே** என்று புலம்புவது சரியல்ல. வேலையைவிட்டு நீக்கினால் அவர்கள் பிழைப்புக் கெட்டுப் போகுமேயென்றால், தேவனுடைய சபை கெட்டுப்போகிறது பெரிய காரியமில்லையோ? கர்த்தருடைய ஊழியம் அற்பமாய் எண்ணப்படுவானேன்? மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரிய ஊழியத்தைச் செய்யத் துணிவதினால்தானே.

நம்முடைய இரட்சகர் ஊழியர்களை ஏற்படுத்தின விதத்தைப்பாருங்கள். தாம் தெரிந்துகொண்டவர்களை மூன்று வருஷக்காலமாகத் தம்மோடு வைத்து ஆயத்தப்படுத்திவந்தார். அப்புறம் **உன்னத பெலனாகிய** பரிசுத்த ஆவியானவரை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், பெற்றுக் கொள்ளுமுன் ஊழியம் செய்யக்கூடாதென்றும் உறுதியாய்க் கட்டளையிட்டார். அந்தப்படியே அவர்கள் வல்லமைபெற்று அவருக்குச் சாட்சியாகப் புறப்பட்டுப்போனார்கள். தம்மால் இரட்சிக்கப்பட்டவர்களையும், ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொண்டவர்களையும் தமக்கு ஊழியஞ்செய்யும்படி அனுப்பினாரேயன்றி மற்றவர்களை அவர் அனுப்பவில்லை. ஆவியானவரைப் பெற்றுக்கொண்டால்தான் பிரசங்கம்பண்ணத் தெரியுமென்று நாம் சொல்லுகிறதில்லை. பேச்சுத் திறமை அநேகருக்குண்டு. கேட்போர் மகிழத்தக்கவிதமாய் சாதுரியமாயும் இன்பமாயும் பேசுகிறவர்கள் அநேகர். அதுதான் பெரிய மோசம். குணப்படாதவர்கள் எவ்வளவு திறமையாய்ப் பிரசங்கித்தாலும் அவர்கள் **கர்த்தரால் அனுப்பப்பட்ட சாட்சிகள் அல்ல.** புத்தியின் வார்த்தை புத்தியைத் தொடும், ஆவியின் வார்த்தைகள் உள்ளத்தை தொடும். அநேகருடைய போதனைகள் வெறும் வார்த்தைகளே. அவைகளில் அனலும் வல்லமையுமில்லை.

இவ்வளவு காலமாகியும் இந்த வித்தியாசத்தைச் சபையார் அறியாதிருப்பது எவ்வளவு விசனம்? வார்த்தைகளும் சத்தமும் பிரசங்கமாகுமா?

கிறிஸ்து தம்மைக்குறித்துக் கொடுத்த சாட்சி. "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்" என்றார் (லூக்கா 4:18). அப்போஸ்தலனாகிய பேதுருவும் ஆண்டவரைக் குறித்து: ''நசரேயனாகிய இயேசுவை தேவன் **பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்,** தேவன் அவருடனேகூடயிருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையிலகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'' என்று சாட்சிக் கொடுத்தார். நம்முடைய எஜமான் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றாலன்றி இந்த ஊழியத்தில் பிரவேசிக்கக்கூடாதென்றால் மகா அறிவீனரும் பலவீனருமாகிய நாம் இந்த உன்னத பெலனை பெற்றுக்கொள்ளாமல் ஊழியம் செய்யப்பார்க்கிறது எவ்வளவு துணிகரம்?

அப்போஸ்தலனாகிய பவுலின் சாட்சி, "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருந்தது. அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தை களாலே பேசாமல் **பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தை களாலே பேசி** ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" என்கிறார் (1 கொரி. 2:5, 13). வேறோரு இடத்தில் ''எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல, **வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும்,** முழுநிச்சயத்தோடும் வந்தது'' என்றும், ''விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி'' என்றும் தைரியமாய்ச் சொல்லுகிறார். (1 தெச. 1:5; 2:10), ஆவியைப் பெற்ற ஊழியக்கார னுடைய ஊழியமும் ஜீவியமும் எப்படியிருக்கிற தென்று பாருங்கள் ஊழியத்திலும் **வல்லமை,** ஜீவியத்திலும் **வல்லமை.** அதுதான் நமக்கு வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் சாட்சி. ஆவியின் பெலத்தோடு செய்யப்படும் பிரசங்கங்கள் எப்படிப்பட்டவைக ளென்றும், அதினாலுண்டாகும் மாறுதல்கள் எவ்வளவு அதிசயமானவையென்றும் இவர் அனுபவத்தில் கண்டவர். அவர் சொல்லுகிறதென்ன? ''பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட **பரிசுத்த ஆவியினாலே** உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது

உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது" என்கிறார் (1 பேதுரு 1:12). கொர்நேலியுவின் வீட்டில் இவர் ஆவியினால் நிறைந்தவராய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபொழுது உண்டான மாறுதல் எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியும்.

இவ்விதமாய் நமது ஆண்டவரும் அப்போஸ்தலரும் எக்காலத்திலுமுள்ள பரிசுத்தவான்களும் **ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டு** செய்த இந்த மகத்துவமான ஊழியத்தை நாம் **ஆவியைப்பெறாமல்** செய்துவருகிறது எவ்வளவு பெரிய குற்றம்! சகோதரரே! ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ளாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நமக்கு என்ன நியாயமுண்டு? நாம் அவரைப் பெற்றுக்கொண்டால் நமது ஊழியத்தில் பெரிய மாறுதலைக் காண்போம். கர்த்தருக்கு ஊழியம் செய்வது தொல்லைபோலிராமல் மகிழ்ச்சியாயிருக்கும். காலைப்பிரசங்கம் முடிந்தது இனி மாலைப்பிரசங்கம் செய்யவேண்டுமே; இந்த வாரம் முடிந்தது இனி அடுத்த வார்த்துக்கு என்ன செய்கிறது என்று நாம் கலங்க அவசியமிராது. நாமாக இந்த ஊழியத்தைச் செய்யப் பார்ப்போமானால் சீக்கிரம் சோர்ந்துபோவோம். பிரசங்கிப்பது கஷ்டமும் தொல்லையுமாயிருக்கும். ஆவியானவர் நம்மை உபயோகிப்பாரானால் இதைப்போல் மகிழ்ச்சியும் ஆனந்தமுமான ஊழியம் வேறொன்றுமில்லை.

6. **நம்முடைய ஆராதனைகளிலும் உதவி செய்கிறார்.** நம்முடைய ஊழியத்தில்மாத்திரமல்ல, நமது ஆராதனைகளும் பரிசுத்த ஆவியின் பலத்தோடே செய்யப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். நாம் எப்படி ஆராதிக்கவேண்டுமென்று பிதாவானவர் தமது குமாரன்மூலமாய்ச் சொல்லி அனுப்பியிருக்கிறார். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் **ஆவியோடும்** உண்மையோடும் அவரைத் தொழுகொள்ளவேண்டுமென்றும், தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" என்றும் இரட்சகர் சொன்னார். (யோவான் 4:24). நம்முடைய **ஜெபங்களும்** ஆவியின் பலத்தோடே செய்யப்படவேண்டும். **"ஆவியினாலே ஜெபம்பண்ணுங்கள்" "பரிசுத்த ஆவிக்குள்** ஜெபம்பண்ணுங்கள்" என்று வேத வசனம் கூறுகிறது (எபே. 6:18; யூதா 20). சில சமயங்களில் நம்முடைய இருதயத்தை அநேக காரியங்கள் வந்து நெருக்க, நான் என்ன சொல்லுவேன் ஆண்டவரே என்று நாம் கலங்குகிறதுண்டு. நம்முடைய இருதயத்தின் தவிப்பை வார்த்தைகளில் விவரிக்க முடிகிறதில்லை. "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது நான் என்ன சொல்லுவேன்?'' என்று நம்முடைய எஜமான் கலங்கினதுபோல் நாமும் கலங்க நேரிடலாம். அப்படிப்பட்ட தருணங்களில் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். "நாம்

ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் **ஆவியானவர் தாமே** வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" *(ரோமர் 8:26)*. நம்முடைய **சங்கீதங்களும் பாட்டுகளும் கீர்த்தனைகளும்** ஆவியின் பலத்தோடே பாடப்படவேண்டும். ''நீங்கள் **ஆவியினால் நிறைந்து** சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக் கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணுங்கள்'' *(எபே. 5:19)*. அப்போஸ்தலன் தம்முடைய சொந்த அனுபவத்தைக் குறித்து: "நான் **ஆவியோடும்** விண்ணப்பம்பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் **ஆவியோடும்** பாடுவேன் கருத்தோடும் பாடுவேன்" என்கிறார் *(1 கொரி. 14:15)*.

இவ்விதமாய் நம்முடைய சபைகளில் நடந்துவரும் ஆராதனைகள் **தேவ ஆவியின் பலத்தோடே** நடத்தப்படுமானால் எவ்வளவு மகிமையாயிருக்கும்! சில வருஷங்களுக்குமுன்னே ஓர் இரவில் சில சகோதரர் ஒருமனப்பட்டு ஒரு வீட்டில் கூடி ஆவியினால் நிறைந்து கர்த்தரைப் பாடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்க்கும்படி ஒரு மனுஷன் அவர்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். இவர்கள் அவனுக்குப் பிரசங்கிக்கவுமில்லை, அவனுக்காக ஜெபிக்கவுமில்லை. தேவாவியானவரின் வல்லமை அவனை மேற்கொள்ள அவன் பாவ உணர்வடைந்து, முகங்குப்புற விழுந்து இரக்கத்துக்காகக் கெஞ்சினான். அப்பொழுது அவனை அவர்கள் சேர்த்துக்கொண்டு, இரட்சப்பின் வழியை அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். இப்படி நடக்கக்கூடுமென்று கர்த்தருடைய வசனமும் கூறுகிறது. "எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லுகையில் அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவனொருவன் உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும் எல்லாராலும் நிதானிக்கப்பட்டுமிருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும், அவன் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொண்டு தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்" *(1 கொரி. 14:24, 25)*.

நம்முடைய ஆலயத்தில் ஆவியானவருக்கு இடமில்லை யென்றால் நம்முடைய ஆராதனைகளில் உயிர் இராது. பிரசங்கத்தில் உயிர் இராது. ஜெபத்தில் உயிர் இராது. வேதவாசிப்பில் உயிர் இராது. பாட்டுகளில் உயிர் இராது. ஆமென் என்று சொல்லக்கூடச் சக்தியிராது. எல்லாம் தூக்கமும் அசதியுமாகவேயிருக்கும். ஆவியைப்பெற்ற யாராகிலும் ஒருவர் உள்ளே வந்தால், ஏன் இந்தக் கோவிலுக்கு வந்தோமென்று

முடியும் வரையில் துக்கத்தோடிருப்பார். இப்படியிருக்க, அவிசுவாசியொருவன் உள்பிரவேசித்தால் அவன் எப்படி உணர்த்தப்படுவான்? கடவுள் மெய்யாய் இவர்களுக்குள்ளிருக்கிறார் என்று அவன் எப்படி அறிக்கையிடுவான்? கூடாதகாரியம். தூக்கம் பிடித்த ஆராதனை செய்வதைவிட ஆலயத்தைப் பூட்டிவிட்டு சும்மாயிருப்பது நல்லது. உண்மையற்ற கடமை ஆராதனைகள் ஆண்டவருக்கு முழுவெறுப்பு. ஒருவேளை நம்முடைய ஆராதனைகள் உற்சாகமாய் நடக்கிறதினால் அவைகள் **ஆவியின் ஆராதனை** என்று நம்மை வஞ்சித்துக் கொள்ளவுங்கூடாது. நமக்கு அலங்காரமான ஆலயமிருக்கலாம். ஆராதனை சிறப்பாய் நடக்கலாம். பாடகர்கள் கின்னரத்தோடு சேர்ந்து பாட்டுகளை இனிமையாகப் பாடலாம். இவைகள் யாவும் நல்லதே. ஆனாலும் ஆவிக்குரிய உற்சாகம் வேறே, மாம்ச உற்சாகம் வேறே. ஆவியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு ஆராதனை செய்யத் தெரியாதென்று யார் சொல்லக்கூடும்? தேவகாரியங்களில் **மாமிசம்** எவ்வளவோ உற்சாகத்தைக் காட்டுகிறதே. இப்படிப்பட்ட உற்சாகம் ஆவியைப் பெற்றுகொள்ளுமுன்னும் தங்களுக்கு இருந்ததாகவும், தேவன் இன்னாரென்று அறியாமல் அவரைத் தொழுது கொண்டு வந்ததாகவும், அநேகர் அறிக்கை செய்திருக்கிறார்கள். நம்முடைய ஆராதனைகள் புறம்பே எவ்வளவு அலங்காரமாய்த் தோன்றினாலும் நாம் **ஆவியினாலே** ஆராதனை செய்யவில்லை யென்றால் தேவனுக்கு அதினால் மகிமையில்லை. எருசலேம் தேவாலயத்திலும் சிறப்பான ஆலயமெது? அதின் முடிவு என்னமாயிற்று? அவர்களுடைய ஆராதனையில் ஆவியுமில்லை உண்மையுமில்லை.

7. **நம்முடைய ஜீவியத்தை மறுரூபமாக்குகிறார்.** கர்த்தராகிய இயேசு திரும்ப வரும்பொழுது நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கொப்பாக மறுரூபமாக்குவாரென்பது மெய். ஆனால் இப்பொழுதே ஆவியானவர் விசுவாசிகளிடத்தில் நடப்பிக்கும் அதிசயமான மாறுதலுண்டு. உள்ளான ஆவிக்குரிய மாறுதலை இம்மையில் அடையாதவன், புறம்பான சரீரமாறுதலை இனிமேல் அடையமாட்டான். இந்த மாறுதலை அப்போஸ்தலர் தங்களில் பிரத்தியட்சமாய்க் கண்டார்கள். ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுமுன் அவர்கள் ஜீவித்தமாதிரி வேறே. ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபின் அவர்கள் ஜீவித்தமாதிரி வேறே. அவர்களுக்குப் போதனைக் குறைவு இருந்ததில்லை. பரமகுருவாகிய இயேசுகிறிஸ்துவே அவர்களுக்கு போதித்து வந்தார். அவர்களுக்கு மாதிரிக் குறைவுமில்லை. அவரே அவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து காண்பித்தார். அப்படியிருந்தும் அவர்களுக்குள் எவ்வளவோ பெருமையும்,

பொறாமையும், எரிச்சலும், தன்னயமும், அறிவீனமும், அன்புத் தாழ்ச்சியும், கோழைத்தனமும் காணப்பட்டன. காரணமென்ன? எவ்விதமாய் ஜீவிக்கவேண்டுமென்று அவர்கள் அறிந்து கொள்ளாததினாலுமல்ல. எஜமானைப்போல் நடக்கவேண்டு மென்கிற ஆசையில்லாததினாலுமல்ல. பின்னை ஏன் அவர்களால் **தாங்கள் விரும்பினபடி** ஜீவிக்கக்கூடாமற் போயிற்று? **பெலனில்லை.** கிறிஸ்தவ ஜீவியமானது மனுஷன் தன் சுய பெலத்தால் ஜீவிக்கக்கூடியதல்ல. இது ஆண்டவருக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் தமது சீஷர்களிடத்தில் கண்ட தவறுதல்களினிமித்தம் அவர்களை வெறுத்துத் தள்ளிப்போடவில்லை. அவர்கள் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுமட்டும் அப்படித்தான் இருப்பார்களென்று அறிவார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும் என்றார்" (யோவான் 16:7).

பெந்தெகொஸ்தே நாளில் பிதாவின் வாக்குத்தத்த ஆவியானவர் வந்து அவர்களை நிரப்பினபோது அவர்க ளெல்லாரும் வேறு மனுஷரானார்கள். அவர்களுடைய வாக்கிலும் செய்கையிலும் வல்லமை காணப்பட்டது. எவ்வளவு தாழ்மை! எவ்வளவு இணக்கம்! எவ்வளவு பரிசுத்தம்! எவ்வளவு தைரியம்! எவ்வளவு ஞானம்! எவ்வளவு இச்சையடக்கம்! எவ்வளவு பொறுமை! எவ்வளவு தேவபக்தி! எவ்வளவு சகோதர சிநேகம்! எவ்வளவு சுயவெறுப்பு! எவ்வளவு ஆத்ம வாஞ்சை! அந்த ஒரே ஆவியானவர் இந்த எல்லா நற்குணங்களையும் அவர்களில் உண்டாக்கினார். இது பழையகாலத்துக் கதையல்ல. இன்றைக்கும் ஆவியானவர் தாம் பிரவேசிக்கும் இருதயங்களில் இந்த மாறுதல்களை உண்டாக்குவது நிச்சயம். சவுலைப் பவுலாக்கின இந்த ஆவியானவர் நாளதுவரை எத்தனையோ முரட்டாட்டமான பாவிகளைச் சிறந்த பரிசுத்தவான்களாக மாற்றிவருகிறார். இதற்கு எத்தனையோ திருஷ்டாந்தங்களுண்டு. நம்முடைய சபைகளில் எவ்வளவோ பாவங்களும் குறைவுகளும் இருக்கிறதென்று புலம்புகிறோமே. வான அக்கினி நம்மேல் **இறங்கினாலல்லாமல்** இந்தத் துர்க்குணங்கள் ஒழியவும் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படவும் வேறே வழியில்லை. நாம் தேவனை அறிந்துகொள்ளவும், இயேசுவின் அன்பு பெருகவும், வேதத்தின் இரகசியங்களைக் கற்றுக்கொள்ளவும், வல்லமையான ஊழியம் செய்யவும், பிதாவுக்குப் பிரியமான ஆராதனை நடத்தவும், பரிசுத்தமாய் ஜீவிக்கவும் இந்த உன்னத ஆவியானவர் நம்மை ஆண்டுகொள்ளவேண்டும்.

III. ஆவியானவரால் நிரப்பப்படுவதெப்படி?

ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு எல்லாவற்றிலும் பிரதான நிபந்தனை **ஜெபமே,** ஆனாலும் அநேகர் ஜெபித்தும்

அவரைப்பெற்றுக்கொள்ளாததினால் தேவன் வேறு சில நிபந்தனைகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த நிபந்தனைகளை நாம் பார்க்கும்போது நாம் ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ளாததற்குக் காரணமென்ன அல்லது தடை எங்கேயிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம்.

1. **மனந்திரும்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.** *"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள்* **மனந்திரும்பி** *ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்;* **அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்***" என்றார் (அப். 2:38).* இங்கே, மனந்திரும்புகிறவர்களுக்குப் பாவ மன்னிப்பும் அத்தோடுகூட பரிசுத்தாவியின் வரமும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. இதன் சம்பந்தமான வேறிரண்டு வசனங்களையும் பாருங்கள். *"என் கடிந்து கொள்ளுதலுக்குத்* **திரும்புங்கள், இதோ,** *என் ஆவியை உங்களுக்கு அருளுவேன்" (நீதி. 1:23). "நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில்* **திரும்புங்கள், அதற்குப்பின்பு** *நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்... ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:12,28,29).*

சபையாகவாவது சரி, தனித்தாயாவது, நாம் ஆவியினால் நிரப்பப்படவேண்டுமானால் பாவ உணர்வும் மனந்திரும்புதலும் நம்மில் ஆரம்பிக்கவேண்டும். தர்சுபட்டணத்து சவுலின் உபவாசத்தையும் கண்ணீரையும் பாருங்கள். சீஷர்கள் காத்துக்கொண்டிருந்த காரணத்தைக் கவனியுங்கள். இன்னும் எங்கெங்கே பாவத்துக்காகப் புலம்புதலும் மெய்யான மனந்திரும்புதலும் உண்டாயிற்றோ அங்கெல்லாம் தேவாவியானவர் பலமாய் அருளப்பட்டே வந்திருக்கிறார். நாம் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாயிருக்கலாம். ஆவியானவரின் நிறைவுக்காக நாம் ஜெபித்தும் பெற்றுக்கொள்ள வில்லையென்றால் தடை நம்மிடத்தில்தானிருக்கிறது. அந்தக் கல்லை எடுத்துப்போடவேண்டும். அது பெரிய பாவமோ சின்ன பாவமோ, வெளியரங்கமானதோ அந்தரங்கமானதோ, அது பாவமாகத்தானிருக்கிறதோ அல்லது சந்தேகத்துக்கு இடமானதோ விட்டுவிடவேண்டும். விட்டுவிட மனமில்லாமல் ஆவியானவருக்காக ஜெபிக்கிறது வீண்.

ஒரு அம்மாள் ஆவியானவருக்காக அதிக வாஞ்சையோடு ஜெபித்துக்கொண்டுவந்தும் அவரைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஒருநாள் இரவில் வெகு நேரம் தேவனுக்கு முன்பாக இருந்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது ஒரு காரியம் ஞாபகத்துக்கு வந்தது. அது பெரிய பாவமல்ல. ஒரு சிறு ஆபரணமே. அது

அந்த அம்மாளுக்கு ஒரு விக்கிரகம்போலிருந்ததாம். தான் கர்த்தரைப்பார்க்கிலும் அதிகமாய் நேசித்துவந்த ஆபரணத்தை முழங்காலில் நின்ற இடத்திலேயே எடுத்துப்போடவும் ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக்கொண்டதாக பின்னி என்னும் பிரசங்கியார் சொல்லுகிறார். நாம் ஆவியினால் நிரப்பப்படவேண்டுமானால் தேவன் காட்டுகிற தடையெதுவோ அது உணவிலோ, உடையிலோ, நகையிலோ, நடக்கையிலோ அதை உடனே விட்டுவிட ஆயத்தமாயிருக்கவேண்டும். மற்றவர் களுடைய விஷயத்தில் குற்றமாயிராதது நமக்குக் குற்றமா யிருக்கலாம். கானான் தேசத்தில் பஞ்சமுண்டானால் அங்குள்ள மனுஷர் எகிப்து தேசத்திற்குப்போவது குற்றமல்ல. ஆனால் ஆபிரகாம் எகிப்துக்கு போனதுதான் குற்றம். அவர் தேவனுடைய மனுஷன். தேவனால் பிரிக்கப்பட்டு வழி நடத்தப்பட்டு வந்தவர். பஞ்சத்திலும் கர்த்தரை நம்பவேண்டியவர். தேவன் அவருக்குப் பெரிய ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணியிருந்தார். அவரோ மற்றவர்களோடு சேர்ந்து எகிப்துக்குப் போனதினால் தேவசமுகத்தை இழந்து அதிகத் தொல்லைக்கும் நிந்தைக்கும் ஆளானார். மற்றவர்களுக்குக் குற்றமில்லாதது ஆபிரகாமுக்குக் குற்றமாயிற்று. நாம் உண்மையாகவே ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால், அது பாவமா? இது பாவமா? அப்படிச் செய்தாலென்ன? இப்படிச் செய்தால் என்ன? இதிலேயெல்லாம் என்ன குற்றமிருக்கிறது என்று பேசமாட்டோம். நம்முடைய ஜீவியத்தில் தேவன் எதைத்தடையாகக் காண்பிக்கிறாரோ, அது எதுவானாலும் சரி, அவருடைய கடிந்துகொள்ளுதலுக்கு உடனே திரும்புவோமாக. அப்பொழுது ஆவியானவர் நமக்கு அருளப்படுவாரென்பது நிச்சயம்.

2. கிறிஸ்துவில் பூரணவிசுவாசம் வைக்கவேண்டும். "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ விசுவாசக் கேள்வியினாலேயோ எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்" என்று பவுல் கலாத்தியரைப் பார்த்துக்கேட்டார் (கலா. 3:2). இவர் கிறிஸ்துவை அவர்களுக்குப் பிரசங்கித்திருந்தார். கிறிஸ்து அவர்களுக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து அவர்களை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டா ரென்றும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை அவர்கள் விசுவாசித்து ஏற்றுக்கொண்டால் இரட்சக்கப்படுவார்களென்றும் பிரசங்கித்தார். அவர்கள் அதைக் கேட்டு கர்த்தராகிய இயேசுவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி தேவனுக்குப் பிள்ளைகளானார்கள். ஆவியானவரையும் பெற்றுக் கொண்டார்கள். இப்படியிருக்க வேறு சிலர் அவர்களிடத்தில் வந்து: நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறது சரிதான், அத்தோடு நியாயப் பிரமாணத்தையும் நீங்கள் கைக்கொண்டு நடக்கவேண்டும், நீங்கள் விருத்தசேதனமும் பெறவேண்டும் என்று போதித்துப் பெரிய

குழப்பத்தை உண்டாக்கினார்கள். இதை அப்போஸ்தலன் கேள்விப்பட்டபோது, விசனப்பட்டு நிருபத்தை அவர்களுக்கு எழுதி: "புத்தியில்லாத கலாத்தியரே நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றைமாத்திரம் உங்களிடதில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?" என்று கேட்டார். அவர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயல்ல, **கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயே** ஆவியைப் பெற்றோமென்று ஒத்துக் கொள்ளவேண்டியதாயிற்று.

கொர்நேலியுவின் விஷயத்திலும் இது மெய்யாயிருக்கிறது. அவன் தேவ பக்தனும், தேவனுக்குப் பயந்தவனும், மிகுந்த தர்மங்களைச் செய்தவனும் தேவனை நோக்கி எப்பொழுதும் ஜெபம்பண்ணினவனுமாயிருந்தான். தேவன் அவனிடத்தில் மிகவும் பிரியமாயிருந்தார். ஆனால் அவன் தன்னுடைய நற்கிரியைகளினாலே ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை. பேதுருவினால் பிரசங்கிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின்மேல் அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் விசுவாசம் வைத்த நிமிஷத்தில் ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டியதுதான். ஆனால் நம்முடைய ஜெப தியானங்களிலும் நாம் செய்துவரும் நற்கிரியைகளிலும் நம்பிக்கை வைப்போமானால் ஒருபோதும் தேவாவியானவரைப் பெற்றுக்கொள்ளமாட்டோம். நமது சகல பாவங்களைச் சுமந்தவரும் நமக்காகச் சிலுவையில் அறையுண்டு தொங்கினவருமான நமது இரட்சகரை ஆவலோடு நோக்கிப் பார்க்கவேண்டும். அவரை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பணிவோடு அவரை நமஸ்காரம் செய்யவேண்டும். இவ்விதமாய் நாம் கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு **அவரை மகிமைப்படுத்தும்போது** பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் நமக்கு அருளப்படுவார். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை **விசுவாசிக்கிறவர்கள்** அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" *(யோவான் 7:38, 39).*

3. **கீழ்ப்படிய வேண்டும்.** "தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர் களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி" *(அப். 5:32).* கிறிஸ்தவ ஜீவியத்தில் கீழ்ப்படிதல் மகா முக்கியம். தேவாசீர்வாதங்கள் யாவும் கீழ்ப்படிகிறவர்களுக்கே கிடைக்கின்றன: ஆபிரகாமின்

கீழ்ப்படிதலை தேவன் புகழ்ந்துகொண்டார். சவுல் இராஜா கீழ்ப்படியாமற்போனதினிமித்தம் அவனைக் கடிந்துகொண்டு புறக்கணித்தார். புதிய ஏற்பாட்டின் காலத்திலுள்ள நம்மையோ தேவன் **கீழ்ப் படிதலுக்கென்றே** அழைத்திருக்கிறார் *(1 பேதுரு. 1:2)*. கிறிஸ்துவானவர் தாம் **கீழ்ப்படிந்து** சம்பாதித்த இரட்சிப்பைத் தமக்குக் **கீழ்ப்படிகிறவர்களுக்கே** அருளுகிறார் *(எபி. 5:8,9)*. அதுபோலவே பரிசுத்த ஆவியானவரும் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறார். கீழ்ப்படிதல் என்று சொல்லும்போது ஆண்டவர் கற்பித்திருக்கிற சில கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதுமாத்திரமல்ல, தேவ நடத்துதலுக்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுப்பதே சரியான கீழ்ப்படிதல். அப்போஸ்தலரைப் பாருங்கள். தங்கள் எஜமான் கட்டளை யிட்டவைகளை உற்சாகத்தோடு கைக்கொண்டார்கள். அதுமாத்திரமல்ல தேவன் தங்களை எந்தவிதமெல்லாம் நடத்த விரும்பினாரோ அந்தப்படியெல்லாம் நடத்தப்படுவதற்குத் தங்களை முற்றிலும் ஒப்புவித்துவிட்டார்கள். ஆவியானவர் தாராளமாய் அவர்களுக்குள் வசித்து அவர்களை மேலும் மேலும் நிரப்பினார். அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் ஆவியானவர் வல்லமையாய்க் கிரியை செய்ததற்குக் காரணமென்ன? ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்? **இனி என்சித்தமல்ல, உம்முடைய சித்தத்தின்படியே என்னை நடத்தும்** என்று அவர் தன்னை முற்றிலுமாய் தேவனுக்கு ஒப்புக்கொடுத்ததினால் அல்லவா? அநேக விஷயங்களில் நம்முடைய இஷ்டம்போல் நாம் நடந்து ஆவியானவரைத் துக்கப்படுத்துவோமானால் அவருடைய வல்லமையை நாம் பெற்றுக்கொள்ளமாட்டோம். தேவனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டால் என்ன செய்வாரோ என்று அநேகர் பயப்படுகிறார்கள். தேவன் எப்படிப்பட்டவர்? அவர் அன்பின் சமுத்திரம். நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருக்குக் கீழ்ப்படியும்போது **அன்புக்கு ஒப்புக்கொடுத்து அன்புக்கே கீழ்ப்படிகிறோம்**. அவருடைய நடத்துதல் ஒருவேளை நம்முடைய நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் விரோதம்போல் காணப்படலாம். அதுவே நமக்கு அனுகூலமும் பிறருக்கு ஆசீர்வாதமுமான பாதையாயிருக்கும்.

4. கிறிஸ்துவானவர் மகிமைப்படும்படி நாடவேண்டும். "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் **என்னை மகிமைப்படுத்துவார்**" *(யோவான் 16:14)*. நாம் ஏன் ஆவியினால் நிரப்பப்படவேண்டும்? ஆவியானவருக்காக நாம் வேண்டிக்கொள்ளும் நோக்கம் என்ன? வேத அறிவில் வல்லவர்களென விளங்கவும், பிரசங்கத்தில் கெட்டிக்காரரெனப் பேரெடுக்கவும்வேண்டும் என்கிற நோக்கத்தோடு ஆவிக்காக ஜெபிப்போமானால் சுயமகிமையைத் தேடுகிறவர்களா

யிருப்போம். மற்றச் சபைகளில் ஆவியானவர் ஊற்றப்பட்டுப் பெரிய காரியங்கள் நடந்ததாக வாசிக்கிறோம். ஆகையால் நம்முடைய சபைகளைக்குறித்தும் நல்ல அறிக்கை எழுதத்தக்கதாக ஆவியானவர் அருளப்படவேண்டும் என்கிற நோக்கமும் சரியல்ல. சபையின் தொகை பெருக, காணிக்கைப் பணம் அதிகப்பட ஆவியானவர் ஊற்றப்பட்டால் நல்லதே என்கிற ஆசையும் சரியல்ல. இப்படிப்பட்ட தன்னயமான நோக்கத் தோடும் சுயமகிமையைத் தேடுகிற சிந்தையோடும் நாம் ஆவியானவருக்காக ஜெபித்தால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டோம். ஐயோ! என் ஜீவியம் எவ்வளவு பலவீனமும் பாவம் நிறைந்ததுமாயிருக்கிறது. என் ஊழியத்தில் வல்லமை யுமில்லை பலனுமில்லையே. நான் ஆவியினால் நிரப்பப் பட்டாலல்லாமல் என் அருமை இரட்சகர் மகிமைப்பட ஏதுவில்லையே என்கிற கவலையோடு ஆவியானவரைத் தேட வேண்டும். நம்முடைய சபையின் பாவங்களுக்காகப் புலம்பி, ஐயோ புறமதஸ்ருக்குள்ளே நாங்கள் நிந்தையாயிருக்கிறோமே, தேவகுமாரனுடைய நாமம் அவர்களால் தூஷிக்கப்படுவதற்கு இடங்கொடுத்துவிட்டோமே, தேவனே! இந்த நிந்தை நீங்கவும் **உம்முடைய நாமம் மகிமைப்படவும்** எங்கள் மேல் உம்முடைய ஆவியை ஊற்றும் என்று கெஞ்சுவோமானால் தேவன் மெய்யாகவே பெரிய காரியங்களைச் செய்வார். தாவீது அரசன் ஜெபித்ததுபோல "உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்; அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன் பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்" என்று ஜெபிப்பதே தன்னயமற்ற ஜெபம். கிறிஸ்து **மகிமைப்படுவதையே** நாம் பிரதானமாய்த் தேடுவோமானால் ஆவியானவர் அருளப்படுவதுமின்றி மற்றக்காரியங்கள் யாவும் தானாகவே பெருகும்.

5. **கடைசியாக, ஊக்கமான ஜெபம் வேண்டும்.** "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக்கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" *(லூக்கா 11:13).* ஆவியானவர் அருளப்பட்டாயிற்று, ஆகையால் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டியதே தவிர அவருக்காக ஜெபிக்க வேண்டியதில்லை என்பார் சிலர். பரத்திலிருந்து ஆவியானவர் வரும்படியாக நாம் ஜெபிக்கவேண்டியதில்லையென்பது மெய்தான். ஆனால் அனுப்பப்பட்டிருக்கிற ஆவியானவர் நம்மை நிரப்பும்படியாக ஜெபிக்கவேண்டியதுதானே. ஏற்றுக்கொள்ளுதல் என்றால் என்ன? உள்ளே வரும்படி அவரை அழைக்கிறதல்லவா? நாம் பேசாமல் சும்மாயிருந்தால் அவர் பலவந்தமாய் நமக்குள் பிரவேசிப்பாரா? ஆவியானர் ஊற்றப்பட்டபின்பு அப்போஸ்தலர்

ஆவியானவருக்காக ஜெபித்திருக்கிறார்கள். ''அவர்கள் **ஜெபம்பண்ணினபோது** அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்'' *(அப். 4:31).* "அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக **ஜெபம் பண்ணி** அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்'' *(அப். 8:16,17).*

அதிக **தாகத்தோடு** ஜெபிக்கவேண்டும். தாகமுள்ளவன் தன் தாகம் தீர்க்கப்பட்டாலன்றி ஒன்றையும் செய்ய அவனால் முடியாது. அவ்விதமான தாகம் நமக்குண்டாகவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் ஆவியானவர் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறார். "**தாகமுள்ளவன்மேல்** தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்'' என்கிறார் *(ஏசாயா 44:3).* தாகமுள்ளவனைத்தான் கிறிஸ்துவானவரும் தம்மிடத்தில் அழைக்கிறார். "ஒருவன் **தாகமாயிருந்தால்** என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்'' என்கிறார் *(யோவான் 7:28).* தாகமுள்ளவனைத்தான் ஆவியானவரும் அழைக்கிறார். ''**தாகமாயிருக்கிறவன்** வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்'' என்கிறார் *(வெளி. 22:17).* நாம் அநேகந்தரம் ஆவியைத்தாருமென்று ஜெபித்திருக்கிறோமே. நிரப்பப்படாமல் தீராதென்கிற **தாகம்** நமக்குள்ளிருந்ததா?

ஆவியானவரின் நிறைவு அப்போஸ்தலர்களுக்கும் விசேஷித்த ஊழியத்தைச் செய்யும்படி அழைக்கப் பட்டவர்களுக்குமாத்திரம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறதென்று சிலர் தப்பாய் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய வாக்கையும் அந்த வாக்கு நிறைவேறிக்கொண்டு வந்திருக்கிற விதத்தையும் பார்க்கும்போது, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிற யாவருக்கும் அது உரியது என்று விளங்கும். ''மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்'' என்கிறார். **யாவர்மேலும்** என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். பேதுரு அப்போஸ்தலன் பிரசங்கித்தபொழுது ''வாக்குத் தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள **யாவருக்கும்** உண்டாயிருக்கிறது'' என்றார் *(அப். 2:39).* இங்கேயும் **யாவருக்கும்** என்கிற வார்த்தை வருகிறது. **யாவருக்கும்** என்று தேவன் சொல்லும்பொழுது நம்மை அவர் நினைக்கவில்லையோ? ஆவியானவர் ஊற்றப்பட்டபொழுது அப்போஸ்தலர் மாத்திரமல்ல கூடியிருந்த அனைவரும் நிரப்பப்பட்டார்களே. பந்திவிசாரணை செய்யும்படி ஏற்பட்டவர்களும் நிரப்பப் பட்டார்கள். சமாரியர் நிரப்பப்பட்டார்கள். எபேசியர்

நிரப்பப்பட்டார்கள். கொர்நேலியுவும் அவனைச் சேர்ந்தவர்களும் நிரப்பப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் ஆதியில் அப்போஸ்தலர்மேல் இறங்கினதுபோலவே இவர்கள்மேலும் இறங்கி நிரப்பினார். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபைக்கு எழுதின நிருபத்தில் மனைவிகள் தங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படிந்திருக்கவும்; புருஷர்கள் தங்கள் மனைவிகளிடத்தில் அன்பாயிருக்கவும்; பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவும்; பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கவும்; வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்கு நல்மனதோடு ஊழியஞ்செய்யவும்; எஜமான்கள் தங்களுக்கும் அவர்களுக்கும் பெரிய எஜமானானவர் பரலோகத்திலிருப்பதை உணர்ந்து கடுஞ் சொல்லை விட்டுவிடவும் **ஆவியினால் நிறைந்திருக்க வேண்டு**மென்று சொல்லுகிறார் *(எபே. 5)*.

நம்முடைய சபையிலுள்ள ஆண்கள் பெண்கள் பிள்ளைகள் யாவரும் ஆவியினால் நிறைந்து ஜீவிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். தேவன் தம்முடைய குமாரனைக் கொடுத்து நம்மில் அன்புக் கூர்ந்ததுபோலவே தம்முடைய ஆவியானவரை அனுப்பினதும் அவருடைய பேரன்பாகவேயிருக்கிறது. ஒருவரை ஏற்றுக் கொண்டு மற்றவரை ஏற்றுக்கொள்ளாதிருப்பது நியாயமா? குமாரனை ஏற்றுக்கொள்ளாமற்போவது குற்றமானால் ஆவியானவரை ஏற்றுக்கொள்ளாதிருப்பது குற்றமாகாதோ? ஒரு தாய் தன் பிள்ளை நன்றாய் உடுத்திச் சுத்தமாயிருக்கிறதைப் பார்க்க ஆசைப்படுவதுபோல பிதாவானவரும் தம்முடைய பிள்ளைகள் ஆவியானவரால் அலங்கரிக்கப்பட்டு பரிசுத்த அழகு பொருந்திருப்பதைக்காண அதிக ஆசையுள்ளவராயிருக்கிறார்.

நாம் ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டுமென்று விரும்புகிறோமா! கர்த்தர் காண்பிக்கிற பாவங்களைவிட்டுத் திரும்ப மனமா? சிலுவையில் தொங்கின இரட்சகர்போல் பூரண விசுவாசம் வைத்து அவரைச்சொந்தமாக்கிக்கொள்ள விருப்பமா? சகல விஷயத்திலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஆயத்தமா? எல்லாவற்றிலும் தேவ குமாரனை மகிமைப்படுத்த நாட்டமா? ஆவியானவரால் நிரப்பப்படும்படி தாகமுண்டா? அப்படியானால் ''தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்'' என்று சொன்ன உண்மையுள்ள பிதா நிச்சயமாகவே நம்மையும் நிரப்புவார்.

26
திரித்துவம்
The Trinity

கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் இல்லையென்று பேசுவது வம்பு. புத்தியும் ஆராய்ச்சியுமுள்ளவர்கள் ஒருபோதும் அப்படிச் சொல்லமாட்டார்கள். அநேகர் கடவுளற்றவர்களாய் ஜீவிக்கலாம். அப்படி ஜீவிப்பது கடவுள் உண்டென்பதை அழிக்கமாட்டாது. கடவுள் உண்டென்கிற அறிவு சிருஷ்டிப்பின் மூலமாகவும், உள்ளான உணர்வின்மூலமாகவும் நமக்குக் கிடைக்கிறது. சிருஷ்டிப்பில் விளங்கும் மகிமையையும், அவைகள் நடத்தப்படுகிற ஒழுங்கையும், மனுஷரோடு அவைகள் சம்பந்தப்பட்டிருக்கிறவிதத்தையும் கவனிக்கும்போது ஞானமும் வல்லமையும் காருண்யமும் நிறைந்த கடவுள் ஒருவர் இருக்கத்தான் வேண்டும் என்கிற நிச்சயமுண்டாகும். வனாந்தரத்தில் நடந்துபோன மிருகத்தை, நாம் கண்ணால் காணாவிடினும் அதன் காலடியைக்கண்டு, இன்னமிருகம் இவ்வழியாகப் போயிருக்கிறதென்று சந்தேகமின்றிச் சொல்லுகிறோம். அதுபோலவே, சிருஷ்டிப்பும் மகாபெரிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று இடைவிடாமல் நமக்குப் போதிக்கிறது. ஆனால் அந்த கடவுளுடைய **தன்மை** இன்னதென்று நாம் அறிந்துகொள்ள சிருஷ்டிப்பின் போதனை போதாது. ஒரு பெரிய வீட்டையும் தோட்டத்தையும் கண்டு, அதன் சொந்தக்காரனை இப்படிப்பட்டவன் என்று உத்தேசிப்பதற்கும், அவனை முகமுகமாய்க்கண்டு பழகுவதற்கும் வித்தியாசமில்லையா? கடவுள் கிருபையாகத் தம்மை வெளிப்படுத்தினாலன்றி நாம் சுயமாய் அவரை அறிந்து கொள்ளமுடியாது. அவர் தம்மை படிப்படியாக மனுஷருக்கு வெளிப்படுத்தினார். அவர் எப்படிப்பட்டவரென்று அவர் அருளின வேதத்தால் அறிகிறோம்.

பழைய ஏற்பாட்டில் சிருஷ்டிப்பின் வரலாறும், மனுஷர் பெருகின விதமும், பாவத்தால் விளைந்த கேடுகளும், தேவன்

தமக்கென்று ஒரு ஜனத்தைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மை அறிந்துகொள்ளும்படி படிப்படியாக அவர்களைப்போதித்து நடத்தின விதமும், உலகத்தை இரட்சிக்கும்படியான தமது சித்தத்தை தீர்க்கதரிசிகள் மூலமாய் அறிவித்த விபரமும் காட்டப்பட்டிருக்கின்றன. சிருஷ்டிப்பின்மூலமாக நாம் சரியாய் அறியக்கூடாமல் மங்கலாகத் தோன்றின கடவுள் வேத சரித்திரத்தில் தாம் மனுப்புத்திரரிடத்தில் நடப்பித்த கிரியைகளினாலும், அவர்களோடு பேசின வார்த்தைகளாலும், பக்தர்கள் அடைந்த ஆசீர்வாதங்களினாலும், அவபக்தர் அடைந்த ஆக்கினையினாலும் தாம் எப்படிப்பட்டவரென்பதை மனுப்புத்திரருக்கு வெளிப்படுத்தினார். இந்த அறிவும் பூரணமானதல்ல.

ஆகையால் தேவன் தமது **தன்மையுள்ள** தமது குமாரனை உலகத்தில் அனுப்பி, தம்மைப் பூரணமாக வெளிப்படுத்தவும், பாவிகளை இரட்சித்துக்கொள்ளவும் கிருபைகூர்ந்தார். ஒருவர் வெளிப்படுவார் என்கிற அறிவு எபிரேயருக்கு இருந்தபோதிலும், அவர் யாரென்றும் எப்படிப்பட்டவரென்றும் அறிந்துகொள்ள அவர்களால் கூடவில்லை. ஒருவர் வரவேண்டும் என்கிற நிச்சயமும் எதிர்பார்க்குதலும் அவர்களுக்கிருந்தது. அவ்வாறு வருகிறவர் தங்களுக்கு மாத்திரம் சொந்தமென்று எண்ணினார்களே தவிர, அவர் **உலகரட்சகர்** என்பதை அறியவில்லை. தேவன் **ஒருவர்** என்னும் நம்பிக்கையில் யூதர்களைப்போல் கண்டிப்பானவர்கள் இல்லை. தேவன் ஆதிமுதல் இந்த சத்தியத்தை அவர்களுக்குப் போதித்து வந்தார். அவர்களைச் சூழயிருந்த பல ஜாதிகள் அநேக தேவர்களை வணங்கி வந்ததால் தேவன் இவர்களைப்பார்த்து: ''உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்'' என்றும், "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்றும் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். தாம் **ஒருவரே தேவன்** என்னும் சத்தியத்தைத் திரும்பவும் அவர்களுக்குப் போதித்தார். அந்தக் கட்டளையை அவர்கள் மகா பயபக்தியுடன் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டனர். அவர்கள் அந்நிய ஜனங்களால் இழுப்புண்டு வேறு தேவர்களை நாடிப்போனபோதெல்லாம், தேவ கோபத்துக்குள்ளாகி ஆக்கினையை அடைந்தார்கள்.

கடவுள் ஒருவரானால் அவர் **தன்மை** என்ன? கடவுள் **ஆவியாயிருக்கிறார்**. ஆவிக்கு மாம்சமும் எலும்புகளும் இல்லை *(லூக்கா 24:39)*. ஆகையால் ஆவியாயிருக்கிற கடவுளைக் கண்ணால் காணமுடியாது. தேவன் தமது **சாயலின்படியும்** தமது **ரூபத்தின்படியும்** மனுஷனை உண்டாக்கினார் என்று சொல்லும்போது, அது காணக்கூடிய, தொடக்கூடிய ஒரு **வடிவத்தைக்** குறிக்காமல், அவருடைய அறிவு, நீதி, பரிசுத்தம்

என்னும் **இலட்சணங்களைக்** குறிக்கும். தேவன் ஆவியாயிருந்தாலும் தமக்குச் சித்தமானால் மனுஷர் காணக்கூடிய சாயலிலும் வரக்கூடும். அவ்வித சாயலில் அவர் வந்தபோதுதான், பூர்வபிதாக்கள் அவரை கண்டு அவரோடு பேசினார்கள். "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என்பது மெய்தான். அதரிசனமான கடவுளை ஒருவரும் காணமுடியாது. ஆனால், மனுஷர் காணக்கூடிய சாயலில் அவர் வந்தபோது அவரைக் கண்டார்கள். மனுஷன் தன்முகத்தை ஒருபோதும் காணமுடியாது என்பது வாஸ்தவந்தான். ஆகிலும், அவன் தன் முகத்தின் நிழலைக் கண்ணாடியிலே கண்டு: நான் என் முகத்தைக்கண்டேன் என்று அவன் சொல்லலாமல்லவா. அதுபோலவே, நாம் கடவுளை அவர் இருக்கிற தன்மையில் காணக்கூடாவிட்டாலும், அவர் கிருபையாய்த் தம்மை வேறுசாயலில் வெளிப்படுத்தும்போது, கடவுளைக் கண்டோம் என்று சொல்லலாம். கடவுள் ஆவியாயிருப்பது மாத்திரமல்ல, அவர் **நித்தியர்**. அவருக்கு துவக்கமும் முடிவுமில்லை. "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவரும்" என்று நமக்காகச் சொல்லப்பட்டிருக்கிறதேயல்லாமல் கடவுளுக்குக் **காலமில்லை.** அவருக்கு எக்காலமும் தற்காலமே. ஆகையால், "**இருக்கிறவராக இருக்கிறவர்**" என்று தம்மை அழைத்தார்.

அவர் ஒருவரே எக்காலமும் இருக்கிறவர். மற்ற யாவும் அவரால் இருக்கிறவைகள். அவர் எப்போது வந்தாரோ! எப்படிவந்தாரோ! அவர் உண்டானவருமல்ல இடையில் வந்தவருமல்ல. தாமாய் தானாகயிருக்கிறவர் இருக்கிறவரே **கடவுள்**. இது எவ்வளவு ஆச்சரியம்! ஆகையால் **நித்தியர்** என்று அழைக்கப்படுகிறார். கடவுள் **மாறாதவர்**. அவர் விருத்தாப்பியமாகிப் பலவீனப்படுகிறவர் அல்ல. அவருடைய சுபாவலட்சணங்களில் கூடுதல் குறைதல் இல்லை. அவருடைய ஆலோசனைகள், தீர்மானங்கள், வாக்குகள் என்றும் மாறாதவைகளே. கடவுள் எங்கும் **வியாபித்தவர்**. அவரில்லாத இடமும் அவர் காணாத காரியங்களும் இல்லை. எல்லாரும் அவருக்குள்ளேதான் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். அவருக்கு மறைந்துகொள்ள ஒருவனாலுங்கூடாது. இப்படி அவர் எங்குமிருந்தாலும், அவர் மகிமையுடன் வசிக்கும் இடம் பரலோகம். அங்கிருந்துதான் தேவகுமாரன் உலகத்துக்கு வந்தார். மறுபடியும் உலகத்தைவிட்டு அங்கேதான் போனார். அந்த மகிமையான இடம் எங்கே, எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்று நாம் அறியோம். கடவுள் **சர்வவல்லவர்**. அவருக்கு அளவில்லாத வல்லமையுண்டு. அந்த வல்லமையை அவரது அன்பும் கிருபையும் சேர்ந்து நடத்துவதால், அது நன்மைக்கேதுவாக உபயோகிக்கப்படுகிறது. சாத்தானுக்கிருக்கும் வல்லமையில் ஒருபோதும் நன்மை உண்டாகாமல் தீமையே உண்டாகிறது.

கடவுளை எதிர்த்து மேற்கொள்ள ஒருவராலும் கூடாது. சர்வத்தையும் அவருடைய வல்லமை ஆளுகிறது. சர்வமும் அவருக்குக் கீழடங்கவேண்டும். சர்வவல்லமையுள்ள தேவன் நமக்குப் பிதாவாயிருப்பது எவ்வளவு ஆறுதல் கடவுள் **சர்வஞானமுள்ளவர்.** வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் அவர் அறிவார். அவர் அறிவுக்கு மறைவானது ஒன்றுமில்லை. மனுஷருடைய யோசனைகள், வார்த்தைகள், அந்தரங்க செய்கைகள் யாவும் ஒன்றுவிடாமல் பட்டப்பகலைப் போல் அவருக்குமுன்பாக இருக்கின்றன. நித்திய ஆரம்பத்திலிருந்து நடந்ததும், நடக்கிறதும், நடக்கப்போகிறதுமான சகல காரியங்களையும் நிமிஷத்தில் அறிவார். நாம் சொல்லித்தான் அவருக்குத் தெரியவேண்டுமென்றல்ல. அதுவே சர்வஞானத்தின் மகத்துவம். "ஆ, தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது!" (ரோமர் 11:33). இப்படிப்பட்ட தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கும் பாக்கியம் எவ்வளவு மேலானது! இதை நாம் யோசித்ததுதுண்டா! தேவன் **பரிசுத்தர்.** அதுவே அவருடைய தன்மை. அவரில் எவ்வளவேனும் பாவமில்லை. அவர் மாசற்றவர் தேவன் **அன்புள்ளவர்.** அன்பு உள்ளவர்மாத்திரம் அல்ல, அவரே அன்பு மயமாயிருக்கிறார். இவ்வன்பின் பெருக்கத்தை, பொதுவான பராமரிப்பில் காண்பதுமன்றி, நமக்காகத் தமது குமாரன்மூலமாக அவர் நிறைவேற்றின மகத்தான இரட்சிப்பிலும் காண்கிறோம். தேவன் **நீதியுள்ளவர்.** நியாயமும், நீதியும் அவர் சிங்காசனத்தின் ஆதாரம். அவரில் எவ்வளவேனும் அநீதியில்லை. அவர் தமது கிரியைகளிலெல்லாம் **நீதியுள்ளவர்,** அவர் தமது குமாரனைப் பாவிகளின் பிணையாளியாகச் சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததிலும், குமாரனை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை நிச்சயமாய் இரட்சிப்பதிலும் அவருடைய நீதி பிரகாசிக்கிறது. கடவுள் **தயவும் இரக்கமும் உண்மையுமுள்ளவர்.** அவருடைய தயவையும் இரக்கத்தையும் நாம் அனுபவியாதவர்கள் அல்ல. தமது உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளுவதிலும், தமது வாக்குகளை நிறைவேற்றுவதிலும் உண்மையுள்ளவர். இதுவரை கடவுள் **ஒருவரே** என்றும், அவருடைய **சுபாவலட்சணங்கள்** எவையென்றும் சுருக்கமாய்ப் பார்த்தோம்.

கடவுள் **ஒருவரே** என்று வெகு கண்டிப்பாக நாம் போதிக்கப்பட்டிருக்க, **திருத்துவ** உபதேசம் எங்கேயிருந்து வந்தது? **திரித்துவம்** என்னும் வார்த்தை வேதத்தில் இல்லை; ஆனால் திரித்துவதேவன் வேதத்தில் இருக்கிறார். திரித்துவ உபதேசத்தை விளக்கிக்காட்டும்படி அப்போஸ்தலர் பிரயாசப்படவில்லை; ஆனால் திரித்துவ கடவுளை அவர்கள் ஆராதித்து வந்தார்கள். திரித்துவம் என்றால் மூன்று. திரியேகத்துவம் என்றால் மூன்றான ஒன்று. திரித்துவ உபதேசம் மனுஷனால் உண்டானதல்ல.

மனுஷனுக்கு ஒரே கடவுளை நம்பிச் சேவிப்பதே எளிது. ஒன்று மூன்று, மூன்று ஒன்று என்று போதிப்பது புத்திக்கு எவ்வளவோ குழப்பத்தை உண்டாக்குகிறது. அப்படியிருக்க, தனக்கு குழப்பத்தை உண்டாக்கும் விளங்காத உபதேசத்தை மனுஷன் தானாக எப்படி உண்டாக்குவான்? திரித்துவ உபதேசம் **வேத வெளிப்படுத்தல்.** கடவுள் ஒருவரே என்று போதித்ததும் அந்த வேதமே. அவர் மூவரென்று போதிப்பதும் அந்த வேதமே. திரித்துவ உபதேசம் ஆதிமுதல் இதுவரை அநேகருக்கு இடறலாயிருக்கிறது. அதைப்பற்றி யோசிக்கிறவர்களுக்கே கஷ்டமுண்டாகும். யோசிக்காமல் இருக்கவும் முடியாது. ஒரு சிலர் அதைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடுவதே நல்ல தென்பார்கள். வேறுசிலரோ ஒருவரை மூவராகவும், மூவரை ஒருவராகவும் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்; ஆனால் அது எப்படியென்று விஸ்தரிப்பது நமது வேலையல்ல என்பார்கள். ஒருத்துவ மார்க்கத்தாரோ, இந்தத் தொல்லை யெல்லாம் என்னத்துக்கு? பிதா ஒருவரே தேவன்; கிறிஸ்து விசேஷித்த போதகராக வந்தவர், அவர் நமது வணக்கத்துக் குரியவரல்ல என்கிறார்கள். தற்காலக் கொள்கைக்காரர் தங்களை ஒருத்துவமார்க்கத்தாரென்று சொல்லாவிட்டாலும், கிறிஸ்துவின் தெய்வீகத்தை இவர்கள் மறுப்பதால், அல்லது **தெய்வீகம்** என்னும் வார்த்தைக்கு வேறர்த்தம் கொடுப்பதால் இவர்களும் ஒருத்துவ மார்க்கத்தாரே. **அதனாசியின்** விசுவாசப்பிரமாணத்தை திருச்சபை ஏற்றுக்கொண்டிருந்த போதிலும், மேல் தொடங்கிக் கீழ்வரை ஆளாளுக்கு ஒவ்வொரு கொள்கை ஏற்பட்ட இக்காலத்தில் **அதனாசியின்** விசுவாசப்பிரமாணம் பழைய காலத்துக் கதைபோலாயிற்று. இவ்வளவு தர்க்கத்துக்கேதுவான திரித்துவ உபதேசத்தை இந்தப் புஸ்தகத்தில் சேர்க்கலாமோ வென்று சந்தேகித்தேன். ஆனால், இதுவரை நான் எழுதின அதிகாரங்களின் சாரத்தைக் கவனிக்கும்போது திரித்துவத்தைப் பற்றி எழுதாமல் விட்டுவிடக்கூடவில்லை. மேலும், இந்தப் புஸ்தகத்தைப் படிப்பவர்கள்: இவ்வளவுதூரம் சொன்னவர் திரித்துவத்தைப்பற்றி எழுதாமல் விட்டாரே என்று சொல்லவும் நேரிடும். நானே என் சுயபிரயோஜனத்துக்காக அதைப்பற்றி யோசிக்க வேண்டியதாயிற்று. பூரணமாய் அறிந்துகொண்டேன் என்று நான் சொல்லுகிறதில்லை. தேவ கிருபையை முன்னிட்டு எவ்வளவு நாம் யோசிக்கக்கூடுமோ அவ்வளவு யோசிப்பது தப்பிதமல்ல. வழிவிலகாதபடி மாத்திரம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

திரித்துவ உபதேசம் நமது புத்திக்குக் குழப்பமாயிருப்பது மெய்தான். திரித்துவ தேவனுக்கு அது குழப்பமில்லை. மனுஷன் மூன்று பாகங்கள் உள்ளவனாயிருந்தும் அவன் மனுஷனா யிருப்பதில் குழப்பமில்லை. திரித்துவம் நமது புத்திக்கு விளங்கா

திருப்பதினாலே அதைக் கண்ஜாடையாக விட்டுவிடலாமா? அல்லது ஆராய்ந்து பார்க்கலாமா? வேதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் திரித்துவத்துக்குத் தப்பமுடியாது. திரித்துவம் **அனாவசியம்** என்று சொல்லமுடியாது. தேவனை அறிய வேண்டியது மகா முக்கியம் தேவன் தம்மைப்பற்றி எவ்வாறு வெளிப்படுத்துகிறாரோ, அவ்வாறு வெளிப்படுத்துவதற்கு ஒரு நோக்கமிருக்கவேண்டும். அந்த வெளிப்படுத்தலை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால் நமது ஆத்துமா சேதப்படும். ஆவிக்குரிய காரியங்களில் நிர்விசாரமாயிருப்பவர்கள் இந்த உபதேசத்தை நினைக்கமாட்டார்கள். கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு ஜீவிக்கிற விசுவாசிகள் திரித்துவத்தைப்பற்றி யோசிக்காமலிருக்கமுடியாது. ''உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்'' என்னும் வாக்கியத்தைமாத்திரம் பிடித்துக்கொண்டு, ஒருத்துவ மார்க்கத்தார் வாதாடுகிறார்கள்.

தேவன் **ஒருவரே** என்னும் விஷயத்தில், ஒருத்துவ மார்க்கத்தாரைப்போலவே நாமும் வைராக்கியமாயிருக்க வேண்டியது. ஆனால் அந்த ஒருவர் மூவராக வெளிப் பட்டிருப்பதை மறுக்க யாரால் கூடும்? தேவன் ஒருவரானால் அந்த தேவன் யார்? பிதாவா? குமாரனா? பரிசுத்த ஆவியா? பிதாமாத்திரம் தேவனானால் குமாரனையும் பரிசுத்தாவியையும் எந்த வரிசையில் சேர்க்கிறது? பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவியும் தேவன் என்பது மெய்யானால் மூன்று தேவர்கள் உண்டென்று சொல்லுகிறோமல்லவா? "என்னையன்றி உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்னும் தேவனுடைய கண்டிப்பான கட்டளைக்கு இது விரோதமல்லவா? மூவரையும் தனித்தனியே தேவன் என்று சொன்னபின், மூன்று தேவர்கள் அல்ல, தேவன் ஒருவரே என்று சொன்னால் கேட்பவர்களுக்கு எப்படியிருக்கும்? நாம் வேறே மார்க்கத்தாராயிருக்க, ஒரு கிறிஸ்தவன் நமக்கு இதைச்சொன்னால் நாம் பரியாசஞ்செய்யமாட்டோமா? இதை அறியும்படி நம்மிடத்தில் விசாரிக்கும் புறமதஸ்தர்களுக்குத் திருப்தியாய் உத்தரவு கொடுக்கமாட்டாமல் திகைக்கிறோமே. இதைவிட, பிதா ஒருவரே தேவன் என்று வைத்துக்கொண்டால் இந்தச் சங்கடம் இருக்கமாட்டாதென்கிற சோதனையும் வருகிறதே. அந்தச் சோதனைக்கு இணங்கி, ஒருத்துவ மார்க்கத்தார் கொள்கையை அனுசரித்தவர்களும் உண்டே. அவர்களைச் சேரத் தைரியம் இல்லாதவர்கள் வெளிக்கு நம்மோடிருந்து, உள்ளுக்குள் ஒருத்துவ மார்க்கத்தாராயிருக்கிறார்கள் அல்லவா? அந்தத் தொல்லை யெல்லாம் நமக்கென்னத்துக்கு என்று **அதனாசியின்** விசுவாசப்பிரமாணத்தை மந்திரம்போல சொல்லுகிறவர்களும் இல்லையா? இது இவ்வாறிருக்க, பாடசாலையில் படித்து வரும் சிறுபிள்ளைகள், ஒன்று, ஒன்று, இரண்டு இரண்டு, மூன்று, மூன்று

என்று பவளத்தை வைத்து, எண்ணக்கற்றவர்களாதலால், நம்மைப்பார்த்து ஒன்று எப்படி மூன்றாகும்? மூன்று எப்படி ஒன்றாகும்? என்று கேட்பதை நாம் அறியாதவர்கள் அல்ல என்ன சொன்னாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் உபாத்தியாயர் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த கணக்கே கணக்கு. திரித்துவத்தைக் கணக்குப் பார்ப்பதில் அந்தப் பிள்ளைகளும் நாமும் ஒன்றுதானே. பவளக்கணக்கு ஆவிக்குப் பொருந்தாது. ஒருவனைக் காணும்போது அவனை ஓர் **ஆள்** என்கிறோம். அவ்வாறு பல ஆள்களைக் கணக்கிட்டு இத்தனை **ஆள்கள்** என்கிறோம். இது சரி. ஆவியாயிருக்கிற தேவனைப் பள்ளிக்கூடக் கணக்கால் கூட்டக்கழிக்கப் பார்ப்பது சரியோ? மேலும் அளவிலடங்காத தேவ இரகசியத்தை அற்ப அறிவுடையோராகிய நாம் பூரணமாய் அறிந்துகொள்ளலாம் என்று நினைப்பதும் பிசகல்லவா? திரித்துவ உபதேசம் சொல்லுகிறதினால்மாத்திரம் அறியக்கூடியதல்ல. அதை விளக்கிக்காட்ட மனுஷருடைய அறிவும் போதாது, வாக்கு போதாது. அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களும் இந்தப் பெரிய இரகசியத்தை தங்கள் புத்தியால் அறியாவிட்டாலும், ஆவிக்குரிய தங்கள் **அனுபவத்தால்** அறிந்து, திரியேக தேவனை ஆராதித்து வந்தார்கள். அவர்கள் ஒரே தேவ வணக்கமுள்ளவர்களாயிருந்தும், இது எப்படி ஒன்று மூன்று, மூன்று ஒன்று என்று அவர்கள் கேட்டதில்லை. அவ்விதமான குழப்பம் அவர்களுக்குள் இல்லாதிருந்ததினாலேதான், அப்போஸ்தலன். திரித்துவத்தைப் பற்றி விஸ்தரிக்க எண்ணவில்லை. அவர்களுடைய போதகத்தை ஏற்றுக்கொண்ட ஆதிச்சபைகளுக்குள்ளும் திரித்துவத்தைப்பற்றிய இடறல் இருந்ததாகத் தோன்றவில்லை. பல தேவ வணக்கக் காரராகிய புறஜாதிகளுக்குள் அப்போஸ்தலன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, மூன்று தேவர்கள் உண்டென்று அவர்கள் எண்ணிக்கொள்ளாதபடி பிரசங்கித்தது எவ்வளவு ஞானம்! அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஆவியினால் நிறைந்தபோது மூன்று தேவர்கள் என்கிற எண்ணமே அவர்களுக்கு வந்ததில்லை.

அப்போஸ்தலன் தமது நிருபங்களில் பிதா, குமாரன், ஆவி என்னும் பதங்களை அடிக்கடி உபயோகித்திருந்தும், திரித்துவத்தைப்பற்றிய வியாக்கியானத்தை அங்கே காணோம். அவருக்கு "கடவுள் ஒருவரே." அந்த கடவுளுக்குள் மூவரையும் கண்டார். பிற்காலத்தில் கல்விமான்களான கிறிஸ்தவர்கள் திரித்துவத்தைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தபோது பற்பல உபதேசங்கள் உண்டாயின. திருச்சபையோ எக்காலத்திலும் வேதத்தையே ஆதாரமாகப் பிடித்து நின்றது. திரித்துவத்தைப்பற்றி விபரீதமான கொள்கைகள் உண்டாகி, கிறிஸ்தவர்கள் அலசடிப்பட்டகாலத்தில் அவர்களை விசுவாசத்தில் உறுதிப்

படுத்தும்படி **நிசேயா, அதனாசியின்** விசுவாசப்பிரமாணங்கள் உண்டாயின. திரித்துவத்தைப் பூரணமாய் விளக்கிக்காட்ட வேண்டுமென்பது இந்த விசுவாசப் பிரமாணங்களின் நோக்கமல்ல. திரித்துவத்தைப்பற்றி வேதம் பலவிடங்களிலும் கூறியிருக்கிற சத்தியங்களை ஒன்றாகச்சேர்த்து, கிறிஸ்தவர்களை அந்தச் சத்தியங்களை விட்டு விலகாதபடி பாதுகாக்கவேண்டுமென்பதே அவைகளின் நோக்கம்.

விசுவாசப்பிரமாணங்கள் வேதசத்தியங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் அவைகளை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியது நியாயமே. ஆகிலும் திரித்துவ இரகசியத்தை அறியும் அறிவு, **ஆவிக்குரிய அனுபவத்தால்** வரவேண்டியது. ஓர் ஆலயத்தில் ஆராதனை நடந்தபோது **அதனாசியின்** விசுவாசப்பிரமாணம் வாசிக்கப்பட்டது. குருவானவரும் ஜனங்களும் அதை மாறிமாறி வாசித்தார்கள். பிதா தேவன், குமாரனும் தேவன், பரிசுத்த ஆவியும் தேவன்; ஆகிலும் மூன்று தேவர்களல்ல, தேவன் ஒருவரே என்று வாசித்தபோது, எனக்குப்பின் நின்ற ஒருவர். இது என்ன கணக்கப்பா என்று சத்தமிட்டார். ஆலயத்திலிருக்கிறோம் என்பதையும் அவர் மறந்து போனார். அவர் மாத்திரமல்ல, அநேகருக்கு இது குழப்பமாகவே தோன்றுகிறது. பிதா தேவனாம், குமாரனும் தேவனாம், பரிசுத்த ஆவியும் தேவனாம், ஆகிலும் தேவன் ஒருவராம், இதை எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று கேட்பவர் பலர். இது புத்தியினால் மாத்திரம் அறியக்கூடியதல்ல. தேவன் தமது குமாரனை அனுப்பி நம்மை இரட்சிக்கும்படி சித்தங்கொள்ளாதிருந்தால் திரித்துவ உபதேசத்துக்கு இடமிராது. பிதா, குமாரன், ஆவி என்பது நமது இரட்சிப்பின் சம்பந்தமாகவே வெளிப்பட்டது. எந்த வழியாக திரித்துவம் வெளிப்பட்டதோ, அந்த வழியாகவே திரித்துவ இரகசியத்தை அறியவேண்டும். இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கு திரித்துவம் இடறலாயிருப்பதில்லை. அதை அவர்கள் விளக்கிக்காட்டக்கூடாமற்போனாலும், ஆவியினால் குமாரன்மூலமாய் பிதாவைக் கிட்டிச்சேர்ந்து, நாளுக்குநாள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகச் சொந்தமாக்கிக்கொள்ளாதவர்கள் திரித்துவ உபதேசத்தில் இடறுவது ஆச்சரியமல்ல. இது ஆவிக்குரிய வெளிப்படுத்தலேயன்றி, புத்தியினால்மாத்திரம் கிரகிக்கக்கூடியதல்ல.

திரித்துவத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்கள், கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகையால் கிறிஸ்துவின் தெய்வீகத்தை அவர்கள் மறுக்கத்தான் வேண்டும். அவருடைய தெய்வீகத்தை ஒப்புக்கொண்டால், ஆவியானவரின் தெய்வீகம் தானாக நிரூபிக்கப்படும். உடனே திரித்துவ உபதேசம் ஸ்தாபிக்கப்படும். பிதாவை கடவுள் என்று

எல்லாரும் ஒப்புக்கொள்வதால் அவருடைய தெய்வீகத்தை இங்கே எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இயேசுகிறிஸ்து யாரென்று பார்ப்போம். கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் **என்ன நினைக்கிறீர்கள்** என்று ஆண்டவர் பரிசேயரைப்பார்த்து மாத்திரமல்ல, எக்காலத்திலுமுள்ள எல்லா மனுஷரைப் பார்த்தும் கேட்கிறார். என்ன **பேசுகிறீர்கள்** என்றல்ல, **என்ன நினைக்கிறீர்கள்** என்றல்லவோ கேட்கிறார். கிறிஸ்துவின் தெய்வீகத்தைப்பற்றி **"தேவகுமாரன்"** என்னும் இருபத்துமூன்றாம் அதிகாரத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால், இங்கே சுருக்கமாகமாத்திரம் பார்ப்போம். பிதா தமது குமாரனை **தேவன்** என்று அழைக்கிறார் (எபி. 1:8). கிறிஸ்து இராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தர் (வெளி 19:16). அவர் வானத்திலிருந்து வந்த கர்த்தா. (1 கொரி. 15:47). அவர் அல்பா ஒமேகா, ஆதியும் அந்தமுமானவர்; அவர் சர்வவல்லமையுள்ள கர்த்தர் (வெளி. 1:8) அவர் மெய்யான தேவன் (1 யோவான் 5:10). அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்துக்கும் மேலான தேவன் (ரோமர் 9:5). பிதாவும் குமாரனும் ஒன்று (யோவான் 10:30). குமாரனைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (யோவான் 14:9). குமாரனை அறிவதே பிதாவை அறிவது (யோவான் 8:19). குமாரன் தேவனுக்குச் சமானமானவர் (பிலி. 2:6). பிதாவின் நாமமும் குமாரனின் நாமமும் ஒன்று (மத். 28:19). தாம் மனுஷனாயிருக்கத் தம்மை தேவன் என்று சொன்னவர் (யோவான் 10:33). கிறிஸ்து தேவன் என்பது இப்படிப்பட்ட நாமங்களால்மாத்திரமல்ல, அவருடைய **தெய்வீக இலட்சணங்களாலும்** விளங்குகிறது.

குமாரன் நித்தியர் (யோவான் 8:35,56). அவர் எங்கும் நிறைந்தவர் (மத். 18:20; 28:20). அவர் சர்வ வல்லவர் (மத். 28:18; எபி. 1:3). அவர் சர்வஞானமுள்ளவர் (யோவான் 2:25; கொலோ. 2:3). அவர் மாறாதவர் (எபி. 13:8). அவருடைய இலட்சணங்களில் மாத்திரமல்ல, **அவருடைய கிரியைகளிலும்** தெய்வீகம் விளங்குகிறது. குமாரன் சிருஷ்டிகர் (யோவான் 1:3). அவர் சர்வத்தையும் தாங்கி நடத்துகிறவர் (எபி. 1:3). அவர் பாவங்களை மன்னித்து, மனிதருக்குச் சமாதானத்தையும் ஆத்தும இளைப்பாறுதலையும் அருளுகிறவர் (லூக்கா 5:24; மத். 11:28). அவர் நமது ஜீவனுக்கு அதிபதி (யோவான் 10:28). அவர் மரித்தோரை எழுப்புகிறவர் (யோவான். 5:21). நமது அற்பமான சரீரங்களை மறுரூபமாக்க வல்லவர் (பிலி. 3:21). எல்லாருக்கும் நியாயத் தீர்ப்புச்செய்து அவரவருக்கு ஏற்ற பலனருளுகிறவர் (மத். 16:27). அவர் தேவ தூதர்களாலும் மனுஷராலும் வணங்கப்படத்தக்கவர் (எபி. 1:6; பிலி. 2:10). அவர் நமது ஜெபத்தைக் கேட்கிறவர் (அப். 7:59). பழைய ஏற்பாட்டில் யெகோவாவைப் பற்றிச் சொல்லியிருக்கிற விஷயங்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லியிருக்கின்றன. இவ்வாறு

தேவனுக்கு மாத்திரமே **உரிய நாமங்கள் இலட்சணங்கள், கிரியைகள், வணக்கங்களுக்குரியவரை** தேவன் என்போமா? அல்லது வேறுவிதமாய்ப் பேசுவோமா? குமாரனைப் புறக்கணித்து, பிதாவைப் பற்றிக்கொண்டிருக்கப் பார்ப்பது முடியாத காரியம். என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பின பிதாவை அசட்டைபண்ணுகிறான். என்னைக் கனம்பண்ணாதவன் என்னை அனுப்பினவரைக் கனம் பண்ணாதவனாயிருக்கிறான். என்னை ஏற்றுக்கொள்ளாதவன் என்னை அனுப்பின பிதாவை ஏற்றுக்கொள்ளாதவனாயிருக்கிறான். என்னை யாரென்று அறியாதவன் என் பிதாவையும் அறியமாட்டான். தேவன் தம்மைத் தமது குமாரன்மூலமாக வெளிப்படுத்தினது உண்மையானால், அந்தக் குமாரனை அறியாமல் பிதாவை எப்படி அறியக்கூடும்? கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கிறவர்கள் தாங்கள் பிதாவாகிய தேவனைப்பற்றிக்கொண்டிருக்கிறதாகச் சொன்னாலும், ஆண்டவரின் வாக்கின்படி அவர்கள் பிதாவை அறிந்தவர்கள் அல்ல. கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கிறவர்கள், தங்களுக்கே கேடுண்டாக, அநேகம் தெளிவான வேதவாக்கியங்களைத் தள்ளிவிடுகிறார்கள். சுவிசேஷத்தை இருக்கிறபடி ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஏற்றுக் கொள்ளாதிருக்க முடியாது. கிறிஸ்து தேவன் என்பது மெய்யானால், அவருடைய தெய்வீகத்தை மறுக்கிறவர்கள் கொடிய குற்றத்திற்குள்ளாவார்கள். ஒருவன் அவருடைய தெய்வீகத்தை நம்பாததினாலே உண்மை அறியமாட்டாது. அவ்வாறு சந்தேகிக்கிறவனுடைய குற்றமும் குறையமாட்டாது. தன் மனைவி உத்தமியாயிருக்க, அவளைப்பற்றிப் புருஷன் சந்தேகப்படுவதாலே அவள் கெட்ட ஸ்திரீயாகமாட்டாள். ஆனால் அவ்வாறு சந்தேகப்பட்ட புருஷன் அவளை அவமானப்படுத்தின பெருங்குற்றத்திற்கு ஆளாவான். நமது சந்தேகம் கிறிஸ்துவின் தெய்வீக உண்மையை பொய்யாக்க மாட்டாது. ஆனால் தேவ தூஷணம் என்னும் பயங்கரமான குற்றத்திற்கு நாம் ஆளாவோம்.

கிறிஸ்துவின் தெய்வீகத்தை எவ்வளவு நிரூபித்தோமோ அதுபோலவே **ஆவியானவருடைய** தெய்வீகத்தையும் வேதவசனங்களால் நிரூபிக்கக்கூடும். கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கிறவர்கள், ஆவியானவரை ஒரு சக்தி என்றுதானே சொல்லவேண்டும். கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஒப்புக்கொள்ளும் போது ஆவியானவர் தேவன் என்பது தானாக வெளிப்படும். ஆவியானவர் வேதத்தில் அறிவும் உணர்வுமற்ற ஒரு சக்திபோல் பேசப்படாமல் ஆளாகவே பேசப்படுகிறார்: ''**பரிசுத்த ஆவியானவர்**'' என்னும் அதிகாரத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால் இங்கே வெகு சுருக்கமாகமாத்திரம்

பார்ப்போம். அவர் அறிவுள்ளவர் (1 கொரி. 2:.10). அவர் இருதயங்களை ஆராய்கிறவர், நமக்காகப் பரிந்துபேசுகிறவர் (ரோமர் 8:27). அவர் அன்புள்ளவர் (ரோமர் 15:30). அவர் துக்கப்படக்கூடியவர் (எபே. 4:30). அவர் பேசுகிறவர் (வெளி. 2:7). அவர் சாட்சிகூறுகிறவர் (ரோமர் 8:16), அவர் போதிக்கிறவர், உணர்த்துகிறவர், வெளிப்படுத்துகிறவர், சகல சத்தியத்திலும் நடத்துகிறவர் (யோவான் 14:26). தேவ ஊழியத்துக்கு ஆள்களைத்தெரிந்து ஏற்படுத்துகிறவர் (அப். 20:28). அவர்களை ஊழியஞ்செய்யும்படி அனுப்புகிறவர் (அப். 16:6). வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறவர் (1 கொரி. 12:11). ஆவியானவர் நித்தியர் (எபி. 9:14). அவர் எங்கும் இருக்கிறவர் (சங். 139:7). அவர் சர்வவல்லவர் (லூக்கா 1:35). அவர் சர்வஞானமுள்ளவர் (1 கொரி. 2:10,11). ஆவியானவர் சிருஷ்டிகர் (யோபு. 33:4; சங். 104:30). ஜீவனை அருளுகிறவர் (ரோமர். 8:11; ஆதி. 2:7). தீர்க்கதரிசிகள்மூலமாய்ப் பேசினவர் (2 பேதுரு. 1:21). தேவநாமத்தோடு ஆவியானவர் நாமமும் சேர்ந்து வருகிறது (1 கொரி. 12:4-6; மத். 28:19; 2 கொரி. 13:14). பாவம் அவருக்கு விரோதமாகச் செய்யப்பட்டதாக இரட்சகர் சொன்னார் (மத். 12:31). பேதுரு அனனியாவைப் பார்த்து: நீ பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பொய்சொன்னாய் என்றார். சற்று பொறுத்து, நீ மனுஷனிடத்தில் அல்ல, **தேவனிடத்தில்** பொய் சொன்னாய் என்றார். ஆவியானவரை பேதுரு தேவன் என்றழைக்கிறார். இவ்வாறு தேவனுக்குமாத்திரம் உரிய **நாமங்கள், இலட்சணங்கள், கிரியைகள்** ஆவியான வருக்கிருப்பதால் ஆவியானவரை தேவன் என்கிறோம்.

இதுவரை சொன்னது சரிதான். விசுவாசிகள் யாவரும் மேற்சொன்னவைகளை ஒப்புக்கொள்ளுவார்கள். இனிமேல்தான் கஷ்டமிருக்கிறது. தேவன் ஒருவரே என்று சொல்லும்போது அவர் பிதாமாத்திரமல்ல; குமாரனும், ஆவியானவரும் தேவன் என்பதை வேதவாக்கியங்களால் பார்த்தோம். அப்படியானால் **மூன்று தேவர்களா** என்கிற கேள்வி உடனே ஏற்படுகிறது. பிதா தேவன், குமாரனும் தேவன், பரிசுத்தாவியும் தேவன் என்று சொன்னால் மூன்று தேவர்கள் என்றுதானே சொல்லவேண்டும். ஆனால் "உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்றும், "என்னையன்றி உனக்குள் வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாமென்றும்" தேவன் ஆதிமுதல் கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருக்கிறாரே. கற்பனைகளில் எது பிரதானம் என்று கேட்டவனுக்கு "நம்முடைய தேவனாகிய கர்த்தர் **ஒருவரே** கர்த்தர்" என்று ஆண்டவரும் சொன்னார். அவர் சாத்தானைப் பார்த்து: "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் **ஒருவருக்கே** ஆராதனை செய்வாயாக" என்று சொன்னார். நல்ல போதகரே என்று சொன்னவனுக்கு "தேவன் **ஒருவர்** தவிர நல்லவன் ஒருவனுமில்லையே'' என்றார், நமதாண்டவர் தாம்

தேவனாயிருந்தும் மூன்று தேவர்களை அவர் பிரசங்கித்ததில்லை. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைப்பற்றித் திரும்பத்திரும்பப் பேசியிருக்கிற பவுல்தானும் "தேவன் **ஒருவரே**" என்றெழுதினார் (1 தீமோ. 2:5). அப்போஸ்தலரும் ஆதிச்சபையும் ஒரே தேவவணக்கக்காரரேயன்றி, மூன்று தேவர்களை வணங்கினவர்கள் அல்ல. கடவுள் **ஒருவர்** என்னும் விஷயத்தில் நாம் ஒருத்துவ மார்க்கத்தாரைவிட கண்டிப்பாயிருக்கவேண்டியதே. ஆனால் அவர்கள் குமாரனையும் ஆவியானவரையும் தள்ளிவிடுகிறது போல நாம் தள்ளிவிடமாட்டோம். தேவ இரகசியம் விளங்காததினால், தேவ வெளிப்படுத்தலை நாம் தள்ளிவிடுவது நியாயமல்ல. ஆவியானவரின் உதவியினால் நாம் எவ்வளவு தூரம் அறியக்கூடுமோ, அவ்வளவு அறியும்படி நாடுவது தேவசித்தம். தேவ இரகசியத்தை நாம் பூரணமாய் அறிந்துக்கொள்ளக் கூடுமானால் அவர் தேவன் அல்ல. அற்ப அறிவுடையோர் அளவில்லாத **அறிவைப்** பூரணமாய் அறிந்துகொள்வது எப்படி?

கடவுள் ஒருவரே என்பது இஸ்ரவேலர் ஏற்றுக்கொண்ட கண்டிப்பான போதனை. அப்படியிருந்தும் அந்த ஒரே கடவுள் **பன்மையில்** பேசப்பட்டிருப்பதைப் பழைய ஏற்பாட்டில் காணலாம். அந்த பன்மை நாலு ஐந்து ஆகவல்ல, **மூவராக** மாத்திரம் வெளிப்பட்டிருப்பதையும் காண்கிறோம். ஒரே கடவுள் தம்மைப் **பன்மையில்** பேசினது யூத ரபிமார்களுக்குத் திகைப்பாயிருந்தது. ஆகிலும் அதன் இரகசியத்தை அறிந்துகொள்ள அவர்களால் கூடவில்லை. "பின்பு கடவுள் **நமது** சாயலாகவும், **நமது** ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்றார் (ஆதி. 1:26). இங்கே ஒருவராகிய கடவுள் நமது என்னும் பன்மையில் பேசுகிறார். **நமது** என்னும் சொல்லை கடவுள் மரியாதையாக உபயோகித்தார் என்று நினைக்கிறவர்களுண்டு. அது பின்வரும் வசனத்தால் சரியல்லவென விளங்கும். மனுஷன் பாவம் செய்தபோது: "இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாக நம்மில் **ஒருவரைப்போல்** ஆனான்" என்று தேவன் சொன்னார் (ஆதி. 3:22), ஆகையால் நமது என்பது மரியாதைச் சொல்லல்ல; அது ஒருவருக்கு மேற்பட்ட ஆள்களைக் குறிக்கிறதென்பது தெளிவாயிருக்கிறது.

மேலும் பாபேல் கோபுரத்தின் சம்பந்தமாய் "**நாம்** இறங்கிப்போய் அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்" என்றார் (ஆதி. 11:7). இங்கே பேசுகிற கடவுள் ஒருவராயிருந்தும் தம்மைப் **பன்மையில்** பேசுகிறார். மோசே ஜனங்களுக்கு ஆசீர்வாதங் கூறினபோது: கர்த்தர், கர்த்தர், கர்த்தர் என்று மூன்றுவிதமாய்க் கூறினதற்கு காரணமென்ன? (எண். 6:24-26). ஏசாயா தமது தரிசனத்தில் ஆண்டவரைக் கண்டபோது,

சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்று: "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று மும்முறை போற்றினதற்குக் காரணமென்ன? அச்சமயத்தில் ஆண்டவர்: **யாரை நான் அனுப்புவேன்? யார் நமது** காரியமாகப் போவான் என்று கேட்டார். இங்கே **நான்** என்றும், **நமது** என்றும் சொல்லப்பட்ட வார்த்தைகளால், கடவுள் தம்மை ஒருமையிலும், அதே நேரத்தில் பன்மையிலும் பேசுகிறாரல்லவா? அந்த பன்மை நாலு ஐந்து அல்ல, மூன்றென்று சேராபீன்கள் போற்றுதலால் காண்கிறோமே. இவைபோன்ற பலகுறிப்புகள் பழைய ஏற்பாட்டில் வந்தபோதிலும், **திரித்துவம்** என்ற உபதேசத்தை யூதர்கள் அறியமாட்டார்கள். ஒருவர் மூவர், மூவர் ஒருவர் என்னும் உபதேசம் யூதனுக்குத் தெரியாது. அதை அவன் ஏற்றுக்கொள்ளவுமாட்டான். யூதன் மகா வைராக்கியமான ஒருத்துவமார்க்கத்தான். "உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்பதே யூதனுக்கு நித்திய பாடம். மனுஷன் தன் சுய இஷ்டப்படி வேதத்தை எழுதுகிறதாயிருந்தால், தேவன் ஒருவரென்றும் அவரே மூவரென்றும் எழுதவேமாட்டேன். இது தேவ வெளிப்படுத்தலேயன்றி மற்றப்படியல்ல. அந்த வெளிப்படுத்தலும் படிப்படியாகவே நமது அறிவுக்கு வருகிறது.

பழைய ஏற்பாட்டில் மங்கலாக மறைந்திருந்த **திரித்துவம்,** புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின்மூலமாகத் தெளிவாயிற்று. உலகத்தை இரட்சிக்கும்படி தேவகுமாரன் மாம்சத்தில் வராதிருந்தால் திரித்துவ உபதேசத்துக்கு இடமிருக்காது. திரித்துவ உபதேசம் நமது இரட்சிப்பின் வழியாக வந்தது. எந்த வழியாக திரித்துவம் வெளிப்பட்டதோ அந்த வழியாகவே திரித்துவத்தை அறியவேண்டும். பழைய ஏற்பாட்டில் **குமாரன்** கர்த்தருடைய **தூதனானவர்** என்னும் பேரால் வெளிப்பட்டிருக்கிறார். **ஆவியானவரும்** பக்தருக்குள் கிரியை செய்திருக்கிறார். ஆகிலும் தேவன் மூவர் என்னும் எண்ணம் யூதருக்கு வரவேயில்லை. குமாரன் மாம்சத்தில் வந்தபின்புதான் அம்மூவருடைய சம்பந்தம் விசுவாசிகளுக்குப் பிரத்தியட்சமாயிற்று. தேவன் **ஒருவர்** என்பது மாறாத சத்தியமானாலும், அந்த ஒரே தேவனுக்குள் பிதா, **குமாரன், பரிசுத்த** ஆவி என்னும் மூவருண்டு என்கிற விஷயம் வெளிப்பட்டது. "நாம்" என்று தேவன் முற்காலத்தில் பன்மையில் பேசினது இம்மூவரைக் குறித்தே. "கர்த்தர், கர்த்தர், கர்த்தர்" என்று மோசே ஆசீர்வாதம் கூறினது இம்மூவர் நாமத்திலேயே. ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,'' என்று சேராபீன்கள் போற்றினது இம்மூவரையே.

ஆகவே, தேவனில் விளங்கிய **பன்மை** இன்னதென்பது கிறிஸ்து வந்தபோதுதான் தெளிவாயிற்று. அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, **குமாரன்** ஜெபிக்க, **பிதா** அவரோடு பேச,

ஆவியானவர் குமாரன் மீதிறங்கக் காண்கிறோம். கிறிஸ்துவின் ஜீவியத்தில் குமாரன் பிதாவோடும், பிதா குமாரனோடும் பேசுவதைக் காண்கிறோம். ஆகையால் பிதா குமாரனல்ல, குமாரன் பிதாவல்ல. ஆண்டவர் தமது சீஷர்களைப் பார்த்து: "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூடயிருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு **தேற்றரவாளனை** அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்றார். இந்த வசனத்தில் பிதாவையும், குமாரனையும், ஆவியானவரையும் காண்கிறோம். "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" என்றார். இங்கும் பிதா, குமாரன், ஆவியைக் காண்கிறோம். அப்போஸ்தலன் கூறுகிற ஆசீர்வாதத்தில் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிதாவின் அன்பும், ஆவியானவருடைய ஐக்கியமும் உங்களோடிருப்பதாக" என்கிறார். இவ்வாறு தேவனுக்குள் மூவரிருப்பதால் அவர் தம்மைப் **பன்மையில்** பேசினது சரியே.

இன்னும் நமது சங்கடம் தீரவில்லை. கடவுள் ஒருவராயிருக்க அவர் மூவராயிருப்பது எப்படியென்கிற கேள்விக்கு இன்னும் சமாதானம் சொல்லவில்லை. பிதா தேவன், குமாரன் தேவன், ஆவியானவரும் தேவன் என்று சொல்லப்போனால் மூன்று தேவர்கள் உண்டென்று சொல்லவேண்டியதாகுமோ. அப்படிச் சொன்னால், ஒரே தேவன் என்னும் மாறாத வேதபோதனைக்கு அது விரோதமாகுமே. பிதா, குமாரன் ஆவியாகிய மூவரையும் நாம் தனித்தனியே தேவன் என்று ஒப்புக்கொண்டால் தேவன் ஒருவரென்று சொல்வ தெப்படி? இதைச் சமாதானப்படுத்தப் பிரயாசப்பட்டவர்கள் பலர். தேவன் ஒருவர்தான்; அந்த தேவனே ஒரு சமயத்தில் **பிதாபோலவும்,** இன்னொரு சமயத்தில் **குமாரன்**போலவும், வேறொரு சமயத்தில் **ஆவியானவர்**போலவும் தோன்றினார் என்கிறார்கள். இது மெய்யானால் பிதா குமாரனோடு பேச, குமாரன் பிதாவோடு பேசினதெப்படி? பிதாவாகக் காணப் பட்டவரே குமாரனாக மாறினால் பிதா இல்லாமற்போவாரே. ஆகையால் இது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மற்றவர்கள்: தேவன் ஒருவர்தான், அவர் செய்த **மூன்று கிரியைகளினால்** மூன்று விதமாகப் பேசப்படுகிறார். அதாவது சிருஷ்டிப்பில் அவர் பிதாவாகவும், இரட்சிப்பில் அவர் குமாரனாகவும், பரிசுத்தஞ் செய்வதில் அவர் பரிசுத்த ஆவியாகவும் பேசப்படுகிறார் என்கிறார்கள். இதுவும் சுவிசேஷ சத்தியத்துக்குப் பொருந்தாது.

இப்படி **ஒருவரே** மூன்றுவிதமாக மாறிமாறிக் காணப் பட்டது மெய்யானால் தேவன் தம்மைப் **பன்மையில்**

பேசினதற்குக் காரணமென்ன? ஆகையால் வேதவாக்கியங்களின் படி தேவன் **ஒருவரே** என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதைக் கடைசிவரை விடவேகூடாது. அதுபோலவே, அந்த ஒரே தேவனில் மூவர் காணப்படுவதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொண்டபின், அந்த ஒருவர் எப்படி மூவர், மூவர் எப்படி ஒருவர் என்பதை ஆராயச்சி செய்யவேண்டும். அப்போஸ்தலர் திரித்துவ உபதேசத்தின் இரகசியத்தைத் திரட்டி உருட்டி எழுதிவைத்திருப்பார்களானால் நமக்குக் கஷ்டம் இருக்கமாட்டாது. மற்றச் சத்தியங்களை எப்படி வேதத்தில் அங்குமிங்கும் தேடிப் படிக்கிறோமோ. அதுபோலவே திரித்துவத்தின் இரகசியத்தையும் ஆராய்ந்து படிக்கவேண்டும். புறம்பான ஆராயச்சி மாத்திரமல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக ஆவிக்குரிய **அனுபவத்தால்** இந்த இரகசியத்தை அறியவேண்டும்.

திரித்துவ இரகசியத்தைத் திருஷ்டாந்தங்களினால் விளக்கிக்காட்டப் பிரயாசப்பட்டவர்கள் பலர். அத் திருஷ்டாந்தங்கள் நமக்குச் சற்று தெளிவுண்டாக்கினாலும் அவைகள் பூரணமுள்ளவைகள் அல்ல. படம் பிடிப்பவர்கள் ஒரு ஆளை மூன்றுவிதமாக உட்காரவைத்து எடுத்தால், அந்தப் படங்கள் மூன்று சாயலாக தோன்றினாலும் ஆள் ஒன்றே என்கிறார்கள். இந்தத் திருஷ்டாந்தம் தேவன் ஒருவரே பிதா போலவும், குமாரன்போலவும், ஆவியானவர்போலவும் தோன்றினார் என்கிற கொள்கைக்கு இடங்கொடுக்கும். மின்சாரத்தில் ஒளி, உஷ்ணம், சக்தி என மூன்று இருந்தும் மின்சாரம் ஒன்றே என்கிறார்கள். இது தேவன் நடப்பித்த மூன்று கிரியைகளினால் மூவராகத் தோன்றினாலும், ஆள் ஒன்றே என்னும் கொள்கைக்கு அனுசாரமாயிருக்கும். மூன்று பாகமுள்ள மனுஷன் ஒருவனாயிருப்பதுபோல், மூன்று பாகமுள்ள தேவன் ஒருவரே என்பார் உண்டு. வேர், மரம், கிளைகள் சேர்ந்து ஒரே விருட்சமாயிருப்பதுபோல மூவராகிய தேவன் ஒருவராயிருக்கிறார் என்பார்கள். இவ்வாறு பல திருஷ்டாந்தங்களைத் தேடி, திரித்துவத்தை விளக்கிக்காட்டப் பிரயாசப்பட்டது தப்பிதமல்ல. ஆனால் திரித்துவத்தில் மூவரும் தனித்தனியே ஆள்களாக எண்ணப்படுகிறார்களே. தனித்தனியே தேவன் என்றும் அழைக்கப்படுகிறார்களே. பிதா குமாரன் அல்ல. குமாரன் பிதாவல்ல. ஆவியானவர் பிதாவுமல்ல, குமாரனுமல்ல என்பது சுவிசேஷத்தால் விளங்குகிறது. உலகத்தை இரட்சிக்கும்படி குமாரன் பிதாவை அனுப்பவில்லை. பிதாவே குமாரனை அனுப்பினார். அல்லது, ஆவியானவர் குமாரனை அனுப்ப வில்லை. குமாரன் போய் ஆவியானவரை அனுப்பினார். இதிலே மூவருக்குள்ள ஒழுங்கின் வரிசையையும் காண்கிறோம். இவ்வாறு தனித்தனியே தேவனாக ஏற்றுக்கொள்ளும்போது மூன்று தேவர்கள் உண்டென்றே **தோன்றும்.** தேவன் **ஒருவர்** என்பதை

வேதம் முதலிலிருந்து கடைசிவரை பலமாய்க்கூறுகிறது. அந்தப் போதனையைவிட்டு விலகமுடியாது. தேவன் **ஒருவர்** என்பதை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டே திரித்துவத்தைப் படிக்க வேண்டும்.

கடவுள் **ஒருவர்.** அவர் நித்தியமாய் தாமாய் இருக்கிறவர். அவர் சர்வவல்லமையும், சர்வஞானமும், சர்வவியாபகமும், பரிசுத்தமும், மாறாத தன்மையும் உள்ளவர். அந்த ஒரே கடவுளுக்குள் மூவர் உண்டு. மூவர் என்கிற **தொகை** நமக்கு இடறலாயிருக்கிறது. அதுபோலவே **ஆள்கள்** என்று பேசுவதும் நமக்கு இடறலாயிருக்கிறது. ஏனென்றால், நமது அனுபவத்துக்கு **மூன்று ஆள்கள்** என்பது மூன்று பிரத்தியேகமான ஆள்களைக் காட்டும். அந்த மூன்று ஆள்களையும் **ஒன்று** என்று நாம் ஒருபோதும் கணக்கிடமாட்டோம். இந்தப்பழக்கமே நமக்கு இருப்பதால், மூன்று ஆட்கள் என்று தேவனைக்குறித்துப் பேசும்போது மூன்று தேவர்கள்போல் நினைக்கிறோம். கடவுள் **ஒருவரே.** பிதா, குமாரன், ஆவி என்பதே அந்த கடவுள். கடவுள் ஆவியாயிருக்கிறார். ஆவிக்குரிய சம்பந்தத்தை சடலத்துக்குரிய சம்பந்தம்போல் கணக்கிடக்கூடாது. அளவில் அடங்கிய நமது அனுபவத்தைக்கொண்டு, அளவில் அடங்காத தேவரகசியத்தை அளக்கப் பார்ப்பதுதான் நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. ஆகிலும் கடவுள் தம்மை வெளிப்படுத்தின வழியின்மூலமாய் எவ்வளவு அறியக்கூடுமோ அவ்வளவு அறிவதே இம்மையில் நமக்குக் கிடைத்த சிலாக்கியம். இப்போது நமது அறிவு குறைவுள்ளது. மறுமையில் இருக்கிறபிரகாரம் அறிந்துகொள்ளுவோம்.

கடவுள் **ஒருவர்.** அவரே ஆதியும் அந்தமுமானவர். அவரைத் தவிர வேறே கடவுளில்லை. ஒருவராயிருக்கிற கடவுளே தம்மைப் **பன்மையில்** பேசுகிறார். அந்தப் **பன்மையாகிய** பிதா, குமாரன், ஆவி என்பது, கிறிஸ்துவின்மூலமாய் வெளிப்பட்டது. அப்படியிருந்தும், **ஒரே** கடவுள் உண்டென்று கிறிஸ்து போதித்தாரேயன்றி, மூன்று கடவுள்கள் உண்டென்று போதிக்கவேயில்லை. அப்படியானால் திருத்துவத்தின் அமைப் பென்ன? **தேவன்** என்று சொல்லும்போது பிதாமாத்திரமல்ல; பிதா, குமாரன், ஆவி மூன்றையும் நினைக்கவேண்டும். கடவுள் என்பதற்குள் இந்த மூன்றும் சேர்ந்திருப்பதால் மூன்றுக்கும் தெய்வீகம் உண்டு. அந்தக் கருத்தின்படிமாத்திரம் நாம் அவர்களைத் தனித்தனியே கடவுள் என்று பேசுகிறோம். ஒன்றோடொன்று சம்பந்தப்படாத பிரத்தியேகமான கடவுள் என்று பேசப்போனால், கட்டாயம் **மூன்று தேவர்கள்** என்றே சொல்லவேண்டியதாகும். அப்படியல்ல, பிதா உள்ளபோதே குமாரனும் அவரோடிருந்தார். மற்றப்படி பிதா என்பதற்கு அர்த்தமில்லை. கிறிஸ்து பிறந்தபோதுதான் அவர் **குமாரனானார்**

என்று சொல்லப்போனால், கிறிஸ்து பிறந்தபோதுதான் பிதா உண்டானார் என்றும், அதற்குமுன் அவர் பிதாவாயிருந்ததில்லை யென்றும் சொல்லவேண்டியதாகும். நித்திய பிதா என்பது அடிபட்டுப் போகும். தேவ அமைப்பில் பிதா உள்ளபோதே குமாரனும் இருக்கிறார். பிதா குமாரனிலும், குமாரன் பிதாவிலும் இருக்கிறார். ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாத பிதா குமாரன் அல்ல. ஆவியானவரும் ஆதிமுதல் கூடவேயிருக்கிறார். ஆவியானவர் பிதாவையும் குமாரனையும் இணைக்கிற அன்பின் கட்டாயிருக்கிறார். ஆகையால், அவர் பிதாவிலிருந்து மாத்திர மல்ல; பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்படுகிறவரென்று வேதம் கூறுகிறது. இவ்வாறு முப்புரிநூல்போல் இணைக்கப் பட்டிருப்பவரே கடவுள், மூன்று பிரத்தியேகமான தேவர்கள் என்கிற எண்ணத்துக்கு நாம் இடங்கொடுக்கவே கூடாது. கடவுள் என்பதற்கு பிதர், குமாரன், ஆவி என்று அர்த்தம்.

கடவுள் என்பது பிதா, குமாரன், ஆவியைக் குறிப்பது மெய்யானால் தேவலட்சணங்கள் யாவும் மூவருக்கும் பொதுவாயிருப்பது நியாயமே. தேவன் நித்தியரானால் பிதா நித்தியர், குமாரன் நித்தியர், பரிசுத்த ஆவி நித்தியர் என்று சொல்லவேண்டியதே. மூவரும் சேர்ந்து தேவனாயிருப்பதால் நித்தியதேவன் ஒருவரே. கடவுள் சர்வவல்லவரானால் கடவுளுக்குட்பட்ட பிதா, குமாரன், ஆவிக்கு அந்தச் சர்வவல்லமை உண்டு. மூன்று பிரத்தியேகமான சர்வவல்லமைகள் அல்ல, சர்வவல்லமையுள்ள கடவுள் ஒருவரே. தேவன் பரிசுத்தரானால் பிதாவுக்கும், குமாரனுக்கும், ஆவியானவருக்கும் அந்தப் பரிசுத்தம் உண்டு. பரிசுத்தமுள்ள **தேவன் ஒருவரே,** தேவன் கர்த்தரானால் தேவனுக்குள் அமைந்த பிதா கர்த்தர், குமாரனும் கர்த்தர், பரிசுத்த ஆவியும் கர்த்தர் என்று சொல்லலாம். ஆனாலும் கர்த்தராகிய தேவன் ஒருவரே. தேவன் சர்வஞானமுள்ளவரானால் பிதாவுக்கும், பரிசுத்த ஆவிக்கும் அந்தச் சர்வஞானம் உண்டு. சர்வஞானமுள்ள **தேவன்** ஒருவரே. **தேவன்** அன்புள்ளவரானால் பிதாவுக்கும், குமாரனுக்கும், ஆவிக்கும் அந்த அன்பு பொது. அன்புள்ள **தேவன்** ஒருவரே. **தேவன்** மாறாதவரென்றால் பிதா, குமாரன், ஆவி மாறாதவர். மாறாத தேவன் ஒருவரே. பிதா, குமாரன், ஆவியே தேவன்.

இவ்வாறு தேவதன்மை மூவருக்கும் பொதுவாயிருப்பதால், அது ஒரே தேவதன்மையாயிருக்கிறது. மூன்றும் சேர்ந்தே தேவன். தேவனில் மூன்றும் சேர்ந்திருப்பதால் தேவத்துவம் மூவருக்கும் பொது. பிதா குமாரனைப்பார்க்கிலும் அதிகத் தேவதன்மை யுள்ளவரல்ல. குமாரன் ஆவியானவரைப் பார்க்கிலும் அதிகத் தேவதன்மையுள்ளவரல்ல. தேவதன்மையில் மூவரும் சமம். அம்மூவரையே கடவுள் என்று அழைக்கிறோம். "உன் தேவனாகிய

கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்று சொன்ன போது, பிதாமாத்திர மல்ல; மூவரும் சேர்ந்தே கர்த்தர். இம்மூவரின் தன்மையில், குணத்தில், வல்லமையில், கிரியையில், அன்பில், சித்தத்தில், காலத்தில் வித்தியாசமிருக்குமானால் மூன்றும் ஒன்று என்று சொல்லமுடியாது. அதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம். தேவன் என்பது 'பிதா, குமாரன், ஆவி' என்பதை ஏற்கனவே கவனித்தோம். இம்மூவரும் ஒருவரோடொருவர் சம்பந்தமில்லாத பிரத்தியேகமான ஆள்கள் அல்ல. மூவரென்று சொன்ன போதிலும் தேவதன்மையில் மூவரும் ஒன்று. ஞானத்தில் மூவரும் ஒன்று. பரிசுத்தத்தில் மூவரும் ஒன்று. நித்தியத்தில் மூவரும் ஒன்று. சித்தத்தில் மூவரும் ஒன்று. மூன்று வெவ்வேறான சித்தங்கள் இல்லை. மூன்று வெவ்வேறான எண்ணங்கள், யோசனைகள் இல்லை. சிருஷ்டிப்பில் மூவரும் ஒன்று. சிருஷ்டிப்பைத் தாங்கி நடத்துவதில் மூவரும் ஒன்று. இரட்சிப்பில் மூவரும் ஒன்று. இவ்வாறு தன்மையிலும், இலட்சணங்களிலும், கிரியைகளிலும் பூரண ஒற்றுமைப்பட்டிருக்கும் பிதா, குமாரன், ஆவியே கடவுள்.

கடவுள் என்னும் ஒருவரில் மூன்று ஆள்கள் உண்டானது எப்படி என்பதை அறிய நமக்குப் புத்தி போதாது. தேவன் தம்மை வெளிப்படுத்தாதிருந்தால் இதுவும் நமக்குத் தெரியாது. வெளிப்படுத்தினதினாலேதான் திரித்துவத்தைக் கண்டோம். அதைப் பூரணமாய் விளக்கிக்காட்ட நமக்கு சக்தி இல்லை. ஆகிலும் வெளிப்பட்டிருக்கிறவைகளை ஆதாரமாகக்கொண்டு, மூன்று தேவர்கள் என்கிற எண்ணத்துக்கு இடங்கொடாத படிக்குப் பேசவேண்டும். கடவுள் என்பது மூவருக்கும் பொது. கர்த்தர் என்பது மூவருக்கும் பொது. சிருஷ்டிகர் என்பது மூவருக்கும் பொது. இரட்சகர் என்பது மூவருக்கும் பொது. நியாயாதிபதி என்பது மூவருக்கும் பொது. உலக சிருஷ்டிப்பில் என்றாலும், பாவிகள் இரட்சிப்பில் என்றாலும் மூவரும் சம்பந்தப்பட்டுச் செய்யாத ஒரு கிரியை இல்லை. பிதா சிருஷ்டித்தவர், குமாரன் இரட்சிக்கிறவர், ஆவியானவர் பரிசுத்தம் செய்கிறவர் என்று பிரித்துப் பேசுவது சரியல்ல. மூவரும் சேர்ந்து செய்யாத கிரியை இல்லை. பிதா பாவிகள்மேல் கோபமுள்ளவர்போலும், குமாரன் நம்மேல் அன்புகூர்ந்து தமது ஜீவனைக்கொடுக்காவிட்டால் பிதா நம்மோடு ஒப்புரவாக மாட்டார்போலும், பேசுவது வேதத்துக்கு விரோதம். அவ்வாறு பிரித்துப் பேசுவோமானால் மூன்று வித்தியாசமான குணங்களுள்ள மூன்று தேவர்களை வணங்குகிறவர்களா யிருப்போம். மற்றவர்களைப்போல சிருஷ்டித்தல், பரிபாலித்தல், (பாதுகாத்தல்) அழித்தல் ஆகிய கிரியைகளைச் செய்யும் மூன்று தேவர்களை வணங்குகிறவர்களாவோம்.

சுவிசேஷத்தைக் கவனித்து வாசித்தால் நமது இரட்சிப்பில் விளங்கின திரியேக தேவனுடைய அன்பைக் காணலாம். நமக்கு

மீட்பராக வெளிப்பட்டுவந்த குமாரனைவிட்டு பிதாவும் ஆவியானவரும் விலகவில்லை. **குமாரன்**மாத்திரம் நம்மேல் அன்புவைத்தார், கிருபைகூர்ந்தார், நமக்காகப் பாடுபட்டு மரித்தாரென்று பிரத்தியேகப்படுத்திப் பேசக்கூடாது. நமதாண்டவருடைய ஜீவியத்திலும், உபதேசத்திலும், கிரியைகளிலும், பாடுமரணத்திலும் பிதாவும் ஆவியானவரும் கூடவேயிருந்து அவரை நடத்தினார்கள். தேவனே நம்மில் அன்புகூர்ந்து நம்மை இரட்சிக்கும்படி பாடு அனுபவித்தார். "**தேவன் தமது சுய இரத்தத்தால்** சம்பாதித்த சபை" என்பதின் கருத்து இன்னதென்று யோசித்துக்கொள்க. மகிமையின் **கர்த்தரைச்** சிலுவையில் அறைந்தார்கள் என்னும் வாக்கியத்தையும் ஞாபகப்படுத்திக்கொள்க. பிதாவின் அன்பே குமாரனுடைய அன்பு. குமாரனுடைய அன்பே ஆவியானவரின் அன்பு. நம்மை இரட்சிக்கும்படியான கிருபையும், சித்தமும், அன்பும், துக்கமும், பாடும் மூவருக்கும் பொது. நாம் இரட்சிக்கப்படுவதினால் உண்டாகும் சந்தோஷமும் மகிமையும் மூவருக்கும் பொது. கிறிஸ்துவைப்பற்றிமாத்திரம் அதிகமாய் வாசிப்பதினால் நமது எண்ணம் அவர்மீது மிகுதியாய்ப் போகிறது. அவரைப்பற்றியே வாசிக்கிறோம், அவரைப் பற்றியே பேசுகிறோம், அவரையே துதிக்கிறோம், அவரையே நேசிக்கிறோம். பிதாவையும் ஆவியானவரையும் ஒருவகையாய் மறந்தது போலிருக்கிறது. கிறிஸ்து மாம்சத்தில் பிரத்தியட்சமாக வெளிப்பட்டு, நம்மோடு பேசி, நமக்காகப் பாடுபட்டு மரித்ததால் நமது கவனம் அவர்பேரிலேயே இருப்பது இயல்பே. ஆனால் பிதாவைப்பார்க்கிலும் குமாரன் நமதுபேரில் அதிக அன்பு வைத்தவர் அல்ல. திரித்துவமும் நம்மேல் அன்புகூர்ந்து நம்மை இரட்சிக்கும்படி சித்தங்கொண்டதை மறக்கக்கூடாது. நமக்கு வெளிப்படுத்தப்பட்ட வரிசையின்படி, தேவ அன்பு பிதாவில் உற்பத்தியாகி, குமாரனில் வெளிப்பட்டு, ஆவியானவரால் நம்முள்ளத்தில் ஊற்றப்படுகிறது. உற்றப்படும் அன்பு **ஒன்றே.** அதுபோலவே எல்லா ஆசீர்வாதங்களும்.

இந்த வித்தியாசத்தினாலேயே திரித்துவத்தைப்பற்றி ஒரு வகையான பயமும் நமக்குண்டாகிறது. நான் கிறிஸ்துவையே நினைத்து, அவரையே நேசித்துவருவதால் பிதா கோபப்பட்டுக் கொள்வாரோ? ஆவியானவரை நான் நினைக்கிறதில்லையே, அவரும் கோபப்பட்டுக்கொள்வாரோ என்று சில சமயங்களில் கலங்குகிறோம். திரித்துவத்தின் **ஒற்றுமையை** உணராததினாலேயே இந்தத் தப்பெண்ணம் உண்டாகிறது. இரண்டு எஜமான்களைச் சேவிக்கிறவன் இப்படிப் பயப்படவேண்டியது அவசியந்தான். ஏனென்றால், ஒருவனுக்குப் பிரியமாக நடக்கும்போது மற்றவன் எரிச்சலடைவான். பிதா, குமாரன், ஆவி அப்படி வெவ்வேறு சுபாவமுள்ள வெவ்வேறு எஜமான்கள்

அல்ல. மூவராக நாம் நினைத்தாலும் மூன்று தேவர்கள் அல்ல. ஆவியில் மூவரும் ஒன்று. தன்மையில் ஒன்று. அந்தஸ்தில் ஒன்று. மகிமையில் ஒன்று. வல்லமையில் ஒன்று. குணத்தில் ஒன்று. சித்தத்தில் ஒன்று. கிருபையில் ஒன்று. அன்பில் ஒன்று. ஆலோசனையில் ஒன்று. சகலத்திலும் ஒன்று. **கடவுள் ஒருவரே**. கடவுள் மூன்று சுபாவங்களுள்ள மூன்று எஜமான்கள் அல்ல. ஆகையால் நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது பிதாவையும் ஆவியையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். கிறிஸ்துவில் அன்புகூரும்போது பிதாவிலும் ஆவியிலும் அன்புகூறுகிறோம். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது பிதாவுக்கும் ஆவியான வருக்கும் கீழ்ப்படிகிறோம். கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்போது பிதாவையும் ஆவியையும் மகிமைப்படுத்துகிறோம். கிறிஸ்துவை நோக்கி ஜெபிக்கும்போது அது பிதாவினிடத்தில் சேருகிறது. கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம் பிதாவோடுள்ள ஐக்கியம். இவையாவிலும் ஆவியானவரும் சம்பந்தப்பட்டே இருக்கிறார். இதுபோலவே, தேவன் நமக்குள் நடப்பிக்கும் கிரியையிலும் பிதா, குமாரன், ஆவி சம்பந்தப்படாத கிரியை இல்லை. இயேசுவானவர் நமக்குள் வந்தால் பிதாவும் ஆவியும் நமக்குள் வராதிரார். திரித்துவத்தைப் பிரிக்கமுடியாது. கிறிஸ்துவை விசனப்படுத்தி பிதாவை நேசிக்கலாம் என்றெண்ணுவது மதியீனம். ஆவியானவரைத் துக்கப்படுத்தி கிறிஸ்துவை நேசிக்கலாம் என்று நினைப்பது பிசகு. "கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" *(2 யோவான் 9)*. கடவுள் பிதா, குமாரன் ஆவியா யிருக்கிறபடியாலும், மூவரும் ஒன்றாயிருக்கிறபடியாலும், ஒருவரை நேசிப்பது மற்றிருவரையும் நேசிப்பதாகும். ஒருவரைப் பகைப்பது மற்றிருவரையும் பகைப்பதாகும். மூவரும் சேர்ந்தே கடவுள்.

இவ்வாறு மூவரும் ஒன்றாயிருந்தபோதிலும், ஒரு வரிசையைக் காண்கிறோம். அதாவது, சகலமும் பிதாவினிடத்தி லிருந்தே ஆரம்பிக்கிறது. குமாரனில் வெளிப்படுகிறது. ஆவியானவரால் பலிக்கிறது. பிதாவில் ஆரம்பித்த அன்பே, குமாரனில் வெளிப்பட்ட அன்பு. ஆவியானவரால் நமக்குள் ஊற்றப்படும் அன்பும் அதுவே. சகலமும் இது போலவே. பிதா அனுப்ப குமாரன் வந்ததாக வாசிக்கிறோம். குமாரன் அனுப்ப ஆவியானவர் வந்ததாக வாசிக்கிறோம். அந்த ஆவியானவரோ "பிதாவின் ஆவியென்றும், குமாரனுடைய ஆவியென்றும் பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்படுகிற ஆவியென்றும் வாசிக்கிறோம்." பிதா, குமாரன், ஆவி என்று தனித்தனியே நாம் சிந்தித்தபோதிலும், பிதாவோடும் குமாரனோடும் ஆவியானவருக் கிருக்கிற ஆழமான ஜீவ ஐக்கியத்தைக் கவனிக்கவேண்டும். அதுபோலவே பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஆழமான ஜீவ

ஐக்கியத்தையும் கவனிக்கவேண்டும். "பிதாவே நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல" என்று குமாரன் சொன்னார். பிதாவின் மடியிலிருக்கிற குமாரன் என்று யோவான் எழுதினார். இவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவர் தன்மையின் சொரூபமுமானவர் என்று பவுல் சொன்னார். இவை யாவையும் கவனிக்கும்போது திரித்துவத்தின் **பூரண ஒற்றுமை** விளங்குகிறது. பிதா, குமாரன், ஆவி என்னும் பெயரும், மூன்று என்கிற தொகையும், உலகக் கணக்கில் அப்பியாசப்பட்ட நமக்குத் திகைப்பாயிருக்கிறது. ஆவியாயிருக்கிற தேவனில் யாதொரு குழப்பமுமில்லை. நமது சரீரம் மறுரூபமாக்கப்பட்டு, நாம் முற்றிலும் ஆவிக்குரியவர்கள் ஆகுங்காலத்தில் திரித்துவம் நமக்குக் குழப்பமாயிருக்கமாட்டாது. எக்காலமும் உஷ்ணமுள்ள தேசத்தில் பிறந்து வளர்ந்தவனுக்குப் பனிக்கட்டி நிறைந்த தேசத்தின் அனுபவத்தைச் சொன்னால் விளங்காது.

திரித்துவத்தின் பூரண ஒற்றுமையையும், தேவன் தம்மை வெளிப்படுத்துகிறவிதத்தையும் இரண்டு திருஷ்டாந்தங்களால் விளக்கிக்காட்டுகிறார்கள். ஒன்று **வெளிச்சம்.** இந்த வெளிச்சம் பூரணசம்பந்தமுள்ள மூன்று பாகங்கள் உள்ளது. அந்த மூன்று பாகங்களை மூன்று கதிர்கள் எனலாம். அந்த மூன்று கதிர்களும் சேர்ந்து வெளிச்சமாகிறது. மூன்று வெவ்வேறான வெளிச்சங்கள் அல்ல. இரண்டு கதிர்களைத் தள்ளிவிட்டு ஒரு கதிர்மாத்திரம் வெளிச்சமாகாது. ஒரு கதிர் வெளிச்சம் என்றெண்ணப்பட வேண்டுமானால், மற்ற இரண்டு கதிர்களோடு அது சேர்வதினாலேயே. இந்த மூன்று கதிர்களும் ஒன்றோடொன்று கலந்து குழம்பிப்போகிறதில்லை. ஒவ்வொரு கதிருக்கும் தனித்த கிரியை உண்டு. முதல் கதிர் உற்பத்தியாகிறது. இரண்டாம் கதிர் பிரகாசிக்கிறது அல்லது வெளிப்படுத்துகிறது. மூன்றாம் கதிர் பூரணப்படுத்துகிறது. முதல் கதிரைக்காணவும் பரிசிக்கவும் முடியாது. இரண்டாம் கதிரைக்காணவும் பரிசிக்கவும்கூடும். மூன்றாம் கதிரைக் காணக்கூடாது, ஆனால் பரிசிக்க அல்லது உணரக்கூடும். இந்தத்திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறவர் பிதா, குமாரன், ஆவிக்குரிய பூரண ஒற்றுமையின் சம்பந்தத்தைக் காண்பித்து அந்த ஒளியே கடவுள் என்கிறார். அந்த ஒளியில் முதல் கதிராகிய பிதா காணக்கூடாதவரும், நடுக்கதிராகிய குமாரன் காணவும் பரிசிக்கவும்கூடியவரும், மூன்றாம் கதிராகிய ஆவியானவர் காணக்கூடாதவராயினும் நமக்குள் அவர் நடப்பிக்கும் கிரியையினாலே அறியப்படக்கூடியவருமா யிருக்கிறார் என்று காண்பிக்கிறார்.

வேறொரு திருஷ்டாந்தம் நமது **நினைவு.** நினைவு மனதில் மறைந்திருக்கிறது. அந்த நினைவு நமது வார்த்தையில் வெளிப் படுகிறது. அந்த வார்த்தையை மற்றவர்கள் கேட்கும்போது, நமது

நினைவு அந்த வார்த்தையின்மூலமாய் கேட்போருடைய மனதில் பிரவேசிக்கிறது. ஆகவே, நமது மனதில் மறைந்திருக்கும் நினைவை வார்த்தையால் வெளிப்படுத்தா விட்டால் அந்த எண்ணத்தை ஒருவரும் அறியவே முடியாது. அந்த நினைவு வார்த்தையில் வெளிப்படும்போது, அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுடைய மனதில் நமது நினைவு பிரவேசித்துக் கிரியை நடப்பிக்கிறது. இங்கே, நமது மனதில் மறைந்திருந்த நினைவும், வார்த்தையில் வெளிப்பட்ட நினைவும், வார்த்தையைக் கேட்டவருடைய மனதில் பிரவேசித்த நினைவும் **ஒரே நினைவுதான்**. அவை மூன்று நினைவுகள் அல்ல. மறைவான பிதா வார்த்தையாகிய குமாரன்மூலமாக வெளிப்பட்டு, ஆவியினால் நமது உள்ளத்தில் பிரவேசிப்பதை இது குறிக்கும். இந்த திருஷ்டாந்தங்கள் திரித்துவ ஒற்றுமையையும், அது வெளிப்படும்விதத்தையும் காண்பித்தபோதிலும், எவ்வளவுதூரம் திருப்தியானவையென்று சொல்லமுடியாது. யோசிக்கிறவர்களுக்குப் பிரயோஜனப்படலாம் என்றெண்ணி அவைகளை இங்கு சேர்த்தேன்.

திரித்துவத்தின் **வரிசையைப்**பற்றியும் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். பிதா முதலும், குமாரன் இரண்டாவதும், ஆவியானவர் மூன்றாவதுமாக வெளிப்படுகிறார். பிதா குமாரனை அனுப்பினாரேயன்றி குமாரன் பிதாவை அனுப்பவில்லை. அல்லது, ஆவியானவர் பிதாவையாவது, குமாரனையாவது அனுப்பவில்லை. சகலமும் பிதாவில் உற்பத்தியாகி, குமாரனில் வெளிப்பட்டு, ஆவியானவரால் பூரணப்படுகிறது. இதினாலே, பிதா பெரிய தேவன் என்றும் குமாரன் சின்னத்தேவன் என்றும், ஆவியானவர் அதிலும் சிறிய தேவன் என்றும் எண்ணக்கூடாது. தேவதன்மையில் மூவரும் ஒன்றே. இதை ஏற்கனவே விளக்கிக் காண்பித்திருக்கிறோம். மகிமையிலும், வல்லமையிலும், ஞானத்திலும், அன்பிலும், சகலத்திலும் பிதாவைப்போல குமாரன், குமாரனைப்போல ஆவி. ஆகையால் இந்த **வரிசை** ஒருவரைவிட ஒருவர் பெரியவர் என்பதைக் காட்டமாட்டாது. ஆனால் நமக்கு வெளிப்பட்டபிரகாரம் சகலமும் பிதாவில் உற்பத்தியாகி, குமாரன்மூலமாகவும், ஆவியானவர்மூலமாகவும் நடந்தேறுகின்றன. இது ஒரு **வரிசையை** அல்லது **ஒழுங்கைக்** காட்டுகிறதேயல்லாமல், குமாரனும் ஆவியானவரும் பிதாவுக்குத் தாழ்ந்தவர்கள் என்பதைக்காட்டாது. மேலும் இந்த வரிசையானது, பிதா முந்திவந்தவரென்றும், குமாரன் பிந்தி வந்தவரென்றும் ஆவியானவர் அதற்கும் பிந்தி வந்தவரென்றும் காட்டாது. ஆதியும் அந்தமும் இல்லாத கடவுள் சதா நித்தியராயிருக்கிறபடியாலும், அந்த கடவுளே பிதா, குமாரன், ஆவியாயிருக்கிறபடியாலும் மூவரான கடவுள் நித்தியரே. அப்படியானால், இந்த **வரிசை** எப்படி ஏற்பட்டது என்று

கேட்டால், தெரியாது என்பதே நாம் கொடுக்கிற உத்தரவு. ஒருவிதமாகப் பார்த்தால் அது ஒன்று, இரண்டு மூன்று என்கிற வரிசையுமல்ல. நமது இரட்சிப்பின் சம்பந்தமாய் அவ்வாறு வெளிப்பட்டதே நமக்கும் வரிசையாயிற்று. எல்லாம் நமது எண்ணங்களும் நமது கணக்குமாயிருக்கிறதேயன்றி கடவுளில் முந்தினவரும் பிந்தினவரும் பெரியவரும் சிறியவரும் இல்லை.

முடிவாக நாம் சொல்லக்கூடியதென்ன? திரித்துவத்தை விளக்கிக்காட்டப் பிரயாசப்பட்டோம். விளக்கிவிட்டோம் என்று சொல்லத் துணியோம். தேவரகசியங்களைப்பற்றி நாம் யோசிப்பது நல்லது. நாம் பணிந்த சிந்தையுடன் தேவகாரியங்களை அறியும்படி நாடும்போது, ஆவியானவர் நமது தகுதிக்குத் தக்கபடி வெளிப்படுத்துகிறார். முன்சொன்னபிரகாரம் ஆவிக்குரிய **அனுபவமே** ஆவிக்குரிய காரியங்களை அறிவதற்கு இரகசியம். இரட்சிப்பின் சம்பந்தமாகவே திரித்துவம் வெளிப்படுத்தப்பட்டது. ஆகையால் இரட்சிப்பின் அனுபவத்தாலேதான் திரித்துவ இரகசியத்தை ஒருவாறு அறியலாம். தேவன் மூவராயிருப்பது இரட்சிக்கப்பட்டவர்களுக்கு இடறலாயில்லை. நாம் பிதாவை ஒரு தேவனாகவும், குமாரனை வேறு தேவனாகவும், ஆவியானவரை இன்னொரு தேவனாகவும் மூன்று தேவர்களை வணங்குகிறவர்கள் அல்ல. நாம் பெற்ற ஞானஸ்நானத்தில் மூவர் சம்பந்தப்பட்டாலும் அவர்கள் நாமம் **ஒன்றே**. பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் **நாமங்களில்** என்று ஆண்டவர் பன்மையில் சொல்லாமல், **நாமத்தில்** என்று ஒருமையில் சொன்ன கருத்தை நாம் மறக்கக்கூடாது. *(மத். 28:19)*. நாம் ஜெபிக்கும்போது ஆவியினால் ஏவப்பட்டு, அருமைரட்சகர் பேரைச்சொல்லிப் பிதாவோடு பேசுகிறோம். மூன்று தேவர்களை நோக்கி நாம் ஜெபிக்கிறவர்கள் அல்ல. இது விஷயத்தில் அப்போஸ்தலனுடைய அனுபவத்தையும் கேட்போம். ''அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே **ஆவியினாலே, பிதாவினிடத்தில்** சேரும் சிலாக்கியத்தை **அவர்** *(குமாரன்)* மூலமாய் பெற்றிருக்கிறோம்" *(எபே. 2:18)*. ஒருவேளை கிறிஸ்துவைப் பார்த்தே ஜெபித்தாலும் அதினால் பிதாவையும் ஆவியையும் அசட்டை செய்கிறவர்கள் அல்ல. ஆவியானவரில்லாமல் கிறிஸ்துவோடு நமக்கு ஐக்கியமேது? கிறிஸ்துவோடு ஐக்கியப்படும்போது பிதாவோடு நமக்கு ஐக்கியமில்லாமற்போவதேது? பிதா, குமாரன், ஆவி பூரண ஒற்றுமையுள்ள தேவனாயிருக்கிறபடியால், ஒருவரைத் தேடுவதே மற்றிருவரையும் தேடுவதாகும். ஒருவரோடுள்ள ஐக்கியமே மற்றிருவரோடுள்ள ஐக்கியமாகும்.

நாம் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்போது ஆவியானவர்மாத்திரம் நமக்குள் வராமல் கிறிஸ்துவும் வருகிறார். குமாரன் வரும்போது பிதா வராமலிரார். ஏனென்றால்

ஆவியானவர் பிதாவின் ஆவியும், குமாரனின் ஆவியுமாயிருக்கிறார். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் **நாங்கள்** அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்று இரட்சகர் சொன்ன வாக்கையும் கவனிக்க. ஆ, திரித்துவத்தைப் பிரிக்க யாரால் கூடும்? ஆகையால், நாம் ஆவிக்குரியவர்களாய் நடந்துகொள்ளும்போது திரியேக தேவனுக்குள்ளேயே நடந்துகொள்ளுகிறோம். விசுவாச பக்தர்களுக்கு திரித்துவம் குழப்பமாயிருப்பதில்லை. சிலவேளை பிதாவே என்கிறோம். சில வேளை இயேசுவே என்கிறோம். சிலவேளை ஆவியானவரே என்கிறோம். எல்லாம் கடவுளே. நாம் தேவ அன்பினால் நிறைந்திருந்தால் திரித்துவம் என்கிற திகைப்பு வராது. தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆவிக்குரிய அனுபவமே திரித்துவத்தை அறியும் இரகசியம் மாம்சத்துக்குட் பட்டவர்கள் அறிய மாட்டார்கள்.

இதுவரை சொன்னதைச் சுருக்கிப்பார்ப்போம். கடவுள் **ஒருவர்**, அவர் பிதா, குமாரன், ஆவி, ஆகையால் தெய்வீகம் மூவருக்கும் பொது. ஆகிலும் அவர்கள் வெவ்வேறான மூன்று தேவர்கள் அல்ல. மூன்று தேவர்களானால் ஒவ்வொரு தேவனுக்குள்ளும் பிதா, குமாரன், ஆவி இருப்பதாலே மும்மூன்று ஒன்பது ஆள்களாகும், கர்த்தர் **ஒருவர்**. அவர் பிதா, குமாரன், ஆவி, ஆகையால் கர்த்தத்துவம் மூவருக்கும் பொது. ஆகிலும் அவர்கள் வெவ்வேறான மூன்று கர்த்தர்கள் அல்ல. ஆண்டவர் **ஒருவர்**. அவர் பிதா, குமாரன், ஆவி. ஆகையால் ஆளுகை மூவருக்கும் பொது. ஆகிலும் மூன்று வெவ்வேறான ஆண்டவர்கள் அல்ல. சிருஷ்டிகர் **ஒருவர்**. அவர் பிதா, குமாரன், ஆவி. ஆகையால் சிருஷ்டிப்பு மூவருக்கும் உரியது. ஆகிலும் அவர்கள் வெவ்வேறான மூன்று சிருஷ்டிகர்கள் அல்ல. இரட்சகர் **ஒருவர்**. அவர் பிதா, குமாரன், ஆவி. ஆகையால் இரட்சிப்பு மூவருக்கும் உரியது. ஆகிலும் அவர்கள் வெவ்வேறான மூன்று இரட்சகர்கள் அல்ல. நித்தியதேவன் **ஒருவர்**. அவர் பிதா, குமாரன், ஆவி. ஆகையால் நித்தியம் மூவருக்கும் உரியது. ஆகிலும் வெவ்வேறான மூன்று நித்தியர்கள் அல்ல, சர்வவல்லவர் **ஒருவர்**. அவர் பிதா, குமாரன், ஆவி. ஆகையால் சர்வவல்லமை மூவருக்கும் உரியது. ஆகிலும் அவர்கள் மூன்று வெவ்வேறான சர்வவல்லவர்கள் அல்ல. அன்பர் **ஒருவர்**. தேவனே அன்பு. அவர் பிதா, குமாரன், ஆவி. அன்பு மூவருக்கும் உரியது. பிதாவின் அன்பே குமாரனுடைய அன்பு. குமாரனுடைய அன்பே ஆவியானவரின் அன்பு. ஆகையால் பிதாவின் அன்பே ஆவியானவரின் அன்பு. அன்பு ஒன்றே. ஆகையால் வெவ்வேறான மூன்று அன்பர்கள் அல்ல. இதுபோலவே நெடுகச் சொல்லிக்கொண்டுபோகலாம். இந்த இரகசியத்தை அனுபவத்தில் கண்ட அப்போஸ்தலன்: "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு,

ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, **கர்த்தர்** ஒருவரே. கிரியையிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற **தேவன் ஒருவரே**" என்றார் *(1 கொரி. 12:4-6)*.

அவர்கள் என்று பேசுவதும், **மூவர்** என்று பேசுவதும், கணிதம் கற்ற நமக்குத் திகைப்பாயிருக்கிறது. தேவன் தம்மை வெளிப்படுத்தாவிட்டாலும் சங்கடப்படுவோம். வெளிப்படுத்தினாலும் சங்கடப்படுகிறோம். அவர் தம்மை வெளிப்படுத்தாதிருந்தால் யூதனைப்போல் ஒரேதேவன் என்றுமாத்திரம் சொல்லிக்கொண்டிருப்போம். நாம் அதற்குமேல் அறியக்கூடியது ஒன்றுமில்லை. இவ்வாறு தம்மை வெளிப்படுத்தினதினாலேதான், என் பிதாவே, என் அன்புள்ள தகப்பனே என்று உறவாடும் சிலாக்கியத்தைப் பெற்றோம். இந்தக் கிருபை பிதாவிலிருந்து, குமாரன்மூலமாய், ஆவியினால் அருளப்பட்ட பாக்கியமே. இந்த வெளிப்படுத்தல் தேவன் **ஒருவர்** என்னும் நித்திய சத்தியத்துக்கு விரோதமானதல்ல. ஆவியாயிருக்கிற தேவனைப்பற்றிச் சிந்திக்கும்போது, உலகக் கணக்கை மறந்துவிட வேண்டியது. ஆவிக்குரிய இரகசிய ஐக்கியத்தை ஆவியினாலேயே கண்டறிய வேண்டியது.

மேற்கூறிய விஷயங்களின் உண்மை திரித்துவத்தின் ஆழமான, நித்திய, மாறாத ஒற்றுமையினால் ஸ்திரப்படுகிறது. பிதா குமாரனிலும், குமாரன் பிதாவிலும், ஆவியானவர் பிதாவிலும் குமாரனிலும் நிலைத்திருக்கிற பிராண சம்பந்தத்தை மறக்கவேகூடாது. மூவரென்று சொன்னபோதிலும் ஒரே தன்மை, ஒரே அன்பு, ஒரே வல்லமை, ஒரே சித்தம், ஒரே யோசனை, ஒரே ஞானம், ஒரே மகிமை, ஒரே நித்தியம், ஒரே மாறாமை, ஒரே இரட்சிப்பு, ஒரே பாதுகாப்பு, இவ்வாறு தேவதன்மையிலும், தேவலட்சணங்களிலும், தேவகிரியைகளிலும், யாதொரு பேதமில்லாமல் என்றென்றும் ஜீவித்து அரசாளுகிற ஆவியான கடவுள் **ஒருவரே**. ஆகையால் "நமது தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்னும் பழைய ஏற்பாட்டுச் சத்தியத்தையும், நமது இரட்சிப்பின் சம்பந்தமாய் அவர் தம்மை பிதா, குமாரன் ஆவியாக வெளிப்படுத்தின புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தையும் நாம் முழு இருதயத்தோடும் நன்றியோடும் ஏற்றுக் கொள்ளுகிறோம். பிதா, குமாரன், ஆவியுமாகிய சர்வவல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் நமக்குள்ளிருந்து என்றென்றும் நம்மோடு நிலைத்திருப்பதாக, ஆமென்.

27

திராட்சச்செடியும் கொடிகளும்

The Vine and the Branches

வியாழன் இரவில் நமது இரட்சகர் தமது சீஷருடன் பேசின கனிவான வார்த்தைகள் மறக்கத்தக்கவைகள் அல்ல. அவைகளை "நெஞ்சுருக்கும் போதகம்" எனலாம். அருமைச் சிநேகிதர் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியும் வேளை மகா துயரமானது. இயேசுவுக்கொப்பான அன்பர் யார்? அவரன்பு அதிசயம்! "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலு மில்லை." துரோகிகளைத் தேடிவந்து அவர்களுக்காகத் தமதுயிரைக் கொடுக்கவந்த அன்பு எப்பேர்ப்பட்டது? கலிலேயாக் கடலில் மீன்பிடித்தவர்களைத் தமக்குச் சீஷராயிருக்கும்படி இழுத்துக்கொண்ட காந்தம் அவரது பேரன்பே. அவர்கள் யாவற்றையும்விட்டு அவரைத் தஞ்சமாகப் பற்றிக்கொண்டனர். அவர்களை விட்டுப்பிரிய ஆண்டவருக்கு மனம் வரவில்லை. ஆண்டவரை விட்டுப்பிரிய அவர்களுக்கும் மனம் வரவில்லை. சீஷர்கள் இதுவரை அவரோடிருந்து, அவர் உபதேசங்கேட்டு, அவர் அரிய கிரியைகளைக் கண்டபோதிலும் அவர்களடைந்த அறிவு சொற்பமே.

கிருபையுள்ள இரட்சகர் அச்சமயத்தில் அவர்களிலிருந்த நிலைமையின்படி பேசாமல், இனிமேல் அவர்கள் அடையப்போகிற பூரண நிலைமையை எதிர்பார்த்தவராய்ப் பேசுகிறார். அவர்களிடத்தில் எத்தனையோ குறைவுகளிருந்தும் அதற்காக அவர்களைக்கோபித்துத் தள்ளிவிடாமல் "தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தம் அவர்களிடத்தில் அன்புவைத்தார்." அவர்கள் தம்மை அறியவேண்டியபிரகாரம் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. பேதைகளும் பலவீனருமான அவர்களுடைய முகத்தைப் பார்க்கபார்க்க அவருள்ளம் பொங்குகிறது. அவர் சகலத்தையும் மறந்து அவர்களையே நினைக்கிறார். சீக்கிரத்தில் தாம்

பெற்றுக்கொள்ளப்போகிற மகிமை இன்னதென்று அவருக்குத் தெரியும். அந்த மகிழ்ச்சியால் இழுப்புண்டு அவர்களை அசட்டைசெய்தவரல்ல. அன்றிரவுமுதல் தமக்கு நேரிடப்போகிற கொடியபாடுகளும், குரூரமரணமும் அவர் கண்களுக்குமுன்பாக நிற்கின்றன. அவைகளை நினைத்துக் கலங்கி ஒரு மூலையில்போய்ப் படுத்துக்கொண்டவரல்ல. அவர் அன்றிரவு பேசினவைகள் கலக்கமும் பதட்டமுமுள்ள மனுஷனுடைய வார்த்தைகள் அல்ல. மகா அமர்ந்த இருதயத்திலிருந்து புறப்பட்ட அன்பின் பெருக்கம் அவைகள். அவ்வளவு அருமையான போதகம் சுவிசேஷத்தில் வேறெங்குமில்லை.

அமலன் அடியார் கால்களைக்கழுவித் தாழ்மையின் பாக்கியத்தைப் போதித்தார். பஸ்காவைப் புசித்தபின், தமது மரணத்தை நினைப்பூட்டும் இராப்போஜனத்தை ஏற்படுத்தி: என் பிதாவின் இராஜ்யத்தில் நவமானதாய் நான் உங்களோடு புசிக்கும்வரை இனி நான் இதைப்பானம்பண்ணுவதில்லை என்றார். அவர் மரிக்கும்வேளை சமீபித்ததால் அதற்குமுன் அவர்களுக்குச் சொல்லவேண்டிய அநேக அருமையான விஷயங்கள் அவர் உள்ளத்தை நிரப்பின. ஆனால் துரோகி கண்ணுக்குமுன் இருக்கும்வரை அவர் தாராளமாகப் பேசக்கூடவில்லை. நீ செய்கிறதைச் சீக்கிரம் செய்யெனச் சொல்லி அவனை அனுப்பினார். அவன் திரும்பி வருவதற்குள்ளாகச் சொல்லக்கூடிய காரியங்களை அவர்களுக்குச் சொல்லி அருமையான ஜெபத்தோடு முடிக்க விரும்புகிறார். அதன் வரலாற்றை யோவான் பதினாலுமுதல் பதினேழுமுடியக் காணலாம். நான் போகிறேன் என்று அவர் சொன்னது அவர்களுக்குப் பிராணன்போனது போலிருந்தது. அவர்கள் இருதயங்கள் துக்கத்தாலும் கலக்கத்தாலும் நிறைந்தன. நாங்கள் கலங்குகிறோம் துக்கப்படுகிறோம் என்று அவர்கள் சொல்லாதிருந்தும் அன்பர் அதை அறிந்துகொண்டார். உங்கள் இருதயம் இப்பொழுது கலங்குகிறது, உங்கள் உள்ளம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது என்று அவரே அவர்களுக்காகப் பேசுகிறார்.

எவ்வளவு அனுதாபம்! எவ்வளவு அன்பு! நமது துக்கங்களை அறிவுக்குமுன்னே அவர் அவைகளை அறிந்திருக்கிறார் என்பது நமக்கு எவ்வளவு ஆறுதல்! நான் போகிறேன் என்று சொன்னதினாலே இப்பொழுது கலங்குகிறீர்கள். நான் போவதினால் உங்களுக்குக் கிடைக்கப்போகிற பேராசீர்வாதத்தை நீங்கள் அறியக்கூடுமானால் நீங்கள் சந்தோஷப்படுவீர்கள். நீங்களே என்னை போகும்படி வழிவிட்டனுப்புவீர்கள். நான் போகிறது மெய்யாகவே உங்களுக்குப் பிரயோஜனம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். நான் போய்விடுகிறது பெரிய நஷ்டம் என்று நீங்கள்

நினைக்கறீர்கள். இச்சமயத்தில் என் மீதுள்ள விசுவாசப்பற்றை மாத்திரம் விட்டுவிடாதேயுங்கள். என்மீதுள்ள விசுவாசமே என் பிதாவின் மீதுள்ள விசுவாசம். உங்கள் இருதயம் கலங்காதிருக்கவேண்டுமானால் என்மீதுள்ள நம்பிக்கையே அதற்கு இரகசியம். நான் போகிறேன் என்பதினால் நான் இல்லாமல் அழிந்துபோவேன் என்று நீங்கள் பயப்படவேண்டாம். நான் எங்கேயிருந்து வந்தேனோ அங்கேதான் போகிறேன். உங்கள் காரியமாகவே உலகத்துக்கு வந்தேன். உங்கள் காரியமாகவே உலகத்தைவிட்டுப்போகிறேன். இதுவரை நான் நேசித்ததையும், உபதேசித்ததையும், என்னை உங்களுக்கு வெளிப்படுத்தினதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் போவதினால் என் அன்பும் உபதேசமும் வெளிப்படுத்தலும் நின்றுபோகாமல் முன்னைப்பார்க்கிலும் அதிகமாய் உங்களில் பெருகக்காண்பீர்கள். நான் போகாவிட்டால், நான் ஆரம்பித்த என் இரட்சண்ய ஊழியம் உங்களில் பலிக்காது. ஆகையால் நான் சரீரத்தில் உங்களோடிருப்பதைவிடப் போவதே உங்களுக்கு அதிகப் பிரயோஜனம். எனக்குச் சீஷராயிருப்பதின் பாக்கியம் இன்னதென்று இப்பொழுது உங்களுக்குத் தெரியவில்லை. நான் மரிக்கவேண்டுமென்று சொன்னதுமுதல் நீங்கள் சீக்கிரத்தில் வருமென்று எதிர்பார்த்த **உங்கள்** இராஜ்யத்தின்மீதுள்ள நம்பிக்கை அடிப்பட்டது. அதையும் நினைத்துக் கலங்குகிறீர்கள். என் நடபடிகளைப் பார்க்கப்பார்க்க எல்லாமே உங்கள் நோக்கத்துக்கு விரோதமாகத் தோன்றுகிறது. நீங்கள் இவ்வாறு கலங்கித்தவிப்பது எனக்கும் துயரமாயிருக்கிறது. ஏனென்றால், என் ஒழுங்கை நான் அறிந்திருப்பதுபோல நீங்கள் அறியக்கூடவில்லையே. அவைகளை நான் விவரித்துச் சொன்னாலும் கிரகித்துக் கொள்ளத்தக்க நிலைமையில் நீங்கள் இல்லையே. நீங்கள் இப்பொழுது அறிந்தாலும் அறியாமற்போனாலும் சீக்கிரத்தில் உங்களில் நிறைவேறப்போகிற மகிமையான காரியங்களில் சிலவற்றையாகிலும் உங்களுக்குச் சொல்லாமல் உங்களைவிட்டு நான் பிரிவதில்லை. ஏனென்றால், அவைகள் உங்களில் நிறைவேறும்போது: ஆண்டவர் இப்படியெல்லாம் சொன்னாரே என்று அந்நாளில் நீங்கள் விசுவாசிக்கும்படியாக, அவைகள் நடப்பதற்கு முன்னமே உங்களுக்குச் சொல்லிவைப்பது நல்லது.

இந்த மேல் வீட்டறையில் நாம் ஒன்றாய்க்கூடியிருப்பது நமக்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஆகிலும் இது நிலையுள்ளதல்ல. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நீங்கள் பிரவேசிக்கக்கூடாதபடி பாவத்தால் அடைபட்ட வாசலைத் திறப்பதற்கான அதிகாரம் எனக்குண்டு. நீங்கள் இச்ஜீவியத்திற்குப் பின் சந்தோஷமாய் நித்திய வாசஸ்தலத்தில் பிரவேசிப்பதற்காக

நான் முன்னேபோய் ஆயத்தப்படுத்தவேண்டியது அவசியம். அங்கே உங்களுக்கு ஒரு குறைவுமிராது. நான் அவ்வளவு உங்களுக்குச் செய்யாவிட்டால் உங்களை வஞ்சிக்கிறவனாயிருப்பேன். நீங்கள் எல்லாவற்றையும் விட்டு என்னைப் பின்பற்றினதும், என்னை இவ்வளவு நேசித்தும் வீணாயிருக்குமே. ஸ்தலம் ஆயத்தமானபின் நானே வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்; நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருப்பீர்கள். என் ஆதிமகிமையை நீங்கள் காண்பீர்கள். நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டோம். அந்த மகிமையில் நீங்கள் பிரவேசிக்கும்போது உங்கள் சந்தோஷத்தை அளவிட யாராலாகும்? எனக்குச் சீஷரானதின் பாக்கியமின்னதென்று அப்போது கண்டு களிகூறுவீர்கள். இப்படி நான் சொல்லும்போது, அந்த வாசஸ்தலம் எங்கே இருக்கிறதென்று தெரியவில்லையே, வழியை நாங்கள் அறிவதெப்படி என்று சந்தேகப்படுகிறீர்கள்.

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்." பிதாவையும் அவர் வீட்டையும் கண்டடைய வேண்டுமானால், அதற்கு நானே வழி. ஏனென்றால் நான் சத்தியத்தை வெளிப்படுத்த வந்தேன். மனுஷர் மறுமையின் காரியங்களை அறியாமல் அவரவருக்குத் தோன்றினபடி பேசுவார்கள். நானோ உங்களுக்கு உண்மையைச் சொல்லியிருக்கிறேன். நான் சத்தியத்தைச் சொன்னது மாத்திரமல்ல, நானே சத்தியமாயிருக்கிறேன். நானே ஜீவனுமாயிருக்கிறேன். நீங்கள் என் வழியில் செல்லும்போது சத்தியத்தை அறிந்து, அந்தச்சத்தியத்தின் பலனாக நித்திய ஜீவனையும் அடைவீர்கள். நான் போன பிற்பாடு உங்கள் ஜீவியம் அதிசயமாக மாறும். நீங்கள் என்னிடத்தில் கேள்விப்பட்ட ஆசீர்வாதங்கள் உங்களுக்குள் வரும் உங்கள் பலவீனம் நீங்கிப் பெரிய கிரியைகளை நீங்கள் செய்வீர்கள். இதுவரை என்பேரைச் சொல்லிப் பிதாவிடம் நீங்கள் ஒன்றும் கேட்டதில்லை. ஏனென்றால் நானே உங்களோடிருந்து உங்களைப் பாதுகாத்து நடத்தி வந்தேன். நான் உங்களைவிட்டு மறைந்தபின்பு என்பேரைச் சொல்லிப் பிதாவிடம் நீங்கள் கேட்டுக்கொள்வதை அவர் உங்களுக்குக் கொடுப்பார். அதினாலே நான் போகுமிடம் இன்னதென்று நீங்களே அறிந்துகொள்வீர்கள். நான் போய்விடுவதாலே உங்களைத் திக்கற்றவர்களாக விட்டுவிடுவேன் என்று நினைக்கவேண்டாம். நான் திரும்பவும் உங்களுக் குள்ளிருப்பதை நீங்களே காண்பீர்கள். என் சமாதானம் உங்களை நிரப்பும். என் சந்தோஷம் உங்களைப் பூரிப்பாக்கும். அநேக காரியங்களைச் சொல்ல எனக்கு ஆசையுண்டு. இப்போது நீங்கள் அவைகளைத் தாங்கிக் கொள்ளமாட்டீர்கள். சாவகாசமாய்ப் பேசிக்கொள்வதற்கும் இப்போது நமக்குச் சமயமில்லை. உலகத்தின் அதிபதி தன்

சேனையோடு புறப்பட்டு வருகிறான். அவன் என்னை மேற்கொள்ளமாட்டான். எழுந்திருங்கள் இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

எழுந்திருங்கள் போவோம் என்று அவர் சொன்னது யோவான் பதினாலு கடைசியில் வருகிறது. ஆகையால் யோவான் பதினைந்து, பதினாறு, பதினேழை கெத்செமனேத் தோட்டத்துக்குப் போகும் வழியில் அவர் சொல்லிக்கொண்டு போனதாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அவைகளை நாம் வாசிக்கும்போதும், அந்த அருமையான ஜெபத்தைக் கவனிக்கும்போதும், அவைகளை வழிச் சம்பாஷணையாக எண்ண இடமில்லை. அவர்கள் எழுந்தபின்பு சீஷருடன் மேல் வீட்டறையில் நின்றுகொண்டே அவர் அவைகளைச் சொல்லி ஜெபித்திருக்கவேண்டும். இது பதினெட்டாம் அதிகாரம் முதல் வசனத்தால் தெரிய வருகிறது, ''**இயேசு இவைகளைச் சொன்னபின்பு** தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்.'' இவைகளைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த சீஷர்: இவர் நம்மை விட்டுப்போனபின்பு, இவர் நம்மோடுகூடயிருப்பது எப்படி? நாம் பெரியகாரியங்களைச் செய்வதெப்படி? சந்தோஷத்தாலும் சமாதானத்தாலும் நிரப்பப்படுவதெப்படி? இவருக்குப் பலத்த சாட்சிகளாவதெப்படி! என்று பலவாறாய்த் திகைத்துக் கலங்கினர். அப்போதுதான் இதுவரை சொல்லாத ஒரு புதியகாரியத்தை அவர்களுக்குச் சொன்னார்.

நான் பிதாவினிடத்தில்போய் உங்களுக்காக வேண்டிக் கொள்வேன். அவர் சத்திய ஆவியாகிய வேறொரு **தேற்றரவாளனை** உங்களிடத்தில் அனுப்புவார். அவர் உங்களுக்குள் வரும்போது நான் சொன்ன எல்லாக்காரியங்களும் உங்களில் நிறைவேறும் என்றார். ஆவியானவரால் தமக்கும் அவர்களுக்கும் உண்டாகும் நெருங்கிய ஐக்கியம் இன்னதென்று உணர்த்தும்படியாகவே திராட்சச்செடியின் திருஷ்டாந்தத்தைக் கொண்டு அவர்களுக்குப் போதித்தார். வாசலிலோ வழியிலோ படர்ந்திருந்த ஒரு திராட்சச்செடியைக் கண்டு அதை உவமானமாகத் தெரிந்துகொண்டார் என்பாருண்டு. எத்தனையோ உவமைகளை வெள்ளம்போல் பொழிந்தவர், இச்சமயம் ஒரு செடியைக் கண்டுதானா பேசவேண்டும்? தமக்கும் சீஷருக்குமுள்ள ஐக்கியத்தைப் போதிக்கத் திராட்சச்செடி மிகவும் ஏற்றதெனக்கண்டு அவ்வாறு பேசினார். மேலும் திராட்சச் செடிகளின் போதனையை சீஷர்கள் வேதத்தில் வாசிக்காதவர்கள் அல்ல. தேவன் இஸ்ரவேலைத் திராட்சச்செடிக்கு ஒப்பிட்டுப் பலமுறையும் பேசியிருக்கிறார். அவர்கள் தேவனைச் சார்ந்துபிழைத்து நற்கனிகளைக் கொடுப்பதற்குப் பதிலாக,

அவரைவிட்டுப்பிரிந்து கசப்பான கனிகளைக் கொடுத்தார்கள். ஆகையால் தேவன் பரத்திலிருந்து ஜீவதிராட்சச்செடியை அனுப்பி கசப்பானகொடிகள் அந்தத் திராட்சசெடியில் ஒட்டவைக்கப்பட்டுப் பிழைப்பதினாலே, தமக்குப் பிரியமான கனிகளைக் கொடுக்கும்படி ஒழுங்கு செய்தார். திராட்சச் செடியின்மூலமாய் ஆண்டவர் போதித்த சத்தியங்களை கவனிப்போம்.

நானும் நீங்களும் ஒன்று என்கிறார். என்ன ஆச்சரியம்! "நானே திராட்சச்செடி நீங்கள் கொடிகள்" என்றார். செடி வேறே கொடிகள் வேறேயல்ல, இரண்டும் ஓரினமே. ஆண்டவர் வேறொரு மரத்தைத் திருஷ்டாந்தமாக எடுத்துப் பேசியிருக்கலாம். ஆனால் அவர் போதிக்கவிரும்பின ஐக்கிய ஜீவியத்துக்கு திராட்சச்செடியே ஏற்றது. திராட்சச்செடியில் செடி எங்கே முடிகிறது, கொடிகள் எங்கே ஆரம்பிக்கிறதென்று கண்டுபிடிக்க முடியாது. முழுவதும் ஒன்றுபோலவேயிருக்கும். செடியின்றிக் கொடிகள் இல்லை. கொடிகளின்றிச் செடி தானாய்க் கனிகொடுப்பதில்லை. அதுபோலேவே செடியின்றிக் கொடிகள் தானாய்க் கனிகொடுப்பதில்லை. கொடிகளில்லாத செடி வெறும் மரமாகும். செடியில்லாத கொடிகள் வாடிச் சாகும். செடியும் கொடிகளும் சேர்ந்தே பூரணமரமாகும். அவர் கொடியல்ல, நாம் செடியல்ல. ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தால் ஒன்றுமே ஆகாது. இது **பிராண** ஐக்கியம். அனேக காரியங்களோடு நமக்கு ஐக்கியமுண்டு. அவைகளை நமக்குச் சொந்தம் என்கிறோம். நமது நிலங்கள், வீடுகள், சாமான்கள், புஸ்தகங்கள், உடுப்புகள் நமக்குச் சொந்தமாயிருக்கலாம். ஆனாலும் நமக்கும் அவைகளுக்குமுள்ள ஐக்கியம் பிராண ஐக்கியமல்ல. நாம் வேறேதான் அவைகள் வேறேதான். இவைகளைப்பார்க்கிலும் நமது இனத்தார் சினேகிதர் நமக்குச் சொந்தமானவர்கள். அவர்களைப்பார்க்கிலும் நமது மனைவிமக்கள் அதிகச் சொந்தமானவர்கள். அவர்கள் சந்தோஷம் நமது சந்தோஷம்; அவர்கள் துக்கம் நமது துக்கம், அப்படியிருந்தும் அவர்கள் ஜீவன் வேறே, நமது ஜீவன் வேறே, நாம் அவர்களில் நிலைத்திருந்து பிழைக்கிறதில்லை. அவர்கள் நம்மில் நிலைத்திருந்து பிழைக்கிறதில்லை. ஒருவர் பூரண சுகத் தோடிருக்கும்போதே மற்றவர் வியாதிப்பட்டுச் சாகலாம். ஏனென்றால் அவர்கள் தனித்தனியே பிழைக்கிறவர்கள்.

செடிக்கும் கொடிகளுக்குமுள்ள ஐக்கியமோ **பிராண** ஐக்கியம். அவைகள் ஒரே ஜீவனால் போஷிக்கப்படுகின்றன. செடியின் ஜீவனே கொடிகளின் ஜீவன். செடியைப் பிழைப்பூட்டும் சாரமே கொடிகளைப் பிழைப்பூட்டும் சாரம். மனுஷர் கனியைக் கொடிகளில் தேடுவார்கள். திராட்சச் செடியாகிய கிறிஸ்துதாம் உலகத்துக்குக் கொடுக்க விரும்பும்

கனிகளைத் தமது கொடிகள்மூலமாகவே கொடுக்கக்கூடும். அவர் நம்மையல்லாமல் அநேக அதிசயமான காரியங்களைத் தாமாகச் செய்ய வல்லவர்தான். ஆனால் மீட்பராக அவர் உலகத்துக்குக் கொடுக்கவேண்டிய இரட்சிப்பின் கனிகளைத் தமது கொடிகள்மூலமாகக் கொடுக்கச் சித்தங்கொண்டார். இதற்காகவே அவர் தமது சீஷரை ஏற்படுத்தினார். "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் உங்களை ஏற்படுத்தினேன்" என்றார். உலகம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு இதுவே தேவ ஒழுங்கு. தேவன் தமது குமாரனை மாம்சத்தில் அனுப்பி அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்தார். ஆவியானவரே திராட்சச்செடியின் ஜீவன். அந்த ஆவியானவரே கொடிகளுக்கும் ஜீவன். அவரில் நிலைத்திருக்கும் கொடிகள் அவரிலுள்ள ஜீவனைப்பெற்றுப் பிழைக்கிறார்கள்.

ஆண்டவர் தமது சீஷரைவிட்டுப் போவதினால் அவர்கள் இனி அவரைச் சரீரத்தில் காணமாட்டார்கள். அவர் போனபோதிலும் அவருடைய ஆசீர்வாதமான ஜீவியமும், ஜீவனுள்ள உபதேசங்களும், இரட்சிப்பின் கிரியைகளும் நின்று போவதில்லை. அவர் அவர்களுக்குள் வசித்துத் தமது ஆவியினால் அவர்களை நிரப்பித் தமது கனிகளை அவர்கள் மூலமாய் உலகத்துக்குக் கொடுப்பார். அவருடைய ஜீவியமே அவர்களில் காணப்படும். அவருடைய உபதேசமே அவர்கள் மூலமாகப் புறப்படும். அவருடைய ஆசீர்வாதமே அவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகும். கொடிகளில் காணப்படும் கனிகளுக்குச் செடியிலிருந்து வரும் சாரம் காரணமாயிருப்பதுபோல, அவர்களில் விளங்கும் ஆசீர்வாதமான ஜீவியத்துக்கும் ஆசீர்வாதமான ஊழியத்துக்கும் கிறிஸ்துவிலிருந்து அவர்களை நிரப்பும் ஆவியானவரே காரணர். இது எப்படியாகும் என்று சீஷர் அச்சமயத்தில் திகைத்தபோதிலும், பெந்தேகொஸ்தே நாளில் இந்த ஐக்கியத்தின் இரகசியம் இன்னதென்பதைத் தாங்களே அனுபவத்தில் கண்டார்கள். அறிவீனரும் பலவீனருமான அவர்கள் ஆச்சரியமாக மாற்றப்பட்டுக் கனிநிறைந்தவர்களானார்கள். ஆயிரக்கணக்கான மனுஷர் அவர்கள் கொடுத்த கனிகளைப் புசித்து ஜீவனைக் கண்டடைந்தார்கள். பிதாவின் நாமம் மகிமைப்பட்டது.

திருச்சபையின் இரகசியத்தை இங்கே காண்கிறோம். கிறிஸ்துமார்க்கம் இதுவே. அவர் உலகத்தை இரட்சிக்கும் விதமும் இதுவே. அவர் செய்த வேலை அவரோடு முடிந்ததென்றும், நாம் செய்யவேண்டிய வேலை நமக்கே உரியதென்றும் நினைப்பது தவறு. அவர் தொடங்கின வேலை ஒருக்காலும்

நிற்கவில்லை. அவர் உலகத்தை விட்டுப்போனபின் தம்மில் நிலைத்திருக்கும் கொடிகள்மூலமாக அவரே இன்னும் தமது கிரியைகளைச் செய்துவருகிறார். சீஷர்கள் இதைப்பற்றி அதிகமாய்ப் பேசாவிட்டாலும், ஆண்டவர் மகிமையடைந்து, பரிசுத்தாவியைப் பெற்று, அவர்களை நிரப்பி, தமது வல்லமையான ஊழியத்தை அவர்கள்மூலமாய் நடப்பித்தார் என்பதைக் குறித்துத் தாராளமாய்ச் சாட்சி கூறினார்கள். ஜனங்கள் அவர்களுடைய ஜீவியத்தைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் ஆச்சரியப்பட்ட போது: நீங்கள் எங்களைக்குறித்து ஆச்சரியப்படுவது சரியல்ல. நாங்கள் ஒன்றுமில்லை. நீங்கள் எங்களிடத்தில் காண்கிறதும் கேட்கிறதுமான இந்தக் காரியங்கள், நீங்கள் சிலுவையில் அறைந்தவரும், தேவனால் எழுப்பப்பட்ட வருமான இயேசு கிறிஸ்துவின்மூலமாய் நடக்கின்றன என்றார்கள். அப்போஸ்தலனாகிய பவுலும் தமது உபதேசத்தைக் குறித்தும் கிரியைகளைக்குறித்தும் கிறிஸ்துவே தமக்குள்ளிருந்து அவைகளை நடப்பிக்கிறார் என்று திட்டமாய்ச் சொன்னார். "நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றும் எழுதினார். இவர்களே கிறிஸ்துவாகிய திராட்சச்செடியில் நிலைத்திருந்து கனிகொடுத்த மெய்யான கொடிகள். அவருடைய ஜீவனே அவர்களை நிரப்பினது. அவருடைய கனிகளே அவர்களில் காணப்பட்டன. தாங்கள் தங்களிலே ஒன்றுமில்லாத வர்களென்றும், அவராலே பரிபூரணமுள்ளவர்களென்றும் அறிக்கையிட்டார்கள். அவரே திராட்சச்செடியென்றும் தாங்கள் அவரில் நிலைத்திருந்து பிழைத்த கொடிகளென்றும், ஆண்டவர் சொன்னபடியே தங்கள் அனுபவத்தில் கண்டார்கள். அவர்களைப்போலவே அநேக பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளும் ஜீவ திராட்சச்செடியாகிய கிறிஸ்துவில் நிலைத்திருந்து உலகத்துக்கு மிகுதியான ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சுயமாயல்ல, கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தின் பலனாக, அவருடைய சாரம் அவர்களை நிரப்ப அவ்வாறு கனிகொடுத்தார்கள். ஒரு மனுஷனுடைய ஜீவியமும் அவன் ஊழியமும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பது மெய்யானால் அவன் கிறிஸ்துவாகிய செடியில் நிலைத்திருந்து பிழைக்கும் கொடியென்பதற்குச் சந்தேகமில்லை.

அவராலேயல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. "கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதுபோல், நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்டகொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம்"

என்றார். நம்மைப் பயமுறுத்தும்படி இவைகளைச் சும்மாதான் சொன்னாரோ? அல்லது உண்மையைத்தான் சொன்னாரோ? அவர் சொன்னது உண்மையென்றால் நாம் பயபக்தியுடன் அவருக்குச் செவிகொடுக்கவேண்டியது அவசியம். திராட்சச் செடியில் நிலைத்திராத கொடிகள் தானாகக் கனிகொடுக்கக் கூடுமானால், நிச்சயமாகவே நாமும் அவரில் நிலைத்திராமல் கனிகொடுக்கக்கூடும். அவரைவிட்டுப் பிரிந்து நாம் ஒன்றும் செய்யமுடியாதென்றும், நாம் ஒன்றுக்கும் பிரயோஜனப்படாமல் உலர்ந்து கெட்டுப்போவோம் என்றும் எச்சரிக்கிறார். செடியிலுள்ள ஜீவனாலே கொடி பிழைப்பதும் வளருவதும் கனிகொடுப்பதும் நிச்சயமானால், அந்த ஜீவனைவிட்டுப் பிரிந்துபோகும் கொடி ஒன்றுக்கும் உதவாமல் சாகவேண்டியதும் நிச்சயமே. ஏனென்றால் செடியும் கொடியும் பிழைப்பது **பொதுஜீவன்**. செடிக்கு ஒரு ஜீவனும் கொடிக்கு வேறு ஜீவனுமிருந்தால், கொடியானது செடியைவிட்டு பிரிந்த போதிலும் அது ஜீவனுள்ளதும் பிரயோஜனமுள்ளதுமாயிருக்கும். ஒரு கயிற்சுருளிலிருந்து ஐந்து அல்லது ஆறு முழக்கயிற்றை அறுத்துவிட்டால், அறுக்கப்பட்ட கயிறு பிரயோஜனமற்றுப் போவதில்லை. சொல்லவேண்டுமானால் அது அறுக்கப்பட்ட பின்புதான் புஸ்தகம் கட்டவோ, வேறுகாரியத்துக்கோ பிரயோஜனப்படும். அறுபட்டுப் பிரிக்கப்பட்டதினால் அதன் தன்மையும் பலமும் குறைந்துபோகமல் அறுபடாத கயிற்சுருளைப் போலவேயிருக்கும். காரணமென்ன? கயிற்சுருளுக்குப் பொதுவான ஜீவன் இல்லை. ஆனால் நமது கண்ணை, கையை, காலை நமது சரீரத்திலிருந்து பிரித்தால், அவைகள் யாதொன்றுக்கும் பிரயோஜனப்படாமல் செத்துப்போகும். அவைகளைக் காப்பாற்றி உபயோகப்படுத்தின **பொது** ஜீவனிலிருந்து அவைகள் பிரிக்கப்பட்டபடியால் ஒன்றுக்கும் உதவாமற்போகும். கிறிஸ்து நமக்கு ஜீவனானால் அவரைவிட்டுப் பிரிந்து நாம் பிழைப்பதெப்படி? அவரைவிட்டுப் பிரிந்து நாம் கனிகொடுப்பது எப்படி? "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார்.

அப்படியானால் கிறிஸ்துவில் நிலைத்திராதவர்கள் ஒன்றுமே செய்வதில்லையோ? அவர்களால் ஊழியம் நடக்கிறதில்லையோ? தேவ ஊழியம் என்னும் பேராலே மனுஷர் செய்யும் கிரியைகள் ஏராளம். மனுஷருக்கு அறிவும் பலமும் இருக்கும்வரை அவர்கள் அநேக காரியங்களை நடப்பிக்கக்கூடும். ஆனால் வேலைகள் வேறே, **கனிகள்** வேறே. நமது சுய அறிவால், சுயபலத்தால் எத்தனையோ பெரியகாரியங்களை நாம் செய்யலாம். அவைகளைத் தேவஊழியமென்றும் நாம் நினைத்துக்கொள்ளலாம். கிறிஸ்துவில் நாம் நிலைத்திராமல் செய்பவைகள் ஊழியமென்று எண்ணப்பட்டாலும். தேவ

பார்வையில் அவைகள் ஊழியமாகாது. மனுஷருக்கு அவைகள் ஆசீர்வாதமாகாது. தேவனுக்கு அவைகளால் மகிமைவராது. ஏனென்றால் அவைகள் ஜீவனற்ற கிரியைகள். அவைகள் கனிகள் அல்ல. "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என்றும், அவ்வாறு நிலைத்திராதவன் கனிகொடுக்கமாட்டான் என்றும் ஆண்டவர் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். நாம் அவரில் நிலைத் திருக்கும்போது, அவருடைய ஆவியும் அன்பும் நம்மை நிரப்புவதினால் நாம் செய்யும் கிரியைகள் கனிகளாகின்றன. இந்த வித்தியாசத்தை நாம் மறந்து ஜீவிக்கிறோம். இந்த வித்தியாசத்தை மறந்து பற்பல வேலைகளைச் செய்கிறோம். நமது கவனம் முழுவதும் **வேலையில்** இருக்கிறது. கொடியின் கவனமோ **நிலைத்திருப்பதில்** இருக்கிறது. கனி கொடுக்க வேண்டுமென்கிற கவலை கொடிகளுக்கில்லை. திராட்சச் செடியே அவைகளைக் கனி கொடுக்கச் செய்கிறது. இந்த இரகசியத்தை நாம் மறந்து அதைச்செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டும் என்று ஆத்திரப்படுகிறோம். வேலை செய்யும்படியான ஆசை நல்லதுதான். நாம் செய்கிற வேலைகள் கனிகளாயிருக்கவேண்டும் என்கிற ஆசையுண்டா? கிறிஸ்துவில் நிலைத்திராதவர்கள் பேசக்கூடும் பிரசங்கிக்கக்கூடும், பாடக்கூடும், எழுதக்கூடும், ஜெபிக்கக்கூடும், வேதபாடம் கற்பிக்கக்கூடும், பற்பலவேலைகளைச் செய்யக்கூடும். மனுஷர் அவைகளைப் பார்த்து மெச்சுக் கொள்ளவும்கூடும் அவைகளைச் செய்கிற நமக்கே ஒருவகையான திருப்தி உண்டாகக்கூடும். இவைகளைப் போல் மோசமும் பயங்கரமுமான காரியம் வேறில்லை. சாவுக்கேதுவான வேலைகளால் விளையும் தீமை மிகுதி. கிறிஸ்துவில் நிலைத்திருந்து ஜீவனைப்பெற்று, அவரது ஆவியாலும் அன்பாலும் நிரப்பப்பட்டு, நாம் ஊழியம் செய்யாவிட்டால், நாம் செய்யும் வேலைகள் திருச்சபைக்கு ஆசீர்வாதமாயிராமல் சாபமாயிருக்கும். அவ்விதமான வேலை இருதயத்தைக் கடினப்படுத்தி தேவனுடைய பரிசுத்த ஊழியத்தை மனுஷர் சாதாரணமாகவும் அசட்டையாகவும் நினைக்கச் செய்யும். இவ்வளவு துணிகரம் கொடிகளில் காணப்படுவதில்லை. அவைகள் செடியிலிருந்து பிரிந்திருந்தால் உலர்ந்து பட்டுப் போகின்றன. மனுஷனில் இருவித ஜீவனிருப்பதால் அந்தச் சாவு உடனே வெளிப்படுவதில்லை. ஆவிக்குரிய ஜீவனில்லாதிருந்தும் சரீர ஜீவனாலே மனுஷன் வேலை செய்யக்கூடும். மாம்சத்தின் கிரியைகள் ஒருபோதும் கனிகளாகமாட்டாது. கனிகள் ஆவிக்குரியவை.

இதுபோலவே ஜீவனாகிய கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களும் அவரில் நிலைத்திராத மனுஷரும் எத்தனையோ பெரியகாரியங்களை உலகத்தில் செய்து

வருகிறார்கள். கிறிஸ்துவில் நிலைத்திராதவர்கள் ஒன்றுமே செய்யமுடியாதென்று யார் சொல்லக்கூடும்? உலகம் புகழ்ந்து போற்றும் கல்விமான்களும், சாஸ்திரிகளும், வைத்தியர்களும், வக்கீல்களும், மந்திரிகளும், பிரசங்கிகளும் அநேகருண்டு. இவர்கள் கிறிஸ்துவில் நிலைத்திராதிருந்தும் தங்கள் புத்தியில், வேலையில் நிபுணரெனப் பேர்பெற்றிருக்கிறார்கள். இவர்கள் உலகத்தில் செய்யும் வேலையை யார் அற்பமாயெண்ணலாம்? வித்தியாசமென்ன? இவைகள் கனிகளாகமாட்டாது. அவைகளின் நோக்கமும் முடிவும் தவறு. தந்நயத்தாலும் தற்புகழ்ச்சியாலும் அவ்வேலைகள் கறைப்படுகின்றன. ஒரு வைத்தியன் வியாதியஸ்தனை சிகிச்சை பெறும் நோயாளியாக (Case) பாவித்து சிகிச்சைசெய்வதற்கும், அந்த வைத்தியன் கிறிஸ்துவின் அன்பினாலும் அனுதாபத்தினாலும் நிறைந்து வியாதியஸ்தன் மேல் மனதுருகிச் சிகிச்சை செய்வதற்கும் வித்தியாசமில்லையா? முந்தினதும் வைத்தியந்தான், பிந்தினதும் வைத்தியந்தான். முந்தினது வேலை; பிந்தினதோ கனி. இதுபோலவே சகல வேலைகளையும் குறித்துப் பேசலாம். கிறிஸ்துவில் நிலைத்திராத மனுஷன், கொடியைப்போல் வாடி, ஒன்றுமே செய்யக்கூடாமல் தத்தளிப்பானானால் உண்மை வெளிப்படும். ஆனால் மனுஷனுடைய காரியமோ அப்படியல்ல. அவன் கிறிஸ்துவாகிய திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டாலும் எத்தனையோ பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய புத்தியும் பலமும் அவன் சரீரத்தில் உண்டு. "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாதென்றும் என்னில் நிலைத்திராத கொடிகள் தானாய்க் கனிகொடுக்க முடியாதென்றும்" ஆண்டவர் சொன்னது உண்மையானால், அவரைவிட்டுப் பிரிந்து ஜீவிக்கிற மனுஷருடைய வேலைகள் உலகத்தில் எவ்வளவாகப் புகழப்பட்டாலும் அவருடைய பார்வையில் ஒன்றுமில்லை என்பது நிச்சயம். தேவனற்ற மனுஷருடைய கிரியைகள் உலகத்தில் எவ்வளவு பிரமாண்டமாய்த் தோன்றினாலும் அவைகள் பூர்வஜாதிகள் கட்டின பாபேல் கோபுரத்தைப் போலவும், நேபுகாத்நேச்சார் கட்டின மகா பாபிலோன்போலவும் அழியும். "நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி **நிலைத்திருக்கும்படிக்கும்** நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்றார். நாம் அவரில் நிலைத்திருந்து, அவர் நமதுமூலமாகச் செய்யும் ஊழியமோ ஒருபோதும் அழியாது. ஏனென்றால் கிறிஸ்துவே அவ்வூழியத்தைச் செய்கிறவர். கனிகள் **செடியின் மூலமாய்** வரவேண்டியது.

நாம் **கனிகொடுக்க**வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கம். நிழலுக்காக நாட்டப்பட்ட இலையடர்ந்த விருட்சங்களுண்டு. அலங்காரத்துக்காக வைக்கப்பட்ட அழகான செடிகளுண்டு. புஷ்பங்களுக்காகப் பயிரிடப்பட்ட பூச்செடிகள்

பலவுண்டு. நாம் நிழலுக்காகவும் அலங்காரத்துக்காகவுமாத்திரம் நாட்டப்பட்ட மரங்கள் அல்ல. நமது ஜீவியம் ஆரோக்கிய நிழல் போலவும், பரிசுத்த அலங்காரம்போலவும், பரிமளிக்கும் புஷ்பம்போலவும் விளங்கவேண்டியது நியாயமே. ஆனால் ஆண்டவர் நம்மைக் கொடிகளாகத் தம்மோடு சேர்த்துக் கொண்ட நோக்கம் கனிகொடுப்பதே. இலை அடர்ந்து ஓங்கிவளர்ந்த அத்திமரம் கனியற்றிருந்தபடியினால் அல்லவோ எஜமான் அதை வெட்டிப்போடக் கட்டளையிட்டான். "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்" என்று இரட்சகர் சொன்னதும் சரியே. கனிகொடுப்பது நமது வேலையல்ல. நமது பிரயாசம் அல்ல. நமது உத்தரவாதம் அல்ல. அப்படிப்பட்ட கவலை கொடிகளுக்கு இல்லை. கொடிகளில் காணப்படும் கனிகள் செடியாலே வந்தன. செடியின் சாரம் கொடிகளுக்கேறுவதினால் கொடிகள் கனி கொடுக்கின்றன. கொடிகளில் கனியில்லையென்றும் தோட்டக்காரன் கொடிகளைக் கோபித்துக் கொள்வதில்லை. அவன் பார்வை செடியை நோக்குகிறது. செடியைச் சரிப்படுத்தப் பார்க்கிறான். ஏனென்றால் கனிகொடுக்கவேண்டிய உத்தரவாதமும் பொறுப்பும் செடிக்கே உரியது. கிறிஸ்துவே மெய்யான திராட்சச்செடி. அவரில் பழுதொன்றும் இல்லை. அவர் பரிபூரண ஜீவனால் நிறைந்தவர். பரலோக சாரத்தினால் பிழைக்கிறவர்.

தேவனுடைய சகல பரிபூரணமும் சரீரப்பிரகாரமாய் அவருக்குள் இருக்கிறது. அவர் வற்றாச் சமுத்திரம். ஆகையால், அவரில் நிலைத்திருந்து பிழைக்கும் கொடிகள் கனியற்றிருப்ப தில்லை. அவருக்குள் இருக்கும் சாரமாகிய ஜீவன் நமக்குள் வருவதால் நாம் கனிகொடுக்கிறோம். அக்கனிகள் நம்மில் காணப்பட்டாலும் அவைகள் கிறிஸ்துவின் கனிகளே. அவர் எப்படிப்பட்ட திராட்சச்செடி என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. அவர் எப்பொழுதும் பிதாவின் சித்தத்தையே செய்தார். பிதாவுக்குப் பிரியமாகவே நடந்தார். பிதாவுக்குப் பிரிய மானதையே பேசினார். பிதாவின் மகிமையையே எப்பொழுதும் தேடினார். இவ்வாறு சகலத்திலும் பிதாவையே சார்ந்து பிழைத்தார். பாவிகள், நோயாளிகள்மீது பரிதபித்து மனதுருகினார். அன்பும் கிருபையும் அனுதாபமுமுள்ளவரா யிருந்தார். இரக்கமும் மன்னிக்கிற சுபாவமும் உள்ளவராக விளங்கினார். எங்கும் எல்லாருக்கும் நன்மை செய்தார். ஆறுதலற்றவர்களுக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இளைப்பாறுதலையும் அருளினார். இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கூறி அறிவித்தார். தம்மைத் தேடிவந்தவர்களை அவர் புறக்கணித்துத் தள்ளவில்லை. பரத்துக்குத் தாம்போன பின் இந்த ஆசீர்வாதமான ஊழியம் நின்றுபோவது அவர் சித்தமல்ல.

ஆகையால் சீஷர்களைத் தம்மில் நிலைத்திருக்கும் கொடிகளாகத் தெரிந்துகொண்டார். அவர்கள்மூலமாய்த் தமது கனிகளை உலகத்துக்குக் கொடுக்க விரும்பினார். அவ்வாறு அவர் பரத்திலிருந்து அனுப்பின ஆவியின்மூலமாய் அவரே சீஷர்களில் பிழைத்து அவர்களைக் கனி நிறைந்தவர்களாக்கினார். எருசலேமில் கல்விமான்களும் சாஸ்திரிகளுமான அநேகர் இருந்தார்கள். அவர்களாலே உலகம் இரட்சிக்கப்படவில்லை. அவர்கள் கிறிஸ்துவைச்சேர்ந்த கொடிகள் அல்ல. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட கொடிகளாகிய சீஷர்கள்மூலமாகவே உலகத்துக்கு இரட்சிப்பு வந்தது. அவர்களைப்போல் யார்யார் இன்று கிறிஸ்துவில் பூரணமாய் நிலைத்திருக்கிறார்களோ, அவர்கள் மெய்யாகவே உலகத்துக்குக் கனிகொடுக்கும் கொடிகளாவார்கள்.

கிறிஸ்துவில் நிலைத்திருப்பது எப்படி? நமது ஜீவியமும் ஊழியமும் பாழாய்ப்போவது நமக்குப் பிரியமில்லை. நாம் கனி நிறைந்தவர்களாயிருக்க விரும்புகிறோம். அப்படியானால் நமது ஜீவியத்தைப்பற்றியும் ஊழியத்தைப்பற்றியும் நாம் கவலைப் படுவதைவிட, அவரில் **நிலைத்திருக்கும்படி** கவலைப் படுவோமானால் எவ்வளவோ பாக்கியம்! கொடிக்கு ஒருவேலை, செடிக்கோ பலவேலை. நாம் கிறிஸ்துவில் நிலைத்திருப்ப தொன்றைத் தேடுவோமானால், நாம் வளர, இலைகள்விட, காய்க்க, கனிக்கொடுக்கவேண்டிய யாவற்றையும் செடியாகிய கிறிஸ்து பார்த்துகொள்வார். ''நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்'' என்றார். அவரில் நிலைத்திருப்பதே கனிகொடுப்பதற்கு இரகசியம். அவரில் நிலைத்திருப்பதெப்படி? இங்கேதான் தோட்டக்காரன் வரவேண்டியது. நாம் இயற்கையின்படி இந்தத் திராட்சச் செடியைச் சேர்ந்த கொடிகள் அல்ல. அப்படியானால் அவரில் நிலைத்திருப்பது நமக்கு இயல்பாகவேயிருக்கும். என்னில் நிலைத்திருங்கள் என்று அவர் சொல்லவேண்டியதில்லை. நாம் கசப்பான செடியின் கொடிகளாயிருக்கிறோம். அவரோ ஜீவ திராட்சச்செடியாயிருக்கிறார்.

ஆகையால் பிதாவாகிய தோட்டக்காரர் நம்மை நமது சொந்தச் செடியிலிருந்து பிரித்து, கிறிஸ்துவாகிய செடியில் ஒட்டவைக்கவேண்டும். கிளைகளை ஒட்டவைப்பதில் இருபக்கமும் வெட்டுவிழும். ஒட்டவைக்கப்போகிற கொடியை அதன் செடியிலிருந்து வெட்டியெடுத்து, அதை ஒழுங்காய்ச் சரித்து, அறுக்கவேண்டும். அதுபோலவே அந்த நல்ல மரத்தின் கிளையையும் ஒழுங்காய்ச்சரித்து அறுக்கவேண்டும். இவ்வாறு அறுபட்ட இரண்டு கிளைகளின் உட்பாகத்திலுள்ள துவாரங்கள் திறக்கப்படும். பின்பு கையிலிருக்கும் வெட்டப்பட்ட கிளையை

செடியிலுள்ள வெட்டப்பட்ட கிளையோடு ஒன்றாகச் சேர்த்து ஒரே கிளைபோல் கட்டவேண்டும். கட்டு கழன்றுபோகாமலும், வெளியிலிருந்து காற்றோ தண்ணீரோ உட்சென்று சேதப்படுத்தாமலும், இணைக்கப்பட்ட இடத்தை நன்றாய் மூடவேண்டும். இப்படிச்சிலநாள் பாதுகாக்கப் படும்போது செடியின் கிளையிலுள்ள சாரம் திறக்கப்பட்ட துவாரங்கள் வழியாக ஏறி, தன்னோடு இணைக்கப்பட்ட புதிய கிளையின் துவாரங்களுக்குள் சென்று அதைப் பிழைக்கச்செய்கிறது. புதிதாக இணைக்கப்பட்டகிளை மரத்துக்குச் சொந்தமான கிளையாகிக் கனிகொடுக்கிறது.

கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள ஐக்கியம் இதுபோலவே. நமது பழைய ஜீவியத்தில் நிலைத்திருந்து பிழைக்கும்வரையில் இந்தத் திராட்சச்செடியோடு நமக்குப் பங்கில்லை. இதைத்திட்டமாய் அறிந்துகொள்ளவேண்டும். மாம்சத்தின்படி பிழைக்கிறவர்கள் ஆவிக்குரிய கிறிஸ்துவோடு ஐக்கியப்படமாட்டார்கள். மறுபிறப்பின் அவசியத்துக்குக் காரணம் இதுதான். "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்திற்கு வரமாட்டான் என்றார்." அந்தப்பிதாவே திராட்சத் தோட்டக்காரர். ஒட்டவைக்கிறவேலையும், கொடிகளைச் சுத்தம் பண்ணுகிற வேலையும், கனிகொடுக்கச் செய்கிற வேலையும் தோட்டக்கார ருடையது. நம்மைத் தமது குமாரனாகிய செடியில் ஒட்டவைக்கும் படி தமதுகையில் அன்பின் கத்தியை எடுத்துக்கொண்டு நம்மிடம் வருகிறார். நமக்கோ சொந்தமான செடியிலிருந்து பிரிக்கப்பட மனம் வருகிறதில்லை. அவர் நம்மைப் பிரிப்பது நமக்கு வேதனையாயிருக்கிறது. இன்பமான பாவஜீவியத்தை விட்டுப் பிரிய நமக்கு மனமில்லை. ஆகிலும் நாம் ஒட்டவைக்கப்படப் போகிற செடியின் மேன்மையையும் அந்தச்செடியோடு இணைக்கப்படுவதால் நம்மிலும் நமது மூலமாகவும் உண்டாகப் போகிற ஆசீர்வாதமுள்ள கனிகளையும் அறிந்தோமானால்; பிதாவாகிய தோட்டக்காரரே! என்னைப் பிரித்து உமது திராட்சச் செடியில் ஒட்டவையும் என்று நாமே கெஞ்சுவோம்.

பிதா எவ்வளவு அன்புள்ளவர்! அவர் நம்மைமாத்திரம் வெட்டி, தமது செடியை வெட்டமாட்டா ரென்று எண்ணவேண்டாம். அவர் இருகிளைகளையும் வெட்டிச் சரிப்பாய் அறுக்காமற்போனால், அவர் தேவதோட்டக்காரரா யிருந்தாலும் அவரால் ஒட்டவைக்க முடியாது. ஒரு கிளையைமாத்திரம் வெட்டி ஒட்டவைத்த தோட்டக்காரனை உலகத்தில் நாம் கண்டதில்லை. பட்டயம் நமது அருமைரட்சகர் மேலும் விழுந்தது. அவர் வெட்டப்பட்டார். அவர் இருதயம் உடைப்பட்டு அன்பின் ஊற்றுக்கண்கள் திறவுண்டன. அவர் தமது ஜீவனை வெளியேவிடாதபடி தமக்குள் மறைத்து

வைக்கவில்லை. தம்மிலுள்ள ஜீவன் பிரவாகித்து ஓட எவ்வளவு தூரம் அவர் வெட்டப்படவேண்டுமோ, அவ்வளவுதூரம் வெட்டப்பட மனதார இடங்கொடுத்தார். கெத்செமனேயின் போராட்டத்தையும், சத்துருக்கள் கையில் பட்டபாடுகளையும், வாரடியால் முதுகுபிளந்து இரத்தம் பிரவாகித்து ஓடினதையும், சிலுவையில் அறையுண்டு அவர் திருமேனி நொறுங்கினதையும், ஈட்டிக்குத்தால் அவர்விலா திறவுண்டு இரத்தம் பாய்ந்ததையும் யார் மறக்கக்கூடும்? கிறிஸ்துவின் பாடு மரணத்தின்மூலமாய் பாவிகளான நாம் அந்தத் திராட்சசெடியோடு இணைக்கப் படுவதற்கு இடங்கிடைத்தது; அவர் ஜீவன் நமக்குள் பிரவேசித்து நாம் கனிகொடுக்க ஏதுவாயிற்று.

ஆண்டவர் தமது சீஷரைப்பார்த்து: ''என்னில் நிலைத்திருங்கள்'' என்று சொன்னாரேயல்லாமல், ஒட்ட வைப்பதைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. ஏனென்றால், அவர்கள் ஏற்கனவே தங்கள் பழைய ஜீவியத்தைவிட்டு அவரால் பிரிக்கப்பட்டு, அவரோடு இணைக்கப்பட்டிருந்தார்கள். இந்தப் புதிய இணைப்பில் அவர்கள் நிலைத்திருக்கவேண்டியது அவசியம். அவர் அவர்களைவிட்டுப் போவதினால் அந்த ஐக்கியம் பிரிந்துபோனதென்று அவர்கள் நினைக்கக்கூடாது. அந்த ஐக்கியத்தினால் உண்டாகும் ஆசீர்வாதமும் வல்லமையும் இன்னதென்று, அவர் பரத்துக்குப்போனபின்புதான் அவர்கள் காண்பார்கள். அவர் பரத்துக்குச் சென்று மகிமையடைந்தபின்பு அவரிலுள்ள சாரமாகிய பரிசுத்த ஆவி அவர்களுக்குட்பாய்ந்து அவர்களை நிரப்பிக் கனிகொடுக்கச் செய்யும். ஆகையால் தம்மில் ஒட்டவைக்கப்பட்டவர்களாகிய அவர்களுக்குள் சாரமேறத் தக்கதாக, செடியாகிய அவரில் அவர்கள் நிலைத்திருக்கவேண்டும். அவ்வாறு அவர்கள் அவரில் நிலைத்திருந்த சில நாள்களுக் குள்ளாக கிறிஸ்துவின் ஜீவனாகிய ஆவி அவர்களைநிரப்பிக் கனிகொடுக்கச்செய்தது. நாம் மறு பிறப்படையாமல் இன்னும் நமது பழைய ஜீவியத்திலிருப்போமானால், அந்தப் பாவஜீவியத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிறிஸ்துவில் புதிதாய் ஒட்டவைக்கப்படுவது அவசியம். நாம் தேவனுடைய பிள்ளை களாயிருந்தும் நமது ஜீவியமும் ஊழியமும் ஆசீர்வாதமற்றிருக்கு மானால் நாம் அவரில் நிலைத்திருப்பது அவசியம். நாம் பலவீனரும் கனியற்றயவர்களுமாயிருப்பது மெய்யானால் கிறிஸ்துவில் நாம் நிலைத்திருந்து ஜீவிக்கிறதில்லை என்பது மெய். ஏனென்றால், ''நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்'' என்று ஆண்டவர் சொன்ன சத்திய வாக்குத் தவறாது.

நாம் கர்த்தருக்குப் பிரியமாய் ஜீவிப்பதெப்படி? அவருக்கு மகிமையான கனி கொடுப்பதெப்படி என்கிற கவலை நமக்கு

வேண்டாம். நாம் எவ்வளவு தீர்மானஞ்செய்தாலும் பிரயாசப் பட்டாலும் காரியம் வாய்க்காது. நமக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள **ஐக்கியம்** சரியாயிருந்தால், நமது ஜீவியமும் ஊழியமும் சரியாயிருக்கும். மற்ற யாவும் மாம்சத்தின் கிரியையாகும். கிறிஸ்துவின் ஜீவனால் பிறக்கும் மார்க்கமே கிறிஸ்துமார்க்கம். அவர் ஆவியால் நடந்தேறும் ஊழியமே தேவஊழியம். நாமே நடத்திக்கொள்ளுகிற மார்க்கம் நமது மார்க்கம். நாமே செய்துகொள்ளுகிற ஊழியம் மனுஷ ஊழியம். இதை உணராமல் நமது காலத்தையும் பிரயாசத்தையும் எவ்வளவோ நஷ்டப்படுத்தி யிருக்கிறோம். உலகத்துக்குக்கடுத்த காரியங்களில் நமது பேச்சு, விண்ணப்பம், வேலைகளை, நமது சுயபலத்தால், சுயபுத்தியால் நடப்பிக்கும்போது அவைகள் சித்திபெறலாம். தேவகாரியத்தில் நமது சாமர்த்தியமும் முயற்சிகளும் பலிக்காது. ஏனென்றால் கனிகள் கொடிகளின் பிரயாசத்தால் உண்டாகாமல் செடியின் பிரயாசத்தால் உண்டாகின்றன. கொடிகள் செடியில் நிலைத்திருக்க, செடி கொடிகளை கனிகொடுக்கச் செய்கிறது. அநேகர் இதைக் கவனிக்கிறதில்லை. கிறிஸ்துவில் நிலைத்திருப்பதின் அவசியத்தையம், அதனால் உண்டாகும் **நிலையுள்ள** ஆசீர்வாதத்தையும் உணருகிறதில்லை. ஆண்டவர் சொன்ன திராட்சச்செடியின் முக்கியமான போதனையை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அமர்ந்த ஆழமான ஜீவனுக் கேதுவான ஐக்கிய ஜீவியம் அவர்களுக்குப் பிரியமில்லை. ஏனென்றால் அந்த மறைவான ஜீவியத்தில் அவர்களுக்கு உற்சாகமில்லை. மனுஷரால் புகழ்ச்சி வருவதில்லை. ஆகையால் ஓடவேணும் சாடவேணும்; படிக்கவேணும் நடிக்கவேணும்; பேசவேணும் ஜெபிக்கவேணும்; பலவிடங்களிலும் கூட்டங்களை வைக்கவேணும். ஆராதனைகளை வழக்கம்போல் நடத்தவேணும். ஆலோசிக்கவேண்டும், ஒழுங்குகளை ஏற்படுத்தவேணும், ஒழுங்குப்படி சகல முயற்சிகளும் நன்றாய் நடக்கவேணும். நாமே அவைகளை நடத்திக்கொள்ளவேணும். நாமே நம்மை புகழ்ந்துகொள்ளவேணும். நாமே சந்தோஷப்பட்டுக்கொள்ள வேணும். நாம் விரும்பினபடி காரியங்கள் நடவாமற்போனால் துக்கப்பட்டுக்கொள்ளவேணும். எல்லாம் நமது யோசனையும், நமது முயற்சியும், நமது வேலையும், நமது கொண்டாட்டமுமாக யிருக்கின்றன.

இப்படியெல்லாம் செய்தால்தான் வேலைநடந்ததுபோல நமக்கு ஆறுதலுண்டாகும். இப்படிச்சொல்லும்போது ஜெபத்துக்கும் தேவ ஊழியத்துக்கும் விரோதமாகப் பேசுவதாக நினைக்கவேண்டாம். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவர் ஆவியினால் ஏவப்பட்டுச் செய்யாத சகலகாரியங்களும் வீணாய்ப்போகும் அல்லவோ? மனுஷர் நமது முயற்சிகளை மெச்சுக்கொள்ளலாம். மனுஷர் தயவால் நமது காரியங்கள்

அனுகூலமடையலாம். ஆனால் மாம்சத்தின் சம்பிரதாயம் யாவும் தேவனுக்குமுன்பாக அருவருப்பாக யிருக்கிறது. நமது உண்மையற்ற சத்தத்தையும் பேச்சையும் அவர் வெறுக்கிறார். நாம் கிறிஸ்துவில் நிலைத்திராமல் செய்கிற காரியங்கள் உண்மையற்றவைகளே. அவைகளால் தேவனுக்கு ஒருபோதும் மகிமை வருவதில்லை. தேவஊழியராகிய நாம் இதைக்கொஞ்சம் கவனிப்பது நல்லது. ''கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்'' என்று எஜமான் சொன்ன வார்த்தையை யார் தள்ளக்கூடும்? மற்ற வேலைக்காரர் தங்கள் வேலைகளைச் செய்வதுபோல் கிறிஸ்துவின் ஊழியரும் செய்யத்துணிவது எவ்வளவு மோசம்! மனுஷனுடைய சுயமுயற்சிகள் ஒருக்காலும் கனிகளாகாது. அப்படிப்பட்டவர்கள் தங்கள் வேலையை நிறுத்தி, நிலைத்திருக்கும் இரகசியத்தை ஆண்டவரிடம் கற்றுக் கொண்டால் நலமாயிருக்கும்.

கொடியின் வேலையெல்லாம் ஒன்றுதான். அது செடியைப் பூரணமாகச் சார்ந்து பிழைக்கிறது. தனக்குக் கிடைக்கவேண்டிய சாரத்தைக்குறித்து அது கவலைப்படுகிறதில்லை. தான் வளரவேண்டுமே என்று கலங்குவதில்லை. தான் கனிகொடுக்க வேண்டுமே என்று பிரயாசப்படுவதில்லை. அந்தக் கவலை யாவும் செடிக்குரியது. செடியானது தன் வேர்களை அங்கு மிங்கும் அனுப்பி, சாரத்தையும் உரத்தையும் உட்கொண்டு கொடிகளுக்கு அனுப்ப, அக்கொடிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட சாரத்தால் வளர்ந்து கனிகொடுக்கின்றன. நாம் கிறிஸ்துவால் பிழைப்பதும் கனிகொடுப்பதும் இதுபோலவே. தேவனுடைய சகல பரிபூரணமும் அவருக்குள் நிறைந்திருக்கிறதென்றும், அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் என்று அப்போஸ்தலன் சொன்ன ஐக்கியத்தின் இரகசியம் இதுதான். நாம் கிறிஸ்துவில் பூரணமாய்ச் சார்ந்திருக்கும்போது அவருடைய ஜீவனாகிய ஆவி நமக்குள் வந்துபெருக, நாம் ஆசீர்வதிக்கப்படு கிறோம். கொடியில் சாரம் இடைவிடாமல் ஏறிக்கொண்டிருப்பது போல, கிறிஸ்துவின் ஜீவன் இடைவிடாமல் நமக்குக் கிடைக்கிறது. நாம் அவரைவிட்டுப் பிரிந்தால் அல்லாமல் அந்த ஜீவன் நின்றுபோவதில்லை. கொடி சிலநாள்கள் நிலைத்திருந்து அப்புறம் பிரிந்துபோகிறதில்லை. எக்காலமும் நிலைத்திருந்து இடை விடாமல் ஜீவனைப்பெற்று வளருகிறது. கிறிஸ்து நமக்கு ஜீவன் என்பதும், நாம் அவராலே பிழைக்கவேண்டுமென்பதும் மெய்யானால் நாம் இடைவிடாமல் அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்பது நியாயமே. அப்படியிருக்க ஞாயிற்றுக் கிழமையிலும், பண்டிகை நாள்களிலும் விசேஷித்த காலங்களிலும் மாத்திரம் நம்மில் காணப்படும் உற்சாகத்தைக் குறித்து என்ன

சொல்லுகிறது? அந்த உற்சாகம் செடியிலிருந்து பெற்றுக்கொண்ட ஜீவனால் வந்ததோ, அல்லது நமது மாம்ச உற்சாகமோ? அவரில் நிலைத்திராத கொடிகளுக்கு ஜீவனேது?

நமது ஒன்றுமில்லாமையை உள்ளபடி உணராததே நாம் அவரில் நிலைத்திருப்பதற்குக் காரணம். "ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" (கலா. 6:3). "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல் ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியுள்ளவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2 கொரி. 3:5). எல்லாரைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பிரயாசப்பட்ட அப்போஸ்தலன் தம்மைக்குறித்துச் சொல்லக்கூடியது இவ்வளவுதான். தாம் ஒன்றுமில்லாத கொடியென்றும், கிறிஸ்துவாகிய செடியில் அவர் நிலைத்திருந்தால், உன்னதமான ஜீவியமும் கனிகள் நிறைந்த உத்தம ஊழியமும் தம்மில் காணப்பட்டதென்றும் அனுபவ சாட்சியாகக் கூறுகிறார். கொடியின் ஜீவியம் அதுதான். தான் ஒன்றுமில்லை, தன்னால் ஒன்றும் ஆகிறதில்லை. தான் வளர்ந்து கனிகொடுப்பதற்குக் காரணம், தான் இடைவிடாமல் நிலைத்திருக்கும் செடியினால் என்பது அதற்குத் தெரியும். நாம் ஒன்றுமில்லாதவர்களாகும் போது கிறிஸ்து நமக்கு எல்லாமாகிறார். கொடியின் பாக்கியமான ஜீவியம் அதுவே. அது பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளதா யிருப்பதின் இரகசியம் அதுதான். ஆண்டவர் நம்மை இந்த ஆசீர்வாதமான ஜீவியத்துக்கு அழைக்கிறார். அவர் நம்மைத் தமது ஜீவனால் நிரப்புவதினால் நாம் கனிகொடுக்கவேண்டு மென்று விரும்புகிறார். நமது இருதயம் அவர் இருதயத்தோடு இணைக்கப்படுவதால் அவர் ஜீவியமே நம்மில் காணப்படும். அவர் ஊழியமே நம்மில் நிறைவேறும்.

இயற்கையாக நம்மிலுள்ள கோபமும், பெருமையும், பிடிவாதமும், பொறாமையும், சகல தீயகுணங்களும் நீங்கி, கிறிஸ்துவில் விளங்கிய சாந்தமும் அன்பும், இரக்கமும், தாழ்மையும் அனுதாபமும், பொறுமையும், பரிசுத்தமும், காணப்படும். நாம் வீணாகப் பிரயாசப்பட்ட முயற்சிகள் நீங்கி ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் கனிகள் உண்டாகும். நமது பேச்சு, பிரசங்கம், ஜெபம், வாசிப்பு, எழுத்து, சிநேகம் யாவும் வியர்த்தமாகாமல் மிகுந்த பலனுக்கேதுவான தேவஊழியமாகும். ஆத்திரமும் ஓட்டமுமான இக்காலத்தில் கிறிஸ்துவின் சமுகத்தில் அமர்ந்திருக்கும் ஜீவியத்தை நாடுவோமாக. எவ்வளவுக்கு நமது ஊழியத்தை நினைக்கிறோமோ அவ்வளவுக்கு ஆண்டவரைப் பூரணமாகச் சார்ந்துகொள்ளுவோ மாக. அவரில் இடைவிடாமல் நிலைத்திருப்பதையே நாம்

பிரதானமாகத் தேடும்போது, மற்றக்காரியங்கள் யாவையும் அவர் பார்த்துக்கொள்வார். இந்த ஆழமும் அமரிக்கையுமான ஜீவியத்தில் நாம் பிரவேசிக்கும்போது மனுஷர் பார்வையில் நாம் வேலையற்ற சோம்பேறிகள்போல் காணப்படலாம். கிறிஸ்துவில் உண்மையாக நிலைத்திருக்கும் ஜீவியம் சோம்பலானதென்று யார் சொல்லக்கூடும்? அவருடைய ஆவியானவர் நமக்குள் வசிக்கும்போது அவர் நம்மை வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவிடார். ஆனால் ஒன்று நிச்சயம். ஆவிக்குரிய மனுஷன் உலகத்துக்கு ஆசீர்வாதமாயிருக்கும் விதத்தை மற்றவர்கள் அறியமாட்டார்கள். புறம்பான முயற்சிகளில் பிரியமுள்ளவர்களுக்கு கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் அமரிக்கையான ஜீவியத்தின் வல்லமை எப்படிப்பட்டதென்று தெரியமாட்டாது. நமக்கு கர்த்தருடைய புகழ்ச்சி வேண்டுமோ? மனுஷருடைய புகழ்ச்சி வேண்டுமோ? இப்படிப்பட்ட சோதனையை அப்போஸ்தலன் அறிந்து; கர்த்தரால் புகழ்ப் படுகிறவனே உத்தமன் என்றும் இப்படிப்பட்டவர்களுக்குரிய புகழ்ச்சி கர்த்தரால் வருகிறதென்றும் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவில் நிலைத்திராத ஜீவியமும் ஊழியமும் வீணாகுமென்று பார்த்தோம். அப்படியானால் நிலைத்திருக்கும்படி நாம் செய்யவேண்டியதென்ன? இந்த உவமையை வாசிக்கும்போது சில குறிப்புகள் காணப்படுகின்றன, '**என்னில்** நிலைத்திருங்கள்' என்று ஆண்டவர் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார். நாம் குளிரில்போய் வெகுநேரம் உட்கார்ந்திருந்தால் நமது தேகம் குளிரால் நடுங்கும். நாம் வெயிலில் வெகுநேரமிருந்தால் நமது தேகம் உஷ்ணமேறிக் கொதிக்கும். இதுபோலவே நாம் கிறிஸ்துவின் சமுகத்தில் அமரிக்கையாய்க் காத்திருக்கும்போது அவருடைய திவ்விய சமுகம் நம்மை ஆண்டுகொள்ளுகிறது. அவருடைய பாதபடியில் எவ்வளவுநேரம் செலவழிக்கிறோமோ அவ்வளவுக்கு அவருடைய சாயலுக்கொப்பாக மாறுகிறோம். "அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்." "ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச்சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" *(2 கொரி. 3:18)* அவர் சமுகத்தில் நமது குறைவுகள் நீக்கப்படுகின்றன. அவர் திருரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது. அவர் சமாதானம் நம்மை நிரப்புகிறது. அவர் சாயல் நமக்கு கிடைக்கிறது. அவரில் நிலைத்திருந்து ஜீவிப்பதற்கு அவர் சமுகத்தில் காத்திருந்து ஜெபிப்பது அவசியம்.

"என் **அன்பில்** நிலைத்திருங்கள்" என்கிறார். நமக்குள் இருவர் சிநேகமாகி, அவர்கள் சிநேகம் வரவர வளர்ந்து பூரணப்படுவதுபோல், கிறிஸ்துவின்மீதுள்ள நமது அன்பு வரவர வளரவேண்டும். "என் அன்பு" என்கிறார். இயல்பாய் நமக்குள்

அன்பில்லை. நாம் யாதாமொரு வஸ்துவின் அருமையை அறியுமுன் அதை விரும்புகிறதில்லை. அதன் பிரயோஜனத்தை அறிந்தபின் அதைச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்புகிறோம். கர்த்தராகிய இயேசுவின் அதிசயமான அன்பை உணரும்போது அவரை நேசிக்காமலிருக்க முடியாது. அந்த அன்பை நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவரோடு பேசாமலும், அவரோடு பழகாமாலும், அவர் நமக்காகச் செய்திருக்கிற காரியங்களை அறியாமலும் அவரிடத்தில் அன்பாயிருப்பதுகூடாது. அநேக காரியங்கள் நமது இருதயத்தை ஆண்டுகொண்டிருக்கும்வரையில், அவரது அன்பின்சாரம் நமது இருதயத்துக்குள் வர ஏதுவில்லை. அந்த அன்பு நமது உள்ளத்தில் பிரவேசிக்கிறவரையில் நாம் அவரில் நிலைத்திருப்பதும்கூடாது. ஆகையால் அவர் அன்பைப்பெற்று, அவ்வன்பில் நிலைத்திருக்கத் தக்கதாக, நமது இருதயத்தை அவருக்குமுன்பாக ஊற்றவேண்டும். அவர் தமது ஆவியினால் தேவ அன்பை நமது இருதயத்தில் ஊற்றுவார் (ரோமர் 5:5) கபடும் மாயமுமான இருதயத்தில் அவருடைய அன்பு வெளிப்படுவதில்லை. உலகத்தில் திறந்த இருதயமுள்ளவர்களே அன்பான சிநேகிதர்கள். ஒருவரிடத்தில் கபடும் மறைவும் காணப்பட்டால் அந்தச்சிநேகம் முறிந்துபோகும். அருமை இரட்சகர் திறந்த இருதயமுள்ள அன்பன். அவர் அன்பைப் பெற்றுக் கொள்வதற்கும், அந்த அன்பில் நிலைத்திருப்பதற்கும் நமக்கும் கபடற்ற திறந்த இருதயம் வேண்டும். அவருக்கு ஒன்றையும் நாம் மறைக்கக்கூடாது. அவருக்கு எல்லாம் தெரியும்.

"என் **வார்த்தைகள்** உங்களில் நிலைத்திருக்கவேண்டும்" என்கிறார். இது கீழ்ப்படிதலின் ஜீவியம். தம்மையே அதற்கு மாதிரியாகச் சொல்லுகிறார். ''நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என் அன்பிலே நிலைத்திருப்பீர்கள்'' என்கிறார். அவர் விருப்பத்துக்கு விரோதமாய் நடந்து அவர் அன்பில் நாம் எப்படி நிலைத்திருக்கக்கூடும்? அவர் சொற்படி நடப்பதே அவர்பேரிலுள்ள அன்புக்கு அடையாளம். அந்த அன்பின் பலத்தாலேயே அவருக்குப் பிரியமாக நடக்கவுங்கூடும்.

இவ்வாறு நாம் பூரணமாய் அவருக்கு நம்மைக் கையளித்து, இடைவிடாமல் அவரில் நிலைத்திருந்து ஜீவிக்கும்போது கனியும், அதிகனிகளும், மிகுந்த கனிகளும், நிலைத்திருக்கும் கனிகளும் நம்மில் உண்டாகும். கொடியானது செடியில் மாரிகாலத்திலும், கோடை காலத்திலும், குளிர் காலத்திலும், காற்றுக் காலத்திலும், எப்பொழுதும், இரவும் பகலும், நீங்காமல் நிலைத்திருந்து கனிகொடுப்பதுபோல, நாமும் இடைவிடாமல் நிலைத்திருப்போ

மாக, இவ்வாறு நிலைத்திருக்கும் ஜீவியத்தைக் கெடுக்கும்படி எத்தனையோ சோதனைகள் நமக்கு நேரிடும். நாம் கலங்கிச் சோர்ந்துபோகவேண்டியதில்லை. பிதாவாகிய தோட்டக்காரர் நமக்கு உண்டு. அவர் கையிலிருந்து நம்மைப் பிரிக்க ஒருவராலும் முடியாது. மேலும் நமது இரட்சகர் பிதாவைப்பார்த்து: "பிதாவே, நீர் இவர்களை எனக்குத்தந்தீர். நீர் இவர்களைத் தீமையிலிருந்து காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபித்தார். அந்த ஜெபம் கேட்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தமது கொடிகளை ஒருக்காலும் இழந்துபோகமாட்டார். இந்தப் பாக்கியமான கொடியின் ஜீவியத்தில் நாம் பிரவேசித்து மிகுந்த கனிகளைக்கொடுப்பதால் உலகம் ஆசீர்வதிக்கப்படும், பிதா மகிமைப்படுவார். இரட்சகர் நம்மைக் கொடிகளாகத் தெரிந்து கொண்ட நோக்கமும் நிறைவேறும்.

28
யோவான் பதினேழு
John Seventeen

ஆண்டவர் சிறுவயதுமுதல் செய்த எல்லா ஜெபங்களும் எழுதப்பட்டிருக்கக்கூடுமானால் திருச்சபைக்கு அவைகள் விலையுயர்ந்த பொக்கிஷமாகயிருக்கும். அவரைப்போல் பேசக்கூடியவன் யார்? அவரைப்போல் ஜெபிக்கக்கூடியவன் யார்? பேச்சிலும் ஜெபம் விசேஷம். ஒரு மனுஷனுடைய இருதயத்தின் தன்மையை அவன் தனித்துச் செய்யும் ஜெபம் வெளிப்படுத்துவதுபோல் அவன் பேச்சு வெளிப்படுத்தாது. இரட்சகருடைய இருதயத்தின் வாஞ்சை, விசுவாசம், நம்பிக்கை, அன்பு, எண்ணம், தீர்மானம் முதலான அநேக விஷயங்கள் அவருடைய ஜெபங்களில் வெளிப்பட்டிருக்கவேண்டும். எவ்வளவோ ஏராளமான இரகசியங்களை அவைகளில் காணலாம். பிதாவுக்கும் அவருக்குமுள்ள சம்பந்தத்தை அவைகளில் அறியலாம். அந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கத்தக்கவன் யார்? அவர் பிதாவோடு பேசும் வார்த்தைகளின் கருத்தை அறியக் கூடியவன் யார்? இராமுழுவதும் அவர் ஜெபித்திருக்கிறார். வனாந்தரங்களில் தனித்துப்போய் அவர் ஜெபித்திருக்கிறார். அவர் என்னென்ன காரியங்களுக்காக ஜெபித்தாரென்று நமக்குத் தெரியாது. பிதாவின் நாமம் பூமியில் பரிசுத்தமாக, அவருடைய இராஜ்யம் வர, அவருடைய சித்தம் செய்யப்பட, பாவிகள் இராஜ்யத்தின் புத்திரராக அவர் ஜெபித்திருப்பார். இதுதவிர, தமது தாய்க்காக, சகோதரருக்காக, பேதுரு, யாக்கோபு, யோவான் முதலான அப்போஸ்தலருக்காக, பெத்தானியாவூர் சிநேகிதருக்காக, இன்னும் எத்தனையோ மனுஷருக்காக அவர் பேர் சொல்லி ஜெபித்திருப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. இதை வாசிக்கிற உம்மையும் அவர் மறந்தவரல்ல.

அவர் பகிரங்கமாகச் செய்த சில ஜெபங்களுண்டு. "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு

வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம் பிதாவே இப்படிச்செய்வது உமது திருவுளத்துக்குப் பிரியமா யிருந்தது." "பிதாவே! நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; நீர் எப்போதும் எனக்குச் செவிகொடுக்கிறீரென்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும் படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன்" "பிதாவே! உமது நாமத்தை மகிமைப்படுத்தும்." "பிதாவே! உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது." "பிதாவே! இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று, அறியா திருக்கிறார்களே." "பிதாவே! உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்பவைகளே.

வியாழன் இரவில் ஆண்டவர் தமது சீஷருடன் மேல்வீட்டறையிலிருக்கிறார். சிலுவை அவருக்குமுன் நிற்கிறது. மறுநாளில் தமக்கு நேரிடப்போகிற பாடுகள் யாவும் அவருக்குத்தெரியும். அப்படியிருந்தும் எவ்வளவு அமைதி! எவ்வளவு அன்பு! எவ்வளவு அனுதாபம்! ஒரு அடிமையைப் போல் சீலையைக்கட்டிக்கொண்டு அடியார்கள் கால்களைக் கழுவித் தாழ்மையைப் போதித்தார். அந்தக்காட்சியை அவர்கள் மறக்கக்கூடுமோ? பின்பு உட்கார்ந்து அவர் அவர்களோடு பேசின சம்பாஷணையைப்போல் உள்ளத்தை உருக்கக்கூடியது எது? தமது கலக்கத்தை மறந்து உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாகவென்று தைரியப்படுத்துகிறார். எல்லாவற்றையும் சொன்னபின்பு தமது கண்களை வானத்துக்கு ஏறெடுத்து மகா அருமையான ஜெபத்தைச் செய்கிறார். ஆவிக்குரிய அன்பன் யோவானைத்தவிர அன்றிரவு ஆண்டவர் பேசின அமிர்தவாக்குகளையும் அருமையான இந்த ஜெபத்தையும் எழுதத்தகுதியுள்ளவன் யார்? இது கட்டுமான ஜெபமோ? கட்டுமான ஜெபத்துக்கு **நிறைவேறுதல்** ஏது? இதை எழுதின யோவானும் இந்த ஜெபத்திலடங்கின ஆழமான சத்தியங்களைப் பூரணமாய் அறிந்துகொண்டாரென்று சொல்லமுடியாது. இவ்வளவு உன்னதமும் மகிமையுமான ஜெபத்தைச் செய்தவர்கள் முன்னுமில்லை பின்னுமில்லை. தேவனிடத்திலிருந்து வந்தவரைத்தவிர வேறே யாரும் இப்படி ஜெபிக்கமுடியாது. இதன்விசாலம் சமுத்திரம். ஒப்பற்ற நேசரின் ஒப்பற்ற வேண்டுதல்! அவர் இதுவரை அவர்களோடு உள்ளம் உருகிப்பேசின அன்பான வார்த்தைகளால் அவர்கள் இருதயம் மிகுந்த அமைதலாகிப் பரவசப்பட்டது. அவர் தமது கண்களை ஏறெடுத்து **பிதாவே** என்று சொன்னபோது, பிதாதாமே அவர்களுக்கு முன்பாகவந்து நிற்பதுபோலிருந்தது. அவர் பிதாவைப்பார்த்துப் பேசின

வாஞ்சையையும், வேண்டிக்கொண்ட விண்ணப்பங்களையும் பயபக்தியுடன் கவனித்தார்கள். அவர் பரத்துக்குப் போனபின்பு இதுபோலவே தங்களுக்காக வேண்டுதல்செய்கிறாரென்கிற நிச்சயம் அவர்களுக்குண்டானதும் ஆச்சரியமல்ல. யூதாஸ்காரியோத் இவ்வளவு அன்பான வார்த்தைகளுக்கும் அருமையான வேண்டுதலுக்கும் தன்னை அபாத்திரனாக்கிக் கொண்டதுபோல, கிறிஸ்துவில் இடறுகிற வேத விரோதிகளும் தங்களைத் தாங்களே சேதப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

இப்பொழுது ஆண்டவர் செய்த ஜெபத்தைக் கவனிப்போம். நாம் பொதுவாய் மூன்று காரியங்களை முறையே நினைப்பது வழக்கம். தேவனை நினைப்போம், அதன்பின் நம்மை நினைப்போம், பின்பு மற்றவர்களை நினைப்போம். இந்த மூன்றையும் இந்த ஜெபத்தில் காணலாம், இங்கே தேவனைப்பற்றி அவர் சொல்லுகிறவைகளுமுண்டு. தம்மைப்பற்றிச் சொல்லு கிறவைகளுமுண்டு. மற்றவர்களைப்பற்றிச் சொல்லுகிறவைகளு முண்டு.

இந்த ஜெபத்தில் **தேவனை** மூன்று வகையாய் நமக்கு வெளிப்படுத்துகிறார். முதலாவது, அவர் தேவனுக்குக்கொடுக்கிற **பெயர்களைக்** கவனிக்கவேண்டும். பிதாவே! பரிசுத்தபிதாவே! நீதியுள்ள பிதாவே! என்று ஜெபிக்கிறார். தேவன் நமது பிதாவென்பது ஆதிமுதல் அறியப்பட்டிருந்தாலும் அது சரீர சம்பந்தமான அறிவேயன்றி மற்றப்படியல்ல. அவர் நம்மை உண்டாக்கின பிதாவென்பது பொது அறிவு. அவர் யாரென்றும் எப்படிப்பட்டவரென்றும் நமக்குத் தெரியாது. முதல் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்கள் தேவனைப் பிதாவென்று அழைத்தாலும் அவர் எப்படிப்பட்ட பிதாவென்று உணராமல் பாவங்களில் சிக்குண்டிருந்தார்களென்று தோன்றுகிறது. ஆகையால் பேதுரு அப்போஸ்தலன்: "பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் **பிதாவாகத்** தொழுதுகொண்டுவருகிறபடியால் இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் **பயத்துடனே** நடந்து கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு எழுதி எச்சரித்தார். மாம்சத்துக்குரிய தகப்பன்மார் நமது சரீரங்களுக்குத் தகப்பன்மாரென்றும், தேவனோ நமது **ஆவிகளின் பிதாவா** யிருக்கிறாரென்றும் எபிரேயரில் வாசிக்கிறோம். தேவசுபாவம் எப்படிப்பட்டதென்று நமக்கு வெளிப்படுத்தும்படி நமதாண்டவர் பிதாவே என்று மாத்திரம் சொல்லாமல், **பரிசுத்த பிதாவேயென்றும் நீதியுள்ள பிதாவேயென்றும்** சொல்லுகிறார். பரிசுத்தமென்பது பாவங்களுக்கு விலகினது மாத்திரமல்ல, நன்மையான யாவற்றிற்கும் உரித்தான சுபாவம். நீதியென்பது பாவத்தையும் அநியாயத்தையும் தப்பவிடாத சுபாவம். தேவன்

அன்புள்ளவரானதால் அவர் பரிசுத்தமும் நீதியுமற்றவரென்று நாம் நினைக்கக்கூடாது. அவர் பரிசுத்தமும் நீதியுமாயிருப்பதினாலேயே அன்புள்ளவராயிருக்கிறார். தமது குமாரனை நமக்காகக் கொடுத்ததினாலே நமது பாவங்களை அவர் அற்பமாய் எண்ணுகிறாரென்றும், நீதியைக் காண்பிக்க மாட்டாரென்றும் எண்ணக்கூடாது. குமாரனைக் கொடுப்பதற்கு முன் எவ்வளவு பரிசுத்தமும் நீதியுமாயிருந்தாரோ குமாரனைக் கொடுத்தபின்பும் அவ்வளவு பரிசுத்தமும் நீதியுமுள்ளவராகவே யிருக்கிறார். நமது பாவங்களுக்கும் அநீதிக்கும் தக்கபடி அவர் நமக்குச் சரிக்கட்டாமலிருந்தால், அது அவருடைய பரிசுத்தமும் நீதியும் குறைந்ததினாலுமல்ல. மாறினதினாலுமல்ல. தேவன் நமக்கு காண்பிக்கும் தயவும் இரக்கமும் நமது மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின்மூலமாக என்பதை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது. நமது பிணையாளியாகிய தமது குமாரன்மேல் தமது பரிசுத்தத்தையும் நீதியையும் பரிபூரணமாய் நிறைவேற்றினார். இயேசுகிறிஸ்து தேவனால் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தமும் நீதியுமானார். தமது குமாரனிடத்தில் தமது நீதியை நிறைவேற்றி குமாரனை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை நீதிமான்களாக்குகிற நீதியுள்ள பிதா அவரே. தமது குமாரனிடத்தில் தமது பரிசுத்தத்தை நிறைவேற்றிக் குமாரனை. ஏற்றுக்கொள்ளுகிறவர்களைப் பரிசுத்த மாக்குகிற பரிசுத்த பிதா அவரே. நாம் கிறிஸ்துவைத்தள்ளி நேராக தேவனிடத்தில் போவோமானால் அவருடைய பரிசுத்தத்திற்கும் நீதிக்குமுன்பாக நாம் நிற்கமுடியுமா? ஆகையால் விசுவாசிக்கிற யாவருக்கும் கிறிஸ்து தேவனுடைய பரிசுத்தமும் தேவ நீதியுமானார். தகப்பன்தானே என்று சொல்லி அசட்டையாய் நடவாதிருப்போமாக. நமது பிள்ளைகளுக்குமுன்பாக நாம் எப்படிப்பட்ட பிதாக்களாக நடந்துகொள்ளவேண்டு மென்பதையும் இதனால் கற்றுக்கொள்வோமாக.

இரண்டாவது, ஆண்டவர் தமது சீஷர்களுக்காக வேண்டிக்கொண்ட **விண்ணப்பங்களின்மூலமாய்** தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறார். சர்வத்தையும் அதிசயமாய் உண்டாக்கின அளவில்லாத மகிமையுள்ள தேவன் அற்ப மனுஷராகிய நம்மைக் கவனிப்பாராவென்று கேட்பவர்களுண்டு. யோசிக்கப்போனால் மகா பெரிய தேவன் அற்பமனுஷனுக்காகக் கவலைப்படுவாரோ என்று நினைப்போம். இந்த ஜெபத்தில் தேவன் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் கவலைப்படுவது நிச்சயமென்று ஆண்டவர் காண்பிக்கிறார். பிதாவே இவர்களை நீர் எனக்குத் தந்தீர். இவர்கள் எப்படிப்பட்டவர்களென்று உமக்குத் தெரியும். இவர்கள் மகாபேதைகளும் பலவீனருமா யிருக்கிறார்கள். நீர் இவர்களைத் தீமையினின்று காத்துக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்கிறார். அளவில்லாத தேவன் அற்பமனுஷராகிய நம்மை இடைவிடாமல்

கவனித்து, நம்மோடுகூடயிருந்து, சகல தீங்குகளுக்கும் நம்மை விலக்கி இரட்சித்து, மேய்ப்பன் தன் ஆடுகள் ஒவ்வொன்றையும் அறிந்து நடத்துவதுபோல நம்மையும் நடத்துகிறார் என்பது நமக்கு எவ்வளவு ஆறுதல்! தேவன் உன்னதமானவராயிருந்தும் தாழ்வான அடியாரைக் கண்ணோக்கிப்பார்க்கும் கருணையுள்ள பிதாவாயிருக்கிறார்.

மூன்றாவது, அவர் ஜெபித்த மாதிரியில் தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறார். எவ்வளவு தாராளமாகப் பிதாவோடு பேசுகிறார்! இந்த ஜெபம் அதிக நீளமுமல்ல அதிகச் சுருக்கமுமல்ல. நிறுத்தி ஜெபித்தால் மூன்று நாலு நிமிஷங்கள் பிடிக்கும். இதில் முகவுரை, விண்ணப்பம், முடிவுரை என்கிற ஒழுங்கைக் காணோம். சொன்னதைத் திரும்பச் சொல்லக்கூடாதென்கிற பிரமாணத்தையும் காணோம். வார்த்தைகளின் சிறப்பலங்காரத்தையும் காணோம். தகப்பனிடத்தில் உள்ளக்கனிவோடு பேசும் பிள்ளையின் சத்தம் தொனிக்கிறது. பிதாவே வேளை வந்ததென்பதல்லவோ ஜெபத்தின் ஆரம்பம். அவ்வார்த்தைகளின் இரகசியத்தை அந்தச்சமயத்தில் பிதாவையும் குமாரனையும்தவிர அறிந்தவர்கள் யார்? எதிர்பார்த்த வேளை வந்துவிட்டது. மனுஷகுமாரன் பாவிகள் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போகிறார். அருமைச் சீஷர்களைவிட்டுப் பிரியவேணும், அவர்கள் இருதயம் கலங்குகிறது. அவருடைய உள்ளம் அனுதாபத்தால் பொங்குகிறது. வெறும் வார்த்தையும் சத்தமும் ஜெபமாகாது. உள்ளத்தின் மெய்யான வாஞ்சையே ஜெபம். ஆண்டவர் சீஷர்களோடு சேர்ந்து அடிக்கடி-ஜெபித்தவரல்ல. அவர் தனித்துச் செய்த ஜெபங்களை அவர்கள் கேட்டவர்களுமல்ல. அவர் சீஷர்களோடிருந்தபோது வேளாவேளை தமது இருதயத்தைப் பரத்துக்கு ஏறெடுத்ததுண்டு. இதைப்போலொத்த வாஞ்சையுள்ள ஜெபத்தை அவர்கள் இதற்குமுன் கேட்டவர்களல்ல. அவருடைய உள்ளத்தின் வாஞ்சையையும் வாக்குகளையும் அவர்கள் கவனித்தபோது என்னமாயிருந்திருக்கும்! பிதாவை அவர்கள் முகமுகமாய்த் தரிசித்ததுபோலிருந்திருக்குமே. இதிலிருந்து அல்லவா பிதாவிடம் தாராளமாய்ச் சேரும் வழியையும் சிலாக்கியத்தையும் கண்டடைந்தார்கள். பின்னடியாராகிய நமக்கும் போதித்திருக்கிறார்கள். பிதாவினிடத்தில் தாராளமாய்ப் பேசும் சிலாக்கியத்தை நாமும் பெற்றிருக்கிறோமே, இந்த அறிவு நமது இரட்சகர் செய்த ஜெபத்தால் நமக்கு வந்தது.

மேற்கவனித்த மூன்று குறிப்புகளினால் தேவன் எப்படிப்பட்டவரென்று நமக்கு வெளிப்படுகிறது. அவர் பரிசுத்தமும் நீதியுமுள்ள பிதா. தமது பிள்ளைகளின் ஒவ்வொருகாரியத்திலும் கவனம்வைத்து அவர்களைப் பாதுகாத்து நடத்துகிறவர்.

தகப்பனிடத்தில் பிள்ளை பேசுவதுபோல நாம் தாராளமாக அவரைக்கிட்டிச் சோரலாமென்பதே.

நாம் தேவனைமாத்திரமல்ல **நம்மைப்பற்றியும்** நினைப்பதுண்டு. யோவான் பதினேழாம் அதிகாரத்தை கிறிஸ்துவின் பரிந்துபேசும் மன்றாட்டென்று நாம் அழைத்தாலும், அவர் தம்மையும் நினைத்து **தமக்காகப்** பிதாவிடம் ஜெபிப்பதை அங்கே காணலாம். அவர் மற்றவர்களுக்காக வேண்டிக்கொள்ளு முன்னே தமக்காக வேண்டிக்கொள்ளுகிறார். அவர் தம்மைப் பற்றிப் பிதாவிடம் பேசின எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால் நாம் இந்த உலகத்தில் எப்படி ஜீவிக்கவேண்டும், எப்படி ஊழியம் செய்யவேண்டுமென்பது வெளிப்படும். உலகத்தில் தாம் ஜீவித்தவிதத்தையும், தாம் செய்த கிரியைகளையும் குறித்துப் பிதாவுக்கு அறிக்கைசெய்கிறார். அவைகளை நான்குவிதமாய் விவரித்துச் சொல்லுகிறார். ''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்.'' ''நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத்தந்த மனுஷருக்கு நான் உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்.'' "நீர் எனக்குக்கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்." "நான் அவர்களை உமது நாமத்தாலே காத்துக்கொண்டேன்.'' அவைகளைச் சுருக்கி: ''மகிமைப்படுத்தினேன், வெளிப்படுத்தினேன், கொடுத்தேன், காத்துக்கொண்டேன்'' என்று சொல்லலாம்.

மகிமைப்படுத்தினேன். தேவன் சர்வத்தையும் தமது மகிமைக்கென்றே சிருஷ்டித்தார். வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன. பூமி அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது. சமுத்திரத்தில் அவருடைய மகிமை விளங்குகிறது. மனுஷனோ எல்லாச் சிருஷ்டிகளிலும் மேலானவன். தேவசாயலின்படியும் தேவரூபத்தின்படியும் உண்டாக்கப்பட்டவன். தேவ ஆவியால் உயிர்பெற்றவன். எல்லாவற்றைப்பார்க்கிலும் தேவனை அதிகமாய் மகிமைப் படுத்தவேண்டிய புத்திசித்தமுள்ளவன். ஆனால் பாவஞ்செய்து தேவமகிமையற்றவனானான். மற்றச் சிருஷ்டிப்புகள் இதுவரை தேவனை மகிமைப்படுத்தும்போது மனுஷன்மாத்திரம் தேவசித்த வழியைவிட்டு விலகி தன் சுய இஷ்டமான வழியில் நடந்து தன்னைக் கெடுத்தான். தேவ மகிமையையும் இழந்தான். இரண்டாம் மனுஷனை தேவன் உலகத்தில் அனுப்பினார். இவர் மண்ணிலிருந்து உண்டானவரல்ல. இவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர். ஸ்திரீயினிடத்தில் பரிசுத்தாவியின் பலத்தால் உருவானவர். ஸ்திரீயினிடத்தில் பிறந்த பரிசுத்த வித்து. முப்பத்துமூன்று வருஷம் உலகத்தில் சஞ்சரித்தார். அவரில் பாவமில்லை. அவர் பாவஞ்செய்ததில்லை. சுயஇஷ்டம்போல் நடவாமல் எப்பொழுதும் தேவ இஷ்டப்படியே நடந்தார். பிதா

தமக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தார். தம்மை அனுப்பினவரிடம் போகும்படியான வேளை வந்தபோது பிதாவே பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் என்கிறார். நீண்டகால ஊழியமல்ல, வேலையின் **தன்மையே** பிரதானம். பிதா நமக்கு நியமித்த கிரியையைச்செய்து முடிப்பதே பாக்கியம். அவைகளை அவருடைய சித்தம்போல் செய்வதே மகிமை. நமது பாவம்நிறைந்த ஜீவியத்தையும் அரைகுறையான ஊழியத்தையும் கவனிக்கும்போது. பிதாவே! பூமியிலே உம்மை மகிமைப் படுத்தினேன் என்று சொல்லத் தைரியமுண்டோ? நீர் எனக்கு நியமித்த கிரியையை உமது சித்தம்போல் செய்து முடித்தேன் என்று சொல்லவும் நியாயமுண்டோ?

வெளிப்படுத்தினேன். குமாரன் பிதாவை மகிமைப்படுத்தின விதத்தை இங்கே காண்கிறோம். "நீர் எனக்குத்தந்த மனுஷருக்கு உமது நாமத்தை வெளிப்படுத்தினேன்." மனுஷன் இரண்டி லொன்றைச் செய்யவேண்டும். உலகத்துக்குத் **தன்னை** வெளிப்படுத்தவேண்டும் அல்லது **தேவனை** வெளிப்படுத்த வேண்டும். சர்வசிருஷ்டியும் தேவனை மகிமைப்படுத்துகிறதென்று கவனித்தோம். எப்படி மகிமைப்படுத்துகிறது? **தேவனை** வெளிப்படுத்துகிறதினாலேயே. நாம் தேவனைக் காண்கிறதில்லை. அவர் உண்டாக்கினவைகளில் அவரைக் காண்கிறோம். அவைகளுக்கு வார்த்தையுமில்லை பேச்சுமில்லை. ஆகிலும் தங்களைச் சிருஷ்டித்தவர் எவ்வளவு ஞானமும் வல்லமையும் மகிமையும் நிறைந்தவரென்பதை அவைகள் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. வானசேனையின் பிரகாசத்தி லென்றாலும் சரி, பூமியிலுள்ள புஷ்பஜாதிகளிலென்றாலும் சரி, அவைகளில் வெளிப்படும் தேவமகிமையைக் கண்டு அதிசயிக்கிறோம் சிறிய காட்டுப்புஷ்பமும் ரோஜாவின் நற்கந்தமும் தேவன் எவ்வளவு அருமையானவரென்று நமக்குப் போதிக்கிறது. பேச்சும் வார்த்தையுமில்லாத சர்வசிருஷ்டியும் தேவனை வெளிப்படுத்தும் போது பேச்சும் அறிவுமுள்ள மனுஷன் எவ்வளவுக்கு அதிகமாய் அவரை வெளிப்படுத்த வேண்டும்? மனுஷன் வெளிப்படுத்துகிறதென்ன? தன்னையும் தன்பாவக் கேட்டையுமே வெளிப்படுத்துகிறான். தான் தேவனற்றவனென்பதை வெளிப்படுத்துகிறான். தன்னை ஆண்டுகொண்ட சாத்தானின் வஞ்சகத்தை வெளிப்படுத்துகிறான். தன் மாம்சத்தின் ஆசாபாசங்களை வெளிப்படுத்துகிறான். தேவன் கிருபையாகக்கொடுத்த கல்வி வரங்களைக்கொண்டு **தன்னை** உலகத்துக்கு காண்பிக்கிறான். தேவன் மனுஷனை உண்டாக்கின நோக்கம் அதுவல்ல. மனுஷன்மூலமாய் தாம் வெளிப்பட விரும்புகிறார். அந்த விருப்பம் கிறிஸ்துவில் நிறைவேறிற்று "பிதாவே நீர் எனக்குத்தந்த மனுஷருக்கு நான் **உம்மை** வெளிப்படுத்தினேன்." அவர் சித்தம் பிதாவின் சித்தம். அவர்

பிரியம் பிதாவின் பிரியம். அவர் மகிமை பிதாவின் மகிமை. அவர் ஜீவியம் பிதாவின் ஜீவியம். அவர் உபதேசம் பிதாவின் உபதேசம். அவர் அன்பு பிதாவின் அன்பு. அவர் கண்ணீர் பிதாவின் கண்ணீர். அவர் பரிதாபம் பிதாவின் பரிதாபம். அவர் செய்த கிரியைகள் பிதாவின் கிரியைகள். சிருஷ்டிப்பில் தேவனுடைய சித்தமும் நோக்கமும் பூரணமாய் நிறை வேறுகிறதால் அவர் அவைகளில் காணப்படுகிறதுபோல குமாரனில் பிதா பரிபூரணமாய் வெளிப்பட்டார். அவரைக் கண்டவர்கள் பிதாவைக் கண்டார்கள். நானல்ல, என்னில் வாசமாயிருக்கிற பிதாவே இவைகளைச் செய்கிறார் என்றார். நமது ஜீவியத்தால் நமது ஊழியத்தால் தேவன் மகிமைப் படவேண்டுமானால் நம்மை மறைத்துப் பிதாவை உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டும். பிதா எப்படிப்பட்டவரென்று மற்றவர்கள் அறியும்படி கிறிஸ்து தமது ஆவியினால் நமக்குள்ளே தாராளமாய் வாசஞ்செய்யும்படி நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிற நோக்கம். நமது ஜீவியம், வார்த்தை, செய்கையில் கிறிஸ்துவின் அன்பு தாராளமாய்க்காணப்படும்படி நாடவேண்டும். இதுலேசாய் ஆகிற காரியமல்ல. நான் என்னையல்ல, என் ஆண்டவரையே உலகத்துக்குக் காண்பிக்க வேண்டுமென்கிற வைராக்கிய வாஞ்சை நமது இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ளவேண்டும். இரட்சகரே! என்னையல்ல, என் மூலமாய் உம்மையே உலகத்துக்கு வெளிப்படுத்துமென்று ஊக்கமாய் ஜெபித்துவர வேண்டும். ஆண்டவர் நிச்சயமாகவே தமது பரமகுணங்களினால் நம்மை அலங்கரிப்பார். மற்றவர்கள் நம்மில் கிறிஸ்துவை காண்பார்கள். நமது அந்தியநேரத்தில் தேவனே! நீர் எனக்குத் தந்தவர்களுக்கு உம்மை வெளிப்படுத்தினேன் என்று சொல்லக்கூடிய கிருபை ஒருவாறு நமக்கும் கிடைக்கும்.

கொடுத்தேன். "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை, நான் அவர்களுக்குக் கொடுத்தேன்." இதைத்திரும்பவும் திரும்பவும் சொல்லுகிறார். அவர் உபதேசித்ததெல்லாம் பிதா அவருக்குக் கொடுத்த வார்த்தைகளே. விசுவாசிகள் அவரை **தேவவார்த்தை** என்று அழைத்ததும் சரியே. "மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையாலும் பிழைப்பான்" என்று சொல்லி பிசாசை ஜெயித்து ஊழியத்தை ஆரம்பித்தார். பிதாவின் வார்த்தையே அவருக்கு ஜீவன். அதுவே அவர் போஜனம். அவர் பிரசங்கித்ததும் தேவ வார்த்தையே. நோயாளிகளைக் குணமாக்கினதும் வார்த்தையே. மரித்தோரை எழுப்பினதும் வார்த்தையே. சமுத்திரத்தின் கோஷத்தையும் சாத்தானுடைய வல்லமையையும் அடக்கினது வார்த்தையே. ஆவியும் ஜீவனுமாயிருக்கிற வார்த்தைகளைச் சீஷர்களுக்குக் கொடுத்தார்.

பிதாவே! நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

தேவனுடைய பிள்ளைகளே! நமது ஊழியமும் சாட்சியும் எப்படிப்பட்டது? நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பது நமது வார்த்தைகளோ, தேவவார்த்தைகளோ? பிரசங்கமெல்லாம் தேவ ஊழியமாகுமா? சாட்சிகள் யாவும் உத்தமமாகுமா? உமியை விதைத்து மணியை அறுப்பவன் யார்? நமது ஆலோசனை தேவ ஆலோசனையாகாது. நமது அபிப்பிராயம் தேவனுடைய சத்தியமாகாது. நாம் உண்டாக்கும் உபதேசம் தேவ உபதேசமாகாது. நமது சாதுரியம் தேவ வல்லமையாகாது. நமது அறிவு தேவஞானமாகாது. ஞானமும் ஜீவனும், சத்தியமும் வல்லமையும், இரட்சிப்பும் மகிமையும் தேவவார்த்தைகளில் மாத்திரம் உண்டு. தற்காலத்தில் வெளிப்பட்டிருக்கும் உபதேசங்களைக் கவனித்தால் மனம் கலங்கவில்லையா? அற்ப மனுஷர் தேவனுடைய வார்த்தைகளோடு விளையாடுகிறார்கள். கள்ள உபதேசத்தால் கறைப்பட்ட ஊழியர்கள் அநேகர். ஜீவனுள்ள தேவவசனத்தைப் போதிக்கக்கூடாமல் மனுஷருடைய அபிப்பிராயங்களைப் போதிக்கிறார்கள். விதைக்கிற விதைகள் போலவே பலனும் இருக்கும். முள்பூண்டுகளில் திராட்சப்பழங்கள் எப்படிக்கிடைக்கும்? சுத்த சுவிசேஷம் எவ்வளவு குறைவு! எவ்வளவு கலப்பு! எவ்வளவு மாற்றல்! எவ்வளவு கூட்டல்! எவ்வளவு கழித்தல்! எவ்வளவு பெருக்கல்! எவ்வளவு பதர்! எவ்வளவு மோசம்! "பிதாவே! நீர் கொடுத்த வார்த்தைகள் நான் அவர்களுக்குக் கொடுத்தேன்'' சாஸ்திரிகள் கொடுத்த வார்த்தைகளை நாங்கள் அவர்களுக்குக் கொடுத்தோம் என்கிறார்கள் தற்காலத்துச் சீஷர்கள். எவ்வளவு பரிதாபம்! நமது மரணப்படுக்கையில்: பிதாவே! நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் என்று சொல்லக்கூடிய கிருபை பெற்றிருப்போமானால் எவ்வளவு பாக்கியம்!

காத்துக் கொண்டேன். "நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் உமது நாமத்தினாலே அவர்களைக் காத்துக்கொண்டேன்.'' இவ்வார்த்தைகளின் கருத்தென்ன? உமக்குப் பதிலாக நான் அவர்களைக் காத்துக்கொண்டேன் என்பதல்ல. நான் அவர்களைக் காத்துக்கொண்டது உமது **நாமத்துக்குள்ளே**. "கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச்சுகமாயிருப்பான்." தேவன் தமது நாமத்தை மோசேக்குக் கூறினபோது: அவர் கர்த்தர், இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன்" என்று அறிவித்தார். தேவனுடைய அன்பும் பரிசுத்தமும் ஒரு கோட்டையைப்போல் கிறிஸ்துவைச் சூழ்ந்திருந்தது. சீஷர்கள்

அவரோடிருந்தபோது அந்தப் பலத்த கோட்டைக்குள் ளிருந்தார்கள். ஆண்டவரைச் சூழ்ந்திருந்த பரிசுத்தமும் வல்லமையும் அவர்களைத் தீமையிலிருந்து பாதுகாத்தது. குமாரன் போனவிடமெங்கும் அவரைச் சூழ்ந்திருந்த பிதாவின் மகிமையான சமுகத்தில் அவர்கள் சஞ்சரித்தார்கள். சகல தீமைகளிலிருந்தும் அந்த வல்லமையினால் பாதுகாக்கப் பட்டார்கள். இரட்சகர் இதை உணர்ந்து: பிதாவே உமது நாமத்திலே அவர்களைக் காத்துக்கொண்டேன் என்கிறார். ஒரு தாய் தன் குழந்தையைத் தன் மார்போடணைத்துக்கொள்ளும் வண்ணமாய் தம்மில் விளங்கின பிதாவின் மகிமைக்குள் சீஷர்களைப் பாதுகாத்துக்கொண்டார்.

இந்தப் பாதுகாக்கும் ஊழியத்தில் நமக்கும் பங்குண்டு. நம்மைச் சார்ந்திருப்பவர்களை கர்த்தருடைய நாமத்தினால் நாம் காத்துக்கொள்ளவேண்டும். நமது குடும்பத்தை, நமது பிள்ளைகளை, நமது சிநேகிதர்களை, நம்மோடு சமபந்தப் பட்டிருக்கிற சபையாரை தேவ நாமத்துக்குள் காத்துக்கொள்ள வேண்டும். இது தந்நயமல்ல, தேவநயம். மனைவிகளுக்குச் சம்பாத்தியத்தையும் மக்களுக்குக் கல்வியையும் கொடுத்தாலே போதுமென்றிருக்கக்கூடாது. தேவன் அவர்களை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவர்களை தேவகிருபைக்குள், அவருடைய அன்புக்குள், அவருடைய சத்தியத்திற்குள், அவருடைய பரிசுத்தத்திற்குள் காத்துக்கொள்ளவேண்டும். சபையாருக்கு ஆராதனை நடத்திப் பிரசங்கிப்பது போதுமென்று விட்டுவிடக் கூடாது. அவர்கள் ஆத்துமாக்களுக்காக நாம் உத்தரவாதம் செய்யவேண்டியவர்களானதால் அவர்களைக் காத்துக்கொள்ளும் கடமையும் நம்மைச் சேர்ந்தது. இது நம்மால் கூடுமாவென்று நினைக்கலாம். நம்மோடு கூடயிருக்கும் கர்த்தர் அதைச் செய்வார். பிதா தமது குமாரனோடுகூட இருந்ததுபோல் நமது இரட்சகர் நம்மோடுகூடயிருப்பதாக வாக்குச் செய்திருக்கிறார். நாம் கிறிஸ்துவில் அன்பாயிருந்து அவருக்குப் பிரியமாய் நடந்து கொள்ளும்போது தேவன் நம்மோடு வாசமாயிருப்பார். நம்மோ டிருக்கும் தேவசமுகம் நமது அன்பில் ஐக்கியப்பட்டிருப்பவர் களைக் காத்துக்கொள்ளும். போதனையைப் பார்க்கிலும் பரிசுத்தமும் அன்புமுள்ள ஜீவியத்தில் அதிக வல்லமையுண்டு.

கிறிஸ்துவின் ஜீவியத்தை இவைகளில் காண்கிறோம். பூமியிலே உமது நாமத்தை **மகிமைப்படுத்தினேன்**. நீர் எனக்கு நியமித்த கிரியையைச் **செய்து முடித்தேன்**. நீர் எனக்குத் தந்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் **கொடுத்தேன்**. உமது நாமத்தினாலே நான் அவர்களைக் **காத்துக்கொண்டேன்**. நமதாண்டவரோடுள்ள ஐக்கியத்தினால் நாம் ஜீவிக்கவேண்டிய மாதிரியும் இதுவே.

இவ்வாறு பூமியில் தாம் நிறைவேற்றின கிரியைகளைப் பிதாவுக்குச் சொல்லி "பிதாவே உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று **தமக்காக** ஜெபிக்கிறார். இது சுய மகிமையை நாடிச் செய்த ஜெபமல்ல. இடைவிடாமல் பிதாவின் மகிமை ஒன்றையே தேடின குமாரன் இச்சமயத்தில் தமக்கு மகிமையைத் தேடுவாரா? இரண்டாம் வசனத்தின் சம்பந்தத்தைக் கவனித்தால் இது விளங்கும். "பிதாவே! உம்முடைய குமாரன் **உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு** நீர் உம்முடைய குமாரனை **மகிமைப்படுத்தும்**." பிதா தமது குமாரனை மகிமைப்படுத்துவது எப்படி? குமாரன் மகிமைப்படுவதினால் பிதா மகிமைப்படுவ தெப்படி? பிதா தமது குமாரனுக்குத் தந்த யாவருக்கும் குமாரன் **நித்தியஜீவனைக் கொடுப்பதினாலே** பிதா மகிமைப்படுவார். குமாரன் அந்த நித்திய ஜீவனைச் சம்பாதிப்பதற்குப் பிதா ஏற்படுத்தின பாதையோ சிலுவை. மாம்சமானவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் கிறிஸ்து மரணத்தை ஜெயித்து முன்னிலும் மேன்மையும் மகிமையுமான ஜீவனுக்குள் பிரவேசிக்கவேண்டும். குமாரன் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் வெளிப்படுத்தும்போது பிதாவினால் குமாரன் மகிமைப்படுவார். குமாரனைப்பற்றும் விசுவாசத்தில் அநேகர் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதினால் பிதாவும் மகிமைப்படுவார். இதை நினைத்தே ஜெபத்தின் ஆரம்பத்தில் பிதாவே **வேளை** வந்ததென்று சொன்னார். இனித் தாமதிக்க அவருக்குப் பிரியமில்லை. தாமதிக்கவேண்டியதுமில்லை. முழுகவேண்டிய ஸ்நானம் வந்தது. பிதாவே! மாம்சமான யாவருக்கும் நித்திய ஜீவன் கிடைக்கும்படிக்கு, அதனால் உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு, இப்பொழுது நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும் என்றார். மகா அலெக்சந்தரைப் போல் சகலத்தையும் சுதந்தரித்து தமக்கு மகிமையை வைத்துக்கொள்ள இவர் விரும்பாமல், தாம் தேடின மகிமையால் மனுஷஜாதிக்கு நித்திய ஜீவினைக்கொடுக்கவும், தமது பிதாவை மகிமைப்படுத்தவுமே நாடினார். அவர் அனுபவித்த மகிமையின் பாதையோ பாடுகளும் நீசச்சிலுவையுமே.

இதுவே நாமும் தேடவேண்டிய மகிமை. மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படும்படி நாம் கஷ்டப்படுவதே நமக்கு மகிமை. தேவன் நமக்கருளின கிருபைகளால் மற்றவர்கள் ஜீவனைக் கண்டடையும்போது பிதா மகிமைப்படுகிறார். பாவிகளின் இரட்சிப்பிலும் பிதாவின் மகிமையிலுமே நமக்கு மகிமையிருக்கிறது. பிதாவே! உமது அடியானை அவ்விதமாய் மகிமைப்படுத்தும். நமதாண்டவர் இப்பொழுது கேட்கும் மகிமையானது நமக்கு உலகம் உண்டாவதற்குமுன்னே பிதாவோடு தமக்குள்ள மகிமையென்று பேசுகிறார். "பிதாவே! உலகம் உண்டாகிற

தற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்." அவர் இருக்கிறது எருசலேம் பட்டணத்தில் ஓர் மேல்வீட்டறையில். அவர் நினைத்துப் பேசுவதோ உலகம் உண்டாவதற்கு முன்னுள்ள அநாதிகாலம். அநாதிகாலமாய் இவர் பிதாவோடிருந்தவர். பிதாவுக்கொப்பான மகிமையிலிருந்தவர். ஆகையால் இவர் மரியம்மாளிடம் பிறந்தபோதல்ல, அநாதிகாலமாய் இருக்கிறவர் என்பது வெளியாகிறது. அவருக்கிருந்த மகிமை எப்படிப்பட்டதென்று அறியக்கூடியவன் யார்? அந்த மகிமையைவிட்டு பாவிகளை இரட்சிக்கும்படி தாழ்மையான மனுஷனானார். பாடுகளுக்கும் மரணத்துக்கும் மனதாரத் தம்மை ஒப்புக்கொடுத்தார். திரும்ப அவர் மகிமையடைந்தபின்பு மாம்சமான யாவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரமுடையவராயிருப்பார். பிதாவுக்குத் தம்மை முற்றிலும் கையளித்து, பிதாவுக்குரியவைகள் யாவையும் சுதந்தரித்து: "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்; உம்முடையவைகள் என்னுடையவைகள், அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லக்கூடியவரானார்.

இதுவரை தேவனைப்பற்றியும் தம்மைப்பற்றியும் பேசினவர் இப்போது கடைசியாக **உலகத்தை** நினைத்து ஜெபிக்கிறார். "நான் உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல்'' என்று அவர் ஆரம்பத்தில் சொன்ன வார்த்தையினிமித்தம் உலகத்துக்காக அவர் கவலைப்படவில்லையென்று நாம் நினைக்கக்கூடாது. யோவான் பதினேழாம் அதிகாரத்தில் **உலகம்** என்கிற வார்த்தை பதினேழுதரம் வருகிறது. பரத்திலிருந்து உலகத்தை நினைத்தார். உலகத்தை நேசித்தார். உலகத்தை இரட்சிக்க வந்தார். உலகத்தின் பாவத்தைச் சுமந்தார். உலகத்துக்காக உயிர்விட்டார். அப்படியிருக்க உலகத்தை மறப்பாரா? உலகம் இரட்சிக்கப்பட வேண்டுமானால் அதற்கு ஒழுங்குண்டு. அந்த ஒழுங்கை இந்த ஜெபத்தில் காணலாம். முதலாவது தேவன் தம்மைக் குமாரனுக்கு வெளிப்படுத்த, குமாரன் தம்மைச் சிறு மந்தையாகிய சீஷர்களுக்கு வெளிப்படுத்த, சீஷர்கள் அவரை உலகத்துக்கு வெளிப்படுத்த இவ்வாறு உலகம் இரட்சிக்கப்படவேண்டும். தேவாசீர்வாதம் அக்கினி பரவுவதுபோல் பரவவேண்டும். ஒரே தாண்டாய்த் தாண்டக்கூடிய காரியமல்ல. முன்பு எருசலேமிலும், பின்பு யூதேயாவிலும், பின்பு சமாரியாவிலும் பின்பு பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இதுவே வரிசை. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்கிலும் இந்தக் கருத்துண்டு. நான் உன்னை ஆசீர்வதிப்பேன், நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பாய். சங்கீதக்காரனுடைய ஜெபமும் அதுதான். "தேவனே பூமியில் உம்முடைய வழியும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சண்யமும்

விளங்கும் படியாய் தேவரீர் எங்களுக்கு இரங்கி எங்களை ஆசீர்வதித்து உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும். தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்." தேவ மகிமை குமாரனில் விளங்க, சீஷர்கள்மூலமாய் அந்த மகிமை உலகத்துக்கு வெளிப்படவேண்டும். இந்த ஒழுங்கை மனதில் வைத்தே ஆண்டவர் ஜெபித்தார்.

அவர் தமது சீஷர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதென்ன? பிதாவே! நீர் எனக்குத் தந்தவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறபடியால் உம்முடையவர்களாகவுமிருக்கிறார்கள். எனக்கு அருமையானவர்களாயிருப்பதுபோல் உமக்கும் அருமையானவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் நாம் ஒன்றாயிருப்பதுபோல் **அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி** நீர் அவர்களை உமது நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கே நீர் எனக்குத் தந்த மகிமையை அவர்களுக்குக் கொடுத்தேன். நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். தமது சீஷர்களுக்குள் ஒற்றுமையும் ஐக்கியமும் மிகவும் அவசியமென்றுணர்ந்து அதற்காக விசேஷித்து ஜெபிக்கிறார். சபைகளை ஐக்கியப்படுத்த விரும்புகிறவர்கள் இந்த வாக்கியங்களை ஆதாரமாக எடுத்துப் பேசுவதுண்டு. ஆனால் ஆண்டவர் ஜெபித்த **ஒற்றுமை** அவர்கள் நோக்கத்துக்கு எவ்வளவோ மேலானதென்று அறியவேண்டும். புறம்பான காரியங்களில் அல்ல, உள்ளான ஆவிக்குரிய ஐக்கியத்தையே ஆண்டவர் பிரதானமாய்க் கருதுகிறார். சபைகளின் ஆளுகை, ஆராதனை, ஊழியம், அனுபவம் இவைகளின் ஒற்றுமையைப்பற்றி ஆண்டவர் ஒன்றும் சொல்லுகிறதில்லை. பிதாவே! நீர் என்னிலும் நான் உம்மிலும் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். நமது சபைகள் ஆண்டவர் மீதுள்ள அன்பிலும் விசுவாசத்திலும் இணைக்கப்பட்டு, அவருடைய சித்தத்தின்படி ஜீவித்து, தேவமகிமைக்கும் பாவிகள் இரட்சிப்புக்கும் ஏதுவாக ஊழியம் செய்வதில் ஒற்றுமைப்படக்கூடுமானால் அதுவே சிறந்த ஐக்கியமாகும். எல்லாச் சபைகளையும் ஒரே ஒழுங்கில் இணைக்கப்பார்ப்பது அவ்வளவு உசிதமல்ல. தேவன் அருளிய வரங்களும், அவர் தமது பிள்ளைகளை உபயோகிக்கிறவிதமும், அவர் கையாடுகிற முறைகளும் பலவிதமாயிருக்கின்றன. பேதுருவும் பவுலும் கிறிஸ்துவுக்குள்ளான **அன்பிலும்** விசுவாசத்திலும் இணைக்கப்படலாமேயன்றி ஊழியம் செய்யும் விதத்தில் இணைக்கப்படக்கூடாது. இதினிமித்தம் அவர்கள் ஒருவரை யொருவர் பகைக்கவும் நீ வேறே நான் வேறே என்று

பேசவுங் கூடாது. பன்னிருவரும் பன்னிரண்டு விதமானவர்கள். ஆகிலும் கிறிஸ்துவுக்குள்ளான அன்பிலே அவர்கள் ஒரே அவயவம் போலிருந்தார்கள் இவ்வித ஒற்றுமைக்காகவே ஆண்டவர் ஜெபிக்கிறார். எஜமானுடைய தோட்டத்திலுள்ள புஷ்பங்கள் பற்பல நிறங்களால் அலங்காரம் பொருந்தியிருப்பது பார்வைக்கு எவ்வளவோ அழகாயிருக்கும். எல்லாம் ஒன்றுபோல் ஒரே வெண்ணிறமாயிருந்தால் பருத்திக்காடுபோல் தோன்றும். **தற்காலத்துச் சபைகள் நான் மேல் நீ கீழ் என்று பேசாமலும் அவமதிக்காமலும் தேவ அன்பினால் நிறைந்து எல்லாக் கிறிஸ்தவர்களோடும் அன்பும் அனுதாபமுமாய் நடந்து கொண்டால் அதுவே மெய்யான ஐக்கியமாகும். கொள்கைகளும் சடங்குகளும் நம்மைப் பலமாய்ப் பிடித்திருக்கிறவரை இந்த ஐக்கியத்துக்கு இடமிராது.** ஒருவன் எவ்வளவு பக்தனாயிருந்தாலும் தங்கள் சபையைச் சேராதவனாயிருந்தால் அவனுக்கு கர்த்தருடைய பந்தியில் பங்கில்லை என்று இக்காலத்திலுங்கூடச் சொல்லிக்கொண்டிருப்பது எவ்வளவு பரிதாபம்! புறம்பான வித்தியாசங்களிருந்தபோதிலும் விசுவாசத்திலும் அன்பிலும் ஊழியத்திலும் நாம் ஏன் ஒன்றாயிருக்கக்கூடாது? இராஜாவின் சேனையில் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, கப்பற்படையெனப் பல பிரிவுகளிருந்தபோதிலும், அவர்கள் எல்லாரும் நீ வேறே நான் வேறே என்று சண்டை போட்டுக்கொள்ளாமல் ஒரே இராஜ்யத்திற்காகவும் ஒரே கொடிக்காகவும் போர் செய்வதால், புறம்பாகத் தோன்றும் இவ்வித்தியாசங்கள் அவர்களுடைய **ஒற்றுமையையல்லவோ** காண்பிக்கிறது. ஆண்டவர் வாஞ்சையோடு வேண்டிக்கொண்ட உள்ளான அன்பையும் ஐக்கியத்தையும் தேவன் நமது சபைகளுக்குக் கட்டளையிடுவாராக. உள்ளான அன்பின் ஐக்கியமில்லாமல் புறம்பான ஏற்பாடுகளில் சபைகள் சேர்க்கப்படுமானால் அது மெய்யான ஐக்கியமாயிராது.

ஒற்றுமைக்காக ஜெபித்தபின் பிதா அவர்களைத் **தீமையினின்று காக்கும்படி** வேண்டிக்கொள்ளுகிறார். நான் அவர்களோடிருந்தபோது உமது நாமத்தினாலே அவர்களைக் காத்துக்கொண்டேன். இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன். அவர்களை நான் இப்பொழுது என்னோடு கொண்டுவரக்கூடாது. நான் மறுபடியும் திரும்பவந்து அவர்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். இப்பொழுது அவர்கள் எனக்குச் சாட்சிகளாயிருந்து நான் அவர்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை உலகத்துக்குக் கொடுக்கவேண்டும். அவர்கள் மூலமாகத்தான் உலகம் என்னை அறியவேண்டியது. ஆகையால் நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் நீர் அவர்களைத் தீமையினின்று

காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் எவ்வளவு பலவீனரும் பேதைகளுமென்று உமக்குத் தெரியும். உலகமும் பிசாசும் எவ்வளவு பொல்லாததென்றும் நீர் அறிவீர். ஆகையால் உமது இடைவிடாத பாதுகாப்பு அவர்களுக்கு வேண்டுமென்று ஜெபிக்கிறார்.

பாதுகாப்புக்காக ஜெபித்தபின் **பரிசுத்தமாக்கும்படி** ஜெபிக்கிறார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே **பரிசுத்தமாக்குகிறேன்.**" சீஷர்கள் பரிசுத்தமாக்கப்படுவதற்கும், கிறிஸ்து தம்மை பரிசுத்தமாக்குகிறேன் என்று சொன்னதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. சீஷர்கள் விஷயத்தில் பரிசுத்தமாக்கப்படுதல் இருவகைப்படும். கிறிஸ்துவில் அது ஒரே காரியத்தைக் குறிக்கும். சீஷர்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும். கிறிஸ்து பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படவேண்டியதில்லை. அவர் பரிசுத்த பிறப்பும் பரிசுத்த ஜீவியமும் அதற்கு ஆதாரம். ஆண்டவர் தம்மைப் பரிசுத்தமாக்குகிறேன் என்று சொல்வது அவர் தம்மை இரட்சிப்பின் ஊழியத்திற்கென்று **பிரதிஷ்டை** செய்வதைக் குறிக்கும். சீஷர்கள் விஷயத்திலும் அவர்கள் பிரிக்கப்பட்டு பிரதிஷ்டையாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுவதைக் குறிக்கும். அவர்கள் எஜமானுக்கு உபயோகமான பரிசுத்த பாத்திரமாவதற்கு அவர்கள் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, சுத்தமாக்கப்பட்ட பாத்திரங்களாயிருக்கவேண்டும். இந்தச் சுத்திகரிப்பும் பிரதிஷ்டையும் தேவவசனத்தினால் நடக்கவேண்டியது. தேவவசனத்தின்மூலமாய் குமாரனையும் பிதாவையும் அறிகிற அறிவுண்டாகும். அந்த அறிவு அவர்கள் உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பவும் கர்த்தருக்குச் சொந்தமானவர்களாய் ஜீவிக்கவும் அவர்களைப் பலப்படுத்தும். ஆகையால் பிதா தமக்குக்கொடுத்த வார்த்தைகளை அவர் சீஷர்களுக்குக் கொடுத்தார். தேவவசனத்தின் வல்லமையை நாம் நாள்தோறும் நமது ஜீவியத்தில்கண்டுநடந்தால் எவ்வளவோ ஆசீர்வாதமா யிருக்கும். சாத்தானுடைய தற்காலப்போர் தேவ வசனத்துக்கு விரோதமாகவல்லவோ நடக்கிறது. நம்மைப் பரிசுத்தமாக்கிப் பாதுகாக்கும் வசனத்தை நாம் அசட்டைசெய்தால் நிற்க நமக்கு வேறு நிலையேது?

பரிசுத்தமாக்கும்படி ஜெபித்தபின் **தமது மகிமையை அவர்கள் காணும்படி** ஜெபிக்கிறார். "நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூடயிருக்க விரும்புகிறேன்." எஜமானிருக்கும்

இடத்தில் ஊழியர்களும் இருப்பது நியாயமே. எஜமானுடைய மகிமையை அவர்கள் காண்பதும் நியாயமே. இந்த மகிமை ஆண்டவர் நமது மீட்பராக வந்து மரித்து உயிர்த்து பரமேறினதின் பலனாக பிதாவினால் அவருக்கருளப்பட்ட புதிய மகிமை. இந்த மகிமையிலும் ஆண்டவருக்குத் தந்நயமில்லை. பாடுகளில் அவரோடு பங்கடைந்தவர்கள் மகிமையிலும் அவரோடு பங்குபெற விரும்புகிறார். இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல.

இவ்வாறு சீஷர்களின் ஒற்றுமைக்காகவும், தீமையினின்று காக்கப்படும்படிக்காகவும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும் படிக்காகவும், தமது மகிமையில் அவர்கள் பங்கடையும் படிக்காகவும் ஆண்டவர் ஜெபித்தபின்பு **உலகத்துக்காக** வேண்டுதல் செய்கிறார். மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால் உலகத்தின் நிலைமையை ஐந்து வார்த்தைகளுக்குள் அடக்கிவிட்டார். **நீதியுள்ள பிதாவே உலகம் உம்மை அறியவில்லை.** நான் உம்மை அறிந்திருக்கிறேன். இந்த ஏழைச் செம்படவர்களும் உம்மைப் பூரணமாய் அறிந்தவர்களல்ல. ஆகிலும் நீர் என்னை அனுப்பினீரென்பதை அறிந்திருக்கிறார்கள். இந்த அறிவிலிருந்துதான் உம்மை இன்னாரென்றும் அறியப்போகிறார்கள். உலகம் என்னை அறியாமலும் விசுவாசியாமலும் இரட்சிக்கப்படமுடியாது. உலகம் என்னை அறியவேண்டுமானால் இவர்கள் மூலமாகத்தான் அறிய வேண்டும். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். ஆகையால் நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல நானும் இவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். நான் உலகத்துக்கு வந்த நோக்கம் நிறைவேற இவர்களைத்தான் நம்பியிருக்கிறேன். நான் உலகத்துக்கு ஒளியாக வந்தேன். இவர்கள் என்னிடத்திலிருந்து வெளிச்சம்பெற்று உலகத்துக்கு வெளிச்சமாயிருப்பார்கள். இதுவரை நான் இவர்களுக்காக உம்மை வேண்டிக்கொண்டேன். இப்போது இவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டு என்னை விசுவாசிக்கப்போகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். உலகம் இவர்கள் வார்த்தையை விசுவாசிக்கவேண்டுமானால் நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல நாம் இவர்களிலிருக்கவேண்டும். அவர்களும் நம்மோடு ஒன்றாயிருக்க வேண்டும். அவர்கள் நம்மையல்லாமல் தாங்களாக உலகத்தை இரட்சிக்கமுடியாது. நாம் அவர்களோடுகூடயிருந்து அவர்களைத் தாங்கி நடத்திக் கிரியை செய்யவேண்டும். நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறீரென்பதை உலகம் அறியவேண்டும். உமது அன்பு என்னிலிருக்கிறதுபோல அவர்களிலும் இருந்தால் அந்த அன்பை உலகம் கண்டு விசுவாசிக்கும். இன்னும் நான் அவர்களுக்குச்

சொல்லவேண்டிய அநேக காரியங்களுண்டு. அவைகளை இப்பொழுது தாங்கமாட்டார்கள். நான் உம்மிடம் வந்தபின்பு ஆவியின்மூலமாய் அவைகளை அவர்களுக்குத் தெரியப் படுத்துவேன் என்று சொல்லி ஜெபத்தை முடித்தார்.

ஜெபத்துக்குபின் தோட்டம். தோட்டத்துக்குப்பின் பிடிபடல். பிடிபட்டபின் விசாரணை. விசாரணைக்குப்பின் மரணம். மரணத்துக்குப்பின் அடக்கம். அடக்கத்துக்குபின் உயிர்த்தெழுதல். உயிர்த்தெழுதலுக்குப்பின் பரமேறுதல். பரமேறினபின் மகிமையடைந்து பிதாவிடம் பரிந்துபேசுதல். இன்றும் நமக்காகப் பிதாவிடம் வேண்டுதல் செய்கிறார். நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது மெய்யானால், அது ஆண்டவர் மேல்வீட்டறையில் செய்த ஜெபத்தின் பயனே. நான் என் சீஷர்களுக்காக மாத்திரமல்ல இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன் என்றார். அந்த ஜெபம் மெய்யாகவே நம்மில் பலித்தது.

நாம் பெற்றுக்கொள்ளுகிற நன்மைகள் நமது ஜெபத்தால் மாத்திரம் கிடைக்கிறதில்லை. நமக்கு ஏற்றபடி ஜெபிக்கத் தெரியாது. எவ்வளவோ குறைவோடும் அறிவீனத்தோடும் ஜெபிக்கிறோம். ஆகிலும் **இருவர்** நமக்காக ஜெபிக்கிறது உண்மை. பரத்தில் கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்குள்ளிருந்து பிதாவிடம் வேண்டுதல் செய்கிறார். இதை உணரும்போது ஜெபம் நமக்கு இன்பமாகிறது எந்தச் சமயத்திலும் பிதாவிடம் சேருவதற்கு ஆசைப்படுகிறோம்.

தேவபக்தர்கள் சிலர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி புறப்பட்டுப்போனார்கள். அவர்கள் சாமான்களை சுமக்கும்படி ஒரு கூலியாள் உடன்போனான். அவர்கள் முன்னே நடந்து போனார்கள். இவன் சற்று தூரத்தில் பின்னே நடந்து போனான். அந்தப் பரிசுத்தவான்கள் அங்கங்கே வழியில் முழங்கால்படியிட்டு ஜெபிக்கும்போதெல்லாம். இவனும் அவர்கள் செய்வதைப்பார்த்து தூரத்தில் முழங்காலில் நிற்பான். ஒருவன் அவனைப்பார்த்து: இவர்கள் உனக்கு ஜெபம் செய்யக் கற்றுக்கொடுத்தார்களோ என்று கேட்டான். அதற்கு அவன்: எனக்கு ஜெபம் செய்யத் தெரியாது. ஆனால் அந்தப் பரிசுத்தவான்கள் முழங்காலில் நின்று ஜெபிக்கும்போதெல்லாம் நானும் முழங்காலில் நிற்கிறேன். என் வாயில் வார்த்தையில்லாமற் போனாலும் அந்தப் புண்ணியவான்கள் எனக்காகவும் வேண்டிக் கொள்வதால் எனக்குப் பலன் கிடைக்குமென்று நம்புகிறேன் என்று சொன்னான். நமக்கு ஞானமில்லை அறிவில்லை. ஏற்றபடி வேண்டிக்கொள்ளத் தெரியவில்லை. ஆகிலும் நமது

பலவீனங்களையும் பாவங்களையும் திட்டமாய் அறிந்திருக்கிற ஜீவநாயகன் நமக்காக வேண்டுதல் செய்கிறார். பரிதாபம் நிறைந்த பிரதான ஆசாரியன் அவர்! நமக்காகப் பாடுபட்டு ஜீவனைக்கொடுத்த அதிசய அன்பன்! அவர் பிதாவிடம் இடைவிடாமல் நமக்காக ஜெபிக்கும்போது நாமும் முழங்காலில் நின்று: பிதாவே எனக்கு வேண்டியதைக்கேட்க எனக்குத் தெரியவில்லையே. என் அருமை மீட்பரைப்பாரும். அவர் ஜெபமே என் ஜெபம். அவர் வேண்டுதலைக்கேட்டு எனக்கு இரங்குமென்று ஜெபித்தால், நாம் வேண்டிக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் அவர் நமக்குச் செய்வாரென்பது நிச்சயம்.

நமக்குத் தேவையான காரியங்களுக்காக ஜெபிக்கிறோம். நமது ஆபத்து அவசரங்களில் தேவனை நோக்கிக் கெஞ்சுகிறோம். இவைகள் சரியே. ஆயினும் நாம் தேவசமுகத்தில் தங்கும்படி வாஞ்சிப்பதும், அவருடைய நாமம் மகிமைப்பட, அவருடைய சித்தம் பூமியில் செய்யப்பட, அவருடைய இராஜ்யம் வளர்ந்து பெருக நாம் ஊக்கமாய் வேண்டிக்கொள்வதுமே ஜெபத்தின் மேலான நோக்கமாகும். உலகமெங்குமுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்காகவும், பட்டணங்களிலும், கிராமங்களிலும், மலைகளிலும், தீவுகளிலும், பூமியின் கடையாந்தரங்களிலும், மூர்க்கரான ஜனங்கள் நடுவிலும் வேலைசெய்துவருகிற சகல பரிசுத்தவான்களுக்காகவும், திருச்சபை அனைத்துக்காகவும், யூதர்களுக்காகவும், உலகத்துக்காகவும் நாம் நமது இரட்சகர் நாமத்தினால், அவரோடு சேர்ந்து வேண்டுதல் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். பிதாவானவர் ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் நமக்கு அருளச் சித்தமாயிருக்கிறார். இவ்வாறு நாம் ஜெபஜீவியத்தில் பிரவேசிக்கும்போது, வேண்டிக்கொள்ளவேண்டிய விஷயங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் ஓர் அளவிராது. இடைவிடாத ஜெப ஜீவியம் இதுவே. ஜெபம் நம்மை தேவனோடு ஐக்கியப்படுத்தி பரமசிந்தையினால் நம்மை நிரப்புவதினால், பூமிக்கடுத்த பாவங்களும் பாரங்களும், பேதுருவின் கையிலிருந்த சங்கிலிகள் கழன்று விழுந்ததுபோல நம்மைவிட்டு நீங்கி விடுகின்றன. ஜெபிக்க ஆரம்பித்தால்தான் ஜெபவல்லமை இன்னதென்று தெரியும். அறிவாளிகள் அநேகரிருக்கலாம்; ஆனால் ஜெபிக்காத பரிசுத்தவான்களை நாம் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஜீவனைப்போன்ற தனிஜெப ஜீவியம் கிறிஸ்தவர்களால் அசட்டை செய்யப்படுவதே திருச்சபையின் பலவீனமான நிலைமைக்குக் காரணம்.

29
பாத்திரமும் வேளையும்
The Cup and the Hour

நமதாண்டவர் தமது சீஷர்களுக்காகவும் அவர்கள் மூலமாய்த் தம்மை விசுவாசிப்பவர்களுக்காகவும் ஜெபித்தபின்பு, மேல்வீட்டறையை விட்டிறங்கி எருசலேம் வீதிகள் வழியாகக் கிழக்கு முகமாய் நடந்தார். பட்டணம் அயர்ந்த நித்திரையிலிருந்தது, சீஷர்கள் மௌனத்தோடும் மனக்கிலேசத்தோடும் அவரோடுகூடப்போனார்கள். அவர்கள் கோட்டைவாசலை விட்டு பள்ளத்தாக்கான கீதரோன் ஆற்றைக்கடந்து, ஒலிவமலையின் அடிவாரத்தில் ஏறினார்கள். அங்கே கெத்செமனே என்னும் தோட்டம் இருந்தது. கெத்செமனே என்பதற்கு எண்ணெயாட்டும் ஆலை என்று அர்த்தம். ஆண்டவர் நசுக்கப்பட்டு அவர் இரத்தம் சிந்தினது அவ்விடத்தின் பேருக்குப் பொருந்தும். அவருடைய அகோர அவஸ்தையின் போராட்டத்துக்கு அத்தோட்டம் ஏற்றதாயிருந்தது. தோட்டத்தில் விளைந்த பாவத்தைத் தோட்டத்தில் ஏற்றுக்கொண்டு தொலைக்கத் துணிந்தார்.

மேலும், தாவீதரசன் தான் பெற்ற மகன் அப்சலோம் செய்த துரோகத்தால் எருசலேமை விட்டு, தன் முகத்தை மூடி அழுதுகொண்டு, கீதரோன் ஆற்றை வெறுங்காலால் நடந்து ஒலிவமலைச்சாரலில் ஏறினதுபோல, தாவீதின்குமாரனும் தம்மைப் புறக்கணித்த எருசலேமை நினைத்து நெஞ்சுடைந்து பட்டணத்தைவிட்டு வெளியேறினாரென்றறிக. அவர் தோட்டத்திற்குள் பிரவேசித்தது சத்துருக்களுக்கு ஒளித்துக் கொள்ளும்படிக்கல்ல. அவரைப் பிடிக்கவேண்டுமானால் கள்ளனைத் தேடுவதுபோல் அவரைத் தேட அவசியமில்லை. யோவான் சொல்லுகிறபடி ஆண்டவர் அந்த இடத்துக்கு அடிக்கடிபோய் ஜெபிக்கிற வழக்கமிருந்தபடியால், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் அந்த இடத்தை அறிந்திருந்தான் தாம் ஒளித்து கொள்ள வேண்டுமானால் தம்மைக்காட்டிக் கொடுப்பவன் அறியாத ஓரிடத்துக்கல்லவோ அவர் போயிருக்க

வேண்டும். ஆகையால் சத்துருக்கள் சங்கடமில்லாமல் தம்மைப்பிடித்துக்கொள்ள விரும்பியே அந்த இடத்துக்குப் போனார். அவர்கள் பிடிக்க வந்தபோது தாமே அவர்களுக்கு எதிர்கொண்டுபோய் தம்மை அவர்கள் கைகளில் ஒப்புவித்தார். இவையாவும் தேவ ஒழுங்குப்படி நடக்கிற தேயல்லாமல் தற்செயல் ஒன்றுமில்லை. தமக்கு என்ன நேரிட்டாலும் தேவசித்தம் நிறைவேறவேண்டுமென்பதே அவருடைய தீர்மானம். அவர் தோட்டத்தைத் தேடிப்போவதற்கு வேறொரு காரணமும் உண்டு. நாம் தனித்து தேவனைச்சந்தித்து ஆசீர்வதிக்கப்பட்ட இடம், நமக்குப் பெனியேலைப்போல் அருமையாயிருப்பது இயல்பு. அவர் அடிக்கடி தமது பிதாவோடு சம்பாஷித்த அந்தத் தோட்டம், சகிக்கவொண்ணாத துயரம் தமது ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்ட இந்நேரத்தில் தமது பிதாவைச் சந்திப்பதற்கு அனுகூலமான ஸ்தலமென்றறிந்து அங்கே பிரவேசித்தார்.

அவர் கெத்செமனே என்ற இடத்துக்கு வந்தபோது, தமது சீஷரில் எட்டுப்பேரைத் தோட்டத்தின் வாசலில் உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, மற்ற மூவரையும் தம்மோடுகூடத் தோட்டத்துக்குள் அழைத்துச் சென்றார். பேதுரு யாக்கோபு யோவானாகிய இம்மூவரும் இதற்கு முந்தி யவீரின் மகளை உயிரோடெழுப்பினபோதும், அவர் மறுரூபமானபோதும், அவரோடுகூடயிருக்கச் சிலாக்கியம் பெற்றவர்கள். அவர் படும் அகோரபாடுகளைப் பார்க்கத்தக்க விசுவாச பலம் எட்டுப்பேருக்கு இல்லாமையால் அவர்களைத் தூரத்தில் வைத்தார். மற்றமூவரும் ஒருவாறு தம்மை அறிந்திருந்தபடியால், தமக்கு நேரிடும் இந்தக் கொடிய போராட்டத்தால் இடறலடைய மாட்டார்களென்றெண்ணி அவர்களைமாத்திரம் தோட்டத்திற்குள் அழைத்துப்போனார். அப்படியிருந்தும் அவர்களைத் தம்மோடு கூடியிருக்க இடங் கொடுக்கவில்லை. அவர் ஒண்டியாய் ஆலையை மிதிக்க வேண்டுமேயன்றி மனுப்புத்திரரில் ஒருவனும் கூடயிருப்பதில்லை. அவருடைய அகோரபாடுகளின் இரகசியமாகிய திரைக்குள் பிரவேசிக்க அவர்களுக்கு இடமில்லை. ஆகையால் அவருக்கும் அவர்களுக்கும் இடையில் கல்லெறிதூரம் இருக்கவேண்டும். தாம் ஒண்டியாய் அவஸ்தைப்படும் இவ்வேளையில் அவர்கள் தம்மோடுகூட விழித்திருப்பது தமக்கு ஆறுதலாயிருக்கும் என்று நினைத்தார். அவர்களோ தங்களைப் போர்வையால் மூடிக் கொண்டு தூங்கினார்கள். தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தார், ஒருவரையும் காணோம். தாம் படுங்கஷ்டத்தை மறந்து அவரே மும்முறை அவர்களிடம் வந்து அவர்களைத் தேற்ற வேண்டியதாயிற்று.

தோட்டத்துக்கு வெளியிலிருந்த எட்டுப்பேரோடு திகைத்து உட்கார்ந்துகொண்டிருப்பது நமது வேலையல்ல. அல்லது

கல்லெறிதூரத்தில் அம்மூவரோடு சேர்ந்து தூங்கிக் கொண்டிருப்பது நமது வேலையுமல்ல. கிருபையுள்ள இரட்சகர் தமது பாடுகளின் இரகசியமாகிய திரையைக் கிழித்து நம்மைத் தம்மண்டை அழைக்கிறார். அவருடைய அவஸ்தையைக்கண்டு நாம் இடறலடைவோம் என்கிற பயம் ஆண்டவருக்கில்லை. அந்தக்காலம் கடந்தது. சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும் ஆவியானவர் வந்திருக்கிறார். தேவகுமாரன் படும் அவஸ்தையை உனக்குக் காண்பிக்கிறேன் வாவென்று அவர் நம்மை அழைக்கிறார். அவரே கிறிஸ்துவின் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்த வந்தவர். மிகுந்த பயபக்தியுடன் தோட்டத்துக்குள் பிரவேசிப்போம். பணிந்த சிந்தையுடன் அவர் பாடுகளை நோக்குவோம். அன்றிரவு அவரடைந்த பயங்கரமான போராட்டத்தைப்போல் அதற்குமுன் அவருக்குச் சம்பவித்ததில்லை. அவரே நமக்குப் போதித்தாலுங்கூட அவைகளின் இரகசியத்தைப் பூரணமாய் அறிந்துகொள்ள நமது புத்திபோதாது. உணர்ந்துகொள்ள நமது அனுபவம் காணாது. விஸ்தரிக்க நமது வார்த்தைகள் பொருந்தாது. இந்த இரகசியத்தை விளக்கிக்காட்டத் துணிந்து இருட்டாக்கினவர்கள் பலர். சுய அபிப்பிராயங்களைச் சொல்லி உண்மையைக் கெடுத்தவர் பலர். தேவன் மாம்சத்தில் வந்தது எப்படி இரகசியமோ, அதுபோலவே அவரது ஜீவியமுழுவதும் இரகசியமே. அவரே இரகசிய புருஷனாயிருக்கும்போது அவருடைய காரியங்களும் இரகசியமாகத்தான் இருக்கவேண்டும். அவருடைய விஷயத்தில் நாம் அறிந்து கொள்ளக்கூடியகாரியங்கள் இருப்பதுபோலவே, நாம் அறியக்கூடாத இரகசியங்களும் உண்டு. அவற்றுள் **கெத்செமனே** ஒன்று. நாம் அறியக்கூடியதும் அறியக்கூடாததுமான பாடுகள் ஆண்டவருக்கு நேரிட்டதென்பது திருச்சபை எக்காலத்திலும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆவியானவரின் உதவியால் எவ்வளவு அறியக்கூடுமோ அவ்வளவுதான் நாம் அறியக்கூடும்.

கெத்செமனேயில் அவர் பட்டபாடுகளின் இரகசியத்தைச் சீஷர்கள் அன்றிரவு அறிந்துகொள்ளவில்லை. ஏனென்றால் இதுவரை ஒருக்காலும் அவர்கள் காணாததும் அறியாததுமான போராட்டத்தை அங்கே அவரில் கண்டார்கள். இதுவரை எஜமானுடைய மகத்துவசெயலை அறிந்த அவர்களுக்கு அவர்பட்ட அகோர அவஸ்தை ஆச்சரியமாயிருந்தது. அதற்குக் காரணமென்னவென்று அவர்கள் அறிந்துகொள்ளக்கூடவில்லை. அவருடைய ஜீவியத்தைப் பிந்தி அவர்கள் எழுதினகாலத்தில், அவர் சகித்த அவஸ்தையை விவரித்துச் சொல்லக்கூடாமல் புதிய கிரேக்க வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள். அவைகள் மனுஷருக்குள் காணப்படும் அவஸ்தையை விஸ்தரிக்கும் வார்த்தைகள் அல்ல. ஒருவன் தனக்குத் தெளிவாய்த் தெரிந்ததைமாத்திரமே விபரமாய்ச் சொல்லக்கூடும். ஆகையால்

ஆண்டவர் பட்ட அவஸ்தையை வாக்குக்கெட்டாத போராட்ட மெனலாம். அவருடைய பாடுகளின் இரகசியத்தை அறியக் காலம் பிடிக்கும். ஆவியானவரின் போதனை அருளப்படவேண்டும். அவைகளை அனுபவத்தால் ஒருவாறு கண்டறியவேண்டும். அனுதாப ஐக்கியமின்றி அனுபவமில்லை. ஒருதாய் தன் பிள்ளையின் வேதனையை தனக்குள் அனுபவிப்பது போல ஒரு அந்நியஸ்திரீ அறியாள். கிறிஸ்துவின் சிந்தைக்கொப்பானவர்களே அவருடைய பாடுகளின் இரகசியத்தை ஒருவாறு அறிகிறார்கள். ஆவியானவரால் போதிக்கப்பட்ட பரிசுத்தவான்களுடைய நீண்டகால அனுபவம் நமக்குக் கிடைத்திருப்பதுபோல அன்றிரவு அம்மூவருக்குக் கிடைக்கவில்லை. தேவன் தமது இரகசியங்களைப் படிப்படியாகவே வெளிப்படுத்துகிறார். நாம் ஆவிக்குரிய தகுதியில் வளருகிறதற்குத் தக்கதாக அவருடைய இரகசியங்கள் நமக்குள் வெளிப்படுத்தப் பட்டு அறிகிறோம்.

இப்படிச் சொல்வதினால் தேவ இரகசியங்களை நாம் பூரணமாய் அறிந்து கொண்டால்தான் இரட்சிக்கப்படக்கூடுமென்று நாம் சொல்லுகிறதில்லை. அந்த இரகசியத்தை நாம் அறிந்தாலும் அறியாமற்போனாலும் கெத்செமனே ஆண்டவர் கையில் நம்மை ஒப்புவிக்கும்போது நிச்சயமாகவே அவர் நம்மை இரட்சிக்கிறார். ஒரு வியாதியஸ்தன் குணமாவதற்கு வைத்திய சாஸ்திரத்தையும், வைத்தியன் கையாடும் முறைகளையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமல்ல. வைத்தியன் கையில் தன்னை ஒப்புவித்து, அவன் கொடுக்கும் பரிகாரத்தை ஏற்றுக் கொள்வதினாலேயே அவன் குணமாகிறான். தேவன் நமதுபாவங்களை நீக்கும்விதத்தையும், நம்மைப் பரிசுத்தமாக்கும் இரகசியத்தையும் நாம் அறியாதிருக்கலாம். அருமைரட்சகர் பாதத்தில் விழுந்து: என் பிராணநாதரே, நீர் எனக்காகப்பட்ட பாடுகளையும் துயரத்தையும் அறிந்துகொள்ள நான் எம்மாத்திரம்! ஆனாலும் அவைகளைில் விளங்கிய உமது அதிசய அன்பைக் காண்கிறேன். படுபாவியாகிய என்னை உமது கிருபைக்கு ஒப்புவிக்கிறேன். நொறுங்குண்ட உம் திருமேனியும், திறவுண்ட உமதன்பின் உள்ளமும், நீர் எனக்காகச் சிந்தின திருரத்தமும், நீர் கதறி அழுத சத்தமும், உம் திருமுகத்தில் ஓடின கண்ணீருமே என் கதியென்று சொல்லும்போது, அவர் கைபட்டமாத்திரத்தில் குஷ்டரோகம் பறந்ததுபோல, நமது பாவம் அகற்றப்பட்டு, இரட்சண்ய சந்தோஷம் நமதுள்ளத்தை நிரப்புமென்பது நிச்சயம்.

கெத்செமனேத் தியானம் பயபக்திக்குரியது. அது ஆழ்ந்த இரகசியமானதால் துணிந்து நெருங்கலாகாது. நாம் அவரிடம் சேரக்கூடிய வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். குறிக்கப்பட்ட எல்லையைக்கடந்து போகாதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். வெளிப்படுத்தினதற்கு மிஞ்சி அறியும்படியான துணிவு நமக்கு

வேண்டாம். கெத்செமனேயின் சம்பந்தமான சத்தியங்களை ஒன்றாகக் கூட்டுவோம். அவைகளை நமது தியானத்துக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதாரமாக வைத்துக் கொள்வோம். நாம் சொல்லுகிறவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிராதபடிக்கும் பார்த்துக்கொள்வோம். ஆவியானவரே நமக்குப் போதிக்கட்டும். அவ்வாறு ஆராய்ந்தும் நமக்குப் பூரணமாய் விளங்காவிட்டால் நாம் சோர்ந்துபோகக்கூடாது. ஏனென்றால் இம்மையில் நமது அறிவு குறைவுள்ளது. "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்."

"பிதாவே, **வேளை** வந்தது. நீர் உமது குமாரனை மகிமைப்படுத்தும். பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து **முடித்தேன்**" *(யோவான் 17:2,4).*

"இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்துக்கு வந்து, சீஷர்களைநோக்கி: நான் அங்கேபோய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, பேதுருவையும் செபேதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய் **துக்கமடையவும் வியாகுலப்படவும்** தொடங்கினார். அப்பொழுது அவர் என் **ஆத்துமா** மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி என்னோடேகூட விழித்திருங்கள் என்றுசொல்லி, சற்று அப்புறம்போய் முகங்குப்புற விழுந்து என்பிதாவே, **இந்தப்பாத்திரம் என்னைவிட்டு** நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தப்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். அவர் மறுபடியும் இரண்டாந்தரம்: என் பிதாவே, **இந்தப்பாத்திரத்தில்** நான் **பானம்பண்ணினாலொழிய** இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில் உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபித்தார். மூன்றாந்தரமும் அவ்வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார். அவர் தமது சீஷரிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாருங்கள்; இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற**வேளை** வந்தது என்றார்." *(மத். 26:36-45).*

"பின்பு கெத்செமனே என்னப்பட்ட இடத்துக்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷரைநோக்கி: நான் ஜெபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டுபோய் **திகிலடையவும்** மிகவும் **வியாகுலப்படவும் தொடங்கினார். அப்போது அவர் என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது.** நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள் என்றுசொல்லி, சற்று

அப்புறம்போய், தரையிலேவிழுந்து, **அந்தவேளை** தம்மை விட்டு நீங்கிப்போகக் **கூடுமானால்**, அது நீங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு: அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலேகூடும், இந்தப் **பாத்திரத்தை** என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என்சித்தப்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார். அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும் **வேளை வந்தது,** இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார் என்றார் *(மாற்கு 14:32-41).*

பின்பு அவர் புறப்பட்டு வழக்கத்தின்படியே ஒலிவ மலைக்குப்போனார்; அவருடைய சீஷரும் அவரோடே கூடப் போனார்கள். அவர் அவர்களை விட்டுக் **கல்லெறிதூரம்** அப்புறம்போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் **இந்தப் பாத்திரம்** என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார், அப்பொழுது வானத்திலிருந்து ஒருதூதன் தோன்றி அவரைப் **பலப்படுத்தினான்.** அவர் **மிகவும் வியாகுலப்பட்டு** அதிக ஊக்கத்தோடு ஜெபம்பண்ணினார். அவருடைய **வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த்** தரையிலே விழுந்தன. அவர் தம்மைப் பிடிக்கவந்த கூட்டத்தைப் பார்த்து: இதுவோ உங்களுடைய **வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது** என்றார் *(லூக்கா 22:39-53).*

''அவர் மாம்சத்திலிருந்த நாள்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, **பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்** விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்குண்டான பயபக்தியினிமித்தம் **கேட்கப்பட்டு,** அவர் குமாரனாயிருந்தும் **பட்டபாடுகளினாலே** கீழ்ப்படிதலைக் **கற்றுக்கொண்டு,** தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்'' *(எபி. 5:7-9).*

''தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை **உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது** அவருக்கு ஏற்றதாயிருந்தது'' *(எபி. 2:10).*

''கர்த்தரோ அவரை நொறுக்கச் **சித்தமாகி** அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார் அவருடைய ஆத்துமா தன்னைக் **குற்றநிவாரணபலியாக** ஒப்புக்கொடுக்கும்போது அவர் தமது சந்ததியைக்கண்டு நீடித்த நாளாயிருப்பார். கர்த்தருக்குச்

சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு, திருப்தியாவார். என் தாசனாகிய **நீதிபரர்** தம்மைப்பற்றிய அறிவினால் அநேகரை நீதிமான்கள ாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார், அவர் தமது **ஆத்துமாவை மரணத்திலூற்றி** அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்" *(ஏசாயா 5:10-12).*

*"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப் பாவம் அறியாத அவரை நமக்காகப் **பாவமாக்கினார்**" (2 கொரி. 5:21).*

மேற்கூறிய வாக்கியங்களில் குறிப்பிட்ட வார்த்தைகளைச் சேர்த்து சிந்திக்கும்போது நமதாண்டவர் தோட்டத்தில் அனுபவித்த அகோர அவஸ்தையையும், அதற்குக்காரணம் இன்னதென்பதையும் காண்கிறோம். அவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டே கெத்செமனேயின் இரகசியத்தை நாம் படிக்கவேண்டும். சிலர் ஒன்றைப்பிரதானமாக எடுத்துக்கொண்டு மற்றச் சத்தியங்களை மறந்துபோவதால் வழிவிலகிப் போகிறார்கள். அவர் தோட்டத்தில் கொடிய அவஸ்தையை அனுபவித்தது நிச்சயம். அவ்வளவு அகோர அவஸ்தைக்கு ஏதோ காரணம் இருந்திருக்கவேண்டும். அக்காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆண்டவர் வாயினின்று புறப்பட்ட வார்த்தைகளை ஆதாரமாகக் கொள்ளவேண்டும். அவர் பானம்பண்ணக்கூடாதபடி பயந்து நடுங்கின **பாத்திரமும்,** தம்மைவிட்டு நீங்குபடி ஜெபித்த**வேளையும்** இன்னதென்று அறியும்படி, இத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற வேத வாக்கியங்களையும் சேர்த்துக் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவின் அனுபவத்துக்கும் வேதவாக்கியங்களுக்கும் பொருந்தாத காரியங்களை யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

மேற்சொன்ன வாக்கியங்களில் குறிப்பிட்ட சத்தியங்களை ஒன்றாய்த் திரட்டிப்பார்ப்போம். ஆண்டவர் அமர்ந்த இருதயத்தோடும் சந்தோஷத்தோடும் தமது சீஷருடன் தோட்டத்தில் பிரவேசித்தார். திடீரென வெள்ளம் பிரவாகித்து வந்ததுபோல் அந்தகாரமும் திகிலும் அவரைச்சூழ்ந்துகொண்டன. மகா வியாகுலப்பட்டுத் தரையில் முகங்குப்புற விழுந்தார். மரணத்துக்கேதுவான துக்கம் அவர் ஆத்துமாவைப் பிடித்துக்கொண்டது. அவர் நெடுகிலும் எதிர்பார்த்துச் சொல்லிவந்த **வேளை** அந்நேரம் அவருக்கு வந்தது. அந்த வேளையைப் பாத்திரம் என்றும் அழைக்கிறார். அந்தப் பாத்திரத்தில் உள்ளதைப் பானம்பண்ண அவருக்கு மனம் வரவில்லை. அந்தப்பாத்திரம் தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்கும்படி பிதாவைப்பார்த்து ஊக்கமாய்

ஜெபிக்கிறார். அது நீங்கிப்போகக்கூடிய வழியைக்காணோம். ஆறுதலற்றவராய் மிகுந்த தத்தளிப்புடன் சீஷரிடம் போகிறதும் வருகிறதுமாயிருக்கிறார். அந்தப்பாத்திரம் தம்மைவிட்டு நீங்கும்படி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் மும்முறை ஜெபிக்கிறார். அவருடைய அகோர அவஸ்தையின் போராட்டத்தால், இரவின் குளிர்ந்த நேரத்தில், அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தன. ஒரு தூதன் வந்து அவரைப் பலப்படுத்தினான். அந்தப் **பாத்திரத்தில்** தாம் பானம்பண்ணுவதும், அவ்வேளைக்குத் தம்மை ஒப்புவிப்பதும் பிதாவின் சித்தமாயிருக்கிறதென்று அவர் கண்டபோது மனப்பூர்வமாய் அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு அவ்வேளைக்குத் தம்மைக் கையளித்தார்.

அவர் உடனே பிதாவின் சித்தத்துக்கு இணங்கக்கூடாமல் தத்தளித்தபோதிலும், எப்போதும்போலவே இந்த நேரத்திலும் அந்தச்சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். அவர் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளத் தாமதித்தது பாவமாகாது. அது கீழ்ப்படியாமையும் ஆகாது. ஏனென்றால் பலவந்தமாய்க் கீழ்ப்படியச்செய்வது கீழ்ப்படிதல் அல்ல. நாம் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவதே கீழ்ப்படிதலாகும். அவ்வாறு அவர் சித்தத்தை ஏற்றுக்கொள்ளும்வரை பிதா காத்திருக்கிறார். அவர் தாமதித்ததற்குத் தகுந்த காரணமும் இருக்கவேண்டும். அவர் பாத்திரத்தை உடனே ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் தாமதித்ததினாலேதான் பாத்திரத்தின் பயங்கரம் வெளிப்படுகிறது. அந்தப் பாத்திரம் சாத்தான் அவருக்குக் கொடுத்ததல்ல. துரோகியான யூதாஸ் அவருக்குக் கொடுத்ததல்ல. அவரைப் பிடிக்கவந்த சத்துருக்கள் கொடுத்ததல்ல. தம்மைக் கைவிட்டு ஓடின சீஷர்கள் கொடுத்த பாத்திரமுமல்ல. அன்புள்ள பிதாதாமே தமது குமாரனுக்குத் கொடுத்த பாத்திரம். "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரம்" என்று ஆண்டவரே சொல்லுகிறார். அந்தக் கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ண அவர் சம்மதித்ததினாலே தான், மகா அந்தகாரமான **வேளைக்குள் பிரவேசிக்கத்** தம்மை ஒப்புக்கொடுத்தார். அந்தப் **பாத்திரமும்** அந்த **வேளையும்** ஒன்றுதான். அந்தப் பாத்திரத்தாலுண்டான அகோர அவஸ்தையை அவர் தோட்டத்தில்மாத்திரம் அனுபவிப்பதாய்த் தோன்றினபோதிலும், பாத்திரத்தோடு சம்பந்தப்பட்ட அந்த **வேளையோ** தோட்டத்திலேயே முடிந்துபோகவில்லை. அன்றிரவுமுதல் பதினைந்து மணிநேரமாக அவ்வேளைக் குள்ளேயே இருந்தார். அவர் சிலுவையில் "முடிந்தது" என்று சொன்ன நிமிஷத்தில்தான் அவ்வேளையும் முடிந்தது. அப்படியானால் தோட்டத்தில்மாத்திரம் அவர் அவ்வளவு அகோர அவஸ்தைப்பட்டு, தோட்டத்தை விட்டதுமுதல் சிலுவையின் மரணபரியந்தம் மகா சாந்தமாய்! நடந்து

கொண்டதற்குக் காரணமென்ன? அவர் செய்த **ஜெபமே காரணம்.** பிதா தமக்குக்கொடுத்த அந்தக் கசப்பான பாத்திரத்தை அவர் கண்டபோது மகா திகிலடைந்து, அந்தப் பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கிப்போகும்படி பிதாவை நோக்கி ஊக்கமாய் ஜெபிக்க ஆரம்பித்தார். இவ்வாறு ஜெபத்தில் அவர் காத்திருக்கையில், தாம் அந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணினாலொழிய அது தம்மை விட்டு நீங்கமாட்டாதென்று பிதா அவருக்கு அறிவித்தபோது: "என் சித்தப்படியல்ல பிதாவே, உம்முடைய சித்தப்படியே ஆகட்டும்" என்று பாத்திரத்தை ஏற்றுக்கொண்டார். அவ்வாறு அவர் ஏற்றுக்கொண்டவுடனே அவர் ஆத்துமாவைச் சூழ்ந்திருந்த வியாகுலமும், திகிலும், துக்கமும், போராட்டமும் நீங்கி, மிகுந்த அமைதலும் தைரியமும் அவருக்குள் வந்தது. பாத்திரம் அவரைவிட்டு நீங்கிப் போனதினால் அல்ல, அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்படி தமது சித்தத்தை பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தின தினாலேயே மிகுந்த அமைதலும் சமாதானமும் அவருக்குக் கிடைத்தது.

அவரே தோட்டத்துக்கு வெளியே வந்து, சத்துருக்களுக்கு எதிர்கொண்டுபோய் தம்மை அவர்கள் கைகளில் ஒப்புவிக்கிறார். அவ்வாறு தம்மை ஒப்புவிக்கும்போது அவர் அவர்களைப் பார்த்து: "**இதுவோ உங்கள் வேளையும்** அந்தகாரத்தின் வல்லமையுமாயிருக்கிறது" என்றார். பேதுரு பட்டயத்தை உபயோகித்தபோது அவரைத்தடுத்து "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்றார். அதுமுதல் சிலுவையின் மரணபரியந்தம் சத்துருக்கள் அவரை எவ்வளவோ பாடுகள்படுத்திக் குரூரமாக நடத்தின போதிலும் அவர் சற்றும் கலங்கவில்லை. கண்ணீர்விட்டழ வில்லை. இரக்கத்துக்காகக் கெஞ்சவில்லை. தோட்டத்தில் கண்ட பயங்கரமான போராட்டத்தையும் தத்தளிப்பையும் பிந்திக்காண்பதில்லை. அவர் குற்றவாளிபோல் அல்ல, இராஜனாக விளங்குகிறார். அவர்கள் அவரைக் கைதி யாக்கினாலும், அவர் நிற்கிற மாதிரியையும் பேசும் வார்த்தைகளையும் கவனிக்கும்போது அவர்கள் கைதிகள் போலவும், அவர் நியாயாதிபதி போலவும் தோன்றுகிறது.

அப்படியானால் அவர் தோட்டத்தில் பானம் பண்ணக்கூடாதபடி தத்தளித்துக் கலங்கின பாத்திரம் எது? வேதசாஸ்திரிகள் இந்தப் பயங்கரமான பாத்திரத்தை அல்லது வேளையைக்குறித்துப் பல அபிப்பிராயங்களைச் சொல்லுகிறார்கள். அவர் நெடுகிலும் எதிர்பார்த்திருந்த **மரணம்** சமீபித்து வந்ததைக்கண்டு அவ்வாறு திகிலடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார் என்பாருண்டு. அப்படியானால் அவர்

தம்மைவிட்டு நீங்கும்படி போராடின பாத்திரம் **மரணம்** என்றாகுமே. இந்த அபிப்பிராயம் அவர் தமது மரணத்தைக் குறித்துச் சொன்ன அநேக வாக்கியங்களுக்கு விரோதமாகும். உலகத்தின் பாவத்தை அந்நேரத்தில் அவர் மொத்தமாகப் பார்த்ததே அவர் பட்ட அவஸ்தைக்குக் காரணம் என்பாரும் உண்டு. அப்படியானால் உலக பாவத்தை அவர் சுமந்த நாள்களில் அதன் கேட்டை அவர் கண்டதில்லையென்றாகுமே. பாவிகள் அவரைப் பகைத்துக் கொல்வதினாலே, மனுக்குலத்தை ஒப்புரவாக்கும் தேவதீர்மானம் தவறிப் போகுமோவென்று அவர் பயந்து, பிதாவே **உமக்கு** வேதனையை உண்டாக்கும் இந்தப் பாத்திரத்தை என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் என்று ஜெபித்ததாகச் சொல்வாருண்டு. தமது மரணத்தால்மாத்திரம் பாவிகள் தேவனோடு ஒப்புரவாகக் கூடுமென்பதை அவர் நிச்சயமாய் அறிந்து வந்திருக்க, பிதா தமது தீர்மானத்தை மாற்றுவாரென்று அவர் பயப்பட அவசியமேயில்லை. மேலும் இந்தப் பாத்திரம் பிதா பானம் பண்ணுவதாயிராமல், பிதா குமாரனுக்குக் கொடுத்ததும், குமாரன் **தம்மைவிட்டு** நீங்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டதுமான பாத்திரம். அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கூடாமல் குமாரன் தத்தளிப்பதையும், பானம்பண்ணவேண்டியது பிதாவின் சித்தமென்று கண்டபோது பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதையும் காண்கிறோம். அவர் அனுபவித்த அவஸ்தையும் போராட்டமும் தோட்டத்தில் மாத்திரம் காணப்படுகின்றன. ஆகையால் அந்தப் பாத்திரம் இன்னதென்று இவ்வேத பண்டிதர்கள் தெளிவாக்கவில்லை.

முயற்சியுள்ள வேலைக்காரன் வேலையற்றிருப்பது அவனுக்குச் சங்கடமாயிருக்கும். 'மெய்வருந்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், உடல் அருமையையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயினார்' என்ற கவிப்படி, ஒருவன் தன்வேலையில் முழுக்கவனம் வைத்திருக்கும்போது தனக்கு விரோதமாகச் சொல்லப்படும் எந்தக் காரியத்தையும் கவனிக்கமாட்டான். அதுபோல நமதாண்டவர் தமக்கு விரோதமாய்ச் சத்துருக்கள் எத்தனையோ காரியங்களைச் செய்வதை அறிந்திருந்தும், அவர் இருதயம் இதுவரை தமது ஊழியத்தில் பதிந்திருந்ததாலும், மனுமக்களுக்கு அவர் இடைவிடாமல் செய்துவந்த கிருபையுள்ள பணிவிடையால் அவர்கள் நன்மையடைவதைக்கண்டு அவர் சந்தோஷித்ததாலும், பிறர் செய்யும் தீமைகள் அவரை மேற்கொள்ளவில்லை. பாவத்தால் விளைந்த துக்கமும் சஞ்சலமும் தம்முள்ளத்தை நிரப்பினபோதிலும் அதைத் தாமே சகித்துக்கொண்டு, தமது சந்தோஷத்தையும் சமாதானத்தையுமே பிறருக்குக் கொடுத்து வந்தார். சத்துருக்களின் தீமையான யோசனைகளை அறிந்திருந்தும் அதைப்பற்றிச் சீஷரிடம்

பேசாமல் அவர்களுக்கு ஆசீர்வாதமான ஜீவவார்த்தைகளையே சொல்லிவந்தார். வியாழன் இரவில் பயங்கரமான **வேளை** தம்மைச் சூழ்ந்திருந்தும் சீஷர்களைத் தைரியப்படுத்தும்படி அவர் பேசின வார்த்தைகள் எவ்வளவோ அருமையானவைகள். தம் கஷ்டம் மறந்து பிறரை மகிழ்ச்சியாக்கும் கருணாகரன் அவர். இதுவரை அவர் இடைவிடாமல் செய்துவந்த முயற்சியும் சந்தோஷமுமான ஊழியம் முடிவுபெற்றது. இதுமுதல் அந்தகாரத்தின் வல்லமை தன் கொடிய முயற்சியை அவரில் நடப்பிக்க, அவர் மறுவார்த்தை பேசாமல் சகல பாடுகளையும் அனுபவிக்கவேண்டியது. இதுவே அவரடைந்த அவஸ்தைக்கு ஆரம்பம். அவர்தாமே சொன்னபடி கிரியை செய்யக்கூடாத இராக்காலம் அவருக்கே வந்தது. அவர் மேல்வீட்டில் பிதாவைப்பார்த்துச் சொன்ன வார்த்தைகளால் இது வெளிப்படுகிறது. பிதாவே, பூமியில் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையை நான் **செய்து முடித்தேன்.** இனி நான் பிரசங்கிக்கப்போகிறதில்லை. அற்புதங்களைச் செய்யப்போகிறதில்லை. கிராமம் கிராமமாகச் சென்று நன்மைசெய்யப் போகிறதில்லை. அவ்வித உற்சாகமான ஊழியம் முடிந்தது. இன்னும் உமது கையில்தான் நான் இருக்கிறேன். இனி எனக்காக நீர் வேலை செய்ய வேண்டியது. நான் செய்து முடித்த கிரியையால் உம்மை மகிமைப்படுத்தினேன். என் வேலை முடிந்திருக்கும் இவ்வேளையில் நீர் என்னை மகிமைப்படுத்தும். இனி நான் நடக்கப்போகிற அந்தகாரமான பாதையில் நீர் என்னை மகிமைப்படுத்துவதால் உமக்கே அது மகிமையாகும் என்கிறார் (யோவான் 17:2,4).

நமதாண்டவருடைய ஜீவியமும் ஊழியமும் தேவஒழுங்கின்படி வளர்ந்து பூரணப்பட்டதைக் காண்கிறோம். அவர் நெடுகிலும் செய்துவந்த வேலை வியாழன் இரவோடு முடிந்தது. அந்த ஊழியத்தை அவர் கொஞ்சமும் தவிக்காமல் உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் நிறைவேற்றி வந்தார். பிதாவும் அவைகளால் மகிமைபெற்றார். இன்னும் அவர் நிறைவேற்றவேண்டிய ஊழியம் உண்டு. அது முந்தின ஊழியத்தைப் போன்றதல்ல. முந்தின ஊழியத்தில் அவர் கலங்கி நடுங்கவில்லை. துக்கிக்கவும் வியாகுலப்படவும் இல்லை. தரையில் முகங்குப்புற விழுந்து பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் போராடவில்லை. வேளை வேளை என்று அவர் அலறவில்லை. இந்தப் பாத்திரத்தை என்னைவிட்டு அகற்றமாட்டீரா வென்று கெஞ்சவில்லை. அவருடைய ஆத்துமா மரணபரியந்தம் துக்கங்கொண்டதுமில்லை. அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாகத் தரையில் விழுந்ததுமில்லை. முந்தின ஊழியம் அவர் உற்சாகமாய்ச் செய்துவந்த ஊழியம். இதுவோ ஆட்டுக்குட்டியைப்போல் வாய்திறவாமல் சகல பாடுகளையும்

சகிக்கவேண்டிய ஊழியம். முந்தின ஊழியத்தில் பொல்லாதவர்கள் பின்வாங்கவேணும். பிசாசுகள் பறக்கவேணும். தீமை விலகவேணும். அவர் சித்தமே சித்தம். அவர் நடந்த வழியே வழி. அவர் சொன்னதே சொல். இப்போது அதெல்லாம் முடியாது. சத்துருக்களின் வேளைக்கும் அந்தகாரத்தின் வல்லமைக்கும் அவர் தம்மை ஒப்புக்கொடுக்கவேண்டியது. அவர்கள் அவரைப்பிடிக்கலாம், கட்டலாம், அடிக்கலாம், முகத்தில் துப்பலாம், கன்னத்தில் அறையலாம், தூஷணமாய் ஏசலாம், அவரைச் சங்கிலிகளால் கட்டி அங்குமிங்கும் ஏழுமைல் இழுத்தடிக்கலாம். அவரைத் தூணோடு கட்டிவைத்து வாரால் அடித்து முதுகைக் கிழிக்கலாம். முள்கிரீடத்தைத் தலையில் வைத்து மூங்கில்தடியால் அடித்திறுத்தலாம். பரியாசம் பண்ணலாம். மறுபடியும் முகம் நிறைய எச்சியைத் துப்பலாம். அவர் மறுவார்த்தை பேசக்கூடாது. சிலுவையைத் தோளில் ஏற்றி அவரைக் கல்வாரிக்குக் கொண்டுபோகலாம். ஆணிகளால் அவரைச் சிலுவையில் அறைந்து குழியில் நிறுத்தலாம். அவர் படும் பாடுகளைப் பார்த்து அவரைப் பரியாசம்பண்ணலாம். அவர் வேதனைப்பட்டுத் துடிதுடித்துச் சாகலாம். அவர் அவர்களை அதட்டக்கூடாது. கோபிக்கக்கூடாது. சகலத்தையும் மறுவார்த்தை பேசாமல் சகித்துக்கொண்டு சாகவேண்டும்.

முந்தின ஊழியம் சகல தீவினைகளையும் மேற்கொண்டு தாமே உற்சாகத்தோடு செய்துவந்த ஊழியம். அது முடிந்தது. இதுவோ சாத்தான் தன் முழுபலத்தோடும் அவரில் நடப்பிக்கிற சகல தீங்குகளையும் எதிர்பேசாமல் சகிக்கவேண்டிய ஊழியம். இருபாகமும் சேர்ந்துதான் உலகத்தின் இரட்சிப்பு. அவருடைய வல்லமையும் ஞானமும் மறையவேண்டும். அக்கிரமக்காரரில் ஒருவனைப்போல் அவர் எண்ணப்பட்டு, தேவனாலும் மனுஷராலும் கைவிடப்பட்டவரைப்போல் சாகவேண்டும். உல்லமையோடும் மகத்துவத்தோடும் ஆரம்பித்த ஊழியத்தின் முடிவு இதுவே. ஆயிரமாயிரமாய்க் கூடி கர்த்தரின் நாமத்தினால் வருகிற இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவரென்று போற்றினதின் பலன் இதுவே, பன்னிருவரில் ஒருவன் துரோகியாவான். முன்னுக்கு நின்றவன் மறுதலிப்பான். மற்றவர்கள் அவரைக் கைவிட்டு ஓடுவார்கள். இவைகள் யாவையும் ஆண்டவர் பிரத்தியட்சமாகக் கண்டார். அவர் தமது இடைவிடாத வேலையைமுடித்து ஓய்ந்தபோது இவைகள் யாவும் அவர் கண்களுக்கு முன் வந்து நின்றன.

அப்படியானால் அவர் தோட்டத்தில் அடைந்த அகோர அவஸ்தைக்குக் காரணம் சிலுவையின் மரணபயமென்று சொல்லலாமோ? அவ்வாறு சொல்லுகிற வேதபண்டிதர்களும் உண்டு. அவர் மனப்பூர்வமாய்ப் பிரவேசித்த அவ்வேளைக்குள்,

புறம்பான இக்கொடிய பாடுகளைத் தமது சரீரத்தில் பட்டுத்தரித்தாரென்பது நிச்சயம். ஆனால் **மரணபயமே** அவரடைந்த அகோர அவஸ்தைக்குக்காரணமென்று சொல்வது சரியல்ல. அதைப்பார்க்கிலும் பயங்கரமான வேறே காரணம் இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் மரணம் அவர் அறியாமலும், எதிர்பாராமலும், **திடீரென** அவருக்கு நேரிட்ட காரியமல்ல. தோட்டத்தில் அவர்பட்ட அவஸ்தையைப் பார்க்கும்போது, ஏதோ ஒரு பயங்கரமான காரியம் திடீரென அவரைச் சூழ்ந்து கொண்டதாகவும், ஒன்றுக்கும் அஞ்சாத நெஞ்சனாகிய நமது இரட்சகர் அதைக்கண்டவுடனே அதிகத் திகிலும் வியாகுலமும் அடைந்து தமது ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறதென்று தமது ஏழைச் சீஷரிடம் வாய்விட்டுச் சொல்லத்தக்கதாக, அவ்வளவு கலக்கமும் தத்தளிப்பும் அவரை நிரப்பிக்கொண்டதாகவும் தோன்றுகிறது. அந்த **வேளை** தம்மைவிட்டு நீங்கிப்போகும்படி தமது பிதாவை நோக்கி இரத்தஞ்சிந்தத்தக்கதாகப் போராடி ஜெபித்தார். சிலுவையின் மரணமே இவ்வளவு அகோர அவஸ்தைக்கும், அவருக்குண்டான திகிலுக்கும் காரணமென நாம் சொல்லத் துணியோம்.

சிலுவையின் மரணம் **திடீரென** அவருக்கு வெளிப்பட்ட காரியமன்று. அவர் பிரசங்கிக்கவும் அற்புதங்கள் செய்யவும் மாத்திரம் உலகத்துக்கு வந்தவரல்ல. அவர் பரத்தைவிட்டு வந்தபோது தேவனே உமது சித்தத்தின்படி செய்ய வருகிறேன், எனக்கு ஒரு **சரீரத்தை** ஆயத்தப்படுத்தினீரென்று சொல்லி வந்தார். அந்தச்சித்தத்தில் பிரதானமாக அவர் கண்டது **சிலுவையே.** தமது பிரசங்கத்தினாலும் அற்புத கிரியைகளி னாலுமே உலகம் இரட்சிக்கப்படுமென்று அவர் ஒருபோதும் நினைத்தவரல்ல. அவர் மரிக்காவிட்டால் அவைகள் யாவும் வீணாய்ப் போகுமென்று அவர் நிச்சயமாய் அறிவார். அவர் தமது மரணத்தை எதிர்பார்க்கவில்லையென்றும், கடைசியில் அகப்பட்டுக்கொண்டதால் தப்பவழியில்லாமல் மரணத்துக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தாரென்றும் விரோதிகள் பேசுவது சுவிசேஷ சரித்திரத்துக்கு எவ்வளவேனும் பொருந்தாது. அவர் தமது ஊழிய ஆரம்பத்திலிருந்தே தமது மரணத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசியிருக்கிறார். அவர் பிலிப்பிச் செசரியாவின் திசைகளுக்குப் போனபோது அவர் முதல் முதல் தமது பாடுகளைக்குறித்து வெளிப்படையாய் சீஷர்களுக்குச் சொன்னபோதிலும், ஆரம்பமுதற்கொண்டு சிலுவையின் மரணம் அவர் மனதில் இருந்ததென்பது நிச்சயம். அதை நினைத்துப் பயந்து பின்வாங்குகிறவராக அல்ல, அந்த மரணத்திலேயே பூரணவெற்றி தமக்குண்டென்று அறிந்தவராய் அந்த இலக்கைநோக்கித் தொடர்ந்தார். நீர் மரிக்கக்கூடாதென்று பேதுரு சொன்னபோது பின்னாகப்போ சாத்தானே! நீ தேவனுக்

கேற்றவைகளைச் சிந்திக்காமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று கடிந்துகொண்டார். ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது, இவைகளை நீர் செய்வதற்கு என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர் என்று அதிகாரிகள் கேட்டார்கள். தாம் அறிந்ததும் அவர்கள் அறியக்கூடாததுமான உத்தரவைக் கொடுத்தார். இந்த ஆலயத்தை இடித்துபோடுங்கள் மூன்றுநாளுக்குள் நான் அதை எழுப்புவேன் என்றார். தமது மரணம் உயிர்த்தெழுதலால் பழையவைகள் ஒழிந்து, ஆவிக்குரிய ஆலயம் எழும்புமென்பதே அவர் கொடுத்த அடையாளம். சீஷர்களுங்கூட அவர் மரித்து உயிர்த்த பின்புதான் அவர் சொன்னவைகளின் கருத்தை அறிந்தார்கள். நிக்கோதேமிடத்தில் மறுபிறப்பைப்பற்றிப் பேசினார். அது எப்படியாகும் என்று அவர் ஆச்சரியத்தோடு கேட்டபோது, நிக்கோதேமு தானே வாசித்து அறிந்த வெண்கல சர்ப்பத்தை திருஷ்டாந்தமாகவைத்து, மனுஷகுமாரன் உயர்த்தப்படுவதினால்மாத்திரம் விசுவாசிகள் ஜீவனைப்பெற்று மறுபிறப்படையக்கூடும் என்று போதித்தார். அவருடைய சீஷர்கள் ஏன் உபவாசிக்கிறதில்லை என்று யோவானுடைய சீஷர்கேட்டபோது, மணவாளன் **எடுபடும்** நாள்கள்வரும் அப்போது உபவாசிப்பார்கள் என்றார். மறுரூபமலையில் மோசே எலியாவோடு தமது பாடுகளைக்குறித்துப் பேசி, மலையிலிருந்து இறங்கினபோது தமது பாடுகளைக்குறித்து மறுபடியம் சீஷர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்.

கிரேக்கர் தம்மைப் பார்க்க விரும்பினபோது: கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்குமென்று தமது மரணத்தைக்குறித்தே பேசினார். அச்சமயத்தில்: இந்த வேளையிலிருந்து என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? சொல்லமாட்டேன். இதற்காகவே இவ்வேளைக்குள் வந்தேன் என்றார். கிரேக்கர் முதலான புறஜாதிகள் ஜீவன் பெற்றுக் கொள்வதற்கு அவர் மரித்து எழும்பவேண்டும். அது தாமதிப்பது அவருக்குக் கலக்கமாயிருந்தது. வேறொரு சமயத்தில் தமது சீஷர்களைப் பார்த்து: ''பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப் படுகிறேன்" என்றார். அதாவது, ஆவியானவரின் வல்லமையான கிரியை பூமியில் நடக்கவேண்டும். அது இப்போதே நடந்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். ஆனால் நான் மரித்து எழும்பாவிட்டால் ஆவியானவர் அருளப்படமாட்டாரே. நான் மரிக்கும்வரை எவ்வளவோ நெருக்கப்படுகிறேன். என் வேலையைத் தாராளமாய்ச் செய்யக்கூடாமல் கட்டப்

பட்டவனைப் போலிருக்கிறேன். நான் போதிக்க விரும்புவதை யெல்லாம் போதிக்கக்கூடவில்லை. செய்ய விரும்புவதை யெல்லாம் செய்யக்கூடவில்லை. மனுஷரை உயிர்ப்பிக்கும்படி என் ஆவியை அவர்களுக்குக் கொடுக்கக்கூடவில்லை நான் ஸ்தாபிக்க விரும்பும் இராஜ்யம் என் மாதிரியினாலும், உபதேசத்தினாலும், கிரியைகளினாலுமாத்திரம் ஸ்தாபிக்க முடியாது வான அக்கினி அருளப்படவேண்டும். நான் மரித்தால் அல்லாமல் அந்த அக்கினி இறங்காது. ஐயோ, அதுவரை நான் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருக்கிறேனே என்பதாகப் புலம்பினார். வேறொரு சமயம், தாம் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும்பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்ததாகச் சொன்னார். அவர் எருசலேமுக்கு முந்தி நடந்துபோனபோது தமக்கு நேரிடப்போகிற பாடுகளைத் திரும்பவும் சீஷர்களுக்கு அறிவித்தார். மரியாளின் அபிஷேகத்தைத் தமது அடக்கத்துக்கு அடையாளமென்றார். இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் பாத்திரத்தை அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள், இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம் என்று சொல்லி உலகத்தின் இரட்சிப்புக்காகத் தமது மரணம் இன்றியமையாத அவசியமென்று போதித்தார்.

அவர் தோட்டத்தில் தம்மை விட்டு நீங்கும்படி ஜெபித்த பாத்திரமும் இந்தப்பாத்திரமும் ஒன்றுதான் என்று சொல்லுகிறவர்களும் உண்டு. தாம் பானம்பண்ணப் பிரியப்படாத பாத்திரத்தை தமது சீஷர்கள் பானம்பண்ணும்படி கொடுப்பாரா? இதுபோல் அவருடைய மரணத்தைக் காண்பிக்கிற பலகுறிப்புகள் சுவிசேஷத்தில் உண்டு. இவை யாவற்றையும் கவனிக்கும்போது நாம் அறிகிறதென்ன? மரிக்கும்படி அவர் வந்தவரென்பதையும், அதை அவர் மறக்கவில்லையென்பதையும், அது அவருக்குத் தீராத அவசியமென்பதையும், அதுவே உலகத்துக்கு இரட்சிப்பென்பதையும், அவரது இரட்சண்ய ஊழியம் அவருடைய மரணத்தின் மூலமாகத்தான் உலகத்தில் சித்திபெறுமென்பதையும், மரணத்தைக்குறித்துச் சீஷர்களுக்கு விபரமாய்ச் சொன்னாரென்பதையும், மரணத்தை நினைத்து அவர் கலங்கவில்லையென்பதையும், மரணம் சீக்கிரமாய் நிறைவேறும்படி எதிர்பார்த்தாரென்பதையும், வியாழன் இரவில் தமது மரணத்தை நினைவுகூரும்படி இராப்போஜனத்தை அமர்ந்த இருதயத்தோடே நியமித்தாரென்பதையும் காண்கிறோம். ஒரு சமயம் தமது சீஷர்களைப்பார்த்து: சரீரத்தைமாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம் என்றார். மேலும் அவர் தமது மரணத்தைப்பற்றிச் சொன்னபோதெல்லாம் மூன்றாம்நாளில் தாம் உயிரோடெழும்புவதையும் சேர்த்துச்

சொன்னார். அப்படியிருக்க, தாமே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருந்து, மரித்தோரைத் தமது வார்த்தையால் உயிர்ப்பித்தவர், சிலுவையின் மரணத்துக்குப் பயந்து நடுங்கி, இரத்தவேர்வை சிந்திக் கீழேவிழுந்தார் என்று சொல்வது எவ்வளவேனும் வேதசரித்திரத்துக்குப் பொருந்தாது. மேலும் எத்தனையோபேர் யாதொரு கலக்கமின்றி மரித்திருக்க, இரத்தச் சாட்சிகள் மகா சந்தோஷத்தோடு தங்கள் ஜீவனைக் கொடுத்திருக்க, அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதி மரணத்துக்குப் பயந்து சத்தமிட்டு அழுதாரென்று சொல்லுவது எஜமானுக்கு எவ்வளவோ அவமானம்!

அப்படியானால் கெத்செமனேயில் அவர் பட்ட அகோர அவஸ்தைக்குக் காரணமென்ன? அந்த அவஸ்தையை தோட்டத்தில் அவர் செலவிட்ட நேரத்தில்மாத்திரம் காண்கிறோம்? அதில் பிரவேசிக்கும் முன் அவர் எவ்வளவோ சந்தோஷத்தோடிருந்தார். அதைவிட்டுப் புறப்பட்டபோதும் எவ்வளவோ அமைதலோடும் தைரியத்தோடும் புறப்பட்டார். ஆகையால் இடையில் சம்பவித்த அந்த பயங்கரமான போராட்டத்தின் இரகசியத்தை நாம் அறியவேண்டும். அந்தப் போராட்டம் திடீரென அவருக்கு வந்தது. அது மிகவும் அகோரமானது. எத்தனையோ காரியங்களைத் தம் மனதில் அடக்கிக்கொண்ட ஆண்டவர், அந்தப்போராட்டத்தை அடக்கக் கூடாமல் என் ஆத்துமா மரணபரியந்தம் கனதுக்கமடைந் திருக்கிறது, நீங்கள் இங்கே தங்கி என்னோடேகூட விழித்திருங்கள் என்று மகா கோழையான சீஷர்களின் துணையை அவர் தேட நேரிட்டது அவரடைந்த அவஸ்தையின் அகோரத்தை நாம் பூரணமாய் அறிந்துகொள்ளக் கூடாவிட்டாலும், அதற்குக் காரணம் என்னவென்றாவது ஒருவாறு அறியலாம்.

அவர் தோட்டத்தில் பிரவேசிக்குமுன், "இதோ உலகத்தின் அதிபதி வருகிறான்" என்றார். அவர் ஞானஸ்நானம் பெற்றுத் தமது ஊழியத்தில் பிரவேசிக்குமுன் இவன் வனாந்தரத்துக்கு அவரிடத்தில் வந்தான். அவர் நிறைவேற்ற வந்த இரட்சண்ய ஊழியத்தைக் கெடுத்துப்போடும்படி, தேவன் ஏற்படுத்தின பாதையைவிட்டு அவர் விலகிப்போகத்தக்கதாக மகா தந்திரமாய் அவரைச் சோதித்தான். ஆண்டவர் அவனை வெட்கப்படுத்தித் துரத்தினார். அவன் "சிலகாலம் அவரைவிட்டு விலகிப்போனான்" (லூக்கா 4:13). இதனால் பிந்தி அவன் அவரைச் சோதிக்கவில்லை என்று அர்த்தமல்ல. அவருடைய ஊழியநாள்களில் யாரார் அவருக்கு இடறலும் சோதனையுமாயிருந்தார்களோ அவர்களெல்லாரும் இவனுடைய தூதர்களே. ஆனால் நேருக்கு நேரே அவரை வனாந்தரத்தில் சோதித்தபின் மறுபடியும் அவரை எதிர்க்கும்படி தோட்டத்துக்கு வருகிறான். ஆரம்பத்தில் அவன்

தோற்றுப்போனாலும், இந்தக் கடைசி நேரத்திலாவது ஒரு கை பார்க்கவேண்டுமென்பது அவன் துணிவு. அவன் எவ்வாறு ஆண்டவரைச் சோதித்தான் என்பது சொல்லப்படவில்லை. சொல்லப்படாததால் எதையும் சொல்லலாம் என்று நினைப்பது சரியல்ல. மறைவான விஷயத்தில் மனோராஜ்யம்பண்ணுவது நமக்கடுத்ததல்ல. ஆனால் ஒன்று நிச்சயம். ஊழிய ஆரம்பத்தில் பிதாவின் வழியைவிட்டு அவர் விலகிப்போகும்படி சோதித்த சாத்தான், இந்தக் கடைசிநேரத்தில் அவரைச் சூழ்ந்துநிற்கும் அகோரபாடுகளுக்கு அவர் விலக்கித் தப்பிக்கொள்ளத்தக்கதாக அவரைச் சோதித்திருப்பான். ஆகிலும் ஆண்டவர் அவன் சோதனைக்கு அஞ்சினவரல்ல. ஏனென்றால் "உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் **ஒன்றுமில்லை** என்று ஏற்கனவே சொல்லிவிட்டார்.

ஆகையால் ஆண்டவர் அனுபவித்த அகோர அவஸ்தைக்குக் காரணம் சாத்தானுடைய சோதனை என்று சொல்ல ஏதுவில்லை. அவன் வனாந்தரத்தில் மகா தந்திரமாய் அவரைச் சோதித்தபோது அவர் திகிலடையவுமில்லை மிகவும் வியாகுலப்படவுமில்லை. அவருடைய ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொள்ளவுமில்லை. அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் தரையில் முகங்குப்புற விழுந்து ஜெபிக்கவு மில்லை. அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழவுமில்லை. யாதொரு தத்தளிப்பும் கலக்கமுமின்றி அவனைத் துரத்தியடித்தார். அதுபோலவே, உலகத்தின் அதிபதி தோட்டத்தில் வந்தபோதும் அவன் அவரை மேற்கொள்ள வில்லை. ஆகையால் ஆண்டவர் பானம்பண்ணக் கூடாதபடி கலங்கித் தத்தளித்த பாத்திரம் சாத்தானிடமிருந்து வந்ததல்ல. அவருடைய அன்புநிறைந்த பிதா தாமே கொடுத்த பாத்திரம் அது. "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரம்" என்கிறார். அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவது அவருக்கு மிகுந்த வேதனையாயிருந்தது. அவர் ஆத்துமாவுக்கு மரணம் வந்ததுபோலிருந்தது. திகிலும் மகா வியாகுலமும் அவரைச் சூழ்ந்துகொண்டது. எந்த விஷயத்திலும் பிதாவின் சித்தத்திற்கு இதுவரை எதிர்பேசாது பூரணமாய்க் கீழ்ப்படிந்தவர், இந்த நேரத்தில்மாத்திரம் அந்தச் சித்தத்திற்கு உடனே இணங்கக் கூடாமல் தத்தளிக்கிறார். அந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கிப்போகக்கூடுமானால் நீங்கட்டும், ஆகிலும் என் சித்தம் வேண்டாம் பிதாவே என்று சத்தமிட்டு அழுகிறார். பானம்பண்ணுவதே பிதாவின் சித்தமென்று கண்டபோது மனப்பூர்வமாய் அந்தச் சித்தத்துக்குத் தம்மைக் கையளிக்கிறார்.

அந்தப்பாத்திரம் எது? அவர் **பாவமாக்கப்பட்டதே** அந்தப்பாத்திரம். இந்த இரகசியத்தை ஒழுங்காய் நாம்

கவனிக்கவேண்டும். வேதத்துக்குப் பொருந்தாததைச் சொல்லக்கூடாது. வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பாதை வழியாக மாத்திரம் செல்லவேண்டும். பாவத்துக்கும் அவருக்குமுள்ள சம்பந்தமென்ன? இதைப் படிப்படியாகக் கவனிப்போம். அதை மூன்றுபாகமாகப் பிரிக்கலாம். முதலாவது அவர் **பாவ மாம்சத்தின் சாயலாக** வந்தது. இரண்டாவது: மனுமக்களின் **பாவத்தைச் சுமந்தது.** கடைசியில் **பாவமாக்கப்பட்டது.** இந்த மூன்றையும் வரிசையாய் விஸ்தரிப்போம். அவர் உலகத்தில் பிரவேசித்தபோது பாவமற்ற பரிசுத்த பிள்ளையாகப் பிறந்தார். "உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது" என்று தேவதூதன் சொன்னதை நினைத்துக்கொள்க. அவ்வாறு அவர் பரிசுத்தராயிருந்தும் அவர் எடுத்துக்கொண்ட சரீரமோ பாவமாம்சத்தின் **சாயலாயிருந்தது.** "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" *(எபி. 2:14).* சரீர சாயலில் அவரும் நாமும் ஒன்று. ஆனால் நமது சரீரம் பாவமுள்ள சரீரம். அவருடைய சரீரத்தில் பாவமில்லை. ஆகையால் **பாவ மாம்சத்தின் சாயல்** என்பது பலவீனமும் அற்பமுமான மனித சுபாவத்தைக் குறிக்கும். அவருடைய சரீரம் பாவமற்றிருந்தும் நம்முடைய சரீரத்துக்குரிய களைப்பு, தவிப்பு, பசி, தாகம், துக்கம் பலவீனம் முதலான குறைகளுக்குத் தப்பினதல்ல. ஆகையால்தான் பயம், திகில் வியாகுலம், போராட்டம் முதலான விக்கினங்களுக்கு அவர் தப்பக்கூட வில்லை. அவர் பலவீன சரீரத்தில் வந்ததினாலேயே சாத்தான் அவரைச் சோதிக்கக்கூடியவனாயிருந்தான். அவர் பாவ மாம்சத்தின் **சாயலில்** வந்ததினாலேதான் எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்படத்தக்க நிலைமையில் இருந்தார் *(எபி. 4:15).* பாவமற்ற அவர் பலவீனமான நமது சரீரத்தை எடுத்துக்கொள்ளச் சம்மதித்ததே பெரிய கிருபை. நமது மீதுள்ள அன்பினாலே அவ்வாறு சம்மதித்தார். **அவர் பாவமாம்சத்தில்** வந்தார் என்று அப்போஸ்தலன் சொல்லாமல், பாவமாம்சத்தின் **சாயலில்** வந்தார் என்று சொல்லியிருப்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும் *(ரோமர் 8:3).*

இரண்டாவது, அவர் நமது பாவத்தைச் சுமந்தார். பாவம் வேறே, பாவங்கள் வேறே. இரண்டையும் குழப்பக்கூடாது. பாவம் தேவ நோக்கத்துக்கு விரோதமான நிலைமை; பாவங்கள் அந்த நிலைமையிலிருந்து விளையும் பலன்கள். பாவம் வேர்; பாவங்கள் மரம். பாவம் மறைவானது; பாவங்கள் காணக்கூடியவை. பாவத்தை தேவன் காண்கிறார்; பாவங்களை மனுஷர் காண்கிறார்கள். ஒருவன் வெளியே செய்வதையல்ல, அவன் உள்ளத்தின் நிலைமையையே அவர் கவனிக்கிறார். ஆகையால் பாவம் ஒருமையும், பாவங்கள் பன்மையுமல்ல, பாவத்திலிருந்து

புறப்படும் கிரியைகளே பாவங்கள். ஆகையால் கிறிஸ்து உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று ஸ்நானகன் சொல்லாமல், உலகத்தின் **பாவத்தைச் சுமந்து** தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று சொன்னார் *(யோவான் 1:29)*. பாவத்தை வேரோடு பிடுங்கி அழிப்பதே கிறிஸ்து வந்த நோக்கம். தேவன் தம்முடைய குமாரனைப் **பாவங்களைப்** போக்கும் பலியாக அனுப்பி, மாம்சத்திலே **பாவங்களை** ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் என்று அப்போஸ்தலன் சொல்லாமல், **பாவத்தைப்** போக்கும் பலியாக அனுப்பி, மாம்சத்திலே **பாவத்தை** ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் என்று சொல்லியிருப்பதையும் கவனிக்கவேண்டும் *(ரோமர் 8:3)*.

நமதாண்டவர் பாவமாம்சத்தின் சாயலில் வந்ததுமன்றி பாவத்தைச் **சுமக்கிறவராகவும்** வந்தார். அவர் ''உலகத் தோற்றத்துக்கு முன் குறிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி'' என்று பேதுரு சொல்வது தேவனுடைய முன்னறிவைக் குறிக்கும். மனுஷன் பாவஞ்செய்தது முதல் பாவம் நீக்கும் வழியை ஆட்டுக்குட்டியின் பலியினால் முற்பிதாக்களுக்கு அடையாளமாக தேவன் போதித்து வந்தார். அந்தப் பலிகள் பரத்திலிருந்து வரும் தேவ ஆட்டுக்குட்டிக்கு முன்னடையாளமாய் இருந்ததேயன்றி, பாவிகளை இரட்சித்து மெய்ச்சமாதானத்தைக் கொடுக்கத் தக்கவைகள் அல்ல. ஏசாயா தீர்க்கதரிசி **கிறிஸ்துவே** அந்த ஆட்டுக்குட்டி என்று மகா தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார் *(ஏசாயா 53:7)*. இவ்வாறு பலிகளால் முன் குறிக்கப்பட்டவரும், தீர்க்கதரிசிகளால் திட்டமாக அறிவிக்கப்பட்டவருமான அவர் உலகத்தில் வந்தபோது யோவான்ஸ்நானகன் அவரைக் கண்டு: ''இதோ உலகத்தின் **பாவத்தைச் சுமந்து** தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி'' என்று கூறினார். இரட்சகர் மாம்சத்திலிருந்த நாள்களில் அவருக்குள் பாவமில்லாதிருந்தும், அவர் பாவம் அறியாதவராயிருந்தும் உலகத்தின் பாவத்தைச் சுமக்கிறவரா யிருந்தார். பாவத்தைச் சிலுவையிலேதான் சுமந்தார் என்று நினைக்கக்கூடாது. தாம் நெடுகிலும் சுமந்த பாவத்தைச் சிலுவையிலே **தொலைத்தார்**. தமது சரீரத்தை சிலுவையில் அறையப்பட்டுச் சாக எப்படி ஒப்புக்கொடுத்தாரோ, அதுபோலவே அவர் சுமந்து திரிந்த **பாவத்தை** உடலோடு சேர்த்து ஆணியறைந்து நொறுக்கி, ''பாவத்தைத் தமது மாம்சத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.'' பாவத்தை **மன்னித்தார்** என்றல்ல, பாவத்தைத் **தண்டித்தார்** என்னும் கருத்தோடே அப்போஸ்தலன் பேசுகிறார்.

ஆகையால் அவர் தமது ஜீவகாலத்தில் பாவத்தைச் **சுமந்தார்**. சிலுவையிலே பாவத்தைத் **தொலைத்தார்**. அவர் தமக்காக துக்கப்படும்படியான பாவம் அவருக்குள் இல்லா

திருந்தும், மனுக்குலத்தின் பாவத்தை அவர் சுமந்தபடியால், அவர் "அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப் பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமா யிருந்தார்." பாவிகளோடு தம்மை **ஒன்றாக்கி** அவர்களுக்காகப் பரிதபித்து மனதுருகின இரகசியம் அதுதான் அவர் இவ்வாறு நமது பாவத்தைச் சுமக்கிறவராயிருந்தும் அந்நாள்களில் துக்கசாகரத்தில் அமிழ்ந்துபோகவில்லை. மிகுந்த வியாகுலப் பட்டுத் தவிக்கவில்லை. தமக்காக அழுது புலம்பவில்லை. இரத்தம் சிந்தத்தக்கதாக அவர் போராடினதில்லை. அவரோடு கூடியிருந்த பிதாவின் சமுகம் அவரை ஆறுதல்படுத்தினது. மனுஷருக்கு அவர் செய்துவந்த நன்மைகளால் சந்தோஷப் பட்டார்.

மூன்றாவது, அவர் **பாவமாக்கப்பட்டார்**. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் **பாவமாக்கினார்**" *(2 கொரி 5:21)*. அல்லது, அவரைப் **பாவமாகும்படி** செய்தார். அப்போஸ்தலன் சொன்ன இந்தப் பயபக்திக்குரிய வசனத்தை கெத்செமனேத் தோட்டத்துக்குள் கொண்டுவந்தால் அல்லாமல், கிறிஸ்துவின் ஜீவியத்தில் வேறெங்கும் பொருந்துவதாக நமக்குத் தோன்ற வில்லை. இந்த இரகசியமான வசனத்தை நாம் அர்த்தப் படுத்துவதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். காணாததிலே நாம் துணிவாய் நுழையவும் வேண்டாம். கவலையீனமாகப்பேசிச் சத்தியத்தைக் கெடுக்கவும் வேண்டாம். நமதாண்டவர் பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றும்படி உலகத்துக்கு வந்தார். பிதா தமது குமாரனைத் தமது ஆலோசனையின் வழியிலே படிப்படியாக நடத்தினார். முதலாவது ஆலோசனை: அவர் நமது பாவமாம்சத்தின் **சாயலில்** பிறக்கவேண்டும் என்பது. அப்படியே பிறக்கச் சம்மதித்தார். அந்த நிலைமையில் விளைந்த பாடுகளையும், கஷ்டங்களையும், சோதனைகளையும் சகித்தார். அவர் பாவம் செய்யவில்லை, பாவத்தை அறியவுமில்லை. அத்தோடு நமது **பாவத்தை** சுமக்கவேண்டுமென்பது பிதாவின் இன்னொரு ஆலோசனை. அவ்வாறு நமது பாவத்தைச் சுமக்கிற தேவ ஆட்டுக்குட்டியாக சுற்றி நடந்தார்.

கடைசியாக அவர் **பாவம் ஆக்கப்படவேண்டிய** வேளை வந்தது. இதுவே பிதா அவருக்குக் கொடுத்த **பாத்திரம்**. பிசாசல்ல; யூதாஸல்ல, சத்துருக்கள் அல்ல, பிதாவே அந்தக் கசப்பான பாத்திரத்தைக் குமாரனுக்குக் கொடுத்தவர் *(யோவான் 18:11)*. இந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதில் அருமைக் குமாரன் தாமதிக்கிறார். இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணத்தானா வேண்டும் பிதாவே, இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாவென்று கேட்கிறார். திகிலடைகிறார், மிகவும் வியாகுலப்படுகிறார்,

மரணத்துக் கேதுவான துக்கங்கொள்ளுகிறார், முகங்குப்புறத் தரையிலே விழுகிறார். சீஷரண்டை போகிறதும் வருகிறதுமா யிருக்கிறார், சத்தம்போட்டு அழுகிறார், இரத்த வேர்வை சிந்தத்தக்க போராடி ஜெபிக்கிறார். காற்றையும் கடலையும் அமர்த்தினவர், பிசாசுகளைப் பேசாது ஒட்டினவர், மரித்தோரை எழுப்பினவர், குஷ்டரோகத்தைப் பறக்கடித்தவர், பிந்திச் சிலுவைப் பாடுகளையும் மரணத்தையும் சாந்தமாய் சகித்தவர், இந்த நேரத்தில்மாத்திரம் இவ்வளவு அவஸ்தைப்படுவதற்கும், அடிப்பாரின்றிக் கீழே விழுவதற்கும், குத்துவாரில்லாமல் இரத்தம் சிந்துவதற்கும் காரணமென்ன? இது ஆத்தும போராட்டமேயன்றி சரீரப்பாடுகள் அல்ல. "என் ஆத்துமா மரணபரியந்தம் துக்கங்கொண்டிருக்கிறது" என்றார். ஆத்துமாவின் அகோர அவஸ்தையினாலேயே அவருடைய சரீரமும் பலட்சயப்பட்டது.

அவர் **பாவமாக்கப்பட்டதே** அந்தப் பாத்திரம் என்று முன் சொன்னோம். வாக்கியத்தை மறுபடியும் ஞாபகப் படுத்துவோம். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு **பாவம் அறியாத** அவரை நமக்காகப் **பாவமாக்கினார்**" (2 கொரி 5:21). அவர் பாவமாம்சத்தின் **சாயலில்** வந்ததும் போதாது. அவர் நமது பாவத்தைச் **சுமந்து** திரிந்ததும் போதாது. அவர் நமக்காகப் பாவமாக்கப்படவேண்டும். "**பாவம் அறியாதவர்**" என்னும் வார்த்தைகள், "**பாவமாக்கப்பட்டார்**" என்பதை விளக்கிக் காட்டுகின்றன. நம்மில் நீதியில்லை; அவரில் பாவமில்லை. நாம் நீதியாகவேண்டுமானால் அவர் பாவமாகவேண்டும். நாம் நீதியாகிறது வெறும் பேச்சானால் அவர் பாவமானதும் வெறும் பேச்சாகும். நாம் நீதியாகிறது மனோராஜ்யமும் தோற்றமுமானால், அவர் பாவமானதும் மனோராஜ்யமும் தோற்றமுமாகும். நாம் நீதியாவது பொய்யானால் அவர் பாவமானதும் பொய்யாகும். நாம் நீதியாவது மெய்யானால் அவர் பாவமானதும் மெய்யாகும். இது பாவமும் நீதியும் இடமாற்றுதல் செய்வதாகும். பாவம் நம்முடையது; நீதி கிறிஸ்துவுடையது. நாம் அவர்மூலமாய் நீதியாகும்படி, அவர் நமதுமூலமாய் பாவமாகவேண்டியது. அவர் தம்மை பாவிகளோடு **ஒன்றாக்கினதினால்** நமது **பாவத்தோடு** அவர் ஒன்றாக வேண்டியதாயிற்று. நாம் கிறிஸ்துவோடு ஒன்றாவதினாலே அவர் **நீதியோடு** ஒன்றாகும் சிலாக்கியம் நமக்குக் கிடைத்தது. அவர் பாவமானதின் பலனாக வாக்குக் கெட்டாத அகோர அவஸ்தைப்பட்டார். நாம் நீதியாகும் பலனாக வாக்குக்கெட்டாத ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்கிறோம்.

தோட்டத்தில் பிதா அவருக்குக் கொடுத்த பாத்திரத்தில் தாம் பாவமாக்கப்படுவதைக் கண்டு பயந்து தத்தளித்தார். எப்போதும் இடைவிடாமல் பிதாவின் சித்தத்திற்கு உற்சாகமாய்க் கீழ்ப்படிந்தவர் இந்த வேளையில்மாத்திரம் அந்தச் சித்தத்திற்கு

உடனே இணங்கக்கூடாமல் கொடிய அவஸ்தைப்பட்டுக் கலங்குகிறார். இந்தப் போராட்டம் நம் மீதுள்ள அன்பு குறைந்து போனதினால் அல்ல. பிதாவின்மீதுள்ள பிரியம் குறைந்து போனதினாலுமல்ல நம்மை இரட்சிக்கும்படி எவ்வளவு பாடுகள் வேண்டுமானாலும் படுவார். பிதாவை மகிமைப்படுத்தும்படி எவ்வளவு அகோர கஷ்டங்களைச் சகிக்க நேரிடினும் சகிப்பார். ஆனால் அந்தப் பாத்திரத்திலுள்ளதை அவர் பார்த்தபோது கொடிய திகிலும் மிகுந்த வியாகுலமும் அவர் ஆத்துமாவை சூழ்ந்துகொண்டன அதைப்பார்க்கிறார், முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறார். அதை மறுபடியும் பார்க்கிறார், பயந்து நடுங்குகிறார். அதைப் பானம்பண்ணக்கூடாதபடி முகங்குப்புற விழுந்து பலத்த சத்தமிட்டு அழுகிறார். பிதாவே, நான் எப்படி இதைப் பானம்பண்ணுவேன்? உம்மால் எல்லாம் கூடுமே. இதை என்னைவிட்டு நீக்கக்கூடாதா? பாவிகள் இரட்சிக்கப்படும்படி என் ஜீவனைக் கொடுத்துவிடுவேன், ஆனால் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதல்லவோ எனக்குச் சகிக்கக்கூடாத வேதனையாயிருக்கிறது என்கிறார். ஒரு அம்மாள் வியாதிப்பட்டு ஆபத்தான நிலைமையிலிருந்தார்கள். அவர்கள் பிழைக்க வேண்டுமானால் அவர்கள் தேகத்தின் இரத்தத்தைப்போன்ற இரத்தம் அவர்கள் சரீரத்தில் செலுத்தப்படவேண்டுமென்று வைத்தியர் சொன்னார். பரிசோதனை செய்தபோது அந்த அம்மாளுடைய சகோதரன் இரத்தமே ஏற்றதாகத் தெரிந்தது. தன் சகோதரி பிழைக்கும்படி தன் இரத்தத்தைக் கொடுக்க அவர் மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டார். அவர் தேகத்தைக் கீறிப் போதுமான இரத்தம் எடுத்த சமயத்தில் அவர் வேதனைப்பட்டு அலறினார். சகோதரி பிழைக்கவேண்டுமென்கிற **ஆசையும்**, அதற்காகத் தமது இரத்தத்தைக் கொடுப்பதின் **வேதனையும்** அவருக்கிருந்தது. ஆனால் நமதாண்டவர் வேதனைப்பட்டுக் கலங்கினது நமக்காக அவர் சிந்தும் இரத்தத்திற்காக அல்ல. அந்த இரத்தம் சிந்தப் படுவதற்குக் காரணமாயிருந்த **பாவமாக்கப்படுதலுக்காகவே** அவர் அவஸ்தைப்பட்டார்.

பாவமாக்கப்படுதல் என்றால் என்ன? இதற்கு உத்தரவு சொல்லுமுன் நீதியாக்கப்படுவதென்றால் என்னவென்று அறியவேண்டும். பாவி நீதியாக்கப்படும்போது தனக்குச் சொந்தமல்லாத தேவநீதியைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறான். பரிசுத்தர் பாவமாக்கப்படும்போது தமக்குச் சொந்தமல்லாத பாவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியது. அவர் பிறப்பு முதல் கெத்செமனேவரையில் தமக்கு நேரிட்ட சகல சோதனைகளையும் வென்று பாவமற்ற பரிசுத்தராக விளங்கினார். பாவம் அவர் சுபாவத்துக்குப் பொருந்தாததும் அந்நியமுமாயிருந்தது. இந்த நேரத்தில் பாவமாக்கப்படும் கசப்பான பாத்திரத்தில் அவர் பானம்பண்ண வேண்டியதாயிற்று, பாவத்தை அறியாதவர் அதன்

கொடிய பயங்கரத்தைத் தமது ஆத்துமாவில் அறிய நேரிட்டது. இதுவரை மற்றவர்களிடத்தில் பாவத்தைக்கண்டு அதற்காகப் பரிதபித்தார். தாம் மற்றவர்களிடத்தில் கண்டு அஞ்சின பாவம் இந்த நேரத்தில் அவரையே ஆண்டுகொண்டது. ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு சக்திகள் சந்திக்கும்போது முழங்கி இடி இடிக்கிறது. ஒன்றுக்கொன்று நேர்விரோதமான பரிசுத்தமும் பாவமும் அவரில் சந்தித்தபோது சகிக்கமுடியாத திகிலும் வியாகுலமும் அவர் ஆத்துமாவை ஆண்டுகொண்டன. இடிவிழுந்து மனுஷன் சாவதுபோல அவர் ஆத்துமா மரணபரியந்தம் துக்கத்தால் நிறைந்தது. அவரடைந்த அகோர அவஸ்தையை பிதா தவிர வேறு யாரும் அறியமுடியாது. பிறப்புமுதல் குஷ்டரோகியானவர்களை தூரமான ஓரிடத்தில் வைத்திருந்தால் அவர்கள் சாப்பிடுவதும் சந்தோஷப்படுவதுமா யிருப்பார்கள். பூரண தேகசுகம் எப்படிப்பட்டதென்று அவர்கள் அனுபவித்ததில்லை. ஆனால் சுத்தமான ஆகாயத்திலும் புஷ்பங்கள் நடுவிலும் வளர்ந்த தேகசுகமுள்ள ஒருவனை அந்தக்குஷ்டரோகிகள் நடுவில் வைத்தால் அரைக்கால் நிமிஷம் அங்கே இருக்கச் சகிக்கமாட்டான். பலவந்தமாக அவனை இருக்கும்படி செய்தால் அந்தத் துர்நாற்றத்தைச் சகிக்கக்கூடாமல் செத்தேபோவான். நாமே அந்தக் குஷ்டரோகிகள். பிறப்புமுதல் நாம் பாவத்தோடு சம்பந்தப்பட்டு வளர்ந்ததால் பாவக்குஷ்டம் நமக்கு இயற்கையாகிவிட்டது. பாவமே அறியாத ஆண்டவர் பாவமாக்கப்பட்டபோதோ அவர் பட்டபாடு கொஞ்சமல்ல.

பாவிக்குப் பிணையாளியாக அவர் வந்ததால் அவன் பாவத்தை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டியது தேவநீதியா யிருந்தது. பிதா இதுவிஷயத்தில் குமாரனுக்குப் பட்சபாதம் காட்டமுடியாது. கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் நாம் நீதிமான்களாவது தேவ நீதியானால், பாவிகளோடுள்ள ஐக்கியத்தால் அவர் பாவமாக்கப்படுவதும் தேவநீதியே. ''கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகிப் பாடுகளுக் குட்படுத்தினார், அவர் தமது ஆத்துமாவைக் குற்ற நிவாரணப் பலியாக ஒப்புக்கொடுத்தார்.'' என்பதின் கருத்து அதுவே. மெய்யாகவே "கிறிஸ்து நமக்காகச் சாபமானார்." மெய்யாகவே "அவர் நமக்காகப் பாவமானார்." மெய்யாகவே "அவர் நமக்காக மரணமானார்." இந்தச்சாபமும் பாவமும் மரணமும் அவருடைய ஆத்துமாவைப் பிடித்துக்கொண்டு அவரை வாதித்தது. ஆத்தும போராட்டம் தேக வேதனையைவிடப் பயங்கரமானது. ஆத்துமா சந்தோஷமாயிருக்கும்போது தேகத்தின் பாடுகளை மனுஷன் தாங்கிக்கொள்வான். ஆத்துமா முறிந்து விழுந்தால் தேகத்தின் கதி என்னவாகும்? பாவத்தோடு சம்பந்தப்படும் அருவருப்பு கிறிஸ்துவின் ஆத்துமாவுக்குத் தாங்கக்கூடாத துயரத்தை உண்டாக்கிற்று. அவர் நமது பாவத்தை ஏற்றுக்கொண்டு

அந்தப்பாவத்தோடு சம்பந்தப்படுவதே அவர் பானம்பண்ணக் கூடாமல் அவஸ்தைப்பட்ட **பாத்திரம்.** அவர் பாவத்தை ஏற்றுக் கொண்டபோது, பாவத்தின் அருவருப்பையும் பாவத்துக்குரிய ஆக்கினையையும், பாவத்தால் விளைந்த சகல கேடுகளையும் அவர் அறியவேண்டியதாயிற்று. பிதா குமாரனில் அன்புள்ளவராயிருந்தும் நீதியின்படி அவர் முகம் அவருக்கு மறையவேண்டியதாயிற்று. இவையாவும் சேர்ந்து பலத்த காரிருள்போல் அவர் ஆத்துமாவைச் சூழ்ந்து கொண்டது. சாக்கடையில் விழுந்து அமிழும் பிள்ளையைத் தகப்பன் தூக்கவேண்டுமானால், அவன் தானும் சாக்கடையில் இறங்கத்தான் வேண்டும். பிள்ளைதான் அவனுக்கு அருமையேயல்லாமல், துர்நாற்றமுள்ள சாக்கடையும் அவனுக்கு அருமையாகுமோ? நமதுமீதுள்ள அன்பினால் நாம் அமிழ்ந்திருந்த பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலும் ஆண்டவர் இறங்கச் சம்மதித்தார். நாம் அவருக்கு அருமையேயன்றி நமது பாவமும் அவருக்கு அருமையாகுமோ? அப்படியிருந்தும் பாவமாக்கப்படச் சம்மதித்து பிதாவின் சித்தத்திற்குத் தம்மைக் கையளித்தார். இவ்வாறு பாவமாக்கப் பட்டதால் அவர் பாவியானாரோ? அல்ல. பாவம் அவருக்குள் ளிருந்து வந்திருந்தால் மாத்திரம் அவர் பாவியாகக்கூடும். அவருக்குள் பாவமிருந்தால் அவர் **பாவமாக்கப்**படவேண்டிய தில்லை. அவருக்குள் பாவமிருந்தால் பாத்திரத்தைப் பானம் பண்ண அவர் இவ்வளவு அவஸ்தைப் படவேண்டியதென்ன? அவருக்குள் பாவமிருந்தால் நமது பாவத்தை அவர் தொலைப்பதெப்படி? அவர் பரிசுத்தராயிருந்தும் நமது பாவத்தைத் தமது பாவம்போல் ஏற்றுக்கொண்டதே இந்த அகோர அவஸ்தைக்குக் காரணம்.

"பாவிகள் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவதும்" அவர் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தோடு சம்பந்தப்பட்டதே. ஏனென்றால் ஆண்டவர் அதை **வேளை** என்று சொல்லுகிறார். பரிசுத்தமாகிய அவர் பாவமாக்கப்பட ஒப்புக்கொடுத்ததுமுதல் சிலுவையின் மரணபரியந்தம் அவ்வேளைக்குள்ளேயே இருந்தார். சகல ஜனங்களுக்கு முன்பாக, சத்துருக்கள் தங்களை தேவனுடைய ஊழியக்காரரென்றும், அவரையோ தேவனுக்கு ஆகாதவரென்றும் சொல்லி, தாங்கள் அவரைப் பாடுபடுத்திக் கொல்லுவது நியாயமெனப் பேசினார்கள். இவன் தேவனை நம்பியிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை விடுவிக்கட்டும் என்று சபதம் கூறினார்கள். இன்னும் அநேக நிந்தையான வார்த்தைகளைச் சொல்லி அவரைத் தூஷித்தார்கள். ஒரே நிமிஷத்தில் அவர்கள் வாயை அடக்க அவரால்கூடும். அவர்களெல்லோரையும் தமது பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழச்செய்யக்கூடும். அவர் நமக்காகப் பாவமாகி நமது சாபத்தைச் சுமக்கும் இந்த **வேளையில்,** மறுவார்த்தை பேச அவருக்கு

வாயேது? சகல அநியாயத்தையும் அக்கிரமத்தையும் மனதாரச் சகிக்கவேண்டும். அவர்களுடைய வேளைக்கும் அந்தகாரத்தின் வல்லமைக்கும் பாவியைப்போல் தம்மை ஒப்புக்கொடுத்தபின்பு, தம்மை நீதிமானாக்கும்படி பிரயாசப்படுவது எப்படி?

அவர் சிலுவையில் அறைப்பட்டபோது, அவர் தம்மோடு சேர்த்துக்கொண்ட பாவமும் சாபமும் மரணமும் அவரோடுகூட அறையப்பட்டு ஆக்கினையடைந்தன. இது தேவன் தமது குமாரனைக்கொண்டு செய்த மகத்தான வேலை. இதைக்குறித்து பவுல் "தேவன் தமது குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் **பாவத்தைப்**போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்'' என்கிறார். **அவருடைய மரணமே அவைகளுக்கும் மரணமாயிற்று.** பாவத்தைத் தம்மோடு ஒன்றாக்கி, மரணத்துக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தபோது அந்தப்பாவமும் மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. தேவனுக்கும் நமக்கும் பகையாக நடுவே நின்ற **பாவம்** கிறிஸ்துவின் மரணத்தால் தொலைந்தது. ஆகையால் கிறிஸ்துவோடு ஐக்கியப்படுகிறவர்கள் பாவாக்கினைக்குத்தப்பி தேவநீதியைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அவரோடுள்ள ஐக்கியம் அவருடைய மரணத்தையும், அவர் பாவத்தைத் தொலைத்ததையும், அவருடைய உயிர்த்தெழுதலின் புதிய ஜீவியத்தையும் நமக்குச் சொந்தமாக்குகிறது. அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கினதுபோல் நாம் நம்மை அவரோடு ஒன்றாக்கினால்மாத்திரம் அவர் சம்பாதித்த மகத்துவமான இரட்சிப்பு நமக்குச் சொந்தமாகும்.

தேவன் தமது குமாரன்மூலமாய் உண்டுபண்ணின இந்த இரட்சண்ய ஒழுங்கைத் தற்காலக் கொள்கைக்காரர் ஒப்புக் கொள்ளுகிறதில்லை. கிறிஸ்து நமது பாவத்துக்காகப் பலியானார் என்பது குரூரமான உபதேசமாயிருக்கிறதென்றும், தேவன் அவ்வாறு செய்தாரென்று சொல்வது அவர் **அன்புக்கு** விரோதமென்றும், அப்போஸ்தலர் தங்கள் அறியாமையினால் அவ்வாறு நிருபங்களில் எழுதினார்களென்றும் சொல்லுகிறார்கள். பாவம் பாவமாயிருக்கும்வரை, நீதியுள்ள தேவனுடைய தன்மை பாவத்துக்கு விரோதமாயிருக்கும்வரை, **பாவம் நீக்கப்படாமல்** தேவனுக்கும் நமக்கும் ஐக்கியம் எப்படி உண்டாகும்? தேவன் அன்புள்ளவர், ஆகையால் பாவப்பலியை அவர் விரும்ப மாட்டார் என்கிறார்கள். தேவன் அன்புள்ளவராயிருந்ததினாலே தான் பாவம் நீங்கும் வழியைக் கிருபையாய் உண்டாக்கினா ரென்று அப்போஸ்தலர் சொல்லுகிறார்கள். யார் சொல்லை நம்புகிறது? எந்த உபதேசம் நமக்கு மன்னிப்பையும் சமாதானத்தையும் கொடுக்கிறது? தேவன் அன்புள்ளவரென்று சொன்னாகளேயன்றி நாம் பாவமுள்ளவர்களென்று இவர்கள்

சொல்லுகிறதில்லை. இவர்கள் தங்கள் பாவத்தை மறுதலிப்பதினால் அன்புள்ள பிதா கிருபையாய் உண்டுபண்ணின பாவநிவாரணப் பலியையும் மறுதலிக்கிறார்கள். ''நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." *(1 யோவான் 4:10).* ஆகையால் கிறிஸ்துவின் பாவநிவாரணப்பலியை மறுதலிக்கிறவர்கள் அந்த மரணத்தின்மூலமாய் விளங்கின. தேவ அன்பையும் மறுதலிக்கிறார்கள். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டு, அந்தப் பாவத்தைத் தம்மோடுசேர்த்துச் சிலுவையில் கொன்றதினால், அந்த அன்புள்ள மீட்பரை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும் போது அவர் மூலமாய் நாம் தேவனுடைய நீதியாகிறோம்.

இவ்வாறு சாத்தான் அவர் குதிங்காலை நசுக்கினான், அவரோ அவன் தலையை நசுக்கினார். அவன் அவர் சரீரத்தைக் கொன்றான், அவரோ தமது சரீர மரணத்தினால் அவனை முழுவதுமாய் அழித்தார். அவர் சரீரத்தை நொறுக்கினதே சாத்தான் அவர்மேல் அடைந்த ஜெயம். அவர் சிலுவையின் மரணபரியந்தம் தேவசித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்ததே அவர் சாத்தான்மேல் அடைந்த ஜெயம். அவர் சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கினது தேவனாலும் மனுஷராலும் அவர் கைவிடப்பட்டதுபோல் தோன்றினாலும், அந்த மரணத்தின் மூலமாய் அவரடைந்த நிகரற்ற வெற்றியை அறிந்தவர்கள் யார்? பிசாசு, பாவம், உலகம், சாபம் அவர் ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்டு, பிதா அவருக்கு ஏற்படுத்தின பாதையை விட்டு அவர் விலகிப்போகும்படி எவ்வளவோ பாடுபடுத்தியும், அவர் கடுகளவாவது விலகாமல், சிலுவையின் மரணபரியந்தம் பூரணமாய்க் கீழ்ப்படிந்து தேவசித்தத்தை நிறைவேற்றினதினாலே அவைகள் அல்ல, அவரே அவைகளை ஜெயித்தார். அவர் உயிர்த்தெழுந்தபின்புதான் அவரடைந்த ஜெயம் எவ்வளவு மகிமையுள்ளதென்று மற்றவர்களுக்குத் தெரியவந்தது.

30

யூதாஸ் காரியோத்

Judas Iscariot

ஒருவனுடைய குணத்தை ஒருவாறு அவன் பேச்சால் அறியலாம். அப்போஸ்தலரில் சிலருடைய ஜீவியம் அவர்கள் பேச்சு செய்கையால் காணப்படுகிறது. யூதாஸ் கிறிஸ்துவோடு மூன்று வருஷங்கள் தங்கினபோதிலும் அவன் தாராளமாய்ப் பேசினவனல்ல. ஆண்டவர் பாடுபட்ட வாரத்தில் அவன் பேச்சு சுருக்கமாய்த் தொனிக்கிறது. ஆகிலும் அவைகள் அவன் துரோகத்தைச் சம்பந்தபட்ட பேச்சேயன்றி அவன் உள்ளந்தரங்கத்தைக் காட்டுகிறவைகள் அல்ல. ஆகையால் அப்போஸ்தலனாயிருக்கும்படி அழைக்கப்பட்ட யூதாஸ் எப்படித் துரோகியானான் என்று ஆச்சரியப்படுகிறோம்.

யூதாஸ் ஆண்டவரைக் காட்டிக்கொடுத்தான். ஆண்டவர் யூதாஸைக் காட்டிக்கொடுக்கவில்லை. அவன் காரியமுழுவதும் அவருக்குத் தெரியும் ஆகிலும் கடைசிவரை அவர் அவனைக் காப்பாற்றினார். அவனைப்பற்றி ஆண்டவர் பேசினதும் கடைசி வாரத்திலேயே. அவன் துரோகத்தைச் சீஷர்களுக்கு வெளிப் படுத்த மனதில்லாமல் மறைத்தே பேசினார். சீஷர்களுக்கும் அவரைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்று கடைசிவரை தெரியாது. யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவ னென்று அவர் திட்டமாய்ச் சொல்லியிருந்தால் மேல் வீட்டறையில் வைத்தே அவன் பிராணனை வாங்கியிருப்பார்கள். பேதுருவின் பட்டயத்துக்கு அவன் தப்பியிருக்கமாட்டான். அவ்விதமான ஆபத்துநேரிட ஆண்டவர் இடங்கொடுக்கவில்லை. தம்மை ஒருவன் காட்டிக்கொடுப்பானென்று பொதுவாய்ச் சொன்னாரேயன்றி அவன் இன்னானென்று திறந்து சொல்லவில்லை. சுவிசேஷகரும் யூதாஸைக் காட்டிக் கொடுத்தவனென்றும், துரோகியென்றும், திருடனென்றும், சாத்தான் அவனுக்குள் பிரவேசித்தானென்றும் சொன்னார்களே யன்றி, அவன் எப்படித் துரோகியானானென்று விவரித்துச்

சொல்லவில்லை. இதனால் பலரும் பலவிதமாய் அபிப்பிராயங் கொள்ள இடமாயிற்று.

இது யோசனை மிகுந்த காலம். தேவகாரியங்களை மனுஷர் அதிகமதிகமாய் யோசிக்கிறார்கள். அப்படி யோசிப்பது நல்லதுதான். அநேகர் தங்கள் சுயயோசனையால் கெட்டுப் போகிறார்கள். ஆவிக்கேற்றபடி யோசிப்பவர்களுக்கு தேவன் தமது இரகசியங்களை வெளிப்படுத்துகிறார். ஆண்டவர் சரீரத்திலிருந்த நாள்களில் சீஷர்கள் அறிந்திருந்ததைப்பார்க்கிலும் அவர் மகிமையடைந்தபின்பு அதிகமாய் அறிந்துகொண்டார்கள். அதுமுதல் காலத்துக்குக் காலம் ஆவியினால் போதிக்கப்பட்ட பக்தர்கள் தேவனுடைய இரகசியங்களை ஆழமாய் ஆராய்ந்து மேலான சத்தியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தேவவசனத்தை மொத்தமாய்க் கவனித்து ஒன்றுக்கொன்று பழுதுவராதபடி போதிக்கவேண்டும்.

யூதாஸின் பாவம் நமக்கு விளங்கியும் விளங்காமலு மிருக்கிறது. பரிசேயரின் பகையை அறிந்துகொள்ளலாம். ஆசாரியரின் மூர்க்கத்தை அறிந்துகொள்ளலாம். ஏரோதியரின் எரிச்சலை அறிந்துகொள்ளலாம். பிலாத்துவின் தத்தளிப்பை அறிந்துகொள்ளலாம். யூதஜாதியின் உறுதியற்ற குணத்தை அறிந்து கொள்ளலாம். பேதுருவின் கோழைத்தனத்தை அறிந்து கொள்ளலாம். யூதாஸின் துரோகத்தை அறிவது கஷ்டம். அப்போஸ்தலனாயிருக்கும்படி அழைக்கப்பட்டவன் அன்பின் அவதாரத்தைக் காட்டிக்கொடுக்கத் துணிந்த காரணமென்ன? மற்றவர்கள் அவரை இன்னாரென்று அறியாமல் பகைத்தார்கள். அவரோடு மூன்று வருஷம் கூடவேயிருந்த யூதாஸ் அவரை பகைத்த காரணமென்ன? ஆண்டவர் அவனைத் திரும்பத்திரும்ப எச்சரித்தும் அவன் உணராமல் போனதென்ன? அவன் வெள்ளிக்காசை வாங்கினபின்பு ஆண்டவர் குனிந்து அவன் கால்களைக் கழுவினாரே; அப்பொழுதாகிலும் அவன் மனங்கசந்து அழாமற்போனதென்ன? அவன் துரோகம் இருட்டில் நடந்ததுபோலவே அதன் காரணமும் நமக்கு இருட்டாகவே யிருக்கிறது.

கிறிஸ்து அவனைத் தெரிந்துகொண்டதுமுதல் எந்தக் காரியத்திலாவது அவனை வெறுப்பாய் நடத்தினாரோ? அவனுக்கு ஏதாவது தீமை செய்தாரோ? அல்லது உடன் அப்போஸ்தலர்கள் அவனுக்கு ஏதாவது தீமை செய்தார்களோ? அப்படிச் செய்யப்பட்டதாக நாம் வாசிக்கிறதுமில்லை, செய்யப்பட்டதுமில்லை. இவ்வளவு பகைக்கும் துரோகத்துக்கும் அவனை ஏவிவிடும்படி ஆண்டவர் பட்சத்தில் யாதொரு காரணத்தையும் காணோம்,

எஜமான் இராமுழுவதும் ஜெபம்செய்து தமக்கு அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டார். அவர்களில் **யூதாஸ்** ஒருவன். அவர்களை அவர் அழைத்தபோது எல்லாவற்றையும் விட்டு வந்ததுபோல இவனும் தன் வியாபாரத்தை விட்டு வந்தான். அவர்கள் அவரை மேசியாவாகப் பற்றிக் கொண்டதுபோல இவனும் பற்றிக்கொண்டான். அவர்கள் அவரில் அன்பு வைத்ததுபோல இவனும் அன்புவைத்தான். அவர்கள் பிரசங்கித்ததுபோல இவனும் பிரசங்கித்தான். அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தின் தன்மையை அறிந்து கொள்ளாததுபோல இவனும் அறிந்துகொள்ளவில்லை. அவர்கள் வரவரப் பூரணப்படக்கூடுமென்று அவர் நம்பியிருந்ததுபோலவே இவனையும் நம்பியிருந்தார். அவர்களுக்குள் உலக சிந்தையிருந்ததுபோலவே இவனுக்குள்ளும் இருந்தது. யூதாஸ் அவர்களைப்பார்க்கிலும் தாழ்ந்தவனல்ல. சொல்ல வேண்டுமானால் அவர்களைப்பார்க்கிலும் அவன் சமர்த்தனாகவே விளங்கினான். அவர்கள் அவனை மதித்து வந்தார்கள். அப்படியிருக்க **துரோக சிந்தை** அவனுக்குள் வந்த காரணமென்ன?

இவன் ஆண்டவரைக் காட்டிக்கொடுத்த காரணம் **பொருளாசை**யென்பது சர்வ அபிப்பிராயம். அந்தக் காரணத்தைப் பூராவாய் ஏற்றுக்கொள்ளாதவர்களும் உண்டு. முப்பது வெள்ளிக்காசு ஒரு பெரிய காரியமா? அதை வேறுவிதமாய் சம்பாதிக்க அவனுக்குத் திறமையில்லையா? இந்த முப்பது வெள்ளிக்காகவா எல்லாவற்றையும்விட்டு மூன்று வருஷமாய் அவரோடிருந்தான்? அவரைப் பின்செல்லாதிருந்தால் இதைப்போல் எத்தனையோ முப்பது வெள்ளியை அவன் சம்பாதித்திருக்கமாட்டானோ? அவன் பொருளாசை யுள்ளவனானால் இந்தத் தரித்திரர் கூட்டத்தில் ஏன் சேர்ந்தான்? குற்றமில்லாத ஆண்டவரைக் காட்டிக்கொடுத்தா இந்த அற்பப்பொருளை அவன் சம்பாதிக்கவேண்டும்? மேலும் முப்பது வெள்ளி அடிமையின் கிரயமாயிற்றே. ஆகையால் இவ்வளவு அற்பமான பொருளுக்கு ஆசைப்பட்டு ஆண்டவரைக் காட்டிக்கொடுத்தானென்று சொல்லுவது சரியா? மேலும் அவன் பொருளாசையுள்ளவனானால் அந்தப்பணத்தைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளாமல் பிந்தி அதை ஆலயத்தில் எறிந்து விட்டதேன்? ஆகையால் பொருளாசையே காரணம் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறவர்களுமுண்டு.

வேறு சிலர்: அவன் உள்ளத்தில் மறைந்திருந்த **பொறாமையே** அதற்குக் காரணம் என்பார்கள். பன்னிருவரில் தான் சரியாய் நடத்தப்படவில்லையென்று ஆண்டவர்மேல் எரிச்சலடைந்தானாம். இவர் என்னைக் கொஞ்சமும்

மதிக்கவில்லை. இவர்கள் யார்? நான் யார்? இவர்கள் கலிலேயா நாட்டார்; நான் யூதேயா தேசத்தான். இவர்கள் செம்படவர்கள்; நானோ வியாபாரி. இவர்கள் அறிவீனர்; நான் கல்விமான். என் திறமையும் சமர்த்தும் இவர்களுக்குண்டா? நானும் இதுவரை வாய் பேசாமல் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். எனக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை இவர் எனக்குக் கொடுக்கவில்லை. என் வேலையைப்போல் முக்கியமான வேலை எது? நான் ஒருவன் இல்லாவிட்டால் இவர்கள் பிழைப்பதெப்படி? பணம் யார் கைவசம் இருக்கிறது? இவர்களுக்காக செலவு செய்கிறவன் நானல்லவா? நான் பணத்தை வைத்திருப்பதினிமித்தம் இவர்கள் எனக்குத் திருட்டுப்பட்டம் கொடுத்தார்களேயன்றி என்னை மேன்மைப்படுத்தவில்லையே. பதட்டங் கொண்ட சீமோன் கன்மலையாம். அவனே கூட்டத்துக்குத் தலைவனாம். செபெதேயுவின் மக்கள் இடிமுழக்கங்களாம்; நாத்தான்வேல் கபடற்ற உத்தமனாம். ஆயக்காரன் அவருக்குப் பிராண சிநேகிதனாம். அந்திரேயாவும் பிலிப்பும் கிரேக்கருக்குத் மொழிபெயர்ப்பாளர்களாம். எனக்கோ ஒரு மேன்மையையும் காணோம். என்னிடத்தில் அவர் பேசுகிறதையும் காணோம். நான் ஏன் அவரோடு பேசப்போகிறேன்? யவீரின் வீட்டுக்குள்போனால் முதல் மூன்றுபேர்மாத்திரம் போகவேணுமாம். மறுரூபமாக வேண்டுமானால் அந்த மூன்றுபேர்மாத்திரம் கூடயிருக்க வேணுமாம். ஏதாகிலும் விசேஷம் சொல்லவேண்டுமானால் அந்த மூன்றுபேருக்குத்தான் சொல்லவேணுமாம். என்னையோ எண்ணப்படுவதற்கு இவன் எம்மாத்திரமென்று தள்ளிவிட்டார். இங்கே என்னைவிடப் பெரியவன் யார்? அதையும் சீக்கிரத்தில் காண்பிக்கிறேன். இவர்கள் பெருமையெல்லாம் சிறுமையாகும் நாள் வருகிறது. மேய்ப்பன் பிடிபட்டால் ஆடுகள் என்னசெய்யும் பார்ப்போம் என்று தன் மனதில் **பொறாமை**கொண்டு காட்டிக்கொடுத்தான் என்கிறார்கள்.

வேறு சிலர்: யூதாஸ் **ஏமாற்றப்பட்டதால்** காட்டிக் கொடுக்கத் துணிந்தான் என்பார்கள். அதாவது இஸ்ரவேலுக்குத் திரும்ப இராஜ்யத்தை மீட்டுக் கொடுப்பாரென்று நம்பி நான் இவரைச் சேர்ந்தேன். இவர் நடப்பித்த அரிய காரியங்களும், ஜனத்திரள் இவரைப் பின்சென்றதும் என் நோக்கத்துக்கு அனுகூலமாகவே தோன்றின. இராஜ்யமென்றும், ஆளுகையென்றும், பன்னிரண்டு சிங்காசனங்களென்றும் இவர் அடிக்கடி சொல்லியுமிருக்கிறார். அதில் பிரதான இடம் எனக்குக் கிடைக்குமென்பது என் கணிப்பாயிருந்தது. ஆனால் வரவரக் காரியங்கள் என் எதிர்பார்த்தலுக்கு நேர் விரோதமாயிருக்கின்றன. அதிகாரிகளையும் பகைத்துக்கொண்டார். அவர்கள் இவரைக் கொல்லவே தீர்மானித்திருக்கிறார்கள். இவர் பவனி வந்தபோது

திரள்கூட்டம் இவரை ஆர்ப்பரித்துப் போற்றினது. தாம் இராஜாவாகிறதற்கு அதைப்போல் ஏற்ற சமயம் இருந்ததில்லை. இவரோ அதிகாரிகளைக் கண்டித்துப்பேசி முழுப்பகையைச் சம்பாதித்துக்கொண்டார். இவர் சாகப் போகிறாரேயன்றி இராஜ்யமா ஸ்தாபிக்கப்போகிறார்? இவருடன் இருந்ததில் இனிப்பிரயோஜனம் என்ன? எனக்கும் ஆபத்து வருமேயன்றி வேறு பலனில்லை. ஆகையால் என்னை ஏமாற்றினவரை நான் காட்டிக்கொடுத்துத் தப்புவதே சரியென்று தீர்மானித்தான் என்கிறார்கள்.

வேறு சிலர் தப்பிக்கொள்ளக்கூடிய சக்தி ஆண்டவருக்கிருந்ததால் அவரைக் காட்டிக்கொடுத்தான் என்கிறார்கள். அவர் நாசரேத்து மலைச்சிகரத்திலிருந்து தப்பிக்கொள்ளவில்லையா? யூதர் பலதரமும் அவரைக் கல்லெறியும்படி எத்தனித்தபோது அவர்கள் கைக்கு அவர் தப்பிக்கொள்ளவில்லையா? இந்தச் சமயத்திலும் அவர் தப்பிக்கொள்ளமாட்டாரா? அவ்வாறு அவர் தப்பிக்கொள்ளும் பட்சத்தில், வாங்கின பணமும் தனக்கு இலாபமாகும், தன்பேரில் குற்றமுமில்லாமற்போகும் என்று நினைத்துக் காட்டிக் கொடுத்தான் என்கிறார்கள். இவன் அவ்வாறு நினைக்கக் கொஞ்சமும் இடமில்லை. ஏனென்றால் தாம் காட்டிக் கொடுக்கப்படுவதையும், அதன்மூலமாய்ப் பல பாடுகள் பட்டுச் சிலுவையில் அறையப்பட்டு மரிப்பதையும் ஆண்டவர் திரும்பவும் திரும்பவும் வெகுதிட்டமாகச் சொல்லியிருந்தார். அது யூதாசுக்கும் நன்றாய்த் தெரியுமாதலால் அவர் பிடிபட்டபின் தப்பிக்கொள்வாரென்று அவன் நினைக்க வழியில்லை.

இவனுக்கு அனுசரணையாகப் பேசுகிற இன்னொரு பட்சத்தார் என்ன சொல்லுகிறார்கள் என்றால்: கிறிஸ்து மானிடரை இரட்சிப்பதற்கு அவர் காட்டிக்கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று இவன் அறிந்து, அந்தத் தேவதீர் மானத்தை நிறைவேற்றும் ஊழியனாகத் தன்னை ஒப்புவித்து அவரைக் காட்டிக் கொடுத்தானாம். அவன் நமது இரட்சிப்புக்குக் காரணமாயிருந்தபடியால் நாம் அவனைக் குற்றப்படுத்தாமல் புகழ்ந்து பேச வேண்டியதே நியாயம் என்கிறார்கள். அப்படியானால் இவனைமாத்திரமல்ல, அவரைச் சிலுவையில் அறைந்த அதிகாரிகளையும், ரோமப்போர்ச் சேவகர்களையும், பிலாத்துவையும் நமது இரட்சிப்பின் கருவிகளென்று போற்றுதல் நியாயமே. "எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப் படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோவென்றும், அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்குமென்றும்'' ஏஜமான் சொல்லியிருக்க நாம் அவனைப் போற்றுவதெப்படி? மேலும் தம்மைக் காட்டிக்கொடுக்கும்படி ஆண்டவர் அவனைத் தெரிந்து

கொள்ளவுமில்லை, அவரைக்காட்டிக் கொடுப்பதற்காக அவன் அப்போஸ்தலர் கூட்டத்தைச் சேர்ந்தவனுமல்ல.

இதுவரை பலருடைய அபிப்பிராயங்களைக் கவனித்த நாம், முதலாவது சுவிசேஷத்தில் அவனைக்குறித்து நாம் வாசிக்கிறதென்னவென்று பார்த்துப்பின்பு அவன் ஆண்டவரைக் காட்டிக்கொடுத்த உள்ளான இரகசியம் எதுவாயிருக்கலாம் என்பதை விசாரிப்போம்.

கிறிஸ்து லாசருவை உயிரோடெழுப்பினபோது யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசப்பற்றுக் கொண்டனர், இதைப்பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அறிந்து அவரை எவ்விதத்திலும் கொலைசெய்யத் தீர்மானித்தார்கள். அவருடைய வேளை இன்னும் வராதபடியால் அவர் அவர்களுடைய கைக்கு விலகியிருக்கும்படி விரும்பி எருசலேமுக்கு வடக்கே இருபதுமைல் தூரத்திலுள்ள எப்பிராயீம் ஊருக்குப்போய் அங்கே தங்கினார். பஸ்காப்பண்டிகை வர ஆறுநாளுக்கு முன்னே எருசலேமுக்குப் போகப் புறப்பட்டார். திரளான ஜனங்கள் ஆடல்பாடல்களுடன் பண்டிகைக்குப் போனார்கள். ஆண்டவரோ ஆழ்ந்த சிந்தையுள்ளவராய் மிகுந்த அமைதலுடன் வழி நடந்தார். சீஷர்கள் மகா பயபக்தியுடன் அவருக்குப்பின் நடந்தார்கள். அவர் திருமுகத்தில் பயத்தின் தோற்றமல்ல ஜெயகெம்பீரப் பார்வை விளங்கினது. இச் சமயத்தில் தமக்கு நேரிடப்போகிற பாடுகளை மறுபடியும் சீஷர்களுக்குச் சொன்னார். எத்தனையாய்ப் போதித்தாலும் உணராத சீஷர்கள் உலகராஜ்யத்தையும் அதில் பிரதான இடங்களையும் இச்சமயத்தில் எதிர்பார்த்தார்கள். ஆண்டவர் அவர்களைக் கடிந்துகொள்ளாமல் மிகப்பொறுமையுடன் தமது இராஜ்யத்தின் தன்மையைத் திரும்பவும் விளக்கிக்காட்டினார்.

அவர் எரிகோவைச் சமீபித்தபோது பர்திமெயு குருடனுக்குப் பார்வை கொடுத்தார். ஆயக்காரன் சகேயுவை இரட்சித்தார். யூதஜாதியால் தாம் புறக்கணிக்கப்படுவதை உவமைகளால் திருஷ்டாந்தப் படுத்தினார். சனிக்கிழமை மாலை பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே தமது சீஷருடன் இராத்தங்கினார். மற்றப்பிரயாணிகள் எருசலேமுக்கு நேராக நடந்தார்கள். அவர் வந்த செய்தி எருசலேமில் பிரஸ்தாபமாயிற்று. இதற்கிடையில் சனதரீம் சங்கத்தார் அவரைக் கொல்லத் தீர்மானித்து அவர் இருக்கிற இடத்தை எவனாகிலும் அறிந்திருந்தால் தங்களுக்குத் தெரியப்படுத்தவேண்டுமெனக் கட்டளையிட்டிருந்தார்கள். பெத்தானியாவூரார் அந்தக் கட்டளையைச் சட்டை பண்ணவில்லை. அவர்கள் அவரை மதித்துச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார்கள். அதிகாரிகள் கட்டளை யூதாசுக்கு தேவகட்டளைபோலிருந்தது.

மார்த்தாள் மரியாள் வீட்டில் அவருக்கு விருந்து நடந்தது. மரியாள் விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தைக் கொண்டுவந்து தன் இரட்சகர் பாதங்களில் பூசினாள். தைலத்தின் வாசம் வீடுமுழுவதும் பரிமளித்தது. யூதாஸ் இதுவரை திறவாதிருந்த தன் வாயை முதல்முதல் திறந்து தன் உள்ளத்தின் அழகை வெளிப்படுத்தினான். இந்தத் தைலத்தை முந்நூறு பணத்திற்கு விற்று என் பையில் போடாததென்னவென்று கேட்பதற்குப் பதிலாகத் தரித்திரருக்குக் கொடாமற் போனதென்னவென்று கேட்டான். அந்தத் தைலத்துக்கு மதிப்புப்போட்டவனும் அவனே; அதில் தனக்குச் சேரவேண்டிய பங்கு எவ்வளவென்று தீர்மானித்துக்கொண்டவனும் அவனே. அவன் திருடனென்று யோவான் சொன்னதும் சரியே. ஆண்டவர் யூதாஸைப்பார்த்து: அவளை விட்டுவிடு, என்மீதுள்ள அன்பினால் இதைச் செய்தாள். தரித்திரர் எப்போதும் உங்களோடிருக்கிறார்கள். நான் எப்போதும் மாம்சத்திலிரேன். நான் அடக்கமாவதற்குக் குறிப்பாக என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் யூதாசுக்கு வந்த எரிச்சல் கொஞ்சமல்ல. இவர் என்னைப் பகிரங்கமாய் அவமானப்படுத்தி இந்த ஸ்திரீயைப் புகழ்ந்து பேசினதென்ன? இனி நான் செய்யவேண்டிய தின்னதென்று எனக்கும் தெரியுமென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். யூதாஸே! நீ மரியாள்பேரில் பொறாமை கொள்ளாதே. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் நீ செய்ததும் சொல்லப்படு மென்பது நிச்சயம். உலகத்தார் மரியாளை மறந்தாலும் உன்னை மறக்கமாட்டார்கள். ரூபாய்க்கு யூதாஸ்காரியோத் என்னும் பேர் வழங்கி வருவதும் சும்மாவா?

ஞாயிறு காலையில் அவர் எருசலேமுக்கு இராஜபவனி வந்தார். திரள் ஜனங்கள் அவரைப்போற்றி ஆர்ப்பரித்தார்கள். அவர் தம்மை இராஜாவாக இன்று வெளிப்படுத்தப் போகிறாரென்று யூதாஸ் சந்தோஷப்பட்டான். அவரோ எருசலேமுக்காகக் கண்ணீர்விட்டழுதார். அந்நாள்களில் பகலில் எருசலேமிலும் இரவை பெத்தானியா ஒலிவமலையிலும் கழித்தார். அதிகாரிகள் அவரைக் குற்றப்படுத்தும்படி பல கேள்விகளைக் கேட்டார்கள். எல்லாவற்றிற்கும் உத்தரவு சொல்லி வாயடைத்தார். மகா தைரியமாய் அவர்கள் பாவங்களைக் கண்டித்தார். ஒரு வகுப்பாரையும் அவர் தப்பவிடவில்லை. அதிகாரிகளின் மூர்க்கத்துக்கும் அளவில்லை. கூட்டத்தில் பிடித்தால் பெருங்கலகம் உண்டாகுமென்று அவர்கள் பயந்து அவரை இரகசியமாய்ப் பிடிக்கும்படி வகைதேடிக்கொண்டிருப்பதை

யூதாஸ் கேள்விப்பட்டான். இரவில் ஊரடங்கினபின் அவன் இரகசியமாய் பெத்தானியாவைவிட்டுப் புறப்பட்டு எருசலேமுக்குப் போனான். வாசற்காப்போன்: அங்கே போகிறவன் யாரென்று அதட்டினான். இவன் சமீபித்துப்போய் நான் இயேசுவை அதிகாரிகளுக்குக் காட்டிக்கொடுக்கப் போகிறேன் என்று சொன்னான். அவன் பிரதான ஆசாரியன் அரண்மனைக்கு வந்தபோது அவர்கள் அவரைப்பிடிக்கும்படி மகா கவலையோடு ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தார்கள். யூதாஸ் கதவைத் தட்டினான். வாசல் திறக்கப்பட்டது. நீ இவ்வேளை வந்த காரியமென்னவென்று அவர்கள் கேட்டார்கள். நீங்கள் ஒன்றுக்கும் மயங்க வேண்டாம். அவரை யாதொரு சந்தடியில்லாமல் வெகு பக்குவமாக உங்களுக்குப் பிடித்துக் கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுப்பீர்களென்று கேட்டான். அவர்களுக் குண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல. தங்கள் காரியத்தை முடிக்கச் சமயசகாயன் வந்தானென்று சொல்லி முப்பது வெள்ளியென்று ஆரம்பித்தார்கள். இந்த அற்பத்தொகைக்கு அவன் சம்மதியாமற்போனால் பிந்தி அவன் கேட்பதைக் கொடுக்கலாமென்பது அவர்கள் நோக்கம். அவனோ மறுவார்த்தை பேசாமல் சம்மதித்துக்கொண்டான். பொருளாசைக் காரரான பிரதான ஆசாரியர்கள் சந்தோஷத்துடன் அத் தொகையைக் கொடுத்தார்கள். வேதவாக்கியமும் நிறைவேறிற்று. ''உங்கள் பார்வைக்கு நன்றாய்க்கண்டால் என் கூலியைத் தாருங்கள் என்று சொன்னேன். அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு. நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்தில் எறிந்துவிட்டேன்'' என்பதே, *(சகரி. 11:12,13)*. இவ்வாறு யூதாஸ் பணத்தை வாங்கிக்கொண்டு விடியுமுன் பெத்தானியாவுக்கு வந்து யோக்கியன்போல சீஷர்களுடன் சேர்ந்துகொண்டான்.

வியாழன் பஸ்கா ஆயத்தம். பெத்தானியாவிலே ஆண்டவர் பஸ்காவை ஆசரிப்பாரென்று சீஷர்கள் நினைத்தார்கள். பெத்தானியாவூர் எருசலேமோடு சம்பந்தப்பட்டிருந்தபடியால் அங்கே பஸ்காவை ஆசரிப்பது விரோதமல்ல. ஆகிலும் ஆண்டவர் தமது கடைசிப் பஸ்காவை எருசலேமில் புசிக்கவே ஆசையாயிருந்தார். அதற்குவேண்டிய காரியங்களை முன்னதாக ஆயத்தப்படுத்தவேண்டும். யூதாஸ் ஆண்டவரைக் காட்டிக் கொடுக்கும்படி சாத்தானால் தூண்டிவிடப்பட்டுச் சமயந்தேடிக்கொண்டிருந்ததால் அவனுக்குத் தெரியாமல் இடமுதலான காரியங்களை ஒழுங்குசெய்யவேண்டியது அவசியம். அவனுக்கு முன்னதாகத் தெரிந்துவிட்டால் பஸ்காவை ஆசரிக்கும் வேளையில் சத்துருக்களோடு அங்கேவந்து நிற்பான்.

அவர் செய்யவும் கடைசியாகப் போதிக்கவும் விரும்பின அருமையான காரியங்களுக்கு இடையூறு உண்டாகும். ஆகையால் அவனை விட்டுவிடாமல் வேளை வரும்வரை கூடவே அவன் இருக்கும்படி பார்த்துக்கொண்டார். அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து வீட்டின் பேரைத் திட்டமாய்ச் சொல்லாமல் வேறுவிதமாய் அடையாளம் சொல்லுகிறார். நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான். நீங்கள் அவனுக்குப் பின்சென்று அவன் போகும்வீட்டில் நீங்களும்போய் அந்த வீட்டெஜமானிடத்தில் காரியத்தைச்சொல்லி அவன் காண்பிக்கிற ஸ்தலத்தில் நமக்கு பஸ்காவை ஆயத்தம் செய்யுங்கள் என்று சொல்லி அனுப்பினார். ஸ்திரீகள் தண்ணீர்க்குடம் சுமந்து வருவது வழக்கம். இங்கே ஒரு **மனுஷன்** சுமந்து வருவானென்று சொன்னது நல்ல குறிப்பே. அந்தப்படியே அவர்கள் கண்டு அவனோடுகூடப்போய் பஸ்காவை ஆயத்தம் செய்தார்கள். அது மாற்குவின் தகப்பன் வீடென்பது அபிப்பிராயம். அந்த வீடு மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பெற்றது கர்த்தருடைய இராப்போஜனம் அங்கே ஸ்தாபிக்கப்பட்டது. ஆதிச்சபை அங்கே கூடியிருந்தது. உயிர்த்தெழுந்த ரட்சகர் அங்கே காட்சியருளினார். பெந்தெகொஸ்தே ஆவியானவர் அங்கே இறங்கிச் சீஷர்களை நிரப்பினார். இக்காரியத்தை ஆண்டவர் அந்த வீட்டாரோடு முன்னதாகவே சொல்லிவைத்திருந்தாரென்றும், இதுபோலவே அவர் ஏறிவந்த கோவேறு கழுதையையும் முன்னதாகச் சொந்தக்காரனிடத்தில் ஏற்பாடு செய்திருந்தாரென்றும் சில வேதசாஸ்திரிகள் சொல்வது எவ்வளவு விசனம்! அப்படியானால் தம்மைக் காட்டிக்கொடுக்கும்படி யூதாஸோடும், மறுதலிக்கும்படி பேதுருவோடும், தம்மைப்பிடித்து இன்னின்ன பிரகாரம் பாடுபடுத்திச் சிலுவையிலறையவேண்டுமென்று பிரதான ஆசாரியர், போர்ச்சேவகரோடும் முந்தியே ஒழுங்கு செய்திருந்தாரென்றும் சொல்லலாமல்லவா? அவ்வாறே மீன் வாய்க்குள் முந்தியே காசை நுழைத்து சமுத்திரத்தில் போட்டுப் பேதுருவைப் பிடிக்கச் சொன்னாரென்றும் சொல்லலாமே. அப்படி தூண்டில் போட்டாலும் இந்த மீனே அகப்படுமென்பது என்ன நிச்சயம்? சிறந்த சாஸ்திரிகளும் இப்படிப்பட்ட காரியங்களில் மோசம்போவது எவ்வளவு பரிதாபம்! "இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்தார்."

பஸ்காவை ஆயத்தஞ்செய்தபின்பு பேதுருவும் யோவானும் பெத்தானியாவுக்குத் திரும்பினார்கள். சாயங்காலமானபோது ஆண்டவர் பன்னிருவரோடு எருசலேமிலிருந்த மேல் வீட்டறைக்கு வந்தார். நகரத்தில் கூடியிருந்த திரள் ஜனங்கள் நடுவில் அவர்கள் கவனிக்கப்படாமல் எப்படி அந்த வீட்டிற்கு வந்தார்களோ அதுவும் ஆச்சரியமே மேல்வீட்டில் ஒழுங்கு

செய்யப்பட்டிருந்த சிறப்பான ஆசனங்களையும் அறையின் ஜோடிப்புகளையும் சீஷர்கள் கண்டவுடன் இராஜ்யத்தை நினைவுகூர்ந்து தங்களில் யார் பெரியவனென்று தர்க்கம்பண்ண ஆரம்பித்தார்கள். இந்தத் தர்க்கத்தில் யூதாஸ் முதலாளாய் நின்றிருப்பான். தான் சம்பாதித்த முப்பது வெள்ளி மடியிலிருந்ததால் யாரும் தனக்கு நிகரில்லையென்றும் நினைத்திருப்பான். எஜமானோ ஓர் அடிமையைப்போல் அடியார்களின் கால்களைக் கழுவினார். துரோகத்தால் தீட்டப்பட்ட யூதாஸின் கால்களையும் கழுவினார். இச்சமயத்தில் அவனை உணர்த்தும்படி: நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாருமல்ல என்றார். மேன்மைக்கு வழி தாழ்மையே என்று போதித்துத் தாமே அவர்கள் கால்களைக் கழுவி மாதிரியைக் காண்பித்தார். எல்லாரும் ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். போஜனம்பண்ணுகையில் சீஷர்கள் திடுக்கிடத்தக்கதான காரியத்தைச் சொன்னார். துரோகியை அவர் பார்க்கப் பார்க்க அவருள்ளம் கலங்கினது. "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். இதற்கு முன்னும் தாம் காட்டிக்கொடுக்கப்படுவதைப்பற்றி அவர் சொல்லாதிருந்ததில்லை. மறுரூபத்துக்குப்பின்பு மலையிலிருந்திறங்குகையில் மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவாரென்றும், கடைசியாக எருசலேமுக்குப் போகையில் மனுஷகுமாரன் பிரதான ஆசாரியர் வேதபாரகரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவாரென்றும் சொன்னார். சீஷர்கள் அவ்வளவாக அதைக் கவனிக்கவில்லை.

வேறொரு சமயம் அவருடைய சீஷரில் அநேகர் அவரைவிட்டு விலகிப்போனபோது பன்னிருவரைப் பார்த்து: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று கேட்டார். பேதுரு அவரைப்பார்த்து: ஆண்டவரே நாங்கள் ஒருக்காலும் உம்மை விடமாட்டோம். உம்மை விட்டால் வேறு யாரிடத்தில் போவோம்? நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்று சொன்னார். இந்த வார்த்தைகள் பதினொருவருக்குச் சொல்லலாமே தவிர யூதாசுக்குப் பொருந்தாது. ஏனென்றால் யூதாசும் போய்விட மனதுள்ளவனாகவேயிருந்தான். அச்சமயத்தில் ஆண்டவர் அவர்களைப் பார்த்து: "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ள வில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று சொன்னார். அமர்ந்த இந்த நேரத்தில் மேல்வீட்டறையில் பன்னிருவரைத் தனித்து வைத்துக்கொண்டு உங்களிலொருவன் என்னை நிச்சயமாகவே காட்டிக்கொடுக்கப்போகிறான் என்று அவர் சொன்னவுடனே அவர்களுக்குண்டான திகைப்பும் கலக்கமும் கொஞ்சமல்ல. தங்களில் யார் அப்படிச் செய்யக் கூடியவனென்று ஒருவரையொருவர் பார்த்தார்கள். தங்களுடைய

அறிவீனத்தையும் குறைகளையும் உணர்ந்து, தங்களுக்குள்ளே சந்தேகப்பட்டுக் கலங்கி: ஆண்டவரே, நானோ? நானோ? என்று தனித்தனியாய்க் கேட்க ஆரம்பித்தார்கள். யூதாஸ் இப்பொழுது வாய் திறக்கவில்லை. எஜமான் அவர்களைப் பார்த்து: என்னோடுகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான். தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆகிலும் எந்த மனுஷனால் அவர் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். பேதுரு, யோவான், யூதாஸ் மூவரும் ஆண்டவருக்குச் சமீபத்திலிருந்தார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் யூதாஸ் அவரைப் பார்த்துத் தாழ்ந்த சத்தத்தில் ரபீ, நானோவென்று கேட்டான். நீ சொன்னபடிதான் என்று அவனுக்கு ஜாடை காட்டினார். அவன் இப்படிக் கேட்டதையும் ஆண்டவர் சொன்னதையும் சீஷர்கள் அறிந்துகொள்ளவில்லை.

அவன் இன்னானென்று தெரியாதது பேதுருவுக்குச் சஞ்சலமாயிருந்தது. ஆண்டவரைப்பார்த்துக் கேட்கவும் பேதுருவுக்குத் தைரியமில்லை. சற்றுநேரத்திற்குமுன்னே ஆண்டவர் தன் கால்களைக் கழுவவே கூடாதென்று போராடினதால் இப்போது வாய் திறக்க அவருக்குத் தைரியமில்லை. மேலும் அவர் ஆண்டவருடைய ஆசனத்திற்கு பின்பக்கமாயிருந்ததால் கேட்பதற்கு வசதியுமில்லை. ஆகையால் அவன் இன்னானென்று அறியும்படி யோவானுக்குச் சைகை காட்டினார். யோவான் ஆண்டவர் மார்பில் சாய்ந்து: ஆண்டவரே! அவன் யாரென்று கேட்டார். கர்த்தர் இரகசியமாய் யோவானுக்குமாத்திரம் தெரியத்தக்கதாக இந்தத்துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தானென்று சொல்லி துணிக்கையை எடுத்து யூதாசுக்குக் கொடுத்தார். அவன் தானே அதை எடுத்துப் புசிப்பதே ஒழுங்கு. ஆகிலும் ஆண்டவர் சொன்ன வார்த்தையைக் குறித்து அவன் யோசனையாயிருந்ததைக் கண்டு அவரே எடுத்துக்கொடுத்தார். அப்படிக்கொடுப்பதையே யோவனுக்கு அடையாளமாகச் சொன்னார். இந்த இரகசியம் யோவானைத்தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. யூதாஸைக் காட்டிக்கொடுக்க ஆண்டவருக்கு மனதில்லை. அவன் இன்னானென்று சீஷர்கள் கண்டுகொண்டால் அவனை வெளியே விடமாட்டார்கள்.

யூதாஸ் துணிக்கையை வாங்கினவுடனே சாத்தான் பூராவாய் அவனுக்குள் நுழைந்தான். அவன் மனம் கடினப்பட்டது. அவன் இருதயம் ஆண்டவரைவிட்டுப் பிரிந்தது. அதிகாரிகள் இவன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவன் போகவேண்டிய வேளை வந்தது. அவன் எண்ணத்தை

அறிந்த கர்த்தர்: நீ செய்யப்போகிறதைச் சீக்கிரம் செய் என்றார். உடனே புறப்பட்டுப்போனான். அப்பொழுது இராக்கால மாயிருந்தது. இருளன் இருட்டில் பிரவேசித்தான். சீக்கிரம் செய்யென்று ஆண்டவர் சொன்ன கருத்து சீஷர்களுக்கு விளங்கவில்லை. பண்டிகைக்கு வேண்டியதை வாங்கவோ அல்லது தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கவோ அனுப்பி யிருப்பாரென்று நினைத்தார்கள். அவனைச் சீக்கிரம் அனுப்பினது நியாயமே. போஜனம் முடிந்தபின் தமது அன்பை நினைவுகூரும் திருவிருந்தை ஸ்தாபிக்கப்போகிறார். துரோகி அதுவரைகூடயிருப்பது தகாது. அவன் இருக்கிறவரை அவர் உள்ளம் தத்தளிக்கிறது. தாம் சொல்ல விரும்பும் அநேக அருமையான விஷயங்களைச் சொல்ல முடியவில்லை. துரோகி முன்னிருக்கும்போது உத்தமர்களின் வாய் அடைப்படும். அது எக்காலத்திலும் உண்மையே. சரியான நேரத்தில் அவனை அனுப்பினார். அவனை முந்தியே போகவிட்டிருந்தால் அவர் மேல்வீட்டிலிருக்கும்போதே வந்துவிடுவான். அவன் போய் தோட்டத்துக்குத் திரும்பிவர இரண்டுமணி நேரம் பிடித்தது. இதற்குள்ளாக யோவான் 14, 15, 16, 17-இல் உள்ள அருமையான காரியங்கள் சொல்லப்படவேண்டும். அரைமைல் தூரமுள்ள தோட்டம்போய் ஜெபித்து தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகையால் யூதாஸின் இஷ்டப்படியல்ல, எஜமான் அவனை அனுப்பிவிட்ட நேரத்திலேயே அவன் போனான். அதற்குமுன் அவனை உணர்த்த வேண்டிய அளவுக்கு உணர்த்தியே அனுப்பினார். சத்துருக்கள் தாங்கள் நினைத்தபடியே அவருக்குச் செய்ததாக எண்ணிக்கொண்டாலும், அவருடைய யோசனையைத்தான் அவர்கள் நிறைவேற்றினார்க ளென்பதை நாம் மறக்கலாகாது.

ஆண்டவர் தோட்டத்திற்குள்போய் பிதாவின் சித்தத்திற்குப் முழுமையாகத் தம்மைக் கையளித்து தேவ பலத்தைப் பெற்றுக்கொண்டார். யூதாஸ் சகல ஏற்பாடுகளும் செய்து அவர் இருந்த இடமறிந்து சேனையோடும் திரள் ஜனங்களோடும், அங்கே வந்தான். அவன் முதலாவது மேல்வீட்டறையில் அவரைத் தேடி அங்கே காணாததால் தோட்டத்துக்கு வந்திருக்கவேண்டும். வீட்டுக்குச் சொந்தக்கார னாகிய மாற்கு என்னும் வாலிபன் ஒரு துப்பட்டியைமாத்திரம் போர்த்துக்கொண்டவனாக கிறிஸ்துவுக்கு என்ன சம்பவிக்குமோ என்று பார்க்கும்படி தோட்டத்துக்கு வந்ததால் இதை அறிகிறோம். யூதாஸ் வருவதை ஆண்டவர் அறிந்து அவனுக்கு எதிர்கொண்டுபோய்: சிநேகிதனே! என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்று கேட்டார். அவன் முன்னே நடந்துவந்து சீஷர்களுக்குத் தன் துரோகத்தை மறைக்கவும், சத்துருக்களுக்கு அடையாளம் காட்டவும் அவரைக்கட்டித்தழுவி ரபீ, ரபீ, வாழ்க

என்று மாறிமாறி முத்தஞ்செய்தான். காபிரியேல் தூதனும் முத்தமிட அஞ்சி நிற்கும் திருமுகத்தில் துரோகி முத்தமிடத் துணிந்தானே. அவர் முகத்திலுள்ள இரத்தவேர்வையில் ஒரு துளி அவன் உதட்டில் பட்டிருக்காதா? கிறிஸ்துவின் இரத்தம் நொறுங்குண்ட பாவியை இரட்சிக்குமேயன்றித் துரோகியை இரட்சிக்குமா? ஆண்டவர் மகா பரிதாபத்துடன் அவனைப்பார்த்து: மனுஷகுமாரனை முத்தத்தினாலேயா காட்டிக்கொடுக்கிறாய்? இதுவா நீ தெரிந்துகொண்ட அடையாளம்? உன் குதிக்காலால் என் முகத்தில் உதைத்துக் காட்டிக்கொடுப்பதல்லவோ நியாயம் என்பதுபோல் கேட்டார். தான் அந்தரங்கத்தில் செய்கிற காரியங்களை இவர் கண்டுகொள்ளுகிறாரே என்று கலங்கிப் பின்வாங்கிக் கூட்டத்தாரோடு சேர்ந்துகொண்டான்.

இயேசு இராஜன் உன்னத பலத்தோடும் அமர்ந்த முகத்தோடும் தம்மைப் பிடிக்கவந்த கூட்டத்தைப்பார்த்து: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். **நான்தான்** என்றார். அதைக்கேட்டவுடனே பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர்களோடுகூட நின்ற யூதாசும் விழுந்தான். அவர் சாந்தமாய்ப் பேசியிருந்தபோதிலும் அவர் தொனியில் விளங்கின தேவவல்லமை பெருஞ்சூறாவளிக்காற்றைப்போலவும் பலத்த இடிமுழக்கம்போலவும் அவர்களைக் கீழேவிழப்பண்ணிற்று. இப்படிச்செய்ததால் தாம் பிடிபடுவது அவர்கள் பலத்தால் அல்ல, தாமே தம்மை ஒப்புக்கொடுக்கிறாரென்பதை அவர்கள் நன்றாய் அறிந்துகொள்ளும்படி செய்தார். மேலும் அவர்களை இவ்வாறு விழச்செய்து காலதாமதப்படுத்தித் தமது சீஷர்களுக்கு அபாயம் நேரிடாமல் அவர்கள் தப்பிக்கொள்ளும்படி ஏற்பாடும் செய்தார். ஆ! தம்மை மரணத்துக்கு ஒப்புவித்துத் தமது நண்பர்களின் ஜீவனைக் காப்பாற்ற விரும்பும் உத்தமநேசரின் ஒப்பற்ற அன்பை என்ன சொல்ல! ஒண்டியைப் பிடிக்கவந்த சேனையைப் பார்த்தீர்களா? அவர்களல்ல அவரே அவர்களைப் பிடித்தார். ஆட்டிவிட்ட பம்பரம்போல் அவர்கள் விழுவதும் எழும்புவது மாயிருந்தார்கள். தம்மை எதிர்த்துவந்த சேனையை நடத்தின சேனாவீரன் இவரே!

இவ்வாறு அவர் மனதாரத் தம்மை ஒப்புவிக்க அவர்கள் அவரைப்பிடித்து அவர் திருக்கரங்களைப் பின்கட்டாகக் கட்டினார்கள். அன்று அடிக்கப்பட்ட இரண்டுலட்சத்து அறுபதினாயிரம் ஆடுகளின் இரத்தம் கீதரோன் ஆற்றில் விழுந்து, ஆறு இரத்தமயமாயிருக்க, உலகத்தின் பாவத்தைச்சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி கரங்கள் கட்டப்பட்டவராக அவ்வாற்றைக் கடந்தார். அவர்கள் நகரத்தில் பிரவேசித்து, ஜனங்கள் அயர்ந்து

தூங்கும் வேளையில், தெருநெடுக நடந்து அன்னாவினிடத்தில் அவரைக்கொண்டுபோய் நிறுத்தினார்கள். இரா முழுவதும் அவர் பட்டபாடுகள், அவமானங்கள், அநியாய விசாரணைகளை இங்கே விஸ்தரிக்காமல் விடுவோம். இவைகள் யாவற்றையும், அவரை மரணாக்கினைக்குட்படுத்திவிட்டதையும் யூதாஸ் கூடவேயிருந்து பார்த்தான். தான் செய்த வினையின் பலனா இதுவென்று திடீரெனக்கண்டான். தாம் அடைந்த அவமானம் பாடுகளில் ஆண்டவர் காண்பித்த சாந்தமும் பொறுமையும் அவன் இருதயத்தைப் பிளந்தது. அவன் பாவஞ்செய்தபின் அவன் கண்கள் திறக்கப்பட்டன. பாவத்தின் கொடுமை அதை நிறைவேற்றும்படி யோசிக்கும்போதல்ல, நிறைவேற்றினபின்பே வெளிப்படும். கர்த்தரைக் கலங்க வைத்தவன் இப்போது கலங்குகிறான். விதைத்ததை அறுக்கிறான். நிற்க நிலையில்லை. பைத்தியக்காரனைப்போலானான். அவன் செய்த துரோகம் அவனை வாதிக்கிறது. நரக அக்கினி அவன் உள்ளத்தில் மூண்டது. அவனைத் தைரியப்படுத்தவும் ஆறுதல் சொல்லவும் ஒருவரையும் காணோம். உலகமே அவனுக்குச் சத்துருபோல் தோன்றினது. அவன் ஜீவன் அவனுக்குக் கசப்பாயிற்று. உட்புகுந்த சாத்தான் அவனைத் தொலைக்காமல் விடமாட்டான். மடியிலிருக்கும் வெள்ளிக்காசு நெருப்பாய்க் கொதிக்கிறது. ஆலயம் நோக்கி ஆசாரியரிடம் ஓடினான். குற்றமில்லாத இரத்தத்தை நான் உங்களுக்குக் காட்டிக் கொடுத்தேனே என்று புலம்பினான் முன் தங்களிடத்தில் வந்தபோது எவ்வளவோ மரியாதையாய் அவனை ஏற்றுக் கொண்டார்கள். இந்த நேரத்திலோ அவன் முகத்தைக்கூட அவர்கள் ஏறிட்டுப்பார்க்க வில்லை. அதைப்பற்றி எங்களுக்கென்ன? இனி உன்னால் எங்களுக்கு ஆக வேண்டியதென்ன? உன்பாட்டை நீயே பார்த்துக்கொள்ளென்று வெறுப்பாய்ப் பேசிவிட்டார்கள். வெறிகொண்டவன் போலாகி அவர்கள் கூடியிருந்த பரிசுத்த ஸ்தலத்தில் அந்த வெள்ளிக்காசை எறிந்துவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினான். ஆகான் திருடின பொருள் அவனுக்கு உதவவில்லை. ஆகாப் வஞ்சித் தெடுத்த தோட்டம் அவனுக்கு உதவவில்லை. யூதாஸ் சம்பாதிக்க கூலி அவனுக்கு உதவவில்லை. பரமபொக்கிஷத்தையும் இழந்தான் உலக பொக்கிஷத்தையும் இழந்தான். குணத்தையும் இழந்தான் பணத்தையும் இழந்தான் யூதாஸ்.

நகரத்தை விட்டு வெளியே ஓடினான். கீதரோன் இன்னோம் பள்ளத்தாக்குகள் சந்திக்கிற இடத்துக்குச் சற்று மேற்கிலுள்ள ஒரு குயவனுடைய நிலத்துக்குப்போனான். அந்நிலத்தில் பானைகள் செய்வதற்கேற்ற மெதுவான களிமண் அகப்படும். அங்கே ஊடே ஊடே இருபத்தைந்து முதல் நாற்பத்தைந்து அடி உயரமுள்ள செங்குத்தான பாறைகள் உண்டு.

அவைகளில் ஒன்றின் மீதேறினான். இராத்திரி சேனையைத் தோட்டத்துக்கு நடத்தி எஜமானைக்காட்டிக் கொடுத்த இடத்தைக்கண்டபோது அவனுக்கு எப்படியிருந்திருக்கும்? யூதாஸே முத்தத்தினாலேயா என்ற அன்பரின் துயரமான சத்தம் மறுபடியும் தொனித்திருக்காதா? சிகரத்தில் நின்ற ஒரு மரக்கிளையில் நான்றுகொண்டு தொங்கினான். அவன் சரீரம் துள்ளினதால் கிளையோ அல்லது கட்டியிருந்த கயிறோ அறுந்து அவன் தலைகீழாக விழ, வயிறுவெடித்துக் குடல் சரிந்து செத்தான். பிரதான ஆசாரியர் அந்த முப்பதுவெள்ளியை எடுத்து அது இரத்தக்கிரயமானதால் காணிக்கைப் பெட்டியில் போடக்கூடாதென்று சொல்லி, யூதாஸ் விழுந்து செத்த நிலத்துக்குச் சொந்தக்காரனான குயவனிடத்தில் அதை முப்பது வெள்ளிக்கு வாங்கி, எருசலேமில் மரிக்கநேரிடும் புறஜாதிகளைப் புதைப்பதற்கு வைத்துக்கொண்டார்கள். அருமைரட்சகரின் இரத்தக்கிரயம் புறஜாதிகளுக்கு எருசலேமில் ஒரு கல்லறைத் தோட்டத்தைச் சம்பாதித்ததும் விசேஷமே. துரோகியின் இரத்தம் அந்நிலத்தில் சிந்தப்பட்டப்படியாலும், குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுக்கும்படி செலுத்தப்பட்ட பணத்தால் அந்நிலம் வாங்கப்பட்டபடியாலும் அதற்கு **இரத்தநிலம்** என்கிற பேரும் வந்தது. யூதாஸின்முடிவை அறிந்திருந்து பேதுரு இதைச்சொல்லுகிறார். அந்த நிலம் துரோகியின் முடிவையும் யூத அதிகாரிகளின் பாதகத்தையும் இந்நாள்வரை எல்லாருக்கும் ஞாபகப்படுத்தும் ஞாபக பூமியாயிருக்கிறது.

இவ்வளவுதூரம் எல்லாவற்றையும் கவனித்தபின், யூதாஸ் ஆண்டவரைக் காட்டிக்கொடுத்த காரணமென்னவென்று மறுபடியும் கேட்போம். பொருளாசையோ? பொறாமையோ! உலகசிந்தையோ! ஏமாந்துபோனதோ! எரிச்சலோ! மனக்கடினமோ! இவையாவுக்கும் அவன் சரித்திரத்தில் இடமுண்டு. ஆனால் இவைகள் வெளியே காணப்படும் கிளைகளேயன்றி **வேரல்ல**. கிறிஸ்துவுக்குப் பன்னிரண்டு சீஷர்கள் இருந்தார்களென்று சொல்லுகிறோம். வாஸ்தவத்தில் பதினொரு சீஷர்களே இருந்தார்கள். யூதாஸ் **சீஷனல்ல**. "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள் ஒருவன் பிசாசாயிருக்கிறான்." இது ஆண்டவர் ஆரம்பத்தில் சொன்ன வார்த்தைகள். பதினொருவரும் கலிலேயர். இவன் ஒருவனே யூதேயாவிலுள்ள கேரியாத்தூரான். யூதேயா தேசத்தார் எப்படியோ இவனும் அப்படியே. கலிலேயாவுக்கும் யூதேயாவுக்கும் நிலத்தன்மையிலும் குணத்தன்மையிலும் மிகுந்த வித்தியாசமுண்டு. கலிலேயர் பணத்தைவிட குணத்தை விரும்புவார்கள். யூதேயர் குணத்தைவிடப் பணத்தை நாடுவார்கள். இவ்விரு நாட்டுக்குமுள்ள வித்தியாசத்தை

ஆண்டவர் தமது ஊழியத்தில் கண்டார். தமது சீஷர்களிலும் கண்டார். யூதாஸ் முற்றிலும் உலகசிந்தையுள்ளவன். அந்த உலகசிந்தையோடு கிறிஸ்துவைச் சேர்ந்தான். அவருடைய பேர்ப்பிரஸ்தாபமும், அற்புதங்களும், திரள் ஜனங்கள் அவரைவிடாமற் பின்பற்றினதும் இவனுக்கு ஆனந்தமாயிருந்தது. இவர்மூலமாய் உலகத்தில் மேன்மையடையலாம் என்ற நோக்கமாய் கிறிஸ்துவின் சீஷனானான். இவனில் சில நல்ல குறிப்புகள் இருந்ததால் ஆண்டவர் இவனையும் தமது சீஷர்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டார்.

ஆண்டவரைக் காட்டிக்கொடுக்கும்படி அவன் சீஷனானவனல்ல. தம்மைக் காட்டிக்கொடுக்கும்படியாக அவர் அவனைத் தெரிந்துகொண்டதுமில்லை. இவனிடத்தில் பல குறைவுகளிருந்ததுபோல மற்றப் பதினொருவரிடத்திலும் குறைவுகள் இருந்தன. இவனைப்போலவே அவர்களும் உலக இராஜ்யத்தை எதிர்பார்த்தார்கள். இவன் திருடனென்பதும் துரோகியென்பதும் கடைசியில் வெளிப்பட்டது. மற்றவர்களிடத்திலோ அநேக தவறுதல்கள் நெடுகிலும் காணப்பட்டன. ஆண்டவர் பரிசுத்தவான்களையும் பழுதற்ற மனுஷரையும் தமக்குச் சீஷராயிருக்கும்படி தெரிந்துகொள்ளவில்லை. இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிப்பிக்கிற கர்த்தர் இவர்கள் அந்தகாரத்தை அகற்றி இவர்களை உலகத்துக்கு வெளிச்சங்களாக்கும்படி தெரிந்துகொண்டார். அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு தகுதியற்றவர்களாயிருந்தபோதிலும் அவர்களைத் தமது கிருபையால் தகுதியுள்ளவர்களாக்கி உலகத்தில் அனுப்பச் சித்தங்கொண்டார். இந்த எண்ணம் பதினொருவரில் பலித்தது; யூதாஸில் **பலிக்கவில்லை**. சீஷர்களின் இலட்சணம் குருவினிடத்தில் கற்றுக்கொள்ளுதல். யூதாஸ் **சீஷனல்ல**. அவன் அவரோடு கூடயிருந்தான். அவரிடத்தில் கற்றுக்கொள்ளவோ அவனுக்கு மனதில்லை. கிறிஸ்துவின் வெளிச்சம் தன்னுள்ளத்தில் பிரகாசிக்க அவன் இடங்கொடுக்கவில்லை. மற்றவர்கள் அறிவில் குறைந்தவர்களாயிருந்தும், ஆண்டவர்மீதுள்ள அன்பில் குறைந்தவர்களல்ல, யூதாஸிடத்தில் **அன்பில்லை**, மற்றவர்களுக்குள்ளிருந்த துர்ச்சுபாவம் வரவர அழிக்கப்பட்டு நற்சுபாவம் வளர ஆரம்பித்தது. யூதாசுக்குள் விதைத்த விதைகள் பலன் கொடாதபடி அவனுடைய துர்ச்சுபாவமே வளர்ந்து பெருகினது. மற்றவர்கள் தங்களுக்கு விளங்காத காரியங்களை ஆண்டவரிடத்தில் தாராளமாய்க் கேட்பார்கள். இவனோ வாய் திறக்கமாட்டான். என்னத்தை யோசித்துக்கொண்டிருப்பானோ தெரியாது. ஆண்டவரும் இவனிடத்தில் பேசினதில்லை. அவர் உலகசிந்தையைப்பற்றியும் பொருளாசையைப்பற்றியும் சீஷர்களுக்குப் போதித்தது இவனுக்கு வெறுப்பாயிருந்தது. அவருடைய பரிசுத்த ஜீவியமும் உன்னத

உபதேசமும் மற்றவர்களைப் பரவசப்படுத்தினது. இவனுக்கோ விளங்காத பாஷையாயிருந்தது. அவன் இருதயம் மாறவேயில்லை. முன்காலத்தில் மாம்சத்தின்படி பிறந்தவன் வாக்குத் தத்தத்தின்படி பிறந்தவனைப் பகைத்ததுபோல, மாம்ச சிந்தையுள்ள யூதாஸ் ஆவிக்குரிய ஆண்டவரை வெறுக்காமல் முடியாது. இயேசுவின் சமுகத்தில் போகிறவன் ஒன்று அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது அவரைப் பகைக்கவேண்டும். சரீரத்தில் கூடயிருந்து இருதயத்தில் தூரமாயிருந்த யூதாஸ் ஆண்டவருடைய அன்பையும் போதனையையும் ஏற்றுக் கொள்ளாமற்போனதினால், பெருக்கி ஜோடிக்கப்பட்டிருந்த அவன் இருதயத்தில் ஏழு பிசாசுகள் பூரணமாய் நுழைய இடம் பெற்றன. அவனுக்குள் நாளாவண்ணம் வளர்ந்துவந்த இந்த மனவெறுப்பும் விரோதமுமே ஆண்டவரைக் கடைசியாய் விட்டுப்பிரியவும் அவரைக்காட்டிக்கொடுக்கவும் அவனை ஏவிற்று. பிரதான ஆசாரியர் முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்காமற்போனாலும் இவன் அவரைக் காட்டிக்கொடுத்தே யிருப்பான். அவனிடத்தில் காணப்பட்ட எல்லா பாவங்களுக்கும் காரணம் மாற்றப்படாத அவனுடைய **உள்ளான துர்ச்சுபாவமே.** "கேட்டின மகன் கெட்டுப்போனானேயல்லாமல் அவர்களில் ஒருவனும்கெட்டுப்போகவில்லை."

ஆகையால், தேவகுமாரனே அவனை இந்த மகத்துவமான ஊழியத்துக்குத் தெரிந்துகொண்டிருந்தும் பிரயோஜனமில்லை. அவனில் அன்புவைத்து ஜீவவசனத்தை அவனுக்குப் போதித்தும் பிரயோஜனமில்லை. அவனை நம்பி அவன் கையில் பணத்தை ஒப்புவித்தும் பிரயோஜனமில்லை. அவன் அற்புதங்களைக் கண்டிருந்தும் பிரயோஜனமில்லை. அவன் பிரசங்கிக்க அனுப்பப்பட்டும் பிரயோஜனமில்லை. அவர் திருக்கரங்களில் போஜனம் வாங்கிப் புசித்தும் பிரயோஜனமில்லை. அவன் வாங்கின போஜனம் அவனுக்குப் பிசாசாயிற்று. எத்தனை சிலாக்கியங்களை ஒருவன் பெற்றாலும் அவனுடைய உள்ளான சுபாவம் மாறாமற்போனால் அத்தனையும் அவனுக்குச் சாபமாகும். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப் படுவாய். கிறிஸ்துவின் திருவாய்மொழிகளைக்கேட்க மனமில்லாதவனும், அவருடைய வசனம் தன் இருதயத்தை மாற்ற இடங்கொடாதவனும் எப்படி அவருக்குச் சீஷனாவான்? தேவபோதனைக்குச் செவிகொடுத்துக் கீழ்ப்படிந்து நடந்திருந்தால் அவன் எப்படித் துரோகியாவான்? மாற்றப்படாத இருதயமே யூதாஸின் துரோகத்திற்குக் காரணம்.

யூதாஸின் முடிவுதான் என்ன? அவன்மனஸ்தாபப்பட்டுப் பொருளை எறிந்துவிட்டுத் தன் உயிரையும் மாய்த்துக் கொண்டானே, அவனுக்கு இரக்கம் கிடையாதாவென்று

கேட்கிறார்கள். அவனை ஆள்கொண்ட இரட்சகர்தான் அதற்கு உத்தரவு சொல்லவேணும். அவன் பிந்தி மனஸ்தாபப்பட்டது வாஸ்தவந்தான். ஆனால் அது இரட்சிப்புக்கேற்ற மனஸ்தாபமல்ல. மரணாக்கினைக்குட்பட்டுக் கட்டுண்டவராய் நின்ற பரிதாபம் நிறைந்த தேவாட்டுக்குட்டியின் காலில் அவன் விழுந்திருந்தால் இரக்கம் பெற்றிருப்பான். அவனால் அப்படிச்செய்யக் கூடவில்லை. அவன் பிரதான ஆசாரியரிடத்தில் செய்த பாவ அறிக்கைக்குக் காரணம் அவன் கலக்கமும் மனக்குழப்பமே. ஒரு அக்கிரமத்தைச் செய்யுமுன் அது தோன்றும் விதம் வேறே, அதை நடப்பித்தபின் அது தோன்றும் விதம் வேறே. ஒரு மூர்க்கன் ஒருவனைக் கொலைசெய்யும்படி உபாயங்கள் செய்யும்போது அவன் மனநிலை ஒருவிதமாயிருக்கும். கொலைசெய்தபின் சொல்லமுடியாத கலக்கமும் திகிலும் அவனுக்குண்டாகும். ஒருவன் பாவஞ்செய்யுமுன் அதின் சந்தோஷத்தையும் இலாபத்தையுமாத்திரம் நினைக்கிறான். பாவஞ்செய்தபின் வெட்கமும் அவமானமும் அவனை மூடுகின்றன. யூதாஸின் பாவம் திடீரென நடந்ததல்ல.

பேதுரு நெடுகிலும் கிறிஸ்துவை வெறுத்து, அவரை மறுதலிக்கும்படி தீர்மானித்து அப்படிச் செய்திருப்பாரானால், அவர் இரக்கம் பெற்றிருக்கமாட்டார். அவர் கிறிஸ்துவோடுகூட சாவேனென்று உண்மையின்படியே சொன்னார். சோதனை வந்தபோதோ விழுந்து அழுதார். யூதாஸ் நெடுகிலும் கிறிஸ்துவை உள்ளத்தில் வெறுத்து வந்தான். சமயம் வாய்த்தபோது காட்டிக்கொடுத்தான். அவன் துரோகம் செய்தபின் அதன் கசப்பை அறிந்தான் கிறிஸ்துவை இழந்தான். உடன் தோழரை இழந்தான். சத்துருக்களோடு சேர்ந்துகொள்ளப் பார்த்தான். அங்கும் இடமில்லை. எல்லாராலும் கைவிடப்பட்டான். அவன் கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்தது அறிவீனத்தால் அல்ல. வேறு எந்த நல்ல நோக்கத்தாலும் அல்ல. அவனுடைய பொல்லாத இருதயமே அவனைக் கெடுத்தது. அவரைக் காட்டிக்கொடுத்த துரோகியானான். எந்த மனுஷனால் காட்டிக்கொடுக்கப் படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ என்றும், அவன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருக்குமென்றும் ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் அவனை நியாயந்தீர்த்தது. நான் பிறவாதிருந்தால் நலமாயிருக்குமென்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய் நான்றுகொண்டு செத்தான். "அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்."

நாம் எவ்வளவு அறியக்கூடுமோ அவ்வளவு அறிந்தோம். ஆகிலும் யூதாஸின் காரியம் இன்னும் நமக்கு இரகசியமாகவே யிருக்கிறது. அவன் காட்டிக்கொடுப்பானென்று தெரியுமே,

பின்னையேன் அவனைத் தெரிந்துகொண்டாரென்று நமக்குள் பலரும் கேட்கிறார்கள். இதிலேதான் தேவரகசியம் காணப்படுகிறது. ஆதாம் பாவஞ்செய்வானென்று தேவனுக்குத் தெரியுமே, பின்னையேன் அவனை உண்டாக்கினாரென்று கேட்பதும், யூத ஜனங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் சிலுவையிலறைவார்களென்று தேவனுக்குத் தெரியுமே, பின்னையேன் தமது குமாரனை அவர்களிடத்திற்கு அனுப்பினாரென்று கேட்பதும் ஒரே கேள்வியாகவேயிருக்கிறது, ஆதாமைப் பரிசுத்தமாயிருக்கும்படி தேவன் உண்டாக்கினாரேயன்றிப் பாவஞ்செய்யும்படி உண்டாக்கவில்லை. ஆகிலும் அவன் பாவஞ்செய்வானென்பதும் அவருக்குத்தெரியும். ஆதாம் பரிசுத்தமாய் நடந்த நாள்களும் உண்டு. யூத ஜாதியை இரட்சிக்கும்படி விரும்பித் தமது குமாரனை அனுப்பினாரேயன்றி அவர்கள் கெட்டுப்போகும்படிக்கல்ல. ஆகிலும் யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்பதையும் தேவன் அறிவார். அதையும் தீர்க்கதரிசிகள்மூலமாய் வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் யூதர்களில் அவரை ஏற்றுக் கொண்டவர்களும் உண்டு.

யூதாஸை ஆண்டவர் தமக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி தெரிந்துகொண்டாரேயன்றித் தம்மைக் காட்டிக் கொடுத்துக் கெட்டுப்போகும்படிக்கல்ல. ஆகிலும் அவன் காட்டிக்கொடுப்பான் என்பதையும் அறிந்து அவர் துக்கப்பட்டார். வேதவாக்கியம் நிறைவேற வேண்டுமே என்று நாம் சொல்லலாம். யூதர்கள் ஆண்டவருக்குச் செய்த கொடுமைகளையும் யூதாஸின் துரோகத்தையும் வேதம் முன்னதாகக் கூறியிருப்பது மெய்தான். ஆகிலும் அவர்கள் அப்படிச் **செய்யவேண்டுமென்று** அவைகள் எழுதப்படாமல், அவர்கள் **செய்யப்போவதை முன்னறிந்து** அவைகள் எழுதப்பட்டதென்பதை நாம் மறக்கக்கூடாது. எழுதப்பட்டிருப்பதினாலே அவர்கள் அப்படிச்செய்யவில்லை. அவர்கள் அப்படிச் செய்ததினாலேயே அவ்வாக்கியங்களை நிறைவேற்றினார்கள். ஆகையால் இப்படி நடக்கவேண்டுமென்று **விரும்பி** தேவன் அவ்வாக்கியங்களை முன்னெழுதிவைக்காமல், நடக்கப்போகிறவைகளை அவர் **முன்னறிந்து** அவைகளைத் தெரிவித்தார். ஆகையால் குற்றம் அறிவித்தவர்பேரில் அல்ல, அப்படி நடந்தவர்கள் பேரிலேயேயிருக்கிறது. யூதாஸில் வேதவாக்கியம் நிறைவேறினதும் இதுபோலவே. ஒருவன்போகிற வழியை நாம் கவனித்து அவன் இன்ன தீமையில் அகப்படுவான் என்று நாம் ஏற்கனவே எச்சரித்தால், அவன் அத்தீமையில் அகப்படும்போது அவனல்ல, நாமே அந்தத்தீமைக்குக் காரணமென்று சொல்லுவதும் சரியோ?

மேலும், துரோகத்துக்கு நிகரான பாவமில்லை. நமதாண்டவர் எவ்வளவு பாடுகளையும் அவமானங்களையும் அனுபவித்தபோதிலும் துரோகத்தின் கசப்பை அவர் பானம் பண்ணாவிட்டால் அவருடைய பாடுகள் பூரணமாயிராது. ஒரு அந்நியன் நமக்கு எவ்வளவு தீமைகளைச் செய்தாலும் அவைகள் துரோகமாகாது. எதிராளி நமக்குத் தீமை செய்யக்கூடியவன் என்பதை நாம் அறிந்திருப்பதால், அவன் அப்படிச்செய்யும்போது நாம் ஆச்சரியப்படுகிறதில்லை. அது நமது மனதுக்கு அதிக வேதனையைக் கொடுக்கிறதுமில்லை. ஒருவன் நமக்குப் பிராண சிநேகிதனாயிருக்கும்போது நாம் அவனை நம்பி நமது சகல அந்தரங்கங்களையும் அவனுக்குச் சொல்லுகிறோம். அவனுக்கு ஒன்றையாகிலும் நாம் மறைத்து வைக்கிறதில்லை. நமக்கு உற்ற சினேகிதன்போல் அவன் தன்னைக் காண்பித்துக்கொண்டு நமது காரியங்களை அவன் வெளிப்படுத்தி, நமக்கு அவமானத்தையும் தீங்கையும் நேரிடப்பண்ணுவானானால் அந்தத் துரோகத்தைச் சகிக்க நம்மால் முடியாது. அன்பின் சமுத்திரத்தை, நன்மைச் சொரூபியைப் பகைவர் கையில் காட்டிக்கொடுத்த யூதாஸின் துரோகம் சின்னக்காரியமல்ல.

ஆண்டவர் நம்மோடு அனுதாபப்படுவதற்கு இந்த மகா கசப்பான அனுபவமும் அவருக்குவேண்டும். ''என்னை நிந்தித்தவன் சத்துருவல்ல, அப்படியிருந்தால் சகிப்பேன்; எனக்கு விரோதமாய் பெருமைபாராட்டினவன் என் பகைஞனல்ல, அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன். எனக்குச் சமமான மனுஷனும், என் வழிகாட்டியும், என் தோழனுமாகிய நீயே அவன். என் பிராண சிநேகிதனும், நாம் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.'' அவருடைய சத்துருக்களில் ஒருவன் அவரைக் காட்டிக்கொடுத்திருந்தால் அது துரோகமாகாது. மூன்றுவருஷம் அவரோடிருந்தவனும், அவருடைய ஒப்பற்ற நேசத்தையும் களங்கமற்ற உத்தம இருதயத்தையும் அறிந்தவனும், அடிக்கடி அப்பம் புசித்தவனும், அவருக்குச் சீஷனாயிருப்பேன் என்று வாக்குக்கொடுத்தவனுமான ஒருவன் அவரைக் காட்டிக்கொடுப்பதே துரோகமாகும். இந்தத் துரோகத்தை யூதாஸ் நடப்பித்து, வேதவாக்கியத்தையும் நிறைவேற்றி நம்மெல்லாருக்கும் எச்சரிப்பானான்.

31

அநியாய விசாரணை

The Unjust Trial

ஆங்கிலேய இராஜ்யத்தின் சிறந்த நியாயவிதிகள் பூர்வீக இராஜ்யங்களிலிருந்து உண்டாயின. ஒன்று யூதரைச் சேர்ந்தது, மற்றது ரோமரைச் சேர்ந்தது. இவ்விரு இராஜ்யங்களின் சட்டப்படி ஒருவன் குற்றவாளியென்று நிரூபிக்கப்படுமளவும் நியாயாதிபதி அவனைக் குற்றமற்றவனாகவே பாராட்டவேண்டும். வாதி கைதிக்கு விரோதமாய்க் குற்றஞ்சாட்டும்போது, நியாயாதிபதி இருபட்சத்துச் சாட்சிகளையும் தீரவிசாரித்து, அவன் குற்றவாளியென்று நிரூபிக்கப்பட்டால் தண்டிக்கவும், இல்லையானால் விடுதலைசெய்யவும்வேண்டும். முன்பு யூதராலும், பின்பு ரோமராலும் மார்க்க சம்பந்தமாகவும் இராஜ்ய சம்பந்தமாகவும் நமதாண்டவர் விசாரணை செய்யப்பட்டார்.

நியாய விசாரணைசெய்யும் யூத அதிகாரிகள் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் பலவுண்டு. அவற்றை முந்திக் கவனித்துக்கொள்வது நல்லது. ஒருவனுடைய குற்றம் நிரூபிக்கிறவரையில் அவனைக் குற்றமற்றவனாகவே எண்ண வேண்டும். நியாயாதிபதியானவன் கைதியின் உயிரைக் காப்பாற்ற முயற்சிக்கவேண்டுமேயன்றி அவனைக் கொலை செய்யும்படி தீர்மானிக்கக்கூடாது. கைதியில்லாத சமயத்தில் விசாரணை நடத்தவுங்கூடாது. கைதி கோர்ட்டில் நிற்கும்போது அவனுக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்ல வந்திருப்பவர்களை நியாயாதிபதி பார்த்து: மானிடஜீவன் அருமையானதென்றும், உண்மையை மறைப்பதும் பொய்யை உரைப்பதும் பாதக மென்றும், குற்றமற்றவனின் இரத்தப்பழி சாட்சிகள் பேரிலும் அவர்கள் சந்ததியின்பேரிலும் சுமருமென்றும் சொல்லி அவர்களை எச்சரித்து அவர்களிடத்தில் சத்தியம் வாங்கிக்கொள்ளவேண்டும். கைதியின் நியாயத்தை எடுத்துப்பேச நியாயவாதி ஒருவனை ஏற்படுத்தவேண்டும். அப்படிப்பட்ட வக்கீல் ஒருவன் இல்லாமல் விசாரணை நடத்தக்கூடாது. கைதிக்கு அனுகூலமான வாக்கு

மூலத்தை நியாயாதிபதி தள்ளாமல் அங்கீகரிக்கவேண்டும். கைதிக்கு அனுகூலமான காரியங்களைச் சொன்னவன் பிந்தி அவனுக்கு விரோதமாகப் பேசக்கூடாது. பெரியோர்களுக்குப் பயந்து சிறுவர்கள் தங்கள் சாட்சியை மாற்றிவிடாதபடி சிறுவர்களை முந்தி விசாரிக்க வேண்டும். ஒருவன் மரணாக்கினைக்கு உரியவனென்று தீர்க்கப்பட்டாலும் சங்கத்தாருடைய பொது அபிப்பிராயத்தையும் கவனிக்கவேண்டும். கைதி குற்றவாளியல்லவென்றால் விசாரிக்கும் நாளிலேதானே விடுதலை கூறிவிடலாம். அவன் மரண தண்டனைக் குரியவனானால் ஒருநாள் தாமதித்து மறுநாளிலேதான் தீர்ப்புச் சொல்லவேண்டும். ஆகையால் ஒய்வுநாளுக்காவது பண்டிகைக்கு முந்தின தினத்திலாவது விசாரணை வைத்துக்கொள்ளக்கூடாது. சூரியன் அஸ்தமித்தபின் விசாரணை நடத்தக்கூடாது. கைதி தன்னை குற்றமற்றவன் என்று சொன்னதினிமித்தம் விடுதலை செய்யவுங்கூடாது, தான் குற்றவாளியென்று ஒத்துக்கொண்டதினிமித்தம் ஆக்கினை செய்யவுங்கூடாது. தீரவிசாரித்ததின் பின்பே தீர்ப்புக் கூறவேணும். நியாயவிசாரனை இவ்வளவு பயபக்தியுடன் நடத்தப்படவேண்டியதால் மரணதண்டனை விதிக்கும் நியாயாதிபதிகள் முந்தின நாள் முழுவதும் உபவாசிக்கவேண்டும். மரணதண்டனை கூறின அதே நாளில் கொலை நிறைவேற்றப் படக்கூடாது.

தேவனுடைய ஜனங்களாகிய யூதர்களின் நியாயவிதிகள் எவ்வளவு அருமையானவை! ஆங்கிலேய அரசாட்சியின் மேன்மையும் பலமும் இவைகளல்லவா? கடவுளைவிட்டு விலகிப்போன யூதஅதிகாரிகள் நியாயவிதிகளைக் கைக்கொண்டு நடந்தார்களென்று சொல்ல ஏதுவில்லை. ஆண்டவரை அவர்கள் எவ்வளவு அநியாயமாய் நடத்தினார்களென்பதை படிப்படியாகக் கவனிப்போம்.

தோட்டத்தில் அவர் தம்மைக் கையளிக்கப் பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் அவரை வளைந்துகொண்டன. அவரைப் பின்கட்டாகக்கட்டி முதலாவது அன்னாவிடத்தில் கொண்டுபோனார்கள். இவனுக்கு வயது எழுபது. இவன் எகிப்திலுள்ள அலெக்சந்திரியாப் பட்டணத்திலிருந்து பெரிய ஏரோதுவினால் கொண்டுவரப்பட்டவன். இவன் இருபது வருஷம் பிரதான ஆசாரியனாகயிருந்தவன். இவனுக்குப்பின் இவன் ஐந்து மக்களாகிய எலியேசர், யோனத்தான், தேயோப்பிலு, மத்தியா, அன்னா என்பவர்கள் முறையே பிரதான ஆசாரியராயிருக்கும் படி வழிசெய்துகொண்டான். கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றவன் அன்னாவென்னும் இவனுடைய கடைசி மகனே. அன்னா இப்பொழுது பிரதான ஆசாரியனா யிராமற்போனாலும் பிரதான ஆசாரியனுக்கு மேலாகவே

மதிக்கப்பட்டான். இந்தவருஷத்தில் இவன் மருமகனாகிய காய்பாவென்பவன் பிரதான ஆசாரியன். ஆனாலும் இவன் அன்னாவின் கையிலுள்ள ஒரு பொம்மைபோல்மாத்திரம் இருந்தான். அன்னா கபடும் சாமர்த்தியமுமுள்ளவன். தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கின கள்ளன். ஆலய வியாபாரத்தால் அதிக ஐசுவரியமுள்ளவன். ரோமரிடத்தில் அதிகச் செல்வாக்குள்ளவன். சரியான சதுசேயன். ஆசாரிய ஊழியமும் ரோமரால் ஏற்படுத்தப்பட்டபடியால் அதின் மகிமை ஒழிந்தது. லஞ்சம் அவ்வுத்தியோகத்திற்குக் காரணமா யிருந்தபடியால் ஊழியம் கறைப்பட்டது. ஐசுவரியமும் செல்வாக்குமுள்ள அன்னா ஆசாரிய ஊழியம் தன் குடும்பத்தை விட்டுப்போகாதபடி உபாயம் செய்துகொண்டான். விரியன் பாம்புக்குட்டிகளுக்குத் தகப்பனான விரியன்பாம்பு இந்த அன்னாவே.

எஜமான் கட்டுண்டவராக அன்னாவுக்குமுன் நிற்கிறார். காய்பா சங்கத்தலைவனாகையால் அவரை முதலாவது அவனிடத்திற்கே கொண்டுபோகவேண்டியது. ஆகிலும் ஆண்டவரைக் கொலைசெய்வதற்கு அன்னா அதிக முயற்சி யுள்ளவனாயிருந்ததாலும், அவரை குற்றவாளியாக்கக்கூடிய தந்திரமும் சமர்த்தும் அவனுக்கிருந்ததாலும் அவனிடத்திற்கே முதலாவது அவரைக்கொண்டுபோனார்கள். சாட்சிகளைக் காணோம். அவருக்காகப் பேசுவதற்கு சீஷராவது சிநேகிதர் களாவது இல்லை. கபடும் தந்திரமும் நிறைந்த அன்னா ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். பாதகனைப்போல் கட்டுண்டவராய்த் தனித்துநிற்கும் இரட்சகனோ எவருக்கும் அஞ்சாத நெஞ்சராய் மகா சாந்தத்தோடு அவனுக்குமுன் நிற்கிறார். அவருடைய வாய்ச்சொல்லைக்கொண்டு அவரைக் குற்றப்படுத்த ஆலோசித்த அன்னா அவரைப் பார்த்து: உன் சீஷர்கள் எங்கே? அவர்கள் எந்த நாட்டார்? எதற்காக நீ அவர்களை உன்னோடு சேர்த்துவைத்திருந்தாய்? அவர்களுக்கு நீ சொல்லிக்கொடுத்த உபதேசம் என்ன? இவைகளைப்பற்றி அறிய விரும்புகிறேன் என்றான். இருதயங்களின் இரகசியங்களை அறிந்திருக்கிற ஆண்டவர் அவன் நோக்கத்தைக் கண்டு கொண்டார். சீஷர்கள் என்கிற பேச்சையே விட்டுவிட்டார். தம்மைக் காட்டிக்கொடுத்த யூதாஸைக் காட்டிக்கொடுக்க மனதில்லாதிருந்த கருணாகரன், தம்மை நம்பியிருந்த ஏழைச்சீஷர்களைக் காட்டிக்கொடுப்பாரா? அவர்களும் பிடிக்கப்பட்டு மரணாக்கினையடையச் சகிப்பாரா? உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்ப்பவர் இவரேயல்லாமல் அவர்களல்லவே. நீங்கள் என்னைத் தேடுவதுண்டானால் இவர்களை விட்டுவிடுங்க ளென்று தோட்டத்தில் அவர் சொன்ன காரணமுமிதுவே.

ஞானமுள்ள ஆண்டவர் சீஷர்கள் என்ற பேச்சை முற்றிலும்விட்டு மற்றக் கேள்விக்கு விடைபகர்ந்தார். அன்னாவே! நான் அந்தகாரத்துக்கும் இருளுக்கும் உரியவரல்ல. என் கிரியைகள் உங்களைப்போல் அந்தகாரத்தின் கிரியைகள் அல்ல. அந்தகாரக் கிரியைகளை அழிக்கவே நான் பிறந்தேன். நான் அந்தரங்கத்தில் ஒன்றும் பேசவில்லை. ஜெப ஆலயங்களிலும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன். நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? கைதியினிடத்தில் நீர் விசாரிக்குமுன்னே சாட்சிகளை நீர் விசாரிப்பதே நியாயம். ஆயிரமாயிரமான பேர் என் உபதேசத்தைக் கேட்டிருக்கிறார்கள். அதிகாரிகளான வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், ஏரோதியர், போர்ச்சேவகர், தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் என் உபதேசத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு கேட்டவர்கள் இங்கேயும் நிற்கிறார்கள். அவர்களிடத்தில் விசாரியும் அவர்கள் சொல்லுவார்கள் என்றார்.

எல்லாராலும் சமர்த்தனெனப் புகழ்பெற்ற அனனியா அசந்துபோனான். என்ன பேசுகிறதென்று அவனுக்குத் தோன்றவில்லை. மனக்கலக்கமும் வெட்கமும் அடைந்தான். இச்சகம் பேசி வயிறு பிழைக்கும் ஒரு கீழ்மகன் தன் எஜமானைப் பிரியப்படுத்தும் நோக்கமாய் பிரதான ஆசாரியருக்கு நீ இப்படியா உத்தரவு சொல்லுகிறதென்று ஞானக்களஞ்சியத்தைக் சற்றுங்கூசாமல் கன்னத்தில் ஒரு அறை அறைந்தான்.

இதிலிருந்து பொறுமைநாதன் படப்போகிற கணக்கற்ற அடிகளுக்கு இதுவே முதல் அடி. அதிகாரப்பிரியனான அன்னா அதைத்தடுக்காது மகிழ்ச்சியடைந்தான். கைதியாக்கப்பட்டவரை குற்றமின்னதென்று நிரூபிக்குமுன் அடிப்பது நியாயமா? நியாயாதிபதி அனுசரிக்கவேண்டிய விதிகளுக்கு ஏற்குமா? அன்பின் ஆண்டவர் தம்மை அடித்தவனைப் பார்த்து: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால் அதை எடுத்துக்காட்டு. அப்படியில்லையென்றால் நீ என்னை அடித்தது நியாயமா வென்று அன்னாவும் மற்றவர்களும் உணரும்படி பேசினார். அனனியாவென்னும் ஆசாரியன் பவுலை வாயிலடியுங்கள் என்று சொன்னபோது வெள்ளையடிக்கப்பட்ட சுவரே! கர்த்தர் உம்மை அடிப்பாரென்று பவுல் கோபத்துடன் சொல்ல, தேவனுடைய பிரதான ஆசாரியரை நிந்திக்கிறாயாவென்று பக்கத்தில் நின்றவர்கள் அதட்டவும், இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாதென்று பவுல் மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று. நமதாண்டவருடைய காரியமோ அப்படியல்ல. முதலிலிருந்து கடைசிவரை அவரை என்ன பாடுபடுத்தினாலும், எவ்வளவு அநியாயமாக நடத்தினாலும்,

வார்த்தையிலோ செய்கையிலோ கொஞ்சமும் அவர் தவறினவரல்ல. ஒன்றைப் பதட்டமாய் பேசி அதற்காகப் பிந்தி மனஸ்தாபப்பட்டவருமல்ல. இந்த விசாரணைகளிலும் குரூரமான பாடுகளிலும் அவரில் விளங்கின சாத்மீகமும் மன அடக்கமும் பொறுமையும் கவனிக்கத்தக்கது. தனக்குத் திருப்தியான உத்தரவு சொல்லவில்லையென்று அன்னா கோபப்பட்டு சேவகரை நோக்கி: இவனைக் கட்டின கட்டோடே காய்பாவிடம் கொண்டு போங்கள். அவரே இவனை விசாரிக்கத் தகுந்தவர். அநேகர் அழிந்து போவதைப்பார்க்கிலும் ஒருவன் அழிந்துபோவது நல்லதென்று நமக்கு ஆலோசனை சொன்னவரும் அவரேயென்று பொறுமைநாதனை கட்டுண்டவராகக் காய்பாவிடம் அனுப்பினான். துஷ்ட புலிக்குமுன் நிறுத்தும்படி தூய ஆட்டுக்குட்டியைக் கொண்டுபோனார்கள்.

காய்பாவுக்கு யோசேப்பு என்பது சரியான பேர். காய்பாவென்பது துணைப் பேர். காய்பா என்பதும் கேபாவென்பதும் ஒரே கருத்துள்ளது. சீமோனுக்கு ஆண்டவர் கேபாவென்று பெயரிட்டார். கேபாவென்றால் கல்லென்று அர்த்தம். இந்நேரத்தில் பேதுரு ஆண்டவரை மறுதலித்துத் தவிக்கிறார். கல்லாகிய பிரதான ஆசாரியன் ஒருபக்கம் தம்மை அநியாயமாக வதைக்க, கல்லாகிய சீமோன் மறுபக்கம் தம்மை மறுதலித்து மனம்பதைக்க, இரண்டு கற்களுக்கும் இடையில் ஆண்டவர் நெருக்கப்பட்டார். ஒரு கல் அழிந்துபோகிற பழைய சபையையும், மற்றக்கல் ஸ்தாபிக்கப்படபோகிற புதிய சபையையும் குறிக்கிறதென்று ஒருவர் எழுதியிருப்பதும் சரியே.

அன்னாவும் காய்பாவும் தங்கள் மாளிகையில் பக்கத்துக்குப்பக்கம் குடியிருந்தார்கள். காய்பா இவ்வருஷத்துப் பிரதான ஆசாரியன். அதிகாரப் பெருமையும் பொருளின் மயக்கமும் இவன் கண்ணைக் குருடாக்கினது. பதினேழு வருஷம் இவன் பிரதான ஆசாரியனாயிருந்தான். ஆண்டவர் ஆலயத்தைச் சுத்திகரித்த நாள்முதல் அவரைக் கொலைசெய்யத் தீர்மானித்தான். அன்பின் சொரூபியைத் தன்குடும்பத்தை அழிக்கவந்த கோடரியென்று நினைத்தான். அவர் கீர்த்தி பெருகப் பெருக இவனுக்கு மூர்க்கம் பெருகிற்று. யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோலவே காய்பாவுக்குள்ளும் புகுந்தான். அவன் பீடத்தில் உட்காரவே சனதாரீம் சங்கத்தைச் சேர்ந்த சிலரும் அங்கே கூடினார்கள். சனதாரீம் சங்கத்தில் எழுபத்தொரு அங்கங்களுண்டு. இந்த நடுராத்திரிக் கூட்டத்துக்கு எல்லாரும் வரவேண்டுமென்றல்ல. விசாரணை நடத்துவதற்கு இருபத்துமூன்று பேர் இருந்தாலும் போதும். காய்பா பீடாதிபதியாக மேடையில் வீற்றிருக்க, தர்க்கமுறை விதிக்கும் பிரதி பீடாதிபதி அவன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பான். வேறு

இரண்டுபேரில் ஒருவன் கைதிக்கு அனுகூலமான விஷயங்களையும், மற்றவன் கைதிக்குப் பிரதிகூலமான விஷயங்களையும் எழுதுவான். போர்ச் சேவகர் கைதியைக் கட்டவும் அடிக்கவும் வேண்டிய கயிறு வாறுகளைக் கையிற்பிடித்தவர்களாய் நியாயாதிபதிக்கு எதிரில் நிற்பார்கள். இப்படிப்பட்ட நியாயசபைக்குமுன் எஜமான் கட்டுண்டவராய் நிற்கிறார். இவ்விசாரணையில் நீதி ஒன்றுதவிர மற்றதெல்லாம் உண்டு. அவரை விசாரணைசெய்யும்படி இவர்கள் கூடிவராமல் தண்டிக்கும்படிக்கே கூடினார்கள் என்பது நிச்சயம். ஏதோ ஒரு குற்றத்தைத் கண்டு இவர்கள் அவரைப் பிடிக்கவில்லை. ஆதிமுதல் தங்களுக்குள்ளிருந்த விரோதத்தை நிறைவேற்றும் படிக்கே பிடித்தார்கள். அவர் மரணத்துக்குரியவரென்பது அவர்கள் விசாரித்துத் தீர்மானித்ததல்ல. கொலை செய்யும்படி தாங்கள் தீர்மானித்துக் கொண்டதற்கு இவ்விசாரணையை ஒரு மூடலாக வைத்துக்கொண்டார்கள். ஆரம்பமுதல் அவரைப் பகைக்கத் தலைப்பட்டார்கள். அவர் போனவிடமெங்கும் வேவுகாரரை அனுப்பி அவரைக் குற்றப்படுத்த முயன்றார்கள். எவனாகிலும் அவரைப் பின்பற்றினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்க ஏற்பாடு செய்தார்கள். அவர் ஆலயத்தில் பிரசங்கித்தபோது அவரைப்பிடிக்கச் சேவகரை அனுப்பினார்கள். அவர் லாசருவை எழுப்பினபோது அவர் சாகவேண்டியதே நியாயமெனத் தீர்மானித்தார்கள். அவர் பவனி வந்தபோது அவரைப் பேச்சில் அகப்படுத்தப் பிரயாசப் பட்டார்கள். அவர் இருக்குமிடம் அறிந்து தங்களுக்குத் தெரிவிக்கும்படி கட்டளையிட்டார்கள். ஜனக்கூட்டத்துக்குத் தெரியாமல் பக்குவமாய் அவரைப் பிடிக்கும்படி வகை தேடினார்கள். யூதாசுக்குக் கூலிகொடுத்து அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்தார்கள். சமயம் வாய்த்தபோது நடுராத்திரியில் அவரைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தார்கள். இவர்களா ஆண்டவருக்கு நியாயஞ் செய்யப்போகிறார்கள்? இப்படிப்பட்ட பாதகர்களா நியாயவிதிகளைக் கவனிக்கப் போகிறார்கள்? ஆகிலும் விசாரணை நடக்கிறது.

அவருக்கு ஆக்கினைதீர்ப்புக் கூறவேண்டிய பொதுக் கூட்டம் பொழுது விடிந்து நடக்கும். இந்தச் சமயத்தில் அவர்மேல் சாட்டத்தகுந்த குற்றங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். இதற்காக அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்தார்கள். மார்க்க சம்பந்தமாக அவர்கள் சாட்டக்கூடிய குற்றங்கள் பலவுண்டு அவைகள் விசாரணைக்கு நிற்குமோவென்பது சந்தேகம். அவர் பாவங்களை மன்னித்தது தேவதூஷண மென்றால் எழுந்து நடக்கச்செய்தது என்ன தூஷணம்? ஓய்வுநாளை அவர் மீறினாரேயென்றால் தீராத நோய்களை நீக்கினாரே அதை இல்லையென்று சொல்ல முடியாதே.

தேவாலயக்கடைகளைக் கவிழ்த்தினாரேயென்றால் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துவதை எந்தத் தீர்க்கதரிசியும் சகிக்கமாட்டானே. ஆசாரங்களைக் கண்டித்துப் பேசினாரே யென்றால் அவைகளிலும் மேன்மையான வழியை எடுத்துக் காண்பித்தாரே. ஆயக்காரரோடும் பாவிகளோடும் சிநேகமா யிருந்தாரென்றால் அப்படிப்பட்ட பாவிகளை இரட்சித்தாரே. பேசினபேச்சுகளில் குற்றம் பிடிக்கலாமோவென்றால் அவர் பேசினதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசவில்லையே. இவ்வாறு அவருடைய உபதேசத்திலும் கிரியைகளிலும் அவரிடம் குற்றம் பிடிக்கலாமென்றால் அவர்களே குற்றவாளிகளாவார்கள். அவர்கள் அவரோடு பேசக்கூடாமல் வாயடைக்கப்பட்டதைச் சங்கத்தார் லேசில் மறக்கக்கூடுமா? மேலும் இப்படிப்பட்ட காரியங்களைக்கொண்டு அவருக்கு மரணத்தீர்ப்புக் கூறவும் முடியாது. இதன்றி, எப்பொழுதும் ஒருவருக்கொருவர் விரோதிகளாயிருந்த பரிசேய சதுசேய வகுப்பார் இயேசுவைக் கொலைசெய்யும் விஷயத்தில் சிநேகிதராக ஒன்று கூடியிருக்கிறார்கள். மார்க்க காரியங்களை விசாரிக்கப் புகுந்தால், பவுலை விசாரித்த நாளில் பரிசேயருக்கும் சதுசேயருக்கும் பெருங்கலகம் உண்டானதுபோல தங்களுக்குள்ளேயே கலகம் ஏற்படும். தாங்கள் கொண்ட நோக்கம் கைகூடாமல் அனர்த்தமாய் முடியும். ஏனென்றால் பரிசேயரின் கொள்கை சதுசேயருக்குப் பிடிக்காது. சதுசேயரின் கொள்கை பரிசேயருக்குப் பிடிக்காது, ஒருவேளை அவரைக் குற்றவாளியாகத் தீர்த்தாலும் மரணதண்டனை கொடுக்கும் அதிகாரம் ரோம தேசாதிபதிக்கே உரியது. தங்கள் மார்க்கத்துக்கடுத்த குற்றங்களை அவனிடத்தில் கொண்டுபோனால் அவன் அவைகளைக் கொஞ்சமும் கவனிக்க மாட்டான். இராஜ்யத்திற்கு விரோதமான குற்றமாயிருந்தால் அவன் நிச்சயமாகவே கவனிப்பான்.

ஆகையால் ரோம இராஜ்யத்திற்கு விரோதமான ஒரு குற்றத்தை ஸ்தாபிக்க நாடினார்கள். பொய்ச்சாட்சிகளை ஆயத்தம் செய்துகொண்டு வந்தார்கள். அவர்கள் அவருக்கு விரோதமாய்ச் சொன்ன காரியங்கள் பொருந்தவில்லை. தோவாலயத்தை இடித்துப்போட்டு மூன்று நாளைக்குள் எழுப்புவதாகச் சொன்னானென்று வேறு இரண்டு சாட்சிகள் வந்து கூறினார்கள். அவர்கள் சாட்சி ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்தது. ஆண்டவர் ஆலயத்தைப்பற்றிச் சொல்லி மூன்று வருஷங்களாகிறது. அது இடிபடவுமில்லை கட்டப்படவுமில்லை. இதை ஒரு குற்றமாகப் பிலாத்துவிடம் சொன்னால் அவன் சிரிக்கவே சிரிப்பான். வாஸ்தவத்தில் தேவாலயம் அழிக்கப்படப்போவதைக் குறித்து ஆண்டவர் தமது சீஷருக்குத் தனித்துச் சொன்னார். அதை இந்த இரண்டு சாட்சிகளும் அறிந்தவர்களல்ல. அவர் ஆலயத்தைச்

சுத்திகரித்தபோது சொன்ன வார்த்தைகளின் கருத்தை இவர்கள் அறியக்கூடாமல் வேறுவிதமாக மாற்றிச் சொல்லித் தவறிப்போனார்கள்.

இதுவரை தமக்கு விரோதமாய் அவர்கள் பேசின வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு நின்ற ஆண்டவர் கொஞ்சமும் பதட்டப்படவில்லை. வாய்திறந்து தமக்காக ஒருவார்த்தையும் பேசவில்லை. தம்மைக் கொலைசெய்யவே அவர்கள் தீர்மானித்திருக்கிறார்களென்றும், தாம் என்ன நியாயம் சொன்னபோதிலும் தம்மைத் தப்பவிடமாட்டார்களென்றும் அவர் அறிந்திருந்ததால் யாதொன்றும் பேசாது மௌனமாய் நின்றார். எத்தனை குற்றங்களை எடுத்துப் பேசினாலும் அவைகள் மார்க்கசம்பந்தமாகயிருக்கிறதேயன்றி, அவரைக் கொலை செய்வதற்கேதுவான இராஜ துரோகமாகவில்லையே என்று காய்பா மனம் பதைத்தான். வீணாய் நேரம் போகிறதேயல்லாமல் காரியம் முடிவுக்கு வரவில்லையே என்று ஆத்திரப்பட்டான். விடியுமுன் இவனை ஆக்கினைக்குட்படுத்தாமல் நாளைவரை விசாரணையை நீட்டிவைத்தால் இவன்மீது மதிப்புள்ள கலிலேயரால் என்ன ஆபத்து நேரிடுமோவென்றும் கலங்கினான். இதுவரை சாட்டப்பட்ட குற்றங்கள் ரோமருக்கு விரோதமான தல்லவே. தேசாதிபதி இவனைக் கொலைசெய்யவதற்கேற்ற குற்றமல்லவோ நமக்கு வேண்டும். சாட்சிகளும் தவறிப் போனார்களே. நேரமும் கடந்துபோகிறதே. இவனோ நம்மைச் சற்றும் மதிக்காமல் மௌனம் சாதிக்கிறான். என் அதிகாரமும் சமர்த்தும் இக்கதியாயிற்றே. இடுக்கியில் அகப்பட்ட எலிபோல் அல்லவா தவிக்கிறேன்.

வேறு வழியில்லை இவன் வாய்மொழியைக்கொண்டே இவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டும் என்றெண்ணி, ஆசனத்தைவிட்டெழுந்து, அதிகக் கோபதாபத்துடன் அவரைப்பார்த்து: இவர்களெல்லாரும் உனக்கு விரோதமாய் எத்தனையோ குற்றங்களைச் சொல்லுகிறார்களே. நீ பதிலொன்றும் சொல்லாமல் நிற்கிற காரணமென்னவென்று கேட்டான். அவரோ பேசாமலிருந்தார். அவர் பேசாததினால் தம்மைக் குற்றவாளியென்று ஒத்துக்கொண்டாரென்று சொல்வது கூடாது. அவர் பேசாதிருக்கிறவரை அவரைக் குற்றப்படுத்தவும் வழியில்லை. அவரைப் பேசச்செய்வதோ அசாத்தியம். ஆகையால் காய்பா ஒரு உபாயஞ் செய்தான். கடவுள்பேரில் ஆணையிட்டுக்கேட்டால் எப்படியும் வாய்திறந்து பேசுவாரென்று நிச்சயித்து: நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்.

இதுவரை மௌனமாய் நின்ற ஆண்டவர் இப்பொழுது பேசாதிருப்பாரா? சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்கப்

பிறந்தவர் சத்தியத்தை மறைப்பாரா? பாவிகளுக்காக ஜீவனைக் கொடுக்கப்போகிறவர் கடைசிநேரத்தில் தம்மை வெளிப் படுத்தாதிருப்பாரா? மெய்யாகவே அவர் பேசும் வேளைவந்தது. இதற்கு முன் தம்மைக் கிறிஸ்துவென்றும் தேவகுமாரனென்றும் பகிரங்கமாக ஜனங்களுக்கு அவர் சொல்லவில்லை. அப்படிச் சொன்னதினால் ஜனங்கள் அவரை அறிந்துகொள்ளப் போகிறதுமில்லை. அதைத் தெளிவாய்ச் சொல்லியிருந்தால் கலகத்துக்கும் குழப்பத்துக்கும் இடமாகுமேயன்றி ஆவிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு வழியிராது. உலக மேசியாவை எதிர்பார்த்த யூதஜனங்களுக்கு அது பெரிய சோதனையாக இருந்திருக்கும். தம்மை கிறிஸ்துவென்று தெளிவாகச் சொல்லியிருந்தால் காலத்துக்குமுன் அவரைக் கொலை செய்திருப்பார்கள். தாம் நிறைவேற்ற வந்த வேலைக்கு இடையூறு உண்டாகும். இவைகளையறிந்தே அவர்தம்மை மேசியாவாகிய கிறிஸ்துவென்று தாராளமாய்ச் சொல்லவில்லை. தமது உபதேசங்கள் கிரியைகள்மூலமாய் தம்மை இன்னாரென்று அறிந்துகொள்ளும்படி விரும்பினார். பிசாசுகள் தம்மை இன்னாரென்று அறிந்திருந்ததால். அவைகள் தம்மை அறிக்கைசெய்ய இடங்கொடுக்கவில்லை. தவனமுள்ள ஆத்துமாவாகிய சமாரிய ஸ்திரீக்குத் தாமே கிறிஸ்துவெனத் தெளிவாய்ச் சொன்னார். சீஷர்கள் தம்மைக் கிறிஸ்துவென்று அறிக்கை செய்தபோது அதை ஒருவருக்கும் சொல்லக்கூடா தென்று கட்டளையிட்டார். யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு நீர் கிறிஸ்துவா என்று கேட்டபோது நான் செய்கிற கிரியைகளைக் கவனியுங்கள் என்றார். இவன் தன்னை மேசியாவென்று சொல்லக்கேட்டோமென்று அவருக்கு விரோதமாகச் சாட்சிசொல்லக்கூடிய இரண்டு சாட்சிகள் கிடைக்காமற்போனது ஆச்சரியமல்ல ஆதலால் காய்பா அவரைக் குற்றப்படுத்த விரும்பி அவரையே ஆணையிட்டுக் கேட்கவேண்டியதாயிற்று.

உலகோர் ஜீவிக்கும்பொருட்டு தம் ஜீவனைக் கொடுக்கவந்த ஆண்டவர் சபை தலைவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். நீர் சொன்னபடியே நான் கிறிஸ்துதான். ஆதிகாலமுதல் உங்கள் முன்னோர்களும் நீங்களும் எதிர் பார்த்திருந்த மேசியா நானே. தானியேல்முதலான தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட மனுஷகுமாரன் நானே. இப்பொழுது நீங்கள் எனக்கு நியாயாதிபதிகளாய் வீற்றிருக்கிறீர்கள். நானோ பின் கட்டாகக் கட்டப்பட்டுப் பெரும்பாதகனைப்போல் உங்களுக்குமுன் நிற்கிறேன். மனுமகனாகிய நான் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், உங்களையும் உலகிலுள்ளோரையும் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக வானத்தின் மேகங்கள்

மேலிறங்கி வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார். தாமே மேசியாவென்று திட்டமாய்ச் சொல்லிவிட்டார்.

இவைகளைக்கேட்ட நியாயசங்கத்தார் இனிச் செய்ய வேண்டியதென்ன? கைதியானவன் தான் குற்றமற்றவன் என்று சொன்னதினிமித்தம் அவனை விடுதலை செய்யவுங்கூடாது. தான் குற்றவாளியென்று சொன்னதினிமித்தம் அவனைத் தண்டிப்பதும் நியாயமல்ல. கைதி சொன்னது உண்மையோ பொய்யோவென்று தீர விசாரித்துப் பின்பு தீர்ப்புச் சொல்லவேண்டும். கிறிஸ்து வரவேண்டுமென்று யூதர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அவர் வரவேண்டிய காலம் சமீபமென்றும் அவர்கள் அறிந்தார்கள். அப்படிப்பட்ட காலத்தில் யாராவது ஒருவர் எழும்பி தம்மை மேசியாவென்று சொல்லுகிறதாயிருந்தால், மேசியாவுக்குரிய அடையாளங்கள் அவரிலுண்டோவென்று விசாரிக்கவேண்டியது அவர்கள் கடமை. ஒருவன் பொய்யாகத்தன்னைத் தீர்க்கதரிசி யென்று சொன்னால் அவன் கொலைசெய்யப்படுவது நியாயமானால், ஒருவன் தன்னை மேசியாவென்று பொய்யாகச் சொன்னால் அவன் தண்டிக்கப்படுவது எவ்வளவு நியாயம்! இவர் தம்மைத் தேவகுமாரனாகிய கிறிஸ்துவென்று ஒத்துக்கொண்டபோது தேவனுக்குத் தம்மைச் சமமாக்கினா ரென்பது காய்பாவுக்குப் பட்டப்பகலைப்போல் விளங்கிற்று. ஒன்று அவர்சொன்னபடி அது உண்மையாயிருக்கவேண்டும். அல்லது அதைப்போல் பயங்கரமான தேவதூஷணம் வேறொன்றுமில்லை. இதை திட்டமாய் விசாரணைசெய்து தேவகுமாரனாகிய கிறிஸ்து அவர்தானென்று நிரூபிக்கப்பட்டால் அன்னாவும், காய்பாவும், சனதரீம் சங்கத்தாரனைவரும் தாங்கள் அவருக்குச்செய்த கொடுமைக்காக அவர் பாதத்தில் விழுந்து கண்ணீர் விட்டு அழவேண்டும். இராஜாவே! எங்கள் பாவங்களை மன்னியும், ஆண்டவராகிய கிறிஸ்துவே துரோகிகளை இரட்சியுமென்று புலம்பவேண்டும். அவரைக் கட்டினவர்கள் முழங்காலில் நின்று அவர் கட்டுகளை அவிழ்த்து விடுவார்கள். போர்வீரர் யாவரும் தங்கள் எஜமான்களோடு சேர்ந்து தரையில் விழுந்து அழுது புலம்புவார்கள். சபாமண்டப நியாயஸ்தலம் பாவங்களை அறிக்கைசெய்யும் ஜெபாலயமாகும். பாவிகளின் நேசர் மனதுருகி: மக்களே! உங்கள் பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்பட்டது; எழுந்திருங்களென்று அவர்களை கைதூக்கி இரட்சிப்பார்.

ஆனால் காய்பா அவருடைய வார்த்தையை நம்பவில்லை. அவர் கிறிஸ்துதானாவென்று விசாரிக்கவும் விரும்பவில்லை. சத்தியத்தை அறிய விரும்புகிறவர்களுக்குப் போதுமான அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. புது அடையாளம் காட்டவேண்டியதில்லை. அவர் ஜீவித்ததுபோல் ஒருவனும்

மாசற்ற பரிசுத்தனாக ஜீவித்ததில்லை. அவர் பேசினதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை. அவர் செய்த கிரியைகளைப்போல் ஒருவனும் ஒருக்காலும் செய்ததில்லை. வேதவாக்கியங்களெல்லாம் அவரைக்குறித்தே சாட்சிகொடுத்தன. அவ்வசனங்கள் அவரில் நிறைவேறின. யோவான்ஸ்நானன் அவரைக்குறித்துச் சாட்சிகொடுத்தான். அவருடைய கிரியைகள் அவரைக்குறித்துச் சாட்சி கொடுத்தன. பிதா தமது குமாரனைக்குறித்துச் சாட்சிகொடுத்தார். அவரே உயிர்த் தெழுதலும் ஜீவனுமென்பதற்கு லாசரு சாட்சியாக யிருந்தான். எழுப்பப்பட்ட அவனை அவர்கள் கண்டார்கள். அவர் செய்த அற்புதங்களை அறிவார்கள். போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை. தப்பெண்ணங்கொண்டவனை உணர்த்த யாரால்கூடும்? குரோதத்தை உறுதியாய்ப் பிடித்தவனை யார் திருப்பக்கூடும்? பொறாமையும் பகையும் உள்ளவனுக்கு நீதி நியாயமேது? அவன் கேட்டும் கேளாதவனே. கண்டும் காணாதவனே. மாம்சத்துக்குரிய காய்பாவும் அவன் கூட்டத்தாரும் ஆவிக்குரிய இரட்சகனை அறியமாட்டார்கள். அவரையும் அவருடைய கிரியைகளையும் புரட்டினார்கள். தேவஉபதேசம் அவர்களுக்குத் தேவதூஷணம். தேவகிரியைகள் அவர்களுக்குப் பிசாசின் கிரியைகள். ஆங்காரமும் கொலைபாதகமும் நிறைந்த காய்பா **சத்தியமூர்த்தி** சொன்ன வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளமாட்டான். அவரை விடுதலை செய்யவுமாட்டான். ஆவிக்குரியவர்கள் மாம்சத்துக்குரிய கிறிஸ்தவர்களால் துன்பப்படுவதும் இதுபோலவே.

நான் தேவகுமாரனாகிய கிறிஸ்துதான் என்று ஆண்டவர் சொன்னவுடனே காய்பா ஆசனம்விட்டுக் குதித்தெழுந்து கோபத்துடன் தன் வஸ்திரங்களைக் கிழித்தான். இத்தோடு அவனும் அவன் குடும்பமும் அவன் மகிமையும் கிழிந்தே போயிற்று. அவன் மகா கெர்வத்துடன் பிரவேசிக்கும் தேவாலயத்திரைச் சீலை மாலை மூன்று மணிக்கு கிழிவதற்கு அடையாளமாகக் காலை மூன்று மணிக்கு அவன் அங்கி கிழிந்தது. அவன் குடும்பத்தின் ஆசாரிய மகத்துவமும் கிழியும். அவன் ஐசுவரியச் செருக்கும் கிழியும். அவனால் அசுத்தமாக்கப்பட்ட தேவாலயமும் ஒருகல்லில் மறுகல் இராதபடி இடியும். யூதஜாதியே துண்டுதுண்டாய்க் கிழிக்கப்பட்டுச் சிதறுண்டு போகும்காலம் வரும். காய்பாவே! உன் கோபம் உன்னையே கிழிக்கும். அவன் எழுந்துநின்று சங்கத்தைப்பார்த்து: நண்பர்களே! கேட்டீர்களா தேவதூஷணம்? இனி நமக்கு வேறே சாட்சிகளும் வேண்டுமா? இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டான். அவர்கள் ஏகோபித்து: இவன் மரணத்துக்குப் பாத்திரனே பாத்திரனென்று தீர்த்தார்கள். மேசியாவென்கிற குற்றமே சரியான குற்றம். மேசியாவென்று எழும்பினவர்களால்

தேசத்தில் கலகம் உண்டானதுண்டு. அது இராயனுக்கு விரோதமான குற்றமாகும். தேசாதிபதி இந்தக்குற்றத்தை இலேசாய் விடமாட்டான். இவனை எப்படியும் கொலைசெய்யவே உத்தரவு கொடுப்பானென்று தங்கள் காரியம் கைகூடி வந்ததற்காகச் சந்தோஷப்பட்டார்கள். காலை சுமார் மூன்று மணியாயிற்று. சங்கத்தார் பொழுது விடிந்தபின் மறுபடியும் கூடி வரவேண்டியதிருந்ததால் இரண்டு மணி நேரமாவது தூங்கி இளைப்பாறுவதற்கென்று அவரவர் வேகமாய்த் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். கட்டுண்ட அருள்நாதனுக்கோ நித்திரையுமில்லை, இளைப்பாறுதலுமில்லை. மகா சாந்தப் பிரபுவாகிய அவரைப் பாசான்தேசத்துப் பலத்த எருதுகள் மத்தியில் விட்டுப்போயினார்.

மூர்க்கவெறிகொண்ட துஷ்டர்கள் கையில் அருள்நாதன் பட்டபாடுகள் கொஞ்சமல்ல. இவ்வளவு அடிக்கலாம் இவ்வளவு அடிக்கக்கூடாதென்கிற அளவின்றி அதிகாரிகளின் மூர்க்கம் எவ்வளவோ அவ்வளவுக்கு அதிகமாகவே அவரைப் பாடுபடுத்தினார்கள். சற்றும் இரக்கமில்லாத இந்தப்பாதகர்களால் இரக்கம் நிறைந்த ஆண்டவர் வதைக்கப்பட்டார். அவரை முன்னுக்கும் பின்னுக்கும் இழுத்து வேதனைப்படுத்தினார்கள். ஏன் இப்படிச் செய்கிறீர்களென்று கேட்பார் ஒருவருமில்லை. சகலரும் சத்துருக்களாயிருக்கிறார்களேயன்றி பரிதபிக்கக்கூடிய ஒரு சிநேகிதனுமில்லை. தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன்; ஒருவனையும் காணோம். மூன்று வருஷம் தம்மோடுகூடயிருந்த துரோகியும் அங்கேயிருந்தான். அவனை அவர் பார்த்த போதெல்லாம் அவர் வேதனை அதிகரித்ததேயன்றித் தணியவில்லை. அவர் கண்களைக் கட்டி மறைத்தார்கள். அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள். அவர் சிரசில் குட்டினார்கள். கைகளால் ஓங்கி அடித்தார்கள். சாகப்போகிறவர் தானே என்ன செய்தால்தான் என்ன? பிரம்பாலும் தடியாலும் அடித்தார்கள். அடிபட்ட இடங்களைத் தொட்டுத்தடவக் கூடாதபடி அவர் கைகள் கட்டினபடியேயிருந்தன.

ஆ! என்ன பரிதாபம். குற்றவாளியாயிருப்பவனுக்குக்கூட இக்கொடுமை செய்யலாகாதே. அவர் திருமுகத்தில் துப்பினார்கள். மகா தூஷணமாய் அவரைத் தூஷித்தார்கள். உன்னை அடித்தவன் பேரைச் சொல்லென்று பரியாசம்பண்ணிச் சிரித்தார்கள். தாறுமாறாக அவரை அடித்ததால் அவருடைய தலைமயிர் கலைந்து முகத்தை மூடிக்கொண்டது. அதை ஒதுக்கிவிடவோ அவருக்குக் கையில்லை. அவரோ கட்டப்பட்டவராக வாயில் மறுவார்த்தையின்றிச் சகலத்தையும் பொறுமையாய்ச் சகித்தார். காற்றையும் கடலையும் அமர்த்தின வாயில் அடிகள் விழுவதென்ன? சூரியனைப்போல் பிரகாசித்த

முகத்தில் எச்சி வடிவதென்ன? சேனையைக் கீழே விழச்செய்த இராஜபார்வை மூடப்பட்டிருப்பதென்ன? குஷ்டரோகம் பறக்கவும் மரித்தோர் எழும்பவும் செய்த கரங்கள் கட்டப்பட்டிருப்பதென்ன? தூதர்களின் துதிகேட்ட செவியில் தூஷணங்கள் விழுவதென்ன? நமது பாவங்கள் அல்லவோ அவரை இக்கதிக்குள்ளாக்கிற்று. நமக்காக அவர் பாவமாக்கப் பட்டார். ஒரு நிமிஷத்தில் அவர்களெல்லாரையும் நிர்த்தூளி யாக்கக்கூடும். அல்லது ஒருநிமிஷத்தில் அவர்கள் மத்தியிலிருந்து மறைந்து போகவுங்கூடும். நம்மைத் தப்புவிக்கும்படி அவர் தம்மை ஒப்புவித்ததினால் இதுவரை **தமக்காக** அவர் ஒரு அற்புதத்தையும் செய்யாததுபோல, இந்தச் சமயத்திலும் செய்யவில்லை.

பொழுது விடிந்தது. சுமார் ஆறுமணியாகிறது. ஆலோசனைச் சங்கம் மறுபடியும் கூடிற்று. இதில் சனதரீம் சங்கத்தைச் சேர்ந்த மிகுதியான அங்கங்கள் இருந்தார்கள். நிக்கொதேமுவும் அரிமத்தியாவூர் யோசேப்பும் இருந்தார்களோ இல்லையோ தெரியாது. இருந்தாலும் அவர்களாலே என்ன ஆகும்? இராத்திரி நேரத்தில் மரணாக்கினை விதித்தோமென்று சொல்லப்படாமல் பகலில் நடந்ததென்று காட்டும்படிக்கே இக்கூட்டம் கூடினது. காய்பாவின் அரண்மனையில் தீர்மானித்த விஷயங்களை இக்கூட்டத்தில் ஊர்ஜிதப்படுத்தவேண்டும். எல்லாரும் ஒத்துக்கொண்டபிற்பாடு குற்றத்தை எழுதிக் கையொப்பமிட்டு முத்திரையிடவேண்டும். அருமை இரட்சகரை கட்டுண்டவராக இம் மகா சங்கத்திற்குமுன் நிறுத்தினார்கள். காய்பாவென்பவன் இரவில் விசாரணைசெய்த விஷயத்தை எல்லாருமறியச்சொல்லி, மறுபடியும் ஆண்டவரைப்பார்த்து: நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லிவிடு என்று கேட்டான். இதே வாரத்தில் அவர் அவர்களிடத்தில் கிறிஸ்துவைக்குறித்தும் யோவான்ஸ்நானகனைக்குறித்தும் கேட்ட கேள்விக்கு அவர்கள் உத்தரவுசொல்ல மனமற்றிருந்தார்கள்.

ஆகையால் ஆண்டவர் அவர்களைப்பார்த்து: நான் கிறிஸ்துதான் என்று திட்டமாய்ச் சொன்னாலும் நீங்கள் என்னை நம்பப்போகிறதில்லை. நான் உங்களிடத்தில் கேட்கும் கேள்விகளுக்கும் உத்தரவு சொல்லமாட்டீர்கள். என்னை விடுதலை செய்யவுமாட்டீர்கள். நான் சொல்லிப் பிரயோஜன மென்னவென்பதுபோல் நின்றார். உடனே அவர்களெல்லாரும் சேர்ந்து அப்படியானால் நீ தேவனுடைய குமாரனாவென்று கேட்டார்கள். நீங்கள் சொல்லுகிறபடியே நான் தேவனுடைய குமாரன்தான், இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். அதை நீ நிரூபிக்கக்கூடுமாவென்று இப்பொழுதாகிலும் கேட்டார்களா? இல்லை. இனி நமக்கு வேறு சாட்சிகள் வேண்டியதில்லை. இவன்

வாயினாலே சொல்லக்கேட்டோமே என்று சொல்லி, இராஜதுரோகியென்னும் குற்றத்தைச் சாட்டித் தேசாதிபதியாயிருந்த பிலாத்துவிடம் கொண்டுபோனார்கள்.

இது நியாய விசாரணையோ? அநியாய விசாரணையோ? அவர் குற்றவாளியென நிரூபிக்கப்படுமுன் அவரைப்பிடித்துக் கட்டினது அநியாயமே. அவர்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்கள் இல்லாதிருக்க நியாயாதிபதிகளே வாதியாக நின்றது அநியாயமே. மற்றவர்கள் குற்றஞ்சாட்டினாலும் நியாயாதிபதியாயிருப்பவன் கைதியை இரட்சிக்கும்படி பிரயாசப்படுவதற்குப் பதிலாக தானே அவரைக் கொலை செய்யும்படி தீர்மானித்துக்கொண்டது அநியாயமே. அவருக்கு விரோதமான சாட்சிகள் வந்திருக்க அவருக்கு அனுகூலமான சாட்சிகளை அழைக்காமலிருந்தது அநியாயமே. சாட்சிக்காரரை உண்மையேயன்றி பொய்சொல்லக் கூடாதென்று பிரமாணம் வாங்கவேண்டியதிருக்க பொய்ச் சாட்சிகளைத் தாங்களே தேடிக்கொண்டுவந்ததும் அநியாயமே. அவர் தண்டனைக்குரியவரானால் தண்டிக்கப்படுமளவும் பத்திரமாய்க் காவல்செய்ய வேண்டியதிருக்க மூர்க்கர்கள் மனங்கொண்டபடி அவரை அடித்து வேதனைப்படுத்த ஒப்புக்கொடுத்தது அநியாயமே. விசாரணையை பகலில் நடத்தாமல் இராவோடுராவாய் நடத்தினது அநியாயமே. மற்றவர்கள் சாட்டும் குற்றத்தைத் தீர விசாரித்து நிரூபிக்கப்பட்டபின் தண்டிக்கவேண்டியதிருக்க அவர் சொன்ன வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு தண்டனை விதித்ததும் அநியாயமே. கைதி சொன்ன வார்த்தைகள் உண்மையோ பொய்யோவென்று விசாரிக்காமலிருந்ததும் அநியாயமே. அவருக்காகப் பேசுகிறவர்கள் ஒருவருமில்லாதிருக்க நியாயாதிபதியும் சங்கத்தலைவரும் ஒன்றுபோல் அவரைக் குற்றப்படுத்தத் துணிந்ததும் அநியாயமே. மரணாக்கினை கூறினபின் ஒருநாள் தாமதிக்காமல் அதேநாளில் அவரைக் கொன்றுபோட்டதும் அநியாயமே.

மனுஷகுமாரன் தமது மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் தேவதூதர்களின் மகிமையோடும் ஆயிரம்பதினாயிரமான பரிசுத்தவான்களின் மகிமையோடும் வந்து தமது மகிமையின் சிங்காசனத்தில் உட்காரும் நாளில் இவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் அறியாமையினால் இப்படிச் செய்தார்களென்று இரட்சகர் சிலுவையிலிருந்து அவர்கள் மன்னிப்புக்காக ஜெபித்தார். மேசியா பெத்லகேமிலிருந்து வரவேண்டியதிருக்க, அவர் நாசரேத் தூரிலிருந்து வந்தது அவர்களுக்கு விரோதமாயிருந்தது. மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை அவர்கள் மாம்சத்தின்படி அர்த்தம்பண்ணிக்கொண்டதால் ஆவிக்குரிய

அவரது போதனைகள் அவர்களுக்கு இடறலாயிருந்தது. அவர்கள் அவரை வெறும் மனுஷனென்று எண்ணியிருக்க அவர் தம்மைத் தேவகுமாரனென்று சொன்னது அவர்களுக்குத் தாங்கக்கூடாத தேவதூஷணமாயிற்று. பேதுரு பிரசங்கித்தபோது அவரை அறியாமல் அவருக்கு இப்படிசெய்தார்கள் என்று சொல்லி மனந்திரும்புதலுக்கு அழைத்தார். அநேகர் பிந்தி அவரே கிறிஸ்துவென்று அறிந்து விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள். "சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்." நம்மைப்பார்க்கிலும் அவர்கள் பொல்லாத பாவிகளென்று நினைத்து நாம் மோசம்போகாமல், அவரடைந்த அநியாயத்துக்கும் சகலபாடுகளுக்கும் காரணம் நமது பாவமே என்றுணர்ந்து, அவருக்கு நம்மை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்து அவருடைய மகிமைக்கென்றே ஜீவிப்பது நமது கடமை. "நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது."

32

குற்றமற்ற குற்றவாளி

The Guiltless Guilty

பிலாத்து அசல் ரோமன். யுத்தவீரர் வம்சத்தான். கிறிஸ்து பிறந்த இருபத்தாறாம் வருஷம் திபேரியு இராயனால் யூதேயாவுக்கு ஆறாவது கவர்னராக இவன் நியமிக்கப்பட்டான். 'கரட்டுக் கட்டைக்கு முரட்டுக்கோடரி' என்றாற்போல் மூர்க்கரான யூதருக்கு வாய்த்த மன்னன் இவனே. பிலாத்தென்றால் யூதருக்கு ஆகாது. யூதமார்க்கமும் அவர்கள் ஆசாரங்களும் பிலாத்துவுக்கு வெறுப்பு. அவன் அவைகளை வெறுத்தது யூதருக்கு வெறுப்பு. இவனுக்கு முன்னுள்ள தேசாதிபதிகள் யூதரோடு வெகு பக்குவமாய் நடந்துகொண்டனர். இவன் ஆண்ட ஆறு வருஷத்துக்குள் பல சிக்கல்களில் அகப்பட்டுக்கொண்டான். வேறொரு மாகாணத்துக்கு இவன் அனுப்பப்பட்டிருந்தால் மிகவும் மேன்மையடைந்திருப்பான். இவன் யூதேயாவுக்கு வரவும் இவன் காலத்தில் கிறிஸ்து பாடுபட நேர்ந்ததும் தேவச்செயலே. நன்மைக்காகிலும் தீமைக்காகிலும் கிறிஸ்துவுடன் சம்பந்தப்படுபவர் மறக்கப்படுவதில்லை. மரியாளின் பரிமளத்தையும் யூதாஸின் துரோகத்தையும் யார் மறப்பார்? ரோமராயர் கவர்னர்கள் பேரை நாம் மறந்தாலும் பொந்தியுப்பிலாத்துவை மறக்க முடியுமா? "அவர் பொந்தியுப் பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு மரித்தார்" என்பது சரித்திர உண்மையைக் காட்டுகிறது.

இவனுக்கு முன்னிருந்த அதிகாரிகளைப்போல் யூதருடன் இவன் விவேகமாய் நடந்துகொள்ளாததினால் அவர்கள் விரோதத்திற்காளானான். முந்தின கவர்னர்கள் வெள்ளியினால் இளைத்த கழுகுச் சின்னங்களை எருசலேமுக்குக் கொண்டு வராமல் செசரியாவிலே வைத்துக்கொள்வது வழக்கம். இவன் தேசாதிபதியானவுடனே அச்சின்னங்களை எருசலேமுக்குக் கொண்டுபோகவும் அங்கே ஸ்தாபிக்கவும் கட்டளையிட்டான். இது இரவில் நடந்தபடியால் யூதர் அதைக் காணவில்லை. பொழுது விடிந்தபோது அச்சின்னங்களை அவர்கள் கண்டு மூர்க்க வெறி கொண்டவர்களாய்ச் செசரியாவுக்குச் சென்று

பிலாத்தைப் பார்த்து: பரிசுத்த நகரத்தில் விக்கிரக சின்னங்களை வைக்காமல் உடனே நீர் அகற்றவேண்டுமென்று முறையிட்டார்கள். பிலாத்து சற்றும் அசையவில்லை. ஐந்து நாள்களாக இரவுபகலாய் அவன் அரமனைக்குமுன் கீழேவிழுந்து சின்னங்களை **அகற்றும், அகற்றுமெனக்** கூவினார்கள். ஆறு நாளாகியும் அவர்கள் பிடிவாதமாய்க் கிடப்பதைக்கண்ட பிலாத்து, போர்வீரர் அவர்களைச் சூழ்ந்துகொள்ளவும் திடீரென அவர்களைத் தாக்கி மடிவிக்கவும் ஏற்பாடுசெய்தான். அவர்களோ சற்றும் அஞ்சாமல் நாங்கள் சாவோமேயன்றி பரிசுத்த நகரத்தில் விக்கிரகங்கள் வைக்கப்பட ஒருக்காலும் சம்மதிக்கமாட்டோமென்று தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் வைராக்கியத்தையும் மனவுறுதியையும் பிலாத்து கண்டு அச்சின்னங்களை செசரியாவுக்குக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். இதனால் தேசாதிபதி உறுதியற்றவனென்றும்; தாழ்ந்தால் ஏறுவான், ஏறினால் தாழ்வான் என்றும் யூதர் கண்டுகொண்டார்கள்.

இதற்குப்பின் வேறொரு சம்பவம் நடந்தது. எருசலேமுக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை பிலாத்து இக்குறைவை நீக்கும்படி சாலொமோன் என்ற தடாகத்திலிருந்து வாய்க்கால் வெட்டி பட்டணத்துக்கு தண்ணீர் கொண்டுவர ஏற்பாடுசெய்தான். வேலையின் மத்தியில் பணமில்லாதபோது ஆலயப் பொக்கிஷத்திலிருந்து திரவியம் எடுத்தான். பரிசுத்த நாணயத்தில் இவன் கைவைத்ததென்னவென்று யூதர் கலகஞ்செய்தார்கள். அவர்களை அடக்கும்படி பிலாத்து தன் போர்ச்சேவகரை சாதாரண மனுஷரைப்போல் வஸ்திரம் தரிப்பித்து, ஆயுதங்களை மறைத்துக்கொண்டு கூட்டத்தில்போகவும், கலகக்காரரை அடக்கவும் கட்டளையிட்டான். கலகம் அடங்காததை அவன் கண்டு போர்ச்சேவகருக்குச் சைகைகாட்ட அவர்கள் கூட்டத்தில் விழுந்து முரட்டுத்தனமாய் அடித்தார்கள். அநேகர் அடிபட்டும், கீழேவிழுந்து மிதியுண்டும் செத்தார்கள். கலகம் ஒருவாறு அமர்ந்தது. ஜனங்களுடைய பகையும் மூர்க்கமுமோ தணியவில்லை.

வேறொரு சமயம் பிலாத்து திபேரியு இராயனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட பொன்முலாம் பூசின கேடகங்களை எருசலேமுக்குக் கொண்டுவந்து ஏரோதின் அரமனையில் அலங்காரத்துக்காக வைத்தான். ஆசாரியர் இதைக்கண்டு உடனே அவைகளை அவ்விடத்தைவிட்டு அகற்றும்படி கேட்டார்கள். அவனோ சம்மதிக்கவில்லை ரோம இராயனுக்குப் பிராது செய்தார்கள். இராயனுக்கு இரண்டே காரியங்கள் பிரதானம். தீர்வை ஒழுங்காய் வரவேண்டும்; ஜனங்கள் அமைதியாயிருக்கவேண்டும். மற்றவிஷயங்களில் அதிகாரிகள் ஜனங்கள்

பிரியம்போல் நடந்துகொள்ளவேண்டும். ஆகையால் இராயன் பிலாத்தைக் கடிந்துகொண்டு அக்கேடகங்களை உடனே அகற்றவும் செசரியாவில் அகுஸ்துராயன் ஆலயத்தில் அவைகளை வைக்கவும் கட்டளையிட்டான். இது தேசாதிபதிக்கு வெட்கமும் யூதருக்கு இளக்காரமுமாயிருந்தது. இதன்றி, தேவனை ஆராதிக்கும்படி எருசலேமுக்கு வந்திருந்த கலிலேயரில் சிலரைப் பிலாத்து கொலைசெய்து அவர்கள் இரத்தத்தை அவர்கள் பலிகளோடு கலந்தான். இக்கொடிய செய்கை யூதருக்கு அவன்மேல் முன்னிலும் அதிகமான கோபத்தை உண்டாக்கினது. இவைபோன்ற பல காரணங்களால் யூதருக்கும் பிலாத்துவுக்கும் தீராப்பகை ஏற்பட்டது.

பண்டிகை நாள்களில் கலகம் நேரிடாதபடி பார்த்துக் கொள்ளவும், குற்றவாளிகளை விசாரணைசெய்யவும் பிலாத்து எருசலேமுக்கு வந்து ஏரோதின் அரமனையில் சிலநாள்கள் தங்குவான். இந்தப்பண்டிகைக்கு அவன் வந்திருந்தபோது வெள்ளிக்கிழமை காலை ஆறுமணிக்குமேல் ஜனங்களின் இரைச்சல் அவன் காதில் விழுந்தது. யூத அதிகாரிகளும் அவர்கள் கூட்டத்தாரும் அன்பின் சொரூபியை கட்டுண்டவராக, அவர் கழுத்தில் கயிறுபோட்டு பிலாத்திடம் இழுத்துக்கொண்டு போனார்கள். ஜனங்களால் கலகம் நேரிடாதபடி அவர்கள் விழித்தெழும்புமுன் அவரை ஆக்கினைக்குள்ளாக்கிவிடவேண்டும் என்கிற ஆத்திரமே இவ்வளவு சீக்கிரமாய் அவர்களைப் புறப்படச் செய்தது. மேலும் தங்கள் விசாரணையில் அவருக்கு மரணத்தீர்ப்புக் கூறிவிட்டதால் பிலாத்து யாதொரு விசாரணையுமின்றி அவரைக் கொலை செய்யும்படி உடனே உத்தரவு கொடுத்துவிடுவான் என்று நினைத்தார்கள். அவ்வாறு உத்தரவு கிடைக்க மூன்று மணி நேரமானதும் ஆச்சரியமல்ல. யூதரான இவர்கள் தங்கள் நியாயவிதிகளை மீறி குற்றமற்றவரைக் குற்றவாளியாக்கினதுபோல ரோம அதிகாரியும் செய்வானென்று எதிர்பார்த்தது எவ்வளவு மதியீனம்! பெஸ்து பவுலைக்குறித்து அகிரிப்பா இராஜனுக்குச் சொன்னதை நாம் அறிவோமே. "நான் எருசலேமிலிருந்தபோது பிரதான ஆசாரியரும் யூதருடைய மூப்பரும் பவுலைக்குறித்து என்னிடத்தில் பிராதுபண்ணி அவனுக்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் பிரதியுத்தரமாக: குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்கு முன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாக அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன்." ஆகையால் இச்சமயத்தில் பிலாத்து இராஜ்ய சட்டத்துக்கு விரோதமாய் நடப்பது கூடாது. மேலும் யூதர்மேல் அவனுக்குத்

தீராப்பகையிருந்ததால் எளிதில் அவர்கள் விருப்பத்துக்கு இணங்கவுமாட்டான். கைதியாய் நிற்கிற இயேசு யூதனாயிருந்த போதிலும் தன் சத்துருக்கள் அவரைப் பகைக்கிறதினிமித்தம் இவன் அவருக்குத் தயவுபாராட்ட முயல்வதும் இயல்பே. என்றாலும் ரோமருடைய நியாயவிதிகளை அனுசரித்துக் கடைசிவரை உறுதியாய் நிற்பானோவென்பதும் சந்தேகம். இப்பொல்லாத ஜனங்களுடைய மூர்க்கத்தையும் அவர்களால் தனக்குக்கிடைத்த இராயனுடைய எச்சரிப்புகளையும் இவன் மறந்தவனல்ல. கூடியமட்டும் நியாயத்துக்காகப் போராடுவான். அதனால் தனக்கே ஆபத்துவரும்போல் தோன்றினால் அநியாயமாக அவரைப் பாதகர் கையில் விட்டுவிடுவான்.

பிலாத்து ஜனங்கள் இரைச்சலைக் கேட்டவுடன் அரமனையைவிட்டு வெளியே வந்தான். கொசுவை வடிக்கட்டி ஒட்டகத்தை விழுங்கும் இப்புண்ணியவான்கள் தீட்டுப்படாமல் தங்கள் பஸ்காவைப் புசிக்கும்படி புறஜாதியான் அரமனைக்குள் பிரவேசிக்காமல் வெளியே நின்றார்கள். தேசாதிபதி நியாயாசனத்தில் உட்கார்ந்தான் ஜெகத்திரட்சகன் பாதகன்போல் கட்டுண்டு அவன் முன்பாக நின்றார். இயேசு பிடிப்பட்டாரென்கிற செய்தி பரவவும் பட்டணத்தாரெல்லாரும் பிலாத்துவின் அரமனைக்குமுன் கூடினார்கள். பாதுகாப்புக்காக ஒருபலத்த சேனை நியாயஸ்தலத்தையடுத்து நின்றது. விசாரணை ஆரம்பித்தது.

பிலாத்து யூத அதிகாரிகளைப்பார்த்து: இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்களே, இவன்மேல் என்ன குற்றம் சாட்டுகிறீர்களென்று கேட்டான். இதுவே விசாரணையை நடத்தவேண்டிய முறை. பிலாத்து இப்படிக் கேட்டது அவர்கள் நோக்கத்திற்கு முற்றிலும் விரோதமாயிருந்தது. தங்களுடைய தீர்ப்பையே பிலாத்து தனது தீர்ப்பாக அங்கீகரித்து யாதொரு விசாரணையுமின்றி ஒரு நிமிஷத்தில் அவரை மரணத்துக்கு ஒப்புவித்துவிடுவானென்று எண்ணியிருந்தார்கள். அவன் திரும்பவும் விசாரிக்கப்போகிறானே என்று கண்டதும் மனம்பதறி: இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம். சாதாரணமான குற்றவாளிகளை எங்களுடைய சட்டப்படி தண்டனைசெய்யும் அதிகாரம் எங்களுக்குண்டு. இவன் குற்றம் மகாபெரிய பாதகமாயிருப்பதாலும். பெரியதண்டனை செலுத்தும் அதிகாரம் எங்களுக்கில்லாததாலும் இவனை உம்முடைய கையில் ஒப்புவித்தோம். அதிகாரிகளான நாங்கள் எல்லாரும் ஒருமித்து வந்திருப்பதே இவன் பெரிய குற்றவாளியென்பதற்கு அடையாளமல்லவா? நீர் எங்கள் தீர்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமேயல்லாமல் மறு விசாரணை செய்ய அவசியமில்லை

யென்றார்கள். பெரிய குற்றம், பெரிய தண்டனையென்று பேசுகிறார்களேயல்லாமல் **சிலுவை** என்பதை மறைத்துக் கொண்டார்கள்.

பிலாத்து கிறிஸ்துவைக் குறித்து இதுவரை கேள்விப் படாதவனல்ல. மூன்று வருஷங்களாய் அவர் செய்த உபதேசம் கிரியைகள் அவனுக்கு எட்டியிருக்கவேண்டும். அவனுடைய உத்தியோகஸ்தர் எங்கும் இருந்தார்கள். உலகமே அவரைப் பின்சென்றது என்று சொல்லும்படி அவருடைய கீர்த்தி நான்குதிசைகளிலும் பிரஸ்தாபமாயிற்று. எங்கே பார்த்தாலும் அவர் பேச்சாயிருந்தது. பிலாத்து செசரியாவிலிருந்தபோது இயேசு இன்னாரென்றும் எப்படிப்பட்டவரென்றும் அறிந்திருக்க வேண்டும். ஆண்டவர் அத்திசைகளுக்குப் போனதுண்டு அவன் ஜனங்களிடத்தில் விசாரித்தபோது அவர்கள் அவரைக் குறித்தும் எங்கும் நன்மைசெய்கிற தீர்க்கதரிசியென்றே சொல்லியிருக்க வேண்டும். பிலாத்து அறிந்தமட்டும் ஆண்டவர் சேனைகளைச் சேர்த்து ரோமருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தவரல்ல. இராயனுக்கு வரிகொடுக்கவேண்டாமென்று சொன்னவரல்ல. அவருடைய உபதேசங்கள் இராஜ்யத்தை அழிக்கும்படி செய்யப்பட்டவைகளல்ல. அவர் செய்த வேலை யூத அதிகாரிகளையும் அவர்கள் ஆசாரங்களையும் நொறுக்குகிறதா யிருந்தன. அவ்வளவும் பிலாத்துவுக்குச் சந்தோஷமே. பண்டிகையில் அவர் ஆலயத்தைச் சுத்திகரித்து அதிகாரிகளைக் கலங்கவைத்தது எருசலேமிலிருந்த அவனுக்கு எட்டா திருந்திருக்குமா? அவர் இராஜபவனி வந்ததும் ஒலிவமலை எதிரொலிக்கும்படி திரளான ஜனங்கள் ஆர்ப்பரித்ததும் தேசாதிபதிக்குத் தெரியாமலிருந்திருக்குமா? அதில் இராஜ்யத்துக்கு விரோதமான கலகம் ஒன்றுமில்லையென்று அறிந்தல்லவோ அச்சமயம் பிலாத்து அமர்ந்திருந்தான். அவர் செய்த யாவும் அவனுக்குச் சம்மதமே. தன்னையும் தன் இராஜ்யத்தையும் விரோதிக்காமல், தனக்கு விரோதிகளான யூத அதிகாரிகளை யல்லவோ அவர் கடிந்துகொள்ளுகிறார்.

ஆகையால் இவர்கள் அவரைப் **பொறாமையினால்** கொண்டுவந்தார்களேயன்றி மற்றப்படியல்லவென்று நிச்சயித்து அவர்களைப் பார்த்து இவன் குற்றவாளியென்று நீங்கள் கண்டதுண்டானால் இவனை நீங்களே கொண்டுபோய் உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந் தீர்த்துக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் அவரைக் கொலை செய்யத் தீர்மானித்திருப்பதை அவன் கண்டுகொள்ளவில்லை. ஏதோ ஒரு தண்டனை கொடுக்கும்படிமாத்திரம் கேட்கிறார்க ளென்று நினைத்தான். இனி மறைப்பதில் பிரயோஜனமில்லை யென்று காரியத்தைத் திறந்து சொன்னார்கள். இவன் குற்றம்

மரணாக்கினைக்கேதுவான குற்றம். நீர் உத்தரவு கொடாமல் ஒருவனையும் மரணாக்கினை செய்ய எங்களுக்கு அதிகார மில்லையே என்றார்கள். குற்றத்தை விசாரிக்குமுன் உத்தரவு கொடுக்க எனக்கும் அதிகாரமில்லையே என்று பிலாத்து சொன்னான். அவன் அவரை விசாரியாமலே அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தால் அவரைக் கல்லெறிந்து கொல்லுவார்கள். அப்படிச்செய்தால் ஜனங்களுடைய கலகத்துக்கு அவர்கள் எப்படித் தப்புவார்கள்? ஆகையால் பாவத்தையும் பழியையும் பிலாத்துவின்மேல் வைக்கவும், "என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்" என்கிற வேதவாக்கியத்தின்படி ரோமச்சிலுவையில் அவர் அறைப்படவும் தக்கதாக, தாங்கள் அவரைத் தண்டிப்பதற்கு இணங்கவில்லை.

நல்லது, நீங்கள் இவன்மேல் சாட்டுகிற குற்றந்தான் என்னவென்று தேசாதிபதி கேட்டான். அவர்கள் இராவோடு இராவாய் அவரை விசாரித்து அவர்மேல் சாட்டிய ஒரு குற்றமுண்டு. தம்மை தேவகுமாரனாகிய கிறிஸ்துவென்று அவர் கூறியதைத் தேவதூஷணமென்று குற்றப்படுத்தியிருந்தார்கள். அதை இச்சமயத்தில் குற்றமாகச் சொல்லப்போனால் தங்கள் மார்க்க விஷயங்களை அருவருக்கிற பிலாத்து தங்களைப் பரியாசம்பண்ணித் துரத்திவிடுவான் என்றஞ்சி தேவதூஷணம் என்ற வார்த்தையை விட்டுவிட்டு வேறு குற்றங்களைப் புதிதாக உண்டுபண்ணினார்கள். கவர்னர் துரைகளே! இவன் நமது ஜனங்களை வஞ்சிக்கிறவன். இராயருக்கு வரிகொடுக்க வேண்டாமென்று சொன்னவன். தன்னை இராஜாவென்று சொல்லி ஜனங்களைத் தன்னிடம் சேர்த்துகொண்டவன் என்று மூன்றுவித குற்றங்களைச் சாட்டினார்கள். சனதரீம் சங்கத்தில் அவர் செய்த அறிக்கையைத் தேவதூஷணமென்று அர்த்தம்பண்ணி தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டவன், பிலாத்துமுன் வந்தவுடனே அதே வார்த்தையை வேறு அர்த்தமாகச் சொல்லி அவரைக் குற்றப்படுத்துகிறான். இதைப்போல் பொய்யும் பித்தலாட்டமுமுண்டோ? சில நாள்களுக்குமுன் இராயனுக்கு வரிகொடுப்பது நியாயமாவென்று அவர்கள் கேட்டபோது கொடுக்கத்தான் வேண்டுமென்று சொன்னாரே. யாரை அவர் வஞ்சித்தார்? இராஜாவாக்கும்படி ஜனங்கள் அவரைப் பிடிக்க வந்தபோது அவர் அவர்கள் கைக்கு விலகியோடினாரே.

யூதர் சாட்டின இக்குற்றங்கள் பொய்யென பிலாத்து அறிந்துகொண்டான். இவன் ஜனங்களை வஞ்சித்ததுண்டானால் அது என் செவிக்கெட்டாதிருக்குமோ? இவன் இராஜாங்க வரியை நிறுத்தினதுண்டானால் தீர்வை குறைவுபடாதிருக்குமோ? வரியை வசூல்செய்யும் உத்தியோகஸ்தர் அதை நமக்குப் பிராது

செய்யாதிருப்பார்களா? இவர்கள் மகா இராஜபக்தியுள்ளவர்கள் என்பதையும் நான் அறியாதவனா? ரோம இராஜாங்கத்தைத் தொலைக்கும்படி கலகஞ்செய்யும் துஷ்டர்கள் இவர்களல்லவா? இச்சமயத்தில் இராஜபக்தர்கள்போல் நடிப்பதை நான் நம்பி விடுவேனோ? ஒருவேளை இந்த மனுஷன் தங்களோடு சேர்ந்து ரோம இராஜ்யத்தை அழிக்கச் சம்மதிக்காததினிமித்தம் இவனைத் தொலைக்கும்படி தீர்மானித்துப் பொய்க் குற்றங்களைச் சாட்டுகிறார்களாக்குமென்று உத்தேசித்து ஆண்டவரின் வாக்குமூலத்தைத் தனித்துக் கேட்க விரும்பினான்.

பிலாத்து ஆசனத்தை விட்டெழுந்து அரமனைக்குள்சென்று **இயேசுவை** அங்கே வரவழைத்து நீ யூதருடைய ராஜாவாவென்று கேட்டான். அவர் நிற்கும் பரிதாபமான நிலைமையைப் பார்க்கும்போது அவரை இராஜாவா என்று கேட்க நியாயமில்லை. எத்தனையோ கைதிகளை பிலாத்து கண்டிருக்கிறான். முகத்தைப் பார்த்தவுடனே அவனவன் எப்படிப்பட்டவனென்று அறிந்துகொள்ளும் அனுபவம் பிலாத்துவுக்குண்டு. அவர் விஷயத்திலோ திண்டாடுகிறான். அவரது திருமுகத் தோற்றமும், கண்களின் ஆராய்ச்சிப் பார்வையும் அவனைக் கலங்கச்செய்தது. தம்மைக்கண்டு தத்தளிக்கும் தேசாதிபதியை சாந்தப்பிரபு பார்த்து: உமது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள நீர்தாமே இப்படிக் கேட்கிறீரோ அல்லது மற்றவர்கள் கேட்கச்சொன்னதின்பேரில் கேட்கிறீரோ? அதாவது உமது இராஜாங்கக் கருத்தின்படி இராஜாவாவென்று விசாரிக்கிறீரோ, அல்லது மேசியாவென்கிற கருத்தின்படி இராஜாவாவென்று விசாரிக்கிறீரோ என்று கேட்டார். தன் உள்ளத்தை அறியும் கைதி எப்படிப்பட்டவராயிருக்க வேண்டுமென்று பிலாத்து பிரமித்து: நான் யூதனா? உன் ஜனத்தாரும் பிரதான ஆசாரியருமல்லவோ உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்.. அவர்கள் சொன்னதைக் கொண்டுதான் கேட்டேனேதவிர மற்றப்படி நீ மேசியாவா யிருந்தால் அதைப்பற்றி எனக்கென்ன கவலை? இவர்கள் உன்னைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வரும்படி **நீ என்ன செய்தாய்** என்று கேட்டான்.

நான் செய்ததென்ன? நோயாளிகளையும் பிசாசு பிடித்தவர்களையும் குணமாக்கினேன். குஷ்டரோகிகளுக்குச் சுகம் அருளினேன். பசித்தோருக்கு அன்னமளித்தேன். தேவராஜ்யத்தின் அன்பைப் பிரசங்கித்தேன். எங்கும் எல்லோருக்கும் நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தேன். இதுதான் நான் செய்ததென மனதிலெண்ணிப் **பேசாமல்** நின்றார். நீ உன்னை யூதருடைய இராஜாவென்று சொன்னதுண்டோவென்று கேட்டான். உம்முடைய கருத்தின்படி நான் இராஜாவல்ல. உமக்குத் தெரியாத

கருத்தின்படி நான் இராஜாதான். நான் உலக இராஜாவா யிருக்கும்படி இவர்கள் எதிர்பார்த்தார்கள். நான் இணங்காததி னால் என்னை பிடித்தார்கள். என் இராஜ்யம் இவ்வுலகத்துக் குரியதல்ல. அப்படியிருந்தால் எனக்குச் சேனையிருக்கும். இவர்கள் என்னைப் பிடிக்காதபடி அவர்கள் போராடி யிருப்பார்கள். ஆகையால் என் இராஜ்யம் இவ்வுலக இராஜ்யமல்லவென்றார். நீ சொல்லுகிற வேறு கருத்தின்படி நீ இராஜாவா என்று கேட்டான். நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான். சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான். என் சத்தங்கேட்டு என் வசனத்தை ஏற்றுக்கொள்பவர்களே என் குடிகளாவார்கள். நான் அவர்களுக்கு இராஜாவாவேன் என்றார்.

சத்தியத்தை அறிய நாடுவது உத்தமர்கள் இயல்பு. பிலாத்து ஆவிக்குரிய மனுஷனாயிருந்தால் இவ்வருள்மொழி கேட்டமாத்திரத்தில் ஆடு தன் மேய்ப்பனை அறியுமாறு தன்முன் நிற்பவர் இன்னாரென்று அறிவதுமல்லாமல் அங்கேயே அவருக்கு அடியானாகும் பாக்கியத்தையும் அடைந்திருப்பான். அநேகரைப் போல் இவன் ஒரு நிர்விசாரி. இவனுக்குக் கடவுளுமில்லை மார்க்கமுமில்லை. இவன் சத்தியம் சத்தியமென்று பேசுவானேன்? சத்தியத்தைக் கண்டவன் யார்? ரோமத் தத்துவஞானிகளுக்கும் எட்டாத விஷயமாச்சே. இவன் காரியம் ஏதோ வித்தியாசமா யிருக்கிறது. இவனோடு அதிகம்பேசினால் நாமே அகப்பட்டுக் கொள்வோம். இதுவரை நாம் விசாரித்ததில் இவன் இராஜ துரோகியென்றாவது கலகக்காரனென்றாவது சொல்ல இடமில்லை. சத்தியமொன்றுண்டானால் அவ்விஷயத்தில் நாமேன் தலையிடவேண்டுமென்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு வெளியே வந்து: நான் இவனை விசாரித்துப்பார்த்ததில் இவனைத் தண்டிப்பதற்கேதுவான யாதொரு குற்றத்தையும் காணவில்லையே என்றான்.

இதைக்கேட்ட யூதஅதிகாரிகள் ஐயோ இதுவரை நாம் செய்த முயற்சிகள் யாவும் வீணாகவாவென்று வெறி கொண்டவர்கள்போல் குதித்தார்கள். வாயில் வந்ததை உளறினார்கள். இல்லாததையும் பொல்லாததையும் ஆண்டவர் மேல் குற்றமாகச் சாட்டினார்கள். மூர்க்கரான யூதர்கள் இதுபோலவே கோஷ்டஞ்செய்து அதிகாரிகளைத் தங்களிஷ்டத்துக்குள்ளாக்குவது வழக்கம். இவர்களிடத்தில் பிலாத்து பட்டபாடு கொஞ்சமல்ல. குற்றமில்லையென்று கண்டவுடனே பிலாத்து தாமதிக்காது ஆண்டவரை விடுதலை செய்திருக்க வேண்டியது. அவர்கள் கோஷ்டத்தையும் வார்த்தையையும் அவன் கவனித்துக்கொண்டிருந்தது தவறு.

தன்உத்தியோகத்துக்குச் சங்கடம் வருமோவென்று பயந்தான். இவன் உறுதியற்ற குணத்தை அறிந்த யூதர்கள் திடீரென வேறொரு உபாயஞ் செய்தார்கள்.

துரையவர்களே இதுமாத்திரமா? இவன் **கலிலேயா** நாடுதொடங்கி எருசலேம்வரைக்கும் சகல கிராமங்களிலும் பட்டணங்களிலுமுள்ள புருஷர் ஸ்திரீகள் பிள்ளைகளை ஏமாற்றி இராயனுக்கு விரோதமாக எழுப்பிவிட்டுத் தன் இராஜ்யத்தைச் சேரும்படி போதித்திருக்கிறான். இப்படி எழும்பின பலராலே இராஜ்யத்துக்கு எவ்வளவு உயிர்ச்சேதமும் பொருள்சேதமும் விளைந்ததென்பது தங்களுக்கே தெரியும். இவனை விடவே கூடாதென்று கூவினார்கள். பொல்லாத மாயக்காரர்! அவர் தங்களோடு சேர்ந்து ரோமரைத் தொலைப்பதற்கு தமது வல்லமையை உபயோகிக்காததினாலே அவரைப் பகைத்துக் கொல்லும்படி ஆரவாரித்து நிற்கிற இவர்கள், இச்சமயத்தில் அவர் ரோம இராஜ்யத்துக்கு விரோதமாக ஆள்களைச் சேர்த்தாரென்று பேசுவது எவ்வளவு பொய்! சத்துருக்கள் சாட்டும் குற்றங்களுக்கு அவர் ஏதாவது பதில் சொல்லுவாரென்று பிலாத்து காத்திருந்தான். அவரோ ஒரு வார்த்தையும் பேசாததைக்கண்டு ஆச்சரியப்பட்டான். அவர்கள் தம்மைக் கொலைசெய்யவே தீர்மானித்திருப்பதையும், அதை முடிக்கும்வரை குற்றத்தின்மேல் குற்றத்தைச் சொல்லிக் கொண்டிருப்பார்களென்பதையும், பிலாத்து உறுதியற்றவ னென்பதையும், குற்றமில்லையென்று அவன் கண்டாலும் தம்மை விடுதலைசெய்யாமல் யூதருக்குப் பயந்து தம்மை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுப்பான் என்பதையும் அவர் அறிந்திருந்தபடியால் ஒன்றுமே பேசாமல் மௌனமாயிருந்தார். பிலாத்து அவரைப் பார்த்து: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்க வில்லையா? விடுதலையடையும்படி நீ அவர்களுக்குப் பதில் சொல்லக்கூடாதாவென்று கேட்டான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட ஒரு கைதியை அவன் ஒருக்காலும் கண்டதில்லை. ஏனென்றால் கைதிகள் உயிர் தப்பும்படி தங்களுக்காக பேசத் துடித்துக் கொண்டிருப்பார்கள். அதினால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

இப்பெரிய சங்கடத்திலிருந்து தான் தப்புவதெப்படியென்று பிலாத்து தத்தளித்துக்கொண்டிருக்கையில் யூதர்கள் சற்றுநேரத்துக்குமுன் சொன்ன குற்றத்தில் ஒரு வார்த்தை அவனுக்குக் கிடைத்தது. **கலிலேயா**வென்பதே. இவன் கலிலேயனா? சரி சரி தலை தப்பினது தம்பிரான் செயல் என்றாற்போல், கலிலேயாவிலிருந்து பண்டிகைக்கு வந்திருந்த ஏரோதுவிடம் அவரை அனுப்பத் தீர்மானித்தான். அவனுக்கிருந்த

ஆறுதலும் சந்தோஷமும் கொஞ்சமல்ல. பிலாத்து சில கலிலேயரை தேவாலயத்தில் கொலை செய்த பாதகத்தினிமித்தம் இவனுக்கும் ஏரோதுவுக்கும் மனஸ்தாபமிருந்தது. இயேசுவை அவனிடத்தில் அனுப்பினால் தன்னை மதித்துத் தன்னிடத்தில் அனுப்பத் தேசாதிபதி சித்தங்கொண்டாரேயென்று ஏரோது சந்தோஷப்படவும், தங்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபம் இதனால் நீங்கவும், இப்பெரிய தொல்லை தன்னைவிட்டு விலகிப்போகவும் உத்தேசித்து இவனை ஏரோதுவினிடத்தில் கொண்டுபோங்க ளென்று ஜனங்களுக்குக் கட்டளையிட்டான். உடனே ரோமப் போர்வீரர் அவரை அங்கிருந்து கழுத்தில் கட்டியிருந்த கயிற்றால் பிடித்திழுத்து, இடுக்கமான தெருக்கள் வழியாக அவரை நடத்தி, வடகிழக்காய்ச் சென்று அரமனைக்குள் பிரவேசித்து ஏரோதுவுக்கு முன் அவரை நிறுத்தினார்கள்.

இந்த ஏரோது இரத்தப்பிரியனான மகாபெரிய ஏரோதுவின் ஐந்து மனைவிகளில் ஒருத்தி மகன். தகப்பனையும் மக்களையும் கொன்ற கொலைபாதகன். உடன்பிறந்த சகோதரருக்குத் தீங்கு செய்த தோஷி. அர்கெலேயு தன் குடிகளால் அவஸ்தைப் பட்டபோது இவன் ஜனங்களோடுசேர்ந்து தன் சகோதரனைத் தேசம் விட்டோட்டின பாவி. வேறொரு சகோதரனின் மனைவியை எடுத்துக்கொண்ட முறைகேடன். தாயையும் அவள் மகள் சலோமியையும் தன்னோடு கலிலேயாவுக்குக் கொண்டு வந்த கள்ளன். இவன் முந்தின மனைவி அரபிதேசத்து அரசனுடைய மகள். இப்பாதகன் தனக்குச் செய்த துரோகத்தைக் கண்டு அவள் தகப்பன் வீடுபோய்ச்சேர்ந்தாள். அவள் தகப்பன் இந்த அயோக்கியனான மருமகனுக்குச் சரியாய்ப் புத்தி கற்பித்தான். தன் பாவத்தைக் கடிந்துகொண்ட யோவானை திருட்டு மனைவியின் சொற்கேட்டுக் கொலைசெய்தான். கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு யோவானே எழுந்தானென்று நடுங்கினான். பிந்தி கிறிஸ்துவைக் கொலை செய்யப்போவதாகச் சொல்லி அனுப்பினான். இந்த நரியினிடத்தில் இரட்சகர் கட்டுண்டவராக நிறுத்தப்பட்டார்.

இவன் யூதனானதால் காலதாமதமின்றிக் காரியம் முடிந்துபோகுமென்று அதிகாரிகள் எண்ணினார்கள். ஏரோது இயேசுவைக் கண்டபோது வெகு சந்தோஷப்பட்டான். நான் இவனைக்குறித்து எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன். இவனைப் பார்க்கவேண்டுமென்று வெகுகாலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். எதிர்பாராதவண்ணம் என்முன் வந்து சேர்ந்தானே. இவன் அற்புத கிரியைகளில் ஒன்று கண்டாலே போதும். இவனோ மரணத்துக்காளாயிருக்கிறான். எப்படியும் என் தயவை நாடுவான். நான் கேட்பதை மீறாமல் செய்வான் என்று பலவாறாய் நினைத்துக்கொண்டு ஆசனத்தில் உட்கார்ந்தான்.

தன்முன் நிற்பவர் இன்னாரென்று அறியாத நீசன் சற்றும் மரியாதையின்றி அநேக விஷயங்களை அவரிடத்தில் பேசினான். கட்டுண்டு நிற்கும் கைதி தலைவணங்கித் தான் கேட்டதற் கெல்லாம் உடனே பதில் சொல்லுவாரென்று நினைத்தான். அவரோ அவன் முகத்தை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. வாய்திறந்து ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. ஏரோது அவமானப்பட்டு அவரைக் குற்றப்படுத்த வகையற்றுப்போனான். அரசன் கோபங்கொண்டானென்று கண்ட ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் குற்றஞ் சாட்டிக்கொண்டே நின்றார்கள். அதற்கும் அவர் மறுமொழி சொல்லவில்லை. ஏரோது கோபங்கொண்டு தன் போர்ச் சேவகரோடுசேர்ந்து அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி மினுக்கான ஒரு வெண்ணங்கியை அவருக்கு உடுத்தினான். தான் யாதொரு குற்றத்தையும் காணாததால் இவனை நீங்கள் மறுபடியும் பிலாத்திடமே கொண்டுபோங்கள்; விசாரணையைத் தொடங்கின அவரே அதை முடிக்கட்டுமென்று அவர்களை அனுப்பி விட்டான்.

பிராணநாதன் வியாழன் இரவில் சாப்பிட்டது. இதுவரை ஆகாரமோ பானமோ கிடையாது. தோட்டத்தில் வேர்வை இரத்தமாகச்சிந்த தேகபலம் ஒடுங்கினது. ஒரு நிமிஷமாகிலும் அவர் உட்காரவும் இளைப்பாரவுமில்லை. இதுவரை அவர்பட்ட அடிகளுக்கோ கணக்கில்லை. இவ்வளவு பலவீனமும் பரிதாபமுமான நிலைமையில் ஏரோதின் அரமனையிலிருந்து எருசலேம் வீதிகள் வழியாய் பிலாத்துவின் அரமனைக்குக் கொண்டுவந்தார்கள். நேற்று இரவில் கட்டின பின்கட்டு இன்னும் அவிழ்க்கப்படவில்லை. பிலாத்து பார்த்தான். இந்தப்பழி நம்மைவிட்டுத் தொலைந்ததென்றிருக்க திரும்பவும் நமது தலையிலேயே விழுந்ததே. நான் எப்படியும் இவனை விடுதலைசெய்து இந்த மூர்க்கர்களை அவமானப்படுத்துவேன் என்றெண்ணி ஆசனத்தில் உட்கார்ந்தான். இவன் என்னதான் செய்யப்போகிறான் பார்ப்போமென்று யூதரும் நியாயாசனத்தைச் சூழ்ந்துகொண்டனர். பிலாத்து அவர்களைப்பார்த்து: இவன் கலகம்செய்கிறவனென்று இந்த மனுஷனை என்னிடத்துக்குக் கொண்டுவந்தீர்கள். நான் விசாரித்துப் பார்த்ததில் நீங்கள் சாட்டின குற்றம் ஒன்றையும் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்துக்கு அனுப்பினேன். அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை. மரணத்துக்கேதுவான குற்றமொன்றும் இவன் செய்யவேயில்லை. நீங்கள் தப்பாய் நினைத்துக்கொண்டு இவன்மேல் குற்றஞ்சாட்டுகிறதாகத் தோன்றுகிறது. ஆகிலும் இவ்வளவு கலகம் உண்டாக இவன் இடங்கொடுத்தபடியால் இவனுக்கு எச்சரிப்புண்டாகும்படி இவனை நான் அடித்துத் துரத்திவிடுவேன் என்றான். உடனே

அப்படிச்செய்து முடிக்க வேண்டியது நியாயம். அவன் அவர்கள் சம்மதத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தபடியால் மறுபடியும் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டான்.

திடீரென ஒருகாரியம் பிலாத்துவுக்கு ஞாபகம் வந்தது. பஸ்காப்பண்டிகையில் கூடிவரும் ஜனங்களுக்கு எச்சரிப்பாக, மரணாக்கினைக்குட்பட்ட இராஜதுரோகிகளை அந்நாள்களில் கொலைசெய்வதுண்டு. அப்பண்டிகையிலேயே எகிப்தின் விடுதலையை நினைவுகூரும்படி குற்றவாளி ஒருவனை விடுதலைசெய்வதும் வழக்கம். அங்கு கூடிவந்த திரள் ஜனங்களுக்குள் கிறிஸ்துவின்மேல் அனுதாபமுள்ளவர்களும் இருந்திருப்பார்கள். பிலாத்து ஜனங்களைப்பார்த்து: இது பண்டிகை நாளல்லவா? குற்றவாளி ஒருவனை உங்களுக்காக விடுதலைசெய்யப்போகிறேன் என்றான். ஜனங்களெல்லாரும் அதுசரி அப்படியே செய்யுமென்றார்கள். பொதுஜனங்கள் இயேசுவின்மேல் பிரீதியுள்ளவர்களாகையால் அவரையே விடுதலைசெய்யக் கேட்பார்களென்று பிலாத்து எதிர்பார்த்தான்.

பேர்போன குற்றவாளியொருவன் அன்று சாகும்படி காவல்செய்யப்பட்டிருந்தான். அவன் இயேசு என்று மறுபேர்கொண்ட பரபாஸ் என்பவன். இவன் ரோம இராஜாங்கத்தை எதிர்த்து, சில ரோமப்போர் வீரரையும் கொலைசெய்து, நகரத்தில் பெருங்கலகத்தை உண்டாக்கினதினிமித்தம் சிறையில் வைக்கப்பட்டிருந்தான். யூதர்கள் ஆண்டவர்மேல் சாட்டின குற்றங்களை வாஸ்தவத்தில் நடப்பித்தவன் பரபாஸேயல்லாமல் இயேசுவல்ல. இப்படியிருக்க பிலாத்து ஒருவனை விடுதலை செய்யப்போகிறேன் என்று சொன்னவுடனே, தங்கள் முயற்சிக்கு ஆபத்து வந்ததென்று அதிகாரிகள் பயந்து, ஜனங்கள் வாய்திறந்து பேசுமுன்னே பரபாஸைக் கேளுங்கள் என்று மகா சத்தமாய்க் கூவினார்கள். அவனல்லவா நமது வீரன். நம் தேசபக்தன், நமது சத்துருக்கள் கையிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி போர்புரிந்தவன், அவன் உயிரையல்லவா நாம் தப்புவிக்கவேண்டுமென்று தூண்டிவிடவே, அவர் பவனி வந்தபோது தம்மை இராஜாவாக விளம்பரஞ் செய்வாரென்று எதிர்ப்பார்த்தும் அவர் அப்படிச்செய்யாமல் இவ்வாறு கட்டுண்டு நிற்பதைக்கண்ட ஜனங்கள் பரபாஸை தங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். பிலாத்து மிகவும் கலங்கினான்.

அவன் கலங்கி நிற்கும் இவ்வேளையில் ஒரு சம்பவம் நடந்தது. அகுஸ்துராயன் காலமுதல் ரோம அதிகாரிகள் தாங்கள் ஆளும் மாகாணங்களுக்குத் தங்கள் மனைவிகளையும் கொண்டுபோக இடம்பெற்றிருந்தார்கள். அவ்வாறு பிலாத்து தன் மனைவியாகிய கிளொதியா புரோக்கியூலாள் என்பவளை

தன்னோடு கொண்டுவந்திருந்தான். இவள் ரோமிலுள்ள தனவந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவள். இவளுடைய செல்வாக்கினால் பிலாத்துவுக்கு இந்த உத்தியோகம் கிடைத்தது. இவன் யூதமார்க்கத்தமைந்தவன். கிறிஸ்துவைக்குறித்து இவள் நன்றாய் அறிந்திருந்தாள். அவரை நீதிமானென்று மதித்தாள். அவர் பிடிபட்டுத் தவிப்பதை அறிந்து மனத்துயரமடைந்தாள். அவள் ஒரு சொப்பனங்கண்டு நியாயசனத்திலிருந்து தத்தளித்துக் கொண்டிருந்த தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி நீர் அந்த நீதிமானுக்கு ஒன்றும் செய்யவேண்டாம், அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள். இயேசு பிடிபட்டதை இவள் நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்ததால் அந்த நினைவு சொப்பனத்தில் வந்ததென்பார் சிலர். ஆண்டவர் அக்காலத்தில் சொப்பனத்தின் மூலமாய்த் தமது சித்தத்தை வெளிப்படுத்தி வந்தாரென்பதையும் நாம் மறக்கக்கூடாது. கிரேக்குச் சபை இவளைப் பரிசுத்தவாட்டியாகக் கொண்டாடுகிறது. நீதிஸ்தலத்திலும் மனைவிகள் மந்திரத்துக்கு வல்லமையுண்டென்பது நாம் அறியாத விஷயமல்ல. இயேசுவை விடுவிக்குபடி புரோக்கியூளாளுக்கு லஞ்சம் கொடுத்தவன் யார்! அவள் நீதிக்காகப் பாடுபட்டாள். அவள் அனுப்பின செய்தி சத்தியமே. தன் புருஷனுடைய உறுதியற்ற குணத்தை அறிந்த மனைவி அவன் அநியாயஞ்செய்து தேவகோபத்துக்கு ஆளாகாதபடி எச்சரித்தாள்.

மனைவி இச்சமயத்தில் அனுப்பின செய்தி பிலாத்துவின் எண்ணத்தை இன்னும் ஸ்திரப்படுத்தினது. ஜனங்கள் கேட்டபடி பரபாஸை விடுதலை செய்ய அவனுக்குச் சம்மதமில்லை. என்ன? ரோமராஜ்யத்துக்குச் சத்துருவானவனை விடுதலையாக்கி யாதொரு குற்றமில்லாத இவ்வேழை மனுஷனைக் கொல்லவா? இதைப்போல் அநியாயமுண்டாவென்று சொல்லி ஜனங்களைப் பார்த்து: இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று கேட்டான். அவர்கள் பரபாஸை என்றார்கள். அப்படியானால் **கிறிஸ்து** என்னப்பட்ட **இயேசுவை** நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். அவன் கிறிஸ்துவென்றும் இயேசுவென்றும் சொன்னது ஜனங்களை உணர்த்தும்படிக்காகவே. அவரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று எல்லாரும் சொன்னார்கள். கூட்டத்தில் வேலைசெய்வதற்கு அதிகாரிகள் அங்கங்கே ஆள்களை வைத்திருந்தார்கள். அதிகாரிகள் ஒன்று சொன்னவுடனே அதுநிமிஷத்தில் ஜனங்களுக்குள்ளே பரவும், **சிலுவை** என்கிற வார்த்தை முதல்முதல் அவர்கள் வாயிலிருந்து இப்பொழுதுதான் வெளிப்பட்டது. இதுவரை தங்களுக்குள் மறைத்து வைத்திருந்தார்கள். பிலாத்துவுடைய நோக்கத்தை அறிந்து சமயம்பார்த்து வெளியிட எண்ணியிருந்தார்கள்.

அப்படியே செய்தார்கள். இருமுறை தன் பிரயத்தனத்தில் தவறின பிலாத்து மூன்றாந்தரம் அவர்களைப்பார்த்து ஜனங்களே! யோசித்துப் பேசுங்கள். ஏன் இவனைச் சிலுவையிலறைய வேண்டும். சிலுவையிலறையும்படி இவன் செய்த துரோகம் என்ன? மரணத்துக்கு ஏதுவான குற்றமொன்றும் நான் காணவில்லையே. குற்றமற்றவனை நான் சிலுவையிலறைவது எப்படி? ஆகையால் நான் இவனை அடித்து விடுதலை செய்யப்போகிறேன் என்றான். அவர்களோ அது கூடவேகூடாது, அவனைச் சிலுவையிலறையவே வேண்டுமென்று கூக்குரலிட்டார்கள். விக்கிரக சின்னத்தை எருசலேமைவிட்டு அகற்றும் அகற்றுமென்று செசரியாவில் அவர்கள் கூக்குரலிட்ட சத்தம் அவன் ஞாபகத்துக்கு வந்தது. அன்றுண்டான பயமும் திரும்பி வந்தது. ஐயோ, எனக்கே ஆபத்து வரும்போலிருக்கிறதென்று அஞ்சி நியாயஞ்செய்யக்கூடாமற்போனான்.

தங்கள்மேல் பழியில்லையென்பதற்கு அடையாளமாகக் கைகளைக் கழுவுதல் யூதருக்கும் புறஜாதிகளுக்கும் வழக்கம். அவ்வழக்கப்படியே பிலாத்து தண்ணீர் கொண்டுவரும்படி சொல்லி தன் கைகளைக் கழுவி, என் கைகள் எப்படிச் சுத்தமோ அப்படியே இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கும் நான் சுத்தமுள்ளவனாயிருக்கிறேன் என்று எல்லாரும் கேட்கச் சொன்னான். அதற்கு ஜனங்கள்: ஆம் அது சரிதான், இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும், அதுமாத்திரமல்ல எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள். தன் பழி நீங்கினதென்று பிலாத்து நினைத்து பரபாஸை விடுதலையாக்கி இயேசுவை வாரினால் அடிக்கும்படி ஒப்புக்கொடுத்தான். இவ்வாறு பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை அவர்கள் மறுதலித்துக் கொலைபாதகனைத் தங்களுக்காக விடுதலைபண்ணக் கேட்டுக் கொண்டார்கள்.

ரோமப் போர்வீரர் கையில் அருள்நாதன் பட்டபாடுகள் கொஞ்சமல்ல. அவரை அவர்கள் பிடித்திழுத்து அவர் திருமேனி தெரியும்வண்ணம் தேகத்தின்மீதுள்ள உடுப்பைக் கழற்றி, முதுகை வெறுமையாக்கி, சரிவாய் நின்ற ஒரு சிறிய கற்றூணில் குனியவைத்து, அவரது பின்கட்டை அவிழ்த்து அத்தூணோடு சேர்த்து முன்கட்டாகக் கட்டி, எல்லாரும் பார்க்க அவர் திருமுதுகில் ஆறுவீரர் வார்கொண்டு ஓங்கியடித்தார்கள். இந்த வாருகள் ஈயக் குண்டுகளும் கூர்மையான எலும்புத்துண்டுகளும் கலந்து பின்னப்பட்டவை. பலசாலிகளான போர்வீரர் வாருகளை ஓங்கி அவர் முதுகில் அடிக்கவே தசைகள் பிளந்தன. இரத்தம் பிரவாகித்து ஓடின. பிளந்த இடத்தில் திரும்பத்திரும்ப அடிக்கவே தசைகள் இன்னும் கிழிந்து அகன்றன. சமுசாரியின் கலப்பை நிலத்தைக் கிழித்துப் படைச்சால்களை அகலமாக்குவதுபோல

இப்போர்வீரர் தங்கள் வாரடியால் அவர் திருமுதுகை உழுது பிளந்தார்கள். அருமைப்பிதாவே! அன்பின் குமாரனுடைய முதுகைப் பாரும். தூதர் குழாங்களே! உங்கள் இராஜாவின் முதுகைப் பாருங்கள். சர்வலோகங்களே! உங்களை உருவாக்கி மாம்சத்தில் வெளிப்பட்ட அனாதி வார்த்தையைப் பாருங்கள். கணக்கில்லாத அடிமேல் அடி விழுந்ததினால் முதுகிலுள்ள தோல் அகன்று இரத்தமயமாயிற்று. வாரடிகள் தப்பி முகத்தில் விழுவதினால் சிலவேளை கண்கள் குருடாகும். பற்கள் உதிரும். குற்றவாளிகள் இவ்வாரடிபடும்போதே மயங்கி மூச்சற்றுப் போவதுண்டு. ஜன்னி கண்டு அப்பொழுதே சாவதுண்டு. கருணைநிறைந்த திருக்குமாரன் என்னமாய் நடுங்கியிருப்பார்! படுபாவிகள் அடித்த அடிகளால் அவர் திருமேனி என்னமாய்த் துடித்திருக்கும்! அவர் வாய் பேசாமலும் முறுமுறுக்காமலும் சாந்தமாய்ச் சகித்துக்கொண்ட காரணமென்ன? இந்தப் பலம் எங்கேயிருந்து வந்தது? தமது தெய்வீக சக்தியால் வேதனை தோன்றாமல் தடுத்துக் கொண்டாரோ? அப்படிச் செய்திருந்தால் அவர் பட்டபாடுகள் யாவும் பொய்யாயிருக்குமே. அப்படியிருக்குமானால் தோட்டத்தில் அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் கீழேவிழுந்து ஜெபிக்கவேண்டிய தென்ன? அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழவேண்டியதென்ன? அவருடைய பாடுகளைப் பூரணமாய் நாம் அறியக்கூடுமோ? அவருடைய மனவேதனைக்குமுன் இவ்வாரடிகள் எம்மாத்திரம்? சகலத்தையும் அவர் சகித்துக்கொண்ட பலம் நமதுபேரில் வைத்த **அன்பின்** சக்தியே. பாவிகள் இரட்சிக்கப்பட இது எவ்வளவு நல்ல சமயம். வாரடிபட்டு இரத்தமயமாய் நின்று நடுங்குகின்ற கிருபை நிறைந்த ரட்சகரின் முகத்தை நோக்கிப் பார்க்கட்டும். பாவி நிச்சயமாகவே இரக்கம் பெறுவான். அவர் வேதனை சற்று நீங்கும். திரளான யூதரால் புறக்கணிக்கப்பட்டுப் பரிதாபகோலமாய் நிற்கும் அவரைத் திரளான பாவிகள் பாதவணக்கஞ்செய்யட்டும். அவர் தமது வாரடி முழுவதையும் தமது சந்தோஷத்தால் மறந்து போகமாட்டாரா? படுபாவிகளை நீதிமான்களாக்கும்படி யல்லவோ குற்றமற்ற தேவசுதன் குற்றவாளியானார்.

போர்ச்சேவகர் அவரை வாரால் அடித்தபின்பு அவரைப் பரியாசம்பண்ணத் துணிந்தார்கள். அவருடைய வஸ்திரங்களைக் கழற்றிச் சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள். ஆ! அந்தத் துணி இரத்தம் நிறைந்த முதுகில் பதியுமே. சாகப்போகிறவர்மேல் படுபாவிகளுக்கு இரக்கமும் உண்டோ? கைகளிலும் கால்களிலும் அஞ்சாமல் ஆணிகளடிக்கப்போகிற மூர்க்கருக்கு காயங்களில் துணியொட்டுமேயென்கிற அணுதாபமும் உண்டோ? அவருக்குப் பரியாச அங்கிதரித்து ஆசனத்தில் உட்கார வைத்தார்கள். ஒருவன் வெளியே ஓடி

முட்செடியிலுள்ள மிலாறுகளை ஒடித்துக்கொண்டு வந்து அதைக் கிரீடமாகப் பின்னி அவர் சிரசின்மீது வைத்து அழுத்தினான். ஒரு மூங்கில் தடியை அவர் கையில் கொடுத்து இது உன் செங்கோல் என்றார்கள். அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய இராஜாவே வாழ்க வாழ்கவென்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள். முழங்காலிலிருந்து அவர்கள் எழும்பக் கூடாமலேபோனால் என்னமாயிருந்திருக்கும்? அப்படி ஏதாகிலும் ஒன்றை ஆண்டவர் செய்கிறதாயிருந்தால் இத்தனை பாடுகளும் என்னத்திற்கு? பாடுபடுத்த அல்ல பாடுபடவே வந்தார். அவர்கள் முழங்காலில் நின்று இராஜாவே வாழ்கவென்று சொன்னபோது ஜனங்களெல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். பின்பு தங்கள் கையினால் அவரது நொந்த மேனியில் அடித்தார்கள். திருமுகத்தில் எச்சிலைத் துப்பினார்கள். அவர் கரத்திலிருந்த கோலைப்பிடுங்கி அவர் சிரசில் அடித்து கூர்மையான முள்கள் நெற்றியில் இறங்கும்படி செய்தார்கள். எவ்வளவு பாடு! எவ்வளவு வேதனை!

இதுவரை நடந்த குரூரமான வாதைகளைப் பார்க்க மனமற்று பிலாத்து அரமனைக்குள் போயிருந்தான்போல் தோன்றுகிறது. அவன் சத்தத்தைக் கொஞ்ச நேரமாய்க் காணோம். வீட்டுக்குள் சென்று காரியங்களைத் தன் மனைவிக்குச் சொன்னான். என் பிரியமே! நான் என்ன செய்வேன்? இன்றுபோல் நான் கலங்கித் தவித்த நாள் இல்லை. உன் சொப்பனத்தை மதித்து எவ்வளவோ அவரை விடுவிக்க முயன்றும் காரியம் பலிக்கவில்லை. இந்தப் பாவிகளோடு நாம் எவ்வளவு காலம் போராடுகிறது? நான் என்னென்ன உபாயஞ் செய்தாலும் அதற்குமேல் அவர்கள் செய்கிறார்களே. வாரால் அடிக்கும்படி போர்ச்சேவகர் கையில் விட்டுவந்தேன் என்றான். அவள் சகிக்கக்கூடாத துயரமடைந்தாள். இவ்வளவு பாடுகளைக் கண்ட பிற்பாடாவது அவர்கள் அவரை விட்டுவிட மாட்டார்களாவென்று நினைத்து: நீர் மறுபடியும்போய் அவரை விடுதலை செய்யும்படி அவர்களோடு பேசுமென்று கேட்டுக்கொண்டாள். பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு இதோ! உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான்.

இயேசு முள்முடியும் சிவப்பு அங்கியும் தரித்தவராய் சகிக்கக்கூடாத வேதனையோடும் மகா பரிதாபமான கோலத்தோடும் தள்ளாடி நடந்து ஜனங்களிடத்தில் வந்தார். பிலாத்து அவரைப் பார்த்தபோது அவன் இருதயம் உடைந்தது. அவரிடத்தில் குற்றமில்லையென்று அவன் அறிந்திருந்தும் அவர் அநியாயமாக அடிபட்டாரென்பதும், அவர் சரீரம் நொறுக்கப் பட்டு இரத்தயமாயிருந்ததும், அவர் முகத்தில் வடிந்த எச்சிலும்

இரத்தமும், இவை யாவற்றிலும் மகா பொறுமையாய் நிற்கும் அவரது சாத்மீக தோற்றமும் பிலாத்துவுக்குச் சகிக்கக்கூடவில்லை. யூதரும் அக்காட்சியை சகிக்கமாட்டார்களென்று அவன் நினைத்து: இதோ இந்த மனுஷனைப் பாருங்கள் என்றான். இவ்வளவேபோதும் அவனை விட்டுவிடுமென்று அவர்கள் கேட்டுக்கொள்வார்களெனப் பிலாத்து நினைத்தான். இரத்த ருசிகண்ட புலி முழுவதையும் பட்சிப்பதுபோல அவர்கள் அவர் கோலத்தைக் கண்டும் சற்றும் இரக்கமின்றிச் சிலுவையிலறையும் சிலுவையிலறையுமென்றே சத்தமிட்டார்கள். இராஜ்யத்துக்கு விரோதமான குற்றமொன்றும் நான் இவனிடத்தில் காணவில்லையாதலால் நீங்களே கொண்டுபோய்ச் சிலுவையி லறையுங்கள், நான் சம்மதிக்க மாட்டேன் என்றான். அதற்கு அவர்கள் இவன் ரோம விதிப்படி மரணத்துக்குரிய குற்றஞ் செய்யாவிட்டாலும் எங்கள் நியாயப்பிரமாணத்தின்படி இவன் மரணத்துக்குப் பாத்திரன். இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியால் அந்த நியாயபிரமாணத்தின் படியே இவன் சாகவேண்டும் என்றார்கள். சனதரீம் சங்கத்தில் இதையே மரணகுற்றமாகத் தீர்த்தவர்கள் ஆரம்பத்தில் அதை மறைத்து இராஜதுரோகமென்று பிலாத்திடம் குற்றஞ்சாட்டி னார்கள். அது தவறிப்போனதைக் கண்டவுடன் மறுபடியும் மார்க்க சம்பந்தமான குற்றத்தைக் கொண்டுவருகிறார்கள்.

அவர்களுடைய பிடிவாதத்தையும் மூர்க்கத்தையும் கண்ட பிலாத்து இவர்கள் எப்படியாவது அவரைக் கொன்று போடுவார்கள் என்று திட்டமாயறிந்தான். தான் உத்தரவு கொடுத்தால் சிலுவையாலும், உத்தரவுகொடாமற்போனால் கல்லெறிந்தும் கொல்லத் துணிந்து நிற்பதைக் கண்டான். திடீரென அப்படி ஒரு சம்பவம் நடக்குமானால் தனக்கே அது ஆபத்தாகுமென்றும் பயந்தான். இப்படியிருக்க **தேவகுமாரன்** என்று அவர்கள் சொன்ன வார்த்தை அவனை இன்னும் கலங்கச் செய்தது. இதுவரை இவனைச் சாதாரண மனுஷனல்ல, அரசன் என்றிருந்தேன். இப்போது மானிடருக்கு மேலான தேவகுமாரன் என்று வருகிறது. ஒருவேளை சத்துருக்கள் குற்றமாகச்சொல்வது ஏன் மெய்யாயிருக்கமாட்டாது? இரவில் தோட்டத்தில் இவனைப் பிடிக்கப்போன போர்வீரர் இவனைக் கண்டமாத்திரத்தில் கீழே விழுந்தார்களென்றும் கேள்வியுற்றேனே. நமது அருமை மனைவி கண்ட சொப்பனமும் சரியாய்த்தானிருக்கிறதென்று பலவாறாய் மனங்கலங்கி அவரை உள்ளே அழைத்துப்போய்: நீ எங்கே யிருந்து வந்தவன்? அவர்கள் உன்னைக்குறித்து **தேவகுமாரன்** என்று சொல்லுகிற இரகசியம் என்ன? நீ மனுஷப்பிறவியா, அல்லது, தேவப்பிறவியா? உண்மையை எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டான். தேவகுமாரனை எதிர்ப்பார்த்த யூதரே திண்டாடும்போது மனுஷ பயத்தால் நீதியை

வழுவவிட்டுத் தவிக்கிறவனும் சத்தியமின்னதென்று ஜென்மத்தில் அறியாதவனுமான இவனிடத்தில் ஆவிக்குரிய காரியங்களைப் பேசுவதில் இலாபமென்னவென்று ஆண்டவர் யாதொரு வார்த்தையும் பேசாதிருந்தார். அவர் தேவப்பிறவியாயிருந்தா லென்ன, மனுஷப்பிறவியாயிருந்தாலென்ன? அவரிடத்தில் குற்றமில்லையென்று கண்டால் அவரை விடுதலை செய்வதல்லவோ அதிபதிக்கு அழகு. அவ்வளவு நீதியில்லாத மனுஷனிடத்தில் ஏன் பேசுவார்? அவர் பேசாததால் பிலாத்து கோபப்பட்டு. நீ என்னோடு பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைசெய்ய எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதாவென்றான். விடுதலை செய்யக்கூடாமல் தத்தளிக்கிற உனக்கு அதிகாரம் வேறேயா? ஆண்டவர் அவனைப் பார்த்து: என்மேல் உமக்கு அதிகாரமிருப்பது மெய்தான். ஆனால் பரத்திலிருந்து தேவனால் உமக்கு அதிகாரம் கொடுக்கப் படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது. நீர் உமது மனச்சாட்சிக்கும் நியாயத்துக்கும் விரோதமாய் என்னை மரணத்துக்கு ஒப்புவிப்பதினால் உமது பாவம் பெரிது. ஆகிலும் என்னை உமது கையில் ஒப்புக்கொடுத்தவர்களுக்கு அதிகப் பாவமுண்டு என்றார். இவ்வளவு பாடுகளின் மத்தியில் இராஜனைப்போல் பேசும் இவர் யார்? இப்படிப்பட்ட ஒரு கைதியை பிலாத்து எப்போதாகிலும் கண்டதுண்டா? 'இருதலைக் கொள்ளி எறும்புபோல்' தவிக்கிறான் பிலாத்து. யூதரண்டைபோனால் சூடுண்டு இயேசுவண்டை வருகிறான். இயேசுவண்டைபோனால் சூடுண்டு யூதர்களிடம் போகிறான். இவன் திண்டாட்டத்தை அறிந்த யூதர் இவன் மறுபடியும் விடுதலையென்று பேசுவான் என்று உத்தேசித்து கடைசியாக ஒரே பிடியாய் அவனைப் பிடிக்கும்படி உபாயஞ்செய்தார்கள். இந்த மனுஷனோடு நாம் எவ்வளவு நேரம் போராடுகிறது? மூன்றுமணி நேரமாகவா நின்று தவிக்கிறது? நின்றும் காரியம் கைகூடி வந்தபாடில்லை. இவன் நினைத்து நினைத்துப் பேச நாம் இடங்கொடுத்தது தவறு. கடைசிப்பிடி பலத்தபிடியா யிருக்கவேண்டும். இவன் வள்ளல் நமக்குத் தெரியாதா? இராயன் பேர் சொன்னால் இவன் நடுங்குவான். காரியம் நமக்கும் ஜெயமாகுமென்று பேசிக்கொண்டு அவன் வெளியேவரக் காத்திருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடி பிலாத்து வெளியே வந்து இப்பொழுது இவனை விடுதலை செய்யப்போகிறேன் என்றான். அப்படியா? இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதன் அல்ல. தன்னை இராஜாவென்கிறவன் எவனோ அவன் இராயனுக்கு விரோதி, அதை நீர் மறந்து போக வேண்டாமென்று அவனைப் பயமுறுத்தினார்கள். இராயன்

என்ற சொல் அவன் காதில் விழுந்தவுடனே பிலாத்து திமிர்ப்பிடித்தவன் போலானான். மாசற்ற திருவேந்தன் தன்முன் நிற்பதை மறந்தான். இக்கொடிய யூதர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள். இக்கோள்சொல்லிகளுக்கேற்ற கோள்செவியன் இராயனல்லவோ? இவர்கள் கோளால் அல்லவோ பெரிய ஏரோது கெட்டான். அவன் மகனாகிய அர்கெலேயு என்பவனைக் கோள்சொல்லிக் குடியைக்கெடுத்த தோஷிகளும் இவர்களே, என்னையும் இவர்கள் பலமுறை பிராதுபண்ணி இராயன் என்னை விரோதிக்கும்படி செய்தார்களே. நான் இவர்களுக்கு இணங்காமற்போனால் என்னைத் தப்பாது தொலைப்பார்கள். என் காரியத்தை முந்திப்பார்த்துக் கொண்டல்லவா கைதியின் காரியத்தைப் பார்க்கவேண்டும். நீதி நியாயம் பார்த்தால் நான் பிழைப்பதெப்படி? கூடியமட்டும் விசாரணையை நன்றாகவே நடத்தியிருக்கிறேன், இதைவிட நான் என்ன செய்யக்கூடும்? எப்படிப்பார்த்தாலும் இவன் சாகவேண்டியதாகவேயிருக்கிறது. நான் விடுதலைசெய்தாலும் மறுநிமிஷத்தில் இவர்கள் இவனை அடித்துக் கொல்லுவார்கள். என் காரியமும் ஆபத்தாகுமே என்று கலங்கினான்.

ஆகிலும் தன் கலக்கத்தை மறைத்து நியாயாசனத்தில் உட்கார்ந்து முள் முடியும் சிவப்பங்கியும் தரித்துநின்ற ஆண்டவரை யூதருக்குக் காண்பித்து: இதோ! உங்கள் இராஜன் என்றான். அவர்கள் உடனே: இவனை அகற்றும் அகற்றும் சிலுவையிலறையுமென்று சத்தமிட்டார்கள். உங்கள் இராஜனை நான் சிலுவையிலறையலாமாவென்றான். அப்பொழுது பிரதான ஆசாரியர்: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜனில்லை என்றார்கள். இவ்வார்த்தைகள் எவ்வளவு தூரம் உண்மை யென்பதை பிலாத்து அறியாதவனல்ல. இராஜ விரோதிகள் சமயத்திற்கேற்றாற்போல் நடிப்பது அவனுக்கு நன்றாய்த்தெரியும். இதற்குமேல் தான் செய்யக்கூடியது ஒன்றுமில்லையென்றும், இனிமேல் தான் பேசுவதில் பிரயோஜனமில்லையென்றும் பிலாத்து கண்டு இயேசுவை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான். கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தமது தீர்க்கதரிசிகளெல்லா ருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகள் இவ்வாறு நிறைவேறிற்று.

பிலாத்து தன் மனச்சாட்சிக்குச் செவிகொடுத்து, ரோம நியாயவிதியை அனுசரித்து, யூதரின் அநியாயத்தீர்ப்பை ரத்துச்செய்து, சத்துருக்களின் கையினின்று **தயாநிதியை** விடுதலை செய்திருந்தால் திருச்சபை எக்காலும் அவனைப் புகழ்ந்திருக்கும். அவ்வாறு ஆண்டவர் விடுதலையாக்கப்பட்டிருந்தால் யூதர் தப்பாமல் அவரைக் கல்லெறிந்து கொன்றிருப்பார்கள். இது இராயனுக்குக் கேள்வியாகும்போது, அவன் பிலாத்துவை

உத்தியோகத்திலிருந்து அகற்றித் தண்டனைசெய்வான். கிறிஸ்துவின் அடியாரோ தங்கள் இரட்சகனை விடுதலைசெய்து அவர்நிமித்தம் துன்பத்துக்குள்ளான பிலாத்துவைப் பரிசுத்தவான்களின் வரிசையில் வைத்துக் கொண்டாடலாம். என்றாலும் பிலாத்து தவறிப்போனான். அவர் குற்றமற்றவரென்பது நிச்சயமாயிருந்தது. ரோமச்சட்டம் பிலாத்துவைக் கைதாங்கினது. ஆசாரிமாரின் பிராது பொய்யெனத் தெரிந்தது. ஏரோதுவின் தீர்ப்பு அவனுக்கு அனுகூலமாயிருந்தது. மனைவி அனுப்பின தூது அவனை எச்சரித்தது. இவையாவுமிருந்தும் தந்நயமும் கோழைத்தனமுமுள்ள பிலாத்து நீதிசெய்யக் கூடாமற்போனான்.

நடந்ததென்ன? மனுஷர் எதை விதைக்கிறார்களோ அதையே அறுப்பார்கள். விதைப்பது கொஞ்சமானாலும் அறுப்பதோ அதிகம். சில பயிர் சீக்கிரத்திலும் சில பயிர் பிந்தியும் பலன்கொடுக்கும். குற்றமற்றவரை குற்றவாளியாக்கித் துன்பப்படுத்தினவர்கள் யாவரும் பயங்கரமான துன்பத்துக்குள்ளானார்கள். அருமை ஆண்டவர் மரிப்பதற்குமுன்னே துரோகியூதாஸ் தற்கொலைபுரிந்து மாண்டான். பிரதான ஆசாரியனாகிய காய்பா மறுவருஷம் உத்தியோகத்திலிருந்து தள்ளப்பட்டான். ஏரோது அவமானத்துக்குள்ளாகி தேசம்விட்டுத் துரத்துண்டு செத்தான். பிலாத்துவுக்கு அந்த வருஷத்திலேயே ஆபத்து வந்தது. சமாரியர் அவனுக்கு விரோதமாகப் பிராதுசெய்ய, அவன் ரோமாபுரிக்குக் கொண்டுபோகப்பட்டு விசாரணையடைந்தான். அங்கே குற்றவாளியென்று தீர்ப்புப்பெற்றான். அவன் வீடு வாசல்கள் ஜப்தியாயின. தேசம்விட்டுத் துரத்தப்பட்டான். யூதாஸைப்போல் தற்கொலைபுரிந்து செத்தான். மறு தலைமுறையில் ஜனங்கள் கலகஞ்செய்து அன்னாவின் அரமனையில் நுழைந்து அதைத் தகர்த்து, அவன் மகனை எருசலேம் தெருவீதிகளில் இழுத்து வாரால் அடித்துக் கொன்றார்கள். இரட்சகரின் கஷ்டநிஷ்டூரங்களைக் கண்ணுற்று மனங்களித்தவர்களும் அவர்கள் பிள்ளைகளும் நாற்பது வருஷத்துக்குப்பின் எருசலேம் முற்றுகை போடப்பட்ட காலத்தில் ரோமச்சேனைகளால் பட்ட பரிதாபமான பாடுகளைச் சொல்லவுங்கூடுமா? அந்நாள்களின் பயங்கரமான அழிவைக் கவனித்தால் யூதர் வேரோடு அழிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்ட ஜாதியோவெனத் தோன்றும். இராயனேயன்றி எங்களுக்கு வேறு இராஜனில்லையென்று ஏகமாய்க் கூவினார்களே. அதுபோலவே ஆயிற்று. இஸ்ரவேலின் இராஜா அவர்களைக் கைவிட்டார். செங்கோல் யூதாவை விட்டு நீங்கினது. கொடிய இராயர்கள் ஒருவர் பின்னொருவராய் எழும்பி யூதஜாதியை ஒடுக்கினார்கள். குரூரமாகவதைத்தார்கள். பொருளைக் கொள்ளையிட்டார்கள்.

மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரைவிட்டு விலகின யூதஜாதி சாபத்துக்குள்ளாயின. உபத்திரவம் சகிக்கக்கூடாமல்

இவர்கள் இராயனுக்கு விரோதமாகக் கலகம்பண்ண அவன் இவர்களைப் பட்டயத்துக்கும் அக்கினிக்கும் இரையாக்கினான். கிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்படி பிடிவாதமாய்க் கேட்டுக்கொண்ட இவர்கள் புத்திரரை ரோமர் ஆயிரமாயிர மாய்ச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். எருசலேமைச் சுற்றிலும் ஆயிரம் பதினாயிரமான சிலுவைகளில் பிரேதங்கள் தொங்கின. சிலுவைக்கு வேண்டிய மரமும் அவைகளை நிறுத்துவதற்கு இடமும் இல்லாதபோது ரோமர் வேறுவிதமாய் அவர்களை அதம்பண்ணி, எருசலேம் வீதிகளைப் பிணக் காடாக்கி, யூதரின் இரத்தம் பிரவாகித்து ஓடும்படி செய்தார்கள். எருசலேம் மகா பெரிய கல்லறைத் தோட்டமாயிற்று. மகிமையின் கர்த்தருக்கு முப்பது வெள்ளிக்காசைக் கிரயமாகக் கொடுத்தவர் களின் பிள்ளைகள் ஆயிரக்கணக்காய் மகா ஈனக்கிரயத்துக்குச் சிறையாக விற்கப்பட்டார்கள். எங்களுக்கு இயேசு வேண்டாம், பரபாஸே வேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்களின் ஆலோசனைச் சங்கத்தில் பயங்கரமான சண்டாளனொருவன் குரூரமாக அதிகாரம் செலுத்தினான். இவன் இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாகவென்று அவர்கள் கேட்டுக்கொண்டபடி எருசலேம் அழிந்த நாள்களில் மாத்திரமல்ல, ஆண்டுகள்தோறும் தேசங்கள்தோறும் அவர்கள் இரத்தம் இரக்கமின்றிச் சிந்தப்பட்டது. இவர்கள்போன தேசமெங்கும் ஆபத்தும் சாபமும் அவர்களைத் தொடர்ந்து பிடித்தது. காயீன் நெற்றியிலிருந்த அடையாளம்போல் இவர்கள் தலையில் நின்ற இரத்தப்பழி அவர்களை விடவில்லை. கிருபைநிறைந்த இரட்சகர் சிலுவையிலிருந்து. ''பிதாவே இவர்களுக்கு மன்னியும்'' என்று ஜெபித்தார். அவர் செய்த ஜெபம் கேட்கப்படுவதாக. இரக்கம் நிறைந்த தேவன் தமது குமாரன் சிந்தின இரத்தத்தின் பலனாக இஸ்ரவேலுக்கு மனந்திருப்புதலையும் இரட்சிப்பையும் திரும்பக் கட்டளை யிடுவார் என்பது நிச்சயம்.

நாம் செய்த குற்றத்தினிமித்தம் தண்டனை அனுபவிக்கும் போது அதைப் பொறுமையாய்ச் சகிக்கக்கூடவில்லை. நாம் குற்றஞ்செய்யாதிருக்கையில் நமக்கு அவமானம் நேரிட்டால் நமது நியாயத்தை எடுத்துக் காண்பிக்க எவ்வளவோ ஆத்திரப் படுகிறோம். நம்மை நிந்தித்தவர்களுக்குப் புத்தி கற்பிக்காமல் விடுகிறதாவென்று வைராக்கியங்கொள்ளுகிறோம். எஜமானைக் கவனிப்போமாக. அவர் குற்றமற்றவராயிருந்தும் தம்மை வையும்போது பதில் வையாமலும் பாடுபடுத்தினவர்களைப் பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்யும் பிதாவுக்குத் தம்மை ஒப்புவித்தார். ஆகையால் அவருடைய நீதி வெளிச்சத்தைப்போலவும் அவர் நியாயம் பட்டப்பகலைப் போலவும் வெளிப்பட்டது. அதுவே நமக்கும் மாதிரி.

33
கிறிஸ்துவின் மரணம்
The Death of Christ

யூத அதிகாரிகளின் விசாரணை முடிந்தது. ரோமத் தேசாதிபதியின் விசாரணையும் முடிந்தது. இனித் தாமதிக்க வேண்டியதென்ன? மணி ஒன்பது ஆகிறது. அவரைச் சிலுவையிலறையும் வேலை போர்ச்சேவகரைப் பொருத்தது. யூத அதிகாரிகள் இனி வீட்டுக்குத் திரும்பவேண்டியதே நியாயம். இராவோடுராவாய் விசாரணை நடத்தினவர்கள் போவார்களா? பிலாத்தோடு இவ்வள்வுநேரம் போராடினவர்கள் எளிதில் விலகுவார்களா? ஆண்டவரை அருமையாய்க் கொண்டாடின கலிலேயர் ஆயிரக்கணக்காய் எருசலேமுக்கு வந்திருக்கிறார்களே. அவர் படும் பாடுகளை அவர்கள் கண்டு மனம் பதைத்துக் கூட்டத்தில் விழுந்து அவரை விடுவித்துக்கொண்டு போய்விடக் கூடுமே. ஆகையால் அவரைச் சிலுவையிலறையும்வரை அதிகாரிகள் அவரை விட்டுப் பிரியார்கள். அவர் ஜீவன் போனாலொழிய வீட்டுக்குத் திரும்பார்கள். ஜீவன் போனாலுங்கூட கல்லறையை விடார்கள். பாம்பைப் பிடித்த குரங்கு பாம்பு செத்தாலும் அதை விடமாட்டாததுபோல தங்கள் கையிலகப்பட்டுக்கொண்ட சாதுவான ஆட்டுக் குட்டியைக் குறித்து இவர்கள் இவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தது ஆச்சரியமே.

விசாரணைமுடிந்த மறுதினத்தில்தான் தீர்ப்புக் கூறவேணும். இவருக்கோ அதேநாளில் தீர்ப்புக் கூறினார்கள். மரணத்தீர்ப்புக்கூறி பத்துநாளுக்குப்பின் தண்டிப்பது ரோமருக்கு வழக்கம். இவரையோ தீர்ப்புக்கூறினவுடனே சிலுவையிலறையப் போகிறார்கள். சத்துருக்கள் எவ்வாறு செய்தபோதிலும் தேவனுடைய அனாதி தீர்மானம் அந்நாளில் நிறைவேறிற்று. ஆயிரக்கணக்கான பஸ்கா ஆட்டுக்குட்டிகள் அடிக்கப்பட்ட அந்நாளில் உலக பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி அடிக்கப்பட்டது நியாயமே. தாம் முழுகவேண்டிய இந்த ஸ்நானத்துக்காக எவ்வளவோ நெருக்கப்பட்டார். நீ செய்கிறதைச் சீக்கிரம் செய்யென யூதாசுக்குச் சொன்னார். இவ்வேளைக்காக

அவர் ஆவலோடு காத்திருந்தார். அதற்காகவே இந்த வேளைக்குள் வந்தார். சத்துருக்கள் தாங்கள் நினைத்தபடி அவருக்குச் செய்கிறதாக எண்ணிக்கொண்டாலும் தேவ தீர்மானப்படியே சகலமும் நடக்கிறதென்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

பண்டிகைக்கு வந்த திரள் ஜனங்கள் பிலாத்துவின் அரமனையில் கூடினார்கள். போர்ச்சேவகர் தங்கள் வேலையை முடிக்கத் துரிதப்பட்டார்கள். அவருக்கு உடுத்தியிருந்த சிவப்பங்கியை அவர்கள் கழற்றி அவருடைய வஸ்திரத்தை அவருக்கு உடுத்தினார்கள். இரத்தம்பீறுண்ட முதுகில் ஒட்டிப்பதிந்த அங்கியை அவர்கள் மறுபடியும் எடுத்தபோது அவருக்கு எவ்வளவோ வேதனையிருந்திருக்கும்! குற்றவாளிகள் செய்த குற்றம் இன்னதென்று யாவரும் அறியும்படி அக்குற்றங்களைப் பலகைகளில் எழுதி அவர்கள் கழுத்தில் கட்டுவதுண்டு. அவ்வாறு பிலாத்து ஒரு பலகையில் "நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா" என்று எழுதி அவர் கழுத்தில் தொங்கவிட்டான். குற்றவாளிகளே தங்கள் சிலுவைகளைச் சுமந்து போகவேண்டும். ஆண்டவர் தமது சிலுவையை ஏற்றுக்கொண்டார். ஒரே நாளில் ஒரு குற்றவாளிக்கு மேலாகத் தண்டிக்கக்கூடாதென்பது யூதச்சட்டம். பிலாத்து அதைக் கவனியாது வேறு இரண்டு குற்றவாளிகளையும் சிலுவையிலறையும்படி கட்டளையிட்டான். அவர்களும் தங்கள் சிலுவைகளைச் சுமந்துகொண்டு அவரோடு கொலைக்களம் சென்றார்கள். அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டா ரென்கிற வேதவாக்கு இவ்வாறு நிறைவேறிற்று. சிலுவைப் பவனி புறப்பட்டது. ஐந்துநாளுக்குமுன் அவர் எருசலேமுக்கு வந்த பவனிக்கும் இப்போது எருசலேமிலிருந்து வெளியே போகிற பவனிக்கும் எவ்வளவு வித்தியாசம்!

நூற்றுக்கதிபதியானவன் குதிரைமீதேறி நூற்றிருபது பேரடங்கிய போர்ச்சேவகருடன் இப்பரிதாபமான பவனியை நடத்துகிறான். போர்ச்சேவகன் ஒருவன் அவருக்கு முன்னே நடந்து அவர்மீது சாட்டப்பட்ட குற்றத்தைச் சத்தமாய்க் கூறிக்கொண்டு போகிறான். மற்றவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு விரைவாய் நடக்கும்படி அவரைத் துரிதப் படுத்துகிறார்கள். அவருக்கோ நடக்கப் பலமில்லை. ஜனங்கள் நெருக்கம் அதிகம். சாகப்போகிற அவரை எப்படியாவது பார்க்கவேணுமென்பது அவர்கள் ஆசை. அவர் தமது சிலுவையைச் சுமந்துகொண்டு மேடுபள்ளமான தெருக்கள் வழியாய் நகரத்தின் வடதிசை நோக்கி நடக்கிறார். இதை **வியாகுலவழி**யென்று சொல்லுவார்கள். பிலாத்துவின் அரமனைக்கும் கொல்கதாவுக்கும் ஒருமைல் தூரமுண்டு. அவர்

நகரவாசலைக் கடந்து வெளியே வந்தபோது பாரச்சிலுவையைச் சுமக்கக்கூடாமல் தள்ளாடி விழுந்தார். இவ்வளவுதூரம் எப்படிச் சுமந்தாரோ ஆச்சரியம். வியாழன் இரவு சாப்பிட்டது. கெத்சமெனேயின் போராட்டமும் இரத்த வேர்வையும் எவ்வளவோ கொடூரம்! அங்கிருந்து கொண்டுவரப்பட்டு அன்னாவின் விசாரணை, பின்பு வேலைக்காரரும் மற்றவர்களும் அவரை அடித்த அடிகள். கட்டுண்டவராகக் காய்பாவின்முன் விசாரணை. அதிகாலையில் சனதாரீம் சங்கத்தின் விசாரணை. மறுபடியும் அவர் பட்ட பாடுகள். கரங்கள் கட்டப்பட்டுக் கழுத்தில் கயிறு பூண்டு பிலாத்திடம் அவரைக் கொண்டுபோனது. பிலாத்துவின் விசாரணை பிலாத்திடமிருந்து வீதிகள் வழியாய் ஏரோதிடம் கொண்டுபோனது. ஏரோதின் விசாரணையும் கொடுமையும். மறுபடியும் பிலாத்திடம் கொண்டுவரப்பட்டு விசாரணை. போர்வீரர் அவர் முதுகில் அடித்த பயங்கரமான வாரடிகள். அவ்வாரடிகளால் பீறுண்ட இரத்தம். மறுபடியும் பரியாசம், முள்கிரீடம், மூங்கிலடிகள். ஆ! எவ்வளவு ஆயாசம்! எவ்வளவு வேதனை! எவ்வளவு நடுக்கம்! எவ்வளவு துயரம்! எவ்வளவு நாவறட்சி! எவ்வளவு பலவீனம்! இவ்வளவெல்லா மிருந்தும் புண்பட்ட முதுகில் பாரச்சிலுவையைத் தூக்கி நடந்தார். அதற்குமேல் நடக்கமுடியாமல் கீழே விழுந்தார். அவர் ஆவி உற்சாகமாயிருந்தும் அவர் சரீரத்தில் பலமில்லை. சிலுவை அவர் தோளிலிருந்து விழுந்தாலும் அவர் இருதயத்திலிருந்து அவர் விழவில்லை. காலதாமதம் போர்ச்சேவகருக்குப் பிரியமில்லை. விழுந்தமாட்டைக் குத்துவதுபோல் அவரைக் குத்தியடித்து எழுந்து நடவென்கிறார்கள். அவன் பாசாங்கு பண்ணுகிறான், அவனை விடக்கூடாதென்கிறார்கள். திமிர்வாதக் காரனை எழுந்து நடக்கச் செய்தவனே! நீ நடக்கக்கூடாதா வென்று பரியாசஞ் செய்கிறார்கள். அவருடைய மகா பல வீனத்தையும் தேக வேதனையையும் அவர்கள் கவனிக்க வில்லை. கொல்லத் துணிந்தவர்களுக்கு இரக்கமேது, அனுதாபமேது?

சிலுவைப்பவனியைப் பின்சென்ற திரள்கூட்டத்தில் அவருக்காகப் பரிந்து பேசுவாரில்லை. கலங்கும் அவர் ஆத்துமாவைத் திடப்படுத்துவாரில்லை. இடைவிடாது அவரைப் பின்சென்று அவரது ஜீவமொழிகேட்ட திரள் ஜனமெங்கே? வனாந்தரத்தில் அற்புதமாய் போஷிக்கப்பெற்ற ஆயிரக்கணக்கான பேர்கள் எங்கே? நோய்முதல் மரணம் உள்பட சகல வியாதிகளும் நீங்கிக் குணமான கணக்கற்ற மாந்தரெங்கே? அவரை இராஜாவாக்கும்படி துணிந்து நின்ற கூட்டத்தாரெங்கே? மகாபெரிய தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறாரென வாழ்த்தினவர்களெங்கே? ஐந்து நாளுக்குமுன் ஓசன்னாசொல்லி ஆர்ப்பரித்தவர்களெங்கே? நீர் ஜீவனுள்ள தேவகுமாரனாகிய கிறிஸ்துவென்று அறிக்கை செய்து, உமக்காக எங்கள் ஜீவனையும்

கொடுப்போமெனச் சபதங்கூறின சீஷர்களெங்கே? சீஷர்கள்போன இடம் தெரியாது. இக்கூட்டத்தில் எல்லாருமே அவருக்கு விரோதிகளென்று நினைக்க ஏதுவில்லை. ஆகிலும், அவர்கள் அதிகாரிகளுக்குப் பயந்து ஏதும் பேசாதிருந்தார்களென்பது நிச்சயம். அதிகாரிகள் அவரைப் பகைத்தபோதிலும் பொது ஜனங்கள் அவரை நன்கு மதித்தார்களென்பது மெய். பயத்தால் அவரது சீஷர்கள் ஓடினதுபோல பயமே இவர்கள் வாயையும் அடைத்தது.

ஜனங்கள் ஆண்டவரை எப்படிக் கொண்டாடினார்களென்பதைச் சுவிசேஷத்தில் காணலாம். அவர்கள் அவரைப் பூரணமாய் அறிந்துகொள்ளாமற்போனாலும் அவர்மேல் அன்புள்ளவர்களாயிருந்தது நிச்சயம். அவரைத் தனித்திருக்க விடாது எப்போதும் அவரைச் சூழ்ந்திருந்தார்கள். திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள். திரளான ஜனங்கள் தம்மிடம் வருவதைக் கண்டார். நான்கு திசையிலுமிருந்து திரளான ஜனங்கள் அவரிடத்தில் வந்தார்கள். பட்டணத்து ஜனங்களெல்லாரும் அவரிருந்த வீட்டை நெருக்கினார்கள். அவர் படவேறி அக்கரைக்குப்போனால் ஜனங்களெல்லாரும் கால்நடையாய் அவருக்கு முன்னேபோய்க் காத்திருப்பார்கள். ஜனங்கள் கிராமங்களிலிருந்து அவரிடத்திற்கு ஓடிவந்தார்கள். எல்லா மனுஷரும் அவரைத் தேடினார்கள். ஜனநெருக்கத்தால் ஒரு ஸ்திரீ கஷ்டத்தோடு அவரைத் தொடவேண்டியதாயிருந்தது. அவர் வனாந்தரத்திலிருந்தாலும் ஸ்திரீ புருஷர் பிள்ளைகள் ஆயிரமாயிரமாய் அங்கே கூடிவிடுவார்கள். அவர் மறுரூப மலையிருந்திறங்கினால் திரள் ஜனங்கள் அவருக்காகக் காத்துக்கொண்டு நிற்பார்கள். இவ்வாறு வருகிறவர்களும் போகிறவர்களும் திரளாயிருந்தபடியால் சாப்பிடவும் அவருக்கு நேரமில்லாதிருந்தது. அவருடைய தாயாரும் சகோதரரும் ஜனக்கூட்டத்தினிமித்தம் அவர் கிட்டப் போகக்கூடாதிருந்தது. உலகமே அவரைப் பின்பற்றிப் போய்விட்டதென்று அதிகாரிகள் பயந்தார்கள். அவரைப் பலமுறையும் கல்லெறிந்துகொல்ல நினைத்த சத்துருக்கள், ஜனங்கள் அவர் பட்சத்திலிருந்ததினிமித்தம் அப்படிச் செய்யாதிருந்தார்கள். அவரைப் பிடிக்கத் தீர்மானித்தபோதும் ஜனங்களுக்குப் பயந்தே தகுந்த சமயம் தேடிக் கொண்டிருந்தார்கள். அவர் ஆலயத்தைச் சுத்திகரித்தபோது ஜனங்களுக்கு அஞ்சியே அவருக்கு ஒன்றும் செய்யாதிருந்தார்கள். கடைசியாக ஜனங்களெல்லாரும் நித்திரைசெய்யும் நடுராத்திரியில் அல்லவோ அவரைப் பிடித்தார்கள். அதிகாரிகள் அவரைச் சீக்கிரமாய்ச் சிலுவையிலறையும்படி இவ்வளவு ஆத்திரப்பட்டதும் ஜனங்களுக்குப் பயந்தே. அவர் எல்லாருக்கும் நன்மைசெய்தபடியால் திரளான ஜனங்கள் அவரைக் கடைசிவரை நேசித்து மதித்துவந்தது மெய்தான்.

அப்படியானால் அவர்களேன் இச்சமயத்தில் ஒன்றும் பேசவில்லையென்று கேட்கலாம். கபடாய்த் திடீரென நடந்த இச்சதியில் அவர்கள் திகைத்துப்போனார்கள். என்ன பேசுகிறது என்ன செய்கிறதென்று அவர்களுக்குத் தோன்றவில்லை. யூத அதிகாரிகள் இதுவரை ஒரு குற்றவாளிக்காவது இவ்வளவு வைராக்கியமாக நின்றதில்லையே. ஆசாரிமாரும் தேசாதிபதியும் விசாரணை செய்தல்லவோ இப்படிச் செய்கிறார்கள். ஐயோ! அவர் என்ன குற்றத்தைச் செய்துவிட்டாரோ தெரியவில்லையே என்று பலவாறாய் தங்களுக்குள்ளே கலங்கினார்கள். மேலும் ஜனங்கள் காலக்கிரமமாய் ஆசாரிமாரின் அதிகார சட்டங்களுக்குக் கீழடங்கிக் கீழடங்கி அறியாமலே அவர்களுக்கு அடிமைகளாகிக் கோழைகளானார்கள். தங்கள் பிதாக்களின் வைராக்கிய ஆவி இவர்களுக்குள்ளிருக்குமானால் அதிகாரிகளைச் சின்னாபின்னமாக்கித் தங்கள் அன்புக் குரியவரைச் செந்துரக்காய்த் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள். இப்போது அவர் படும்பாடுகளைப் பார்த்து மனம் நொந்த போதிலும் அவருக்காக யாதொன்றும் செய்யக்கூடவில்லை. ஐயோ! இப்புண்ணிய புருஷனாகிய இவருக்கும் இப்படி நேரிட்ட தோவென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். அவர் செய்த அன்பின் கிரியைகளை நினைத்து மனத்துயர மடைந்தார்கள். ஆகிலும் ஒருவனாவது அக்கூட்டத்தில் வாய் திறந்து பேசவுமில்லை, அவருக்காக வழக்காடவுமில்லை. சீஷர்கள் கைவிட்டதினிமித்தம் கோபித்துக்கொள்ளாத **கிருபாகரன்** இவ்வேழை ஜனங்கள்மீதும் கோபங்கொள்ளவில்லை.

அவர் தமது சிலுவையைச் சுமந்துகொள்ளமாட்டாரென்று அவர்கள் கண்டபோது அங்குமிங்கும் பார்த்தார்கள். யூதன் அதைத் தொடமாட்டான். ரோமனும் தொடமாட்டான். என்ன செய்கிறதென்று அவர்கள் திகைத்துக்கொண்டிருந்தபோது ஒரு மனுஷன் வெளியிலிருந்து அவசரமாய் கோட்டை வாசலுக்குச் சமீபமாய் வந்தான். அவன் தோற்றம் உடையில் அந்நியன்போல் காணப்பட்டான். அவன் பேர் சீமோன். வட ஆப்பிரிக்காவில் யூதரின் குடியிருப்பாகிய சிரேனே ஊரிலிருந்து பண்டிகைக்கு வந்தவன். அவன் எருசலேமுக்குப் புறம்பேயுள்ள ஒரு கிராமத்தில் தங்கியிருந்தான். வெள்ளிக்கிழமை தேவாலயத்தில் நடக்கும் காலை ஆராதனையில் சேர்ந்துகொள்ளும்படி ஆத்திரத்தோடு வந்தான். அவன் வாசலண்டை வந்தவுடனே அவனைப் பிடித்துக்கொண்டார்கள். ரோமப் போர்ச்சேவகன் இராயன் பேராலிடும் கட்டளைக்கு ஒருவரும் மறுவார்த்தை பேசக்கூடாது. பேசினால் படும்பாடு அதிகம். ஏழைச் சீமோன் ஆலயம் போவதைவிட்டு ஆண்டவர் சிலுவையைச் சுமந்துகொண்டு, இதுவென்ன திருவுளச் செயலோவென்று திகைத்தவனாய் கல்வாரி நோக்கி நடந்தான். பஸ்காவை ஆசரிக்கவந்த

சீமோனுக்கு தேவன் மெய்யான பஸ்காவை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். மேசியாவுக்காகக் காத்திருந்தவர்களில் இவனும் ஒருவன். அவன் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்படுமுன் விசேஷித்த ஆசீர்வாதத்துக்காக ஜெபித்து வந்தவன். அவன் ஜெபம் அவன் அறியாதவிதமாய்க் கேட்கப்பட்டது. போர்ச்சேவகர் அவனை நிறுத்திச் சிலுவையை அவன் சுமக்கும்படி பலவந்தஞ்செய்தது அவனுக்கு வெட்கமும் துக்கமுமாயிருந்திருக்கும். ஆகிலும் அதுவே அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் இரட்சிப்பாகயிருந்தது. கர்த்தர் அந்நேரம் அவனோடு பேசினதாகச் சொல்லப்படவில்லை. ஆகிலும் அவனையும் அவன் குடும்பத்தையும் கிருபையாய் நினைத்து: சீமோனே! இன்று உன் வீட்டுக்கு இரட்சிப்பு வந்ததென்று திருவுளம்பற்றினார். அப்படியே ஆயிற்று.

மாற்கு சுவிசேஷம் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப் பட்டது. அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனாகிய சீமோன் என்று மாற்கு எழுதினதைப் பார்க்கும்போது இக்குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரோமிலிருந்த சபையைச் சேர்ந்திருந்தார்கள் என்பது நிச்சயம். பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ரூபையும் எனக்குத் தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள் என்கிறார். அப்போஸ்தலர் நடபடி பதிமூன்றாம் அதிகாரத்தில் அந்தியோகியாப் பட்டணத்திலுள்ள சபையில் தீர்க்கதரிசிகளும் போதகர்களுமாயிருந்தவர்களின் பெயர் வருகிறது. அதில் நீகர் என்னப்பட்ட சீமோன் என்பவன் ஆப்பிரிக்காவிலுள்ள சிரேனே ஊரானாகிய லூகியோடு சேர்ந்து வருகிறான். நீகர் என்பதற்கு கறுப்பன் என்று அர்த்தம். சீமோன் ஆப்பிரிக்காவின் உஷ்ணத்தால் நிறம் குறைந்ததினிமித்தம் இப்படி அழைக்கப்பட்டிருக்கலாம். இவைகளைக் கவனிக்கும்போது சீமோன் கர்த்தருடைய ஊழியக்காரனும், அவன் மனைவி பவுலால் தாயென்று போற்றப்பட்ட பரிசுத்தவாட்டியும், அவன் மக்கள் இருவரும் உத்தம விசுவாசிகளுமாயிருந்தார்களென்பது நிச்சயம். இது தேவச்செயலேயன்றி தற்செயல் அல்ல. அநேகருக்கு இரட்சண்யவாசல் திறக்கப்படுவதும் இதுபோலவே.

சீமோன் ஒருமணி நேரத்துக்கு முந்தியாவது பிந்தியாவது அவ்வழி வந்திருந்தால் இப்பேராசீர்வாதத்தை அவன் கண்டடைவ தெப்படி? திடீரென நம்மேல் சுமத்தப்படும் பாரத்தில் தேவசித்தம் நிறைவேறுவது என்ன அதிசயம்! சீமோன் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்த பிற்காலத்தில் அவருக்காகத் தான் சிலுவை சுமக்கும்படி நேரிட்டதை நினைத்து எவ்வளவோ சந்தோஷப் பட்டிருப்பான். எவருக்கும் கிடைக்காத பெருஞ்சிலாக்கியம் தனக்குக் கிடைத்ததே என்றெண்ணி

அகமகிழ்ந்து போற்றியிருப்பான். அவனைக்கண்ட விசுவாசிகளெல்லாரும் சீமோனே! நீ பாக்கியவானென்று அவனைப் புகழ்ந்திருப்பார்கள். கிறிஸ்துவின் சிலுவையை சுமந்த சீமோனைப் பரமபிதா பார்க்கவில்லையோ? தேவதூதர்க ளெல்லாரும் ஏங்கிப் பொறாமை கொள்ளவில்லையோ? ஆம், சீமோனுக்குக் கிடைத்த சிலாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? நாம் எதிர்பாராதவிதமாய் கிறிஸ்துவுக்காக நாம் சுமக்க நேரிடும் பாரங்கள் பிந்திச் சொல்லி முடியாத ஆசீர்வாதத்தை நமக்குக் கொண்டுவரும்.

இவ்வாறு சீமோன் சிலுவைப்பாரத்தைச் சுமந்துகொண்டு போனபோதிலும், அவருக்கு நடக்கப் பலமில்லை. அவரை ஏந்தித் தூக்கிக்கொண்டுபோக வேண்டியதாயிருந்தது என்கிற கருத்துடன் மாற்கு எழுதுகிறார். திரள் கூட்டமான ஜனங்களும் அநேக ஸ்திரீகளும் அவருக்குப் பின்னே நடந்தார்கள். மிகுந்த துக்கத்தாலும் பயத்தாலும் புருஷர் வாய்திறவாமற்போனாலும் எளிதில் மனதுருகும் தன்மையுள்ள பெண்களோ அப் பரிதாபமான காட்சியைச் சகிக்ககூடாமல் ஏகோபித்துப் புலம்பி அழுதார்கள். குற்றவாளிகளுக்காக ஒருவரும் அழக்கூடாதென்கிற சட்டம் யூதருக்குள்ளிருந்தபோதிலும், அச்சட்டத்திற்கு ஸ்திரீகள் அஞ்சவில்லை. இவர்கள் அவருக்காகப் புலம்பினது ஆசாரிமாருக்கு வெறுப்பாயிருந்தும் அவர்களை அடக்க முடியவில்லை. ஆண்டவருடைய ஊழியநாள்களில் யாதொரு ஸ்திரீயும் அவருக்கு மனம்நோக நடந்ததில்லை. புருஷரால் அவரடைந்த அவமானமும் பாடுகளும் அதிகம். பெண்களோ அவரை ஆதரித்துத் தைரியப்படுத்தினார்கள். அவர்கள் அவரை ஒருபோதும் விரோதிக்கவில்லை. காட்டிக்கொடுக்கவில்லை. பரியாசம்பண்ணவில்லை. அவரை அடிக்கவில்லை. அவர் முகத்தில் துப்பவில்லை. அவரைப் பின்சென்று தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள். ஆணிகடாவப்படும் திருப்பாதங்களை கண்ணீர்விட்டுக் கழுவி முத்தமிட்டார்கள். முட்கிரீடம் சூட்டப்படும் திருச்சிரசில் பரிமளதைலம் பூசினார்கள். அவர்கள் புருஷரும் சகோதரரும் அவரைச் சிலுவையிறையும்படி கொண்டுபோகும் இச்சமயத்தில் அவருக்காகப் புலம்பி அழுதவர்கள் ஸ்திரீகளே.

ஆகிலும் இக்கண்ணீர் பாவத்தைக்குறித்த மெய் மனஸ்தாபத்தால் உண்டாகாமல் அவர் பாடுகளைச் சகிக்கக் கூடாத இயற்கைக் கண்ணீராயிருந்தது. அவர்கள் அவ்வளவு அனுதாபம் காண்பித்தது புகழப்படத் தக்கதே. தாக முள்ளவனுக்குத் தண்ணீர் எவ்வளவு அருமையோ அதுபோல எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டுத் தவித்த ஆண்டவருக்கு இவர்கள் அழுத சத்தம் மன ஆறுதலைக் கொடுத்தது.

சீமோனுடைய தோள் அவர் பாரத்தை மாற்ற, ஸ்திரீகள் புலம்பல் அவருள்ளத்தைத் தேற்ற, இரட்சகன் அம்மாதர் முகமாய்த் திரும்பி: எருசலேம் குமாரத்திகளே! எனக்காக ஏன் அழுகிறீர்கள்? என் பாடுகள் முடிவடையும் வேளை வந்தது. சில மணிநேரங்களுக்குள் என் போராட்டம் முடியும். மூன்று தினங்களுக்குள் மகிமையோடு எழும்புவேன் என்று மனதில் எண்ணினவராக, நீங்கள் எனக்காக அழுவதை நிறுத்தி உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுவது நல்லது. ஐயோ, உங்களுக்கு நேரிடப்போகிற கொடிய ஆபத்துகள் உங்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறதே. நீங்கள் அலறித் தவிக்கும் அந்த நாளை நினைத்து அழுங்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால் பட்ட மரத்துக்கு எவைகளைச் செய்யமாட்டார்கள்? பச்சைமரம் ஜீவனுள்ளது. அதன் வேர் பூமிக்குள் ஆழமாய்ச் சென்றிருக்கிறது. அதன் விசாலமான கிளைகளில் பட்சிகள் தங்குகிறது. அதன் நிழலில் பிரயாணிகள் இளைப்பாறுகிறார்கள். அதன் கனிகளால் பசியாறுகிறார்கள். வானமழையை அது உட்கொண்டு செழிப்பாய் நிற்கிறது. அப்படிப்பட்ட ஜீவவிருட்சத்திற்கே இக்கதியானால் வேரற்று முற்றிலும் பட்டுப்போன யூதமரத்துக்கு எக்கதி? பட்டமரம் அக்கினிக்கு இரையாகும். கனியற்ற யூதஜாதியின் முடிவு எவ்வளவு பயங்கரமென்று அவர்களுக்கு நேரிடப்போகிற ஆபத்துகளை அறிந்த ஆண்டவர் எல்லாரும்கேட்டு எச்சரிப்படையும்படி ஸ்திரீகளுக்கு இவ்வார்த்தைகளைச் சொன்னார். இவ்வெச்சரிப்புக்கு நாமும் தப்பினவர்களல்ல. பெரிய வெள்ளியிலும் மற்றக்காலங்களிலும் ஆண்டவரின் பாடுகளை நினைத்துப் புலம்பல் பாடுவதும் கண்ணீர் விடுவதும் நமக்கு வழக்கம். அது தப்பிதமல்ல. ஆகிலும் அவருக்காக நாம் அழுவதிலும் அவருடைய பாடுகளுக்குக் காரணமாயிருந்த நமது பாவங்களை நினைத்து நமக்காக அழுது மனந்திரும்புவோமானால் அதுவே ஆண்டவருக்குச் சந்தோஷம். நமக்கும் ஆசீர்வாதம்.

சிலுவைப்பவனி கொலைக்களம் சேர்ந்தது. அந்த இடம் எபிரேயுபாஷையில் கொல்கதாவென்றும், இலத்தீனில் கல்வாரியென்றும், தமிழில் தலையோட்டு ஸ்தலமென்றும் அழைக்கப்படுகிறது. இப்பெயர் வந்த காரணமென்ன? ஆதாம் செத்து இங்கே அடக்கமானான் என்பது பாரம்பரியம். இங்கு கொலை செய்யப்படும் குற்றவாளிகளின் தலையோடுகள் குவிந்து கிடந்ததால் இப்பெயர் வந்ததென்பாருமுண்டு. சிலுவைப் படத்தின்கீழ் தலையோடுகளும் எலும்புகளும் காட்டப் பட்டிருக்கிற காரணமும் அதுவே, இவை ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதல்ல. ஏனென்றால் யூதச்சட்டத்தின்படி தலையோடுகளும் எலும்புகளும் புதைக்கப்படவேண்டும். மேலும் இது தலையோடுகளின் ஸ்தலமென்று அழைக்கப்படாமல் கபாலஸ்தல

மென்று ஒருமையில் அழைக்கப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். இந்த இடம் தலையோடுபோன்ற வடிவமாயிருந்ததால் இப்பெயர் உண்டாயிற்றென்று சொல்வதே சரி. இதைக் கல்வாரி மலையென்றும் அழைப்பதுண்டு. இது ஒரு மேடான நிலமேயல்லாமல் மலையல்ல. இது நகரத்துக்குப் புறம்பாகவும் நகரத்துக்குச் சமீபமாகவும் யாவரும் காணக்கூடிய மேடான ஸ்தலமாகவுமிருந்தது. பிரயாணிகள் போக்கு வரத்தாயுள்ள பெரும் பாதைகள் அதற்குச் சமீபமாய்ச் சென்றன. இங்கு வந்தவுடன் சீமோன் சிலுவையைக்கீழே இறக்கிவிட்டு விலகினான்.

''மடிந்துபோகிறவனுக்கு மதுபானத்தையும் மனங் கசந்தவர்களுக்குத் திராட்சரசத்தையும் கொடுங்கள்'' என்னும் நீதிமொழிப்படி எருசலேம் சீமாட்டிகள் தங்கள் சொந்தச் செலவில் மயக்க மருந்து கலந்த பானத்தைச் சிலுவையிலறையப் படுபவர்களுக்குக் குடிக்கக்கொடுப்பது வழக்கம். இதைப் புண்ணியமென நினைத்தார்கள். கலிலேய ஸ்திரீகளைப்போல் இவர்களும் ஆண்டவருடைய ஊழியத்துக்கு உதவி செய்திருப்பார்களானால் நல்லது. தாகத்தோடிருந்த ஆண்டவர் அப்பானத்தை ருசிப்பார்த்துத் தள்ளிவிட்டார். பஸ்ராவில் இறந்த புருஷனைக்குறித்து இந்தியாவிலிருந்த மனைவிக்குத் தலைமை உத்தியோகஸ்தன் தெரிவித்த கடிதத்தில்: அம்மா! உன் புருஷன் திருடரால் சுடப்பட்டு மரித்தது மிகுந்த விசனமே. ஆனால் அவர் சாகிறவரை தன் வேதனையை அறியாதபடி உணர்சியற்றிருந்தா ரென்பது சந்தோஷமே என்றெழுதியிருந்தார். நமதாண்டவர் நமக்காகச் சகல பாடுகளையும் குரூர வேதனைகளையும் பூரண உணர்ச்சியோடு அனுபவிக்கக் சித்தங்கொண்டபடியால் மயக்கங்கலந்த பானத்தை வேண்டாமென்று தள்ளிவிட்டார்.

நான்குபோர்ச்சேவகர் அவரைச் சிலுவையிலறைய ஆரம்பித்தார்கள். அவருடைய வஸ்திரங்களைக் கழற்றி வெறும் உடம்பாக்கினார்கள். சிலுவை மரத்தைக் கீழேபோட்டு தேகம் இரத்தமயமாயிருந்த தேவாட்டுக்குட்டியை அதன்மீது கிடத்தி, அவர் இருகரங்களையும் இறுக்கமாகப் பிடித்திழுத்து மரத்தோடு சேர்த்துவைத்து அவரது உள்ளங்கைகள் இரண்டிலும் கூர்மையான இருப்பாணிகளை அறைந்தார்கள். சுத்தியலால் அவர்கள் ஓங்கி அடித்தபோது ஆசீர்வதிக்கப்பட்ட அவரது திருக்கரங்கள் நொருங்கின. குழந்தைகளை ஆசீர்வதித்து, குருடர் கண்களைத் திறந்து, குஷ்டரோகத்தைத் தொலைத்து, பசித்தோருக்கு ஆகாரங்கொடுத்து, மரித்தோரை எழுப்பினவல்ல கரங்கள் நொறுக்கப்பட்டன. பின்பு அவருடைய கால்களை மடக்கி பாதங்களை மரத்தோடு பதியவைத்து ஆணியால் அடித்து இறுத்தினார்கள். நன்மைச் சொரூபியாகிய ஆண்டவரைச் சிலுவையிலறைவதற்கு ஆணிகள் அடித்துக்கொடுத்த கருமான்

எவனோ? தன் வேலை தன் கூலியென்று அவன் நினைத்தபோதிலும், அவன் செய்த ஆணிகளல்லவோ அவரைச் சிலுவையிலறைந்தது. நமது கையின் கிரியைகளைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். முழுச்சரீரமும் கைகளின் ஆணிகளில் தொங்குவதால், பாரத்தால் கைகள் கிழியக்கூடுமாகையால் சிலுவையின் மத்தியில் இரு தொடைகளுக்கிடையில் ஒரு மரத்துண்டை ஆதாரமாக வைப்பார்கள். இவ்வாறு அவரைச் சிலுவையிலறைந்த மகா வேதனையான வேளையில் எஜமான் அவர்களைத் தூஷிக்கவும் சபிக்கவுமில்லை. "பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபித்தார். அவர் கழுத்தில் தொங்கின பலகையை எடுத்துச் சிலுவையின் உச்சியில் தொங்கவிட்டார்கள். முள்கிரீடத்தையோ அவர்கள் நீக்கவில்லை. சிலுவை அவரது சிங்காசனமானால் முள் அவருக்குக் கிரீடமாயிருக்க வேண்டாமா? அதன்பின் அவரைச் சிலுவையோடு தூக்கிக் குழியில் நாட்டினார்கள். புண்ணுள்ளவிடத்தில் ஏதாகிலும் பட்டால் தேகமுழுவதும் நடுங்குமே. ஆணிகளில் தொங்கின ஐயன் திருவுடலை அவர்கள் முரட்டுத்தனமாய்த் தூக்கினபோதும், குழியில் தொப்பென விழவிட்டபோதும் எவ்வளவு அகோர வேதனையிருந்திருக்கும்? சாகப்போகிறவரை எப்படித் தூக்கினால்தான் என்ன? என்னமாய்ப் போட்டால்தானென்ன? இந்தச் சமயத்தில் குற்றவாளிகள் வேதனை தாங்கக்கூடாமல் கதறுவார்கள். அதிகாரிகளைத் தூஷிப்பார்கள். அல்லது சீக்கிரம் எங்கள் உயிரை மாய்த்துவிடுங்களென்று கெஞ்சுவார்கள். ஏனென்றால் சிலுவையிலறையப்பட்டவர்களை அப்படியே விட்டுவிட்டால் அவர்கள்சாவதற்கு இரண்டு மூன்று நாள்கள் செல்லும். நமதாண்டவரோ அவர்களுக்கு மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டதேயன்றி அவர்களைத் தூஷிக்கவில்லை.

எல்லோரையும் தம்மிடம் இழுத்துக்கொள்ளும் சர்வகாந்தமுள்ள கர்த்தன் தாம் எதிர்பார்த்தபடி சிலுவைமீது உயர்த்தப்பட்டார். இப்போது சிலுவைமீது தொங்கின எழுத்தை எல்லாரும் வாசிக்கக்கூடியதாயிருந்தது. அது பிலாத்தல்ல, தேவனே எழுதிவைத்த பிரசங்க வாக்கியம்போல் வாய்த்தது. "நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா" என்று எபிரேயு, கிரேக்கு, இலத்தீன் பாஷைகளில் எழுதப்பட்டிருந்ததால் அங்கே கூடியிருந்த ஜனங்களெல்லாரும் அதை வாசித்து அறிந்துகொண்டார்கள். அக்காலத்தில் பிரசித்திபெற்ற மூன்று ஜாதியாரின் பாஷைகளால் எழுதப்பட்ட இவ்வாசகம் உலகத்துக்கு இராஜ விளம்பரம்போல் விளங்கினது. புறஜாதியாரான பலஜாதியார் இதை வாசித்து யூதரைப் பரியாசம்பண்ணிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். பிலாத்து

யூதரை வெட்கப்படுத்தும்படிக்கே இப்படி எழுதிவைத்தான். அவன் நோக்கம் நிறைவேறினது. யூதரோ மகா வெட்கத்துக்குள்ளாகி வேகமாய் நடந்து பிலாத்தின் அரமனை சேர்ந்து: துரைகளே, நசரேயன் மேல்விலாசத்தில் தாங்கள் கைப்பிசகு செய்துவிட்டீர்கள். எங்களுக்கு அவமானமாகத் தீர்ந்தது. அதைத் தயவுசெய்து மாற்றி **தான்** யூதருடைய இராஜாவெனச் சொன்னானென்று எழுதவேணுமென்று கேட்டார்கள். குற்றமில்லாத இயேசுவைச் சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுத்துவிட்டோமே என்று கலங்கிக்கொண்டிருந்த பிலாத்து இவர்களைக் கண்டதும் கோபங்கொண்டு: போகலாம், "நான் எழுதினது எழுதினதே" என்றான். அரமனையில் பட்ட அவமானத்தை அதிகாரிகள் வெளிவிடாமல் வெட்கத்தோடு கல்வாரிக்குத் திரும்பிவந்தார்கள்.

குற்றவாளிகளின் வஸ்திரங்கள் போர்ச்சேவகரைச் சேரும். அவரைச் சிலுவையிலறைந்த நாலுபேரும் அவருடைய உடைகளை பங்குபோட்டு எடுத்துக்கொண்டார்கள். அவருடைய தையலில்லா அங்கியை நாலுபங்காகக் கிழிக்காமல் சீட்டுப்போட்டு ஒருவன் எடுத்துக்கொண்டான். மரணப் படுக்கையிலிருப்பவனுடைய உடைமைகளை அவனருகில் இருப்பவர்கள் எனக்கு உனக்கென்று பங்குபோடுவதை அவன் கண்டால் அதைப்போல் அவனுக்கு வேறு வேதனை வேண்டியதில்லை. நான் உயிரோடிருக்கும்போதே என்னைச் செத்தவனைப்போல் பாராட்டுகிறார்களே என்று துயர மடைவான். ஆண்டவரடைந்த வேதனைகளில் இதுவுமொன்று. என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்களென்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று. அவர் மரிக்கும்போது விட்டுப்போன ஆஸ்தி அவ்வளவுதான்.

மூன்று சிலுவைகள் நிறுத்தப்பட்டன. கர்த்தராகிய இயேசு இருகள்ளர் **நடுவில்** தொங்கினார். நடுவிலிருப்பதே எக்காலத்திலும் அவருக்குரிய இடம். அனாதி மகிமையிலும், மாம்சத்தில் பாடுபடுகையிலும், மகிமையடைந்த பின்னும் **நடுவே** அவருடைய ஸ்தானம். சகலமும் உண்டாவதற்குமுன்னே நடுவிலிருந்தவர் இவரே. பிதா, **குமாரன்**, ஆவி. பாவிகள் இரட்சிப்பின் ஆலோசனையில் நடுவிலிருந்தவர் இவரே. நமது இரட்சிப்பு ஆலோசிக்கப்பட்டபோது பிதாவும் ஆவியும் நடுவிலிருந்த குமாரனை நோக்கிப்பார்த்தார்கள். உலகம் பாவத்தால் அந்தகாரப்பட்டபோது நடுவில் தோன்றிய **ஒளி** இவரே. முற்பிதாக்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டு அவர்கள் நடுவில் மறைந்திருந்த **சந்ததி** இவரே. இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுமுதல் கானான் சேரும்வரை

அவர்கள் நடுவிலிருந்த **ஞானக்கன்மலை** இவரே. அக்கினிச் சூளையில் போடப்பட்டவர்கள் நடுவில் காணப்பட்ட நாலாம் **ஆள்** இவரே. அவர் மாம்சத்தில் வந்தபோது இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருந்தவர்கள் ஆவலோடு சூழ்ந்து கொள்ள அவர்கள் நடுவிலிருந்த **குழந்தை** இவரே. பன்னிருவயதில் போதகர் நடுவில் விளங்கின பிள்ளையாகிய **இயேசு** இவரே. திரள்ஜனங்கள் கூடிநிற்க அவர்களுக்கு உபதேசிக்கும்படி அவர்கள் நடுவிலிருந்த **போதகர்** இவரே. சகல நோயாளிகளும் வியாதிஸ்தரும் சூழ்ந்துகொண்டபோது நடுவிலிருந்த **அற்புதமூர்த்தி** இவரே. குற்றம்பிடிக்கும்படி நெருங்கிவந்த சத்துருக்கள் நடுவிலிருந்த **சத்தியம்** இவரே. கெத்சமனேயில் ஒருபக்கம் தூதரும் மறுபக்கம் சீஷருமிருக்க நடுவில் **போராடினவர்** இவரே. அன்னா காய்பா விசாரணையில் நடுவில் நின்ற **நாதன்** இவரே. பிலாத்துவின்முன் திரள் ஜனங்கள் கூடி நிற்க நடுவில் நின்ற **கைதி** இவரே. இப்பொழுது இரண்டு கள்ளர் நடுவில் தொங்குகிறவரும் இவரே. தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவிலுள்ள **மத்தியஸ்தன்** இவரே. அவர் உயிர்த்தபின் கலங்கியிருந்த சீஷர்களின் **நடுவில்** நின்று சமாதானம் கூறினவர் இவரே. பரத்துக்குப் போனபின் அங்கு அவர் இருக்கும் இடமும் **நடுவே**. தேவனுடைய பரதீசின் **நடுவிலிருக்கிற ஜீவவிருட்சம்** இவரே. ஏழுகுத்துவிளக்குகளின் நடுவில் தோன்றினவர் இவரே. அவர் நாமத்தினாலே கூடும் இருவர் மூவர் **நடுவில்** இருப்பவரும் இவரே. உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது ஜாதிகளை இரண்டாகப்பிரித்து அவர்கள் **நடுவில்** நியாயாதிபதியாக விளங்கப்போகிறவரும் இவரே. தேவனுடைய இன்பராஜ்யத்தில் மீட்கப்பட்ட திரளான கூட்டத்தாரின் **நடுவிலிருக்கும்** நேசமீட்பர் இவரே.

இவ்வாறு சர்வத்துக்கும் **நடுநாயகமாயிருப்பவரை** இன்னாரென்று அறியாமல் அவரைச் சிலுவையிலறைந்தது போதாதென்று சத்துருக்கள் அவரைத் தூஷிக்கவும் பரியாசம்பண்ணவும் துணிந்தார்கள். மற்றிரண்டு சிலுவை களையும் மறந்து இவர் ஒருவரையே எல்லாரும் நோக்கினார்கள். அது ஜனப் போக்குவரத்துள்ள பெரும்பாதையாயிருந்தபடியால் அவ்வழியாய்ப் போனவர்கள் அவரைப் பார்த்துத் தங்கள் தலைகளைக் துலுக்கி, தேவாலயத்தை இடித்து மூன்று நாளுக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே இரட்சித்துக்கொள். நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்றார்கள். அதிகாரிகளும் அவர்களோடு சேர்ந்து, இவன் மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை. இவன் இஸ்ரவேலின் இராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இரங்கிவரட்டும், அப்பொழுது விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய

குமாரனென்று சொல்லித் தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்று சபதம்போல் பேசினார்கள். அக்கூட்டத்தில் அவருக்குப் பிரியமானவர்கள் அப்படியாவது இறங்கிவிடமாட்டாராவென்று ஆசைப்பட்டிருப்பார்கள். இது காரியம் அறியாதவர்களின் பேச்சும் பரியாசமுமாயிருந்தன. அவர் இறங்கவேண்டுமானால் ஒரு நிமிஷத்தில் அப்படிச் செய்யக்கூடும். சிலுவையின் ஆணிகளும் கட்டுகளும் ஒரு தடையல்ல. போர்ச்சேவகரின் பாதுகாப்பு ஒரு பொருட்டல்ல. சிலுவையோடு அவரை அறைந்திருந்த **அன்பின்** கட்டிலிருந்து அவர் எப்படி நீங்கமுடியும்? அவர் தம்மை இரட்சித்துக் கொள்ளப்பார்த்தால் உலகம் இரட்சிக்கப்பட வழியேது? ஆகையால் அவர்கள் பேசின சபதவார்த்தைகள் அவருக்கு வனாந்தரத்தில் நேரிட்ட பிசாசின் சோதனைபோலிருந்தது. நீ தேவகுமாரனா? நீ கிறிஸ்துவா? நீ தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனா? நீ இஸ்ரவேலின் இராஜாவா? அப்படியானால் சிலுவையிலிருந்து இறங்கி வா. உடனே நாங்கள் விசுவாசிக்கிறோம் என்றார்கள். அவரோ அப்பாலே போ சாத்தானே! நான் என்னை இரட்சிக்கக்கூடுமானால் உலகம் எப்படி இரட்சிக்கப்படக்கூடுமென்று மனதிலெண்ணினவராய் பொறுமையோடே தொங்கினார்.

ஒரு நாய் குலைத்தால் ஊர் நாய்கள் குலைக்கும் என்பதுபோல அதிகாரிகள் பரியாசம்பண்ணவே ஜனங்களும் போர்ச்சேவகரும் பரியாசம்செய்யக் கூடிக்கொண்டார்கள். ஆபத்திலகப்பட்ட நாய் பக்கத்தில் வருபவர்களைக் கடிப்பது போல கள்ளர்களும் வேதனை தாங்கக்கூடாமலோ அல்லது அதிகாரிகள் தயவை நாடியோ அவரைத் தூஷித்தார்கள். நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்றார்கள். இதில் ஒருவன் தூஷித்ததையே இருவர் தூஷித்தபாவனையாகச் சொல்லுவதுண்டு. அல்லது ஆரம்பத்தில் இருவரும் தூஷித்துத் திடீரென மற்றவன் மனந்திரும்பியிருக்கலாம். ஆண்டவர் சிலுவையில் மொழிந்த ஏழுவார்த்தைகள் தியானத்துக்கு மிகவும் அருமையானவைகள். தம்மை விசுவாசித்த கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தார். மத்தியான வேளையாகிறது. சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வேளையில் ஆச்சரியமானபிரகாரம் அந்தகாரம் வந்து மூடினது. அவரைத் தூஷித்தவர்களில் அநேகர் பயந்து தங்கள் வீடுகளுக்கேகினார்கள். மற்றவர்கள் நின்றார்கள். இதுவரை சத்துருக்களுக்குப் பயந்து தூரத்தில் நின்ற அவருடைய தாயாரும், கிலேயோப்பா மரியாளும், மகதலேனாளும், சலோமியும், அன்பன் யோவானும் சிலுவைக்குச் சமீபமாய்வந்து, அங்கு தொங்கும் திருவுருவைக் கண்டபோது ஆறாத்துயரமடைந்தார்கள். அவர் உயிரோடே மறுபடியும் வருவாரென்பதை அவர்கள் கொஞ்சமும்

உணரவில்லை. தங்கள் ஒப்பற்ற நேசர் இப்படியும் மடியநேரிட்டதேயென்று மருகித் தவித்தார்கள். அச்சமயத்தில் தமது தாயாரை யோவான் வசத்தில் ஒப்புவித்தார்.

பன்னிரண்டாம் மணிமுதல் மூன்றாம் மணிவரை பூமியெங்கும் அந்தகாரம் உண்டானது. அவர் பிறந்த இரவில் வானொளியால் இரவு பகலானது அவர் இறந்த சமயத்தில் பகல் இருளானது. மூன்றுமணி நேரம் பேச்சுமில்லை வார்த்தையு மில்லை. அவருடைய மரணபோராட்டத்தை யாரும் காணாதபடி நரரின் கண்கள் அந்தகாரத்தால் மூடப்பட்டன. அப்பொழுது அவர் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீரென்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். சற்று பொறுத்து தமக்குத் தாகமாயிருக்கிறதென்றார். ஒருவன் ஓடிக் கடற்பஞ்சையெடுத்துக் காடியில் தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான் அவர் காடியை வாங்கினபின்பு எல்லாம் முடிந்ததென்றார். அதன்பின் பிதாவே! உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுத் தமது தலையைச்சாய்த்து ஜீவனை விட்டார்.

அவர் ஆவியை விட்டவுடனே ஆச்சரியமான சம்பவங்கள் நடந்தன. தேவன் இதுவரை தமது குமாரன்மூலமாய்ப் பேசினார். சிலுவையின் ஏழு வசனங்களாலும் பேசினார். இவைகளுக்குச் செவிகொடாத மனுஷருக்கு அவர் பேசும் வேறு வகையுண்டு. திரைச்சீலையின்மூலமாய்ப் பேசுகிறார். அவர் மரித்த நிமிஷத்தில் தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது. இத்திரைச்சீலையைப்பற்றி தேவன் மோசேக்குக் கற்பித்ததையும், அது நான்கு தூண்களில் தொங்கவிட்டிருப்பதையும், அது பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிப்பதையும் நாம் அறிவோம். மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனத்தையும் பரிசுத்த காரியங்களையும் மனுஷர் பார்க்கக்கூடாது. அவைகள் எப்பொழுதும் மறைக்கப்பட்ட இரகசியமாகவேயிருக்கவேண்டும். பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கொருமுறை மகா பயபக்தியோடு அங்கு பிரவேசிப்பான். அவன் அங்கு நிற்பதும் ஊழியஞ்செய்வதும் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கும், அத்திரையை ஒருவனும் நீக்கக்கூடாது, கிழிக்கக்கூடாது. தேவனுடைய சகல இரகசியங்களுக்கும் அதுவே அடையாளம். முதலாம் உடன்படிக்கைக்குறிய சகல மேன்மையும் இந்த மறைவில் அடங்கியிருந்தது. தேவன் இரகசியத்துக்குரியவர். தமது இரகசியத்தைப் பாதுகாக்கிறவர். யூதமார்க்கத்தின் மேன்மை இந்த மறைவே. காலம் நிறைவேறுமளவும் இரட்சிப்பின்வழி இவ்வாறு திரையினால் மறைக்கப்பட்டிருந்தது. இத்திரை எளிதில் கிழியக்கூடியதல்ல. அறுபதடி உயரமும் முப்பதடி அகலமுமுள்ள

அத்திரைச்சீலை மகா உறுதியானது. அது இவ்வளவு பயபக்திக்குரியதாதலால் பழமையாய்ப்போகதபடி வருஷாவருஷம் அதைப் புதிப்பித்துக்கொள்வார்கள். இப்படியிருக்க அவர் மரித்தவுடனே மூன்றாம் மணிவேளையில் ஆலயத்திலிருந்த ஜனங்கள் கண்காண அந்தத்திரைச்சீலை மேலே தொடங்கிக் கீழேவரை இரண்டு துண்டாகக் கிழிந்தது. அறுபது அடிக்கு மேலேபோய் அதைக்கிழிப்பவர் யார்? திரை கிழியவும் அந்தரங்கமெல்லாம் வெளியரங்கமாயிற்று. பிரதான ஆசாரியன் பெருமை குலைந்தது. முடிந்ததென்றார் தேவகுமாரன். ஆமென்றார் தேவ பிதா. வாசித்த கடிதத்தை நாம் கிழித்து எறிவதுபோல, தேவாதிதேவன் தாம் கொடுத்த நெடுங்காலத் திரையைத் தாமே கிழித்தெறிந்தார். யூதரே! இனி உங்களுக்கு இந்தத் திரைச்சீலை வேண்டாம். அது இதுவரை கொடுக்கப்பட்டிருந்த நோக்கம் இன்றே நிறைவேறிற்று. இத்திரையால் குறிக்கப்பட்ட என் குமாரனுடைய சரீரம் சிலுவையில் கிழிக்கப்பட்டபடியால் அவர்மூலமாய்ச் சகலரும் என் கிருபாசனத்தைத் தாராளமாய்த் தரிசிக்கலாமென விளம்பரஞ்செய்தார். திரைச்சீலை கிழிந்ததைப்போல யூதரைத் திடுக்கிடச்செய்தது வேறெதுவுமில்லை. யூதனையும் புறஜாதியானையும் பிரிந்த நடுச்சுவர் தகர்ந்தது. எருசலேம் ஆலயம் என்பது போய் எங்கும் பிதாவைத் தொழுகொள்ளும் காலம் வந்தது.

பூமி அதிர்ந்தது. தேவன் பூமி அதிர்ச்சியினாலும் பேசினார். "பகலுக்கு பகல் வார்த்தைகளைப் பொழிகிறது; இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை வார்த்தையுமில்லை. அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது." பூமி அதிர்ச்சி தற்செயலாய் உண்டானதென்று சொல்லுகிறவர்களுண்டு. தேவ ஆளுகையில் தற்செயல் என்பதில்லை. சகலமும் தேவசெயலே. இப்பூமி அதிர்ச்சி எப்பொழுதுண்டாயிற்று, எதற்காக உண்டாயிற்றென்பதை யோசித்தால் தேவ நோக்கம் விளங்கும். "தேவனே நீர் உமது ஜனங்களுக்குமுன்னே சென்று அவாந்தர வெளியில் நடந்து வருகையில் பூமி அதிர்ந்தது! தேவனாயிருக்கிற தேவனுக்கு முன்பாகவே இந்தச் சீனாய்மலையும் அசைந்தது." நியாயப் பிரமாணத்தை அருளினபோது பூமி அதிர்ச்சியினால் தேவன் பேசின துண்டானால், தமது இரட்சிப்பை நிறைவேற்றும் சமயத்தில் எவ்வளவு பலமாய் அவர் பேசவேண்டும்! சீனாய்மலைக்கே அப்படியானால் திருக்குமாரன் ஜீவனைக்கொடுத்த கல்வாரியில் எப்படி? " தேசத்தின் குடிகளே! திகிலும் படுகுழியும் கண்ணியும் உங்களுக்கு நேரிடும், தேசம் நொறுங்கவே நொறுங்கும், தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும்" என்று ஏசாயா

சொன்னபிரகாரம் தமது குமாரனைக்கொன்ற பாவிகள் திகைத்து நடுங்கும்படி இப்பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. அடையாளம் அடையாளமென்று தொந்தரவு செய்த பாதகர் கலங்கித் தவிக்கும்படியான அடையாளங்கள் கொடுக்கப்பட்டன.

கர்த்தன் கொலையானதை அவர் கரத்தின் கிரியைகள் சகிக்கக்கூடாமல் நெஞ்சுடைந்து வாய் திறந்து புலம்புவது போலாயிற்று. "கன்மலைகளும் பிளந்தன. கல்லறைகளும் திறந்தன. நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் எழுந்திருந்தன. அவர் உயிர்த்தெழுந்தபின்பு இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள்." பூமி அதிர்ச்சியோடு சேர்ந்து கன்மலைகள் குலுங்கி வெடித்தன. கன்மலைகளைக் குடைந்து கல்லறைகளை உண்டாக்குவது யூதருக்கு வழக்கம். கல்லறையின் வாயைப் பெரிய கற்களால் மூடுவார்கள். இக்கற்கள் அகன்று போகவும் கல்லறைகள் திறவுண்டன. உள்ளேயிருந்த பிரேதங்களில் ஜீவன் பிரவேசித்தன. கிறிஸ்து மரித்தோரினின்று எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானாரென்று வேதத்தில் சொல்லியிருக்க அவருக்குமுன் இவர்கள் எழும்பினதால் இவர்களே முதற்பலன்களாவார்களென்று சொல்வாருண்டு. மத்தேயு எவ்வளவு ஜாக்கிரதையோடு எழுதியிருக்கிறார். அவர் உயிர்த்தெழுந்து காணப்பட்டபின்பு இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டுக் காணப்பட்டார்கள் என்கிறார். ஆகையால் கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்பே இவர்கள் உயிரடைந்து வெளியேறினார்களென்று விளங்குகிறதல்லவா? இப்படி எழும்பின பரிசுத்தவான்கள் யாரென்றும், என்னவிதமாய்த் தோன்றினார்கள், யாருக்குக் காணப்பட்டார்கள், என்ன பேசினார்களென்றும் சொல்லப்படவில்லை. ஒன்று நிச்சயம். கிறிஸ்து தமது மரணத்தால் நமது மரணத்தை ஜெயித்தாரென்பதை நிரூபிக்கும்படியாக "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று ஜெயக்கவி பாடிக்கொண்டு மரித்த பக்தரான இவர்களைப் புறப்பட்டு வரும்படி செய்தார். கிறிஸ்து தமது சீஷருக்குமாத்திரம் காணப்பட்டதுபோல இவர்கள் பரிசுத்த நகரத்தில் பிரவேசித்தபோதிலும் அவரது அடியாருக்கு மாத்திரம் காணப்பட்டிருக்கவேண்டும். இவர்கள் மறுபடியும் கல்லறைக்குப் போகாமல் கிறிஸ்துவின் ஜெயபலனாக அவரோடுகூட மகிமையில் பிரவேசித்தார்கள் என்பது நம்பிக்கை.

சிலுவைப் பவனியை நடத்தின நூற்றுக்கதிபதி ஆண்டவரை விட்டு விலகாமல் அவருக்கு எதிரே நின்று அவரைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். தாம் இராஜாவென்றும், தேவ குமாரனென்றும், பிலாத்திடம் சொன்னதைக் கேட்டான்.

யூதர்களுடைய மூர்க்கத்தையும் பிடிவாதத்தையும் கண்டான். அவர் குற்றமற்றவர் என்பதையும் அறிந்தான். அவருடைய சாந்தத்தையும் பொறுமையையும் கவனித்தான். அவர் திருமொழிகள் யாவற்றையும் கேட்டான். சத்துருக்களுக்காக அவர் ஜெபித்ததும் கள்ளனுக்குப் பரதீசை வாக்குப்பண்ணினதும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. இப்படிப்பட்ட ஆச்சரியமான குற்றவாளியை அவன் ஜென்மத்திலும் கண்டதில்லை. இவர் மெய்யாகவே தேவகுமாரனாயிருப்பாரோ? இப்பாதக யூதர்கள் அநியாயமாய் இவரைச் சிலுவையிலறையச் செய்தார்களோவென தனக்குள்ளே சிந்தனை செய்துகொண்டிருக்கையில், அந்நேரம் நடந்த ஆச்சரியமான சம்பவங்கள்மூலமாய் தேவன் அவனோடு பேசினார். கன்மலைகள் பிளந்துருக, கல்லிலும் கடினமான யூத அதிகாரிகள் திமிர்பிடித்து நிற்க, புறஜாதியானான நூற்றுக்கதிபதி வாய்திறந்து: "இந்த மனுஷன் நீதிபரன், மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்'' என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான். அவனோடுகூடியிருந்த ரோமப் போர்ச்சேவகரும் மிகவும் பயந்து ஆம், அவர் சொன்னபடியே தேவகுமாரன்தான் என்றார்கள். இவ்வாறு அறிக்கைசெய்த நூற்றுக்கதிபதி பிந்திப் பூரண விசுவாசியாகி கிறிஸ்துவின் ஊழியக்காரனாகியிருப்பான் என்பதற்கு ஐயமில்லை. இந்தக்காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைக்கண்டு தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.

சிலுவையிலறையப்பட்டவர்களை பறவைகள் மிருகங்கள் பிடுங்கித்தின்னும்படி அப்படியே விட்டுவிடுவது ரோமருக்கு வழக்கம். யூதர்கள் அப்படிச்செய்யக்கூடாது. மரத்தில் தூக்கப்பட்டுச் சாகிறவனை மாலையிலேயே புதைக்கவேண்டும். அவன் பிரேதம் இரவிலே தொங்கக்கூடாது. தவிர, இச்சிலுவைகள் நகரத்திற்குச் சமீபமாயிருந்ததினாலும், பஸ்காவின் மகா ஓய்வுநாள் சமீபித்திருந்ததினாலும் அப்பிரேதங்களை ஆறுமணிக்குள் அகற்றும்படி அதிகாரிகள் பிலாத்துவைக் கேட்டுக்கொண்டார்கள். உயிரோடிருப்பவர்களை எப்படிப் புதைக்கிறது? அவர்கள் தாங்களாகச் சாகவேண்டுமானால் இன்னும் இரண்டு மூன்று நாள்கள் செல்லும். சிலுவையிலறைந்து ஐந்து மணிநேரந்தானே ஆகிறது. இவர்களைச் சாகவைக்க வேண்டுமானால் ரோமர் கையாளுகிற குரூரமான முறைகளுண்டு. மகாவேதனையோடு தொங்குகிறவர்களின் கால் எலும்புகளை இருப்புத்தடியாலே அடித்து நொறுக்குவார்கள். அந்நேரமே அவர்கள் சாவார்கள். அருமை எஜமானை இவ்விதமாகவும் பாடுபடுத்த உத்தேசித்து பிலாத்திடம் ஓய்வுநாளென்று மாயமாக யூதர் பேசியிருக்கலாம். அவ்வாறே இரண்டு கள்ளருடைய காலெலும்புகளையும் அடித்து நொறுக்கிக் கொன்றார்கள்.

ஆண்டவரிடத்தில் வந்தபோது அவர் மரித்துப்போனாரென்று கண்டு அவரது காலெலும்புகளை நொறுக்காதுவிட்டார்கள். வேதவாக்கியம் நிறைவேறிற்று. ஆகிலும் அவர் மரித்ததின் உண்மையை அறியும்படி ஒரு போர்ச்சேவகன் அவரை ஈட்டியால் விலாவில் குத்தினான். அங்கிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டன. யோவான் அதைக் கண்டார். குத்தப்பட்ட தமது விலாவைப்பற்றி ஆண்டவர் உயிர்த்தபின் தோமாவோடு பேசினார்.

அவர் இவ்வளவு சீக்கிரத்தில் மரித்தது ஆச்சரியம். யாதொரு வியாதியறியாத பூரண சுகமுள்ளவர். முப்பத்துமூன்று பிராயமுள்ளவர். சாகிறபோதும் அவர் சத்தம் மகா பலமாயிருந்தது. அப்படியிருக்க, இவ்வளவு சீக்கிரம் மரித்ததேன்? அவர் விலாவிலிருந்து புறப்பட்ட இரத்தமும் தண்ணீரும் அவர் மரணத்தின் தன்மையை வெளிப்படுத்துகிறதாக தேவபக்தியுள்ள வைத்தியர் கூறுகிறார்கள். நமதாண்டவர் நமது பாவங்களுக்காகத் தமது சரீரத்தில் கொடிய பாடுகளைப் பட்டபோதிலும் அவருடைய மரணத்துக்குக் காரணம் அவையல்லவென்றும், அவரது ஆத்துமா தாங்கக்கூடாத துக்கத்தால் மேற்கொள்ளப் பட்டு இருதயம் வெடித்து மரித்தாரென்றும் சொல்லுகிறார்கள். ஒருவன் தாங்கக்கூடாத நிந்தை ஆபத்தை திடீரென கேட்கும்போது அவன் இரத்தகுழாய்கள் வெடித்து அந்த இரத்தம் இருதயத்தைச் சுற்றிலுமுள்ள பையை நிரப்ப அவன் மகாவேதனையடைந்து கதறிச் சாவான். இப்படி உறைந்த இரத்தத்திலுள்ள தண்ணீர் வேறாகப் பிரியும் அவ்வுடலை வைத்தியர் அறுத்துப் பரிசோதனை செய்யும்போது விலாப்பக்கத்தில் இரத்தத்தையும் தண்ணீரையும் காண்கிறார்கள். நமது இரட்சகருடைய விஷயத்தில் ஈட்டிக்குத்து அவைகளை வெளியே கொண்டுவந்தது. இருதயவெடிப்பால் சாகிறவர்கள் வேதனை தாங்கக்கூடாமல் கையை மார்பில் வைத்து மகாசத்தமிட்டு மரிப்பார்கள். நமதாண்டவரின் கைகள் ஆணியறையப்பட்டிருந்தபடியால் மகா சத்தமிட்டுக்கூப்பிட்டு ஜீவனை விட்டார். உலக பாவம் அவரை மோதினது. நிந்தை அவருடைய இருதயத்தைப் பிளந்தது. பிதாவுக்கு விரோதமாய் நரர்செய்த பாவம் அவர் திருமனதைச் சஞ்சலப்படுத்திற்று. மகா வேதனையும் துக்கமும் நிறைந்தார். இருதயம் வெடித்து மரித்தார். மனுஷர் அவரைப் பாடுபடுத்தி மரணத்துக்குள்ளாக்கினாலும் இதுவரை தமது தீர்மானத்தின்படியே சகல பாடுகளையும் அவர் ஏற்றுக் கொண்டதுபோல, தமது வேளையின்படியே ஆவியைப் பிதாவின் கரத்தில் ஒப்புவித்தார். அதைக் கொடுக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு, அதைத் திரும்ப எடுத்துக்கொள்ளவும் அவருக்கு அதிகாரமுண்டு. மனுஷர் எண்ணத்தின்படியல்ல, தேவதீர் மானப்படியே சகலமும் நடந்தது.

குற்றவாளிகளின் சரீரங்கள் ஜனங்களின் பொதுக் கல்லறையில் புதைக்கப்படக்கூடாது. துன்மார்க்கரை நீதிமான்களோடு புதைக்கமாட்டார்கள். இவர்களை ஊர்க்குப்பைகளைக் கொட்டுகிற இன்னோம் பள்ளத்தாக்கிலுள்ள பிரேதக் குழிகளில் சிலுவைகளோடுபோட்டு மண்ணை மூடுவார்கள். அவ்வாறு ஆண்டவரையும் புதைக்கத் தீர்மானித்தார்கள். எஜமானுக்கு அப்படி நடப்பதில்லையென்பது தேவவாக்கு. "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள், ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடேயிருந்தார்." இந்தச் சிலாக்கியம் அரிமத்தியாவூர் யோசேப்புக்குக் கிடைத்தது. இவன் கனம் பொருந்திய ஆலோசனைக்காரனும், உத்தமனும், நீதிமானும், யூதருடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனும், தேவனுடைய இராஜ்யம் வரக் காத்திருந்தவனும், இயேசுவுக்குச் சீஷனும், ஐசுவரியவானுமாயிருந்தான். ஏசாயா முன்னுரைத்த ஐசுவரியவான் இவனே. ஐசுவரியவான்கள் நமதாண்டவருக்குச் சீஷராயிருப்பது எவ்வளவு பிரயோஜனம்! இவன் பிலாத்துவிடம் துணிந்து போய் அவருடைய சரீரத்தைக் கொடுக்கும்படி கேட்டான். இதுவரை மனுஷருக்குப் பயந்து மறைவாயிருந்த யோசேப்பு கல்வாரியில் நடந்த சம்பவங்களைக் கண்டபோது மகா தைரியமடைந்து தான் இயேசுவின் சீஷனென யாவருமறியத் தெரியப்படுத்தினான். அவர் மரித்தது நிச்சயமென நூற்றுக்கதிபதியினால் பிலாத்து அறிந்தபோது சரீரத்தை யோசேப்புக்குக் கொடுக்கக் கட்டளையிட்டான். அவன் தன் வேலைக்காரரோடுபோய் போர்ச்சேவகரின் உதவியினால் ஆணிகளைக் கழற்றி கிறிஸ்துவின் சரீரத்தைச் சிலுவையிலிருந்து இறக்கினான். ஆ! என்ன பரிதாபம். கைகளைப்பாருங்கள். இருபாதங்களையும் பாருங்கள். விலாவைப் பாருங்கள். முள்பதிந்த சிரசைப் பாருங்கள். அவர் திருமுதுகைப் பாருங்கள்.

இந்தச்சமயத்தில் நிக்கொதேமு வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்து, அவரை அடக்கம் செய்யும்படி யோசேப்போடு சேர்ந்துகொண்டான். மகதலேனா மரியாள், மற்ற மரியாள், சலோமே என்பவளும் வேறு சில ஸ்திரீகளும் கூடயிருந்தார்கள். இவர்கள் ஆண்டவர் சரீரத்தை சமீபத்திலிருந்த யோசேப்பின் தோட்டத்திற்குக் கொண்டுபோய் தேகத்திலுள்ள இரத்தத்தையும் காயங்களையும் கழுவிச் சுத்தம்பண்ணினார்கள். சிரசில் பதிந்த முள்களை மெதுவாய் எடுத்து அவர் தலைரோமத்தை ஒதுக்கிவிட்டார்கள். பின்பு அருள்பொழிந்த அவர் திருமுகத்தை ஆவலோடு பார்த்தார்கள். அவர் கையைத் தொட்டுப் பார்த்தார்கள். அவர் முகத்தைத் தடவி பார்த்தார்கள். அவர் பாதங்களைத் தழுவினார்கள். நிக்கொதேமு கொண்டு வந்த

வாசனைத் திரவியத்தால் அவர் சரீரத்தை மூடி மெல்லிய துப்பட்டியினால் சுற்றிக்கட்டினார்கள். மற்றொரு துண்டுச் சீலையை அவர் தலையில் சுற்றினார்கள். இவ்வாறு அவரது அடியார் அவருக்குப் பிரேத அலங்காரஞ் செய்து, அவர் திருமுகத்தில் அன்பின் கண்ணீர் வடித்து, அவரை முத்தமிட்டு வழியனுப்பிக்கொண்டார்கள். அவர் திருமேனி யோசேப்பின் புதிய கல்லறையில் வைக்கப்பட்டது. பெரியகல்லை எடுத்து வாசலை மூடினார்கள். மகதலேனாளும் மற்ற மரியாளும் கல்லறையின் பக்கத்தில் உட்கார்ந்து புலம்பி அழுது, நேரமானதால் பின்பு புறப்பட்டுப்போனார்கள். கிறிஸ்துவின் சீஷர்களுக்கு இத்தோடு சகலமும் ஒழிந்ததுபோலாயிற்று. சத்துருக்களுக்குத் தாங்கள் அடைந்த ஜெயம் பெரிதாகத் தோன்றிற்று.

34

ஏன் என்னைக் கைவிட்டீர்?

Why Hast Thou Forsaken Me?

மரணத்தருவாயிலிருக்கும் பக்தன் முந்தி வீட்டுக் காரியங்களை ஒழுங்குப்படுத்தி, தனக்கருமையானவர்களோடு பேசி, பின்பு தன் முகத்தைப் பரத்துக்கு நேராகத் திருப்பி கர்த்தரிடம்போக ஆயத்தப்படுவான், அதுபோல சிலுவையில் தொங்கின ஆண்டவர் முந்தி மற்றவர்களுடைய காரியங்களைக் கவனித்துப் பிந்தித் தம்மைப்பற்றி நினைக்கிறார். ஆகையால் சிலுவை வசனங்கள் இருபாகமாகப் பிரிகின்றன. முதல் மூன்றும் மற்றவர்களுக்கானது, தம்மைச் சிலுவையிலறைந்தவர்களுக்காக ஜெபித்தது, கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்தது, தாயாரை யோவானிடம் ஒப்புவித்த வசனங்கள். பிந்தின நான்கும் தமக்கே சம்பந்தப்பட்ட வசனங்கள். இவற்றில் **"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"** என்பது நாலாம் வசனம். ஏழு வசனங்கள்பேரிலும் எழுதும்படி ஆரம்பத்தில் விரும்பின போதிலும், புஸ்தகம் விரிவாகும் என்றஞ்சி கருகலான இந்த ஒரு வசனத்தைமாத்திரம் இங்கு சேர்த்தேன். இவ்வளவு துயரமான வார்த்தைகள் கிறிஸ்துவின் வாயிலிருந்து வந்தது மிகவும் ஆச்சரியம். இது நமது புத்திக்கெட்டாத இரகசியம். இதன் ஆழத்தை அளக்கக்கூடிய அளவுகோல் இல்லை. இந்த வசனத்தின் கருத்தைக் கண்டுபிடிக்கும்படி லூத்தர் தமது அறைக்குள் பிரவேசித்து, கதவை அடைத்து, அநேக மணி நேரங்களாகச் சாப்பிடாமலும், எவரோடும் பேசாமலும், ஆழமாய் ஆராய்ந்து பார்த்தும் இரகசியத்தை அறியக்கூடாமல், இதென்ன? தேவன் தேவனைக் கைவிட்டாரென்றால் இதை யார் அறியக்கூடுமென்று சொல்லி வெளியேறினாராம். இவ்வசனத்தின் இரகசியத்தைப் பூரணமாய்க் கண்டறிந்தவர்கள் யாருமில்லை. நாம் அறிந்துகொண்டோம் என்று சொல்லத்துணியோம். ஆகிலும் எவ்வளவு ஆராயக்கூடுமோ அவ்வளவு ஆராய்ந்து பார்ப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நாம் இதை அறியும்படி நாடுவது தேவசித்தமில்லையென்றால் திரளான ஜனங்கள் கேட்கும்படி ஆண்டவர் இந்த வசனத்தைச் சத்தமாய்ச் சொல்லியிருக்க மாட்டார் ஏழு வசனங்களில் இதுவும் ஒன்றாகச் சேர்க்கப்

பட்டிருக்கமாட்டாது. தேவ ஆவியானவரின் ஒத்தாசையைக் கொண்டு மகா பயபக்திக்குரிய இவ்வசனத்தின் இரகசியத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

மூன்றாம் வசனத்துக்கும் நாலாம் வசனத்துக்கும் இடையில் மூன்று மணிநேரங்களாகப் பேச்சுமில்லை வார்த்தையுமில்லை. அன்பன் யோவான் அருமைத்தாயாரை வீட்டுக்கு அழைத்துச்சென்றார். திடீரென இருள்வந்து பூமியை மூடிக்கொண்டது. அவ்விருள் எப்படி வந்ததெனச் சாஸ்திரிகளால் சொல்லக் கூடவில்லை. ஏனென்றால் அது இரவுக்குரிய இருளாயிராமல் நடுப்பகலில் உண்டான இருளாயிருந்தது. அது சூரியகிரகணத்தால் உண்டான இருளுமல்ல. அமாவாசை காலத்தில்தான் சூரியகிரகணம் உண்டாகும். பூரணசந்திரன் பிரகாசித்த நாள்களில் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார்.

ஆகையால் மத்தியானத்தில் உண்டான அந்த இருளுக்கு வானத்திலோ பூமியிலோ யாதொரு காரணமும் இருந்ததில்லை. அவ்விருளை அனுப்பினவரே மூன்றுமணி நேரத்துக்குப் பின் அதைப் பூமியைவிட்டு விலக்கினார். அந்த மூன்றுமணி நேரமும் பூமி அந்தகாரத்தில் இருந்தது. இது எருசலேமில்மாத்திரம் உண்டான இருள் அல்ல. சீனருடைய நாளாகமத்தில் இவ்விருளைப்பற்றி எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது. எகிப்திலிருந்த தியோனிசியஸ் என்னும் வானசாஸ்திரி இவ்விருளைக் குறித்து: ஒன்று தேவர்கள் இவ்வேளை பாடுபடவேண்டும், அல்லது உலகமே நிலைகுலைந்து அழியவேண்டும் என்று சொன்னான். அதிசயமாய்த் தோன்றின இவ்விருளுக்குக் காரணமென்ன? சிருஷ்டிகர் படும் அவஸ்தையைச் சிருஷ்டி சகிக்கக்கூடவில்லை. பூச்சக்கரத்துக்கு ஜீவனையும் சந்தோஷத்தையும் கொடுக்கும் சூரியன் சிலுவைக்காட்சியைப் பார்க்கக்கூடாமல் தன் முகத்தை மூடிக்கொண்டது. அதன் முகம் மறையவே பூமி இருளடைந்தது. மனுமக்கள்படும் பாடுகளைப்பார்த்துச் சிருஷ்டியானது துக்கித்துப் புலம்பினதில்லை. இரத்தச்சாட்சிகள் தகனிக்கப்படுகிறார்கள்; பட்சிகள் வழக்கம்போல் பாடுகின்றன. புஷ்பங்கள் மலர்ந்து பரிமளிக்கின்றன. யுத்தக்களத்தில் ஆயிரம்பதினாயிரமான வீரர் மடிந்து இரத்தம் பிரவாகித்து ஓடுகிறது. வானசேனைகளான சூரிய சந்திர நட்சத்திரங்கள் எப்பொழுதும்போலவே தங்கள் பாதைகளில் மகிழ்ச்சியாய் ஓடுகின்றன. நரர் படும் பாடுகளைச் சற்றும் கவனிக்காமல், உங்களுக்கும் எங்களுக்கும் என்ன என்பதுபோல் நிர்விசாரமாயிருக்கின்றன. வெள்ளப்பெருக்கால் தேசம் பாழானால்தான் என்ன? கப்பற்சேதத்தால் மனுஷர் சமுத்திர ஆழத்தில் அமிழ்ந்தால்தான் என்ன? அக்கினி

பூமியதிர்ச்சியால் நாடுகள் நாசமானால்தான் என்ன?. சிருஷ்டியானது நம்மைக் கவனிக்கிறதுமில்லை நமக்காகத் துக்கிக்கிறதுமில்லை. ஆனால் ஆண்டவர் சிலுவைமீது அவஸ்தைப்பட்ட வேளையில் வல்லமையாய் பிரகாசித்த சூரியன் திடீரென அந்தகாரப்பட்டது. வேதனைப்பட்டுச் சாகும் மனுஷனைப் பரியாசம்பண்ணிச் சிரிப்பவர்கள் பிசாசிலும் கேடானவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. தேவன் மனிதரைப் பலவிதமாய் உணர்த்துகிறதுண்டு. "வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏரே. 2:12). ஜீவாதிபதியை, சிருஷ்டிகளின் நாயகனை இவ்வாறு பாடுபடுத்திப் பரியாசம்பண்ணின பாவிகளின் வாயை அடைப்பதற்கும், அவர்கள் மனதைக் கலக்குவதற்கும் தேவசித்தப்படியே சூரியன் அந்தகாரப்பட்ட தென்றறிக.

இருள் பயத்தையும், பயம் அமைதலையும் உண்டாக்குவது இயல்பு. எகிப்து தேசத்தில் காரிருள் வந்தபோது ஜனங்கள் "ஒருவரையொருவர் காணவுமில்லை; ஒருவரும் தம்மிடத்தை விட்டு எழுந்திருக்கவுமில்லை." பட்சிகளின் சத்தம் அடங்கின. தெருவில் வண்டிகளோடும் சத்தமில்லை. நதியில் படவுகள் செல்லும் சத்தமில்லை. இயந்திரங்களின் இரைச்சல் இல்லை. ஸ்திரீ புருஷர் பிள்ளைகள் பேசும் சத்தம் இல்லை. அச்சம் பேச்சை நிறுத்தும். அருண்டவன் ஊமை போலாவான். கல்வாரியில் மூன்றுமணி நேரமாய் யாதொரு சத்தமும் இல்லை. சுவிசேஷத்தில் இந்த மூன்றுமணி நேரத்தைக் குறித்த சரித்திரமில்லை. அந்தகாரமும் அமைதலுமே அவ்வேளையின் சரித்திரம். தூஷித்தவர்கள் எங்கே? பரியாசம்பண்ணிச் சிரித்தவர்கள் எங்கே? சிலுவையிலிருந்து இறங்கிவாவென்று சொன்னவர்கள் எங்கே? நாவுகள் யாவும் கட்டப்பட்டன. உதட்டைப் பிதுக்கித் தலையைத் துலுக்கினவர்கள் எங்கே? அந்தகாரமும் பயமும் அவர்களை மூடிக்கொண்டன. இருளின் மக்கள் இருளுக்குள்ளானார்கள். கற்களைப்போல நின்றநிலையில் நின்றுபோனார்கள். ஐந்துநிமிஷமா? பத்துநிமிஷமா? அல்ல. மூன்றுமணி நேரமாக இக்கதிக்குள்ளானார்கள். புறம்பே இருள் மூடினதுபேலவே நமது நேச மீட்பருடைய ஆத்துமாவையும் காரிருள் வந்து மூடினது. மகா பயங்கரமான போராட்டம் அவருடைய மனதில் நடந்தது. மூன்று மணியானவுடனே எல்லாரும் கேட்கத்தக்கதாக ஒரு பலத்த சத்தம் தொனித்தது. "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்பதே.

வேதாகமத்தில் இதைப்போல் விஸ்தரிப்பதற்குக் கஷ்டமான வசனம் வேறொன்றுமில்லை. எவ்வளவு விளக்கிக்காட்டினாலும்

இன்னும் இது விளங்காத இரகசியமாகவேயிருக்கும். எவ்வளவுதூரம் இறங்கிப்போனாலும் இன்னும் முழங்கால் தண்ணீரிலேயே நிற்போம். சமுத்திர ஆழம் இன்னும் நமக்கு அப்பாலேயே இருக்கும். ஆகையால் இந்த வசனத்தை விட்டுவிடலாமோ என்று நினைப்போம். அவ்வாறு விட்டுவிட கிறிஸ்துவின் அன்பர்களுக்கு மனம் வருகிறதில்லை. "ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று **குமாரன்** கேட்டபோது, இன்ன காரணத்தினாலேதான் என்று **பிதா** சொல்லியிருந்தால் நமக்குக் கஷ்டமிராது. அப்படிச் சொல்லவுமில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் தாம் இப்படிக் கதறினதற்குக் காரணமின்னதென்று சீஷர்களுக்குச் சொல்லியிருந்தாலும் நாம் அறிந்துகொள்ளலாம். அவ்வாறு அவர் சொல்லவுமில்லை.

சுவிசேஷகர் சில கருகலான வசனங்களை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இந்த வசனத்தையோ அவர்கள் விளக்கவில்லை. இதற்குக் காரணமென்ன? தேவ இரகசியங்கள் சொல்லிக் கொடுப்பதினால்மாத்திரம் அறிந்தகொள்ளக் கூடியவையல்ல. கிறிஸ்துவின் தெய்வீகம் ஆவிக்குரிய அனுபவத்தால் அறியவேண்டிதேயன்றி, சொல்லுகிறதினால் தெரியமாட்டாது. அதுபோலவே அவருடைய பாடுகளின் இரகசியங்கள் சொல்லுகிறதினால்மாத்திரம் மனுஷர் கண்டு கொள்ளக்கூடியவையல்ல. நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு, அவருடைய சிந்தைக்கொப்பாக வளருகிறதற்குத் தக்கதாக மாத்திரம், அவருடைய இரகசியங்களை அறியக்கூடும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. ஆகையால் தேவன் இந்த வசனத்தை இரகசியமாகவே விட்டுவிட்டார். மேலும் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அது இரகசியமாகவே விடப்பட்டது நல்லது. பரிசுத்த இரகசியமாகிய அத்திரைக்குள் நாம் பயபக்தியுடன் பிரவேசித்து, அதைச் சுற்றிச்சுற்றி ஆராய்ந்து பார்ப்பது நமது ஆத்துமாவுக்கு ஆரோக்கியமாயிருக்கும். கஷ்டமின்றிக் கிடைப்பது நமக்கு அருமையாயிராது. அற்ப விஷயங்களுக்கு மனுஷர் தங்கள் பணத்தையும் பலத்தையும் நேரத்தையும் செலவிடுகிறார்கள். தற்காலத்தில் எவரெஸ்ட்டு சிகரத்தில் ஏறும்படி தங்கள் பணத்தையும் உயிரையும் கொடுக்கிறார்கள். நமக்கு நித்திய ஜீவனை இலவசமாய்க் கொண்டுவந்த ஊற்றைக் கண்டுபிடிக்கும்படி பிரயாணம் புறப்படுவது அற்பக்காரியமா? அதற்காக நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சி பலனற்றுப் போகாது.

"தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" யார் வாயினின்று இப்படிப்பட்ட கதறுதல் வந்தபோதிலும் இரட்சகர் வாயினின்று வரத்தகுமா? வேதனையைத் தாங்கக்கூடாமல் அவர் மனதில் கலக்கமடைந்து தேவன் தம்மைக் கைவிட்டதாக நினைத்தா

ரென்று வைத்துக்கொண்டாலும், சூழ்ந்து நிற்கும் பகைவர் நிமித்தமாவது அதை மறைப்பதல்லவோ ஞானம். அந்த வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு அவர் சாகப்பயந்த கோழையென்று சத்துருக்கள் பரியாசம்பண்ணமாட்டார்களா? எத்தனையோ பேர் மனதில் கலங்கினபோதிலும் வார்த்தையில் தீரங்காட்டினதுண்டே. அவ்வளவு ஞானம் நமது எஜமானுக்கு இல்லாமற் போனதென்ன? அவருடைய கெட்டிக்காரத்தன மெல்லாம் கடைசியில் கெட்டுப்போயிற்றோ? இவன் தேவனை நம்பியிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்று சத்துருக்கள் இப்போதுதானே பரியாசம்பண்ணினார்கள். அவர்கள் காதுகள் கேட்க "தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று சொல்லலாமா? அவர்கள் என்ன நினைப்பார்கள்? தேவன் அவரைக் கைவிட்டது மெய்தான் என்று தங்களைத்தேற்றிக் கொள்ளமாட்டார்களா? ஐயோ, ஆண்டவர் தமக்குக் குறைவை உண்டாக்கும் வார்த்தைகளை மனதில் அடக்கிக்கொண்டா ரில்லையே என்று நாம் எண்ணுவோம். ஆண்டவர் மாயக்காரனாயிருந்தால் உள்ளத்திலொன்றும் வெளியி லொன்றுமாயிருப்பார். மனுஷருடைய மதிப்பு அவருக்கு அற்பக்காரியம். அவர் சொல்ல விரும்பாததைச் சொல்ல மாட்டார். சொல்லவிரும்புவதைச் சொல்லாதிருக்கவுமாட்டார்.

அந்நேரத்தில் அவர் தமது உள்ளத்திலிருந்ததையே வெளியிற் சொன்னார். தாம் கதறிச்சொல்லும் வார்த்தையால் இடறலுண்டாகுமேயென்று அவர் கலங்கவில்லை. அதைப் பிந்தி விளக்கிக் காட்டவேண்டுமென்று அவர் கவலைப்படவுமில்லை. இடறுகிறவர்கள் எக்காலத்திலும் இடறுவார்கள். நிற்பவர்கள் எக்காலத்திலும் நிற்பார்கள். சுவிசேஷகராவது இவ்வார்த்தைகள் கிறிஸ்துவுக்கு குறைவாயிருக்குமே என்றெண்ணி அவைகளை எழுதாது விட்டுவிடவுமில்லை. மார்க்க விரோதிகளுக்குப் பரியாசமாகுமே என்று அவர்கள் பயப்படவுமில்லை. அவர்கள் உள்ளதை உள்ளபடி எழுதினார்கள். கிறிஸ்துவைக் குறித்து அவர்கள் கட்டுமானச் சரித்திரம் எழுதியிருந்தால் இந்த வார்த்தைகளை ஒருபோதும் சுவிசேஷத்தில் சேர்த்திருக்க மாட்டார்கள். கிறிஸ்துவின் சரித்திரம் உண்மையென்பதற்கு சிலுவையில் அவர் சொன்ன இந்த நாலாம் வசனமே பலத்த ஆதாரம். அதை விளக்கிக்காட்ட அவர்களுக்குத் தெரியாமற் போனாலும் அவர் வாயினின்று பிறந்த வார்த்தைகளை மறைக்காமல் எழுதினார்கள்.

கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்று அறிந்திருக்கிற நமக்கு அவர் மரணத்தருவாயிற்சொன்ன இந்த வார்த்தைகள் அதிகத் திகைப்பாயிருக்கின்றன. அவரை ஜீவியத்துக்கு **மாதிரியாக**

மாத்திரம் போதிக்கிற தற்காலக் கொள்கைக்காரர் இதற்கு என்ன சொல்லுவார்கள்? இதைப்போல் மகா குறைவான மாதிரியுண்டா? "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறிச் சாகிறவரா நமக்கு மாதிரி? எத்தனையோ மனிதர் யாதொரு பயமின்றி மரித்திருக்கிறார்களே. இரத்தச் சாட்சிகளில் அநேகர் மகா சந்தோஷத்துடன் பாடிக்கொண்டு ஜீவனைக் கொடுத்திருக்கிறார்களே. ஸ்திரீகளுங்கூட எவ்வளவோ தைரியத்தோடு மரணமடைந்திருக்கிறார்களே. "தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறிச் சாகிறவர் அவர்களெல்லாரையும்விட மகா கோழையும் அவிசுவாசியுமாயிருக்கவேண்டுமே! அவ்வாறு முறையிட்டு மரிப்பவரா நமக்கு மாதிரி? அவரைப்பார்க்கிலும் சந்தோஷத்தோடும் நம்பிக்கையோடும் மரித்தவர்களை நாம் மாதிரியாக நோக்கலாமே. நாம் எப்படி ஜீவிக்கவேண்டும், எப்படி மரிக்க வேண்டும் என்பதற்கு கிறிஸ்து **மாதிரி**யென்று போதிக்கும் தற்காலக்கொள்கைக்காரர் இந்த இரகசியத்தை நமக்கு விளக்கிக் காட்டட்டும்.

கிறிஸ்துவின் ஜீவியத்தை ஆதியோடந்தமாய்க் கவனிக்கும் நமக்கு அவர் மரிக்கும்போது சொன்ன இந்த வார்த்தைகள் அதிகத் துக்கத்தைக் கொடுக்கின்றன. மகா தைரியத்தோடும் சந்தோஷத்தோடும் அல்லவோ அவர் மரிக்கவேண்டும். அவருடைய **அதிசயபிறப்பு** அப்படிச் சொல்லுகிறது. அவர் பிறந்ததை நட்சத்திரம் அறிவித்தது. தேவதூதர்கள் வானத்தில் தோன்றி அவர் பிறப்பின் கீதம் பாடினார்கள். ஏசாயா அவர் பிறப்பைக்குறித்து: "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு" என்று அறிவித்தார். யோவான் அப்போஸ்தலன் அவரைக் குறித்து: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்" என்றெழுதினார். இப்படிப்பட்ட மகத்துவ நாமங்களைப்பெற்ற **அதிசயநாதன்** எவ்வளவோ தைரியத்தோடும் வெற்றியோடும் மரிக்கவேண்டிய தல்லவோ நியாயம். தேவனே, என்னை நீர் கைவிட்டதேனோ என்று சொல்லி மரித்ததற்குக் காரணமென்ன?

அவருடைய **ஜீவியத்தைக்** கவனித்தாலும் அவருடைய மரணம் மிகுந்த சமாதானமுள்ளதாயிருக்க வேண்டியதே நியாயம். அவருக்குள் பாவமில்லை. அவர் பாவஞ்செய்யவில்லை. அவர் இடைவிடாமல் செய்ததெல்லாம் நன்மையே. ஒரு மனுஷனுடைய மரணவேளை அவன் பாவ ஜீவியத்தால் கசப்பாக்கப்படுவதுண்டு. காலமெல்லாம் அவன் எத்தனையோ அக்கிரமங்களைச் செய்திருந்தபோதிலும் அவன் அவைகளை நினையாதிருக்கலாம்.

சாகும்வேளை சமீபிக்கும்போது பாவ சந்தோஷங்களைவிட்டு அவன் பிரியவேணும். இதுவரை எதிர்பாராத மறுமைக்குள் அவன் பிரவேசிக்கவேணும். மறுமையைப் பற்றியோ அவனுக்கு நிச்சயமில்லை. இங்குமில்லை அங்குமில்லை என்று அவன் காணும்போது தத்தளித்துப் புலம்புகிறான். அதுபோலவே தங்கள் ஜீவகாலத்தை வீணாக்கிப் போட்டவர்களும் கதறிச் சாவார்கள். ஒரு தகப்பன் மரணப்படுக்கையில் இருக்கும்போது தேவன் தனக்குக் கொடுத்த பிள்ளைகள் தன்னைச் சூழ்ந்திருக்கக் கண்டு, தன் துன்மார்க்கமான ஜீவியத்தால் அவர்கள் கேட்டுக்குப் போகிறவழியில் இருக்கிறார்களே என்று நினைக்கும்போது அவன் இருதயம் எவ்வளவோ தத்தளிக்கும். ஒரு தாய் மரிக்குந்தரு வாயிலிருக்கையில் தான் பெற்ற மக்களுக்குத் தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவில்லையே என்பதை உணருவாளானால் அவள் ஆவிக்கு அமைதலிராது. இவ்வாறு மனுஷருடைய பாவங்களும் அவபக்தியான நடக்கைகளும் அவர்கள் மரணத்தைக் கசப்பாக்கி அவர்களைத் தத்தளிக்கச்செய்வது நியாயமே. தங்கள் வாழ்நாளை வீணாக்கினவர்கள் தேவனைச் சந்திக்கக்கூடாமல் கதற வேண்டியது சரிதான். ஆனால் மாசற்ற பரிசுத்தரும், பிதா தமக்கு நியமித்த கிரியைகளைப் பூரணமாய்ச் செய்து முடித்தவருமான இந்தத் **தர்மராஜா**, தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறிச் சாவதற்குக் காரணமென்ன?

அவருடைய **போதகத்தைக்** கவனித்தாலும் அவருடைய மரணத்தில் மிகுந்த நம்பிக்கையும் தைரியமும் காணப்பட வேண்டியது நியாயம். சாத்தானின் தந்திரத்தைக் குறித்தும், பாவத்தின் வஞ்சகத்தைக்குறித்தும், நித்திய ஜீவனைக்குறித்தும், மறுமையின் வாழ்வைக்குறித்தும், மரணத்தின் இரகசியத்தைக் குறித்தும் அவரைப்போல் தெளிவாய்ப் போதித்தவர்கள் யார்? நமது அந்தகாரத்தை நீக்கும் வெளிச்சமும், பயத்தை அகற்றும் நம்பிக்கையும், மரணத்தை மேற்கொள்ளும் ஜீவனும் அவர் திருவாக்கால் அல்லவோ நமக்குக் கிடைத்தது. அவருக்குள் ஞானம் அறிவு வல்லமை என்னும் பொக்கிஷங்கள் அடங்கியிருந்ததே. இவ்வாறு மற்றவர்களுக்கு ஜீவவழிகாட்டின **ஜெகதீசன்** தாம் மரிக்கும் வேளை வந்தபோது இப்படிக் கதறுவானேன்? அவருடைய **கிரியைகளையும்** பார்ப்போம். அவைகளுக்குக் கணக்கில்லை. அவர் கட்டளையிட குருடர் பார்வையடைந்தார்கள். சப்பாணிகள் நடந்தார்கள். செவிடர் கேட்டார்கள். ஊமையர் பேசினார்கள். குஷ்டரோகிகள் சுத்தமானார்கள். திமிர்வாதக்காரர் திடங்கொண்டெழுந்தார்கள். மரித்தோர் பிழைத்தார்கள். காற்றும் கடலின் கோஷ்டமும் அமர்ந்தன. பேய்க்கணங்கள் பறந்துபோயின. சத்துருக்களைப் பார்த்து: நீங்கள் தேடுகிறவர் நானே என்று சொல்ல, அவர்கள்

பின்னாகத் தரையில் விழுந்தார்கள், இப்படிப்பட்ட **அற்புதமூர்த்தி** தாம் மரிக்கும் வேளை வந்தபோது, தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறின காரணமென்ன?

பிதாவுக்கும் அவருக்குமுள்ள **ஐக்கியத்தையும்** பார்ப்போம். பிதா குமாரன்மேல் பூரண அன்பு வைத்திருந்தார். குமாரன் பிதாவில் பூரண அன்புள்ளவராயிருந்தார். குமாரன் எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமானதையே செய்தார். பிதாவின் சித்தமே குமாரனுடைய சித்தம். பிதாவின் வேலையே குமாரனுடைய வேலை. பிதாவின் பிரியமே குமாரனுடைய பிரியம். பிதாவின் மகிமையே குமாரனுடைய மகிமை. குமாரனைவிட்டுப் பிதாவைப் பிரிக்க முடியாது. அப்படியிருக்க, தேவனே நீர் ஏன் என்னைக் கைவிட்டீர் என்று குமாரன் புலம்பினதற்குக் காரணமென்ன? அவர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த **வாக்குகளையும்** பார்ப்போம். பயப்படாதே சிறுமந்தையே, உங்கள்பிதா உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்கப் பிரியமாயிருக்கிறார். உங்களைக்கொண்டு என் சபையைக் கட்டப்போகிறேன். நான் உங்களைக் கைவிட மாட்டேன்; உங்களோடு கூடவேயிருப்பேன். சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். மனுஷர் உங்களைத் துன்பப்படுத்தும்போது சந்தோஷப்பட்டுக் களிகூறுங்கள். நீங்கள் உலகமெங்கும்போய் என் நாமத்தினாலே மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பிரசங்கியுங்கள். என்னை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் இரட்சிக்கப் படுவார்கள். உலகத்தின் முடிவிலே என் பரிசுத்தவான்களை என்னிடத்தில் சேர்த்துக் கொண்டு என் இராஜ்யத்தில் அவர்களை மகிழ்ச்சியாக்குவேன் என்றார்.

இவ்வளவு நம்பிக்கையையும் மேலான வாக்குகளையும் தமது சீஷர்களுக்குக் கொடுத்த இராஜன், தமக்கு ஆபத்து நேரிட்டபோது, மகா கோழையைப்போல் வாய்விட்டுப் புலம்பின காரணமென்ன? அவர் கதியே இக்கதியானால் அவரை நம்பினோர் கதி எக்கதியாகும்? அந்த வார்த்தைகளைமாத்திரம் நாம் கவனிக்கும்போது, நாம் அவரிடத்தில் எதிர்பார்ப்பதற்கு நேர் விரோதமாகயிருக்கின்றதே. அவரது அதிசய பிறப்பு, மாசற்ற ஜீவியம், வல்லமையான செயல்கள், மகத்துவ உபதேசம், பிதாவோடுள்ள இடைவிடாத ஐக்கியம், சீஷர்களுக்குக் கொடுத்த மேலான வாக்குகள், இவையாவற்றையும் கவனிக்கும்போது, அவர் மகா தைரியத்தோடும் நம்பிக்கையோடும், வெற்றியோடும், சமாதானத்தோடும் மரிக்கவேண்டியதே நியாயமாயிருக்க இவ்வளவு பயமும் அவநம்பிக்கையுமான வார்த்தைகளைச் சொன்னது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

இன்னும் பார்ப்போம். தாம் **மரிப்பதற்காகவே வந்தவரென்பது** அவருக்குத் தெரிந்திருக்க, மரிக்கும் சமயத்தில் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று சொல்வது நியாயமா? மரணத்தை எதிர்பாராத மனுஷன் திடீரெனச் சாகநேரிட்டால், ஐயோ, தெய்வமே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று புலம்புவது இயல்பு. இவரோ மரிக்கும்படிக்காகவே உலகத்தில் வந்தார். தாம் மரிக்கவேண்டியது அவசியமென்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னார். தாம் முழுகவேண்டிய அந்த ஸ்நானத்துக்காக எவ்வளவோ ஆயத்தமாகக் காத்திருந்தார். அவ்வாறு அவர் எதிர்பார்த்திருந்த மரணம் வந்தபோது, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கேட்பது சரியா? தாம் மரிப்பதுமாத்திரமல்ல, மறுபடியும் **உயிரோடே வருவதும்** அவருக்குத் தெரியுமே. தமது மரணத்தைப்பற்றி அறிவித்த போதெல்லாம் உயிர்த்தெழுதலைப்பற்றியும் அறிவித்தாரே. என் ஜீவனைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, திரும்ப அதை எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டெனச் சொன்னவர் அவரே மூன்று நாளைக்குள் உயிரோடெழும்புவதை அவர் அறிந்திருந்தும், மறுமையைப்பற்றி யாதொரு அறிவும் இல்லாத ஒரு மனுஷன், தான் இனி இல்லாமல் அழிந்துபோவதை நினைத்து அலறுவதுபோல இவர் அலறினதற்குக் காரணமென்ன?

இந்த மரணத்துக்குப்பின்பு தாம் **மகிமைக்குள் பிரவேசிக்கப் போகிறதும்** அவருக்குத் தெரியுமே. கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொன்னவர் அவரே. தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தினிமித்தமல்லவா சிலுவையை அவர் ஏற்றுக் கொண்டாரென்று வாசிக்கிறோம். தமக்கும் விசுவாசிகளுக்கும் சொல்லமுடியாத சந்தோஷத்தைக் கொண்டுவரும் மரணத்தை அவர் சகித்த நேரத்தில், தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று சொன்னது சரியா? இதுதவிர, இந்த மரணம் **பிதாவுக்குப் பிரியமென்றும்** சொன்னாரே. "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் **அன்பாயிருக்கிறார்**" என்று அவரே சொல்லியிருக்க, மரிக்கும்வேளையில் அதாவது பிதா தம்மில் **அன்பாயிருக்கும்** வேளையில் அவரைப்பார்த்து: ''ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று சொல்லலாமா? சற்றுநேரத்துக்குமுன் கள்ளனைப்பார்த்து: இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீஸில் இருப்பாய் என்று சொல்லிவிட்டு, தேவனே ஏன் **என்னைக்** கைவிட்டீர் என்று புலம்புவது விபரீதமல்லவா?

அவருடைய சீஷர்களுக்கு இருந்த தைரியங்கூட எஜமானுக்கு இல்லாமற்போனதென்ன? அப்போஸ்தலன் மரணம்

சமீபித்திருப்பதைக்கண்டு, நான் பானபலியாக வார்க்கப் பட்டுப்போகிறேன். என் தேகத்தைவிட்டுப் பிரியுங்காலம் வந்தது. "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தருவார்'' என்று சந்தோஷத்தோடும் தைரியத்தோடும் மகா குரூரமான மரணத்துக்குத் தம்மைக் கையளித்தாரே. சீஷன் அவ்வளவு தைரியத்தோடும் நம்பிக்கையோடும் மரிக்க, எஜமான் அவ்வாறு தத்தளித்த காரணமென்ன? சாகப்பயந்த குருவின்மேல் உள்ள நம்பிக்கை சீஷனுக்கு அவ்வளவு தைரியத்தைக் கொடுக்கக் கூடுமோ? ஏதோ ஒரு இரகசியம் இதிலே இருக்கவேணும். அவரது ஒப்பற்ற ஜீவியத்தையும், மகத்துவமான உபதேசத்தையும், வல்லமையான செயல்களையும் கவனிக்கும்போதும், மரிப்பதற்காகவே அவர் வந்ததையும், உயிர்த்தெழுவதையும், மகிமையில் பிரவேசிப்பதையும் அவர் திட்டமாய் அறிந்திருந்தாரென்பதைக் கவனிக்கும்போதும், மரணத்துக்கு அஞ்சி இவ்வாறு கதறினார் என்று ஒருக்காலும் சொல்லக்கூடாது, ஆகையால் 'ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று அவர் சொன்னதற்குக் காரணம் **மரண பயமல்ல**வென்பது நிச்சயம்.

நாம் பாவிகளாதலால் நமது சரீரம் பாடு மரணத்தைச் சகிக்கக்கூடியதென்றும், அவரது திருமேனிக்குச் சிலுவைப் பாடுகள் சகிக்கக்கூடாத வேதனையைக் கொடுத்ததால், அவர் மனஞ்சோர்ந்து அவ்வாறு கதற நேரிட்டதென்றும் சொல்லுகிறார்கள். அவர் பாவமற்றவராயிருந்ததினாலே அதிக வேதனைப் பட்டிருக்கமாட்டாரென்று சொல்லுகிற மறுபட்சத்தாரும் உண்டு. சரீர வேதனையைச் சகிக்கக்கூடாமல் அவர் கதறியிருப்பாரானால் இதற்கு முந்தியே அவர் அப்படிக் கதறியிருக்கவேண்டும். தோட்டத்தில் அவர் வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தபோது, ஏன் என்னைக் கைவிட்டீரென்று அவர் சொல்லவில்லை. அவர்கள் அவரை வாராலடித்தபோது அவர் முதுகு கிழிந்து இரத்தம் பீறி ஓடினது. அவ்வளவு வேதனையான சமயத்திலுங்கூட அவர் தமது வாயைத் திறக்கவில்லை. அவரைச் சிலுவையிற் கிடத்தி அவருடைய கைகளையும் கால்களையும் ஆணிகளால் மரத்தோடு சேர்த்து அறைந்தார்கள். அச்சமயத்தில் அவர் திருமேனி சகிக்கவொண்ணாத வேதனையை அடைந்தது. தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அப்பொழுதல்லவா அவர் கதறியிருக்கவேண்டும். ஆனால் "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்றல்லவோ வேண்டிக்கொண்டார். எவ்வளவு மகிமை! எவ்வளவு இராஜரீகம்! அவர் தேகம் சகிக்க முடியாத வேதனை அடைந்தது; அவர் உள்ளமோ இரக்கத்தால்

நிறைந்து பொங்கினது. என்ன ஆச்சரியம்! சிலுவையிலறையப்பட்டது முதல் மூன்று மணி நேரங்களில் அவரிடத்தில் யாதொரு புலம்பலும் காணப்படவில்லை. பிந்தின மூன்றுமணி நேரங்களில் இருள் பூமியை மூடிக்கொண்டது. மிகுந்த அமைதல் உண்டானது. ஒருவரும் வாய்திறந்து பேசவில்லை. ஆண்டவரும் பேசவில்லை. அந்த மூன்றுமணி நேரத்தில் அவர் ஆத்துமாவில் மகா கொடிய போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தை மனுஷன் பார்க்காதபடி தேவன் இருளாகிய திரையினால் கல்வாரியை மூடினார். அந்த இருள் நீங்கும் சமயத்தில் ஆண்டவர் வாய் திறந்து பலத்த சத்தத்தோடு 'தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்' என்றார். மூன்று மணி நேரத்துக்குப்பின் அவர் சத்தமே முதலில் தொனித்தது. அந்த மூன்று மணிநேரமாய் அவர் தமது ஆத்துமாவில் அடைந்த போராட்டம் இன்னதென்று அவ்வார்த்தைகள் வெளிப்படுத்தின "இருதய நிறைவினால் வாய் பேசும்.'' பிந்தின மூன்று வசனங்களையும் வரிசையாய்ச் சொல்லித் தமது ஆவியைப் பிதாவின் கரத்தில் ஒப்புவித்தார்.

சிலுவையில் அவர் மரித்தாரேயன்றி சிலுவை அவரைக் கொல்லவில்லை. சிலுவையில் தொங்குகிறவர்கள் உடனே சாகமாட்டார்கள். காலெலும்புகளை நொறுக்கி அவர்களைக் கொல்லவேண்டும். அப்படியே தொங்கவிட்டால் சாகிறதற்கு மூன்று நான்கு நாள்கள் பிடிக்கும். கிறிஸ்து அவ்வளவு சீக்கிரம் மரித்தது எல்லாருக்கும் ஆச்சரியம். பகைவருடைய எண்ணத்தின்படியல்ல. அவர் தமது சித்தப்படியே ஜீவனை விட்டார். பிதாவே என்று முதல் வசனத்தை ஆரம்பித்துப் பிதாவே என்று கடைசி வசனத்தை முடித்தார். முதல் மூன்று வசனங்களிலும் அவருடைய காருண்யம் விளங்குகிறது. பிந்தின மூன்று வசனங்களிலும் ஜெயத்தொனி விளங்குகிறது. நடுவசனமாகிய நான்காவது வசனமோ அந்தகாரமாயிருக்கிறது. அவருடைய ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்ட பலத்தது இருளுக்குப் புறம்பே உண்டான இருள் அடையாளம். இவை யாவற்றையும் கவனிக்கும்போது நமதாண்டவருடைய ஜீவியம் முழுவதும் தேவ தீர்மானப்படியும் அவரது ஒழுங்குப்படியும் நடந்ததென்பது நிச்சயம். மனுஷர் அவரைப்படுத்தும் பாடுகள் எவ்வளவு அகோரமானாலும், சிலுவையின் குரூரமரணம் அவர் திருமேனிக்குத் தாங்கக்கூடாத வேதனையானாலும், அதினிமித்தம் 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அவர் ஒருக்காலும் முறையிடமாட்டார். ஆகையால் இச்சமயத்தில்மாத்திரம் அவர் இவ்வாறு கதறினதற்கு வேறு காரணமிருக்க வேண்டும்.

தேவன் அவரைக் கைவிடாதிருந்தும் கைவிட்டதுபோல் அவருக்குத் தோன்றினதால் அப்படிக் கதறினாரென்று

வேதபண்டிதரில் பலர் சொல்லுகிறார்கள். இதற்கு ஆதாரமாக, குமாரன் பிதாவுக்கு எப்பொழுதும் பிரியமாய் நடந்தபடியால், பிதா அவரோடு கூடவேயிருந்தாரென்றும், அவர் ஜீவனைக் கொடுத்தது பிதாவின் சித்தமாகையால், அவர் வேதனைப்படும் சமயத்தில் அவரைக் கைவிட்டிருக்கமாட்டாரென்றும், இரட்சகர் தமது அவஸ்தையைத் தாங்கக்கூடாமல் தேவன் தம்மைக் கைவிட்டதாக **எண்ணிக்கொண்டாரென்றும்** சொல்லுகிறார்கள். குமாரன் பிதாவுக்குப் பிரியமாய் நடந்தாரென்பதையும், பிதா அவரோடுகூடயிருந்தாரென்பதையும் நாம் மறுக்கிறதில்லை. ஆனால் கைவிடப்படாதிருக்கும்போது கைவிடப்பட்டதாக அவர் **எண்ணிக்கொண்டார்** என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தேவன் தம்மைக் கைவிடாதிருந்தும் தம்மைக் கைவிட்டதாக அத்தனை திரள் ஜனங்கள் கேட்கச் சொன்னது பொய்யாகுமே. அவரடைந்த வேதனையின் அகோரத்தால் அப்படிச்சொல்ல நேரிட்டதென வைத்துக்கொண்டாலுங்கூட அது தப்பிதமாகுமே. இப்படிப்பட்ட தப்பிதமான எண்ணம் மனுஷரிடம் காணப்படுவது இயல்பு. முற்பிதாக்களில் அநேகர் இவ்வாறு புலம்பியிருக்கிறார்கள். நாமும் அந்தகாரத்தில் அகப்பட்டுத் தவிக்கும்போது, தேவன் நம்மைக் கைவிட்டதாக எண்ணி முறையிட்டிருக்கிறோம். நம்மைப்போல் நமதாண்டவரும் தப்பிதமாக எண்ணிக்கொண்டாரென்று சொல்வது சரியல்ல. தமக்கு நடவாததை நடந்ததாக அவர் சொன்னது **நான்காவது** வசனமானால், மற்ற வசனங்களைப்பற்றி நமக்கு என்ன நிச்சயம்? கள்ளனுக்குப் பரதீசை வாக்களித்ததும் அதுபோலதானே மோசமாயிருக்கும். அது ஜன்னி மயக்கத்தால் பிறந்த வாக்காயிருக்கலாமே. ஒரு வாக்கியத்தின் இரகசியம் நமக்கு விளங்காதிருக்கும்போது, நமது சுய அபிப்பிராயத்தைச் சொல்லி அதைக் கெடுப்பதைப்பார்க்கிலும், அது விளங்கவில்லையென்று ஒத்துக்கொள்வது நல்லது. அதன் இரகசியத்தை அறிந்து கொள்ளும்படியான காலமும் வரும்.

இன்னும் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். அவர் எப்பொழுதும் தேவனைத் தமது பிதாவென்று அழைத்திருக்க, இந்நேரத்தில் "என் தேவனே, என் தேவனே" என்று இரண்டுமுறை சொன்னதால், தாம் **குமாரன்** என்பதைப்பற்றி அவருக்குச் சந்தேகம் வந்திருக்கலாம் என்கிறார்கள். அந்தச் சந்தேகம் சாத்தானால் வந்ததென்றும், அந்த சந்தேகத்தினால் தாம் கைவிடப்பட்டதாக அவர் நினைத்துக்கொண்டாரென்றும் சொல்லுகிறார்கள். வனாந்தரத்தில் சாத்தான் அவரைச் சோதித்தபோது, பிதா புத்திர சம்பந்தத்தைவிட்டு அவர் அசையவில்லை. தோட்டத்தில் அவன் மிகுந்த பலத்துடன் வந்து அவரைச் சோதித்தபோதும், பிதா புத்திர சம்பந்தத்தை அவர் விட்டுவிடவேயில்லை. அப்படி

யிருக்கச் சிலுவையில் தொங்கும் நேரத்தில்மாத்திரம் அவருக்குள் சந்தேகம் வந்ததென்று எப்படிச்சொல்லலாம்? அவர் ஜீவியத்தில் ஒருபோதும் பிதாவைக்குறித்து அவர் சந்தேகப்பட்டவரல்ல. அவருக்குள் அவநம்பிக்கை வந்திருக்குமானால் அவரும் நம்மைப்போல் பாவியாகி, நம்மை இரட்சிக்கக்கூடாதவரா யிருப்பார். அவிசுவாசமே பாவம். சிலுவை வசனங்களைப் **பிதாவே** என்று தொடங்கி, **பிதாவே** என்று முடித்தார். மத்திய வசனத்தில் மாத்திரம் **தேவனே** என்று கூப்பிட்டார். அவ்வாறு கூப்பிட்டதற்கு வேறு காரணமிருக்கவேண்டும். அச்சமயத்தில் அவர் ஆத்துமாவில் நடந்த போராட்டமென்ன? அவரில் அவ்வேளை நிறைவேறின காரியமென்ன? யாருடைய ஸ்தானத்தில் அவர் தொங்கினார்? இவைகளை அறிந்து கொண்டால் அவர் **தேவனே** என்று அழைத்த காரணம் விளங்கும். அதைப்பிந்தி விளக்குவதால் இங்கே நிறுத்துவோம். இதன் சம்பந்தமாய் இன்னொரு காரியமும் சொல்லுகிறார்கள். அவர் பாவிகளுக்காக அந்த வார்த்தையைச் சொன்னாரேயன்றி **தமக்காகச்** சொல்லவில்லை என்கிறார்கள். அப்படியானால், 'மனுக்குலத்தின் தேவனே, ஏன் மனுக்குலத்தைக் கைவிட்டீர்' என்றல்லவோ அவர் சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்லாமல், **என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்** என்று சொல்வானேன்? இவை தம்மைக்குறித்துச் சொல்லப்பட்டதேயன்றி மற்றவர்களுக்காகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல. தாகமில்லாத ஒருவன் தாகம், தாகம் என்று கதறுவது பாவனையாகுமேயன்றி உண்மையாகாது. நமதாண்டவர் நமக்காக அனுபவித்த சகலபாடுகளும் அவர் "**மெய்யாகவே**" பட்ட பாடுகளேயன்றி மாயத்தோற்றமல்ல. அவர் வாஸ்தவத்தில் அனுபவியாதவைகளை, அனுபவித்ததுபோல் நடித்தால், நமக்காக அவர் அனுதாபப்படுவதெப்படி? நமது பாவம் தொலைவ தெப்படி? இராஜா வேஷம்போட்டு ஆடுகிறவனாலே குடிகளுக்கு என்ன லாபம்?

"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" இதை முதல் முதல் சொன்னவர் கிறிஸ்துவல்ல. ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே தாவீதரசன் தன் இக்கட்டில் பாடின இருப்பத்திரண்டாம் சங்கீதத்தில் இந்த வார்த்தைகள் வருகின்றன. மேசியாவின் பாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் அந்தச் சங்கீதத்திலுண்டு. தாவீதின் காலத்திலுள்ளவர்கள் **சிலுவை** இன்னதென்று அறியமாட்டார்கள். சிலுவை மரணம் யூதர்களுக்குரியதல்ல. குற்றவாளிகளைக் கொல்லும்படி ரோமர் சிலுவையைப் பிற்காலத்தில் உபயோகித்தார்கள். அப்படியிருந்தும் கிறிஸ்து சிலுவையில் மரிப்பவர் என்பதைக் காட்டும்படி: "என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்" என்று அந்தச் சங்கீதத்தில் சொல்லியிருப்பது எவ்வளவு ஆச்சரியம்!

சத்துருக்கள் தாங்கள் அறியாமலே அந்தச் சங்கீதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார்கள். அவருடைய வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு அவருடைய உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள். அவரைப் பார்த்தவர்களெல்லாரும் அவரைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி தலையைத் துலுக்கினார்கள். கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே அவர் இவனை விடுவிக்கட்டும். இவன்மேல் அவர் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்று பரியாசம்பண்ணினார்கள். அநேகம் காளைகளைப்போல அவர் சிலுவையைச் சூழ்ந்துகொண்டார்கள். பாசான் தேசத்துப் பலத்த எருதுகளைப்போல அவரை வளைந்துகொண்டார்கள். இவ்வாறு அவர்கள் இருபத்திரண்டாம் சங்கீதத்தில் மேசியாவைக் குறித்துச்சொல்லிய தீர்க்க தரிசனங்களை தாங்கள் அறியாமலே நிறைவேற்றினபோது, நீங்கள் முதல் வசனத்தை மறந்ததென்ன என்பதுபோல "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீரென்று" அந்த வசனத்தைச் சத்தமிட்டுச் சொன்னார். ஆகா, இது இருபத்திரண்டாம் சங்கீதமல்லவோ என்று ஆசாரிமாரும் வேதபாரகரும் அறிந்துகொள்ளவும் தாங்கள் மனப்பாடமாய் அறிந்த அந்தச் சங்கீதம் அவரில் நிறைவேறும் விதத்தை உணர்ந்துகொள்ளவும் விரும்பினார் என்று சொல்லலாம்.

இந்தச் சங்கீதத்தின் முதல் வசனமாத்திரமல்ல, கடைசி வசனங்களும் ஆண்டவருக்குத் தெரியும். என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று ஆரம்பித்த சங்கீதம் நம்பிக்கை யோடும் மகிமையான எதிர்பார்க்குதலோடும் முடிகிறது. "கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள். உபத்திரப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாய் எண்ணாமலும் அருவருக்காமலும், தமது முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார். மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன், பூமியின் எல்லைகளெல்லாம் இதை நினைவு கூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும். ஜாதிகளுடைய சந்ததியெல்லாம் உமது சமுகத்தில் தொழுது கொள்ளும், இராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர்" என்பதே. இருபத்திரண்டாம் சங்கீதம் கலக்கத்தோடு ஆரம்பித்து வெற்றியோடு முடிகிறது. என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவிசெய்யாமலும் நான் கதறிச்சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரத்திலிருக்கிறீர்? என்று ஆரம்பித்த சங்கீதம், அவர் தமது முகத்தை எனக்கு மறைக்காமலிருந்து அவரைநோக்கி நான் கூப்பிட்டதைக் கேட்டருளினார்; ஆகையால் மகா சபையில் நான் அவரைத் துதிப்பேன் என்று முடிகிறது. நமது இரட்சகர் சிலுவையில் கைவிடப்பட்டுத் தவித்ததையும், சற்று

நேரத்துக்குள்ளாக அவரடைந்த ஜெயத்தையும் இந்தச் சங்கீதம் தெளிவாய்க் காட்டுகிறது.

ஒரு கேள்வி. மற்றவர்கள் அந்தச் சங்கீதத்திலுள்ள வாக்கியங்களை அறியாமல் நிறைவேற்றினபோது, அவர்கள் இருபத்திரண்டாம் சங்கீதத்தை நிறைவேற்றுகிறார்கள் என்று அறிவிப்பதற்காக மாத்திரம் ஆண்டவர் இந்த முதல் வசனத்தைச் சொன்னாரோ? அல்லது வாஸ்தவத்தில் கைவிடப்பட்ட படியினாலேதான் அதைச் சொன்னாரோ? சத்துருக்கள் நிறைவேற்றின வசனங்கள் அவரில் பொய்யாய் நடந்திருந்தால் அவர் சொன்ன வசனமும் பொய்யாயிருக்கும். அவர்கள் நிறைவேற்றின வாக்கியங்கள் மெய்யாகவே அவரைப் பாடுபடுத்தி வேதனைப்படுத்தியிருந்தால், ஆண்டவர் சொன்ன வசனமும் மெய்யாய் அவர் அனுபவித்ததாயிருக்கும். அவர் "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்னபோது மெய்யாகவே மரண தாகமுண்டாகி தாகத்துக்குக் கேட்டதுபோலவும், அவ்வாறு கேட்டதில் வேதவாக்கியம் நிறைவேறினதுபோலவும், இந்த வசனத்தை அவர் சொன்னபோது அவர் மெய்யாய்க் கைவிடப்பட்டாரென்றும் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று என்றும் அறியவேண்டும்.

கைவிடப்பட்டாரென்றால் என்ன? பூரணமாய் இந்த இரகசியத்தை நாம் அறிந்துகொள்ளக்கூடாமற்போனாலும், அதை அறியும்படி அத்திரைக்குள் பிரவேசிப்பது நல்லது. நாம் அதை ஆராய்ந்து அறிய விரும்பியே தேவன் அதை இரகசியமாக வைத்தார். உலகத்தில் எப்பேர்ப்பட்ட சாஸ்திர அறிவும் கிறிஸ்துவின் சிலுவையைச் சூழ்ந்து நிற்கும் இருளை ஊடறுத்து இந்த இரகசியத்தைக் கண்டுபிடிக்கமாட்டாது. மனுஷன் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் தன் அனுபவத்துக்கு மிஞ்சி அறியமாட்டான். பூட்டப்பட்ட பொக்கிஷங்களைப்போல் தேவன் தமது இரகசியங்களை வேதத்தில் வைத்திருக்கிறார். அவைகளை நாம் அறியவேகூடாதென்பது அவர் சித்தமல்ல. அப்படியானால் அவைகளை நமது கண்களுக்குக் காட்டாமலே மறைத்திருப்பார். இரகசிய சாலைக்குள் பிரவேசிக்கிற வழியையும், வழிகாட்டியையும் நாம் கண்டடையவேண்டுமென்பதே அவருடைய விருப்பம். கிறிஸ்துவின் இரகசியங்களை அறிவதற்கு கிறிஸ்துவே வழி. அவரைவிட்டு விலகி அவருடைய காரியங்களை அறியமுடியாது. ஆவியானவரே வழிகாட்டி. அவரை விட்டுவிலகி நாமாக இந்தப் பரிசுத்த பாதையில் நடக்கமுடியாது. கிறிஸ்துவை நோக்காதவர்களும் ஆவியானவரால் போதிக்கப்படாதவர்களும் இந்த வசனத்திலடங்கிய இரகசியத்தை எப்படி அறியக்கூடும்? அப்படிப்பட்டவர்கள் அவ்வார்த்தைகளைமாத்திரம் பிடித்துக் கொண்டு தாறுமாறான காரியங்களைச் சொல்லுவார்கள்.

ஆகையால், ஆண்டவர்தாமே தமது வசனத்தின்மூலமாகவும், ஆவியானவர்மூலமாகவும் இந்த இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்துவாராக.

இரட்சகர் தமது ஜீவியத்தின் நெடுகிலும் எதிர்ப் பார்த்திருந்த ஒரு **வேளை** உண்டு. அவர் மரிப்பதற்குச் சில நாள்களுக்குமுன் கிரேக்கர் அவரைப்பார்க்க ஆசைப் பட்டார்கள். அதை அந்திரேயாவும் பிலிப்பும் ஆண்டவருக்கு அறிவித்தார்கள். புறஜாதியார் தம்மைப்பார்க்க வந்ததினிமித்தம் அவர் சந்தோஷப்பட வேண்டியது. ஆனால் அவர் அதைக் கேட்டவுடனே ஒரு பயங்கரம் அவர் ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்டது. என்ன சொல்லுகிறார்? இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த **வேளை**யிலிருந்து என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமம் மகிமைப்பட்டால் அதுவே எனக்குப் போதும் என்றார். இப்பொழுது கிரேக்கரைக்கண்டு பேசிவிட்டால் காரியம் முடிந்துபோகும் என்றல்ல. யூதரானாலும் கிரேக்கரானாலும் உலகமானாலும் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தாம் பிரவேசிக்க வேண்டிய ஒரு **வேளை** வருகிறதென்றும், அது தனக்கு மகா கலக்கமாயிருக்கிறதென்றும், அது பிதாவின் சித்தமாயிருப்பதால் அவ்வேளைக்குள் தாம் பிரவேசிக்கத்தான் வேண்டுமென்றும் தெரிவிக்கிறார்.

அவர் கெத்செமனே தோட்டத்தில் பிரவேசித்தபோது அந்த **வேளை** வெகு சமீபமாக வந்திருப்பதைக்கண்டு துக்கமும், திகிலும், மிகுந்த வியாகுலமும் அடைந்து, அதன் வேளை தம்மைவிட்டுப் போகக்கூடுமாவென்று பிதாவைநோக்கி மும்முறை ஊக்கமாய் ஜெபித்தார். அங்கே அவர் கண்ட **பாத்திரமும் வேளையும்** ஒன்றுதான். அந்த **வேளையை** ஏற்றுக்கொள்ளுவது அவருக்குத் தாங்கக்கூடாத துயரமாயிருந்தாலும் அந்த **வேளைக்குள்** பிரவேசிப்பதும் அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதும் பிதாவின் சித்தமாயிருந்ததால்: என் சித்தப்படியல்ல பிதாவே உமது சித்தப்படியே ஆகட்டும் என்று எப்பொழுதும்போல இப்பொழுதும் தம்மைப் பிதாவின் சித்தத்திற்கே மனப்பூர்வமாய்க் கையளித்தார். சத்துருக்கள் தம்மைப்பிடிக்க வந்தபோது இதுவோ உங்களுடைய **வேளையும்** அந்தகாரத்தின் வல்லமையுமாயிருக்கிறதென்று சொல்லி தம்மை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புவித்தார். அதுமுதல் அவர் சிலுவையிலறையப்பட்ட முதல் மூன்றுமணி நேரம்வரை அவர் பட்டபாடுகளும் வேதனைகளும் கொஞ்சமல்ல. ஆகிலும் அவர் பயப்படவில்லை, புலம்பவில்லை. தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறவில்லை. பன்னிரண்டாம் மணிமுதல்

மூன்றாம் மணிவரை பூமியை இருள் மூடிக்கொண்டது. எல்லாருடைய சத்தமும் அமர்ந்தது. சிலுவையில் தொங்கினவர் இருளில் மறைந்தார். அந்த மூன்றுமணி நேரமும் அவர் பயங்கரமான **வேளைக்குள்** இருந்தார். கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணினார். இதுவரை கலக்கத்தோடும் பயத்தோடும் அந்த வேளையை எதிர்பார்த்தார். தோட்டத்தில் அந்தப் பாத்திரத்தைக் கண்டு அவர் பின்வாங்கினபோதிலும் பானம்பண்ணுவேன் என்று பிதாவுக்கு வாக்குக்கொடுத்தார். இந்நேரத்தில் அந்த **வேளை** எப்படிப்பட்டதென்பதையும், அந்தப் பாத்திரத்தில் **பானம்பண்ணுவது** என்னவென்பதையும் தமது அனுபவத்தில் காண்கிறார். அவ்வேளையில் அவரடைந்த அகோர அவஸ்தையை மனுப்புத்திரரில் ஒருவனும் கண்டதில்லை. தேவதூதர்கள் பிரமித்துப்போனார்கள். வனாந்தர சோதனையில் தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள். தோட்டத்தில் ஒரு தூதன் வந்து அவரைத் தேற்றினான். இந்த வேளையில் யாதொரு தூதனும் வர உத்தரவில்லை. கொடிய அந்தகாரம் அவர் ஆத்துமாவைப்பிடித்து வாதித்தது. சாத்தானுடைய சர்வ சேனைகளும் பலமாக அவரோடு போராடின. பிதாவையும் காணோம். இவ்வாறு மூன்றுமணி நேரங்களாகப் போராடின முடிவில் "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்றார்.

காரணமென்ன? சிலுவைப்பாடுகள் மகா வேதனையாயிருந்தது மெய்தான். கள்ளர்களுக்கும் அதுபோலவே வேதனையாயிருந்திருக்கும். ஆனாலும் அவர்கள் அவரைப்போல் கதறவில்லையே. மரணக்கட்டுகள் அவரைச் சூழ்ந்துகொண்டது வாஸ்தவந்தான். ஆகிலும் அவர் மரிப்பதற்கு அஞ்சினவரல்ல. எத்தனையோபேர் தைரியமாக மரணத்தைச் சகித்திருக்க நமதாண்டவர் பயந்து கதறினார் என்று சொல்வது எவ்வளவு குறைவு! ஒரே காரியத்துக்குத்தான் அவர் பயந்தார். அது அவரால் சகிக்கமுடியாது. தாமே **பாவமாக்கப்படுவதும்**, அவ்வாறு பாவமாக்கப்படுவதினால் **பிதாவின் முகம் மறைவதும்** அவருக்குப் பிராண சங்கடமாயிருந்தது. உலகத்தில் திரள் ஜனங்கள் மத்தியில் அவர் சஞ்சரித்தும் தனித்தவராகவே இருந்தார். அவரை அறிந்தது யார்? தம்மை அறியாதவர்கள் மத்தியில் அவர் சஞ்சரித்தது அவர்களால் கைவிடப்பட்டதுபோலிருந்தது. அவருடைய வீட்டார் அவரைக் கைவிட்டார்கள். சொந்த ஊரார் அவரைக் கைவிட்டார்கள். தேச அதிகாரிகள் அவரைக் கைவிட்டார்கள். சிலகாலம் அவரைப் புகழ்ந்து பின்பற்றின கூட்டத்தார் அவரைக் கைவிட்டார்கள். நம்பியிருந்த அருமைச் சீஷர்களும் கைவிட்டார்கள். இவர்கள் யாவரும் அவரைக் கைவிட்டபோதிலும் அவர் கலங்கினதில்லை. சோர்ந்துபோன தில்லை. ஒரு பலத்த ஆறுதல் அவருக்கிருந்தது. அன்பு நிறைந்த பிதா பலத்த துருகம்போல்

அவரோடுகூட இருந்தார். ஒரு நிமிஷமாகிலும் பிதாவின் முகம் அவருக்கு மறைந்ததில்லை. தமது சீஷர்களைப்பார்த்து: நீங்கள் எல்லாரும் என்னைக் கைவிட்டு ஓடிப்போவீர்கள்; ஆகிலும் நான் தனித்திரேன், ஏனென்றால் என்னை அனுப்பின பிதா என்னோடுகூடவே இருக்கிறார் என்றார். பிதாவின் சமுகமே அவருக்கு ஜீவனும் மகிழ்ச்சியுமாயிருந்தது. பிதாவும் குமாரனும் பிரிந்திருப்பது கூடாத காரியம். அவர் மாம்சத்தில் வந்தபோதும் அவர் பிதாவைவிட்டுப் பிரிந்தவரல்ல. பாவிக்கும் தேவனுக்கு முள்ள சம்பந்தமோ வேறு. தேவன் கூடயிராவிட்டாலும் அவன் தன் பாவத்தில் சந்தோஷமாயிருப்பான். அவன் பாவத்தில் பிறந்து பாவத்தில் வளர்ந்தவன். பரிசுத்த தேவனைச் சந்திப்பது அவனுக்குச் சங்கடம். தேவனுக்கு மறைந்து ஜீவிப்பதோ அவனுக்குச் சந்தோஷம். இதுவே பாவியின் அனுபவம். இரட்சகருடைய அனுபவம் இதற்கு நேர் எதிரிடையானது. அவருக்குப் பிதாவே ஜீவன். அவரோடு சஞ்சரிப்பதே சந்தோஷம். அவர் முகம் மறைவது அவருக்கு மரணம். பாவமென்றால் அவர் பிராணன் போய்விடும். பரிசுத்தமே அவர் சுவாசிக்கும் ஆகாயம். பரிசுத்தமே அவர் மயம்.

இப்படியிருக்க, சிலுவையில் ஒரு பயங்கரமான காரியம் சம்பவித்தது. பரிசுத்தமாகிய அவர் பாவமாக்கப்பட்டார். நச்சு ஆகாயம் நிறைந்த ஓர் அறைக்குள் நாம் பிரவேசித்தால் திக்குமுக்காடி, மூச்சுமுட்டிச் சாவோம். அருமை இரட்சகருடைய ஆத்துமா பட்ட அவஸ்தை அதுதான். உலகத்தாரின் பாவம் அவர் ஆத்துமாவில் சுமத்தப்பட்டு, அதை அவர் தமது பாவமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய **வேளை** வந்தது. இதைச் சொல்வதில் ஜாக்கிரதைவேண்டும். அவருக்குள் பாவமில்லை. அவர் பாவஞ்செய்ததில்லை. அவர் தமது பாவத்துக்காக அவஸ்தைப் பட்டதில்லை. குற்றமற்ற, பாவமற்ற, மாசற்ற அவரது ஜீவியம் மனுக்குலத்தின் பாவத்தினிமித்தம் வேதனையடைந்தது. "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." அவர் **பாவமானார், சாபமானார், மரணமானார்**. அந்த பயங்கரத்தைக் கண்டவன் யார்? அவர் தத்தளிப்பை அறிந்தவன் யார்? அவர் ஒருவராய்ப் பர்வதங்கள்போன்ற மனுக்குலத்தின் பாவத்தைத் தமதாக்கிக் கொள்வதும், அவரே சாபமாவதும், அவரே ஒவ்வொருவருடைய மரணத்தை ருசிப்பார்ப்பதும் எவ்வளவு கொடிய அவஸ்தையா யிருந்திருக்கவேண்டும். அவருடைய ஆத்துமா சகிக்கக்கூடாத வருத்தமடைந்தது. பிதா அவரைப் பலவந்தம் பண்ணவில்லை. அவரே நமதுமீதுள்ள அன்பினால் இவ்வேளைக்குத் தம்மை மனதார ஒப்புவித்தார். மனப்பூர்வமாய் ஒப்புவித்தால் இவ்வாறு அவர் கதறுவானேன்? நெருப்பில் அகப்பட்ட பிள்ளையைக் காப்பாற்றும்படி ஒருவர் மனப்பூர்வமாய்த் தீயில் பாய்ந்தாலும்

நெருப்பின் **வேதனைக்கு** அவர் தப்பக்கூடுமோ? சாக்கடைக்குள் விழுந்த பிள்ளையைத் தூக்கும்படி இறங்குகிறவன் சாக்கடையின் துர்நாற்றத்துக்குத் தப்பக்கூடுமோ? குழந்தையின் நோய்க்காக மருந்து சாப்பிடும் தாய்க்கு அந்தப் பிள்ளை அருமையேயன்றி அந்த மருந்தும் தித்திக்குமோ? நம்மை இரட்சிக்கும்படி ஆண்டவர் மனப்பூர்வமாய்ச் சம்மதித்தபோதிலும் **பாவமாக்கப்படும்** அருவருப்பை அவர் ஆத்துமா எப்படிச் சகிக்கக்கூடும்? இஸ்ரவேல் புத்திரர் ஏழை ஆட்டின்மேல் தங்கள் பாவத்தைச் சுமத்தி, அதைப் போக்காடாக வனாந்தரத்துக்குத் துரத்தி விடுவார்கள். ஆடு போன இடம் தெரியாமல் மறைந்துபோகும். அந்த ஆட்டின் முடிவென்ன? அதற்கு என்ன சம்பவித்ததெனக் கண்டுபிடித்தவன் இல்லை. நமதாண்டவர் கைவிடப்பட்ட விதமும் அதுபோலவே.

இவ்வாறு மனுக்குலத்தின் மனுஷனாகிய அவர் நமது பாவத்தைத் தமதாக்கிக்கொண்ட **அவ்வேளையில்** சம்பவித்த தென்ன? தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. பாவம் யாரிடத்தில் காணப்பட்டாலும் பாவந்தான். பாவத்துக்கும் தேவனுக்கும் சம்பந்தமில்லை. பாவமே தேவனையும் நம்மையும் பிரித்தது. தேவன் நமக்காகப் பரிதபித்து நம்மேல் கிருபையாயிருந்த போதிலும் நமது பாவம் ஒரு சுவர்போல் அவர் முகத்தை நமக்கு மறைக்கிறது. இதைக்குறித்து வேதவாக்கியம் சொல்லுகிறதென்ன? "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" *(ஏசாயா 59:2)*. இது உண்மையானால், ஆண்டவர் நமது பாவங்களைத் தமதாக்கிக்கொண்ட அவ்வேளையில் பிதாவின் முகம் அவருக்கு மறையவேண்டியது நியாயமே. இருபத்திரண்டாம் சங்கீதமும் இதற்கு ஒத்திருக்கிறது. "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவிசெய்யாமலும் நான் கதறிச்சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரத்திலிருக்கிறீர்."

கிறிஸ்து மரித்தபோது பிதா அவர்மேல் கோபமர் யிருந்தாரென்றாவது, அவரைப் பகைத்தாரென்றாவது நாம் சொல்லுகிறதில்லை. அவர் பிதாவின் சித்தப்படி தம்மை நமக்காக ஒப்புக்கொடுத்ததினால் பிதா குமாரனில் அன்பாயிருந்தாரென்றே சொல்லவேண்டியது. அப்படியானால் கைவிடப்பட்டதின் கருத்தென்ன? பிதாவின் முகம் மறைவதே கைவிடப்படுவது. ஒரு தகப்பனும் மகனும் முன்னும் பின்னுமாக இருட்டறைக்குள் பிரவேசிக்கும்போது, அந்தச் சிறுவன் பயந்து: அப்பா, எங்கே போய்வீட்டீர்கள் என்று கதறுவது இயல்பு. இருள் தகப்பனை மறைத்ததே இந்தக் கதறுதலுக்குக் காரணம். பாவமும் சாபமும்

மரணமும் அவர் ஆத்துமாவைக் காரிருளைப்போல் சூழ்ந்திருக்கும்போது தமது பிதாவின் முகத்தை எப்படிப் பார்க்கக்கூடும்? அவ்வேளையில் மனுஷர் உதவியில்லை. தேவதூதர் உதவியில்லை. பிதாவின் உதவியில்லை. பயங்கரமான பாவ இருளில் தாம் ஒண்டியாக அமிழ்ந்தார். சாத்தான் காத்துக்கொண்டிருந்த **வேளையும்** அதுதான். அந்நேரத்தில் அந்தகாரத்தின் வல்லமை அவரில் நடப்பித்த அமளி கொஞ்சமல்ல. அவர் மனுக்குலத்தின் பாவத்தை ஏற்றுக்கொண்ட வாசல் வழியாக அவன் பிரவேசித்து: தேவன் அவரைக் கைவிட்டார், தொடர்ந்து பிடியுங்கள், அவரை விடுவிப்பாரில்லை என்று ஆரவாரித்தான்.

நடந்ததென்ன? நாகப்பாம்பு ஒரு செடிக்குள் நுழைந்து கொண்டால், அந்தச்செடியைக் கொளுத்துவதினாலே, செடியோடு பாம்பும் சேர்ந்து அழிவதுபோல, இரட்சகர் நமது பாவத்தை, சாபத்தை, மரணத்தைத் தம்மோடு சேர்த்து தம்மையே பலியாகத் தகனித்ததினாலே அவர் சரீரத்தோடு சேர்ந்து அவைகளும் எரிக்கப்பட்டு அழிந்தன. "தேவன் தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் **பலியாகவும்** அனுப்பி, **மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்**" என்று அப்போஸ்தலன் சொன்ன கருத்து அதுதான். அவர் அப்படியே மரித்துப் போயிருந்தால் பாவமும் சாபமும் மரணமும் அவரை மேற்கொண்டதென்றாகும். அவர் மறுபடியும் உயிரோடே வந்ததினாலே பாவமும் சாபமும் மரணமும் அழிக்கப்பட்ட தென்பது நிச்சயமாயிற்று. சாத்தான் அவர் **குதிங்காலை** நசுக்கின சமயத்திலேயே அவர் அவன் **தலையை** நசுக்கினார். அவர் சிங்கத்தை மறைவாயிருந்து சுட்டவரல்ல. சிங்கம் தம்மேல் பாய இடங்கொடுத்து அதைச் சின்னாபின்னமாக்கினவர் அவர். விஷத்தை உட்கொண்டு அதன் விஷத்தைத் தொலைத்தவர் அவர்.

இதுவே இரட்சண்ய இரகசியம். தமக்குச் சங்கடமில்லாமல் அநேகம் அற்புதங்களைத் தமது வல்லமையால் நடப்பிக்க அவரால்கூடும். பாவம் அகற்றப்படுவதோ இலேசான காரியமுமல்ல. தூரயிருந்துகொண்டு தமது வார்த்தையால் நடப்பிக்கக்கூடிய காரியமுமல்ல. நமது மாம்சத்தையும், இரத்தத்தையும், எலும்பையும் சொந்தமாக எடுத்து, நம்மோடு தம்மை ஒன்றாக்கின பரிசுத்த இரட்சகன். நமது பாவத்தையும் அதனால் விளைந்த சகல கேடுகளையும் தமக்குச் சொந்தமாக்கி, அவைகளோடு போராடி அவைகளைத் தொலைக்கவேண்டியது அவருக்கு அவசியமாயிற்று. நமது பாவம் வேறுவகையாய் நீங்கக்கூடிய எவ்வித வழியும் தேவஞானத்தில் தோன்றவில்லை.

பாவம் எத்தனை பயங்கரமானது! தேவகிருபை எத்தனை அதிசயமானது! ஆண்டவர் தமது தெய்வீக வல்லமையை எப்பொழுதும் மற்றவர்களுடைய நன்மைக்காகவே உபயோகித்தார். தமக்கென்று அந்த வல்லமையை அவர் ஒருபோதும் உபயோகித்தவரல்ல. மற்றவர்களை அதிசயமாய்ப் போஷித்து, தாமோ பசியோடும், தாகத்தோடும் இருந்தார். அதுபோலவே இந்த மகா போராட்டமான வேளையிலும் அவருடைய தெய்வீகம் அவருக்கு உதவி செய்யவில்லை. மனுக்குலத்தின் பிரதிநிதியாக நமது பாவத்தைத் தாமே சுமந்து **பூரண மனுஷனாக** அவர் பாடுபட்டதினால் "என் பிதாவே" என்னும் சொல்லை நிறுத்தி "என் தேவனே" என்று கூப்பிட்டார். இவ்வளவு தூரம் நாம் போகலாம். இதற்கு மிஞ்சிப்போவது நமக்கடுத்ததல்ல. அவர் பாவப்பலியாகி பாவத்தை ஜெயித்தபின், பிதாவின் முகத்தைத் திரும்பவும் தரிசித்து, எல்லாம் **முடிந்ததென** ஜெயவார்த்தை கூறி, சமாதானத்துடன் தமது ஆவியைப் பிதாவின் கைகளில் ஒப்புவித்தார்.

35
சிலுவைப் போதனை
The Teaching of The Cross

கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை ஏற்கனவே கவனித்தோம். மற்றக் காரியங்களைப் பார்க்கிலும் அவருடைய சிலுவைப்பாடுகளைக்குறித்து சுவிசேஷகர் அதிக விஸ்தாரமாக எழுதியிருக்கிறார்கள். நாம் இந்த அதிகாரத்தில் அவருடைய சிலுவையின் இரகசியமென்னவென்பதைப் பிரதானமாகக் கவனிக்கப்போகிறோம். கிறிஸ்துவின் மரணம் இடையில் சம்பவித்த காரியமல்ல. பேதுரு சொல்லுகிறபடி, கிறிஸ்துவின் ஆவியானவர் தீர்க்கதரிசிகளுக்குள்ளிருந்து அவருடைய பாடுகளை முன்னறிவித்திருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கு எழுநூறு வருஷங்களுக்கு முன்னிருந்த ஏசாயா, அவருடைய பாடு மரணத்தையும், அவற்றால் அவரடையும் பலனையும் மகா விவரமாய் வரைந்திருக்கிறார். தமக்கு நேரிட்ட பாடுகளைக் குறித்து ஆண்டவர்தாமே அவைகள் வேதவாக்கியங்களின் படியே நடக்கிறதென்று சொன்னார். ஆகையால் கிறிஸ்துவின் மரணம் தற்செயல் அல்ல. சத்துருக்கள் தீர்மானமுமல்ல. அவர் இரத்தச்சாட்சியாக மரித்தவரல்ல. தப்பக்கூடாமல் அகப்பட்டுக் கொண்டவரல்ல. மரணம் அவருக்கு உரியதல்ல. நாம் பிழைக்கும்படி பிறக்கிறோம். ஆகிலும் பாவத்தால் மரிக்கிறோம். அவர் மரிக்கும்படிக்கே பிறந்தார் மரிப்பதற்காகவே மாம்சத்தையும் இரத்தத்தையும் சுதந்தரித்தார். அவருக்குள் பாவமில்லாததால் அவர் மரிப்பது கூடாது. ஆகையால் அவர் மரித்தது தமது மரணமல்ல. நமது மரணத்தைத் தமதாக்கி மரித்தார். மரணம் பாவத்தோடு சம்பந்தப்பட்டது. கிறிஸ்துவில் பாவமில்லை, ஆகையால் அவருக்கு மரணமில்லை. ஆனால் நமது பாவத்தை அவர் ஏற்றுக்கொண்டபோது, பாவத்தின் சம்பளமாகிய மரணத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. என் ஜீவனை ஒருவனும் என்னிடத்திலிருந்து எடுக்கமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன் என்று ஆண்டவர் சொன்ன வசனமே நமக்கு ஆதாரம். சத்துருக்கள் தாங்கள் அவரைக் கொன்று விட்டதாக எண்ணினார்கள். அந்த மரணத்தில்

மறைந்திருந்த தேவ இரகசியத்தையே அவர்கள் அறியவில்லை. அந்த மரணத்தில் நிறைவேறின **தேவ தீர்மானத்தையும்** அவர்கள் அறியவில்லை. ஏரோதும் பொந்தியு பிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூடி, **''தேவனுடைய கரமும் அவருடைய ஆலோசனையும் முன்குறித்தவைகளையே''** செய்துமுடித்தார்கள். வெகுகாலக் கிறிஸ்தவர்களாயினும் நம்மில் அநேகர் சிலுவையின் உள்ளான இரகசியமின்னதென்று அறியாதவர்களாயிருக்கிறார்கள். சத்துருக்கள் அவரைப்படுத்தின பாடுகளைமாத்திரம் பிரதானமாக நினைத்துப் புலம்புவார்களேயன்றி, சிலுவையில் வெளிப்பட்ட தேவனுடைய மகத்துவ ஆலோசனையைப் பூரணமாய் அறிந்துகொள்ளவில்லை. சிலுவையின் இரகசியம் எவ்வளவுக்கு நமது உள்ளத்தில் வெளிப்படுமோ, அவ்வளவுக்கு அவருடைய இரட்சிப்பின் வல்லமை நம்மில் காணப்படும்.

இந்த இரகசியத்தை அறிந்த அப்போஸ்தலன் "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல், வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" எனறார் (கலா. 6:4). சிலுவை யூதருக்குரியதல்ல. யூதர் குற்றவாளிகளைக் கல்லெறிந்து கொல்லுவார்கள். குற்றவாளிகளை அறைந்துகொல்லும்படி ரோமர் சிலுவையை உபயோகித்தார்கள். சிலுவை எல்லார் பார்வையிலும் தீழ்ப்பாய் எண்ணப்பட்டது. மார்க்க வைராக்கியர்களான யூதருக்கு அது இடறல். ஞானிகளான கிரேக்கருக்கு அது பைத்தியம். இராஜாங்கத்தாரான ரோமருக்கு அது அருவருப்பு. ரோமன் **சிலுவையைத்** தன் கையினாலும் தொடான். இவ்வாறு அக்காலத்திலிருந்த ஜாதிகள் மகா அருவருப்பாய் நினைத்த **சிலுவையை,** அப்போஸ்தலன் மகாமேன்மையாகப் பிரசங்கித்து வந்தார். எல்லாரும் பற்பல காரியங்களில் மேன்மை பாராட்டினபோது, பவுல் தமது மேன்மையெல்லாம் **சிலுவையே** என்றார். அக்காலத்தவர் எண்ணத்துக்கு இது நேர் விரோதமானதால் அவரைப் பைத்தியக்காரனென்றே நினைத்தார்கள். ஆகிலும் சிலுவைப்போதனையை ஏற்றுக் கொண்டவர்கள் எவர்களோ, அவர்களுக்கு அது தேவ பெலனாகவும் நித்தியஜீவனாகவும் இருந்தது. அப்போஸ்தலன் பிரசங்கித்த சிலுவை ஒன்று. அக்காலத்து ஞானிகள் எண்ணிக்கொண்ட சிலுவை ஒன்று. அப்போஸ்தலன் பிரசங்கித்தது மரச்சிலுவையுமல்ல, தங்கச் சிலுவையுமல்ல. சத்துருக்கள் ஆண்டவரைப் பாடுபடுத்திச் சிலுவைமரத்தில் அறைந்தது மெய். அப்போஸ்தலன் பிரசங்கித்தது அதல்ல. சத்துருக்கள் செய்த கொடுமை இரட்சிப்பைச் சம்பாதித்ததென்று அப்போஸ்தலன் பிரசங்கிக்கவில்லை. அவர்கள் செய்தது மகா கொடிய பாதகம். "நீங்கள் அவரைச் சிலுவையில் அறைந்து

கொன்றீர்கள்" என்று பேதுரு அவர்கள் பாவத்தை அவர்களுக்கு உணர்த்தினார். அவர்கள் மனந்திரும்பாவிட்டால் அந்தப் பாதகத்துக்கு அவர்கள் தப்பமாட்டார்கள். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது இரண்டு காரியங்களை அங்கே காண்கிறோம். மனுக்குலத்தார் ஒருபோதும் செய்திராத மகா பயங்கரமான **பாதகத்தின்** அகோரத்தையும், அந்தப் பயங்கரமான பாதகத்தின்மூலமாய் தேவன் அநாதிகாலமுதல் தீர்மானித்திருந்த **இரட்சண்ய மாட்சிமையையும்** காண்கிறோம். பாவிகள் நடப்பித்த கொடுமையல்ல, தேவன் அவ்வேளையில் நிறைவேற்றின அன்பின் கிரியையே பவுல் பிரசங்கித்த சிலுவை.

நன்மைச் சொரூபியாகிய ஆண்டவர் மகா பாதகனைப் போல் நீசச்சிலுவையில் தொங்குகிறார். எல்லாருடைய கண்களும் அவரைப் பார்க்கின்றன. ஆகிலும் நடந்த இரகசியத்தைக் கண்டவன் யார்? எருசலேம் மாதர் தூர நின்று அழுகிறார்கள். அருமைச்சீஷர் ஆடுகளைப்போல் சிதறுண்டனர். ஆசாரிமார் தங்கள் சபதம் முடிந்ததெனத் தங்களைத் தேற்றிக் கொள்ளுகிறார்கள். வேதபாரகரும் பரிசேயரும் தாங்கள் கொண்ட கருமம் கைகூடினதற்காகச் சந்தோஷிக்கிறார்கள். இவ்வாறு மரிப்பதற்கு இவர் செய்த கொடுமையென்னவென்று ஒரு கூட்டத்தார் தங்களுக்குள் பேசிக்கொள்ளுகிறார்கள். அதிகாரிகள் ஏகோபித்துச் செய்வதினால் இவர் குற்றவாளி யாகத்தான் இருக்கவேண்டுமென மற்றவர்கள் சொல்லுகிறார்கள். ஐயோ, நன்மை புரிந்தவரைப் பாடுபடுத்திக்கொல்லுகிறார்களே என்று அவரை அறிந்தவர்கள் முணங்குகிறார்கள். அவர்கள் மார்க்கத்துக்கு எதிர்த்து நிற்பானேன், இந்தப் பாடுபடுவானேன் என்று ரோமைச் சேவகர் பேசிக்கொள்ளுகிறார்கள். பொறாமைதான் இவ்வளவுக்கும் காரணமென்று பிலாத்து சொல்லிக்கொள்ளுகிறான். இவ்வாறு பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டார்களேயன்றி சிலுவையின் இரகசியம் இன்னதென்று அவர்களில் ஒருவனும் அறிந்துகொள்ளவில்லை. "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" என்று தொனிக்கும் சத்தத்தை அவர்கள் கேட்கவில்லை. நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்று எஜமான் சொன்ன கருத்தை அவர்கள் அறியவில்லை. அவர்கள் எல்லாரும் அவருடைய புறம்பான அவமானத்தையும் பாடுகளையும் கவனித்தார்களேயல்லாமல், தேவன் தமது குமாரன்மூலமாகச் சிலுவையில் நிறைவேற்றின கிரியை இன்னதென்பதை அவர்கள் காணவில்லை. ஒரே ஒரு மனுஷன் மாத்திரம் சிலுவையில் விளங்கின தேவ இரகசியத்தைக் கண்டான். அவன் பேதுருவுமல்ல, யோவானுமல்ல, மகதலேனாள் மரியாளுமல்ல,

மற்ற மரியாளுமல்ல. அவன் வலதுபக்கத்துச் சிலுவையிற் தொங்கின மனுஷனே அவன். அவன் உள்ளத்தில் தேவஒளி பிரகாசித்தது. உலக முழுவதும் ஒருவிதமாய் நினைக்க, அவன் ஒருவன்மாத்திரம் வேறுவிதமாய் நினைத்தான். அவன் அப்போஸ்தலரைப்போல ஆண்டவரோடிருந்து கற்றவனல்ல. அவர்கள் எவ்வளவோ போதிக்கப்பட்டிருந்தும் அவர்கள் நம்பிக்கை இந்த சிலுவையோடு ஒழிந்தது. இவன் எவ்வளவோ தூரமானவனாயிருந்தும் ஜீவனும் நம்பிக்கையும் இந்தச் சிலுவையிலிருந்துதான் அவனுக்குக் கிடைத்தது.

ஆண்டவர் சிலுவையில் அனுபவித்த புறம்பான பாடுகளை அவன் கவனியாமல், அங்கே நடந்த தேவகிரியையை அவன் கண்டான். கண்டு என்ன சொல்லுகிறான்? "ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். எல்லோராலும் சபிக்கப்பட்டவனைப் போல் எண்ணப்பட்ட அவரை பார்த்து: என் எஜமானே என் இராஜாவே என்கிறான். ஆண்டவரே, இந்த மரணம் உம்மை அழிக்கமாட்டாதென்று அறிவேன். நீர் மறுபடியும் உயிரோடே வருவீர். உமது இராஜ்யத்தில் இராஜாவாக அரசாளுவீர். அப்படி அரசாளும்போது ஏழையடியானாகிய என்னை நினைத்துக் கொள்ளவேண்டும் என்று மன்றாடினான். சிலுவையில் இரகசியத்தை அறிந்தவன் இவனல்லவா? அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டவன் இவனல்லவா? அவரோடுகூட எழுந்தவன் இவனல்லவா? அவரோடுகூட ஆளப்போகிறவன் இவனல்லவா? இந்த இரகசியத்தை அப்போஸ்தலர் பிந்தித்தானே அறிந்தார்கள். ஆண்டவருக்கு அந்நேரம் இருந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. சிலுவையில் விளங்கும் தேவ இரகசியத்தை எல்லாரும் அறியாமற்போனாலும் இந்த ஒரு மனுஷனாகிலும் அறிந்தானே. என் ஆத்தும வருத்தத்தின் முதற்பலன் இவனல்லவா என்று தமதுள்ளத்தில் ஆனந்தித்து அவனைப்பார்த்து: மகனே, இனிமேல் அல்ல, "இன்றைக்கே நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். படுபாவி பரதீசில் பிரவேசிப்பதே சிலுவையின் இரகசியம்.

கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை நாடக ரூபமாகக் காண்பிக்கிறார்கள். அவைகளைப் பார்க்கும்போது கல்லான இருதயமும் உருகாமலிராது. அசையும் படங்களிலும் அவர் பாடுகளைக் காண்பிக்கிறார்கள். அவைகளைப் பார்க்கும்போது எம்மார்க்கத்தாராயினும் கண்ணீர் சிந்தாமலிருக்க முடியாது. எவ்வளவு திறமையுடன் சிலுவைக்காட்சியை விஸ்தரித்து காட்டினாலும், அவர் தேகத்தில் அடைந்த பாடுகளைமாத்திரம் காட்டக்கூடுமேயன்றி, சிலுவையில் விளங்கும் தேவ

இரகசியத்தைக் காண்பிக்க யாரால் கூடும்? தமது குமாரன் அனுபவிக்கும் கொடிய பாடுகளை தேவன் முன்னதாகவே அறிவார். அவரே தமது குமாரனை அப்பாடுகள் வழியாக நடத்தினார். ஆனால் அந்தப் பாதகத்துக்குத் தேவன் பங்காளியல்ல. அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் தங்கள் பாதகத்துக்குத் தப்பமாட்டார்கள். அந்தக் குரூரமான செய்கைகள் நமது இரட்சிப்பல்ல. பாவநிவாரணப் பலியாகத் தம்மை மனதார ஒப்புவித்த **இயேசு கிறிஸ்துவே** நமது இரட்சிப்பு. "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் என் ஜீவனை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்றார்.

கிறிஸ்துவின் ஜீவியத்தில் **மரணம்** மகா பிரதானம். பூர்வ பிதாக்கள் சிலுவையை எதிர்நோக்கிப் பார்த்தார்கள். கிறிஸ்துவுக்குப் பின்னுள்ளோர் அந்தச் சிலுவையைப் பின்னோக்கிப் பார்க்கிறார்கள். உலக சரித்திரத்தின் **மத்தியில்** சிலுவை நிற்கிறது. பூமியின் எல்லை எங்குமுள்ள எல்லாருடைய கண்களும் சிலுவையை நோக்கிப்பார்க்கிறது. பூமியில் மாத்திரமல்ல, பரத்தில் சிங்காசனத்தின் மத்தியில் நாம் காண்பதும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியே. சிலுவையின் மகத்துவத்தை யூதர் அறியவில்லை. தற்காலக் கொள்கைக்காரர் ஒரு காலத்தில் அறிந்திருந்தும் இப்போது அதன் மகத்துவத்தை மறுதலிக்கிறார்கள். ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம்வரை நாம் வாசிப்பது கிறிஸ்துவின் **மரணமே**. நாம் மகிமையில் பிரவேசித்து நித்தியமாய்ப் பாடப்போகிறதும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் கீதமே. ஆகையால் இந்த **மரணத்தில்** ஏதோ ஒரு விசேஷம் இருக்கவேண்டும். அந்த அதிசயத்தைப் படங்கள் நமக்கு எப்படிக் காட்டக்கூடும்? மனுக்குலத்தின் பிராண சத்துருக்களான **பிசாசு, பாவம், மரணம்** எவ்வாறு சிலுவையில் அழிக்கப்பட்டனவென்பதையும் விசுவாசிகள் அந்த மரணத்தின் மூலமாய் எவ்வாறு நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதையும் படத்தில் காண்பிக்க யாரால் கூடும்? ஆவிக்குரிய காரியங்களைக் காண ஆவிக்குரிய பார்வை வேண்டும். சிலுவைக்காட்சியில் சத்துருக்கள் செய்யும் கொடுமையும், ஆண்டவர் சரீரத்தில் படும் பாடுகளுமே நமது கண்களுக்குப் பிரத்தியட்சமாகத்தோன்றும். அங்கே மனுஷர் செய்யும் கிரியைகளைவிட்டு, தேவன் செய்யும் கிரியை என்னவென்று நாம் விசாரிக்கவேண்டும். அப்பா! நெருப்பும் விறகும் இருக்கிறதே, ஆட்டுக்குட்டி எங்கேயென மகன் கேட்டான். அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்கு

தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்ளுவார் என்று சொன்னார். இங்கே பலிபீடத்தின்மீது காண்கிற ஆட்டுக்குட்டி அதுவே. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி இவரே. தேவன்தாமே ஆதிமுதல் தெரிந்து கொண்டதும், அவருடைய் ஆலோசனையில் ஏற்கனவே அடிபட்டதும், காலம் நிறைவேறினபோது மனுஷர் கண்காணச் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததுமான மாசற்ற ஆட்டுக்குட்டி இவரே. தேவன் இவ்வாறு ஒழுங்கு செய்ததற்குக் காரணமென்ன? தேவகுமாரன் சிலுவையில் மரித்துத்தானா நாம் இரட்சிக்கப்பட வேண்டும்? வேறுவிதமாய் அவர் நம்மை இரட்சிக்கக்கூடாதா? கிருபையாக அவர் நமது பாவங்களை மன்னித்து விடக்கூடாதா: அது கூடாதென்றால் தமது தூதர்களில் ஒருவனைக்கொண்டு நம்மை இரட்சிக்கக்கூடாதா? இவை போன்ற பல கேள்விகள் கேட்கப் படுகின்றன. இக்கேள்விக்குரிய உத்தரவை நாம் படித்துக்கொண்டு போகும்போதே இவ்வதிகாரத்தில் காணலாம். ஒன்றைமாத்திரம் இவ்விடத்தில் பார்ப்போம். தேவதூதர்களில் யாராகிலும் ஒருவன் நம்மை இரட்சிக்கக்கூடுமா? கூடாதா? அது கூடியதாயிருந்தால் தேவன் **நிச்சயமாகவே** அப்படிச் செய்திருப்பார். அனாவசியமாய் அவர் தமது குமாரனைச் சிலுவையின் மரணத்துக்கும் கொடிய பாடுகளுக்கும் ஒப்புக்கொடுத்திருக்கமாட்டார். ஞானமுள்ள தேவனுடைய ஆலோசனையில் தோன்றின ஒரே வழி அதுதான். நாம் யார்? தேவதூதர்கள் யார்? நாம் உண்டாக்கப்பட்டவிதம் என்ன? தேவதூதர்கள் உண்டாக்கப்பட்ட விதம் என்ன? மாம்சத்தின் படி நாம் தேவதூதரிலும் சற்று சிறியவர்களாயிருந்தும் தேவன் நம்மைத் தமது சாயலின்படியும் தமது ரூபத்தின்படியுமல்லவோ உண்டாக்கினார். நாம் பாவத்தால் இழந்த இந்தத் தேவசாயலை தேவன்மாத்திரம் திரும்பக்கொடுக்கக் கூடுமேயல்லாமல் தேவதூதன் எப்படிக் கொடுப்பான்?

நல்லது, கிறிஸ்து மாம்சத்தில் வந்ததுபோலவே தேவதூதரில் ஒருவன் மனுஷனாகப் பிறந்தான் என்று வைத்துக்கொள்வோம். கிறிஸ்து சென்ற பாதையில் அவனும் படிப்படியாக நடக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். நம்மைப் படைத்த **தகப்பன்** நமக்காக அனுதாபப்படுவதுபோல அவன் அனுதாபப்படக் கூடுமா? தகப்பனுக்கிருக்கும் மனதுருக்கம் வேலைக்காரனுக்கு இருக்குமா? அவன் எவ்வளவு பிரகாசமுள்ளவனாயிருந்தாலும் தேவனை வெளிப்படுத்தும் **தெய்வீகம்** அவனுக்குள் உண்டோ? தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியில் நிற்கக்கூடிய **தகுதி** அவனுக்குண்டோ? தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் இணைக்கக்கூடிய **சம்பந்தமிருக்குமோ!** அவன் மாம்சத்தை எடுத்துக்கொள்வதினால் நமக்குச் சொந்தமாயிருக்கக்கூடுமென்றாலும், அவன் தேவனுக்குச் சொந்தமாயிருப்பதெப்படி?

''நீர் என்னுடைய நேசகுமாரன்'' என்று தேவன் தமது தூதனைப்பார்த்து எப்படிச் சொல்லக்கூடும்? கிறிஸ்துவுக்கு நேரிட்ட சோதனைகள்போன்ற சோதனைகள் அவனுக்கு நேரிடும்போது அவன் ஜெயிப்பானோ அல்லது விழுவானோ? தன் இனத்தானாகிய லூசிபர் என்னும் சாத்தானுடைய சகல தந்திரங்களையும் மேற்கொள்வானோ அல்லது இழுப்புண்டு போவானோ? ஒருவேளை கடைசிவரை நின்று சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்து, பரத்துக்குப் போகிறான் என்று வைத்துக்கொள்வோம். பரத்தில் எங்கே போய் நிற்பான்? தன் இனத்தாராகிய தூதர்களிடமே போய்ச் சேருவான். குமாரன் போனபோதோ **தமக்குரிய** பிதாவின் வலது பாரிசத்தில்போய் உட்கார்ந்தார். அவர் **தேவமனுஷனானபடியால்** தேவ ஸ்தானத்திற்கே உயர்த்தப்பட்டார். இவன் **தூதமனுஷனானபடி** யால் தூதர் ஸ்தானத்திற்கே உயர்த்தப்படுவான். இதை நினைத்தல்லவா எபிரேயர் நிருபத்தை எழுதினவர் ''நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காருமென்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?'' என்று கேட்டார். அவர்கள் நமது இரட்சகர்கள் அல்லவென்றும், நமக்கு அவர்கள் **ஊழியக்காரர்** என்றும் அதே இடத்தில் சொல்லியிருக்கிறார் *(எபி. 1:13).*

ஒரு தூதன் நம்மை இரட்சிக்கக்கூடுமானால் தானிருக்கும் அளவுக்குத்தான் நம்மை உயர்த்தக்கூடும். தனக்கே இல்லாத ஒரு மேலான நிலைமையை நமக்குக் கொடுக்க அவனால் ஆகாது. நாம் தேவனுக்குப் பிள்ளைகளாகி அவருடைய மகிமையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது தேவனுடைய **தீர்மானம்.** தேவகுமாரன் மனுஷனானபடியால், அவரோடுள்ள ஐக்கியத்தால் மனுஷர் தேவகுமாரராகக்கூடும். குமாரன் பிரவேசித்திருக்கும் உன்னத மகிமையில் அவருடைய சகோதரரும் பிரவேசிக்கக்கூடும். சிரசு எங்கேயிருக்குமோ, அங்கே அவயவங்களும் இருக்க வேண்டியதே. இதுவே தேவதீர்மானம். அநேகம் பிள்ளைகளை தேவ மகிமையில் கொண்டுப்போய்ச் சேர்ப்பதற்காகவே அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவத்தினால் பூரணப்படுத்தினார் *(எபி. 2:10).* தனக்கே சொந்தமல்லாத தேவ மகிமையை தூதன் நமக்கு எப்படிக் கொடுப்பான்? தூதன் சம்பாதிக்கும் இரட்சிப்பு தூதனுடைய அந்தஸ்து போலவே யிருக்கும் தேவன் நமக்கு ஆயத்தம்பண்ணின இரட்சிப்பைக் கொடுக்க தேவதூதனால் ஆகாது. இந்த இரட்சிப்பின் இரகசியம் இன்னதென்று விளங்காமல் இதை உற்றுப்பார்க்க தேவதூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள் *(1 பேதுரு 1:12).* தூதர்கள் புத்திக்கே பிரமிப்பாயிருக்கிற இரட்சிப்பை அவர்கள் நமக்காகச் சம்பாதிப்பதெப்படி? ஆகையால் ''நான் தூதனாக

வேண்டும் விண்தூதரோடேயும்" என்கிற பாட்டை மாற்றி "நான் பிள்ளையாகவேண்டும் **விண்பிள்ளை**யோடேயும்'' என்று பாடினால் நன்றாயிருக்கும். மேலும், தூதன் நமக்கு இரட்சகனாகும்போது அந்தத் தூதனே உலகத்துக்கு நியாயாதிபதியாகவேணும். எல்லாரும் பிதாவைக் கனம் பண்ணுவதுபோல **குமாரனையும்** கனம்பண்ணும்படிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரத்தை **குமாரனுக்குக்** கொடுத்தார். தேவதூதன் நியாயாதிபதியாகும்போது பிதாவின் கனத்தைத் தூதனுக்குக் கொடுக்கவேண்டும். அது தேவதூஷணமாகும். ஆகையால் நமது இரட்சகருடைய ஸ்தானத்தில் தூதனை வைத்துப்பார்த்தால் எந்த விஷயத்திலும் அவன் நிற்கமாட்டான்.

தேவன்தாமே நம்மை இரட்சிக்கும்படி தம்மை ஒப்புக்கொடுக்கவேண்டுமானால், நமது இரட்சிப்பு எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்! இது **மனுஷன்** சம்பாதிக்கக்கூடிய இரட்சிப்பல்ல. மனுஷன் பெரிய பெரிய காரியங்களைச் செய்யக்கூடும் என்பது மெய். அவன் சித்திரத்தில், சிற்பத்தில், சாஸ்திரத்தில், ஆலோசனையில், ஆளுகையில், இராணுவத்தில், திரவியத்தில், சபையில், சங்கத்தில், பேச்சில், எழுத்தில் மகா நிபுணன் எனபதற்கு ஆட்சேபனையில்லை. ஆனால் ஒரு ஏழைப்பாவியை இரட்சிக்க அவனால் ஆகாது. இதற்குக் காரணமென்ன? எல்லாரும் ஒன்றுபோல் பாவத்தில் அமிழ்ந்திருப்பதால் ஒருவன் மற்றவனை இரட்சிப்பது கூடிய காரியமல்ல. எல்லாருமே வெள்ளத்தால் இழுப்புண்டு போகும் போது அவர்களில் ஒருவன் மற்றவனைக் கரை சேர்ப்பதெப்படி?

ஒரு நாள் ஜனங்கள் நாலாதிக்கிலுமிருந்து தெருவில் கும்பல் கும்பலாக ஓடினார்கள் என்னவென்று விசாரித்தபோது நெருப்புப் பற்றிக்கொண்டதென்றார்கள். சர்க்காருடைய தீ அணைக்கும் வண்டிகள் வந்து வெகுநேரம் பிரயாசப்பட்டு அந்த நெருப்பை அவித்தார்கள். உலகத்தில் பற்றியெரியும் அக்கினியின் கொடுமையை அறிந்தது யார்? சத்துருவாகிய சாத்தான் **பாவத்தீயை** உலகத்தில் கொளுத்தினான். "சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்தும்" என்பதுபோல அந்த நெருப்பு எல்லா மனுஷருக்குள்ளும் பற்றியெரிகிறது. மனுக்குலம் வேகாமல் வேகிறது. இத்தீயை அவிக்கக்கூடிய வல்லவன் ஒருவனுமில்லை. ஞானமும் சாஸ்திரமும் தத்தளித்து நிற்கின்றன. அதிகாரமும் சேனையும் அஞ்சி நடுங்குகின்றன. கிட்ட நெருங்குவார் இல்லை. அக்கினிச்சேதம் அதிகம். அதை இவ்வளவென்று கணக்கிட முடியாது. எண்ணமுடியாது ஏட்டிலும் அடங்காது உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைவரைக்கும் மனுமக்களுக்குச் சுகமேயில்லை, ஆவியும் அழிந்தது, ஆத்மாவும் அழிந்தது, சரீரமும் அழிந்தது. உலகத்தில் காணப்படும் சகல கேடுகளும் பாவத்தின் பலனே.

அது கோடாகோடி விதமாகக் கிரியை செய்கிறது. தேவன் ஒருவரே பாவத்தில் விளைந்த நாசத்தைப் பூரணமாய் அறிந்தவர். வெறியன் சுரணையற்றிருப்பதுபோல் பாவி தன் கேட்டைக் காண்பதில்லை. மனுஷர் செய்யும் **பாவங்களில்** வித்தியாசமிருக்கலாம். **பாவ அளவில்** ஒருவருக்கொருவர் வித்தியாசமிருக்கலாம். அவர்கள் **பாவிகள்** என்பதில் வித்தியாசமில்லை. பாவச் **சுபாவமே** நம்மைப் பாவிகளாக்குகிறது. அந்தப் பாவச் சுபாவத்திலிருந்து பாவங்கள் உண்டாகின்றன. மனுஷன் தன்னைப் பாவியென்று ஒத்துக்கொண்டாலும் ஒத்துக் கொள்ளாமற்போனாலும், பாவத்தால் சாபமும், சாபத்தால் மரணமும் உலகத்தை ஆண்டுகொண்டது நிச்சயம். நரர் பல உபாய தந்திரங்களைத்தேடி, நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும் பாவித்து நடந்தாலும் அவர்கள் ஏகமாய்க் கெட்டுப்போகிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. விஷத்தை இன்பமான பேர் சொல்லி அழைத்தாலும் விஷம் விஷமே. இது இப்படியிருக்க, அநேகர் தங்கள் பாவத்தை நினைத்துப் புலம்புவதும் உண்மையே. ஒருவேளை இரட்சண்ய வழியை அவர்கள் அறியாமற்போனாலும், தங்கள் உள்ளான கேட்டை அவர்கள் உணராமல் இல்லை. **பாவம்** என்பது மனுமக்களுக்கு நூதன பாஷையல்ல. பாவத்தினின்று தங்களை இரட்சித்துக்கொள்ளவோ அவர்களால் கூடவில்லை. நமது ஈடேற்றம் **மனுஷனாலும் தேவதூதராலும்** ஆகக்கூடிய காரியமல்லவென்றால் நாம் பிழைக்கும் வழியென்ன?

நம்மை இரட்சிக்கும் **உத்தரவாதத்தை** தேவனே ஏற்றுக் கொள்ளவேண்டியது. இப்படிச்செய்ய அவர் **கடமைப் பட்டிருக்கிறார்** என்று பயபக்தியுடன் சொல்லலாம். அவர் நமது சிருஷ்டிகரும் நாம் அவர் சிருஷ்டியும் என்பது மெய்யானால், சிருஷ்டி கெட்டுப்போகும்போது சிருஷ்டிகர் அதைச் சீர்ப்படுத்த வேண்டியது நியாயமே. இதோ, ஒரு குயவன் களிமண்ணை எடுத்து அதை ஒரு பாத்திரமாக வணைகிறான். அந்தப் பாத்திரம் அவன் கையிலே கெட்டுப்போகிறது. அவன் அதைத் தூர எறிந்துவிடாமல் அதைத் திரும்பவும் எடுத்துத் திரட்டி, இயந்திரத்தில் வைத்துத் தான் விரும்பின பாத்திரமாக செய்து முடிக்கிறான். நானும் அதுபோல செய்யமாட்டேனோ என்று தேவனே இந்த உவமானத்தைச் சொன்னார் *(எரே.18:4)*. அவர் மனுஷனைச் செவ்வையான பாத்திரமாக உண்டாக்கினார். பாவம் அந்தப் பாத்திரத்தைக் கெடுத்தது. அவ்வாறு கெட்டாலும் அதைத் திரும்பவும் தமக்கு மகிமையான பாத்திரமாக உண்டாக்க தேவனால்கூடும். தேவன் சிருஷ்டிகர் என்பதுமாத்திரமல்ல, அவர் நமது **தகப்பனாகவு**மிருக்கிறார். ஒரு மகன் எவ்வளவு கெட்டவனானாலும், அவன் அழிந்துபோவதை நல்ல தகப்பன் சகிக்கமாட்டான். அவன் உள்ளம் அவனுக்காகப் பரிதபித்துப்

பொங்கும். அவன் கண்களில் கண்ணீர் பெருகும். மகனை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு என்னவேண்டுமானாலும் அவன் செய்வான். தேவனுக்கு ஒப்பான தகப்பன் யார்? அவன் அன்புக்கு நிகரான அன்பன் யார்? "எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" என்று சொன்னவர் அவரல்லவா? (ஓசியா 11:8). சூரியனில் பல நிறங்கள் சேர்ந்து அதன் **வெண்ணொளி** பிரகாசிப்பதுபோல் தேவனில் சர்வ இலட்சணங்களும் சேர்ந்து **அன்பாக விளங்குகிறார்.** தேவனே அன்பு. அப்படியிருக்க, அவருடைய ஜனங்கள் அழிந்துபோவதை மனதாரப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? அவர்களைத் திரும்பச் சிருஷ்டிக்கக்கூடிய **சித்தமும் வல்லமையும்** அவருக் கிருக்கும்போது சும்மா இருக்கமுடியுமா? அப்படியிருந்தால் அது அவருடைய சுபாவத்துக்கு விரோதமாகுமே. ஆகையால், நம்மை இரட்சிக்கும்படி தேவன் தமது அருமைக்குமாரனை உலகத்திற்கு அனுப்பினது ஆச்சரியமல்ல. அவர் நமக்குப் பாராட்டின அன்பு அதிசயமானாலும், அவருக்கும் நமக்குமுள்ள **சம்பந்தத்தை** பார்க்கும் போதும், அவருடைய அன்பின் **சுபாவத்தைக்** கவனிக்கும்போதும் அவர் நம்மை இரட்சிக்காமலிருக்க முடியாது. நமதாண்டவர் வாயினின்று பிறந்த வார்த்தைகளால் இதை அறிகிறோம். "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு **ஏற்றதாயிருக்கிறது.**" கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் **வேண்டியதில்லையா?**'' "அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களி னாலே பூரணப் படுத்துகிறது அவருக்கு **ஏற்றதாயிருந்தது.**" "அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக... எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக **வேண்டியதாயிருந்தது.**'' இந்த வாக்கியங்களில் **ஏற்றதா யிருக்கிறது, வேண்டியதாயிருந்தது** என்னும் சொற்களைக் கவனிக்கும்போது, நம்மை இரட்சிப்பது தமது **கடமையா யிருப்பதுபோல்** ஆண்டவர் பேசுகிறதாகத் தோன்றவில்லையா?

இவ்வாறு தேவன்தாமே நம்மை இரட்சிக்கும் **உத்தரவாதத்தை** எடுத்துக்கொண்டது நமது புண்ணியங்கள் நிமித்தம் அல்ல. அவரது அளவற்ற கிருபையுமே அன்புமே இதற்குக் காரணம். அவரது கிருபை இவ்வாறு நம்மைச் சூழ்ந்து கொண்டதற்கு வேறொரு காரணமும் உண்டு. நாம் தேவதூதர்களைப்போல் தனித்தனியே பாவஞ்செய்து கெட்டவர்கள் அல்ல. ஒரு மனுஷன் பாவஞ்செய்ய, நாம் அவனிலிருந்து தோன்றினதால், அவனுடைய பாவசுபாவம் நமக்குள் வந்து நாமும் பாவிகளானோம். இது, மரம் விழவே கிளைகளும் சேர்ந்து விழுந்த கதையாயிற்று. ஆகையால் நாம் நமது இரட்சிப்பைப்பற்றி நினைப்பதற்கு முந்தியே கிருபையுள்ள

தேவன் எப்படியாகிலும் நம்மை இரட்சிக்கவேண்டுமெனத் தீர்மானித்தார். அவரே தமது குமாரனை வலிய அனுப்பினார். கிறிஸ்து பிறந்தபோது, அவரே தமது தூதனை அனுப்பி எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் இந்த நற்செய்தியை விளம்பரஞ்செய்தார். உலகம் சிலுவையின் இரகசியத்தை அறியக்கூடாமலிருந்தாலும், அவர்கள் கண்கள் காணத் தமது தீர்மானத்தைக் கல்வாரியில் நிறைவேற்றி முடித்தார். இவை யாவற்றையும் பார்க்கும்போது தேவனுடைய அளவற்ற அன்பும் கிருபையுமே நமது இரட்சிப்புக்குக் காரணமென்று அறிகிறோம்.

தேவகுமாரன் மரித்ததினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று சொல்லுவது புத்திக்கு விளங்கவில்லையே என்றும், நாம் பாவிகளாயிருக்க பாவமற்றவரைப் பாடுபடுத்தினது நியாயமாவென்றும் கேட்கிறார்கள். தேவன் அன்புள்ள வராயிருப்பதுபோலவே நீதியுள்ளவராயும் இருக்கிறார் என்பதை மறக்கக்கூடாது. அவர் பரிசுத்தர். பாவம் பரிசுத்தத்துக்கு விரோதம். பாவத்தை அவர் எங்கே கண்டாலும், யாரிடத்தில் கண்டாலும் அதை அழிக்காமல் விடார். தேவன் தமது கிருபையை நமக்குப் பாராட்டி, நமக்கு மன்னிக்கக்கூடுமானால் அவரது நீதி கெட்டுப்போகும். அவர் தமது நீதியைப் பாராட்டி நம்மை ஆக்கினைக்குட்படுத்துவாரானால் அவர் கிருபையற்றவராவார். ஆகையால் அவர் தமது நீதியையும் கிருபையையும் நமக்குக் காண்பிக்கவேண்டும். இரண்டையும் நம்மில் நிறைவேற்றுவது கூடாதகாரியம். அவருடைய கிருபை நித்திய ஜீவன். அவருடைய தண்டனையோ நித்திய அழிவு. இப்படியிருக்க ஒரே சமயத்தில் அவர் நம்மைத் தண்டிப்பதும் நமக்கு இரக்கஞ்செய்வதும் எப்படி? எந்தத் திருஷ்டாந்தமும் இவ்விடத்துக்குப் பொருந்தாது. ஆகிலும் ஒன்று சொல்லுவோம்.

ஒரு நியாயாதிபதிக்கு முன்பாக அவருடைய சிநேகிதன் ஒருவனைக் குற்றவாளியாகக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இது மெய்யாய் நடந்த சம்பவம். நியாயாதிபதி இவன் விஷயத்தில் எப்படி நியாயஞ் செய்யப்போகிறார் என்று பார்க்கும்படி ஜனங்கள் திரளாகக் கூடினார்கள். அவன் அவருக்கு சிநேகிதனான படியால் அவனைத் தண்டிக்காமல் விட்டு விடுவாரோ என்றும் பேசிக் கொண்டார்கள். நியாயாதிபதியோ பிராதைப் பூரணமாய் விசாரித்து, அவனைக் குற்றவாளியென்று நிரூபித்துச் சட்டத்தின்படி ஒரு பெரிய அபராதத்தை விதித்தார். இவரல்லவா நியாயாதிபதி என்று ஜனங்கள் அவரை புகழ்ந்துகொண்டார்கள். குற்றவாளி ஏழையானபடியால் அவ்வளவு பெரிய அபராதத்தைச் செலுத்தக்கூடாமல் கண்கலங்கி நின்றான். அந்தப் பரிதாபத்தைச் சகிக்கக்கூடாமல்

நியாயாதிபதி உடனே ஆசனத்தை விட்டெழுந்து, தாம் நீதியாய் விதித்த அபராதத்தைத் தன் சிநேகிதனுக்காகத் தாமே சர்க்காருக்குச் செலுத்தினார். இங்கே நியாயமும் செய்யப்பட்டது, இரக்கமும் காட்டப்பட்டது. நாம் தேவநீதிக்குத் தப்பக் கூடாமலிருந்தோம். நாம் ஆக்கினைக்குள்ளாவது எவ்வளவேனும் தேவனுக்குப் பிரியமில்லை. குற்றவாளிகள் குற்றவாளிகளே. குற்றவாளிகள் தண்டனைக்குள்ளானவர்களே. நீதியுள்ள பிதா தாமே கிருபையுள்ளவருமாயிருக்கிறார். பாவியைத் தண்டிக்கவும் வேணும், அவனைத் தண்டிக்கவுங்கூடாது. இது என்னமாய் முடியும்? தண்டித்தால் அவன் தொலைந்துபோவான்; கிருபையைக் காண்பிப்பது எப்படி? இரங்கினால் அவன் தப்பித்துக் கொள்ளுவான்; நீதியைக் காண்பிப்பது எப்படி? தேவன் தமக்குள்ளேயே ஒருவழியைக் கண்டுபிடித்தார். தாமே மனுக்குலத்தின் பாவத்தை ஏற்றுக்கொண்டு அதனால் வரும் நீதியை நிறைவேற்றச் சித்தங்கொண்டார். கிறிஸ்துவின் **மரணத்தில்** அந்த நீதி விளங்குகிறது. "தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிற வருமாய் விளங்கினார்" என்று அப்போஸ்தலன் சொன்ன கருத்து அதுதான் (ரோமர் 3:25).

ஆண்டவர் நமக்காகச் சிலுவையில் சம்பாதித்த **இரட்சிப்பாவது** என்னவென்றும் அதை **எவ்வாறு** அவர் சம்பாதித்தாரென்றும் பார்ப்போம். அதற்கு முந்திப் பாவத்தால் விளைந்த கேடுகள் எவையென்பதை ஞாபகப்படுத்திக்கொள்வது நல்லது. பாவத்தால் விளைந்த பயங்கரமான கேட்டை நாம் அறியாவிட்டால் தேவன்தாமே உண்டுபண்ணின இரட்சிப்பின் பெருக்கத்தைக் காணவுமாட்டோம், அதை வாஞ்சையோடு தேடவுமாட்டோம். நோயின் ஆபத்தை உணராதவன் மருந்தை எப்படி மதிப்பான்? பாவத்தை மூடின தற்காலக்கொள்கைக்காரர் சிலுவையின் இரட்சிப்பையும் சேர்த்து மூடினார்கள். சிலுவைப் போதகத்தைச் சாத்தான் பகைக்கிறான். ஆகையால் பாவம் உண்டென்பதை மறுதலிக்கச் செய்கிறான். ஆண்டவர்தாமே பாவத்தைப்பற்றிப் பேசி, அந்தப் பாவத்தை நீக்கும்படி தாம் மரிப்பதாகச் சொல்லியிருக்கும்போது, பாவமன்னிப்பில்லாத கிறிஸ்துமார்க்கம் இவர்களுக்கு எங்கேயிருந்து கிடைத்தது? பாவத்தைத் தொடாத இவர்களுடைய சாமர்த்தியமான பிரசங்கங்களைக் கேட்கும்படி ஜனங்கள் கூடுவது ஆச்சரியமல்ல. சபைகளில் ஜீவனும் வல்லமையுமில்லையே என்றும், தீமைகள் ஏராளமாய்ப் பெருகினவென்றும் சொல்லப்படுவதைக் கேட்கிறோம். பாவத்தினால் விளைந்த பயங்கரமான கேட்டையும், கிறிஸ்து தமது மரணத்தால் சம்பாதித்த இரட்சிப்பையும், நிட்டமாய், உத்தமமாய், முகத்தாட்சண்யமின்றிக் கூறி அறிவிக்க நமக்கு தைரியமில்லாமற்போனதே இதற்குக் காரணம்.

போதிக்கிறவர்களே சந்தேகத்திலிருக்கும்போது சுத்த சுவிசேஷம் எப்படிப் பிரசங்கிக்கப்படும்? அப்போஸ்தலன் கலாத்தியரைப் பார்த்துச் சொன்னதுபோல, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக நமது கண்களுக்குப் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தப்பட்டால் நலமாயிருக்கும். சிலுவையே நாம் காண்கிற சகல தீமைகளையும் அழித்துச் சபைகளை இரட்சிக்கக்கூடியது.

பாவத்தால் விளைந்த கேடுகள் எவை? மனுஷன் தேவனைச்சார்ந்து பிழைக்கும்படி உண்டாக்கப்பட்டான். தேவனே அவனுக்கு ஜீவன். அவனுக்குச் சுயசித்தமிருந்தும் அவன் தேவசித்தத்தையே தனது சித்தமாக்கி, எப்பொழுதும் எல்லாவற்றிலும் தேவனுக்குப் பிரியமானதைச் செய்து எல்லாவற்றிலும் தேவனையே மகிமைப்படுத்தவேண்டியவன். அதுவே அவனுக்கு மகிமை. மனுஷன் பூமி முழுவதையும் ஆண்டுகொள்ளும் இராஜனாகவும் இருந்தான். அவன் பாவஞ் செய்தபோது சகலமும் தாறுமாறாயிற்று. மனுஷன் செத்தான். சரீர ஜீவனில் அவன் வெகுகாலம் உயிரோடிருந்தபோதிலும், ஆவியில் அந்நிமிஷமே மரித்தான், அவனுக்கு ஜீவனாயிருந்த தேவனைவிட்டுப் பாவம் .அவனைப் பிரித்தது. அந்தப் பிரிவே அவனுக்கு மரணமாயிற்று. ஒருவனுடைய கண்ணையெடுத்து ஒரு மேஜையின்மேல் வைத்தால், அந்தக் கண் தன்னைச் சூழ்ந்திருப்பதைப் பார்ப்பதுபோல் தோன்றும். ஆனால் அந்தக் கண் ஒன்றையும் காணமாட்டாதென்பது நிச்சயம். ஏனென்றால் தனக்கு ஜீவனைக் கொடுக்கிற சரீரத்தைவிட்டு அது பிரிந்தது.

பாவத்தால் விளைந்த மரணமும் இதுபோலவே. தேவ அறிவும் தேவ பார்வையும் தேவ ஐக்கியமும் தொலைந்தன. பூமியின்மேல் உள்ள ஆளுகையும் அகன்றது. மனுஷன் சாத்தானுக்கு அடிமையானான். உலகத்தில் பெருகியிருக்கிற எண்ணக்கூடாத அக்கிரமங்களும் தீமைகளும் இந்தப் பாவ விதையின் பலனே. விதை வகைகள் பூமியின்மேல் தங்கள் தங்கள் ஜாதியின்படியே முளைக்கும் என்று தேவன் ஆதியில் திருவுளம்பற்றினபடியே, ஆதாமும் தன் சாயலின்படியும் தன் ரூபத்தின்படியுமே குமாரர் குமாரத்திகளைப் பெற்றான். ஒரு ஜீவன் தனக்கு முற்றிலும் அந்நியமான மேலான ஜீவன்களைப் பிறப்பிக்கமாட்டாது. இனம் போலவே இனம் பிறக்கும். ஆதாமின் மக்களான உலகத்தார் பாவத்தில் பிறந்து மரணத்திற்கும் சகல தீமைகளுக்கும் பங்காளிகளானார்கள். கல்வி அறிவிலும் நாகரீகத்திலும் சன்மார்க்கத்திலும் பலத்திலும் மனுஷர் எவ்வளவோ தேர்ச்சியடையலாம். கடவுளைப்பற்றி அனந்தங்காரியங்களை அவர்கள் பேசலாம். ஆகிலும் தேவபார்வையில் அவர்கள் **மரித்தவர்கள்** என்பது நிச்சயம்.

"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் **எல்லாருக்கும்** வந்ததுபோலவும்" என்று அப்போஸ்தலன் சொன்னது உண்மையே. பாவமும் மரணமும் ஒன்று. பாவம் என்பதற்குக் **குறிதப்புதல்** என்று அர்த்தம். தேவசித்தத்தை விட்டு விலகுவதே பாவம். அவ்வாறு விலகினதிலிருந்து சகல பாவங்களும் பெருகின. தேவ வழியைவிட்டு அவனவன் தன்தன் வழியிலே போனான். இவ்வாறு எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டார்கள். மனுஷன் பாவத்தால் கெட்டபோதிலும் அப்படியே அழிந்துபோக விடுவது தேவசித்தமல்ல. தேவனைவிட சாத்தான் பலவானல்ல. அவருடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றாமல் விடார். மனுக்குலத்தை ஆக்கினைக்குட்படுத்தவேண்டு மென்பதும் தேவனுடைய எண்ணமல்ல. அப்படிச் செய்கிறதா யிருந்தால் ஒரே நிமிஷத்தில் உலகத்தைக் கவிழ்த்திருப்பார். "நான் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி உலகத்துக்கு வராமல், உலகத்தை இரட்சிக்கவே வந்தேன்" என்று நமது இரட்சகர் சொன்ன வார்த்தைகளால் இது தெளிவாயிருக்கிறது. பாவிகளைத் தேவ புத்திரராக்கி, தமது மகிமையை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களைப் புதிய நகரமாக்கி தாம் அவர்கள் நடுவில் வாசம் பண்ணவேண்டுமென்பதே தேவனுடைய தீர்மானம். இந்தத் தீர்மானம் நம்மில் நிறைவேறி, நாம் ஜீவனையும் அழியாமையையும் சுதந்தரித்துக்கொள்ளவேண்டுமானால், பாவமும் அதனால் விளைந்த சகல கேடுகளும் நம்மைவிட்டு அகற்றப்படவேண்டும்.

இரட்சிப்பாவது என்னவென்றும், அது **எவ்வாறு** சம்பாதிக்கப்பட்டதென்றும் இப்பொழுது பார்ப்போம். **இரட்சிப்பு** என்பது ஒரு சிறிய வார்த்தையாயினும், அதில் அடங்கியிருக்கும் ஆசீர்வாதங்களோ ஏராளம். விசுவாசிகள் இம்மையிலும் மறுமையிலும் பெற்றனுபவிக்கும் சகல ஆசீர்வாதங்களும் ஆண்டவர் தமது மரணத்தால் சம்பாதித்த இரட்சிப்பாகயிருக்கின்றன. நமது சமஸ்தகோடி பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். நமது அசுத்த உள்ளம் சுத்திகரிக்கப்பட வேண்டும். நாம் சமாதானம்பெற்று தேவனோடு ஐக்கியமாக வேண்டும். நாம் நீதிமான்களாக்கப்படவேண்டும். நாம் தேவனுக்குச் சொந்தமான பிள்ளைகள் ஆகவேண்டும். அவருடைய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய பொக்கிஷத்துக்கு நாம் சுதந்தரவாளியாகவேண்டும். அவருடைய ஆவியினால் உள்ளான மனுஷனில் நாளுக்கு நாள் மறுரூபமாகவேண்டும். கிறிஸ்து வெளிப்படும்போது நமது அற்பமான சரீரம் அவருடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபமாகவேண்டும். அவரோடு சேர்ந்து அவருடைய

இராஜ்யத்தில் ஆளுகை செய்யவேண்டும். இத்தனை ஆசீர்வாதங்களும் இரட்சிப்பின் ஈவுகளாயிருக்கின்றன. இவைகளில் ஒன்றையாகிலும் நாம் சுயமாய்ச் சம்பாதிக்க முடியாது.

அவைகளைத் திரும்பவும் சற்று விஸ்தரிப்போம். முதலாவது பாவமன்னிப்பு. இது நாமே நமக்கு மன்னித்துக் கொள்வதல்ல. குற்றவாளி தன்னைக் குற்றமற்றவன் என்று சொல்லிக்கொள்வதினாலே தண்டனைக்குத் தப்பமாட்டான். நியாயாதிபதி அவனைக் குற்றமற்றவன் என்று சொன்னால் மாத்திரமே அவன் தப்புவான். நமது பாவங்களனைத்தும் தேவனுடைய பார்வையில் இருக்கின்றன. ஒன்றாகிலும் தப்புவதில்லை. நினைத்த தீயநினைவை நாம் அழிக்கமுடியாது. பேசின தகாத வார்த்தைகளைத் திருத்தமுடியாது. செய்த பாவச்செயல்களை இல்லாமல் ஆக்கமுடியாது. இவ்வாறு நாம் செய்த பாவங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. இவைகள் நமக்கு மன்னிக்கப்படவேண்டும். **பாவமன்னிப்பு** என்று சொல்லும்போது நமது கடந்த காலப் பாவங்கள், தற்காலப்பாவங்கள், வருங்காலப்பாவங்கள் எல்லாம் அதிலே மொத்தமாய் அடங்கியிருக்கின்றன. ஆகையால் அது 'பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பு' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவரை நமது இரட்சகராக்கிக்கொள்ளும்போது. 'பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பு' அந்நிமிஷத்திலேயே கிடைக்கிறது. ஏனென்றால் அவர் பாவமற்றவராயிருந்தும், நமது பாவத்தைச் சுமந்து, சிலுவையில் அறையுண்டு, நமது பாவத்தை தமது சரீரத்தில் **ஆக்கினைக் குள்ளாகத்** தீர்த்ததினாலே, இந்த இரட்சிப்பு அவரால் நமக்குக் கிடைக்கிறது. அவர் சிந்தின பரிசுத்த இரத்தம் பாவங்களற நமது உள்ளத்தைச் சுத்திகரிக்கிறது. இதைக்குறித்து ''இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" என்றும், "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் வாசிக்கிறோம் (எபி. 10:10,14). இவ்வாறு தேவனையும் நம்மையும் பிரித்த பாவச்சுவர் இடிந்து விழும்போது பிதாவின் முகத்தை நாம் தரிசித்து அவரோடு ஒப்புரவாகிறோம். ஒப்புரவாகுதல் என்று சொல்லும்போது தேவன் நமக்குப் பகைஞராயிருந்தாரென்று அருத்தமல்ல. அவர் எப்போதும் அன்பாகவேயிருக்கிறார். நமது பாவத்தால் நாமே தேவனுக்குப் பகைஞராகி அவரைவிட்டுத் தூரமாய் விலகிப்போனோம். விலகிப்போன நாம் மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் தேவனைச் சமீபிக்கிறோம், இவர்மூலமாய் "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று சொல்லக்கூடிய

சிலாக்கியம் நமக்குக் கிடைக்கிறது. நாம் நீதிமான்களாகிறோம். பாவ மன்னிப்புக்கும் நீதிக்கும் வித்தியாசமுண்டு. ஒருவன் திருட்டில் அகப்பட்டு நியாயாதிபதிக்கு முன் நிறுத்தப்படும்போது, ஐயோ வயிற்றுக்கொடுமையினால் அப்படிச் செய்துவிட்டான் என்று நியாயாதிபதி இரக்கப்பட்டு அவனுக்கு மன்னிப்பாரானால் அவன் தண்டனைக்குத் தப்பிக்கொள்வான், அதினாலே அவன் குற்றமற்ற நீதிமானாகமாட்டான். அவனைப் பார்க்கிறவர்கள் **திருடன்** தண்டனைக்குத் தப்பிக்கொண்டானென்று சொல்லுவார்களேயல்லாமல் **நீதிமான்** போகிறார் என்று சொல்லவேமாட்டார்கள். குற்றவாளியை நீதிமானாக்க உலகத்தில் யாராலும் முடியாது. கிறிஸ்துவின் இரட்சிப்பில் இந்த **நீதி** நமக்குக் கிடைக்கிறது. அவருடைய சிலுவையின் மரணம் நம்மைக் குற்றமற்ற நீதிமான்களாக்குகிறது. அதுமாத்திரமல்ல, அவரை நாம் ஏற்றுக்கொள்வதினாலே அவர்மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாகி, தேவமக்கள் என்னும் நிச்சயத்தை அடையும்படிக்குப் புத்திரசுவிகாரத்தின் ஆவியையும் பெற்றுக்கொள்ளுகிறோம். அந்த ஆவியானவரே நமது ஆவியுடனே சேர்ந்து சாட்சிக்கொடுக்கிறவர். நாம் பிள்ளைகளாவதினாலே தேவனுடைய பொக்கிஷத்துக்குச் சுதந்தரவாளியுமாகிறோம். நமக்குள் வசிக்கும் ஆவியானவர் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தினால் நமது உள்ளான மனுஷனை கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபப்படுத்துகிறார். பாவத்தின் சம்பளமாகிய மரணம் நீங்கி, கிறிஸ்துவே நமக்கு நித்திய ஜீவனாகிறார். இவ்வளவு ஆசீர்வாதங்களை நாம் இம்மையில் பெற்றனுபவிப்பது நிச்சயமானாலும், நமது சரீரம் நமக்குப் பாரமாகவும் சோதனையாகவும் இருக்கிறது. ஆவியின் படி நாம் தேவ காரியங்களில் பிரியமுற்றிருந்தாலும், நமது மாம்சமானது அடிக்கடி நம்மைத் துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் ஆளாக்குகிறது. சீக்கிரத்தில் ஆண்டவர் வெளிப்படும்போது நமது பலவீன சரீரம் ஆவிக்குரிய மகிமையான சரீரமாக மறுரூபமாக்கப்படும். அப்பொழுது கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பு நம்மில் பூரணப்படும்.

இதெல்லாம் சரிதான். கிறிஸ்து எப்படி இந்த இரட்சிப்பைச் சம்பாதித்தார்? அந்த இரட்சிப்பு எப்படி நம்மில் பயன்படக்கூடும் என்பதைத் தெளிவாக்கவேண்டியது அவசியம். தேவன் லேசாய் நம்மை இரட்சிக்கமுடியாதென்பதை ஏற்கனவே கவனித்தோம். நமக்கு மன்னித்துவிடுகிறதானால் அவருடைய நீதி தவறும். நம்மை ஆக்கினைக்குட்படுத்துகிறதானால் அவருடைய கிருபை தவறும். இரண்டையும் நம்மில் நிறைவேற்றுவது கூடாத காரியம். ஆகையால் **மறு சிருஷ்டிப்பினால்** மனுஷரை இரட்சிக்கச் சித்தங்கொண்டார். அதற்காக ஒரு **மனுஷனைப்** பரிசுத்தராக அனுப்பினார். அவ்வாறு உலகத்தில் வந்து பிறந்தவர் அவருடைய

குமாரனே. முதல் மனுஷனுடைய பாவத்தால், அவனோடு மாம்சத்திலும் இரத்தத்திலும் சம்பந்தப்பட்ட நாமும் பாவிகளாகிக் கெட்டோம். ஆதாமுக்குள் நமக்குரிய தேவசாயலை இழந்து, கணக்கற்ற பாவங்களுக்கு ஆளானோம். இந்த இரண்டாம் **மனுஷன்** தேவனுடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தற்சொரூபமுமானவர். அவர் பிறந்தபோது நம்மைப்போல் மாம்சத்தையும் இரத்தத்தையும் சுதந்தரித்துக் கொண்டார். முந்தின மனுஷன் மனுக்குலமனைத்துக்கும் பிரநிதியாகவும் தலையாகவும் இருந்ததுபோல இவரும் மனுக்குலமனைத்துக்கும் பிரதிநிதியாகவும் தலையாகவும் வந்தார். ஆகையால் தம்மை **மனுஷகுமாரன்** என்று அழைத்தார். ஆதாமோடுள்ள சம்பந்தம் நம்மைப் பாவிகளாக்கினதுபோல, இவரோடுள்ள சம்பந்தம் நம்மைப் பரிசுத்தவான்களாக்கும். ஆனால் இவர் நம்மை இரட்சிப்பது இலேசான காரியமல்ல. முதலாவது பாவத்துக்குரிய சகல பாடுகளையும் அனுபவித்து, தேவநீதியை நிறைவேற்றி வெற்றியடையக்கூடுமானால் இந்தப் புதிய சிருஷ்டிப்பில் நமக்குப் பங்கு கிடைக்கும்.

புதிய சிருஷ்டிப்பு என்பது **மறுபிறப்பு**. முதல் பிறப்பு நம்மைப் பாவிகளாக்கிற்று, மறுபிறப்பு நம்மைப் பரிசுத்தவான் களாக்கும். கிறிஸ்து மரணமடையாமல் இந்த மறுபிறப்பு நம்மில் பலிக்காது. இந்த இரகசியத்தை அறியாமல் அவர் ஜீவிய மாதிரி போதாதா? அவர் உபதேசம் போதாதா என்று பேசுகிறார்கள். ஆண்டவர் நிக்கொதேமோடு சம்பாஷித்தபோது மறுபிறப்பின் அவசியத்தைக் குறித்துச் சொன்னார். அந்தச்சமயத்தில்: நீங்கள் மறுபடி பிறக்க**வேண்டும்** என்றும், மனுஷகுமாரன் உயர்த்தப்பட**வேண்டும்** என்று ஆண்டவர் சேர்த்துச் சொன்னதை அநேகர் கவனிக்கிறதில்லை. நமது மறுபிறப்பு அவர் சிலுவையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. நாம் மறுபடி சிருஷ்டிக்கப்படவேண்டுமானால் அவர் மரிக்காமலே அப்படிச் செய்யக்கூடாதா? கூடாது. நம்மைப் பிடித்த கொள்ளை நோயும் அத்தோடு சம்பந்தப்பட்ட யாவும் சுட்டெரிக்கப்படவேண்டும். நமது பாவக்குஷ்டம் நீங்காமல் பிதாவின் வீட்டுக்குள் நாம் கால் வைக்க முடியாது. பாவத்தை ஆக்கினைக்குள்ளாக்கி தேவன் தமது நீதியை நிறைவேற்றாமல் தமது இரக்கத்தைக் காண்பிக்கமுடியாது. நீதியும் கிருபையும் ஒன்றையொன்று சந்தித்த இடம் கல்வாரிச் சிலுவையே. நமதாண்டவர் உபதேசம் பண்ணவும் நல்ல மாதிரி காண்பிக்கவும் மாத்திரம் வந்தவரல்ல. அவர் எவ்வளவு உபதேசங்கள் செய்தாலும், எவ்வளவு பரிசுத்த மாதிரி காண்பித்தாலும் ஒரு பாவியாகிலும் இரட்சிக்கப்பட மாட்டான். பாவத்தால் விளைந்த தீமையை அகற்றி, நன்மையை உண்டாக்குவதே அவருடைய சிலுவையின் நோக்கம்.

மனுக்குலமனைத்துக்கும் பிரதிநிதியாக வந்த தலையாகிய இயேசு, தமது ஜீவியத்தில் சகல விஷயத்திலும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்தார். மாசற்ற பரிசுத்தராக விளங்கினார். பிதாவுக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். எங்கும் எல்லாருக்கும் நன்மை செய்கிறவராகச் சுற்றி நடந்தார். கடுகளவு தவறுதல் அவரில் காணப்பட்டதில்லை. எந்தச் சோதனையும் அவரை மேற்கொண்டதில்லை. இதனால் மனுஷருக்கு முன்பாகவும் தேவனுக்கு முன்பாகவும் பாவமற்ற பூரண புருஷராக விளங்கினார். இது உலகத்தில் ஒருபோதும் காணாத அற்புதம். முதல் மனுஷனைப்போல் இவர் தவறிப்போகவில்லை. மறுரூபமலையில் அவர் முகம் பிரகாசித்தபோதே அவர் பரலோகத்தில் பிரவேசித்திருக்க வேண்டியது. அப்படியானால் அவர் பூமிக்கு வந்த நோக்கம் நிறைவேறாது. அவர் ஒருவர் மாத்திரம் மகிமைக்குள் பிரவேசித்திருப்பார். உலகத்தில் ஒருவனாகிலும் அங்கே பிரவேசிக்கமாட்டான். அதுமாத்திரமல்ல, எல்லாரும் ஏகமாய்க்கெட்டு அழிந்தேபோவார்கள். வேறு விமோசனம் இல்லை. ஆகையால் அவர் மரிக்கவேண்டியது அவசியம். அந்த மரணத்தின்மூலமாகத்தான் நமது சகல சத்துருக்களும் அழிக்கப்படவேண்டியது. பரிசுத்தருக்குப் பாடில்லை, வேதனையில்லை, அவமானம் இல்லை, பயம் திகில் இல்லை, சாபமில்லை, மரணமில்லை. ஆனால் பரிசுத்தராக விளங்கின நமது ஆண்டவர் பாவிகளுக்கு **பதிலாக** வந்ததினிமித்தம், பாவிகளோடு தம்மை **ஒன்றாக்கிக்** கொண்டதினிமித்தம், அவர்கள் பாவங்களைத் தாமே **ஏற்றுக்கொண்ட**தினிமித்தம், தேவநீதியின்படி மனுமக்கள் பாவத்துக்கு வரக்கூடிய சகல பாடுகளையும் இவர் பட்டுத்தீர்க்க வேண்டியது நியாயமே. சிலுவையின் இரகசியம் அதுதான்.

பாவமற்ற அவர் **நமக்காகப்** பாவமாக்கப்பட்டார். தேவப் பிரமாணம் முழுவதையும் பழுதின்றிக் கைக்கொண்ட அவர், பிரமாணத்தை மீறினவர்களாகிய **நமது** சாபத்தை ஏற்றுக் கொண்டார். மரத்தில் தூக்கப்பட்டுச் சபிக்கப்பட்டவனைப்போல் அவர் தொங்கினார். உலகத்தின் பாவத்தைத் தாமே ஏற்றுக்கொண்டதினால் நீதியின்படி பிதாவின் முகம் அவருக்கு மறைய: "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறினார். ஜீவாதிபதியாகிய அவர் **நமது** மரணத்தை உத்தரித்தார். மரணம் அவர் ஆத்துமாவில் பிரவேசித்தபோது எவ்வளவோ பாடுபட்டார். சரீர மரணத்தை ஆண்டவர் மரணமென்று சொன்னதில்லை. அதற்காக அவர் கொஞ்சமேனும் கலங்கினதில்லை. **நித்திரை** என்பதே அவர் சரீர மரணத்திற்குக் கொடுத்த பெயர். வேதக்கருத்தின்படி சரீரத்தை விட்டு ஜீவன் பிரிவது **நித்திரை**. வேதக்கருத்தின்படி தேவனைவிட்டு ஆவி பிரிவதே **மரணம்**. "நீ உயிருள்ளவன் என்று

பேர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்'' என்று ஆண்டவர் சொன்னது இந்த ஆவிக்குரிய மரணமே. சரீர ஜீவனில் மனுஷர் பிழைத்துச் சந்தோஷித்துத் திரியும்வரை, பயங்கரமான ஆவிக்குரிய மரணத்தை அவர்கள் உணருவதில்லை. இந்தச் சரீர ஜீவன் எடுபட்டு ஆத்துமா வெறுமையாகிக் கைவிடப்பட்டுத் தவிக்கும் நாளில், ஐசுவரியவான் புலம்பினது போல, இந்த அக்கினி ஜ்வாலையில் கிடந்து வேதனை அடைகிறோமே என்று கதறுவார்கள். இப்பொழுதே அதைக்கண்டு புலம்புவார்களானால் ஜீவனைக்கண்டடைவார்கள். இரட்சகர் சிலுவையில் தொங்கினபோது, அவர் சாகிறார் என்று அவர் சரீரமரணத்தைக் குறித்தே நினைத்தார்கள். அவருடைய கருத்தின்படி அவர் ஒருபோதும் சாகவில்லை. கிறிஸ்து இல்லாமல் அழிந்துபோவது கூடாத காரியம். அவருடைய ஜீவனை அவரிடத்திலிருந்து எடுக்க ஒருவனாலுங்கூடாது. அவர் தமது ஜீவனை பிதாவின் கையில் ஒப்புவித்து மறுபடியும் மூன்றாம் நாளில் அதைப் பெற்றுக்கொண்டார். அப்படியானால் கிறிஸ்து சிலுவையில் ருசிபார்த்த மரணமெது? பாவத்தால் வந்த மரணத்தின் மெய்யான பயங்கரத்தை அவர் தமது ஆத்துமாவில் அனுபவித்தார். **ஜீவனாகிய** அவருக்குள் நுழைந்த மரணம் எவ்வளவு பயங்கரமானதென்று மனுப்புத்திரன் ஒருவனும் அறியமாட்டான். அவர் சரீரத்தில் தோன்றிய மரணத்தையே நாம் மரணமென்று நினைக்கிறோம். ஆண்டவர் அதை நித்திரையென்றே அழைக்கிறார். அவ்வேளையில் மரணத்துக்கு அதிகாரியான சாத்தானோடு போராடி அவனையும் அழித்தார்.

இவ்வாறு மனுக்குலத்தாரின் பாவத்தையும், சாபத்தையும் மரணத்தையும், சகல கேடுகளையும் ஒருமிக்கச் சுமந்து, தாம் அடைந்த மரணத்தினால், இவைகள் யாவையும் தம்மோடு சேர்த்துச் சிலுவையில் ஆணியறைந்துகொன்று ஆக்கினைக் குள்ளாக்கினார். அவர் முடிந்ததென்று சொன்னபோதே பாவிக்கு மோட்சவாசல் திறந்தது. அவர் மறுபடியும் உயிரோடே வந்ததினால் மனுக்குலத்தாரின் இரட்சிப்பு சம்பாதிக்கப்பட்டதென பூரண நிச்சயமுண்டாயிற்று. ''அவருடைய குமாரனின் மரணத்தினாலே பிதாவோடு ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே'' *(ரோமர் 5:10)*. இவ்வாறு இரண்டாம் மனுஷனாகிய நமது அருமை இரட்சகர் நமது பிணையாளியாகித் தம்மை நம்மோடு ஒன்றாக்கினதினால் இரண்டு காரியங்கள் சம்பவித்தன. நமது அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் விளைந்த சகல கேடுகளும் அவரைப் பிடித்தன. அவருடைய உத்தம ஜீவியத்தாலும் நீதியாலும் சிலுவையில் அவர் சம்பாதித்த இரட்சிப்பு நமக்குச் சொந்தமாயின.

ஒரு காரியத்தை இவ்விடத்தில் வற்புறுத்திப் பேச வேண்டும். இவையாவற்றையும் உபதேசமாக அறிந்திருந்தாலும் அதினாலே காரியம் வாய்க்காது. நம்மில் அநேகர் ஏனோதானோவென்று இருக்கிறார்கள். இரட்சிப்பின் ஒழுங்கு இன்னதென்று யோசிக்காதிருக்கிறார்கள். கிறிஸ்து நமக்காக மரித்தார். அதுவே போதும் என்பது போலிருக்கிறார்கள். தேவன் தமது குமாரன்மூலமாக எவ்வாறு நம்மை இரட்சிக்கிறார் என்பதை அவர்கள் சிந்திக்கிறதில்லை. ஆதாமோடு நமக்குள்ள சம்பந்தமே நம்மைப் பாவிகளாக்கிற்று. அந்த பிறப்பின் சம்பந்தமே இத்தனை கேடுகளையும் நமக்குக் கொண்டுவந்தது. ஆதாமுக்கும் நமக்கும் சம்பந்தமில்லையென்றால் அவனுடைய பாவத்துக்கும் நமக்கும் சம்பந்தமிராது. இதை நன்றாய் மனதில் வைத்துக் கொள்ளவேணும். தேவன் இரண்டாம் ஆதாமை நமக்குத் தந்தார். முந்தின ஆதாம் மண்ணிலிருந்து உண்டானவன். இரண்டாம் ஆதாம் வானத்திலிருந்து வந்த தேவகுமாரன். பிதாவோடு ஒன்றான சம்பந்தமுள்ளவர். அவர் மனுஷனாக வந்தபோது ஆதாமைப்போல் வெறும் மனுஷனாக வராமல், **தேவமனுஷனாக** வந்தார். தெய்வீகத்தில் தேவனுக்கு எவ்வளவு சொந்தமோ, அவ்வளவு மனுஷிகத்தில் அவர் நமக்குச் சொந்தம். தாம் ஒருவராக உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்து நித்திய இரட்சிப்பைச் சம்பாதித்தார். அதனாலே உலகம் இரட்சிக்கப் படுமா? ஒருக்காலும் அல்ல. அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கி நம்மோடு ஐக்கியப்படச் சம்மதித்ததுபோல, நாமும் அவரோடு ஒன்றாகி அவரோடு ஐக்கியப்படவேண்டும். விசுவாசிக்கிறேன் விசுவாசிக்கிறேன் என்று சொன்னால்மாத்திரம் போதாது. முந்தின ஆதாமோடுள்ள சம்பந்தத்தை விட்டுப்பிரிந்து, கிறிஸ்துவோடு ஐக்கியப்படவேண்டும். நமது மனந்திரும்புதல் ஆதாமோடுள்ள ஐக்கியத்திலிருந்து நம்மைப் பிரிக்கும். நாம் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுதல் அவரோடு நம்மைச் சேர்க்கும். இதுவே **மறுபிறப்பு**.

சிலுவையில் மரணமடைந்த இரட்சகரை ஏற்றுக்கொள்ளும் போது ஆவியானவர் மறுபிறப்பை அல்லது புதிய சிருஷ்டிப்பை நம்மில் உண்டாக்குகிறார். மாம்சத்தின்படி பிறந்தவர்கள் அந்த முதற் பிறப்பிலேயே இருப்பார்கள். ஆவியினால் பிறந்தவர்கள் தேவனுக்குப் பிள்ளைகளாவார்கள். இவ்வாறு சிலுவையி லறையுண்ட இரட்சகரை நாம் சொந்தமாக்கி அவரோடு ஐக்கியப்படும்போது, பாவமும் பாவத்தால் விளைந்த சகல கேடுகளும் நம்மைவிட்டு நீங்கி ஆண்டவர் சம்பாதித்த சகல ஆசீர்வாதங்களும் நமக்குச் சொந்தமாகும். இன்னும் நாம் மாம்சத்தின்படியே பிழைக்கிறவர்களாய் இருப்போமானால் கிறிஸ்துவின் மரணத்தால் நமக்குப் பிரயோஜனமில்லை. "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல்

ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" *(ரோமர் 8:1)*. இந்த அனுபவம் இப்போதே நமக்குக் கிடைக்கவேண்டும். இரட்சிப்பின் நிச்சயமும் சந்தோஷமுமில்லாத ஜீவியம் என்ன ஜீவியம்! கிறிஸ்தவர்கள் என்று பேர்வைத்துக் கொண்டிருப்பதே போதுமென்று நினைக்கக்கூடாது. கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார். அவரை ஏமாற்ற ஒருவனாலுங்கூடாது.

இரட்சிப்பின் சம்பந்தமாக இன்னொரு காரியம் சொல்லவேண்டும். ஆரம்ப முதல் கிறிஸ்து நமக்குப் பிரசங்கிக்கப் பட்டு, அவரைப்பற்றியே கேட்டு, அவரைப்பற்றியே படித்து, அவரைப்பற்றியே பேசி, அவரைப்பற்றியே பாடி, அவரை நோக்கியே ஜெபிக்கிற வழக்கம் உண்டானபடியால், பிதா நமக்குத் தூரமானவர்போலும், கிறிஸ்து நமக்கு அருமையானவர் போலும் தோன்றுகிறது. அதுமாத்திரமல்ல, பிதா மகா கோபமுள்ள வராயிருந்து நம்மைப் பட்சிக்கயிருந்தபோது, கிறிஸ்து இடையில் விழுந்து தமது உயிரை நமக்காகக் கொடுத்ததினால் பிதாவினுடைய கோபம் அமர்ந்தது என்பதுபோல பிரசங்கிப்பவர்களும் உண்டு. இது பிதாவைக் கோபமுள்ளவர் போலவும் குமாரனை அன்புள்ளவர்போலவும் காண்பிக்கிறது. இப்படிச்சொல்வது வேதசத்தியத்துக்கு நேர் விரோதம். உண்மையின்படி நமது இரட்சிப்பு முழுவதும் பிதாவினாலேயே உண்டாயிற்று. கிறிஸ்துவின் பிறப்பு முதற்கொண்டு அவர் மகிமையடைந்ததுவரை, நமது இரட்சிப்புக்காக அவரில் நிறைவேறின சகல கிரியைகளும் பிதாவின் கிரியைகளே. கிறிஸ்துவில் விளங்கிய அன்பும், அனுதாபமும், இரக்கமும், கிருபையும், கண்ணீரும், உபதேசமும், நற்கிரியைகளும் பிதாவினுடையவைகளே. கிறிஸ்துவின் பாடுகளிலும் மரணத்திலும் **தேவன்** கூடவேயிருந்தார்.

நாம் நித்திய ஜீவனை அடையும்படி "**தேவன்** தமது குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் **தேவன்** நம்மேல் வைத்த **தமது அன்பை** விளங்கப்பண்ணினார்." "**தேவன்** உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்." "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு **தேவன்** அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் **தேவன்** நம்மேல்வைத்த அன்பு வெளிப்பட்டது." இவைபோன்ற வசனங்கள் பலவுண்டு. இவைகளைக் கவனிக்கும்போது பிதாவுக்கு இல்லாத அன்பும் கிருபையும் குமாரனுக்கு இருந்தது என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. தேவன் நம்மேல் அன்புள்ளவராயிருந்ததினாலேதான் தமது குமாரனை அனுப்பி

நம்மை இரட்சிக்கச் சித்தங்கொண்டார். சொல்லவேண்டுமானால் குமாரன் அடைந்த பாடுகள் யாவும் **தேவன் அடைந்த பாடுகளே.** தமது குமாரன்மூலமாய் இவ்வளவு பெரிதான இரட்சிப்பை ஆயத்தம்பண்ணின தேவனுக்கு ஸ்தோத்திரம்! சிலுவையில் தேவனையே காண்கிறோம்.

சிலுவைப்போதனை இவ்வளவோடு முடியவில்லை. இதுவரை சிலுவையை நோக்கின கண்ணாயிருந்தோம். சிலுவையின் அடியில் நின்று நமதாண்டவர் நமக்காகச் சம்பாதித்த இரட்சிப்பையும், அதைச் சம்பாதிப்பதற்கு அவர் எவ்வளவு அகோர கஷ்டப்பட்டாரென்பதையும், அந்த இரட்சிப்பு நமக்குச் சொந்தமாவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்பதையும் பார்த்தோம். கிறிஸ்துவின் சிலுவை விசுவாசியின் பார்வையில் **இரண்டு** விதமாகத் தோன்றுகிறது. ஒன்று ஆண்டவர்மாத்திரம் தொங்கக்கூடியதும், நமக்குச் சம்பந்தமில்லாததுமான சிலுவை. இரட்சிப்பைச் சம்பாதிக்கும்படி அவர் **ஒருவர் மாத்திரம்** அங்கே தொங்கினார். அது விஷயத்தில் அவருக்கு உதவி செய்யக்கூடியவன் ஒருவனுமில்லை. அவரோடு தொங்கக் கூடியவன் ஒருவனுமில்லை. பாவிகள் அந்தக் காட்சியைக்கண்டு பிரமித்துத் தூர நிற்கவேண்டும். அவர் பாவத்துக்காகப் பட்ட பாடுகளில் நாம் சம்பந்தப்படமுடியாது. சிலுவையின் அடியில் முழங்காலூன்றி: என்னை இரட்சிக்கும்படி வந்த தேவசுதனே! என் பாவத்தையும், சாபத்தையும், மரணத்தையும் ஏற்றுக்கொண்டு, சிலுவையில் அவைகளை ஆணியறைந்து கொன்ற அநாதி இரட்சகா! என் பிராண சத்துருவாகிய சாத்தானை மரணத்தின் மூலமாக அழித்த இராஜாவே! உமக்கு அனந்தனந்த ஸ்தோத்திரம். என் ஸ்தானத்தில் வந்து என் பாவத்தை நீக்கி எனக்கு நித்திய ஜீவனைச் சம்பாதித்த உம்மை எனக்கு ஆண்டவரும் எஜமானுமாக ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொல்லி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதே **முதல்** பார்வை.

இது மாத்திரமல்ல, சிலுவையில் நாம் காணவேண்டிய மகா முக்கியமான இன்னொரு பார்வையும் உண்டு. கிறிஸ்துவை மாத்திரம் சிலுவையிற் காணும் காட்சியைக்குறித்து விசேஷமாய் எழுதின அப்போஸ்தலருடனே, இந்த இரண்டாம் பார்வையைக் குறித்தும் வெகுதிட்டமாக எழுதியிருக்கிறார். அதைக் குறித்து ரோமர், கலாத்தியர் நிருபங்களில் வெகு தாராளமாகப் பேசுகிறார். கிறிஸ்து மாத்திரமல்ல, விசுவாசியும் அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டான் என்பதே. இது அவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியத்தின் பலனாயிருக்கிறது. சிலுவையில் நாம் காணவேண்டிய இந்த **இரண்டாம்** காட்சி தேவனுடைய பார்வையில் நியாயமாயிருக்கிறது. கிறிஸ்து தம்மை நம்மோடு

ஒன்றாக்கி நமக்குப்பதிலாகச் சிலுவையில் அறையப்பட்டதால், நாமும் அவரோடு சிலுவையில் அறையப்பட்டோம் என்பது நிச்சயம். அவர் நம்மையும் தம்மோடு சேர்த்துச் சிலுவையில் அறைந்தாரென்பது நிச்சயம். நமது பிணையாளியாகிய அவர் மரித்தபோதே நாமும் மரித்தோம் என்பது நிச்சயம். இராணுவத்தில் உத்தியோகமாயிருந்த போர் வீரன் ஒருவன் வியாதியாயிருந்தபோது, தனக்குப்பதிலாக ஒருவனை அனுப்பியிருந்தான். யுத்தம் மும்முரமாய் நடந்த சமயத்தில் பதிலாகப் போயிருந்த போர் வீரன் குண்டுபட்டு மரித்தான். சில காலஞ்சென்று சேனையிலிருந்த ஒருவன் இவனைக்கண்டு: நீ யுத்தஞ்செய்ய வரவில்லையா என்று கேட்டான். உடனே அவன்: நான் கடந்த யுத்தத்தில் குண்டுபட்டுச் செத்துப் போனேனே என்றான். தன் பிணையாளியின் மரணத்தை தன் **மரணமாக** அவன் பாவித்துப்பேசினது சரியே. இராணுவத்துக்கு இனி அவன்மேல் அதிகாரமில்லை. மரித்தவன் எப்படி யுத்தஞ்செய்யக்கூடும்?

அப்போஸ்தலன் சிலுவையில் கண்ட இரண்டாம் பார்வை இதுவே. சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதினாலே சிலுவையின் ஆசீர்வாதங்களுக்குப் பங்குள்ளவர்களாகிறோம். சிலுவையின் ஆசீர்வாதங்களை நாம் அறிந்திருந்தாலும் அவருடைய மரணத்தோடு நாம் இணைக்கப்படாவிட்டால் அவ்வாசீர்வாதங்கள் நமது அனுபவத்துக்கு வராது. சிலுவையில் விளங்கும் இந்த இரண்டாம் இரகசியத்தை நாம் ஏற்றுக்கொள்ளாததினாலே, இன்னும் நமது ஜீவியத்தில் அநேக பாவங்களும் தவறுதல்களும் காணப்படுகின்றன. நாம் பாவமன்னிப்புக் கிறிஸ்தவர்களாயிருக்கிறோமேயன்றி பரிசுத்த கிறிஸ்தவர்களானதில்லை. அவர் மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்படாவிட்டால், அவருடைய உயிர்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட மாட்டோம். உயிர்த்தெழுதலின் வல்லமையே பரிசுத்த ஜீவியத்துக்குக் காரணம். ஆனால் சிலுவையின் மரணமில்லாமல் ஆண்டவருக்கு உயிர்த்தெழுதல் இல்லை. சிலுவையின் அவமானமில்லாமல் ஆண்டவருக்கு மகிமை இல்லை. அதுவே நமக்கும் வழி. இரட்சண்ய வழி சிலுவையே. புதிதான ஜீவியத்துக்கு வழி சிலுவையே. ஆத்தும சத்துருக்கள்மேல் ஜெயம்பெறும் வழி சிலுவையே, நித்திய ஜீவனுக்கு வழி சிலுவையே. மிகுதியான கனிகளைக் கொடுப்பதற்கு வழி சிலுவையே.

கிறிஸ்து சென்ற வழியே கிறிஸ்தவனுக்கும் வழி. இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழி. நாம் இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின் கீழெங்கும் மனிதருக்குள்ளே வேறு வழியில்லை. அப்போஸ்தலன் ஜீவியத்தில் விளங்கின மேலான வல்லமைக்கும்

ஆசீர்வாதத்துக்கும் அவர் கண்ட வழி சிலுவையே. தமது அனுபவத்தில் கண்ட இரகசியத்தையே மற்றவர்களுக்கும் பிரசங்கித்தார். இந்த உபதேசம் அவரால் உண்டாகாமல் தேவனால் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அது தேவனுடைய பார்வையில் நீதியும் நியாயமுமாயிருக்கிறது. கிறிஸ்துவின் மரணம் தமக்கு இரட்சிப்பைச் சம்பாதித்ததை அவர் நன்றியோடு ஏற்றுக் கொண்டது மாத்திரமல்ல, ''கிறிஸ்துவுடனேகூட நானும் சிலுவையில் அறையப்பட்டேன்'' என்கிறார் *(கலா. 2:20)*. தன் பிணையாளியாகிய ஆண்டவர் மரித்தபோது, தானும் அவரோடு மரித்தாயிற்று என்கிறார். நமது பிணையாளி தம்மை ஆக்கினைக்குள்ளாக ஒப்புக்கொடுத்தபின்பு நாமும் ஆக்கினைக்குள்ளாவது நியாயமல்ல. அவரடைந்த ஆக்கினையே நாம் அடைந்த ஆக்கினை. கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றின யாவும் நமக்காக நிறைவேற்றினதால், நாமே அவைகளை நிறைவேற்றினதாகவே தேவன் காண்கிறார். இது அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்படுவதால் நமக்குக் கிடைக்கும் பலன்.

இந்த நியாயமான ஆதாரத்தின்பேரில் அப்போஸ்தலன் நாம் கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்பட்டதின் பலன்களை எடுத்துரைக்கிறார். கிறிஸ்துவுடன் நாம் மரித்ததுண்டானால் அவர் எவைகளுக்கெல்லாம் மரித்தாரோ, அவைகளுக்கு நாமும் மரித்தோம் என்பது அவர் சொல்லும் நியாயம். கிறிஸ்துவோடுகூட அறையப்பட்டு நாமும் சிலுவையில் தொங்குகிறதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவர் மரித்தபோது நாமும் மரித்தோமல்லவா? **நான்** என்னும் நமது சுயஜீவியமும் மரிக்கவேண்டியது. ஆண்டவர் தமது ஜீவியத்தில் **நான் அல்ல, நான் அல்ல** என்று சொன்னபடியே; அந்தப் பரிசுத்த **'நானை'** சிலுவையின் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தது ஆச்சரியமல்ல. நமது பாவங்களனைத்தும் **நான்** என்னும் தன்னலத்திலிருந்தே புறப்படுகின்றன. கோபம், பொறாமை, பெருமை, புகழ்ச்சி, பிடிவாதம், ஆங்காரம் முதலான சகல கேடுகளும் இந்த **நான்** என்னும் சுய ஜீவியத்திலிருந்தே உற்பத்தியாகின்றன. ''கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்'' என்று சொன்ன அப்போஸ்தலனே ''இனி **நான்** அல்ல'' என்றும் சொன்னார். அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்படும்போது இந்த **நான்** என்பவன் அழிவான்.

மேலும், கிறிஸ்து தமது சரீரத்தை சிலுவையின் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தபோது நமது **தேகமும்** அறையப்பட்டது. நமது **மாம்சம்** அநேக சோதனைகளுக்கும் பாவங்களுக்கும் காரணமாயிருப்பதை நாம் அறிவோம்.

ஆண்டவர் "தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினால்" நமது மாம்சத்தையும் தம்மோடு சேர்த்து மரணத்துக் குள்ளாக்கினார். ''நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு **பாவ சரீரம்** ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்றும்," "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் **மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும்** சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" என்றும் அப்போஸ்தலன் எழுதினார் (ரோமர் 6:6; கலா. 5:24). நமதாண்டவர் "பாவத்துக்கென்று ஒரே தரம் மரித்தார்." நாமும் அவரோடு சேர்ந்து பாவத்துக்கு மரித்தோம். அவர் நியாயப்பிரமாணத்தின் **சாபத்தை** ஏற்றுக்கொண்டு மரத்தில் தொங்கி மரித்தார். நாமும் அவரோடு சேர்ந்து அந்த **சாபத்துக்கு** மரித்தோம். அவர் நமது **மரணத்தை** ஏற்றுக்கொண்டு அந்த மரணத்துக்கு மரித்தார். நாமும் அவரோடுகூடச் சேர்ந்து ஜீவகாலமெல்லாம் நம்மை நடுங்கவைத்த **மரணத்துக்கு** மரித்தோம். அவர் **உலகத்துக்கு** மரித்தார். நாமும் அவரோடு சேர்ந்து உலகத்துக்கும் அதன் வழிபாடுகளுக்கும் மரித்தோம். அவர் தமது மரணத்தால் உலகத்தின் அதிபதியாகிய **சாத்தானை** ஆக்கினைக் குள்ளாக்கினார். நாமும் அவரோடு மரித்ததால் அவர் சாத்தான் மேல் அடைந்த வெற்றியே நமது வெற்றியாயிற்று. அவரடைந்த மரணத்தால் **தேவநீதியை** நிறைவேற்றினார். அவரோடு நாமும் சேர்ந்து தேவநீதியை நிறைவேற்றினோம். இவ்வாறு நாம் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்படும்போது அவர் சம்பாதித்த சகல ஆசீர்வாதங்களும், அவருக்குள்ளாக நாம் சம்பாதித்ததுபோலாயிற்று. இவ்வளவு ஆச்சரியமான இரட்சிப்பை, அதிசயமான விடுதலையைச் சிலுவையிற்கண்ட அப்போஸ்தலன் ஏன் அதைக் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பார்?

மரணமாத்திரமல்ல, அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டது நிச்சயமானால், அவருடைய **உயிர்த் தெழுதலின்** சாயலிலும் இணைக்கப்படவேண்டியது நியாயமே. தம்மோடு இணைக்கப்பட்டவர்களைத் தனியே விட்டு அவர் மாத்திரம் உயிரோடெழும்புவது எப்படி? அவர் உயிர்த் தெழாவிட்டால் அவருடைய மரணம் எப்படி வீணாகுமோ, அதுபோலவே நாம் அவரோடு உயிரோடெழும்பாவிட்டால், மரணத்தில் அவரோடு இணைக்கப்பட்டது வீணாகும். மரணமும் உயிர்த்தெழுதலும் சேர்ந்ததே நமக்கு இரட்சிப்பு. மரணத்தில் ஆண்டவர் சம்பாதித்த ஆசீர்வாதங்கள் அவருடைய உயிர்த்தெழுதலினால் நமக்கு பயன்படுகின்றன. சிலுவையின் பிரதான நோக்கம் "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் வாசஞ்செய்வதே." அவர் உயிரோடே வராவிட்டால் அவர் தமது ஆவியினால் நமக்குள் வாசஞ் செய்ய முடியாது. அவருடைய

சிலுவைமரணத்தில் இணைக்கப்படுவது நமது பாகம். ஊற்றினின்று ஜலம் புறப்பட்டு வரும்வண்ணமாய், மகிமையின் கர்த்தர் நமக்குள் வசிப்பது அவருடைய பாகம். இவ்வாறு அவருடைய மரணம் நமக்குள் கிரியை செய்கிற அளவின்படியே, அவருடைய ஜீவனும் நமக்குள் கிரியை செய்கிறது. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன் என்று சொன்ன அப்போஸ்தலனே, இனி **நான்** அல்ல, **கிறிஸ்துவே** எனக்குள் **பிழைத்திருக்கிறார்** என்று தமது அனுபவத்தைச் சொன்னார். உயிர்த்தெழுந்த இரட்சகர் மகிமையடைந்து, தமது பரிசுத்த ஆவியின்மூலமாய் தமது அடியார் உள்ளத்தை நிரப்பினார். கிறிஸ்துவே அவர்களுக்குள் இரட்சிப்பும் ஜீவனுமாக விளங்கினார். அவருடைய ஜெயமே அவர்களுக்குள் ஜெயமாயிற்று.

சிலுவைக்காட்சியின் இந்த **இரண்டாம் பாகத்தை** நமது சபைகள் கற்றுக்கொள்ள வேண்டும். சிலுவையில் மரித்த கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தால் நாம் இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்வது மாத்திரம் போதாது. இது முதல் பார்வை. இந்த முதல் பார்வையில் நிற்பவர்கள் உலகத்தாலும் பாவத்தாலும் மேற்கொள்ளப்பட்டுத் தவிக்கிறார்கள். சாத்தானுடைய சகல சோதனைகளுக்கும் இடங்கொடுத்து தாங்கள் இரட்சிக்கப்பட்டது மெய்தானோவென்று கலங்குகிறார்கள். தங்கள் மாம்சம் இன்னும் வஞ்சிப்பதை அறிவார்கள். தற்புகழ்ச்சி, தந்நயம், எரிச்சல், பொறாமை, பகை இப்படிப்பட்ட மாம்ச உணர்ச்சி தங்களுக்குள் வல்லமையாய்க் கிரியை செய்வதையும் அறிவார்கள். இவ்விதமான தவறுதல்கள் ரோமிலிருந்த கிறிஸ்தவர்களுக்குள் இருந்ததை அப்போஸ்தலன் அறிந்து: நீங்கள் இன்னும் பாவத்துக்கு ஊழியஞ் செய்வது நியாயமா? நீங்கள் கிறிஸ்துவுடன் மரிக்கவில்லையா? நீங்கள் பெற்ற ஞானஸ்நானத்தின் அர்த்தம் அதல்லவா? நீங்கள் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி கிறிஸ்துவோடுகூட எழுந்தீர்களே. அப்படியிருக்க உங்கள் சரிரத்தில் பாவம் ஆளுவதற்கு இடங்கொடுப்பதெப்படி? கிறிஸ்துவின் ஜீவன் உங்களில் ஆளும்படி உங்களை தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள் என்று எழுதினார்.

இங்கே நாம் கவனிக்கவேண்டிய ஒரு காரியமுண்டு. அதாவது கிறிஸ்து மரித்தது மெய்யான மரணம். அவர் எழுந்தது மெய்யான உயிர்த்தெழுதல். ஆனால் நாமோ இன்னும் மாம்சத்தில்தான் இருக்கிறோம். வாஸ்தவத்தில் நாம் சிலுவையில் அறையப்பட்டு மரிக்கவில்லை. வாஸ்தவத்தில் கிறிஸ்துவைப் போல் நாம் உயிரோடெழும்பவில்லை. ஆகையால் தான் நம்மில் மேலும் மேலும் பாவங்கள் காணப்படுகின்றன. ஆனால் அந்தப் போர் வீரன் தன் பிணையாளியின் மரணத்தை தன் மரணமாகப்

பாவித்தபோது, இராணுவத்தின் அதிகாரத்தினின்று விடுதலை யடைந்தது போல, கிறிஸ்துவின் மரணத்தில் நாமும் மரித்ததாக **நிச்சயிக்கும் போது** அவருடைய உயிர்த்தெழுதலின் **வல்லமையை** நமது ஜீவியத்தில் காண்போம். கிறிஸ்துவின் சிலுவை என் சிலுவை. கிறிஸ்துவின் மரணம் என் மரணம். அவ்வாறு நான் மரித்துப்போனதால் இனி **நான்** என்று ஓர் ஆளில்லை. கிறிஸ்துவுடன் அடக்கமாகி எழுந்தேன். இனி கிறிஸ்துவே என்னில் பிழைக்கிறார். அவர்தான் கிரியை செய்கிறார். அவரையே மற்றவர்கள் என்னில் காணவேண்டும். இவ்வாறு நாம் ஜீவிப்பதே தேவனுடைய சித்தம் என்பதைப் பூரணமாய் நாம் கிரகித்துக்கொள்ளவேண்டும் சிலுவையில் மெய்யாய் நடந்த காரியம் அதுதான். இல்லாத காரியத்தைப் பொய்யாக நாம் நம்பிக் கொள்வது பாவமாகும். நாம் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டது மெய். ஆனால் அந்தச் சத்தியத்தை நாம் எவ்வளவுக்குச் சொந்தமாக்குகிறோமோ, அவ்வளவுக்குப் பெரிய மாறுதலை நமக்குள் காண்போம். நாம் எவ்வளவுக்கு கிறிஸ்துவின் மரணத்தோடு நம்மை ஒன்றாக்குகிறோமோ, அவ்வளவுக்கு அவருடைய ஜீவன் நமக்குள் கிரியை செய்வதைக் காண்போம். உயிர்த்தெழுதலின் ஜீவியத்தை நமக்குள் பலிதமாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவர். அவரே கிறிஸ்துவைச் சிலுவைக்கு நடத்தினவர். அவரே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினவர். அவரே கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நமக்குள் நிறைவேற்றுகிறவர்.

இவ்வாறு "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" *(2 கொரி. 5:17)*. இவை யாவற்றிற்கும் பொதுவான ஒரு வாக்கியம் உண்டு. "கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது, ஏனென்றால், எல்லாருக்காகவும் **ஒருவரே** மரித்திருக்க, **எல்லாரும்** மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித்தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காக வும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்" *(2 கொரி. 5:14,15)*. சிலுவையில் மரித்தவர் **ஒருவரே**. அவர் தேவனுடைய குமாரன். அவர் தமக்காக அல்ல. எல்லாருக்காகவும் மரித்தார். ஆகையால் அவர் மரணமே நமது மரணமாயிற்று. என்றாலும் நாம் பிழைத்திருக்கிறோம். நாம் அவரோடு மரித்தோம் என்பது நமது இருதயத்துக்கு நிச்சயப்பட்டால், நமது பிழைப்பு பழைய பிழைப்பாக இருப்பது கூடாது. அதாவது இனி நமக்கென்று நாம் பிழைப்பது சரியல்ல. **நமக்காக** அவர் மரித்ததுபோல, **அவருக்காக** நாம் பிழைக்கவேண்டும். அவர் நமக்காக மரித்த **நோக்கம்** அதுவே. சிலுவையில் வெளிப்பட்ட இந்த இரகசியத்தை, தேவ தீர்மானத்தை அப்போஸ்தலன் கண்டபோது,

கிறிஸ்துவின் அன்பு அவர் உள்ளத்தை நிரப்பி அவருடைய ஜீவியத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. "நான் பிழைப்பது கிறிஸ்துவாலே" என்று சொன்னதும் அவரே.

பாவிகளான நமக்கு கிறிஸ்துவின் சிலுவை இவ்வளவு உன்னத ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதால், மகிமையடைந்த பரிசுத்தவான்களின் திரளான கூட்டம், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருக்கே சகல கனமும் மகிமையும் வல்லமையும் மகத்துவமும் சதாகாலமும் உண்டாவதாக என்று போற்றுகிறார்கள். அவருடைய மரணம் நித்தியத்தில் ஒருபோதும் மறக்கப்படுவதில்லை. பாவத்தால் மனுஷன்மாத்திரமல்ல, மிருக ஜீவன்களும், சர்வ சிருஷ்டியும், இந்தப் பூமியும் சாபத்துக்குள்ளாயினவென்பது நிச்சயம். அந்தச் சாபம் நீங்கிப் புதிய பூமியும் புதியவானமும் உண்டாகப்போவதும் ஆண்டவர் அடைந்த மரணத்தின் பலனே. இவை யாவற்றையும் கவனிக்கும் போது யார் சிலுவையை மறக்கக்கூடும்? நமக்குள்ளே காணப்படுகிற நிர்விசாரத்தையும் பாவங்களையும் கவனிக்கும் போது நமதுள்ளம் உடைந்துபோகிறது. சர்வவல்லமையுள்ள தேவன், ஒருவரும் கிட்டிச் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணும் நித்தியராஜன், அளவில்லாத ஞானமும் கிருபையும் அன்பும் நீதியும் நிறைந்த சிருஷ்டி கர்த்தா, ஏழைப்பாவிகளாகிய நம்மேல் மனதுருகி, தமது ஒரேபேறான குமாரனை நமக்காகத் தந்து, அவர் நமக்காகப் பாவமாகி, சாபமாகி, மரணமாகி, மனுஷர் புத்திக்கெட்டாத அகோர பாடுகள்பட்டு, நீசச் சிலுவைமரத்தில் அறையுண்டு மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தது நமது அற்பக்காரியமோ? நமக்கு மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்யவும், அவனவன் நினைத்த வழியில் பிடிவாதமாக நடந்து அக்கிரமமான காரியங்களை நடப்பிக்கவுமா தேவனுடைய தற்சொருபமாகிய ஆண்டவர் பாதகனைப்போல் சிலுவையில் தொங்கினார்? தேவ தூதர்களும் கண்டு பிரமித்து நிற்கும் சிலுவைக்காட்சி நமக்கு வெறுங்காட்சியாயிற்றோ? வல்லமையாய்ப் பிரகாசித்த சூரியன் பார்க்கக்கூடாதபடி தன் முகத்தை மறைத்துக்கொண்ட இந்தப் பரிதாப காட்சி நமக்கு ஒன்றுமில்லாமற்போயிற்றோ? இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால், அவர் அன்பின் பெருக்கத்தைப்போலவே, நமக்கு வரும் ஆக்கினையும் பெரிதாயிருக்கும்.

36
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
The Resurrection of Christ

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் திருச்சபைக்கு ஜீவன். அவருடைய உயிர்த்தெழுதல் அவருக்கும், அவரது அடியார்களுக்கும் அவசியம். அவர் உயிர்த்தெழவில்லை யென்றால், அவர் மாசற்ற பரிசுத்தரென்பதும், தேவ குமாரனென்பதும், மனுமக்களை இரட்சிக்க வல்லவரென்பதும், அவர் தம்மைக்குறித்துச் சொன்ன யாவும் பொய்யாகும். ஏனென்றால், இவை யாவற்றிற்கும் தமது **உயிர்த்தெழுதலையே** ஆதாரமாகச் சொன்னார். அவர் நல்லவராயிருந்து நல்ல மரணமடைந்தாரென்று சொல்லுகிறார்களே. அவர் உயிரோடே வராவிட்டால் அவரைப்போல் மோசக்காரர் இல்லை. பெரிய பெரிய காரியங்களைச் செய்வதாக வாக்குப்பண்ணித் தம்மை நம்பினோரைக் கைவிட்டு மரித்துப்போனவர் எப்படி நல்லவராயிருக்கக்கூடும்? கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் கிறிஸ்தவர்கள் கதி என்னவாகும்? மரித்தோர் உயிரோ டெழும்புவதைக் குறித்து கொரிந்து சபையில் சிலர் சந்தேகப் பட்டார்கள். அவ்வாறு சந்தேகிக்கும்போது **ஏழு காரியங்கள்** மோசத்துக்குள்ளாகுமென்று அப்போஸ்தலன் அவர்களை எச்சரித்தார். **ஒன்று** மரித்தோர் எழுப்பப்படுவதில்லையென்றால் கிறிஸ்து எழுந்தாரென்பது பொய்யாகும். **இரண்டு**, கிறிஸ்து எழுந்திராவிட்டால் சுவிசேஷ ஊழியம் யாவும் வீணாகும். **மூன்று**, மனுஷர் கிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசம் பாழாகும். **நான்கு**, தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று பிரசங்கிப்பது பொய்யாகும். **ஐந்து**, நாம் நமது பாவங்களிலிருந்து இரட்சிப்படையாமல் ஆக்கினையடைவோம். **ஆறு**, கிறிஸ்துவை நம்பி மரித்தவர்கள் யாவரும் அழிந்தேபோவார்கள்; அவர்களை நாம் திரும்பக் காணப்போகிறதேயில்லை. **ஏழு**, மேலான பாக்கியம் வருகிறதென்று, உலகத்தை வெறுத்துச் சகல பாடுகளையும் பொறுமையாய்ச் சகித்து, கடைசியில் ஒன்றுமில்லாமற்போனால், எல்லா மனுஷரிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாவோம். அப்போஸ்தலன் இந்த ஏழு நியாயங்களை எடுத்துக்காட்டி அவர்கள் சந்தேகத்தைப்

போக்கினார். கிறிஸ்துவுக்குப்பின் இருபதாம் வருஷத்தில் அப்போஸ்தலன் கொரிந்தியருக்குத் தமது முதல் நிருபத்தை எழுதினார். கிறிஸ்து உயிரோடெழும்பினதைக் கண்ட காட்சிகளில் அநேகர் அப்போது உயிரோடிருந்ததாகச் சொல்லுகிறார். அப்படியில்லாதிருந்தால் அவர் சொன்னது பொய்யென்று நிரூபிக்கப்பட்டிருக்கும்.

கிறிஸ்துவின் **சிலுவையைக்** குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மைபாராட்டமாட்டேன் என்று அப்போஸ்தலன் தீர்மானித்திருந்தது மெய்தான். சிலுவையின் இரகசியத்தை அறியாமல் இடறலடைந்த யூதர், கிரேக்கர், ரோமருக்கு அவர் அவ்வாறு வற்புறுத்திப் பேசினது நியாயமே. சிலுவையின் அவமானத்தையும் , குரூரமான மரணத்தையுமே அவர்கள் கண்டார்களேயன்றி, அந்தச் சிலுவையில் நிறைவேறின தேவனுடைய மறைவான கிரியைகளை அவர்கள் அறியவில்லை. அப்போஸ்தலன் சிலுவையைப்பற்றிப் பேசினது, அவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றினது. மனுக்குலத்துக்காக கிறிஸ்துவின் மரணம் சம்பாதித்த மகிமையான இரட்சிப்பை அப்போஸ்தலன் தன் அனுபவத்தில் அறிந்திருந்தபடியால் அவ்வாறு மேன்மைப்படுத்திப் பேசினார். கிறிஸ்துவின் மரணம் நமக்கு எவ்வளவு அருமையாயிருந்தபோதிலும், அவர் உயிரோடெழும்பா விட்டால் அந்த **மரணமும்** வீணாகும். அப்போஸ்தலன் இதைப் பூரணமாய் அறிவார். அவர் மேற்கூறிய ஏழு நியாயங்களே இதற்கு ஆதாரம். கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதுக்கும் அவர் உயிர்த்தெழுதலே பிரதானம் மற்றவை அற்பமென்று நாம் சொல்லுகிறதில்லை. அவரது அற்புத பிறப்பு விசேஷமே. அவரது மாசற்ற ஜீவியம் விசேஷமே. அவரது நிகரற்ற உபதேசம் விசேஷமே. அவரது பலத்த செய்கைள் விசேஷமே. அவரது மரணமும் விசேஷமே. ஆகிலும், அவர் உயிரோடே வரா விட்டால் இவைகள்யாவும் என்னத்துக்காகும்? இவைகளால் மாத்திரம் பாவிகள் இரட்சிக்கப்படுவதில்லை. இவைகளைக் கொண்டு திருச்சபை ஸ்தாபிக்கப்படுவதில்லை. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ள ஒரு பரிசுத்தவானைப்பற்றிய ஞாபகமும், அவருடைய உபதேச அறிவும் கிறிஸ்துமார்க்கமல்ல.

கிறிஸ்துமார்க்கம் என்னும் வார்த்தை வேதத்திலில்லை. உலகத்தில் பல மார்க்கங்கள் இருப்பதால் கிறிஸ்துமார்க்கம் என்று பேச நேரிட்டது. யூத மார்க்கமென்று வாசிக்கிறோம். அதுபோலவே, முகமது மார்க்கம், புத்த மார்க்கம், இந்து மார்க்கமென்றும் பேசுகிறோம். அவைகளை மார்க்கமென்று அழைப்பது சரியே. ஆசாரங்களும் கொள்கைளும் அடங்கியது மார்க்கமென்று அழைப்பது சரியே. ஆசாரங்களும் கொள்கைகளும் அடங்கியது மார்க்கமாகும். மார்க்கங்களை

உண்டுபண்ணினவர்கள் அம்மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்றல்ல. யூதருக்கு **மோசே** கூடயிருப்பது அவசிய மல்ல. அவரவர் உண்டுபண்ணின பிரமாணங்களும் உபதேசமுமே அவர்களுக்குப் போதும். புத்தன் தன் சீஷரைப்பார்த்து: நீங்கள் என்மேல் பற்றுதலாயிருங்கள், நான் உங்களை இரட்சித்துக் காப்பாற்றுவேன் என்று சொல்லாமல், என் உபதேசங்களைக் கவனித்துக்கொள்ளுங்கள், அவைகள் உங்களுக்குச் சமாதானம் கொடுக்கும் என்றார். மார்க்கங்களை உண்டாக்கினவர்கள் மறைந்தார்கள். அவர்கள் உபதேசங்கள் இருக்கின்றன.

கிறிஸ்துமார்க்கம் அப்படிப்பட்டதல்ல. கிறிஸ்துவும் தமதடியாருக்குத் திருவுபதேசஞ் செய்திருக்கிறார். அவைகளைச் சுவிசேஷத்தில் காண்கிறோம். ஆனால் கிறிஸ்து இல்லாமல் அவருடைய உபதேசங்கள் மாத்திரம் மார்க்கமாகாது. அவருடைய ஆழமான உபதேசங்கள் சுவிசேஷத்தில் நிறைவாயிருந்தாலும் குறைவாயிருந்தாலும், எல்லாமே எழுதப்பட்டிருந்தாலும் சில விடப்பட்டிருந்தாலும், கிறிஸ்து மார்க்கம் உபதேசத்தில்மாத்திரம் நிலைநிற்பதல்ல. **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்.** மார்க்கம் வேறே, அவர் வேறேயல்ல. அவரே "மார்க்கமும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்." அவரே நமக்குள் ஜீவனாயிருந்து தமது சத்தியத்தை நமக்குள் பயன்படுத்துகிறார். அவர் **உயிரோ டெழும்பாவிட்டால்** நமக்குள் அவர் ஜீவனாயிருப்பதெப்படி? திருச்சபைக்கு அவர் சிரசாயிருப்பதெப்படி? ஆயிரமாயிரமான ஏழைப் பாவிகள் முற்றிலும் மாற்றப்பட்டு பரிசுத்தவான் களாவதெப்படி? கல்வியும் நாகரீகமுமற்ற நரமாமிசர் சாந்தமான பக்தர்களாவதெப்படி? மனுமக்கள் ஜீவியத்தில் விளங்கும் இந்த மகத்துவ வல்லமை எங்கேயிருந்து வந்தது? செடியும் கொடிகளும் ஒரே சாரத்தினால் பிழைக்கிறதுபோல கிறிஸ்துவும் விசுவாசிகளும் ஒரே ஜீவனால் இணைக்கப்பட்டிருக்கிறார்களே. இந்தப் **பிராண ஐக்கியம்** மரித்துப்போன கிறிஸ்துவை ஞாபகத்தில் வைக்கிறதினால் அல்ல, அவரே தமது ஆவியினால் நமக்குள் பிழைப்பதினால் அல்லவோ உண்டாகிறது. அவரது **ஜீவியமும் மரணமும்** எவராலும் மறுக்கக்கூடாத சரித்திரமாயிருக்கிறதுபோலவே, அவர் **உயிர்த்தெழுதலும்** நிரூபிக்கக்கூடிய மெய்யான சம்பவமா யிருக்கிறது. அவருடைய **மரணம்மாத்திரம்** சுவிசேஷமல்ல. மரணமும் உயிர்த்தெழுதலும் சேர்ந்தே சுவிசேஷம். தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள். நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாய் ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக **மரித்து,** அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் **உயிர்த்தெழுந்தார்**" *(2 தீமோ. 2:8; 1 கொரி. 15:3,4).*

இப்படியிருக்க, அவருடைய உயிர்த்தெழுதலை ஒப்புக் கொள்ளாமல் விபரீதமான காரியங்களைச் சொல்லுகிறவர்கள், முற்காலம் இருந்ததுபோலவே தற்காலமும் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சேபனைகளைக் கொஞ்சம் கவனிப்போம். கிறிஸ்து வாஸ்தவத்தில் மரிக்கவில்லை. அவர் மயக்கத்திலிருந்தார், அவர் தேகத்தில் சுகந்தவர்க்கமிட்டுக் கல்லறையில் வைக்கவே, தோட்டத்தின் குளிர்ந்த காற்றைச் சுவாசித்துப் பிழைத்துக் கொண்டார் என்றும், பின்பு அவர் மெல்ல மெல்ல நகர்ந்து சீஷர்களிடம் போகவே, அவர்கள் அவருடைய புண்களைக்கட்டி, அவருக்குப் போஜனங் கொடுத்துப் பலப்படுத்தினார்களென்றும், சில நாள்கள் சென்று அவர் சாதாரண மரணமடைந்தாரென்றும், சீஷர்கள் பிந்தி அவர் உயிர்த்தெழுந்தாரெனக் கதை கட்டிவிட்டார்களென்றும் சொல்லுகிறார்கள். சத்தியத்தை மறைக்கப் பார்ப்பது எப்போதும் சங்கடமே. இவ்வாறு சொல்வது நடந்த சம்பவத்துக்கு நேர் விரோதமான பேச்சு. இப்படிப் பட்டவர்கள் பரீட்சைக்கு நிற்கமாட்டார்கள். மயக்கமென்பது சுத்தப் பொய். அவர் மெய்யாகவே மரித்துப்போயிருந்ததினாலே தான் போர்ச்சேவகர் அவர் கால்களை முறிக்கவில்லை. மற்றவர்கள் அடித்துக்கொல்லும் வரை அவர் காத்திராமல் வேளை வந்தபோது தமது தலையைச் சாய்த்து ஜீவனைவிட்டார். அப்படியிருந்தும் அவர் மரித்த உண்மையை அறியும்படி, ஒரு போர்ச்சேவகன் ஈட்டியை ஓங்கி அவர் விலாவிற் குத்தினான். அங்கிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டன. அச்சமயத்தில் அசைவுமில்லை பேச்சுமில்லை. உயிரற்ற சரீரத்தில் உணர்ச்சி யேது? இவர்கள் சொல்லுகிறபடி ஒருவேளை அவருக்குள் குறை உயிர் இருந்தாலும்கூட, இந்த ஈட்டிக்குத்து உள்ள உயிரையும் போக்கியிருக்குமே. மேலும், பிலாத்து அவருடைய சரீரத்தைக் கொடுப்பதற்கு முன்னே, அவர் மரித்தது உண்மைதானாவென்று யூத அதிகாரிகளிடம் திட்டமாய் வாக்குறுதி வாங்கிக் கொண்டல்லவா உத்தரவுகொடுத்தான். அவர் உயிரோ டெழும்புவதாகச் சொன்னதை அறிந்திருந்த அதிகாரிகள் அரை உயிரோடே சரீரத்தை இறக்குவார்களா? ஆகையால், அவர் மரித்தது நிச்சயம் என்பதற்கு அவரைச் சிலுவையில் அறைந்த சத்துருக்களே சாட்சி.

நல்லது, இவர்கள் சொல்லுகிறபடியே அவர் அரை உயிரும் குறை உயிருமாகக் கல்லறையில் வைக்கப்பட்டுப் பிழைத்தா ரென்று வைத்துக்கொள்வோம். தேகத்தில் நிறைந்த காயங்களோடும், அவ்வளவு பலவீனத்தோடும், அப்பெரிய கல்லை அவர் எப்படிப் புரட்டக்கூடும்? அவ்வாறு வெளியே வந்தவரைப் போர்ச் சேவகர் பிடிக்காமல் விட்டதென்ன? யாரும் காணாமல் எருசலேம் வீதிகள் வழியாக எப்படி நடந்துபோனார்? தாங்கள் காயங்காட்டி பிழைக்க வைத்தவரை **தேவகுமாரனென்றும்**

மரணத்தை ஜெயித்தவரென்றும் சீஷர்கள் எப்படிப் பிரசங்கிக்கக் கூடும்? அப்படிச் செய்யக்கூடுமானால், அவர்களைப்போல் மோசக்காரப் பாவிகள் உலகத்தில் இல்லை. அந்த மோசக்காரர் என்ன இலாபத்துக்காக இவ்வளவு கொடிய பொய்யைப் பிரசங்கித்தார்கள்? அப்படிப்பட்ட வஞ்சகர்கள் அவ்வளவு பரிசுத்தமாய் ஜீவித்ததெப்படி? அவ்வளவு மகத்துவமும் வல்லமையுமுள்ள போதகம் செய்ததெப்படி? பொய்யர் அனைவரும் நரகத்தில் தள்ளப்படுவார்களென்று இந்தப் பொய்யர் தைரியமாய்ப் பிரசங்கித்ததெப்படி? கிறிஸ்து மெய்யாய் உயிர்த்தெழுந்தால் அல்லாமல் இவ்வளவு பலத்த மாறுதல்கள் அவர்களிலும், அவர்கள்மூலமாய் உலகத்திலும் உண்டாவ தெப்படி? கிறிஸ்து மார்க்க விரோதிகளேயன்றி, சீஷர்களின் ஜீவியத்தை முன்னும் பின்னும் சம்பந்தபடுத்தி வாசிப்பவர்கள் ஒருக்காலும் இப்படிச் சொல்லமாட்டார்கள்.

இன்னும் அவர்கள் சொல்லுகிறதென்ன? சீஷர்கள் கிறிஸ்துவினிடத்தில் அதிகமாய் அன்புவைத்து, அவர் மரித்துப்போன துக்கத்தால் நிறைந்திருந்ததாலும், அவர் திரும்ப வருவாரென்று எதிர்பார்த்து, அவரையே நினைத்துக் கொண்டிருந்ததாலும், அவர் உயிரோடே வந்துவிட்டதாக **எண்ணிக்கொண்டார்கள்.** என்றும், தாங்கள் உண்மையென்று எண்ணிக்கொண்டதை மற்றவர்களுக்குப் பிரசங்கித்தார்க ளென்றும், **இது மனோராஜ்ய** உயிர்த்தெழுதலேயன்றி, **மெய்யான** உயிர்த்தெழுதல் அல்லவென்றும் சொல்லுகிறார்கள். சீஷர்கள் இரட்சகரிடத்தில் அன்பாயிருந்தது மெய்தான். அவர் மரித்துப்போனாரேயென்று துக்கத்தில் அமிழ்ந்திருந்ததும் மெய்தான். ஆனால் அவர் உயிரோடே வருவாரென்று அவர்கள் கனவிலும் நினைத்தவர்களல்ல. தமது உயிர்த்தெழுதலைப்பற்றி ஆண்டவர் அவர்களுக்குச் சொல்லியிருந்தும், அது இன்னதென்று அவர்கள் அறிந்துகொள்ளாததால் அவர் உயிரோடே வருவாரென்பதை அவர்கள் **எதிர்பார்க்கவேயில்லை.** அவர் உயிர்த்தாரென்று கேள்விப்பட்டபோது, அதை அவர்கள் நம்பவில்லை. தாம் உயிரோடிருப்பதை நிச்சயப்படுத்துவதற்கு, அவர் நாற்பது நாள் பூமியில் தங்கியிருந்து அவர்களுக்கு நிரூபித்துக்காட்ட வேண்டியதாயிற்று. கடைசிவரை அவர்களுக்குள் சந்தேகப் பட்டவர்களும் உண்டு. அவர் உயிர்த்தெழுந்தவுடனே எல்லாரும் நம்பிக்கொண்டார்களென்று சொல்லக்கூடாது. அவர்களை நிச்சயப்படுத்துவதற்கு ஆண்டவர் எடுத்துக்கொண்ட பிரயாசம் அதிகம். அப்படியிருக்க, தாங்களே மனோராஜ்யம் செய்து கொண்டு, உயிர்த்தெழுதலைப் பிரஸ்தாபித்தார்களென்று சொல்வது சுத்த அபத்தம்.

மரித்துப்போன அருமையானவர்கள் ஆவியில் தோன்றிப்

பேசுகிறதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களே, அதுபோலவே கிறிஸ்துவின் **ஆவி** சீஷர்களுக்குத் தோன்றி அவர்களோடு பேசியிருக்கலாம். ஆகையால் இது **ஆவியின் உயிர்த்தெழுதலே யன்றி சரீர உயிர்த்தெழுதல் அல்ல** என்கிறார்கள். நல்லது, அவர் ஆவியில் உயிர்த்தெழுந்து சீஷர்களுக்குத் தரிசனமளித்தது உண்மையானால், அவர் **சரீரம்** போனவிடமெங்கே? கல்லறையில் சரீரம் இல்லையென்பதைச் சத்துருக்களும் நண்பர்களும் அறிவார்கள். அந்தச் சரீரம் யார் வசத்திலாவது இருக்கவேண்டுமே. சத்துருக்கள் சீஷர்களைப் பரயாசம்பண்ண உத்தேசித்து அந்தச் சரீரத்தை எடுத்து ஒளித்து வைத்ததுண்டானால், கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தாரென்று சீஷர்கள் எருசலேமில் வைராக்கியத்துடன் பிரசங்கித்தபோது அந்தச் சரீரத்தைக் கொண்டுவந்து அவர்கள் கண்களுக்குமுன் போட்டு அவர்களை வெட்கப்படுத்தியிருக்கலாமே. அவர்கள் வாய் அந்நிமிஷமே அடைபட்டிருக்குமே. கிறிஸ்து மார்க்கம் அந்நேரத்திலேயே அழிந்து போயிருக்குமே. சத்துருக்கள் ஏன் அப்படிச் செய்யவில்லை? சரீரம் அவர்களிடத்தில் இல்லாததினால் அப்படிச் செய்யவில்லை. சீஷர்கள் சரீரத்தைத் திருடிவைத்துக் கொண்டு அவர் உயிர்த்தெழுந்தாரெனக் கதை கட்டி யிருப்பார்களோ? கிறிஸ்து மரித்தபோது சீஷர்கள் இருந்த நிலைமையைக் கவனித்தால் அவர்கள் ஒருக்காலும் அப்படிச் செய்ய முடியாது. சீஷர்களை வராமல் தடுப்பதற்காகத்தானே போர்ச்சேவகர் கல்லறையைக் காவல் காத்தார்கள். அவர்கள் மிகுந்த பயத்தோடும் வியாகுலத்தோடும் மேல்வீட்டில் தங்களை அடைத்துக் கொண்டிருந்தார்களே.

மேலும், செத்த பிரேதத்தை அவர்கள் என்னத்துக்காகத் திருடுவார்கள்? அப்படியே திருடியிருந்தாலும் பிரேதத்தைத் தங்களோடு வைத்துக்கொண்டு அவர் உயிர்த்தாரென்று பிரசங்கிப்பதினால் அவர்களுக்கு என்ன இலாபம்? இந்தப் பொய்யைப் பிரசங்கிப்பதற்காகவா தங்கள் வீட்டையும் வேலைகளையும் இழந்து, நிந்தைகளையும் மரணத்தையும் அடையச் சம்மதித்தார்கள்? இந்தப் பொய்யா பெந்தெகோஸ்தே நாளில் மூவாயிரம்பேரை இரட்சித்தது? இந்தப் பொய்யருடைய வார்த்தையை நம்பியா யூத அதிகாரிகளிலும் ஆசாரிமார்களிலும் அநேகர் கிறிஸ்துவின் அடியார்களானார்கள்? இந்தப் பொய்யா சப்பாணி நடக்கவும், நோயாளிகள் குணமாகவும், பாவிகள் இரட்சிக்கப்படவும் வல்லமையளித்தது? பொய்யிலிருந்து மெய்ச்சமாதானமும் பரிசுத்தமும் பிறக்குமா? இவை யாவற்றையும் நாம் கவனிக்கும்போது கர்த்தர் தமது சரீரத்தோடு உயிர்த்தெழுந்தாரேயன்றி அவர் ஆவி மாத்திரம் தோன்றவில்லை என்பது நிச்சயம். "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்றாம் நாளில் நான் இதை எழுப்புவேன்" என்று ஆண்டவர்

தமது **சரீரத்தைக்** குறித்துச் சொன்னாரேயல்லாமல், **ஆவியின்** தோற்றத்தையல்ல.

உயிர்த்தெழுதலைப்பற்றிச் சுவிசேஷகர் சொல்வது **ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறதே** என்கிறார்கள். இது சரியான கேள்வி. அவர்கள் ஒன்றுபோல் எழுதியிருந்தால் **கட்டுமானம்** என்பார்கள். அவர்கள் எழுதினவைகளில் வித்தியாசங்கள் இருந்தால் அதைப் **பொய்** என்பார்கள். மனுஷர் என்னதான் சொல்லமாட்டார்கள்? வித்தியாசங்களைப் பற்றிப் பேசுமுன் முந்தி ஒரு காரியத்தைக் கவனிக்கவேண்டும். அவர்கள் தங்கள் சுவிசேஷத்தை யார் யாருக்கு எழுதினார்களென்பதை அறிந்தால், அவர்கள் எழுதின நோக்கம் வெளிப்படும். மத்தேயு கிறிஸ்துவை இராஜாவாக யூதரை நினைத்து எழுதினார். மாற்கு அவரை யெகோவாவின் ஊழியக்காரனாக ரோமரை நினைத்து எழுதினார். லூக்கா அவரை மனுஷகுமாரனாக ஞானிகளான கிரேக்கரை நினைத்து எழுதினார். யோவான் அவரை தேவகுமாரனாக விசுவாசிகளை நினைத்து எழுதினார். இவைகளை நாம் மனதில் வைத்துக்கொண்டு அவருடைய மரணம் உயிர்த்தெழுதலை வாசித்தால், அங்கே காணப்படும் **வித்தியாசங்கள்** நியாயமெனத்தெரியும்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சுவிசேஷகர் சொல்வதில் வித்தியாசங்களும் ஒற்றுமைக்குறைவும் காணப்படுவது வாஸ்தவந்தான். அவர்கள் நால்வரும் சேர்ந்து கதை கட்டவில்லை என்பதற்கு இந்த **வித்தியாசங்களே** ஆதாரம். கதை கட்டுகிறவர்கள் வித்தியாசங்களை எளிதில் கண்டுபிடிக்க இடங்கொடுக்கமாட்டார்கள். அதிக ஆராய்ச்சியின் பேரில் மாத்திரம் மறைந்திருக்கிற வித்தியாசங்களை நாம் காணக்கூடும். சாதாரணமாய் வாசிப்பவர்களுக்கு அங்குள்ள குறைவுகள் இலேசில் காணப்படமாட்டாது உயிர்த்தெழுதலின் சரித்திரமோ அப்படியல்ல. சாதாரணமாய் வாசிக்கும்போதே வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதிக ஆழமான ஆராய்ச்சியின்பேரில்தான் அதன் ஒற்றுமையை நாம் காணக்கூடும். நான்குபேரும் தனித்தனியே எழுதியிருக்கிறார்கள். முதலில் எழுதப்பட்ட மாற்கு சுவிசேஷத்தை அறிந்தும், தாங்கள் எழுதுவது அதற்கு வித்தியாசமாயிருக்குமே என்று தெரிந்தும் தைரியமாக எழுதினார்கள். அவரவர் தாங்கள் அறிந்ததை எழுதுவதில் பின்வாங்கவில்லை. நான்கும் சேர்ந்து நமக்குப் பூரண அறிவைச் கொடுக்கின்றன. இரண்டில் காணப்படும் வித்தியாசங்களை மூன்றாம் சுவிசேஷம் நிவிர்த்தியாக்குகிறது. ஆகையால் இந்த நான்கு சாட்சிகளும் ஒன்று மெய்யாயிருக்கவேண்டும், அல்லது பொய்யாயிருக்கவேண்டும். அவைகள் தனித்தனியே பொய்யாயிருக்கவேண்டும் அல்லது நான்கும் சேர்ந்தே பொய்யாயிருக்கவேண்டும். அவைகள்

தனித்தனியே கட்டுமானங்களல்ல. ஏனென்றால் அவைகளில் **ஒற்றுமை** ஏராளம். அவைகள் நான்கும் சேர்ந்து செய்யப்பட்ட கட்டுமானம் அல்ல. ஏனென்றால் அவைகளில் **வித்தியாசங்கள்** ஏராளம். ஆகையால், அவைகள் மெய்யாய் நடந்த சம்பவமேயன்றிக் கட்டுமானக் கதையல்ல.

முக்கியமான விஷயங்களில் நான்கு சுவிசேஷகரும் ஒன்றுபோல் எழுதியிருக்கிறார்கள். கிறிஸ்து மயங்கினவராக அல்ல, மெய்யாகவே மரித்துப்போனவராகச் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டதையும், அவருடைய சரீரம் பிலாத்துவின் உத்தரவின்பேரில் யோசேப்புக்குக் கொடுக்கப்பட்டதையும், அந்தச் சரீரம் புதிதான கல்லறையில் வைக்கப்பட்டதையும், வாரத்தின் முதல் நாளில் அவர் உயிரோடெழுந்து வந்ததையும், கல்லறை வெறுமையாயிருந்ததையும் நான்கு சுவிசேஷகரும் ஒன்றுபோல் சொல்லுகிறார்கள். ஆனால் அவர் தரிசனம் அருளின வரலாற்றைக்குறித்து வித்தியாசம் காணப்படுவது மெய்தான். உலகத்தில் ஒரு சம்பவம் நடந்தால் அதைக் கண்டவர்கள் சகலத்தையும் ஒன்றுபோல் சொல்வதில்லை. ஆகையால் அந்தச் சம்பவம் நடக்கவில்லையா? ஒரு யுத்தத்தைப்பற்றிச் சொல்லும் பத்திரிகைகள், சண்டையின் வரலாற்றைக் குறித்தும், கொல்லப்பட்டவர்கள் தொகையைக் குறித்தும் பலவிதமாய்க் கூறுவதுண்டு. ஆகையால் யுத்தம் நடந்ததைப் பொய்யெனகூறலாமா? கிறிஸ்து மரித்ததும் அவர் உயிர்த்தெழுந்ததும் மெய். ஆனால் அவர் தம்மை வெளிப்படுத்தினவிதம், இடம், ஆள்கள், நேரம் முதலான விஷயங்களைப்பற்றிச் சாட்சிகள் முன்னும் பின்னுமாக எழுதியிருக்கிறார்கள். அவரவர் எவைகளைச் சொல்ல விரும்பினார்களோ அவைகளை மாத்திரம் எழுதினார்கள். எவ்விதமாக எழுத விரும்பினார்களோ அவ்விதமாக எழுதினார்கள். எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் எழுத வேண்டுமென்று அவர்கள் விரும்பவுமில்லை; அவைகளை ஒழுங்காய் எழுதவேண்டுமென்று அவர்கள் கவலைப்படவுமில்லை. நான்கையும் சேர்த்துப் படிப்பதினாலேமாத்திரம் நாம் அவைகளின் சம்பந்தத்தை அறியக்கூடும். சாட்சிகள் கூறும் வார்த்தைகளை ஒழுங்குப்படுத்தி, அவற்றின் உண்மையை அறிவதே நியாயாதிபதிகளின் கடமையாகும்.

இப்போது சரித்திரத்தைத் தெரிந்தவரை ஒழுங்காகப் பார்ப்போம். ஒருவரும் கல்லறைக்குப் போகாததற்கு முன்பே பூமியதிர்ச்சியும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் சம்பவித்தது. இந்தப் பூமியதிர்ச்சி அவர் மரித்தபோதுண்டானதுபோல் எருசலேமெங்கும் உண்டானதல்ல. அந்தக் கல்லறையைச் சுற்றிமாத்திரம் அதிர்ச்சியுண்டாயிற்று. மற்றப்படி சீஷர்களுக்கு

அது தெரிந்திருக்கும். இவ்விஷயம் காவலாளர்மூலமாக வெளிக்கு வந்திருக்கவேண்டியது. தேவதூதன் வல்லமையோடு இறங்கி வந்து கல்லைப்புரட்டி அதன்மேல் உட்கார்ந்தான். இந்தக்கல் புரட்டப்பட்டது சீஷர்களுக்காகவேயன்றி ஆண்டவர் வெளியேறும்படிக்கல்ல. அவர் ஏற்கனவே உயிர்த்தெழுந்தார். ஆண்டவர் கல்லறையில் வைக்கப்பட்டதை ஸ்திரீகள் அறிவார்கள். கல்லறை முத்திரையிடப்பட்டதும், போர்ச்சேவகர் காவல் காத்ததும் அவர்களுக்குத் தெரியாது. வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் அவருடைய சரீரத்துக்குச் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறைக்குப் போனார்கள். போகும் வழியில் அந்தப் பெரிய கல்லை நமக்காக யார் புரட்டித்தள்ளுவான் என்று பேசிக்கொண்டார்கள்.

மகதலேனா மரியாள் முந்திக் கல்லறையினிடத்தில் வந்து கல் தள்ளப்பட்டிருப்பதையும் கல்லறைக்குள் சரீரம் இல்லாதிருப்பதையும் கண்டாள். கல்லின்மேல் உட்கார்ந்திருந்த தூதனையாவது விழுந்து கிடந்த காவற்காரரையாவது அவள் காணவில்லை. உடனே அவள் ஓட்டமாய் ஓடி பேதுருவுக்கும் யோவானுக்கும் இச்சமாசாரத்தை அறிவிக்கும்படி போனாள். இதற்குள்ளாக மற்ற ஸ்திரீகளும் கல்லறையை நெருங்கவே தேவதூதனைக் கண்டார்கள். அவன் அவர்களைப்பார்த்து: பயப்படாதிருங்கள், இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன், அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். நீங்கள் அவருடைய சீஷரிடத்துக்கும் பேதுருவினிடத்துக்கும் போய் அவர் கலிலேயாவுக்குப் போகிறார் என்று சொல்லுங்கள் என்றான். அவர்கள் புறப்பட்டார்கள். மரியாள் சொன்னதைக் கேட்ட பேதுருவும் யோவானும் சேர்ந்து கல்லறைக்கு ஓடினார்கள். வாலிபனான யோவான் பேதுருவைவிட வேகமாயோடி முந்திக் கல்லறைக்குள் வந்தபோதிலும் வெளியேதான் நின்றார். பிந்திவந்த பேதுருவோ கல்லறைக்குள் பிரவேசித்து ஆச்சரியப்பட்டார். யோவானும் கல்லறைக்குள் பிரவேசித்து விசுவாசித்தார். யோவான் விசுவாசித்தது கிறிஸ்து **உயிர்த்தெழுந்தார்** என்பதையல்ல; மரியாள் சொன்னது உண்மைதானென்று நம்பினார். ஏனென்றால் ''அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்'' என்று யோவானே சொல்லுகிறார் *(யோவான் 20:9)*. அவர் தேகத்தில் சுற்றின துணி பாம்பு சட்டை கழற்றினதுபோல் ஒழுங்காயிருந்தது. அவர் தலையிற் சுற்றின தலைப்பாகை கலையாமல் ஒரு பக்கத்தில் எடுத்து வைத்திருந்தது. ஆத்திரப்பட்டு ஆண்டவர் போய்விட்டதாயிராமல், தூங்கி விழிப்பவர்கள் தங்கள் உடுப்புகளை ஒழுங்காக வைத்துப் போவதைப்போலிருந்தது. பேதுருவும் யோவானும் தூதனையாவது கர்த்தரையாவது

காணவில்லை. அதிகாரிகளுக்குப் பயந்தோ, அல்லது இந்தச் சமாசாரத்தை சகோதரர்களுக்கு அறிவிக்க விரும்பியோ தாமதிக்காமல் இருவரும் திரும்பிவிட்டார்கள்.

பிந்தி நடந்து வந்த மகதலேனா **மரியாள்** இப்போது கல்லறைக்குத் திரும்பினாள். தன் ஆண்டவரை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்பதே அவளுடைய ஒரே கவலையாயிருந்தது. அவள் அழுதுகொண்டு கல்லறையைப் பார்த்தபோது இரண்டு தூதர்களைக் கண்டாள். அவர்கள் அவளைப்பார்த்து: ஏன் அழுகிறாய் என்று கேட்டார்கள். மற்ற ஸ்திரீகளைப்போல அவள் அவர்களைக்கண்டு பயப்படவில்லை. அவள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருந்ததால் பயமின்னதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் தூதர்களைப் பார்த்தும் பாராமல், என் ஆண்டவரை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களே. அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லையே என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பினபோது ஒரு **ஆள்** நிற்கக் கண்டாள். அவர் மரியாளைப் பார்த்து: ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரைத்தேடுகிறாய்? என்று கேட்டார். இன்னாரைத் தேடுகிறேன் என்று சொல்லாமல், ஐயா, நீர் **அவரை** எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் **அவரை** எடுத்துக்கொள்ளுகிறேன் என்றாள். அவரை என்று சொன்னால் எவரை? தன் மனதில் நினைத்துக்கொண்டவரை உலகமெல்லாம் அறிந்திருக்கவேண்டும் போலிருக்கிறது.

இயேசு ஒருவரே அவள் உள்ளத்தின் தேட்டமாயிருந்ததே இந்த யோசனையில்லாத மறுமொழிக்குக் காரணம். அவரை, அவரை என்கிறாயே, அவர் யார் என்று ஆண்டவரும் கேட்கவில்லை. **அவரே** அவராயிருக்கும்போது ஏன் கேட்பார்? ''தேடுங்கள் கண்டடைவீர்கள்'' என்றும், ''என்னை முழு இருதயத்தோடே தேடுவீர்களானால், தேடுகையில் என்னைக் கண்டுபிடிப்பீர்கள்'' என்றும் திருவாக்குரைத்த அருள்நாதன், தமது தாயாருக்கல்ல, மலையப்பருக்கல்ல, அருளப்பருக்கல்ல, ஏழை ஸ்திரீ மகதலேனா மரியாளுக்கே முதல் முதல் தம்மை வெளிப்படுத்தக் கிருபைகூர்ந்தார். அவள் இருதயத்தின் உத்தம அன்பையும், தம்மைத்தேடி அவள் அங்குமிங்கும் ஓடி அலைவதையும், அவள் அழுது சிந்தின கண்ணீரையும் கண்டு ''என்னில் அன்புள்ளோர்க்கு என்னை வெளிப்படுத்துவேன்'' என்று சொன்ன கிருபாநிதி அவளுக்கே முதலாவது தம்மைக் காண்பிக்கச் சித்தங்கொண்டார். ஒரு ஸ்திரீயைக் கொண்டா உயிர்த்தெழுந்த சத்தியத்தை ஸ்தாபிக்கிறது? அவள் பலவீன பாண்டமல்லவா? ஒரு ஸ்திரீயினால் உண்டான கிறிஸ்து மார்க்கமென்று பிற்காலத்தில் ஞானிகள் பரியாசம்பண்ண

மாட்டார்களா? அவ்வாறு பரியாசம் பண்ணுகிற வேத விரோதிகளும் இருக்கிறார்களே. அவ்விதமான பயம் ஆண்டவருக்கில்லை. தமது சபை ஸ்தாபிக்கப்படுவது மனுஷர் ஞானத்திலும் பலத்திலுமல்ல. சத்தியமே ஜெயிக்கும். தாமே சபைக்கு ஜீவன். மேலும், அவர் மரிப்பதற்குமுன் எவ்வித தாழ்மையும் உருக்கமுமுள்ளவராயிருந்தாரோ, அதே இலட்சணம் இப்போதும் அவருக்குண்டு. அக்காலத்தில் யாருக்குத் தமது சகாயம் முந்திவேண்டுமோ அவர்களைத் தேடிப்போவார். உயிர்த்தபின்பும் அந்தக் காருண்ய சிந்தை மாறவில்லை. ஆள் தோற்றத்தில் மாறினாரேயல்லாமல் குணத்தில் பழைய ஆண்டவர்தான். மரியாளுக்கு எப்படித்தம்மை வெளிப் படுத்தினார்? தர்க்கத்தினாலல்ல. நீண்ட பிரசங்கத்தாலல்ல. ஒரே வார்த்தையில் அவள் உள்ளத்தைத் தொட்டார். "**மரியாள்**" என்றார். ஆ! அந்த அருமைச் சத்தம் ஆயிரம் வார்த்தைகளிலும் பலமுள்ளது. அவர் சத்தம் கேட்டவுடனே ஆச்சரியத்தால் பிரமைக்கொண்டு, "**என் எஜமானே**" என்றாள். இப்படிச்சொல்லி அவரை விடாமல் பிடித்துக்கொள்ளப்போனாள். **இப்பொழுது** என்னைத் **தொடாதே** என்றார். இதற்குப் பலகாரணங்கள் சொல்வார்கள். உயிர்த்தெழுந்தபின் தம்மைத் **தொடுவது** சரியல்லவென்று தடுத்தாராம். அப்படியானால் மற்ற ஸ்திரீகள் தமது பாதத்தைப் பிடித்துப் பணிந்துகொள்ள இடங்கொடுத்தாரே. மரியாள் தமது சரீரத்தைச் **சோதித்துப்பார்க்க** விரும்பினதால் தடுத்தாராம், அப்படியானால் அவரே சீஷரைப் பார்த்து: என் சரீரத்தைத் தொட்டுப் பரீட்சை பாருங்கள் என்றாரே. அவர் சரீரம் வளர்ந்து பூரணப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் அதைத் தொட்டுக் **கெடுத்துவிடாதபடி** தடுத்தாராம். இது குஞ்சு தானாக வெளியே வருமுன் முட்டையை உடைத்துப் பார்ப்பதுபோல். இதுவும் சரியல்ல.

அவர் எழுந்தபோதே பூரணசரீரத்தோடு எழுந்தார். காரணம் இன்னதென்று ஆண்டவரே சொல்லுகிறார். "என்னைத் தொடாதே, ஏனென்றால் நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை'' என்கிறார். அவர் அப்போதே தன்னோடிருக்க வேண்டுமென்பது மரியாள் விருப்பம். ஆண்டவர் அவளோடுமாத்திரமல்ல, சகல விசுவாசிகளோடும் இடைவிடாமல் கூடயிருப்பதற்கு, அவர் பிதாவிடம் சென்று தமது ஆவியின்மூலமாக வரவேண்டும். அது மெய்யென்பதை மரியாள் பெந்தேகொஸ்தே நாளில் கண்டாள். நாம் இவைகளை விஸ்தரித்துப் பேசினாலும் அன்று காலையில் நடந்த சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவில் நடந்தது நிச்சயம். பேதுருவும் யோவானும் வீட்டுக்குத்திரும்ப, ஸ்திரீகள் வழியில் நடந்துபோக, மரியாளுக்குக் காட்சியருள, உடனே ஸ்திரீகளுக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தித் தமது சீஷர்களுக்குச் செய்தி அனுப்ப,

அவர்களோடு மரியாளும் ஓடிச்சேர்ந்து, எல்லாருமாகப் போய் நடந்தவைகளைச் சீஷர்களுக்கு அறிவித்தார்கள். "இவைகளை அப்போஸ்தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், இவர்களுடனே கூடயிருந்த மற்ற ஸ்திரீகளுமே. இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்சாகத் தோன்றினதால், அவர்கள் இவர்களை நம்பவில்லை'' (லூக்கா 24:10,11). "அவருடைய சீஷரிடத்திற்கும் **பேதுருவிடத்திற்கும்** போய் இதை அறிவியுங்கள்'' என்று தேவதூதன் பேதுருவைப் பிரித்துச் சொல்லவேண்டியதென்ன? காரணம் சொல்லப்படவில்லை. சுவிசேஷ உண்மையின் மாட்சிமையை இப்படிப்பட்ட அநேக குறிப்புகளால் காணலாம். காரணம் பேதுருவுக்கும் தெரியும். நமக்கும் தெரியும். அன்புள்ள இரட்சகன் கலங்கித் தவித்த பேதுருவின் உள்ளத்தை இவ்வாறு தைரியப்படுத்தினாரேயன்றி மற்றப்படியல்ல. இதைக்கேட்டதும் பேதுரு தனித்துப்போகப் புறப்பட்டார். அந்த இடத்தில் கர்த்தர் அவரைச் சந்தித்தார். இந்தத் தரிசனத்தைப்பற்றி லூக்காவும் பவுலும் சொல்லுகிறார்கள். நடந்த காரியங்களை ஆவியானவர் மறைத்திருக்கிறார். நமது பலவீனங்களை மறைத்து நல்ல காரியங்களை வெளிப்படுத்தும் அன்புள்ள நேசருக்கு ஸ்தோத்திரம்!

இதற்கிடையில் சத்துருக்கள் நடுவில் பலத்த கிரியைகள் நடந்தன. காவலாளர் ஆசாரியரிடம் வந்து: கிறிஸ்து மெய்யாகவே எழுந்துவிட்டார் என்றார்கள். சரீரம் கல்லறையில் இல்லை யென்பதை ஆசாரியரும் வேதபாரகரும் அறிந்தபோது அவர்கள் இனி என்ன செய்யக்கூடும்? காவலாளரைத் தண்டிக்கலாமா? அப்படிச்செய்தால் பிலாத்துவுக்குத் தெரியவந்து காரியம் எங்கும் பிரஸ்தாபமாகிவிடும். சீஷர்கள் திருடினதாகக் கதை கட்டினார்கள். அவ்வாறு சொல்வது அவர்களுக்கே குறைவு. காவலாளரும் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். போர்ச்சேவகர் இலேசிலே அந்தக் கதைக்குச் சம்மதிக்க மாட்டார்கள். ஆகையால் அவர்களை வசப்படுத்தும்படி வேண்டிய பணத்தை அவர்களுக்கு இலஞ்சமாகக் கொடுக்க நேரிட்டது. தாங்கள் நித்திரைபண்ணுகையில் சீஷர்கள் திருடினார்கள் என்று சொல்வது மகாபுத்தியீனமென்பதை காவலாளரே அறிவார்கள். நீங்கள் நித்திரைபண்ணினது மெய்யானால் சீஷர்கள் வந்ததை எந்தக்கண்ணால் பார்த்தீர்கள் என்று ஒரு சிறு பையன் அவர்களைப் பரியாசம்பண்ணுவான். ஆசாரிமாரைக் காப்பாற்றும்படி காவலாளர் ஒன்று செய்யலாம். அதாவது, கிறிஸ்து உயிரோடெழுந்தாரென்பதைப்பற்றி அவர்கள் பேசவேகூடாது. ஒருவேளை நாங்கள் நித்திரைபண்ணி யிருக்கலாம். ஆசாரியர் சொல்லுகிறபடி சீஷர்வந்து திருடி யிருக்கலாம் என்று அவர்கள் தலையை அசைத்தாலேபோதும்.

இதுதான் நடந்தது. ஆகிலும் சத்தியம் மறைந்திருக்கமாட்டாது. ''வேத வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று, **ஆசாரியரில் அநேகரும்** விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்'' *(அப். 6:7).*

ஸ்திரீகள் சொன்னதைக் கேட்டவர்களில் இரண்டு சீஷர் அதே நாளில் எருசலேமிலிருந்து எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள். ஒருவர் பெயர் **கிலெயோப்பா.** மற்றவர் பெயர் தெரியாது. கிறிஸ்துவின் தரிசனங்களில் எம்மாவூர் தரிசனம் மகா விசாலமாய்ச் சொல்லியிருப்பதால், மற்றவர் **லூக்கா** என்பதும், சுவிசேஷத்தில் தமது பெயரை மறைத்தாரென்பதும் சிலருடைய அபிப்பிராயம். இதில் அநேக அருமையான விஷயங்களைச் சொல்லக்கூடுமென்றாலும் விஸ்தரித்தால் விரிவாகும். சீஷரிருவரும் கிறிஸ்துவின் மரணத்தைக்குறித்தும் ஸ்திரீகள் சொன்ன காரியங்களைக்குறித்தும் பேசிக்கொண்டுபோனார்கள். அச்சமயம் ஒரு **வழிபோக்கர்** அவர்களோடு சேர்ந்து: நீங்கள் துக்கத்தோடு பேசிக்கொள்ளுகிற காரியம் என்னவென்று கேட்டார். அதற்கு கிலெயோப்பா: எருசலேமில் நடந்த காரியத்தை அறியாதபடி நீர் அந்நியரோ என்றார். அவை எவையென்று வழிபோக்கர் கேட்டார். கிறிஸ்துவைக்குறித்த காரியங்களை இருவரும் பெருமூச்சோடு சொன்னார்கள். அவர் வேதவாக்கியங்களிலிருந்து கிறிஸ்து பாடுபடவும் மகிமையோடு எழும்பவும் வேண்டியதில்லையா என்று அவர்கள் இருதயம் பரவசப்படத்தக்கதாக விளக்கிக்காட்டிக் கொண்டுபோனார். கிராமத்தைச் சமீபிக்கவே அவர் வழிப்போக்கனைப்போல் விலகி நடந்தார்.

அவரை விட்டுப்பிரிய அவர்களுக்கு மனம் வராமல், ஐயா, சாயங்காலப் பொழுதாயிற்றே, நீர் எங்களோடு தங்கியிரும் என்று வருந்தி அழைத்தார்கள். தேடுகிறவர்களுக்குத் தேவ தரிசனம் கிடைக்கும். அவர் பந்தியிருக்கையில் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுக்கையில் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி உடனே மறைந்தார். அவரது கையின் காயங்களைக் கண்டார்கள். அந்நேரமே அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி, மேல்வீட்டிலேறி, கர்த்தர் மெய்யாகவே பேதுருவுக்குத் தரிசனமானார் என்று சீஷர்கள் சொல்லக் கேட்டு, தாங்கள் ஆண்டவரைக் கண்ட விதத்தை விவரித்துச் சொன்னார்கள். இவை யாவும் அவர்களுக்குக் கலக்கமாயிருந்தன. இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், கர்த்தர் தாமே அவர்கள் நடுவில் தோன்றிக் கலங்கின நெஞ்சிற்குச் சமாதானம் கூறி, தம்மை உயிரோடிருக்கிறவராக அவர்களுக்குக் காண்பித்தார். அவ்வேளையில் தோமா இல்லை. சீஷர்கள் தாங்கள் கர்த்தரைக் கண்டோமென்று தோமாவுக்குச்

சொன்னபோது அவர் நம்பவில்லை. எட்டுநாளைக்குபின்பு தோமாவும் கூடயிருக்கையில் கர்த்தர் அங்கே வெளிப்பட்டு, தோமாவைப் பார்த்து: நீ விரும்பினபடியே என் தேகத்தைப் பரிசோதனை செய்துபார், அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். அவ்வார்த்தைகளை தோமா தாங்கக்கூடாமல்: "என் ஆண்டவரே, என் தேவனே'' நான் இன்னுமா உம்மைச் சோதித்துப் பார்க்கவேணும் என்றார். இந்த ஆறு தரிசனங்களும் **யூதேயாவிலேயே** நடந்தன.

ஏழாவது தரிசனம் திபேரியாக்கடலில் மீன்பிடிக்கப்போன ஏழு சீஷர்களுக்கு அருளப்பட்டது. அவர்கள்: பேதுரு, யாக்கோபு, யோவான், நாத்தான்வேல், தோமா என்பவர்களும், வேறு இரண்டு பேருமாக ஏழுபேர். மற்ற இரண்டு பேர் பிலிப்புவும் அந்திரேயாவுமாயிருக்கலாம். ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின்பு தமது சீஷர்களுக்குத் தரிசனம் கொடுக்க விரும்பின இடம் **கலிலேயா.** அவர் மரிப்பதற்கு முந்தின நாள் இரவில் அவர்களைப் பார்த்து: நான் உயிரோடெழும்பினபின் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்று சொல்லியிருந்தார். அவர்கள் தம்மைச் சந்திக்கவேண்டிய இடத்தையும் குறித்திருந்தார் (மத். 28:16). அவர்களோ எருசலேமிலேயே இருந்துவிட்டார்கள்.

உயிர்த்தெழுந்த பின்பு முதலாவது தமது தூதர்களைக் கொண்டும், தாமே நேரில் ஸ்திரீகளைக்கண்டும், சீஷர்கள் கலிலேயாவுக்குப் போகும்படி திரும்பவும் நினைப்பூட்டினார். அப்படியிருந்தும் அவர்கள் பின்னும் எருசலேமிலேயே தங்கினார்கள். இதற்குக் காரணமென்ன? பண்டிகை முடிய ஏழு நாள்கள் செல்லுமென்றும், அதுவரை எருசலேமிலேயே இருக்கத் தீர்மானித்தார்களென்றும் சொல்வாருண்டு. அவர்கள் யூதேயாவில் தங்கினதற்கு அவர்கள் **சந்தேகமே** காரணம். பண்டிகையை அவர்கள் நினைத்தவர்கள் அல்ல. பலவிதத்திலும் அவர்கள் இருதயம் குழம்பி, என்ன செய்கிறதென்று தெரியாமல் இருந்த இடத்திலேயே இருந்தார்கள். அவர் உயிர்த்தாரென்னும் நிச்சயம் வந்தபின்பு கலிலேயாவுக்குப் போய் மீன்பிடிக்க ஆரம்பித்தார்கள். இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. காலையில் இரட்சகன் கரையில் தோன்றினார். அவர்களை அதிசயமாய் மீன் பிடிக்கச்செய்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். இதன் பின்பு ஐந்நூறு பேருக்குகதிகமான சீஷர்களுக்கு தாம் குறித்திருந்த மலையில் தரிசனமானார். பவுல் சொன்னது இந்தத் தரிசனத்தைக் குறித்துத்தான் (1 கொரி. 15:6). அங்கே அவரைப் பணிந்து கொண்டார்கள். சிலரோ சந்தேகப்பட்டார்கள். ஆகையால் அவர் அவர்களுக்குச் சமீபத்தில் வந்து பேசி அவர்கள் சந்தேகத்தைப்

போக்கினார். இந்த சிலர் அப்போஸ்தலரல்ல. அப்போஸ்தலர் தங்கள் சந்தேகம் நீங்கி நிச்சயமுண்டான பின்புதான் கலிலேயாவுக்குப் போனார்கள். ஆகையால் இவர்கள் முதல் முதலாக அவரைத் தரிசித்த கலிலேயாவிலுள்ள சீஷர்கள். இவ்வாறு ஐந்நூறு பேருக்கு அதிகமானவர்கள் கூடிவந்ததைக் கவனிக்கும்போது, ஆண்டவர் அவர்களுக்குத் தரிசன மளிக்கப்போகிற இடம், நாள், நேரம் ஏற்கனவே கலிலேயாவி லுள்ள சீஷர்களுக்கு அறிவிக்கப் பட்டிருக்கவேண்டும். அந்த மலை தாபோரென்றும், மறுரூப மலையென்றும் சொல்வாருண்டு. அவர் அப்போஸ்தலரை ஏற்படுத்தினதும், அவர்களுக்கு அவர் நீளமான பிரசங்கம் செய்ததுமான மலையென்பது அநேகருடைய எண்ணம். இந்தச் சமயத்தில்தான், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் தமக்கு அருளப்பட்டிருப்பதைச் சொல்லி, அடியார் புறப்பட்டுப் போய் தமது நாமத்தினால் எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்றும், உலகத்தின் முடிவுபரியந்தம் தாம் அவர்களோடுகூட இருப்போமென்றும் வாக்கருளினார். இதற்குப்பின்பு பவுல் சொல்லுகிறபடி கர்த்தர் யாக்கோபுக்குத் தரிசனமானார். அது எங்கே, எவ்வாரென்று சொல்லப்பட வில்லை. ஆனால் கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு, அவர் உயிர்த்தெழுந்த செய்தியை அறிந்தபோது தன் அவிசுவாசத்தைக்குறித்து அதிகத் துக்கப்பட்டு, ஆண்டவரைக் கண்டால் அன்றி தான் சாப்பிடுவதில்லை என்று சபதம் பண்ணிக்கொண்டிருந்ததாகவும், ஆண்டவர் யாக்கோபுக்குத் தரிசனமளித்து: என் சகோதரனே, மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, உன் துக்கத்தை அகற்றி இந்த அப்பத்தைப் புசி என்று சொன்னதாகவும், எபிரெயர் சுவிசேஷம் என்னும் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆதிச் சபைக்கு முதல் கண்காணியாயிருந்தவரும், நிருபத்தை எழுதினவரும் இவரே. "நீதிமானாகிய யாக்கோபு" என்றழைக்கப்பட்ட இவர் கிறிஸ்துவுக்குப்பின் 62-ம் வருஷத்தில், கோபுரத்தினின்று கீழே தள்ளப்பட்டு மரித்தார்.

யாக்கோபுக்கு அருளினது ஒன்பதாவது தரிசனம். இதன் பின்பு ஆண்டவர் கட்டளைப்படி அப்போஸ்தலர் எருசலேமுக்குத் திரும்பினார்கள். அவர்களோடு ஆண்டவர் தாயாரும் மற்ற ஸ்திரீகளும் இருந்தார்கள். கர்த்தர் அவர்களிடத்தில் வந்து, பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்ளும்வரை எருசலேமிலேயே காத்திருக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். இது பத்தாவது தரிசனம். இத்தோடு நாற்பது நாளாகிவிட்டது. அதேநாளில் அவர்களை பெத்தானியாவரைக்கும் அழைத்துக்கொண்டுபோய் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். பெத்தானியா என்பது பெத்தானியா கிராமத்தில் அல்ல.

எருசலேமுக்கும் ஒலிவமலைக்கும் அரை மைல் தூரம். ஒலிவ மலைக்கும் பெத்தானியாவுக்கும் மறுபடியும் ஒரு மைல் போக வேண்டும். லூக்கா சொல்லுகிறபடி அவர்கள் எருசலேமிலிருந்து கிழக்கே போனது ஓய்வு நாள் பிரயாண தூரமாகையால் அது அரை மைலே ஆகையால் ஆண்டவர் ஒலிவமலையிலிருந்து பரத்துக்கு ஏறினாரென்றும், அந்த இடம் பெத்தானியாவைக் காணக்கூடியதாக இருந்ததென்றும் அறிகிறோம். அவர் ஆசீர்வாதமாகக் கூறின அருமை வார்த்தைகள் எழுதப்படவில்லை. அவ்வாறு ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும்போதே அவர்களைவிட்டுப் பிரிந்து மகிமைக்குட்பிரவேசித்தார். மேலே பார்த்தகண்ணாய் நின்ற அடியார், அவர் போனதுபோலவே திரும்ப வருவார் என்று தேவதூதர் சொன்ன வார்த்தையைக் கேட்டு, கைதூக்கி அவரைப் பணிந்து, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

இதுவே உயிர்த்தெழுதலின் சரித்திரம். சரித்திர ஆராய்ச்சியைப்போல் உண்மையை விளக்கக்கூடியது வேறெதுவுமில்லை. உத்தம இருதயத்தோடு வாசிப்பவர்களுக்கு இதுவே போதும். ஆனால் தற்காலம் அப்படிப்பட்டதல்ல. சகலமும் நிரூபிக்கப்பட்டால் அல்லாமல் நம்புவதற்கு ஏதுமில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றும், அவர் உயிர்த்தெழுந்தாரென்று சீஷர்கள் நம்பிக்கொண்டார்கள் என்றும், அந்த நம்பிக்கையிலிருந்துதான் கிறிஸ்து மார்க்கம் உண்டாயிற்று என்றும் சொல்லுகிறார்கள். நல்லது, அந்த **நம்பிக்கை** அவர்களுக்கு எப்படி வந்ததென்பதுதான் நம்முடைய கேள்வி. மூன்றிலொரு காரியம் நிச்சயம். ஒன்று அவர் மரிக்காமலே **மயங்கியிருந்து,** சீஷர்களால் பிழைப்பூட்டப்பட்டிருக்க, அவர் உயிர்த்தெழுந்தாரென்று சீஷர்கள் ஜனங்களை வஞ்சித்திருக்க வேண்டும். அல்லது, அவர் **மெய்யாய் மரித்து எழும்பாமலே யிருக்க,** அவர் எழுந்தாரெனச் சீஷர்கள் கதைகட்டிப் பிரஸ்தாபித்திருக்கவேண்டும். அல்லது, அவர் **மெய்யாகவே மரித்து மெய்யாகவே உயிர்த்தெழுந்ததைச்** சீஷர்கள் கண்டு நிச்சயித்து, தாங்கள் நிச்சயித்த சத்தியத்தை அவர்கள் பிரசங்கித்திருக்க வேண்டும். இந்த மூன்றில் ஒன்று நிச்சயமாயிருக்கவேண்டும். "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தாரென்பதை" இப்போது நிரூபித்துக் காட்டுவோம்.

கிறிஸ்து மரித்தபோது **சீஷர் இருந்த நிலைமை என்ன?** சரித்திர உண்மையை மறைப்பது அநியாயம். கிறிஸ்து மரித்தபோது கிறிஸ்துமார்க்கமும் மரித்து அடக்கமானதாக அவர்களுக்குத் தோன்றிற்று. தங்கள் நம்பிக்கை இவ்வாறு அழிந்ததென்கிற துக்கமும், ஊரார் பரியாசம்பண்ணுவார்களே என்கிற வெட்கமும், அதிகாரிகள் கொல்லுவார்களே என்கிற

அச்சமும் அவர்களை ஆண்டுகொண்டிருந்தன. அவர்கள் கடைசிவரை உலகராஜ்யத்தை எதிர்பார்த்திருந்ததால் அவருடைய மரணத்தின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. அவர் மரித்தபோதோ திரும்பவும் அவர் பிழைப்பாரென்பதைக் கனவிலும் அவர்கள் எதிர்ப்பார்த்தவர்கள் அல்ல. பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டிருந்தோர் நிலைமையும், இவர்கள் நிலைமையும் ஒன்றுபோலிருந்தது. மூன்று காரியங்களை அவர்களில் காண்கிறோம். முதலாவது, தாங்கள் விடுதலையடைந்து சீயோனைக் காண்போம் என்கிற நம்பிக்கை முற்றிலும் அழிந்தது. இரண்டாவது, விடுதலை என்பதை அவர்கள் கேட்டபோது சொப்பனங் காண்கிறவர்களைப் போலிருந்தார்கள். அவர்கள் அச்செய்தியை நம்பவிலலை. மூன்றாவது, விடுதலை நிச்சயந்தான் என்று அறிந்தபோது, அவர்கள் வாய் நகைப்பினாலும், அவர்கள் நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்தன. இதே விதமாகத்தான் சீஷர்களையும் காண்கிறோம். கிறிஸ்துவை மறுபடியும் காண்போம் என்னும் நம்பிக்கை அவர்களுக்குள் முற்றிலும் அற்றுப்போயிற்று. அவர் உயிர்த்தெழுந்தாரென்கிற செய்தியை அவர்கள் கேட்டபோது சொப்பனங் காண்கிறவர்கள்போலிருந்தார்கள். ஆண்டவர் தாம் உயிரோடிருப்பதை அவர்களுக்கு நிச்சயப்படுத்தினபோது அவர்களடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் கல்லறைக்குப் போனது சந்தேகம். பேதுருவும் யோவானும் கல்லறைக்கு ஓடினது சந்தேகம். ஸ்திரீகள் சொன்னதைச் சீஷர்கள் நம்பாமல்போனது சந்தேகம். எம்மாவூருக்குப் போன இரு சீஷருள்ளத்திலிருந்தது சந்தேகம். கிறிஸ்து தரிசனமானபோது சீஷர்கள் பயந்தது சந்தேகம். சீஷர்கள் சொன்னதை தோமா நம்பாதிருந்தது சந்தேகம். கலிலேயாவிலுள்ள மலையில் இரட்சகர் காட்சியருளினபோதும் சிலருக்குள்ளிருந்தது சந்தேகம்.

இவ்வளவு சந்தேகத்துக்குள்ளானவர்கள் மகா சந்தோஷத்தோடு கர்த்தர் உயிர்த்தெழுந்தாரென்று சாட்சி கூறினதெப்படி? ஞானிகளே சொல்லுங்கள். அவர் உயிர்த்தெழாதிருந்தும், அவர் உயிர்த்தெழுந்தாரென்று சீஷர்கள் நம்பிக்கொண்டதே கிறிஸ்து மார்க்கம் உண்டானதற்கு காரணமென்கிறார்களே. சந்தேகமுள்ளவர்களுக்கு இந்த **நம்பிக்கை எப்படி வந்தது?** தரித்திரனொருவன் தன்னைத் தனவானென்று **நம்பிக்கொள்வதினால்** ஐசுவரியனாகி விடுவானா? மரித்துப்போன கிறிஸ்துவை உயிரோடிருக்கிறாரென்று இவர்கள் **நம்பிக்கொள்வதினாலே** இத்தனை பெரிய மாறுதல் நடந்திருக்கக்கூடுமா? சரித்திரத்தில் நாம் வாசிக்கிற தென்ன? அவர்கள் சந்தேகத்தைப் போக்கித் தாம் உயிர்த்தெழுந்த நிச்சயத்தை அவர்களில் உண்டாக்குவதற்கு ஆண்டவர்

எடுத்துக்கொண்ட பிரயாசம் எவ்வளவு? லூக்கா சொல்லுகிறபடி கர்த்தர் உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவும் அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினால் தாம் உயிரோடெழுந்ததை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டவேண்டியதாயிற்று. அவர்கள் இலேசாய்த் தம்மைக் கண்டுகொள்ளமாட்டார்கள் என்பது ஆண்டவருக்குத் தெரியும். ஆகையினாலேதான் தமது தூதர்களைக்கொண்டு அவர்களுக்கு நினைப்பூட்டினார். அவருடைய சத்தம், அவருடைய சம்பாஷணை, சமாதானங் கூறுதல், அப்பம் பிட்குதல், தமது காயங்களைக் காட்டுதல், பேர்சொல்லி அழைத்தல், வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனக்கண்களைப் பிரகாசிப்பித்தல், முன்போல அதிசயமாக மீன்பிடிக்கச்செய்தல், முன்பேசின தேவனுடைய இராஜ்யத்தின் சம்பந்தமாகத் தொடர்ந்து பேசுதல், முன்சொன்ன பரிசுத்தாவியைத் திரும்பவும் நினைப்பூட்டல், இவ்வாறு பலவிதமான தெளிவான திருஷ்டாந்தங்களால் தாம் உயிரோடிருக்கிற **நிச்சயத்தை** அவர்களில் உண்டாக்கினார். ஒருவனல்ல அநேகர்; தனித்துமாத்திரமல்ல மொத்தமாய்; ஒரு நிமிஷமாத்திரமல்ல நீண்ட நேரமாய்; இரவில்மாத்திரமல்ல பகலிலும்; தூரத்தில்மாத்திரமல்ல சமீபத்திலும்; ஒரு முறைமாத்திரமல்ல பலமுறையும்; கண்டதுமாத்திரமல்ல அவரைத்தொட்டும்; கூட நடந்ததுமாத்திரமல்ல அவர்களோடு பேசியும்; அவர் சொன்னதுமாத்திரமல்ல தாங்கள் கேள்விகள் கேட்டும்; இவ்வாறு சந்தேகம் நீங்கி அவர் உயிரோடிருப்பதை நிச்சயித்தார்கள். மெய்யாகவே தங்கள் அருமை ஆண்டவர் திரும்பவும் உயிரோடே வந்துவிட்டாரென்கிற நிச்சயம் பூரணமாய் அவர்களுக்கு உண்டானபோது, ஆனந்த சந்தோஷப்பட்டு, அவரோடு முன்போல் தாராளமாய்ப் பேசினார்கள். அவர் கற்பித்தபடி கலிலேயாவில் குறித்த மலைக்குப் போனார்கள். அவர் கட்டளையின்படி எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். அவர் அழைத்தபோது அவரோடுகூட ஒலிவமலைக்குப் போய், பரத்துக்கெழுந்த ஆண்டவரை வழியனுப்பிக்கொண்டு, அவருடைய நிறைவான ஆசீர்வாதத்தோடு எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

உயிர்த்தெழுந்த இரட்சகரை அவர்கள் உடனே அறிந்து கொள்ளக்கூடாமற்போன காரணமென்ன? காரணம் **இருபட்சத்திலும்** இருந்தது. அவர்கள் எளிதில் தம்மை அறிந்துகொள்ளமாட்டார்கள் என்பது ஆண்டவருக்குத் தெரியும். ஆள் மாறவில்லை, அவர் **தோற்றமோ** மாறியிருந்தது. அவரைக் கண்டவர்கள் உடனே இனம் அறிந்துகொள்ளக் கூடவில்லை. மகதலேனா மரியாள் அவரைத் தோட்டக்காரன் என்று எண்ணினாள். எம்மாவூருக்குப்போன சீஷர் அவரைப் வழிபோக்கனென்று நினைத்தார்கள். சீஷர்கள் அவரை ஏதோ

ஒரு ஆவியென்று பயந்தார்கள். கடலில் மீன்பிடித்தவர்கள் அவரை அந்நியனென்று எண்ணினார்கள். நீர் யாரென்று கேட்கவும் பயந்தார்கள். இவ்வளவு குழப்பத்துக்கும் காரணம் அவர் சரீரத்திலுண்டான மாறுதலே. நம்மைப்போல் **மாம்சத்தையும், இரத்தத்தையும்** சுதந்தரித்துப் பிறந்தவர், உயிர்த்தெழுந்தபின்பு இரத்தம் என்கிற வார்த்தையை விட்டுவிட்டு "எனக்கு மாம்சமும், எலும்பும் இருக்கிறதுபோல" என்கிறார். அதுவும் ஆவிக்குரிய சரீரமாயிருந்தது. அப்போஸ்தலன் சொல்வதிலிருந்து அதன் தன்மையை இன்னும் விவரமாய் நாம் அறியலாம். விதைக்கப்படும் விதைக்கும் அது முளைக்கும்போது உண்டாகும் மேனிக்கும் வித்தியாசம் உண்டு. அழிவுள்ளதாய் விதைக்கப்பட்டு அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டு மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டுப் பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்பட்டு ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். இவைகள் நமது உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லப்பட்டவைகள்.

கிறிஸ்து பரிசுத்தராகையால் அவர் சரீரம் அழிவைக் காணாமல், ஆவிக்குரிய மேலான மகிமையை அடைந்தது. இவ்வாறு ஒரு பலத்த மாறுதல் அவருடைய சரீரத்தில் உண்டானதால் சீஷர்கள் அவரை இன்னாரென்று அறிந்து கொள்ளக்கூடவில்லை. அவர் உயிர்த்தெழுந்த சரீரத்துக்கும் மகிமையடைந்த சரீரத்துக்கும் மறுபடியும் வித்தியாசம் உண்டானது. அவர் பவுலுக்குக் காட்சியருளினபோது சூரியப்பிரகாசத்திலும் அதிகமான பிரகாசத்தை அவர் கண்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் லாசருவைப் போன்றதல்ல. அவனை இனமறியக்கூடாதபடி ஜனங்கள் தத்தளிக்கவில்லை. ஏனென்றால், அவன் மரிக்குமுன் எப்படியிருந்தானோ அதே சாயலில் உயிரோடெழுந்தான். கிறிஸ்துவும் அதுபோல உயிர்த்தெழும்பியிருந்தால் நிமிஷத்தில் எல்லாரும் அவரைக் கண்டுகொள்வார்கள். தம்மை உயிருள்ளவரென்று அவர் நிரூபிக்கவேண்டியதில்லை. மகிமையாய் உயிர்த்தெழுந்த ஆவிக்குரிய அவரது சரீரத்துக்கு வெளியிலிருந்து உள்ளேபோகச் சுவர் ஒரு தடையல்ல. யூதேயாவிலிருந்து கலிலேயாபோகத் தூரம் ஒரு தூரமல்ல. வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால் அவர் வெளியிலுமிருப்பார் உள்ளுமிருப்பார். யூதேயாவிலுமிருப்பார் அதே நேரம் கலிலேயாவிலும் இருப்பார். உயிர்த்தெழுந்த அவரது சரீரத்தின் மாட்சிமை அதுவே. இதை அறியாமல் எம்மாவூரில் சீஷருக்குக் காணப்பட்டவர் அதே நேரத்தில் எருசலேமில் பேதுருவுக்குக் காணப்பட்டதெப்படி என்று சீஷர்கள் திகைத்தார்கள்.

மற்றொரு காரணம் சீஷர்களிடம் இருந்தது. ஆவிக்குரிய சரீரத்தைக் காண **ஆவிக்குரிய பார்வை**வேண்டும். அவரோடுள்ள ஆவிக்குரிய ஐக்கியத்தினால்மாத்திரம் அவரைக் காணக்கூடும். புறம்பான பார்வையல்ல, உள்ளான ஞானப்பார்வை சீஷர்களுக்கு அவசியம். ஆண்டவர் இந்தப் பார்வையைப் படிப்படியாய் அவர்களுக்குள் உண்டாக்கினார். முன் நாம் கவனித்தபடி அவர் சத்தம், சமாதானங்கூறல், அப்பம்பிட்குதல், பேர்சொல்லி அழைத்தல், அற்புத கிரியை, ஆவியை ஊதுதல், வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனக் கண்களைப் பிரகாசிப்பித்தல், முந்தின நாள்களின் சம்பாஷணைத் தொடர்ச்சி, இவ்வாறு அநேகம் தெளிவான குறிப்புகளால் அவர்கள் தம்மை அறிந்துகொள்ளும்படி செய்தார். தன் கணவனைப் பறிக்கொடுத்துச் சிறையான இராஜகுமாரத்தி, அவனை என்று காண்பேன் என்று ஏங்கித் தவித்திருக்கையில், திடீரென ஒருநாளில் ஒரு பரதேசி தன்னண்டைவந்து பிச்சை கேட்க, அவன் தோற்றம் விகாரமாயிருந்தும், அவன் விரலில் அணிந்திருந்த **மோதிரத்தைக்** கண்டு, தன் புருஷன் அவனே யெனப் பற்றிக்கொண்டதாகக் கதைகளில் வாசித்திருக்கிறோம். அதுபோலவே இதுவுமாயிற்று. புறம்பான தோற்றமல்ல, உள்ளான ஆவிக்குரிய அன்பின் கவர்ச்சியினால் இழுக்கப்பட்டுத் தங்கள் அருமை எஜமானைப் பற்றிக் கொண்டார்கள்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தது மெய்யானால் அவரேன் பிலாத்துவுக்கும் பிரதான ஆசாரியருக்கும் தம்மை வெளிப்படுத்தக் கூடாதென்று சிலர் கேட்கிறார்கள். நாமும் அவ்வாறு நினைப்பதுண்டு. தமக்குச் சொந்தமான அடியார்களே அவரை இனமறிவது இவ்வளவு கஷ்டத்திலிருந்தால், உலக மக்கள் அவரை எப்படி அறியக்கூடும்? "மூன்றாம் நாளில் தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்; ஆகிலும் **எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்யாமல்,** அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு, முன்பு அவரோடே புசித்துக்குடித்தவர்களும், தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய **எங்களுக்கே** பிரத்தியட்சமாகும்படி செய்தார்" என்று பேதுரு சொன்ன காரணம் அதுதான் (அப். 10:40, 41). பண்டிகைக்குத் திரளான ஜனங்கள் வந்திருந்தும், ஆண்டவர் சீஷர்களை எருசலேமிலிருந்து கீதரோன் ஆற்றின்வழியாக ஒலிவமலைக்கு அழைத்துச்செல்லுகையில், ஜனங்கள் நடந்துபோன சீஷர்களைக் கண்டார்களேயன்றி, அவர்களோடுபோன கிறிஸ்துவைக் காணவில்லை. மாம்சத்துக் குட்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய காட்சியேது?

ஆகையால், கிறிஸ்து உயிரோடெழும்பாதிருந்தும் அவர் எழுந்தாரெனச் சீஷர்கள் **நம்பிக்கொண்டதினால்** கிறிஸ்து

மார்க்கம் உண்டாயிற்று என்னும் பேச்சு அடிப்பட்டது. புத்தன் மரித்து 150 வருஷங்களுக்குப்பின் அவர் சரித்திரம் எழுதப் பட்டது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்தவர்கள் பின் சந்ததியாரல்ல. அவரோடிருந்தவர்களே அவர் மரித்த 50 நாள்களுக்குப்பிறகு, அந்நிய தேசத்துக்குப் போயல்ல, அந்த எருசலேம் பட்டணத்திலேயே, அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் காதுகள் கேட்க: நீங்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள், அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்; நாங்கள் அதற்குக் கண்கண்ட சாட்சிகள் என்று எவ்வளவோ வல்லமையோடு பிரசங்கித்தார்களே. அப்படிப் பிரசங்கித்த போதெல்லாம் அவருடைய நாமத்தைக் குறித்துப் பேச வேண்டாமென்று சத்துருக்கள் சொன்னார்களேயன்றி, அவர் உயிர்த்தெழவில்லை என்று தர்க்கித்தார்களா? ஏழைக் கலிலேயர் இவ்வளவு வல்லமையோடு பிரசங்கிக்கவேண்டுமானால் ஓர் புதிய உயிர் அவர்களுக்குள் வந்திருக்கவேண்டுமே. இந்தப் புதிய உயிர் எப்படி வந்தது? ஆண்டவர் மரித்ததோடு அவர்கள் நம்பிக்கை என்னும் தீபம் அவிந்தது, விசுவாசம் என்னும் கப்பல் கவிழ்ந்தது. எல்லா மனுஷரிலும் நிர்ப்பந்தராகித் தவித்தார்கள். இவர்களா உலகத்தை இரட்சிக்கப்போகிறவர்கள்? என்ன சுவிசேஷத்தை இவர்கள் பிரசங்கிப்பார்கள்? "அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நம்பியிருந்தோம், எங்களைக் கைவிட்டு மடிந்துபோனாரே" என்று புலம்புவதுதான் அவர்கள் போதகமா யிருக்கும். என்ன அனுபவத்தை அவர்கள் பிரசங்கிப்பார்கள்? தங்கள் பயத்தையும், அழுகையையும், அவநம்பிக்கையையும், வெட்கத்தையும், துக்கத்தையும், பொறாமை, பெருமை, எரிச்சல் முதலான தங்களுக்குள்ள பலவித பாவங்களைத்தான் அவர்கள் அறிவிக்கக்கூடும். அதுதான் அவர்கள் **அனுபவம்**. அப்படியிருக்க, அவர்கள் ஜீவியம் அவ்வளவு பரிசுத்தமானதற்கும், அவர்கள் ஊழியம் அரண்களை நிர்மூலமாக்கி, உலகத்தின் இராஜாக்களை யும், சேனாவீரர்களையும், சாஸ்திரிகளையும் கிறிஸ்துவின் பாதத்திற்குக் கொண்டுவந்த இரகசியமென்ன?

கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளின் உலக சரித்திரத்தை எழுதப்போனால், கிறிஸ்து சபையையும், அது மனுமக்களுக்குள் நடப்பித்து வந்திருக்கிற மாறுதல்களையும் அகற்றிச் சரித்திரம் எழுதமுடியாது. ஒரு கயிற்றில் இரண்டு நூல்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பதுபோல், கிறிஸ்துவின் வல்லமை மனுஷருக்குரிய பற்பல காரியங்களிலும் கிரியை நடப்பித்து வந்திருப்பதை உலக சரித்திரத்திற் காணலாம். கிறிஸ்து மரித்தேபோயிருந்தால் யார் மூலமாய் இந்த வல்லமை உலகத்தில் பிரவேசித்தது? அவருடைய சீஷர்மூலமாகவென்றால், அந்தச் சீஷருக்கு இவ்வளவு வல்லமை எப்படி வந்தது? உலக முழுவதையும் தங்கள் தந்திரத்தால் ஆண்டுகொள்வதற்கு,

உலகத்திலுள்ள அறிவாளிகள், ஞானிகளைப்பார்க்கிலும் கலிலேயரான செம்படவர் அவ்வளவு சமர்த்தரோ? அல்லது தங்கள் செல்வாக்கினாலும் சேனையாலும் இதை நடப்பித்தார்களோ? கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தாரென்பதை அங்கீகரித்தால் அல்லாமல், இவைகளுக்கு உத்தரவு கொடுக்க உலகத்தில் யாராலும் ஆகாது. அவருடைய உயிர்த்தெழுதலே எருசலேமில் மூவாயிரம், ஐயாயிரம் பேரை கிறிஸ்துவின் பாதத்திற்கு கொண்டுவந்தது. அவருடைய உயிர்த்தெழுதலின் நிச்சயமே அதிகாரிகளிலும் அநேகரை விசுவாசத்துக்குக் கீழ்ப்படியச் செய்தது. அவருடைய உயிர்த்தெழுதலின் சுவிசேஷமே உலகத்தை இரட்சித்தது. அவர் உயிர்த்தெழுந்த அற்புதத்திலும் செம்படவர் இவ்வாறு மாறினதே பெரிய அற்புதம்.

நல்லது, **பவுலை** கிறிஸ்தவனாக்கினது யார்? அப்போஸ்தலரிலாகிலும் சீஷர்களிலாகிலும் யாதாமொருவர் தான் பவுலைக் குணப்படுத்தினதாகச் சொல்லக்கூடுமா? அவர் குணப்பட்டு அப்போஸ்தலரிடத்தில் வந்தபோது, அவர்கள் பயந்து சந்தேகப்பட்டு அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. அவரைப்போல் கிறிஸ்து மார்க்கத்தைப் பகைத்த விரோதிகள் முன்னுமில்லை பின்னுமில்லை. மரித்துப்போன இயேசுவை இவர்கள் பிரசங்கித்தது அவருக்குச் சகிக்கமுடியாத கோபமாயிருந்தது. ஆகையால் கிறிஸ்தவர்களான புருஷரையும் ஸ்திரீகளையும் பிடித்துக்கட்டிச் சிறைச்சாலையில் போட்டு, மரணபரியந்தம் அவர்களைத் துன்பப்படுத்தினார். பரிசுத்தவான்கள் கொலை செய்யப்படுவதற்குச் சம்மதித்திருந்தார். கிறிஸ்தவர்கள்மேல் மூர்க்கவெறி கொண்டவராய் எருசலேமில் நடப்பித்த கொடுமை போதாதென்று, அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினார். கிறிஸ்து மார்க்கத்தை வேரோடு அழித்துவிடவேண்டுமென்பதே அவருடைய முழுத்தீர்மானம். அழித்துப்போட்டாரா? அல்லது தாம் அழிக்கத்தேடின விசுவாசத்தை நிலைநிறுத்தும்படி தமது ஜீவனைக் கொடுத்தாரா? கிறிஸ்து மார்க்கத்துக்குப் பிரதான சத்துருவாயிருந்த பவுல், கிறிஸ்துவின் பிரதான அப்போஸ்தலனானதற்குக் காரணமென்ன? இந்த அதிசய மாறுதல் எப்படி உண்டாயிற்று? யாராலே உண்டாயிற்று? தாம் முன்னே வெறுத்த கிறிஸ்தவர்கள்மேல் கனிவான அன்பு வைத்ததற்குக் காரணமென்ன? மற்றெல்லாரைப்பார்க்கிலும் அவர் கிறிஸ்துவுக்காக அதிகமாய்ப் பிரயாசப்பட்டதற்கு இரகசியமென்ன? மற்றெல்லாரைப் பார்க்கிலும் ஆழமான தேவ இரகசியங்களை யாரிடமிருந்து பெற்றார்? கிறிஸ்துவின் கொடியச் சத்துரு, கிறிஸ்துவின் சிந்தையினால் நிறைந்து, மகா சிறந்த பரிசுத்தவானாக மாற்றப்பட்டது எப்படி? அவரையே கேட்போம்.

"நான் இவைகளை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷரால் கற்றதுமில்லை; **இயேசு கிறிஸ்துவே** இவைகளை எனக்கு வெளிப்படுத்தினார்" என்கிறார் (கலா. 1:12). சிறந்த கல்விமானும் யூதமார்க்கத்தில் மகா வைராக்கியனுமாகிய பவுல், வேறு யாராலும் மனமாறமாட்டாரென்று கண்ட ஆண்டவர்,. தாமே அவரை தமஸ்குவுக்குப் போகிறவழியில் சந்தித்து ஆட்கொண்டார். உயிர்த்தெழுந்த "நசரேயனாகிய இயேசுவின்" மகிமையான காட்சியும் அவர் பேசின வார்த்தைகளுமே பவுலைக் கிறிஸ்தவனாக்கிற்று. அதிகாரிகளுக்கு முன்பாகவும் இராஜாக்களுக்கு முன்பாகவும் தமது குணப்படுதலைப்பற்றி அவர் பேசினபோதெல்லாம், கிறிஸ்து தமக்கருளின இந்தத் **தரிசனத்தையே** காரணமாகச் சொல்லுகிறார். அப்படியல்ல வென்றால், வேறு எவ்விதமாக அவர் கிறிஸ்தவனானாரென்று விரோதிகளே சொல்லட்டும். மேலும் இலேசாய் ஏமாந்துபோக அவர் அறிவில்லாத மனுஷனல்ல. அல்லது ஏதோ ஆதாயத்தைத் தேடி கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்தவருமல்ல. அவர் கிறிஸ்துவின் ஊழியக்காரனானதால் தமக்குரிய சகல மேன்மைகளையும் இழந்தார். அவர் தமது சொந்த ஜனத்தால் புறக்கணிக்கப்பட்டு, ஜீவகாலமெல்லாம் கொடியபாடுகளை அடைந்து, கடைசியாக நீரோ இராயனால் சிரச்சேதமாகி மரித்தார். அவர் சுவிசேஷத்தினிமித்தம் பட்டபாடுகளை நிருபங்களில் ஏராளமாகக் காணலாம். அவருடைய உத்தம ஜீவியத்தையும், அவர் செய்த வேலைகளையும், அவர் எழுதின நிருபங்களையும் கவனிக்கும்போது, அவர் வஞ்சிக்கப்பட்ட மனுஷன் என்று யார் சொல்லக்கூடும்? "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" என்று அவர் பிரசங்கித்த சுவிசேஷமே பவுலின் அதிசயமான மாறுதலுக்கும், ஆச்சரியமான ஊழியத்துக்கும் காரணம்.

கிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்று நாம் நம்புகிறோமா? அவர் மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தாரென்று விசுவாசப்பிரமாணத்தில் நாம் சொல்லுகிற காரியம் வேறே. கிறிஸ்தவர்களில் யார்தான் சொல்லவில்லை? இந்த வாயின் மந்திரம் நம்மைக் கிறிஸ்தவர்களாக்காது. அவருடைய உயிர்த்தெழுதலின் **நிச்சயம்** சீஷர்களுடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் உண்டாக்கின மாறுதலை நம்மில் உண்டாக்கியிருக்கிறதா? பவுலை அவ்வளவு அதிசயமாக மாற்றின கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்மை மாற்றியிருக்கிறதா? நமது ஜீவியம் மாற்றப்படவில்லையென்றால் விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லி என்ன பிரயோஜனம்? அவர் உயிர்த்தெழுந்தாரென்பதை நாம் சந்தேகிக்கிறதில்லை. அதைப்பற்றி அடிக்கடி பேசுகிறோம், பிரசங்கிக்கிறோம். இது நமக்குச் சாதாரணம். ஆனால்

மகிமையடைந்த கர்த்தரை உயிருள்ளவராக நமது மனக்கண்கள் பிரத்தியட்சமாகக் காணும்போது, நமது காரியங்கள் யாவும் மாறும். ஒரு போதகர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்கு முந்தினநாள் இரவில் தமது பிரசங்கத்தை ஆயத்தம்பண்ணிக்கொண்டிருந்தார். பிரசங்கத்தை நியாய தோரணைகளோடு ஆயத்தஞ்செய்தார். தமது தோட்டத்தில் உலாவி இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கையில், திடீரெனக் குதித்து, ஆ! என் ஆண்டவர் உயிரோடிருக்கிறார், உயிரோடிருக்கிறார் என்று கூவினார். நடந்ததென்ன? எப்போதும்போல உயிர்த்தெழுதலைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கும்போதே, கிறிஸ்து உயிரோடிருப்பதை அவர் மனக்கண்கள் பிரத்தியட்சமாய்க் கண்டன. அவருக் குண்டான உற்சாகத்துக்கும் சந்தோஷத்துக்கும் அளவில்லை. மறுநாள் காலையில் அவர் ஆலயத்தில் பிரசங்கித்தபோது, கர்த்தர் மெய்யாகவே ஆலயத்தில் வந்து நிற்பதுபோல் எல்லாரும் உணர்ந்தார்கள். இந்த வித்தியாசத்தை நாம் அறிந்துகொண்டால் நல்லது. அநேகர் தங்களைக் கிறித்தவர்களென்று சொல்லியும், இன்னும் தங்கள் பாவங்களிலும் உலக சிந்தைகளிலும் நிறைந்திருப்பதற்குக் காரணம், உயிர்த்தெழுதலை உபதேசம் போல் கற்றார்களேயல்லாமல், அவரைத் தங்கள் மனக்கண்களால் பிரத்தியட்சமாய்க் காணவில்லை. அப்படிக் காணும்போது பலவீனத்திலும் சந்தேகத்திலும் அமிழ்ந்திருந்த சீஷர்கள் மாற்றப்பட்டதுபோல நாமும் மாற்றப்படுவோம்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தாரென்று சொல்லுகிறவர்களாக அல்ல, அந்த உயிர்த்தெழுதலின் **வல்லமையில்** பிழைக்கவும் ஊழியஞ்செய்யவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இதுவே கிறிஸ்து மார்க்கம். அப்போஸ்தலரிடத்திலும், பவுலிடத்திலும், உத்தம விசுவாசிகளிடத்திலும் விளங்கின வல்லமை அதுவே. அதைக்குறித்து அப்போஸ்தலன் தாராளமாய் எழுதியிருக்கிறார். ''பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் **புதிதான ஜீவனுள்ளவர்களாய்** நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்'' என்றார் *(ரோமர் 6:4)*. கிறிஸ்து தம்மை நம்மோடு ஒன்றாக்கினதுபோல நாமும் அவரோடு ஒன்றாகும் போது, அவருடைய மரணம் நமது மரணமாகவும், அவருடைய உயிர்த்தெழுதல் நமது உயிர்த்தெழுதலாகவும் எண்ணப்படுகிறது. இதுவே அவரோடு நமக்குள்ள ஐக்கியத்தின் பலன். ஆகையால் உத்தம விசுவாசிகள் பழைய ஜீவியத்துக்கு மரித்து, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளுகிறார்கள். தேவன் தமது குமாரனை எழுப்பினதில் அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே, விசுவாசிக்கிற நம்மிடத்திலும் தமது வல்லமையின் மகாமேன்மையான மகத்துவத்தை

நடப்பிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார் (எபே. 1:19). அவர் தமது ஆவியினால் நமக்குள் நடப்பிக்கும் கிரியையினாலே நாம் தேவனுக்கென்று கனி கொடுக்கிறோம் (ரோமர் 7:4). உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின்பேரிலுள்ள விசுவாசம், அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கையை நமக்குள் உண்டாக்கியிருக்கிறது (1 பேதுரு 1:4). நமதாண்டவர் உயிரோடிருக்கிறபடியினாலே உலகத்தை நியாயந்தீர்க்கும்படி ஒரு நாளில் வருவாரென்று அறிவோம் (அப். 17:31). அதினிமித்தம் நாம் கலங்குவதில்லை. அவர் **சீக்கிரம்** வரும்படி எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் ''தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார். ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே அவர்களுக்காக மரித்துப் பாவத்தைப் போக்கினவர். அவர்களை நீதிமான்களாக்கும்படி அவரே எழுந்துமிருக்கிறார். அவர்கள் தவறுதல்களை மன்னித்துச் சுத்திகரிக்கும்படி அவரே தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். இடைவிடாமல் அவர்களுக்காக அவர் வேண்டுதல் செய்கிறபடியால், அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (ரோமர் 8:33,31; எபி. 7:25). இவ்வாறு எஜமான் நமது ஆத்துமத்தில் நடப்பிக்கும் வல்லமையான மாறுதல்கள் மாத்திரமல்ல. அவர் வருகையில் நாம் உயிரோடிருந்தால், நமது அற்பமான சரீரத்தைத் தமது மகிமையான சரீரத்துக்கொப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி. 3:21). நாம் மரித்து நமது சரீரம் அழிந்துபோனாலும் நம்மை உயிரோடெழுப்பி மகிமைப்படுத்துவார். இவ்வாறு நாம் எப்பொழுதும் கர்த்தரோடுகூடவே இருப்போம்.

அவர் உயிர்த்தெழுந்து அடைந்த மேன்மையும் மகிமையும் தமக்காகவல்ல, நமக்காகவே. அந்தச் சம்பாத்தியம் முழுவதையும் நமக்கே தந்துவிடுவார். அவருடைய உயிர்த்தெழுதலின் பாக்கியம் இன்னதென்று அப்போதுதான் பூரணமாய் அறிவோம். இனிக் காலம் செல்லாது. அவரோடுகூட இந்தப் பேரின்ப மகிமையில் பிரவேசிக்கச் சிலாக்கியம் பெற்றவர்களனைவரும் பாக்கியவான்கள். பெயர்க் கிறிஸ்தவர்களான அவிசுவாசிகள் அனைவரும் புறம்பே தள்ளப்படுவார்கள். அவர்கள் இப்போதே ஆவிக்குரிய மாறுதலடைந்து, கிறிஸ்துவில் நிலைத்திருந்து ஜீவிக்காததினால், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு அவர்களுக்குத் தகுதி இராது. இப்போது ஜீவனைப்போன்ற மகா பெரிய காரியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு போகிறோம். பாவத்தைப் பிரதானமாகப்பிடித்து, நித்திய ஜீவனைப்பற்றி அசட்டையாயிருப்பவர்கள் புலம்பித் தவிக்கும் நாள் வருகிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தது பொய்யாயிருக்குமானால் அவர்கள் மனங்கொண்டபடி

நடக்கலாம். அவர் இப்போது பிழைத்திருப்பதும், சீக்கிரமாக வெளிப்படப்போகிறதும் மெய்யானால் அவர்கள் முடிவு என்னமாயிருக்கும்? கிறிஸ்தவர்களில் அநேகருடைய நடபடிக்கைகளைப்பார்க்கும்போது, ஆண்டவர் உயிரோடிருப்பதை அவர்கள் நம்பாததுபோல் பிழைக்கிறார்கள். அவரைத் தரிசிப்பார்களானால் ஒருக்காலும் இவ்வாறு நடக்கமாட்டார்கள்.

உயிர்த்தெழுந்த இரட்சகரைக் காணவேண்டிய இடம் எது? அவர் மூன்று இடங்களில் இருக்கிறார். நாம் முக்கியமாக அவரைப் **பிதாவின் வலதுபாரிசத்தில்** மகிமையடைந்து வீற்றிருக்கும் இரட்சகனாகக் காண்கிறோம். நாமறியாமலே நமது இருதயத்தைப் பரத்துக்கு உயர்த்துகிறோம். அது சரியே. நமதாண்டவர் பரமேறினபின் தமது சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் பிதாவின் சிங்காசனத்திலிருந்து அரசாளுகிறார் என்பது மெய். ஆகையால் அவர் பரத்திலிருப்பதாக நாம் நினைப்பது தப்பல்ல. இன்னும் எங்கே இருக்கிறார்? **நமது பக்கத்தில்** இருக்கிறார். "உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று வாக்குப்பண்ணினவர் அவரே. அவர் உயிர்த்தெழுந்தபின்பு தமது சீஷர்களோடு கூடவே இருந்தார். அவர்களோ அவரைக் காணவில்லை. அவர் தம்மைப் பலவிதமாய் வெளிப்படுத்தினபோதுமாத்திரம் அவர்கள் அவரைக் கண்டார்கள். காணாதபோது அவர் அவர்களைவிட்டு எங்கேயோ போய்விட்டதாக நினைத்திருக்கலாம். ஆனால் அவர் அவர்களோடுகூடத்தான் இருந்தார். அவர் வெளியிலிருந்து அறைக்குள் வந்தாரென்றும், யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்குப் போனார்; கலிலேயாவிலிருந்து, யூதேயாவுக்கு வந்தாரென்றும் சொல்லியிருந்த போதிலும், அவர் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் போனதாக நாம் நினைக்கக்கூடாது. அவர் அவர்களோடேயே இருந்தார். உள்ளே வெளியே என்றும், யூதேயா கலிலேயாவென்றும் சீஷர்களைக் குறித்துப்பேசலாம்.

அவர்கள் கலிலேயாவுக்குப் போவது பிரயாணமாகும். ஆண்டவர் தம்மை அவர்களுக்கு எங்கே வெளிப்படுத்த விரும்பினாரோ அங்கே வெளிப்படுத்துவது அவருக்குப் பிரயாசமல்ல, பிரயாணமுமல்ல. அவர் மரிக்குமுன் அவரைக் குறித்து: "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரேயானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான்" என்று மார்த்தாள் மரியாள் சொல்லிப் புலம்பவேண்டியதாயிற்று. அவர் ஓரிடத்தில் இருந்தால் அவருக்கு ஆள் அனுப்பி அவர் வரும்வரை காத்திருக்கவேண்டும். அவர் உயிர்த்தெழுந்த பின்போ அந்தக் கட்டிலிருந்து அவர் விலகினார். ஓரிடத்தில் மாத்திரமல்ல, எங்கும் எல்லாரோடும் இருக்கக் கூடியவரானார். அவரைக் காண ஆவிக்குரிய பார்வை

தான் நமக்குவேண்டும். இந்த இரகசியத்தின் உண்மையை அவர் சீஷர்களுக்கு தரிசனங்கொடுத்த மாதிரியில் காணலாம். இந்த நேரத்தில் அவர் நம்மோடுதானிருக்கிறார். நாம் அவரை நினைக்கிறதில்லை. அவர் கூடயிருந்தும் அவர் சமூகம் நமக்குப் பிரயோஜனப்படுகிறதில்லை. அவரைப் பார்க்கத் தவறுவதினால் அநேக பாவங்களுக்கு ஆளாகிறோம். பக்கத்தில் நிற்கும் ஆண்டவரை நாம் காணத்தக்க ஆவிக்குரிய பார்வையை தேவன் நமக்குத் தருவாராக. இன்னும் எங்கே அவரை காணலாம்? **நமக்குள்ளேயே** நாம் அவரைக் காணவேண்டும். அவர் உயிர்த்தெழுந்ததின் **பிரதான நோக்கமும் பிரதான ஆசீர்வாதமும்** அதுவே. முந்தின இரண்டு இடங்களைப்பற்றி அநேகர் அறிந்திருந்தாலும், இந்த மூன்றாம் இடத்தை அவர்கள் யோசிக்கிறதில்லை. மூன்று இடங்களிலும் இதுவே பிரதானம். அவரை பரத்திலிருக்கிறவராகமாத்திரம் அல்ல, பக்கத்திலிருக்கிறவராகமாத்திரமல்ல, நமது **உள்ளத்தில் வசிப்பவராகக்** காண்பதே நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு இரகசியம்.

அப்போஸ்தலன் தமஸ்குவுக்குப் போகிற வழியில் தரிசித்தபோது, அதைக்குறித்து என்ன சொல்லுகிறார்? "தேவன் தமது குமாரனை **எனக்குள்** வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது" என்கிறார் *(கலா. 1:16)*. வேறொரு இடத்தில் "இனி நான் அல்ல, கிறிஸ்துவே **எனக்குள்** பிழைத்திருக்கிறார்" என்கிறார் *(கலா. 2:20)*. ஆண்டவர் சீஷர்களுக்குக் கொடுத்த வாக்கும் அதுவே. "அந்நாளில் நான் **உங்களுக்குள்** இருப்பதை அறிவீர்கள்" என்றார் *(யோவான் 14:20)*. கர்த்தர் தம்மை **நமக்குள்** வெளிப்படுத்துவதையே நாம் பிரதானமாகத் தேடவேண்டும். நமது ஜீவியம் முற்றிலும் மாறுவதற்கும், கிறிஸ்துவின் வல்லமை நம்மிலும், நமது மூலமாகவும் வெளிப்படுவதற்கும் இதுவே இரகசியம். கிறிஸ்துவை **பிள்ளையாரைப்போல்** நாம் வெளியே வைத்துக் கும்பிடத்தகுமோ? வேளாவேளை அவர் பரத்திலிருக்கிறார் என்று நினைப்பதும் போதாது. அவரே நமது ஜீவனாக இடைவிடாமல் **நமக்குள்** வசிக்கவேண்டும். நம்மை முழுவதுமாய் அவர் ஆண்டுகொள்ள வேண்டும். அவர் **சித்தம்** நமக்குள் செய்யப்படவேண்டும். அவர் **இராஜ்யம்** நமக்குள் நடக்கவேண்டும். அப்பொழுது அவருடைய **நாமம்** நிச்சயமாகவே நம்மில் மகிமைப்படும். ஆண்டவருக்கு நமது உள்ளத்தில் இடமில்லாதபோது, அவருடைய ஆசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்கும்படி ஜெபிப்பது மாயமாகும். அவரையும் அவரது ஆசீர்வாதங்களையும் பிரிக்கமுடியாது. சகலமும் அவராகவே இருக்கிறார். தேவனுடைய பரிபூரணம் யாவும் அவருக்குள்ளேயே இருக்கின்றன. அவரை உடையவன் எல்லாம் உடையவன். அவரில்லாதவன் ஒன்றுமில்லாதவன். ஆகையால், ஆண்டவர் தம்மை **நமக்குள்** வெளிப்படுத்தவும், அங்கே அவர்

வசிக்கவும் நாடுவோமாக. அப்போது "அவர் **எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும்** இருக்கிறவர்" (எபே. 4:6) என்கிற வாக்கு நிறைவேறும்.

உயிர்த்தெழுந்த இரட்சகர் தமது ஆவியினால் நமக்குள் வசிப்பது பாக்கியமேயானாலும், அவர் மறுபடியும் வராவிட்டால் அவர் சம்பாதித்த இரட்சிப்பு நம்மில் பூரணப்படாது. இப்பொழுதிருக்கிற நிலைமையிலேயே உலகத்தை விட்டு விடுவாரானால் தேவனுடைய அனாதி தீர்மானம் நிறைவேறாமற்போகும். பாவமும், சாபமும், சஞ்சலமும், தவிப்பும், வேதனையும், மரணமும், கவலையும், கண்ணீரும் மனுமக்களை எக்காலமும் ஆண்டுகொண்டேயிருக்கும். சாத்தான் ஆளுகை செய்கிறவரை அநியாயமும் அக்கிரமமும் பூமியைவிட்டு நீங்கப்போகிறதில்லை. இதுவா தேவனுடைய இரட்சிப்பு? இதற்காகவா தேவனுடைய குமாரன் பூமிக்கு வந்து, இத்தனை பாடுகளையும்பட்டுச் சிலுவையில் மரித்தார்? உலகம் இப்படியே விடப்படுமானால் "வானத்திலும் பூமியிலும் **சகல** அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், மாம்சமான **யாவர்மேலும்** எனக்கு அதிகாரம் உண்டென்றும்" ஆண்டவர் சொன்ன வார்த்தையால் பிரயோஜனமென்ன? ''நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும்" எனபதற்கும், 'இதோ, நான் **சகலத்தையும்** புதிதாக்குகிறேன்' என்பதற்கும் அர்த்தமென்ன? "அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்." அந்தப் பாக்கியமான காலம் இன்னும் வரவில்லையே. அந்தக்காலம் மெய்யாகவே வருகிறது. கிறிஸ்து வரும்போது அந்தப் பாக்கியமான காலமும் வரும். அவர் மறுபடியும் வராவிட்டால் சகலமும் பொய்யாகும். நாம் **இரட்சிப்பு** என்று பேசுவது வஞ்சகமாகும். அவரை நம்பியிருந்தவர்கள் யாவரும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் ஆவார்கள். சாத்தானே பலவான். அவனுக்கே ஜெயம். அவனே மனுக்குலத்தை ஆண்டு சர்வநாசம் பண்ணவேண்டியது. அவனைக்கேட்கவோ விசாரிக்கவோ வேறு கடவுள் கிடையாது. கர்த்தர் திரும்ப வருகிறதில்லையென்றால் இப்படியெல்லாம் நாம் புலம்பவேண்டியது நியாயமே.

கர்த்தர் மெய்யாகவே **சீக்கிரம்** வருவார். இராஜா **திடீரென** வானத்தில் தோன்றுவார். காலம் சமீபம். வேதவாக்குப்படி யூதர்கள் திரள் திரளாகப் பலஸ்தீனா சேருவது உலகத்துக்கு எச்சரிப்பாகும். யூத அத்தி மரம் துளிர்க்க ஆரம்பித்துவிட்டது. அவர் ஆரவாரத்தோடும் தமது பூரண மகிமையோடும் வெளிப்படும் போது உலகம் முழுவதும் பிரமித்து நடுங்க வேண்டும். ஆச்சரியமான சம்பவம் ஒன்றன்பின் ஒன்றாக

நடக்கும். இராஜாவின் வருகையை எதிர்நோக்கிப் பிழைப்பவர்கள் பாக்கியவான்கள்.

"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்."



சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் (ELS) வெளியிட்டுள்ள மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகள், வேத ஆராய்ச்சி நூல்கள், தின தியானங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற நூல்கள், பிரசங்கக் குறிப்புகள் மற்றும் சிறுவர் நூல்கள் அதன் தலைமையிடத்திலும், கீழ்காணும் கிளைகளிலும் கிடைக்கும்.

(முழு விலைப்பட்டியலைப் பெற்றுக்கொள்ள எழுதுங்கள்)

கிளைகள்

Evangelical Literature Service,
287, Purasawalkam High Road,
Chennai - 600 007. Tamil Nadu,
Tel : 2642 2722 / 2661 0888

Evangelical Literature Service,
55, Anna Salai, Chennai - 600 002
Tamil Nadu.
Tel : 2851 4403

Evangelical Literature Service,
C.M.C. Hospital Compound,
Vellore - 632 004
Tamil Nadu.
Tel : 0416-222 4808

Evangelical Literature Service,
Vasavi Complex,
1250, Big Bazaar Street,
Coimbatore - 641 001
Tamil Nadu.
Tel : 0422-239 0694

Evangelical Literature Service,
Jeevan Complex,
84, 100 Feet Road, Gandhipuram,
Coimbatore - 641 012
Tamil Nadu.
Tel : 0422-249 4434

Evangelical Literature Service,
G4, Ground Floor, Ashoka Enclave,
No. 12, Nethaji Road, Frazer Town,
Bangalore - 560 005
Tel : 080-25473388/25478833

Evangelical Literature Service,
694/B, Gokula 1st Stage,
1st Phase, HMT Main Road,
Mathikere Bus Stop,Bangalore - 560 054
Tel : 080-23378087

Evangelical Literature Service,
582, Oil Mill Road,
Aravind Nagar,
Bangalore - 560 084
Tel : 080-2546 7014

Evangelical Literature Service,
Kesavadasapuram, Pattom, P.O.
Trivandrum - 695 004, Kerala.
Tel : 0471-244 8916

Evangelical Literature Service,
Shop No. 430-A3, Ascension Square
Railway Station Road,
Collectorate P.O. Kottayam - 686 002
Tel : 0481-230 4790

Evangelical Literature Service,
F11, Dadar Manish Market,
Senapati Bapat Marg, Dadar (W),
Mumbai - 400 028, Maharashtra.
Tel : 022-2437 9572

Evangelical Literature Service,
C.M.C. Hospital Compound,
Ludhiana - 141 008, Punjab,
Tel : 0161-222 1052

Evangelical Literature Service,
7A/41, W.E.A. Western Chambers,
Channa Market, Karol Bagh,
New Delhi - 110 005
Tel : 011-2573 9168

Evangelical Literature Service,
Satribari Christian Hospital Complex,
Kharga Choudhury Road, Satribari,
Guwahati - 781 008, Assam.
Tel : 0361-260 3328

Evangelical Literature Service,
No. 35-73/1, G.K. Colony,
(Near Naredmet Cross Road)
Sainikpuri, Secunderabad - 500 094
Andhra Pradesh.
Tel : 040-2711 5533

Evangelical Literature Service,
PIMS Campus, Ganapathichettikulam,
Kalapet, Pondicherry - 605 014
Tel : 0413-2655330

Evangelical Literature Service,
Door No. 50-50-32, T.P.T. Colony,
(Near Gurudwara),
Visakhapatnam - 530 013, A.P.,
Tel : 0891-2799588

Evangelical Literature Service,
C.S.I. Holy Trinity Church,
Commissioner's Road,
Ooty - 643 001. Tel : 0423-2446055

Website : www.elsindia.org

Pub. No. 341-TAMIL

கிறிஸ்துவின் ஜீவியம் எனும் இந் நூலில் கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை விளக்கியும், அவரது தலைசிறந்த போதனைகளை மிகவும் எளிய நடையில் எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையிலும் இந் நூலாசிரியர், கிறிஸ்தவ உலகில் நன்கு அறியப்பட்ட, காலஞ்சென்ற தேவ ஊழியர் S. பரமானந்தம் அவர்கள் தெளிவாக எழுதியுள்ளார்.

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாய் அறிந்துகொள்ளவும், அவரிலும், அவருடைய ஜீவவார்த்தையான பரிசுத்த வேதாகமத்திலும் ஆழமான நம்பிக்கை வைத்து, பல தவறான உபதேசங்களுக்கும், கொள்கைகளுக்கும் விலகிச் செல்லவும் இந் நூல் வழி காட்டும். ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்கள் குடும்பத்தில் இந் நூலை வைத்து, அவசியம் வாசித்து, கிறிஸ்தவரல்லாத மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்வது மிகுந்த பலனைத் தரும்.

கர்த்தருடைய ஜனங்கள் இந் நூல் மூலம் ஆசீர்வதிக்கப் படுவதும், அவரோடுள்ள உறவு, ஐக்கியம் விசுவாசிகளுக்கு மென்மேலும் வளரவேண்டுமென்பதும் இந்நூல் எழுதப்பட்டதின் நோக்கமாகும். இப்புத்தகத்தை கருத்துடன் படிப்பதால் தனிநபரும், குடும்பங்களும் இரட்சகரை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, விசுவாசத்தில் பலங்கொண்டு, விபரீதமானக் கொள்கைகளுக்குத் தப்பி, தேவ கிருபையில் வளருவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

THE LIFE OF CHRIST

S. Paramanandam

விலை ரூ. 190/-

EVANGELICAL LITERATURE SERVICE
95-A, VEPERY HIGH ROAD, CHENNAI - 600 007
Tel : 25323231, 26420173, 26420743 Fax : 91 (44) 26612295
E-mail : <elshq@elsindia.org> Website : www.elsindia.org